THE HON. SRI C. SUBRAMANIAM : I am prepared to agree that some people do indulge in these activities. But I do not think that it is so widespread as the hon. Member seems to imagine as to cause inflationary trends. We are taking necessary steps and I do not think it will be possible to disclose all the steps which we are taking.

SRI S. DAIVASIGAMONEY : The Hon. Minister as a lawyer may be aware that the possession of counterfeiting machinery as well as the possession of counterfeit currency notes is an offence by itself and he must also be aware that any delay in prosecution may probably cause injustice or perversion of justice. So may I know why such a long delay has been caused as the prosecution would not rest upon mere documents in this case?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, as I have already stated the incidents here are connected with certain other incidents in Andhra State. Unfortunately there has been some delay. I shall see that the matter is expedited and necessary steps taken as early as possible.

[18th December 1956

SRI S. RAMALINGAM : இந்த வழக்கு சம்பந்தமாக சில ரிக்கார்டுகள் கிடைக்கவில்லை என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் அடித்த நூறு ரூபாய் நோட்டுகளாவது சர்க்காருக்கு கிடைத்ததா என்று தெரிய ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, some of the counterfeit notes and also the machinery used for this purpose have been seized.

SRI K. VINAYAKAM : Sir, this incident of counterfeiting notes took place about eight months ago which is sufficiently a long time. So if the alleged offender has been let on bail, will it not amount to tampering with witnesses and other relevant matters that would go to strengthen this case? Therefore, will the Hon. Minister give us reasons why the charge-sheet has not been filed against him in time. If for want of records, it could not be filed in time, why should the alleged offender be let on bail which will amount to tampering with witnesses and other matters?

THE HON. SRI C. SUBRAMANIAM : Releasing the accused on bail is a matter for the court to decide. I do not think we can interfere in the matter but I do agree that there has been some delay in the filing of the charge-sheet. I have already assured hon. Members that we would look into it and see that quick action is taken.

SRI V. BALAKRISHNAN : போலீசாரால் இந்தக் குற்றம் எந்தத் தேதியில கண்டுபிடிக்கப்பட்டது? அதற்கு பிறகு குற்றங்களை பிரித்து, இப்பொழுது தஸ்தாவேஜு இல்லாமல் போடக்கூடிய குற்றங்களை போட்டு கேஸ் கொண்டுவராமல் இருப்பதற்கு காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I have already stated that at first the counterfeit notes were noticed in the Andhra State, at Vijayavada, and from there it was traced to certain persons in the Madras City also and these persons, that is, the person in question, V. N. Shanmugha Nadar, his wife and son, were arrested on 9th January 1956. The matter is pending receipt of further details from the Andhra State so that a comprehensive charge-sheet could be filed and the trial proceeded with.

SRI C. KANDASAMY : இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் மிகவும் சக்திவாய்ந்தவர்கள் என்று தெரியவருவதால் அவர்களை ஜாமீனில் விட்டு இருந்தபோதிலுங்கூட அரசாங்கம் அவர்களின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த ஏதாவது நடவடிக்கை எடுத்து பிராசிக்யூஷன் பாதிக்காத வகையில் பார்த்துக்கொள்ளுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது பிராசிக்யூஷன் பாதிக்கக்கூடிய வகையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் நடந்து வருவதாக எனக்கு தெரியவில்லை. இருந்தாலும் கூடியசீக்கிரத்தில் எல்லாவற்றையும் விசாரித்து சார்ஜ்ஷீட் பைல் பண்ணவேண்டிய ஏற்பாடுகள் செய்கிறோம்.

SRI S. C. C. ANTHONY PILLAI : When were these alleged records called for from the Andhra Government and how many reminders were sent after that?

18th December 1956]

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, they were being addressed from March onwards. The last reminder had gone in October 1956.

SRI R. V. SWAMINATHAN : Since there is inordinate delay in this matter of filing a charge-sheet in the court, will the Government come forward to move the court to cancel the bail so as to prevent the accused from tampering with witnesses and other records?

THE HON. SRI C. SUBRAMANIAM : As a lawyer I may tell the hon. Member that I do not think that we will be justified in moving the court when the delay is on our part in filing the charge-sheet. Therefore, the proper step will be to expedite the filing of the charge-sheet.

SRI S. PANCHAKSHARAM : Is there any difficulty to separate the offence committed at Tiruvottiyur from the offence committed at Vijayavada and file a charge-sheet independent of the help from the Andhra Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not only for the offence of the possession of the counterfeit notes and the machinery used for that purpose but also for the conspiracy to commit this offence that we have intended to file a charge-sheet. Therefore, all the links will have to be properly connected. Otherwise, there is likely to be a lacuna. That is why there is some delay.

SRI P. RANGASWAMI REDDIAR : ஸார், இந்த குற்றம் சம்பந்தமாக சென்னையில் ஷண்முக [illegible] நாடார் வீட்டில் [illegible] எத்தனை நூறு ரூபாய் நோட்டுகள் கைப்ப[illegible]ட்டன? அதற்கு [illegible] கருவிகள் எவ்வளவு கைப்பற்றப்பட்டன. அதற்குப்பிறகு, சோதனை [illegible]ட்டபிறகு சென்னை நகரத்திலோ அல்லது [illegible] மாகாணத்தில் பிற [illegible]இல்லாக் களிலோ இந்த குற்றம் சம்பந்[illegible] வேறு வீடுகள் சோதனை போடப் பட்டனவா. போலீசாரால் வேறு [illegible]ராவது விசாரிக்கப்பட்[illegible]ா?

THE HON. SRI C. SUBRAMANIAM : From the [illegible]ence of Shanmugha Nadar, only certain paper cutter, ink rubber roller and other implements were recovered. I do not see from the records that any counterfeit notes as such were recovered from his residence. That is why the entire matter [illegible] gone into to find out the various links in the matter before we file the charge-sheet.

SRI S. RAMALINGAM : ஸார். இவர்கள் கைது செய்யப்பட்டு கிட்டத்தட்ட ஒரு வருடமாகப்போகிறது. சில ரிக்கார்டுகள் இல்லாத காரணத்தினால் சார்ஜ் ஷீட் போட முடியவில்லை. ஆனால் கோர்ட்டார் அவர்களை ஜாமீனில் விட்டுவிட்டார்கள் என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். எனவே, எப்படியும் வெளியே வந்தால் அவர்கள் சாட்சிகளை கலைத்து தப்பவேண்டியதற்குள்ள நடவடிக்கைகள் எடுக்கப் பார்ப்பார்கள். ஆதலால் சர்க்கார் பிரிவெண்டிவ் டிட்டன்ஷன் ஆக்ட்படி பாதுகாப்பிற்குள் வைத்திருந்தால் கேஸை தொடர்ந்து நடத்த முடியும். அதற்குள்ள சந்தர்ப்பத்தை சர்க்கார் அளிக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு குற்றத்திற்கு கோர்ட் ஜாமீன் கொடுத்திருக்கும்போது மேலும், இந்த டிட்டன்ஷன் ஆக்ட்படி நடவடிக்கை எடுத்து பாதுகாப்பில் வைப்பது முடியாத காரியம். அப்படி சாட்சிகளை கலைப்பதாய் ஏதாவது சந்தேகம் இருந்தால் கோர்ட்டிற்கு

உடனே மனு கொடுத்து அந்த ஜாமீனை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள சட்டத்தில் இடம் இருக்கிறது. ஆனால் அதுமாதிரி எந்த தகவலும் இதுவரை இல்லை.

SRI K. VINAYAKAM : Sir, rightly or wrongly an impression has been gaining ground in the minds of the common people that the charge-sheet has not been filed against this alleged offender because of the intervention of some highly placed persons in our State. Is there any truth in that statement?

THE HON. SRI C. SUBRAMANIAM : These rumours are set afloat by persons for their own personal purpose. I do not think, Sir, there is any truth in that rumour as far as I could see.

SRI A. RATNAM : ஸார், ஷண்முக நாடாரும் அவர் மனைவியும் அவரது குமாரர்கள் மூன்று பேர்களும்தான் இந்தக் கள்ளநோட்டு அடித்ததில் சம்பந்தப்பட்டவர்களா ? அல்லது இதரர்களும் அதில் சேர்ந்திருக்கிறார்களா ? இதுபற்றிய போலீஸ் விசாரணையைப்பற்றி சபை அறிந்து கொள்ள முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் இதரர்கள் கலந்திருக்கிறார்கள். புலன் விசாரிப்பைப்பற்றியெல்லாம் இங்கே சட்டசபையில் சொல்லுவது என்றால் அவர்களுக்கு இதைப்பற்றி சில தாக்கல்கள் கொடுத்ததுமாதிரி ஆகும். ஆகவே இதைப்பற்றி விரிவாக ஒன்றும் கூறாமல் இருப்பதே நல்லது.

DEPUTY SPEAKER : So, I shall pass on to the next question.

SRI V. GOPALA GOUNDER : On a point of order, Sir. The matter is one purely under the investigation of the police and the questions put and answers given in the House may really be prejudicial to the investigation by the police. Therefore, may I know from the Hon. Minister whether it would be proper to answer all these questions to be put in the Court in this House? Already the matter is pending before the Court and it is almost *sub judice*. The accused had been produced before the Court and released on bail and thus the Court has taken cognizance of it in a way. So, will it be proper to put all these questions in this House?

THE HON. SRI C. SUBRAMANIAM : I completely agree with the hon. Member. That is why I could not give very definite answers in respect of certain questions because it is likely to give out useful information even to the accused and to a certain extent it may also prejudice the case of the accused. As a matter of fact, in my answers I tried to avoid both.

Salary of Agriculture Demonstration maistries of the ex-Pudukkottai State

1-40 p.m. * 364 Q.—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Agriculture Demonstration maistries of the Agriculture department of the former Pudukkottai State, after its merger with the Madras State are being paid lesser salary than before; and

(*b*) if so, the number thus affected and the reasons for the reduction?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

SRI V. BALAKRISHNAN : May I know whether it is not a fact that two appeals from the Agriculture Demonstration maistries of the Agriculture department of the former Pudukkottai State are pending with the Government with regard to such matters?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : So far as the information I have with me goes, there is one case of a permanent Agricultural maistri who was officiating as a clerk in the former Pudukkottai State and after merger his pay was fixed at a lower scale and not at the higher scale of pay which he was drawing as a clerk. The Government subsequently found that it was a mistake. On the representation of the subordinate, the Government ordered the refixation of the pay of this officer from 1st January 1949 giving the benefits of increments and also arrears of pay.

Construction of a dam across the Vellar near Sundarapatty village

* 365 Q.—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the reasons for dropping the proposal to construct a dam across the Vellar near Sundarapatty village in Tirumayam taluk, Pudukkottai Division, Tiruchirappalli district;

(*b*) whether it is a fact that an estimate was ordered to be prepared; and

(*c*) if so, the amount of the estimate?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : (*a*) The cost of construction of a masonry dam was prohibitive and not commensurate with the benefits expected.

The ryots were themselves constructing a temporary mud dam every year at a small cost.

(*b*) Yes.

(*c*) About Rs. 59,000 for works or Rs. 73,000 inclusive of direct and indirect charges.

SRI V. BALAKRISHNAN : When the ayacutdars are willing to contribute towards the cost of construction of the scheme on 50-50 basis, may I know what is the difficulty the Government are experiencing in accepting it? This scheme will have to be taken up particularly because no major work of public importance has been undertaken in Pudukkottai State after its merger with this State and it is very necessary to woo the people sentimentally as regards merger of the State even though it has become a matter of *fait accompli*.

[18th December 1956

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : I have no information on the point that the ayacutdars are willing to contribute on a 50–50 basis. If we construct a dam at a cost of Rs. 73,000, the interest on capital outlay would come to about Rs. 3,000 annually. The Collector has suggested the putting up of a mud dam at a cost not exceeding a thousand rupees, provided the ayacutdars are willing to contribute a portion of the cost. For that there was no response. If the suggestion of the Collector is agreed to, the Government can spend up to a thousand rupees. The construction of a permanent masonry structure will involve disproportionately huge cost.

SRI V. BALAKRISHNAN : Is the Hon. Minister aware that this temporary construction is not of such a type as to give a permanent storage and is he also aware of the fact that this temporary construction is liable to break at every flood defeating the purpose of the dam and preventing the required storage?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : Spending every year one thousand rupees is cheaper than spending a huge amount on a permanent structure involving an amount of interest of Rs. 3,000 on the capital outlay annually. The cost of construction of a permanent structure is not commensurate with the results obtained.

Milo meters in auto rickshaws

* 366 Q.—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state the steps taken by the Government to rectify the defects in the meters installed in auto-rickshaws in the City of Madras?

THE HON. SRI B. PARAMESWARAN : Taxi meters are not fitted to auto-rickshaws, since such meters small enough to be fitted to them are not at present available in the market. Only milo meters are fitted to auto-rickshaws. Local firms have been requested to devise a suitable meter for auto-rickshaws but so far they have not been able to do so.

SRI K. VINAYAKAM : At the present moment, the milometers fixed to the auto-rickshaws are very small and more often they are covered with so much dust that the passengers travelling in the auto-rickshaws are not able to note down the meter readings. They have to depend on what the drivers of the auto-rickshaws say. Will the Government, therefore, instruct the firms to construct at least bigger meters and also instruct the Police officials to have them fixed near the seat of the passenger?

THE HON. SRI B. PARAMESWARAN : The Government have requested certain local firms to devise meters which could be fitted to the auto-rickshaws. We cannot fit big taxi-meters to auto-rickshaws. The Associated Traders, Madras, have addressed

18th December 1956]

foreign firms in regard to this matter. I hope, Sir, shortly they will be able to secure meters which will possibly be fitted to auto-rickshaws. The Police have been prosecuting drivers who have not fixed milo meters to their auto-rickshaws and also such of those drivers as have not been keeping the meters quite clean. Further instructions will also be issued in this connexion.

SRI A. M. RATHNASWAMY : There is a feeling of suspicion in the minds of persons travelling in auto-rickshaws that some kind of tampering with the meters is carried on by auto-rickshaw drivers and that this has become a regular nuisance in the City. Often, persons travelling in auto-rickshaws have to pick up quarrels with the drivers on account of that. Instead of the vehicle being a source of convenient conveyance it has become a regular nuisance. I want to know from the Hon. Minister as to whether he would find time to travel in an auto-rickshaw and to find out whether any such tampering is being practised by auto-rickshaw drivers and whether the drivers are rendering a correct account of the milage covered by their vehicles to the passengers?

THE HON. SRI B. PARAMESWARAN : I have told the House on several occasions that there is no possibility of tampering with meters fitted to auto-rickshaws. No such cases have been brought to the notice of the Government. If travelling in auto-rickshaws is considered a nuisance it is because sometimes drivers demand more than the scheduled rates. But it all depends upon the persons travelling in them. If a person travelling in the auto-rickshaw wants to be magnanimous he can pay the sum demanded by the driver; but if he wants to stick to the reading in the meter he can do so and pay according to the meter reading. There is no question of nuisance arising. As matters stand, auto-rickshaws happen to be a cheap form of conveyance.

SRI K. R. VISWANATHAN : May I know whether it has been brought to the notice of the Government that auto-rickshaw drivers and also taxi drivers demand lump sum hire sometimes instead of the charges to which they are eligible according to meter readings?

THE HON. SRI B. PARAMESWARAN : Several cases have been brought to the notice of the Government. The Police have prosecuted a lot of such cases. Such of those drivers as demand more than the scheduled rates are being prosecuted. The figures of prosecution of such cases are going up.

SRI V. BALAKRISHNAN : இந்த ஆட்டோ ரிக்ஷாக்காரர்களின் தொல்லையானது வெளியூரிலிருந்து வருகிறவர்கள் எக்மோர் ஸ்டேஷனிலிருந்து இறங்கிய உடன் மாம்பலத்திற்கு விடமுடியும், சைதாப்பேட்டைக்கு விடமுடியும், மௌண்ட் ரோட்டுக்கு விடமுடியாது என்றெல்லாம் சொல்லுவதாக புகார் இருந்துகொண்டிருக்கிறதனால் ஆட்டோ ரிக்ஷாவிலுள்ள மீட்டர்களின் மத்தியிலுள்ள இலக்கம் சரியாக தெரிந்துகொள்ளமுடியாது என்பது மந்திரி அவர்களுக்கு தெரியுமா என்று கேட்கிறேன்.

[18th December 1956

THE HON. SRI B. PARAMESWARAN : இருக்கிற ஆட்டோ ரிக்ஷாக்கள் கொஞ்சம் எண்ணிக்கை. அதிகமாக ஆட்டோ ரிக்ஷாக்கள் வேண்டுமென்று மக்கள் வேண்டுகின்றனர். இருந்தபோதிலும் அப்படி ஏதாவது புகார் வந்தால் அதை தடுக்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்கும். போலீசாருக்குத் தெரிவித்தாலும் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். போலீஸ அதிகாரிகளும் இதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI S. C. C. ANTHONY PILLAI : Will the Government take steps to see that the existing milo meters are transferred to the back so that the passengers can read the meter readings easily? Will the Government also take steps to see that a light is fixed inside or over the milo meter so that the meter readings can be easily read?

THE HON. SRI B. PARAMESWARAN : It may be possible to attach a light quite adjacent to the meter. But I do not know whether the meter as such can be fixed at the back of the auto-rickshaw.

9-50 a.m. SRI A. RATNAM : சென்னையில் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள் இருக்கின்றன. அதில் எத்தனை டிரைவர்கள் ஆட்டோ ரிக்ஷாவின் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்ற தகவல் கனம் மந்திரி அவர்களால் கொடுக்க முடியுமா?

THE HON. SRI B. PARAMESWARAN : அதைவிட இதில் ஹரிஜன டிரைவர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்டு இருந்தால நன்ருக இருந்திருக்கும். ஆட்டோ ரிக்ஷா டிரைவர்களாக இருக்கும் அதிகம் பேரும் ஹரிஜன வகுப்பை சேர்ந்தவர்களும், பிறபட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுமாக இருக்கிறார்கள். டிரைவர்கள் நூற்றில் 75 பேர்கள் ஆட்டோ ரிக்ஷா சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள்.

SRI K. VINAYAKAM : Sir, more often it happens that if the auto-rickshaw driver learns that it is meant for a short drive and not for a long drive, instead of refusing straightway, he deceives the hirer by saying that it is under hire or has been engaged and there is no device for the hirer to know whether it is actually under hire or not. Will the Government, therefore, think of putting up a device by which the meter could indicate to the hirer whether it has been engaged or not?

THE HON. SRI B. PARAMESWARAN : Sir, as I have already said, the Police authorities have requested certain firms to devise a meter which will be easily visible to the human eye and which can also be easily fitted on to the auto-rickshaws. But, in the absence of such a meter, I do not think the Government can do anything. However, the Police authorities have been instructed to receive such complaints and take immediate and drastic action whenever such complaints are received.

SRI R. A. NATARAJA MUDALIAR : டாக்ஸிகளுக்கு பிளாக் (flag) சிஸ்டம் இருப்பதுபோல் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கும் அந்த சிஸ்டம் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN : இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள்.

18th December 1956]

SRI S. DAIVASIGAMONEY : Sir, is the Hon. Minister aware that the real trouble with these auto-rickshaw meters is that they are not able to show the number of furlongs travelled? Usually, the auto-rickshaw driver charges four annas immediately when we get into the rickshaw, even though we travel only about 10 yards and again he charges another four annas if we travel a little distance of another 10 yards. Thus he stands to gain almost 8 annas over and above the rates to which he is legally entitled.

THE HON. SRI B. PARAMESWARAN : I agree, Sir, but the defect cannot be rectified except by means of attaching a special device for this purpose and I am quite sure that within the course of three or four months, the firms here will be able to import through foreign firms suitable meters for being attached to the auto-rickshaws.

SRI M. R. RAMACHANDRAN : Sir, in view of the difficulties explained, will the Government increase the number of baby taxis and stop the plying of auto-rickshaws till a proper meter system is devised?

THE HON. SRI B. PARAMESWARAN : Sir, this question relates to auto-rickshaws. However, I may tell the hon. Member that we have granted licences for the plying of more than 310 baby taxis, but only about 110 baby taxis have been put on the roads. The Government are not stingy with regard to this matter, but it is the operators who are not willing to put more baby taxis on the roads.

SRI A. M. RATHNASWAMY : Sir, I do not know how many would be prepared to accept the statement of the Hon. the Minister that going in an auto-rickshaw is much cheaper than going in a baby taxi. I feel that the opposite is the correct, and that is the considered opinion of not only the Members of this House but also those who are outside this House. I would like to know from the Hon. Minister whether steps would be taken to check these meters at least once a month, because there is considerable suspicion in the minds of the travelling public that the meters do not show the correct milage.

THE HON. SRI B. PARAMESWARAN : Sir, I have given such an elaborate answer that I do not think there is any need for my further elaborating the point. I said that comparatively speaking, the charges we have to pay for an auto-rickshaw are cheaper than those we have to pay for baby taxis and in order to see that more facilities are available to the travelling public, we have granted licences to more baby taxi applicants. In spite of our granting the licences, those applicants, who wanted the licences, have not put then taxis on the roads. The checking of the meters is being done periodically and I can only say that more vigilant steps cannot be taken by the Government.

[18th December 1966

Abolition of taxes on cycles in municipal areas

* 367 Q.—Sri A. K. SUBBIAH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have received recently any mahazars from the residents of municipalities in the Tanjore district regarding the abolition of taxes on cycles in the municipal area; and

(b) if so, the action taken thereon?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI: (a) No, Sir.

(b) Does not arise.

Sri S. RAMALINGAM: தஞ்சை ஜில்லாவிலிருந்தும் தஞ்சை நகர சபை சைக்கிள் வரியை ரத்து செய்யவேண்டும் என்று தஞ்சை ஜில்லா நகர சபை சேர்மன் அவர்கள் அரசாங்கத்திற்கு நேராக ஒரு மகஜர் கொடுத்தார். அதன் நகலை நானும் அரசாங்கத்திற்கு அனுப்பினேன். சேர்மன் அனுப்பிய மகஜருக்கு கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம் என்று பதில் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. ஆனால் கனம் மந்திரி அவர்கள் இப்பொழுது பதில் சொல்லும்போது அப்படிப்பட்ட மகஜர் ஒன்றும் தனக்கு வரவில்லை என்று சொல்லுகிறார். இதில் என்ன நேர்மை இருக்கிறது என்பதை பொது மக்களே தெரிந்து கொள்ளட்டும். ஆகவே சேர்மன் அவர்கள் கொடுத்த மகஜரின் பேரிலாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சிப்பார்களா? அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டு சென்னை நகரத்தில் சைக்கிள் வரியை ரத்து செய்தது போல தஞ்சை ஜில்லாவிலும் சரி மற்றும் இதர ஜில்லாக்களிலும் சைக்கிள் வரியை ரத்து செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன்.

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI: சேர்மன் மகஜர்களை நேராக அனுப்புவது இல்லை. நகர சபை தீர்மானம் கொண்டு வந்து அதை நிறைவேற்றி அனுப்ப வேண்டும். அப்படிப்பட்ட தீர்மானம் ஒன்றும் வரவில்லை.

Sri M. KALYANASUNDARAM: சென்னை கார்ப்பொரேஷன் சம்பந்தப்பட்ட மட்டில் சைக்கிள் வரியை பூராவும் ரத்து செய்து விட்டதாக அறிகிறேன். அதே போல் மற்ற முனிசிபாலிட்டிகளிலும் உடனடியாக சைக்கிள் வரியை ரத்து செய்யா விட்டாலும் கூட அதை குறைப்பதற்கு சர்க்கார் யோசனை செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI: சென்னையில் அரசாங்கம் வரியை ரத்து செய்யவில்லை. சென்னை நகர சபை ஏகோபித்து இந்த வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. அது சம்பந்தமாக வரக்கூடிய பணத்தையும் அவர்கள் குறைத்துக் கொள்கிறோம் என்று சொன்னதன் பேரில் தான் அந்த ரத்துக்கு அரசாங்கம் ஒத்துக்கொண்டது. இம்மாதிரி இதர நகர சபைகளும் முடிவு செய்தால் அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

Sri K. V. RAMASAMY: இந்த சைக்கிள் வரி கிராம பஞ்சாயத்துகளிலும் வசூலிக்கப்படுகிறது. சில கிராமங்களில் இரண்டு மூன்று சைக்கிள்கள் தான் இருக்கும், இன்னும் சில கிராமங்களில் கொஞ்சம் அதிகப்படியான சைக்கிள்கள் இருக்கலாம். இதன் மூலம் ஒரு பெரிய வருமானமும் கிடைப்பதில்லை. ஆனால் பெரிய உபத்ரவமாக இருக்கிறது. அதனால் கிராம பஞ்சாயத்துக்களிலும் இந்த வரியை ரத்து செய்வது பற்றி சர்க்கார் யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

18th December 1966]

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI: இதைப்பற்றி கிராம பஞ்சாயத்துக்கள் ஒரு முடிவு செய்து அனுப்பினால் அதைப்பற்றியும் யோசிக்கப்படும்.

Sri V. BALAKRISHNAN: சென்னை நகர சபை சைக்கிள் வரியை ரத்து செய்ததன் மர்மம் என்ன? சைக்கிள் வரி மூலம் அதிகப்படியான வருவாய் வந்தாலும் அதை வசூல் செய்வதற்கு ஆகும் செலவு அதைவிட அதிகமாக ஆகிறது என்பதற்காகவா? அல்லது மக்களிடத்தில் கருணை காட்ட வேண்டும் என்ற காரணத்தால் அது ரத்து செய்யப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI: கருணை என்ற காரணம் தான் அதிகமாக இருக்க வேண்டும்.

Sri V. GOPALA GOUNDER: இப்படி சைக்கிள் வரி போடுவது என்பது நகர சபையின் சட்டத்தின் கீழ் உள்ளது. வரி போடுவதும் அதை ரத்து செய்வதும் நகர சபைகளுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. அதில் சர்க்கார் தலையிடுவது என்பதில் அர்த்தம் இல்லை. அப்படி ரத்து செய்ய வேண்டும் என்றாலும் சர்க்கார் அதில் தலையிட வேண்டும் என்றாலும் சட்டத்தை திருத்தினால் தான் முடியும். திருத்தாமல் ஒன்றும் செய்ய முடியாது. சட்டத்தைத் திருத்தாமல் வரியை ரத்து செய்வது என்பது நியாயம் இல்லை. அதில் நியாயம் இருப்பதாகவும் தெரியவில்லை. அதனால் இது சம்பந்தமாக கனம் மந்திரி அவர்கள் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு இவ்வளவு பதில் சொல்லத் தேவையே இல்லை. அப்படி பதில் சொன்னதன் காரணம் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை.

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI: நகர சபை தலைவராக இருந்திருந்தால் இப்படிப்பட்ட சட்டங்களெல்லாம் நன்றாகத் தெரிந்திருக்கும். அநேகர் அப்படி இல்லாமல் இருப்பதால்தான் இப்படி பதில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

Sri S. RAMALINGAM: தஞ்சை நகர சபை இதைப்பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதை நிறைவேற்றி அதை சர்க்காருக்கு அனுப்பினால் அப்பொழுது வரியைக் குறைப்பதற்கு சர்க்காருக்கு ஆட்சேபணை இருக்காது என்று நினைக்கிறேன். அதற்கு அனுமதி கொடுப்பார்களா என்பதையும் கேட்க ஆசைப்படுகிறேன்.

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI: இப்பொழுது ஒரு அஷ்யூரென்ஸ் கொடுக்க முடியாது. நகர சபையின் நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் பதில் சொல்ல முடியும். அதன் பிறகு அதைப்பற்றி பரிசீலனை செய்து தான் அபிப்பிராயம் கொடுக்க முடியும்.

Sri K. VINAYAKAM: Is it not correct to say that, even 10 a.m.
though a municipal council may decide to abolish the cycle tax, that decision has to be approved by the Government in order that the abolition of the tax may come into effect? Since cycle is supposed to be a poor man's vehicle—only on that basis the Corporation Council abolished the cycle tax in the City of Madras—will the Government give their approval to the abolition of the tax if and when a municipal council comes forward with a proposal for abolition?

The Hon. Sri S. S. RAMASWAMY PADAYATCHI: Giving of approval depends upon the financial position of the municipal council concerned, and we cannot now say definitely whether we will approve the abolition of the tax when a municipal council proposes the

[18th December 1956

abolition. On account of local influence, a municipal council may propose the abolition, reduction or raising of any tax. Therefore, Government control is necessary.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—TIME FOR RECEIPT OF NOTICE OF CUT MOTIONS.

DEPUTY SPEAKER : I have to inform the House that under Rule 161 (2) (iii) of the Madras Assembly Rules, notices of cut motions should be delivered in the Assembly office before 3 p.m. on Tuesday, the 18th December 1956. No exception will be made to this rule on any account.

*Sri V. BALAKRISHNAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை விதியின் கீழ் தலைவர் அவர்களிடத்தில் ஒரு புகார் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. அங்கத்தினர் எல்லோருக்கும் ஒரு கட்டு புஸ்தகங்கள் கொடுக்கப்பட்டன. அந்தக் கட்டு புஸ்தகங்களில் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய ஒரு அறிக்கையும் இருந்தது. அந்த அறிக்கையைப் பெறுவதற்கு இந்த சபையில் உள்ள எல்லா அங்கத்தினர்களும் அருகதை உள்ளவர்களா? ஏனென்றால், இங்கு இருக்கும் பல அங்கத்தினர்கள் காதல் போராட்டத்தில் தோல்வியுற்று கலியாணம் ஆகாதவர்களாக இருக்கிறார்கள். இந்த முதல் ரக பிரும்மசாரிகளுக்கும் மனைவியை இழந்து வாழ்க்கையில் வாடி வதங்கி இருப்பவர்களுக்குங் கூட இந்த அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக நமது முதல் மந்திரி அவர்களுக்கும் இந்த அறிக்கை வழங்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகையினால் இவர்களிடமிருந்து இந்த அறிக்கையை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (பலத்த கரகோஷம்.)

III.—STATEMENT UNDER RULE 40 *RE* FOOD SITUATION IN THE STATE.

DEPUTY SPEAKER : Sri A. Ratnam will now under Rule 40 call the attention of the Minister for Agriculture to a matter of urgent public importance. I want the hon. Member to be brief in his remarks.

SRI A. RATNAM : Sir, I rise to call the attention of the Minister for Agriculture to a matter of urgent public importance, viz., deterioration in the food situation in the State.

உணவுப் பிரச்னை மிக நெருக்கடியான பிரச்னையாக நம் நாட்டிலே நிலவி வருகிறது. கடந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முடைய ராஜ்ய சர்க்காரும் மத்திய சர்க்காரும் உணவு அபிவிருத்திக்காக பல கோடிக் கணக்கான ரூபாய்களை செலவழித்திருக்கிறார்கள். உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு பல சட்டங்களும் கொண்டு வந்திருக்கிறார்கள். மான்யங்களும் கடன்களும் வழங்கியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் கூட, நம்முடைய சென்னை ராஜ்யத்தில் அரிசி கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள் 'சட்ட சபை அங்கத்தினர்கள் நிலைமையை மிகைபடுத்திக் கூறுகிறார்கள். உணவு உற்பத்தியை அதிகப்படுத்தியிருக்கிறோம்' என்று கூறுகிறார்கள். சென்ற சட்ட சபைக் கூட்டத்தில் இதுபற்றி கேட்கப்பட்டபொழுது 'மலையாள ஜில்லாவுக்கு நம்முடைய தமிழ் நாட்டு அரிசி சென்று விடுகிறது. ராஜ்ய சீரமைப்புக்குப் பிறகு

18th December 1956] [Sri A. Ratnam]

நாம் இந்த பற்றாக்குறையை தீர்த்துவிடலாம்.' அங்கத்தினர்கள் கூறுவது போல் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை' என்று சமாதானம் கூறப்பட்டது. அங்கத்தினர்கள் புகார் கூறினால், அதைக் கேட்டு அமைச்சர் குழு காரியங்களைச் சரிவர சீரமைத்து நடத்த வேண்டும். அங்கத்தினர்கள் ஆலோசனைகளைக் கவனித்து பரிசீலனை செய்ய வேண்டும். அமைச்சர் குழு அதிகார வர்க்கம் போல் நடந்துகொள்ளக்கூடாது. அப்படி நடந்து கொள்ளுவதால் மக்களுக்கு ஒன்றும் பயன் ஏற்படாது.

சமீப காலத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் அரிசி வாங்குவதற்காக டி. யு. சி. எஸ்.-ல் காலை முதல் மாலை வரையில் கியூ வரிசையில் நின்றுகொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு சிலருக்குத்தான் இரண்டு படி அரிசி கிடைக்கிறது. மற்றவர்கள் அரிசியில்லாமல் திரும்பிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஏழைகள் வசிக்கின்ற பகுதிகளில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படவில்லை. கலெக்டர் ஆபீஸ், தாசில்தார் ஆபீசுக்குச் சென்றால், இதற்கென்று அங்கு தனி குமாஸ்தாக்கள் கிடையாது. மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த அலுவலகங்களுக்குச் சென்று பார்த்தால், அங்கும் பொதுமக்களுக்குத் தேவையான வசதி செய்வதற்கோ, அவர்கள் குறைகளைக் கவனிப்பதற்கோ அதிகாரிகள் கிடையாது. ஏதோ அதிகாரிகளின் பெருக்கமும் குமாஸ்தாக்களின் பெருக்கமும்தான் இருக்கிறது. அதிகாரிகள் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருக்கிறார்கள். ஆனால், உருப்படியான காரியங்கள் நடைபெறுவதில்லை. உண்மையிலேயே மக்களின் நியாயமான குறைகளைக் கவனித்து அவர்களுக்கு வேண்டிய உதவி செய்ய வழியில்லை.

ரூ. 0-11-6 விலைக்கு அரிசி கொடுக்கப்படுகிறது. ஆனால் அது நடுத்தர மக்களுக்கோ, ஏழைகளுக்கோ கிடைப்பதில்லை. அவர்கள் தாங்கள் வேலைக்குச் செல்லாமல் கடையில் போய் காத்துக்கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை ஒரு படி அல்லது இரண்டு படி கிடைக்கிறது. ஏழைகளுக்குத் தேவையான புழுங்கல் அரிசி கிடைப்பதில்லை. ஏழை மக்கள் கூலி வருமானத்தை விட்டு, அங்கு கிடைக்கும் பச்சை அரிசியை வாங்கி, அதை ரூ. 0-14-0 அல்லது ரூ. 0-15-0-க்கு கள்ள மார்க்கெட்டில் விற்று அந்த லாபத்தை ஊதியமாகக் கொள்கிறார்கள். ஆகையால் நடுத்தர மக்கள், ஏழைகள், ரூ. 1-0-0 அல்லது ரூ. 1-2-0 கொடுத்து அரிசி வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதே தவிர, வேறொன்றுமில்லை.

அமைச்சர் அவர்கள் "தை பிறக்கிறது, நல்ல காலம் வந்து விடும், அறுவடைக் காலம் வருகிறது, அரிசி விலை குறைந்து விடும், அங்கத்தினர்கள் பயப்பட வேண்டாம், பொது மக்கள் அஞ்ச வேண்டாம்" என்று சமாதானம் கூறலாம். குறுவை நெல் அறுவடையாய் வந்திருப்பதை நாம் பார்க்கிறோம். அப்படிக் கண்டுங் கூட அரிசி விலை உயர்ந்துக் கொண்டே தான் போகிறது. அரிசி விலை உயர்வுக்குக் காரணம், பெரிய நிலச்சுவான்தார்களும், பெரிய வியாபாரிகளும்தான். வியாபாரிகளின் பதுக்கலைத் தடுத்து மக்களுக்குப் போதுமான அரிசி நியாய விலைக்குக் கிட்டும்படிச் செய்யவேண்டும். பதுக்கல் கூட்டத்தாரை கண்டு பிடித்து அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய ராஜ்யத்திலே உற்பத்தி செய்யப்படுகிற அரிசி பதுக்கப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகிறது. அதே நேரத்திலே பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி ஓரளவுக்கு நியாய விலைக்கு விற்கப்படுகிறது. இது பொது மக்களுக்கு திருப்தி அளிக்கக்கூடிய நிலைமை என்று சொல்ல முடியாது. தை மாதம் வந்த பிறகு அறுவடைக் காலத்தில் ஒரு சில மாதங் களுக்குத்தான் விலை உயர்வு குறையுமே தவிர, மறுபடியும் பெரிய மிராசுதார்கள், வியாபாரிகள் இவர்களில் பதுக்கல் காரணமாக அரிசி விலை அதிகரிக்கத்தான் செய்யும். அரிசி விலை நிரந்தரமாக குறையும் என்று எதிர் பார்ப்பதற்கில்லை.

DEPUTY SPEAKER : The hon. member should be brief. This is not a half-hour discussion.

SRI A. RATNAM : ஒரு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். பொது மக்களுக்கு அரிசி குறைந்த விலையில் கிடைப்பதற்கு அமைச்சர் குழு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அரிசி வியாபாரிகள் எப்படி பதுக்குகிறார்கள் என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும். ஒருவர் 10 மூட்டை அரிசிக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது. அதற்கு அதிகமாக வைத்துக்கொள்கிறவர்கள் லைசென்ஸ் பெறவேண்டுமென்று விதிகள் ஏற்படுத்திவிட்டால், சர்க்காருக்கு எவ்வளவு அரிசி கைவசமாகிறது, யாரிடம் இருக்கிறது, எவ்வளவு விலைக்கு விற்கலாம் என்ற விவரங்கள் தெரியும். இதை சர்க்கார் ஏற்றுக் கொண்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்தால் எல்லோருக்கும் அரிசி நியாய விலையில் கிடைக்கும். உடனடியாக அமைச்சர் குழு இந்த நாட்டிற்கு நல்லதோர் அம்சத்தைத் தேடி எல்லோருக்கும் குறைந்த விலையில் வேண்டிய அளவு அரிசி கிடைக்கும்படிச் செய்யவேண்டும் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து, அமைச்சர் அவர்கள் அதற்குத் தகுந்த பதிலை சபைக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும்படி அளிப்பர் என்று எதிர்பார்க்கிறேன்.

10-10 a.m. THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Deputy Speaker, Sir, I am not expected to make any detailed reference to the long speech of the hon. Member. I shall make a statement on the present food situation in the Madras State.

The prices of paddy and rice which were very reasonable previously began to rise from March 1956 onwards. In order to arrest the rise in prices and stablise them at a reasonable level, the State Government evolved a scheme in consultation with the Government of India, under which stocks of rice supplied by the Centre from their godowns in the State are being sold to the public at controlled rates through the co-operative societies and private dealers selected for the purpose. The rice is being supplied by the Government of India at Rs. 16 per maund ex-godown or ex-railway station, and it is sold to the consumers at rates ranging from Re. 0-11-0 to Re. 0-12-3 per Madras measure.

The sale of rice under the above scheme through the T.U.C.S. was first introduced in Madras City in May 1956. Later, the scheme was extended to the urban areas in Madurai, Tirunelveli, Coimbatore, the Nilgiris, Salem, Tiruchirappalli, North Arcot and Tanjore districts. The work of distribution of rice has been entrusted mainly to co-operative institutions functioning in the several centres and wherever there are no co-operative institutions or where they are not willing to take up the work, private merchants including social workers have been selected for the purpose. The immediate effect of the scheme on prices was gratifying and it ensured cheap rice to poorer sections of the population. There was a demand for the extension of the scheme to a larger number of centres.

The effect of this scheme on prices, however, was not very pronounced as the lean season advanced. In September 1956, the Government of India stated that they had arranged to get plentiful stocks of imported raw rice and wanted that large stocks of raw rice should be pressed into consumption by the State Government so as to bring down the price of local varieties to the normal level. Accordingly, a larger number of co-operative institutions and retailers were selected in all the districts.

Subject to availability of stocks each fair price shop-keeper is allowed to sell up to 20 bags per day. Rice is being issued by them to consumers up to one Madras measure of boiled rice and one Madras measure of raw rice, or up to two Madras measures of raw rice, according to availability of stocks in these varieties.

Besides this, bulk supplies of one week's requirements at a time of raw rice, subject to a minimum of one ton, are being made to institutions, establishments, factories and hostels.

In spite of the various measures taken by this Government in co-operation with the Government of India, it was not found possible to bring down the price of rice. It was reported that this was due to the fact that large stocks of rice were being purchased from Tanjore district by the merchants of Malabar and Travancore-Cochin who offered high prices and purchased as much as possible. There was also some difficulty in getting regular and steady supplies of rice from Andhra. Consequently the prices went up in all the important centres in this State. It was, therefore, considered that unless some restrictions were imposed on the movement of rice and paddy outside the State, it would not be possible to check the rise in price. The whole question was, therefore, discussed with Sri A. P. Jain, Union Minister for Food and Agriculture, when he was in Madras in the third week of October 1956. As a result of the discussions, it was finally decided that a network of fair price shops should be set up in the State and that the Government of India would supply adequate quantities of rice for the purpose. Accordingly the Collectors of districts were instructed to appoint as many retailers as were necessary in all important centres to implement this decision, and there are to-day more than 2,000 fair price shops functioning in the State including the Kanyakumari district.

A quantity of 50,198 tons of rice has so far been issued from the Central godowns to the fair price shops for sale to consumers from May 1956 to first week of December 1956. The rush on these shops was phenomenal and it was brought to notice that there were also abuses by resale of cheap rice bought from the fair price shops. It was no wonder that large queues were seen outside the shops and the stocks supplied to the shops were made to run out quickly. This continued in spite of the fact that the stocks were supplied to these shops to meet their weekly requirements instead of daily. Restriction was also placed by allowing supply to adults only and not to children who are sometimes used as emissaries for *benami* purchases. Even so, the demand was terrific and the supply from Central godowns was not inexhaustible as the stocks were only replenished from time to time by arrival of shipments or imports from other States. The quantity expected to be received in December 1956 is expected to be substantially more and the current demand could be met satisfactorily if not to the full extent. The total quantity expected to be available is about 33,000 tons.

The Government of India have made arrangements to get further shipments of rice from Burma, China and America, regularly in future, and they have assured this Government that the requirements of the fair price shops in the State will be met liberally.

The situation during the past two weeks has considerably improved. As a result of the opening of a larger number of fair price shops and the prospect of a good samba harvest and less pressure for export from Tanjore, the prices are showing an easier trend as hon. Members might have read in the newspapers. In Tanjore, Tiruchirappalli and Coimbatore, the prices are reported to have fallen considerably by Rs. 3 to Rs. 4 per bag. It will take some time for this to be fully reflected in retail prices. But it is already reported that in Madras City, the offtake of rice in the T.U.C.S. fair price shops has decreased to some extent. If, as there is some reason to hope, the downward trend of prices is maintained, it may be said that we have turned the corner and that with the coming harvest of samba in January 1957, further improvement may be expected and there should be no room for anxiety about high prices of foodgrains in the State. In any case there is no shortage anywhere.

IV.—POINT OF INFORMATION *RE* LEGISLATION GOVERNING WORKERS OF BEEDI INDUSTRY.

Sri M. KALYANASUNDARAM : கடந்த சட்ட சபைக் கூட்டத்தில் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமான மசோதாவை இந்தக் கூட்டத்தில் கொண்டுவருவதாக வாக்களித்தார்கள். அது சம்பந்தமான எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கான அறிகுறி தென்படவில்லை. இது எந்த நிலைமையில் இருக்கிறது, என்ன நடவடிக்கை உத்தேசிக்கப்பட்டிருக்கிறது, இந்த மசோதா வெளியிடப்பட்டு சபையின் இந்தக் கட்டத்திலேயே கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா தயாரிக்கப்பட்டுவிட்டது. அதற்கு மேல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரத்தில் இந்த சட்ட சபைக் கூட்டத்திலே அந்த மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறேன் என்பதை மட்டும் இந்த சமயத்தில் சொல்லிக் கொள்கிறேன். முடியுமானால் அதை உடனே பிரசுரித்து சீக்கிரத்தில் சபை முன்பு கொண்டு வருகிறேன், கனம் அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பும் இருந்தால்.

V.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1957-58.

DEPUTY SPEAKER : We now proceed to the next item on the agenda, namely, general discussion on the Budget for the year 1957-58. Sri P. Jeevanandam will initiate the discussion.

Sri P. JEEVANANDAM : அவைத் தலைவர் அவர்களே, நமது சென்னை சட்ட சபையின் சரித்திரத்திலே, மக்களின் பிரதிநிதிகளான அங்கத்தினர்களாகிய நாம் அத்தனை பேரும், நிதி அமைச்சரவர்கள் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கிறபோது புரிந்து கொள்ளத் தக்க ஒரு தருணம் முதல் முறையாக இந்த வரவு செலவுத் திட்டத்தில் தான் நமக்குக் கிடைத்திருக்கிறது என்பது நம் எல்லோருக்கும், தமிழ் மக்கள் எல்லோருக்கும் மிகவும் மகிழ்ச்சியைத் தரத் தகுந்த ஒரு செய்தியாகும். சென்ற கூட்டத்தில் தமிழில் அச்சேற்றிய வரவு செலவுத் திட்டம் அளிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் தமிழிலேயே படிக்கப்பட்டது. இது,

குறிப்பிடத் தகுந்த ஒரு முன்னேற்றம். இது வரவேற்கத் தக்கதாகும். நேற்று நிதியமைச்சரவர்கள், அவர்களது உரையை தமிழில் தொடங்கியதும் இந்த சபை அதை எப்படி வரவேற்றது என்பதை நம்மால் நன்கு உணர முடியும். இந்த நாடும் அவை வரவேற்கும். இனி இதிலிருந்து தொடர்ச்சியாக தீர்மானங்களானாலும் சரி, கேள்விகளானாலும் சரி, இந்த சபையை ஒட்டிய, சர்க்கார் நிர்வாகத்தை யொட்டிய எந்த விஷயமானாலும் சரி, தமிழிலேயே ஆக்கப்பட வேண்டும். ஆக்கப்படுமென்று நான் எதிர்பார்க்கிறேன். இன்னொன்று எனக்கு இந்த சந்தர்ப்பத்தில் கூறவேண்டியதுண்டு. தமிழில் இந்த பட்ஜெட் ஆக்கப்பட்டதுமட்டுமல்ல. என்னைப் பொறுத்த மட்டில், மிகவும் நல்ல தமிழில் இந்த பட்ஜெட் ஆக்கப்பட்டிருக்கிறது. என்று நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். ஏனென்றால் பத்து, பதினைந்தாண்டுகளுக்கு முன்னால் சர்க்கார் தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளைப் பார்த்தால் அது ஆங்கிலமா, தமிழா, திமிழா என்று நினைக்கவேண்டியிருக்கும். தமிழென்று அதைச் சொல்லமுடியாது. ஆனால் இப்பொழுது நிதியமைச்சரவர்கள் நம் முன்னால் சமர்ப்பித்திருக்கும் இந்த பட்ஜெட்டில் இருக்கக் கூடிய தமிழ் நல்ல அருமையான தமிழ் என்பதே என்னுடைய அபிப்பிராயம். சர்க்கார் தரப்பிலிருந்தும், சட்ட சபை அங்கத்தினர்கள் சிலரும், தமிழ் நடவடிக்கைகளில் தேர்ந்த இரண்டு புலவர்களும் சேர்ந்த ஒரு குழு ஏற்பட்டு கலைச்சொற்கள், போதுமான அளவு சேர்க்கப்பட்டு இனிவரும் பட்ஜெட் தயாரிக்கப்படுமேயானால், இன்னும் நன்மை அடைவதற்கு உதவிகரமாக இருக்குமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன். கலைச் சொற்களை வளர்த்து மொழி செழிக்க ராஜாஜி வழி ஆக்கினார்கள். பின்னால் இந்த தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆக்கிக்கொண்டிருக்கிறது. ஆக, சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து தமிழை ஆட்சி மொழியாக்கினால் நடைமுறையில் அது மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நமக்கு தமிழ் ராஜ்யம் கிடைத்தாய் விட்டது. அதே போன்று தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டது என்ற நிலைமை இந்த சர்க்கார் இருக்கிறபோதே வரவேண்டும். இதில் இந்த சட்ட சபையில் இரண்டு வித அபிப்பிராயமே இருக்காது என்று நினைக்கிறேன். இக்காரியத்தில் எல்லோரும் சர்க்காருடன் பரிபூர்ணமாக ஒத்துழைப்பார்கள். இந்த சர்க்கார் தமிழை ஆட்சிமொழியாக்கும். முன்னாலேயே வேண்டிய நடவடிக்கைகள் கையாளப்பட வேண்டும். அடுத்தபடியாக, அரியலூரில் நேர்ந்த விபத்திற்கு நேற்றே நாம் நமது அனுதாபத்தைத் தெரிவித்தோம். அதற்குப் பின்னால் கேள்வி நேரத்தில் கேள்விகள் கேட்கப்பட்டபோது சில இடங்களிலுள்ள பாலங்களின் நிலைமையைப் பற்றி கூறப்பட்டது. அதற்குப் பதிலளித்த நிதியமைச்சரவர்கள், நமக்குப் பணப் பஞ்சம் இருக்கிறது, மத்திய சர்க்காரை நிர்ப்பந்திப்போம், இருந்தாலும் முக்கிய பொறுப்பு நமக்கு உண்டு என்று சுட்டிக் காட்டினார்கள், அதைத் தான் நானும் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு நமது சர்க்கார் பொறுப்பெடுத்து அவைகளைப் புதுப்பிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எல்லைப் பிரச்னை, ஆந்திரா எல்லைப் பிரச்னை. இச் சர்க்கார் இதில் கவனம் செலுத்துமானால் எல்லைப் பிரச்னையைப் பொறுத்த வரையில் எனக்கு சுருக்கமாகச் சொல்லுவதற்கு ஒன்றுண்டு. இந்த சர்க்கார் கலைவதற்கு முன்னால் வரப் போகும் பொதுத் தேர்தலுக்கு முன் அந்த சித்தூர் ஜில்லாவில் நமக்குக் கிடைக்கக் கூடிய பிரதேசத்தை தமிழ் ராஜ்யத்தோடு சேர்ப்பதற்குள்ள முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதில் சிக்கல்கள் இருக்கலாம். நம் சர்க்கார் அதற்காக உறுதியாக போராடவேண்டும். அதற்கு, தமிழ் மக்கள் துணை புரிவார்கள் என்பதில் ஐயமில்லை.

அடுத்தபடியாக, நமது பட்ஜெட்டை எடுத்துப் பார்ப்போமேயானால், இது வரையிலும் இருந்து வந்திருக்கக்கூடிய, காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்ட பிறகு இருந்து வந்திருக்கக்கூடிய ஒரு சாயக் கேடாகும் இந்த பட்ஜெட்கள் என்பதை சொல்லாமல் இருக்க முடியாது. காரணம் எல்லாம் பற்றும்

[Sri P. Jeevanandam] [18th December 1956]

குறை பட்ஜெட்டே. நான் அதற்காக நிதியமைச்சரவர்களையோ, முதலமைச்சரவர்களையோ, வேறு மந்திரிகளையோ குறை கூற விரும்பவில்லை. இதற்குக் காரணம், காங்கிரஸின் கொள்கைதான். காங்கிரஸ் சர்க்காரின் கொள்கை தான் இந்த பற்றாக் குறை பட்ஜெட்டுக்குக் காரணம் என்று நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பட்ஜெட்டைப் படித்துப் பார்த்தால் தெரியும். இந்த பட்ஜெட்டில் சில தந்திரங்கள் இருக்கின்றன. ஆனால் ஒன்று. ஆத்திரப்படுத்தாத பட்ஜெட் இது. இந்த பட்ஜெட்டில் சில பகுதிகள் குறிப்பிடத் தக்கனவாகும். அதாவது, மக்களை கொஞ்சம் திருப்திப் படுத்துகிற மாதிரி இருக்கிறது இந்த பட்ஜெட், என்று பார்த்தவுடனே சொல்லமுடியும். அதாவது, புது வரிகள் இந்த பட்ஜெட்டில் திணிக்கப்படவில்லை. ஆனால் ஒன்று, இந்த பட்ஜெட் நிச்சயமாக இனி வரக்கூடிய சர்க்கார் துண்டு விழக் கூடிய பணத்திற்கு புது வரி போட்டே தீரவேண்டும். இந்த பட்ஜெட்டில், இந்த சர்க்கார் ஒன்றும் புது வரி போடவில்லை. புது வரிகள் போட்டு மக்களின் ஆத்திரத்தைக் கிளப்பவில்லை. ஏனெனில், விரைவில் தேர்தல் வருகிறது. தேர்தல் சமயத்தில் சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தி தேர்தலில் பங்கெடுக்க வேண்டுமென்பதே அதற்குக் காரணம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படியானால் மத்திய சர்க்கார் வரிபோட்டிருக்கவேண்டிய அவசியமில்லையே.

SRI P. JEEVANANDAM : நான் இப்பொழுது இந்த சர்க்காரைப் பற்றித்தான் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, என்.ஜி.ஓக்கள், ஆசிரியர்கள், கிராம அதிகாரிகள் இவர்களைப் பற்றி ஒரு வார்த்தை. எதிர் தரப்பிலிருந்து இவர்களது விஷயத்தைக் கவனிக்கவேண்டுமென்று விடாமல் நாங்கள் கூறிக்கொண்டே வந்திருக்கிறோம், என்பது யாவருக்கும் தெரிந்த சங்கதி. இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் கவனிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் கிராம அதிகாரிகள் கவனிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் கிராம ஊழியர்கள் கவனிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் தோட்டிகளும், வெட்டியான்களும், தலையாரிகளும் கவனிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் என்.ஜி.ஓக்களும் கவனிக்கப்பட்டிருக்கிறார்கள். என்.ஜி.ஓக்கள் ஜனவரி மாதம் 5-ம் தேதியோ, 9-ம்தேதியோ ஒரு அடையாள வேலை நிறுத்தம் நடத்தப் போவதாக அறிகிறோம். நம் சர்க்கார் அதை ஒடுக்குவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது. நான் சொல்வதென்னவென்றால் இன்னும் மத்திய சர்க்காரை நிர்ப்பந்தப் படுத்தி அவர்களின் நியாயமான கோரிக்கைகளை, அவர்களின் வேலையின் தன்மை, அவர்களுக்குள்ள யோக்கியதை எல்லாவற்றையும் கவனித்து மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையே இருக்கக் கூடிய இந்த வித்தியாசத்தைப் போக்குவதற்கு இச்சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI K. KAMARAJ NADAR : அதை ஏற்றுக்கொள்கிறேன்.

SRI P. JEEVANANDAM : அடுத்தபடியாக, பட்ஜெட்டிற்குள் போனால் பார்க்கலாம், ஜமீன்தார்களுக்கு போன வருடத்தை விட இந்த வருடம் அதிகமாக நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறது. நீர்ப்பாசனத்திற்குப் போதிய பணம் செலவழிக்கப்படவில்லை. நீர்ப்பாசன வசதி குறித்து போதிய கவனம் இதில் செலுத்தப் படவில்லை. உதாரணமாக, அணை கட்டியாய் விட்டது. ஆனால் வாய்க்கால் கிடையாது. வாய்க்கால் இல்லாமல் அணை கட்டி பயன் என்ன ? .

[illegible] தவிர ஜமீன்தார்களுக்கு அதிகப்பணம் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் நியாய வாரத்தை அமுல் நடத்துவதற்கு வேண்டியதை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்தபடியாக தொழிலாளர்களை பொறுத்த வரையில் ஐந்து ஆண்டு திட்டங்களை நிறை

18th December 1956] [Sri P. Jeevanandam]

[illegible] மிகமுக்கிய பங்கு வகித்து வருகிறார்கள். ஆதலால் அவர்களை [illegible]ராகப் படுத்தவேண்டும். தொழிலாளர்கள் விஷயத்தில் ஏதாவதொரு கமிட்டிகள் போடப்படுகின்றன. ஆனால் அவற்றின் ரிப்போர்ட்டுகளை சர்க்கார் உடனடியாக அமுல் நடத்துவதில்லை. கொஞ்ச காலத்திற்கு முன்னால் தான் நடராஜன் ரிப்போர்ட்டு வெளியானது. அதன் மேல் சட்டம் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். பாக்டரி சட்டத்தை எல்லாம் உடைத்து இன்று அவர்களுக்கு அதனால் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இது மாத்திரமல்ல. தொழிலாளர்களுக்கு சர்க்காரே கோர்ட்டுகளை உண்டு பண்ணுகிறார்கள். மேலும் கோர்ட்டு தீர்ப்புகளையெல்லாம் சர்க்காரே உடைக்கிறார்கள். இதனால் சர்க்காரை தொழிலாளர்கள் எதிர்க்கிறார்கள். இதை தடுத்து நிறுத்துவதற்க்கு சர்க்கார் கோர்ட்டு தீர்ப்புகளின் பேரில் உஷாராக நடவடிக்கை எடுக்கவேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் விஷயத்திலும் இதையேதான் நாம் பார்க்கிறோம். எங்களுக்கும் பாதுகாப்பு தரவேண்டுமென்று சுருட்டுத் தொழிலாளர்கள் கேட்கிறார்கள். ஆகவே ஐந்தாண்டு திட்டங்களில் பெரும் பங்கு வகிப்பவர்கள் தொழிலாளி பெருமக்கள். ஆனால் சர்க்கார் தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளை மறுத்து வருகிறார்கள். இது நாட்டினுடைய முன்னேற்றத்தை தடுக்கும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே உடனடியாக ஒப்புக்கொண்ட தீர்ப்பை அமுலுக்குக் கொண்டு வர சர்க்கார் முந்த வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன். ஆகவே கடைசியாக இந்த பட்ஜெட்டைப்பற்றி ஒரு அபிப்பிராயம் சொல்லிவிட்டு நிறுத்திக் கொள்ளுகிறேன். இந்த சர்க்காருடைய இந்த மாதிரியான பலஹீனமான கொள்கைகளை வைத்துக்கொண்டு எந்த சர்க்கார் வந்தாலும் இப்படித்தான் இருக்கும். அதாவது பற்றாக் குறை பட்ஜெட், அதிக புது வரிகள்.

வரிகளை போடவேண்டியவர்களுக்கு போடுவதில்லை. இப்படி ஏதோ ஒரு மாதிரி போய்க்கொண்டிருக்கிறார்கள். வெள்ளத்தில் போன கட்டை மாதிரி போய்க்கொண்டிருக்கிறார்கள். இதை கன்ட்ரோல் பண்ணக்கூடிய சக்தி இவர்களிடம் இல்லை. முன் ஏர் மாதிரி தான் பின் ஏர் போய்க் கொண்டிருக்கிறது. இந்த சர்க்கார் போகிற போக்கில் சொல்லப்படுகிற இந்த ஐந்தாண்டு அனுபவம் இனி வருகிறவர்களுக்கு வழி காட்டியாக இருக்கமுடியாது. அது மாத்திரமல்ல. இந்த ஐந்தாண்டுகளின் அனுபவம் வருகிறவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தொடர்ச்சியாக இந்த சர்க்கார் கையாண்டு வந்திருக்கக்கூடிய கொள்கைகளைப் பார்த்தால் எப்போதும் பற்றாக் குறைதான். ஆகவே இதில் இருக்கக் கூடிய பலஹீனத்தை கண்டிக்கின்றோம். இதில் காங்கிரஸினுடைய அடிப்படையான கொள்கை என்ன ? அது மக்களின் பக்கத்தில் நின்று கொண்டு மக்கள் நலன்களுக்காக மக்களின் பட்ஜெட்டை வகுக்க வேண்டும். மக்களுக்காக உள்ள நன்மைகள் மேலோட்டமாக இருக்கிறதே ஒழிய அடிப்படையாக இதில் ஒன்றும் இல்லை. தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் அவர்களின் ஊதியம், வேலை இவைகளை யெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

RAJA MUTHIAH CHETTIYAR OF CHETTINAD : Mr. Deputy Speaker, Sir, the Hon. the Finance Minister . . .

SRI M. KALYANASUNDARAM : கனம் நிதி மந்திரி அவர்களே தமிழில் பேசியிருக்கும்போது கனம் அங்கத்தினர் ஆங்கிலத்தில் பேசுவது சரியா ?

RAJA MUTHIAH CHETTIYAR OF CHETTINAD : I was about to say that the Hon. Minister for Finance had a hearty laugh when I got up to speak. I was only wondering . . .

[18th December 1956

SRI E. L. RAGHAVA MUDALIAR : Mr. Deputy Speaker, Sir, may I request the hon. Member to speak in Tamil, as he is conversant with Tamil? கனம் அங்கத்தினர் அவர்கள் தமிழில் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

RAJA MUTHIAH CHETTIYAR OF CHETTINAD : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவு திட்டத்தை நிதி அமைச்சர் அவர்கள் இந்த தடவை சுருக்கமாக விளக்கி சொன்னதற்கான காரணத்தை அவர்களே சொல்லிவிட்டார்கள். ஏனென்றால் இப்போது இது உத்தேசமாக குறைவான காலத்திற்குத் தான் என்று முதலில் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இல்லாவிட்டால் வழக்கம் போல் விரிவாகவும் நன்றாகவும் அவர்கள் சொல்லியிருப்பார்கள். இப்போது விரிவாக விளக்காவிட்டாலும் நாலைந்து வருஷங்களாக இந்த வரவு செலவு திட்டங்களை எல்லாம் இந்த சட்ட சபையில் மிக அழகாக எடுத்து சொல்லியிருப்பதை நாம் பார்த்து இருக்கிறோம். பொதுவாக இந்த வரவு செலவு திட்டத்தை பிரதான மந்திரி அவர்களும் மற்ற மந்திரிகளும் நன்றாக சர்ச்சை செய்துதான் தெரிவித்திருக்க வேண்டும். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இங்கு முக்கியமாக இரண்டு விஷயங்களை கூற விரும்புகிறேன். சாதாரணமாக கழிந்த சில விஷயங்களை சீக்கிரமாக நாம் மறந்துவிடுவது வழக்கமாக இருந்து வருகிறது. ஒரு விஷயம், சமீபத்தில் புயலால் விளைந்த சேதத்தை எல்லோரும் அறிவார்கள். அப்போது தஞ்சாவூர், ராமனாதபுரம் ஜில்லாக்களில் நடந்த கஷ்டங்களைப்பற்றியும் அங்கு அதைச் செய்ய வேண்டும் இங்கு இதைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் எதிர்க் கட்சிக்காரர்கள் பலர் கத்தினார்கள். ஆனால் இப்போது அங்கு நிலைமை என்ன, ஆனால் இந்த சமயத்தில் புயல் பிரதேசங்களில் எல்லாம் முதல் அமைச்சர், மற்றும் எல்லா பேர்களும் வந்து வேண்டியது எல்லாம் செய்தார்கள் என்பது வாஸ்தவம். பின்னிட்டு செய்யவேண்டியதென்னவென்றால் அங்கெல்லாம் புயல் காரணமாக பல கண்மாய்கள் உடைப்பட்டுப் போனது, அவையெல்லாம் இன்னும் சரியாக கட்டப்படவில்லை. அதே மாதிரி பல பாலங்களும் கட்டப்படாமல் இருக்கின்றன. ஜில்லா போர்டுகளில் இருந்து கட்டலாமென்றால் பணம் இல்லாமல் இருக்கிறது. ராமனாதபுரம் ஜில்லா போர்டிலுள்ள ஆசிரியர்களுக்கு அந்த ஜில்லா போர்டில் பணம் இல்லாததினால் இரண்டு மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இந்த விபரத்தை ஸ்ரீ. ராமசாமி படையாச்சியிடம் கேட்டால் அவரும் இதை ஒப்புக்கொள்ளத் தயார் என்றுதான் நினைக்கிறேன். இது நிதி மந்திரி அவர்களின் கவனத்திற்கு வர வேண்டியது அவசியம். ஆகையால் உடனடியாக ராமனாதபுரம் ஜில்லா போர்டுக்கு ஏதாவது கடன் உதவி செய்து இந்த நிலைமையை சமாளிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் அதிகமாக மழை பெய்யாததால் ராமனாதபுரம் ஜில்லாவில் திருப்பத்தூர் பக்கம் பல கஷ்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதை நிவர்த்தி செய்ய அங்குள்ள ஜில்லா அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததின் காரணம் என்ன என்று தெரியவில்லை. பணம் இல்லையா? அல்லது மதராஸிலிருந்து உத்தரவு பிறப்பிக்கப் படவில்லையா என்று தெரியவில்லை. மேலும் இந்த தடவை பல பாலங்கள் விழுந்து இருக்கின்றன. அவை இது வரை பழுது பார்க்கப்படவில்லை. இதனால் பஸ் ஏறுவதற்கு 10, 5, மைல்கள் தள்ளி போய்தான் ஏற வேண்டியிருக்கிறது. இதை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜில்லா போர்டுகள் ரோடுகளை உடனடியாக கவனிக்காவிட்டால் அரியலூரில் நடந்தது மாதிரி நடக்க ஏதுவாகும். இந்த பாலங்கள் எல்லாம் 40 வருஷம் 50 வருஷம் இப்படியாக பழக்கமானவை. ஆதலால் இதையெல்லாம் வேண்டிய பரிசீலனை செய்ய வேண்டும். இதல்லாமல் இடிந்து விழுந்து கிடக்கிற பாலங்களை கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னொரு முக்கியமான விஷயம். அதாவது சமுதாய அபிவிருத்தி திட்டத்தைப்பற்றி, அது பல இடங்களில் ஏற்படுத்தப்படுகிறது. இந்த திட்டங்களை கூடியவரை புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் ஏற்படுத்தினால் பல காரியங்களை செய்ய உதவியாய் இருக்கும். ஆதலால் இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்குள்ள குறைகளை பார்த்த மந்திரி அவர்கள் உடனே கவனிப்பதாக சொன்னார்கள். ஆனால் அது போல் செய்யவில்லை. இரண்டொரு இடங்களில் மாத்திரம் செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே ராமனாதபுரம், தஞ்சாவூர் ஜில்லாக்களில் இருக்கும் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம். அந்த திட்டங்களில் இருக்கும் லிஸ்டில் இப்போது உட்படுத்தா விட்டாலும் உடனடியாக இவைகளை நிவர்த்தி செய்து தர வேண்டும். இதற்கு மந்திரி அவர்கள் உறுதி சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருஷம் வரவு செலவு திட்டத்தில் ஏழைக்குழந்தைகளுக்கும் சிறு குழந்தைகளுக்கும் கல்வி, வைத்திய வசதி முதலிய வசதிகளைக் கனம் நிதிமந்திரி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அது ரொம்பவும் வரவேற்கக்கூடிய விஷயம்தான். இதைக் கண்டு நான் அவரைப் பாராட்டுகிறேன். இரண்டாவது, கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றபடி மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் வசதிகளையும் கொடுத்திருப்பதைக் கண்டும் நான் அவரையும் அவருடைய இலாகாவையும் பாராட்டுகிறேன். இப்படி யெல்லாம் பல நல்ல காரியங்களை செய்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நான் வரவேற்கிறேன். சமீபத்தில் தேர்தல் வரப்போகிறது. அதனால் இப்படிப்பட்ட நல்ல காரியங்களை யெல்லாம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த சௌகர்யங்கள் எல்லாம் இப்பொழுது செய்து விட்டு பிறகு நிறுத்தி விடப்போவது இல்லை. இது தொடர்ந்து தான் நடக்கும். அதனால் இந்த நன்மைகளெல்லாம் தேர்தலை முன்னிட்டு கொடுத்ததாக கருதக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட குறுகிய மனப்பான்மையிலும் இருக்கக்கூடாது. இவைகளுக்கெல்லாம் நான் அரசியலாரைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் வருவதற்காக இந்த நன்மைகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கிறது என்ற எண்ணம் இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI P. RANGASWAMI REDDIAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதன் முதலாக இந்தத் தடவை கனம் நிதி மந்திரி அவர்கள் வரவு செலவு திட்டத்தை தமிழில் சமர்ப்பித்ததற்கு அவருக்கு என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்களும் இதைப் பற்றி பேசி இருக்கிறார்கள். சில நாட்களாக நமது முதல் மந்திரிக்கு நம்முடைய நாட்டின் பல இடங்களிலிருந்து நமது நாட்டை " தமிழ் நாடு " என்று பெயரிட்டு அழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு ரத்தத்தினால் எழுதிய பல கடிதங்கள் வந்து கொண்டிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். அப்படியே பல மனுக்களும் வந்திருப்பதாக தெரிகிறது. ஆட்சி-மொழி தமிழாக இருக்க வேண்டும் என்றும் மனுக்கள் வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி நம்முடைய ராஜ்யத்தை " தமிழ் நாடு " என்று பெயரிட்டு அழைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். புதிய அரசாங்கம் வருவதற்கு முன்னதாகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். 10-50 a.m.

கனம் முத்தையா செட்டியார் அவர்கள் பேசும் போது அரசாங்கம் ஏதோ சலுகைகள் கொடுத்திருக்கிறது, அவைகள் எல்லாம் தேர்தலுக்கு என்று கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கருதக்கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். அதை நான் மறுக்கிறேன். அப்படியேதான் இப்பொழுது எங்கு பார்த்தாலும் வதந்தி நிலவி வருகிறது. நாலைந்து வருஷங்களாகவே கிராம உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய நிலைமையை உயர்த்த வேண்டும் என்றும் அவர்கள் முழு நேர வேலை ஊழியர்கள் என்று கருதப்பட வேண்டும் என்றும் இன்னும் பல திட்டங்களை வகுத்து அவை

[Sri P. Rangaswami Reddiar] [18th December 1956

களைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் கேட்டுக் கொண்டு வந்தும் இப்பொழுதுதான் அவர் களுக்கு இப்படிப்பட்ட சலுகைகளை கொடுத்திருக்கிறார்கள். அந்த சலுகை களும் வரப்போகும் ஏப்ரல் மாதம் முதற்கொண்டு அமுலுக்கு வரும் என்று சொல்லியிருப்பதால் இவைகள் எல்லாம் தேர்தலுக்குத்தான் என்று எப்படி கருதாமல் இருகக முடியும்? அவர்களுக்கு என்று செல விடப்போவதெல்லாம் 1957-ம் வருஷம் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தான் செலவிடப் போகிறார்கள். அதனால் இவைகள் தேர்தலுக்கு என்று தான் சொல்லுவதில் தவறு இல்லை. இது குறுகிய மனப்பான்மை என்று சொல்லமுடியாது. இது ஒரு (established fact) ஸ்தாபித மான உண்மை.

நான் ஏற்கனவே பேசும் போது கூட்டுறவு ஸ்தாபனங்களை பற்றி பேசியிருக்கிறேன். அதன் மூலம் லட்சக் கணக்கான ரூபாய் விரயமா கிறது என்றும் சொல்லி வந்திருக்கிறேன். அப்படி விரயமாகக் கூடிய பணத்தை நாம் நல்ல முறையில் மிச்சப்படுத்தலாம் என்றும் சொல்லி யிருக்கிறேன். அதைப் பற்றி இன்றும் சில விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். குறிப்பாக இரண்டு மூன்று விஷயங் களை மட்டும் எடுத்துச் சொல்லுகிறேன்.

சமீப காலத்தில் ஒரு இதழில் ஒரு கேலிச் சித்திரத்தைப் பார்த்தேன். அதுவும் ஒரு வார இதழில் வந்திருந்தது. மத்திய சர்க்கார் நிதி மந்திரி உட்கார்ந்து கொண்டு கவலை ஓட்டுவது போலவும், பொது மக்கள் மாடுகள் போலவும், பொது மக்களை சாட்டையால் அடிப்பது போலவும், கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பது போலவும், பக்கெட் லெதர் ஓட்டை யாக இருப்பது போலவும், அதிலிருந்து தண்ணீர் ஒழுகிக் கொண்டிருப்பது போலவும் சித்திரம் போடப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் நிதி நிலைமை அப்படி இருக்கிறது என்று காண்பிப்பதற்காக அந்தச் சித்திரத்தை போட்டிருந்தார்கள். அதைப் போலவே அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு செலவு திட்டத்தில் ஐந்து கோடி ரூபாய் துண்டு விழுகிறது. அதைக்காண ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி அரசாங்கத்தில் ஊழல் கள் இருந்தால் இப்படி ஐந்து கோடி மட்டும் அல்ல, இன்னும் 20 கோடி ரூபாய் கூட துண்டு விழுவதற்கு இடம் இருக்கிறது. இதை கனம் ஜீவானந்தம் அவர்களுக்கும் சொல்லுகிறேன். அதனால் நிர்வாகம் திறம் பட நடத்த வேண்டும்; ஊழல் நிறைந்ததாக இருந்தால் துண்டு விழாமல் இருக்கமுடியாது. இதற்கு என்று ஒரு உதாரணமும் கொடுக் கலாம். திருச்சி ஜில்லா கலெக்டர் அவர்கள் சமீபத்தில் புதுக்கோட்டை காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி அவர்களுக்கு ரூபாய் பதினாயிரத்தை பாரத் சேவா சமாஜ் தலைவர் என்ற முறையில் கொடுத்தார்கள். அங்கு ரூரல் வெல்பேர் ஆபிஸர் இருக்கிறார், ரூரல் அபிவிருத்தி ஆபீஸர் இருக் கிறார், அவர்களிடம் கொடுக்காமல் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி யின் கையில் கொடுப்பானேன். அவர் அதிலிருந்து ஒரு ரூ. 500 செக் ஒன்றை எடுத்து புதுக்கோட்டை கோவாப்ரேடிவ் சென்ட்ரல் பாங்கில் கொடுத்தார். அங்கு அந்த செக்கை வாங்க மறுத்து விட்டார்களாம். அந்த பாங்கின் பங்கு தொகையைக் கட்டுவதற்கு என்று கொடுத்தபோது அதை மறுத்த விட்டதின் பேரில் வேறு விதமாக அந்தப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் சர்க்கார் கொடுத்த பணத்தை துர்விநியோகம் செய்திருப் பதாக தெரிய வருகிறது. குறவர்களுக்கு குடிசைகள் கட்டிக் கொடுப் பதற்கும் மற்றும் இதர ஏழைகளுக்கு என்று கொடுக்கப்பட்ட பணத்தை ஏன் துர்விநியோகம் செய்ய வேண்டும். புகார் செய்த பின் வேலைகள் நடந்து கொண்டு வருகிறது. இந்த நிலைமையில் அந்தப் பணத்தை அங்குள்ள ரூரல் அபிவிருத்தி ஆபீஸர் இருக்கும் போது அவரிடம் கொடுக்காமல் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியினிடம் கொடுப்பானேன். பெரிய தொகையாகிய ரூபாய் பதினாயிரத்தை அவரிடம் கொடுப் பானேன். அரசாங்க அதிகாரிகள் இருக்கும்போது அவர்களிடம் ஏன் கொடுத்திருக்கக்கூடாது. அவர்களிடம் கொடுத்திருந்தால் அவர்கள் அந்த பணத்தை எடுத்து குடிசைகள் கட்டுவதற்கும் ஹரிஜனங்களுக்கு செலவு செய்வதற்கும் செலவு செய்திருக்கமாட்டார்களா? இப்படிக் கொடுத்து ஏன் துர்விநியோகம் செய்ய வேண்டும்?

18th December 1956] [Sri P. Rangaswami Reddiar]

அடுத்தபடியாக ஆத்தூர் ஆனயப்பட்டி என்ற இடத்தில் அதாவது சேலம் ஜில்லாவில், ஒரு மாடல் பாரத்தை ஆரம்பித்தார்கள். அந்த பாரத்திற்கு என்று தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் நல்ல நிலம் இல்லை. அங்கு பயிரிட்டார்கள். ஆனால் வெள்ளாமையிட்டாலும் பயிர் கருகிப்போய் விட்டது. அதனால் அங்கு பாரம் நடத்துவதை நிறுத்தி விட்டார்கள். அங்கு மறுபடியும் ஒரு பாரத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கு வருஷம் முந்நூறு ரூபாய் என்று 25 வருஷங்களுக்கு என்று ரூ. 75,000 கொடுத்திருக்கிறார்கள். நான் சர்க்காரை சாலெஞ்சு செய்கிறேன். அங்கு இப்பொழுது போய் பார்த்தாலும் அங்கு ஒரு பயிர் கூட கிடையாது. அங்கு சர்க்கார் மாடல் பாரத்தை ஆரம்பித்து விட்டு பிறகு இந்த இடம் சரியில்லை என்று தெரிந்த பின் மறுபடியும் அங்கு ஆரம்பிப்பானேன். ரூ. 75,000 அதற்கு ஏன் செலவு செய்யவேண்டும். அது விதை பாரமாக இருந் தாலும் இருக்கலாம். ஆனால் அந்த இடத்தில் பயிர் இல்லை. இதை நான் நிச்சயமாக காட்ட முடியும். சமீபத்தில்தான் நான் அங்கு சென்று விட்டு பார்த்து வந்தேன். அங்கு எந்த விதமான பயிரும் கிடையாது. நான் சொல்வது உண்மைதான். இந்த நிலைமையில் அங்கு ஏன் பணத்தை விரயம் செய்யவேண்டும் என்று கேட்கிறேன். இதை சர்க் காருடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று தான் சொல்லு கிறேன். ஏதோ எதிர் கட்சியிலிருந்து சொல்லுகிறோம் என்று நினைத்து விடக்கூடாது. நடை முறையில் உண்மை இருக்கிறதா நாங்கள் சொல்வதில் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். இப்படியெல்லாம் பணத்தை விரயம் செய்தால் ஏன் துண்டு விழாது என்று கேட்கிறேன். துண்டு விழும் பட்ஜெட் எப்பொழுதும்தான் ஏற்படும். அதன் காரணம் நிர்வாகம் சரியானபடி நடை பெறவில்லை. நிர்வாகத்தில் ஊழல் இல்லா மல் இருந்தால்தான் துண்டு விழாத பட்ஜெட் தயாரிக்கலாம். இதற்கு யார் ஜவாப் என்று கண்டுபிடித்து அந்த அதிகாரியை தண்டிப்பதோடு அவரிட மிருந்து பணத்தையும் வசூல் செய்வதற்கு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

திருச்சி ஜில்லாவில் 1955-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ந் தேதிக்குப் பிறகு நீதியும் நிர்வாகமும் பிரிக்கப்பட்டது. அதை மக்கள் வரவேற்றார்கள். அது நல்ல முறையில் நடக்கும் என்று எதிர் பார்த்தார்கள். சமீபத்தில் நிலத் தகராறு சம்பந்தமாக ஜுடிஷியல் தலைவர் ஒருவர் திருச்சி ஜில்லா கலெக்டரைப் பற்றி தன்னுடைய ஜட்ஜ்மெண்டில் தாக்கி எழுதியிருக்கிறார். அதில் ஓரளவு உண்மை இருக்கிறதோ இல்லையோ அதைப் பற்றி கவலை இல்லை. ஆனால் சமீப காலமாக திருச்சியில் எப்படி நிர்வாகம் நடை பெற்று வருகிறது என்பதைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண் டும். 1956-ம் வருஷம் மே மாதத்தில் தமிழர்களாகிய பிராமணரல்லாத வர்களை வேலையை விட்டு நீக்கியிருக்கிறார்கள். அவர்கள் சுமார் ஏழு முதற்கொண்டு பதினைந்து வருஷம் வரையில் சர்வீஸ் போட்டவர்கள். அவ்வளவு வருஷம் சர்வீஸ் போட்டியிருந்தும்கூட அவர்களை உத்தி யோகங்களில் நிரந்தரமாக்கவில்லை. ஆனால் பிராமண உத்தியோகஸ்தர் களை அவர்களுடைய சர்வீஸ் குறைவாக இருந்தாலும் நிரந்தரமாக்கி இருக்கிறார்கள். அந்த பிராமண உத்யோகஸ்தர்களுக்கு இரண்டு, மூன்று அல்லது ஐந்தாறு மாத சர்வீஸ் ஆனாலும் அவர்களை நிரந்தரமாக்கி இருக்கிறார்கள். அப்படி நிரந்தரமாக்கப்படாத பிராமணரல்லாதவர்களு டைய பெயர்கள், டி. என். சுப்பையா பிள்ளை (15 வருஷம்), தீனதயாளு, ஜி. கருணாநிதி, ஏ வி. பலராமன். இவர்களை நிரந்தரமாக்கவில்லை. ஆனால் கே. எஸ். சடகோபன் போன்ற நாலைந்து மாதங்கள் சர்விஸ் போட்டவர்களை நிரந்தரமாக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய படிப்பு இல்லை. இப்படியெல்லாம் அங்கு ஊழல்கள் நடந்து வருகிறது. பிராமண உத்தியோகஸ்தர்களுடைய பெயர்கள் சடகோபன், சேஷ அய்யங் கார், பி. நாராயணசாமி, ஜி. விருத்தபரமேஸ்வரன். ஜில்லா கோர்ட்டுக்கு என்று அப்பாதுரை ஐயர் அண்டு சன்ஸ் இடமிருந்து பர்னிச்சர் வாங்கப் பட்டிக்கிறது. ஆனால் கணக்கு இருக்கிறதேயொழிய பர்னிச்சர் இல்லை. இதைப் பற்றி டிஸ்டிரிக்ட் ஜட்ஜுக்கு நோட்டீஸ் கொடுத்தும் ஹைக்கோர்ட் டுக்கு இதைப் பற்றி தெரிவிக்கவில்லை. இது சிறு விஷயம் என்று கருதக்

A—5

கூடாது. பல துறைகளில் இப்படிப் பட்ட ஊழல்கள் நடந்து வருகின்றன. இதே மாதிரி அநேகம் உதாரணங்களை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வர முடியும். இப்படிப்பட்ட ஊழல்கள் இருந்தால் கண்டிப்பாக வரவு செலவு திட்டத்தில் துண்டு விழத்தான் செய்யும். இவைகளையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இதைப் பற்றி சொல்லுகிறேன்.

இப்பொழுது மொழி பரீட்சை என்று வைத்திருக்கிறார்கள். நாடு பிரிவினை ஆகும் முன்பு இப்படிப்பட்ட பரீட்சை இருந்தது. இரண்டாவது பாடமாக வைத்திருந்தார்கள்.

'Second-class Language Test—Full Test in any two of the following languages:—Tamil, Telugu, Kannada, Malayalam, Urdu or Hindi' தமிழ், தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம் என்றெல்லாம் வைத்திருந்தார்கள். ஹிந்தியும் வைத்திருந்தார்கள். இவைகளில் இரண்டு அவசியம். தற்காலத்தில் அந்த மொழி பரீட்சை அவசியமா என்பதையும் கவனிக்கவேண்டும். தமிழ் மொழி ஆட்சி மொழியாக வரபோகிறது. இந்த நிலைமையில் இந்தப் பரீட்சைகள் எதற்கு. இதை எடுத்துவிட்டால் இதன் மூலம் கொஞ்சம் மிச்சம் காட்டலாம் என்று தோன்றுகிறது. அதனால் இந்த பரீட்சைகளை ஒழிக்க வேண்டும்.

1956-ம் வருஷம் அக்டோபர் மாதம் 24-ந் தேதி ஒரு தினசரி பத்திரிகையில் ஒரு செய்தி வெளி வந்தது. திருச்சி ஜில்லா கலெக்டருக்கு 26 வருஷ சர்வீஸ் ஆகி இருப்பதாக தெரிகிறது. அவர் இந்த நாட்டின் எந்த இடத்திலும் தலைமை ஸ்தானம் வகிக்க அருகதை இல்லை என்று ஹைக்கோர்ட்டு தீர்ப்புக் கொடுத்திருப்பதாக செய்தி வெளி வந்தது. இதன்படியே ஹைக்கோர்ட்டு தீர்ப்பு அளித்திருப்பதாகவும் செய்தி வெளி வந்தது. 1956-ம் வருஷம் அக்டோபர் மாதம் 24-ம் தேதி ஹைக்கோர்ட்டு தீர்ப்பு அளித்து இப்பொழுது இரண்டு மூன்று மாதங்களாகிறது. எனக்கு ஹைக்கோர்ட்டையும் அவரைப் பற்றியும் அக்கறை இல்லை. இந்த இரண்டு விஷயத்தில் ஒன்று உண்மையாக இருக்க வேண்டும். ஹைக்கோர்ட்டு சொன்னது ஒன்று சரியாக இருக்க வேண்டும் அல்லது பொது ஜனங்கள் சொல்வது சரியாக இருக்க வேண்டும். அப்பொழுது ஹைக்கோர்ட்டு தீர்ப்பு தப்பு என்று ஆகிறது. இதைத் தவிர மூன்றாவது பிரச்னை இருக்க முடியாது. 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 4-ந் தேதி, ஞாயற்றுக்கிழமையன்று திருச்சி டவுன்ஹால் மைதானத்தில் திராவிடக் கழகத்தாரால் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதற்கு திரு. வேதாசலம், பெரியார் முதலியவர்கள் தலைமை வகித்தார்கள். அத்துடன் இரண்டு மூன்று சென்னை சட்ட சபை அங்கத்தினர்களும், ஒரு லோக் சபை அங்கத்தினரும் வந்திருந்தார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு முகமாக ஹைக்கோர்ட்டினுடைய தீர்ப்பை எதிர்த்து கண்டனம் தெரிவித்தார்கள். அது கண்டிப்பாக சர்க்காருடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் அங்கு சுருக்கெழுத்துக்காரர்கள் வந்து குறிப்பு எழுதிக் கொண்டிருந்தார்கள். 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 4-ந் தேதிக்கு பிறகு இப்பொழுது சுமார் 30 அல்லது 36 நாட்களாகி விட்டது. இந்த விஷயம் பற்றி சர்க்கார் செய்தது என்ன ? முன்பு ஒரு தடவை அம்பேத்கார் அவர்கள் கம்யூனல் ஜி.ஓ. சம்பந்தமாக சொன்ன போது ஒன்று குறிப்பிட்டார். அதாவது **"I am to be bound by the decision but I am not bound to respect the same"**. என்று அவர் சொல்லியிருக்கிறார். பொது மக்கள் இதைப் பற்றி சொல்லுகிறார்கள். ஹைக்கோர்ட்டின் தீர்ப்பு சரியாக இருந்தாலும் இருக்கலாம். பொது மக்களின் தீர்ப்பும் சரியானதாக இருந்தாலும் இருக்கலாம். அது எப்படி இருந்தாலும் இதற்கு யார் ஜவாப்தாரி என்பதை யோசிக்க வேண்டும். ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளைப் பற்றி பேசக் கூடாது. ஆனால் ஜட்ஜுமெண்டுகளைப் பற்றி பேசலாம். ஹைக்கோர்ட்டு அளித்த தீர்ப்பைப் பற்றி பேசலாம். அந்தத் தீர்ப்பைப் பற்றி இப்பொழுது

பொது மக்கள் **criticise** பண்ணுகிறார்கள். ஆனால் இந்த தீர்ப்பைப் பற்றி கவனிக்கும்போது இது சாதாரணமாக ஏற்பட்ட தீர்ப்பு அல்ல இதற்கு மூல காரணம் இருப்பதாக தெரிய வருகிறது. ஸ்ரீரங்கத்தில் சாமி அய்யங்கார் என்று ஒருவர் இருக்கிறார். அவரை ஆனரரி பெஞ்சு மாஜிஸ்டிரேட்டாக ஆக்க வேண்டும் என்று திருச்சி ஜுடிஷியல் ஆபீசர் சிபாரிசு செய்திருந்ததாகவும் அதை மலையப்பன் அவர்கள் நிராகரித்து விட்டதாகவும் அதன்மூலம் மலையப்பன் பேரில் மேலதிகாரிகள் **prejudice** ஆகியிருப்பதாகவும் தெரிய வருகிறது. சாமி அய்யங்கார் சி. டி. வெங்கட்டரமணன் அவர்களை அணுகி, அவர் சாமி அய்யங்கார் பேரில் ஏற்பட்ட தீர்ப்பினால் கோபம் அடைந்து இப்படிப் பட்ட ஜட்ஜுமெண்ட் ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது. இப்படிப்பட்ட வதந்தி திருச்சியில் இப்பொழுது நிலவி வருகிறது. இந்த சாமி அய்யங்கார் அவர்கள் சி. டி. வெங்கட்ரமணன் அவர்களுக்கு நெய், எண்ணெய் முதலியவைகள் சப்ளை செய்யக் கூடியவர் என்றும் தெரிய வருகிறது. இதைப் பற்றி 1956-ம் வருஷம் அக்டோபர் மாதம் 26-ம் தேதி ஹிந்து பத்திரிகை ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அதில் கடைசியில் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் ஹைக்கோர்ட்டு ஜட்ஜுமெண்டைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறது.

"It is for the Government to consider and consider seriously whether an officer of such totalitarian views and disregard of law should continue to be entrusted with the duties of maintaining law and order in any locality in the State."

நம் மாகாணத்தில் ஏதாகிலும் இப்படிப்பட்ட செய்திகள் வந்தால் அதைப் பற்றி சர்க்கார் நடவடிக்கை எடுப்பது உண்டு. இதற்கு முன்பு இருந்த சர்க்கார் அப்படி நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. இதற்கு முன்பு ஒரு தடவை இப்படியே நடந்திருக்கிறது. சர்க்காருக்குத் தெரிந்தால் அலஹாபாத் ஹைக்கோர்ட் நீதிபதியாக இருந்த சின்ஹா மேல் கனம் ராஜகோபாலாச்சாரியார் கவர்னர்-ஜெனரலாக இருந்த போது ஜுடிஷியல் நடவடிக்கை எடுத்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் கடந்த 100 ஆண்டு 10-50
களுக்குள்ளாக ஒரே ஒரு நிகழ்ச்சி இந்த நீதிபதி சின்ஹாவின் மேல் நட a.m.
வடிக்கை எடுத்தது தான். அந்த ஜட்ஜ்மெண்டின் காப்பி, பேப்பரில் வந்ததை நான் இன்னமும் வைத்திருக்கிறேன். ஆகவே இவ்விஷயத்திலும் சர்க்கார் உடனே அந்தக் கலெக்டரை வேறு ஜில்லாவுக்கு மாற்றுதல் செய்வதோ, அல்லது வேறு இலாக்காவில் போடுவதோ அல்ல. உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு பாரபட்சமானதா ? அல்லது வேறு பல காரணங்களால் அவ்வாறு தீர்ப்பு அளிக்கப்பட்டதா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஹைக்கோர்ட் ஜட்ஜாக இருந்தாலும், சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக இருந்தாலும் அவர்களும் மனிதர்கள் தாம். மனிதர்களுடைய இயல்புகள் அவர்களுக்கும் உண்டு. பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை ஆகிய எல்லா உணர்ச்சிகளுக்கும் அவர்கள் கட்டுப்பட்டவர்கள் தாம். அவர்களை ஏதோ பெரிய **divine persons**-ஆக கருத வில்லை. அவர்களும் ஏரவர சில ஊழல்களைப் புரிபவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் சட்ட சபையில் சொல்வேன். ஆகவே உடனடியாக இதைப் பற்றி பரிசீலனை செய்து ஒரு முடிவு காணவேண்டும். இல்லாவிட்டால் அரசாங்கத்திடம் மக்களுக்கு இருக்க வேண்டிய மதிப்பு இருக்காது. அவர்களுக்கு எல்லாம் தெரிந்த விஷயம் பத்திரிகைகளில் வந்திருக்கக் கூடிய செய்திகள் தாம். அதைப் பார்த்து விட்டு அவர்கள் கோர்ட்டின் தீர்ப்பை சர்க்கார் அலட்சியப் படுத்தி விட்டதாகவே நினைக்கிறார்கள். இது விஷயத்தில் சர்க்கார் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். இந்த அரசாங்கம் போனவுடன் வருகின்ற அரசாங்கம் அவ்வேலையைச் செய்யட்டும் என்று வாளா இராமல், வருகின்ற பொதுத் தேர்தலுக்கு முன்பாகவே இப்பிரச்சனையில் ஒரு முடிவு காண வேண்டுமென்பதாக வற்புறுத்திச் சொல்லி விட்டு அவ்விஷயத்தை நான் அத்துடன் முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தங்களுடைய யோசனை என்ன என்பதை சொல்லவில்லையே.

Sri P. RANGASWAMI REDDIAR : என்னுடைய யோசனை பொது மக்களையும் கலந்து கொண்டு அவர்களுக்கு மதிப்புக் கொடுத்து இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்யவேண்டுமென்பதே. இதைப்பற்றி பகிரங்கமாக விசாரணை செய்ய திருச்சிக்கே நேரில் வந்தால் நான் ரெக் கார்டுகள் மூலம் அவர்களுக்குச் சாட்சி சொல்கிறேன். ஆதார பூர்வமான தகவல்களை எல்லாம் பகிரங்கமாகச் சொல்லத் தயார். ஆகையால் இதைப் பற்றி விசாரணை நடத்துங்கள். இதிலே ஹைக்கோர்ட்டிலேயே சில தகராறு கள் இருக்கின்றன. கோளாறுகள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட நீதிபதி கள் திருச்சி வந்தார்கள். ஸ்ரீரங்கத்திற்கும் சென்றார்கள்.

10-50 a.m. **DEPUTY SPEAKER :** Now I have to draw the attention of the hon. Member to Article 211 of the Constitution which says—

"No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties."

Sri P. RANGASWAMI REDDIAR : Sir, I want to draw the attention of the Chair and the attention of the House to Rule No. 66, sub-clause (4).

DEPUTY SPEAKER : I am referring to Article 211 of the Constitution.

The Hon. Sri C. SUBRAMANIAM : Whatever it is, the hon. Member has made mention of his point and I do not think he need labour upon that. He can pass on to the next point.

Sri P. RANGASWAMI REDDIAR : இதைப்பற்றி நிதி அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன், தப்பு அபிப்பிராயம் ஒன்றும் இல்லை. நான் சொல்லவேண்டிய விஷயங்கள் எல்லாவற்றையும் அநேகமாகக் கூறிவிட்டேன். இது பற்றி பகிரங்க விசாரணை நடத்தத் தயாராய் இருந்தால் நானும், மற்றவர்களும் சாட்சி சொல்லத் தயாராய் இருக்கிறோம் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்த படியாக முசிரி தாலூக்காவில் கல்லுப்பட்டி என்று ஒரு கிராமம். அங்கே போக்கு வரத்து கிடையாது. மேலும் இரண்டரை வரு ஷத்திற்கு முந்தி அந்த ஊரிலுள்ள விவசாயிகளுக்கு சர்க்கார் கடனுக உரம் கொடுத்தார்கள். அவ்வூர் கிராம முன்சீபு தான் உர விநியோகம் செய்தார். பலருக்கு உரம் கொடுக்கும் போது பாதிப் பேருக்கு கொடுத்த தாக எழுதியிருக்கும் கணக்கைக் காட்டிலும் குறைவாகவே கொடுத்து விட்டு, பாக்கியை விற்றும் சாப்பிட்டிருக்கிறார். அத்தோடு "ராமசாமிக்குக் கொடுத்தேன், கிருஷ்ணசாமிக்குக் கொடுத்தேன்" என்பதாகப் பொய்க் கணக்கும் எழுதி உரத்தை சொந்தத்தில் உபயோகப் படுத்திக் கொண் டிருக்கிறார். அங்கேயுள்ள விவசாயிகள் எழுதப் படிக்கத் தெரியாதவர் கள். பெரும்பாலும் முத்து ராஜா கும்பல் தான். ஆகவே கிராம முனிசிபு இவர்களை எல்லாம் ஏமாற்றி இருக்கிறார். அதோடு தாங்கள் கடனுக வாங்கிய உரத்திற்கு விவசாயிகள் அப்போதைக்கப்போது கிராம முனிசிபிடம் பணம் கொடுத்திருக்கிறார்கள். பணத்தை வாங்கிக் கொண்டு அவர் ரசீது போடவில்லை. இப்போது சர்க்கார் கடனுகக் கொடுத்த உரத்திற்குப் பணம் வசூலிக்கத் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் மிகவும் தொந்தரவுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். கிராமத் தார்கள் எல்லோரும் கொடுத்த மகஜரையும் நான் நேரில் எடுத்துக் கொண்டு போய் கலெக்டரிடம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய சொந்த முறையிலும் கலெக்டரிடம் பெட்டிஷன் கொடுத்து இருக்கிறேன். சர்க்கார்

[illegible] கையாடல் செய்யப்பட்டிருக்கிறது என்பதாகக் குறிப்பாக [illegible] சொல்லவில்லை. இருந்தாலும் கிராம முனிசீபு கையாடல் செய்திருக்கிறார் என்பது உண்மை. இது வெளிப்பட்டதும் கிராம முனிசீபு தலைமறைவாகிவிட்டார். அவரைக் கண்டு பிடித்து அவர் களவாடி இருப் பது உண்மை என்பதை ருசுச் செய்து அவரது சொத்துக்களை ஜப்தி செய்யா மல் குடியானவர்களுடைய பண்டம் பாத்திரங்களையும், மாடு கன்றையும் ஜப்தி செய்ய நடவடிக்கை எடுத்திருப்பது மிகவும் வருந்த வேண்டிய விஷயம். நான் இதைச் சொல்கிறேனே என்று என் பேரில் கோபதாபம் கொள்வதில் அர்த்தமில்லை. கிராம முனிசீபை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க இன்று வரை தாசில்தாரோ, ரெவின்யூ அதிகாரிகளோ மற்றவர்களோ ஒன்றும் செய்யவில்லை. ஆனால் மீண்டும் மீண்டும் விவசாயிகளுக்கே தொந்தரவு செய்வது வருத்தத்தைத் தரக் கூடிய விஷயமாக இருக்கிறது.

டிசம்பர் 11-ந்தேதி அன்று சேலத்தில் வரதராஜன் என்பவருக்கு 10-51 a.m. ஆயிரம் ரூபாய் அபராதமும், ஆறு மாத சிறை தண்டனையும் அளிக்கப் பட்டு இருப்பதாக பத்திரிகையில் வந்துள்ளது. அவர் ஒரு கிராம முனிசீபு. ஐம்பது ரூபாய் கையாடல் செய்ததற்காக ஆயிரம் ரூபாய் அபராதம், ஆறு மாத சிறை தண்டனை என்பதாக ஒரு பக்கம் நீதி வழங் கப்படுகிறது. இதைப் போல சரியாக விசாரணை செய்யாமல் யாரையும் தண்டிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சர்க்காருடைய ஏஜெண்டுகள் கிராம முனிசீபுகள். அவர்களிடம் இந்தக் கிராம மக்கள் பணம் கொடுத்திருக்கும்போது அதை அவர் கையாடல் செய்துவிட்டு இன்று விவசாயிகளைத் தொந்தரவுக்கு உள்ளாக்கியிருக்கிறார் என்றால் அவர் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க சர்க்கார் ஏன் முயற்சி செய்யவில்லை என்பதுதான் என் கேள்வி. இது விஷயத்தில் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டால்தான் சர்க்கார் பேரில் மக்களுக்கு நல்லெண்ணம் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஆட்சி மொழி தமிழாக ஆக்கப்படுவதற்கு முன்பாகவே ஒரு காரியம் செய்தாக வேண்டும். விஜயவாடா வானொலி நிலையம் தெலுங்குக்கும், கோழிக்கோடு வானொலி நிலையம் மலையாளத்திற்கும் இப்படியே அந்த அந்தப் பிராந்தியத்திலுள்ள வானொலி நிலையங்கள் அந்த அந்தப் பிராந்திய மொழிக்கும் பிராதான்யம் அளித்து வரும் போது சென்னை, திருச்சி நிலையத்தார் தமிழுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்படியாக மத்திய அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி முடிவு செய்யவேண்டும். இல்லாவிட்டால் இதற்காக ஒரு இயக்கமே ஆரம்பிக்கப்படப்போவதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அதற்கு இடம் ஏற்படாமல் செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பட்ஜெட்டில் துண்டு விழுவதைப் பற்றியோ, சர்க்கார் அதை ஈடு செய்ய புது வரிகள் போடுவதைப் பற்றியோ அக்கறை எதுவும் கிடையாது. ஆனால் மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற பணம் சரியான முறையில் விநியோ கிக்கப்பட வேண்டும். ஒரு பைசாகூட அனாவசியமாகச் செலவாகக் கூடாது. செலவழிக்கப்படுகின்ற பணத்திற்கு எல்லாம் நல்ல முறையில் கணக்கு இருக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தை நம் ராஜ்யத்திற்குச் சேரவேண் டிய பணத்தை ஒதுக்கி கொடுக்கும்படியாகக் கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கிறது. அதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

***Sri V. K. PALANISAMY GOUNDER:** கனம் உதவி அக்கிராசனாதிபதி 10-57 a.m. அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டம் குறைவான காலத்திற்குத் தயாரிக்கப்பட்டது என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தில் கிராம அதிகாரிகளுக்குச் சலுகை கொடுத்து இருப்பது ரொம்பவும் வரவேற்கத்தக் கது. கிராம வெட்டியார்கள், தலையாரிகள், நீர்கட்டி முதலியவர்களுக்குச் சலுகை கொடுத்திருப்பது பாராட்டுதலுக்கு உரியது. அவர்கள் கிராமத்தில் யாசகம் செய்து பிழைத்துக் கொண்டிருப்பதை நாம் பார்த்தோம். அவர் களுக்குச் சலுகை மிகவும் அவசியம். ஆனால் இந்தச் சலுகை கொடு

திருப்பதையும் பாராட்டாமல் சிலர் தேர்தல் வருகின்ற காரணத்தினால் சர்க்கார் அப்படிச் கொடுத்திருப்பதாக நினைப்பது மிகவும் தப்பு. அதைப் போலவே சர்க்கார் பட்ஜெட்டில் துண்டு விழுந்தாலும் வரி எதையும் போடாமல் விட்டிருப்பதற்கும் பாராட்டாமல் தேர்தல் வரப் போவதால் வரி போடாது விட்டிருக்கிறார்கள் எனச் சொல்வதும் தப்பு. நல்ல காரியம் செய்தால் பாராட்ட வேண்டும். பாராட்டுதல் செய்யாவிட்டாலும் கூட ஏதோ ஒரு நோக்கத்தோடு செய்தார்கள் என்று சொல்வது மிகவும் தப்பு என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது தற்காலிக வரவு செலவுத் திட்டம். ஆதலாலே புது விஷயங்கள் எதுவும் சொல்லப்படவில்லை என்பதாக கனம் நிதி அமைச்சர் குறிப்பிட்டார். இருந்தாலும் ஒரு விஷயம் மாத்திரம் நான் சொல்ல பிரியப்படுகிறேன். பரம்பிகுளம் திட்டம் ஒரு பெரிய திட்டம். இது சென்ற வருஷத்திய பட்ஜட்டிலேயே சேர்க்கப்படுவதாக சொல்லப்பட்டது. இந்த நடைமுறையிலே இருக்கிற பட்ஜட்டிலே சொல்லப்படாவிட்டாலும்கூட இந்த திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு, அடுத்த வருஷமாவது இது ஆரம்பிக்கப்படவேண்டும். ஆனால் சர்க்கார் என்ன நினைக்கிறார்கள் என்றால் இந்த திட்டத்தில் கேரள ராஜ்யத்தோடு சம்பந்தப்பட்டது. இதனாலே நம்முடைய ராஜ்யத்திலே ஒன்றும் செய்யமுடியவில்லை என்று நினைக்கலாம். அதுதான் சரியல்ல என்று நான் சொல்லிக் கொள்ளப் பிரியப்படுகிறேன். நம்முடைய ராஜ்யத்திலே தான் இந்த இரண்டு மூன்று நதிகளும் உற்பத்தி ஆகின்றன. இந்த நதிகளின் தண்ணீர் எல்லாம், நம்முடைய ராஜ்யத்தில்தான் ஓடுகிறது. அணைக்கட்டும் இடம் மாத்திரம் கேரள ராஜ்யத்திலே இருப்பதால் கேரள ராஜ்யத்தை கேட்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். இதை நம்முடைய ராஜ்யத்திலேயும் கட்டமுடியும். அவ்வளவு பெரியதாக கட்ட முடியாவிட்டாலும் சிறு சிறு தேக்கமாக கட்ட இடங்கள் இருக்கின்றன. இங்கு அதிக தண்ணீர் உள்ள தேக்கத்தை கட்ட முடியாதென்றாலும், தண்ணீர் தங்கும் காலத்திலே நேரடியாக விவசாயத்திற்கு ஒரு பகுதி தண்ணீரை விட்டுவிட்டால் பெரிய தேக்கம் வேண்டுவதில்லை. சிறிய தேக்கங்களே போதுமானது. அதனாலே பாய்ச்சல் விஸ்தீரணம் குறையாது. இப்போது மூன்று லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் பாய்ச்சலாம் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் இந்த மூன்று லட்சம் ஏக்கருக்கும் சுலபமாக பாய்ச்சிவிடலாம். கேரள ராஜ்யத்தை எதிர்பார்க்கவேண்டியதில்லை. அதையும் செய்துவிடலாம். ஆனால் நமது ராஜ்யத்திலே இந்த வருஷம் நீர்ப்பாசனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை பூராவும் செலவிடப்படவில்லை. தவிர, பெரிய திட்டங்கள் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. உணவு உற்பத்திக்கு தண்ணீர் ரொம்ப அவசியமாக இருக்கிறது. ஆகவே உடனடியாக இந்த திட்டத்தை ஆரம்பிக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். இதை பின்னால் வரப்போகிற சர்க்கார் பார்த்துக் கொள்ளட்டும் என்று விடுவது அவ்வளவு உசிதம் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தை சொல்லப் பிரியப்படுகிறேன். எந்தக் காரியத்தையும் அடுத்த சர்க்கார் வந்து செய்துகொள்ளட்டும் என்று நினைப்பது சரியல்ல. இந்த சர்க்கார் இருக்கும் வரையில் ஆகவேண்டிய காரியத்தை அப்படியே செய்து விடுவதுதான் சரி.

நான் பல திட்டங்களைப் பற்றி சொல்லியிருக்கிறேன். ஆளியார் பேசினில் இருக்கிற பல பஞ்சாயத்து போர்டு பிரதேசங்களுக்கு தண்ணீர் தேவை. காரியாபுரம், உடையார்குளம், வேட்டைகாரர்புதூர், ஆனைமலைகோட்டூர் போன்ற பெரிய பஞ்சாயத்து போர்டு இருக்கின்றன. இவைகள் 10,000 ஜனத் தொகைக்குமேல் இருக்கிற இடங்கள். இவைகளுக்குக் குடிதண்ணீர் திட்டம் மிகவும் அவசியம். பக்கத்திலே ஆளியாறு போகிறது பெரிய ஆறு. இந்த பேசினிலே இருக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் ஆளியாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரலாம். இந்த திட்டம் பரிசீலனை செய்து முடிந்து விட்டது. அடுத்த வருஷத்திற்கு இதை ஒத்திப்போடாமல் இந்த வருஷமே குடித் தண்ணீருக்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காட்டுப்பக்கத்தில் இருக்கும் கிராமங்களிலே பல தொந்தரவுகள் இருப்பதை நான் பல முறை இந்த சபையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். காட்டுக்கு பக்கத்திலே இருக்கிற பூமியிலே விறகு, விவசாயத் கருவிகளுக்கு வேண்டிய மரங்களைக் கொண்டுவருவதற்கு அதிக தடை இருக்கிறது. முன்பெல்லாம் தங்கள் பூமியிலே இருக்கிற மரங்களை வெட்டி விவசாயக் கருவிகள் செய்வதற்கோ விறகுகளை கொண்டுபோவதற்கோ அவர்களே கையெழுத்திட்ட பட்டாக்களை வைத்துக்கொண்டு போகலாம் என்று இருந்தது. பிறகு கிராம அதிகாரிகள் கையெழுத்து போட்ட பட்டாவை வைத்துக் கொண்டு போகலாம் என்ற விதி வந்தது. இப்போது ஜில்லா பாரஸ்ட் அதிகாரி கையெழுத்திட்ட பாட்டாக்களை வைத்துக்கொண்டுதான் போகலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் சில விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய விறகையோ, விவசாயக் கருவிகளுக்கு வேண்டிய மரங்களையோ கொண்டு போக வேண்டுமானால் விண்ணப்பம் போட்டு பாரஸ்ட் அதிகாரிகளிடம் சென்று அங்கிருந்து பரிசீலனை செய்வதற்காக கீழே அனுப்பப்பட்டு பரிசீலனை செய்தபிறகு வெட்டிக்கொண்டு போவது முடியாத காரியமாக இருக்கிறது. ஆகையால் இதை உடனடியாக ரத்து செய்து அவர் அவர்களுடைய கையெழுத்தைப் போட்டு வைத்துக் கொண்டவர்களுக்கு, விறகோ விவசாயக் கருவிகளுக்கான மரங்களையோ எடுத்துக் செல்ல அனுமதிக்கப் படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

காட்டிற்கு வெகு தூரத்திலேயே கேட்டு போட்டிருக்கிறார்கள். விவசாயிகள் உள்ளே போவதற்கு இது தடையாக இருக்கிறது. ஏனென்றால் சாயங்காலத்தில் அங்குள்ள கேட்டை மூடிவிடுகிறார்கள். ரிசர்வ் பாரஸ்ட்டுகள் சமீபத்தில் கேட்டை போட்டுக் கொள்வது சரி. இரண்டு மூன்று மைலுக்கு முன்னாலேயே கேட்டைப்போட்டு மூடி விட்டால், அதற்குமேல் உள்ள பூமிகளுக்கு செல்லும் விவசாயிகள் 6 மணிக்கு மேல் போகமுடிவதில்லை. இது அவர்களுக்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது. இதைத் தடுத்துவிட்டு, காட்டுக்கு கேட்டு போடவேண்டுமென்றால், காட்டில் எல்லையிலேயே கேட்டைப் போடவேண்டும் என்று உத்திரவு போடவேண்டும். இதைச் செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இது தற்காலிக பட்ஜட்டாக இருக்கிறபடியினாலே பல காரியங்களை சர்க்கார் இப்போது செய்ய முடியாது என்று சொல்லுவதனாலும், மற்ற விஷயங்களைச் சொல்லாமல் இதோடு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI S. VADIVELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் நமது சபை முன்பாக வரவு செலவுக் கணக்கைப் பற்றிய உரையைத் தமிழிலேயே நமது நிதி அமைச்சரவர்கள் நிகழ்த்தியதற்காக நான் பாராட்டுகிறேன். அதைத் தொடர்ந்து நமது சட்ட அரங்கத்திலே எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடத்தப் பட்டால் மிகவும் நன்மையாக இருக்கமுடியும். அதோடு நில்லாமல் சகல நிர்வாகங்களும் தமிழிலேயே நடைபெறுமானால் நாட்டில் 90 சத விகிதமாக உள்ள, படிப்பற்ற நிலைமையில் இருக்கக்கூடிய மக்கள் சகல நிர்வாகங்களிலும் பங்கு கொள்ளமுடியும் என்று சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 11-08 a.m.

கிராமப் புறங்களிலும் பஞ்சாயத்து போர்டுகளில் தலைவர்களாக தமிழ் படிப்பு தெரிந்தவர்கள்தான் 90 சத விகிதம் இன்றைக்கு வந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது கிராம ஆட்சி ஏற்பட்டதை படம் பிடித்துக் காண்பிப்பதுபோல் இருக்கிறது என்று சொல்லலாம். இம்மாதிரி தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களாக வந்திருந்தாலும் சர்க்கார் காரியாலயங்களிலிருந்து கடிதப் போக்குவரத்துக்கள் ஆங்கிலத்திலேயே நடந்துக் கொண்டிருக்கின்றன. அம்மாதிரியான கடிதப்போக்குவரத்தை தமிழ் மட்டுமே தெரிந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் படிக்க முடியாமல் ஆங்கிலம் படித்த ஆட்களைத் தேடிப்பிடிக்கவேண்டிய அவநிலை ஏற்படுகிறதென்பதையும் சபையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். ஆகையால்தான், தமிழிலேயே கடிதப் போக்குவரத்துக்கள் நடைபெறவேண்டும். அப்படி நடந்தால்தான் தலைவர்கள் நல்ல முறையிலே விஷயங்களைத் தெரிந்துக் கொண்டு அப்பகுதி மக்களுடைய ஒத்துழைப்பைக் கோர முடியும். சர்க்காருக்கும் பஞ்சாயத்துக்களுக்கும்

கூடிதப் போக்குவரத்துக்கள் தமிழில் இருந்தால்தான் கிராமப் பஞ்சாயத்தைக் கொண்டு நல்ல முறையிலே நிர்வாகம் நடைபெற முடியும். மக்களுடைய கருத்துக்களை சர்க்காருக்குத் தெரிவிக்க முடியும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நாகப்பட்டிணம் தாலூகாவில் இரண்டு தடவை புயல் அடித்திருக்கிறது. 1952-ல் அடித்த புயலால் நம்முடைய தமிழ் நாட்டில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. நிவாரண வேலைகளுக்காக சர்க்காரும் நிறைய பணம் செலவழித்தார்கள். நாகை தாலூகா 1955-ல் அடித்த புயலினாலும் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து இரண்டு புயலால் பாதிக்கப்பட்டிருந்தும் நாகை தாலூகா தேசிய அபிவிருத்தி திட்டத்திலோ, சமுதாய அபிவிருத்தி திட்டத்திலோ, கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழோ சேர்த்துக்கொள்ளப் படவில்லை. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அங்கு வேறு கட்சிகள் ஜெயித்தன என்ற காரணத்தினால் அந்த தாலூகா புறக்கணிக்கப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். அப்படியில்லாமல் புயலால் பாதிக்கப்பட்ட நாகை தாலூகாவை தேசீய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கொண்டு வந்தால்தான் அந்த பகுதி மக்களின் நிலைமையை அறிந்து அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மை செய்ததாக கருதப்படும். இதை செய்ய முன் வர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்ற செப்டம்பர் மாதத்தில் நீண்ட நெடுங்காலமாக விவசாய பொது மக்கள் கிளர்ச்சி செய்ததன் காரணமாக 60—40 நியாய வார மசோதா கொண்டுவரப்பட்டு சட்டமாகக்கப்பட்டது. சட்டத்தின் கீழ் எழக்கூடிய பிரசனைகளை தீர்த்துச் கொள்வதற்கு கோர்ட்டுகள் நியமிக்கப்படும் என்று விதிக்கப்பட்டிருந்தாலும் கூட, இன்னும் நான்கு மாதங்கள் ஆகியும் கோர்ட்டுகள் நியமிக்கப் படவில்லை. இதனால் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்ட விவசாயிகள் யாருக்கு மனு போடுகிறது எப்படி போடுகிறது என்று தெரியாமல் அவதிப்பட்டு நிலத்தை இழக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 60—40 என்ற விதத்தில் வாரம் பெற முடியாமல் விவசாயிகள் ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே சட்டத்தை இயற்றி, மறு பக்கத்திலே அதைப் பறிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தை மாதம் அறுவடை வருகிறது. குத்தகைச் சீட்டுக்கள் இன்னும் எழுதப்படவில்லை. நியாய வாரத்தை பெறமுடியாமல் விவசாயிகள் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது நீடித்தால் எங்கே கொண்டு போய்விடுமோவென்று அஞ்சுகிறேன்.

சமீபத்திலே தஞ்சை ஜில்லாவில் பெரிய நிலப்பிரபுக்கள் ஒன்று கூடி 60—40 நியாய வாரச் சட்டத்தை அமுல் செய்ய முடியாமல் தடுப்பதற்கும், அரசாங்கத்தையே கவிழ்ப்பதற்கும் சூழ்ச்சி செய்துக் கொண்டு வருகிறார்கள். ஒரு கோடி ரூபாய் திரட்டி பொதுத் தேர்தலில் நின்று சர்க்காரையே கவிழ்த்து நியாய வார சட்டத்தை அமுல் செய்ய முடியாமல் தடுப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் மிகத் தாழ்மையுடன் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது முடியுமா என்பது நமக்கு தெரியும்.

அடுத்தபடியாக, பண்ணையாள் பாதுகாப்புச் சட்ட மசோதாவின்கீழ் பண்ணையாட்கள் நியாயமான முறையில் மீட்கப் பட வேண்டுமானால், அவர்களுக்கு நஷ்ட ஈடு அளிக்கப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. வட பாதிமங்கலம் தியாகராஜ முதலியார் பண்ணையில் கோட்டூர் கோமளப் பேட்டையில் சுமார் 200 பண்ணையாட்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மனுக் கொடுத்ததின் பேரில் சமரசக் கோர்ட்டு ரெவின்யூ கோர்ட்டு விசாரித்து அவர்களுக்கு நஷ்ட ஈடு அளிக்கவேண்டுமென்று தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து உயர் நீதி மன்றத்தில் ரிட் போடப்பட்டது. அங்கும் வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் அவர்கள் பண்ணையாட்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது ஒரு வருஷ காலமாகியும் பண்ணையாட்கள்

நஷ்ட ஈட்டைப் பெறுவதற்கு எந்த விதமான கோர்ட்டு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏனென்றால் ஒவ்வொரு பண்ணையாளும் தனித்தனியே சிவில் கோர்ட்டு மூலம் மனுச் செய்துகொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. பண்ணையாட்கள் அந்தக் கூலியாட்களாக மாறி தினம் ரூ. 0–6–0 0–8–0 தான் சம்பாதிக்கிறார்கள். அந்தக் கூலியாட்கள் எப்படி சிவில் கோர்ட் மூலம் நடவடிக்கை எடுத்து நஷ்ட ஈட்டைப் பெற முடியும்? அல்லது வடவாதிமங்கலம் தியாகராஜ முதலியாரை வாரண்டில் பிடித்து நஷ்ட ஈட்டை கூலியாட்களாக மாறிய பண்ணையாட்கள் வசூல் செய்ய முடியுமா என்பதையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதுவும் முடியாது. ஆகவே தான், நிலவரி வசூல் செய்வது மாதிரி நஷ்ட ஈட்டையும் வசூல் செய்து பண்ணையாட்களுக்குக் கொடுக்க சர்க்கார் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லாவில் 30 லட்சம் ஜனத்தொகையில் 7½ லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் ஒரு கை நிலம்கூட இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு குடியிருப்புக்கு நிலமோ. அல்லது வேறு வருமானம் கிடைப்பதற்கு எந்தத் தொழிலோ கிடையாது. 7½ லட்சம் பண்ணையாட்கள் இன்று கூலிகளாக இருந்து அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு நியாயமான குறைந்த பட்ச கூலியை நிர்ணயிப்பது நம் சர்க்காரின் கடமை. அப்பொழுதுதான் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியும். ஆகையால் அவர்களுக்கு குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிப்பதற்கு ஒரு கூலி நிர்ணய போர்டை அமைத்தாவது சர்க்கார் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாக வெள்ளையர் ஆதிக்கத்தினாலோ அல்லது சமூகக் கொடுமையின் காரணமாகவோ, தங்களுடைய வருமை நிலை காரணமாகவோ பல ஹரிஜனங்கள் மதம் மாறியிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையில் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. இப்பொழுது நமது நிதி மந்திரி அவர்கள், ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும் கல்விச் சலுகைகள் மதமாறியுள்ள ஹரிஜனங்களுக்கும் வழங்கப்படுமென்று அறிவித்திருப்பது வரவேற்கத் தகுந்த விஷயம். ஹரிஜனங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சலுகைகள் கிட்டாதபடி தடுப்பதில் சில நிலப் பிரபுக்களும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக 15–12–56-ல் திருத்திரைப்பூண்டி தாலுகா, வடுவூர் மணக்குடி பஞ்சாயத்தில் குரூப் கிளார்க்காக இருக்கும் சாமியப்பன் என்பவரை வெளியே பிடித்துத் தள்ளி சைக்கிளையும பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஹோட்டலில் சாப்பிடக் கூடாது என்று வெளியே தள்ளியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மந்திரி அவர்களுக்கும் ஹரிஜன நல டைரக்டர் அவர்களுக்கும் தந்தி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த சமயத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவில் நிலப்பிரபுக்களுடைய அக்கிரமத்தினாலும் ஜாதிக் கொடுமையினாலும் சாதாரண ஏழை ஹரிஜன குமாஸ்தா சமூகத்தின் பெயரால் இப்படி ஒடுக்கப்படுகிறான். என்பதை சபையின் கவனத்தக்குக் கொண்டுவருகிறேன். இம்மாதிரி நிலைமை ஏற்படாமல் சர்க்கார் இதில் கவனம் செலுத்தவேண்டுமெனறு கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI T. GANAPATHY: கனம் உதவி சபா நாயக்கர் அவர்களே, நமது நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் பட்ஜெட்டை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லுகிறேன். நமது ராஜ்யத்திலுள்ள எல்லா ஜில்லாக்களிலும் இந்த வருஷம் மழை நன்றாக பெய்திருக்கிறது. போன வருஷமும் அநேகமாகக் நன்றாகப் பெய்திருக்கிறது. சில இடங்களில் பயிர்களுக்கு நஷ்டங்கள் வந்தாலும், அங்கே செழிப்பும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, திருநெல்வேலி ஜில்லாவிலும், நம்முடன் இப்பொழுது புதிதாக சேர்க்கப்பட்டுள்ள கன்னியாகுமாரி ஜில்லாவிலும் கால மழை இல்லாததினால் மிகவும் மோசமான நிலை இருந்து வருகிறது. இன்னும் கால மழை 7, 8 வருஷங்களாக இல்லை என்ற ஒரு காரணத்தினாலே அங்கே நிவாரண 11-18 a.m.

[Sri T. Ganapathy] [18th December 1956]

வேலைகளும் நடைபெற்று வருகிறது. நிதி மந்திரி அவர்களும் செவின்யூ
மந்திரி அவர்களும் அங்கே வந்திருக்கிறார்கள். மிகவும் அக்கரை காட்டி
அந்தப் பகுதி மக்களின் கஷ்டத்தைப் போக்குவதற்கு லட்சக் கணக்கான
ரூபாய்கள் ஒதுக்கினார்கள். குறிப்பாகச் சென்ற மே மாதத்தில் நாங்கு
னேரி, திருச்செந்தூர் தாலுக்காக்களில் இரவை கிணறுகளை ஆழப்படுத்து
வதற்காக 2 லட்ச ரூபாய்கள் ஒதுக்கினார்கள். இந்த வருட மருவ கால
மழைக்கு முன்னாலும் சரி அல்லது பின்னாலும் சரி. இந்த வேலை
செய்யப்படவில்லை. மழை வருடாவருடம் இல்லாததால் நிரந்தர பய
னடைய வென்று ஒதுக்கின தொகை நஞ்செய்ப பயிர்கள் ஏற்றினது பட்டுப்
போயின. அங்குள்ள நிர்வாக ஊழியாகள் இந்தத் தொகையை செலவு
செய்யாமல் சர்க்காருக்கு சரண்டர் செய்தால் ஜில்லா தலைமையில் நிர்
வாகம் நன்றாக நடக்கிறது சர்க்காருக்கு மிச்சப்படுத்தினார் என்று சர்க்கார்
மெச்சுவார்கள் என்று நினைக்கிறார்களா என்பது தெரியவில்லை.

இன்னும் அங்கே கிணற்றை நம்பித்தான், நாங்குனேரி தாலுக்காவில்,
முழுக்க முழுக்க கிணற்றை நம்பித்தான் விவசாயிகள் விவசாயம்
செய்து கொண்டிருக்கிறார்கள். 30 அடி முதல் 70 அடி வரை தண்ணீர்
குறைந்து கொண்டே போகிறது. மாடுகளை விற்றுவிட்டது. வீடுகள்
அடமானம் வைத்தாய் விட்டது. இந்த நிலைமையில் புதிதாகக் கிணறுகள்
ஆழப்படுத்தினால் தான் சோளம் போன்ற தானியங்களை பயிர்
ஏற்ற முடியும். ஆகவே, உடனடியாக சோளம் போன்றவைகளை பயிர்
ஏற்றச் செய்வதற்கு ஒவ்வொரு இரவைக் கிணற்றிற்கும் ரூ. 300 முதல்
ரூ. 400 வரை மானியம் கொடுத்து உதவ வேண்டுமென்று நான்
சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாகப் புயல் வேகத்தில்
புயலுக்கு எப்படி நிவாரணம் அளித்தார்களோ அதே போல் அங்குள்ள
விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அங்குள்ள மக்கள் தினம் தினம் செத்து செத்துப்
பிழைக்கிறார்கள். அந்த இடங்களில் உள்ள மக்கள் மிகவும் கஷ்டப்
பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒன்பது வருட காலமாக அவர்கள்
பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் படும் அல்லல் சொல்லி
முடியாது. ஆகவே, அங்குள்ள கிணறுகளை ஆழப்படுத்துதவற்காக சர்க்
காரிலிருந்து ஒவ்வொருவருக்கும் ரூ. 300 முதல் ரூ. 500 வரை
மானியமாகக் கொடுத்துதவ வேண்டிய நடவடிக்கைகளை இச் சர்க்கார் கைக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை உடனடி
செய்தால் தான் அங்கிருக்கிறவர்கள் அங்கு இருக்க முடியும். இல்லா
விட்டால் அங்குள்ளவர்கள் ஊரைவிட்டே போகும்படியான நிலைமை ஏற்பட்டு
விடும். இன்னும் குறிப்பாக வள்ளியூர், நாஙகுனேரி போன்ற பகுதிகளில்
குடிப்பதற்குக்கூட, அதாவது குடித் தண்ணீர் கூட இல்லை. இதற்கு
உடனடியாக ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னால்,
அதற்கு மாதக் கணக்காகிறது. ஆறு மாதம் ஏழு மாதமாகிறது.
அப்படியானால் அங்குள்ள மக்களுக்கு சர்க்கார் பேரில் என்ன பற்றுதல்
இருக்கும்? ஆகவே, அங்கெல்லாம் குடித்தண்ணீருக்காக வேண்டி,
அங்குள்ள கிணறுகளை ஆழப்படுத்தி, உடனடியாக அதிகாரிகள் அங்கு
சென்று அந்த இடத்திலேயே sanction பண்ணும் விதத்தில்
அங்குள்ள ஜில்லா அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்ப வேண்டுமென்று
நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக எங்கெங்கே தோழர்
களும் கழகக்காரர்களும் அதிகமாக நடமாடுகிறார்களோ அங்கெல்லாம்
அவர்களுக்குப் பயந்து தொழிற் கல்லூரி போன்றவைகளை அரசாங்கம்
ஏற்படுத்துவதாகத் தெரிகிறது. ஆனால் எங்கள் பிராந்தியங்களை அர
சாங்கம் கவனிப்பதேயில்லை. தஞ்சாவூரில் ஒரு மெடிகல் காலேஜ் வரப்
போகிறது. மதுரையில் ஏற்கனவே ஒரு மெடிகல் காலேஜ் இருக்கிறது.
அங்கே ஒரு என்ஜினியரிங் காலேஜ் திறக்கப்போவதாக நிதி மந்திரி
யவர்கள் கூறினார்கள். நான் கேட்கிறேன், கன்னியாகுமரியில் ஒரு என்ஜி
னியரிங் காலேஜ் திறக்கக்கூடாதா? திருநெல்வேலி, கன்னியாகுமாரி
ஜில்லாக்கள் இரண்டிற்கும் சமீபத்தில் அது இருக்கும். ஆகவே, இந்த
இரண்டு ஜில்லாக்களுக்கும் சமீபத்தில் ஒரு என்ஜினியரிங் கல்லூரி
அமைத்துத்தருமாறு நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். கன்னி

18th December 1956] [Sri T. Ganapathy]

யாகுமரி ஜில்லா மிகவும் முக்கியமானதொன்றாகும். அது மாத்திரமல்ல,
காந்தி மண்டபம் அங்கு தான் கட்டப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி
இந்தியாவுக்கே பொதுவான இடம். அந்த முறையில், அங்கே பலவித
மான விதத்திலும் இந்தியாவின் சிறந்த பகுதிகளில் ஒன்றாகும் கன்னியா
குமரி. ஆகவே, அஙகு ஒரு என்ஜினியரிங் காலேஜ் ஏற்படுமானால் அது
மிகவும் நன்றாக விருக்குமென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மின்சாரம் பலயிடங்களிலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்
றது. திருநெல்வேலி ஜில்லாவில், நாங்குனேரி ஜில்லாவில் பலயிடங்களி
லும் விஸ்தரித்திருக்கிறார்கள். ஒரு agreement எழுதிக்கொடுத்து,
அதாவது unconnected minimum கொடுக்கவேண்டுமென்று charges
ஈடாக்குகிறார்கள். அவ்வேழை விவசாயிகளிடமிருந்து அதுமாத்திரமல்ல.
ஒன்பது வருட காலமாக பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு, கிணற்றில் தண்ணீர்
இல்லாமல் இருக்கும்போது, அவ்வப்போது விலைவாசி ஏறிக்கொண்டே
போகும்போது, ஏராளமான ரூபாய் உடனடியாக முடக்க முடியுமா? அது
அப்படியிருக்க, சர்க்கார் அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால்
"லோகல் டெவலப்மெண்ட் ஒர்க்ஸ்", "மைனர் இரிகேஷன் ஒர்க்ஸ்" போன்ற
வேலைகளுக்கே நாங்கள் சிமண்ட் கொடுப்போம் என்கிறார்கள். மற்ற வேலை
களுக்கு சிமெண்ட் கொடுப்பதில்லை. இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள்.
விவசாயிகள் Electric motor உடனடியாக வைக்கவில்லையென்றால் சிமெண்ட்
இல்லாமல் என்ன செய்வார்கள். ஆகவே, யார் யாரெல்லாம் எங்கெங்கே
Electric motor வைக்கவேண்டியிருக்கிறது, அதற்கு எவ்வளவு சிமெண்ட்
தேவை என்றெல்லாம் பார்த்து அதற்கு வேண்டிய சிமெண்டாவது
கொடுக்கவேண்டும். அதைக்கூட செய்யாமல் இருக்கிறார்கள். ஆகவே,
அக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தினிடம் கேட்
டுக்கொள்கிறேன், 48–49-ல் கிணறு அடிப்பதற்காக 500 ரூபாய் மானியம்
அளித்து வந்தார்கள், அநேக விவசாயிகள், நாங்குனேரி தாலுகாவில்
பலர் 500 ரூபாய் வாங்கி ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்
தும் தண்ணீர் வராமல் இருக்கிறது. அப்பேர்பட்ட விவசாயிகளிடமிருந்து
தான் இந்தப் பணத்தை வசூலிக்க விரும்புகிறது இந்த சர்க்கார்.
அகவே, எனது வேண்டுகோள் என்னவென்றால், இந்த சர்க்கார் உட
னடியாக அங்குள்ள பஞ்ச நிலைமையை உத்தேசித்து அவர்களெடுத்த
முயற்சியையும், அவர்கள் செலவு செய்த பணத்தையும் கவனித்து கணக்
குப் போட்டு மிச்சப் பணத்தை வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லிக்
கொள்கிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் இப்பொழுது இருக்கிற P.W.D.
என்ஜினியர் அவர்கள் அந்த ஜில்லாவிலுள்ளவராய் இருப்பதால் தண்ணீர்
விநியோகம் செய்வதில் பாரபட்சம் செய்வதாக, காட்டுவதாகச் சொல்லப்
படுகிறது. ஆகவே இதில் சர்க்கார் கவனத்தில் கொண்டு எந்த விதத்தி
லாவது நல்ல முறையில் தண்ணீர் விநியோகிக்கப்படவேண்டுமென்றும்,
அதற்காக இந்த சர்க்கார் உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கை
கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த
படியாக, கன்னியாகுமரி ஜில்லா நம்முடைய ராஜ்பத்தோடு சேருவதற்கு
முன்னால் அங்கே "கம்யூனல் ரொட்டேஷன்" இருந்தது. பொது தேர்தல்
வருவதற்கு முன் அங்குள்ள நிலைமைக்குத் தக்க தாற்காலிகமாக
பல உத்தியோகஸ்தர்களை நியமிக்கறார்கள். ஆகவே, உத்தியோக விஷ
யத்தில் ஓரளவு அங்குள்ள நிலைமைக்குத் தக்கபடி கம்யூனல்
ரொட்டேஷன்படி அங்கே தற்காலம் உத்தியோக நியமனம் செய்ய
வேண்டுமென்று சர்க்காரிலிருந்து தாக்கீது அனுப்பவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். ஹரி ஜனங்களுக்காக, நாங்கள் ஸ்தல அதிகாரிகளை,
பெரிய அதிகாரிகளிடம் சொன்னால், உடனே செய்து விடுகிறோம், அப்படிச்
இப்படியென்றெல்லாம் சொல்கிறார்களேயொழிய காரியரம்சத்தில் ஒன்றும்
செய்யவில்லை. அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு பழவூர் என்ற
இடத்தில, ஸ்ரீ பக்தவத்சலம் கால் நாட்டி விட்டு வந்தார்கள். வருடங்கள்
ஐந்து ஆகியும் அங்கே வீடுகள் கட்டுவதற்கு ஏதாவது ஏற்பாடாகியிருக்கிறதா
யென்றால், இல்லை. அதிகாரிகள் அதில் அவ்வளவு தூரம் அக்கரை
எடுக்கவில்லை. ஆகவே, சர்க்கார் இது விஷயத்தில் உடனடி சிரத்தை
செலுத்தி வேண்டியதை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[Sri T. Ganapathy] [18th December 1956

அடுத்தபடியாக, நேற்று நம் போக்குவரத்து மந்திரியவர்கள் சொன்னார்கள். பஸ்ஸை ஓட்டுபவர்களுக்கு நிவாரணம் அளிப்பதாகவும், வேலையில்லாதவர்களுக்கு பால் சப்ளை சொஸைட்டிகளில் வேலை கொடுப்பதாகவும் சொன்னார்கள்.

அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது இசையன் விளையிலே பனையேறுபவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். முன்னால் அவர்களை ஒரு தனிவர்க்கமாக வைத்து, Backward Community-ல் சேர்த்து அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் அளிக்கப்பட்டன. திருச்செந்தூர், நாங்குனேரி ஜில்லாக்களில் ஏராளமான பனைகள் பட்டுப் போய் விட்டன, கால மழையில்லாததினால், பனை ஏறுவதுதான் அங்குள்ள மக்களின் விவசாயம். இப்பொழுது அவர்களது ஜீவதாரமாயுள்ள பனைகள் பட்டுப் போய் விட்டன. ஆகவே, அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்து அவர்களுக்கு ஆதரவு காட்டவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களிடமிருந்து வசூல் செய்த பனைத்தீர்வை எவ்வளோ இருக்கிறது. அதைத் தான் நாம் திரும்பக் கொடுக்கிறோம், ஆயிரக்கணக்கான பனைகள் அங்கு பட்டுப் போய் விட்டன. ஆகவே, சர்க்கார் அவர்களது கஷ்டத்தை உணர்ந்து அவர்களுக்கு வேண்டிய உதவியளித்து அவர்களை ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11-30 a.m. நீர்பாசன மகாநாடு ஆறு மாதங்களுக்கொரு தடவை ஜில்லாக்களில் நடக்கும் என்று நினைக்கிறேன். அம்மாதிரி மகாநாடுகளுக்கு வரும் கோரிக்கைகளைப்பற்றி அவர்கள் ஒருவருக்கொருவர் ஏதோ பேசிகொள்கிறார்களே தவிர என்ன முடிவு எடுக்கப்பட்டது என்று தெரிவது இல்லை. இம்மாதிரியான நீர்பாசன மகாநாடு கூட்டுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று தெரியவில்லை. திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக் கொண்டால் திருவிதாங்கூரில் இருந்த நாகர்கோவில் பகுதியிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு வசதியிருக்கிறது, அதை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று சொல்லி ஒரு சப்-டிவிஷனல் இன்ஜினியர் அதற்கு என்று போட்டு இருக்கிறார்கள். அவர்கள் இது வரை என்ன ஆராய்ச்சி பண்ணியிருக்கிறார்கள், என்ன வேலையெல்லாம் செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. என் அதிகாரிகள் வேலை செய்யவில்லை என்று கேட்கக்கூடிய ஜில்லா நிர்வாகம் நடந்தால் நன்றாக இருக்கும். ஆகவே இம்மாதிரியான குறைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருடம் கால மழை பெய்ததுவிட்டதினால் வரி வஜா கொடுக்கப் படவேண்டிய நிலைமையில் விவசாயிகள் இருக்கிறார்கள். நிதி மந்திரி அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் பல இடங்களிலும் சென்று பார்த்திருக்கிறார்கள். இதுதவிர கல்வி வசதி அளிப்பதில் குறிப்பிட்ட ஜாதிகளுக்கு மட்டும் என்று இருக்கிறது. ஆனால் பெரிய பணக்காரர்களும் தாங்களும் குறைந்த ஜாதிக்காரர்கள் என்று கல்வி சலுகை பெறுகிறார்கள். இதனால் சாதாரண குறைந்த ஜாதி மக்களுக்கு போதுமான வசதி கிடைப்பதில்லை. எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் எல்லா சலுகைகளும் கொடுத்தாய் விட்டது. ஆனால் விவசாயிகளுக்கு இதுவரை ஒன்றும் கிடைக்கவில்லை. குறைந்த ஜாதி பிள்ளைகளுக்கு மாத்திரம் எஸ். எஸ். எல் ஸி. வரை கட்டணம் இல்லாமல் படிக்கலாம் என்று இருக்கிறது. இதற்காக சில பணக்காரர்கள் சர்டிபிக்கேட் வாங்கி ஆஜராக்குகிறார்கள். இதற்கு நாமும் உடந்தையாக இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே எல்லோருடைய பிள்ளைகளுக்கும் எஸ். எஸ். எல். ஸி. வரை இலவசமான கல்வி அளிக்க முன் வரவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் தந்ததற்கு என் நன்றியையும் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்,

11-34 a.m. * **Sri W. J. FERNANDEZ**: Mr. Deputy Speaker, Sir, being an interim Budget intended to provide the new Ministry that will come into office at or about the beginning of the next financial year

18th December 1956] [Sri W. J. Fernandez]

with the wherewithal to carry on until they have had time to decide on their policies and frame a Budget based on those policies and present the same to the new Legislature, it seems superfluous to comment on the present Budget.

My only object in speaking to-day, Sir, is to discharge an obligation, namely, that of giving thanks where thanks are due. On behalf of the Christian community in this State, I thank the Hon. the Minister for Finance for his generous gesture in proposing to remove the differentiation in respect of educational concessions that was being made between Harijans converted to Christianity and Harijans—a differentiation we could never understand made as it was by an enlightened just, fair minded and impartial Government. I am glad that wiser counsels have prevailed and that the injustice is at last to be removed.

On behalf of the entire Anglo-Indian community of this State, I beg to thank the Hon. the Minister for Finance for his extreme kindness in restoring the cut in the grant for Anglo-Indian Education made at the beginning of the financial year. He has conferred on the community a great boon for which I assure him that he carries the blessings and good wishes of the whole community.

I also wish to pay my quota of praise and admiration for the admirable way in which this Government have carried on the administration during the last five years. As the financial guardian of the State, our Finance Minister has husbanded the resources of the State and expended them in a judicious manner so as to secure the greatest good of the greatest number of citizens of this State. This is his last Budget in this Legislature. I hope it is not the last of his Budgets as Finance Minister as I imagine to seeing him standing on the floor of the House sometime next June presenting the Budget with some taxation proposals which he has spared the public in this present Budget. I am sure the Chief Minister will be only too glad to avail himself of the services of such an experienced and able Finance Minister in forming his new Government.

To the other Members of the Government also, I offer the grateful thanks of the entire community I represent in this House. Each one has tried to do his best limited as he is by various considerations. We are grateful to them and personally I hope that all of them or at least most of them if not all will be back in this House as Members of the new Government. Thank you, Sir.

Sri V. BALAKRISHNAN: தலைவர் அவர்களே, குடியரசு ஆட்சியில் 11-3 a.m.
கடந்த 5 வருடங்களாக நடைபெற்றுவந்த இந்த சட்டசபை முடிவடையப் போகின்றது. இந்த 5 வருட காலத்தில் சாதாரண பாமர மக்களுக்கு ஏதாவது மாறுதல் கிடைத்ததா, அவர்களின் குறைகள் ஏதாவது திருப்தி செய்யப்பட்டதா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். யுத்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து ஏழைகளாக இருந்தவர்கள் ஏழைகளாகத்தான் இப்போதும் இருந்து வருகிறார்கள். இதுதவிர பாமர ஜனங்களுக்கு வசதியாக நிர்வாகத்தை பிரித்து ஜில்லாவாரியாக இருந்தால் அதன் மூலம் ஏழை மக்களுக்கு மிகவும்

[Sri V. Balakrishnan] [18th December 1956

சௌகரியமாக இருக்கும். இப்போது ஒரு ஜில்லாவை எடுத்துக்கொள் வோம். அதில் 4, 5, 6, ரெவின்யூ டிவிஷன்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஜில்லா டிவிஷன்களை சேர்த்து மூன்று நான்கு ஜில்லாக்களுக்கு ரீஜனல் கமிஷனர் என்று ஒரு உத்தியோகஸ்தர் இருந்தால் ராஜாஜி அவர் களுடைய திட்டத்தின் யோசனைப்படி அந்தந்த ஜில்லாக்களில் அந்த ரீஜனல் கமிஷனர் நேரடியாக போய் குறைகளை கேட்டு அவைகளை நிவர்த்திக்க வழிகளையும் கேட்டு அதற்குள்ள விவாதங்களையும் நடத்தி நிர்வாகம் செய்வதற்கு வசதியிருந்தால் அது சாதாரண ஜனங்களுக்கு சௌகரிய மாக இருக்கும். இப்போது என்ன ஆகிறது என்றால் ரெவின்யூ ஆபீஸர் களின் மேல் அப்பீலுக்கு டிவிஷனல் ஆபீஸர்களிடமும் அதற்கு மேல் அப்பீலுக்கு கலக்டர்களிடமும், அதற்கு மேல் ரெவின்யூ போர்டுகளிடமும் அப்பீலுக்கு போக வேண்டியிருக்கிறது. இப்போது எப்படியென்றால் அப்பீல் கொடுத்த பார்டியின் வாதம் எனைவென்றுகேட்காமல் ஒரே படியாக அவர்களின் கீழ் உள்ள ஆர்.டி.ஓ.-க்களின் ரிப்போர்டுகளின்படி தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த முறையில் பார்த்தால் மக்களின் குறைகள் என்ன ? இதை தீர்ப்பதற்கு என்னென்ன முரண்பாடுகள் இருக்கின்றன என்றெல்லாம் ஆலோசிக்க அதிகாரிகள் கிடையாது. ஆகவே கீழே இருக்கும் அதி காரிகளை தான் மேல் உத்தியோகத்திற்கு அனுப்புவது நல்லது. இதனால் சர்க்காருக்கு பெரும் செலவும் ஏற்படாது என்று நம்புகிறேன். கலக்டர் என்ற அதிகாரத்தில் சப் கலக்டர், டெப்பெட்டி கலக்டர் என்றி ருப்பதை நான்கு கிரேடுகளாக 4th grad૦, 3rd grade, 2nd grade, 1st grade என்று ஏற்படுத்தலாம். முதலாவதாக வரும் கலக்டர்களை நான்காவது கிரேடில் ஏற்படுத்தலாம். பின்னால் அதற்கு கீழே உள்ள அதிகாரிகளுக்கும் உயர்வு கொடுக்கலாம். இதனால்செலவும் குறையும் என்று நினைக்கிறேன். இலங்கையில் இதேமாதிரிதான் சிவில் அதிகாரிகளின் தரத்தை 1st class, 2nd class 3rd class, 4th class என்று நான்கு கிளாஸுகளாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அமெரிக்காவிலும் கூட இப்படியே நடைபெற்று வருகிறது. அதல்லாமல் கிட்டதட்ட ஏழாயிரம் எட்ட யிரம் ஜனங்கள் இருக்கக்கூடிய இடத்தில் 30, 35 பேர்களால் எப்படி நிர்வாகம் ஒழுங்காக நடத்த முடியும் ? அது யானைக்கு கோவணம் கட்டியது போல்தான் இருக்கும். இதை மறைத்துவிட்டு அங்கு கட்டலாம் என்றால் அங்கு தெரியும். இங்கு மறைத்தால் அங்கு தெரியும். இந்த விதமாக இப்போது நிர்வாகத்தினால் சௌகரியமில்லாமல் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர முதலாவது ஐந்தாண்டு திட்டம், இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் என்று பல திட்டங்கள் கொண்டு வருகிறார்கள். கம்யூனிட்டி பிராஜக்ட் என்றும் நேஷனல் விஸ்தரிப்பு திட்டம் என்றும் பல திட்டங்கள் இருக்கிறது. எங்கள் பக்கத்தில் சாதாரண மக்கள் கம்யூனிட்டி பிராஜக்ட் திட்டத்தை "கம்நாட்டி பிராஜக்ட்" என்று அதிலுள்ள ஊழலை பார்த்து இவ்விதமாக சொல்லுகிறார்கள். Block டெவலப்மெண்ட் ஸ்கீமை ஜனங்கள் Black Development Scheme என்று சொல்லுகிறார்கள். பிளாக் டெவலப்மெண்ட் உத்தியோகஸ்தர் களுடைய மனம் இன்னும் மாறவில்லை. சாதாரணமாக கம்யூனிடி பிராஜக்ட்டின் கீழும் நேஷனல் விஸ்தரிப்பு திட்டத்தின் கீழும் கிராம சேவக் என்று ஒரு உத்தியோகஸ்தரை நியமிக்கிறார்கள். அவருக்கு கிட்டத்தட்ட 100 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. சுகமான ஆடைகளை போட்டுக்கொண்டு சுகமாக சாப்பிட்டுக்கொண்டு தூங்கி எழுந்து வாழ்கிறார்கள். இவர்கள் என்ன வேலை செய்கிறார் என்று தெரிவதில்லை. ஆகவே இவரை எடுத்துவிட்டு இவருக்கு கொடுக்க வேண்டிய நூறு ரூபாயை ரெவின்யூ வட்டத்திலுள்ள கிராம முனிசிப், கர்ணம். கணக்குப்பிள்ளை இவர் களுக்கு 30 ரூபாய் வீதம் கொடுத்தால் மேற்கொண்டு சர்க்காருக்கு 10 ரூபாய் மிச்சம் ஏற்படுகிறது. ஒவ்வொரு ஊரிலும் வோட்டு போடவேண்டுமென்று லும் கணக்குப்பிள்ளையின் உதவி இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது. பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர்களுக்கு ஏதாவது வேண்டுமென்றாலும் இந்த கணக்குப்பிள்ளையிடம் போய்தான் பெற்றுக்கொள்ள வேண்டியிருக் கிறது. கணக்குப்பிள்ளைகளும் தங்களுக்கு சம்பளம் போதாது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே 18 வயது பிராயமுள்ள

18th December 1956] [Sri V. Balakrishnan]

இந்த கிராம சேவக்குகளை நிறுத்தினால் அவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளத்தை இந்த கிராம அதிகாரிகளுக்கு கொடுக்கலாம். அது மாத்திர மல்ல இந்த கிராம சேவக்குகளுக்கு கொடுக்கப்படும் சம்பளத்தைப் பார்த்து கிராம அதிகாரிகள் ஆத்திரப்படுகிறார்கள்.

அவர்களை அதாவது கிராம உத்தியோகஸ்தர்களை இந்த தேசிய அபி 11-45
விருத்தி திட்டத்தில் கொண்டு வந்து புகுத்தி அவர்களுக்கு அதிகப்படி a.m.
யான சம்பளத்தைக் கொடுத்தால் அவர்களுடைய மனம் மாற்றமடையும். இப்பொழுது வாலிபர்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தை பங்கிட்டு அவர்களுக்குக் கொடுத்தால் அவர்களிடமிருந்து நல்ல பலனை நாம் எதிர் பார்க்கலாம். இப்பொழுது அவர்கள் நடந்துகொள்ளும் விதத்தில் மாறுதல் ஏற்படுவதற்கு வசதியாக இருக்கும். அவர்களிடத்தில் சர்க்காருடைய கடன் கொடுக்கும் விஷயமாக அணுகினால் அவர்களுக்கு என்று கொஞ்சம் லஞ்சம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ரூ. 100 கடன் வேண்டும் என்று கேட்டால் அவர்களுக்கு அதில் ரூ. 10 அல்லது 15 அல்லது 20 என்று ஜில்லாவிற்குத் தகுந்தாற்போல் இருக்கிறது. அப்படிக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிக் கொடுத்தால் தான் அவர்களிடமிருந்து சர்க்கார் கடனை வாங்கிக்கொள்ள முடியும். இப் படிக்கொடுப்பது என்பது இடத்திற்குத் தக்கபடி மாறுதல் அடைந்திருப் பதாகத் தெரிய வருகிறது. கடன் வாங்கும்போது பூரா பணமும் வாங்க முடியவில்லை. இம்மாதிரி வாலிபர்களுக்கு கொடுக்கக் கூடிய பணத்தை பகிர்ந்து இந்த கிராம உத்யோகஸ்தர்களுக்குக் கொடுத்து வந் தால் அவர்கள் இப்படி கடன் கொடுப்பதிலும் பங்கு வாங்கிக் கொள்ளாமல் இருப்பார்கள். அவர்களிடத்தில் நல்ல மனப்பான்மை ஏற்படும். இப் பொழுது அவர்கள் வாங்கும் சம்பளம் அவர்களுக்கு கட்டுபடியாகவில்லை. மற்றப்படி கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் இந்த திட்டத்தில் பங்கு இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் லஞ்சம் வாங்காமல் இருப்பார்கள். சர்க்காருக்கும் அவர்களால் நன்மைகள் ஏற்படும். பல கஷ்டங்களுக்கு ஜனங்களை உட்படுத்தமாட்டார்கள். அதனால் இந்த திட்டத்தை மறு முறையும் பரிசீலனை செய்து கிராம உத்யோகஸ்தருக்குச் சாதகமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். அப்படிச்செய்தால் தான் பலன் உண்டு என்பதை கனம் மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதை பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் கல்வி மந்திரி அவர்கள் கூடுமான வரையில் அரசியல் சாசனம் படி மக்கள் அனைவருக்கும் படிப்பு கொடுக்கவேண்டும் என்று நினைத்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார். அதற்கு வேண்டிய புது புது பள்ளிக்கூடங்களையும் பல இடங்களிலும் அமைத்துக் கொண்டு வருகி றார்கள். ஒற்றை உபாத்தியாயர்களை நியமிக்கக் கூடிய இடங்களில் ஒற்றை உபாத்தியாயர்களையும் நியமித்துக் கொண்டு வருகிறார். எங்கெல்லாம் ஒரு உபாத்தியாயரை நியமிக்க வேண்டுமோ அங்கெல்லாம் நியமித்துக் கொண்டும் வருகிறார். ஆனால் அதன் நிர்வாகத்தின் கீழ் இருக்கப்பட்ட ஜில்லா போர்டு இவைகளின் கீழ் இருக்ககூடிய இடங்களில் பணமானது சரியானபடி செலவு செய்யப்படுவதாகத் தெரியவில்லை. பணம் செலவு ஆகிறதேயொழிய இதனால் மக்களுக்கு பலன் ஏற்பட்டதாகவே தெரியவில்லை. It is a hot bed of political faction and party faction ஜில்லா போர்டு மெம்பர்களை கிராமங்களில் "ஸ்திரி மெம்பர்கள்" என்று கருதப்படு கிறார்கள். அவர்கள் உபாத்தியாயர்களை என்ன செய்கிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். அவர்கள் என்ன செய்யச் சொல்லுகிறார்களோ அந்த வேலைகளை யெல்லாம் உபாத்தியாயர்கள் செய்ய வேண்டும். அப் படிச் செய்யாவிட்டால் அவர்களை அவர்கள் இருக்கும் இடத்தை விட்டு மாற்றி விடுகிறார்கள். அப்படியே அநேகம் பேர்கள் மாற்றப்பட்டிருக் கிறார்கள். புதுக்கோட்டையில் அப்படி பலர் மாற்றப்பட்டிருக்கிறார்கள். பல இடங்களில் தனக்குத் தண்ணீர் கொண்டு வரவில்லை தனக்கு காப்பி வாங்கி கொடுக்கவில்லை என்ற பல காரணங்களுக்காக பல உபாத்தி யாயர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களை அப்படி மாற்றும்போது திடீரென்று கூட மாற்றி விடுகிறார்கள். ஆனால் சர்க்காருடைய உத்தரவு

ஒன்று இருக்கிறது. பள்ளிக்கூட ஆண்டின் மத்தியில் எந்த உபாத்தியாயரையும் மாற்றக்கூடாது என்ற ஒரு உத்தரவு அமுலில் இருந்தும் கூட அதை கவனிக்காமல் உபாத்தியாயர்களை மாற்றிக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட உத்தரவு போட்டும் கூட மாதத்திற்கு மாதம் நான்கு நாட்களுக்கு ஒரு தடவை கூட அவர்களை இடத்தை விட்டு மாற்றிக் கொண்டு வருகிறார்கள். இதைப்பற்றி எங்கள் ஜில்லா தலைவரிடம் சொன்னேன். எங்களுடைய ஜில்லாபோர்டு தலைவர் ரொம்பவும் நல்லவர் தான், உண்மையான காங்கிரஸ்வாதி. 1947, 1948-க்கு முன்புள்ள காங்கிரஸ்வாதியைப் போலுள்ள காங்கிரஸ்வாதி. காங்கிரஸின் லட்சியங்களை நன்கு உணர்ந்தவர். பழங்காலத்து காங்கிரஸ்வாதி. அப்படி இருந்தும் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன வென்றால் ஜில்லா போர்டின் மெஜாரிட்டி மெம்பர்களுடைய உத்தரவின்படி அவர் நடக்க வேண்டியதாக இருக்கிறது. இல்லாவிட்டால் அவரை தலைமைப் பதவியிலிருந்து நீக்கிவிடுவார்கள் என்ற பயத்தினால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதனால் கல்வி இலாகாவை ஜில்லா போர்டு நிர்வாகத்திலிருந்து நீக்கிவிட்டு ஜில்லா எடுகேஷனல் ஆபீசரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதைச் செய்தால் அவர் பொது மக்களுக்கு பெரிய ஒரு தொண்டைச் செய்வதாக ஆகும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாணவர்கள் அரசியல் விஷயங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்றும் அரசியலைப் பற்றி பேசக்கூடாது என்றும் சொல்லுகிறார். இதை ஒத்துக் கொள்வதாக இருந்தாலும் அவர்கள் அரசியலில் ஈடுபட வேண்டியதாகத்தான் ஏற்படுகிறது. அதன் உண்மையை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். நான் மாணவனாக இருந்தபோது அரசியலில் ஈடுபடாமல் இருந்திருந்தால் ஒரு கேம்ரிட்ஜ் பட்டமோ அல்லது ஆக்ஸ்போர்டு பட்டமோ பெற்றிருப்பேன். அதை இப்பொழுது தான் நான் உணருகிறேன். ஆனால் கனம் மந்திரி அவர்கள் என்ன சொல்லுகிறார் என்பதை கவனிக்க வேண்டும். இதை நான் சொல்லும்போது அவர் மீது நான் குற்றம் சொல்லுவதாக நினைக்கக் கூடாது. இப்பொழுது பேசிக் ட்ரெயினிங் பள்ளிக்கூடங்களுக்கு செலெக்ட் கமிட்டி போட்டிருக்கிறார்கள். அந்த செலெக்ட் கமிட்டி எப்படி நியமிக்கப்படுகிறது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அதற்கு அங்கத்தினர்களைப் பொறுக்கும்போது கட்சி பற்று இல்லாதவர்களைப் பொறுக்கி எடுத்தால் நன்மையாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இல்லாவிட்டால் எல்லா கட்சிகளிலிருந்தும் அங்கத்தினர்களை எடுத்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸ் கட்சியிலிருந்து மட்டும் தான் அங்கத்தினர்களை எடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதைக் கேட்கிறேன். ஆதாரக் கல்வியில் காங்கிரசுக்காரர்களுக்குத்தான் அக்கறை இருக்கிறதா ? மற்ற கட்சிக்காரர்களுக்கு அதில் அக்கரை இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன். அதனால் அங்கத்தினர்களை பொறுக்கி எடுக்கும்போது கட்சி சார்பற்றவர்களையும் எல்லா கட்சியிலிருந்தும் அங்கத்தினர்களை பொறுக்கி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். தேசீய முறையில் பலர் சேர்ந்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்து ஒரு இடத்தில் காங்கிரஸ் அல்லாதவரைப் போட்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களைப் போடுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. உண்மை காங்கிரஸ்வாதியாக இருந்து அவரைப் போடுவதில் எங்களுக்கு எந்த விதமான ஆட்சேபனையும் கிடையாது. ஆகவே அங்கத்தினர்களை எடுக்கும் காலத்தில் கட்சிகளை கவனிக்காமல் எல்லோரையும் எடுத்துக் கொள்ளவேண்டும். இப்பொழுது போட்டிருப்பவர்களுக்கு பேசிக் எடுகேஷன் சம்பந்தமாக எவ்வளவு தெரியும் என்பதை பார்க்கவேண்டும். என்னுடைய அபிப்பிராயம் அவர்களுக்கு பேசிக் எடுகேஷனைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்பதுதான். புதுக்கோட்டைக்கு பட்டுக் கோட்டையிலிருந்து அங்கத்தினரைப் போடுவானேன். தஞ்சையில் எம். எல். ஏ. இல்லையா ? நாட்டில் பள்ளிக்கூடங்கள் அதிகரிக்க வேண்டும் கல்வி வளர வேண்டும் என்று நினைக்கும்போது இப்படிப்பட்ட கொள்கைகளை அனுசரிக்கக் கூடாது. ஆகவே கட்சி கொள்கை இல்லாமல் தேசீய மனப்பான்மையில் இதை அமைக்க வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மின்சார சம்பந்தமாக புதுக்கோட்டையில் இருந்த மின்சார விநியோக ஸ்தாபனத்தை சர்க்கார் எடுத்துக் கொண்டதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால் அந்த ஸ்தாபனம் சர்க்காரிலே சேர்ந்த உடனே ஜனங்களுக்கு கஷ்டம் ஏற்பட்டது. அதற்கு முன்பாக மாதா மாதம் ஜனங்கள் கொடுக்கவேண்டிய பணத்தை வசூலிப்பதற்கு அந்த ஸ்தாபனத்தைச்சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தரே வீடுதோறும் சென்று பில்லைக் காண்பித்து, பணம் பெற்றுக் கொண்டு ரசீது கொடுத்துப் போவது வழக்கம். ஆனால் இப்பொழுது ஜனங்களே மின்சார நிலையத்திற்குப் போய் காத்து நின்று ஒருவர் பின் ஒருவராகப் பணம் கட்ட வேண்டிய தொந்தரவு வந்துவிட்டது. இதை கனம் நிதி அமைச்சருக்குத் தெரிவிக்கும்படி ஜனங்கள் என்னிடம் சொன்னார்கள், நான் சொல்லிவிட்டேன்.

அதைப்போலவே முன்பு சப்-டிரஷரி இருந்தது. பென்ஷன் வாங்குபவர்கள் தங்கள் பே ஷீட்டைக் கொடுத்து ஐந்து நிமிஷத்தில் முன்பெல்லாம் தொந்தரவுஇன்றி பென்ஷன் வாங்கிக்கொண்டு சென்றார்கள். ஆனால் அதை எடுத்துவிட்டு ஸ்டேட் பாங்கு ஏற்படுத்தியிருப்பதால் காலையில் பென்ஷன் வாங்கப்போகிறவர்கள் பேப்பர்களை எல்லாம் கொடுத்துவிட்டு அவர்கள் கொடுக்கின்ற தகர டோக்கனை வைத்துக்கொண்டு அதிக நேரம் உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. அதுவும் அன்றி “ இன்றைக்கு இல்லை, நாளைக்கு வா ” என்றும் சொல்லி அனுப்பிவிடுகிறார்களாம். இதனால் பென்ஷன் வாங்குபவர்களின் கஷ்டம் அதிகமாகப் போய்விட்டது. இரண்டு மூன்று முறைகள் ரிக்ஷாவோ, வண்டியோ வைத்துக்கொண்டு போய் காத்திருப்பது என்றாலும் அவர்களுக்கு எவ்வளவு கஷ்டம். ஸ்டேட் பாங்கு ஏற்படுத்தியிருப்பது வாணிபம் வளர்வதற்கும் அனுகூலமாக இருக்கும் என்றாலும், இந்த மாதிரியான கஷ்டங்கள் ஏற்படாமல் இருக்கவேண்டுவதற்கு கவனம் செலுத்த வேண்டுமென்பதாகக் கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டு தென்னிந்தியாவில் கெமிகல் இண்டஸ்டிரி ஆரம்பிப்பதற்கு தென்னாட்டைச் சேர்ந்த தொழில் நிபுணர்கள் யாரும் முன் வராததால் சௌராஷ்டிராவைச் சேர்ந்த ஒரு நபருக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதைப்பற்றி நாம் விசாரித்ததில் கனம் அமைச்சர் அவர்கள் கூறிய தகவல் சரியில்லை என்பதாக அறிகிறேன். நமது ரோச் விக்டோரியா அவர்களே கெமிகல் இண்டஸ்டிரியை தென்னாட்டில் ஆரம்பிப்பதற்கு சர்க்காரால் உதவியை கோரி விண்ணப்பம் போட்டிருந்தார் என்றும் அவர்களுக்கும், சர்க்காருக்கும் இது சம்பந்தமாகச் கடிதப் போக்குவரத்தும் இருந்து வந்தது என்றும் தெரிகிறது. அவரை எந்தவிதமான அபிப்பிராயமும் கேட்காமல் சௌராஷ்டிர பேர்வழிக்கு சர்க்கார் லைசென்ஸ் வழங்கியிருப்பதாகவும், ஒரு மணி நேரத்தில் அவருக்கு பத்து லட்சம் ரூபாய் மூலதன உதவி செய்வதாக சர்க்கார் வாக்கு அளித்திருப்பதாகவும் தெரிகிறது. ஒரு மணி நேரத்தில் பத்து லட்சம் ரூபாய் தருவதாகச் சொன்னார்களா அல்லது பல மாதங்களாக கூடிப் பேசி அம்முடிவுக்கு வந்தார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் கனம் மந்திரி அவர்கள் கூறியதற்கும், நடப்புக்கும் எவ்வளவு முரணாக இருக்கிறது என்பதை மாத்திரம் சபையின் கவனத்திற்குச் கொண்டுவந்துவிட்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

*Sri S. PANCHAKSHARAM :—“ கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சமர்ப்பித்த இடைக்கால பட்ஜெட்டைக் குறித்து நான் பாராட்டுகிறேன். ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு இந்த நான்கு மாதத்திலே எந்த அளவுக்குச் செலவு ஆகுமோ அந்த அளவுக்குத் தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையில் எந்த விதமான தாவாவுக்கும் இடம் இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். மின்சாரம் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியம். அதன் உற்பத்தி, அதன் விஸ்தரிப்பு ஆகியவற்றின்

அவசியத்தை உணர்ந்து அதற்குத் தகுந்த சலுகை கொடுத்து இருக்கிறார்கள். கூட கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக அவர்கள் வெகுநாளாகக் கோரி வந்திருப்பது போல பிரயாணத்திற்குத் தேவையான படிச்செலவைக் கொடுக்க சர்க்கார் முடிவுச் செய்திருப்பதற்காகவும் பாராட்டுகிறேன்.

அது தவிர மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு இது வரையில் எவ்வித சலுகையும் கிடையாது என்று வைத்திருந்தது சரியல்ல என்பதை உணர்ந்து மதம் மாறிய ஹரிஜனங்களுக்கும் வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க இப்போது ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காகவும் நான் அவரைப் பாராட்டுகிறேன். ஆனால் அதைக் குறித்துப் பேசும்போது ஒரு விளக்கம் கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தத் தலை முறையில் மட்டும் மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு இந்தச் சலுகையா ? அல்லது முன் தலை முறையில், அல்லது பல தலை முறைகளுக்கு முன்னாலேயே மதம் மாறியவர்களாக இருந்தாலும் இந்தச் சலுகை கிடைக்குமா என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இப்போது எல்லாம் முதல் அமைச்சர் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள் ஆகியோர் அடிக்கடி பிளானிங் கமிஷன் கூட்டத்திற்காக டெல்லி சென்று வருகிறார்கள். இந்தச் சபையில் நாம் சொல்லுகின்ற யோசனைகளையெல்லாம் நாஷனல் டெவெலப்மென்ட் கவுன்சில் கூட்டத்திலும், ப்ளானிங் கமிஷனிடமும் அவர்கள் சொன்னார்கள் என்றால் அதற்கு அவர்கள் அளிக்கும் பதில் என்ன என்பதை அறிய விரும்புகிறோம். இவர்கள் சொன்னபடி அவர்கள் என்ன என்ன சௌகரியங்களைச் செய்து தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள் என்பதையும் சபையில் சொன்னால் தேவலை. அந்தமாதிரியாக அவர்கள் இதுவரையில் சொன்னது கிடையாது. ஆகையால் தான் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். இப்பொழுதாவது அவர்கள் தெளிவாக, பகிரங்கமாக இவர்கள் அந்தக் கூட்டங்களில் என்ன என்ன சொன்னார்கள், அவர்கள் இவர்களுடைய கோரிக்கைகளுக்கு எவ்வளவு தூரம் இணங்கியிருக்கிறார்கள் என்பதைச் சபையில் சொல்ல கேட்டுக்கொள்கிறேன். இங்கே ஒரு புறம் பலவிதமான வதந்திகள் உலவி வருகின்றன. நமது ராஜ்யத்தை மத்திய சர்க்கார் உதாசீனப்படுத்துவதாகவும், இதர ராஜ்யங்களுக்குப் பலவிதமான திட்டங்களுக்கு வசதி செய்து கொடுத்துவிட்டு தமிழ் நாட்டைப் புறக்கணிப்பதாகவும் சொல்லப்படும் வதந்திகளுக்கு ஆதாரம் உண்டா இல்லையா என்பதை இவர்கள் அங்கே நடந்த விவரங்களை எடுத்துச் சொன்னால் தான் தெரியும். ஆகவே அவற்றை எடுத்துச் சொல்லவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்ய சர்க்கார் பிற்போக்கு இனத்திலுள்ள மாணவர்களுக்குப் பலவித சலுகைகளைக் கொடுத்து வருகிறார்கள். இந்த வருஷத்திலிருந்து பிற்போக்கு இனத்து மாணவர்களுக்குக் கொடுத்து வந்த சலுகைகளை நிறுத்தி விட்டதாகக் கேள்விப்படுகிறேன். அவர்களுக்குக் கொடுத்து வந்த ஸ்காலர்ஷிப்புகளையும் இல்லை என்று சொல்லிவிட்டதாகத் தெரிகிறது. காரணம் இவ்வினத்திற்காக மத்திய சர்க்கார் இதுவரையிலும் கொடுத்து வந்த முப்பதோ, நாற்பதோ லட்சம் ரூபாய் இனிமேல் தரப்போவது இல்லை என்றும் சொல்லிவிட்டது தான் என அறிகிறேன். அப்படி இருந்தால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லி அந்தப் பணம் கொடுக்கப்படவேண்டியது அவசியம் என எடுத்துக்காட்டி பிற்போக்கு இனத்து மாணவர்களுக்குத் தொடர்ந்து ஸ்காலர்ஷிப் போன்றவைகள் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

நம் ராஜ்ய மக்களுடைய நிலைமை உயர்வதற்கும், இங்கே தொழில் வளர்ச்சி அடைவதற்கும் மின்சாரம் மிகவும் தேவை. குறிப்பாக எங்கள் ஜில்லாவில் எவ்வகையான திட்டங்கள் எதுவும் போடுவதற்கு வழி இல்லை. பெரிய நீர்ப்பாசன திட்டங்களுக்கோ, பெரிய தொழிற்சாலைகளுக்கோ இடம்

இல்லை. எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சார விஸ்தரிப்புக்கு வேண்டிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் இருந்தபோதிலும் கூட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதிக வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்வளவு கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்க முடியுமோ அவ்வளவு கிராமங்களுக்கும் விஸ்தரித்தாக வேண்டும். இவ்வினத்தில் 1956–57-ம் ஆண்டில் எவ்வளவு செலவிடப்பட்டிருக்கிறது என்றும் நமக்குத் தெரியவில்லை. இதை எல்லாம் கனம் மந்திரி அவர்கள் விளக்கினால் நன்றாக இருக்கும். ஆகவே இதுவரையில் ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் செலவாகாமல் இருந்தால், இந்த நான்கு மாத காலத்திலேயே செலவு செய்யவேண்டுமென்று ஜில்லா அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். முன்பெல்லாம் வட ஆற்காடு ஜில்லாவில் இருக்கும் ஏரிகளிலெல்லாம் ஐந்து, ஆறு மாதங்களுக்கு தண்ணீர் வற்றாமல் இருக்கும். ஆனால் இப்பொழுது இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குத்தான் தண்ணீர் தேங்கி இருக்கிறது. இந்த மராமத்து செய்து முன்பிருந்த நிலைமைக்குக் கொண்டுவருவது சர்க்காரின் கடமையாகும். அவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை உடனடியாக இந்த நான்கு மாதத்திற்குள் செலவு செய்யவேண்டுமென்று ஜில்லா அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவிர தென் ஆற்க்காடு ஜில்லாவில் மணிலா பயிரு உற்பத்தி ரொம்ப அதிகம். அந்தப் பயிரிலிருந்து எண்ணை உற்பத்தி செய்கிறார்கள். இந்த எண்ணை 25 பாரல்கள் விற்றால் அதற்கு 400 ரூபாய் எக்ஸைஸ் டூடி போட்டு வருகிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு, அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான வருவாய் கிடைப்பதில்லை. ஆதலால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். இப்படிப் போடப்படும் எக்ஸைஸ் டூடி நியாயமானதல்ல. மணிலா மார்க்கட் மூலம் விற்பனையாகும் எண்ணைக்கு எக்ஸைஸ் டூடி கூடாது என்பதை இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சார விஸ்தரிப்பு திட்டத்தைப்பற்றி பேசும்போது ஸ்ரீ கணபதி unconnected minimum charge-யை சர்க்கார் வசூல் செய்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். போன மார்ச்சு மாதம் நான் பேசும்போது கூட இதைப்பற்றி குறிப்பிட்டிருந்தேன். கனம் ராமநாதபுரம் ராஜாவிடமும் இதைப்பற்றி சொன்னேன். unconnected minimum charges-யை வசூலிக்க கூடாதென்றுதான் உத்திரவு செய்திருப்பதாக இந்த சட்டசபையில் சொன்னார்கள். இந்த அன்கனக்டட் மினிமம் சார்ஜ் இருப்பதனால் விவசாயிகள் பலவிதமான இன்னலுக்குள்ளாகிறார்கள். ஏனென்றால் தண்ணீர் இல்லாத காலத்தில் அதிகாரிகள் மின்சார சப்ளை கொடுப்பதாக நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அல்லது பம்பு செட்டுகள் கிடைக்காத காலத்தில் நோட்டீஸ் கொடுத்து விடுகிறார்கள். அதிகாரிகளிடம் விவசாயிகள் மின்சாரம் இப்பொழுது வேண்டியதில்லை. பிறகு எடுத்துக்கொள்ளுகிறோம். இருக்கிறதே என்று சொன்னால், நாங்கள் மூன்று மாதத்திற்கு முன்பே நோட்டீஸ் கொடுத்தோமே என்று சொல்லுகிறார்கள். இம்மாதிரி ஒரு அவசியம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆர்ஸ் பவர் மோட்டார் 50 ரூபாய் செலுத்தவேண்டியதாய் இருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பலபேர் உண்டு. மோட்டார் கிடைப்பதில்லை, அதை அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து தருவிப்பதற்கு வேண்டிய கவனம் செலுத்தவேண்டுமென்று கனம் ராமநாதபுரம் ராஜாவிடம் சொன்னபோது உள்நாட்டில் உற்பத்தி குறைவாக இருக்கிறது, அவைகளை வெளிநாடுகளிலிருந்து தருவிக்க வேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம் என்று சொன்னார். ஆனால் இதுவரையில் பலன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆதலால் இந்த அன்கனக்டட் மினிமம் சார்ஜ் வசூலிக்க அவசியமில்லை. இவ்வாறு வசூலிப்பதினால் விவசாயிகள் பல கஷ்டங்களுக்குள்ளாயிருக்கிறார்கள். இதையெல்லாம் சர்க்கார் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நான் இதற்குமுன் பல தடவை சொன்ன விஷயத்தையே இப்பொழுதும் சொல்ல விரும்புகிறேன். வட ஆற்காடு ஜில்லாவில் பாலாற்றின் மூலம் கிடைக்கக் கூடிய தண்ணீர் பற்றிய விஷயம் அது. இது செங்கல்பட்டு ஜில்லாவிற்கும் உபயோகமாக இருக்கும். இந்த பாலாற்றின் தண்ணீரைப் பகிர்ந்துகொள்ளும் விஷயத்தைப் பற்றி மைசூர் ராஜ்ய என்ஜினீயரும், சென்னை ராஜ்ய என்ஜினீயரும், மத்திய சர்க்கார் என்ஜினீயரும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். ஆனால் அந்தப் பேச்சின் விளைவாக எந்தவித பலனும் அடைந்ததாகத் தெரியவில்லை. அந்த உடன்படிக்கைக்குப் பிறகு அவர்கள் எந்தவிதமான முடிவிற்கும் வந்ததாகத் தெரியவில்லை. என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், மைசூர் அரசாங்கம் பழைய உடன்பாட்டின் பிரகாரம் நடந்துகொள்ளவில்லை என்பதுதான். அவர்கள் ஏற்பாட்டிற்கு மாறாக பல நீர்த்தேக்கங்கள் கட்டியிருக்கிறார்கள். ஏற்பாட்டிற்கு முரணாக விவசாயத்துக்கு தண்ணீரை உபயோகபடுத்திக்கொள்ளுகிறார்கள். அவர்கள் அம்மாதிரி விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்படவில்லை என்று வாதிக்கிறார்கள். ஆனால் மத்திய சர்க்கார் சமீபத்தில் நதித் தகராறு சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின் பிரகாரம் இம்மாதிரி பாயும் தண்ணீரை பகிர்ந்துகொள்ளும் விஷயமாக தகராறு ஏற்பட்டால் அதைத் தீர்ப்பதற்கு, ஒரு டிரிபுனலை ஏற்படுத்த மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நமது அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு இந்த பாலாற்றுத் தண்ணீரைப்பற்றி விசாரிக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டும். இந்தத் தகராறு சரியானபடி தீர்ந்தால் வட ஆர்க்காடு ஜில்லாவிலும், செங்கல்பட்டு ஜில்லாவிலும் உள்ள ஒரு லட்சம் ஏக்கர் நிலம் முழுதும் பயன் அடையலாம். ஆகவே நமது சர்க்கார் இந்த விஷயத்தை உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு டிரிபூனலை ஏற்படுத்துமாறு மத்திய சர்க்காரைக் கேட்கவேண்டுமென்று கூறிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri K. T. RAJU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வரவு திட்டத்தின் மேல் கொள்கை அடிப்படையில் பேசுவதன் அவசியம் இல்லாத நிலைமை இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பிட்ட நான்கு மாத அவசியமான செலவுக்கு வேண்டிய பணத்தை ஒதுக்குவதற்காக இந்த பட்ஜெட்டைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த நான்கு மாத காலத்தில், மாகாணரீதியில் பல யோசனைகள் கொடுக்கக் கூடிய நிலைமையில் நாம் இல்லை. இருப்பினும் பல கட்ட விற்பனை வரி சம்பந்தமாகப் பேசும்போது, இந்தச் சட்ட சபையில் இருக்கக்கூடிய எதிர்க் கட்சியினரும் மற்றவர்களும் இதை எதிர்த்து, ஒரு கட்டத்தில் விற்பனை வரி விதிக்கவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். வியாபாரிகளைப் பொறுத்தவரையில் இந்தக் கோரிக்கையை கட்சி வித்தியாசம் பார்க்காமல் தமிழ்நாட்டில் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அதற்காகப் பல இயக்கங்கள் நடத்தியும் இருக்கிறார்கள். வருகிற பொதுத் தேர்தலுக்குப் பிறகு புதிய மந்திரி சபை இதைப் பற்றி கவனிக்கும் என்று நமது சர்க்கார் கூறிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த 5 ஆண்டு காலமாக இந்தக் கோரிக்கையை வற்புறுத்தியும், சர்க்கார் அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததற்காக நாம் வருந்துகிறோம்.

இன்றைய தினம் எல்லாப் பொருள்களுக்கும் ஒரு கட்ட விற்பனை வரி அமுலுக்குக் கொண்டு வர முடியாவிட்டாலும், சில முக்கியமான பொருள்களுக்கு ஒரு கட்ட விற்பனை வரி கொண்டு வரலாம். அப்படிக் கொண்டு வருவதில் அரசாங்கத்துக்கு எந்த விதமான முட்டுக்கட்டையோ இடைஞ்சலோ இருக்குமென்று கூறுவதற்கில்லை. அப்படிப்பட்ட நிலைமையிலே எல்லோரும் உபயோகப்படுத்தக் கூடிய பொருள்களுக்கு ஒரு கட்ட விற்பனை வரி அமுலுக்குக் கொண்டுவந்தால், சிறு வியாபாரிகளுக்கு அது ஆதரவு அளிக்கும்.

நமது ராஜ்யத்தில் பல பிரச்னைகள் இருந்த போதிலும், கோயம்புத்தூர் ஜில்லா எனது தொகுதியைப் பற்றி சில பிரச்னைகளை எடுத்துக் கூற விரும்பு

இதை அடுத்த 4 மாதங்களில் சில பொதுவான காரியங்களைத்தான் செய்ய முடியுமென்றாலும், என் தொகுதியில் 4 மாதத்திற்குள் [illegible] யமான விஷயங்களில் கவனம் செலுத்தி மந்திரி சபை நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக கீழ்பவானி ஆயக்கட்டு பிரதேசத்தில் இந்த வருஷம் எதிர்பாராத மழை பெய்த காரணத்தினாலே பருத்திப் பயிர்கள் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டு நாசமாகிவிட்டது. முக்கியமான வியாபாரப் பொருளான பருத்தி இந்த பிரதேசத்தில் நாசமாக்கப்பட்டிருக்கிறது என்பது ஒருபுறமிருக்க, மேற்கொண்டு அந்தப் பயிர்களுக்கு செஸ் வரி சேர்த்து ஒரு ஏகராவுக்கு 30 ரூபாய்க்கு மேல் வரி செலுத்தும் நிலைமை ஏற்பட்டால் விவசாயிகள் பெரும் அளவுக்கு பாதிக்கப்படுவார்கள். எதிர்பாராத விதமான ஒரு சூழ்நிலை இங்கு ஏற்பட்டிருக்கிறது. எதிர்பாராதவிதமாக பெய்த மழையின் காரணமாக இங்கு விவசாயிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் இந்த ஒரு வருஷத்திற்கு அவர்களுக்கு வரி வஜா செய்வதற்கு சர்க்கார் முன்வரவேண்டும்.

இரண்டாவதாக, சமீபத்தில் டிசம்பர் முதல் தேதியன்று பெரிய அதிகாரிகள் சென்னையில் கூடி கீழ்பவானி ஆயக்கட்டு சம்பந்தமாக சில சிபார்சுகளை சர்க்காருக்கு செய்திருப்பதாக நான் பத்திரிகையில் படித்தேன். சர்க்காரும் இந்த சிபார்சுகளை அநேகமாக ஏற்றுக்கொண்டுவிட்டதாகவும் அந்தப் பத்திரிகைச் செய்தி கூறியது. குறிப்பாக கீழ்பவானி பிரதேசத்தில் ஏற்கனவே உறம்பினாலும் பெரிய மழை பெய்ததினாலும் புஞ்சை பயிருக்கு பதிலாக விவசாயிகள் நெல் பயிரிட்டிருக்கிறார்கள். அவர்கள் வேண்டுமென்றே அப்படிச் செய்யவில்லை. வேறு வழியில்லாத காரணத்தினாலே கிட்டத்தட்ட 3 மடங்கு அதிகமான பிரதேசத்தில் 40,000 ஏகராவுக்கு நெல் பயிர் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சில தொல்லைகளை தீர்ப்பதற்குக் கோவை ஜில்லா கலெக்டருக்கு அரசாங்கம் சீக்கிரமே உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கு இது சம்பந்தமாக ஊழல் தாண்டவமாடுவதால் விவசாயிகளிடையே ஒரு பெரிய பீதியை உண்டுபண்ணக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் நமது சர்க்கார் அதற்கான உத்தரவை உடனடியாக பிறப்பித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பயிர் வாரி வரி விதிப்பு முறையை ரத்து செய்து அதற்குப் பதிலாக வேறு பல யோசனைகளை சபையின் அங்கத்தினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சர்க்கார் இப்பொழுது அது பற்றி யோசிக்கப் போவதில்லை என்று பத்திரிகையில் படித்தேன். இது பற்றி சர்க்காரின் கொள்கை என்ன என்பதை திட்டவட்டமாகத் தெரிவிக்கவேண்டும். கீழ்பவானி ஆயக்கட்டுப் பிரதேசத்தில் பல நூற்றுக்கணக்கான ஏழை ஹரிஜனங்கள் உரம்பினால் வீடிழந்து கஷ்டப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வருஷா வருஷம் இந்தப் பிசரச்னையைக் கவனிப்பதை விட, கீழ்பவானி ஆயக்கட்டுப் பிரதேசத்தில் ஒவ்வொருவருக்கும் குடியிருப்பதற்கு அவசியமான 3, 4 ஏகரா நிலங்களை சர்க்காரே ஆர்ஜிதம் செய்ய துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டால், அங்கு வசிக்கும் ஏழை ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு வசதி செய்ய முடியும். அதற்கான நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தப் பிரதேசத்தில் மழை பெய்ததினால் உரம்புத் தண்ணீர் அங்கும் இங்கும் தேங்கிக் கிடக்கிற காரணத்தினால் புதிய புதிய வியாதிகள் தோன்றி மக்கள் அவதிப்படுகிறார்கள். இந்த வியாதிகளின் காரணத்தை ஆராய்ந்து அறியவும், தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவும், வைத்திய நிபுணர்கள் அடங்கிய ஒரு கமிட்டி ஏற்படுத்தவேண்டுமென்பது என்னுடைய யோசனை. அந்தக் கமிட்டியின் சிபார்சுகளை அரசாங்கம் துரிதமாக நிறைவேற்றி, இந்த மாதிரி தொத்து வியாதிகள் இந்தப் பிரதேசத்தில் பரவாமல் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் அவசியம்.

எங்கள் தாலூகாவில் உள்ள கலிங்கராயன் கால்வாயில் மழை பெய்ததன் காரணத்தினால் பெரிய உடைப்பு ஏற்பட்டு பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வாய்க்கால் வெட்டிப் பல ஆண்டுகள் ஆகியும், போதுமான மராமத்து செய்யப்படவில்லை. அதன் காரணமாக சாதாரணமாக மழை பெய்தாலும் கூட பெரிய உடைப்புகள் ஏற்படுகின்றன. இதனால் விவசாயம் பெரும் அளவுக்கு பாதிக்கப்படுகிறது. என்னுடைய யோசனை என்ன வென்றால், ஒரு எக்ஸிக்யூடிவ் என்ஜினீயரை வைத்துக்கொண்டு இந்த மராமத்து வேலையைச் சரிவரச் செய்ய முடியாது. கிட்டத்தட்ட 18,000 ஏகர் விஸ்தீர்ணமுள்ள நஞ்சை பிரதேச சாகுபடிக்கு ஒரு திட்டம் போட்டு சர்வே செய்து வேலை செய்யவேண்டும். இதற்காகப் பிரத்யேகமாக ஒரு உதவி இன்ஜினீயரும், நான்கு சூபர்வைசர்களும் நியமிக்கப்படவேண்டும். இதை ஸ்பெஷல் வேலையாகக் கருதி சர்வே செய்து முக்கியமான மராமத்து வேலைகளை துரிதமாகச் செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை உடனே நிறைவேற்றினால்,தான் 18,000 ஏகர் விஸ்தீர்ணத்தில் பயிர் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு நிரந்தரமான பலன் ஏற்படும். பெரு மழை காரணமாக இந்த வாய்க்காலில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒரு மாத காலமாகியும் உடைப்புகள் இன்னும் பல இடங்களில் அடைக்கப்படவில்லை. ஆகையால் இதற்காக ஒரு உதவி இன்ஜினீயர், நாலு சூபர்வைசர்கள் பிரத்யேகமாகப் போட்டு 60 மைல் தூரமுள்ள இந்த வாய்க்காலை சர்வே செய்து உடனடியாக வேண்டிய மராமத்து வேலைகளைச் செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் பெரிய அளவுக்கு விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும்.

இன்னொரு முக்கியமான விஷயம். கீழ்பவானி ஆயக்கட்டுப் பிரதேசத்தில் பல சிக்கல்கள் அதிகரித்துவரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 25 ஏகராவுக்குக் கீழுள்ள பிரதேசத்திலுள்ள கொப்பு வாய்க்காலில் தண்ணீரை விடுவதை விவசாயிகளிடம் ஒப்படைக்காமல் அந்த நிலங்களை சர்க்காரே வாங்கி தண்ணீர் விநியோகிக்க வசதி செய்யவேண்டும். கிராமங்களில் விவசாயிகள் ஒற்றுமையாக இருந்தாலும், சில சமயங்களில் இந்த வருஷம் தண்ணீர் விட்ட குடியானவன் அடுத்த வருஷம் தண்ணீர் விட மறுப்பதால் பெரிய தகராறுகள் ஏற்படுகின்றது. இங்கு இருக்கக்கூடிய கிராமங்களுக்குக் கலெக்டர், தாசில்தார்கள் நேரடியாக விஜயம் செய்து பஞ்சாயத்து மூலம் தகராறுகளைத் தீர்த்துவைத்தாலும், ஊர் திரும்பியதும் மறுபடியும் சிக்கல்களும் தகராறுகளும் ஏற்படுகின்றன. இது விஷயமாக சர்க்காருக்கு என் யோசனை என்னவென்றால், 25 ஏகராவுக்குக் கீழ் இருக்கக்கூடிய கொப்பு வாய்க்காலையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டு தண்ணீர் விட்டால் விவசாயிகளிடையே ஏற்படும் இந்தத் தகராறுகளைத் தீர்க்க முடியும். 25 ஏகராவுக்கு மேல் உள்ள பிரதேசங்களை சர்க்கார் ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அதேபோல், 25 ஏகராவுக்குக் கீழ் இருக்கக் கூடிய நிலங்களையும் ஆர்ஜிதம் செய்துவிட்டால், இந்த சிக்கல்கள் தீர்ந்துவிடும். இதற்கு கலெக்டர் அவர்களுக்கு அதிகாரமில்லாத காரணத்தினால் இது சிக்கலான பிரச்னையாக இருக்கிறது. சர்க்கார் 10 கோடி ரூபாய் செலவு செய்து இரண்டு லட்சம் ஏகராக்களை ஆர்ஜிதம் செய்துகொண்டிருக்கிறார்கள். 10 கோடி ரூபாய் செலவழித்திருக்கும்போது நாலைந்து லட்ச ரூபாய் ஒரு பெரிய தொகையில்லை. ஆகையால் இந்த நிலங்களையும் சர்க்காரே எடுத்துக்கொண்டால் விவசாயிகளிடையே தகராறுகளையும் சிக்கல்களையும் தீர்த்துவிடலாம்.

இன்னும் எத்தனையோ சிக்கல்கள் அந்தப் பிரதேசத்தில் உண்டு. அவைகளை சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கின்றோம். இதற்கான விண்ணப்பங்களை கொடுத்திருக்கிறோம். அமைச்சர்களையும் கண்டு பேசியிருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறோம். ஆகவே, உடனடியாக செய்யவேண்டிய வேலை, வருகிற வருஷத்தில் பருத்தித் தீர்வை விதிக்கக்கூடாது. வருகிற வருடத்தில் இந்த 40,000 நெல் விவசாயிகளுக்கும் தண்ட தீர்வை போடக்கூடாது என்பது மற்றொன்று. ஆகவே, இதைக்குறித்து சர்க்கார் சீக்கிரமாக அந்த முடிவை ஜில்லா அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடி,

விற்பனை வரி பற்றிய சர்க்காரின் கொள்கை என்ன, என்ன முடிவு செய்யப் போகிறார்கள், என்பதைப்பற்றியெல்லாம் மந்திரியவர்கள் பதில் சொல்லும் போது அதை சபையில் சொன்னால் மிகவும் சாதகமாய் இருக்குமென்று சொல்லிக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri P. G. KARUTHIRUMAN : உதவி சபாநாயகர் அவர்களே! நமது நிதியமைச்சரவர்கள் இந்த இடைக்கால பட்ஜெட் இறுதியில் குறிப்பிட்டபடி, 12-30 p.m.
இது இடைக்கால பட்ஜெட்டாய் இருப்பதின் காரணத்தினால் அடுத்தபடியாக பொதுத் தேர்தல் கழித்து எந்த சர்க்கார் வருகிறதோ அவர்களே இந்த பொறுப்பெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்; ஆகையால் அந்த வரம்பிற்குள் நின்று பேசவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

முதலாவதாக, ஒரு தேர்திருவிழா ஏற்படுவதாயிருந்தால் தேரை நன்கு அலங்காரமாக கட்டி அதனை ஒரு நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்தவேண்டும். அதேமாதிரி, இச் சட்டசபை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடப்பது மறுபடியும் அடுத்தொரு திருவிழா ஆரம்பமாகப்போகிறது என்பதை நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லையாது. ஆனால் 1951–52-ம் வருடத்தில், பொதுத் தேர்தலுக்குப் பின்னால் நமது சென்னை சட்டசபை ஒழுங்காக, எல்லோரும் மறுபடியும் இடைத்தேர்தலுக்கு வராத நிலையில் நல்ல முறையில் நம்முடைய பொருளாதாரத்தையும், நமது சென்னை ராஜ்ஜியத்தின் கௌரவத்தையும், நம்முடைய சட்டசபையை பூர்ண ஆயுளுடன் வைத்துக் கொள்வதற்கும் மிகவும் அடிப்படையான மூலக்காரணாய் இருந்த ஒரு பெரியாரை இந்த சமயத்தில் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. அவர்தான் கனம் ராஜாஜி. அவர்கள் 1951–52-ம் வருஷம் பொறுப்பேற்று நடத்தி இருக்காவிட்டால் நமது தேசத்தின் பொருளாதார நிலைமையோ அல்லது இப்பொழுது நமது சட்டசபை இருக்கும்படியான நிலைமையோ எவ்வளவுக்கெவ்வளவு வித்தியாசமாய் போயிருக்குமென்று நான் சொல்லவேண்டிய அவசியமில்லையென்று நினைக்கிறேன். அகில இந்தியாவும், அகில உலகும் அதை அறியும் என்று நான் எல்லோரையும் ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். ஒரு பெரிய கட்டிடம் கட்டுவது அதன் அஸ்திவாரத்தைப் பொறுத்திருக்கிறது. அஸ்திவாரத்தின் பலத்தை பொறுத்துத்தான் மேல் கட்டிடம் உறுதியான நிலையில் அழகாக இருக்கமுடியும். ஆகவே இந்த 1951–56-ம் வருடத்தில் இருக்கும்படியான சென்னை சட்டசபையின் இந்தக் காலத்தை உறுதியாக்கி அஸ்திவாரம் இட்டுள்ளதோடு மட்டுமல்ல, சென்னை ராஜ்ய மக்களின் சுபிட்சத்திற்காக நல்ல முறையில் பொருளாதார துறையிலும் கூட அதிகம் முன்னேறுவதற்கு அடிப்படையாக இருந்தது, ராஜாஜி அவர்களுடைய அறிவும் நிர்வாகத்திறமையும், நேர்மையுந்தான். ஆகவே, இந்த ஐந்து வருடங்களில் இந்த சட்டசபை, இந்த சர்க்காரால் பொதுமக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் விளைந்திருக்கிறது என்பதற்கு ஒரு சில விஷயங்கள் குறிப்பிட நான் ஆசைப்படுகிறேன்.

முதலாவதாக போன தேர்தலுக்கு முன்னால் மக்களின் மனதில் மிகவும் குழப்பம் உண்டுபண்ணிக்கொண்டிருந்தது ரேஷன் முறை. உணவு தானிய கட்டாயக்கொள்முதல் மூலம் மக்கள் உணவிற்கு மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தார்கள். காரணம், உணவுதானிய பற்றாக்குறை தான். அப்படிப்பட்ட கட்டாய ரேஷன் முறையை நீக்கி அகில இந்தியாவிற்கும் வழிகாட்டியாயிருந்தது ராஜாஜி சர்க்காரே. அதோடு மட்டுமல்ல, அப்பொழுதைய நிதி நிலைமையும் சரியாயில்லை. சென்னை ராஜ்ய சர்க்கார் கடன் எழுப்பி மக்களிடத்தில் நம்பிக்கையையூட்டி, மூலதன செலவிலும் குறைவில்லாமல் நடத்திவந்த காரணத்தினால் இப்பொழுதும் நமது சென்னை ராஜ்யத்தில் பல்விதமான தொழில்களிலும், மின்சார விஸ்தரிப்புத்திட்டங்களிலும், இதர திட்டங்களிலும் நாம் வெற்றி கண்டிருக்கிறோம். அன்று ஏழை விவசாயிகள் மழையில்லாத காரணத்தினால் மிகவும் அல்லலுற்றுக்கொண்டிருந்தபோது கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை கொண்டுவந்து, அவ்விவசாயிகளின் இஷ்டம்போல் பல தவணைகளாக

[Sri P. G. Karuthiruman] [18th December 1956

திரும்பச்செலுத்தும்படியான முறையைக்கொண்டு வந்ததும் ராஜாஜி சர்க்கார் தான். நிலச்சீர்த்திருத்தம் வந்தது, எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதுமாதிரி அவர்களது பிரசங்கங்களினாலோ அல்லது அவர்களது திட்டங்களினாலோ அல்லது பொதுமக்களின் கிளர்ச்சியினாலோ ஏற்பட்டதல்ல. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் இருக்கக்கூடிய கண்ணியமான, பெரிய தலைவர்கள் எல்லோருக்குமே நிலப் பிரச்னையைத் தீர்க்க வேண்டிய அவா இருந்தது. காங்கிரஸ் சர்க்கார் வந்தவுடனேயே இரண்டு முக்கியமான கொள்கைகள் அவர்கள் கவனத்தில் இருந்தது. ஒன்று, மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும். அடுத்தது, நிலப்பிரச்னையைத் தீர்க்கவேண்டும். இவைகளின் அடிப்படையில் க்ஷேமநல சர்க்காரை ஏற்படுத்தவேண்டிய கொள்கையாய் இருந்தது. நமது சர்க்கார் மதுவிலக்குத் திட்டத்தைக் கடைப்பிடித்ததின் காரணமாக இன்று கிராம மக்கள் எவ்வளவு சுபீட்சமாய், சந்தோஷமாய் வாழ்கிறார்கள், பாருங்கள். அவற்றில் தவறுகள் இருக்கலாம். ஆனால் போகப்போக அவைகள் சரியாகிவிடும். அடுத்தது, நிலச் சீர்த்திருத்தத்தில் இரண்டுவிதமான கட்டங்களில் நாம் வெற்றி பெற்று விட்டோம். குடியிறக்கு மசோதாவையும், நியாய வார மசோதாவையும் சட்டமாக்கியிருக்கிறோம். ஆகவே மக்களிடையே இப்பொழுது புது உணர்ச்சி, புதுவேகம் இருக்கிறது. இச்சர்க்கார் நமது சர்க்கார் என்ற முறையில், தேசீய விஸ்தரிப்புத்திட்டம், சமுதாய க்ஷேமநல ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களில் மக்கள் பூர்ணமான அளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்பட்டு அதற்கு மேலும் மக்கள் பணம் செலவு செய்திருக்கிறார்கள் என்றால் சர்க்காரின் திட்டங்களை மக்கள் எவ்வளவு தூரம் பூர்ணமாக பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வரும். கீழ் பவானி அபிவிருத்தித் திட்டத்திற்கு சர்க்கார் 65 லட்சம் ரூபாய் செலவு செய்தும்கூட அதற்கும் மேலாக மக்கள் தாங்களாகவே வந்து 5, 6, லட்சம் ரூபாய் அதிகம் செலவு செய்யும்படியான முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த சட்டசபையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இதிலிருந்து என்ன தெரிகிறது ? சர்க்காரின் திட்டங்களை எவ்வளவு தூரம் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் மக்கள் அவைகளை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஐந்து வருட ஆட்சிக்காலத்தில் மக்களுக்கு எல்லா சௌகரியங்களும் செய்து கொடுத்தாகிவிட்டதா என்றால் இல்லையென்று தான் சொல்லமுடியும். இப்பொழுதுதான் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடித்திருக்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை ஆரம்பித்து இருக்கிறோம். வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமானால், உணவு உற்பத்தி பெருகவேண்டுமானால் உழைக்கவேண்டுமென்ற தன்மை வரவேண்டும் மக்களுக்கு. அது இப்பொழுதுதான் வந்திருக்கிறது. மக்களின் சுபீட்சத்திற்கு இது ஆரம்பமே ஒழிய, இது முடிவல்லவென்பதை நான் இச்சபையில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே அதிலுள்ள குறைப்பாடுகளை எடுத்து அதைப் பெருக்கி **Magnifying glass**-ஆல் ஒன்றுக்கு பத்தாக பெருக்கி வைப்பதில் கெட்டிக்காரத்தனம் இருக்கலாம், மேடை பிரசங்கங்களில் கெட்டிக்காரத்தனமிருக்கலாம். ஆனால் சர்க்காரின் கொள்கைகளைப் பார்க்கும்போது, இச்சர்க்கார் மக்களுக்கு பலவித நன்மைகள் செய்திருக்கின்றன. அவ்விதத்தில்தான் நாம் பார்க்கவேண்டும்.

நாம் கீழ் பவானிப் பிரதேசத்திலிருந்து வரக்கூடியவன். அங்குள்ள எதிர்கட்சி நண்பர்கள் குறைகளை எடுத்துச்சொல்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்கிறோம். அவைகளை நான் எடுத்துச்சொல்லாதவன் அல்ல. அந்தக் குறைகளெல்லாம் எங்களுக்கும் தெரியும். அக்குறைகள் ஒவ்வொன்றாக தீர்க்கப்படும். கீழ் பவானி ஆயக்கட்டு பிரதேசத்தில் சர்க்கார் எவ்வளவு துரிதமாக வேலை நடத்த முடியுமோ அவ்வளவு வேகத்தில் செய்கிறார்கள் என்பதை புள்ளிவிவரங்களுடன் நிரூபிக்க முடியும். என்னால். தண்ட தீர்வை போட்டுவிட்டார்கள். லட்சக்கணக்கில் தண்ட தீர்வை வசூல் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. வேறொன்று ஞாபகத்திற்கு வருகிறது. அங்குள்ள விவசாயிகள் சில சமயங்களில் அத்துமீறி உதவி செய்யும்படியான மனப்பான்மை இல்லாமல் தங்கள்

18th December 1956] [Sri P. G. Karuthiruman]

காரியமே குறி என்றிருக்கிறார்கள். இரண்டு மைல் தண்ணீர் பாய வேண்டுமென்றால் மேலே இருப்பவர்கள் தங்களுக்கு மாத்திரம் வேண்டிய தண்ணீர் எடுப்பது அவ்வளவு நல்லதல்ல. குறைகளை வைத்துக்கொண்டு அதை தங்கள் காரியத்திற்காக உபயோகப்படுத்துவது நல்லதல்ல இந்த சமயத்தில் எனக்கு ஒரு கதை ஞாபகத்தில் வருகிறது. நம் வீட்டில் ஒரு குழந்தை முடமாக பிறந்து விட்டால் கையோ காலோ நொண்டியாகி விட்டால் அதை வீட்டில் கௌரவமாக வைத்துக்கொண்டு அது வெளியில தெரியாமல் வைத்துக்கொள்வோம். ஆனால் அதே சமயத்தில் ஒரு பிச்சைக்காரனுக்கு அங்கஹீனமுள்ள ஒரு குழந்தை பிறந்தால் அவன் சந்தோஷப்படுகிறான். அதைக்காட்டி பிச்சை எடுத்து சம்பாதிக்க வழியாயிற்று அவனுக்கு. அதேபோல் மக்களின் குறைகளை மறைத்து அவர்களைக்காப்பாற்றி கௌரவமாகக் கொண்டுபோகப் பார்க்கிறது நம சர்க்கார். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்களோ பிச்சைக்காரன் எப்படி தனக்கு ஒரு அங்கஹீனமான குழந்தை பிறந்தால் சந்தோஷப்படுகிறானோ அப்படி சந்தோஷப்படுகிறார்கள், மக்களின் குறைகளை கண்டு. ஆகவே, கீழ் பவானி ஆயக்கட்டு விவசாயிகளிடத்திலே இந்தக் குறைகளைக் காட்டி எப்படி பிச்சைக்காரன் அந்த அங்கஹீனமுள்ள குழந்தையை தனக்காக வேண்டி உபயோகப்படுத்திக்கொள்கிறானோ அப்படியே செய்கிறார்கள் இவர்களும் என்பதை நான் இச்சபை முன் எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதில் குறை இல்லாமல் இல்லை. குறை இருக்கத்தான் செய்யும். 12-32 p.m.
ஆனால் இந்த சர்க்கார் பலவிதமான நன்மைகளை செய்திருக்கிறது என்பதை நான் புள்ளி விவரங்களுடன் சொல்ல முடியும். விவசாயிகளுடைய குறைகளை தீர்ப்பதற்கும் சர்க்கார் முயன்று வருகிறது இப்போது . . .

Sri E. L. RAGHAVA MUDALIAR : மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் எதிர் கட்சிக்காரர்களை பிச்சைக்காரர்களோடு ஒப்பிட்டு பேசுவது எதிர்கட்சிக்காரர்களை இழிவுபடுத்தி பேசுவது போல் ஆகிறது. ஆதலால் இப்படி பேசுவது சட்டரீதியானதுதானா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

DEPUTY SPEAKER : அப்படியொன்றுமில்லை. உதாரணமாக சொன்னார்களே தவிர வேறு ஒன்றுமில்லை.

Sri P. G. KARUTHIRUMAN : நான் நண்பர் அவர்களை பிச்சைக்காரர்களோடு சேர்த்து சொல்லவில்லை. அதுமாதிரி நமது நண்பர் அவர்களும் தந்திரம் உள்ளவர் என்பதை சொல்ல ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக இந்த சர்க்கார் சமுதாய நல திட்டத்தின் கீழ் மின்சார விஸ்தரிப்பு திட்டத்தை இந்தியாவில் வேறு எந்த இடத்திலும் காணமுடியாத நிலையில் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை எதிர்கட்சி அங்கத்தினர்கள் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். சென்னை ராஜ்யத்தில் உள்ள 14 ஜில்லாக்களில் கிட்டத்தட்ட 3,000 முதல் 4,000 கிராமங்கள் வரையிலும் மின்சார விஸ்தரிப்பு செய்துகொடுத்திருக்கிறது. ஒவ்வொரு வருஷத்திலும் சுமார் ஆயிரம் கிராமங்கள் வரையிலும் மின்சார விஸ்தரிப்பு செய்து கொடுக்கப்பட்டுவருவதாக நிதி அமைச்சர் குறிப்பிட்டுருக்கிறார்கள். இது விவசாயிகளுக்கு பெரிய திருப்தியாக இருப்பதோடு மாத்திரமல்ல, அவர்கள் ஊக்கத்தோடும் விரிவாகவும் கூடுதல் உற்பத்தி செய்வதற்கும் மூலகாரணமாக இருக்கிறது. இப்போதுள்ள மின்சார விஸ்தரிப்பை பார்க்கும்போது இன்னும் ஐந்தாறு வருடங்களில் அநேகமாக சென்னை ராஜ்யம் பூராவுக்கும் மின்சார வசதி கிடைக்கும் என்று நினைக்கிறேன். பொதுவாக நாம் பார்க்கும்போது, இந்த ஐந்தாண்டு ஆட்சியில் இந்த சர்க்கார் க்ஷேம நல சர்க்காராக பணியாற்றி வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு காரியங்களையும் எடுத்துக்கொண்டால் அதை சரிவர நிறைவேற்றுவதற்கு பொது ஜன பிரதிநிதிகளும் பூரணமாக ஒத்துழைக்கவேண்டும். குறிப்பாக எந்த கிராமங்களில் எல்லாம் அதிகாரிகள் மனப்பூர்வமாக பணியாற்றியிருக்கிறார்களோ அந்த இடத்தில் எல்லாம் எல்லா வேலைகளும் வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஐந்தாறு வருடங்களில் சுமார் ஐந்தாறு

கோடி ரூபாய் வரைக்கும் நாட்டுப்புற மக்களுக்கும் அவர்களுக்கு தேவையான காரியங்களுக்காகவும் சர்க்கார் செலவு செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே இப்போது இருக்கும்படியான நிலைமையை விடவும் இன்னும் நல்ல சுபீட்சமான ஒரு நிலை அடைவதற்கும் பொருளாதார நலமுடையதான ஒரு நிலை அடைவதற்கும் கம்பன் கூறியதுபோல் ராம ராஜ்யம் பெறுவதற்கும் மக்களும் முன்வந்து உழைக்கவேண்டும். ராம ராஜ்யம் ஸ்தாபிப்பதற்கு மக்களும் உழைத்தாக வேண்டும்.

“ மைந்தரை இன்மையின் வரம்பில் காலமும்
நொந்தனன் இராமன் அந்நோயை நீக்குவான்
வந்தனன் இனி அவன் வருந்த யான் பிழைக்க
உய்ந்தனன் போலதோர் உறுதி எண்ணினான் ”

என்று சொல்லி யிருக்கின்றான். மக்களுடைய ராஜ்யத்தை அமைப்பதற்கு மக்களும் உழைத்து க்ஷேமநல சர்காரின் அடிப்படை லட்சியங்களை கருத்தில் கொண்டு இருக்கவேண்டும். அப்படியிருந்தால் மக்கள் எல்லோரும் க்ஷேமமாக வாழ முடியும். “ எல்லோரும் எல்லா பெருஞ்செல்வம் எய்தலாலே, இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லை மாதோ ” என்றபடி எல்லோரும் இன்பமாக வாழ முடியும். இன்னும் ஐந்து வருடங்களில் இப்படிப்பட்ட ஒரு நிலைமையை ஏற்படுத்துவதற்கு மக்களுடைய பூரணமான ஆதரவு இந்த சர்க்காருக்கு கிடைக்கும் என்று கூறிக்கொண்டு இந்த சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றியை தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். ஆகவே, அங்கு ஒரு இன்ஜினீயரிங் காலேஜ் ஏற்படுமானால் அது மிகவும் நன்றாகவிருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரம் பலயிடங்களிலும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. திருநெல்வேலி ஜில்லாவிலும் நாங்குனேரியில் பலயிடங்களிலும் விஸ்தரித்திருக்கிறார்கள். ஒரு agreement எழுதிக்கொடுத்து, அதாவது unconnected minimum கொடுக்கவேண்டுமென்று, வரி ஈடாக்குகிறார்கள் அவ்வேழை விவசாயிகளிடமிருந்து அது மாத்திரமல்ல ஒன்பது வருட காலமாக பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு, கிணற்றில் தண்ணீர் இல்லாமல் இருக்கும்போது, அவ்வப்போது, விலைவாசி ஏறிக்கொண்டே போகும்போது, ஏராளமான ரூபாய் உடனடி முடக்க முடியுமா ? ஒன்று இரண்டு மூன்றாக எலக்டிரிக் மோட்டார்கள் வைத்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே எப்படியும் வைத்து விடுவார்கள். சாமான்களும் கிடைப்பதில்லை. இன்னும் ஒரு வருடத்திற்கு unconnected minimum வசூலிப்பதை தள்ளிவைக்கவேண்டும். அது அப்படியிருக்க, சர்க்கார் அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால் ‘ லோகல் டெவலப்மெண்ட் வொர்கஸ் ’, ‘ மைனர் இரிகேஷன் வொர்க்ஸ் ’ போன்ற வேலைகளுக்கே நாங்கள் சிமன்ட் கொடுப்போம் என்கிறார்கள். மற்ற வேலைகளுக்கு சிமெண்ட் கொடுப்பதில்லை. இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். விவசாயிகள் electric motor உடனடியாக வைக்கவில்லையென்றால் சிமெண்ட் இல்லாமல் என்ன செய்வார்கள் ? ஆகவே யார் யாரெல்லாம் எங்கெங்கே electric motor வைக்கவேண்டியிருக்கிறது, அதற்கு எவ்வளவு சிமெண்ட் தேவை என்றெல்லாம் பார்த்து அதற்கு வேண்டிய சிமெண்டாவது கொடுக்கவேண்டும். அதைக்கூட செய்யாமல் இருக்கிறார்கள். ஆகவே, அக்குறையை நிவர்த்தி செய்யவேண்டுமென்று அரசாங்கத்தினிடம் கேட்டுக்கொள்கிறேன். 1948-49-ல் கிணறு அடிப்பதற்காக 500 ரூபாய் மான்யம் அளித்துவந்தார்கள். அநேக விவசாயிகள், நாங்குனேரி தாலுகாவில் பலர் 500 ரூபாய் வாங்கி மேற்கொண்டு ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்து 20 அடி முதல் 27 அடி வரை தண்ணீர் வராமல் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட விவசாயிகளிடமிருந்துதான் இந்த பணத்தை வசூலிக்க விரும்புகிறது சர்க்கார். ஆகவே, எனது வேண்டுகோள் என்னவென்றால், இந்த சர்க்கார் உடனடியாக அங்குள்ள பஞ்ச நிலைமையை உத்தேசித்து, அவர்கள் எடுத்த முயற்சியையும், அவர்கள் செலவு செய்த பணத்தையும் கவனித்து கணக்குப்போட்டு மிச்சப் பணத்தை வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில்

இப்பொழுது இருக்கிற P.W.D. என்ஜினியர் அவர்கள், அந்த ஜில்லாவிலுள்ளவராய் இருப்பதால் தண்ணீர் விநியோகம் செய்வதில் பாரபட்சம் காட்டுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இதை சர்க்கார் கவனத்தில் வைத்துக்கொண்டு எந்த விதத்திலாவது நல்ல முறையில் தண்ணீர் விநியோகிக்கப்படவேண்டுமென்பதற்காக சர்க்கார் உடனடியாக வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி ஜில்லா நம்முடைய ராஜ்யத்தோடு சேருவதற்குமுன்னால் அங்கே “ கம்யூனல் ரொட்டேஷன் ” இருந்தது. பொது தேர்தல் வருவதற்குமுன் அங்குள்ள நிலைமைக்கு ஏற்ப தாற்காலிகமாக பல உத்தியோகஸ்தர்களை நியமிக்கிறார்கள். ஆகவே, உத்தியோக விஷயத்தில், ஓரளவு அங்குள்ள நிலைமைக்குத் தக்கபடி, கம்யூனல் ரொட்டேஷன்படி அங்கே தற்காலிக உத்தியோக நியமனம்கூடச் செய்ய வேண்டுமென்று சர்க்காரிலிருந்து தாக்கீது அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்களுக்காக, நாங்கள் ஸ்தலத்திலுள்ள பெரிய அதிகாரிகளிடம் சொன்னால், உடனே செய்து விடுகிறோம், அப்படி இப்படியென்றெல்லாம் சொல்கிறார்களேயொழிய காரியாம்சத்தில் ஒன்றும் செய்வதில்லை. அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு பழவூர் என்ற இடத்தில், ஸ்ரீ பக்தவத்சலம் மந்திரி கால் நாட்டிவிட்டு வந்தார்கள். நிலம் ஆர்ஜிதமாகி வருடங்கள் ஐந்து ஆகியும் அங்கே வீடுகள் கட்டுவதற்கு ஏதாவது ஏற்பாடாயிருக்கிறதாயென்றால், இல்லை. ஸ்தல அதிகாரிகள் அதில் கொஞ்சங்கூட அக்கறை எடுக்கவில்லை. ஆகவே சர்க்கார் இது விஷயத்தில் உடனடி சிரத்தை செலுத்தி வேண்டியதை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நேற்று நம் போக்குவரத்து மந்திரியவர்கள் சொன்னார்கள். பனையேறுபவர்களுக்கு நிவாரணம் அளிப்பதாகவும், வேலையில்லாதவர்களுக்கு பால் சப்ளை ஸொஸைட்டிக்களில் வேலை கொடுப்பதாகவும் சொன்னார்கள். அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது திசையின்விளையிலே பனையேறுபவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களை ஒரு தனி வர்க்கமாக வைத்து, Backward community-ல் சேர்த்து அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் அளிக்கப்படவேண்டும். திருச்செந்தூர், நாங்குனேரி ஜில்லாக்களில் ஏராளமான பனைகள் பட்டுப்போய் விட்டன, கால மழையில்லாததினால். பனை ஏறுவதுதான் அங்குள்ள மக்களின் தொழில். இப்பொழுது அவர்களது வாழ்க்கைக்கு ஜீவாதாரமாயுள்ள பனைகள் பட்டுப்போய்விட்டன. ஆகவே, அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்து அவர்களுக்கு ஆதரவு காட்டவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களிடமிருந்து வசூல் செய்த பனைத் தீர்வை எவ்வளவோ இருக்கிறது. அதைத்தான் நாம் திரும்பக்கொடுக்கிறோம். ஆயிரக்கணக்கான பனைகள் அங்கு பட்டுப்போய்விட்டன. ஆகவே, சர்க்கார் அவர்களது கஷ்டத்தை உணர்ந்து அவர்களுக்கு வேண்டிய உதவியளித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசன மகா நாடு ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஜில்லாக்களில் நடக்கும் என்று நினைக்கிறேன். அம்மாதிரி மகா நாடுகளுக்கு வரும் கோரிக்கைகளைப் பற்றி அவர்கள் ஒருவருக்கொருவர் வந்த இடத்தில் ஏதோ பேசிச் சிரிக்கிறார்கள். முன் கூட்டியே அதை சிரத்தையோடு ஆராய்ச்சி செய்து வருவதில்லை. இம்மாதிரியான நீர்ப்பாசன மகாநாடு கூட்டுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று தெரியவில்லை. திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் திருவிதாங்கூரில் இருந்த நாகர் கோவில் பகுதியிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு வசதியிருக்கிறது, அதை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று சொல்லி ஒரு சப்-டிவிஷனல் இன்ஜினியர் அதற்கு என்று போட்டு இருக்கிறார்கள். அவர்கள் இது வரை என்ன ஆராய்ச்சி பண்ணியிருக்கிறார்கள், என்ன வேலை எல்லாம் செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஏன் அதிகாரிகள் வேலை செய்யவில்லை என்று கேட்கக்கூடிய control

[Sri P. G. Karuthiruman]   [18th December 1956

செய்யக்கூடிய ஜில்லா நிர்வாகி இருந்தால் நன்றாக இருக்கும். ஆகவே இம்மாதிரியான குறைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வருடம் கால மழை பொய்த்துவிட்டதினால் வரி வஜா கொடுக்கப்படவேண்டிய நிலைமையில் விவசாயிகள் இருக்கிறார்கள். நிதி மந்திரி அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் பல இடங்களிலும் சென்று பார்த்திருக்கிறார்கள். இதுதவிர கல்வி வசதி குறிப்பிட்ட ஜாதிகளுக்கு மட்டும் என்று இருக்கிறது. அதனால் பெரிய பணக்காரர்கள் தாங்களும் குறைந்த ஜாதிக்காரர்கள் என்று கல்விச் சலுகை பெறுகிறார்கள். இதனால் சாதாரண குறைந்த ஜாதி மக்களுக்கு போதுமான வசதி கிடைப்பதில்லை. எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் எல்லா சலுகைகளும் கொடுத்தாகிவிட்டது. ஆனால் குறைந்த வருவாயுள்ள விவசாயிகளுக்கு இதுவரை ஒன்றும் கிடைக்கவில்லை. குறைந்த ஜாதி பிள்ளைகளுக்கு மாத்திரம் எஸ். எஸ். எல். ஸி. வரை கட்டணம் இல்லாமல் படிக்கலாம் என்று இருக்கிறது. ஜாதிக்குள்ளே குறைந்தஜாதி என்று சர்டிபிக்கேட் வாங்கி ஆஜராக்குகிறார்கள். இதற்கு நாமும் உடந்தையாக இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே எல்லோருடைய பிள்ளைகளுக்கும் எஸ்.எஸ். எல்.ஸி. வரை இலவசமான கல்வி அளிக்க முன் வரவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் தந்ததற்கு என் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

12-37 p.m. * **SRI S. PAKKIRISAMI PILLAI** : கனம் தலைவர் அவர்களே, நான் இந்த பட்ஜெட் விவாதத்தின்போது சில குறைபாடுகளை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் இந்த தடவை பட்ஜெட் பிரசங்கத்தை தமிழில் படித்தார்கள். அது மகிழ்ச்சியைத் தரகூடிய விஷயம். இனிமேல் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட இருப்பதை நம்மால் பார்க்க முடியும். ஆனால் சாதாரண தொழிலாளிகளின் அல்லது விவசாயிகளின் முன்னேற்ற வழிகளில் ஏதாவது வசதிகள் செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அப்படி ஒன்றும் காண முடியவில்லை. கழிந்த ஐந்து வருட ஆட்சியில் மக்கள் அதே நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். விவசாய தொழிலாள மக்களுடைய நிலை கொஞ்சமாவது மாறியிருக்கிறதா என்று பார்த்தால் நமக்கு ஒன்றும் தெரியவில்லை. இந்த ஆட்சிகாலத்தில் பொருளாதார ரீதியில் சுருக்கத்தில் பார்த்தால் ஏழைகளாக இருந்தவர்கள் ஏழைகளாகத்தான் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆட்சியின் பிற்போக்குத் தனத்தை நான் இரண்டொரு சூசகமான உதாரணங்களால் விளக்க விரும்புகிறேன். சமீபத்தில் அரிசியினுடைய விலை விஷம் போல் ஏறியது. அதை கட்டுபடுத்துவதற்கு நியாயவிலை கடைகளை கொண்டுவந்து அதில் 11½ அணவுக்கு அரிசி விற்கப்படும் என்று குறிப்பிட்டு சில இடங்களில் நியாயவிலை கடைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த நியாயவிலை கடைகள் முக்கியமாக காங்கிரஸ் வியாபாரிகளுக்கே கொடுக்கப்பட்டன. ஆனால் இதை காங்கிரஸ் தொண்டர்களுக்காவது கொடுத்திருந்தால் ஆட்சேபணை இருக்க முடியாது. அப்படியிருந்தால் அவர்களும் ஏதோ உயரும் வழியாக இருந்திருக்கும். ஆனால் இந்த நியாயவிலைக் கடைகளின்மூலம் இன்று நூற்றுக்கு இரண்டு குடும்பங்களுக்குத்தான் அரிசி கிடைக்கும் நிலைமை இருக்கிறது. இந்த அரிசியை ஏழைகள் அத்தனை பேரும் வாங்க முடியவில்லை.

SRI M KALYANASUNDARAM : மந்திரிகள் எல்லோரும் அவசரமாக ஏதோ ஒரு காரியத்திற்கு போக வேண்டும் என்று அவர்களுக்குள் ஆலோசித்து கொண்டு தான் போனார்கள். அவர்கள் இல்லாததினால் சபையை அரை மணி நேரம் ஒத்தி வைத்தால் நமக்கு தான் நஷ்டம். அவர்கள் போகிற விவரத்தை எங்களிடம் சொன்னார்கள். எதிர்க் கட்சி மெம்பர்களின் சார்பில் நானும் ஒத்துக்கொண்டேன். அவர்கள் சார்பில் கனம் ராஜா ராம் நாயுடு அவர்களை நோட்டு எடுக்கும்படி சொல்லிவிட்டுதான் போயிருக்கிறார்கள், என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

18th December 1956]

SRI S. PAKKIRISAMI PILLAI : ஆகவே நியாயவிலைக் கடைகள் எத்தனை பேர்களுக்கு உபயோகம் ஆகிறது என்று பார்த்தால் அதன் பயன் குறைவு என்றே தோன்றுகிறது. ஏழைகளுக்கு இந்நியாய விலை கடைகளினால் எந்தவித பயனும் இல்லை என்று தான் நினைக்கிறேன். நமக்கு நன்றாகத் தெரியும் வாழ்க்கைத்தர புள்ளி கணக்குப் போடுவதைப்பற்றி. அதன் பிரகாரம் சென்ற மூன்று நான்கு மாதத்திற்கு முன்னால் பஞ்சப்படியின் விகிதம் ரூபாய் 51–4–0 ஆக இருந்தது. திடீரென்று நியாய விலைக் கடைகளை ஆரம்பித்ததால் பஞ்சப்படியின் தொகை ரூபாய் 48 அல்லது 49 ஆக குறைந்து விட்டது. காரணம் புள்ளி விவரம் 372-லிருந்து 360-க்குக் குறைந்து விட்டது என்று சொல்லுகிறார்கள். இது தொழிலாளர்களை பாதிக்கும் என்பதற்குக் காரணம் என்ன ? படி அரிசி ஒரு ரூபாய்க்குக்கூட கிடைக்காமல் இப்போதும் இருக்கிறது. நியாய விலைக் கடைகளை ஆரம்பித்து அரிசி படி ஒன்றுக்கு 0–11–6 என்று விற்கப்படுவதால் அதனால் எல்லா இடங்களிலும் அரிசி குறைந்து விட்டது என்று அரசாங்கத்தார்கள் கருதிவிட்டார். ஆனால் அந்த அரிசி எல்லோருக்கும் கிடைக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு அரிசி கிடைக்காமல் இருக்கிற நிலைமையில் பஞ்சப்படித் தொகையை குறைத்து இருக்கிறார்கள். தொழிலாளர்கள் வாங்கியிருந்த தொகையில் நான்கு ரூபாய் வரையில் குறைந்து விட்டது. இந்தப் பணம் யாருக்குப் போய்ச் சேருகிறது ? முதலாளிக்குப் போய்ச் சேருகிறது. லாபம் முதலாளிக்கு மாறிவிட்டதே யொழிய அதனால் தொழிலாளர்களுடைய கஷ்டம் உண்மையில் நீங்க வில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் அரசாங்கம் முதலாளிகளுக்கு சலுகைகள் காட்டுவதாகத்தான் தெரியவருகிறது. இதைப்பற்றி சர்க்கார் யோசனை செய்திருக்கிறார்களா என்று கேட்கிறேன். அரசாங்க அதிகாரிகள் வாழ்க்கைச் செலவு கணக்குப் போடுகிறவர்களுக்கு ஏதாகிலும் ஒரு அறிக்கை விடுத்து இம்மாதிரி அரிசி புள்ளி விலையை குறைத்துப் போடக்கூடாது என்று சொன்னார்களா ? விலையைக் குறைத்துக் கொடுத்தால் நிறையப் பேர்களுக்கு அது கிடைத்ததா என்று பார்த்தார்களா ? திடீரென்று 372-லிருந்து 360-க்கு குறைந்து விட்டது என்று நான் சொன்னேன். அதனால் லாபமடைந்தவர்கள் முதலாளிகளே தவிர தொழிலாளர்கள் அல்ல. இந்த வசதியை சர்க்கார் வேண்டுமென்றே முதலாளிகளுக்குச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே சமயத்தில் தொழிலாளர்களுக்கு என ராஜ்ய சுகாதார பாதுகாப்பு திட்டம் என்று ஒன்றுகொண்டு வந்திருக்கிறார்கள். அதை நமது நாட்டின் தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் வந்து ஆரம்பித்து வைத்தார். அவர் ஆரம்பித்து வைக்கும்போது இது தொழிலாளர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றும் ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்றும் சொன்னார். இந்த ராஜ்ய சுகாதார திட்டமானது வந்தவுடன் இந்த சட்டத்தை நிர்வகிக்க ராஜ்ய சுகாதார கார்ப்போரேஷன் என்று ஒன்று இருக்கிறது. மெடிகல் சர்வீஸ் டைரெக்டர், அதனுடைய நிர்வாகஸ்தர்களில் ஒருவர் லேபர் டிபார்ட்மெண்ட் மந்திரி, அவர்களுடைய தலைமையின் கீழ் ஒரு நிர்வாகம். இப்படி மூன்று அதிகாரிகளும் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த மூன்று டிபார்ட்மெண்டுகளும் சரிவர வேலை செய்வது கிடையாது. இந்த ராஜ்ய சுகாதார கார்போரேஷன் போதுமான அளவுக்கு இதில் கவனம் செலுத்த சக்தியில்லை. டாக்டர்கள் போதுமானபடி நியமிக்கப் படவில்லை. தொழிலாளர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய லேபர் டிபார்ட்மெண்ட் முன்வர வில்லை. தொழிலாளர்களுக்கு வேண்டிய லீவு முதலியவைகள் சரியானபடி சிபாரிசு செய்யப்படுகிறதில்லை. இதுவரையிலும் கொடுத்து வந்த சிக் லீவு இப்போது கிடைக்கிறதில்லை. முதலாளிகள் இதனால் மாறுபட்டதாகவே தெரியவில்லை. இதற்கு முன்னதாக கொடுத்து வந்த சிக் லீவு சம்பளத்தைக்கூட இப்போது கொடுக்க முன்வருகிறதில்லை. இந்த நிலைமையில்தான் இந்த சுகாதார திட்டம் இருந்து கொண்டு வருகிறது. இந்தக் கார்போரேஷன் மிகவும் திறமையற்ற நிலைமையில்தான் வேலை செய்து கொண்டு வருகிறது. டாக்டர்கள் சரியானபடி வேலை செய்யவில்லை. அதை பயன்

[Sri S. Pakkirisami Pillai] [18th December 1956

படுத்திக் கொண்டு தொழிலாளர்களுக்கு சிக் லீவு சம்பளமும் கிடைக்க வில்லை. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தொழிலாளியும் ரூபாய் 10, 15 அல்லது 20 என்று இழந்து கொண்டு வருகிறார்கள். இந்த நிலைமையில் பி அண்ட் சி மில் முதலாளி இந்த சுகாதார சட்டத்தை மீறி அக்கிரமமாக தொழிலாளர்களுடைய பணத்தை சுரண்டிக்கொண்டு வருகிறார். இதைப் பற்றி லேபர் கமிஷனரிடம் சொல்லி அவர் அந்த மில் முதலாளியை அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூப்பிட்டால் விசாரணைக்கு மில் முதலாளி வரமுடியாது என்று சொல்லுகிறார். அந்த அளவிற்கு வெள்ளை மானேஜ்மெண்டார் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்க ளுக்கு இப்படிப்பட்ட தைரியம் எப்படி வந்தது என்பது தெரியவில்லை. இந்த அரசாங்கத்தில் இருக்கும் சில அதிகாரிகள் அவர்களுக்கு கொடுத்து வரும் சலுகைதான் அதற்குக் காரணம். ஒரு சிறிய அரசாங்க அதிகாரி கூப்பிட் டாலும் வரமாட்டேன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு பெரிய அரசாங்க அதிகாரிகள் அவர்களுக்கு சலுகைகள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். முதலாளிகள் சட்டத்தை மீறினால் அவர்களை இந்த அரசாங்கம் ஒன்றும் செய்வதில்லை. ஆனால் அதே நேரத்தில் தொழிலாளர்கள் சட்டத்தை மீறினால் அவர்கள் மேல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. முதலாளிகளை அரசாங்கம் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அவர்களை அணுகுவதற்குக் கூட இந்த அரசாங்கம் பயப்படுகிறது. சமீபத்தில் ஒரு ஆங்கிலக் கம்பெனியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் போனஸ் கேட்கும் முயற்சியில் சாத்வீக கிளர்ச்சி செய்தனர். அதன் காரணமாக அங்குள்ள 200 கிளார்க்குகளை வேலையைவிட்டு திடீரென்று நீக்கி விட்டார்கள். அதை எதிர்த்து அரசாங்கத்தினிடம் முறையிட்டோம். ஒரு அரசாங்க அதிகாரி அவர்கள் செய்தது சரி என்று இறுமாப்புடன் சொன்னார். 200 பேர்களை வேலையை விட்டு நீக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதை கவனிப்பதற்குக்கூட அரசாங்கம் முன் வரவில்லை. இதை நாம் கண் கூடாகப் பார்த்தோம். இதையொட்டி தொழிலாளர்கள் ஏதாகிலும் செய் தால் அவர்களுக்கு ஜெயில். ஆனால் முதலாளிகள் ஏதாவது செய்தால் அதற்கு நடவடிக்கை கூட கிடையாது. இப்படிப்பட்ட நிலைமையில் ஏழை தொழிலாளர்கள் விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த அரசாங்கத்தினிடம் எந்த விதமான நன்மையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக மற்றொரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். சமீ பத்தில் என்னை கைது செய்து சென்ட்ரல் சிறையில் வைத்திருந்தார்கள். அங்கு நான் போனவுடன் அங்குள்ள கைதிகள் எல்லோரும் உண்ணா விரதம் இருப்பதாகச் சொன்னார்கள். அதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தபோது அப்பொழுது ராஜ்ய சீரமைப்பு ஏற்பட்டதனால் மற்ற ராஜ்யங்களிலுள்ள கைதிகளுக்கு சலுகைகள் காட்டி அநேக கைதிகளை விடுதலை செய்ததாகவும் இங்குள்ள கைதிகள் அந்தச் சலுகையைக் கேட்ட தற்கு கொடுக்க முடியாது என்று சொன்னதாகவும் அதன் காரணமாக அவர்கள் உண்ணா விரதம் இருக்க ஆரம்பிப்பதாகவும் சொன்னார்கள். சிறையில் இருக்கும் கைதிகளுக்கு ஒரு இடத்தில் ஒரு சலுகையும் மற்றொரு இடத்தில் வேறு விதமான சலுகையுமா என்று கேட்கிறேன். இன்னும் சில இடங்களில் அவர்களுடைய தண்டனை காலத்தையும் குறைத்திருப்ப தாகத் தெரிய வந்தது. இங்கும் ஏன் அப்படிக் குறைக்கக் கூடாது என்று கேட்கிறேன். அவர்கள் உண்ணா விரதம் இருந்தது அரசாங்கத்திற்குத் தெரியுமோ அல்லது தெரியாதோ ? அதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நடந்தது. இந்த விதம் கைதிகள் திட்டம் போட்டவுடன் அவர்களை அடக்கி ஒடுக்கி விட்டார்கள். ஏழைகளுக்கு ஒரு இடத்தில் கொடுக்கப்பட்ட சலுகையை மற்ற இடங்களிலும் ஏன் கொடுக்கக் கூடாது என்றுதான் நான் கேட்கிறேன். இந்த நிலைமையில் நம் அரசாங்கம் இருந்தால் ஏழைகளுக்கு நன்மை கிடைக்காது. இந்த முறை மாறவேண்டும். அதிகாரிகளுக்கு இந்த மாதிரியான எண்ணம் இருக்கக் கூடாது. முக்கியமாக ஐ.சி.எஸ். ஆபீசர்களுக்கு பிரிட்டிஷ் ஆட்சி நடந்த காலத்தில் இருந்த எண்ணம் இப்பொழுது இருக்கக்கூடாது. அதை மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

18th December 1956]

SRI K. VENKATASWAMY NAIDU : Mr. Deputy Speaker, Sir, when this budget was presented yesterday, several thoughts came into my mind, because I have been seeing such budgets presented . . .

SRI E. L. RAGHAVA MUDALIAR : I want the hon. Member to speak in Tamil, Sir.

கனம் வெங்கடாசமி நாயுடு அவர்களை தமிழில் பேசும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

* SRI K. VENKATASWAMY NAIDU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் தமிழில் பேசவேண்டும் என்று கேட்டதில் ரொம்பவும் சந்தோஷம். நான் அவ்வளவு நன்றாக தமிழ் பேசக் கூடியவன் அல்ல. தமிழில் பேசவேண்டும் என்று சொல்லுவதால் ஒருவாறு தமிழில் பேசுவதற்கு என்னால் முடியும் என்று நினைக்கிறேன்.

இருபது வருஷமாக இந்த பட்ஜெட்டை நான் பார்த்துக் கொண்டு வருகிறேன். அநேக விதமான பட்ஜெட்டுகளை நாம் பார்த்திருக்கிறோம். யுத்த சமயத்தில் ஒரு விதமான பட்ஜெட். இதுபோல ஒரு பீரியட் முடி வடையும் போது ஒரு விதமான பட்ஜெட். இப்படியெல்லாம் பட்ஜெட் டுகள் வந்து பார்த்திருக்கிறோம்.

ஆனால் இது இடைக்கால வரவு செலவுத் திட்டம்தான். இருந்தாலும் இதிலே சில முக்கியமான விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பொழுது நம் ஜனங்களு டைய குறி எல்லாம் இரண்டு விஷயங்களிலே போகின்றது. முதலாவ தாக சமுதாய அபிவிருத்தித் திட்டத்திலே அதிக அக்கறை, உற்சாகம் காட்டி வருகிறார்கள். எல்லா கிராம ஜனங்களுக்கும் இதிலே உற்சாகம் பிறந்து இருக்கிறது. சாதாரணமாக ஸ்ரீ பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் பேசும் போது ஏழை ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், அவர்கள் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆனால் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் அது அல்ல. முன்பு இருந்ததை விட கிராம ஜனங்கள் தற்போது மிகவும் சந்தோஷமாகவும், உற்சாகமாகவும், சுகமாகவும் வாழ்கிறார்கள். அவர்களுடைய வீடுகள், அவர்களுடைய ஆடைகள், அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எல்லாமே உயர்ந்து வருகின்றன. இது நம்முடைய ராஜ்யம், இங்கே நம்முடைய சர்க்கார் நடக்கிறது. நம் ராஜ்ய வாழ்வுக்கு நாம் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்ற எண்ணம் அதிகமாக வளர்ந்து இருக்கிறது. அவர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்திருக்கிறார்கள். இந்த இடைக் கால பட்ஜெட்டிலே சிறு கைத்தொழில்களுக்குப் போதுமான ஊக்கம் காட்டப்பட்டிருக்கிறது. இதற்காகப் பெரிய லிஸ்டு ஒன்றைக் கொடுத்திருக் கிறார்கள். அதன்படி காரியங்கள் நிறை வேறினால் நம் ஜனங்களுக்கு அதிக நன்மை கிடைக்கும். அவர்களுடைய உற்சாகமும் பெருகும்.

ஐந்தாண்டுகளுக்கு முன்னால் இந்த மந்திரி சபை ஸ்திரத்தன்மை யுடையதாக அமைக்கப்படுமோ என்ற அச்சம் துடிதுடிப்பு நமக்கு எல்லாம் இருந்தது. எதிர்க் கட்சி அங்கத்தினர்களில் பெரும்பாலோர் இன்றைக்கு ஆந்திரா, மலையாளம் முதலிய இடங்களுக்குப் போய் விட்டார்கள். தமிழர் கள் மாத்திரம் நிரம்பிய சபையாக இன்று இது அமைந்திருக்கிறது. இதுபற்றி நாம் துக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஒரே குடும்பமாக இருக்கின்றவர்கள் இப்படித்தான் உலக வாழ்க்கையில் தங்கள் தங்கள் நல வாழ்க்கைக்காகப் பிரிய சந்தர்ப்பம் இருக்கிறது. நம்முடைய குல தெய்வ மாகிய அகஸ்தியரைப் போலவே இப்பொழுது நாம் குறுகி இருக்கிறோம். சொச்சமாக இருக்கிறோம். நம் தமிழ் பண்பாட்டை வளர்த்துக் கொள் வதற்கும், பலவிதமான அபிவிருத்திகளைச் செய்து கொள்வதற்கும்

நமக்கு ஒரு சந்தர்ப்பம் இப்பொழுது கிடைத்திருக்கிறது. நாட்டு மக்களி டையே ஒரு உற்சாகம் வளர்ந்து வருகிறது. செய்திகள் கூட தமிழில் வந்திருக்கிறது. என்னையும் தமிழில் பேச வேண்டுமென்று கட்டளை இட்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான புதுக் காலம் ஒன்று மலர வேண்டுமென் பதைத்தான் பலரும் எதிர்பார்த்து வந்தார்கள். நம் ஜனங்களுடைய உற்சாகத்தையும், ஊக்கத்தையும் நல்ல வழியில் செலுத்த வேண்டியது நம் எல்லோருடைய கடமை ஆகும். பல நல்ல ஆக்க வேலைகளைச் செய்யவும் வாய்ப்பு கிடைக்கும். ஆனால் ஒரே ஒரு விஷயம். நம் மக்களுடைய உற்சாகம், ஊக்கம், எல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்கு உள்ளடங்கி இருக்க வேண்டும். நாட்டில் கட்டுப்பாடு குறைந்து வருவது போலவும் தோன்றுகிறது. "நம் வீடுதானே, எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்" என நினைப்பபோமேயானால் அது சரியாகாது. மக்களிடையே விசேஷமான கட்டுப்பாடு, விடா முயற்சி ஆகியவை என்றைக்கும் இருக்க வேண்டும். நாம் எல்லாரும் கட்டுப்பாட்டுடன் வேலை செய்தால்தான் நாட்டின் சுபீட்சத்தை உண்டாக்க முடியும். ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு இருக்கும் இந்தக் காலத்தில் மக்களிடையே நல்ல உற்சாகம், நல்ல கட்டுப்பாடு, நல்ல திறமையான வேலை, நல்ல முயற்சி இவைகள் எல்லாம் இருந்தால்தான் அதிகமான பலன் கிடைக்கும்.

மேலும் முக்கியமான ஒரு விஷயம். நேற்று அடையார் பாலம் பற்றி சபையில் பேச்சு வந்தது. உலகத் தலைவர்கள் எல்லாம் இன்று சென்னைக்கு அடிக்கடி வந்து கொண்டிருக்கிறார்கள். வரும்போது எல்லாம் அவர்கள் அடையார் பாலம் வழியாகத்தான் கிண்டி ராஜபவனத்திற்குப் போகிறார்கள். அந்த அடையார் பாலம் கி.மு.வுக்கு முன்பு கட்டப்பட்டது போலத்தான் இருக்கிறது. அது விஷயத்தில் நம் சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் ஏதோ கருத்து வேறுபாடு இருந்து கொண்டிருக்கிறது என்பது போல இருக்கிறது. அதை அப்படியே விட்டு வைக்காமல் அந்தப் பாலத்தை புது முறையில் நன்றாகக் கட்டினால் வெளி நாட்டிலிருந்து வருகின்றவர்களுக்கு சென்னை நகரம் மிகப் பார்வையாக இருக்கும். அந்தப் பாலமும் அவர்களிடத்தில் நல்ல பெயரை வாங்கும். இது தான் என் ஆசை. உடனடியாக அந்தப் பாலத்தை நல்ல முறையில் கட்டி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதைப் போலவேதான் சென்னை நகர ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. வெளி ஊர்களுக்குப் போனால் ரோடுகள் நன்றாக இருக்கின்றன. பூந்தமல்லி ரோடு, மவுண்ட் ரோடு போன்றவை சென்னையில் மிகவும் முக்கியமான ரஸ்தாக்கள். இவற்றை கார்பரேஷனும் ரிப்பேர் செய்வதில்லை, சர்க்காரும் பண்ணுவது இல்லை. இவை அதிகமான போக்கு வரத்துக்கு உள்ளாயிருக்கின்றன. வெளி நாட்டிலிருந்து வருகின்றவர்கள் பெரம்பூர் கோச் பாக்டரிக்குப் போக வேண்டுமென்றால் பூந்தமல்லி ரோடு வழியாகத்தான் போக வேண்டும். அந்த ரோடு ரிப்பேர் செய்யப்படாமல் இருப்பது நமக்குத்தான் அகௌரவம். கார்ப்பரேஷனும் சர்க்காரும் இவ்விஷயத்தில் தகராறு எதுவும் செய்யாமல் உடனடியாகவே அந்த ரோடுகளைச் செப்பனிட ஏற்பாடு செய்ய வேண்டும். அதைப்போலவே சென்னை நகரத்தில் இன்னமும் குடிதண்ணீர் கஷ்டம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. மழை நிறையப் பெய்கிறது. இருந்தாலும் பைப்பில் தண்ணீர் வரவில்லை. அதற்காக நமது முதல் மந்திரி ஆந்திர முதல் மந்திரியுடன் கலந்து பேசி ஆந்திர நதியாகிய கோதாவரியின் தண்ணீரைக் கொண்டு வர ஏற்பாடு செய்வதான பிரஸ்தாபம் இருந்து வருகிறது. அதை அவர்கள் உடனடியாகச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

கடைசியாக ஒரு விஷயம். ஐந்து வருஷங்களாக நமது சபை பகவானுடைய கிருபையினால் நல்லபடியாக நடந்து வந்தது. வருகிற அசெம்பிளியும் நன்றாக நடக்கும்படியாக ஆண்டவனைப் பிராத்தித்துக் கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

SRI E. L. RAGHAVA MUDALIAR: கனம் உதவி சாபநாயகர் அவர்களே, இவ்வாண்டு நிதி நிலைமை அறிக்கையைக் கொண்டுவந்த கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமிழில் பேசினது ஒரு சிறப்பான

அம்சமாகும். நமது சட்ட சபை நடவடிக்கைகளெல்லாம் தமிழிலேயே நடக்கும்போது ஆட்சி மொழி மாத்திரம் ஏன் இன்னும் ஆங்கிலத்தில் இருக்கிறது என்பதுதான் புரியவில்லை. அதை உடனடியாக தமிழில் மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக வெகு அழகாக பேசும் திரு. கருத்திருமன் ஒரு மேற்கோளை எதிர்கட்சிக் காரர்களுக்கு ஒப்பிட்டுக் காட்டினார். அந்த மேற்கோள் அவ்வளவு பொருத்தமா என்பதை அவர்களே நினைத்துப் பார்க்க வில்லை போலும். சாதாரணமாக எதிர்க்கட்சிக்காரர்களை பிச்சைக் காரர்களுக்கு ஒப்பிட்டு பேசியிருக்கிறார். அதாவது பிச்சைக்காரர்கள் மொண்டிக் குழந்தையைப் பார்த்தால் சந்தோஷப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார். எதிர்க் கட்சிக்காரர்களை பிச்சைக்கார மனப்பான்மை உடையவர்கள் என்றும் மிக அலட்சியமாக சுட்டிக் காட்டினார். இது அவ்வளவு பொருத்தமாக இல்லை. எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் அப்படி ஒன்றும பிச்சைக்கார மனப்பான்மை உடையவர்கள் அல்ல. எதிர்க்கட்சிக்காரர்கள் தங்களுடைய குறைகளை மறைத்து வைப்பது கிடையாது. எதையும் பகிரங்கமாக சொல்லி விடுவார்கள். ஆனால் அரசாங்கக் கட்சியில் இருப்பவர்கள்தான் அவ்வாறு செய்வதில்லை என்று நாங்களும் சொல்லலாம். ஆதலால் அவர்கள் எடுத்துக் காட்டிய மேற்கோள் அவர்களுக்கே பொருந்துமே தவிர எதிர்க் கட்சிக்காரர்களுக்குப் பொருந்தாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நிதி நிலைமை விவாதத்திலே வட ஆற்காடு பாலாற்றுத் தண்ணீரைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இதைப்பற்றி மைசூர் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியும் பலன் அடைந்ததாகத் தெரிய வில்லை. இந்த ஆற்றில் உள்ள தண்ணீர் இரண்டு ஜில்லாக்களுக்கும் பயனாக வில்லை என்று பல ஆண்டுகளாக குறை கூறி இருந்தும், மைசூர் ஒப்பந்தத்திற்குப் பிறகும் சரியானபடி நடவடிக்கை ஒன்றும் எடுக்கப்பட வில்லை. இந்த சூழ்நிலையில் நமது முதல் மந்திரி காமராஜ் ஆந்திரா அரசாங்கத்தின் முதல் மந்திரி ஸ்ரீ சஞ்சீவி ரெட்டியுடன் பேசி கிருஷ்ணா, கோதாவரி தண்ணீரை நமது ராஜ்யத்திற்குக் கொண்டுவரும் ஏற்பாட்டை குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நமது ராஜ்ய முதல் மந்திரிக்கும், ஆந்திர ராஜ்ய முதல் மந்திரிக்கும் வட ஆற்காடு ஜில்லா சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வட எல்லை பிரச்னையை தீர்ப்பதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு பிரதிநிதி 25-ம் தேதி வருவதாக கேள்விப்பட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது பொதுத் தேர்தலுக்கு முன்னால் தீர்க்கப்பட வேண்டிய விஷயம். எல்லைப் பிரச்னை இரு ராஜ்யங்களுக்கும் ஒரு சுமூகமான சூழ்நிலையில் தீர்ந்துவிடும் என்று நம்புகிறேன். வட ஆற்காட்டில் முன்பு ஜமீனாக இருந்த 25 கிராமங்களை சேர்ந்த புறம்போக்குகளையும் சமுதாய நிலமாக சேர்த்துவிட்டார்கள். அதனால் 5,000 ஏக்கருக்கு மேல் குங்குந்தி நிலங்கள் எல்லாம் ரிசர்வ் பாரஸ்டில் சேர்க்கப்பட்டது. இதனால் சமுதாயத்திற்கு வேண்டிய காடு வசதி இல்லாமல் அங்குள்ள மக்கள் அல்லல் படுகிறார்கள். இதைப்பற்றி கனம் ஸ்ரீ மாணிக்கவேலு நாயக்கரிடம் ஒரு விண்ணப்பம்கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 5,000 ஏக்கர் நிலத்தையும், சித்தூரில் சேர்த்திருக்கிறார்கள் என்று விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாளதுவரையில் ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சர்க்கார் இந்தச் சில்லரைப் பிரச்னையைத் தீர்த்து இங்குள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நிதி நிலைமை அறிக்கையில் 5 கோடி ரூபாய் துண்டு விழும் என்று கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். துண்டு விழும் பணத்தைச் சரிக்கட்டுவதற்காக புதுவரிகளைப் போடாமல், அதை ஈடு செய்வதற்கு ஏற்கெனவே நமக்கு வரும் வருமானத்தைக்கொண்டு சிக்கனமாக உபயோகித்தால் புதிய வரிகள் போடுவதற்கு அவசியம் இல்லாமல் போய்விடும். கடந்த 5 ஆண்டு

களில் எத்தனையோ வரிகள் போட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கும் வரிகள் எவ்வளவு என்று கணக்கிடமுடியாது. அப்படிக் கணக்கிட்டுப் பார்க்கையில் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் ½ டஜன் வரிகள் போடுகிறார்கள். இனி இம்மாதிரியே போட்டுக்கொண்டே போனால் மக்களால் வரியைக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். இப்போது வரி கொடுக்கும் சக்தி கடைசி கட்டத்தை அடைந்திருக்கிறது. ஆதலால் நாம் ஏற்கெனவே வரிகள் மூலம் கிடைக்கும் பணத்தை சிக்கனமாக செலவு செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதற்காக பொறுப்புள்ள அதிகாரிகள் இரண்டு பேரை நியமித்து எந்த முறையில் சிக்கனம் செய்யவேண்டுமென்று அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்கவேண்டும். அதோடுகூட ஜில்லாக்களில் பொறுப்புள்ள அதிகாரிகள் இல்லாததால் நிர்வாகத்தில் முட்டுக்கட்டை இருக்கிறது. ஜில்லா அதிகாரிகளுக்கு பெரிய பொறுப்பு இருப்பதனால், ஜில்லா முழுவதையும் பார்வையிட முடிவதில்லை. அதனால் இப்போது இருக்கக் கூடிய ஜில்லாக்களை சிறிய சிறிய ஜில்லாக்களாகப் பிரிக்கவேண்டும். இப்போது ஒரு ஜில்லாவில் ஒரு கலெக்டரும் இரண்டு பர்சனல் அசிஸ்டெண்டுமாகவும், ஒரு தாசில்தாரும், ஒரு ஹெட் க்வாட்டர்ஸ் டெபுடி தாசில்தாரும் இருக்கிறார்கள். இம்மாதிரியாக பர்சனல் அசிஸ்டெண்டை நியமிக்காமல், ஒவ்வொரு ஜில்லாவையும் இரண்டு ஜில்லாவாக மாற்றி அவைகளுக்கு தனித் தனி ஜில்லா அதிகாரியை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய ராஜ்யத்தில் விலைவாசிகள் பன்மடங்காக உயர்ந்துக்கொண்டிருக்கும் இந்த நாளிலே, கஜெட் பதிவில்லாத ஊழியர்களின் சம்பளம் போதுமான அளவிற்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. முக்கியமாக தொழில் செய்துவரும் உபாத்தியாயர்களும் அந்த நிலையிலே இருந்துவருகிறார்கள். தற்போது அவர்களுக்கு வைத்தியவசதியும் அவர்களின் குழந்தைகளுக்கு பள்ளிக்கூட சம்பள வசதியும் கொடுக்கிறார்கள். அவர்கள் அதிகமாக சம்பளம் வேண்டும் என்று கேட்கும்போதெல்லாம் நிதி நிலைமை சரியாக இல்லை என்று கூறிவிடுகிறார்கள். இதேமாதிரியாக கிராம உத்தியோகஸ்தர்கள் கோரிக்கைக்கும் சரியாக நிவாரணம் ஏற்படவில்லை.

கிராம உத்திதோகஸ்தர்கள் மிகவும் ஏழ்மை நிலைமையில் இருக்கிறார்கள். அரசாங்க கடை நிலை ஊழியர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இன்றைய ஆட்சி பீடத்துக்கு தூணாக இருப்பவர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள். ஆட்சியிலே ஊழியர்கள் திறம்பட வேலை செய்யவில்லை யென்றால் ஆட்சி திறம்பட நடக்கமுடியாது. ஆட்சிக்கு ஊன்று கோலாக இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் திருப்தி அடைந்தால்தான் அரசாங்கத்தின் வேலைகளை அவர்கள் கவனத்தோடு செய்வார்கள், எதிர்கால ஆட்சி திறமையாக இருக்கும் என்பதை நான் அரசாங்கத்துக்கு மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுத்த அளவு நிவாரணமாவது கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கவேண்டும். இதற்கு நமது நிதி நிலைமை சரியாக இல்லாவிட்டால், புதியதாக கிராம சேவகர்கள், சேவகிகளை நியமிப்பதற்குப் பதிலாக, அந்தப் பணத்தை கிராம உத்தியோகஸ்தர்களுக்கு செலவழிப்பது மிகவும் அவசரமும் அவசியமுமாகும் என்பதை அரசாங்கத்துக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

விற்பனை வரி ஒரு கட்டத்தில் விதிக்கபடவேண்டுமென்று பல வருஷங்களாக பொது மக்களும் வியாபாரிகளும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வரும் தேர்தலில் அது ஒரு முக்கிய பிரச்னையாக இருக்கும். ஏதோ ஒரு குறிப்பிட்ட பொருள்களுக்கு மாத்திரம் ஒரு முனை விற்பனை வரி போட்டு விட்டால் வியாபாரிகள் பொது மக்களின் தொல்லைகள் தீர்ந்துவிட்டதாகக் கருதமுடியாது. பெரிய அளவு வியாபாரம் நடக்கும் தானியங்களுக்கு அதே மாதிரி ஒரு முனை விற்பனை வரி போட்டு பரீக்ஷித்துப்பார்க்க வேண்டுமே தவிர, குறிப்பிட்ட சில பொருள்களுக்குமட்டும் பரீக்ஷார்த்தமாக ஒரு முனை வரி போடுவதில் பிரயோசனமில்லை. அதையும் சர்க்கார் கவனத்தில் கொள்ளவேண்டும்.

விவசாயிகளுக்கு கடன் வசதிகள் அளித்து அவர்களுக்கு தொல்லையில்லாமல் செய்வது சர்க்காரின் முதல் கடமை. அவர்கள் கடன் தொல்லை நெடு நாளைய பிரச்னை. அவர்கள் கடன் வாங்குவதற்கும், அதை திருப்பிக் கொடுப்பதற்கும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கூட்டுறவு நில அடமான பாங்குகளில் அவர்கள் எப்படி கடன் வாங்கவேண்டும், எப்படித் திருப்பிக் கொடுக்கவேண்டும், அவர்கள் நிலங்கள் எப்படி மதிப்பிடப்படவேண்டும் என்ற விதிகளைப் பார்த்தால், சிறு விவாசாயிகளுக்கு இந்த பாங்குகளின் மூலம் கடன் கிடைப்பது மிகவும் சிரமம் என்பது புலப்படும். நிலத்தை மதிப்பிடும் விதமும், இவர்களது, மனுக்கள் பரிசீலனை செய்யப்படும் விதமும் விவசாயிகளுக்கு அனுகூலமாகயில்லை. பாலார் பேசினில் ஒரு ஏகரா நஞ்சை நிலம் 5,000 ரூபாய்க்கு மேல் விலை போகிறது.

Sri G. GOVINDAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபையில் கோரமில்லாமல் இருக்கிறது. 16 அங்கத்தினர்கள்தான் இருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER : கோரமிருக்கிறது.

Sri E. L. RAGHAVA MUDALIAR : ரூ. 5,000 பொறுமான நிலத்தை நில அடமான பாங்கியில் 1,000 ரூபாய்க்கு மதிப்பிட்டு ரூ. 600 தான் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் அதே நிலத்தை தனிப்பட்ட மிராசுதார்களிடம் அடமானம் வைத்தால் 3,000 ரூபாய் வரையில் கிடைக்கிறது. வட்டி தான் அதிகம். ஆகையால் நில அடமான பாங்குகள் சாதாரண விவசாயிகளுக்கு அளிக்கக்கூடிய தொல்லைகளை நீக்கி அவர்களுக்கு சுலபமாக கடன் கிடைக்கும்படி வழி வகைகள் செய்ய வேண்டும்.

சில மாதங்களுக்கு முன் அரிசி விலை ஏறிக்கொண்டுபோனபோது நிவாரணம் அளிக்க நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் சென்னையில் மட்டும் தான் தொல்லைப்படக்கூடிய மக்களுக்கு ஓரளவு நிவாரணம் கிடைத்திருக்கிறதே தவிர, ஜில்லாக்களிலுள்ள மக்களுக்கு நிவாரணம் கிடைத்ததாகத் தெரியவில்லை. இன்றுகூட கனம் மந்திரி அவர்கள் வட ஆற்காடு ஜில்லாவுக்கும் நிவாரணம் அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். திருப்பத்தூர் தாலூகாவில் நியாயவிலைக்கு அரிசி வாங்கி விற்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று அநேக ஸ்தாபனங்கள் முயற்சித்தன. ஆனால் இன்று வரையில் ஒரு நாள்கூட நியாயவிலைக்கு அரிசி எந்த ஸ்தாபனத்துக்கும் கிடைக்கவில்லை. அரிசியின் விலை எப்படி ஏறிற்று என்பது குறித்து பலவிதமான புகார்கள் அனுப்பப்பட்டும் அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தவில்லை. இதையும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திருப்பத்தூர் ஸ்தல வைத்தியசாலையில் படுக்கையின் எண்ணிக்கை 42-லிருந்து 72-ஆக உயர்த்தப்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 72-ஆக படுக்கை வசதி விஸ்தரிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் படுக்கை 30 தான் இருக்கிறது. இதன் காரணமாக வியாதியஸ்தர்கள் வராண்டாவில் போடப்பட்டிருக்கிறார்கள். 42-லிருந்து 72-க்கு படுக்கை வசதியை அதிகரித்தால் மட்டும் போதாது. அதற்கு வேண்டிய படுக்கைகள் முதலியவைகள் அளிக்கப்பட்டு இடமும் விஸ்தரிக்கப்படவேண்டும். இதனால் வியாதியஸ்தர்களுக்கும் அங்கு உத்தியோகஸ்தர்களுக்கும் அதிக தொல்லை ஏற்படுகிறது. முதலில் வேண்டிய வசதிகளை செய்துகொடுத்துவிட்டு பிறகு படுக்கை எண்ணிக்கையை அதிகரித்து உத்தரவு பிறப்பித்தால் அது அனைவருக்கும் சௌகரியமாகயிருக்கும். வியாதியஸ்தர்களுக்கும் தொல்லை இருக்காது. அங்கு இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் தொல்லை இருக்காது.

ராஜ்ய சீரமைப்புக்குப்பின் இப்பொழுதுதான் முதலாவதாக கூடுகிறோம். நம்முடைய ராஜ்யத்தில் புதிதாக வந்து சேர்ந்த ஜில்லாவின் பிரதிநிதிகள் இங்கு அங்கம் வகிக்கமுடியாத நிலைமையில் இருக்கிறார்கள். நமது ராஜ்யத்தில் ஒரு ஜில்லா பிரதிநிதித்துவம் இல்லாமலே இருக்கிறது.

[Sri E. L. Raghava Mudaliar] [18th December 1956

ஆகவே அந்த ஜில்லாவுக்கும் அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, புதிதாக நம்முடன் சேர்ந்திருக்கும் ஜில்லாவாசிகள் அனைவருக்கும் சபையின் சார்பாக நான் நல்வரவு கூறுகிறேன். இது வரையில் எனக்குப் பேச அவகாசம் அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. S. SELVARAJAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால பட்ஜெட்டில் சந்தோஷப்படக் கூடிய சில அம்சங்களும் பாராட்டத்தகுந்த சில அம்சங்களும் இருக்கின்றன. குறிப்பாக மிகவும் கீழ் நிலையில் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்த உத்தியோகஸ்தர்களுக்கும் சிப்பந்திகளுக்கும் சர்க்கார் நிவாரணம் அளித்திருப்பது சந்தோஷத்துக்குரியது. ஹரிஜனங்கள் மதம் மாறியும்கூட அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு சமூக அந்தஸ்து கிடைக்கவில்லை. காலம் கடந்தாவது கல்விச் சலுகைகளை மதம் மாறிய ஹரிஜனங்களுக்கும் நீடித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இந்த தேசத்தில் மட்டு மல்லாமல் உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்துவ சமுதாயமே இது குறித்து சந்தோஷப்படும். இந்த பட்ஜெட்டில் விடப்பட்ட சில விஷயங்களை எடுத்துக்கூற ஆசைப்படுகின்றேன். துருவித் துருவிப் பார்த்தாலும் மீன் இலாகாவுக்கு இந்த பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப்படவில்லை. முதல் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மீன் இலாகாவுக்கு ஒதுக்கப்பட்ட பணம் பெருவாரியாக மிச்சப் படுத்தப்பட்டு விட்டது. நுணுக்க அறிவு உள்ளவர்கள் அதிகமாகக் கிடைக்காததால் அதிகப்பணம் செலவு செய்யமுடியவில்லை என்று அதற்கு சமாதானம் கூறப்பட்டது. இப்பொழுது மீன் இலாகாவுக்கு பணம் ஒதுக்கப் படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. கன்னடியன் திட்டப்படி 30 லட்ச ரூபாய் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் உதவுவதாக இருந்தது. துரதிருஷ்டமாக கன்னடியன் திட்டம் கைவிடப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் இதற்காகத் தொகையை ஒதுக்காமல் நீக்கியிருப்பது முதல் 5 வருடகாலம் கடந்தும்கூட திட்டத்தின் பலனை மீனவர்கள் அடையமுடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. மீன் இலாகாவுக்கு எவ்வளவு அதிகமாக செலவு செய்தாலும் தகும் என்பதை அரசாங்கமே ஒத்துக்கொள்ளும். மேலும் சென்னை ராஜ்யத்தைப் போன்ற நீண்ட கடற்கரைய உடைய பகுதியில் லட்சக்கணக்கான மக்கள் வசித்துவருகிறார்கள். இவர்கள் பரதவர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய நிலை ஐந்தாண்டுகளில் அதிகமாக உயர்த்தப்படவில்லை. இரண்டாவது ஐந்து வருஷ திட்டகாலத்திலாவது அவர்களை கவனிக்கவேண்டும்.

ஆனால் சமீபத்தில் நாட்டின் பிரிவினை காரணமாக மேல் கடற்கரை பகுதிகள் எல்லாம் நீக்கப்பட்ட நிலைமையில் கீழக்கு கடற்கரை பிரதேசம் மாத்திரம்தான் இந்த அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கிறது. ஆகவே அதிக கவனம் இங்கே நாம் அவசரம் அவசரமாக செலுத்த வேண்டிய பொறுப்பாயிருக்கிறது. மேல்பகுதியில் இருக்கக்கூடியவர்களுக்கு மீன் இலாகா மூலமாக ஹைஸ்கூல்கள் கூட ஏற்று நடத்திக்கொண்டிருந்தார்கள், பரீட்சார்த்தமாக. ஆனால் கீழ்கரையில் ஒரு பாடசாலை கூட ஏற்று நடத்தப்படவில்லை, துர்பாக்கியவசத்தால். இனியாவது அதைப்பற்றி அக்கறையோடு கவனிக்கவேண்டும். எனக்குத் தெரிந்த சில விஷயங்களை நான் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். திருச்செந்தூர் தாலுகாவில் வீரபாண்டியபட்டினம் கடலோரத்தில் நூற்றுக்கு நூறு பேரும் பரதவர்கள் வசிக்கக்கூடிய இடமாகும். வசதியான காலத்தில் அவர்கள் இலங்கையில் வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள், அப்பொழுது தங்கள் பணத்தைக்கொண்டு ஆரம்பித்த ஒரு **Private High School**-ஐ **10, 15** வருடங்கள் கழிந்த பிற்பாடு இன்று அதை கைவிட்டு விடக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள், பணமில்லாத காரணத்தினால். இந்த நிலையில் அதைப் பரிசிலனை செய்து சர்க்கார் அப்பாடசாலையை மீன் இலாகா மூலமாக ஏற்று நடத்தி செம்படவர்களுக்குரிய கல்வியைப் போதிக்க வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தினிடம் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசாங்கமே அதை ஏற்று நடத்தவேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

18th December 1956] [Sri M. S. Selvarajan]

அடுத்தபடியாக, கோயம்புத்தூர் இதுபோன்ற பல்வேறு ஜில்லாக்களிலே சரித்திரம் காணாத அளவில் நல்ல மழை பெய்த பகுதிகள் நம் நாட்டில் இருந்தாலும் கூட கன்னியாகுமரி ஜில்லாவிலும், திருநெல்வேலி ஜில்லாவிலும் சரித்திரம் காணாத அளவிற்கு மிகவும் வறட்சியான நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக நூற்றுக் கணக்கான பனைகள் பட்டுப் போய் கிடக்கின்றன. குளங்களெல்லாம் அப்படியே வறண்டு கிடக்கின்றன. கிணறுகளும் அப்டியே வறண்டு கிடக்கின்றன. மழைக்காலத்தில்கூட இதே கதிதான். ஆகவே, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஜில்லாக்களிலே இது சம்பந்தமாக போதிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் சொல்ல விரும்புவது என்னவெனில், பெரும்பாலும் இந்த ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களிலுள்ள இம்மக்கள் பெரும்பாலோர் இலங்கை வருமானத்தை நம்பியே வாழ்ந்து வந்தவர்களாவார்கள். இலங்கையிலிருந்து, இப்பொழுது அவர்களும் விரட்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அங்கிருந்து விரட்டப்படுவதின் காரணமாக இங்கு நமது ராஜ்யத்திற்கே திரும்ப வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இப்பொழுது இங்கிருக்கக்கூடிய நிலையில், வறட்சியான நிலையில் இங்குள்ளவர்களே மிகவும் கஷ்டப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கும்போது, துர்பாக்கியவசத்தால் அவர்களும் இலங்கையிலிருந்து விரட்டப்பட்டு இங்கு வரும்போது உள்ள கஷ்டத்தைப் பற்றிசொல்லவும் வேண்டுமா? ஆகவே அது இங்குள்ள கஷ்டத்தை மேலும் அதிகப்படுத்தத்தான் செய்கிறது. அங்குள்ள நிலைமை தெரிந்தும், திருச்செந்தூர், நாங்குனேரி தாலுக்காகளில் உள்ள இவர்களுக்கு நிவாரணமளிக்க நிவாரண வேலைகளை ஏற்றுக்கொண்டு அதற்காக ஒதுக்கப் பட்டிருக்கும் பணத்தை அவசரமாகச் செலவழிக்கப்படாத அவலக் காட்சியைத்தான் நாம் இப்பொழுது பார்க்கிறோம், என்பதே என்னுடைய அபிப்பிராயம்.

அடுத்தது அங்குள்ள **Ex-tappers**-ன் கதி, அவர்கள் படும் அல்லல் சொல்லி முடியாது. அவர்களுக்கும் தக்கபடி நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். வேலையிழந்ததன் காரணம், அங்கு லட்சக்கணக்கான பேர்கள் குடியிருக்க வீட்டுவசதியில்லாத நிலையில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கும் தாற்காலிகமாக கடன் உதவியாவது அளித்து, வேலையிழந்தவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். மேலும், இவர்களின் குழந்தைகளுக்கும், வில்லேஜ் அபிஷியல்ஸ், ஆசிரியர்கள் இவர்களுக்கு இருப்பது போன்ற கல்விச்சலுகைகள் எல்லாம் கொடுத்து உதவி செய்வதின் மூலம் அந்த ஜில்லாவிலுள்ள கஷ்டத்தை ஓரளவு போக்கலாம்.

அடுத்ததாக, தாரங்கதரா கெமிக்கல்ஸுக்கு லட்சக் கணக்கான ரூபாய் கடன் கொடுப்பதோடு நிறுத்தாமல், அதற்கு வேண்டிய நிலத்தை உடனடியாக **acquire** செய்யவேண்டும். அந்தத் தொழிற்சாலை அங்கு ஆரம்பிக்கப்படுவதினால் அங்குள்ள மக்களுக்கு மிக்க உபகாரமாயிருக்கும். சாத்தான் குளத்தின் பக்கத்தில் ஜியாலஜிக்கல் டிப்பார்ட்மென்டிலிருந்துசர்வே செய்யப்பட்டு அங்கு சிமெண்டு உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்கள் இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அதை பயன்படுத்திக் கொண்டு அங்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தினால் மக்களுக்கு தொழில் கொடுப்பதோடு, நாட்டின் அபிவிருத்திக்கும் நல்லது. ஆகவே அந்த தொழிற்சாலைக்காக **liberal**-ஆக கடனுதவியளிக்க வேண்டும். அதேபோல், வட இந்தியாவில் லட்சக்கணக்கான ரூபாய் **Spindles** அகதிகளுக்காக ஒதுக்கி வைத்து அதை ஏழை மக்களுக்கு கூட்டுறவு நூற்பு நெசவு வேலைக்காக கொடுக்கிறார்கள். அதே போல் இங்கும், இலங்கையிலிருந்து நாடு திரும்பிய ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு நூற்பு நெசவு வேலைக்கான கதிர்களைக் கொடுத்துதவ வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அதனால் ஆயிரக் கணக்கான மக்களுக்கு தொழில் செய்வதற்கும், அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கும் வாய்ப்பளிக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடி, திருநெல்வேலி ஜில்லாவில் ஒன்பது வருட காலமாக நீடித்த வறட்சி நிலவுகிறது. ஆகவே, சாதாரணமாக ஜில்லா கலெக்டரையோ வேறு அதிகாரிகளையோ வைத்து பரிசீலனை செய்யவிட்டு காலதாமதம், ஒன்றும் செய்யாத நிலைமையும் ஏற்படுத்த வேண்டும். நேரடியாக, ரெவன்யூ போர்ட் மெம்பர் ஒருவரின் தலைமையில் ஒரு கமிஷன் நிறுவி அவர்கள் அப்பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை நன்கு ஆராய்ந்து அங்குள்ள நிலைமைக்கேற்ப வேண்டிய உதவியை, வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிடில் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள லக்ஷக்கணக்கான மக்கள் வறுமைபட்டு, குடிதண்ணீர்கூட இல்லாமலும் ஆகி அப்பிரதேசத்தில் லக்ஷக்கணக்கில் நிவாரணம் தேடுவதற்கு பதில் கோடிக்கணக்காக செலவிட வேண்டிய நிலையில் ஒரு ராயலசீமாவாக ஆகிவிடக் கூடிய துர்பாக்கியகரமான நிலை ஏற்படாமல் சர்க்கார் கவனித்துக் கொள்ளவேண்டும்.

அதே போன்று கன்னியாகுமரி ஜில்லா விஷயத்திலும் அரசாங்கம் போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மணிமுத்தார் திட்டம் வருகிற மார்ச் மாதத்தோடு முடிவடையும். அப்படி வரும்போது, அங்கு இப்பொழுது வேலையிலிருக்கும், தொழிலாளிகள் வேலை இழக்கும்படி நேரிடும். அப்படி வேலையிழந்தால், அவர்களுக்கு வேறு வேலை தேடித்தர வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அங்கு இப்பொழுது கட்டியிருக்கக் கூடிய தொழிலாளர்களுக்குள்ள வீடுகள், அங்குள்ள சிப்பந்திகளுக்காக கட்டப்பட்டிருக்கும் வீடுகளைப் பயன்படுத்திக்கொண்டு மேட்டூர், லோயர் பவானி போல அங்கு ஏதாவது ஒரு தொழிற்சாலை நிறுவலாம். அதற்காக மத்திய சர்க்காரிடமிருந்து **grant** வாங்கி சிறு சிறு தொழில்களாவது ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, நான் கூற விரும்புவது பாளையங்கோட்டை, வண்ணார் பேட்டையில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளைப் பற்றித்தான். இன்றைய தினம் பாளையங்கோட்டை ஆஸ்பத்திரியில் மூன்றில் ஒரு பங்குதான் அட்மிட் செய்யக் கூடிய **Patients**-க்கு படுக்கை வசதி இருக்கிறது. அங்குள்ள படுக்கை வசதியை விரிவாக்க வேண்டுமென்று வெகுநாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். வட ஆற்காட்டிலுள்ள ஆஸ்பத்திரியை விருத்தி செய்ய வேண்டியதும் அரசாங்கத்தின் கடமைதான். அதேபோல் மற்ற பிரதேசங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளையும் விருத்தி செய்ய வேண்டுமென்பதே எனது கோரிக்கை. பாளையங்கோட்டையில் 20, 30 லட்சம் ரூபாய் செலவில் ஒரு **Headquarters Hospital** கட்டத் திட்டமிடப்பட்டது. அதை இன்னும் நடைமுறையில் கொண்டுவரவில்லை. ஆகவே, அதைக் கட்டி முடித்தால் அங்குள்ள மக்களுக்கு அது ஒரு பெரும் ஒத்தாசையாக இருப்பதோடு மக்களுக்கும் சர்க்கார் பேரில் ஒரு மதிப்பு இருக்கும். ஆகவே அதுகுறித்து சர்க்கார் உடனே சுறுசுறுப்பாக, துரிதமாக தக்க நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பக்கா ஆஸ்பத்திரிக் கட்டிடத்தை எதிர்பார்த்தே விஸ்தரிப்புக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் கட்டிட வேலைகள் கூட நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்தபடியாக, எனக்கு வேறொரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது. கிராம அதிகாரிகள் 10 பேர் 12 பேர் சேர்ந்து ஒரே இடத்தில் இருப்பதற்குப் பதிலாக அந்த **Village Officials** அவரவர்களின் **respective villages**-களில் குடியிருக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படியானால் ஏழை விவசாயிகள் சிறுசிறு காரியங்களுக்குக் கூட அதிகாரிகளைச் சந்திக்க பத்து, இருபது மைல்கள் போகவேண்டியதில்லை. இப்பொழுதானால், அந்த ஆபீஸர்களைப் பார்க்க 10, 20 மைல்கள் நடந்து செலவு செய்தும் அவர்களைத் தேடிப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, ஓரேயிடத்தில் எல்லோரும் இருக்காமல் அவரவர் சம்பந்தப்பட்ட இடத்தில் இருந்தால் மக்களுக்கு சௌகரியமாய் இருக்கும். ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க நான் சர்க்காரை வலியுறுத்த விரும்புகிறேன்.

1-30 p.m. **DEPUTY SPEAKER**: The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

196. *Finance Accounts of the Government of Madras for the period from the 1st October 1953 to the 31st March 1954.*

197. *Notification issued with G.O. Ms. No. 3026, Home, dated 30th October 1956, exempting the motor vehicles plying between Tirunelveli district and the areas of Travancore-Cochin State transferred to Madras State from 1st November 1956 from double taxation. [Laid on the table under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931.]*

198. *Notification issued with G.O. Ms. No. 2851, Home, dated 11th October 1956, exempting vehicle MSY 5328 belonging to a Technical Co-operation Mission personnel from taxation. [Laid on the table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931.]*

199. *Notification issued with G.O. Ms. No. 3020, Home, dated 30th October 1956, exempting from taxation vehicle MSY 6154 belonging to a Technical Co-operation Mission personnel. [Laid on the table under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931.]*

200. *Notification issued with G.O. Ms. No. 3787, Revenue, dated 9th October 1956, granting exemption from sales tax for sales by Kannappa Nayanar Kazhagam, Royapuram. [Laid on the table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939, inserted by section 16 (c) of the Madras General Sales Tax (Third Amendment) Act, 1956.]*

201. *Notification issued with G.O. Ms. No. 1265, Local Administration, dated 31st August 1956, amending sub-rule (7) of the Rules made under the Madras Places of Public Resort Act, 1888, regarding sanction of licence for travelling cinematograph show.*

202. *Notification issued with G.O. Ms. No. 4053, Revenue, dated 5th November 1956, exempting from sales tax, charkas and other spinning implements supplied to the State Government. [Laid on the table under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939, inserted by section 16 (c) of the Madras General Sales Tax (Third Amendment) Act, 1956.]*

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, 19th December 1956.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at nine of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTHAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Selection Committee for the Basic Training School in Pudukkottai Division

* 368 *Q.*—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of non-official members in the Committee constituted by the Government in 1956 to select trainees for the Basic Training School in Pudukkottai Division of Tiruchirappalli district for the year 1956; and

(*b*) whether non-officials from parties other than Congress and Independents have been included in the selection committee?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Only one non-official member apart from the President, District Board, Tiruchirappalli, has been nominated as per orders on the subject.

(*b*) No, Sir.

SRI V. BALAKRISHNAN : Does this one non-official member happen to be the President of the Pudukkottai District Congress Committee?

THE HON. SRI C. SUBRAMANIAM : As I have already stated only one non-official member has been appointed and he is a Member of the Tamilnad Congress Committee.

Registration of handlooms in the State

* 369 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have fixed any time-limit for the registration of handlooms in the State;

(*b*) whether any instructions have been given to the registration officers regarding the method to be adopted in registering the handlooms; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The time-limit fixed for the compulsory registration of handlooms was 30th November 1956, as instructed by the Government of India. The Textile Commissioner has been addressed for extension of time. It is expected that time till the end of February 1957 will be given.

(b) & (c) The answers* are placed on the table of the House.

SRI S. DAIVASIGAMONEY : May I know whether any penalty is prescribed for the non-registration of handlooms? May I also know the steps the Government are taking for widely publicising that the handloom weavers should register their handlooms?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that nearly 75 per cent of the handlooms have already been registered and all necessary steps have been taken, certain particulars of which are given in the paper laid on the table of the House.

SRI N. K. PALANISAMY : The officers are registering in some places only the house owners and in other places those who possess the looms also. I understand that most of the workers who work for wages are left alone. May I know whether Government have issued any specific orders in this matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would refer the hon. Member to the paper placed on the table of the House.

SRI S. DAIVASIGAMONEY : What is the purpose or the idea behind the registration of handlooms?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have more than once answered this question on the floor of this House, Sir. The main purpose is to collect the necessary data, which is essential for any scheme for the permanent rehabilitation of the handloom weavers.

Vaigai Reservoir Scheme

* 370 Q.—SRI A. IYANAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Kunnur village in Periyakulam taluk will be affected by the Vaigai Reservoir Scheme; and

(b) if so, the nature of the compensation proposed to be given to the parties affected?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) The lands, buildings, trees, etc., affected are being acquired under the usual provisions of the Land Acquisition Act,

* Printed as Appendix I on page 234 infra.

paying compensation in cash in accordance with the valuation fixed by authorized officials of the Revenue Department. Facilities will also be afforded to the displaced villagers for rehabilitation elsewhere. Details for such rehabilitation are under consideration.

Provision of drainage to Kandaparichan channel in Tiruthuraipundi taluk

* 371 Q.—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to provide drainage to Kandaparichan channel in Tiruthuraipudi taluk, Tanjore district;

(b) if so, when it will be taken up; and

(c) its estimated cost?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : (a) Yes.

(b) An estimate for the scheme has been received from the Chief Engineer (Irrigation). The question of its sanction and execution can be decided upon only on receipt and examination of the Collector's report on the administrative, revenue, Grow-More Food and financial aspects of the scheme, which is awaited by the Government.

(c) The scheme is estimated, at present, to cost Rs. 5·63 lakhs for works.

Prohibition of the import of molasses into the State

* 372 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(a) whether any step has been taken to prohibit the import of molasses into this State; and

(b) if so, the details thereof?

THE HON. SRI B. PARAMESWARAN : (a) & (b) The answer is in the negative.

SRI N. K. PALANISAMY : May I know whether the Government are aware that molasses are utilized only for the purpose of illicit distillation? May I know why the Government hesitate to ban the import of molasses into this State? Is it for the purpose of encouraging offences against Prohibition?

THE HON. SRI B. PARAMESWARAN : There is at present no restriction on the import of molasses into this State. It is however proposed to amend the Madras Prohibition Act of 1937 by inserting a clause there. This new section which is proposed to be introduced is intended to provide for the control and regulation of molasses which form the largest and most important base used in illicit distillation as was referred to by the hon. Member. The

[19th December 1956

section will be drafted on the lines of section 61 of the Bombay Prohibition Act, 1948. This and other amendments which the Government propose to bring in are under the active consideration of the Government.

Sri M. KALYANASUNDARAM : நமது ராஜ்யத்திற்குள் வந்து கொண்டிருக்கும் வெல்லப்பாகைத் (**molasses**) தடுப்பது இருக்கட்டும். புகளூர் சர்க்கரை ஆலை, நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை முதலிய இடங்களில் கழிவை எடுத்து டின்களில் அடைத்து விற்கிறார்கள். இதனால் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது. மேலும் நல்லெண்ணெ செக்கில் வெல்லத்திற்குப் பதிலாக இதைப்போட்டு எண்ணெயைக் கெடுக்கிறார்கள். ஆகவே நம் ராஜ்யத்திற்குள் வருவதைத் தடுப்பதோடு இதன் விற்பனையைத் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri B. PARAMESWARAN : விற்பனையைத் தடை செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை. மத்திய சர்க்கார் இது சம்பந்தமாகச் சட்டம் கொண்டு வருகிறார்கள். **Molasses**-ஐ எப்படித் தடுப்பது என்பது ஆலோசனையில் இருக்கிறது. அந்தச் சட்டம் வந்த பிறகு நாமும் நம் சட்டத்தை எப்படித் திருத்தலாம் என யோசிக்கலாம். அந்தச் சட்டமே **molasses** விற்பனையைத் தடுக்கக்கூடிய அளவில் இருந்தால் நாம் தனியாகச் சட்டம் கொண்டுவரும்படி இருக்காது.

Sri S. DAIVASIGAMONEY : Is it not a fact that 'molasses' is nothing but dirty quality jaggery and this is produced in all places where sugar or jaggery is manufactured?

The Hon. Sri B. PARAMESWARAN : Yes, Sir, I agree.

Sri V. BALAKRISHNAN : இதில் மாட்டு எலும்பையும் கலக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri B. PARAMESWARAN : எந்த எலும்பை கலக்க அவசியம் இருக்குமோ அந்த எலும்பை உபயோகப்படுத்துவார்கள்.

Sri M. KALYANASUNDARAM : கழிவுகளை உபயோகிப்பதில் சுகாதார அதிகாரிகள் பரிசீலனை செய்து வருகிறார்களா ? அப்படி அவர்கள் பரிசீலனை செய்திருந்தால் அதன் முடிவு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri B. PARAMESWARAN : இதற்கு தனிக்கேள்வி போடும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri N. K. PALANISAMY : Sir, when I put a similar question in 1954, the then Minister-in-charge said that the Board of Revenue was investigating the whole matter of importing molasses from the Hyderabad State. May I know whether the Hon. Minister will give any details about the investigation conducted in 1954?

The Hon. Sri B. PARAMESWARAN : I do not know whether the Constitution would permit our forbidding the import of any article or commodity like molasses. But, however, if the hon. Member will put a separate question, I will look into that and give him an answer.

19th December 1956]

Sri P. M. MUNUSWAMY GOUNDER : **Molasses** என்னும் வெல்ல பாகைக்கொண்டு சாராயம் காய்ச்சுவதற்காக மைசூரிலிருந்து பல லாரிகள் மூலமாக ஆயில் பாரல்களில் **molasses**-ஐ கிருஷ்ணகிரி வழியாக மற்றயிடங்களுக்குக் கொண்டுபோகிறார்கள். இதைத் தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri B. PARAMESWARAN : அரசாங்கம் கொண்டு வரப்போகும் மசோதாவில் '**nobody will be authorized to import or sell or export quantities of molasses without the permission of the Government**' என்று போட்டிருக்கிறது. இந்த மசோதாவைக் கொண்டுவரும்போது இப்பொழுது சொன்னதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

Appointment of a Public Prosecutor for the Madurai district.

* 373 Q.—Sri V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the normal period of appointment of the Public Prosecutor of Madurai district expired;

(b) whether a panel of names for fresh appointment was called for;

(c) if so, when, and the names of the persons in the panel in their serial order;

(d) the reasons for the delay in making the appointment; and

(e) whether the delay in making the appointment has involved any extra expenditure to Government?

The Hon. Sri C. SUBRAMANIAM : (a) The term of the Public Prosecutor, Madurai, would normally expire only on 16th March 1958. But the post fell vacant on 27th May 1956 when the Public Prosecutor, Madurai, who was appointed as Government Pleader, Ramanathapuram took charge of the new post.

(b) Yes, Sir.

(c) Proposals from the Collector for filling up the vacancy were received on 10th July 1956. The Government consider that it will not be in public interest to disclose the panel of names furnished by the Collector which is treated as confidential.

(d) The proposals of the Collector were under consideration of Government till 26th October 1956, when orders were issued appointing Sri V. Ponnuswamy to be Public Prosecutor, Madurai.

(e) No, Sir.

Cattle mortality in the Burgur Hills of Bhavani taluk

* 374 Q.—Sri B. K. NALLASWAMI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of cattle that died during the last two months in the Burgur Hills of Bhavani taluk;

(b) the reasons therefor; and

(c) the measures taken by the Government to prevent the mortality?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The number of cattle that died during the month of July 1956 is 27, 7 in the month of August, and 48 in the month of September 1956.

(b) The deaths were mainly due to the acute scarcity of fodder in the grazing area in the forest on account of the failure of rains.

(c) The District Veterinary Officer, Erode, has taken all measures to prevent any possible outbreak of contagious disease in the area.

SRI B. K. NALLASWAMI : I want to know whether the District Collector or the higher authorities had taken any steps to supply fodder at cheaper rates in those parts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not have any information as to the exact steps that were taken. But I may tell the hon. Member that conditions have now improved in the forest areas and there is abundant green-fodder available in the forests on account of recent rains.

SRI B. K. NALLASWAMI : May I request that at least some concession for grazing and other things may be given to those unfortunate hill people who have lost their cattle?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not know what concession the hon. Member would require for those who have lost cattle. Those who have lost cattle may not need grazing facilities at all. But anyhow there is now plenty of grass available and if the hon. Member would put any specific question, I shall look into it.

Opening of an X-ray section in the Headquarters Hospital, Tanjore

* 375 Q.—SRI M. RATHNASWAMY (on behalf of Sri M. Marimuthu) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is any proposal to open an X-ray section in the District Headquarters hospital, Tanjore, or in the hospital at Pattukkottai; and

(b) if so, when?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) There is already an X-ray department in the Government Headquarters Hospital, Tanjore. The Government Hospital, Pattukkottai, is not provided with X-ray facilities. There is no proposal at present to open an X-ray section there.

(b) Does not arise.

SRI V. R. NAGARAJAN : May I know whether all the District Headquarters hospitals all over the State have been provided with X-ray section and if so, whether the extension of such X-ray section facilities will be considered for the certain Taluk Headquarters hospitals?

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like the hon. Member to put a separate question.

SRI A. M. RATHNASWAMY : It is very encouraging to find from the newspapers that some public-spirited persons in the Tanjore district come forward to pay adequate amount for the opening of either a Medical College or a hospital or even a Technological Institute. I do not know why the Government should not make use of the amount that may be available from such public-spirited persons in Tanjore for the installation of X-ray equipment in the hospitals at Pattukkottai and other places in the Tanjore district?

THE HON. SRI C. SUBRAMANIAM : I also do not know whether such public-spirited persons are coming forward with such donations.

Control of bus transport in the Tamil areas transferred to the Madras State

* 376 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(a) whether the Government have taken over the control of bus transport in the Tamil areas recently transferred to the Madras State;

(b) if so, whether there is any proposal to entrust the bus service to private companies; and

(c) if so, the details thereof?

THE HON. SRI B. PARAMESWARAN : (a) Yes, Sir.

(b) No, Sir.

(c) Does not arise.

SRI K. VINAYAKAM : In the Kanyakumari district is the Government Transport having an entire monopoly of the transport system or whether any private owners are also allowed to operate in that area?

THE HON. SRI B. PARAMESWARAN : No, Sir. The Government have undertaken the responsibility of running the transport system there.

SRI S. DAIVASIGAMONEY : Time and again the Hon. Minister for Transport has been saying that the Government are finding it very difficult to procure buses and that being so, how are they going to run the bus service in the areas taken over by the Government efficiently and well?

THE HON. SRI B. PARAMESWARAN : With the buses that were running in the district long before it was merged in this State and also with a few buses which are being sent from here. I think there is sufficient number of buses to manage the entire bus system.

SRI K. VINAYAKAM : Is it not a fact that the Travancore-Cochin Government were running a bus service of their own in those areas which were transferred to us along with other private owners? Also is it not a fact that our Government have now taken over that service which was being run by the Travancore-Cochin Government and have also allowed other private owners to operate in those areas?

THE HON. SRI B. PARAMESWARAN : The buses that were run by the Travancore-Cochin State before the merger of those areas are being now allotted to the State of Madras. It is one of the inter-State arrangements and we have also sent some of the buses there. There are certain inter-State routes which are being run both by private operators there and our operators from this State.

SRI N. K. PALANISAMY : May I know whether the Government have set up a separate organization to run these buses in the Kanyakumari district or will it be linked with the Madras Transport System?

THE HON. SRI B. PARAMESWARAN : This Government have also agreed to the allotment to this State of the following staff from the Travancore-Cochin Government to operate the transport service :—

Gazetted staff—District Transport Officer, 1.

Ministerial staff—About 35.

Operating staff—300.

Mechanical staff—100.

SRI V. BALAKRISHNAN: திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்து தமிழ் நாட்டுடன் சேர்க்கப்பட்ட பகுதிகளில், தனிப்பட்டவர்கள் பஸ் போக்குவரத்தை நடத்திக்கொண்டுவருகிறார்கள். அவைகளை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அரசாங்கம் அதை தேசியமயமாக்குகிறார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அங்கு இருக்கும் பஸ் போக்குவரத்தை இப்பொழுதுதான் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

SRI N. K. PALANISAMY : I understand that the transport personnel working in the Tamil areas transferred to the Madras State were enjoying greater amenities and privileges and that they had been cut down after those areas had been transferred to the Madras State. I wish to know whether that is a fact?

THE HON. SRI B. PARAMESWARAN : I do not think the Government have, in any way, cut down the privileges which are being enjoyed by them, or cut down the salaries and allowances that they were receiving before the merger.

SRI R. NATARAJA MUDALIAR : இப்பொழுது நம் ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டிருக்கும் தமிழ் தாலூகாக்களையும் திருநெல்வேலி ஜில்லா ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீசரே பார்த்துக்கொண்டுவருகிறார். தனியாக அங்கே ஒரு ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீசர் போடுவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ? அல்லது அவர்களே தொடர்ச்சியாக இந்தப் புது தாலூக்காக்களையும் பார்த்துவருவார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அங்கே தனியாக ஒரு ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீசர் போடுவதற்கு அரசாங்கத்தார் இன்னும் இரண்டு, மூன்று வாரங்களில் ஏற்பாடு செய்வார்கள்.

SRI K. VINAYAKAM : Before the merger took place, bona fide students who were travelling in the Government Transport buses in Travancore-Cochin State were allowed concessions. Such concessions have been denied to students in the Tamil areas after they are transferred to this State by our Government. A representation on this subject was made to the Hon. Minister. I wish to know whether the Government have restored the concessions enjoyed by bona fide students in the Tamil areas merged with this State?

THE HON. SRI B. PARAMESWARAN : That matter is under the active consideration of the Government.

SRI V. BALAKRISHNAN : மாணவர்களுக்கு கொடுத்துக்கொண்டு வந்திருந்த சலுகைகள் என்னென்ன ?

THE HON. SRI B. PARAMESWARAN : தனி கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

Improvement of Central Jail, Pudukkottai

* 377 *Q.*—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken for the improvement of the Central Jail, Pudukkottai, after the merger of the State with Madras State?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement showing the important events and notable administrative measures undertaken in the District Jail, Pudukkottai, is placed on the table* of the House.

SRI V. BALAKRISHNAN : இதர ஜெயில் ஸ்தாபனங்களைக் காட்டிலும் புதுக்கோட்டை ஜெயில் கட்டிடம் அதிக சௌகரியமுள்ளதாகவும், வசதியுள்ளதாகவும் இருப்பதால், அந்த ஜெயிலில் போய் வாழவேண்டுமென்று பொது மக்கள் விரும்புகிறார்கள் என்பதை மந்திரி அவர்கள் அறிவார்களா? (சிரிப்பு).

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர்கள் மற்றவர்கள் பின்பற்றுகின்ற வழிகளை நடைமுறையில் காண்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். (பலத்த சிரிப்பு.)

* Printed as Appendix II on page 235 infra.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT BY THE DEPUTY SPEAKER.

MESSAGE FROM THE GOVERNOR.

DEPUTY SPEAKER : I have to announce to the House the following message, dated 12th December 1956, received from the Governor of Madras :—

" In pursuance of Article 207, clause (1) read with Article 199, clause (1), sub-clause (*a*) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Fourth Amendment) Bill, 1956."

III.—MOTION UNDER RULE 40 (1) *RE* THE FAILURE TO REPAIR THE IRRIGATION TANKS AND SUPPLY CHANNELS IN PARAMAKUDI AND MUDUKALATHUR TALUKS.

SRI G. GOVINDAN : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Public Works to a matter of urgent public importance, viz., the failure to repair the irrigation tanks and supply channels in Paramakudi and Mudukalathur taluks in proper time. கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எங்கள் பகுதியில் இருக்கக் கூடிய சாலக் கிராமம் சப்ளை சானல், மேல் நாட்டார் சப்ளை சானல், கீழ்நாட்டார் சப்ளை சானல், வெங்கிடக்குறிச்சி சப்ளை சானல், கூத்தன் சப்ளை சானல், செல்லூர் சப்ளை சானல், முதுகுளத்தூர் தாலுகா, நாராயண காவேரி சப்ளை சானல் முதலான சானல்கள் பலவற்றிலும் இதுவரை பழுது பார்க்கப்படவில்லை. இதற்கு உப சப்ளை சானல்களும் அதிகமாக இருக்கின்றன. இது தவிர இன்னும் பல சப்ளை சானல் உள்ளன. கவனிக்கவில்லை. இது போன்ற பல சானல்களின் கண்மாய்களும் தரை யோடு தரையாக இருந்து கொண்டிருக்கின்றன. அந்த ஏரியாவில் சில கண்மாய்கள் மாத்திரம் அதிலும் சர்க்காருக்கு பாத்தியமான சில கண்மாய்கள் மாத்திரம் பழுது பார்க்கப்பட்டிருக்கிறதேஒழிய சப்ளை சானல்களை வெட்டி மராமத்து செய்யப்படவில்லை. இது தவிர இனாம், தர்மசானம், சத்திரம், தேவஸ்தானம் இவைகளுக்கு பாத்தியமான கண்மாய்களும் சீர்திருத்தம் செய்யப்படவில்லை. இதனால் பலவிதமான தொல்லைகளும் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இம்மாதிரியான கண்மாய்களை உடனடியாக பழுது பார்க்கப்படாமல் இருப்பதினால் விவசாய உற்பத்தி குறைந்து வருகிறது. விவசாய உற்பத்தி குறைவதினால் உணவு உற் பத்தி பாதிக்கப்படுகிறது. ஆகவே உணவு உற்பத்தி பாதிக்கப்படாமல் இருப்பதற்கு வேண்டி உடனடியாக மந்திரி அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது இதற்கு மந்திரி அவர்களின் பதில் என்ன என்பதை தமிழில் சொல் லும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : Sir, as a result of the cyclone of December 1955, about 614 tanks in Mudukalathur taluk and 531 tanks in Paramakudi taluk of Ramanathapuram district were affected. Breach closing was required in respect of about 496 tanks in Mudukalathur and 506 tanks in Paramakudi taluks, and these were immediately attended to. All the works in Mudukalathur and Paramakudi taluks were completed by middle of May of 1956 except 3 in Paramakudi taluk which were also completed by the end of August 1956.

General repair works were also taken up simultaneously after the breaches were closed. Almost all the tanks were in a condition to receive and store water up to F.T.L. as soon as the breaches were closed. The tanks have received good supply due to local rains and river supplies and the ayacut under them have not suffered in any way due to insufficient supply. The tanks are holding water to their full capacity. Repairs to supply channels wherever necessary have also been carried out.

An expenditure of about Rs. 29 lakhs for Mudukalathur taluk and Rs. 17 lakhs for Paramakudi taluk has so far been incurred towards the above works.

It will be observed from the above that agricultural operations have not suffered due to non-completion of repairs to tanks as alleged. Timely repairs have helped agricultural operations with every prospect of a very rich harvest.

If the hon. Member wants to have a gist of what I said just now, I can give it to him.

IV.—FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR THE YEAR 1956–57.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I present the Second Supplementary Statement of Demands for grants for further expenditure for the current financial year, 1956–57 and the detailed estimates thereof. Copies of the Statement of Demands and Estimates have been laid on the table of the House.

2. As explained in the introductory memorandum, the present supplementary estimates relate to—

(*a*) the additional provision required for schemes of expenditure covered by the Budget for this year and for schemes included in the First Supplementary Statement, with reference to the expenditure already incurred or expected to be incurred before the end of the year;

(*b*) ' New Service ' Schemes sanctioned by the Government in the latter part of the year which were not included in the First Supplementary Statement of Expenditure, mainly under ' Industries ' and ' Electricity ' Schemes; and

(*c*) payment of costs awarded by the Courts in certain suits in which the Government were impleaded as a party.

In respect of New Services, the demand proposed is for the actual additional appropriation required to meet the expenditure in the current year on individual schemes, after taking into account the savings now anticipated in the concerned Grants. Where sufficient savings are expected, or no expenditure is likely to be incurred in the current year, the demand proposed is only for a token sum of Rs. 100.

[Sri K. R. Sambandam] [19th December 1956

மொழியின் பெயரால் தமிழ் நாடு என்று பெயர் வைப்பதில் யாதொரு தவறும் இருக்க முடியாது. ஆகவே இதை நன்றாக நமது சர்க்கார் ஆலோசித்து தமிழ் நாடு என்று பெயரிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்களும் இதையே தான் பெரிதும் விரும்புகிறார்கள்.

அடுத்தபடியாக நம்முடைய நாட்டில் இப்போது தேசிய விஸ்தரிப்பு திட்டத்தினால் நடக்கின்ற பலவிதமான வேலைகள், பட்டித் தொட்டிகளில் உள்ள மக்களையெல்லாம் உற்சாகப்படுத்தியிருக்கிறது. கேட்பாரற்றுக் கிடந்த பல இடங்களிலும் பல வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. அது எல்லாம் வரவேற்கக் கூடிய விஷயம். இதுதவிர இன்னும் உடனடியாக செய்ய வேண்டிய காரியங்கள் ஒரு சில இருக்கின்றன. அதாவது குறிப்பாக ஒரு சில இடங்களில் அபிவிருத்தி திட்டத்தின் மூலமாக பிற்பட்டவர்களும் ஆதிதிராவிடர்களும் அதிகமாக உள்ள இடங்களில் ரஸ்தாக்கள் போடப் பட்டன. இன்னும் அநேக இடங்களில் ரஸ்தாக்கள் போடவேண்டி ருப்பதால் அபிவிருத்தி திட்டம் மூலமாக ரஸ்தாக்கள் போடுவதற்குள் மறுபடியும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அம்மாதிரி ரோடுகள் ஏற்பட்டால் தான் N.E.S. பிளாக்கிலிருந்து செய்கின்ற வசதிகள் அந்த கிராம மக்களுக்கு ஓரளவு பயன் பெறும் என்று நினைக்கிறேன். ஆகவே அந்த கிராமங்களில் எல்லாம் 'மட்' ரோடு போடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் உடன் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த N.E.S. திட்டத்தின் கீழ் கிணறுகள் வெட்டுவதற்கும் குழாய்கள் போடுவதற்கும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் இன்றைக்கு அங்கிருக்கக்கூடிய கிராம மக்களும் ஆதிதிராவிடர்களும் ஓரளவு பயன்பெற்று வருகிறார்கள். ஆனால் சில இடங்களில் குழாய்கள் ஏற்படுத்துவதற்கு வேண்டி அந்த இடத்திலுள்ள தண்ணீரை பரிசீலனை செய்வதற்காக கிண்டிக்கு அனுப்பப் படுகிறது. அதாவது அந்த இடத்திலுள்ள தண்ணீர் "ஸாப்ட் வாட்டரா, ஹார்டு வாட்டரா" என்று பரிசீலித்துப் பார்ப்பதற்கு வேண்டி அனுப்பப்படுகிறது. இதை தெரிந்து கொண்டுதான் பம்பு வைக்கவேண்டியிருக்கிறது. ஆனால் அங்கிருந்து அனுப்பப்படுகிற தண்ணீர் கிண்டியிலிருந்து பரிசீலித்து அனுப்பு வதற்கு சுமார் ஒரு வருடம் வரை ஆகிறது. இந்த மாதிரி பரிசீலனை செய்து தண்ணீர் அனுப்புவதற்கு முன்னால் அங்கு இருக்கக்கூடிய N.E.S. பிளாக்கே மாறிப்போய் விடும். ஆகவே கிண்டிக்கு பரிசீலனைக்கு அனுப்பப்படுவதறக்கு பதில் அந்த கிராமத்து ஜில்லாவிலேயே உள்ள ஹெல்த் ஆபிஸில் வைத்து பரிசீலனை செய்தால் துரிதமாக வேலை நடை பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். கிண்டிக்கு வந்து அந்த பாட்டிலை பரிசீலனை செய்து அனுப்புவது என்றால் ரொம்ப கால தாமதம் ஆகிறது. இதை தடுக்க வேண்டும். இது தவிர மாயூரம் தாலூகாவில் இந்த தேசீய விஸ் தரிப்பு திட்டம் மேற்கு பகுதியில் மாத்திரம் கம்யூனிட்டி பிளாக்காக மாறி இருக்கிறதே தவிர கீழ்ப் பகுதி மாற்றப்படவில்லை. அங்கேயும் மாற்றப் பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களில் குழாய்கள் போடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் அதில் தண்ணீர் விடுவது பரி சீலனையில் தான் இருந்து கொண்டிருக்கிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் இதனால் யாதொரு பிரயோஜனமும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆதலால் இதை உடனடியாக மக்களுக்கு பிரயோஜனப் படும்படியாக ஆக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எல்லாவற்றையும் விட குடி தண்ணீர் வசதியை ஆதிதிராவிடர்களுக்கு உடனே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ அங்கு எல்லாம் ஓரளவு தண்ணீர் வசதி இப்போது இருப்பதினால் தான் காலரா, அம்மை போன்ற நோய்கள் சீசன் காலத்திலும் வராமல் இருக்கிறது. ஆகவே இதை ஒரு அவசரமான காரியமாக நினைத்து, அங்கு குழாய்கள் ஏற்படுத்துவதற்கு தாமதப்

19th December 1956] [Sri K. R. Sambandam]

படுத்தும் பரிசோதனை முறையை மாற்றி கிண்டிக்கு அனுப்புவதை நிறுத்திவிட்டு டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபிஸில் இருக்கும் ஹெல்த் இன்ஸ் பெக்டர்களைக் கொண்டாவது பரிசிலனை நடத்தி அதை ஏற்படுத்துவதற்கு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கல்வித் துறையில் இப்போது மெம்பர்களுக்கு White Paper அறிக்கை ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் தீவிரமான மாறுதல் இல்லை. இப்போது இருக்கிறபடி பார்த்தால் ஆசிரியர்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமாக படித்து எந்த பரிட்சைக்கு வேண்டுமானாலும் ஆஜராகலாம் என்றுள்ள வசதி இருக்கிறது. அவர் களுக்கு இப்போது இன்டர்மீடியட், பி.ஏ. போன்ற ஆர்ட் பரிட்சைகளுக்கு எழுத வசதி இருக்கிறது. அதே மாதிரியுள்ள வசதி மற்றவர்களுக்கும் கொடுக்கவேண்டும். அதாவது ஈ.எஸ்.எல்.ஸி., எஸ். எஸ். எல். ஸி., இன்டர் மீடியட், பி.ஏ. போன்ற பரிட்சைகளுக்கு விசேஷமாக ஸயன்ஸ் விஷய பரிட் சைகளுக்கு படிப்பது மாதிரி விசேஷமாக ஸயன்ஸ் சாமான்கள் வைத்து படிக்க வேண்டிய தேவை இல்லை. இவர்களுக்கு இதற்கென்று பிரத் யேகமான பள்ளிக்கூடம், காலேஜ், இவைகள் வேண்டியது இல்லை. கல்லூரிகள் கட்டுவது என்றாலும் இப்போது பணம் அதிகமாக செல வழியும். ஆகவே இம்மாதிரி ஆசிரியரல்லாதவர்களுக்கு பிரத் யேகமாக வீட்டிலே வைத்து படித்து பரிட்சை எழுதுவதற்கு வேண்டிய வசதிகள் உடனே செய்து கொடுக்க வேண்டும். இது மாதிரியான முறை மேல்நாடுகளிலும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இம்மாதிரி பரிட்சை எழுதுவதற்கு வசதியாக இந்த சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று பல பட்ஜெட் விவாதத்திலும் கல்வி சம்பந்தமான கோரிக்கைகள் வரும் போதும் இதை எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அது இதுவரையிலும் சர்க்காரின் கவனத்தில் பட்டிருப்பதாக தெரிய வில்லை. அது செவிடன் காதில் ஊதின சங்கு மாதிரி தான் இருந்து கொண்டிருக்கிறது. இது மாதிரி மற்றவர்களும் பரிட்சை எழுத சந்தர்ப்பம் கொடுத்தால் வயது வந்தவர்களுக்கு ஒரு பெரிய சந்தர்ப்பம் அளித்த தாக இருக்கும். ஆகவே இதைக் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு விவசாய சட்டம் வந்தபிறகும் கூட சில இடங்களில் நிலங்கள் எல்லாம் அந்த இடங்களிலுள்ள குத்தகைக்காரர்களிடமே இருந்து கொண்டி ருக்கிறது. விவசாயிகளிடம் குத்தகை மாற்றப்படவேண்டும் என்று சட்ட மிருந்த போதிலும் கூட விவசாயிகளிடம் மாற்றப்படவில்லை. ஆகவே ஒரு பக்கம் சட்டத்தை கொண்டு வருகிறார்கள். ஆனால் அந்த சட்டத்தின் பயனை விவசாயிகள் அடைய முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே இம் மாதிரியான நடுத்தர குத்தகைக்காரர்கள் இல்லாத முறையில் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும். தஞ்சாவூர் ஜில்லாவில் தருமபுரம், திரு வாடுதுறை, திருப்பனந்தாள் போன்ற மடங்களின் நிலங்கள் இப்போது குத்தகைக்காரர்கள் மூலமாக விவசாயிகளுக்கு பயிரிட கொடுக்கப்பட்டு வரு கிறது. இதை மாற்றி நேரடியாக பயிர் செய்வதற்கு விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தில் இருக்கிற கல்டிவேட்டிங் டெனன்ட் (Cultivating tenant) என்ற பதம் சரியாக விவரிக்கப்படவில்லை. இதை மாற்றி விவசாயிகளுக்கு பயனுள்ள முறையில் மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பல இடங்களிலுமுள்ள தாலூகா தலைமை ஆபீஸுக்கள் அதாவது ஹெட் குவாட்டர்ஸ் (Headquarters) கட்டிடங்கள் எல்லாம் முன்னால் இருந்தபடியே இருந்துகொண்டிருக்கிறது. அங்கு முக்கியமாக பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டியதுண்டு. அது ஒன்றும் செய்யப்பட வில்லை. முன்பு இருந்தபடியே இருந்துகொண்டிருக்கிறது. சாதாரண சந்தைக்கடை மாதிரி இருந்துகொண்டு வருகிறது.

அவர்களுக்கு (தாலூகா ஆபீஸ் குமாஸ்தாக்களுக்கு) மின்சார சப்ளை 9-42 a.m.
இல்லை. ஆனால் ஊரெல்லாம் மின்சார விளக்குகள் போட்டிருக்கிறார்கள். முனிசிபாலிட்டிகளும் ஊரில் மின்சார விளக்குகள் போட்டிருக்கின்றன.

அப்படி இருந்தும் அவர்களுக்கு ஆபீசில் மின்சார விளக்குகள் கிடையாது. ஆபீசில் எப்பொழுதும் போலவே அவர்கள் வேலை செய்துகொண்டு வருகிறார்கள். சொந்தப்பொறுப்பில் விளக்குகள் வைத்துக்கொண்டு இராப் பகலாக வேலை செய்து வருகிறார்கள். சமீபத்தில் தேர்தல் வரப்போகிறது. அப்போது அவர்களுக்கு அதிகப்படியான வேலை இருக்கும். அதனால் அவர்களுக்கு அதற்குத் தகுந்த வசதி செய்துகொடுக்க வேண்டியது அவசிய மாக இருக்கிறது. அப்படி வசதி செய்து கொடுக்காவிட்டால் அவர்களால் சரியானபடி வேலை செய்யமுடியாது. அவர்கள் இப்பொழுதே டஞ்சன் மாதிரியுள்ள இடங்களில் இருந்து கொண்டு 50 கிளார்க்குகள் வேலை செய்கிற இடங்களில் நூறு பேர்கள் வேலை செய்கிறார்கள். இன்னும் பிளாக் டெவலப்மெண்ட் வேலைகள் வேறு நடைபெற்றுவருகின்றன. மற்றும் அங்கேயே ப்ளாக் டெவலப்மெண்ட் தாசில்தார், லோன் தாசில்தார், டிபுடி தாசில்தார் முதலியவர்கள் வேறு வேலை செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேண்டிய இடவசதிகள் கிடையாது. மேஜை, நாற்காலிகள், மற்றும் பெஞ்சுகள் முதலியவைகள் வேண்டும் என்று அவர்கள் அரசாங்கத்திற்கு எழுதியும் அவர்களுக்கு இன்னும் அவைகள் சப்ளை செய்யப்படவில்லை. சப்ளை செய்வதற்குள் அந்த வேலைகளும் முடிந்து போய்விடும் என்று தோன்றுகிறது. சுதந்தர நாட்டில் இப்படி இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். நாம் சுதந்தரம் அடைந்தும் அங்குள்ள ஆபீசுகள் ஏற்கெனவே இருந்ததுபோல் பிறந்த மேனியாகவேதான் இருந்துகொண்டு வருகிறது. அவர்களுடைய நிலைமையை சீக்கிரம் மாற்றி அமைத்து அவர்களுக்கு வேண்டியவசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே பிற்பட்ட வகுப்பினர்களுக்கு இன்னும் அதிகப்படியான சலுகைகள் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஹரி ஜன தாழ்த்தப்பட்டவர்கள் கிருஸ்தவ மதத்திற்கு மாறினாலும் அவர் களுக்கும் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் கொடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை நான் முழு மனதுடன் வர வேற்பதோடு அதைப்போலவே மற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தற்சமயம் திண்டுக்கல் போன்ற இடங்களில் வன்னியகுல க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் அநேகம் பேர்கள் கிருஸ்தவ மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது யாதொரு விதமான சலுகையும் கிடையாது. அவர்கள் வேறு மதத்திற்கு மாறினதால் அவர்கள் எந்த சலுகையும் அடையாமல் வெறும் சிலுவை மட்டும் போட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர வேறு வசதிகள் அவர் களுக்குக் கிடைக்கவில்லை. இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்பு அவர்களுக்கும் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது கோவில்களுக்கு தர்மகர்தாக்களை நியமிக்கிறார்கள். அப்படி நியமிக்கும்போது அந்தந்த ஊர்களிலுள்ளவர்களை நியமிக்காமல் அந்தந்த கோவிலுக்கு சுமார் 20 அல்லது 25 மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களை நியமித்துக்கொண்டு வருகிறார்கள். அதனால் அவர்களால் அந்தந்தக் கோவில்களை சரியானபடி பார்த்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் உற்சவ காலங்களில்மட்டும்தான் வரும்படியாக இருக்கிறது. மற்ற நாட்களில் அவர்களை அங்கு பார்க்க முடியாது. ஆகவே கோவில் களுக்கு தர்மகர்த்தாக்களை நியமிக்கும்போது அந்தந்த ஊர்களிலுள்ள வர்களையே நியமித்தால் அவர்கள் அந்த கோவில்களை ஏற்கனவே உள்ள நல்ல நிலைமையிலேயே வைத்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். மற்றும் கோவில்களுக்கு ஆதி திராவிடர்களை தர்மகர்த்தாக்களாக நியமிக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதைப்போலவே பிற்பட்டவர்களையும் தர்மகர்த்தாக்களாக நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி நியமித்தால் அவர்களும் கோவில்களை நல்ல முறையில் பார்த்துக்கொள்ளுவார்கள்.

இவ்விதம் ஆதி திராவிடர்களையும் பிற்பட்டவர்களையும் நியமித்தால் அவர்களுக்கு அறிவு வளர்ச்சியும் ஆர்வமும் ஏற்படுவதற்கு வசதியாக இருக்கும். அவர்களும் நல்ல முறையில் கோவில்களைப் பார்த்துக் கொள்வார்கள் என்பதாகவும் சொல்லிக்கொண்டு இதையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **Sri G. GOVINDAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 9-45
இரண்டு தினங்களுக்கு முன்னதாக கனம் நிதி மந்திரி அவர்கள் அடுத்த a.m.
ஆண்டு வரவு செலவு திட்டத்தைப் பற்றிய அறிக்கையை வாசித்த போது அதை அவர் தமிழில் வாசித்ததற்கு அவரை நான் பாராட்டுகிறேன். அப்படி தமிழில் வாசித்ததால் என் போன்றவர்களுக்கு அதாவது சாதாரண மானவர்களுக்கு அதை நன்றாக புரிந்து கொள்ள வசதியாக இருந்தது. இதைப் போலவே மற்ற நடவடிக்கைகளையும் தமிழில் நடத்தினால் எங் களைப் போன்றவர்கள் புரிந்து கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். ஆனால் இன்றைய தினம் ரூல் 40 பிரகாரம் நோட்டீஸ் கொடுத்த போது கனம் மராமத்து இலாகா மந்திரி அவர்கள் அதற்கு பதில் சொன்னதை நான் தமிழில் சொல்ல வேண்டும் என்று கேட்டதற்கு "தன்னுடைய ஆபீசுக்கு வந்தால் அதை தமிழில் சொல்லுகிறேன்", என்று சொன்னார். அவர் ஏன் அப்படிச் சொன்னார் என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அதன் காரணம் என்ன என்பதும் எனக்குத் தெரியவில்லை. அதைப் பற்றிய அபிப்பிராயம் இப்பொழுது ஒன்றும் நான் சொல்வதற்குக் தயாராக இல்லை. நாடு வளர்ச்சி அடைய வேண்டும். எல்லா நடவடிக்கைகளும் தமிழில் நடக்க வேண்டும் என்று எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் தமிழில் பேச வேண்டும், அரசாங்கத்தையும் தமிழில் நடத்த வேண்டும் என்று இருக்கும்போது தமிழில் சொல்வதானால் தன்னுடைய ஆபீசுக்கு வந்தால் சொல்லுகிறேன் என்று சொன்னதற்குக் காரணம் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. சட்டசபை அங்கத்தினர்கள் இங்கு வந்து ஜனங்களுடைய அபிப்பிராயத்தைத் தான் சொல்லுகிறார்கள். அப்படி அவர்கள் இருக்கும்போது கனம் மந்திரி அவர்கள் இவ்விதம் சொன்னால் ஜன நாயகத்தை குறை கூறுவதாகத் தான் தோன்றுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அவருடைய சமஸ்தான செல்வாக்கை உபயோகித்து இம்மாதிரி சொல்லுகிறார் என்று தான் நான் நினைக்கிறேன். ஜனநாயக சர்க்கார் நடக்கும் போது இம் மாதிரி சொல்வது என்பது சரி அல்ல என்பதை கனம் தலைவர்களுக்குச் சொல்லுகிறேன். அதிலும் சப்ளை சானல்களை பற்றி கேட்டால் அதை பற்றி சொல்லாமல் கண்மாய்கள் வெட்டியதைப் பற்றி சொன்னார்கள்.

வரவு செலவு திட்டத்தைப் பற்றி பேசும் போது கனம் நிதி மந்திரி அவர்கள் என்ன சொன்னார் என்றால் இப்பொழுது திட்டம் கொண்டு வந்திருப்பதை இப்பொழுது செலவு செய்யப் போவதில்லை என்றும் பின்னால் தான் செலவு செய்யப் போவதாயும் அதனால் அதன்படித்தான் பேச வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அவைகளைப் பற்றி இப்பொழுது அவசரமாகப் பேச வேண்டாம் என்றும் குறிப்பிட்டார். உண்மையிலேயே மக்களுடைய அபிப்பிராயம் என்னவென்றால் சட்டசபைக்கு அங்கத்தினர் களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினால் அவர்கள் சட்டசபைக்கு வந்து மக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று தான் இங்கு அங்கத்தினர்கள் வந்திருக்கிறார்கள். சட்டசபைக்கு வந்து அங்கத்தினர்கள் மக்களுக்கு நன்மையைத் தான் செய்கிறார்கள் என்று மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் என்ன செய்கிறார்கள், மக்களுக்கு என்ன நன்மைகளைச் செய்கிறார்கள் என்றெல்லாம் தொகுதியிலுள்ள மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவைகளையெல்லாம் அர சாங்கம் கவனிப்பதாகவே இல்லை. அங்கத்தினர்கள் குறை கூறுகிறார்கள் என்றால் அவைகள் எல்லாம் மக்களுடைய அபிப்பிராத்தைத் தான் சொல்லுகிறார்கள் என்று நினைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக எங்கள் பக்கத்தில் 1952-ம் வருஷத்திலேயே ஒரு ஆஸ்பத்திரி கட்டவேண்டும்

என்று கேட்டுக் கொண்டோம், கட்டுவதாகவும் ஒப்புக் கொண்டார்கள். ஆனால் இது வரையிலும் அங்கு ஆஸ்பத்திரி கட்டவே இல்லை. அப்பொழுது போட்ட பட்ஜெட்டிலேயே கட்டுவதாகச் சொன்னார்கள். இப்பொழுது 1956, 1957 வருஷமாகியும் இன்னும் அங்கு ஆஸ்பத்திரி கட்டப்படவில்லை. கேட்டால், அதற்கு என்ன காரணம் சொல்லுகிறார்கள் என்றால் "அங்கே இருக்கக் கூடிய மின்சார கம்பெனி அங்குள்ள கட்டடத்தை விடமாட்டேன் என்று சொல்லுகிறார்கள், அதற்கான இடம் பார்க்க வேண்டும் அதனால் இன்னும் கட்ட முடியவில்லை" என்று சொல்லுகிறார்கள். பல காரியங்கள் இப்படி நடைபெறாமல் இருக்கின்றன. மக்களுடைய குறைகளை அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னாலும் அதை கவனிப்பதாகவே இல்லை. அங்குள்ள அதிகாரிகளும் அப்படியேதான் இருக்கிறார்கள்.

சாதாரணமாக எங்கள் ஜில்லாவிற்கு மலையாள கலெக்டர்கள் தான் வருகிறார்கள். அவர்களுக்கு தமிழே தெரிவது இல்லை. தமிழில் சொன்னால் அது தனக்குப் புரியவில்லை என்று சொல்லி விடுகிறார். தமிழ் படிக்கவும் பேசினால் புரிந்து கொள்ளவும் முடியாத அதிகாரிகளை அங்கே ஏன் போட வேண்டும் என்று கேட்கிறேன். உதாரணமாக ஆந்திராவில் ஒரு தமிழ் அதிகாரியை நியமித்து அவர் அங்கு தனக்கு தெலுங்கு தெரியாது என்று சொன்னால் அந்த அதிகாரியை அங்கு வைத்துக் கொண்டிருப்பார்களா என்பதை கேட்கிறேன். நன்றாக தமிழ் படிக்கக் கூடியவர்களையும் தமிழ் பேசினால் அதை நன்றாகப் புரிந்து கொள்ளக் கூடியவர்களையும் அங்கு ஏன் நியமிக்கக் கூடாது என்று கேட்கிறேன். இப்படி நியமித்துக் கொண்டு வந்து எல்லா நடவடிக்கைகளையும் தமிழிலேயே நடத்திக் கொண்டு வந்தால் தமிழரசு கட்சிக்கு இடமே இல்லை. அவர்களுக்கு வேலையே இல்லாமல் போய் விடும். இதை தலைவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எங்கள் ஏரியாவில் சில காரியங்களைப் பற்றி பட்ஜெட்டில் குறிப்பிட்டிருந்தும் அவைகளை எடுத்து நடத்தவே இல்லை. நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லியும் அவைகளை இன்னும் செய்யவே இல்லை. அதற்கு ஒரு உதாரணம் உண்டு. கலியாண வீட்டிற்குச் சென்றால் "கலியாணம் ஆச்சா" என்று பெண் வீட்டுக்காரர்களையும் கேட்பார்கள், "கலியாணம் ஆச்சா" என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர்களையும் கேட்பார்கள். இதன் அர்த்தம் என்னவென்றால் கலியாணத்திற்கு தான் வந்ததாக அறிமுகப் படுத்துவதற்காகவே இப்படி கலியாணம் விசாரிப்பது வழக்கம். அதைப் போலவே தான் சட்டசபை அங்கத்தினர்களும் சட்டசபையில் வந்து குறைகளைச் சொன்னால் தாங்கள் சட்டசபைக்குச் செல்வதாகவும், மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதாகவும் அர்த்தம். அவைகளை அரசாங்கம் கவனித்தால் மக்கள் சந்தோஷமடைவார்கள் கவனிக்கா விட்டால் நாங்கள் சொன்னோம் அரசாங்கம் கவனிக்கவில்லை என்று சொல்லி விடலாம் என்பதற்காகவும்தான் சட்டசபை அங்கத்தினர்கள் இங்கு வந்து அரசாங்கத்தைப் பற்றி குறை சொல்லுகிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதனால் அரசாங்கத்தை குறை கூறுவதாக எண்ணக் கூடாது. அரசாங்கம் என்ன சொல்லிக் கொண்டு வருகிறார்கள் "கவனிக்கிறோம்" என்றுதான் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அவைகளைக் கேட்டு மக்கள் சந்தோஷமடைகிறார்கள். அதனால் நான் என்ன சொல்லுகிறேன் என்றால் பட்ஜெட் தயாரிக்கும் போது அந்தந்த ஜில்லாவுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளுக்குத் தகுந்தபடி திட்டமிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ராமனாதபுரம் டிவிஷனில் மூன்று தாலூகாக்கள் இருக்கின்றன. முதுகுளத்தூர் தொகுதி, ராமனாதபுரம் தொகுதி, பரமக்குடி தொகுதி. முதுகுளத்தூர் தொகுதி அங்கத்தினர் சட்டசபைக்கு வருவதே இல்லை. அதனால் அங்குள்ளவர்களுடைய குறைகளைச் சொல்வதற்கு ஒருவரும் இல்லை. அடுத்த படியாக ராமனாதபுரம் தொகுதி இருக்கிறது. அதற்கு இருக்கும் பிரதிநிதியைக் கேட்டால் "நான் மந்திரியாக இருக்கிறேன்.

அந்தத் தொகுதிக்கு மட்டும் என்னால் ஒன்றும் செய்ய முடியாது, ராஜ்யம் பூராவுக்கும் தனக்குப் பொறுப்பு இருக்கிறது" என்று சொல்லி விடுகிறார். அடுத்ததாக பரமக்குடி தொகுதி இருக்கிறது. அங்குள்ள குறைகளை எடுத்துச் சொல்லி, அதாவது அங்கு தேசீய விஸ்தரிப்பு திட்டம் சம்பந்தமாக பல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதற்கு அதிகாரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் கனம் சுவாமிநாதன் என்ன சொல்லுகிறாரோ அதன்படியே செய்கிறோம் என்று சொல்லி விடுகிறார்கள். ராமனாதபுரம் ஜில்லாவில் எவ்வளவு காரியங்கள் நடைபெற வேண்டும் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். கனம் மந்திரி அவர்கள் இரவு 11 மணி அல்லது 12 மணிக்கு வந்தபோது கூட அவரைப் பார்க்க வேண்டும் என்றும் சுற்று பிராயாணம் செய்யும் போது இரவானாலும் காத்திருக்கிறார்கள் என்றால் காரணம் என்ன, தங்கள் கிராமத்தின் குறைகளைச் சொல்லிக் கொள்ளவேண்டும் என்றுதான் மக்கள் வந்து காத்துக்கொண்டிருந்தது கனம் மந்திரி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் என்ன எண்ணத்துடன் வந்திருந்தார்கள், தங்களுடைய குறைகளைச் சொன்னால் ஏதாகிலும் மந்திரியின் மூலமாக நன்மைகள் கிடைக்கும் என்றுதான் அங்குவந்து காத்துக் கொண்டிருந்தார்கள். ஜனநாயக முறையில் நன்மைகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படிக் காத்து கொண்டிருந்து குறைகளைச் சொல்லியும் அவைகளை கவனியாமல் இருந்தால் மக்கள் என்ன நினைத்துக் கொள்ளுவார்கள் என்பதை கவனிக்க வேண்டும். ஜனநாயகம் பேசிக் கொண்டிருக்கும் மந்திரிகள் நன்மைகளை சில இடங்களுக்கு மட்டும் செய்து விட்டு பல இடங்களை கவனிக்காமலே இருந்தால் மக்கள் என்ன நினைத்துக் கொள்ளுவார்கள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் அந்தந்த ஜில்லாக்களுக்கு என்று தொகையை ஒதுக்கி அந்தந்த தொகுதிகளுக்கு வேண்டிய வேலைகளை எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு என்று ஒரு கமிட்டியையும் அமைத்து திட்டம் போடவேண்டும் என்று கனம் மந்திரி அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்கள் டிவிஷனில் ஜமீந்தாரி ஏரியா இருக்கிறது. அங்குள்ள கண்மாய்கள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அங்குள்ள கண்மாய்களில் நீர்பிடி இருந்து கொண்டு விவசாயம் செய்து கொண்டு வந்தார்கள். அங்கு இருந்து கொண்டு விவசாயம் செய்து கொண்டிருந்தவர்களை இப்பொழுது அப்புறப்படுத்தவேண்டும் என்று இப்பொழுது நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி செட்டில்மெண்ட் ஆபீசரைக் கேட்டால் எங்களைக் கேட்காதீர்கள், உங்கள் சர்க்கார் தான் அப்படிச் சொல்லி இருக்கிறார்கள், அவர்களைப் போய் கேளுங்கள் என்று சொல்லுகிறார். உங்களுடைய குறைகளை சர்க்காரிடம் போய் சொல்லுங்கள் என்று சொல்லுகிறார். 9-52 a.m. இம்மாதிரி சர்க்கார் உத்தியோகத்திலிருப்பவர்கள் சொல்லாமலிருக்க செய்ய வேண்டியது சர்க்கார் கடமை. அந்தக் காலத்தில் கண்மாய்க்குப் பாதகமில்லாமல், நாங்கள் விவசாயம் செய்து கொண்டிருந்தோம். இன்று "கண்மாய்ப் புஞ்சை" என்று சொல்லிக் கொண்டு ஏராளமான விவசாயிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மேற்சொன்ன மூன்று தாலூகாக்களிலும், அம்மாதிரி அப்புறப்படுத்தவேண்டுமென்று சொன்னால், குறைந்தது முப்பதினாயிரம் குடும்பங்கள் பாழாகி விடும் என்று கனம் மந்திரி அவர்களிடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த நடவடிக்கையைக் கைவிடாத பட்சத்தில் அரசாங்கத்தை எதிர்த்து நாங்கள் போராடத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, இப்பொழுது பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***SRI K. V. RAMASWAMY**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இடைக்கால பட்ஜெட் பொது விவாதத்தின் போது ஒரு சில விஷயங்களை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

[Sri K. V. Ramaswami] [19th December 1956

சென்ற சட்ட சபைக் கூட்டத்தில், விலைவாசி உயர்வு சம்பந்தமாக கடுமையான விவாதம் இந்த சபையில் நடந்தது நம் எல்லோருக்கும் நன்கு தெரியும். அப்பொழுது, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், நியாயமான விலையில் உணவுப் பொருள்களைப் பொது மக்களுக்கு வழங்குவதற்கும் போதிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று எல்லா தரப்பிலிருந்தும் வற்புறுத்தப்பட்டது. ஆனால், சர்க்கார் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு சில இடங்களில் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன. பொது மக்களின் தேவையைப் போதிய அளவுக்கு பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நியாய விலைக் கடைகள் திறக்கப்படவில்லை. தவிர, அக்கடைகளுக்கு போதிய அளவு தானியமும் சப்ளை செய்யப்படவில்லை. அதன் பயனாக எந்த அளவுக்கு விலை இறங்கி இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு விலை இறங்கவில்லை. எல்லா நியாய விலைக் கடைகளிலும் நீண்ட "க்யூ" வரிசையைத்தான் நாம் பார்க்க முடிகிறது. ஏராளமான பொது மக்கள் அரிசி இல்லாமல் வீடு திரும்ப வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் விலைகள் இறங்கு முகத்தில் இருக்கின்றன. இவ்வளவு காலமாக பதுக்கல் பேர்வழிகளும், பணத்திமிங்கிலங்களும் நிலப்பிரபுக்களும், பொது மக்களின் பணத்தை கொள்ளை அடித்த பிறகு இன்றைக்கு விலைவாசிகள் இறங்கு முகமாக இருக்கின்றன. இதற்குக் காரணம் சர்க்கார்தான் என்று அவர்கள் திருப்தி அடைந்து விட்டால், அது தவறானது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்த விலைவாசி இனி இறங்கு முகமாகவே இருக்கும் என்ற உத்திரவாதத்தை அளிக்கக்கூடிய நிலைமையில் சர்க்கார் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமான உணவுப் பொருள்கள் நியாயமான விலையில் பொது மக்களுக்குக் கிடைக்கும்படி சர்க்கார் நடவடிக்கை எடுக்காவிட்டால் கோடிக்கணக்கான மக்கள் பணத்திமிங்கிலங்களால் கொள்ளை அடிக்கக் கூடிய நிலைமையில் இருக்கும்படி நேரிடும். ஆகவே விலையைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சேலம் ஜில்லாவில் நாமக்கல் தாலூகா டெல்டா பிரதேசத்தில் ஏராளமான வெற்றிலைப் பயிர் நோயால் பீடிக்கப்பட்டு, அந்த நோயைப் போக்க வேண்டும் என்று சர்க்காருக்கு முறையிட்டதின் பேரில், அவர்கள் ஒரு மாதிரி பண்ணை ஏற்படுத்த தக்க நடவடிக்கை எடுத்துள்ளதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில், சமீப காலத்தில் தொடர்ச்சியாக மழை பெய்ததன் விளைவாக வேறொரு புது நோய் (Pest attack) ஏற்பட்டு இருக்கிறது. அதாவது பூச்சி விழுந்திருக்கிறது. இதனால் அந்தப் பிரதேசத்தில் இருக்கக் கூடிய சுமார் 150 ஏக்கராவில் உள்ள வெற்றிலைப் பயிர் பூராவும் சருகு ஆகிவிட்டது. அதிலிருக்கக்கூடிய வெற்றிலைக் கொடிகளும் அவத்தி மரங்களும் விறகுக்கு பதிலாக உபயோகப் படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இது சம்பந்தமாக விவசாய இலாகாவுக்கு தெரியப்படுத்தியும், அவர்கள் "நாங்கள் என்ன செய்ய முடியும்" என்று சொல்லுகிறார்கள். வெற்றிலைப் பயிர் பூராவும் அழிந்து விட்டதன் காரணமாக இத் தொழிலில் ஈடுபட்ட மக்கள் அடுத்த சாகுபடி ஆரம்பிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். கையில் உள்ள முதலை எல்லாம் போட்டு, பலன் கிட்டக்கூடிய காலத்தில் ஒன்றும் கிடைக்காமல் போனதினால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் அடுத்த சாகுபடி ஆரம்பிப்பதற்குள் அவர்களுக்கு கடன் உதவி அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக சேலம் கலெக்டர் அவர்களைப் பார்த்ததில், "எவ்வளவு அதிகபட்சமான தொகையை ஒதுக்கித்தர முடியுமோ அதை ஒதுக்க முயற்சிக்கிறேன்; மேற்கொண்டு வேண்டுமானால் சர்க்காருக்கு எழுதித்தான் ஆகவேண்டும்; நீங்களும் சர்க்காரிடம் வற்புறுத்துங்கள்" என்று சொன்னார்கள். அவர்களுக்கு இலவசமாகப் பணம் கொடுக்க வேண்டாம். மானியமாகக் கூடக் கொடுக்கவேண்டாம். அடுத்த சாகுபடி ஆரம்பமாவதற்குள் கடனாகக் கொடுத்தால், அந்தப்

19th December 1956] [Sri K. V. Ramaswamy]

பிரதேசத்திலிருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான சாகுபடியாளர் ஜீவிக்க முடியும். ஆகவே, உடனடியாக, தாமதம் செய்யாமல், எவ்வளவு அதிகபட்ச தொகையை ஒதுக்கமுடியுமோ, அதை ஒதுக்கி, ஏற்ற தருணத்தில் அவர்களுக்குக் கடன் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேலம் ஜில்லாவில் நெற்பயிரிலும் பூச்சி விழுந்திருக்கிறது. பல வயல்களை நானே நேரில் சென்று பார்வையிட்டேன். **Plant Protection Assistant**-ம் மற்றும் விவசாய இலாகா அதிகாரிகளும், "**Paddy jassids, rice hispa, mealy bugs.**" இம்மூன்று நோய்களும் கண்டிருப்பதாகச் சொன்னார்கள். இதைத் தடுப்பதற்குப் போதிய மருந்து சப்ளை செய்யக்கூடிய நிலையில் விவசாய இலாகா இல்லை என்பதை கனம் அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் பூச்சியைத் தடுக்கும் "குப்புராவிட்டி" என்ற மருந்து நாமக்கல் தாலூகா விவசாய ஆபிசில் ஸ்டாக் இல்லை. இன்றைக்கு மழை பெய்திருக்கக்கூடிய தருணத்தில், இந்த நெற்பயிரும் பூச்சியால் பாதிக்கப்பட்டு, அதைத் தடுப்பதற்கு விவசாய ஆபீசில் மருந்து இல்லை என்றால், அது நாம் பரிதாபப்பட வேண்டிய விஷயமாகத்தானிருக்கிறது. போதிய மருந்து விவசாய இலாக்காவிலிருக்க வேண்டும். இப்பொழுது மருந்தை உபயோகிப்பதற்கு ஒரு "**Power sprayar**" தானிருக்கிறது, குறைந்த பட்சம் 50 அல்லது 100 "**Power sprayers**" தேவை. ஒரே ஒரு **sprayer** இருப்பதினால், அதற்கு இருக்கும் கிராக்கி சொல்லி முடியாது. இவ்வளவு கஷ்டமான நிலையில் தாலூகா விவசாய ஆபீஸ் இயங்கிக் கொண்டிருக்கிறது. போதிய மருந்தும், அதை உபயோகிப்பதற்குப் போதுமான கருவிகளும் தாராளமாக வழங்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, கல்வி சம்பந்தமாக, மானேஜ்மெண்டுப் பள்ளிக்கூடங்களுக்கு **Director of Public Instruction Office** லிருந்து ஒரு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. அதாவது, இனிமேல் மானேஜ்மெண்டுப் பள்ளிக்கூடங்களில் புதிதாக ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது. **White Paper**-ல் செய்யப்பட்டிருக்கும் சிபாரிசுப்படி, 40 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர்தான் நியமிக்கலாம். இந்த விகிதாசாரம் அமுலுக்கு வந்தால், ஆட்குறைப்பிலிருந்து தடுப்பதற்காக, ஒரு தற்காப்பு நடவடிக்கையாக இந்த உத்திரவு போடப்பட்டிருக்கிறது.

நான் இன்று கல்வி சம்பந்தமான கொள்கை விவாதத்தில் இறங்குவதற்கு விரும்பவில்லை. என்னுடைய தொகுதியில் நான்கைந்து மானேஜ்மெண்ட் பள்ளிகளில் மூன்று நான்கு ஆசிரியர்கள் இருந்தார்கள். மூன்று ஆசிரியர்கள் இருந்த பள்ளிக்கூடங்களில் சர்க்கார் டைரக்டர் உத்திரவின் பேரில் இரண்டு ஆசிரியர்கள் போய்விட்டதன் பயனாக ஓர் ஆசிரியர் எல்லாப் பிள்ளைகளையும் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஓர் ஆசிரியருக்கு மேல் நியமிக்க சர்க்கார் உத்திரவு இல்லை என்பதாக டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்றக்ஷன் உத்திரவு போட்டு விட்டார். இதனால் நூறு பிள்ளைகளை ஓர் ஆசிரியர் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இது சரியல்ல. மாணவர்களுக்குத் தகுந்த ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளலாம் என்பதாக இவ்விஷயத்தில் சர்க்கார் உடனடியாக உத்திரவு போட வேண்டுமென்பதாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு பல மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளில் மானேஜர்களும் ஆசிரியர்களும் இருந்தால்தான் பள்ளிக்கூடம் நன்றாகத் திறம்பட நடக்கும். ஆனால் பல மானேஜர்கள் டிரெயினிங் பாஸ் பண்ணாததின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் **Exemption** வாங்கி ஆசிரியராகப் பணியாற்ற வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே மானேஜராக உள்ள அண்டிரெயிண்டு டீச்சர்களுக்கு எல்லாம் நிரந்தரமாக விதி விலக்கு அளித்து, அவர்கள் அவர்களுடைய பள்ளிகளில் ஆசிரியர்

களாகப் பணியாற்றலாம் என்பதாகச் சர்க்கார் விதிசெய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு வருஷமும் அவர்கள் எக்ஸெம்ப்ஷன் வாங்காமல் ஒரு வருஷம் வாங்கி விட்டால் அதைக் கொண்டே தொடர்ந்து பணியாற்ற அனுமதி அளிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

SRI V. C. PALANISAMI GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் நான் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். இப்பொழுது இந்தச் சட்ட சபையானது முடியும் கட்டத்தில் வந்திருக்கிறது. இனி அடுத்து வரும்படியான சட்ட சபையில் பல புது அங்கத்தினர்கள் வரலாம். பழைய அங்கத்தினர்களில் அனேகர் கழியலாம். இந்த சமயத்தில் எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்காகத் தங்களுக்கு நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் சில முக்கியமான அம்சங்களைப் பற்றி பேச விரும்புகிறேன். சர்க்கார் இரண்டு கோடி ரூபாய் கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்காகவும், பள்ளி ஆசிரியர்களுக்காகவும், கிராம அதிகாரிகளுக்காகவும் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க எல்லோரும் சந்தோஷப்படுகிறோம். இது இச் சமயத்தில் மிக மிக அவசியம் என்பதையும் நான் சொல்ல வேண்டியது இல்லை. இவ்விஷயத்தில் கிராம அதிகாரிகளின் முயற்சி நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளித்திருப்பதும், அவர்கள் குடும்பங்களுக்கு மெடிகல் சலுகை அளித்திருப்பதும் பாராட்டுதலுக்கு உரியது. அதோடு அவர்களுடைய சம்பளத்தோடு டி.ஏ. சம்பந்தமான குறிப்பிட்ட தொகையைச் சேர்த்துக் கொடுப்பது மிகவும் பொருத்தமாக இருக்கு மென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இது வரையிலும் அவர்களுக்கு டி. ஏ. என்றால் அது அவர்கள் கைக்கு வந்து சேருவதே இல்லை. அதனாலே அக்கோரிக்கையை அவர்கள் வெகு நாளாக வற்புறுத்தி வந்தார்கள். அதையும் சர்க்கார் நிறைவேற்றிக் கொடுத்திருப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கும்.

தவிர இந்த சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல நீர்ப்பாசனத் திட்டங்களையும், மின்சார அபிவிருத்தித் திட்டங்களையும் சேர்த்திருக்கிறார்கள் என்பது உலகு அறிந்த விஷயம். அதுவும் சென்னை ராஜ்யத்தில் மின்சாரம் அதிக அளவில் பரவி விட்டது. கிராமங்களில் எல்லாம் யாவரும் பிரமிக்கத் தக்க வகையில் மின்சார அபிவிருத்தி வேலைகள் நடந்து வருகின்றன. ஆனால் நீர்ப்பாசன விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தி போதாது. ஆந்திரா பிரிந்து போன பிறகு எவ்வளவு அபிவிருத்தித் திட்டங்களைப் போட முடியுமோ அவ்வளவு அபிவிருத்தித் திட்டங்களைப் போட்டு விட்டோம். காவிரி, பவானி போன்ற நதிகளின் திட்டங்கள் எல்லாம் முடிந்து விட்டன. இப்பொழுது சின்னச் சின்னச் திட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நம் ராஜ்யத்தில் இன்னும் பல வறட்சியான இடங்கள் இருக்கின்றன. அவற்றுக்கு எல்லாம் பல நீர்ப்பாசனத் திட்டங்களைக் கொண்டு வருவது அவசியம். சர்க்காரால் குண்டா மின்சாரத் திட்டத்தில் கவனம் செலுத்தப்படுகிறது. கன்னடத்தினரின் உதவியும் கூட வந்து கொண்டிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். இதனால் அவிநாசி, கோயம்பத்தூர் தாலூகாக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படாதா என விவசாயிகள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் மழை நன்றாகப் பெய்திருப்பதன் காரணமாக லோயர் பவானி கரை புரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. அதைப் பார்க்கும் போது இப்பிராந்திய மக்கள் கொஞ்சம் பொறாமை கூட அடைகிறார்கள். அவர்கள் வாழ்வதைக் கண்டு பொறாமை அல்ல. அந்தத் தண்ணீர் அங்கே அப்படிப் போய்க் கொண்டிருக்கிறது! அதில் சிறிதாவது இந்தப் பக்கம் வந்தால் எத்தனை அபிவிருத்திகளைச் செய்யலாம்; என்பதே எண்ணம். குண்டா திட்டத்தின் மூலமாக நேரிடையான நீர்ப்பாசனம் இந்த அவிநாசி, கோயம்பத்தூர் தாலூகாக்களுக்குக் கிடைக்காவிட்டாலும் ஒரு கால்வாய் இந்தப் பக்கமாகச் சென்றால் கிணறுகளில்

நீர்மட்டம் வெகுவாக உயரக் கூடும். இதை உத்தேசித்து சர்க்கார் அத்திட்டத்தை அமைக்க பரிசீலனை செய்யவேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக புகையிலை, சர்க்கரை போன்றவைகளுக்கு விற்பனை வரியை நீக்கி, எக்ஸைஸ் வரி போடுவதன் மூலம் மத்திய சர்க்காரிடம் இருந்தே ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்ளலாம் என இதில் கண்டிருக்கிறது. இது வரவேற்கத் தகுந்த விஷயம். கிராமங்களில் கரும்பு உற்பத்தி செய்து ஆலைகளைக் கொண்டு வெல்லம் உற்பத்தி செய்கிறார்கள். இது ஒரு குடிசைத் தொழில் தான். இதற்கு சர்க்கார் அவர்களிடத்தில் வரி வசூல் செய்கிறார்கள். விவசாய, குடிசைத் தொழில் உற்பத்தி என்கிற முறையில் இதற்கு வரி விலக்கு அளிப்பது அவசியம். சாதாரண ஆலைகளில் வெல்லம் உற்பத்தி பண்ணினால், புகையிலை, சர்க்கரைக்கு விற்பனை வரி கிடையாது என்பது போலவே வெல்லத்திற்கும் கிடையாது என்று செய்ய வேண்டும். எங்கே பார்த்தாலும் ஏராளமான சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் வெல்லத்திற்கு வரி போடுவது அவசியம் இல்லையென்றும் சொல்ல விரும்புகிறேன்.

மின்சார விஷயத்தில் கோயம்பத்தூர் ஜில்லா அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். சர்க்கார் திட்டம் வருஷத்தில் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பது என்பது. இப்பொழுது கோயம்பத்தூர் ஜில்லாவில் எலெக்ட்ரிக் அட்வைஸரி கமிட்டி போட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான கமிட்டி வேண்டுமென்பதாகக் கோயம்பத்தூர் வாசிகள் நீண்ட நாளாகக் கேட்டு வந்தார்கள். ஆகவே பரிட்சார்த்தமாக சர்க்கார் இப்போது அதை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் அக்கமிட்டிக் கூட்டங்களுக்குச் செல்லும் எம். எல். ஏ.களுக்கு டி. ஏ. கிடையாதாம். இதற்கும் அர்த்தம் எனக்குத் தெரியவில்லை. இர்ரிகேஷன் அட்வைஸரி கமிட்டி, ப்ரொகிபிஷன் அட்வைஸரி கமிட்டி முதலியவைகளுக்குச் செல்லும் எம். எல். ஏ. களுக்குப் பிரயாணப் படி உண்டு என்பது போலவே இதற்கும் கொடுப்பது தான் சரி. ஏன் கொடுக்கக்கூடாது என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. விவசாயத்திற்கு மின்சாரத்தை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை அதிகம். அதுவும் பலர் மோட்டார் முதலியவைகளை வைத்திருப்பதால் ஆபத்துக்கள் அதிகம் இருக்கின்றன. நான் ஒரு கமிட்டிக் கூட்டத்திற்குச் சென்ற போது அனேக உயிர்ச்சேதம் ஏற்படும்படியான விபத்துக்கள் நடந்திருக்கின்றன என்கிற தகவலை அறிந்தேன். இதற்கு நிவாரணம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆயில் என்சின்களை விட மின்சார மோட்டார்களால் ஆபத்து அதிகம். ஒயரிங்கூட மிகச் சிக்கலானது. விவசாயிகள் தெரியாமல் ஏதாவது இடத்தைத் தொட்டு விட்டால் உயிர் இழக்க நேரிடுகிறது. ஆகவே ஆங்காங்குள்ள விவசாய டெமான்ஸ்ட்ரேடர்களைக் கொண்டோ, மெகானிகல் என்ஜினியர்களைக் கொண்டோ மோட்டார்களை உபயோகிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் விவசாயிகளுக்கு வகுப்புகள் ஆரம்பித்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் எப்படி ஆபத்துக்கள் ஏற்படாதவாறு மின்சார மோட்டார்களை இயக்குவது என்பது சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். இது விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்துவார்கள் என நம்புகிறேன். "விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டும், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்" என்று விவசாய டிபார்ட்மெண்டார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பிரதம மந்திரி பண்டித நேரு அவர்களும் "உணவு உற்பத்தித்தான் எல்லாக் கைத்தொழில்களுக்கும் அடிப்படையாக உள்ளது. விவசாயம் குன்றிப்போனால் தொழில்களெல்லாம் அபிவிருத்தி ஆகாது" என்று பேசி வருகிறார். அந்த முறையிலே பார்க்கும்போது விவசாய அபிவிருத்திக்காக சர்க்கார் செய்திருக்கும்படியான ஏற்பாடு போதாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

பயிர்களை பூச்சித் தொல்லையிலிருந்து காப்பாற்றுவதற்கு பூச்சி நிவாரண மருந்துகளும் அவைகளைத் தெளிப்பதற்கான **sprayer** களும்

போதுமான அளவு கிடைக்காமல் விவசாயிகள் நலிகிறார்கள். "இம்ப்ளிமெண்ட்ஸ்" என்று சொல்லப்படுகிற நவீன உழவுக் கருவிகள் போன்றவைகளும், உரங்களும் விவசாயிகளுக்கு போதுமான அளவு காலாகாலத்தில் கிடைக்க யாதொரு ஏற்பாடும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. விவசாய அபிவிருத்தித் திட்டங்களில் ஆராய்ச்சி (research) வேலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதே யொழிய, பெரிய அளவில் விவசாயக் கருவிகளைச் செய்வதாகச் தெரியவில்லை. இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட் அப்படிப்பட்ட வேலையை ஏற்றுக்கொள்வதில்லை. கைத்தொழில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும்படியான கோயமுத்தூரிலும்கூட மற்றத் தொழில்களுக்கு வேண்டிய சாதனங்களை உற்பத்தி செய்கிறார்களேயொழிய, விவசாயத்திற்கு வேண்டிய கலப்பை, கொழுவு போன்ற கருவிகளை அங்கு செய்வதற்கு அவர்கள் ஏற்றுக் கொள்வது இல்லை. நல்லதரமான விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்து ஒவ்வொரு பிர்க்காவிலும் டெமான்ஸ்ட்ரேடர் ஆபீசிலே கொடுத்து வைத்து விவசாயிகளுக்கு தேவையான சந்தர்ப்பங்களிலே அவைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எந்தக் காரணத்தாலோ எல்லா விவசாயப் பயிர்களையும் நாசம் செய்யும்படியான பலதரப்பட்ட பூச்சிகள் உற்பத்தியாகின்றன என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்த விஷயம். இதற்கு ஸ்ப்ரேயர்களும், மருந்தும் அவசியம். எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு இந்த சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு பேசுவதற்கு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI K. R. NALLASIVAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஐந்தாண்டு காலத்தில், இங்கே பட்ஜெட்டைப் பொறுத்த வரையில் விமர்சிப்பதற்கு இதுதான் கடைசி சந்தர்ப்பம் என்று நான் நினைக்கிறேன். நான்கு மாத காலத்திற்கு தயாரித்திருக்கும் பட்ஜெட்டானது எந்த விதமான உற்சாகமும் அளிக்கக்கூடியதாக இல்லை. சர்க்காருடைய கண்ணோட்டப் பிரகாரம், வோட்டு வாங்குவதற்கான அளவில் கூட இல்லை. எந்த அடிப்படையிலே பார்த்தாலும் இதில் உற்சாகம் அளிக்கக்கூடியதாக எந்த ஒரு பகுதியும் கிடையாது. ஆனால், சொல்லலாம், வெட்டிகளுக்கும், கிராமாதிகாரிகளுக்கும் மற்று முன்சீப்களுக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக சில சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கிறது என்று. குழந்தைகளுக்கு இலவசமாகப் படிக்க வசதி அளித்திருக்கிறோம் என்று சொல்லலாம். அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள் பட்டுமல்ல அவர்களுக்குள்ள அடிப்படையான பிரச்னை, அடிப்படையான கோரிக்கை, சம்பள உயர்வு. இன்றைய தினம் சம்பளம் அவர்களுக்கு 18 ரூபாயாக இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாததோ அல்ல. உணர்ந்திருக்கிறார்கள். சர்க்கார் ஏதோ பள்ளிச் சலுகைகள் அளித்திருக்கிறோம் என்று சொல்லுவது கண்துடைப்பு வித்தை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்ததாகச் தெரிகிறதே யொழிய, உண்மையிலேயே கஷ்டப்படுகிறவர்களுக்கு நிவாரணம் அளிப்பதாகத் தெரியவில்லை. என். ஜி. ஓக்கள் நீண்ட நாளாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு சர்க்காருடைய வருமானம் போதவில்லை, மத்திய சர்க்கார் அதிகப்படியாக உதவ வேண்டுமென்று சொல்லப்படுகிறதே தவிர, சரியான முயற்சி எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தாவிட்டாலும் கூட, காந்தீயத்தில் நம்பிக்கையுடையவர்கள் என்று சொல்லக்கூடிய, சோஷயலிசத்தில் நம்பிக்கை உடையவர்கள் என்று சொல்லக்கூடிய மந்திரிகள் தங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடாதா? மந்திரிகள் ஆயிரக்கணக்காக வாங்கிக் கொண்டிருக்கும் சம்பளத்தையாவது ஓரளவு குறைத்துக் கொண்டு, என். ஜி. ஓக்களின் சம்பளத்தைக் உயர்த்தக் கூடாதா? அப்படிச் செய்யாமல் மாதம் பூராவும் உழைத்து வரும் இவர்களை ரூபாய் 50, ரூபாய் 100 என்று கொடுத்து பெண்டு பிள்ளைகளை வைத்துக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லிக்கொண்டும், தேச பக்தியைப்பற்றி

அவர்களிடம் போதிப்பதும் சரியல்ல என்பதை இந்த சர்க்கார் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், உணர்ந்துக் கொள்ள கூடிய காலம் சமீபத்தில் இருக்கிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழே சமுதாய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பல இடங்களில் ஜனங்களின் ஒத்துழைப்போடு ரோடுகள் போடப் படுகின்றன, கிணறுகள் வெட்டப்படுகின்றன, பள்ளிக்கூடங்கள் கட்டுவது போன்றகாரியங்கள் ஆங்காங்கே நடந்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் சில இடங்களில் ஜனங்களுடைய உற்சாகத்தைக் குறைக்கக்கூடிய காரியங்களும் நடந்து வருகின்றன. சம்பந்தப்பட்ட மந்திரி இப்பொழுது இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். கிணறு வெட்டுவதற்கோ, ரோடுகள் போடுவதற்கோ கிராமத்து ஜனங்கள் தங்கள் பகுதியைக் கொடுத்திருக்கிறார்கள். சர்க்காருடைய பகுதியைக் கொடுப்பார்கள் என்று நம்பி, பல இடங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வாக்குறுதி அளித்ததன் பேரில், ஜனங்கள் ஆயிரக்கணக்கான ரூபாயை செலவு செய்து ரோடுகள் போட்டிருக்கிறார்கள், கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். ஆனால் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவைகளுக்காக சர்க்கார் கொடுக்கவேண்டிய தொகை பல இடங்களில் இன்னும் கொடுக்கப்படவே இல்லை. சர்க்கார் திட்டங்களை நடத்துவார்கள் என்ற நம்பிக்கையின் மீது ஆயிரம் இரண்டாயிரம் என்று வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால், "நாளைக்கு வரப்போகிறது, சர்க்கார் இந்த பட்ஜெட்டிலே சாங்ஷன் செய்யப் போகிறது" என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் கிராமத்திலே உள்ள நல்ல மனிதர்களை யோக்கியப் பொறுப்பற்றவர்களாக ஆக்கக் கூடிய நிலையை சர்க்கார் உண்டுபண்ணும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எங்கெங்கே ஜனங்கள் தங்கள் பகுதியைத் தவிர மேலும் பணம் திரட்டிக் கொடுத்திருந்து அதற்கு சர்க்கார் கொடுக்கவேண்டியது எதாவது பாக்கி இருந்தால் சர்க்கார் அதைக் கொடுப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் ஏதோதோ வரப்போகிறது என்று சர்க்கார் சொன்னார்கள். அது இப்போதே தெளிவாகத் தெரிய ஆரம்பித்து விட்டது. முன்பு, கிராமத்திலே ஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள சிறிதளவாவது சந்தர்ப்பம் இருந்தது, கிணறு வெட்டிக்கொள்ள சந்தர்ப்பம் இருந்தது, ரோடுகள் போட்டுக்கொள்ள சந்தர்ப்பம் இருந்தது. ஆனால், இப்பொழுது எங்கள் பகுதியாகிய, கீழ் பவானி பகுதியிலே 63 லட்ச ரூபாய் ஐந்து வருஷங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை. இன்றைக்கு அவைகளெல்லாம் பிளாக் டெவலப்மெண்டு என்று பிரித்து, ஒவ்வொரு ப்ளாக்குக்கும் 25 ஆயிரம் ரூபாய் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. பழைய அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடையாது. காரணம் பணம் போதாமலிருப்பதுதான். ஒரு ப்ளாக்குக்கு 25 ஆயிரம் வீதம் ஒட்டு மொத்தமாக மூன்று தாலூகாக்களுக்கும் சேர்ந்து சுமார் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் இல்லை. அதை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடிவது கிடையாது. இதை நேரடியாகப் பார்க்க முடியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமானது கிராம ஜனங்களுக்கு உதவும்படியாக இல்லை. பெரிய பெரிய முதலாளிகளுக்கே உதவியாக இருக்கும் என்பதை நன்றாக நிரூபணம் செய்து காட்டுகிறது.

கடந்த ஐந்தாண்டு காலமாக பெரும்பாலான கட்சிகள், புறம்போக்கு நிலங்களை ஏழை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியதற்குப் பிறகு நிலச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதைப் பற்றி பிரமாண்டமாக பேசப்படுகிறது. சாதாரணமாக சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை ஹரிஜனங்களும், விவசாயிகளும் கொஞ்சம் கொஞ்சம் புறம்போக்கு நிலம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஐந்தாண்டுகளுக்கு முன்னால் சேலம் ஜில்லாவில்

ஏதோ 20 ஆயிரம் எக்கர்கள் நிலமில்லாத ஹரிஜனங்களுக்கு கொடுத்திருப்பதாக பத்திரிகையிலே ஒரு நாள் செய்தி வந்ததைப் பார்த்தோம். போட்ட விண்ணப்பங்களுக்கு பதில் இல்லை என்று என்னைப்போன்ற பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். உருபடியான நடவடிக்கை கிடையாது. நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கும் பிரச்னை நிச்சயம் தீர்க்கப்படவில்லை. காடுகள் வளர்க்கும் விஷயத்தில் சர்க்கார் சிரத்தை எடுத்துக் கொள்வது சரிதான். ஆனால், பொட்டல் காடாக இருக்கக்கூடிய இடங்களைக் கூட விவசாயம் செய்வதற்கு ஏழைமக்களுக்கு கொடுக்காமலிருப்பதும், அவைகளைத் தரிசாகப் போட்டு வைத்திருப்பதும் சரியல்ல. எல்லா முன்னேற்றத்தையும் விட ஜன உற்பத்தியும் ஜன முன்னேற்றமும் தினசரி பெருகிக்கொண்டிருக்கிறது. அதற்கேற்ற முறையில் சர்க்காருடைய கொள்கையை மாற்றிக் கொள்ளவேண்டும். காடே வளர்க்க முடியாத பிரதேசங்களை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

காலிங்கராயன் வாய்க்கால் உடைப்பு எடுத்ததினால் 15 நாள் வரையில் தண்ணீர் இல்லாமல் நிலங்கள் காய்ந்து இருப்பதனால் சோற்றுக்குத் திண்டாடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த வாய்க்கால் 300 வருஷங்களுக்கு முன்னால் வெட்டப்பட்ட வாய்க்கால். அதை நல்ல முறையிலே சீர்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிரஸ்தாப பிரச்னை லோயர் பவானி பிரச்னை. சர்க்கார் கல்லுப் பிள்ளையார் போல் கொஞ்சங்கூட அசையாமல், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டிய எண்ணம் கொஞ்சம்கூட இல்லாமல் நடந்துக் கொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட சட்ட சபை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். பிராந்தியத்திலே வந்து எத்தனை வாக்குறுதிகள் கொடுக்க முடியுமோ அவ்வளவையும் ஜனங்களிடத்திலே கொடுத்து பின்பு, அவைகளை நிறைவேற்றாமல் இருப்பதனால் சரியான பாடம் கற்றுக் கொள்ளத்தான் போகிறார்கள். அதில் சந்தேகமே கிடையாது. நல்ல வார்த்தைகளை பேசி இப் பிரச்னையைத் தட்டிக் கழித்துவிட முடியும் என்று இந்த சர்க்கார் நம்பி இருந்தால் அது முடியாத காரியம். இந்தப் பிரச்னை நியாயமான முறையில் ஒழுங்காகத் தீர்க்கப்படப் போவது இல்லையென்றால் சர்க்கார் எங்களை அடக்குவதற்கும் ஒடுக்குவதற்கும் தயாராகி விட வேண்டும். எங்கு பார்த்தாலும் மழை பெய்து இரண்டு பெரிய ஆபத்துக்கள் நடந்து இருக்கின்றன. எந்த புஞ்சைப் பயிரும் உருப்படாமல் நாசமாய் போய்விடும். பருத்தி வீணாகிவிடும். முப்பது ஆயிரம், 50 ஆயிரம் எக்கர் நெற்பயிர் வைத்திருக்கிறார்கள். அந்தப் பயிர்களின் கதி நாளைக்கு எப்படி இருக்கப்போகிறதோ என்று நிச்சயமாக சொல்ல முடியவில்லை. மந்திரிகள் வந்திருந்தார்கள். சட்ட சபை அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள், காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி வந்திருந்தார். ஆனால் என்ன ஆயிற்று?. ஒன்றும் ஆகவில்லை. நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை மனிதாபிமான உணர்ச்சி சம்பந்தப்பட்டப் பிரச்னையாக பார்க்க வேண்டும். இதை ஏதோ ஒரு அரசியல் பிரச்னையாக வைத்துக் கொள்ளக்கூடாது. எனக்கு ஆத்திரம் வருகிறதென்றால் நான் அங்கு இருக்கும் விவசாயி. சிறு சிறு காரியங்களை செய்துவிட்டால் ஏதோ நன்மை செய்து விட்டதாக எண்ண வேண்டாம். ஜில்லாக்களை 3, 7, 15 ஆக பிரித்துவிட்டால் மட்டும் ஒன்றும் ஆகி விடாது. மனிதப் பண்போடு பிரச்னையை தீர்க்க முன் வர வேண்டும். ஒரு சில நில பிரபுக்களை வைத்துக் கொண்டு பிரச்னையை சமாளித்து விடலாம் என்று நினைப்பது தவறு. அதனால் பிரச்னை தீர்ந்துவிடாது. விவசாயிகளுடைய கொந்தளிப்பை அடக்கி விட முடியாது. நெல் நீங்கலாக மற்ற எந்தப் பயிருக்கும் கட்டுப்பாடு இருக்காமல் செய்வதன் மூலமே பிரச்னையை சமாளிக்க முடியும். இன்னும் தீர்க்கப்படாத பிரச்னைகள் எவ்வளவோ இருக்கின்றன. கடைசிகாலத்திலாவது இந்த விவசாயிகளுடைய பிரச்னைகளை துரிதமாக தீர்த்து வைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI B. K. NALLASWAMI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவு திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். சமீப காலத்திலே பெரிய மழை பெய்ததன் காரணத்தினால், எங்களுடைய தாலுகாவில் இருக்கும் 7 தொடர்பு ஏரிகளில், 4 ஏரிகளில் தண்ணீர் நிறைந்து உடைப்பெடுத்து விவசாயத்துக்கு உபயோகப் படக்கூடிய நீரெல்லாம் வியர்த்தமாகிக்கொண்டிருக்கிறது. ஜில்லா கலெக்டர் அவர்கள் வந்து பார்த்தார்கள். ஆனால் உடைப்பை உடனடியாக அடைத்த தண்ணீரை ஏரிகளில் தேக்குவதற்கு பொறி இயல் இலாகா (என்ஜினீயரிங் இலாகா) எந்தவிதமான அவசர நடவடிக்கைகளையும் எடுத்துகொள்ளவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான்கு ஏரிகளில் தண்ணீர் தேக்கப்பட்டால் அடுத்த வருஷத்துக்கு சுமார் 2,000, 3,000 ஏகராவுக்கு நெல், கரும்பு விளையக்கூடிய அளவிலே நல்ல பாசன வசதி பவானி தாலுகாவிலே கிடைத்திருக்கும். ஆனால், அவசரமாக ஏதாவது நடவடிக்கை எடுப்பார்கள் என்று கலெக்டர் அவர்களை நேரில் கொண்டுவந்து காண்பித்தும், என்ஜினியர்கள் வந்து பார்த்ததும் கூட இன்னும் தண்ணீரை தடுத்துத் தேக்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் சமுதாயத்துக்கே பெரிய நஷ்டம் என்று சொல்லவேண்டும். இது மிகவும் முக்கியமாக கவனிக்கப் படவேண்டிய அவசர பிரச்னையாகும்.

அடுத்தபடியாக, மேட்டூர் வாய்க்கால் பிரதேசம் மிகவும் கவனிக்கப்படாமல் இருப்பதால் விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேட்டூர் கால்வாய் பிரதேசத்திலே போதுமான தண்ணீர் இருந்தாலும்கூட, என்ன பயிர் நிர்ணயம் செய்வது என்பதைப்பற்றி என்ஜினியரிங் இலாகாவுக்கும் ரெவின்யூ இலாகாவுக்கும் ஒரு நிர்ணயமான முடிவு இல்லாததனால் வருஷா வருஷம் விவசாயிகள் திண்டாட்டத்துக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறார்கள். மாற்றுப்பயிர் நடுவதா அல்லது நெல் பயிர் நடுவதா என்பது பற்றி தெளிவு இல்லாமல் விவசாயிகள் இந்த வருஷம் திண்டாடியது நம் நிதி மந்திரி அவர்களுக்கும் தெரியும். அதே நிலைமை அடுத்த வருஷமும் வருவதற்கு இருக்கிறது. மேட்டூர் தேக்கத்தில் எப்பொழுதும் தண்ணீர் நிறைந்திருந்தாலும்கூட, கொங்கு நாட்டுக்கு காவேரி நீர் முழுவதையும் பயன்படுத்தக்கூடாத முறையிலே அதிகாரிகளுடைய போக்கு இருந்துகொண்டு வருகிறது. இதை நன்றாக சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டும். மேட்டூர் தேக்கம் அநேகமாக வருஷா வருஷம் நிறைந்துதான் இருக்கிறது. பருவமழை விசேஷ காலங்களில் மட்டுமே மேட்டூர் தேக்கத்தில் தண்ணீர் நிறைவது சிறிது குறைவாக இருக்கிறது. சாதாரணமாக தண்ணீர் நிறைந்திருக்கக்கூடிய காலத்தில் நெல் பயிரிட உத்தரவிடலாம். தண்ணீர் குறைந்திருக்கிற காலத்தில் அதற்குத் தகுந்தபடி மாற்றுப் பயிர் செய்வதற்கு உத்தரவு போடலாம். இம்மாதிரி உத்திரவு இல்லாமல் நிலையற்ற நிலமை மேட்டூர் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருப்பது ஒரு துர்பாக்கியமாகும். இதை இந்த வருஷமே பரிசீலனை செய்து நெல்பயிர் சாகுபடி செய்வதற்கு அரசாங்கம் நிரந்தரமாக உத்தரவிடவேண்டியது மிகவும் அவசியம். அதோடு மேட்டூர் பிரதேசத்தில் கொப்பு வாய்க்கால்கள் சம்பந்தப்பட்டவரை ஒரு பூமியிலிருந்து மற்றொரு பூமிககு வெட்டிவிடுவதுபற்றி விவசாயிகளிடையே பல தகராறுகள் ஏற்படுகின்றன. அதனால் பல ஆயிரம் ஏகராக்கள் பயிர் செய்யப்படாமல் இருந்துகொண்டு வருகின்றன. தீர்வை வசூலிக்கப்படுவது நிற்கவில்லை. அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து சர்க்காரே அந்த கொப்பு வாய்க்கால்களை வெட்டிக்கொடுப்பதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று மகாநாடுகளில் வற்புறுத்தப்பட்டும், பல மகஜர்கள் கொடுக்கப்பட்டும்கூட, இந்த சிறிய விஷயம்கூட இன்னும் கவனிக்கப்படாமல் இருப்பது மிகவும் வருத்தத்தைத்தான் தருகிறது. இந்த வருஷம் மேட்டூர் தேக்கம் நிறைந்திருக்கிறது. இரண்டாவது வெள்ளாமைக்கு பயிரிடுவதற்கு உத்தரவு கொடுக்கவேண்டுமென்று விவசாயிகள் எல்லோரும் ஏகோபித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி முன் அறிவிப்பு

[Sri B. K. Nallaswami] [19th December 1956

ஒன்றும் கொடுக்காமல் இலாகாக்கள் தூங்கிக்கொண்டிருக்கின்றன. இதை நன்றாக பரிசீலனை செய்து முன் அறிவிப்புக் கொடுத்தால்தான் மேட்டூர் கால்வாய் பிரதேசத்தில் இரண்டாவது பயிர் செய்யமுடியும்.

அதோடு இந்தப் பிரதேசத்தில் கிணறு வெட்டுவதற்கு தடை இருந்து கொண்டிருக்கிறது. மேட்டூர் கால்வாயிலிருந்து நான்கு மாதங்களுக்குத்தான் தண்ணீர் விடுகிறார்கள். மற்ற எட்டு மாதங்களில் பூமி வரண்டுதான் இருக்கிறது. அதனால் ஒன்றும் பயிரிடமுடியவில்லை. மற்ற காலங்களிலே கிணற்றுத் தண்ணீரை உபயோகப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு கிணறு வெட்டிக்கொள்ள அனுமதி கொடுக்கவேண்டும். இதுபற்றி அந்தப் பிரதேசத்திலே கிளர்ச்சி பலமாக இருக்கிறது.

லோயர் பவானிப் பிரதேசத்தில் கிராமங்கள்தோறும் பாசனக் கமிட்டிகள் அமைக்க திட்டம் போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் மேட்டூர் கால்வாய் பிரதேசத்தைப்பற்றி கவனிப்பே இல்லை, கிராமந்தோறும் பாசன கமிட்டிகள் அமைக்கவேண்டுமென்ற யோசனையை நான்தான் வெளியிட்டேன் என்று நினைக்கிறேன். பவானி தாலூகாவிலுள்ள கிராமங்களிலே இம்மாதிரி கமிட்டி உண்டா இல்லையா என்பது தெரியவில்லை. என் இந்தப் பிரதேசத்திற்குமட்டும் சர்க்கார் இம்மாதிரி கமிட்டிகளை அமைக்க உத்தரவு போடவில்லை? நீர்ப்பாசன கமிட்டிகளை மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்திலும் அமைக்கவேண்டியது ரொம்பவும் அவசியம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு ரொம்ப முக்கியமான வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், இந்தப் பிரதேசத்தில் கால்வாய் ஓரத்தில் இருக்கக்கூடிய ஹரிஜனச் சேரிகளில் பலருடைய வீடுகள் விழுந்துவிட்டன. இதனால் பல ஹரிஜனங்கள் வீடுகளை இழந்து தவிக்கிறார்கள். வருஷம் மூன்றாகியும், இவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கோ அல்லது வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கோ இதுவரையில் துரிதமான முயற்சிகள் எதுவும் செய்யப்படவில்லை. சட்ட சபையிலே நானும் கனம் மாணிக்கம் அவர்களும் இதைப் பற்றி கேள்விகள் கேட்கும்போதுமட்டும் பேபர்கள் நகர்கின்றனவே யொழிய பாக்கி சமயத்தில் இலாகாக்கள் தூங்கிக்கொண்டிருக்கின்றன. மூன்று ஆண்டுகளாக ஹரிஜனங்கள் சதுப்பு நிலத்திலே குடியிருந்துகொண்டும், சிலர் வீடுகளை இழந்து கஷ்டப்பட்டுக்கொண்டுமிருக்கிறார்கள். நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு இன்னமும் எந்த முடிவான நடவடிக்கையும் அல்லது துரிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரதேசத்தில் நில உரம்புகள் ஏற்பட்டிருப்பதால் அபாய நிலைமையை தடுப்பதற்கு வேண்டி ஹரிஜனங்களுக்கு வீட்டுவசதி செய்துகொடுப்பதற்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் அதிகாரத்தை பிரயோகிப்பதற்கு கலெக்டர் அவர்களுக்கு சர்க்கார் உத்தரவிடவேண்டும்.

கடைசியாக, லோயர் பவானிப் பிரதேசத்தில் ¼ தீர்வை, ½ தீர்வை; ¾ தீர்வை, முழுத்தீர்வை என்று பாகுபாடு செய்து வசூலிக்கிறார்கள். ஆனால் மேட்டூர் பிரதேசத்தில் மட்டும் முழுத் தீர்வையே வசூலிக்கிறார்கள். இதுபற்றி பல மகஜர்களும், ஸ்டே ஆர்டர்களும் போட்டும்கூட அரசாங்கம் இது விஷயமாக இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். மக்கள் முழுத்தீர்வை செலுத்தவேண்டுமா, அரைத் தீர்வை செலுத்தவேண்டுமா என்று புரிந்துகொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். இதை உடனடியாக அரசாங்கம் கவனிக்கவேண்டும். பவானி தாலூகாவை மாற்றாந்தாய் குழந்தைபோல் நினைக்காமல், அதையும் அரசாங்கம் சரிவர கவனித்து அங்குள்ள விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்காக கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

19th December 1956]

SRI V. GOPALA GOUNDER : Mr. Deputy Speaker, Sir, I am glad I am given an opportunity to take part in this discussion. 10-32 a.m.
First I should thank the Hon. Minister for Finance for the presentation of the Budget and the careful manner in which it has been prepared so as to avoid criticism by any section of the people. Of course he said in his speech that the burden lay on the coming Council of Ministers and not on the present Council of Ministers to bridge the gulf. Anyway he has prepared the Budget in such a way that it may not offend any section or interest of the public. He has also stated frankly what he has spent during the year and what may be required for the coming year. Special mention has been made of the amount spent on cyclone relief which we all welcome. He has also made mention of the relief proposed to be given to the village officers and all that. But the half-hearted way in which he made mention about the relief given to the N.G.Os. is a matter for consideration. Of course he says that full relief would be given to them provided the Centre came forward with aid. Let us wait and see how he is going to manage and implement it before the end of the year. These are a few observations with regard to the Budget proposals.

I should like to take this opportunity to express one or two things about the judicial administration in the districts. I find from reports that there is a sort of feeling prevailing among the judicial officers serving in the districts. The District Magistrates are appointed not as District Magistrates but as Sub-Judges. They are recruited from the cadre of Sub-Judges. In the matter of these appointments it is said that the High Court has the power of selection and the Government has the power of appointment. In the matter of selection the High Court does not seem to follow any policy. They do it at random, and in the way amenable to them. They do not observe any principle of seniority and all that. It is said also that the District Magistrates are paid some extra remuneration but yet in the matter of appointment, senior Sub-Judges are not given the chance. Only the junior-most is given the chance of being appointed as District Magistrate with better pay and all that. That is a thing which is causing some discontent among the Sub-Judges. I think that such a sort of discontent among them is not desirable in the interest of efficient judicial administration in the districts.

The second thing is one which I want to point out to the Hon. Minister for Prohibition. Perhaps he is aware that there is some difficulty in regard to the trial of the cases coming under the Prohibition Act after the amendment of the Criminal Procedure Code. Different procedures are adopted, under the Criminal Procedure Code in respect of cases instituted on Police complaints and those on complaints of private parties. Under the Prohibition Act they are to be treated as complaints and the procedure prescribed under that Act has to be observed in the trial of those cases. Now that the Prohibition Department has been merged with me. Police

[Sri V. Gopala Gounder] [19th December 1956]

Department, the Police Officers are in charge of these Prohibition cases and they are investigating the offences under the Code of Criminal Procedure as they have to follow certain procedures prescribed under that Code. Therefore, there is some difficulty in the matter of procedure and the Courts find it difficult to follow the particular procedure that has to be adopted in the trial of these cases. When a case went up to the High Court they observed that unless the Act is amended it is not possible to specify the particular procedure to be adopted by the Police Officers in-charge of Prohibition cases. I thing, therefore, that the Government should see to it that the Act is amended so as to be in conformity with the Code of Criminal Procedure so that there may not be any difficulty in the matter of procedure to be adopted in the trial of these cases. That is the second point which I wanted to refer to.

The third point on which I wish to say a few words is in respect of the Backward Classes. So far as the Backward Classes are concerned, we do not know where we are. Sometime back it was said that the Backward Classes Commission would meet at Delhi and send their questionnaire and all that. Some questionnaire was received and answers also sent. But so far nothing is known about the proceedings of the Commission. We do not know what sort of recommendation the State Government have made with regard to this matter. I hope that the Government would try to see that the recommendations made by them, whatever they are, are implemented soon so that the cry for more concessions to be given to the Backward Classes will be met in a satisfactory way.

Lastly, Sir, I wish to submit one thing about the Harijan Welfare Department. So far as I could see the department is always crying for funds. They say that they are not able to meet the demands of the people who come to them with requests for aid. Several institutions run with the aid given by the department also need more funds. I would like to see the Government being more liberal in making grants to the Harijan Welfare Department so that the department could satisfy the interests of one and all.

With these few words I resume my seat.

10-40 a.m. SRI A. M. RATHNASWAMY : Mr. Deputy Speaker, Sir, I am really happy for the display of sincerity and seriousness shown by our Government in improving the lot of the low-paid officials in our Government. Sir, as our goal is the creation of a Socialistic pattern of society in our country, it is but proper and fitting that our Government have thought of improving the lot of the people from the bottom to the top instead of from the top to the bottom. This is what any Government which have the interest of the down-trodden people at heart would do and this is exactly what our Madras Government have done and therefore our Government deserve not merely the support of hon. Members on this side but also hon. Members on the other side.

19th December 1956] [Sri A. M. Rathnaswamy]

Sir, I very well remember what the then Chief Minister of our Madras Government said on the floor of this House when some question was raised as to why the Government should not abolish the age-old institution of 'Village Munsif'. He said that if our Government launched upon the step of abolishing the institution of 'Village Munsif', the whole administrative machinery would collapse. So it is really very admirable on the part of our Government to have thought of improving the economic conditions and also the actual living conditions of not merely the village officials but also teachers and others.

Sir, another thing to which I would like to draw the attention of our Government is the condition of the non-Gazetted Officers. I quite appreciate the financial limitations of our Government although they have a desire to improve the economic conditions of the non-gazetted staff. That is why I ardently wish that our Government must make an effective approach to the Central Government to see that some kind of assistance is given to this Government in raising the salaries of the non-gazetted officers. Sir, the disparity in the pay scales of local Government officials and the Central Government officials is creating considerable discontent in the minds of the non-gazetted staff in our State and I see from the newspapers that considerable agitation has been started by the non-gazetted staff even to the extent of jeopardising the peaceful going of the administrative machinery. This is really a very dangerous thing and I would only request our Government to see that sufficient pressure is brought to bear upon the Central Government to see that some adequate assistance is given to our Government so that they can do something to alleviate the sufferings of the non-gazetted staff.

Sir, another thing to which I should like to draw the attention of our Government is in respect of the slum problem in the Madras City. This has become a very stale question. Now and then we hear statements of persons like Pandit Jawaharlal Nehru saying that the whole slums should be burnt because that is exactly the appalling conditions in which most of the slums are in our City and elsewhere in the State. I am afraid that our Government have not taken adequate steps to improve the housing position in our State. There at the Centre I find that the Central Government have taken adequate measures in building an enormous number of buildings in Delhi and other places which come under the direct control of the Central Government. Enormous money is being spent in raising a number of buildings and that way they have tackled in a very vital way the very question of refugees in the Delhi State. I do not see any reason why our Government should not bestow adequate attention in regard to this question and I would respectfully suggest to our Government to create a special portfolio of housing because the housing question is a very vital question. Unless our Government take adequate steps to tackle the essential problems of the citizens like providing them adequate housing

facilities, adequate medical relief and food and the like, I am afraid a lot of complications would crop up and that way the peaceful going of the administrative machinery would be considerably jeopardised.

Sir, I have got another suggestion to make to our Government. If they spent a little more money in getting the slums cleaned, remodelling them and introducing all the necessary amenities essential for the human existence, I can assure the Government that they would go a long way in tackling the question of untouchability. Many Caste Hindus would feel inclined to go there and settle in the midst of the Harijan residents. After all, I find that certain State Governments like the Madhya Pradesh have gone a very long way in tackling this question of untouchability. Sir, I may tell the Government that this caste system and the problem of untouchability is still lingering in our society in our country and unless very adequate and very effective steps are taken to tackle this question of untouchability, I am afraid that whatever projects and plans we may execute, those projects and plans would not be a complete success.

Sir, I find that hundreds of people are loitering about in the slums and there is a considerable degree of unemployment and so much so the Harijans fall a prey to certain vicious propaganda made by other parties and reactionary groups in our country. Therefore, their leisure hours should be usefully employed and it is really very heartening to find that our Madras Government have come forward to improve the position of the cottage industries in our State. In this connection, I would respectfully suggest to our Government to create opportunities of putting up these cottage industries in the slums themselves as far as possible so that the leisure hours of the Harijan population who could be usefully employed can be utilized in a very better way. In that way, we can create some employment facilities for the idle population of the Harijan community in the slums.

10-50 a.m. It was very heartening to find that our Chief Minister the Hon. Sri K. Kamraj Nadar, had stated that all school-going children belonging to poorer sections of the community should be given free meals at least once a day. It is really regrettable that the Government have not come forward to fulfil the pledge given by the Chief Minister . . .

DEPUTY SPEAKER : The hon. Member's time is over . .

SRI A. M. RATHNASWAMY : Just a word more and I will finish my speech. It is essential that our Government spend an adequate amount for keeping our children healthy so that in the long run they will become useful citizens of the State.

With regard to the location of Fair Price Shops, I would respectfully suggest to the Government that they should locate some of those shops in the slum areas so that Caste Hindus living near that area can go and purchase from those fair price shops, and in that way enmity between the Caste Hindus and Harijans of the slum areas can be established.

SRI C. KANDASAMY : உதவி சபாநாயகர் அவர்களே இப்பொழுது விவாதிக்கப்படும் இடைக்கால பட்ஜெட்டானது, விரிவான கொள்கைகள் சம்பந்தப்பட்டவரையில் விவாதிப்பதற்கான அவசியமில்லை. சென்ற நான்காண்டுகளின் தொடர்ச்சியாகத்தான், இதே அரசாங்கத்தின் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டுதான் இந்த பட்ஜெட்டும் வந்திருக்கிறது. சென்ற ஐந்தாண்டுகளாக ஒவ்வொரு தடவையும் பற்றுக்குறை பட்ஜட்டை சரிக்கட்ட புது வரிகள் விதிப்பது என்ற முறையில்தான் இவ்வரசாங்கத்தின் இயந்திரம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்று நான் இச்சந்தர்ப்பத்தில் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். இது மாறவேண்டுமானால், அரசாங்கத்தின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். அம்மாற்றங்கள் எந்த அளவிற்கு ஏற்படுமென்பதை நாம் பொறுத்துத்தான் பார்க்கவேண்டியிருக்கிறது. ஏற்கெனவே (Finance Commission) தலைவர் கூறியிருக்கிறார். ஒரு ராஜ்யத்திலும் பற்றுக்குறையான பட்ஜெட்டை அனுமதிக்கக்கூடாது. கூடுமான வரையில் வரவு செலவை சரிக்கட்டவேண்டுமென்றும் அவர் சொல்லியிருக்கிறார். அதைப்பார்க்கும்போது அது எந்த முறையிலும் புது வரி விதிப்பில்தான் கொண்டுவிடும். தேசத்தில் ஏற்படக்கூடிய ஐச்வரிய அதிகரிப்பானது எப்படி பரவலாக விநியோகிக்கப்படவேண்டுமென்பதுபோன்ற விஷயங்களை வரப்போகிற அசெம்பளி நன்கு கவனித்தால், வரப்போகிற அரசாங்கம் அதை நன்கு கவனித்து நாட்டில் இருக்கக்கூடிய மக்களின் வேதனையை குறைக்கும் என்று நான் கருதுகிறேன். அடுத்தபடியாக, இன்றைக்கு நம் நாட்டில் இருக்கக்கூடிய, நமது தமிழ் நாட்டிலிருக்கிற பிரச்னைகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிவிட்டு எனது பிரசங்கத்தைமுடித்துக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். விலைவாசியைப் பொறுத்தமட்டில், அரிசியின் விலைப் படி 11 அணா என்று விற்கப்படுகிறது. அதற்காக நாம் மகிழ்ச்சி அடையலாம். இருந்தாலும், ஒவ்வொரு வருடமும் ஸ்திரமற்ற தன்மையில் விலைவாசி இருப்பது எந்த அளவிற்கு ஏழை மக்களை, விவசாய மக்களை பாதிக்கிறது. எந்த அளவிற்கு அது சின்னஞ்சிறு ஊதியம் பெற்று வரும் மக்களைப் பாதிக்கிறது என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன். அரிசி விலை இப்பொழுது 11 அணாவிற்கு வந்து விட்டது என்பதில் நாம் மகிழ்ச்சி அடைவதில் யாதொரு பிரயோஜனமுமில்லை யென்பதுதான் என் அபிப்பிராயம். அதற்கு காரணம் உண்டு. ஐந்தாறு மாதங்கள் அரிசிவிலை குறைந்து விற்பதும், ஐந்தாறு மாதம் விலை மிக உயர்ந்து விற்பதுமானால் அது சாதாரண மக்களை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை இந்த விலைவாசி உயர்வு தாழ்வு எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அந்த விலைவாசியை ஸ்திரப்படுத்தவேண்டியதற்குள்ள நடவடிக்கைகள் என்னென்ன எடுக்கவேண்டும், எப்படி யெப்படி எடுக்க வேண்டுமென்பதை யெல்லாம் பற்றி சிந்தித்து அரசாங்கம் அதற்காவன செய்யவேண்டுமென்று நான் சர்க்காரைக்கேட்டுக் கொள்கிறேன். சாதாரண 30 ரூபாய் முதல் ஐம்பது ரூபாய் வரை சம்பாதிக்கக் கூடிய குமாஸ்தாக்களோ, அல்லது நாலைந்து ஏக்கரா நிலத்தை வைத்துக்கொண்டு சாகுபடி செய்து வரும் குடியானவனோ அல்லது விவசாயக் கூலியோ அல்லது இவர்களைப்போன்று இருக்கக்கூடியவர்கள் தங்களுக்கு கிடைப்பதைக்கொண்டு இப்படி இப்படி கழிக்கலாம் என்பதற்கு அதாவது ஒரு ஸ்திரமான வாழ்க்கை அஸ்திவாரம் இருக்கிறது என்ற தைரியத்தை அவர்களுக்குக் கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டும்.

அடுத்தபடியாக இன்று உத்தியோகஸ்தர்களை எடுத்துக்கொண்டு பார்ப்போமேயானால் மேலிலிருந்து கொண்டு, இன்று Secretary-லும்கூட அதாவது நிர்வாக பதவியில் இருக்கக் கூடியவர்களைமூன்று வருடங்களுக்கு ஒரு முறை, வேறு இடங்களுக்கு மாற்றுவது அல்லது வேறு டிப்பார்ட்மெண்ட்டுக்கு மாற்றுவது போன்றதொரு நடைமுறை இருந்து கொண்டு வருகிறது என்று நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், சமீப காலத்தில் மூன்று வருடங்களுக்கு மேற்பட்டுக் ஒருவரை அதேயிடத்தில்

வைத்துக்கொண்டிருக்கக்கூடிய செய்கை எனது கவனத்தில் வந்திருக்கிறது. அதன் காரணமாக நிர்வாகம் பாதிக்கப்படுகிறது. ஊழலும் அங்கு மலிகிறது. ஆகவே, அவர் **Secretary** இருந்தாலும் சரி, **Assistant Secretary** இருந்தாலும் சரி, மூன்று வருடங்களுக்கு மேல் எந்த உத்தியோகஸ்தரையும் ஒரே இடத்தில் வைத்திருக்கக்கூடாது மேலிலிருந்தே இந்தமாதிரியான நடைமுறை ஆரம்பிக்கப்படவேண்டும். சமீபகாலத்தில் இதன் காரணமாக ஊழல்கள் சில ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் சொல்லலாமென்று நினைக்கிறேன். நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக சட்டம் நிறைவேற்றப்பட்டதே கஷ்டமான காரியமாயிருந்தது. அதன் பிறகு ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறுவதற்கு முன்னால் பெரிய கிளர்ச்சியொன்று நடந்தது. அதற்குப் பிறகு அறுவடை ஆரம்பமாகிவிட்டது. செம்பா அறுவடை தீர்ந்து, குறுவை அறுவடையும் தீர்ந்து விட்டது. எட்டு மாத அறுவடையும் தொடங்கியாய் விட்டது. இப்படியிருக்கும்போது, அந்தச் சட்டத்தை இன்னும் அமலுக்குகொண்டு வராமல், அதற்கு வேண்டிய விதிகளைப் போடாமல், அதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்படாமல் இருப்பது என்று சொன்னால் இது எந்த அளவு நாட்டுப்புறங்களிலுள்ள மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கிறது என்பதை சிந்தித்துப்பார்க்கவேண்டும். நூற்றுக்கணக்கான குடியானவர்கள் இருக்கிறார்கள். பழைய வாரத்திற்கே நெல் அளிக்கவேண்டுமென்று உடமஸ்தர்கள் சொல்வதும், குடியானவர்கள் அதற்கு மறுப்பதும் ஆங்காங்கே குமுறிக்கொண்டிருக்கிறது என்பதையும் கவனத்தில் வைத்துக்கொண்டு வேண்டிய விதிகளை இயற்றி மற்றுமுள்ள நடவடிக்கைகளையும் அதிவேகத்தில் எடுக்கவேண்டுமென்று நான் இச்சர்க்காரை இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு மிராசுதார்கள், இன்றைய தினம் ஆர்பாட்டம் செய்கிறார்கள். அதோடு நமது ராஜ்யத்திலுள்ள சில பத்திரிகைகளும், மொட்டைத் தலைக்கும் முழங்காலிற்கும் முடிச்சுப்போடுவது போல் இதையும், நிலச் சீர்திருத்தத்தையும் பற்றி எழுதி மோசமான அளவிற்கு மக்களின் மனதை தவறான பாதையில் இழுத்துச் செல்கிறார்கள். சில மிராசுதார்கள் கிளர்ச்சி செய்வதும், வரப் போகும் தேர்தலில் சர்க்கார் கட்சியை எதிர்க்கப் போவதாகவும் சொல்வதெற்கெல்லாம் காரணம் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயங்குவதேயாகும். ஆகவே, உடனடியாக வார நிர்ணயம் ஏற்பட்டால் இத்தகைய கிளர்ச்சிகளெல்லாம் உடனடி ஒடுங்கிப் போய்விடுமென்று நான் இச்சந்தர்ப்பத்தில் இங்கு எடுத்தும் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடுயாக, என்னுடைய தொகுதி சம்பந்தமாக சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். முத்துப்பேட்டைக்கும் பட்டுக்கோட்டைக்கும் மத்தியில் புயல் அடித்த காலத்தில் பெண்ணையார் பாலம் இடிந்து விழுந்து விட்டது. ஒரு வருட காலமாகியும் கூட அது கட்டப்படவில்லை. உடனடியாக அதைக் கட்டவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். திருத்துறைப்பூண்டி தாலுகாவிற்கும் பட்டுக்கோட்டை தாலுகாவிற்கும் இடையேயுள்ள போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதை உடனடியாகக் கட்ட வேண்டிய ஏற்பாடுகள் செய்வதின் மூலம் இரண்டு தாலுகாக்களுக்கு மிடையேயுள்ள மக்களுக்கு இருக்கக் கூடிய தொடர்பும் சரிவர இயங்கக் கூடிய நிலைமை ஏற்படுமென்று இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். திருத்துறைப்பூண்டியில் ஒரு கிராமத்தில் 750 ஏக்கரா நிலங்கள் ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்டது. அது வரண்ட பிரதேசமாகுமென்ற நிலையிலே நீர்பாசனத்திற்காக பணம் ஒதுக்கி வாய்க்கால்கள் முதலியன கட்டி அந்நிலங்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும். அதற்காக வேண்டி 1951–ம் வருட பட்ஜெட்டில்

அதற்கு ஒரு திட்டம் வகுத்து பணம் ஒதுக்கியிருந்தும், ஆறு வருடங்களாகியும் கூட அந்தத் திட்டம் அமலுக்கு கொண்டுவரப் படவில்லை. 250, 300 ஏக்கர் நிலங்கள் தண்ணீர் இல்லாமல் வற்றிக் கொண்டிருக்கிறது. இது ஒரு லாபகரமான திட்டமுமாகும். இதைப்பற்றி என்ஜினியரிங் டிப்பார்ட்மெண்டைக் கேட்டபோது, அவர்கள் திட்டம் போட்டு அனுப்பியாகிவிட்டது. (**Government sanction**)–ஐ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதைக் கூடிய சீக்கிரம் நிறைவேற்றிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அடுத்தபடியாக, விவசாய இலாகா சம்பந்தமாக சில விஷயங்கள் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய தினம் **Tractor**–களோ, பம்புகளோ விநியோகிக்கக் கூடிய அதிகாரம் ஒருவரிடம் இருக்கிறது. டிராக்டர்கள் சம்பந்தமாக பாரபட்சம் காட்டப்படுகிறது என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. மந்திரியவர்களுக்கு தனியாக அது சம்பந்தப்பட்ட சம்பவத்தைப்பற்றி விரிவாக எழுதிக் கொடுக்க விரும்புகிறேன். இங்கே ஊர், பேரைச்சொல்ல நான் விரும்பவில்லை. சென்ற வருடம் டிராக்டருக்காக மனுக் கொடுத்த ஒருவர், போதுமான யோக்கியதையுடையவர், ஊக்கத்தோடு விவசாயம் செய்பவர், ஒரு டிராக்டர் வைத்துக்கொள்ள தேவையான நிலம் உடையவர் என்றெல்லாம் இருந்தபோதிலும் கூட அவருக்குக் கொடுக்காது, உடனடியாக, மனுச்செய்தவுடனேயே வேறொருவருக்கு கொடுக்கப்பட்டது. செல்வாக்குள்ளவர்களுக்குத்தான் முன்பாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இம்மாதிரி பாரபட்சம் இருக்கவே கூடாது அல்லது அதற்குத்தக்க காரணம் இருக்க வேண்டும். இது சம்பந்தமாக விவசாய மந்திரிக்கு எழுதலாம் என்று நினைக்கிறேன். இம்மாதிரியான காரியங்கள் நடக்கிறது என்று தான் சொல்கிறேன். போலீஸ் தரப்பில் கூட இந்த விதமான நிலைமை மாறிவருகிறது ; அவர்களும் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள் என்ற விஷயத்தை நான் ஓரளவு ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அத்துமீறி நடக்கக் கூடிய மனப்பான்மை சில அதிகாரிகளிடம் இருக்கத்தான் இருக்கிறது. நான் குறிப்பாக சொல்வது, இரண்டு **Sub-Inspector**–கள் மீது கேவலமான குற்றச்சாட்டுகள் தாக்கப் பட்டிருக்கிறது. பெண்களிடம் ஒழுங்கீனமான முறையில் நடந்து இருக்கிறார்கள். அவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

கடைசியாக, இந்த பட்ஜெட் சமபந்தமாக, இதில் இருக்கக் கூடிய மற்ற விஷயங்களைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டின் அடிப்படையில்தான் அடுத்த பட்ஜெட் ஏற்படுத்தப்படும். இனி வரப்போகும் அரசாங்கம் இந்த நாட்டின் நல்வாழ்விற்காக கடந்த 9 வருடப் படிப்பினையை மனதில் கொண்டு மக்களின் வறுமையைத் துடைக்க என்னென்ன அவசியமோ அவைகளையெல்லாம் தயங்காது செய்யும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(இந்தச் சமயத்தில் ஸ்ரீ. V. K. ராமசாமி முதலியார் தலைமை வகித்தார்.)

Sri N. RATHINA GOUNDER : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 11-02 a.m.
மதிப்பிற்குரிய நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்த இந்த குறுகிய கால பட்ஜெட்டைப் பார்க்கும்போது அதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டுவரும் சலுகை, மதம் மாறியவர்களுக்கும் உண்டு என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இவர்கள் ஏன் மதம் மாறினார்கள் என்றால் மதம் மாறிய ஹிந்துக்கள் ஹிந்து மதத்தினால் பல விதமான கொடுமைகளுக்குள்ளானார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. என் போன்றவர்கள் ஹிந்து மதத்தினால் ஏற்படும் கொடுமை காரணமாக ஹிந்து மதம் மக்களால் வெறுக்கப்பட்டு நாளடைவில் அழிந்துவிடுமோ என்று அஞ்சினோம். அன்றும் இந்த மாதிரி கொடுமைகள் இருந்தன, இன்றும் இருந்து கொண்டிருக்கின்றன.

அதைப்பற்றி இப்போது பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லை என்று நினைக்கிறேன். தாழ்த்தப் பட்டவர்களுக்கும் மதம் மாறியவர்களுக்கும் ஒரே விதமான சலுகை என்பதை பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். மதிப்பிற்குரிய மந்திரியவர்கள் இந்த முறை தன்னுடைய பட்ஜெட் உரையை தமிழில் தயாரித்து, தமிழில் பேச முன் வந்ததற்காக மதிப்பிற்குரிய மந்திரி அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். மந்திரி அவர்கள் தமிழில் பேச வேண்டும் என்பதை உணர்ந்து விட்டதற்காக நான் மகிழ்ச்சி கொள்ளுகிறேன். அதோடு நம் நாட்டுக்கு "தமிழ் நாடு" என்று பெயர் வைக்க வேண்டும் என்பதையும் அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்கான முதற்படிதான் இது என்று எண்ணுகிறேன். அது மாத்திரமல்ல, இந்த ஐந்தாண்டு ஆட்சியில் நாம் யாவரும் இந்த சட்டசபையில் இருந்து வீட்டுக்கு திரும்ப வேண்டிய சமயம் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த சர்க்கார் தங்களுடைய ஆட்சி காலத்திலேயே தமிழ்நாடு என்று பெயர் வைத்து விட்டால் இந்த ஆட்சி காலத்திலேயே நமக்கு அந்த நல்ல பெயர் கிடைக்கும். இல்லாவிட்டால் இனி வருங்காலத்தில் வரப்போகும் ஆட்சியாளர்கள் தமிழ் நாடு என்று பெயர் வைத்தால் அந்த நல்ல பேர் அவர்களுக்குத்தான் போய் சேரும். ஆகையால் இந்த ஆட்சி காலத்திலேயே இந்த நாட்டுக்கு தமிழ் நாடு என்று பெயர் வைத்து இருப்பதாக சீக்கிரத்திலேயே ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இங்கே இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் சென்ற ஐந்து வருடமாக சட்டசபையில் இருந்துவிட்டு இப்போது தங்களுடைய ஊருக்கு போக வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதை அடுத்து பொது தேர்தலும் வரப்போகிறது. இதில் பலர் பொது தேர்தலுக்கு நிற்கலாம். ஆதலால் இனி திரும்பி பொது மக்களிடத்தில் போவதற்கே சிலர் அஞ்சுகின்றனர், என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நாம் வோட்டு பெற்றுக்கொண்டு சட்டசபைக்கு வந்தபோது மக்களிடம் சொல்லிவிட்டு வந்த உறுதி மொழிகளில் பல பலவற்றை இதுவரையிலும் நிறைவேற்றி வைக்க முடியாமல் இருந்து கொண்டிருக்கின்றன. கவர்ன்மெண்டார் இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களை ஆரம்பித்து இருக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் பலவிதமான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட போவதாக சொல்லப்படுகிறது. என்னுடைய தொகுதியை பொறுத்த வரையில் அங்கு ஓரளவு வேலைகள் நடந்துள்ளன. அதற்கு கவர்ன்மெண்டாருக்கு என்னுடைய பாராட்டு உரித்தாகுக. பல இடங்களில் பிளாக் டெவலப்மெண்ட் திட்டத்தின் கீழ் வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. கம்யூனிட்டி பிராஜக்ட், கம்யூனிடி டெவலப்மெண்ட், தேசீய விஸ்தரிப்பு திட்டம், (என். ஈ. எஸ். பிளாக்), இவ்விதமான மூன்றும் ஓரளவு வேலை செய்து வருகின்றன. ஆனால் இப்போது இந்த திட்டங்களில் இருக்கக் கூடிய ஆபீஸர்கள் சரியாக வேலை செய்வதில்லை என்று கூறப்பட்டு வருகிறது. அதாவது சாதாரணமாக ஒரு காரியத்திற்கு பணம் மக்களுக்கு கடனாக கிடைக்க வேண்டுமென்றால் அந்த ஆபீஸர்களுக்கு 10% கொடுத்தால் ஒழிய லோன் ஸாங்ஷன் (loan sanction) செய்வதில்லை என்று கிராமத்தார் முறையிட்டு கொண்டிருக்கிறார்கள். ஆகவே கவர்ன்மெண்ட் மக்களுக்கு கடனாக கொடுக்கக்கூடிய பணம் அவர்களிடம் சரியாக போய் கிடைப்பதில்லை என்று தெரியவருகிறது. ஆகவே இந்த மாதிரி காரியங்களுக்கு நேர்மையான ஆபீஸர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் சாதாரண மக்களுக்கு வேண்டிய கடன் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். இதற்கு கவர்ன்மெண்ட் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இன்று சமூகத்தில் தாழ்ந்த தரத்தில் இருக்கக்கூடிய தோட்டிகளுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்று நண்பர் பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னது மாதிரி இப்போது வீணாக நியமிக்கப்பட்டிருக்கும் கிராம சேவக் என்ற உத்தியோகஸ்தர்களை நிறுத்திவிட்டு அவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளங்களை கொண்டு இந்த மாதிரியான குறைந்த சம்பளங்கள் உள்ள தோட்டிகளுக்கும், கிராம முனிசீப், கர்ணம் போன்ற உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுத்தால் அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்

தினது போலாகும். அவர்களுக்கும் ஏற்கெனவே சம்பளம் போதாது என்று புகார் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் சம்பளத்தை உயர்த்தினால் அவர்கள் கூடுதலாக வேலையும் செய்வார்கள். கிராமசேவக்குகள் செய்யும் வேலையை இவர்களிடம் ஒப்படைக்கலாம். அதனால் இதற்குவேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக என்.ஜி.ஓ.க்கள் விஷயத்தில் அவர்களுக்கும் சம்பளம் போதாது என்று எங்கும் ஒரே கருத்தாக இருந்து கொண்டிருக்கிறது. அதை சர்க்கார் நன்றாக ஆலோசித்து அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்வி திட்டங்களில் பல மாறுதல் கொண்டுவரப் பட்டிருக்கிறது. கரூர் தாலூகாவை பொறுத்த வரையில் அங்கு 11 உயர்தர பாடசாலைகள் இருக்கின்றன. ஆதலால் அங்கு ஒரு காலேஜ் வேண்டும் என்று பல தடவைகள் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி இது வரை கவனிக்கப்பட்டதாக தெரியவில்லை. ஆதலால் அங்கு ஒரு காலேஜ் ஏற்படுத்தி தருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கரூர் தாலூகாவை எடுத்துக்கொண்டால் அங்கு ஐந்து ஆறுகள் ஓடுகின்றன. அப்படியிருந்தும் அது பஞ்ச பிரதேசம் என்று அழைக்கப்படும் நிலையிலுள்ளது. இது தமிழ்நாட்டில் ஆச்சரியத்தை கொடுக்கக்கூடிய விஷயமாக இருக்கும். அதாவது அங்கு காவேரி, நொய்யல், அமராவதி, நங்காஞ்சி, கொடகனாறு என்ற ஐந்து ஆறுகள் ஓடுகின்றன. அப்படியிருந்தும் அங்கு நீர்பாசனத்திற்கு தண்ணீர் கஷ்டமாகவே இருக்கிறது. இவைகளில் ஓடுகிற தண்ணீரை அந்தந்த இடங்களில் தேக்குவாரற்று வீணாகப்போய் கொண்டிருக்கிறது. இதனால் தான் அது பஞ்ச பிரதேசமாக விளங்குகிறது. இதற்காக அந்தந்த இடங்களில் அணைக் கட்டித்தர வேண்டுமென்று சர்க்காரிடம் கோரப்பட்டது. குடகனாறு, நாங்கஞ்சி, நொய்யல் முதலிய ஆறுகளில் சில அணை திட்டங்களுக்காக சர்க்கார் நல்ல தொகையை ஒதுக்கி பெரிய அணைக்கட்டுகள் கட்டி எங்கள் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும், அப்போது தான் கிராம பிராந்தியத்திலுள்ள மக்களுக்கு உதவியாக இருக்கும் என்று குறிப்பாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதல்லாமல் ஒவ்வொரு ரெவன்யூ கிராமங்களிலும் குளங்கள் தேவையாக இருக்கின்றன. அப்போது தான் மழை சமயத்தில் தண்ணீர் தேங்கி நின்று கிணறுகளிலும் ஊற்றெடுத்து பின்னால் மக்களுக்கு உதவிகரமாக இருக்கும். ஏதோ இந்த சமயத்தில் மழை பெய்தது. மழை இல்லாது வாடி வதங்கிய மக்கள் இப்போதுதான் ஒரு நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே இனியும் அவர்கள் தண்ணீர் கஷ்டமில்லாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது தவிர கரூர் தாலூகாவில் பல இடங்களில் மின்சார வசதி கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். இதற்கான அனுமதி கவெர்ன்மெண்டிலிருந்து வருவதற்கு தாமதம் ஆகிறது. ஆதலால் அந்த டிபார்மெண்டாரே கிராமம் கிராமமாக சென்று விஷயம் தெரியாமல் இருக்கும் விவசாயிகளிடமிருந்து மனு பெற்றுக்கொண்டு அதன் பேரில் மின்சார வசதி அந்தந்த இடங்களுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

Sri K. S. ARDHANARESWARA GOUNDER : கனம் தலைவர் 11.10 a.m.
அவர்களே, இந்த சபை முன் நிதி அமைச்சர் அவர்கள் வைத்திருக்கக்கூடிய இந்த குறுகிய கால வரவு செலவு திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக சேலம் ஜில்லாவை பொறுத்த வரையில் அங்கு இப்போதுதான் மக்கள் பிளாக் டெவலப்மெண்ட் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டு வரும் வேலைகளில் மிகவும் உற்சாகத்தோடு ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமங்களிலுள்ளவர்களும் அதை எப்படி பயன் படுத்திக்கொள்வது என்று புரிந்துகொண்டு வருகிறார்கள். ஆனால் அங்கு பல கிராமங்களிலும் செய்யப்படவேண்டிய வேலைகள் இன்னும் செய்யப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அதற்கான பணம்

[Sri K. S. Ardhanareswara Gounder] [19th December 1956

மத்திய சர்க்காரிலிருந்து கிடைக்கவில்லை என்றால் இனி கிடைப்பது கஷ்டமாக தீரும், இப்போது டிசம்பர் மாதம் ஆகப்போகிறது. இனி கூடிய சீக்கிரத்திலேயே இந்த பணம் அனுமதிக்கப்பட்டு கிடைத்தால் உதவிகரமாய் இருக்கும். அதுவும் இப்போது அங்குள்ள கிராம மக்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த சமயத்தில் இந்தமாதிரி வேலைகளை துவக்கினால் அவர்களுக்கு உதவியாய் இருக்கும். இதல்லாமல் மேலும் பல திட்டங்களுக்கு என்று பல லட்சக்கணக்கில் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இவை சரியாக செலவழிக்கப்படவில்லை. இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிதி மந்திரி அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். அடுத்தபடியாக மேட்டூர் தாலூகாவில் கடந்த சில மாதங்களாக என்.ஈ.எஸ் பிளாக் செயலாற்றி வருகிறது. ஆனால் அவற்றின் கீழ் வேலை செய்வதற்கு வேண்டிய பண அனுமதியும் உத்தரவும் அட்வைசரி கமிட்டிக்கு அனுப்பப்பட்டு அதிலிருந்து உத்தரவு வரவேண்டியிருக்கிறது. இதனால் வீண் கால தாமதம் ஏற்படுகிறது. அங்கு வீணாக சர்க்கார் சிப்பந்திகளுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறதே ஒழிய வேலை ஒன்றும் தொடங்கினதாக தெரியவில்லை. ஆகவே உடனடியாக கமிட்டியின் பரிசீலனையை உடனே அனுப்பி வைத்து வேலை தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது மேட்டூர் கால்வாயில் அதிகமாக நீர் ஓடிக்கொண்டிருப்பதால் அங்கே பக்கங்களில் இருக்கக் கூடிய கிராமங்களில் நீர் கசிவு ஏற்பட்டு பல கிராமவாசிகளுடைய வீடுகளும் ஹரிஜனங்களுடைய வீடுகளும் நீர் அடித்து சேதப்பட்டிருக்கின்றன. அநேகம் வீடுகளும் விழுந்து கொண்டு வருகின்றன. இதைப்பற்றி கலெக்டரிடம் தெரிவித்தால் அவர்களுக்கு எந்த நிதியிலிருந்து நிவாரணம் கொடுப்பது என்பது தெரியவில்லை என்று சொல்லுகிறார். அவர்கூட அநேகம் இடங்களுக்குச் சென்று வீடுகள் விழுந்துகொண்டிருப்பதை பார்வையிட்டார். அங்குள்ள நிலைமையை பார்ப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதனால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சர்க்காரை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கு அதிகப்படியான தண்ணீர் இருப்பதால் அங்கே மலேரியா காய்ச்சல் அதிகமாக பரவி வருகிறது. அதனால் ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அங்கு உடனடியாக ஆண்ட்டி மலேரியா சென்டர்களை ஏற்படுத்த வேண்டும் என்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மாகாணத்தில் ரோடுகள் நல்ல முறையில் இருக்கின்றன என்று மத்திய அரசாங்கம் நினைத்துக்கொண்டு இந்த அரசாங்கத்திற்குக் கொடுத்து வந்த தொகையை 50 லட்சம் ரூபாயிலிருந்து 36 லட்சம் ரூபாய்க்குக் குறைத்து விட்டார்கள். பணம் வாங்குவதற்காக நாம் ரோடுகளை நன்மையாக வைத்துக்கொள்ளக் கூடாதா என்று கேட்கிறேன். அதனால் சர்க்கார் அவர்களை அணுகி அப்படி அவர்கள் எண்ணம் கொள்ளக்கூடாது என்று வற்புறுத்தி அந்தத் தொகையை நாம் மீண்டும் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தத் தொகை இந்த வருஷம் கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு இன்னும் பல ரோடுகளை நல்ல முறையில் வைத்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மேட்டூரை ஒரு டூரிஸ்ட் சென்டராக ஏற்படுத்த வேண்டும் என்று வெகு நாட்களாகச் சொல்லிக்கொண்டு வந்தோம். அந்த இடத்தை ஒரு மூன்றாவது கிரேட் சென்டராக எடுத்துக்கொண்டிருப்பதாகவும் அதனால் மேட்டூரை டூரிஸ்ட் சென்டராக ஆக்க முடியாது என்று சொல்வதாகத் தெரிகிறது. அங்கு அநேகம் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு வசதிகள் இருப்பதால் இதை முதல் தரமான இடமாகக் கருதி அங்கு டூரிஸ்ட் சென்டரை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

19th December 1956] [Sri K. S. Ardhanareswara Gounder]

விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்க சாங்ஷன் ஆனாலும் கூட அவைகள் அவர்களுக்குக் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இப்பொழுது இம்போர்ட் லைசென்ஸ் கமிட்டி என்று ஒன்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து லைசென்ஸ் பெறுவது என்றால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் வ்வசாயி இலாகாவிலேயே இம்போர்ட் லைசென்ஸ் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி வாங்கி மோட்டார், ஸ்டார்ட்டர் முதலியவைகளை வாங்கி வைத்துக்கொண்டு அவர்களே நேரடியாக விவசாயிகளுக்குக் கொடுத்து வந்தால் சௌகர்யமாக இருக்கும். இப்பொழுது அநேகம் இடங்களில் மின்சார கனெக்ஷன்கள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அப்படி கொடுக்கும்போது மோட்டார்களும் ஸ்டார்ட்டர்களும் வாங்கி விவசாயிகளுக்குக் வாங்கிக் கொடுத்து உதவினால் அவர்களுக்கு நன்மையாக இருக்கும். அதற்கு வேண்டிய திட்டத்தையும் எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சுமார் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் போகக்கூடியதாக இருப்பதால் இந்த திட்டத்தை நல்ல முறையில் எடுத்து நடத்தலாம். நல்ல முறையில் எடுத்து நிறைவேற்றுவதற்கு வசதியும் இருக்கிறது.

சேலம் ஜில்லாவில் என்னுடைய தொகுதியில் குளத்தூர் ஏரியாவில் அநேக சிவோஜிமா நிலங்கள் இருக்கின்றன. முன் காலத்தில் அவ்வளவு நிலங்களையும் பாரஸ்ட் நிலங்கள் என்று கருதி வந்தார்கள். இப்பொழுது சிவோஜிமா நிலங்களாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள விவசாயிகள் அந்த நிலங்களை மிகவும் கஷ்டப்பட்டு பண்படுத்தி அவைகளை நல்ல நிலைமையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் தரிசு நிலங்களாக இருந்தது என்று நினைக்கக் கூடாது. இந்த நிலங்களை எடுத்து அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து அவைகளை சாகுபடிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக சென்ற மாதத்தில் அங்கே தீனிப் பஞ்சம் ஏற்பட்டது. அதற்கு சர்க்கார் கடன் கொடுத்தார்கள். பட்டா இல்லை என்பதற்காக அங்குள்ள விவசாயிகளுக்கு அந்த கடன் கொடுக்கப்படவில்லை. அங்கு சுமார் 20 ஆயிரம் பேர்கள் இருக்கக் கூடியவர்களுக்கு சர்க்கார் கொடுக்கக்கூடிய எந்த விதமான நிவாரணமும் கிடைக்காமல் போய்விட்டது. அதற்குக் காரணம் அவர்களுடைய நிலம் தான். ஏனென்றால் அவைகள் எல்லாம் சிவோஜிமா நிலம் என்று கூறினார்கள். இதை சர்க்கார் உடனடியாக பரிசீலனை செய்து அந்த சிவோஜிமா நிலங்களை வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்களுக்கு பட்டா கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் ஏழைகள். அதனால் அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக இப்பொழுது நியாய விலை கடைகளில் ஒரு தரம் பச்சை அரிசியும் மற்றொரு தரம் புழுங்கல் அரிசியும் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதனால் ஜனங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அப்படிக் கொடுக்காமல் அரிசி கொடுக்கும்போது மூன்றில் இரண்டு பங்கு புழுங்கல் அரிசியும் மூன்றில் ஒரு பங்கு பச்சரிசியாகவும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி கொடுத்தால் தான் ஜனங்களுக்கு சௌகர்யமாக இருக்கும். மற்றும் சுமார் 20 ஆயிரம் பேர்கள் இருக்கக் கூடிய எல்லா இடங்களிலும் நியாய விலைக்கடைகளை வைத்துக் கொடுத்து வந்தால் ஜனங்களுக்கு சௌகர்யமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மேட்டூர் ஏரியாவில் ஒரு பாலி டெக்னிகல் காலேஜை அமைக்க வேண்டும் என்று ரொம்ப நாட்களாகச் சொல்லிக்கொண்டு வருகிறோம். அதற்கு என்று மானியமாக அங்குள்ள ஜனங்கள் 2½ லட்சம் ரூபாய் கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். இன்னும் அதிகமாக வேண்டும் என்றாலும் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். அதனால் அங்கு ஒரு பாலி டெக்னிகல் காலேஜை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

[Sri S. C. C. Anthony Pillai] [19th December 1956

Corporation applied and the loan was sanctioned. Three lakhs of rupees was spent on a road which was hardly used by the citizens of the State! Major thoroughfares in the City are in a deplorable condition. On the assumption that it may be possible to persuade the Central Government to give a grant or subsidy for major works like the reconstruction of the Marmalong Bridge and the repair of the Poonamallee High Road and Mount Road, the reconstruction or repair is being postponed from year to year. The Corporation was pointing out that it was spending Rs. 30 lakhs on roads, whereas it got only rupees three lakhs by way of toll compensation. After a great deal of agitation, a meagre sum of rupees five lakhs was sanctioned for repair of roads. Take again the question of the City water-supply which affects the citizens of Madras very intimately. The original water-supply scheme was designed to serve a population of five or six lakhs. To-day the population of the City has grown to very nearly fifteen lakhs with the result that in the tail-end areas and suburban areas, water-supply has become very scarce. The Corporation authorities therefore decided to draw up what they called the ' zoning scheme ', under which scheme water mains would be laid in the different parts of the City so as to enable the keeping up of a uniform pressure for ensuing adequate water-supply throughout the City. Though the matter has been pending for a long time, this Government failed to give adequate financial support for implementing the scheme.

Take again another matter. The Rajaji Government passed a law for the acquisition of private slums, and it looked as though the Government were interested in improving the welfare of the slum dwellers. Though the Act has been on the Statute Book for the last three years, no loan has been given to any municipal council for acquisition and improvement of slums. A four-crore scheme was drawn up by the Corporation of Madras for improving the three
11-30 a.m. hundred odd slums in the City. The Central Government have given the assurance that the entire cost of the scheme will be lent to the Corporation provided the Madras Government agreed to give a subsidy of twenty-five per cent. The Madras Government have agreed in principle to this subsidy but again no loan, no money has been forthcoming to the Corporation to commence the work of slum clearance which is long over due.

Sir, in certain matters this Government have been very reactionary, though unabtrusively reactionary. Take the question of the freedom of speech. Apparently we have freedom of speech but every practical facility is denied to the citizen of Madras to exercise that freedom of speech. One night at about one o'clock in the morning I was served with an order stating that I should not hold any public meeting in the place called Conransmith Maidan because Government had passed orders that no meeting should be held on lands which had been given to the Corporation by the Government.

19th December 1956] [Sri S. C. C. Anthony Pillai]

Now, Sir, there are only two public areas where public meetings could be held, large scale public meetings could be held in the industrial working class areas. One is the Robinson Park. It has been denied to the citizens of Madras for holding public meetings. Now this Conronsmith Maidan has also been denied. The net result is, it is very difficult to find private lands to hold public meetings. This is a matter of very great importance, of very great public importance because the elections are forthcoming. If no public meetings could be held, we cannot educate the public with regard to the political issues involved in the elections. Therefore, Sir, I would urge upon the Government to reconsider the decision and provide adequate facilities for the holding of public meetings. I would also urge upon the Government to remove restrictive legislations with regard to the use of the mikes at public meetings and also with regard to their use on moving vehicles during election period.

* **Sri P. M. MUNISWAMI GOUNDER:** கனம் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம் முன்னால் இருக்கும் இடைக்கால பட்ஜெட் விவாதத்தின்போது இரண்டொரு விஷயங்களை எடுத்து நம்முடைய சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். முக்கியமாக சேலம் ஜில்லாவில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னதாக எந்த வருஷத்திலும் இல்லாத அதிகமான மழை பெய்ததன் காரணமாக பலவிதமான சேதங்கள் ஏற்பட்டன. அது நம்முடைய சர்க்காருக்கு நன்கு தெரிந்திருக்கிறது என்று நினைக்கிறேன். அதே சமயத்தில் இந்த விஷயத்தைப்பற்றி நம்முடைய முதன் மந்திரி அவர்களுக்கும் விரிவாக எழுதியிருக்கிறேன். அதன்மேல் இது வரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. முக்கியமாக அங்குள்ள ரோடுகள் அதிகப்படியாக சேதம் அடைந்திருக்கின்றன. அதனால் பல இடங்களில் போக்குவரத்து இல்லாமல் நின்று விட்டது. அதிலும் கிருஷ்ணகிரியிலிருந்து பெங்களூர் போகும் மார்க்கத்தில் பெண்ணையாற்றின் பாலம் அங்கு ஏற்பட்ட அதிக வெள்ளத்தின் காரணமாக இரண்டாக துண்டித்துப் போய்விட்டது. கடந்த இரண்டு மாதங்களாக மதராஸிலிருந்து பெங்களூருக்குப் போக வேண்டுமானால் கிருஷ்ணகிரி மார்க்கமாக பிரயாணம் செய்ய முடியாமல் இருக்கிறது. கிருஷ்ணகிரி மார்க்கமாக போக வேண்டுமானால் போக்குவரத்து இல்லை. அங்கு அது கம்ப்ளீட்டாக நின்று விட்டது. அதை உடனடியாக எடுத்து செப்பனிட வேண்டும் என்று மராமத்து இலாகாவைக் கேட்டால் அவர்கள் அதைப்பற்றி கவனிப்பதாகவே இல்லை. இதைவிட அதிகப்படியாக முக்கியமாக பார்க்க வேண்டிய வேலைகள் இருக்கலாம். பெங்களூருக்கு வேலூர், ஆம்பூர், கிருஷ்ணகிரி மார்க்கமாக போவதற்கு வழி இல்லை. இந்த வேலையை மராமத்து எடுத்து நடத்தாமல் இருப்பதைப் பார்க்க விசனிக்கத்தக்கதாக இருக்கிறது. இந்த மாதிரி வெள்ளம்வந்து சேதம் ஏற்பட்டு இருக்கும் சந்தர்பத்தில், ஜனங்களின் கஷ்டத்தை அறிந்து, சர்க்கார் உடனடியாக ஒன்றும் செய்யவில்லை என்ற விஷயம் நமக்கு பெரிதும் வருத்தத்தை அளிக்கிறது. சேதமான பல இடங்களுக்கு நமது ரெவென்யூ அமைச்சரைக் கூட்டிக்கொண்டு போய் காண்பித்தோம். உடனே தக்க நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொன்னார். தர்மபுரி தாலூகாவில் பெண்ணாகரம் முதலிய இடங்களுக்கு அவர் சுற்றுப் பிரயாணம்செய்தபோது அங்கு ஆடு மாடுகளுக்கும் கூட தீனி கிடைக்கவில்லை என்று அங்குள்ள மக்கள் முறையிட்டதன் பேரில், தீனிக்காக கடன் கொடுக்கவேண்டும் என்று உத்திரவு போட்டார். ஆனால் அங்கு இருக்கும் உத்தியோகஸ்தர்கள் அதை சரிவர விநியோகம் செய்யாதபடி நிறுத்திவிட்டார்கள். அதையும் அவரிடம் தெரிவித்தோம். அப்படி இருந்தும் ஒன்றும் பயன் ஏற்படவில்லை. சர்க்கார் போட்ட ஒரு உத்திரவை 11-3 a.m.

[Sri P. M. Munuswami Gounder] [19th December 1956

கிழே உள்ள அதிகாரிகள் சரிவர அமுல் நடத்துகிறார்களா என்று பார்ப்பது சர்க்காரின் கடமையாகும். ஜனங்களுக்கு ஓரளவு வசதியைச் செய்து கொடுப்பதே சர்க்காரின் நோக்கமாக இருக்கவேண்டும்.

(Deputy Speaker in the Chair.)

நமது மாகாணத்திலேயே சேலம் ஜில்லா ஒரு பெரிய ஜில்லா. அங்கு கல்வி வசதி எப்படி இருக்கிறது என்று நமது நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கடந்த இரண்டு ஆண்டுகளில் அங்கு அதிகமான ஓராசிரியர் பள்ளிகளைத் திறக்க வேண்டும் என்று அவர்கள் உத்திரவிட்டதின் பேரில் சுமார் ஆயிரம் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்ற சந்தோஷகரமான செய்தியை அவர்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். ஆனால் மேல் படிப்பிற்கு வசதி இருக்கிறதா என்று பார்க்கும்போது, இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. சேலம் ஜில்லாவில் ஜில்லா போர்டுக்குச் சேர்ந்த **Railway Cess-Fund**-ல் சுமார் 13 லட்சம் ரூபாய் தேங்கிக் கிடக்கின்றது. அந்தப் பணத்தைச் செலவழித்து அங்கு ஒரு காலேஜ் கட்டவேண்டும் என்று கடந்த நான்கைந்து ஆண்டுகளாக கேட்டுக்கொண்டு இருக்கிறோம். நமது சர்க்காரும் "செய்யலாம்" என்று வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்கள். இதில் ஒரு கஷ்டமும் இல்லை. **Local Boards Act**-ஐ திருத்தினால் போதும். அதற்கு எதிர்ப்பு சொல்லக்கூடியவர்களும் இல்லை. சேலம் ஜில்லாவில் 80 உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. சேலம் டவுனில் மட்டும் ஒரு முனிசிபல் கல்லூரி இருக்கிறது. சேலம் டவுனில் உள்ளவர்களுக்கு இது ஓரளவிற்கு உபயோகப்படுகிறது. மற்ற இடங்களில் இருப்பவர்களுக்கு இதனால் உபயோகம் இல்லை. ஜில்லா போர்டில் பணம் இருக்கிறது. சர்க்கார் நேரிடையாக பணத்தை ஒதுக்கி காலேஜைக் கட்ட முன் வரவேண்டும். அல்லது யாராவது முன் வந்தால் அவர்களுக்காவது அனுமதி கொடுக்கவேண்டும் அல்லது ஜில்லா போர்டையாவது அனுமதிக்க வேண்டும். ஆகவே **Local Boards Act**-ஐ திருத்தம் செய்து **Railway Cess-Fund**-ல் இருந்து பணத்தை ஒதுக்குமாறு கனம் நிதி அமைச்சர் அவர்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதிகமான மழை பெய்ததால் பல இடங்களில் சேதம் ஏற்பட்டு இருக்கிறது. மற்ற ஜில்லாக்களுக்கு ரோடு மராமத்துக்காக பணம் ஒதுக்கி இருப்பதுபோல், சேலம் ஜில்லாவுக்கு எந்த விதமான பணமும் ஒதுக்கப்படவில்லை என்பதை பத்திரிகையின் வாயிலாக அறிகிறேன். ஜில்லா போர்டு தலைவர் பராமரிப்புக்காக சுமார் 6 லட்ச ரூபாய் கேட்டுக்கொண்டிருந்தார். ரோடு பராமரிப்புக்காக நமக்கு ஒதுக்கப்பட்ட தொகையை ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 36 லட்சமாகக் குறைக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீ அர்த்தநாரீசுவரக் கவுண்டர் அவர்கள் எடுத்துக்காட்டினார். ரோடுகள் நல்ல முறையிலிருப்பதால் இவ்வாறு குறைத்திருப்பதாகச் சொன்னார். இது மாதிரிச் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மாகாணத்திலேயே சேலம் ஜில்லாவில் தான் **Schedule Tribe** அதிகமென்பதை நம்முடைய சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் அங்கு கொல்லிமலை, ஏற்காடு, கல்வராயன் மலை முதலிய மலைப் பகுதிகளில் மலைவாசிகள் அதிகமாக இருக்கிறார்கள். இதை உத்தேசித்துத்தான், சட்டசபைக்கு **Scheduled Tribe** வகுப்பைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று சொல்லி ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மலை வாசிகளின் முன்னேற்றத்துக்காக தனியாகப் பணம் ஒதுக்கப்படவில்லையென்பது வருந்தத்தக்க விஷயம். ஆகவே அவர்களுடைய முன்னேற்றத்துக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஹோசூர் தாலுக்காவில் நீர்ப்பாசன வசதிக்காக தென்பெண்ணையாற்றில் சாமனப்பள்ளி அணைக்கட்டையும் சின்னாற்றில் தொட்டஹள்ளா அணைக்கட்டையும் கட்டவேண்டுமென்று கடந்த இரண்டு மூன்று

19th December 1956] [Sri P. M. Munuswami Gounder]

ஆண்டுகளாகச் சொல்லிவந்திருக்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் இதற்காகப் பணம் ஒதுக்கப்படவில்லை. ஏதாவது தனிப்பட்ட முறையில் இப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொள்ளலாமென்று சர்க்கார் உறுதி கூறியிருக்கிறார்கள். இந்த இரு அணைக்கட்டுகளையும் பூர்த்தி செய்தால் அந்தத் தாலூக்கா வாசிகளுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள், சமுதாய நலத் திட்டங்கள் எல்லாம் முற்போக்கான இடங்களில்தான் நடைபெற்றுவருகின்றன. ஹோசூர் தாலூகாவைப் போன்ற பிற்போக்கான பகுதிகளுக்கும் இந்தத் திட்டங்களைக் கொண்டுவந்தால்தான், எல்லா இடங்களிலும் முன்னேற்றம் ஏற்பட முடியும்.

அடுத்தபடியாக திருப்பத்தூர்-கிருஷ்ணகிரி ரெயில்வே லைனைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லவேண்டியிருக்கிறது. நம்முடைய மத்திய சர்க்கார் எடுபட்ட ரெயில்வே லைன்களை எல்லாம் போடவேண்டுமென்று திட்டம் போட்டு இருக்கின்றனர். கிருஷ்ணகிரி-திருப்பத்தூர் ரெயில்வே லைனை **broad gauge** ஆக மாற்றுவதோடு, சேலத்திலிருந்து பங்களூருக்கு **meter gauge line** வரப் போவதாகவும் அறிகிறோம். அதற்கான சர்வே முதலிய வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதே மாதிரி பங்களூரிலிருந்து திருவண்ணாமலை வரையில் கிருஷ்ணகிரி வழியாக மீட்டர் கேஜ் ரயில் பாதையும் அமைக்கப்பட்டாக வேண்டும். போக்குவரத்து வசதிகள் அதிகப்படுவது வியாபார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது. இன்று வெளிநாடுகளோடு நம் ராஜ்யம் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும்போது சென்னைத் துறைமுகம் ஒன்றின் வழியாகவே செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் சென்னை துறைமுகத்தில் நெரிசல் அதிகம். வேலை மந்தப்படுகிறது. பல கப்பல்கள் பல நாட்கள் துறைமுகத்திற்கு வெளியே நிற்கவேண்டியிருக்கிறது. பங்களூர் திருவண்ணாமலை மீட்டர் கேஜ் ரயில் பாதை போட்டால் பாண்டிச்சேரி, கடலூர் துறைமுகங்களின் வளர்ச்சிக்கு வழியேற்படும். அத் துறைமுகங்களின் மூலமாக ஏற்றுமதி இறக்குமதி செய்யலாம். ஒரே துறைமுகத்தின் வழியாக ஏற்றுமதி, இறக்குமதி செய்யவேண்டுமென்கிற நிர்ப்பந்தம் இல்லாமல் இருக்கும். இது விஷயத்தில் நம் சர்க்கார் அதிக கவனம் செலுத்தி மத்திய சர்க்காருக்கும் வலியுறுத்த வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

Rri P. M. MUNUSWAMI GOUNDER : அடுத்தபடியாக, மின்சார வசதி பற்றி ஒன்றை மாத்திரம் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயத்திற்கு பம்பு செட்டுகளை செய்தபோது விவசாயிகள் மின்சாரத்தை உபயோகித்தாலும், உபயோகிக்காவிட்டாலும், சர்க்காருக்குக் கட்ட வேண்டிய சராசரி பணத் தொகையைக் கட்டவேண்டும் என்று நிர்ப்பந்தப் படுத்துவதை மாற்றி அமைக்குமாறு கேட்டுக்கொண்டு இத்துடன் என் வார்த்தையை நிறுத்திக்கொள்ளுகின்றேன்.

Sri M. PALANIYANDI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின்கீழ் பேசும்போது எனக்குப் பழைய கால நிகழ்ச்சிகள் நினைப்புக்கு வருகின்றன. கனம் நிதி அமைச்சர் அவர்கள் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது சபையிலுள்ளவர்கள் அவருக்கு இதுகாறும் அளித்துவந்த ஒத்துழைப்புக்கு நன்றி சொல்லி இருக்கிறார்கள். பல நல்ல சட்டங்களைக் கொண்டுவந்தும், பல அபிவிருத்தித் திட்டங்களைப் போட்டும், நாட்டிலுள்ள நடுத்தர விவசாய வர்க்கமும், தொழிலாள வர்க்கமும் இன்ப வாழ்க்கையைப் பெறுவதற்கு வழி பல செய்திருக்கிறோம் என்பதற்காக நாம் எல்லோரும் ஒரு வகையில் சந்தோஷப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். 11-45 a.m.

ஆனால் நான் பல முறைகள் கூறியிருக்கின்றபடி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் பணங்கள் சரியாகக் குறிப்பிட்டபடி செலவழிக்கப்படுவதில்லை. ஒதுக்கப்பட்ட பணத்தை செலவழிக்க முடியவில்லை என்பது வருந்தப்படவேண்டிய விஷயம். திருச்சி நகரசபைக்கு 65 லட்சம் ரூபாயோ,

68 லட்சம் ரூபாயோ ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒவ்வொரு வருஷமும் இவ்வளவு லட்சம் ரூபாய் செலவழிக்கப்படவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இருப்பினும் இன்னும் எஸ்டிமேட்டுகள் கூடப் போடப்படவில்லை. இது நிச்சயமாக நிர்வாகத்தில் உள்ள மந்தத் தன்மையையும், ஊழலையும் தான் காட்டுகிறது. ஒதுக்கப்பட்ட பணம் சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்றால் நிச்சயமாக ஒரு நல்ல வேலையும் நடக்காது. ஒதுக்கப்பட்ட பணத்தைச் சரியாகச் செலவிடுவதற்கான வழிவகை செய்யவேண்டும். நிர்வாக இயந்திரத்தின் மந்தத் தன்மையையும், ஊழல்களையும் களைய வேண்டும்.

அடுத்தபடியாக இரும்பு, சிமிட்டி போன்றவைகள் கிடைக்காததின் காரணமாகக் கட்டிடத் தொழிலாளர்கள் பலர் வேலை இல்லாமல் திண்டாடுகிறார்கள். சிமிண்டு, இரும்பு போன்றவைகள் தட்டு இல்லாமல் கிடைக்கச் செய்தால் பல லட்சக் கணக்கான தொழிலாளர்களிடையே இன்று வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்பதாக கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சமீபத்தில் ஏற்பட்ட மழை, வெள்ளம் காரணமாகப் பலர் நஷ்டப்பட்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான வீடுகள் விழுந்து இருக்கின்றன. ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் அழிந்திருக்கின்றன. அவர்களுக்கு எல்லாம் சரியான முறையில் நிவாரணம் அளிக்க வேண்டும். கொடிக்கால் பகுதி நிலங்கள் இருக்கின்றன. ஒரு எக்கரா கொடிக்கால் நிலத்தில் இருபது பேர்கள் வேலை செய்கிறார்கள். ஆயிரம் எக்கரா கொடிக்கால் நிலம் இருக்கிறது என்றால் இருபதாயிரம் பேர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பற்றி நாம் ஒன்றும் யோசிக்கவில்லை. கொண்டுவந்திருக்கக் கூடிய விவசாயச் சட்டங்களும் அவர்களுக்கு நன்மை தரக் கூடியனவாய் அமையவில்லை. நிச்சயமாக அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். வடக்கே ஆக்ரா முதலிய இடங்களுக்கு எல்லாம் நம் ராஜ்யத்திலிருந்து வெற்றிலை போகிறது. ஆகவே வெற்றிலை போன்ற பயிர்களைச் செய்யும் கொடிக்கால் தொழிலாளர்களின் பக்கம் நம் சர்க்காரின் கவனம் திரும்ப வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தீயினால் எரிந்துபோன வீடுகளுக்கு எல்லாம் முன்பு எப்போதோ 30 ரூபாய் உதவி செய்வது என்று செய்தார்கள். அதே வழக்கம் தான் இன்னமும் நீடிக்கிறது. அந்த அந்தப் பிரதேசங்களிலேயே அவ் விலாக்கா இருந்தால் ஓடோடிச் சென்று கொடுக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்கள் சர்க்காருக்கு எழுதி 30 ரூபாய் பெறுவதற்கு மிகவும் கஷ்டமாகிவிடுகிறது. அவர்களுக்கு எல்லாம் அதிகமான பணம் உதவி செய்யவேண்டும். நம் சர்க்காரிடம் அதற்குப் போதுமான நிதி வசதி இல்லை என்று சொல்வதில் பிரயோஜனமில்லை. மத்திய பிரதமருடைய நிவாரண நிதியிலிருந்தாவது போதுமான பணம் பெற்று இவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். நாம் முன்பு மத்திய சர்க்காரிடமிருந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காகக் கேட்டது 205 கோடி ரூபாய் போலிருக்கிறது. ஆனால் அவர்கள் 107 கோடி ரூபாயோ என்னமோ தான் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். ஆனால் நம் ராஜ்யம் இன்னும் எல்லா வகையிலும் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கின்றது. இதர ராஜ்யங்களைவிட நம் ராஜ்யத் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோருடைய வருமானம் மிகவும் குறைவானது. நம் ராஜ்யத்தில் தனிப்பட்ட மனிதனுடைய வருமானம் மிகக் குறைவாக இருக்கிறது. என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். சமீபத்தில் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தனிப்பட்டவர்களுடைய வருமானத்தை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்போவதாகச் சொன்னதை வரவேற்கிறேன். மத்திய சர்க்காரின் ஊழியர்களது சம்பள விகிதம் போல நம் ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளின் ஊதியத்தையும் உயர்த்த

வேண்டிய அவசியத்தை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி அதற்குப் போதுமான பண உதவியையும் நமது நிதி அமைச்சர் அவர்கள் பெறுவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும்.

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கும் இன்னும் இது போன்ற பல தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கும் நம் ராஜ்யத்தில் வசதி இருக்கிறது. மத்திய சர்க்காரிடம் இருந்து போதுமான பண உதவியைப் பெற்று செய்யவேண்டியது அவசியம் எனக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளின் அபிவிருத்திக்குப் பல சட்டங்களைப் போட்டிருக்கிறோம். 60, 40 வாரச் சட்டத்தினால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் என்று பலர் சொன்னார்கள். இது சம்பந்தமாக நான் நேரில் பல இடங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறேன். விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கடன் உதவி கிடைக்க வழி செய்தாலேயே அவர்கள் முன்பு உற்பத்தி செய்ததைவிட அதிகமாக உற்பத்தி செய்து காட்டுகிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவு காலத்தில் இவர்கள் விவசாயப் பொருள்கள் 30 சத விகிதம் அதிகமாக வேண்டுமென்கிறார்கள். ஆனால் நான் நிச்சயமாக 50 சத விகிதம் அதிக உற்பத்தி செய்து காட்ட முடியும் என்று நம்புகிறேன். உடனடியாக நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவி காலாகாலத்தில் கடன் கிடைக்கச் செய்வதுதான். நிர்வாக இயந்திரம் சரியாக இயங்கும்படியும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது கொண்டுவந்திருக்கும் பட்ஜட்டிலே கிருஸ்துவ மதத்தைத் தழுவியுள்ள ஹரிஜனங்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் உள்ள கல்வி சலுகைகள் கொடுக்கப்படும் என்று கனம் நிதி மந்திரி அவர்கள் 11.55
சொன்னார்கள். நானும் நெடு நாளாக இவ்வித வித்தியாசங்கள் இருக்கக் a.m.
கூடாது என்று பல முறை இந்தச் சபையில் எடுத்துக் கூறியிருக்கிறேன். இப்பொழுது அந்த வித்தியாசங்களை அகற்றி ஹரிஜனங்களுக்கு அளிக்கப்படும் கல்விச் சலுகை மதம் மாறிய ஹரிஜனங்களுக்கும் கொடுப்பதற்காக நான் கனம் நிதி மந்திரி அவர்களைப் பாராட்டுகிறேன்.

SRI V. K. RAMASWAMI MUDALIAR : Mr. Deputy Speaker, 11.55
Sir, I must first of all thank the Hon. Minister for Finance for this a.m.
last Budget if I may so so . . .

SRI E. L. RAGHAVA MUDALIAR : தமிழில் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*SRI V. K. RAMASWAMI MUDALIAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபைமுன் கொண்டுவரப்பட்டிருக்கும் வரவுசெலவுத் திட்டம் மிகவும் அவசியமானதாக இருக்கிறது. இதைக் கொண்டுவந்த கனம் நிதி மந்திரி அவர்களைப் பாராட்டுகிறேன். முதலாவதாக இந்த பட்ஜட்டில் ஒரு வரியும் விதிக்கப்படவில்லை. இரண்டாவது கனம் நிதி மந்திரி அவர்கள் தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில் நம் ராஜ்யத்தின் சார்பாக வாதித்து வந்திருக்கிறார்கள். அதன் மூலம் சர்க்கரை, புகையிலை முதலிய பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் விற்பனை வரிக்குப் பதிலாக, எக்ஸைஸ் டூடி விதித்து, அதன்மூலம் வரும் வருமானத்தை எல்லா மாகாணங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கனம் நிதி மந்திரி அவர்கள் வாதித்து வந்திருக்கிறார்கள். அதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

கடந்த வருஷத்தில் அதிகச் செலவுக்கு முக்கியமான காரணம், தஞ்சை ஜில்லாவில் புயல் காரணமாக நமது அரசாங்கம் நிவாரணம் அளித்துள்ளார்கள். இது மிகவும் பாராட்டத்தக்க விஷயம். இதைத்தவிர கஜட் பதிவில்லாத ஊழியர்களுக்கு சில சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இருந்தாலும் அவர்கள் இன்னும் சலுகை அளிக்க வேண்டும் என்று கோரினார்கள். அவைகளைக் கொடுக்க

வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது கொடுக்காததற்குக் காரணம், போதிய பணம் அரசாங்கத்தில் இல்லாததினால்தான். அதற்கு அரசாங்க இலாக்காவில் சில எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவை குறைத்தாவது அல்லது ரிட்ரென்சுமெண்டு செய்தாவது இதற்குப் பணத்தை ஒதுக்க வேண்டும். இதை அரசாங்கம் பரிசீலனை செய்தால் நலமாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

தவிர இப்பொழுது எனக்கு முன் பேசிய பல அங்கத்தினர்கள் மின்சார வசதிகள் கொடுக்கப்படவேண்டும், பம்பு செட்டுகளும், மோட்டார்களும் கிடைப்பதற்கு வேண்டிய உதவி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இது உண்மையான விஷயம். அரசாங்கம் இதற்காக முயற்சி செய்துவருவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இந்தக் கருவிகள் இன்னும் வரவில்லை. தேவையான காலத்தில் கிடைப்பது கிடையாது. அப்படி இருந்தும் டிபார்ட்மெண்டு அதிகாரிகள் மினிமம் சார்சார்ஜை கட்டாயப்படுத்தி வசூலித்து வருகிறார்கள். இதனால் விவசாயிகள் மிகவும் தொந்திரவுக்கு உள்ளாகிறார்கள்.

அடுத்தபடியாக சர்க்கார் கடன் வசூலிக்கும் விஷயத்தில் ரொம்பவும் நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். அரசாங்கம் சில கடன்களை நான்கு, ஐந்து வருஷங்களுக்குத் தள்ளிப்போட்டு வைத்திருக்கிறார்கள். இது ரொம்பவும் பாராட்டத் தக்க விஷயம். அதேமாதிரியாக இந்த வருஷமும் ஒத்திப்போட்டு பிறகு வசூல் செய்தால் ரொம்பவும் நன்றாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த பட்ஜட்டில் இப்போது ஹரிஜன கிருஸ்துவர்களுக்கு சலுகை அளித்திருக்கிறார்கள். மற்றும் வில்லேஜ் ஆபீசர்களுக்கு பிரயாணப் படி முதலிய சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். இது மிகவும் பாராட்டத் தக்க விஷயம்.

கிராமங்களில் பூச்சிகளினால் விவசாயம் மிகவும் பாதிக்கப்படுகிறது. இந்த பூச்சு மருந்து கொடுப்பதில் டிபார்ட்மெண்டு அதிகாரிகள் ரெட் டேபிஸம் தான் இருந்து வருகிறது. விவசாயிகளுக்கு அந்த மருந்தை சப்ளை செய்யாததினால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு எவ்வளவு குறுகிய காலத்தில் கொடுக்க முடியுமோ அவ்வளவு குறுகிய காலத்தில் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri A. DORASAMI GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சேலம் ஜில்லாவிலே அரூர், ஊத்தங்கரை சப்-தாலூக்காவில் மலேரியா நோய்த் தொந்திரவு பெரிதாயிருக்கிறது. இந்த மலேரியா ஜுரத்தைத் தடுக்க அசசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று பல முறை சொல்லியிருக்கிறேன். இருந்தும் சர்க்கார் இதை கவனிக்கவில்லை. சர்க்கார் இதை கவனித்து அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த எரியாவில் எலக்ட்ரிசிடி சில கிராமங்களுக்கு வந்துக்கொண்டிருக்கிறது. மற்ற கிராமங்களுக்கும் எடுத்துக்கொள்ளவேண்டும். மின்சாரத்தை உபயோகிக்கக் கூடிய விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளை சர்க்கார் வாங்கி விவசாயிகளுக்கு கடனாக கொடுத்து ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாளியாறு திட்டவிஷயமாக அனேக முறை எடுத்துச்சொல்லியிருக்கிறேன். அதற்கு எஸ்டிமேட் தயாரித்து பரிசீலனையில் இருந்துவருவதாக கடந்த பட்ஜெட்டில் கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அதை கவனித்து அதற்கான நடவடிக்கையை உடனடியாக செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பம்பையாறு திட்டமும் எஸ்டிமேட் தயாரித்து பரிசீலிக்கப்பட்டுவருகிறதென்று சொன்னார்கள். அதையும் உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இரண்டு திட்டங்களும் சேலம் ஜில்லாவிற்கு மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கும். ஏனென்றால் இது மானம் பார்த்த பூமி. மழை பெய்தால்தான் பயிர் செய்யமுடியும். ஒருவித நீர்ப்பாசன வசதியும் கிடையாது. ஆகவே இந்த இரண்டு திட்டங்களையும் உடனடியாக அவசியமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வட சேலத்தில் ஒரு காலேஜ் நிறுவவேண்டுமென்று கேட்கப்பட்டது. அதைப்பற்றி பலமுறை டிஸ்ட்ரிக்ட் போர்டில் தீர்மானம் போட்டு, டெபுடேஷனும் சென்று பார்த்தார்கள். ஒரு விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடனே கிருஷ்ணகிரி டவுனில் ஆவது ஒரு காலேஜ் ஏற்படுத்தும்படியாக கேட்டுக்கொள்கிறேன். அரூர் தாலூக்காவில் தேசீய விஸ்தரிப்பு திட்டம் இப்பொழுது ஒன்றுகூட இல்லை. அது மிகவும் பிற்போக்கான தாலூக்கா. நடைமுறை வருஷத்திலாவது அங்கு தேசீய விஸ்தரிப்பு திட்டத்தை ஆரம்பிக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது மொரப்பூர்-தர்மபுரி ரெயில் எடுக்கப்பட்டுவிட்டது. சேலம்-பங்களூர் ரெயில் போடும்போது மொரப்பூர்-தர்மபுரி ரெயிலையும் அதோடு "கனெக்ட்" செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில்தான் திருப்பத்தூர்-கிருஷ்ணகிரி ரெயில்வேயும் எடுக்கப்பட்டது. அதையும் மீண்டும் ஏற்படுத்துமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊத்தங்கரை சப்-தாலூக்காவில் அநேக கனிப்பொருள்கள் இருக்கின்றன. அங்கே ஒரு சிமண்ட் தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டுமென்று நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை. இதை உடனடியாகக் கவனித்து அங்கு ஒரு சிமெண்டு தொழிற்சாலையை ஏற்படுத்தினால் அநேக கூலிவேலை செய்யும் மக்களுக்கு உதவியாக இருக்கும்.

இப்போது நமது நிதி மந்திரி அவர்கள் கிராம அதிகாரிகளுக்கு ஏதோ போக்குவரத்து அலவென்ஸ் மட்டும் கொடுக்கப்போவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகளுக்கும் இலவச கல்வி வசதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதும் வரவேற்கக்கூடிய விஷயம். ஆனாலும் இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் அவர்கள் சாப்பாட்டுக்கே போதுமானதல்ல. ஆகையால் இதை கவனித்து அவர்கள் சம்பளத்தை அவசியம் உயர்த்தவேண்டும். இந்த வருஷம் மாதம் ஐந்து ரூபாயாவது அவர்களுக்கு ஏற்றிக்கொடுக்கவேண்டுமென்று நான் சர்க்காரை கேட்டுக் கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

***Sri S. RAMASAMY NAIDU:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஐந்தாண்டின் கடைசியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவு திட்டத்தைப்பற்றி விரிவாகப் பேசுவதற்கில்லை என்றாலுங்கூட, இந்த ஐந்தாண்டுகளிலே நாம் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகள் மக்களுக்கு எவ்வளவு தூரம் பயன்பட்டிருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த ஐந்தாண்டிலே சர்க்காரால் வகுக்கப்பட்ட திட்டங்களினாலும் நிறைவேற்றப்பட்ட காரியங்களினாலும் மக்களுடைய சுபிட்சமும் கல்வி அறிவும், பண்பாடும் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்பதை நாம் நிதர்சனமாகக் காண்கிறோம். தேசீய அபிவிருத்தி திட்டத்தின் மூலமாகவும், ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின் மூலமாகவும் வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது. இந்தத் திட்டங்களின் கீழ் பல புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் 12-06 p.m. கீழ் கல்வி அபிவிருத்தி செய்ததின் மூலமாக இன்றைக்கு நாட்டிலே எவ்வளவு வளர்ச்சியும் கல்வி அறிவும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தது சுமார் 1,000 அல்லது 1,500 ஆசிரியர்கள் வரை அதிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், 60,000 பிள்ளைகள் அதிகமாக படிக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. தேசீய அபிவிருத்தி திட்டத்தின் மூலமாகவும், மற்றும் பல திட்டங்களின் மூலமாகவும் கிராமங்களில் ரஸ்தா வசதியும் மற்றும் பல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. செலவு செய்யப்பட்ட பணம்

[Sri S. Ramasamy Naidu] [19th December 1956

நல்ல முறையிலே செலவு செய்யப்படவில்லை, வீணைகப் போய்விட்டது என்று சிலர் கூறுகிறார்கள். புதிதாக தண்ணீர் வசதி செய்துகொடுக்க கால்வாய் வெட்டினால், அந்தப் புது வாய்க்காலின் மூலமாக தண்ணீர் பாயும் பொழுது, அது கொஞ்சம் தண்ணீர் உறிஞ்சுவதை தவிர்க்க முடியாது. அதை வீண் என்று சொல்வதற்கில்லை. கூடுமானவரையில் நமது சர்க்கார் பணத்தை நல்ல முறையில் தான் செலவு செய்கிறார்கள். இன்றைக்கு கிராம மக்கள் தங்களுக்கு வேண்டிய வசதிகளை செய்துகொள்ளுவதற்காக சர்க்காரின் பகுதிப்பணத்தைப் பெற்று தங்களுடைய நிலைமையை உயர்த்திக்கொள்ளவேண்டுமென்ற ஆர்வத்தில் லட்சக்கணக்கான ரூபாய் செலவிலே தங்கள் கிராமங்களிலே நல்ல வசதிகளை செய்துகொண்டிருக்கிறார்கள். இதனால் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகளை மக்கள் நல்ல முறையிலே பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். என்பது புலப்படும். இன்னும் பல காரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது. பல துறைகளிலும் பிற்போக்கடைந்திருந்த நம்முடைய நாட்டிலே வருமானம் அதிகமாக இல்லாத நிலையிலே எந்த அளவிலே பிரயோஜனகரமான திட்டங்களைக் கொண்டுவரமுடியுமோ அந்த அளவிலே சர்க்கார் செயல்பட்டு வந்திருக்கிறது என்பதை நாம் எல்லோரும் சந்தேகமன்னியில் ஒப்புக்கொள்ளவேண்டும். நம்முடைய நாட்டில் இன்றைக்கு மக்கள் சர்க்கார் இருக்கிறது. சர்க்கார் மக்களுக்கு வேண்டிய சகல காரியங்களையும், அவர்களுக்கு பணப் பொறுப்பு அதிகமானாலும்கூட செய்வார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கல்வித் துறையானாலும் சரி, விவசாயத் துறையானாலும் சரி, சிறு கைத்தொழில் துறையானாலும் சரி, எல்லாத் துறைகளிலும் நல்ல முறையிலே கவனத்தைச் செலுத்தி, நல்ல திட்டமிட்டு, வருமானத்தை உயர்த்தி, மக்களுக்கு நல்ல வாழ்க்கையும் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் சர்க்கார் செய்து வருகிறார்கள்.

ஸ்ரீ அந்தோணிப்பிள்ளை அவர்கள் பேசும் பொழுது கல்வி விஷயத்திலும் நில வரம்பு விஷயத்திலும் இன்னும் சர்க்கார் ஒரு முடிவுக்கு வரவில்லை என்று சொன்னார்கள். இவை இரண்டும் நன்றாக ஆலோசிக்கப்பட வேண்டிய காரியங்களாகும். இதை நிதானத்துடன் செய்வது நல்லது. அந்தத் துறைகளிலும்கூட பல சீர்திருத்தங்களை இப்பொழுது படிப் படியாக செய்துகொண்டிருக்கிறோம். முடிவாக என்ன செய்யவேண்டுமென்பதை நன்றாக ஆலோசித்து நிதானத்துடன் செய்வதுதான் நியாயம், கொஞ்சம் காலம் தாழ்த்தப்பட்டாலும்கூட அதற்காக நாம் கவலைப்பட வேண்டியதில்லை. எந்தத் துறையில் சீர்திருத்தங்கள் இருக்குமென்பதை சூசகமாக பல சட்டங்களின் மூலமாகவும் பல முற்போக்கான ஏற்பாடுகளின் மூலமாகவும் நாம் காண்கிறோம். ஆகவே, அது பற்றி நாம் அதிகமாக கவலைப்பட தேவையில்லை.

ஸ்தலஸ்தாபனங்கள் விஷயமாக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கல்வி விஷயமாக இருந்தாலும் சரி, சிறு கைத்தொழில் விஷயமாக இருந்தாலும் சரி, நில வரம்பு விஷயமாக இருந்தாலும் சரி, நாம் தீர ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. அதே போல் ஸ்தலஸ்தாபன விஷயத்திலும் நாம் நன்கு ஆலோசனை செய்துதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இப்பொழுது இருக்கும் ஸ்தலஸ்தாபனங்களை வைத்துக்கொள்வது என்றால், அவைகளுக்கு என்ன பொருள் உதவி செய்வது, எந்த வருமானத்தின் மூலம் கொடுப்பது, அல்லது அவைகளை மாற்றி அமைப்பதாக இருந்தால் மாற்று ஸ்தாபனங்கள் எந்த முறையில் இருக்கவேண்டும் என்பதையெல்லாம் நிதானமாகத் தான் யோசித்து முடிவு செய்யவேண்டும். அதனால்தான் சர்க்கார் இது விஷயத்தில் சற்று தாமதித்து வருகிறார்களே தவிர. வேறொன்றுமில்லை. ஆனால் எல்லா துறைகளிலும் மக்கள் விரும்பும் அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட வேண்டும், நல்ல முறையிலே மக்களுக்கு பயன் அளிக்கும் அளவுக்கு ஸ்தலஸ்தாபனங்கள் பணியாற்ற வேண்டுமென்பது தான் சர்க்காரின் கொள்கை என்பதில் சந்தேகமில்லை. ஆகவே நாம் எதிர்பார்த்த அளவுக்கு நன்மை அடையவில்லை என்று சொல்வதற்கில்லை.

19th December 1956] [Sri S. Ramasamy Naidu]

எதிர்பார்த்த அளவு ஒவ்வொருவருக்கும் ஒரு படியாக இருக்கும். நாட்டிலே ஐந்தாண்டு திட்டங்களை வகுத்து மக்களுக்கு எவ்வளவு தூரம் அவர்கள் நன்மை செய்யமுடியும், செய்யவேண்டும் என்று சர்க்கார் திட்டமிட்டிருந்தார்களோ அந்த அளவுக்கு சர்க்கார் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பது நாம் சந்தோஷப்படவேண்டிய விஷயம்; இன்னும் அதிகமாகச் செய்யவேண்டியிருக்கிறது; செய்வதற்கு பிரயத்தனப் பட்டுக்கொண்டிருக்கிறோம், செய்வோம் என்பதில் சந்தேகமில்லை.

நான் முடிக்கும் முன் ஒரு சிறிய விஷயத்தைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். நேற்று என் மதிப்பிற்குரிய நண்பர் செட்டிநாடு ராஜா அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஸ்தலஸ்தாபனங்களுக்குப் போதுமான வருமானமில்லை என்ற ஒரு ஆத்திரத்திலே ஒரு சிறு தவறுதலான விஷயத்தை சட்டசபையிலே சொன்னதாக கேள்விப்பட்டேன், பத்திரிகையிலே படித்தேன். ராமநாதபுரம் ஜில்லா போர்டில் ஆசிரியர்களுக்கு மூன்று மாதச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று அவர் சொன்னதாக பிரஸ்தாபம். ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் என்ற முறையிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால் அம்மாதிரியாக யாருக்கும் சம்பளம் கொடுக்கப்படாமல் இல்லை, சர்க்காரின் உதவியோடு அவ்வப்பொழுது அவர்களுக்கு மாதாமாதம் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதுதான். அது பிரமாதமான தகவலாக வெளியிடப்பட்டிருப்பதனால் தான் நான் இங்கு அதைப்பற்றி சொல்லவேண்டியதாக ஏற்பட்டது. ஸ்ரீமான் ராஜா அவர்களும் ஏதோ ஸ்தலஸ்தாபனங்களுக்கு அதிக வருமானம் வரவேண்டுமென்ற ஆசையினால் அதைச் சொன்னாரே தவிர, ஒரு குற்றமாக எடுத்துச்சொல்லவேண்டுமென்று அவர் அப்படிக் கூறவில்லை என்பதையும் நான் இங்கு சொல்லிக் கொள்ளவேண்டும். வணக்கம்.

Sri A. RATNAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இடைக்கால 12-12
வரவுசெலவுத் திட்டம் இந்தச் சபையிலே கொண்டுவரப்படவேண்டிய p.m.
முறையில் கொண்டு வரப்படவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கனம் கவர்னர் பிரானை முன்வைத்து நடத்துகின்ற அரசியலிலே, கவர்னரால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகிற சட்டசபையிலே புதிதாக திரு ஜான் அவர்கள் கவர்னராக பதவி ஏற்றிருந்தும், பதவியேற்ற பிறகு சட்டசபை கூடியிருந்தும், அவருடைய தரிசனமில்லாமல், அவருடைய உரையே இல்லாமல் இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. இந்த சபையின் தலைவராக உதவி சபாநாயகரையே ஏன் சபாநாயகராக தேர்ந்தெடுத்திருக்கக்கூடாது ? அப்படித் தேர்ந்தெடுத்திருந்தால், இந்த வரவு செலவுத் திட்டத்துக்கே ஒரு மதிப்பு கொடுத்ததாகும். இந்தச் சபைக்கும் கௌரவத்தை கொடுத்ததாகும். அப்படியில்லாததற்கு நான் வருந்துகிறேன்.

வரவு செலவுத் திட்டத்திலே நிதி அமைச்சர் அவர்கள் என்.ஜி.ஓ.க்களுக்கு கொடுக்கப்பட்ட 5 ரூபாய் போதாது என்று கூறியிருக்கிறார்கள். "மத்திய அரசாங்கத்தின் உதவியை நாடுகிறோம், அவர்கள் உதவி செய்வார்கள் என்று நம்புகிறோம்" என்றெல்லாம் கூறியிருப்பது வரவேற்கத்தக்கதுதான். நமது ராஜ்ய நிதி நிலைமையை கவனித்துப் பார்க்கும்பொழுது, செலவினங்கள் மிகவும் அதிகம் என்பது கண்கூடு. ஐந்தாண்டு காலத்திலே அனாவசியமான செலவுகளையெல்லாம் நமது சர்க்கார் செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. மேலும் மத்திய அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டத்துக்காக ஒதுக்கும் பணமெல்லாம் பெரும்பான்மையான மக்களுக்கு உபயோகமற்ற காரியங்களில் செலவழிக்கப்பட்டு வந்திருப்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

நம் நிதி நிலைமையை அனுசரித்து, அனாவசியமாக செலவு செய்யப்படுகிற பணத்தை—ஐந்தாண்டுத் திட்டத்துக்குச் செலவு செய்யும் பணத்தை—ஓரளவிற்கு மிச்சம் செய்து அதை உடனடியாக இந்த என். ஜி. ஓ.க்களுக்கு கொடுத்தால் அவர்கள் திருப்தி அடைவார்கள். 'மத்திய அரசாங்க ஊழியர்கள் நமது ராஜ்யத்தில் பெறுகிற அளவிற்காவது எங்கள் ஊதியத்தைப்

[Sri A. Ratnam] [19th December 1956

பெருக்குங்கள்' என்று இங்குள்ள என்.ஜி.ஒ.-க்கள் கேட்டால் அதை இந்த ராஜ்ய சர்க்கார் ஏற்றுக்கொள்கிறார்களா? இல்லை. தவிர இப்பொழுது அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஐந்து ரூபாய் உயர்வு, ஏதோ தேர்தல் வருகிறது; அவர்களுக்கு உதவ வேண்டும், அவர்களை சிறிதளவாவது சமாதானப்படுத்த வேண்டும் என்றளவில் தான் இந்த உயர்வு வந்திருக்கிறது, மேலும் கிராமங்களில் இருக்கக்கூடிய தலையாரிகள், வெட்டியான்கள் போன்றவர்கள் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள், ஏற்கனவே அவர்கள் கல்வி வசதி போன்ற வசதிகள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு இதுபோன்ற வசதிகள் அளிக்கப்படுகிறதா? ஹரிஜனங்களில், கிருஸ்துவர்களுக்கு ஒருவித சலுகைகளும் அளிக்கப்படவில்லை. கிருஸ்துவர்களான ஹரிஜனங்களை ஹரிஜனங்களின் பட்டியலில் சேர்க்காமல் கிருஸ்துவரெல்லாத ஹரிஜனங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை இவர்களுக்குக் கொடுக்காமல் இந்த கிருஸ்தவ ஹரிஜனங்கள் இன்று பராமரிக்கப்படாமல் இருக்கிறார்கள். கிருஸ்தவர்களாக மாறியுள்ள ஹரிஜனங்களுக்கு, மீதி ஹரிஜனங்களுக்கு அளிப்பது போன்ற சலுகைகள் ஏன் அளிக்கக்கூடாது? அதன் பயனை நீங்கள் வரப்போகும் தேர்தலில் காணப் போகிறீர்கள் என்று நான் அறைக்கூவல் விடுகிறேன். அதுமட்டுமல்ல. ஹரிஜன கிருஸ்தவர்களுக்கும் 'அப்படிச் செய்துவிட்டோம் இப்படிச் செய்துவிட்டோம்' என்று சொன்னால் மட்டும் போதாது. தொழிற்கல்லூரியிலோ வைத்தியக் கல்லூரியிலோ அவர்களுக்கு இடம் தருவது கிடையாது.

அடுத்தபடியாக, நிதியமைச்சரவர்கள் தமிழிலேயே பட்ஜெட் உரை நிகழ்த்தியதை வரவேற்கிறேன். பாராட்டவும் செய்கிறேன். ஆனால் தேர்தலுக்காக நாம் இன்று தமிழில் உரையை நிகழ்த்திவிட்டு மேலும் சென்னைக்கு சென்னை ராஜ்யம் என்ற பெயரை வைத்துக்கொண்டிருந்தால் அதனால் மக்கள் திருப்தி அடைந்து விடமாட்டார்கள். சென்னை ராஜ்யம் என்ற பெயரை மாற்றி விட்டு தமிழ் நாடு என்று பெயரிடுவோம் என்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டு சென்றாலே எந்தக் கட்சியைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி, அது காங்கிரஸா இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த கட்சியாயிருந்தாலும் சரி, அப்படிச் சென்றால் தான் வரப்போகும் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று நான் திட்டவட்டமாக இங்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். வரப்போகிற தேர்தலுக்குப் பிற்பாடு வருகிற அங்கத்தினர்கள் வரவு செலவுத் திட்டத்தை இந்த 4 மாதத்திற்குள்ளதை அப்புறம் அவர்கள் சரி செய்துகொள்வார்கள். அது அவர்கள் பாடு.

அடுத்தபடியாக நான் ஒன்று கூற விரும்புகிறேன். இன்று நம் நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் அவதியுற்றுக்கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ தொழிலாளர்கள், விவசாயிகள் இவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்களைப் பற்றி இந்த பட்ஜெட் உரையில் ஒன்றும் கூறப்படவில்லை. ஆனால் இங்கு நம் நாட்டிலோ ஆலைகள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு வருகின்றன. எத்தனையோ தொழிலாளர்கள் வேலையின்றி திண்டாடுகிறார்கள். ஆனால் ஆலைகள் மூடப்பட்டுக் கொண்டே வருகின்றன. ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக இந்த சர்க்கார் என்ன செய்திருக்கிறது என்று கேட்கிறேன். அதைப்பற்றி நிதியமைச்சர் ஏதாவது கூறியிருக்கிறார்களா? அவர்கள் லட்சக்கணக்கில் மனுக்கள் போட்டிருந்தும்கூட அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அம் மக்கள் படும் கஷ்டம் சொல்லி முடியாது. ஏழை மக்கள் இராப் பட்டினி பகல் பட்டினி கிடந்து செத்துக்கொண்டேயிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறம், உணவுப் பொருள் இல்லாதது இன்னொரு புறமாக மக்கள் இரண்டினாலும் மடிந்து கொண்டேயிருக்கிறார்கள். நோய்வாய்ப்படுகிறார்கள். நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரிகளுக்குச் சென்றாலோ, அதாவது சர்க்கார் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்றாலோ அங்கே இடம் கிடைக்கிறதா? இல்லை. ஆஸ்பத்திரிகளில் ஊழல் மிகவும் மலிந்திருக்கிறது. லஞ்சம் கொடுப்பவர்களுக்குத்தான் ஆஸ்பத்திரிகளில் படுக்க இடம் கிடைக்கிறது. ஆஸ்பத்திரிகளில் ஏழை மக்களுக்கு கொடுக்கப்படும் மருந்தோ அவர்கள் விரும்பத்தகாததாய், மிகவும் மோசமாய் இருக்கிறது.

19th December 1956] [Sri A. Ratnam]

அடுத்தபடியாக நான் கேட்க விரும்புவது, இந்தச் சர்க்காரை மிராசுதாரர்கள் விரும்புகிறார்களா இல்லை விவசாயிகள்தான் விரும்புகிறார்களா? விவசாயிகளுக்காக நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? மிராசுதாரர்களோ காங்கிரஸை முறியடிப்போம், தேர்தலில் அக்கட்சியை எதிர்ப்போமென்றெல்லாம் சவால் விடுகிறார்கள். ஏழை விவசாயிகள் காரியமோ? அவர்களுக்கு நிலம் இல்லை. விதையில்லை. உரம் இல்லை. பணமில்லை. இப்படிப்பட்ட ஏழை மக்களுக்கு உதவிசெய்ய அரசாங்கம் தயாராயில்லை. இவர்களுக்கு கடன் வசதியாவது அளிக்க இச் சர்க்கார் தயாராயில்லை. ஆனால் பெரிய பெரிய நிலச்சுவான்தாரர்களுக்கு கடன் உதவியளிக்கத் தயாராய் இருக்கிறது இச் சர்க்கார். நிலத்தை ஈடாக வைத்துக்கொண்டு ஈடு கொடுக்க ஏழை விவசாயிடம் ஏது நிலம்? ஏழை மக்களுக்கு, அடமானம் வைக்க ஒன்றுமில்லாதவர்களுக்கு, அவர்களில் யாருக்காவது நீங்கள் ஏதாவது செய்து கொடுத்திருக்கிறீர்களா? Co-operative Society வழியாக உதவியளிப்பதாகச் சொல்லலாம். அங்கு எவ்வளவு மனுக்கள் வந்துள்ளன. அவைகளில் எத்தனை பட்டுவாடா செய்யப்பட்டிருக்கின்றன என்று பாருங்கள். ஒரு சிலருக்கு, காங்கிரஸ்காரர்களுக்கோ அல்லது அதிகாரிகளின் சொந்தக்காரர்களுக்கோதான் உதவியளிக்கப்படுகிறது. அதிலும் ஒரு பாகத்தைக் கொடுத்தால்தான் காரியம் நடக்கும்.

அடுத்தபடியாக இந்த ஐந்து வருடத் திட்டத்தை எடுத்துப் பார்போமேயானால் அது காகிதத்தில்தான் இருக்கிறது. "எட்டுச் சுரக்காய் கறிக்குதவாது" என்பதுபோல் அதனால் மக்களுக்கு என்ன பயன் கிடைத்திருக்கிறது? நாம் இங்கு சட்ட சபையில் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி பேசிக்கொண்டேயிருக்கிறோம். ஆனால் வெளியே ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பக்கம். மருந்தில்லாத் திண்டாட்டம். உணவுப்பொருள் இல்லாத் திண்டாட்டம். ஆக ஏழை மக்கள் மிகவும் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்கிறோம், இப்படிச்செய்கிறோமென்றெல்லாம் ஏடுகளில் எழுதிவைப்பதினால் மட்டும் போதாது. சேரிகளில் சென்று பார்த்தால் தெரியும், அங்குள்ள மக்கள் படும் துயரம். அவர்கள் இந்த காங்கிரசுக்கு ஒருவிதத்திலும் வரும் தேர்தலில் வோட்டு போடமாட்டார்கள் என்பதை நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்தச் சர்க்காரால் அவர்கள் எந்தவித நன்மையும் அடையவில்லை, "நண்டைச்சுட்டு நரியை காவல் வைப்பதுபோல்" ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணம் அவர்களுக்குப் போய் சேராமல் வேறு வழியில் தான் போகிறது. அப் பணத்தினால் ஹரிஜனங்கள் நலம் பெறவில்லை. நிதியமைச்சரவர்கள் சொல்லலாம், 15 வருடங்களுக்கு முன்பு ஹரிஜனங்களுக்காக 15,000 ரூபாய் செலவழித்ததால் இன்று ஒரு கோடி ஐம்பது லட்சம் செலவிடுகிறோம் என்று சொல்லிக்கொள்ளலாம். அன்று அந்த 15,000 ரூபாய் அவர்களுக்குப் பயன்பட்ட அளவிற்கு இன்றைய தினம் ஒரு கோடி ஐம்பது லட்சம் ரூபாய் பயன்படவில்லை.

அடுத்தபடியாக, நூற்றுக்கணக்கான தமிழர்கள் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்று நேற்றைய தினம் பார்லிமெண்டில் கூறப்பட்டது. அவர்களுக்கு செய்யவேண்டிய நன்மையைப்பற்றி நம்முடைய சென்னை சர்க்கார் இதுவரையிலும் ஒன்றும் அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை. இது சம்பந்தமாக எனக்கு ஒரு யோசனை கூறவேண்டியிருக்கிறது. இலங்கையிலிருந்து ஆயிரக் கணக்கில் தமிழர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். பாகிஸ்தானிலிருந்து வந்திருக்கும் அகதிகளுக்கு எப்படி நாம் கோடிக் கணக்கில் பணம் செலவு செய்து உதவி செய்கிறோமோ அதேபோல் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டு இங்கு வரும் தமிழர்களுக்கு, அவர்களது குறைகளைக் கவனித்து அவைகளை நீக்குவதற்கு ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும். இந்த வேண்டுகோளை நிதியமைச்சரவர்களுக்கு விடுத்துக்கொண்டு, எனக்கு மேலும் பேச நேரமில்லாத காரணத்தினால் எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

[19th December 1956

12-24 p.m. **Sri M. P. SUBRAMANYAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையின் ஐந்தாண்டு காலத்தில் இதுதான் இறுதியான கூட்டம் என்பதை நாம் அறிவோம். ராஜ்யங்கள் திருத்தி அமைக்கப்பட்டதன் பின்னால் முதலாவதாக கூடும் கூட்டம் இதுதான். இந்த ஐந்தாண்டு காலத்தில் மக்களுக்கு என்னவெல்லாம் நன்மைகள் இருந்தது என்பது இன்று மக்களுக்கு நன்றாகத்தெரியும். ஆனால் சர்க்கார் சொல்லுகிற மாதிரி மக்களுக்கு கழிந்த காலத்தில் மாபெரும் சேவைகளை செய்திருக்கிறோம். முதலாவது ஐந்தாண்டு திட்டம், இரண்டாவது ஐந்தாண்டு திட்டம், இவைகள் மூலமாக நல்ல பலன்களை நாட்டில் கொண்டுவந்து சம தர்ம சமுதாயத்தை அமைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த சம தர்ம சமுதாய ஆட்சியில் சாதாரணமாக கீழ் நிலையில் 10 ரூபாய் 15 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த சாதாரண தொழிலாளி அதே மாதிரிதான் இருந்துகொண்டிருக்கிறான். அதே மந்திரி மாதம் 10 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய அதிகாரிகளும் ஒரே நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதுதான் இந்தியாவின் இந்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் சம தர்ம சமுதாயம். அவர்கள் கூறுகிற வாதங்கள் சமுதாயத்தில் கீழ் தட்டில் இருக்கக்கூடியவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்த வேண்டுமே தவிர மேல் தட்டில் இருக்கக்கூடியவர்களுடைய நிலையை குறைக்கக்கூடாது என்று கூறுகிறார்கள். அப்படி நாம் பார்ப்போமானால் மாதம் வெறும் 10 ரூபாய், 15 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய ஒரு சாதாரண ஆள் எப்படி 10 ஆயிரம் ரூபாய் மாதம் சம்பளம் வாங்கக்கூடிய ஆளின் நிலையை அடைய முடியும் என்று கேட்கிறேன். ஆகவே இதையெல்லாம் சொல்லுகிறார்களே தவிர கீழ் தட்டில் இருப்பவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வேண்டி ஒன்றும் செய்யப்படவில்லை என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. நிதி அமைச்சர்கள் கூறி இருப்பது போல கீழ்தர ஊழியர்கள் இனி மேல் போக்குவரத்து படி பெறப்போகிறார்கள் என்றெல்லாம் இருக்கிறதே தவிர அவர்களுடைய முழு கோரிக்கைகளையும் அரசாங்கம் நிறைவேற்றி வைத்ததாக தெரியவில்லை. ஆகவே இந்த ஐந்தாண்டு காலத்தில் நாட்டிலுள்ள கடைத்தர சிப்பந்திகளின் நிலை ஒன்றும் உயரவில்லை என்று தெரிகிறது. சமீபத்தில் புதுக்கோட்டையில் மந்திரி அவர்கள் அங்குள்ள சர்க்கார் சிப்பந்திகளைப் பார்த்து ' உங்களுக்கு முழு நேர வேலை வேண்டுமா அல்லது பாதி நேர வேலை வேண்டுமா ' என்று கேட்டாராம். நான் சொல்லுவது என்னவென்றால் இதை அவர்களிடம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்பதைப் பார்க்கிற பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது மிக அவசியம் என்பதை சொல்லிக் கொள்ளுகிறேன். அதுபோல்தான் என்.ஜி.ஓக்களின் குறைகளும் இருக்கின்றன. அவர்களுக்கு இப்போது வெறும் 5 ரூபாயை மாத்திரம் கூட்டுவது என்பது வெறும் கண் துடைப்பாகத்தான் இருக்கிறது. அவர்கள் கோருகிற கோரிக்கைகளை அரசாங்கம் கவனிக்க வேண்டும். மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு சம்பளமும் மாகாண அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு சம்பளமும் இருக்கக்கூடாது, மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய சம்பளம் எங்களுக்கும் வேண்டும் என்று கேட்கிறார்கள். இரண்டுபேருக்கும் ஒரேவிதமாக நியாயம் வழங்கவேண்டியது அவசியம். ஆகவே இதில் சர்க்கார் பணம் இல்லை என்று சாக்கு போக்குச் சொல்லுகிறார்களே தவிர சரியான பதில் ஒன்றும் சொல்லவில்லை. விவசாய உற்பத்தியை எடுத்துக்கொண்டால் இன்று பொருள்களின் விலை அதிகமாக ஏறிக்கொண்டே போகிறது. அதாவது விவசாயிகளுக்கு இது மிக கஷ்டத்தை கொடுத்துக் கொண்டு இருக்கிறது. அதாவது அறுவடையான உடன் விலை குறைந்தும் பின்னால் விவசாயிகளிடம் உள்ள தானியங்கள் எல்லாம் தீர்ந்த பிறகு விலைவாசி ஏறியும் இருந்து கொண்டு வருகிறது. விலைவாசி பொதுவாக இறங்க வேண்டியது தான். ஆனால் விவசாயிகளுக்கு இவ்விதமாக ஒரு கஷ்டமும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதில் விவசாயிகளுடைய நலனை பாதுகாப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க

19th December 1956] [Sri M. P. Subramaniam]

வில்லை என்று தெரிகிறது. அடுத்ததாக இன்று விவசாயிகளுக்கு அவசியமான பம்பு செட்டுகள் வாங்க வேண்டுமென்றால் அதனுடைய விலை அதிகமாகப் போய்க் கொண்டே இருக்கிறது. அரசாங்கத்தின் கணக்குப்படி வருஷத்திற்கு 1,000 கிராமங்கள் வரை மின்சார வசதி செய்யப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயம் தான். இப்போது விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் அதிகமாக தேவைப்படுகிறது. ஒரு பம்பு செட்டுக்கு 500 ரூபாய் விலையாக இருந்தது இப்போது, 800 ரூபாயாக விலை ஏறியிருக்கிறது. அதிலுள்ள ஒரு ஸ்டார்ட்டர் ஸ்விச்சு (starter switch) 80 ரூபாயாக விலை இருந்தது. இப்போது 250 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இதனால் விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இதைப்பற்றி விவசாயிகள் அரசாங்கத்தினிடத்தில் பலதடவையும் சொல்லியிருக்கிறார்கள். அதாவது இந்த மாதிரியுள்ள பம்பு செட்டுகளை அரசாங்கமே வரவழைத்து இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்யலாம். இது விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். ஆதலால் இம் மாதிரி அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக வரிவிதிப்பை எடுத்துக்கொண்டால் இப்போது மத்திய அரசாங்கத்தினுடைய கையில் எக்ஸைஸ் வரி விதிப்பை விட்டுக் கொடுத்திருக்கிறது. நம்முடைய மாகாண அரசாங்கத்திற்கு வருவாய் ஏற்படக்கூடிய வழிகளை மத்திய அரசாங்கத்திற்கு விட்டுக் கொடுத்து விட்டு ஏதாவது இங்குள்ள காரியங்களுக்கு நிதி பெறுவதற்கு டில்லிக்கு காவடி தூக்கிக் கொண்டு போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இம்மாதிரியான முறைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு பல முனை விற்பனை வரியை மாற்றி ஒரு முனை விற்பனை வரியை கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆத்தூர் ஜில்லாவில் நிலங்கள் பலருக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிலங்களில் பயிர் செய்வதற்கு முடியாதபடி தண்ணீர் அரித்து இன்று அந்த நிலங்கள் சத்து இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்த இடங்களில் இப்போது அந்த விவசாயிகளுக்கு டிராக்டர் வைத்து உழுது கொடுக்க வேண்டும், இதைப் பற்றி பல ஆண்டுகளாக அரசாங்கத்தினிடத்தில் சொல்லியும் இது வரையிலும் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம். இது தவிர சமுதாய வளர்ச்சி திட்டம், தேசிய அபிவிருத்தி திட்டம் என்று பல திட்டங்கள் இருக்கின்றன. அதில் செலவிடப்படுகிற பணம் விவசாயிகளுக்கு உதவியாய் இருக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு தேவநாயக்கன்பாளையம் பிரதேசத்திலுள்ள குறைகளை அரசாங்கம் நிவர்த்தி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலாவதாக இந்த பட்ஜெட்டைப்பற்றி பேசும்போது அரியலூரில் நடந்த விபத்தைப்பற்றி ஞாபகம் வருகிறது. அந்த விபத்தில் மாண்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் நாம் இந்த சபையில் அனுதாப தீர்மானம் நிறைவேற்றினோம். நாம் எத்தனை தீர்மானங்கள் நிறைவேற்றினாலும்கூட மாண்டவர்களுடைய உயிரை திரும்பக் கொடுக்க முடியுமா ? அது முடியாத காரியம். அது போல அங்கஹீனமாய் இருக்கிறவர்களுக்கு நம்மால் அவர்களுக்கு வேண்டிய உடல் நிலைசக்தியையும் அளிக்க முடியாது. ஆகவே இந்த விபத்தின் காரணம் என்ன ? யாரால் இந்த விபத்து ஏற்பட்டது, என்று நாம் இப்போது சொல்ல முடியாது. ஆனால் ரயில்வே இலாகா, ரெவின்யு இலாகா, மராமத்து இலாகா இவை போன்ற இலாகாக்கள் எல்லாம் மிக முக்கியமான பொறுப்புள்ள இலாக்காக்கள் என்பதை முதலில் சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த குறிப்பிட்ட விபத்தைப்பற்றி யார் யார் பொறுப்பாளி என்பதெல்லாம் விசாரணையில் இருந்து கொண்டிருக்கிறது. எதிர்பாராத விதமாக நல்ல மழை பெய்தது. 12-32 p.m.

அம்மாதிரியான மழை பெய்த காரணத்தினால் பொது ஜனங்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலைமை இருக்கக்கூடாது. நல்ல மழை பெய்தால்தான் குளங்கள் ஏரிகள் எல்லாம் தண்ணீர் பெருக முடியும். ரயில்வே நிர்வாகத்திலும் பொதுவாக ஸ்தாக்களை கவனிப்பதிலும் அந்த நிர்வாகத்திலும் பல ஓட்டைகள் இருக்கின்றன. அது போல் ரெவின்யூ இலாகாவிலும் மராமத்து இலாகாவிலும் இருக்கின்றன என்பதை சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டுவருகிறேன். மழை அதிகமாக பெய்ததினால் இந்த மாதிரியான விபத்து ஏற்பட்டுவிட்டது என்று சொல்லுகிறார்கள். அதிகமாக மழை பெய்தால்தான் நாட்டில் பொது ஜனங்களும், கால் நடைகளும் சுகமாக வாழ முடியும். ஆதலால் மழை அதிகமாக பெய்வதால் இம்மாதிரியான விபத்து ஏற்படும் என்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது.

மழை பெய்வது நல்லதுதான். அதை நாம் எல்லோரும் வரவேற்க வேண்டியதுதான். ஏரி, குளங்களை மராமத்து செய்வதில் விதிகள் இருந்தாலும்கூட அதை சரிவர கண்காணிக்க வேண்டும். அவற்றின் மராமத்துக்களை புறக்கணிக்கவே கூடாது. அதிகமாகப் பெய்தால் தண்ணீர் கண்ட இடங்களில் பாயும். அதனால் சேதம் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது சர்க்காருடைய கடமை. அதற்குத்தக்க நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும். அந்தப் பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது என்பதை சர்க்கார் உணர வேண்டும்.

உணவு நிலைமை சம்பந்தமாக நேற்று நம்முடைய விவசாய மந்திரி அவர்கள் தன்னுடைய அறிக்கையில் ஒரு நல்ல நிலைமை வந்து விட்டது என்று அறிவித்தார். விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து விட்டோம் என்றும் கூறினார். இனி ஆபத்து என்பது இல்லை என்பதாகவும் குறிப்பிட்டார். அதுவும் அவருடைய அறிக்கையிலிருந்து தெரிகிறது. நம்முடைய விவசாய மந்திரியும் மத்திய சர்க்கார் உணவு மந்திரியும் தங்களுடைய முயற்சியினால் ஒரு அற்புதம் ஏற்பட்டு விட்டது என்றும் சொன்னார். ஆனால் அவர் கொடுத்திருக்கக் கூடிய புள்ளி விவரங்களை பார்த்தால் கடந்த மார்ச்சு மாதத்திலிருந்து விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போய் இருந்திருக்கிறது. ஆனால் சர்க்கார் மே மாதத்தில் தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டு நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. நியாய விலைக் கடைகளில் அரிசி படி ஒன்றுக்கு பதினொரு அணாவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். புள்ளி விவரத்தைப் பார்த்தால் சுமார் 2,000 நியாய விலைக் கடைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தக் கடைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அரிசியைப் பார்த்தால் ஒரு கடைக்கு ஒரு நாள் ஒன்றுக்கு 20 மூட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி சர்க்கார் உத்தரவு போட்டிருந்தும் ஒரு நாளைக்கு 1½ மூட்டைகளுக்கு மேல் விற்கப் பட்டதாகத் தெரியவில்லை. சுமார் 20 மூட்டைகளைக் கொடுத்தால் சுமார் பத்து நாட்களுக்கு மறுபடியும் அந்தக் கடையில் அரிசி இருக்காது. கொடுக்கப்படும் அரிசி மூட்டை ஒரு நாளைக்குத்தான் வரும். திருச்சி நகரத்தில் இதை நான் கண்ணால் பார்த்திருக்கிறேன். அதனால் இந்த விஷயம் எனக்கு நேரடியாகத் தெரியும். ஆனால் மந்திரிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் திடீரென்று அற்புதம் ஒன்று தோன்றி விட்டது என்று சொல்லுகிறார்கள். ஆனால் விஷயம் வேறு. விலைவாசிகளின் இறக்கத்திற்கு காரணம் வியாபாரிகளைக் கேட்டால் நன்றாகத் தெரியும். சர்க்காருடைய முயற்சியினால் விலைவாசிகள் இறங்கவில்லை. எங்களுடைய முயற்சினால்தான் விலைவாசிகள் இறங்கியது என்று வியாபாரிகள் சொல்லிக்கொண்டிருந்ததை நான் கேட்டிருக்கிறேன். சர்க்கார் எவ்வளவு நியாய விலைக்கடைகளை ஆரம்பித்தாலும் விலை குறையாது. விலைகள் குறைய வேண்டுமானால் அது ' எங்கள் கையில்தான் இருக்கிறது ' என்று வியாபாரிகள் சொல்லுகிறார்கள். 'எங்கள் கையில் இருக்கும் ஸ்டாக்கை நாங்கள் வெளியே விட்டால் விலைவாசிகள் தானாகவே இறங்கிவிடும். ஒரு படி அரிசி 11 அணா, இல்லை 10, அல்லது 9 அணாவிற்குக்கூட எங்க

ளால் குறைக்க முடியும் ' என்று சொல்லுகிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது சர்க்காருடைய கையில் இல்லை. அது வியாபாரிகளுடைய கையில்தான் இருக்கிறது என்று தெரிய வருகிறது. வியாபாரிகள் எல்லாரும் திட்டம் போட்டுக்கொண்டு பேசிக் கொண்டு இந்த மாதிரி விலைவாசிகளை கட்டுப்படுத்துகிறார்கள். அவர்களுடைய இஷ்டம்போல் விலைவாசிகளை ஏற்ற வேண்டுமோ அல்லது இறக்க வேண்டுமோ அப்படியே செய்து கொண்டு வருகிறார்கள். இந்த நிலைமையைப் பார்க்கும்போது சர்க்கார் விலைவாசிகளை கட்டுப்படுத்துவதற்கு சக்தி அற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொண்டு இருக்கிறார்களா ? இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. இது சர்க்காருக்கு தெரிந்தோ அல்லது தெரியாமலோ நடந்து கொண்டிருக்கிறது. இதைவிட மத்திய சர்க்கார் நிதி மந்திரி ஒரு படி முன்னால் போகிறார். இப்பொழுது ரிசர்வ் பாங்கிலிருந்து கடன் கொடுப்பதில் ஒரு புது உத்தரவு போட்டிருப்பதாகச் சொல்லுகிறார். அதாவது தானியங்களின் பேரில் கடன் கொடுப்பதை ஒரு அளவுக்குக் கட்டுப்படுத்தியிருப்பதாக சொல்லியிருக்கிறார். அது என் போன்றவர்களுக்கு ஒரு விஷயத்தில் சந்தோஷமளிப்பதாக இருந்தாலும் அதில் சில மாறுதல்கள் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. இப்பொழுது சுமார் 24 கோடி ரூபாய் உணவுப் பொருள்களின்பேரில் கடன் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதில் இப்பொழுது ஐந்து கோடி ரூபாயை குறைத்து விட்டதாகச் சொல்லுகிறார். அதனால் வியாபாரிகள் தானியங்களை வாங்க முடியவில்லை என்றும் அதனால் தானியங்கள் வெளி வருகிறது என்றும் அதனால்தான் விலைவாசிகள் குறைந்து விட்டது என்றும் அதன் மூலமாக ஸ்டாக் வெளியே வருகிறது என்று சொல்லுகிறார். இப்படி மத்திய சர்க்கார் மந்திரி சொல்வதில் அர்த்தம் இல்லை. இதில் மாகாண சர்க்கார் கொஞ்சம் யோசனை செய்ய வேண்டும். ரிசர்வ் பாங்கிலிருந்து கொடுக்கக் கூடிய கடன் தொகையை குறைக்க வேண்டும் என்று சொல்லும்போது அறுவடை காலத்தையும் கொஞ்சம் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படி கடன் கொடுக்கும்போது அறுவடை காலங்களில் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால் வியாபாரிகள் அந்தக் கடனை வாங்கி தானியங்களை வாங்கி பதுக்கி வைத்துக் கொண்டு அறுவடை இல்லாத காலங்களில் அதிகப்படியான விலைக்கு விற்க வசதி ஏற்படுகிறது. இந்த நிலைமையை ஏற்படுத்த கூடாது. அப்படிச் செய்தால் இந்த இரண்டு வருஷங்களாக ஏற்பட்டு வந்திருக்கும் நிலைமைதான் மீண்டும் ஏற்படும். அந்தப் பொறுப்பை மாகாண சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டால் மூட்டையின் விலை ரூபாய் 15 அல்ல, 14, 13, 10-க்குக்கூட வந்துவிடும். அப்படியும் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படி வந்தால் விவசாயிகள் தங்களுக்கு அதிகப் படியான நஷ்டம் ஏற்படுகிறது என்ற கூக்குரல் வரும். விலைவாசிகள் உயர்ந்தால் அதை வாங்கி உபயோகிக்கும் தொழிலாளர்களும் ஊழியர் களும் கிளர்ச்சி செய்வார்கள். இதற்கு சர்க்கார் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதற்கு ஒரு வழி இருக்கிறது. சர்க்கார் ரிசர்வ் பாங்கிலிருந்து கொடுக்கக்கூடிய கடன் தொகையை வியாபாரிகளுக்குக் கொடுக்காமல் அவர்கள் கொடுக்கும் தொகையை விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்தால் நன்மையாக இருக்கும். அம்மாதிரி கொடுப்பதற்கு இப்பொழுது சர்க்காருக்கு வசதி இருக்கிறது. இப்பொழுது நாம் நியாய வார மசோதாவை இயற்றி இருக்கிறோம். அந்த மசோதாவின் பிரகாரம் விவசாயிகளுடைய கையில் மகசூல் தாராளமாக இருக்கும். அவர்களிடமுள்ள தானியங்களை பணயமாக வைத்துக்கொண்டு அவர்களுக்கே அந்தக் கடன் தொகையைக் கொடுத்தால் அவர்கள் அதை வைத்துக் கொண்டு தானியங்களை ஒரே அளவில் விற்பதற்கு வசதியாக இருக்கும். வியாபாரிகள் வாங்கி வைத்துக்கொண்டு அதிக விலைக்கு அறுவடையில்லாத காலங்களில் விற்பதற்கு இடம் ஏற்படாது. ஆகவே கடன் தொகை வியாபாரிகள் கையில் போகாமல் விவசாயிகளுடைய கைக்குப் போகும்படியாக பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே ரிசர்வ் பாங்க் கொடுக்கக்கூடிய அட்வான்ஸ் தொகை விவசாயிகளுக்குத்தான் கொடுக்க வேண்டும். அப்

பொழுதுதான் அவர்கள் ஓரளவு ஸ்டாக்குகளை வைத்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். அப்படிச் செய்தால் தான் இப்பொழுது நடைபெறுவது போல் அதாவது வருஷத்தில் ஒன்பது மாதங்கள் விலைவாசி உயர்ந்து கொண்டும் அறுவடை காலமாகிய மூன்று மாதங்களுக்கு விலைவாசி இறங்கிக் கொண்டும் இருக்காது. இம்மாதிரியான நிலைமை ஒவ்வொரு வருஷமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம். இதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கை இப்பொழுதே எடுத்துக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி மத்திய சர்க்காருக்கும் இந்த சர்க்கார் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இப்பொழுது சமர்பித்துள்ள வரவு செலவு திட்டத்தை வரப்போகும் மந்திரி சபை நிறைவேற்றப் போகிறது என்று சொல்லுகிறார். இப்பொழுது தேர்தல் வரப்போகிறது, புதிய மந்திரி சபையை அமைக்கப் போகிறார்கள். எந்த மந்திரி சபை வந்தாலும் இதே கொள்கையைத்தான் பின்பற்றப் போகிறார்கள். கடந்த ஐந்து வருஷங்களாக நடந்து வந்த நடவடிக்கைகளைப் பார்த்தால் முதல் மந்திரி பதவியில் மாறுதல்கள் ஏற்பட்டாலும் நிதி மந்திரி பதவியில் ஒருவர்தான் இருக்கிறார். எந்த மந்திரி சபை வந்தாலும் கொள்கையில் மாறுதல்கள் ஏற்படும் என்று எனக்குத் தோன்றவில்லை. இப்பொழுதுள்ள நிதி மந்திரிக்கு இருக்கும் செல்வாக்கினால் அவரே மறுபடியும் புது மந்திரி சபைக்கு வருவார் என்றும் இன்னும் அதிகப்படியான பொறுப்பையும் ஏற்று வருவார் என்றும் தோன்றுகிறது. எந்த மந்திரி சபை வந்தாலும் எதிர்க் கட்சியில் பலமாகத்தான் இருப்பார்கள். யார் அதிகாரத்துக்கு வந்தாலும் அவர்கள் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும். ஐந்து வருஷங்களில் என்ன செய்ய வேண்டும் என்பதை யோசித்து அதை செய்து விட்டுப் போக வேண்டும். இப்பொழுது பற்றுக்குறை பட்ஜெட்டை சமர்பித்திருக்கிறார். அதை சரிக்கட்ட என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிறார் என்பதைப்பற்றி அவர் ஒன்றுமே சொல்லவில்லை. அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் தந்திரமாக மழுப்பி விட்டார். ஆனால் அவரே நிதி மந்திரியாக வந்தால் இந்த பற்றுக் குறையை எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பது ஒரு பெரிய விஷயம். அதைப்பற்றி அவர் எடுத்துப் பேச விரும்பவில்லை. ஆனால் புது மந்திரி சபை வந்த பிறகு அதைப்பற்றி எடுத்துத்தான் சொல்லப் போகிறார். அப்பொழுது நாங்களும் அதைப்பற்றி சொல்லப் போகிறோம். ஆனால் கடந்த ஐந்து வருஷங்களில் பல விஷயங்களைப் பற்றி வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அவைகளில் எவ்வளவை நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். பல விஷயங்களில் பல வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார்கள். முதலாவதாக தேர்தல் நடந்து வந்தபோது 1952-ம் வருஷம் முதல் கூட்டத்தில் என்ன சொன்னார்கள் என்றால் கூடிய சீக்கிரத்தில் நிலச் சீர்திருத்தம் கொண்டு வரப்போவதாகச் சொன்னார்கள். அது தான் தங்களுடைய முக்கியமான லட்சியம் என்றும் சொன்னார்கள். நடைமுறையில் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் 1955-ம் வருஷத்தில் முதன் முதலாக தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்தது. அது ரொம்பவும் வரவேற்கத் தக்கதாக இருந்தது. அதற்குத் திருத்தம் மறுபடியும் 1955-ம் வருஷம் கொண்டு வந்து இப்பொழுது அமூல் நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால் 1952-ல் வாக்குறுதி கொடுத்த பிரகாரம் நிலச் சீர்திருத்த சட்டம் கொண்டு வரவில்லை. மூன்று தொகுதிகளாகக் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லி கொண்டு வந்திருக்கிறார்கள். சமீபத்தில் விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றாமல் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்க விஷயம் தான். இரண்டாவதாக நியாய வாரச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அது வந்திருந்தபோதிலும்கூட நடை முறையில் அது இன்னும் அமுலுக்கு வரவில்லை. அதற்கு வேண்டிய விதிகளை வெளியிடுவதற்கு இன்னும் காலம் வரவில்லை. அதற்குக் காரணம் எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. முதலில் சட்டம் செலெக்ட் கமிட்டிக்குப் போய் பிறகு சபைக்கு வந்து அது சட்டமாகி அதன் பிறகு ஜனாதிபதியின் அதிகாரத்திற்குப் போய் அவரும் அதற்கு அங்கீகாரம் கொடுத்து விட்டார். ஆனால் இன்னும் அது

அமுலுக்கு வரவில்லை. இன்னும் ரெண்ட் கோர்ட்டுகள் அமைக்கவில்லை. தாசில்தார், கலெக்டரைப் போய்க் கேட்டால் சட்டம் வந்து விட்டதேயொழிய அதைப் பற்றி எங்களுக்கு இன்னும் உத்தரவு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். அதனால் எங்களால் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியாது என்றும் சொல்லுகிறார்கள். சட்டம் வந்தால் மட்டும் போதாது 12-44 p.m.
என்றும் சொல்லுகிறார்கள். சமீபத்தில் ஹைக்கோர்ட் ஆர்டர் ஒன்று வந்த பிறகு அவர்களுடைய மனம் மாறிப் போய்க் கொண்டிருக்கிறது. ஹைக்கோர்ட்டின் தீர்ப்பின் விளைவாக சர்க்கார் அதிகாரிகளிடத்தில் ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும். திருச்சி கலெக்டர் ஸ்ரீ ஆர். எஸ். மலையப்பனை ஒரு பெரிய புரட்சி வாதி என்று நினைக்கிறார்களா ? யார் கலெக்டராக இருந்தாலும் எங்களுக்கு கவலையில்லை. மிகவும் முரட்டுத்தனமான கலெக்டர்களையும் நாங்கள் சமாளித்திருக்கிறோம். ஹைக்கோர்ட் நீதிபதி எழுதி இருக்கக் கூடிய குறிப்பு விவசாயிக்கு உரிமையேயில்லை, நிலப்பிரபுவுக்குத் தான் உரிமையிருக்கிறது என்று சொல்லட்டும். ஆனால் தன்னுடைய அதிகாரத்துக்கு மீறி அந்தக் கலெக்டர் மீது குற்றம் சாட்டியதன் உள் நோக்கம் என்ன என்பதை சர்க்கார் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த கலெக்டர் செய்த குற்றம்தான் என்ன ? ஏழை மக்களோடு சகஜமாகப் பழகுகிறார். குற்றம் குறைகளை எடுத்துச் சொன்னால் அதன் மேல் தக்க நடவடிக்கை எடுக்கிறார். சர்க்கார் கொள்கைக்கு ஒப்ப காரியங்களைச் செய்தால் அவைகளை சர்க்கார் பாராட்டும் என்று நினைத்து செய்து விடுகிறார். இப்படிச் செய்வதை "எதேச்சாதிகாரம்" என்று சொல்ல முடியுமா ? பெரிய நிலப் பிரபுக்களுடைய விருந்துகளில் கலந்து கொள்ளும் அதிகாரிகள் எல்லாம் நல்லவர்கள் ; ஆனால் ஏழை மக்களோடு சகஜமாகப் பழகும் அதிகாரிகள் "totalitarian" என்ற மனப்பான்மை ஏற்படுமானால் அது தேசத்திற்கே ஆபத்து என்பதை சர்க்காருக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஹைக்கோர்ட் தான் மக்களுக்கு நீதியை வழங்கும் ஸ்தலம். ஆகவே ஹைக்கோர்ட்டின் பேரில் மக்களுக்கு மதிப்பு ஏற்பட வேண்டும். ஹைக்கோர்ட் நீதிபதி அப்பேர்பட்ட குறிப்பை எழுதியதன் மூலக் காரணத்தை சர்க்கார் விசாரிக்க வேண்டும். சோஷலிஸ சமுதாயம் நமது குறிக்கோள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஒழுங்கான நிர்வாகம் வேண்டுமானால் இப்பேர்பட்ட போக்குகள் ஆபத்தைத்தான் விளைவிக்கும்.

நிலச்சீர்திருத்தம் சம்பந்தப்பட்டவரை நமது சர்க்காரின் போக்கு "முன் ஒரு அடி எடுத்து வைத்தால் பின்னால் இரண்டு அடி எடுத்து வைக்க கூடிய" நிலையில்தான் போய் கொண்டிருக்கிறது. நிலச் சீர்திருத்தத்தின் மூன்றாவது அம்சம் என்ன என்று தெரியவில்லை. ஐந்து ஆண்டுகளாக வாக்குறுதிகள் அளித்தும் கடைசியில் என்னவாயிற்று என்றால் "பஞ்சபாண்டவர்கள் கட்டில் கால்களைப் போல் மூன்று என்று சொல்லி, இரண்டு விரலைக் காண்பித்து ஒன்று என்று எழுதி அதையும் அழித்துவிட்டதைப் போலாயிற்று". ஆகவே நடைமுறையில் இச்சீர்திருத்தத்தை கொண்டு வருவதற்கான தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சர்க்கார் சில வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலும், இச்சபையிலும், அவைகளைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். Revenue அமைச்சர் இப்பொழுது சபையிலில்லை. ஆனால் அவர் பேசக்கூடிய விஷயமும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றதாகவேயிருக்கும். ஒரு முனை விற்பனை வரி கொண்டு வருவதாகச் சொல்லி, ஐந்து வருடகாலமாக சர்க்கார் ஆலோசனை பண்ணி ஆகிவிட்டது. National Development Council-லில் நடைபெற்ற விவாதத்தின் போது, சில பண்டங்களின் மீதுள்ள வரியை மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் மாகாண சர்க்கார் அப்பண்டங்களின் மீது விற்பனை வரி விதிக்காது, நண்பர் சுப்பிரமணியம் எடுத்துக் காட்டியதைப்போல், மாகாண சர்க்கார் மத்திய சர்க்கார் மீது பழியைப் போட்டு தப்பித்துக் கொள்வதற்கான ஒரு நிலைமையே இதனால்

ஏற்படும். சர்க்கார் கொடுத்திருக்கும் வாக்குறுதிப்படி ஒருமுனை விற்பனை வரிதான் விதிக்கவேண்டும். இப்பொழுது இதிலிருந்து சுமார் 9 கோடி ரூபாய் வருமானம் கிடைப்பதாக சொல்லப்படுகிறது. இதைவிட அதிக தொகை கிடைத்தாலும் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் இந்த வரியை வசூலிக்கும் இயந்திரம் வியாபாரிகளிடம் மிகவும் கடுமையாக நடந்து கொள்கிறது. ஐந்து ஆண்டுகளாக ஆலோசனையில் இருந்த பிறகும் இந்த ஒரு முனை விற்பனை வரியைப் பற்றிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

இம்மாதிரி நிறைவேற்றப் படாத பல விஷயங்கள் இருக்கின்றன. நிறைவேற்றப் படாத காரியங்களைச் சுட்டிக் காட்டுவதுதான் எங்களுடைய கடமை. ஆசிரியாகள், சர்க்கார் சிப்பந்திகள், ஜெயில் வார்டர்கள், போலீஸ் காரர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள் இவர்கள் சம்பள விஷயமாக, ஆரம்பத்திலிருந்தே மந்திரிகள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். வாக்குறுதி கொடுக்கும்போது நிதானமாய் இருந்தால் நன்றாய் இருக்கும். கடந்த பத்து வருஷ காலமாக இச் சிப்பந்திகள் சம்பள உயர்வை கேட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். இச்சிப்பந்திகளுக்கு பணத்தை வைத்து சரியாக செலவு செய்யத் தெரியாது என்று நினைத்து, சர்க்காரே **guardian** மாதிரி இருந்து கொண்டு, கல்விச் சலுகை, வைத்தியச் சலுகை, முதலியவைகளை கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இதன் பலன் என்னவென்றால் ஆஸ்பத்திரிக்குள் எந்த வியாதியஸ்தர்கள் போனாலும், 'கடையிலிருந்து மருந்து வாங்கிக் கொண்டு வா' என்று சொல்லுகிறார்கள். ஒரு தனி நபர் போனால் மருந்தையாவது எழுதிக் கொடுக்கிறார்கள். ஆனால் சர்க்கார் உத்தியோகஸ்தர் போனால் மருந்தைக்கூட எழுதிக் கொடுப்பதற்கு அங்குள்ள டாக்டர்கள் பயப்படுகிறார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடமே விசாரித்துப் பார்த்தால் இதன் உண்மை நன்கு விளங்கும். நடைமுறையில் இந்தச் சலுகையால் அவர்களுக்கு ஒருவிதப் பயனும் ஏற்படவில்லை. இப்பொழுது பஞ்சப்படியை 5 ரூபாய் அதிகரித்திருக்கிறார்கள். சென்ற ஒன்பது மாதக் காலமாகவே விலைவாசிகள் வெகுவாக உயர்ந்திருக்கின்றன. அரிசிக்கு மட்டுமே சிப்பந்திகள் எவ்வளவு செலவு செய்திருப்பார்கள் என்பதை சர்க்கார் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசியல் காரணத்திற்காக நாங்கள் இச் சிப்பந்திகளின் நிலைமையை எடுத்துச் சொல்லுகிறோம் என்று நிதி மந்திரி அவர்கள் நினைத்து எங்கள்மேல் ஆத்திரப்பட்டால் அது மிகவும் தப்பாகும். அதற்காக சிப்பந்திகள் மீதும் கோபப்பட்டால் பலன் ஒன்றுமில்லை. என்.ஜி.ஓ.-க்கள் வருகிற ஜனவரி மாதம் ஒன்பதாம் தேதியன்று ஒரு மணி நேரம் அடையாள வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த நிலைமை ஏற்பட்டதற்கு காரணம் நமது மாகாண சர்க்காரும், நிதி அமைச்சரும், முதலமைச்சரும் தான். வீணாக எதிர்க்கட்சியின் மீதோ அல்லது சிப்பந்திகளின் மீதோ ஆத்திரப்படுவதில் பயனில்லை. எங்களுடைய கிளர்ச்சியினால், உங்களுடைய கை பலப்பட வேண்டும் என்பதை உணர்ந்து நீங்கள் வேலை செய்ய வேண்டும். அடக்கு முறையினால் எதையும் சாதித்து விடலாம் என்ற காலம் மலையேறி விட்டது. சிப்பந்திகளை பயமுறுத்துவது விவேகமாகாது. நமக்கு திறமையான நிர்வாகம் வேண்டாமா? அமைதியான நிர்வாகமும், திருப்தி உள்ள நிர்வாகமுமே நிதி அமைச்சரின் குறிக்கோளாக இருக்க வேண்டும். 'எதிர்க்கட்சி என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும், அதைப்பற்றி எனக்கு கவலையில்லை' என்ற மனப்பான்மை கூடாது. தங்கள் சிப்பந்திகள் விஷயத்தில் இந்த ஐந்து வருட காலமாக சர்க்கார் மிகவும் மந்தமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். பல சமயங்களில் ஆத்திரமூட்டக்கூடிய பேச்சுக்களையும் பேசியிருக்கிறார்கள். திருப்தியற்ற நிர்வாகத்தை வைத்துக் கொண்டு எப்படி திறமையான சேவையை எதிர்பார்க்க முடியும்? இப்போது கொடுத்துள்ள ஐந்து ரூபாய் யாரையும் திருப்தி செய்யவில்லை. எழு ரூபாயாவது எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்று அப்பொழுதே சொன்னேன். சிப்பந்திகளிடை அதிருப்தியை பரப்புவதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல. அதிருப்தியை போக்குதற்கான யோசனையைத் தான் நாங்கள் சொல்லுகிறோம். ராஜ்ய சர்க்கார்

வேறு, மத்திய சர்க்கார் வேறு அல்ல. இதில் மத்திய சர்க்காருக்கும் பொறுப்புண்டு. ராஜ்ய சர்க்காருக்கு மத்திய சர்க்கார் ஒரு கணிசமான தொகையை ஏன் மான்யமாக வழங்க முன் வரக்கூடாது என்று நமது சர்க்கார் கேட்க வேண்டும். மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு எந்த விதமான சம்பளம் பஞ்சப்படி இருக்கிறதோ அதே விகிதத்தை ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் வழங்குவது தான் நியாயம். மத்திய சர்க்கார் சிப்பந்திகளே உடனடியாக 25 சதவிகிதம் சம்பள உயர்வு வேண்டுமென்று இப்பொழுது கேட்கிறார்கள். எதிர் கட்சியின் தூண்டுதல் என்று இதை சுலபமாகச் சொல்லிவிட முடியாது. சில நாட்களுக்கு முன்பு தான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஐ.என்.டி.யூ.சி.-ஐச் சேர்ந்த அந்த ஸ்தாபனத்தின் தலைவர் தமது பிரசங்கத்தில் எல்லாத் தொழிலாளர்களுக்கு உடனடியாக 25 சதவிகிதம் சம்பள உயர்வு கொடுக்க வேண்டுமென்றும், கீழ்த்தர சிப்பந்திகளுக்கு 100 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார். அவர் கம்யூனிஸ்டு அல்ல. ஐ.என்.டி.யூ.சி.-யின் தலைவரான ஸ்ரீ வாஸவதாவே தான் அவ்வாறு சொல்லியிருக்கிறார். அதைத் 12–5 p.m.
தான் மத்திய சர்க்கார் மந்திரி கந்துபாய் தேசாயும், நந்தாவும் நாட்டில் பிரசாரம் செய்து வருகிறார்கள். நாங்கள் அவர்களைத் தூண்டி விடுவதாகக் கோபப்படுவதைக் காட்டிலும், ஸ்ரீ கந்துபாய் தேசாய் ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்று கேட்க வேண்டும், ஸ்ரீ நந்தா ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்று கேட்க வேண்டும். அல்லது தேர்தல் வருகிறது என்பதற்காக அவர்கள் எல்லோரும் அப்படிப் பேசுகின்றார்களா என்பதாவது நமக்குத் தெரிய வேண்டும். நம் ராஜ்யத்திலுள்ளவர்களின் சம்பளத்தை 25 சத விகிதம் இவர்களே உயர்த்தட்டும். எதிர்க் கட்சிக்காரர்களுக்கு இதனால் வோட்டு கிடைக்காமல் போனாலும் பரவாயில்லை. அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தி இவர்களே மறுபடியும் பதவிக்கு வந்தாலும் எங்களுக்குச் சந்தோஷம் தான். எப்படியாவது இன்றைய தினம் அடித் தட்டில் நின்று கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றவர்களின் சம்பளம் வாழ்க்கைக்குத் தேவையான அளவு உயர்ந்தால் போதும் என்று தான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய ராஜ்ய சம்பள விகிதாசாரத்திற்கு ஏற்பவாவது நமது சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளம் 25 சத விகிதம் உயர வேண்டுமென்பதாக நான் கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் உயர்த்தியிருப்பது 5 ரூபாய் தான். இது போதவே போதாது. குறைந்தது 15 ரூபாயாவது உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் நான் பல பிரச்னைகளைப் பற்றி பேச வேண்டி இருந்தாலும் எல்லா வற்றையும் பேசுவதாய் இருந்தால் நேரம் போதாது. தொழிலாளர்களுடைய நலனுக்காக 4½ வருஷமாக தொழிலாளர் இலாக்கா இயங்கி வருகிறது. பல பிரச்னைகளில் அவர்கள் முடிவு கண்டிருக்கிறார்கள். இருந்தாலும் இவர்கள் கொடுக்கும் தீர்ப்பை முதலாளிகள் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை என்றால் டிரிப்யூனலுக்கு அட்ஜுடிகேஷனுக்கு விடுவதில்லை. அதனாலே பெரும்பாலான இடங்களில் தகராறு நீடிக்கிறது. விலைவாசிகள் ஒரேயடியாக உயர்ந்திருக்கக் கூடிய இந்தக் காலத்தில் தொழிலாளர்கள் எல்லோரும் மிக அமைதியாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மனது மாறாமலிருக்க அவர்களுக்குத் தேவையான உதவியை சர்க்காரே உணர்ந்து உடனடியாகச் செய்ய வேண்டும். ஒரு தொழிலுக்குப் பல தொழிற் சங்கங்கள் இருந்தது போக ஒரே ஒரு தொழிற் சங்கத்தை அனுமதிப்பது பற்றியும், அவர்களுக்கு அங்கீகாரம் வழங்குவது பற்றியும் ஆலோசித்து ஒரு மசோதா கொண்டு வரப் போவதாகச் சொல்லப்பட்டது. அதைப்பற்றி நாங்களும் விவாதித்து இருக்கிறோம். ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த மசோதா இன்று எங்கே போய்விட்டது என்று தெரியவில்லை. பீடித் தொழிலாளர்களுக்கு தொழிலாளர்கள் என்ற உரிமையே இல்லாமல் போய்விட்டது. அதைப் பற்றிய மசோதாவையும் "முடிந்தால் கொண்டுவருகிறேன்" என்று சொல்லுகிறார் அமைச்சர். "முடிந்தால்" என்பதற்கு என்ன வேண்டுமென்றாலும் அர்த்தம் கொடுக்கலாம். அதை உடனடியாகக் கொண்டு வரவேண்டும்.

[Sri M. Kalyanasundaram] [19th December 1956

தொழிற் சங்கங்களுக்கும் முதலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டு சர்க்கார் சார்பில் வழங்கப்படும் சமாசத் தீர்ப்பை முதலாளிகள் ஏற்றுக்கொள்ளாத போது மேலே அப்பீல் செய்து கொள்ள தொழிற் சங்கத்திற்கு உரிமை வழங்கி விடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு சர்க்கார் வக்கீல்கள் உதவி செய்வது கிடையாது. சர்க்கார் வக்கீல்களின் உதவியை தொழிற் சங்கங்கள் கோருகின்றனவா இல்லையா என்பது ஒருபுறம் இருக்கட்டும். அவர்கள் முழுக்க சர்க்கார் வக்கீல்களையே நம்ப மாட்டார்கள். முதலாளி வக்கீலோடு சேர்ந்து கொண்டு சர்க்கார் வக்கீல் தொழிலாளர்களின் தலையில் கை வைத்தாலும் வைத்து விடுவார்கள் என்ற பயம் இருக்கும்.
12-56 p.m. இருந்தாலும் சர்க்கார் தன்னுடைய பொறுப்பாக அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்ய வேண்டியது அவசியமாகும். இது கடைசிக் கூட்டம் என்றால் நான் சொல்ல வேண்டிய விஷயங்களை அப்புறம் சொல்லலாம் என்று எண்ணிக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டு நாட்களாக நிதி நிலை அறிக்கை பற்றி இங்கு விவாதம் நடந்தது. இவ்வளவு குறுகிய கால அளவில் விவாதம் நடந்தது இது தான் முதல் தடவை என்று நினைக்கிறேன். அதற்குக் காரணம் நாம் எல்லோரும் தேர்தலை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறோம். "இவைகள் யாவும் தற்காலிகமாக இருக்கக்கூடிய விஷயம். இந்த பட்ஜெட்டும் கூட தற்காலிக பட்ஜெட். ஆகையால் இதிலே விரிவான விவாதம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை" என்று அங்கத்தினர்கள் உணர்ந்த காரணத்திலேயே சர்க்கார் இந்த விவாதத்திற்கு மூன்று நாள் ஒதுக்கி இருந்தாலும் கூட எதிர் கட்சித் தலைவர் இரண்டு நாள் போதும் என்று வைத்து விட்டார்.

SRI M. KALYANASUNDARAM: பல மசோதாக்கள் வரவேண்டி இருக்கின்றன. அதனால்தான் இரண்டு நாள் போதும் என்றோம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: பல மசோதாக்கள் வருவதனால் தான் 31-ந்தேதி வரையில் கூட்டம் நடத்தத் தீர்மானித்திருந்தோம். ஆனால் 27ந்தேதியோடு கூட்டத்தை முடித்து விடலாம் என்று சொல்லி விட்டார்கள். ஆகவே பல மசோதாக்கள் வர வேண்டி இருப்பதன் காரணமாக பொது விவாதத்திற்கு இரண்டு நாள் போதும் என்பதாகச் சொன்னோம் என்ற சாக்கை வைத்துக் கொள்ள வேண்டியது இல்லை. மசோதாக்கள் எப்படியும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படும். நான் உண்மை நிலையை எடுத்துச் சொன்னேன். நான் குறை கூறுவதாக எடுத்துக் கொண்டு எதிர் கட்சி உப தலைவர் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

நான் இப்போது சமர்ப்பித்திருக்கும் இடைக்கால பட்ஜெட்டில் கொடுத்திருக்கும் சலுகைகள் தேர்தலுக்காகக் கொடுத்திருப்பவை என்பதாக ஒரு சிலர் குறிப்பிட்டார்கள். அது முன்பெல்லாம் நான் சமர்ப்பித்திருக்கக் கூடிய பட்ஜெட்டுகளிலுள்ள சலுகைகளை எல்லாம் மறந்து சொன்ன வார்த்தை என்று நினைக்கிறேன். நான் முதன் முதல் சமர்ப்பித்த பட்ஜெட்டிலேயே சில சலுகைகளைக் கொடுத்திருக்கிறேன். சலுகை கொடுப்பது என்ற சரித்திரத்திலேயே என்னுடைய வரவு செலவுத் திட்டங்கள் எல்லாம் ஆரம்பமாகியிருக்கின்றன. 1952-ம் ஆண்டு ஜூன் மாதத்திலே சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்திலேயே முதல் முதலாக கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுடைய நலனில் அக்கறை கொண்டு காட்டிய சலுகை ஆரம்பமாகிவிட்டது. முந்நூறு ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குகின்றவர்களுக்கு எல்லாம் கல்விச் சலுகையும், வைத்திய சலுகையும் கொடுத்தாக வேண்டும் என்பதை உணர்ந்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்திருக்கிறேன். அதை அமுல் நடத்துவதற்கான நடவடிக்கைகள் எல்லா வற்றையும் கடந்தஐந்து வருஷங்களாகச் செய்து வந்திருக்கிறோம். அதற்குப் பிற்பாடு 1954--55-ம் வருஷத்திலே இன்னும் யார் யாருக்கு அந்தச் சலுகை அவசியமோ அவர்களுக்கு

19th December 1956] [Sri C. Subramaniam]

எல்லாம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. எல்லா ஏழை மாணவர்களுக்கும் எட்டாவது வகுப்பு வரையில் இலவசப்படிப்பு கொடுக்க வேண்டுமென்பதற்கான திட்டத்தை சமர்ப்பித்தேன். அத்துடன் ஆசிரியர்களுக்கு பென்ஷன் திட்டமும் கொடுக்க வேண்டும், அவர்களுடைய சம்பளமும் மூன்று ரூபாய் உயர்த்தப்பட வேண்டுமென்பதாக அறிவித்திருக்கிறேன். இப்படியே நான் இது வரையிலும் வருஷா வருஷம் கொடுத்து வந்திருக்கக்கூடிய பல சலுகைகள் என்ன என்ன என்பதை கடந்த கால என்னுடைய வரவு செலவுத் திட்டங்களைப் பார்த்தாலேயே தெரியும். சென்ற பிப்ரவரியிலே பல் வேறு பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கிடையே சம்பள வேறுபாடு இருக்கக் கூடாது, ஒரே மாதிரியாகச் சம்பளம் இருக்க வேண்டு மென்பதாகச் செய்திருக்கிறோம். நான்காம் பாரம் முதல் ஆறும் பாரம் வரையில் அரைச் சம்பள வசதி இருந்ததை மாற்றி முழுச் சம்பள வசதி அளித்திருக்கிறோம். இப்படியே கடந்த ஆண்டுகளில் பல விதமான சலுகைகளை இந்த சர்க்கார் அளித்து வந்திருப்பதை ஒட்டியே தான் இப்பொழுது சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டத்திலும் சில சலுகைகளை அளித்திருக்கிறேன். ஆகவே ஏதோ தேர்தலுக்காக அளித்திருக்கும் சலுகை என்று சிலர் சொல்வார்களேயானால் நான் அதை ஒப்புக் கொள்ள முடியாது. ஒன்று சர்க்கார் எதைச் செய்தாலும் அதில் ஏதாவது குறை காணவேண்டு மென்ற மனப்பான்மை உடையவர்களாய் இருந்தால்தான் அப்படிக் குறை கூறலாம். அல்லது சென்ற காலங்களில் சர்க்கார் அளித்து வந்திருக்கும் சலுகைகள் எல்லாவற்றையும் உணர்ந்து கொள்ளாமலோ, மறந்தோ போய் விட்டவர்களாக இருந்தாலும் அப்படிக் குறை சொல்லலாம். சில அங்கத்தினர்களுடைய வாதம் இந்த இரண்டு வகையில் அமைந்திருப்பதாகத் தான் எனக்குத் தோன்றுகிறதே தவிர வேறு இல்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சலுகைகள் மூல 1-02 p.m. மாக நம் நாட்டில் இருக்கக்கூடிய ஏழைகளுக்குக் கணிசமான பலன் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் எதிர் கட்சி உப தலைவர் "சர்க்கார் பல வாக்குறுதிகள் கொடுத்தும் அவைகளெல்லாம் நிறை வேற்றப்படாமல் இருக்கின்றன" என்று சொன்னார். நான் எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றி விட்டதாகச் சொல்லத் தயாராய் இல்லை. ஆனால் பல வாக்குறுதிகளை நிறை வேற்றி இருக்கிறோம் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த வாக்குறுதியின் பிரகாரம்தான் சில முக்கியமான காரியங்களை இயன்ற என் திறமைக்கு ஏற்ற அளவுக்குச் செய்திருக்கிறேன். மற்றவர்கள் இன்னும் திறமையாகச் செய்திருக்கலாம். ஆனால் என்னைப் பொருந்த வரையில் எங்கள் திறமைக்கு ஏற்ற வகையில் செய்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் நம் நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய பல அபிவிருத்திகளை, ஏழைகளின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காகவும் நாங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதில் சந்தேகம் இல்லை. கடந்த ஐந்து வருஷத்திலே எந்த விதமான முன்னேற்றமும் ஏற்பட வில்லை என்றும், முன் இருந்த கஷ்டங்களை விட இன்னும் அதிகமான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் சில நண்பர்கள் சொன்னார்கள். இவ்வாறு அவர்கள் சொல்வதற்கு இரண்டு காரணங்கள் தான் இருக்க வேண்டும். ஒன்று நாட்டில் நடந்துக் கொண்டிருக்கக்கூடிய காரியங்களை புரிந்து கொள்ளாமல் பேசி இருக்க வேண்டும். இரண்டாவது தேர்தல் வருகிறபடியால் காங்கிரஸ் மீது குறை கூற வேண்டும் என்பதற்காக அவ்வாறு சொல்லி இருக்க வேண்டும். ஆனால் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் எவ்வளவோ அதிகமாக இருக்கின்றன என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

சென்ற ஐந்து வருஷத்திலே, ஏன் சுதந்திரம் வந்து ஒன்பது வருஷத்திற்குள்ளே, நாம் எல்லாக் காரியங்களையும் செய்து விட்டோம் என்று நான் சொல்லவில்லை. அப்படி நாங்கள் நினைத்தால் அது முட்டாள் தனம் என்றுதான் சொல்வேன். ஏனென்றால் இன்னும் செய்ய வேண்டிடிய காரியங்கள் நம் முன் மலைப்போல் நிற்கின்றன. அந்தக் காரியங்களை

யெல்லாம் சரிவர செய்து முடிப்பதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைக்க முன்வரவேண்டும். எந்தெந்தக் காரியங்களை உடனடியாகச் செய்ய வேண்டுமோ அவைகளை முதல் ஐந்தாண்டு திட்டத்தில் நிறைவேற்றி இருக்கிறோம். அதில் ஓரளவுக்கு வெற்றியும் கண்டிருக்கிறோம். இதை எதிர் கட்சி அங்கத்தினர்களே ஓரளவுக்காவது ஒப்புக் கொள்ளுகிறார்கள். நாம் இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைத் துவக்கி இருக்கிறோம். முதல் ஐந்தாண்டு திட்டத்தைப் போல் இரண்டாவது ஐந்தாண்டு திட்டமும் வெற்றி அடையும் என்று நம்புகிறோம். ஏனென்றால் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டுதான் இரண்டாவது ஐந்தாண்டு திட்டமும் உருவாகி இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் குற்றம் குறைகள் இல்லாமல் இல்லை. அவைகளிலும் சில குற்றங்கள் இருக்கலாம் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்பட்ட குற்றங்கள் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள முடியும். அதற்காகத்தான் எல்லோரையும் கலந்து ஆலோசித்து இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கின்றது. இது குற்றங்குறை இல்லாத பூர்ணத்துவம் பெற்ற திட்டம் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் மனிதனுடைய முயற்சி எதுவாக இருந்தாலும் அதில் குற்றம் குறை இருந்தே தீரும். இந்தத் திட்டத்திலும் அம்மாதிரி இருக்கலாம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆகவே அவ்வப்போது ஏற்படுகின்ற குறைகளை போக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது. அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் நாம் நல்ல பயன் அடைந்து முன்னேற முடியும்.

இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை சரிவர அமுல் நடத்த வேண்டுமானால் நாம் எல்லோரும் சேர்ந்து உழைத்தாக வேண்டும். இதற்கு வேண்டிய அளவு பண வசதியை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இது இடைக்கால பட்ஜெட்டாக இருந்தாலும்கூட, தேர்தலுக்குப் பின் சமர்ப்பிக்கப்படுகின்ற பட்ஜெட்டில் அடிப்படையான மாறுதல் எதுவும் இருந்துவிட முடியாது. நாம் வகுத்திருக்கிற இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில்தான் இந்த இடைக்காலத்திற்கு ஆகும் செலவினங்களுக்கு இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பின்னால் திட்டத்தில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சில மாறுதல்கள் பட்ஜெட்டிலே இருக்கலாமேயொழிய புரட்சிகரமான மாறுதல் இருந்துவிட முடியாது. இந்த பட்ஜெட்டிலே நான் காண்பித்து இருப்பது போதிய அளவு பணவசதி குறைவாய் இருக்கிறது என்பதுதான். அங்கத்தினர்கள் இதை நன்றாக உணர வேண்டும். அந்த நோக்கத்துடன்தான் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட அடிப்படையில்தான் இந்த வரவு செலவு திட்டமும் அமைந்திருக்கிறது. இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே பல குறைகள் இருப்பதாக ஸ்ரீ ரத்தினம் எப்பொழுதும் பேசுகின்ற ரீதியில் பேசிக் கொண்டுபோனார். அவருடைய பேச்சுக்கு முன்பு என்ன மதிப்புக் கொடுத்தேனோ அதே மதிப்புத்தான் இப்பொழுதும் கொடுக்கிறேன். அவருடைய பேச்சை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு, உண்மையாகவே மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும், மத்தியதர வகுப்பாரின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும், ஹரிஜனங்களின் வாழ்க்கை உயர வேண்டும், ஏழைகளின் வாழ்க்கை உயர வேண்டும் என்று நினைக்கிறவர்கள் சொல்லும் வாதங்களையும், புத்தி மதிகளையும் நான் எப்பொழுதும் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

Sri A. RATNAM : கனம் நிதி மந்திரி அவர்களின் பேச்சு ஒரு போக்கில் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் உண்மை என்ன வென்றால் ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை அவர்களுக்கு செலவழிக்காமல் நடுவில் இருக்கிறவர்கள் அந்தப் பணத்தைக் கொள்ளை அடிக்கிறார்கள். அந்தக் கொள்ளையடிக்கும் திருடர்களை சமுதாயத்திலிருந்து ஒதுக்காமல் மற்றவர்கள் மௌனமாக பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஹரி

ஜனங்கள் அதை உணர்ந்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். வருகிற பொதுத் தேர்தலில் தங்கள் எண்ணங்களை மற்றவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் நடந்துக் கொள்வார்கள்.

The Hon. Sri C. SUBRAMANIAM : ஆம், அந்தத் திருடர்களை ஒதுக்கவேண்டும் என்பதுதான் லட்சியம். ஹரிஜனங்கள் பெயராலே தங்கள் சொந்த நலத்திற்காக கொள்ளை அடிக்கிறார்களே, திருடுகிறார்களே அவர்களை ஒதுக்கவேண்டு மென்பதுதான் கொள்கை. ஹரிஜனங்களின் தலைவர் என்று சொல்லிக் கொண்டு சில பேர் தங்கள் சொந்த லாபம் கருதி ஹாஸ்டல்களை நடத்துகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அவர்கள் கொள்ளை அடிக்கிறார்கள், திருடுகிறார்கள் என்பதை ஹரிஜனங்கள் உணரவேண்டு மென்பதுதான் எங்கள் கொள்கை.

(Sri A. Ratnam rose to speak.)

DEPUTY SPEAKER : The Hon. Minister is not yielding.

The Hon. Sri C. SUBRAMANIAM : இனிமேல் பேசினால் அது ஸ்ரீ ரத்தினத்திற்கு பிரதிகூலமாக அமையும் என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் சற்று முன்பு ஐந்தாண்டு திட்டத்தில் குற்றம் குறைகள் இருக்கலாம் என்று சொன்னேன். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இந்தக் குற்றம் குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லும்போது எனக்கு கோபம் வந்திருக்கலாம். ஆனால் அதெல்லாம் ஓரளவு மாறி இருக்கிறது. குற்றம் குறைகளை நான் வரவேற்கிறேன். அம்மாதிரி குற்றம் குறைகளை எடுத்துக் கூறியவர்களுக்கு என் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன் 1–14 p.m.
குற்றத்தை எடுத்துக்கூறுகிறோமே என்று யாரும் மனதில் நினைக்கவேண்டிய அவசியம் இல்லை. நாம் நடத்தக்கூடிய நிர்வாகத்திலே குறைகளே இல்லையென்று நாம் சொல்ல முடியுமா ? குறைகள் நிறைய இருக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அந்தக் குறைகளை நீக்கக்கூடிய முறையிலே குறைகள் எடுத்துக் கூறப்பட்டால் அதை நான் கட்டாயம் வரவேற்கிறேன். ஆனால் தன்னுடைய குறைகளை மறைப்பதற்கு மற்ற குறைகளை எடுத்துச்சொன்னால் அவைகளை நான் ஒத்துக்கொள்ள முடியாது. உண்மையாகவே நிர்வாகம் புனிதமாக இருக்கவேண்டும், நாடு முன்னேறவேண்டும், மக்கள் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும், மக்கள் நல்ல பயனடையவேண்டுமென்ற முறையிலே எந்த ஆலோசனைகளை, குற்றங்களைச் சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்பதை உங்களுக்குச் சொல்லிகொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய முக்கியமான பிரச்னை என்ன ? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நல்ல முறையிலே நிறைவேற்றவேண்டும். அதற்கான வசதிகளை எப்படிப் பெறமுடியும் என்பதில் நம்முடைய கவனத்தைச் செலுத்தவேண்டும். தேர்தலுக்குப் பிறகு நம்மில் பலர் இங்கு திரும்பி வந்தாலும் வரலாம், வராமல் போனாலும் போகலாம். ஆனால் சபையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பது நம்முடைய பொறுப்பு. அதன் மூலமாகத்தான் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரமுடியும் என்பதை சட்ட சபையின் அங்கத்தினர்கள் மட்டும் மல்ல, பொதுமக்கள் எல்லோரும் உணரவேண்டும். அந்த உணர்ச்சி வந்தால்தான் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றமுடியும்.

திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஐந்து கோடி ரூபாய் துண்டுவிழுகிறது. அதை சரிப்படுத்தாமலேயே நாம் திட்டத்தை நிறைவேற்றமுடியாது. மற்ற ராஜ்யங்களிலும் இம்மாதிரி துண்டு விழுகிறது. மத்திய அரசாங்கத்திலும் துண்டுவிழுகிறது. செலவினங்களை மட்டும் பெருக்கிக்கொண்டு போனால் நம்முடைய பொருளாதாரம் இன்னும் பாதிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. வருவாய்க்கு மேல் செலவினங்களை அதிகரித்துக்கொண்டே போக

முடியாது. வருவாய் அளவிலேதான் செலவு செய்யவேண்டும். வருவாய்க்கு மேல் செலவுசெய்வது ஓரளவுக்குத் தான் முடியும். அந்த நிலைமை நீடித்துக்கொண்டே போகமுடியாது. தனிப்பட்ட குடும்பங்களுக்கு இருக்கக்கூடிய விதிதான சர்க்காருக்கும் பொருந்தும். குடும்பத்திலே எப்படி வரவுக்கு மேல் செலவு செய்யக்கூடாது என்று சொல்லப்படுகிறதோ, அதேமாதிரிதான் அரசாங்கமும். அரசாங்கம் சமுதாயம் முழுவதற்கும் பொங்குகிறது. ஆகையால் அரசாங்கமும் குடும்பத்தைப்போல் வரவுக்கு மேல் செலவு செய்யமுடியாது என்பதைக் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்றால், அதற்குத் தகுந்த நிதிவசதி வேண்டும். பொருள் வசதிவேண்டும். அந்த வசதிகளுக்கான ஏற்பாடுகளை நாம் முடிவு செய்துகொள்ளவேண்டும். அதை எப்படி செய்வது, எந்தவிதமாகச் செய்வது, வரிமூலமாகச் செய்யவேண்டுமா என்று ஆலோசிப்பது அவசியம். அதற்கான எல்லா வழிகளையும் நாம் ஆராய்ந்து அறியவேண்டுமென்பதில் சந்தேகமே இடையாது.

நம்முடைய ராஜ்ய திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, மத்திய சர்க்காரின் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, திட்டங்களையெல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு வேண்டிய வசதிகளை நாம் எப்படி பெற முடியும் என்று ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்த முடிவுக்கு வராமல் திட்டங்களை நிறைவேற்றுவது என்பது சாத்தியமல்ல. திட்டம் சரியாக இல்லையென்றால் திட்ட காலத்திலே அதை மாற்றி அமைக்க முடியும். திட்டம் உறுவான பிற்பாடு அதை நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடுகளை முதலில் செய்தாகவேண்டும். அப்பொழுதுதான் திட்டத்தை நிறைவேற்றலாம். இதற்காக எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும். பின்னால் சபையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரி, எல்லா அங்கத்தினர்களும் இருக்கக்கூடிய நிலைமையை நன்றாக உணரவேண்டும். இப்பொழுது இருக்கக்கூடிய நிதிவசதி என்ன, நாம் செய்யக்கூடிய வேலைகள் எவ்வளவு இருக்கின்றன, வேலைகளுக்குத் தகுந்த அளவு பணவசதி இருக்கிறதா என்பதையெல்லாம் மக்கள் உணரவேண்டும், அங்கத்தினர்களும் உணரவேண்டுமென்ற முறையிலே தான், பட்ஜெட் உரையிலே எல்லா விவரங்களையும் நான் எடுத்துச்சொல்லியிருக்கிறேன்.

இந்த சமயத்தில் இன்னொரு விஷயத்தை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். எக்ஸைஸ் வரி போடுவதுபற்றி, சுப்பிரமணியம் அவர்களும் சொன்னார்கள், அதே போக்கில்தான் கலியாணசுந்திரம் அவர்களும் பேசினார்கள். நமக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை மத்திய அரசாங்கத்துக்கு கொடுத்துவிட்டு, பிறகு அவர்களிடம் காவடி தூக்கவேண்டும் என்ற நிலைமை ஏற்படப்போவதாகச் சொன்னார்கள். அப்படி ஒன்றுமில்லை. இன்றைக்கு நமது அரசியலமைப்பிலே எக்ஸைஸ் வரியில் கட்டாயமாக ராஜ்யங்களுக்கு பங்கு கொடுத்தே தீரவேண்டுமென்ற விதி இருக்கிறது. அதை ஒட்டித்தான் ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை நிதிக் கமிஷன் நியமிக்கப்படுகிறது. ராஜ்ய சர்க்கார்களின் செலவுகளை அனுசரித்து அவைகளுக்கு உதவி அளிக்கப்படுகிறது. ராஜ்ய சர்க்காருக்கு போதிய வருவாய் இருக்கிறதா, எவ்வளவு வருவாய், எவ்வளவு செலவு, வருமான வரியில் எவ்வளவு பங்கு கொடுக்கவேண்டும், எக்ஸைஸ் வரியில் எவ்வளவு பங்கு கொடுக்கவேண்டும் என்பதையெல்லாம் பரிசீலித்து நிர்ணயம் செய்து அவைகளுக்கு போதிய நிதிவசதி அளிப்பதற்காகத்தான் நிதிக் கமிஷன் நியமிக்கப்படுகிறது. சென்ற ஐந்துவருஷ காலத்திலே ராஜ்யங்களுக்கு எவ்வளவு புதிய செலவு ஏற்பட்டிருக்கிறது, நிதிவசதிகளை ராஜ்யங்களிலே எப்படி அதிகரிக்க முடியும், நிதிவசதிகளை வைத்துக்கொண்டு செலவுக்கு போதிய அளவு வருவாய் இல்லாமல் இருந்தால் அதை எப்படி சரிக்கட்டுவது என்பதையெல்லாம் ஆராய்ந்து வழிவகைகள் செய்வதற்குத் தான் இந்த நிதிக் கமிஷன் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் அடுத்த ஐந்து வருஷத்தில் பல அதிக செலவுகள் நமக்கு ஏற்படும். அந்த சமயத்தில் தான் நாம் மத்திய அரசாங்கத்தினிடம் போய் அதிகமாக செலவு இருக்கிறது, இன்னும் அதிக உதவி கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்கவேண்டியிருக்கிறது. ஐந்துவருஷங்கள் கழித்துத்தான் நிதிக்

கமிஷன் ஏற்படுத்தப்படுகிறது. அவர்கள் முன் ஐந்துவருஷ நிலைமையை அனுசரித்து ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எவ்வளவு வருவாய், எவ்வளவு நிதிஉதவி கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புக் கூறுகிறார்கள். ஆனால் இடைக்காலத்தில் மத்திய அரசாங்கத்தோடு பேரம்செய்துதான் அதிகச் செலவைச் சரிக்கட்டுவதற்கு நாம் ஏற்பாடு செய்யவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் மத்திய அரசாங்கம் எக்ஸைஸ் வரியை வசூல் செய்துகொண்டு அவர்கள் இஷ்டப்படி நமக்கு நிதி கொடுக்கலாம் என்றமுறையில், நாம் அவர்களை எக்ஸைஸ் வரி போடச்சொல்லவில்லை. விற்பனைவரிக்குப் பதிலாக எக்ஸைஸ் வரி போடும்பொழுது அந்தப் பணம் பூராவுமே ராஜ்யங்களுக்காக ஒதுக்கிவைக்கப்படும். அப்படித்தான் தேசீய அபிவிருத்தி கவுன்சில் தீர்மானித்திருக்கிறது. வசூல்செய்யும் செலவையும் மத்திய அரசாங்கமே ஒத்துக்கொள்வார்கள். இதற்காக அவர்கள் தனியாக உத்தியோகஸ்தர்களை நியமிக்கப்போவதில்லை. இப்பொழுது 3 அணா வசூலிப்பது போல் இன்னும் ஒரு அணா சேர்த்து 4 அணாவாக வசூலிக்கப்போகிறார்கள். இப்பொழுது 3 அணா வசூலிக்கும் உத்தியோகஸ்தர்களே அதையும் வசூல் செய்துவிடுவார்கள். ஆகையால் வசூல் செய்வதற்காக 25 சதவிகிதம் செலவுத்தொகை குறைக்கப்படமாட்டாது என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் கிடைக்கக்கூடிய வருமானம் முழுவதுமே ராஜ்யங்களுக்கு ஒதுக்கப்படும் என்பதுதான் அவர்கள் செய்துள்ள முடிவு.

Sri M. KALYANASUNDARAM: அந்தந்த ராஜ்யங்களில் வசூலிக்கப்படும் பணம் அந்தந்த ராஜ்யங்களுக்கே கொடுக்கப்படுமா? அல்லது ராஜ்யங்களின் தேவையைப் பொறுத்து அது விநியோகிக்கப்படுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM: அந்தத் தொகையை ராஜ்யங்களுக்கு எப்படி பிரித்துக்கொடுப்பது என்பதுதான் முக்கியமான பிரச்னை. பம்பாய், வங்காளம் போன்ற ராஜ்யங்கள் அவர்கள் ராஜ்யங்களிலே உற்பத்தி ஜாஸ்தி, வியாபாரம் ஜாஸ்தி, அவர்களுக்கு அதிகம் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஒவ்வொரு ராஜ்யத்திலும் எவ்வளவு வருமானம், ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எப்படி எக்ஸைஸ் வரியை பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றி நிதிக் கமிஷன் தீர்ப்புக் கூறவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த வரியை யார் வசூலித்தாலும் சரி, மத்திய அரசாங்கம் வசூலித்தாலும் சரி, ராஜ்ய அரசாங்கம் வசூலித்தாலும் சரி, அந்தப் பணம் பூராவும் ராஜ்யங்களுக்குத்தான் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. ராஜ்யங்களிடையே அதைப் பங்குபோடும் பொறுப்பு நிதிக் கமிஷனிடம் விடப்பட்டிருக்கிறது. துணியின்மேல் வரி விதித்தாலும் சரி, புகையிலையின்மேல் வரிவிதித்தாலும் சரி, சர்க்கரையின்மேல் வரிவிதித்தாலும் சரி, அந்தந்த ராஜ்யத்தில் இதற்கு முன் இந்தத் துறைகளில் எவ்வளவு வரி வசூலிக்கப்பட்டதோ அந்த அளவுக்கு குறைவில்லாமல் தொகை ராஜ்யங்களிடையே பிரித்துக்கொடுக்கப்படவேண்டுமென்ற விதி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆதலால் ஏதோ மத்திய அரசாங்கத்தினிடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு அவர்களிடம் பிச்சை கேட்கும் நிலைமையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எந்த இடத்தில் வசூல் செய்தால் கஷ்டமில்லாமல் இருக்குமோ, வரியை யாரும் ஏமாற்றமுடியாமல் கொடுக்கவேண்டியிருக்குமோ அந்த முறையைப் பற்றிதான் நாம் யோசித்துக்கொண்டு வருகிறோம். துரதிர்ஷ்ட வசமாக இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை என்ன? விற்பனை வரியை ஒருமுகமாகப் போட்டாலும் சரி, பலமுனையில் போட்டாலும் சரி வரியை எப்படி ஏமாற்றலாம் என்ற முறை ஓரளவு விஸ்தரிக்கப்படுகின்ற நிலைமை நாட்டிலே நிலவுகிறது. அதற்குக் காரணம் என்ன? எல்லோரும் இது விஷயத்தில் கெட்டவர்கள் என்று சொல்லமுடியாது. விற்பனை வரியை ஏமாற்றுகிறவர்கள்தான் நியாயமாக நடக்கும் வியாபாரிகளை விட அதிகமாக லாபம் சம்பாதிக்கமுடிகிறது. அவர்களுக்குத் தான் வியாபாரம் அதிகமாக நடக்கிறது. நியாயமாக நடக்கிற வியாபாரிகள் தவறுதலாக நடப்பவர்களோடு

[Sri C. Subramaniam] [19th December 1956

போட்டி போடமுடியாத காரணத்தினாலே மற்றவர்களும் அநியாயமாக நடந்துகொள்ளவேண்டிய அவசியமும் நிர்ப்பந்தமும் ஏற்படுகிறது. இப்பொழுது இருக்கக்கூடிய முறையிலேயே வரியை ஏமாற்றுவதற்கு எவ்வளவு சந்தர்ப்பங்கள் இருக்கின்றனவோ அவைகளை ஆராய்ந்து அதை நீக்குவதற்குத்தான் நாம் முயற்சிக்கவேண்டும். இருக்கக்கூடிய வரி விதிப்பு முறை கூடியவரையில் ஏமாற்றமுடியாத முறையிலே அமைவது மிகவும் அவசியம். மத்திய அரசாங்கம் வசூலிப்பதா அல்லது நாம் வசூலிப்பதா என்பது இரண்டாவது விஷயம் தான். உற்பத்தி ஸ்தானத்திலேயே எக்ஸைஸ் வரி போட்டுவிட்டால் வரியை அதிக அளவுக்கு ஏமாற்ற முடியாது. பொருள்கள் எங்கு உற்பத்தி செய்யப்படுகிறதோ அந்த முதல் இடத்திலேயே வரியைப் போட்டு எடுத்துவிட்டால் ஏமாற்றக்கூடிய ஒரு நிலை ஏற்படாமல் போய்விடும் என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்றாக உணரவேண்டும். இதை உணர்ந்துவிட்டோமானால் கஷ்டமேயில்லை. மத்திய அரசாங்கம் வரியை விதித்தாலும் சரி, ராஜ்ய அரசாங்கம் வரி விதித்தாலும் சரி, எந்தக்கட்டத்தில் வரி போடப்பட்டாலும் சரி, அதை பண்டங்கள் உபயோகிப்பவர்கள்தான் கொடுக்க நேரிடும். யாருக்கும் கஷ்டமில்லாமல் எல்லோரும் நியாயமாக நடந்துகொள்ளும் முறையில் வரி விதிப்பு முறையை மாற்றி அமைக்கமுடியுமா என்பதை முக்கியமான பிரச்னை என்பதை அறிய வேண்டும்.

Excise வரியை உயர்த்தி இந்த விற்பனை வரியை எடுத்துவிடுவது தான் இந்த நாட்டின் நிலைமையைச் சமாளிப்பதற்கு நல்லது என்று எடுத்துச் சொன்னேன். அன்று அதற்கு வரவேற்பு இல்லை. அது என்னுடைய குற்றமாய் இருந்தாலும் இருக்கலாம். அதில் இருக்கக்கூடிய முக்கியமான விஷயங்கள் என்னவென்பதை எடுத்துச் சொல்லாதது பலஹீனமாய் இருந்திருக்கலாம். ஆனால், இதில் இருக்கக்கூடிய உண்மையான நிலைமையை நாம் உணருவோமேயானால் இதன் மூலம் நமக்கு நஷ்டம் இடையாது; அதிக லாபந்தான் வரும் என்று தெரியவரும். இதனால் யார் யார் கஷ்டப்படப்போகிறார்கள் என்றால் அநியாயமாக லாபம் எடுத்து வந்தார்களே, வரி கொடுக்காமல், அதாவது சரியான கணக்கு காட்டாமல் சரியானபடி வரி கொடுக்காமல் லாபமடித்து வந்தார்களோ அவர்களுக்குத்தான் நஷ்டம் ஏற்படும். ஆனால் நியாயமான விதத்தில் நடக்கும் வியாபாரிகளுக்கு இதன் மூலமாக யாதொரு நஷ்டமும் ஏற்படாது என்பதோடல்லாமல் இப்பொழுது நியாயமான வரி கொடுக்கிறவர்களுக்கு இப்பொழுது இருக்கக்கூடிய அளவிற்கு வரி கொடுக்காமல் குறைவாயும், அவர்களுக்கு இந்த வரி முறை மூலம் அதிக வருமானமே வரும். ஆகையினால், ஏதோ நம்முடைய அதிகாரங்களையெல்லாம் யாரிடமோ, யார் கையிலோ எடுத்துக் கொடுத்துவிட்டோமென்று பார்க்காமல் மக்களுக்கு எது நல்லது; இந்த வரியை கஷ்டமின்றி எப்படி வசூலிக்க முடியும்; மத்தியில் கொள்ளைலாபம் அடிக்கிறவர்களை எப்படித் தடுக்க முடியும் என்றெல்லாம் யோசித்து அந்த முறையில்தான் நாம் இதைப் பார்க்கவேண்டும். இதன் மூலம் ஓரளவு நமக்கு வருமானம் உயருமேயொழிய இதனால் எந்தக் காலத்திலும் நமக்கு குறைவு ஏற்படாது என்று இங்கு எடுத்து சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே, எந்த முறையில் இன்றைய வரி விதிப்பு முறையை எவ்வளவுக்கெவ்வளவு மாற்றியமைக்க வேண்டுமென்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். அதேபோல், வரி விதிப்பு முறை மூலமாக யார் யார் அதைத் தாங்க முடியுமோ அவர்களிடத்திலேதான் வரி வசூலிக்க வேண்டுமென்ற முறையில் ஆலோசனை செய்து வரித்திட்டத்தை அமைக்கவேண்டும். அதற்கு உதாரணமாக இன்றைக்கு மத்திய அரசாங்கத்திலிருந்து இடைக்காலத்தில் போடப்பட்டிருக்கக்கூடிய வரிகளை எடுத்துக்கொள்வோமேயானால் அதிகப் பணம் படைத்தவர்களிடமிருந்து வரக்கூடிய வரியாய் அமைந்திருக்கிறதேயொழிய ஏழைகளைப் பாதிக்கும் வரி எதுவும் போட்டுவிடவில்லை. அதேபோல் நாம் போட்டிருக்கும் வரியும் ஓரளவு யார் யார் அந்த வரியைக் கொடுக்க முடியுமோ அவர்கள்மீது தான் இந்த வரி போடக்கூடிய முறையில் இந்த வரித் திட்டம் அமைந்திருக்கிறது. வேறுஏதாவது மாற்றியமைக்க

19th December 1956] [Sri C. Subramaniam]

வேண்டுமென்றால், மாற்றும்படி ஏதாவதிருந்தால் அப்படி மாற்றியமைக்க நாங்கள் தயாராயிருக்கிறோம் என்று நான் இங்கு எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன்.

Sri M. P. SUBRAMANYAM : தலைவர் அவர்களே, கனம் அமைச்சரவர்கள் சொன்னார்கள், சாமான்கள் எங்கு உற்பத்தி செய்யப்படுகிறதோ அந்தயிடத்தில்தான் வரி வசூல் செய்யப்படுமென்று பாம்பேயில் அதிகப் பொருள் உற்பத்தியாகி அங்கு வரி வசூலிக்கிறார்கள். அங்கிருந்து வரும் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களை இங்குள்ள மக்கள் வாங்கினால் வரி கொடுக்கிறவர்கள் இந்த ராஜ்யத்திலுள்ள மக்கள். ஆனால் வரி கொடுக்கக்கூடிய மாகணம் பம்பாய் மாகாணம். ஆகவே, அவர்கள் கூடுதல் வரி கொடுப்பதால் அவர்களுக்கு கூடுதலான தொகை ஒதுக்கும்படியான நிலைமை ஏற்படாதா?

The Hon. Sri C. SUBRAMANIAM : வரியை அடிப்படையாக கொண்டல்ல பங்கிடுவது. அப்படிப்பட்ட ஒரு வாதத்தையும் அவர்கள் கொண்டு வரவில்லை. உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டுதான் கொடுக்க வேண்டுமே தவிர அதில் **sales** வரக்கூடாது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் மத்திய அரசாங்கமென்றோ ராஜ்ய சர்க்காரென்றோ பார்க்க வேண்டிய அவசியமில்லையென்பதே என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அந்தப் பகுதி, இந்தப் பகுதியென்று இல்லாமல் மக்களுக்கு எது சௌகரியமோ, அதனால் யாரும் சர்க்காரை ஏமாற்ற முடியாமல் இருக்கும்படியான விதத்தில் திட்டங்களை மாற்றியமைக்கலாம். மோட்டார், ரேடியோ இவைகளுக்கு அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இப்பொழுது பரிசீலனை நடந்து வருகிறது. இந்த வரியை இன்னும் விரிவடையச் செய்யமுடியும். அதன் மூலமாக விற்பனைவரியே இல்லாமலாக்கிவிடலாம். பல பண்டங்களின்மீதுள்ள இந்த வரியை எடுத்துவிட்டு, மூலவரிபோட்டால், இந்த விற்பனை வரித்திட்டத்திலுள்ள கோளாறுகள் நீங்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இந்த அடிப்படையில்தான் இன்றைக்கு நாம் வரிபோடக்கூடிய ஒரு திட்டத்தை, வரி போடக்கூடிய ஒரு தத்துவத்தை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும் என்பதை நான் உங்கள்முன் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கெஸட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களைப்பற்றி கல்யாணசுந்தரம் அவர்கள் வெகு ஆர்வத்துடன் பேசினார்கள். அதைப்பற்றி நான் குறிப்பிட வேண்டியது மிகவும் அவசியமாகும். அவர்கள், 5 ரூபாய் கொடுத்தது போதாது என்று சொன்னார்கள். நானும் அதை வற்புறுத்திக்கூறி இருக்கிறேன். நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய ஐந்து ரூபாய் கூடுதல் போதாது. இன்னும் அவர்களுக்கு அதிக நிவாரணம் கொடுக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறேன். தேசீய அபிவிருத்தி கௌன்ஸிலில் இதற்கும் மேலாக அவர்களுக்கு நன்குபடுகிற முறையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதை எடுத்துச் சொல்வதற்கு முன்னால், "உடனடியாக எந்தவிதத் தகவலுமின்றி சொல்கிறீர்களே; நாங்கள் அதைப்பற்றி கவனிக்கவில்லையே" என்று சொல்வதற்கு முன்னமே இந்தப் பிரச்னையை சங்கக் கூட்டத்திலே நான் கிளப்பப் போகிறேன் என்று சொல்லி அவர்கள் அதற்கு தயாராய் இருந்த பிற்பாடுதான் இந்தப் பிரச்னையைப்பற்றி பேசியிருக்கிறேன். ஆகவே, இந்தப் பிரச்னையைத் தீர்ப்பது, மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்தால்தான் இதை நல்ல முறையில் தீர்க்க முடியுமென்ற யோசனையை எடுத்துச்சொல்லி, அவர்கள் அதை பரிசீலனை செய்தும் வருகிறார்கள். சில பேர்களுக்கு ஏழு ரூபாய் அதிகமாக கொடுக்கப்பட்டது. சிலருக்கு ஐந்து ரூபாய்தான் அதிகமாகக் கொடுக்கப்பட்டது. சிலருக்கு ஆறு ரூபாய் தான் அதிகமாகக் கொடுக்கப்பட்டது என்றெல்லாம் சொல்லப்பட்டது. இந்த ஏழு ரூபாய் அதிகம் வாங்கக் கூடியவர்கள் ரொம்பவும் குறைவான சம்பளம் வாங்கக் கூடியவர்கள். நாலாவது கிரேட் சிப்பந்திகள் போன்றவர்கள்; ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் இப்படிப்பட்டவர்கள் குறைவான சம்பளம் வாங்குகிறார்கள். இவர்களைப் போன்றவர்களுக்கு, 18 ரூபாய்

பஞ்சப்படி வாங்குபவர்களுக்கு 25 ரூபாயாக்கப்பட்டது ; 19 ரூபாய் பஞ்சப்படி வாங்குபவர்களுக்கு ஆறு ரூபாய் கூட்டி 25 ரூபாயாக்கப்பட்டது ; 20 ரூபாய் உள்ளவர்களுக்கு ஐந்து ரூபாய் கூட்டி 25 ரூபாயாக்கப்பட்டது. போலீஸ் கான்ஸ்டேபிள்கள் போன்றவர்களுக்கு ஏன் ஆறு ரூபாய் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். நான்காவது கிரேட் சிப்பந்திகளுக்கு ஏன் கூட்டிக்கொடுக்க வேண்டும் ; இவர்கள்தான் strike பண்ணுவதாக பயமுறுத்தவில்லையே. பயமுறுத்துபவர்களுக்கு கொடுத்தால் போதும் என்று சொல்கிறார்கள். அது சரியல்ல. அம்மனப்பான்மை அவர்களுக்கே தீங்கு விளைவிக்கும் என்று நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். ப்யூன்ஸ்களுக்கு ஏன் கொடுத்தீர்கள், ஆசிரியர்களுக்கு ஏன் கொடுத்தீர்கள், Constables-க்கு ஏன் கூட்டிக் கொடுத்தீர்கள் ? கெஸட் பதவில்லாத உத்தியோகஸ்தர்களாகிய நாங்கள்தானே கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். நாங்கள்தானே வேலை நிறுத்தம் செய்வோம் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தோம். இந்த இரண்டு கோடி ரூபாயை எங்களுக்குப் பிரித்துக் கொடுத்திருந்தால் நாங்கள் திருப்தியடைவோமே என்று சொல்கிறார்கள். இது தவறான முறையாகும். இன்றைக்கு முதலில் யாருக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்றால், அடித்தளத்தில் இருக்கக் கூடியவர்களுக்குத்தான் முதலில் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையில்தான் செய்திருக்கிறோம் ; 6, 8, 12 என்று கூட்டியிருக்கலாம். ஆனால் அடித்தளத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் நிவாரணம் அளிப்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். இருந்தாலும் கூட, கல்யாணசுந்தரம் அவர்கள், ஏன் எல்லோருக்கும் ஒரே விதத்தில் கொடுத்திருந்தால் என்ன என்று சொன்னார்கள். அது சரியான வாதமல்லவென்பதை இப்பொழுதாவது அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன் ; 7, 6, 5 ரூபாய் போதாது என்றால் அதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் எல்லோருக்கும் ஒரேமாதிரியாக கொடுத்திருக்கலாமென்றால் அது சரியல்ல. இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில் மிகவும் கஷ்டப்படக்கூடிய சர்க்கார் ஊழியர்களுக்கு எந்தவிதச் சலுகைகள் அளிப்பது என்பதுபற்றி சர்க்கார் தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறது. அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டும் வருகிறோம். அதற்காக தினமும் பத்திரிகையில் statement கொடுத்துக் கொண்டிருந்தால்தான் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள் என்றாகாது. என்னென்ன நடவடிக்கைகளெல்லாம் எடுக்க முடியுமோ அவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் உதவியை எப்படிப் பெறுவது என்ற அடிப்படையில் சர்க்கார் எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டு வருகிறது. மத்திய அரசாங்க நிதியமைச்சரவர்களும் இப்பிரச்னையைத் தீர்க்க ஆலோசனை நடத்தி வருகிறார்கள். மத்திய அரசாங்க நிதியமைச்சரானாலும் சரி, ராஜ்ய நிதியமைச்சரானாலும் சரி உடனே பணத்தையெடுத்துக் கொடுத்துவிடு என்று சொல்லிவிட முடியாது.

DEPUTY SPEAKER : How much more time does the Hon. Minister require to finish his reply?

THE HON. SRI C. SUBRAMANIAM : I will require about fifteen more minutes.

DEPUTY SPEAKER : With the permission of the House, the House will continue to sit till the Minister finishes his reply.

THE HON. SRI C. SUBRAMANIAM : அடுத்த ஐந்து வருடத்திற்கு அதாவது இரண்டாவது ஐந்து வருடதிட்டத்திற்குள்ள செலவில் கூடுதல் 150 கோடி ரூபாய் ஆகிறது. ஆகவே இப்போது இருக்கக்கூடிய 1,200 கோடி ரூபாய், இதோடு மேற்பட்டு 150 கோடி ரூபாய் சேர்ப்பது என்றால் நிதிமந்திரி என்ற முறையில் நான் மாத்திரம் தனியாக செய்யக்கூடிய விஷயமல்ல. மந்திரிசபையை கலந்து ஆலோசித்து அதன் பிறபாடுதான் ஒரு முடிவுசெய்ய முடியும். அதனால்தான் இதில் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் செய்தோ அல்லது வேறு

மாதிரியான கிளர்ச்சிகள் செய்தோ அவர்களுடைய குறைகளை எங்களுக்கு வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. அவர்கள் வேலை நிறுத்தம் செய்வது சரி, அல்லது அவர்களுடைய கிளர்ச்சி நியாயமானது என்று யாராவது சொன்னால் அவர்களுக்கு இந்த உண்மையான நிலைமைகள் தெரியாது என்றுதான் சொல்லவேண்டும். இல்லையென்றால் அவர்களுடைய கோரிக்கைகளை நியாயம் என்று சொல்லுகிறவர்கள் தங்கள் தலைமையை காப்பாற்றிக்கொள்ள வேண்டும். தாங்கள் முன்னணியில் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இதை சொல்லுகிறார்கள் என்று நினைக்கவேண்டும். ஆகவே இன்றைக்கு அரசாங்க ஊழியர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்துவதாக சொல்லி வேலை நிறுத்தம் செய்வது, அல்லது வேலைக்கு போகாமல் இருப்பது, இம்மாதிரியான நடவடிக்கைகளில் இறங்கக்கூடாது. அவர்கள் இம்மாதிரி நடவடிக்கைகளில் இறங்குவதானது சர்க்காருடைய கையை பலப்படுத்துவதற்குப் பதிலாக பலஹீனப்படுத்துவதாகவே இருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே அவர்களுடைய கோரிக்கைகளை பொதுமக்களுக்கு வலியுறுத்துவதற்காக என்று சொல்லி வேலை நிறுத்தம் செய்வதில் அர்த்தம் இல்லை. ஏனென்றால் பொது மக்களுடைய பிரதிநிதிகள் அநேகமாக எல்லாருமே அவர்களுடைய குறைகளை நீக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. சர்க்காரின் நிலைமை என்ன என்பதை நன்கு அறிந்து இருக்கிறார்கள். பொது மக்களின் மனதை பிரதிபலிக்கக் கூடியவர்கள் இதை நன்கு உணருகின்றனர். ஆகவே பொதுமக்களுக்கு வலியுறுத்துவதற்காக வேலைநிறுத்தம் செய்யப்போகிறோம் என்று சொல்வதில் அர்த்தமில்லை. அதனால் அரசாங்க ஊழியர்களை மிகவும் பணிவோடும் தாழ்மையோடும் இந்த சபைமூலம் கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென்று தவறான வழிகளில் போக வேண்டாம். அரசாங்க சிப்பந்திகளுடைய குறைகள் என்னென்ன என்று நாங்கள் உணர்ந்திருக்கிறோம், ஆகவே இந்த சபை மூலம் சர்க்கார் ஊழியர்களை இம்மாதிரியான காரியங்களில், விதிவிலக்கான முறைகளில் இறங்கவேண்டாமென்று தாழ்மையோடு வற்புறுத்திக்கூற ஆசைப்படுகிறேன். அது மாத்திரமல்ல, இங்கிருக்கின்ற சட்ட சபை அங்கத்தினர்களையும் இந்த நிலைமையை வெளியே சென்று பொது மக்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் எடுத்துச்சொல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மக்களுடைய குறைகளை எல்லாம் மக்களுடைய பிரதிநிதிகள் சர்க்காருக்கு உணர்த்துவார்கள். அதை சர்க்காரும் அனுசரித்து வேண்டியதைச் செய்யும். பொது மக்களின் பிரதிநிதிகளின் வேண்டுகோளை செய்து கொடுக்காமல் சர்க்கார் இருந்து கொள்ள முடியாது. ஆனால் இதையெல்லாம் ஒழுங்கான முறையில் சர்க்காரிடம் சொல்லுவதற்கு வசதி இருக்கிறது. சர்க்காரின் திட்டங்களையும் மற்ற காரியங்களையும் வெற்றிகாரமாக நிறைவேற்றுவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்புதான் மிக அவசியம். இதைப்பற்றி நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆகவே எந்த காரியத்தையும் பொதுமக்களுடைய ஆதரவோடுதான் வெற்றிகரமாக நடத்த முடியும். நாம் சில காரியங்களை நிறைவேற்றுவதற்காக சில விதிவிலக்கான காரியங்களில் இறங்கிவிடுகிறோம். இதைத்தான் நாம் இன்று நாடு எங்கும் பார்க்கிறோம். சுதந்திர இயக்க காலத்தில் பல காரியங்களை செய்வதற்காக நாமே மாணவர்களிடம் இந்த மாதிரியான காரியங்களை சொன்னோம். அதை இன்று நாமே அனுபவிக்கிறோம். இம்மாதிரியான விதிவிலக்கான காரியங்களில் யுத்தம் ஏற்பட்டிருந்த காலத்திலும், அடிமையாக இருந்த காலத்திலும்தான் இறங்கலாமே தவிர மற்ற காலங்களில் இதுபோன்ற காரியங்களில் நாம் இறங்கக்கூடாது. சாதாரண காலங்களில் நடக்கின்ற இம்மாதிரியான காரியங்களில் இறங்கினால் அது அத்துடன் நின்றுவிடுவதில்லை. மற்ற நடவடிக்கைகளை எடுக்க தூண்டுகிறது என்பதை நாம் அனுபவத்தில் பார்த்து வருகிறோம். ஆகவே ஒரு மணி நேர வேலை நிறுத்தம் என்று சொல்லி அதில் இறங்கினால், அந்த நோய் நாடு பூராவுக்கும் பரவும் என்பதில் சந்தேகமில்லை. நம்முடைய காரியங்களையெல்லாம் வெற்றிகரமாக முடிப்பதற்கு நாம் எல்லோரும் ஒற்றுமையுடனும் உற்சாகத்துடனும் உழைக்க வேண்டும். அதற்கு நாம்

கடமைப்பட்டிருக்கிறோம். இதில் ஏழைகளாக இருந்தாலும் சரி, பணக்காரர்களாக இருந்தாலும் சரி, எல்லோரும், அதிலும் ஏழைகள்தான் கூடுதலாக உழைக்கவேண்டும். ஏனென்றால் இந்த திட்டங்களினால் பயனடையப்போவது ஏழைகள்தான். ஆதலால் இதில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு முக்கியமான விஷயம், கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் வீணை எந்த விதமான கிளர்ச்சிகளிலோ, ஆர்ப்பாட்டங்களிலோ, வேலை நிறுத்த நடவடிக்கைகளிலோ யாரும் பங்கு கொள்ளக்கூடாது என்று திரும்ப திரும்ப அவர்களை இந்த சபையின் மூலமாக வற்புறுத்த விரும்புகிறேன். அவர்களுக்கு குறைகள் இல்லாமல் இல்லை. அதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அதை போக்குவதற்குவேண்டி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்றும் அவர்களுக்கு வற்புறுத்த விரும்புகிறேன். இதுபற்றி ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரை கேட்டுக்கொண்டிருக்கிறது. இதுபற்றி வேண்டிய முடிவுகள் சீக்கிரமே செய்யப்படும் என்று கூறிக் கொள்கிறேன். இங்குள்ள அங்கத்தினர்களும் இதை வெளியே போய் வற்புறுத்துவார்கள் என்று நம்புகிறேன். அடுத்தப்படியாக இப்போது தேர்தல் வரப்போகிறது. தேர்தல் ஐந்து வருடங்களுக்கொரு தடவை வந்து கொண்டிருக்கிறது. ஒரு வேளை ஐந்து வருடத்திற்கு முன்னாலேயே தேர்தல் நடக்கும். தேர்தல் காரணமாக மற்ற வேலைகளில் ஈடுபடுவதில் சர்க்காரின் திட்டங்களை நிறைவேற்றுவதில் பொது மக்களின் வேகம் குறைந்து விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் காலத்திலும் நாட்டுக்காக வேலை செய்வதில் தொடர்ந்து மக்கள் உழைக்க வேண்டும். ஒரு இயந்திரத்தின் பாகம் பழுது பார்க்கப்படுவதற்காக சில காலங்கள் தாமதப்படுவது போல இனி சட்ட சபை மீண்டும் தேர்தல் வந்து கூடுவதற்கு சிறிது கால தாமதம் ஏற்படுமே தவிர சர்க்கார் இயந்திரத்தில் எந்த விதமான கோளாறும் ஏற்படாதவாறு நல்ல முறையில் இயங்க வேண்டும். இதைத்தான் நாம் எல்லோரும் உணரவேண்டியதாய் இருக்கிறது. மக்களுடைய நலன்களில் அக்கரை கொண்டவர்கள் இந்த சர்க்கார் இயந்திரத்தை நல்ல முறையில் இயங்க வைப்பதற்கு யாதொரு தடங்கலும் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இதில் இருக்கக்கூடிய எல்லா தடங்கல்களையும் நாம் நீக்கித்தான் தீர வேண்டும். இதற்கு நம் நாட்டு மக்களுடைய ஒத்தாசை மிகவும் தேவையாக இருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் மக்களுடைய எல்லா குறைகளும் தீர்க்கப் பட்டுவிட்டது என்று திருப்திப்படக்கூடிய அளவுக்கு நாம் வரவேண்டும். அதன் மூலமாக நாம் பெற்ற சுதந்திரத்தின் பயனை எல்லோரும் அனுபவிப்பதற்கு நல்ல முறையில் எல்லோரும் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு எதிர் கட்சியில் இருக்கிறவர்களும் இந்தப் புறத்தில் இருக்கிறவர்களும் இதில் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். இதில் இரண்டு கட்சியிலுள்ளவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. இதை கூட்டுப்பொறுப்பு என்றுதான் சொல்ல வேண்டும். அந்த முறையில் இதில் எல்லோரும் இந்த நாட்டினுடைய வெற்றிக்காக பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: ஸார், கனம் மந்திரி அவர்கள் சர்க்கார் ஊழியர்கள் சம்பந்தமாகவுள்ள விவரங்களை யெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே இந்த நிலைமைகளை எல்லாம் சர்க்கார் சிப்பந்திகளுக்கு புரியவைப்பதற்காக அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து மந்திரி அவர்கள் அவர்களிடம் நிலைமையை விளக்கி சொல்லுவதற்கு முன் வந்தால் அது நல்லது என்று நினைக்கிறேன். அதற்கு மந்திரி தயாரா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் இந்த விவரங்களை யெல்லாம் சபையில் சொல்லுவதே அவர்களுக்கு சொன்னது போலத்தான் இருக்கும். அவர்களுக்கு நேரடியாக சொல்லவேண்டிய அவசியம் வந்தால் சொல்லுகிறேன். இந்த நிலைமைகள் நடவடிக்கைகள் எல்லாம் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். என்னிடம் அவர்கள் நேராக வந்து இது விஷயமாக இதுவரை ஒன்றும் கேட்கவில்லை. அவர்கள் இது விஷயமாக

என்னிடம் வந்து கேட்டால் நான் நேரில் சொல்லுவதற்கு தயாராக இருக்கிறேன். ஜனவரி மாதம் 9-ம் தேதி வேலை நிறுத்தம் என்று மாத்திரம் சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே தவிர, இது விஷயமாக டில்லிக்கு போனார்களே, அந்த விஷயம் என்னவாயிற்று என்றறிய அவர்கள் என்னிடம் வந்து கேட்கவில்லை. இந்த விஷயமாக தங்களுக்கு என்ன வரப்போகிறது என்பதைபற்றி யெல்லாம் அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. அவர்களுக்கு புதிதாக ஒன்றும் சொல்ல வேண்டியது இல்லை. தூங்குகிறவனைதான் தட்டி எழுப்ப முடியுமே தவிர விழித்துக் கொண்டிருப்பவனை எப்படி எழுப்ப முடியும்? இது எல்லாம் அவர்களுக்கு தெரிந்த விஷயம்தான் என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMY: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் பேசும்போது என். ஜி.ஓ-க்களைப்பற்றி குறிப்பிட்டார். அப்படி குறிப்பிடும்போது இரண்டு கோடி ரூபாய் தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்றும் போலீஸ்காரர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் ஏன் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றும் கேட்டதாகச் சொன்னார். அவர் அப்படிச் சொல்லியது எந்த ஆதாரத்தைக்கொண்டு சொன்னார் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அவர்கள் சொல்லுவதையே ஆதாரமாக வைத்துக்கொண்டு சொல்லுகிறேன்.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned. 1-40 p.m.

VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

203. *Report of the Commissioner for Scheduled Castes and Scheduled Tribes (two parts) for the year 1955.*

APPENDIX I.

[Vide answer to clauses (*b*) and (*c*) of starred question No. 369 asked by Sri N. K. Palanisamy at the meeting of the Legislative Assembly held on 19th December 1956, page 162 supra.]

(*b*) Yes.

(*c*) The Deputy Registrars of Co-operative Societies who are the 'registering authorities' have been instructed to note that the order contemplates the following :—

(*a*) the compulsory registration of all handlooms in use on 8th May 1956, the date of promulgation of the order or those brought into use subsequent to that date;

(*b*) it would be the duty of the person *in possession* of the looms to get the looms registered;

(*c*) the marking on the looms, by the person in possession thereof, the distinguishing number assigned to them by the registering authority; and

(*d*) all looms which are being used or capable of being used should be registered. The Deputy Registrars have been directed to keep in mind the following peculiar aspects relating to this industry :—

(i) a person who is in possession of a loom may get it registered in his name even if he is not the owner of the house or of the loom;

(ii) where one or more persons such as brothers are in joint possession of a loom, the loom may be jointly registered in their names; and

(iii) what is essential for purposes of registration is *possession* and not ownership of the loom.

Detailed instructions have also been given as to the registers to be maintained, the reports to be submitted and the test checks that should be made by the supervising authorities.

APPENDIX II.

[Vide answer to starred question No. 377 asked by Sri V. Balakrishnan at the meeting of the Legislative Assembly held on 19th December 1956, page 169 supra.]

Statement showing the important events and notable administrative measures undertaken in the District Jail, Pudukkottai, after the merger of the State with Madras State.

I. *Staff and amenities to staff.*—(i) Appointment of a wholetime Assistant Surgeon to the hospital attached to the Jail.

(ii) Payment of an allowance of Rs. 50 to the Medical Officer of the Town General Hospital for holding additional charge of the jail hospital.

(iii) Providing a water-tap at the subordinates' lines.

(iv) Opening of a school inside the jail for the benefit of the prisoners and the appointment of a Higher Elementary Grade Trained Teacher.

II. *Buildings.*—(i) Erection of a Naval Hangar at a cost of Rs. 15,500 for the use as a workshop.

(ii) Conversion of the Weaving Workshop into association block by providing a cage latrine.

(iii) Conversion of the old civil debtors kitchen into a store-room.

(iv) Provision of an ejector.

(v) Provision of a water-tap in the Remand yard.

(vi) Conversion of the latrines into fly-proof ones.

(vii) Construction of magazine for storing arms and ammunition.

(viii) Construction of a firewood godown, and a lumber room with prison labour.

(ix) Extension of the cattle-shed.

III. *Water-supply.*—(i) Sinking of a new well. The purchase of a pumpset has also been sanctioned.

(ii) Renovation of an old well.

IV. *Manufactory operations.*—(i) Addition of six looms to thirteen already in existence.

(ii) Undertaking the supply of tape to the Stationery department.

(iii) Introduction of carpentry industry.

V. *General.*—Opening of a dairy.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Thursday, 20th December 1956.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at nine of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTHAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

House rent allowance of the Non-gazetted Officers

* 378 *Q.*—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to increase the House rent allowance of the Non-gazetted Officers of the State?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI N. K. PALANISAMY: If a middle class employee wants a modest dwelling, he has to shell out Rs. 30 per mensem. Will the Government at least consider the question of enhancing the house-rent allowance so as to meet one-half of the actual rent paid by the Non-gazetted Government servant?

THE HON. SRI C. SUBRAMANIAM: This question cannot be considered in an isolated manner. This has got to be considered as a matter of fact with reference to the emoluments which we have got to pay to the N.G.Os. I already made my points clear yesterday in my reply to the Budget debate.

SRI M. PALANIYANDI: ஸார், இப்பொழுது வீட்டு வாடகை, போலீஸ் அதிகாரிகள் எல்லோரும் அவர்கள் எந்த வீடுகளில் வசிக்கிறார்களோ அந்த வீட்டின் வாடகையை ரசீது தாக்கல் செய்து வசூல் பண்ணுவதற்கு அதிகாரம் இருக்கிறது. அப்படியே வாங்கியும் வருகிறார்கள். அதேபோல் இந்த என்.ஜி.ஓ-க்களுக்கும் அவர்கள் வாடகை ரசீதைக் கொடுத்தால் அந்த வாடகையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதற்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் என்பதைப்பற்றி யோசிக்கவேண்டியிருக்கிறது. இவர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டிருப்பதாக நேற்றே நான் குறிப்பிட்டேன்.

SRI K. VINAYAKAM: Sir, now that the principle has been accepted by the Government that they deserve something better than what they are already getting (this is seen in the grant of a small dole recently announced), will the Government consider the feasibility of raising the house-rent allowance? Whether the increase is under the head 'house-rent allowance' or any other head, will the Government think of increasing the dole that has already been given?

[20th December 1956

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir. We accept so many ideas. As a matter of fact in the Constitution it is laid down that everybody should get compulsory and free education up to the age of 14, but we are nowhere near the realisation of that ideal. In the same way we do want to attain certain standards. We want to ensure a minimum standard of living. But still this has got to be worked out. It is not as if immediately all these things could be achieved.

SRI M. KALYANASUNDARAM: ஸார், மத்திய அரசாங்கம் இப்போது நடுத்தர வர்க்கத்தினருக்கு வீட்டுவசதிக்காக வேண்டி சில மான்யத்தை உபயோகப்படுத்தி சர்க்கார் சிப்பந்திகள் சொந்த வீடுகள் கட்டிக்கொள்ள கோவாபரேட்டிவ் ஸொஸைட்டி அமைத்து சொந்த வீடுகள் கட்டித்தர வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அந்த ஏற்பாடுகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. அதிலே என்ன ஏற்பாடுகள் ஆகியிருக்கிறது என்பதற்கு தனி கேள்வி எனது சகா அவர்களுக்கு போட்டால் அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

SRI V. BALAKRISHNAN: Sir, is the Hon. Minister aware that even in the existing grant of house rent allowance there is difference between the different grades of Non-gazetted Government servants so much so that copyists in Criminal Courts and Civil Courts have not been granted this allowance at all?

THE HON. SRI C. SUBRAMANIAM: A separate question may be put.

SRI A. RATNAM: நடுத்தர வர்க்கத்திற்குட்பட்ட என்.ஜி.ஓ-க்கள் மாதாமாதம் சராசரி எவ்வளவு குடக்கூலி கொடுக்கிறார்கள் என்ற புள்ளி விவரங்கள் அரசாங்கத்தினிடம் இருக்கின்றனவா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதைப்பற்றி என்னிடத்தில் இப்பொழுது புள்ளி விவரங்கள் இல்லை.

SRI N. K. PALANISAMY: Sir, the Central Pay Commission has recommended that certain categories of the Government employees should be provided with free quarters. Will the Government start constructing quarters at least for a section of the N.G.Os. in the City?

THE HON. SRI C. SUBRAMANIAM: We have made a beginning with the construction of quarters for the policemen. I think this should be extended to other categories also.

Hosur Cattle Farm

* 379 Q.—SRI M. P. SUBRAMANYAM (on behalf of Sri R. Rangaswamy Gounder): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are any surplus culled out cattle in Hosur Cattle Farm for auction in 1956;

(b) whether it is a fact that some of the best animals were sold out to breeders at the book value;

20th December 1956]

(c) the person or persons to whom the animals were sold;

(d) the number of animals sold and the amount realized; and

(e) whether any information has been given to all the breeders and ryots in the State about the availability of surplus culled out animals in the farm at the book value?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) There were no animals surplus to the requirements of the Hosur Farm to be disposed of in auction this year. One hundred and three culled out animals (i.e., animals not up to the required standard and hence not required for the farm) were available for sale at the beginning of this year. All of them have since been disposed of.

(b) No, Sir.

(c) Does not arise.

(d) The amount realized out of the sale of culled out animals referred to in the answer to the clause (a) comes to Rs. 16,799.

(e) The auction sale of culled out cattle was notified in the leading dailies as usual.

SRI M. KALYANASUNDARAM: ஸார், 103 மாடுகள் விற்கப்பட்டதாக மந்திரி அவர்கள் அறிவித்தார்கள். இவை எப்படி விற்கப்பட்டன? இந்த மாடுகளை விற்பதற்கு இந்த இலாகாவில் ஏதாவது முறை (procedure) உண்டா? அவை என்ன அடிப்படையில் விற்கப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இம்மாதிரி அவர்களுக்கு உபயோகம் இல்லாத மாடுகளை நூற்றிற்கு 25 வீதம் approved cattle breeders-க்கு book value-வில் கொடுப்பது. இதிலே போட்டியிருந்தால் எல்லாவற்றையும் எலத்தில் விற்பது என்பதுதான் முடிவு. அப்படிதான் இதுவும் நடந்திருக்கிறது.

SRI V. BALAKRISHNAN: விற்கப்பட்ட மாடுகளில் மாப்பிள்ளை காளைகள் எத்தனை? கறக்கும் பசுக்கள் எத்தனை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: என்னிடமிருக்கும் தகவலில் மாப்பிள்ளை காளைகள் ஒன்றும் இல்லை.

SRI K. VINAYAKAM: Sir, what are the requisite standards of cattle that should be maintained in the farm? What are the defects from which these culled out cattle have been suffering? Is it not a fact that standard cattle that should be maintained by the farm were classified under culled out cattle just to enable them to be sold to some of the people whom this Department wanted to oblige?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: It is not at all correct to say that animals that should be useful to the farm were declared to be culled out. The following is the test that is applied in declaring certain animals as culled out cattle:—

(1) Animals that do not conform to breed characteristics.

(2) Animals that are uneconomical and weak and do not thrive under farm conditions in spite of good management.

[20th December 1956

(3) Animals that are old in age. Generally 15 years have to be taken as old age.

(4) Animals that are poor milk producers.

(5) Bad breeders that do not respond to proper treatment.

(6) Bulls and cows that are throwing out progenies which are not satisfactory to breed characteristics.

(7) Male stock that are not fit for breeding purposes.

(8) Young stock that are stunted in growth and not fit for rearing further profitably.

(9) Animals that are suffering from incurable diseases.

(10) Animals with deformities.

(11) Animals that are too old and unfit for work purposes.

(12) Young female stock and cows that are not productive.

(13) Animals over and above the maximum strength at the farm have to be disposed of as a necessity under competent orders, though they may not be required to be culled otherwise.

The culling list for each Government Livestock Farm should be prepared by its Superintendent and submitted for verification to the Deputy Director. Then it has to be finally approved by the Director of Animal Husbandary.

SRI M. P. SUBRAMANYAM : 103 காளைகள் விற்கப்படுவதற்கு முன் இந்த ராஜ்யத்தில் யார் யாருக்கெல்லாம் இந்த காளைகள் விற்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது ? அதன் காரணமாக எத்தனை பேர்கள் அவைகளை வாங்க போட்டி போட்டுக்கொண்டு வந்தார்கள் ? அப்படி வந்த வர்களில் யார் யாருக்கெல்லாம் கொடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் விடை கொடுக்கப்படும்.

9–10 a.m. SRI M. KALYANASUNDARAM : Approved Cattle Breeders என்று மந்திரியவர்கள் சொன்னார்கள். அதற்கு ஏதாவது ஜாபிதா வைத்திருக் கிறார்களா ? அதில் இந்த சட்டசபை அங்கத்தினர்கள் யாராவது இருக்கி றார்களா ? இந்த சபையிலுள்ள அங்கத்தினர்கள் யாருக்காவது விற்கப் பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த சட்ட சபை அங்கத்தினர் ஒருவருக்கு விற்கப்பட்டதாக தகவல் இருக்கிறது. அவர் ஸ்ரீ வி. கே. ராமஸ்வாமி முதலியார்.

SRI M. KALYANASUNDARAM : அவருக்கு எத்தனை மாடுகள் விற்கப்பட்டிருக்கின்றன ? என்ன விலைக்கு விற்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த பொது ஏலத்தில் 89 மாடுகள் விற்கப்பட்டன. அப்படி விற்கப்பட்டதில் 13,879 ரூபாய் கிடைத்திருக்கிறது Breeders-க்கு 25 சத விகிதம் கொடுக்கவேண்டுமென்ற உத்தரவுப்படி, இதற்கும் உத்தரவு பெற்று 14 மாடுகள் விற்கப்பட்டன. அதில் 2,920 ரூபாய் வந்திருக்கிறது.

20th December 1956]

SRI S. DAIVASIGAMONEY : If these stud-bulls were sold in public auction simply because there were defects in them or that they were not useful, may I know whether they were sold for the purpose of slaughter? If so, may I know also whether that is in consonance with the policy adopted both by the Central and the State Governments that cow-slaughter should be stopped?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think that these were sold for the purpose of slaughter. These were sold because they were not of any use to the farm.

SRI K. T. RAJU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 14 மாடுகளையும் இந்த சபை அங்கத்தினரான வி. கே. ராமசாமி முதலி யார் அவர்களுக்கு மாத்திரம்தான் கொடுக்கப்பட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ஆண்டில் அப்ரூவ்ட் பிரீடர்ஸ் (approved breeders) களில் அவர் ஒருத்தர்தான் கேட்டு இருந்தார். அதனால்தான் அவருக்கு மாத்திரம் கொடுக்கப் பட்டது.

SRI K. VINAYAKAM : How many heads of cattle were sold to the person under reference—the Member of the Legislative Assembly and what was the rate at which they were sold?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already stated that fourteen were sold and the total value at the book value rate came to Rs. 2,920.

SRI K. VINAYAKAM : What is the number of cattle sold to other persons—other than the member of the Assembly—and the amount realised out of the sale?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This year as I have said 89 animals were sold in public auction and that again fetched Rs. 13,879.

SRI A. RATNAM : இந்த சட்டசபை உறுப்பினருக்கு கொடுக்கப்பட்ட 14 மாடுகளையும் சர்க்கார் எத்தனை ரூபாய்க்கு வாங்கியது ? இவைகளை எப்போது வாங்கினார்கள் ? எவ்வளவு காலம் கடந்து இது விற்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மாடுகளை வாங்குவது என்பது கிடையாது. இவை எல்லாம் அந்தப் பண்ணையில் உற்பத்தியானதுதான்.

SRI M. P. SUBRAMANYAM : கனம் உறுப்பினர் ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் அவர்களுக்கு இந்த மாடுகளை 2,920 ரூபாய்க்கு கொடுக்கப்பட்டது என்று சொல்லபபட்டது. இது ஏலத்தில் விடப்பட்டதா அல்லது அவருக்கு மாத்திரம் தனியாக கொடுக்கப்பட்டதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்கார் உத்தரவு பண்ணையிலுள்ள மாடுகளை வருடத்திற்கு 100-க்கு 25 பாகத்தை அப்ரூவ்ட் பிரீடஸ்க்கு (approved breeders) கொடுக்கலாம் என்று இருக் கிறது. அதுமாத்திரமல்ல, இது விற்கப்படும் என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதற்கப்புறம் இதற்கு இந்த ஒரு பிரீடரிடமிருந்து, எனக்கு கொடுக்கவேண்டும், என்று விண்ணப்பம் வந்தது அதன் பிரகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

SRI M. KALYANASUNDARAM : ஒவ்வொரு வருடமும் இதில் நாலில் ஒரு பாகத்தை பிரீடர்ஸ்க்கு கொடுக்கலாம் என்று விதி இருக்கிறதா அல்லது இந்த வருடத்திற்கு மாத்திரம் இந்த விதி பிறப்பிக்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த உத்தரவு ஒவ்வொரு வருடமும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

SRI S. DAIVASIGAMONEY : I fail to understand the logic behind the reason given by the Hon. Minister. In one breath he says that these stud-bulls are not fit for breeding purposes. If so how could they have been sold to a person who says that he wants them for breeding purposes? Are there any *bona fides* behind the offer made by him?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have their own standards with reference to their own farms. The animals that did not satisfy the standards were culled out and sold. It is for breeders to choose such of the cattle as are available for sale.

SRI K. V. RAMASWAMI : கடந்த மூன்று, நான்கு வருடங்களாக அப்ரூவ்ட் பிரீடர்களுக்கு (Approved Breeders) மாடுகள் book value விலைக்கு விற்கும்படி உத்திரவுள்ளதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால் இதற்கு முன்பு யார் யாருக்கு அப்படி விற்கப்பட்டது என்கிற விவரத்தைக் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு முன்பும் பலருக்கும் விற்கப்பட்டிருக்கிறது. அதனுடைய விபரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

(Sri M. Kalyanasundaram stood in his place.)

DEPUTY SPEAKER : I have allowed sufficient time for this question. Next question.

Assignment of house-sites at Kannigapuram and Coronation Nagar

* 380 Q.—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) how long the Harijans at Kannigapuram and Coronation Nagar have been occupying Government lands;

(*b*) whether the Government have received any proposal from the Corporation of Madras to alienate the lands in favour of the Corporation ; and

(*c*) why these lands (house-sites) have not been assigned to the Harijans?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Harijans at Kannigapuram have been in the occupation of the lands therein for the past 15 years. Coronation Nagar is situated in R.S. No. 3830/3 of Tondiarpet. A major portion of this field is occupied by caste Hindus.

(*b*) & (*c*) The Kannigapuram Colony is in charge of the Harijan Welfare Department and there is no proposal to place the lands therein at the disposal of the Corporation of Madras. As regards Coronation Nagar, the Government have ordered the placing of the entire land there in at the disposal of the Corporation of Madras for being developed and allotted as house-sites to the existing encroachers on the land.

SRI V. R. NAGARAJAN : May I ask the Hon. Minister for Revenue whether it is not the settled policy of this Government to grant freely house-sites to Harijans all over the State and if so whether that policy still stands or has been modified?

THE HON. SRI M. A. MANICKAVELU : The hon. Member is talking of general things. Here the question is particularly about Kannigapuram and I gave the answer to it.

SRI A. RATNAM : ஸார், சமீபத்தில் சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதாவது சர்க்காருக்கு சொந்தமான நிலங்களை எல்லாம் கார்ப்பரேஷனுக்கும் ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்டுக்கும் கொடுத்திருக்கிறது என்று. அதுபோல காரனேஷன், கன்னிகாபுரம் போன்ற இடங்களில் வீடு வைத்திருப்பவர்களுக்கு சர்க்கார் அந்த பூமியை விட்டுக் கொடுக்குமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது பிறப்பித்து இருக்கிற உத்தரவு இதுதான். நான் படித்துக்காட்டினதுதான் அந்த உத்தரவு.

SRI A. RATNAM : கழிந்த 200 ஆண்டு காலமாக ஹரிஜனங்கள் சென்னை நகரிலுள்ள சேரிகளில் வசித்து வருகிறார்கள். இம்மாதிரி 200 ஆண்டுகளாக சேரிகளில் வசிக்கும் ஹரிஜனங்களின் வீட்டு மனை இதுவரை அவர்களுக்கு சொந்தமாக்கப்படவில்லை. சர்க்காரின் உத்தேசப்படி கார்ப்பரேஷனுக்கும் ஸிட்டி இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டுக்கும் கொடுத்தால் ஜமீன்தார்களைப் போல் வரி வசூலிக்கக்கூடிய நிலைமை வந்துவிடும். அம்மாதிரி ஏற்படாமல் இருக்க சர்க்கார் ஹரிஜனங்களுக்கு இந்த நிலங்களை சொந்தமாக விட்டுகொடுக்கும் விஷயத்தில் சர்க்காரின் நிலைமை என்ன என்பதை விளக்கம் தரவேண்டுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : விளக்கம் இது. சர்க்காருடைய நிலைமை ஹரிஜனங்களுக்கு நல்ல வசதியாக அவர்களுக்கு வீடு கட்டி கொடுக்கவேண்டும் என்பதுதான். அதற்காகத்தான் கார்ப்பரேஷனுக்கும் ஸிட்டி இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI A. RATNAM : சென்னை நகரில் வசிக்கக்கூடிய ஐந்து லட்சம் ஜனங்களின் சுகாதாரத்துக்காக எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஹரிஜனங்களின் சுகாதாரத்திற்காக எவ்வளவு ஒதுககப்பட்டிருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த கேள்விக்கு பதில் சொல்ல முன் எச்சரிக்கை வேண்டும்.

SRI V. R. NAGARAJAN : Sir, certain Harijans of Valavanur, South Arcot district, applied for house-sites long ago to the Government and their request has been duly recommended by me. Will the Government consider granting house-sites to them?

[20th December 1956

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir I am aware the hon. Member always switches back to South Arcot whenever any question is put. We are now thinking of a locality within the Corporation limits.

Alangudy-Pathanpatty road in Alangudy taluk

9-20 a.m.

* 381 Q.—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether Alangudy-Pathanpatty road in Alangudy taluk in Pudukkottai Division of Tiruchirappalli district was constructed under the aegis of Local Development Works;

(b) if so, the cost of the road and the amounts contributed by the people and the Government; and

(c) the distance of the road?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The cost of the road is Rs. 9,592-5-0 out of which the Government grant and people's contribution are Rs. 4,796-3-0 and Rs. 4,796-2-0 respectively; and

(c) Three miles.

SRI V. BALAKRISHNAN : அந்த ரோடு நீண்ட ரோடாக இருப்பதால் அதை ஆயிரக்கணக்கான கிராம வாசிகள் உபயோகப்படுத்திக் கொண்டு வந்தார்கள். சமீபத்தில் அடித்த புயலின் காரணமாக அந்த ரோடு பாதிக்கப்பட்டிருப்பதால் அந்த ரோடை சர்க்காரே ஏற்றுக்கொண்டு அதை ரிப்பேர் செய்வதற்கு கனிசுர்ந்து முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயத்தைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்களே அருகுள்ள கலெக்டரிடம் தெரிவித்திருக்கிறார். அதன் பேரில் நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Sri Vattudaiya Ayyanar Kaliamman temple, Ariyakurichi

* 382 Q.—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri P. Jeevanandam) : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(a) whether the Government have received a mahazar from the residents of Sivaganga taluk in Ramanathapuram district in the month of March 1956 or earlier, regarding the appointment of a manager to Sri Vattudaiya Ayyanar Kaliamman temple of Ariyakurichi, auditing its accounts, etc.; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI B. PARAMESWARAN : (a) Yes. In March 1956.

(b) The administration of the temple is governed by a scheme framed by the High Court in A.S. No. 377 of 1927. As per clause 5 of the scheme, a manager has to be appointed on a salary not exceeding Rs. 50 by the trustees in consultation with the competent authority under the Hindu Religious and Charitable

20th December 1956]

Endowments Act, 1951. The post of manager is vacant as no suitable candidate from Ramanathapuram district is available for appointment. Steps are being taken to appoint a candidate from any other district.

Allegations against the Sub-Inspector of Police attached to Kodumudi Police station

* 383 Q.—SRI K. R. NALLASIVAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Sub-Inspector of Police attached to Kodumudi Police station in Coimbatore district was convicted early in 1956 for a criminal offence; and

(b) if so, whether the Public Prosecutor was asked to defend him when he preferred an appeal against his conviction?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) Yes, Sir.

SRI K. R. NALLASIVAM : நீதி ஸ்தலங்களில் போலீஸ் அதிகாரிகளுக்கு அவர் பேரில் வழக்குத் தொடர்ந்தால்—பப்ளிக் பிராசிகூட்டர் ஆஜராகலாமா ? அப்படி ஆஜராகலாம் என்றிருந்தால் அது நியாயமாக இருக்க முடியுமா என்பதை கனம் மந்திரி அவர்கள் தெரிவிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த உத்தியோகஸ்தர் பேரில் அவருடைய உத்தியோக சம்பந்தமாக வேலை செய்யும்போது ஏற்பட்ட குற்றத்திற்காக ஆஜரானார். உத்தியோக முறையில் காரியங்களைச் செய்யும்போது அவர்கள் பேரில் கேஸ் போட்டதனால் சர்க்கார் அவருக்கு உதவி செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படி உதவி செய்வதும் சர்க்காருடைய கடமை. இதைக் கருதித்தான் அவருக்கு பப்ளிக் பிராசிகூட்டரை ஆஜராகும்படி சர்க்கார் உத்தரவு போட்டார்கள்.

SRI K. R. VISWANATHAN : May I know what the nature of the criminal offence was?

THE HON. SRI C. SUBRAMANIAM : The complaint was for offences under sections 448, 427, 355, 323, 342 and 352 for breaking open the house and entering it and committing theft.

SRI M. KALYANASUNDARAM : சர்க்கார் உத்தியோக முறையில் குற்றம் செய்தார்கள் என்று வழக்குத் தொடர்ந்தால் அவர்களுக்கு சர்க்கார் உதவி செய்யவேண்டும் என்ற விதி இருக்கிறது என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார். அதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அதேமாதிரி மற்ற இலாக்காகளிலும், அதாவது ஹைவேஸ் இலாகா, மராமத்து இலாகா முதலிய இலாகாகளிலும் இப்படிப்பட்ட வழக்குகள் தொடர்ந்தால் அங்கு வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் பேரில் அவர்களை தாக்கி வழக்கு தொடர்ந்தால் அவர்களுக்கும் இப்படிப்பட்ட உதவி சர்க்கார் அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்த எந்த சமயத்தில் எந்த எந்த உதவி கொடுக்கப்படவேண்டும் என்பதற்காக விதிகள் இருக்கின்றன. அதை அனுசரித்துத்தான் உதவிகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் கனம் அங்கத்தினர் சொல்லுகிறபடி அந்த அந்த இலாகாவிற்கு விதிகள் இருக்கிறதா என்பதை பரிசீலனை செய்து பார்த்துத்தான் சொல்ல முடியும்.

[20th December 1956

SRI V. BALAKRISHNAN : அந்த உத்தியோகஸ்தர் குற்றவாளி என்று கோர்ட்டார் அவர்கள் நிரூபித்திருக்கிறபடியால் அவருக்கு பப்ளிக் பிராசிகூட்டர் அமைத்துக் கொடுத்ததற்கான செலவை அந்த உத்தியோகஸ்தரிடமிருந்து வசூல் செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர் செய்தது குற்றம் இல்லை என்று கோர்ட்டார் தீர்ப்புக்கூறி அவரை விடுதலை செய்து விட்டார்கள். அதனால் கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி எழவில்லை.

SRI S. DAIVASIGAMONEY : Where Government officials have to be defended in criminal cases, the practice has been to give them legal aid only in the trial courts. But in this case I find the Police Sub-Inspector was given legal aid even after conviction when he preferred an appeal. May I know why such aid was given to him, especially after he was found guilty by a competent authority (a Magistrate) of our own State?

THE HON. SRI C. SUBRAMANIAM : I don't think the hon. Member is correct. In cases where the Government, after scrutiny, come to the tentative conclusion that the conviction is wrong and that therefore an appeal has got to be preferred, we do give legal aid. This was one of the cases where the Government felt that the conviction was wrong. That was why legal aid was given and the Appellate Court acquitted the officer.

Registration of Handlooms

* 384 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state with reference to the answer given to question No. 68 on 13th August 1956—

(a) whether the Government have registered all the handlooms in the State; and

(b) if not, when the registration will be completed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) The attention of the Member is invited to the answer to clause (a) of question No. 369 put by him on 19th December 1956.

Minor Irrigation Maistries

* 385 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there was any proposal to change the designation of the Minor Irrigation Maistries from "Minor Irrigation Maistries" into "Minor Irrigation Inspectors or Gumastas" just as in the case of Road Maistries; and

(b) if so, the decision taken on that proposal?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise.

20th December 1956]

SRI K. R. VISWANATHAN : In view of the fact that the Association of Minor Irrigation Maistries has represented that the designation should be changed to Minor Irrigation Inspectors or Gumastas, will the Government consider the desirability of changing the designation?

THE HON. SRI M. A. MANICKAVELU : My answer to clause (a) was ' No, Sir '. They are now called Maistries and the hon. Member's intention is to change it into Inspectors. That will not make any difference in the quality of the work, I suppose.

SRI K. VINAYAKAM : So long as the change of designation does not involve any financial implications, what valid objection can the Government have to satisfying their psychological aspect?

THE HON. SRI M. A. MANICKAVELU : Whatever may be merits of this particular question, I prefer old names because they carry with them a certain amount of tradition.

Houses for Harijans of the Pudukkottai Division

* 386 Q.—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(a) whether it is a fact that two hundred houses have been built and given to the Harijans of the Pudukkottai Division in Tiruchirappalli district free of cost;

(b) if so, the places at which they were built and the persons selected for the free grant; and

(c) the principle on which selection for the allotment has been made?

THE HON. SRI B. PARAMESWARAN : (a) No, Sir.

(b) & (c) Do not arise.

SRI V. BALAKRISHNAN : இந்த திட்டத்தின் மூலமாக தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அது அமலில் இருக்கிறதா ? அப்படி இருந்தால் அந்த திட்டம் என்ன ?

THE HON. SRI B. PARAMESWARAN : புயல் நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 200 வீடுகள் புதுக்கோட்டை டிவிஷனில் கொடுத்திருக்கிறார்கள். இரண்டு வீடுகள் ஏறக்குறைய ரூ. 1,150-ல் கட்ட வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அது போக ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவி பெற்றுக் கொண்டு 17 லட்சம், 50 ஆயிரம் ரூபாயில் வீடுகள் கட்டுவதற்கு திட்டமிட்டிருக்கிறார்கள். அதன்மூலம் ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு வீடுகள் கட்டமுடியும் என்று கலெக்டர் மூலமாக தகவல் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிய ஆலோசனையும் கேட்டிருக்கிறார்கள். அதன்பிறகு துரிதமாக வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்படும்.

[20th December 1956

Grant for Sports Activities of the Non-Gazetted Officers in Madras City

* 387 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state whether it is a fact that the Government have given a grant of Rs. 500 for sporting activities of the Non-Gazetted Officers in the Madras City for the year 1955?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes. A recurring grant of Rs. 500 per annum has been sanctioned from 1955.

SRI S. DAIVASIGAMONEY : The term ' sporting activities ' used in the question is very wide in its connotation. What do the Government mean by the ' sporting activities ' of the Non-Gazetted Officers?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question as to what that term connotes should be put to the Member who has put the question. My answer relates to sports acitvities.

SRI N. K. PALANISAMY : Will the same facility be extended to the Non-Gazetted Officers in the district and taluk centres?

THE HON. SRI C. SUBRAMANIAM : I think it is being extended to the various departments. For example, there are the District Revenue Sports now. It is the intention of the Government to provide this facility to the Non-Gazetted Officers.

SRI S. RAMALINGAM : ஸார், இப்பொழுது சர்க்கார் கொடுத்திருக்கும் சலுகை ஜில்லாக்களில் ரிவினியூ இலாக்காக்களில் வேலை செய்யும் கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்கும் அளிக்கபடுகிறதா? மற்ற இலாக்காக்களில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கும் இந்த் சலுகையை அளிக்க சர்க்கார் உத்தரவு அனுப்பிப்பார்களா? அல்லது இருக்கும் க்ளப்களில் அவர்களையும் சேர்த்துக்கொண்டு விளையாட்டுகளில் அவர்களையும் பங்கெடுத்துக்கொள்ள சந்தர்ப்பம் அளிப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களேதான் ஏற்பாடுகள் செய்துகொள்ளவேண்டும். ரிவினியூ டிபார்ட்மெண்டில் அவர்களே ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். மற்ற இலாக்காவிலுள்ளவர்களும் அதேமாதிரி செய்துகொண்டால் அவர்களுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க முடியும். தாங்களே ஏற்பாடு செய்துகொண்டு வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டால் சர்க்கார் அதற்கு வேண்டிய வசதியைச் செய்துகொடுக்கும்.

10 a.m. SRI V. R. NAGARAJAN : Do these sports activities include in-door games like playing cards and carrom?

THE HON. SRI C. SUBRAMANIAM : These are sports activities like athletic activities and other games for which competitions are held and then prizes awarded annually.

SRI S. DAIVASIGAMONEY : The Non-Gazetted Officers are scattered all over the State. If a sum of Rs. 500 has been granted for sports activities, may I know to which club or institution this amount has been given?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member will please read the main question. The amount relates to Madras City.

DEPUTY SPEAKER : Question are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS BY THE DEPUTY SPEAKER.

(1) MESSAGE FROM THE GOVERNOR.

DEPUTY SPEAKER : I have to announce to the House the following message received from the Governor, dated 19th December 1956 :—

" In pursuance of Article 207, Clause (3), of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Assembly the consideration of the Madras Electricity Supply Control (Temporary Powers) Bill, 1956."

(2) ELECTION OF THREE MEMBERS TO THE COMMITTEE ON ESTIMATES.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the following three members were duly nominated for the election of three members of the Madras Legislative Assembly to the Committee on Estimates :—

" (1) Sri H. M. Jagannatham.

(2) Sri S. Daivasigamoney.

(3) Sri P. Jeevanandam."

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., three, I hereby declare them to have been duly elected to the Committee on Estimates.

(3) ELECTION OF FIVE MEMBERS TO THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the following five members were duly nominated for the election of five members of the Madras Legislative Assembly to the Committee on Public Accounts :—

" (1) Sri M. Kalyanasundaram.

(2) ,, S. Swayamprakasam.

(3) ,, K. Aranganathan.

(4) ,, S. C. C. Anthony Pillai.

(5) ,, A. K. Masilamani Chettiar."

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., five, I hereby declare them to have been duly elected to the Committee on Public Accounts.

Under rule 172 of the Madras Assembly Rules, I nominate Sri S. Swayamprakasam to be the Chairman of the Committee.

[Sri C. Subramaniam] [20th December 1956

9-40 a.m. Sir, the resolution itself is self-explanatory. Formerly Municipal Councils were permitted to grant remission of fees to a certain percentage from Forms I to VI. But now under the general order passed all poor students from I to III forms get the remission. Therefore, there is no necessity for a rule permitting Municipal Councils to remit fees up to a certain percentage of the poor students studying in the schools. Every one gets the remission. That is why the rule is being amended that this concession will be applicable only to Forms IV, V and VI.

DEPUTY SPEAKER: Motion moved—

"Whereas the Government of Madras have directed that, with effect from the school-year 1955–56, all poor pupils (whose parents' or guardians' annual gross income does not exceed Rs. 1,200) be exempted from the payment of school fees in elementary and secondary schools up to and inclusive of Form III and that the fee income lost by the managements of schools be made good to them in full from the State Funds;

And whereas it is considered that the remission of school fees which may be granted under rule 51 in Schedule IV to the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), should be restricted to cases of poor pupils studying in Forms IV, V and VI in secondary schools under municipal councils;

Now, therefore, in pursuance of section 305-A of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), this Assembly hereby approves the following draft rule, proposed to be made by the Governor of Madras under section 305, sub-section (1) of the said Act for amending Schedule IV to the said Act:—

DRAFT RULE.

In Schedule IV to the said Act, for the second proviso to sub-rule (1) of rule 51, the following proviso shall be substituted, namely:—

'Provided further that the council may remit the whole or part of the fees of poor pupils in its secondary school or schools, in accordance with the provisions contained in rule 32 of the Grant-in-Aid Code.'"

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
9-42 a.m. இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்னதாக சில விஷயங்களை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று விரும்புகிறேன். அப்படிக் கொண்டு வரும்போது இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லவும் விரும்புகிறேன். இப்பொழுது மூன்றாவது படிவம் வரையில் படிக்கக் கூடிய ஏழை மாணவர்களுக்கு கல்வியில் சம்பளச் சலுகைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் படித்து விட்டு ஹைஸ்கூலில் சேரக் கூடிய மாணவர்கள் அப்படியே ஏழாவது ஸ்டாண்டர்ட் பாஸ் பண்ணினாலும் கூட அங்கே போய் நாலாவது பாரத்தில் சேர முடியவில்லை. அங்கே இருக்கக் கூடிய ஹைஸ்கூலில் இடம் இல்லாத காரணத்தாலோ அல்லது சம்பளம் இல்லாத காரணத்தாலோ அந்த மாணவர்களை அங்கு சேர்த்துக்கொள்ளவது இல்லை. அவர்களை தவறி விட்டதாக அதாவது அவர்கள் பாஸ் செய்ய வில்லை என்ற காரணத்திற்காக அவர்களை மூன்றாவது வகுப்பில் சேர்த்துக்கொள்வது இல்லை. எலிமெண்டரி ஸ்கூல்களில் படித்துவிட்டு ஹைஸ்கூல்களில் சேர வேண்டும் என்று சொன்னால்

20th December 1956] [Sri M. Kalyanasundaram]

அவர்களை நாலாவது படிவத்தில் சேர்த்துக்கொள்ளாமல் இருப்பதோடு மாணவர்களை இரண்டாவது படிவம் அல்லது மூன்றாவது படிவத்தில்தான் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அப்படி இரண்டாவது படிவத்தில் சேர்த்துக் கொள்ளும்போது அவர்கள் இரண்டு வருஷங்கள் தவறி விட்டதாகவும் அதாவது இரண்டு வருஷங்களுக்கு அவர்களுக்கு பிரமோஷன் கிடைக்க வில்லை என்று கருதி சர்க்கார் கொடுத்திருக்கும் சம்பளச் சலுகையை அவர்களுக்குக் கொடுக்க அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகள் மறுத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட விஷயங்கள் பல என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. இதனால் அதிகப்படியான ஹரிஜனங்களும் பிற்பட்ட இனத்தவர்களும்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஹைஸ்கூலில் சேரவேண்டுமென்ற ஆவலுடன் அவர்கள் சேர்ந்து விடுகிறார்கள். ஆனால் அவர்கள் இந்தச் சலுகையை பெறமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். குறைந்த பட்சம் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தச் சலுகை கிடைக்கும்படியாக செய்ய வேண்டும். ஒரு வருஷம் தவறி விட்டாலும் அவர்களுக்கு இந்தச் சலுகை இருக்கும்படியாக விதி இருக்க வேண்டும். அப்பொழுதுதான் கொடுக்கப்பட்ட வசதியை அவர்களால பெற முடியும். இப்பொழுதுள்ள விதிகளைப் பார்த்தால் ஹரிஜன மாணவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இந்தச் சலுகை இல்லாமல் போய்விடும்போல் இருக்கிறது. அதனால் இந்த விதியை ஹரிஜனங்கள், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு மட்டிலாவது மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது ஒரு வருஷம் தவறி விட்டால் சம்பளம் கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த விதியையும் மாற்றி அமைத்து அவர்களும் அரைச் சம்பளம் கட்ட வேண்டும் என்று விதியை திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த விஷயத்தில் சர்க்கார் தலையிட்டு மாணவர்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது படிவத்தில் ஹைஸ்கூலில் சேரும்போது அவர்கள் தவறினவர்களாகக் கருதக்கூடாது என்று விதியை திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை இந்த சந்தர்ப்பத்தில் சர்க்காருடைய கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன்.

SRI V. R. NAGARAJAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் பூராவும் ஆதரிக்கிறேன். ஆனால் இதில் வருமானம் ரூ. 1,200 என்று ஒரு வரையறை வைத்திருக்கிறார்கள். அதை நான் ஆட்சேபிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த ரூ. 1,200 என்பதை பல வருஷங்களுக்கு முன்னதாக ஒரு பெரிய தொகையாகக் கருதலாம். ஆனால் இப்பொழுது நம்முடைய நாட்டின் பொருளாதார நிலைமையை கவனித்தால் இது அவ்வளவு பெரிய தொகையல்ல. எவ்வளவோ பெற்றோர்கள் இப்பொழுதுள்ள நிலைமையிலேயே ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதே சம்பளம் 105 அல்லது 110 வாங்கினாலே அதாவது 100-க்கு மேல் ஒரு ரூபாய் அதிகமாக சம்பளம் வாங்கினாலும் அவர்களுடைய குழந்தைகளுக்கு இந்தச் சலுகை இல்லாமல் போய்விடுவதால் அந்தப் பெற்றோர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நாம் அவர்களுக்கு என்று அளிக்கும் சலுகை அவர்களுக்கு எந்த விதத்திலும் பிரயோசனம் இல்லாமல் போய்விடுகிறது. இப்படி பெற்றோர்கள் நம் நாட்டில் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதை சர்க்கார் பார்த்திருக்கலாம். குறிப்பாக அந்தப் பெற்றோர்கள் என்னிடம் நேரில் வந்துகூட சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் இப்பொழுது ரூ. 1,200 என்றிருப்பதை இன்னும் அதிகமாக்க வேண்டும் என்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மாதம் ஒன்றுக்கு வருவாய் ரூ. 150 என்று வைத்தால் நலமாக இருக்கும். அல்லது வருஷ வருவாய் ரூ. 1,800 என்று வைக்கலாம் என்று தோன்றுகிறது. அப்படி தொகையை அதிகப்படுத்தி வைத்தால் அதனால் பல பேர்களுக்கு பிரயோசனமாக இருக்கும். பல ஏழைகள் அதனால் பலனடைவார்கள் என்பதை சொல்லிக் கொண்டு அதன்படி இந்த, திருத்தத்தை மாற்றி அதற்கு வேண்டிய ஒரு ஜி.ஓ. வையும் சர்க்கார் பிரப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

SRI A. RATNAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சர்க்கார் தரப்பில் இந்தத் திர்மானத்தைக் கொண்டு வருவதை நான் வரவேற்பதுடன் சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். இந்த திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் அமோகமான சலுகை செய்ததாகும். இப்பொழுது gross income என்று வைத்திருக்கிறார்கள். அதாவது அவர்களுடைய வருமானம், பஞ்சப்படி, வீட்டு அலவன்ஸ் இன்னும் மற்ற அலவன்சும் அதில் சேர்ந்ததாகும் என்று சொல்லுகிறார்கள். இந்த அலவன்சுகளுடன் சம்பளமும் சேர்ந்து அவர்கள் ரூ. 100 சம்பாதித்தால் அவர்களுக்கு, ஹரிஜனங்களாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் சரி, அவர்கள் ரூ. 1,200க்குமேல் வருமானம் வரக்கூடியவர்களாகக் கருதி அவர்களுக்கு இந்தச் சலுகையைக் காட்டுவது இல்லை. இந்த நிலைமையில் இப்பொழுது ஆயிரம் ஹரிஜன ஏழை மக்கள் சம்பளம் கொடுத்து படித்து வருகிறார்கள். இதை நான் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மத்திய சர்க்காரில் வேலை செய்யக் கூடிய ஊழியர்கள் ஏறக்குறைய ரூ. 100 அல்லது அதற்குமேல் கூட சம்பளம் வாங்குகிறார்கள். சாதாரணமாக ரயில்வேக்களில் வேலை செய்யக்கூடியவர்களுடைய குழந்தைகள் பாடசாலைகளில் படிக்கும்போது சம்பளம் கட்டித்தான் படித்துக் கொண்டு வருகிறார்கள். இதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். பெரம்பூர், அரக்கோணம் முதலிய இடங்களில் பார்த்தால் இது நன்றாகத் தெரிய வரும். இதைப்பற்றி சர்க்காருக்கு நூற்றுக்கணக்கான மனுக்கள் வந்திருக்கின்றன. அவைகளுடைய காபியையும் எனக்கு அனுப்பினார்கள் அவைகளையும் நான் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறேன். அவர்களுக்கும் வருவாய் 100 என்று இருந்தால் ஹரிஜனங்களுக்கும் ஏழை பொது ஜன மக்களுக்கும் நன்மை செய்வதாக ஆகாது. நன்மை செய்ததாகவும் கருத முடியாது. மக்களுக்கு உண்மையில் சலுகைகள் காட்ட வேண்டுமென்றிருந்தால் எல்லா மக்களுக்கும் அது கிடைக்கும்படியாக இருக்க வேண்டும். இதைப்பற்றி ஹரிஜன வெல்பேர் ஆபிசருக்கு எழுதியும் அவர் இன்னும் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஏழை ஹரிஜன மக்கள் இன்று வரையிலும் சம்பளம் கொடுத்துத்தான் படித்துக்கொண்டு வருகிறார்கள். ரூ. 100-க்கு குறைவாக சம்பளம் வாங்கக்கூடியவர்கள் சென்னை ராஜ்யத்தில்தான் இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் வேலை பார்க்கிறவர்களுக்கும் இந்தச் சலுகையைக் காட்டவேண்டும். ரூ. 1,200 என்று இல்லாமல் அதாவது gross income ரூ. 1,200 என்று இல்லாமல் அவர்களுடைய சம்பளம் மட்டும் ரூ. 1,200 என்று இருக்க வேண்டும். பஞ்சப்படி முதலியவைகளை இதில் சேர்த்துக் கொள்ளக்கூடாது. அப்படிச் செய்தால் ஹரிஜன மக்களுக்கும் பிற்பட்டவர்களுக்கும் நாம் நன்மை செய்ததாக ஆகும்.

நம்முடைய ராஜ்யத்தில் கல்வியானது மிகவும் கேவலமான நிலைமையில் இருக்கிறது. ஆரம்பப் பாடசாலைகளிலும் ஸ்தாபனங்கள் நடத்தும் பாடசாலைகளிலும் ஆங்கிலம் அதிகமாக கற்றுக் கொடுப்பது கிடையாது. ஆங்கிலம் படித்தால்தான் உயர்தர பாடசாலைகளில் அவர்கள் சேரலாம் என்றிருக்கிறது. அதனால் ஏழை மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அப்படி இல்லாவிட்டால் அவர்கள் மூன்றாவது படிவத்தில் தவறி விட்டதாகக் கருதி அவர்கள் மீண்டும் மூன்றாவது படிவம் படிக்க வேண்டும் என்று சொல்லிவிடுகிறார்கள். அதனால் ஆரம்பக் கல்வி உயர்தரக் கல்வி மத்தியதரக் கல்வி எல்லாப் பாடசாலைகளிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். அதன்படி நமது ராஜ்யத்தில் கல்வி நிலைமையை சீர்திருத்தம் செய்ய வேண்டும். அப்படி சீர்திருத்தம் செய்வதற்கு சர்க்கார் உடனடியாக முன் வரவேண்டும். கிராஸ் வருவாயை ரூபாய் 1,200 என்று வைத்துக் கொள்ளாமல் சம்பளம் மட்டும் ரூ. 1,200 என்று வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் வரம்பை இன்னும் அதிகமாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

***SRI K. R. VISWANATHAN**: கனம் உதவி அவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை ஆதரிக்கையில், சில விஷயங்களை சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சர்க்கார் பிற்பட்ட மக்களுக்கு

எத்தனையோ நன்மைகளைச் செய்யவேண்டுமென்று விரும்பி பலவிதச் சலுகைகளை அளித்திருந்தாலும் கூட, நடைமுறையில் அவைகளைப் பெறுவதில் பலவித இடையூறுகள் ஏற்படுகின்றன. பிற்பட்ட மக்கள் அரைச் சம்பளச் சலுகையைப் பெறுவதற்குள் மிகவும் அவதி அடைகிறார்கள். உதாரணமாக, ஜில்லா போர்டு உயர் நிலைப் பள்ளிகளில் படிக்கும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அரைச் சம்பளச் சலுகையைப் பெறத் தாங்கள் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், ஏழைகள் என்று தாசில்தார் முதலியவர்களிடமிருந்து சான்றிதழ் கொண்டுவந்தாலும் கூட, அங்கிருக்கும் தலைமை ஆசிரியர்கள் அந்த சான்றிதழ்களை ஜில்லா போர்டு தலைவருக்கோ அல்லது மற்ற உயர்தர அதிகாரிகளுக்கோ அனுப்பி, அவர்களுடைய அனுமதி கிடைத்த பிறகுதான், சம்பளச் சலுகையைப் பெற முடிகிறது. அது வரையிலும் அவர்களிடமிருந்து முழுச் சம்பளமே வசூலிக்கப்படுகிறது. அம்மாதிரி முழுச் சம்பளம் ஆண்டு முழுவதும் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு பிற்பட்ட மக்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டிருந்தும்கூட தலைமை ஆசிரியர்களும், உதவி பெறும் உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களும் அந்தச் சலுகை கிடைக்கவொட்டாமல் தடுக்கிறார்கள். ஆகவே, பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள், பள்ளிகளில் சேரும்போது அரைச் சம்பளச் சலுகைக்கான சான்றுகளைக் கொண்டுவந்தால், அவர்களுக்கு ஆரம்பித்திலிருந்து சலுகையை அளிக்க வேண்டுமென்று சர்க்கார் ஒரு உத்திரவைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவேண்டும்.

தவிர, சம்பளச் சலுகைக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் குறைந்தபட்ச வருமான வரம்பை ரூ. 1,200லிருந்து ரூ. 1,800 அல்லது ரூ. 2,000 ஆக உயர்த்தவேண்டும். வாழ்க்கைச் செலவு அதிகரித்த வண்ணமிருக்கும் இக்காலத்தில் வாழ்க்கைச் செலவு போக எஞ்சியுள்ள வருமானம் மிகவும் குறைவாகயிருக்கும். ஆகவே ரூ. 1,200 என்றிருக்கும் வரம்பை, ரூ. 2,000 ஆக உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

SRI K. VINAYAKAM: Mr. Deputy Speaker, Sir, while welcoming this amendment to Schedule IV of the Madras District Municipalities Act, 1920, I wish to make out a small point for the consideration of the Hon. Minister.

SRI V. BALAKRISHNAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையைக்கிளப்ப விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ விநாயகம் ஆங்கிலத்தில் பேசுகிறார்.

DEPUTY SPEAKER: That is not a point of order. It is left to the hon. Member to speak in any language he likes. He can speak in Telugu also.

SRI K. VINAYAKAM: Due to the concession shown to the poor people studying in the schools, the Government seem to have.

Some hon. members: கனம் அங்கத்தினர் தமிழில் பேசவேண்டும்.

DEPUTY SPEAKER: Hon. Members should not interrupt when the hon. Member is speaking.

SRI K. VINAYAKAM: The Government have come to the aid of the poor people studying in the schools by giving concessions but they have made it clear that the fees lost by the school is made good by the concessions in full. Now the managements are feeling that a very small amount is granted by the Government, with the result that the schools could not be run economically. This aspect of the matter has got to be considered by the

Government. In addition, now that this concession should be granted to the pupils studying in municipal schools, may I know whether the Government are going to give the same kind of aid to Municipalities or District Boards which run these schools or are they going to make Municipalities and District Boards to bear the loss sustained by them for such kind of concession allowed to the students.

*SRI P. RANGASWAMI REDDIAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆருவது படிவம் வரை படிக்கிற எல்லா மாணவர்களுக்கும் சம்பளச் சலுகை உண்டு என்று இருக்கும்பொழுது, சில குழப்பங்கள் இருக்கத்தான் செய்யும். கனம் அங்கத்தினர் ஸ்ரீ விஸ்வநாதன் ரூ. 1,200 வருமான வரம்பை ரூ. 2,000-ஆக உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். சுமார் 1½ ஆண்டுகளுக்கு முன்பு நான் காரைக்குடிக்கு சென்றிருந்தபொழுது ஒரு தகவல் கிடைத்தது. அதை நிதி அமைச்சர் அவருக்கும் தெரிவித்து எழுதியிருக்கிறேன். மூன்று ஆண் குழந்தைகளை படிக்கவைத்து குடும்பம் நடத்தும் ஒரு தாயிக்கு வருஷவருமானம் ரூ. 1,300 கிடைக்கிறது. அதே சமயத்தில் 1,100 ரூ. வருஷ வருமானம் பெறும் ஒரு ஆண் உத்தியோகஸ்தர் ஒரே ஒரு பையனை படிக்கவைத்துக் கொண்டு கல்விச் சலுகை பெறுகிறார். ஆனால் மூன்று குழந்தைகளை படிக்க வைக்கும் அத்தாய்க்கு வருஷ வருமானம் ரூ. 1,300 ஆக இருப்பதினால் சலுகை கிடையாது. "Exceptions cannot make a rule"—விதிவிலக்குகள் Rule ஆகமாட்டா. மேலேசொன்ன உதாரணத்தில் யார் அதிக அளவுக்கு ஏழை என்று நிர்ணயிக்க முடியாது. இந்த மாதிரி விதிகள் இருக்கிறவரையில் ஒரு சிலருக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். சலுகை கொடுப்பது அதிகப்படியாக இருக்கிறது என்றுகூட சிலர் கருதலாம். ஆகவே அப்படியே இந்த திருத்தம் இருக்கலாம் என்று சொல்லி இதை ஆதரிக்கிறேன்.

SRI P. G. MANICKAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ரூ. 1,200-க்கு மேற்பட்ட வருமானம் பெறுகிற ஹரிஜனங்களில் ஒரு சிலர்தான் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் படித்தவர்கள்தான். உதாரணமாக ரூ. 1,200 வருமானமுள்ள ஹரிஜன குடும்பங்களில் உள்ளவர்கள் உபாத்தியாயராகவோ, அல்லது குமாஸ்தாவாகவோ இருக்கிறார்கள். சில குடும்பங்களில் புருஷன், மனைவி இருவருமே உத்தியோகத்தில் இருக்கலாம். அவர்களுக்கு நாலைந்து குழந்தைகள் இருக்கலாம். மாதம் ரூபாய் 100-க்கு மேல் வருமானம் வந்தபோதிலும்கூட, நாலைந்து குழந்தைகளை சம்பளம் செலுத்தி படிக்க வைப்பது என்றால் மிகவும் கஷ்டமாகத் தானிருக்கும். இப்படிப்பட்ட நிலைமை இன்று பல ஹரிஜனக் குடும்பங்களில் நிலவி வருகிறது. ஆகவே வருமான வரம்பை ரூ. 2,000-ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*SRI A. VELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இந்த திருத்தத்தை ஆதரிக்கிறேன். எதிர்க்கட்சி தலைவர் சொல்லியதை கனம் நிதி அமைச்சர் கருத்தில்கொண்டு, ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களுக்கும், நகர சபை பள்ளிக்கூடங்களுக்கும் உத்திரவை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இப்போது உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு 3-வது படிவம் வரையில் ஒரு தடவை பரீட்சையில் தவறி இருந்தாலும் அல்லது நான்காவது படிவம் முதல் ஆருவது படிவம் வரை ஒரு தடவை தவறியிருந்தாலும், சம்பளமின்றி படிக்க விதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உயர் நிலை ஆரம்பப் பள்ளிகளிலிருந்து ஆங்கிலத்தைப் பரீட்சைக்கு எடுத்து E.S.L.C. தேறியவர்களை மட்டுமே நாலாவது படிவத்தில் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். தமிழில் மாத்திரம் தேறியவர்களை, மூன்றாவது படிவத்தில் சேர்க்காமல் கீழ் வகுப்புகளில் சேர்க்கப்படுவதால் சம்பள சலுகை கிடைப்பதில்லை.

ஆகவே உயர்நிலை ஆரம்பப் பள்ளிகளிலிருந்து வந்து ஒரு வகுப்பு குறைத்து சேர்த்துக்கொள்பவர்களுக்கும் விதி விலக்கு செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI C. KANDASAMY : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த திருத்தத்தைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களில் பியூன் வேலை பார்ப்பவர்களின் குழந்தைகளுக்கு இப்பொழுது இந்தச் சலுகை கொடுக்கப்படவில்லை என்று நான் அறிகிறேன். ஆகவே அவர்களுக்கும் இந்த சலுகையை விஸ்தரிக்குமாறு கனம் நிதி அமைச்சரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI V. BALAKRISHNAN : நான் சொல்ல வேண்டியவைகளை எல்லாம் இங்கே எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் சொல்லிவிட்டார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் கொண்டுவந்திருக்கக்கூடிய தீர்மானம் ரொம்பவும் சாதாரணமானது. இந்த விவாதத்தில் பல சிக்கலான பிரச்னைகள் எழுப்பப்பட்டு இருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம் பதில் சொல்லக்கூடிய நிலைமையில் நான் இல்லை. பதில் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. இந்தத் தீர்மானத்தின்பேரில், ஒரு விஷயத்தை மட்டும் அங்கத்தினருக்கு முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

இன்று ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் எட்டாவது வகுப்பு வரையில் எல்லாப் பிள்ளைகளுக்கும் சம்பளம் கிடையாது. சம்பளம் இல்லாமல் சொல்லிக்கொடுக்கவேண்டுமென்பது ஏற்பாடு. இரண்டாவதாக, மிடில் ஸ்கூல்களில் முதல் பாரம் முதல் மூன்றும் பாரம் வரையில் ஆயிரத்து இருநூறு ரூபாய்க்குள் வருஷ வருமானம் வருகின்ற ஏழைகளின் பிள்ளைகளுக்கு எல்லாம் இலவச படிப்பு கொடுப்பது என்பதுதான் இப்பொழுது இருக்கக் கூடிய ஏற்பாடு; 1,200 ரூபாய் என்று வைத்திருப்பதனால் சில சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை நான் ஒப்புக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன். மத்திய உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கும், ஆரம்பப் பள்ளிப் படிப்புக்கும் வித்தியாசம் இல்லாமல் ஒன்று செய்ய வேண்டுமென்பதைப் பற்றித்தான் இப்பொழுது சட்டசபைக் கமிட்டி தீர்மானம் செய்து அறிக்கையாகவும் வெளியிட்டு இருக்கிறது. ஆகையால் அந்த முடிவு அமுலுக்கு வரும்போது இந்தப் பிரச்னை இருக்காது. எட்டாவது வகுப்பு வரையில் எல்லாப் பிள்ளைகளுக்கும், எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசப் படிப்பு கிடைத்துவிடும். கூடிய வரையில் இதில் உள்ள சிக்கல்கள் எல்லாம் நீங்கிவிடும். அப்புறம் நான்காவது பாரத்திலிருந்து ஆறாவது பாரம் வரையில் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி யோசித்து முடிவு செய்வதே நமது முதல் பொறுப்பாகும். நான்காம் பாரம் முதல் ஆறும் பாரம் வரையில் எவ்வளவு குழந்தைகளுக்கு இலவசப் படிப்பு அளிக்க முடியுமோ அவ்வளவு குழந்தைகளுக்கும் அளிப்பதற்கான ஏற்பாடுகளைத் தான் சர்க்கார் நடத்திக்கொண்டு வருகிறது. சென்ற வருஷம் ஒரு சில பகுதியினருக்கு, ஆரம்பப்பள்ளி உபாத்தியாயர்கள், போலீஸ் கான்ஸ்டபிள்கள், கடைநிலை அரசாங்க ஊழியர்கள் ஆகியோர்களுடைய குழந்தைகள் எல்லோருக்கும் இலவசமாகப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வசதி செய்யப்பட்டு இருக்கிறது. அந்த வசதி அப்புறம் விஸ்தரிக்கப்பட்டும் இருக்கிறது. இப்பொழுது கிராமத்திலுள்ள தலையாரி, வெட்டி, நீர்கட்டி முதலியவர்களின் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படுகிறது. உயர்தரப் படிப்பு வரையில் எல்லா ஏழை குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிப்பதை விஸ்தரித்துக்கொண்டுபோவதே நமது லட்சியமாகவும் இருக்கிறது. ஸ்ரீ கந்தசாமி சொன்னது போல 1,200 ரூபாய் வரையில் சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்குத்தான் என்று எதற்காக நிர்ணயிக்க வேண்டும், 1,500 ரூபாய் என நிர்ணயிக்கக் கூடாதா, 1,800 என்று நிர்ணயிக்கக் கூடாதா என்பது வாதத்திற்கு உரிய விஷயம்தான். ஏதோ ஓரிடத்தில் ஒரு வரையறை இருக்க வேண்டும். 1,200 ரூபாய் என்பது முன்பு நிர்ணயித்தது. அதையே நீடித்துக் கொண்

டிருக்கிறோம். இப்பொழுது நாம் செய்து கொண்டிருக்கும் இதர விஸ்தரிப்புகளை எல்லாம் பார்க்கும்போதும் இந்த 1,200 ரூபாய் என்கிற வரம்பே இருக்கலாம் என்பது என் எண்ணம். அதற்குப் பிறகு ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலிருந்து உயர்நிலைப் பள்ளிக்கூடத்திறகுப் போகும்போது ஒரு வகுப்பு கீழேயே மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள் என்றும், அதனால் அவ்வருஷம் அவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்காமல் போகிறது என்றும் குறிப்பிட்டார். இது தாற்காலிகமாக இருக்கக் கூடிய குறைதான். நான் முன்பு சொன்னது போல கல்விக் கமிட்டியில் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரும்போது நீங்கிவிடும். இருந்தாலும் இது தாற்காலிகமாக இருக்கிற குறைதான் என்றாலும் இதை பரிசீலனை செய்து ஆலோசனை செய்து பார்த்த பிறகு ஒரு முடிவு செய்யவேண்டியதாகவும் இருக்கிறது. ஆகையால் இப்பொழுது இருக்கக்கூடிய தீர்மானம் ஏழாவது வகுப்பு வரையில் எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி போதிப்பதற்கான வசதி செய்யப்பட்டு இருப்பதனால் தனிப்பட்ட சலுகை கொடுக்கவேண்டுமென்ற ஷரத்து அவசியம் இல்லாததனால் அதை விலக்கிவிடலாம் என்பது இந்த தீர்மானத்தின் நோக்கம்.

மற்ற விஷயங்களும் பரிசீலனைக்குறிய முக்கியமான விஷயங்கள்தான். அதை சர்க்கார் தாமாகவே பரிசீலித்துக்கொண்டு வருகிறது என்று சொல்லிக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். முனிசிபாலிடிக்கும், ஜில்லா போர்டுகளுக்கும் காம்பென்ஸேஷன் கொடுக்கவேண்டுமென்பதுதான் நோக்கம்.

DEPUTY SPEAKER : The question is—

" Whereas the Government of Madras have directed that, with effect from the school-year 1955–56, all poor pupils (whose parents' or guardians' annual gross income does not exceed Rs. 1,200) be exempted from the payment of school fees in elementary and secondary schools up to and inclusive of Form III and that the fee income lost by the managements of schools be made good to them in full from the State Funds;

And whereas it is considered that the remission of school fees which may be granted under rule 51 in Schedule IV to the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), should be restricted to cases of poor pupils studying in Forms IV, V and VI in secondary schools under municipal councils;

Now, therefore, in pursuance of section 305-A of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920), this Assembly hereby approves the following draft rule, proposed to be made by the Governor of Madras under section 305, sub-section (1) of the said Act for amending Schedule IV to the said Act :—

DRAFT RULE.

In Schedule IV to the said Act, for the second proviso to sub-rule (1) of rule 51, the following proviso shall be substituted, namely :—

' Provided further that the council may remit the whole or part of the fees of poor pupils in its secondary school or schools, in accordance with the provisions contained in rule 32 of the Grant-in-Aid Code.' "

The motion was put and carried and the amendment was approved.

IV.—REPORT OF THE COMMITTEE ON PRIVILEGES *RE* DEFINITION OF THE TERM "PRECINCTS OF THE HOUSE".

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That the Report of the *Committee on Privileges regarding the definition of the term ' Precincts of the House ' be approved ".

Mr. Deputy Speaker, Sir, certain instances came to the notice of the Speaker where legal processes were sought to be served on certain Members of the House within the precincts of the House while it was actually sitting which would be a breach of the privilege of the House. Under Rule 187 of the Madras Legislative Assembly Rules, the Speaker referred the question of the construction that should be put on the expression ' precincts of the House ' as regards the Legislative Assembly to the Committee on Privileges on the 14th March 1955. After considering this matter fully, the Privileges Committee submitted their recommendations. The Committee has made the following recommendations after considering all the aspects of the question :—

(1) " Precincts of the House " shall mean and include the entire Assembly buildings, the Ministers' rooms, the Library, the Canteen and the Committee Room together with the verandahs and steps to these buildings and the pathways leading from the Assembly Chamber to the other aforesaid buildings in respect of members and, as far as strangers are concerned, ' precincts ' means the Assembly Chamber including its verandas and steps.

(2) In so far as the persons summoned by a Committee of the House for any purpose whatsoever, they shall be deemed to be within the precincts of the House so long as they are within the Committee Room, its verandas and its steps.

These decisions have been arrived at by a majority of the members of the Committee. There is also a Dissenting Minute submitted by Sri P. K. Gopalakrishnan and Sri P. Jeevanandam to the effect that hostels and party rooms should also be included in the definition of ' Precincts of the House '. I do not think that could be agreed to because almost all the public are allowed to visit the Hostels and Party Rooms. I do not think they could be brought under the definition.

DEPUTY SPEAKER : Motion moved—

" That the Report of the Committee on Privileges regarding the definition of the term ' Precincts of the House ' be approved."

SRI K. VINAYAKAM : By way of clarification I may say that 10-10 a.m.
the privilege will apply only to the Members in the Legislators' Hostel and the Party Rooms even if these two places are included within the definition of ' precincts of the House '. Even if other people come to the Hostel or Party Rooms, they will not have the privileges which the Members enjoy. Therefore, what objection can the Government have to including these two places within the definition of ' precincts of the House '?

* Printed as Appendix on page 302–319 infra.

[20th December 1956

DEPUTY SPEAKER: It is a report of the Privileges Committee of the House and not of the Government.

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ரிப்போர்ட் நமது முன்பாக நீண்டகாலமாக இருந்து வந்திருக்கிறது. அசெம்பளி அங்கத்தினர்கள் சம்மந்தப்பட்டவரையில அசெம்பளி நடக்கும் சமயத்திலாவது பூர்ண பாதுகாப்பு இருக்க வேண்டியது அவசியம் என்று நான் இன்னமும் கருதுகிறேன். மற்ற சமயங்களிலும் இருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அசெம்பளி கட்டிடம் என்றால் கூட்டம் நடக்கும் இந்தச் சபைதான். சபை முடிந்து இந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே போனபிறகு எந்த அங்கத்தினரையும் கைது செய்யலாம். அவரை அன்று பூராவும், மறுநாளும் சிறையில் வைத்திருந்து மறுநாள் நடக்கும் முக்கியமான விவாதத்தில் பங்கு கொள்ள முடியாமலும் செய்ய முடியும். முக்கியமான அங்கத்தினர்கள் சில குறிப்பிட்ட விவாதத்தில் கலந்து கொள்ளாமல் இருப்பது, கலந்துகொள்ள முடியாமல் இடையூறு ஏற்படுவது நமக்கே நஷ்டமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே சபை நடந்துகொண்டிருக்கும் காலத்திலாவது கட்சி காரியத்திலோ, ஹாஸ்டலிலோ இருக்கும்போதும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது அவசியமாகும். ஆகவே கட்சி காரியாலயம், ஹாஸ்டல் ஆகிய இரண்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். அவற்றையும் சேர்த்துக் கொள்ளும்படியாக நிதி அமைச்சரை கேட்டுக்கொள்ளுகிறேன்.

விசிடர்கள் சம்மந்தப்பட்ட மட்டில் பாதுகாப்பு கொடுப்பது அவசியம் என்று நான் சொல்லவில்லை. அதை ஒதுக்க வேண்டியது அவசியம்தான். திருடர்களுக்கும், கள்ளர்களுக்கும் அபயம் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட வரையில் சபை நடக்கும் காலத்திலாவது பூர்ண பாதுகாப்பு இருக்க வேண்டும். ஆகவே அவர்கள் ஹாஸ்டலை ஒதுக்கி இருந்தாலும், கட்சிக் காரியாலயங்களை ஒதுக்கியிருந்தாலும் இவை இரண்டையுமாவது சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சபை நடக்காமல் இருந்தால் எல்லா இடங்களிலும் அவர்களை கைதி செய்யலாம் என்று கொண்டு வருவதானாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. சபை நடக்கும் காலத்திற்கு இந்தப் பாதுகாப்பு இருக்க வேண்டியது அவசியம் என்பதை வற்புறுத்திக் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

SRI V. R. NAGARAJAN: If the Government will be pleased to accept the suggestion made by the hon. Member Sri M. Kalyanasundaram, I also request the Government to consider the addition to the list of the Assembly Building Post Office and the branch of the Indian Bank to which Members of the Legislature visit frequently during the session time.

THE HON. SRI C. SUBRAMANIAM: The Privileges Committee was composed of Members of the Legislature who have taken into consideration all aspects of the question and made recommendations. If difficulties arise later on, it is open to us to consider the question further. (Sri M. Kalyanasundaram: Let us hope no difficulties will arise.) As the hon. Member suggests, let us hope that no difficulties will arise, let us hope that we will not create occasions as to give rise to difficulties. Let us now accept the recommendations of the Privileges Committee. In all these matters, the convention should be to accept the recommendations of the Privileges Committee instead of restricting or going beyond them. Therefore I submit that we may accept the recommendations at this stage.

20th December 1956]

DEPUTY SPEAKER: The question is—

"That the Report of the Committee on Privileges regarding the definition of the term 'Precincts of the House' be approved."

The motion was put and carried and the Report was approved.

V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS CO-OPERATIVE SOCIETIES (AMENDMENT) BILL, 1956.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Co-operative Societies (Amendment) Bill *, 1956, and move—

"That the Bill be taken into consideration at once."

The All-India Rural Credit Survey Committee appointed by the Reserve Bank of India undertook a Survey of Rural Credit which brought to light the inadequacy of co-operative credit. The Committee observed that a dynamic programme for increasing agricultural production which the country had undertaken called for an equally dynamic programme of agricultural credit and recommended the supply of institutional credit on a co-operative basis to a larger section of the agricultural population, laying emphasis on the supply of productive finance and provision of complementary arrangements for marketing and processing to enable the ryots to reap the benefits of increased agricultural production. The Committee recommended a scheme of integrated rural credit and marketing based on the three principles of State partnership at different levels, full co-ordination between credit and other economic activities especially marketing and processing and administration through adequately trained and efficient personnel responsive to the needs of the rural population. This scheme contemplated the formation of large sized primary societies, based on limited liability or liability limited by guarantee and employing paid staff, as against the existing Village Credit Societies and State participation in the Co-operative institutions. The Committee also recommended the advance of cultivation loans on the security of the crops proposed to be raised. The basic principles and lines of reorganisation of the Co-operative Credit Movement recommended by the Committee were approved at the Conference of State Ministers held at New Delhi in April 1955. That Conference also recommended that, as a preliminary step towards the implementation of the scheme of integrated credit, a few pilot projects embodying the salient features of the main scheme might be started in two or three select districts during 1955–56 itself to gain experience for working the main scheme. A pilot scheme was accordingly sanctioned by this Government and was put into operation from January 1956 in two select taluks in each of the districts of Chingleput, Coimbatore, Ramanathapuram and Tirunelveli. It was found that through the implementation of the scheme there was a record increase in the membership, paid-up share capital, deposits and loan transactions of large sized agricultural credit societies. Encouraged by the results of the scheme the

* Published in the *Fort St. George Gazette*, dated 28th November 1956.

Government sanctioned the main scheme also in June last and it is now being implemented throughout the State. The progress made in regard to the issue of loans from 1st April 1956 to 31st October 1956 by the Co-operative Central Banks to Agricultural Credit and Marketing Societies for disbursement to agriculturists, primary land mortgage banks and Central Land Mortgage Bank proved beyond doubt that the scheme has helped to increase the tempo of development of Co-operative credit.

In order to ensure the effective and successful implementation of the scheme and the achievement of the targets laid down in the scheme by carrying out the programmes for State participation in the share capital of Co-operative institutions, formation of large sized credit societies, expansion of credit by Co-operatives, etc., it has become necessary to make certain amendments to the existing Madras Co-operative Societies Act. This opportunity is also taken advantage of for bringing about one or two other amendments to the Act which are also very urgent.

The need for the amendments proposed has been explained briefly in the Notes on Clauses appended to the Bill.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1956, be taken into consideration at once."

The motion is before the House for discussion.

SRI K. T. RAJU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் பற்றிய 1956-ம் வருஷத்திய திருத்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இந்த மசோதாவை நாம் சட்டமாக நிறைவேற்றுவதற்கு முன்பாகச் சில விஷயங்களை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இன்றையதினம் கிராமங்களில் இருக்கக் கூடிய கூட்டுறவு சங்கங்கள் அந்த அந்த கிராமங்களில் இருக்கக் கூடிய விவ்சாயிகளுக்குத் தேவையான கடன்களைக் கொடுப்பதற்கான ஒரு வசதியுள்ள நிலைமையில் இல்லை. அவர்களுக்கு எல்லாம் கடன் உதவி அளிப்பதற்கான நடவடிக்கைகளையும் அந்த ஸ்தாபனங்கள் எடுத்துக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கின்ற காரணத்தினால் தேவையான கடன்களைப் பெறமுடியாமல் பல விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால்தான் அகில இந்திய கிராம கூட்டுறவு ஸ்தாபனங்கள் சம்பந்தமாக ரிசர்வ் பாங்கு ஏற்படுத்திய அந்தக் கமிட்டி பரிசீலனை செய்து இம்மாதிரியாக கிராமங்களில் சிறு சிறு கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதன் மூலமாக விவசாயிகளுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. ஆகையால் இப்படிப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களை எல்லாம் ஒன்றாக இணைத்து ஓரளவு அந்த விவசாயிகளுக்கு நல்ல முறையில் கடன் வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று அந்தக் கமிட்டி ராஜ்ய சர்க்கார்களுக்குச் சிபார்சு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தமான திருத்த மசோதா பிரேரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே இந்த மசோதாவில் இருக்கும்படியான ஒரு முக்கியமான நோக்கம் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பயிர்கள் மேல் கடன் கொடுக்கலாமென்று கூறப்பட்டு இருக்கிறது. ஆனால் இதில் ஒரு விளக்கம் எனக்குத் தேவையாய் இருக்கிறது. குத்தகைதாரர்களாக இருப்பவர்கள் அந்த நிலங்களில் பயிர் செய்து இருப்பார்களேயானால் அவர்களுக்கு இந்தக் கடன் உதவி அளிக்கப்படுமா? அப்படி அளிக்கப்படும் என்று இந்த திருத்த மசோதாவின் மூலம் நாம் நிச்சயமாகச் சொல்வதற்கு இல்லை. அமைச்சர் அவர்கள் பதில் கொடுக்கிற

நேரத்தில் இதற்கு விளக்கம் கொடுப்பார்களேயானால் அது ரொம்ப நல்லதாக இருக்குமென்று நான் கருதுகிறேன். எனவே அதன் மூலம் துரிதமான நடவடிக்கை கூட்டுறவு ஸ்தாபனங்களை மிகவும் உபயோககரமான ஸ்தாபனங்களாக ஏற்படுத்துவது அவசியம். ஏனென்றால் இன்றைய தினம் கிராமங்களில் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் கடன் பெறுவதைவிட தனிப்பட்ட லேவாதேவிக்காரர்களிடமிருந்து பெறுவது சுலபமாக இருக்கிறது. அதனால் அதிகமான வட்டி கொடுப்பதோடு, அதிகமான நஷ்டத்தையும் அடைகிறார்கள். இருந்தும் தனிப்பட்ட லேவாதேவிக்காரர்களிடம் கடனாளி ஆகிறார்களே என்றால் சுலபத்தில் காலாகாலத்தில் பணம் கிடைக்கின்றது என்கிற ஒரே ஒரு காரணம்தான். அது குறைந்த வட்டியில் நல்ல முறையில் கிடைக்காததினால்தான் விவசாயிகளுடைய முன்னேற்றத்திற்காக சர்க்கார் எத்தனையோ சீர்திருத்தங்களைச் செய்த போதிலும்கூட அதனால் விவசாயிகள் எவ்வித பயனும் பெறாமல் இருக்கிறார்கள். ஆகவே கூட்டுறவு ஸ்தாபனங்களை எல்லாம் நடை முறையில் நல்ல வகையில் செயல்படச் செய்து விவசாயிகளுக்கு காலாகாலத்தில், போதிய அளவு கடன் உதவி செய்யும்படியான வகையில் செய்ய வேண்டும். அதன் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் அனுகூலமாக இருக்கும். கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குப் போதிய பண வசதியையும் அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும். இல்லையானால் நாம் எதிர்பார்க்கின்ற பலன் கிடைக்காமல் போய்விடும். விவசாயிகளுடைய நன்மைக்காக நாம் எத்தனையோ சட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம். கொள்கை அளவில் அவை எல்லாம் நல்லனவையாக இருக்கலாம். ஆனால் அச்சட்டங்கள் நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில்தான் எதிர்பார்த்த நன்மையை அளிக்க முடியாது பல சிக்கல்கள் ஏற்பட்டு விடுகின்றன. விவசாயிகளுக்குப் போதுமான கடன் உதவி அளிக்க வேண்டுமென்றால் கூட்டுறவு ஸ்தாபனங்களிடம் அதற்குத் தக்க பணம் இருக்க வேண்டும். அதற்கு ராஜ்ய பாங்கின் மூலம் ஒரு நிரந்தர உத்தரவாதம் கொடுக்கப்படவேண்டும். இந்த கூட்டுறவு ஸ்தாபனங்கள் திருத்த மசோதாவின் மூலம் குத்தகைதாரர்களுக்கும் பயிர்களின்மேல் கடன் அளிக்கத் தக்க ஏற்பாடும் இருக்க வேண்டும். இம்மாதிரியான சங்கங்கள் ஏற்படுத்துவதன் மூலமாக ஏழை மக்களுக்கு கடன் கொடுப்பதில் ஒரு மாதம் இரண்டு மாதம் என்று காலதாமதம் செய்யாமல் ஒரு விவசாயி தனக்கு கடன் வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்ட ஒரு வாரத்திற்குள்ளாக அந்தக் கடன் கிடைக்கும் என்ற உத்தரவாதம் இருக்க வேண்டும். இந்த மசோதா சட்டமாக்கப்படும்போதும், அதற்கான விதிகள் தயாரிக்கும்போதும் முக்கியமாக கவனம் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு காரியங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, செய்வார்கள் என்று நம்பி இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

* **SRI P. RANGASWAMI REDDIAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சென்ற நான்கு வருஷ காலமாக இந்த சபையில் அநேக தடவைகள் கூட்டுறவு இயக்க ஊழல்களைப்பற்றி நானும் மற்ற அங்கத்தினர்களும் புள்ளி விவரங்களோடு எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். சென்னை திருவல்லிக்கேணி அர்பன் கூட்டுறவு சொஸைடி முதல், திருச்சிராப்பள்ளி ஜில்லா மணப்பாறை கூட்டுறவு சொஸைட்டி வரையில் 75 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகை கையாடல் செய்யப்பட்ட சொஸைடிகளைப்பற்றி சொல்லப்படுகிறது. இப்பொழுது தேவகோட்டை, சிவகங்கை செஷன்ஸ் கோர்ட்டில் காரைக்குடி கூட்டுறவு ஸ்டோர்ஸ் சம்பந்தமாக கேசுகள் நடக்கின்றன. அந்த கேஸ்களைப் பற்றி சொல்ல விரும்பவில்லை. காரைக்குடி கூட்டுறவு ஸ்டோர்ஸில் கண்டுபிடிக்கப்பட்ட மோசடி 75 ஆயிரம் வரையில்; கண்டு பிடிக்காதது இரண்டு லட்சத்துக்கு மேல் என்று கருதப்படுகிறது. இப்பொழுது சமீபத்தில் காரைக்குடி கூட்டுறவு பாங்கிலும் ஏதோ பெருமளவு மோசடி (Misappropriation of Funds.) ஏற்பட்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். திருச்சி-மணப்பாறை கூட்டுறவு சொஸைடியில் நடந்தது என்னவென்றால் உயிரோடு இல்லாத ஆட்கள் பேரில் கடன் கொடுத்ததாக பொய்க் கையெழுத்துகள் போட்டு பொய் ரிகார்டு தயார் செய்து அதனுடைய தலைவரும், காரியதரிசியும் மூன்று

[Sri P. Rangaswami Reddiar] [20th December 1956

லட்சம் ரூபாய் வரையில் கையாடல் செய்து விட்டார்கள். அதன் பேரில் கேஸ் நடந்து திருச்சி செஷன்ஸ் கோர்ட்டில் அவர்களுக்கு ஆயுள் தண்டனை **Transportation for life** கொலைக்குற்றத்திற்கு அடுத்த குற்றமாக கருதி, கொடுக்கப்பட்டது. சென்னை உயர் நீதி மன்றத்தில் ஐந்தாண்டாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பரவாயில்லை. ஐந்தாண்டாக குறைக்கப்பட்டதை ஆமோதித்து "பரவாயில்லை" என்று சொல்வதாக நினைக்க வேண்டாம். "பரவாயில்லை" என்பதை கேலியாக சொல்கிறேன். சொசைடிகளின் சொத்துக்களை விற்பனை செய்து, விற்பனை செய்த பத்தாயிரம், பன்னிரெண்டாயிரம் ரூபாய் வரையில் வரவு வைக்கப்படவில்லை. சில சொசைடிகளில், இவையெல்லாம் எதற்காக சொல்கிறேன் என்றால் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக சட்டத்தை திருத்தம் செய்யும்போது ஒவ்வொரு சொசைடியின் பணமும் துர்விநியோகம் செய்யக்கூடாது என்பதற்காகவும் பொய்யாக கணக்குகள் தயார் செய்து கையாடல் செய்யக்கூடாது என்பதற்காகவும்தான். சம்பந்தப்பட்ட போர்டு ஆப் டைரக்டர்களும், நிர்வாகஸ்தர்களும், [illegible] செய்கின்ற ஆடிட்டர்களும், இன்ஸ்பெக்டர்களும் சரியானபடி கண்டிக்க வேண்டும். சரியானபடி எச்சரிக்கை செய்யப்பட வேண்டும். அம்மாதிரியாக இந்த சட்டத்தில் திருத்தம் வந்திருக்க வேண்டும். அப்படி வராதது பெரும் குறை. இப்படிப்பட்ட திருத்தம் இல்லாமல் இருந்தால், கனம் அங்கத்தினர் கே. டி. ராஜு சொன்னது போல் சரியான படி விவசாயிகளுக்கு நாம் கடன்கொடுக்க வேண்டுமென்று எவ்வளவு நல்ல எண்ணத்தோடு இந்த மசோதாவை கொண்டு வந்து, சட்டத்தை திருத்தினாலும் உண்மையாக விவசாயிக்கு பணம் போய்ச் சேராது. ஆனால் [illegible] அவர்களுக்கும் போய்ச் சேர்ந்ததாகத்தான் இருக்கும். பல கூட்டுறவு இயக்கங்களில் பொய்க் கையெழுத்து செய்து கற்பனை ஆட்களுக்குப் பணம் கொடுத்ததாக பொய் ரிகார்டுகள் தயார் செய்தால் கிராம விவசாயிகளுக்கு பணம் சரியானபடி போய்ச் சேராமல், சம்பந்தப்பட்ட நிர்வாகஸ்தர்கள் கையாடுதல் மட்டுமின்றி, சொந்த உபயோகத்திற்கும் எடுத்துக் கொள்கிறார்கள். இதை மனதில் வைத்து சட்டத்தை இப்பொழுதோ, பிறகோ சில புது ஷரத்துக்களை இம்மசோதாவோடு சேர்க்கவேண்டும். கூட்டுறவு சொசைடிகள், பொதுவாக ரூரல் க்ரெடிட் சொசைடிகள், ஏழைகளுக்கு பணம் கடன் கொடுத்து வாங்குகிற சொசைடிகளை பொறுத்த வரையில் போதிய கண்காணிப்பும், குறைகள் ஏற்பட்டால் நீக்கியும், நீக்கிய பிறகு விசாரணை செய்வதற்கு தகுந்த ஷரத்துகளை சேர்த்து திருத்தினால் இந்த மசோதாவில் "ஏதுக்களும் குறிக்கோளும்" என்பதில் குறிப்பிட்டபடி நிறைவேற்றவேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

SRI V. BALAKRISHNAN: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நான் பேசுவதற்கு முன்பு தலைவர்கள் ஒரு சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டியதாயிருக்கிறது. அதாவது கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்த திருத்த மசோதாவில் சில குறிப்பிட்ட செக்ஷன்களைக் குறிப்பிட்டு, அதற்குத் திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகையால் அந்தத் திருத்தத்தைப்பற்றிதான் பேச வேண்டுமோ? அல்லது ஐக்கிய நாணய சங்கத்தைப்பற்றி மதராஸிலிருந்து கன்யாகுமரி வரையில் பேசலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER: திருத்த மசோதாவில் இருக்கிற விவரங்களைப் பேசவேண்டுமே தவிர மதராஸிலிருந்து கன்யாகுமரி வரையில் பேசுவதில் பிரயோஜனம் இல்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

SRI V. BALAKRISHNAN: ரொம்ப வணக்கம். இதை முன்பே தாங்கள் தெரிவித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். திருத்தத்தில் கண்டிருக்கிற பிரகாரம் விவசாயிகளுக்கு விவசாய அபிவிருத்திக்கு பணம் உதவி செய்யவேண்டும் என்பதுதான் முதல் கருத்து. அதை வரவேற்கிறேன். அதை வரவேற்பதிலும்கூட ஆங்காங்கே இருக்கக்கூடிய சொசைடிகளில், உண்மையில் விவசாயத்தில் அக்கறை கொள்ளாதவர்களும்

20th December 1956] [Sri V. Balakrishnan]

விவசாயத்தில் எந்தவிதமான ஈடுபாடும் இல்லாதவர்களும் அங்கத்தினர்களாக இருந்துக்கொண்டு சொசைடியின் கஜானாவை தங்கள் கையில் வைத்துக்கொண்டு செல்வாக்கு பெறுவதற்கு சட்டம் இடம் கொடுக்கிறது. அந்தப்படியே புதுக்கோட்டை கூட்டுறவு மத்திய சங்கத்தில் 135 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 12 பேர்கள் ரூ. 500 செலுத்திய பிரைமரி அங்கத்தினர்கள். ஒரு லட்சத்தி இருபத்தி ஐயாயிரம் ரூபாய் மூலதனம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு 6 பிரதிநிதிகள் ஸ்தானம் மத்திய சபையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டுறவு சங்கங்கள் விவசாயத்தில், விவசாயத்திற்காக பாடுபடாதவர்களும், விவசாயத்தில் அக்கறை இல்லாதவர்களும் தங்கள் சொந்த செல்வாக்கால், அந்த ஸ்தாபனத்தை பயன்படுத்திக் கொள்ளும்படியான முறையில் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் ஏற்படாமல் கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தில் ஜனங்களுக்கு பரிபூரணமான பலன் அடைய வேண்டுமென்று விரும்பினால் சங்கத்தின் அமைப்பு விதிகளை மாற்றி அமைக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். இதர திருத்தங்கள் எல்லாம் அவசியம்தான். கூட்டுறவு இயக்கங்கள் தேவைதான். மக்கள் பலன் அடைய வேண்டியதும் அவசியம்தான். கூடுமான வரையில் விவசாயிகள் கூட்டுறவு ஸ்தாபனங்களைத் தவிர தனிப்பட்ட நபர்களிடமிருந்து கடன் வாங்கக்கூடாது. கூட்டுறவு சங்கத்தில் மட்டும்தான் கடன் வாங்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால்தான் விவசாயிகள் காப்பாற்றப்படுவார்கள். விவசாயிகள் பயன் பெருவதற்காக கிராமங்கள் தோறும் கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஏற்படுத்தி சாமான்களை அவர்கள் சங்கத்தின் மூலமாக வாங்கக் கூடிய நிலைமை ஏற்பட இந்தத் திருத்த மசோதா வகை செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR: இந்தத் திருத்த மசோதாவில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆறாவது செக்ஷனில் ". . . . . . **no member shall** . . . . . .

(b) **have or claim any interest in the shares of the society exceeding . . . . one thousand rupees**" என்று கண்டிருக்கிறது. என்று கண்டிருக்கிறது. அதாவது 1,000 ரூபாய் மதிப்பிற்குட்பட்ட பங்குகளை ஒரு மெம்பர் வைத்துக் கொள்ளலாம். இந்த மதிப்பிற்கு மேற்பட்ட பங்கு வைத்துக் கொள்ளக்கூடாது. அந்த மதிப்பிற்கு மேற்பட்ட பங்குகளில், பாத்தியம் கொண்டாடவும் கூடாது என்கிறது. மசோதாவின் வாசகம் பிரதான ஆக்டிலிருந்து காப்பி செய்யப்பட்டிருக்கிறது. பிரதான ஆக்டின்படியும் இந்த மசோதாவின்படியும் உள்ள வாசகத்தின் விளைவை கவனிப்போம். ஒருவருக்கு ஏற்கனவே ரூ. 1,000 மதிப்புள்ள பங்குகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். இறந்து போன ஒரு மெம்பரின் வாரிசு நிலைமையில் ரூ. 100 மதிப்புள்ள பங்குகள் அவருக்கு இறங்கினால் அந்த பங்குகளில் அவருக்குள்ள உரிமை என்ன? இப்பொழுதுள்ள திருத்தப்படி '**he shall have no claim over shares in excess of shares worth Rs. 1.000.**' ரூ. 1,000-க்கு மேற்பட்ட மதிப்புள்ள பங்குகளில் அவருக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாது என்று ஏற்படும் போல் சந்தேகமாயிருக்கிறது. ரூ. 1,000.க்கு மேற்பட்டு இறந்துபோன பங்குதார்களின் வார்சு நிலைமையில் வாரிசுகளுக்கு கிடைக்கும் உபரி பங்குகளில் அவர்களுக்குள்ள பாத்தியம் என்ன என்று புரியவில்லை. அவர்களுக்கு அந்த உபரிப் பங்குத் தொகை கிடைக்குமா, கிடைக்காதா என்பதை விளக்கப்படுத்தவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

SRI E. L. RAGHAVA MUDALIAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை நான் வரவேற்கிறேன். சென்ற 10-35 p.m.
மாதம் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி விசாரித்து ஸ்ரீ டி. எம். நாராயணசுவாமி பிள்ளை கமிட்டி ரிப்போர்ட்டு ஒன்று வெளியிட்டது. அதிலே

[Sri E. L. Raghava Mudaliar] [20th December 1956

கூட்டுறவு இயக்கம் பலவிதத் துறைகளிலும் நடப்பு முறையில் இருப்பதை விசாரித்து கூட்டுறவு லட்சியத்தை பலப்படுத்துவதற்கு வேண்டிய சிபார்சுகள் பல செய்திருக்கிறார்கள். இந்த சிபார்சுகளிலே ஏதோ ஒன்று, இரண்டுதான் இந்த திருத்த மசோதாவில் கவனிக்கப்பட்டிருக்கிறதே தவிர, பல முக்கியமான சிபார்சுகள் கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. முக்கியமாக **financing** பாங்குகளுக்கு ரிசர்வ் பாங்கு 1½ சதவிகிதம் வட்டி போடுவதாகத் தெரிகிறது. கடைசியிலே அது கடன் வாங்கும் விவசாயிக்கு 5½ அல்லது 6 சதவிகித வட்டிக்குத்தான் கிடைக்கிறது. இரண்டு பாங்குகள் மூலமாக இதை நிர்வகிக்க வேண்டியிருப்பதால் ஏறக்குறைய 4 அல்லது 4½ சத விகித வட்டி வீணு வழியாகப் போய் விடுகிறது. அதைத்தவிர்க்க வழி வகை செய்வதைப்பற்றி இந்த திருத்த மசோதாவில் கவனிக்கப்படவில்லை.

அடுத்தபடியாக, பிரைமரி சங்கங்கள் தாராளமாக கடன் வழங்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் அந்த சங்கங்களின் அங்கத்தினர்களுடைய பொறுப்பு வரம்பற்றதாயிருக்கிறது தான். இப்பொழுது இருக்கும் சட்டப்படி அந்த அங்கத்தினர்களுடைய பொறுப்புக்கு ஒரு வரம்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு வரம்பு கட்டவேண்டும். அவர்களுடைய பொறுப்பு பங்குத் தொகைக்கு சமம் என்றோ அல்லது அதைப் போல் 5 அல்லது 10 மடங்கு என்றோ வரம்பு கட்டிவிட்டால் அவர்கள் தாராளமாக கடன் வழங்குவதற்கு வசதியாக இருக்கும். அவர்களுடைய பொறுப்புக்கு ஒரு வரம்பு இல்லாமல் இருப்பதினாலேயே அவர்கள் தாராளமாக கடன் வழங்குவதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. அதைத் தவிர, இந்த சங்கங்களில் புதிய அங்கத்தினர்கள் சேருவதற்கு ஏற்கனவே இருக்கும் பழைய அங்கத்தினர்கள் முட்டுக் கட்டையாக நிற்கிறார்கள். அதன் காரணமாக அநேக பிரைமரி சங்கங்கள் ஆரம்பத்தில் எப்படி இருந்ததோ அதே நிலைமையில்தான் இன்றும் இருக்கின்றன.

விவசாயிகள் கடன் வாங்குவதற்கு மனுப்போட்டால் கடன் அவர்களுக்குக் கிடைப்பதற்கு மிகவும் தாமதமாகிறது. கடன் மனுக்களை இவர்கள் பரிசீலித்து அங்கிருந்து ஜில்லா பாங்குக்குச் சென்று கடன் **sanction** ஆகி வருவதற்கு பல மாதங்கள் ஆகின்றன. அவர்களுக்கு தேவைப்படும் பொழுது கடன் கிடைக்க வசதியில்லாமல் இருக்கிறது. அதையும் தவிர்க்க இந்த திருத்த மசோதாவில் யாதொரு வழி வகையும் செய்யக்காணோம்.

இம்மாதிரி முக்கிய சிபார்சுகளையும் சேர்த்து இந்த திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆகவே கொண்டு வரப்பட்டிருக்கும் திருத்த மசோதாவை வரவேற்று, இப்பொழுது நான் சொன்ன திருத்தங்களையும் கூட விரைவில் அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பம் அளித்ததற்கு தங்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

10-40 a.m. * **SRI R. KRISHNASWAMI NAIDU**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கூட்டுறவு சட்ட திருத்த மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். மத்திய அரசாங்கம் நியமித்த கமிட்டி, நம்முடைய ராஜ்ய சர்க்கார் நியமித்த கமிட்டி இவைகளின் அறிக்கைகள் சட்ட பூர்வமாக வெளியே வருவதற்கு முன்னமேயே, நம் சர்க்கார் அவைகளின் சிபார்சுகளை ஒட்டி கூட்டுறவு சம்பந்தமாக விவசாயிகளுக்கு சில உதவிகள் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு முன்பே இந்த வசதிகளை ஏற்படுத்தியது பற்றி நான் என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன். கிராம சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்கு கடன் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்பட்ட போதிலும், அதை ஒருவாறு நிவர்த்திப்பதற்கு சென்ற ஒரு வருஷ காலமாக கூட்டுறவு இலாகா நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருவது மிகவும் சந்தோஷப் படக்கூடிய காரியம். அநேக சங்கங்களிலிருந்து **post sanction** முறையிலே விவசாயிகளுக்கு கடன் கிடைக்கும்படி இப்பொழுது ஏற்பாடுகள்

20th December 1956] [Sri R. Krishnaswami Naidu]

செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது பரீக்ஷார்த்தமாக நம்முடைய ராஜ்யத்தில் கோவையில் ஈரோடிலும் ராமனாதபுரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரிலும் பூரண கடன் வசதி திட்டம் (**Full Financing Scheme**) அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதால் அந்த பிர்காவிலுள்ள எல்லா விவசாயிகளுக்கும் கடன் சுலபமாக கிடைக்கிறது. அதனால் அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களிலுள்ள கூட்டுறவு சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்கு பூரண கடன் வசதி கிடைக்கிறது. இம்மாதிரி திட்டம் அமுலில் இல்லாத பிரதேசங்களில் கூட இதை அமுலில் கொண்டுவரவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நூற்றுக்கு இத்தனை பேர்கள் கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்களாக சேரவேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. அந்த அளவுக்கு கடன் வசதி பெருகுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதை நான் வரவேற்கிறேன். இம்மாதிரி அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் பல அனுகூலங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். புதிய திட்டப்படி கூட்டுறவு மத்திய சங்கங்களில் அரசாங்கம் ரூ. 10,000 பங்கு எடுத்துக்கொண்டு கிராம விவசாய பாங்குகளின் மூலதனத்தைப் பெருக்கி கடன் வாங்கும் சக்தியை பெருக்குவதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம். கூட்டுறவு சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கை வருவதற்கு முன்னமே அதனுடைய நோக்கங்களை தெரிந்து கொண்டு கமிட்டியின் சிபார்சுகளை அனுசரித்து சில திட்டங்களை அமுல் நடத்த அவர்கள் ஏற்பாடு செய்தது மிகமிக பாராட்டத்தக்க விஷயம்.

இந்த சந்தர்ப்பத்திலே இன்னொரு விஷயத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கிராமவாசிகளுக்கு பலரூபமாக கடன் கொடுப்பதற்கு வசதிகள் இருக்கின்றன. சமுதாய நல திட்டம் அமுலிலுள்ள பிரதேசத்தில் பல ரூபங்களில் விவசாயிகளுக்கு கடன் அளிக்கப்படுகிறது. ரெவின்யூ இலாகா மூலமாகவும் விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவது போன்ற வசதிகளுக்கு தக்காவி கடன் கொடுக்கப்படுகிறது. நிலசீர்திருத்தம் சம்பந்தமாக உயர்ந்த அளவுக்கும் கடன் கொடுக்கப்படுகிறது. இப்படி பல ரூபங்களில் விவசாயிகளுக்கு அரசாங்கம் கடன் கொடுப்பதால் எந்த விவசாயி எந்த விதத்தில் கடன் வாங்குகிறான் என்பதைத் தெரிந்து கொள்ளமுடியாமல் இருக்கிறது. பல ரூபங்களில் விவசாயிகளுக்கு கடன் கிடைப்பதால் சிலர் சக்திக்கு மீறி கூட கடன் வாங்குகிறார்கள். இதனால் உண்மையாக நியாயமாக கடன் தேவைப்படுகிறவர்கள் இந்த அனுகூலத்தை பெறமுடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் கிராமங்களிலுள்ள கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு ஒருமுகமாக ஒரே துறையில் கடன் வழங்கினால், எல்லோரும் வேண்டிய அளவு கடன் வசதி பெற அனுகூலமாக இருக்கும். ரெவின்யூ இலாகா எந்த விவசாயிக்கு கடன் கொடுத்திருக்கிறது என்று **Block Development Officer**-க்குத் தெரிவதில்லை. **Block Development Officer** கொடுக்கும் கடன் கூட்டுறவு இயக்க அதிகாரிகளுக்குத் தெரிவதில்லை. இதனால் பல இடங்களில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அரசாங்கம் விவசாயிகளுக்கு நல்ல முறையில் கடன் வழங்கவேண்டுமென்று எண்ணினாலும் கூட நடைமுறையில் உண்மையாக போய்ச் சேரவேண்டிய விவசாயிகளுக்கு கடன் வசதி கிட்டுவதில்லை. **Block Development Officer** மூலம் கடன் வசதி பெறுவதில் எவ்வளவோ தப்புகள் ஏற்படுகின்றன என்பதை வாஸ்தவத்திலேயே நாம் அனைவரும் பிரத்தியக்ஷமாக கண்டிருக்கிறோம். அமோனியம் சல்பேட், புண்ணாக்கு உரம் வேண்டுமென்று விவசாயிகள் இல்லாதவர்கள் கூட கடன் வாங்கி அதை வெளியே விற்கிறார்கள். ஆகவே, கிராமப் பகுதிகளில் கிராம கூட்டுறவு சங்கம், கிராம விவசாய பாங்கு இவைகளின் மூலம் அங்கங்கே விவசாயிகளுக்கு ஒரு முகமாக கடன் வசதி அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்த தங்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI M. PALANIYANDI: உதவி சபாநாயகர் அவர்களே! இங்கு இன்று கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த சீர்திருத்த மசோதாவை வரவேற்கும் காலத்தில், இன்று விவசாய அமைச்சரவர்களின் கையில் 10-45 a.m.

கூட்டுறவு இலாகாவும் இருப்பதைப்பற்றி நான் வரவேற்கிறேன். இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் கூட விளைவைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். விளைவை 30 சத விகிதமாவது பெருக்கவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், விவசாயிகள் கடன் கிடைக்கப்படவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் அவர்களுக்கு கடன் கிடைப்பதில்லை. உதாரணமாக திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் இருக்கக்கூடிய மத்திய கூட்டுறவு பாங்கில் சுமார் 70 லட்சம் ரூபாயிருக்கிறது. ஆனால், இப்பொழுதிருக்கும் தொந்தரவுகள் காரணமாக பணம் கொடுத்தால் அது திரும்பக் கிடைக்குமா என்ற பயத்தில் கடன் வசதி விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு நமது நிர்வாக இயந்திரம் சரியானபடி இயங்க வேண்டும். அதே சமயம் அங்கு பணம் இருக்கவும் செய்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு பணம் கிடைப்பதில்லை. இந்த நிலை மாற்றப்படவேண்டும். கூட்டுறவு இயக்கம் சரியாக பயன்படும் முறையில் விவசாயிகளின் கையில், அவர்கள் விளைவைப் பெருக்க, சமயத்தில் அவர்களின் கையில் பணம் போய் சேர வேண்டும். அப்படியில்லாவிட்டால், விவசாயிகளின் கடன் பளு காரணமாக விளைவைப் பெருக்க முடியாது போகிறது. ஆகவே விவசாயிகளின் வாழ்வு நல்ல முறையில் கொண்டுவரப்பட வேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருக்குமேயானால் அவர்களுக்கு தக்க சமயத்தில் கடனுதவ அளித்து உதவி செய்யவேண்டும். ஆகவே, தற்போதிருக்கும் நிலைமை மாற்றப்படவேண்டும். இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தத் திருத்த மசோதா ஒரு வகையில் நல்ல பெரிய சொஸைட்டிகள் ஆரம்பமாவதற்கு வழி செய்கிறது. ஆகவே, நான் இச்சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புவது என்னவெனில் ஏழை விவசாயிகளுக்கும் கடனுதவி அளித்து உதவவேண்டும். அவர்களுக்கு அப்படிக் கொடுக்கப்படும் உதவி அவர்களுக்கு தக்க சமயத்தில் போய் சேர வேண்டும். பெரிய மிராசுதார்களைப் போல் இவர்களுக்கு சொத்து ஜாமீன் கொடுக்க முடியாது. நில ஜாமீன் கொடுக்க விவசாயிகளிடம் ஏது நிலம். ஒரு கிராமத்தில் 200 பேர்களுக்கு கடன் கொடுத்தால் அதில் 20 பேர்கள் அக்கடனைத் திருப்பிக் கொடுக்க காலதாமதமும் ஏற்படலாம். அதையெல்லாம் பாராமல் விவசாயிகளுக்கு கடனுதவியளிப்பதோடு அது அவர்கள் கையில் தக்க சமயத்தில் போய் சேரும்படிச் செய்ய வேண்டும். விவசாய மந்திரியே கூட்டுறவு இலாகா மந்திரியாக இருக்கிறார்கள். அவர்கள் இவ்வேழை விவசாயிகளுக்கு நல்ல முறையில் சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*SRI K. R. SAMBANDAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே! இந்தத் திருத்தமானது இப்பொழுதாவது வந்ததைப்பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் மிகவும் முக்கியமாக உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றே எண்ணுகிறோம். உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்பது எளிதான காரியமல்ல. அதற்கு, உழைப்பு, நிதி, மற்ற உபகரணங்கள் முதலியவை வேண்டியிருக்கின்றன. அதிலே, இன்று நிலச் சட்டம், இந்த 60, 40 வாரச் சட்டம் இவையெல்லாம் வந்தவுடனே விவசாயிகளுக்கு பணம் கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது. ஆகவே, பணத்தை சர்க்கார்தான் கொடுக்க வேண்டும். ஆகவே, விவசாயிகளுக்கும் கஷ்டமில்லாமல், கொடுத்த பணம் சர்க்காருக்குத் திரும்பச் சேருவதற்கும் என்னென்ன செய்ய வேண்டுமென்று அரசாங்கம் ஆலோசித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்த விவசாயிகளுக்கு வேறு ஒரு status-ம் கிடையாது. மனையோ, வீடோ, நிலமோ அவர்களுக்குக் கிடையாது. வெறும் விவசாயியே அவன். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு கடன் கொடுத்தால் அதை எப்படித் திரும்ப வசூல் செய்வது என்பது பற்றி ஐயமேற்படலாம். அக்கடனை அவர்களது மகசூலிலிருந்து வசூல் செய்யலாமே. அறுவடை காலத்தில் அவனுக்கு கிஸ்தி கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்பொழுது தனக்குக் கிடைத்த தானியங்களை யெல்லாம் சொற்ப விலைக்குக் கொடுத்து கிஸ்தி செலுத்திவிட்டு பின்னடி தன் சாப்பாட்டிற்கு கூடுதல் விலை கொடுத்தும் நெல் வாங்க வேண்டியிருக்கிறது. எனக்குத் தெரியும், தஞ்சை

ஜில்லாவில் இப்படித்தான் நடக்கிறது. அங்கு நியாயவிலை அரிசிக்கடைகள் திறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது எதைச் சுட்டிக் காட்டுகிறது. விவசாயிகளுக்கு, தான்யங்களின் பேரில் கடன் கொடுத்து பிறகு அதை வசூல் செய்யும்படியான ஏற்பாட்டைக் கொண்டு வந்ததற்கு சந்தோஷப்படுகிறேன். இந்த மாதிரிப்பட்ட Society-கள் நகரங்களில் இருப்பதைக் காட்டிலும் கிராமங்களில்தான் முக்கியமாய் இருக்க வேண்டும். தானியங்களை வாங்க தேவையான வியாபாரிகள் அங்கு இல்லாததால் அங்கேயுள்ள குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலையிலிருக்கிறார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் எனக்கு வேறொரு காரியத்தை இங்கு எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த Co-operative Society-யை ஒரு சில கூட்டத்தினர் தங்களது சொந்த ஸ்தாபனமாக நினைத்துக் கொண்டு சுகமாக வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அங்குள்ள பணத்தை தங்கள் சொந்த பணம் போல் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இதை உடனடியாக தடுக்க வேண்டும். சென்னையில்கூட மில்க்சப்ளை யூனியன் என்றொன்று இருக்கிறது. அந்த யூனியனில் செய்யப்பட்டுவரும் அட்டகாசத்தை சொல்ல முடியாது. அங்கத்தினர்களுக்கு மாடுகள் வாங்கவோ மற்ற விஷயங்களுக்கோ பணம் கடன் கொடுப்பது கிடையாது. அவர்கள் மற்றவர்களை அதில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்வதும் கிடையாது. இதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது. அவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களைத்தான் அதில் சேர்த்துக்கொள்ளலாம். மனிதனாய் பிறந்து, வயது வந்தோருக்கு வோட்டுரிமை கிடைத்தும்கூட இப்படிப்பட்ட சங்கங்களில் அங்கத்தினராக உரிமையில்லையா? என்னுடைய காரியத்தையே நான் சொல்கிறேன். 1953-ல் எங்கள் ஊரில் ஒரு Credit Society இருந்தது. அதில் அண்ணன் தலைவர், தம்பி செகரட்டரி. இந்த மாதிரி அதை வைத்துக் கொண்டிருந்தார்கள். அதில் பல ஊழல்கள் நடந்தன. ஒரு விவசாயிக்கு 100 ரூபாய் கடன் கொடுத்தால் அதில் பத்து ரூபாய் அவ்விவசாயிடமிருந்து வாங்கிவிட்டுத்தான் மீதியைக் கொடுப்பார்கள். இதை மாற்றியமைக்க வேண்டுமென்று பொதுமக்கள் சொன்னதின் காரணமாக ஒரு கூட்டம் போட்டு அதில் 30 பேர்களை அங்கத்தினர்களாக சேர்க்கவேண்டுமென்று கேட்டோம். அன்றைக்கு கூட்டுறவு இன்ஸ்பெக்டரும் வந்திருந்தார். அவர் வந்திருந்தும்கூட அக் கூட்டத்தை ஒத்தி போட்டுவிட்டார்கள். இவர்களை அங்கத்தினர்களாய் சேர்த்துக் கொண்டால் Society-க்கு பங்கம் ஏற்படுமென்று சொல்லிவிட்டு அன்றைக்கு கூட்டம் நடத்தவில்லை. இந்த மாதிரி அதிலே ஒரு திட்டம் இருக்கின்றது. ஆகவே அச்சட்டத்தை மாற்றி யாருக்கும் அதில் அங்கத்தினராக சேருவதற்குள்ள சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். இந்த சொஸைடிகள் மூலம் முக்கியமாக பிற்பட்டவர்களும் ஆதிதிராவிடர்களுமே அதிகப் பயனடைகிறார்கள். பால் பண்ணைகள் வைத்தல், அதற்கு மாடுகள் வாங்குதல் போன்றவைகளுக்கு இதை மூலதனமாக வைத்துக்கொண்டே தங்கள் ஜீவனத்தை நடத்துகிறார்கள். ஆனால் இந்த சொஸைடி தலைவர்கள் அங்குள்ள பணத்தை தங்கள் சொந்த உபயோகத்திற்கு, தங்களுக்கு வேண்டியவர்களின் பேரில் மாடுகள் வாங்குவதற்கு மற்ற சாமான்கள் வாங்குவதற்கு என்றெல்லாம் பெயரளவில் எழுதிவிட்டு அவர்கள் அந்த பணத்தை சூறையாடுகிறார்கள். அதை கண்டித்து அம்மாதிரிப்பட்ட காரியங்களைத் தடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

நான் மீண்டும் சொல்கிறேன், விவசாயிகளுக்கு கடனுதவி அளிக்க வேண்டும். அவர்களுக்கு நில ஜாமீன், வீடு ஜாமீன் என்று பார்க்காமல் நபர் ஜாமீனிலே கடன் கொடுத்து பிற்பாடு வசூல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*SRI A. PARAMASIVA UDAYAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே! இந்த கூட்டுறவு இயக்கம் பெரும்பாலும் ஏழை மக்களுக்கு கடன் வாங்க வசதியாயிருக்கிறது. கூட்டுறவு இயக்கம் குறைந்த வட்டிக்கு கடன் வாங்க மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. இதில் கடன் வாங்க சில

[Sri A. Paramasiva Udayar] [20th December 1956

கஷ்டங்கள் ஏற்படுகின்றன. கடன் வாங்குவதற்குமுன், கர்ணத்தினிடமிருந்து சொத்தின் மதிப்பு என்று ஒரு சீட்டு வாங்க வேண்டும். அதை வாங்கி நாம் "லோன்" போட்டு சென்ட்ரல் பாங்குக்கு அனுப்பி அங்கிருந்து ஸாங்க்ஷனுகி வந்த பிறகு அதை டாகுமெண்ட் எழுதும் காலத்தில் சில தடைகள் ஏற்படுகின்றன. சில தவறுகள் நிமித்தம் குறிப்பிட்ட காலத்தில் கடனை வாங்க முடியாமலிருக்கிறது. ஆகவே அந்த சங்கம் ஓங்கி வளரு வதற்கும் வழி ஏற்படாமல் போகிறது. ஆக, அடிப்படையிலுள்ள கர்ணம் போன்றவர்கள் தங்கள் இஷ்டம்போல் செய்கிறார்கள். சிலருக்கு கூட்டுப் பட்டாவாயிருக்கலாம்; பட்டாக்களின் மதிப்புகள் சில சமயம் குறையலாம். சிலர், தங்கள் இஷ்டம்போல் மதிப்பிடுகிறார்கள். கர்ணங்கள் இக்காரியங் களில் யாதொரு கவனமும் செலுத்துவதில்லை. இதற்குக் காரணம், அவர்களுக்கு தகுந்த சம்பளமில்லாததுதான். ஏதோ வருமானத்தை உத்தேசித்துத்தான் அவர்கள் இப்படி ஏதாவது செய்கிறார்கள். ஆகவே கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மக்களுக்கு கடன் வாங்க ரொம்பவும் கஷ்டமா யிருக்கிறது. குறிப்பிட்ட காலத்தில் அதிக கஷ்டமில்லாமல் அவர்களுக்கு பணம் கிடைக்க வழிவகை காணவேண்டும்.

அடுத்தபடியாக கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடன் வாங்க வேண்டு மென்றால் அந்த சங்கத்திலுள்ள மெம்பர்கள் மூலம்தான் வாங்க முடியும் என்றிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு வருஷமும் மெம்பர்களை மாற்றி யமைக்க வேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. இவ்விதம் ஒவ்வொரு வருடமும் மெம்பர்களை மாற்றுவதால் சில கஷ்டங்கள் இருக்கிறது. அதா வது கடனுக்கு மனு கொடுத்து பரிசீலித்து அது கிடைக்கும் முன்பாக கடனுக்கு வேண்டி முயற்சித்த மெம்பர்களின் காலம் முடிந்து விடுகிறது. ஆகவே இம்மாதிரி மாற்றுவது வருஷத்திற்கு ஒரு முறை என்றிருப்பதை மாற்றி மூன்று வருஷத்திற்கு ஒரு முறை செக்ரடரியையும் மற்ற மெம்பர் களையும் மாற்றி அமைக்க வேண்டும் என்று திருத்தம் செய்தால் பொது மக்களுக்கு கடன் வாங்குவதற்கு சௌகரியமாக இருக்கும். ஆதலால் இப்படி மாற்றுவதற்கு வேண்டி ஒரு திருத்தத்தை கொண்டுவரவேண்டும் என்று சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

10-57 a.m. **SRI A. RATNAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சென்னையி லுள்ள மார்வாடிகள் எல்லாம் இன்று கடையை மூடிக்கொண்டு போகிற அளவில் வந்திருக்கிறது. காரணம் சென்னையிலுள்ள ஏழைமக்களின் நகைகள் எல்லாம் இன்று மார்வாடிகளின் கையில் போயாய்விட்டது. இனி மேல் கொண்டு கொடுப்பதற்கு ஆள் இல்லை. அந்த விதத்தில் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொது மக்கள் இந்த விதமாக திண் டாடிக்கொண்டிருக்கிற இந்த நிலையில் இந்த திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை உடனடியாக இந்த சபையில் நிறைவேற்றி விடுவது என்பது பொது மக்களுடைய பல உரிமைகளையும் பாதிக்கக்கூடிய வகையில் இருக்குமே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதனால் அனுவலக அதிகாரிகள். ரிஜிஸ்ட்ரார் போன்றவர்கள் நினைத்த நேரத்தில் அவர்களுக்கு சாதகமாக உள்ள திருத்தத்தை வழிவகை செய்வதற்காக இது கொண்டு வரப்படுகிறதே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. கூட்டுறவு சங்கத் தில் 1,000 ரூபாய்கள் பங்குகள் இருக்கவேண்டும் என்றெல்லாம் சட்டங்கள் இருந்தால் அது மற்றவர்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. ஒரு மாவட்டத்தில் மூன்று, நான்கு சொஸைட்டிகள் இருந்தால் அதில் எது சக்தி பெற்றிருக்கிறதோ அதை மாத்திரம் ஊக்குவிப்பதற்கு வேண்டி மற்ற ஸொஸைட்டிகளை அழித்து விடுவதற் குள்ள அதிகாரம் ரெஜிஸ்ட்ராருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மேல் சாதாரண மக்களுக்கு சிவில் கோர்ட்டுக்குக்கூட போகமுடியாது என்ற இந்த சட்டத்தில் 5-வது கிளாஸ் 7-வது பகுதியில் கூறப்பட்டிருக் கிறது. அது மாத்திரமல்ல, ஒரு இடத்தில் காங்கிரஸ்காரர்களுக்கு எதிராக இருப்பவர்கள் ஸொஸைடி நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று வைத் துக் கொள்வோம். இவ்விதமாக காங்கிரசுக்கு மாறுபட்டவர்கள் நடத்தும் கூட்டுறவு சங்கத்தை அழிக்க வேண்டும் என்று தோன்றினால் ரெஜிஸ்ட்ரார் அந்த சங்கத்தின் பேரில் தங்களுடைய சட்ட திட்டங்கள்படி நடக்கவில்லை

20th December 1956] [Sri A. Ratnam]

என்று கூறி அதை அழித்துவிடுவதற்கும் இதில் வழியிருக்கிறது. அது மாத்திரமல்ல சட்ட திட்டங்களின்படி நடக்காதவர்களுக்கு 500 ரூபாய் அபராதமும், அல்லது 6 மாதம் கடுங்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று இருக்கக்கூடிய சட்டத்தை இந்த சபையில் கொண்டு வந்து ஐந்து நிமிஷத்தில் நிறைவேற்றுவதற்கு அனுமதி அளிப்பது பொது மக்களுக்கு அவதூறும், அவமானமும், கேடும், மோசமும், நாசமும் விளைவிப்பது என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே இப்போது இருக்கின்றபடி சட்டங்கள் இருந்தால் கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் தங்கள் மாமன்களுக்கும் மச்சான்களுக்கும்தான் உதவிகரமாக இருக்குமே தவிர வேறு ஒரு உபயோகமும் இல்லை. முதலியார்கள் என்றால் ஒரே முதலியார்மயமாக இருக்கிறது. புதுக் கோட்டை போன்ற பல இடங்களில் விவசாயிகள் என்று பேர் வைத்துக் கொண்டு பலர் அதில் பிரசிடென்டுகளாகவும் செக்ரடரிகளாகவும் இருந்து கொண்டு தங்களுடைய மாமன்களுக்கும் மச்சான்களுக்கும் கூட்டுறவு சங் கங்களிலிருந்தும் வேண்டிய கடன்களை கொடுத்து சர்க்காரை ஏமாற்றி, பொது மக்களை ஏமாற்றி, சர்க்கார் பணத்தை ஏப்பம் விட்டுக் கொண்டிருப் பதை நாம் அனுமதிக்க முடியாது. இன்று நடக்கின்ற பல கூட்டுறவு சங்கங்களிலும் விவசாயிகள் இருக்கிறார்களா? ஹரிஜனங்கள் இருக்கிறார் களா என்று பார்த்தால் அப்படியிருப்பதாக தெரியவில்லை. மேலும் அவர்களுக்கு சட்டப்படி கடன்கள் கொடுப்பதில்லை. ஏழை விவசாயிகள் கடன் கிடைக்காமல் இன்று தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். கேட் பதற்கு ஆள் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் பல பணக்காரர்களுக்கும் அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கும் சட்டத்தை மீறி கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. தென் ஆர்காடு மாவட்டத்தில் கரும்பு விவசாயிகள் தங்களுடைய கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடன் கிடைக்காமல் ஆலை முதலாளிகளிடம் கடன் வாங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இதனால் அவர்கள் பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். ஆகவே இதிலுள்ள சௌகரியங்களை எல்லோரும் அனுபவிப்பதற்கு சட்டம் தகுந்த முறையில் இருக்க வேண்டும். ஆகவே விவசாயிகளுக்கு ஏதோ சட்டம் செய்யப்போகிறோம் என்று சொல்லி அதிகாரிகள் தாங்கள் நினைத்த திருத்தத்தை கொண்டு வந்து சட்டமாக செய்துவிட்டால் அது நாட்டுக்கு பெரும் கேட்டைத்தான் விளைவிக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே இதை ஒத்தி வைத்து இதில் ஏழை மக்களுக்கு வேண்டிய பல திருத்தங்களையும் கொண்டு வந்து அதில் சேர்த்து அதன் பின்னால் நிறை வேற்றினால்தான் இந்த சட்டம் சரியான பயனை மக்களுக்கு அளிக்க உதவும். இதைத்தான் பொது மக்களும் விரும்புகிறார்கள். இதை சர்க்காரும் கவனிக்கும் என்று நம்புகிறேன். மேலும் பல காரியங்களை பேச வேண்டி யிருக்கிறது. அதற்கு இப்போது நேரமில்லை என்று நினைக்கிறேன். ஆகவே இந்த திருத்தங்களினால் பொது மக்களுக்கும் கூட்டுறவு ஸ்தாபனங் களுக்கும் கடன் பெறுகிறவர்களுக்கும் சில நன்மைகள் இருந்தாலும்கூட, சட்டதிட்டங்களில் சாதாரண மக்களுக்கு தண்டனைக்கும் சிறைக்கும் அனுப் பக்கூடிய நிபந்தனைகளிலிருந்து விடுபடுவதற்கு சிவில் கோர்ட்டுக்கு போவ தற்கு அவர்களுக்கு உரிமை அளிக்க கூடிய வகையில் ஒரு திருத்தம் கொண்டுவந்து இந்த சட்டத்தை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் இந்த சட்டத்தை இப்போது நிறைவேற்றுவதை மாற்றிவிட்டு ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த திருத்த மசோதாவை நான் வரவேற்கிறேன். அதோடு அதில் சில நிபந்தனைகளை மட்டும் வரவேற்க முடியாத நிலையில் இருக்கிறேன். ஏன் என்று கேட்டால் இதில் இருக்கிற பல பிரச்னைகளுக்கும் நன்றாக ஆலோசித்து விரிவான திருத்தங்கள் கொண்டுவந்து இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஏதோ பொது தேர்தல் வரப்போகிறது. அதற்கு முன்னால் இதை நிறை வேற்றவேண்டியது அவசியம் என்று சர்க்கார் நினைத்தால் அது தவறான தாகும் என்று சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கத்தின் கொள்கை திடீரென்று மாறப்போவதில்லை. ஆகவே இதில் வேண்டிய மாறுதல்களை தைரியமாககொண்டு வந்து நிறைவேற்ற முடியும். இனி இதைப்பற்றி

[Sri M. Kalyanasundaram] [20th December 1956

பேசி பயன் இல்லை. ஆனால் ஒரு திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதாவது இந்த கூட்டுறவு இயக்கத்தில் விவசாயிகளுடையவும் சதாரண மக்களுடையவும் பங்கு அதிகமாக இருக்க வேண்டும். அப்போதுதான் கிராமத்தில் இருக்கக்கூடிய மக்கள் இதனால் பயனடைய முடியும். ஆகவே இதில் மைனாரிட்டி மெஜாரிட்டி என்று பாராமல் ஜனநாயகம் நிலவக்கூடிய முறையில் பொது ஜனங்கள் அதிகமாக பங்கு எடுக்கக்கூடிய வகையில் இருக்கவேண்டும். திருத்தங்களைக் கொண்டு வரும்போது கிராமவாசிகள் அதை புரிந்துகொண்டு அதன்படி சரிவர நடந்து கொள்ளும் அளவில் திருத்தங்கள் கொண்டுவரவேண்டும். பல திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று விசாரணைக் கமிட்டியார் பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இந்த ஒரு திருத்தத்தை மட்டும் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு காரணம் என்ன என்பதுதான் எனக்குப் புரியவில்லை. கிராம நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு இந்த திருத்தம் மிகவும் அவசியமானது. அதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதையாவது ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமங்களில் கூட்டுறவு சொசைட்டிகள் சரிவர நடக்கவேண்டுமானால் அந்த சொசைட்டிகளில் கிராமவாசிகள் அதிகப்படியாக சேர்ந்து நன்மை அடைவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் இந்த திருத்தம் வரவேற்கக்கூடியதாக இருக்கும். கடன் துரிதமாகக் கிடைப்பதற்கும் அதிகக் கடன் வசதிகள் கிடைப்பதற்கும் திருத்தத்தைக் கொண்டுவந்தால் மட்டும் போதாது. இப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டுவரும்போது கிராமவாசிகள் சொசைட்டிகளில் அதிகப்படியாக சேருவதற்கு வேண்டிய வசதிகளை அளிக்கும்படியான திருத்தங்களைக் கொண்டுவந்தால் நன்மையாக இருக்கும். அப்படிப்பட்ட திருத்தம் கொண்டுவரவேண்டியதுதான் அவசியம். ராஜ்யத்தில் சுமார் பத்து லட்சம் கிராமங்களில் ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கூட்டுறவு சொசைட்டிகளில் சேர்ந்திருக்கக்கூடியவர்கள். அவர்களில் இப்பொழுது நாற்பது சத விகிதம் கூட சேரவில்லை. அந்த நிலைமையில்தான் இப்பொழுது கூட்டுறவு இயக்கம் நமது ராஜ்யத்தில் நடந்துகொண்டு வருகிறது. முக்கியமாக விசாரணை கமிட்டி ஒன்று கூறியிருக்கிறது. உப விதிகளில் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள். பஞ்சாயத்தார்கள் அனுமதித்தால் கிராமத்திலுள்ளவர்கள் அங்கத்தினர்களாக சேரலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களில் அநேகம் விவசாயிகள் கூட்டுறவு சொசைட்டிகளில் சேருவதற்கு தயாராக இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் விதிகள் அவர்கள் அப்படி சேர முடியாமல் இருக்கிறது. இந்த நிலைமையில் 100-க்கு 90 பேர்கள் கிராமங்களில் அங்கத்தினர்களாக சேர முடியாமல் இருக்கிறார்கள். இருபதாயிரம் கிராமங்களில் பத்தாயிரம் கிராம சொசைட்டிகள் இருக்கின்றன. அப்படி இருந்தும் போதிய அங்கத்தினர்கள் அதன் உள்ளே வர முடியாமல் இருக்கிறது. அதற்கு வேண்டிய திருத்தங்களைச் செய்தால் நன்மையாக இருக்கும். அதற்கு வேண்டிய திருத்தத்தை ஏன் கொண்டு வரவில்லை என்பது தெரியவில்லை. விசாரணை செய்த கமிட்டி சொல்லிய திருத்தங்களையாவது கொண்டுவந்திருக்கலாம். அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்.

• • • • •

"We think it is enough if provision is made for appeal to the Executive Committee of the Central Bank against refusal of admission and the Executive Committee may decide after giving an opportunity to the parties concerned . . . The very provision for such an appeal to the Executive Committee is likely to have a moral effect upon the Panchayat of the Society."

• • • •

இப்படிப்பட்ட திருத்தங்கள் வேண்டும் என்று அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். பல கிராமங்களில் இந்த சொசைட்டிகளின் நன்மைகளை அனுபவிக்க முடியாமல் கிராமவாசிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

20th December 1956] [Sri M. Kalyanasundaram]

அவர்களைச் சேர்ப்பதற்கு ஏன் சட்டம் கொண்டு வரவில்லை என்பதை மட்டும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மற்ற திருத்தங்களுக்காவது அவகாசம் வேண்டும் என்று சொல்லலாம். ஆகவே கிராமவாசிகளைச் சேர்த்துக்கொள்ளக்கூடிய திருத்தத்தையாவது இப்பொழுது கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விசாரணைக்கமிட்டி சொல்லியிருக்கும் அளவிலாவது திருத்தங்களை ஒத்துக்கொண்டால் போதுமானது. வேறு மாறுதல்கள் செய்யவேண்டும் என்று நான் சொல்லவில்லை.

அடுத்தபடியாக கூட்டுறவு இயக்கம் சரிவர நடைபெறவேண்டும் என்ற எண்ணம் சர்க்காருக்கு இருந்தால் அந்த இயக்கத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை இருக்கும்படியாக அந்த இயக்கம் இருக்கவேண்டும். இப்பொழுது நடைபெற்று வரும் கூட்டுறவு இயக்கத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை இருப்பதாகவே தெரியவில்லை. அதில் வேலை செய்யக்கூடிய அதிகாரிகளும் அந்த இலாகாவில் இருக்கக்கூடிய ஊழல்களும்தான் அதற்குக் காரணம். நிர்வாகம் செய்யும் ஊழல்களுடன் பொது ஜனப் பிரதிநிதிகள் செய்யும் ஊழல்களும் அதில் இருக்கின்றன. அங்குள்ள மானேஜ்மென்டார்களும் ஊழலாக நடந்துகொண்டு வருகிறார்கள். தலைவர்கள் காரியதரிசி முதலியவர்களுடைய ஊழல்களும்தான் அந்த இயக்கம் நன்றாக நடைபெறாமல் இருப்பதற்கும் ஜனங்களுக்கு அதில் நம்பிக்கை இல்லாமல் இருப்பதற்கும் காரணம். அதைப்பற்றி இந்த சபையின் மூலமாகவும் கடிதங்கள் மூலமாகவும் சர்க்காருக்கு அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவைகளுக்கு இதுவரையிலும் சர்க்கார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. நடவடிக்கை எடுப்பதில் சர்க்கார் வெகு வெகு மந்தமாகத்தான் இருக்கிறார்கள். உதாரணமாக சேலம் கூட்டுறவு மார்கெட்டிங் சொசைட்டி சம்பந்தமாக ஒரு வருஷத்திற்கு மேலாக கிளர்ச்சி செய்து விசாரணை நடந்தும் எந்த முடிவும் இதுவரையிலும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அனாவசியமான காலதாமதம் ஏற்படுகிறது. எந்த முடிவிற்கு சர்க்கார் வந்திருக்கிறார்கள் என்பதும் இன்னும் தெரியவில்லை. இவ்வளவு காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்னவென்பதும் தெரியவில்லை. இவ்விதம் காலதாமதம் ஆவதால் அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. கோஷ்டிச் சண்டையும் கட்சி சண்டையும்தான் ஏற்படுகிறது. அநேகமாக காங்கிரஸ்காரர்கள்தான் அதிகாரத்தில் இருப்பதாலும் அங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதாலும் சர்க்கார் அவர்களுடைய சார்பில் இருக்கிறார்கள் என்றும் அதனால்தான் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள் என்றும் ஜனங்கள் நினைத்துக்கொண்டு இருப்பதால் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதனால் சர்க்கார் உடனடியாக முடிவு சொல்லவேண்டும். எதிர்க் கட்சிக்காரர்கள் இதை பயன்படுத்திக்கொண்டு சண்டை நடத்திக்கொண்டிருப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது. இது என்னுடைய சொந்த அபிப்பிராயம். கூட்டுறவு இயக்கத்தை நல்லபடியாக நடத்தவேண்டிய பொறுப்பு கனம் மந்திரி அவர்களுக்கும் இருக்கிறது. அந்த இலாகாவில் இருக்கும் அதிகாரிகளுக்கும் இருக்கிறது. புகார்கள் வந்தவுடனேயே அவைகளை காலாகாலத்தில் விசாரணை செய்து ஒரு முடிவு சொல்லவேண்டும். அதற்கு வேண்டிய ஒரு ஸ்பெஷல் ஆபீசரையும் நியமித்தால் நல்லது என்று நினைக்கிறேன். அப்பொழுதுதான் கூட்டுறவு இயக்கத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.

பால் சப்ளை யூனியன் சம்பந்தமாக பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அந்த விஷயம் சம்பந்தமாக புகார்கள் வந்து ஒரு வருஷமாகியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. பல கிளை சங்கங்களின்பேரில் பல புகார்கள் அனுப்பப்படுகின்றன. நிர்வாகத்தைப்பற்றி புகார்கள் அனுப்பப்படுகின்றன. அவைகளையெல்லாம் உடனடியாக விசாரணை செய்து முடிவு சொல்லவேண்டும். புகார்கள் வந்தால் அவைகளைப்பற்றி விசாரிக்காமல் சர்க்கார் மந்தமாக இருக்கிறார்கள். இந்த நிலைமையில் கூட்டுறவு இயக்கத்தில் ஜனங்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட முடியும் என்பதைப் பார்க்கவேண்டும். என்னுடைய யோசனை என்னவென்றால் புகார்கள் வந்தால் அவைகளை உடனடியாக விசாரிக்க ஒரு

[Sri M. Kalyanasundaram] [20th December 1956

நிரந்தரமான டிரிபுனல் இருக்கவேண்டும். அப்படி விசாரித்து புகார் வந்தவுடன் யார் பேரில் குற்றம் இருக்கிறது என்று கண்டுபிடித்து குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை விதிக்கவேண்டும். அவர்களை வேலையை விட்டு தள்ளப்படுவதோடுகூட தண்டனையும் விதிக்கவேண்டும். அப்பொழுது தான் கூட்டுறவு இயக்கத்தின் அந்தஸ்து உயரும். விசாரணை குழு முடிவு சொன்னவுடன் அதன்பேரில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இன்று ஒரு ரிஜிஸ்தரார் ஆப் கோவபரேடிவ் சொஸைட்டி இருக்கிறார். அவர் சென்னையில் இருக்கிறார். அவருக்கு உதவியாக ஜாயின்ட் ரிஜிஸ்தரார் இருக்கிறார். இவர்கள் சென்னையில் இருப்பதால்தான் எதாகிலும் புகார்கள் வந்தால் அதைப்பற்றி உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கும் மற்றும் கடிதங்கள் முதலியவைகள் வந்தால் அவைகளுக்கு பதில் எழுதுவதற்கும் கால தாமதம் ஏற்படுகிறது. இப்பொழுது பல சொஸைட்டிகள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. சங்கங்கள் வளர்ந்து கொண்டே வருகின்றன. தொழிலாளர்கள் சொஸைட்டி, விவசாயிகள் சொஸைட்டி, இப்படி பல சங்கங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. அவற்றிலிருந்தெல்லாம் அதிகாரிகளுக்கு அநேகம் கடிதங்கள் வருகின்றன. அவைகளுக்கெல்லாம் பதில் எழுதுவதென்றால் அவர்களால் சென்னையிலிருந்துகொண்டு பதில் எழுத முடியவில்லை. இப்படி அநேகம் சொஸைட்டிகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தால் அவைகளையெல்லாம் இங்கேயே இருந்துகொண்டு அவைகளை கண்காணிக்கவேண்டும் என்றால் ஒரு ரிஜிஸ்தாரருக்கு பதில் சொல்ல எவ்வளவு குமாஸ்தாக்கள் வேண்டியிருக்கும். அதனால் போதிய பலன் அளிக்கும் என்று நாம் எதிர் பார்க்கமுடியாது. அதனால் நான் என்ன சொல்லுகிறேன் என்றால் ஐந்தாறு ஜில்லாக்களை ஒன்று சேர்த்து திருச்சி போன்ற இடங்களில் ஒருவரை நியமித்து அவருக்கு பூரா அதிகாரத்தையும் கொடுத்து நியமித்தால் அவர்கள் உடனடியாக வரும் கடிதங்களுக்கும் புகார்களுக்கும் பதில் சொல்லமுடியும். வேலைகளும் துரிதமாக நடைபெறும். புகார்கள் வந்தால் அவைகளை விசாரணை கமிட்டிக்கு அனுப்பி வைத்து உடனுக்குடன் பைசல் செய்வதற்கு அனுகூலமாகவும் இருக்கும். இப்பொழுது சென்னை வரவேண்டியதாக இருக்கிறது. அதுவும் குறையும். நிர்வாகத்தில் திறமையும் கொஞ்சம் அதிகரிக்கும். இந்த விஷயத்தையும் சர்க்கார் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊழல்களை நிவர்த்தி செய்யவேண்டுமானால் சர்க்கார் அதற்குவேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும். ஆனால் இப்பொழுது சர்க்கார் நடவடிக்கை எடுப்பதில் மிகவும் மந்தமாக இருப்பதாகத்தான் தெரிய வருகிறது. சேலம் மார்க்கெட்டிங் சொஸைட்டி சம்பந்தமாக புகார் வந்தவுடன் அங்குள்ள அதிகாரியின் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அந்த அதிகாரியை அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்கு மாற்றிவிட்டார்கள். அவர் பேரில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை பரிசீலனை செய்யவில்லை. மணப்பாரை கூட்டுறவு சொஸைட்டி சம்பந்தமான புகார் வந்தது. அங்குள்ள அதிகாரி எவ்வளவோ நியாயமற்ற குற்றங்களை செய்திருக்கிறார். அவருக்கு எந்த விதமான தண்டனையும் கொடுக்கலாம். கொடுத்தாலும் நியாயம்தான். இந்த சொஸைட்டி சம்பந்தப்பட்ட டிபுடி ரிஜிஸ்தரார்பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவருக்கு உடந்தையாக இருந்ததாகத் தான் தெரியவந்தது.

அடுத்தபடியாக திருச்சியில் எக்ஸ் சர்வீஸ்மென் கூட்டுறவு சொஸைட்டி நிர்வாகத்தில் சில ஊழல்கள் இருந்தன என்று புகார் செய்யப்பட்டது. அங்கு பல ஒழுங்கீனமாக காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்று புகார் கொண்டு வரப்பட்டது. அதைப்பற்றி அங்குள்ள முதல் க்ளாஸ் மாஜிஸ்திரேட் விசாரணை நடத்தினார். குற்றத்தைச் செய்தவர் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால் அவருக்குக் கொடுத்த தண்டனை என்னவென்றால் அந்த அதிகாரியை அந்த இடத்திலிருந்து மாற்றி அவரை

20th December 1956] [Sri M. Kalyanasundaram]

ஜாயின்ட் ரிஜிஸ்தரராக நியமித்தார்கள். அவர் குற்றம் செய்ததற்கு அதுதான் பலன்! இப்படி நிலைமை இருந்தால் சொஸைட்டிகளுக்கு எப்படி பாதுகாப்பு ஏற்படும், ஜனங்களுக்கு எப்படி சங்கங்களின்பேரில் நம்பிக்கை ஏற்படும் என்பதை அறியவேண்டும். இந்த நிலைமையில்தான் ஒரு பக்கத்தில் கோஷ்டி பூசல்கள் கட்சி பூசல்கள் முதலியவைகள் நடந்து வருகிறது. இதற்கு சர்க்கார் இடம் கொடுக்கக்கூடாது. அதற்குத் தகுந்த முறையில் சட்டங்களை திருத்தி அமைக்கவேண்டும். திருத்தங்களை கொண்டு வந்து அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். கடன் வசதி அளிப்பதற்கு மட்டும் சட்டத்தைக் கொண்டுவருவதில் பிரயோசனம் இல்லை. துரிதமாக கடன்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு சங்கங்களின் பேரில் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படும் அளவில் திருத்தங்கள் கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விவசாயிகளுக்கு இன்னும் அதிகப்படியான பாதுகாப்பு அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்குவேண்டிய உத்தரவாதமும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிலம் இருக்கிறவர்களுக்குத்தான் கடன் கொடுப்பது என்ற நிலைமை 11-15 a.m.
இருக்கக்கூடாது. குத்தகை விவசாயிகள் விஷயத்திற்கூட நிலத்தின்மீது ஓரளவுக்கு சாகுபடி செய்வதற்கு உள்ள உரிமை பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்கு ஆபத்து ஒன்றும் ஏற்படாது. மேலும் மகசூலிலும் 60 சதவிகிதம் உரிமை இருக்கிறது. அதை நம்பி அவர்களுக்கு கடன் கொடுக்கமுடியும். துரிதமாக அவர்களுக்கு கடன் கொடுக்கவேண்டும். சர்க்கார் இது விஷயத்தில் நடவடிக்கை எடுத்தால்தான், பல கிராமச் சங்கங்களை இணைப்பதன் நோக்கம் நிறைவேறும். இல்லாவிட்டால் ஒரே கிராமத்தில் சுயநலமிகள் இதுவரை கொள்ளை அடித்தது போல், இன்னும் நாலைந்து கிராமங்களைச் சேர்த்து கொள்ளையடிக்கக்கூடிய நிலைமைதான் ஏற்படும், கோஷ்டிச் சண்டைகள் வலுக்கும். ஆகவே தகுந்த திருத்தங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு அங்கத்தினர் (ஸ்ரீ எ. ரத்னம்) அவர்களைத்தவிர இந்த விவாதத்தில் கலந்துகொண்ட எல்லா அங்கத்தினர்களும் இந்தத் திருத்த மசோதாவை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த விஷயத்திலும் கனம் அங்கத்தினர் ஸ்ரீ ரத்னத்திற்கு ஒரே அபிப்பிராயம்தான். வேறு அபிப்பிராயத்தை நான் எதிர் பார்த்ததில்லை. இந்த திருத்தங்களினால் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளை கனம் அங்கத்தினர் உணரவில்லை. அவர்களுக்கு ஏதோ அவர்கள் விரும்புகிறபடி அதிகாரிகள் கடன் கொடுக்க ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் அதிகாரிகள் மீது ஆத்திரம் ஏற்படலாம். ஆனால் அதிகாரிகளும் தங்கள் இஷ்டம்போல் நடந்துகொள்வதோ அல்லது வேறு யாருடைய பேச்சையாவது கேட்டுக்கொண்டு கண்ணை மூடிக் கொண்டு கடன் கொடுப்பதோ தவறு, அதிகாரிகளின் ஊழல்களுக்கோ கூட்டுறவு சங்கத்தில் இருக்கிற அங்கத்தினர்களின் ஊழல்களுக்கோ, கொஞ்சம்கூட இடம் கொடுக்கக்கூடாது. அதை அடியோடு தவிர்க்கவேண்டும் என்பதுதான் என்னுடைய அவா. ஊழல்கள் இருப்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஊழல்களை மிகைப்படுத்திச் சொல்லுவதும் நல்லதல்ல. ஊழல்கள் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. பொதுமக்களின் பொறுப்பும் கூட. கூட்டுறவு இயக்கத்தை நடத்துகிறவருக்கும் இதில் பொறுப்புண்டு. அவர்களுடைய ஒத்துழைப்பை இந்த விஷயத்தில் கோருகிறேன். அதிகாரிகள் யாராயிருந்தாலும், அவர்களிடத்தில் ஊழல்கள் காணப்பட்டால் அல்லது தவருக நடந்து கொண்டால் அவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். அவர்களும் கண்டிப்பாக நடந்துகொள்ளவேண்டும் என்றுதான் இப்பொழுது வற்புறுத்தப்படுகிறது. கூட்டுறவு சங்கத்தில் இருக்கிற

[Sri M. Bhaktavatsalam] [20th December 1956

உத்தியோகப்பற்றற்றவர்களின் ஊழல்களைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். அவர்களை நீக்கவேண்டும். அது அதிகாரிகளுடைய பொறுப்பு. அதிகாரிகள் தங்களிஷ்டம்போல் நடந்துகொள்கிறார்கள் என்று சொல்லப் படுகிறது. யார் விஷயத்தில் அதிகாரிகள் அவர்கள் இஷ்டம்போல் நடக்க வில்லையோ, அப்பேர்ப்பட்ட அதிகாரிகள் மீது சுலபமாக குறை கூறிவிட லாம். ஆனால், அதிகாரிகள் நியாயமாகவும், இந்த இயக்கம் மேன்மேலும் ஓங்கி வளர்வதற்குரிய வகையிலேயே நடந்துகொள்ளவேண்டும் என்று தான் எதிர்பார்க்கப்படுகிறார்கள். தவருக யார் நடந்தாலும் அவர்கள் மீது அரசாங்கம் கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

சில இடங்களில் நடைபெற்ற ஊழல்களைப்பற்றியும், அப்புகார்களை விசா ரணை செய்வதில் தாமதம் ஏற்படுவதைப்பற்றியும் எதிர்கட்சி உபதலைவர் குறிப்பிட்டார். என்னைப்பொறுத்தமட்டிலும், அரசாங்கத்தைப் பொறுத்த மட்டிலும், இந்த புகார்கள் உத்தியோகப் பற்றற்றவர்களை பற்றிய தாயினும் சரி, உத்தியோகஸ்தர்களைப்பற்றியதாயினும் சரி, காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்தவர்களைபற்றியதாயினும் சரி அல்லது காங்கிரஸ் அல்லாத இதரக்கட்சியை சேர்ந்தவர்களைப்பற்றியதாயினும் சரி, வீண் தாமதம் ஏற்படாது.

இந்த இயக்கம் ஒரு புனிதமான இயக்கம். ஆகவே இந்த இயக்கத்தில் எத்தகைய ஊழல்களுக்கும் இடம் இருக்கக்கூடாது. நான் முன்பு சொல்லியதுபோல் யாராயிருந்தாலும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும். ஆனால் நன்கு பரிசீலனை செய்தபிறகுதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அவசரப்பட்டு நடவடிக்கை எடுப்பது நீதி வழங்குவது ஆகாது. அப்படி அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டால், கோர்ட்டுகளுக்கு போனால் அவை பாதிக்கப்படும் என்பதை அங்கத்தினர்கள் உணரவேண்டும். கனம் எதிர்கட்சி உபதலைவர் குறிப்பிட்ட ஒன்றிரண்டு விஷயங்களில் தவிர்க்ககூடிய தாமதம் ஒன்றுமில்லை என்று நான் உறுதி கூறமுடியும். இந்தத் திருத்த மசோதா குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றியது. ஏன் இன்னும் மற்ற சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளபடவில்லை என்று பல அங்கத்தினர்கள் கேட்டார்கள். கூட்டுறவு கமிட்டியின் சில சிபாரிசுகளின்படி இன்னும் பல திருத்தங்கள் இச்சட்டத்திற்கு கொண்டு வரவேண்டியிருக்கின்றன. இதையெல்லாம் நன்கு பரிசீலனை செய்து சிறந்த முறையில் கூட்டுறவு சட்டத்தை மாற்றியமைக்கவேண்டும், அதற்குவேண்டிய இயந்திரத்தை மாற்றியமைப்பதற்காக, அதை பரிசீலனைசெய்ய அரசாங்கம் ஒரு கமிட்டி நியமித்தது. அந்த கமிட்டியிலுள்ள அங்கத்தினர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு விஷயங்களை பரிசீலனை செய்து, ஒரு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அந்த அறிக்கையைப்பற்றி எதிர்கட்சி உபதலைவர் குறிப்பிட்டார். அந்த அறிக்கையின் மீது அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. **Comprehensive**-ஆக ஒரு மசோதா தயாரிக்கப்பட்டு வருகிறது. எல்லா விஷயங்களையும் பரிசீலித்து சட்டம் தயாரிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. எவ்வளவு துரிதமாக மசோதாவை தயாரிக்க ஏற்பாடு செய்தாலும் இன்னும் சில மாதங்கள் ஆகும். அதுவரையில் நாம் பொறுத்திருப்பது சரியல்ல என்று கருதியே அவசரமாக விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டிய நோக்கத்துடன் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறேன். ஆனால் விரிவான மசோதா எவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவரமுடியுமோ அதற்குள் கொண்டுவரப்படும். அம்மாதிரி ஒரு மசோதா கொண்டுவரும்போது, ஒரு பொறுக்கு கமிட்டியை நியமித்து கனம் அங்கத்தினர்கள் நீண்ட கால அனுபவத்தின் காரணமாக வெளியிட்ட விஷயங்களையும் கருத்தில்கொண்டு சிறந்த வகையில் சட்டத்தை இயற்றலாம். ஆனால் இது விவசாயிகளுக்கு கடன் வசதியை பெருக்கக் கூடியதோர் மசோதா. இப்பொழுது ஒரு சிலர்தான் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கடன் வசதி பெறுகிறார்கள். மற்றவர்கள், **All-India Rural Credit Survey Committee** எடுத்துக்காட்டியதுபோல் லேவாதேவிக் காரரிடம் சிக்கிக்கொள்ளுகிறார்கள். இதைத் தவிர்ப்பதுதான் அரசாங்கத்தின் முக்கிய நோக்கம். அதை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. கிராமத்திலுள்ள எல்லா குடும்பங்களும்

20th December 1956] [Sri M. Bhaktavatsalam.]

ஏதாவது ஒரு கூட்டுறவு சங்கத்தில் சேரவேண்டும் என்பதுதான் லட்சியம். இப்பொழுது ஒரு சிலர்தான் சேர்ந்திருக்கிறார்கள் மற்றவர் களைச் சேர்த்துக்கொள்வதில் இருக்கக்கூடிய கஷ்டங்களைப்பற்றி எதிர்க்கட்சி உபதலைவர் குறிப்பிட்டார். இதையெல்லாம் அகற்றவேண்டும். இவற்றை யெல்லாம் பரிசீலித்து என்னென்ன திருத்தம் செய்யவேண்டுமோ அதைச் செய்வோம். கனம் அங்கத்தினர்களுடைய யோசனைகளையும் எடுத்துக்கொள்வோம். இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முடிவதற்குள் குறைந்த பட்சம் எல்லா கிராமங்களிலும் 100-க்கு 50 பேராவது கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்திருக்கவேண்டும் என்பது எங்களுடைய லட்சியம். கூட் டுறவு மூலம் அவர்களுக்கு போதிய அளவு கடன் வசதி கிடைக்கச் செய்ய வேண்டும். கடன் வசதிகளைப்பெருக்குவதற்கு எதை எதை அத்தியா வசியமாக செய்யவேண்டுமோ அவற்றைச் செய்வதற்கு இந்த மசோதா அனுமதியளிக்கிறது. ரூ. 1,000 **limit** தான் குறிப்பிட்டிருக்கிறது. அதற்கு மேலிருந்தால் என்ன ஆவது என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ **P. S. Krishnaswamy Ayyangar** கேட்டார் வேறு வாரிசு இருந்தால் பங்கு தொகை திரும்பி வருமா வராதா என்று கேட்டார்கள். ஆனால் 11-25
இந்தச் சட்டத்தில் இடம் இருக்கிறது. இது சில சந்தர்ப்பங்களில் ரிஜிஸ்ட் a.m.
ரார் அவர்களுக்கு பிரத்யேக விதி விலக்கு அளிக்க வசதி தருகிறது. அம்மாதிரி ஷரா அதிகமாகச் செய்யவேண்டுமென்றாலும் அதற்கும் வசதி இருக்கிறது.

கனம் அங்கத்தினர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்ட விஷ யங்களை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு பலதுறைகளில் கடன் வாங் கப்பட்டு வருகிறது. விவசாய பாங்கின் மூலமாகவும், விஸ்தரிப்புத் திட்டத் தின் மூலமாகவும், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகவும் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறார்கள், இன்னும் எவ்வளவு வாங்கக் கூடும் என்பது ஒன்றும் தெரியாமல் போகிறது. இதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே இது விஷயமாக அவர் சொன்ன யோசனையை நான்வரவேற் கிறேன். எல்லாக் கடன்களையும் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாகவே கொடுக்கச் செய்வது ஒரு சிறந்த ஏற்பாடு என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். அவ்விஷயத்தில் நானும் கவனம் செலுத்துகிறேன். இன்னும் சிலர் கடன் கொடுப்பதில் இருக்கக் கூடிய தாமதங்களைக் குறிப்பிட்டார்கள். அந்த தாமதங்களை அகற்ற வேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் அவா. கூடியவரை அகற்றப் பார்க்கிறோம். இதற்கு மேலும் தாமதம் ஏற்பட்டால் அதை நிவர்த்திப்பதற்கு என்ன வழி என்பதை இது சம்பந்தமாக பெரிய மசோதா வரும்போது கவனிக்கலாம். முதலில் பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. டி. ராஜு அவர்கள் சில விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம் எவ்வளவு தூரம் குத்தகைதாரர்களுக்குப் பயன்படும் என்று கேட்டார்கள். அவர்களுக்குப் பயிர்கள்மேலும் கூட கடன் கொடுக்கலாம். இம்மாதிரி கடன் சுலப மாகக் கிடைக்கச் செய்வதற்காகத்தான் இந்தச் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே தான் கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் இதை ஆதரிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்வதுடன் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1956, be taken into consideration at once."

The motion was put and carried, and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 3

DEPUTY SPEAKER: The motion is—

"That clause 3 do stand part of the Bill."

[20th December 1956

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR : Sir, I move the following amendment :—

" *For* item (i) of the proviso, lines 19 and 20 on page 2, *substitute* the following :—

' (i) a registered society shall not be a member of another society whose liability is unlimited; and.' "

SRI A. RATNAM : Sir, I second it.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :—

" *Add* the following as sub-section 4 (3), to clause 3 :—

' (3) All complaints against officials of the Co-operative Department and office-bearers of registered societies shall be enquired into by a Tribunal to be constituted and functioned in the prescribed manner.' "

SRI K. T. RAJU : Sir, I second it.

DEPUTY SPEAKER : Now clause 3 and amendments are before the House for discussion.

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுதுள்ள சட்டத்தின்படி வாசகம் வருமாறு :—

' Provided that unless the State Government by general or special order otherwise directs, the liability of a Society of which a member is a registered society shall be limited.'

இப்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள திருத்த மசோதாவின்படி வாசகம் என்னவென்றால்,

' Provided that the liability of a society of which a registered society, is a member shall be limited.'

சர்க்கார் கொண்டுவந்திருக்கக் கூடிய திருத்தத்தின்படி, ரிஜிஸ்டரான சொஸைடி மெம்பராக இருக்க கூடிய சொஸைடியானது லிமிடெட் லயபிலிடி உள்ள சொஸைடியாக இருக்கவேண்டும். அதாவது ஏற்கெனவே ஒரு அன்லிமிடெட் லயபிலிடி உள்ள சொஸைடி மெம்பராக இருந்தாலும், அது அவ்விதம் மெம்பராக இனியும் தொடர்ந்து இருக்க முடியாது. அவ்விதம் இருக்கவேண்டுமானால் அதை மெம்பராகக் கொண்ட சொஸைடி ஒரு லிமிடெட் லயபிலிடி உள்ள சொஸைட்டியாக மாற்றப்படவேண்டும். ஆனால் என்னுடைய திருத்தத்தின் பிரகாரம் ஒரு ரிஜிஸ்டரான சொஸைடி, அன்லிமிடெட் லயபிலிடி உள்ள வேறு ஒரு சொஸைட்டியின் மெம்பராக இருக்க முடியாது. இந்த அன்லிமிடெட் லயபிலிடி உள்ள சொஸைடி அப்படியே இருக்கும். ஆனால் மெம்பராயிருக்கும் ரிஜிஸ்டரான சொஸைடி மாத்திரம் அந்த அன்லிமிடெட் லயபிலிடி உள்ள சொஸைடியிலிருந்து விலகிக் கொள்ளவேண்டும். சர்க்கார் திருத்தத்தின் பிரகாரம் ஒரு அன்லிமிடெட் லயபிலிடி உள்ள சொஸைட்டி ஒரு லிமிடெட் லயபிலிடி உள்ள சொஸைடியாக மாற்றப்படுவதைக் காட்டிலும் என்னுடைய திருத்தத்தின் பிரகாரம் அந்த அன்லிமிடெட் லயபிலிடி உள்ள சொஸைடியோடு

20th December 1956] [Sri P. S. Krishnaswamy Ayyangar]

மெம்பராக இருக்கும் ரிஜிஸ்டர்ட் சொஸைடி அந்த அன்லிமிடெட் லயபிலிடி உள்ள சொஸைடியிலிருந்து விலக்கிவிடுவது சுலபமானது. அதிகமான பேரை பாதிக்காது. ஆகையால் நான் என்னுடைய திருத்தத்தைப் பிரேரிக்கிறேன்.

Sir, my amendment says that a registered society shall not be a member of another society whose liability is unlimited. Therefore, if a registered society is already a member of a society with unlimited liability it will cease to be a member of that society. The amendment proposed by the Government is as follows :—

' Provided that—

(i) the liability of a society of which a registered society is a member shall be limited ; and '

Suppose, a society with unlimited liability has as one of its members a registered society with unlimited liability. Then that society, according to the amendment proposed by the Government, will have to convert itself into a society with limited liability. Instead of that society with unlimited liability converting itself into a society with limited liability, it is easier to ask a registered society which is a member of that society to cease to be a member of that society. In that way alone, the smallest number of people would be affected. It is for that reason, Sir, I have proposed my amendment.

*SRI C. KANDASAMY : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை ஆதரித்து சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். உடனடியாக விரிவானதொரு சட்டம் ருக்க திருத்தத்துடன் கொண்டுவருவதற்காக சர்க்கார் ஏற்பாடு செய்கிறார்கள். அது வரும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். கனம் ஸ்ரீ கல்யாணசுந்தரம் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தினுடைய முக்கியமான அம்சம் என்னவென்றால் கூட்டுறவு இலாக்காக்களில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் மீது புகார் கொண்டு வந்தால் அதை விசாரிப்பதற்கு ஒரு ட்ரிபுனல் அமைக்க வேண்டும் என்பதுதான். நாம் நடை முறையில் பார்க்கும்போது இந்தக் கூட்டுறவு சங்கங்கள் சரிவர நடத்தப்படாமல் அங்கும் அதிகாரிகள் ஆயிரக் கணக்கில் மோசடி செய்திருப்பதை நாம் பல ஆண்டுகளாக பார்த்துக் கொண்டு வருகிறோம். அதுவும் கிராமப் புறங்களில் உள்ள கோவாபரேடிவ் சொஸைடிகள் சில இயங்குவதே கிடையாது. அந்த சொஸைடியில் வேலை பார்க்கும் ஊழியர்கள் கூட்டுறவு சங்கங்களை சரியாக நடத்துவது கிடையாது. சரிவர வேலை பார்க்காமல் பணத்தை மோசம் செய்வதிலே இருக்கிறார்கள். இம்மாதிரி அவர்களுடைய நடவடிக்கைகளை சரியாக கண்காணிப்பதற்கு கூட்டுறவு இலாக்காக்களில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் திறம்பட வேலை செய்வது கிடையாது. சில சமயத்தில் இவர்களே அவர்களோடு சேர்ந்து மோசடி செய்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் மீது ஜனங்கள் புகார் செய்தால் அதை விசாரிப்பதற்கு கட்டாயம் ஒரு டிரிபுனல் வேண்டும். அம்மாதிரி ஒரு டிரிபுனல் அமைக்காவிட்டால் இந்த கூட்டுறவு இலாகாவில் ஊழல்கள் இருந்து கொண்டுதான் இருக்கும். அந்த கண்ணோட்டத்தோடு நாம் இந்த பிரச்னையை அணுகினால் இம்மாதிரி ஊழல்களை தடுக்க ஒரு டிரிபுனல் அமைக்க வேண்டுவது மிகவும் அத்தியாவசியம். ஆதலால் இந்த திருத்தத்தை கனம் மந்திரி அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. VINAYAKAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன்.

[Sri K. Vinayakam] [20th December 1956

கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டில் இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் எல்லோருமே கெட்டவர்கள் என்று சொல்லிவிடமுடியாது. அதில் நல்லவர்களும் இருக்கிறார்கள். ஒரு சிலர் தான் தவறு செய்வார்கள். அவ்வாறு தவறு செய்கிறவர்கள் மீது புகார் வந்தால் அதை விசாரணை செய்வதற்கு ஒரு **Independent Tribunal** அமைக்கவேண்டும்.

DEPUTY SPEAKER: There is already a Tribunal to enquire into the conduct of officials if they go wrong.

SRI K. VINAYAKAM: That Tribunal is intended to go into the misconduct of the officials belonging to all Departments in the entire State. I am now referring to the misconduct of officials in the co-operative department in particular. I want an independent tribunal apart from other tribunals.

உதாரணமாக சென்னையிலே பால் சப்ளை செய்யும் கோவாபரேடிவ் மில்க் சப்ளை யூனியன் சென்னை வாசிகளுக்கு பால் விநியோகித்து வருகிறது. அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பால் சென்னையில் பல கிராமங்களிலிருந்து வருகிறது. அந்தப் பாலை வாங்கும்போது கோவாபரேடிவ் மில்க் சப்ளை யூனியன் அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களிடம் இருந்துதான் பால் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கு வேண்டாதவர்களிடத்தில் "**According to the standard**" இல்லை என்று சொல்லி வாங்குவதில்லை. இதில் பால் சப்ளை யூனியன் அதிகாரிகள் பாரபட்சம் காட்டுகிறார்கள். இதனால் அநேக பால்காரர்கள் தங்கள் பாலை விற்பதற்கு முடியாமல் நஷ்டத்திற்குள்ளாகிறார்கள். இந்த விஷயத்தை நான் அப்பொழுது இருந்த கனம் மந்திரி அவர்களிடம் சொன்னேன். அவ்வாறு நஷ்டம் அடைந்த பால்காரர்களிடம் இருந்து சர்க்காருக்கு டெபுடேஷனும் அனுப்பப்பட்டது. கூட்டுறவு இலாகாவுக்கு பெட்டிஷனும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இவ்வாறு புகார் செய்தும் அந்த யூனியன் அதிகாரிகள் மீது நாளது வரையில் ஒரு விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காரணம் என்னவென்றால், கூட்டுறவு இலாகாவில் உள்ள உத்தியோகஸ்தர்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பயப்படுகிறார்கள். ஏனென்றால் அவ்வாறு செய்வதால் அவர்களுக்கு புரமோஷன் இல்லாமல் போய்விடும் என்று பயப்படுகிறார்கள். சர்க்கார் இந்தப் புகாரை விசாரிக்கட்டுமே நாம் ஏன் இதில் போய் கெட்ட பெயரை சம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்று சும்மா இருந்து விடுகிறார்கள். தவிர இந்தக் கடன் கொடுக்கும் கூட்டுறவு சங்கங்களிலும் கூட இம்மாதிரி ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. ஒரு இடத்தில் கடன் கொடுக்கும் சங்கம் இருக்கும், இன்னொரு சங்கத்தை அதில் புகுத்துகிறார்கள். இம்மாதிரி ஊழல்களைத் தடுப்பதற்கு இந்தத் திருத்தம் ஓரளவு உதவியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆதலால் இவைகளையெல்லாம் விசாரிப்பதற்கு ஒரு **Independant Tribunal** ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI V. BALAKRISHNAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நண்பர் கல்யாணசுந்திரம் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த திருத்தத்தை முற்றிலும் நான் ஆதரிக்கிறேன். ஜனவரம் கோவாபரேடிவ் பால் சப்ளை யூனியன் ஸ்தாபிக்கப்பட்ட பல ஆண்டுகள் ஆகியும், சென்ற 5, 6 ஆண்டுகளாக தாய் சொஸைட்டிக்கும், பிள்ளை சொஸைட்டிக்கும் மல் யுத்தம் நடந்துக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றி கீழே இருப்பவர்கள் என்ன மனுச்செய்துக்கொண்டாலும், மேலே இருப்பவர்கள் ஒன்றும் கவனிப்பதில்லை.

அந்த கோவாபரேடிவ் யூனியன் மூலம் ஒரு படி பாலை 12 அணாவுக்கு வாங்கி 1¼ ரூபாய்க்கு விற்கிறார்கள். இம்மாதிரியாக ஏற்பட்ட உபரி லாபத்தை சரியான படி எல்லோருக்கும் பிரித்துக்கொடுப்பதில்லை. வைத்துக்கொள்ளுகிறார்கள். இம்மாதிரியாக ஏற்பட்ட லாபத்தைக் கொண்டு அந்த பால் சப்ளை யூனியன் தலைவரும், காரியதரிசியும் அலகாபாத்துக்கு யாத்திரை செய்துவிட்டு கூட்டுறவு

20th December 1956] [Sri V. Balakrishnan]

யூனியன் கணக்கு புஸ்தகத்தில் அந்தக் கணக்கை வைத்திருக்கிறார்கள். இதை கூட்டுறவு இலாகாவிடம் தெரிவித்தால் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார்கள். டெபுடி ரிஜிஸ்ட்ரார் ஒரு கட்சியில் சேர்ந்துக்கொண்டு, மற்ற சொஸைட்டிகளை கஷ்டத்திற்குள்ளாக்குகிறார்கள். இம்மாதிரியான ஊழல்களை நாணயம் உள்ளவர்கள், இந்த சொஸைடியை பரப்புவதற்காக சிரத்தை கொண்டவர்கள் இவைகளை எடுத்துச் சொல்ல அஞ்சுகிறார்கள். ஏனென்றால் இந்த விஷயத்தில் நுழைந்தால் என்ன ஆகுமோ என்று பயப்படுகிறார்கள். மந்திரி அவர்கள் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையைப்பற்றி அழகாகச் சொன்னார்கள். அதை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். அவர் சொல்வதுபோல் காரியாம்சத்தில் உடனடியாக நடத்திக் காட்டி கூட்டுறவு இயக்கத்தை நல்ல முறையில் வளர்க்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM: நான் கொண்டுவந்திருக்கக்கூடிய 11-45
திருத்தத்தின் நோக்கம் சில ஊழல்களைப்பற்றி சர்க்காரின் கவனத்துக்குக் a.m.
கொண்டுவரவேண்டுமென்பது மட்டுமல்ல. உருப்படியான சில யோசனைகளையும் சொல்லவேண்டுமென்பது என் நோக்கம். அதாவது இலாகா அதிகாரிகளைப்பற்றி ஒரு புகார் வந்தால் அதை இலாகாவினரே விசாரித்து ஒரு முடிவு எடுத்து அப்படியே விட்டுவிடுகிறார்கள். ஜனங்கள் கூட்டுறவு இயக்க சம்பந்தமாக புகார் செய்த பிறகு, அவர்களுடைய புகார் என்ன ஆயிற்று; விசாரிக்கப்பட்டதா, விசாரிக்கப்படவில்லையா, முடிவு என்ன ஆயிற்று என்ற விவரங்கள் அவர்களுக்குத் தெரிய சந்தர்ப்பம் இல்லாமலே போய்விடுகிறது. அதனால் ஜனங்கள் கூட்டுறவு இலாகாவின்மேல் வைத்திருக்கும் அபிப்பிராயம் மாறாமல் நீடித்துக்கொண்டுதான் இருக்கும். புகார் உண்மையாக இருந்தாலும் இருக்கலாம், அல்லது அதிகாரிகள் நிரபராதியாக இருந்தாலும் இருக்கலாம். ஜனங்கள் அதிகாரிகளின் பேரில் வைத்திருக்கக்கூடிய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வதற்கு சந்தர்ப்பமே கிடைப்பதில்லை. இது கூட்டுறவு இயக்கத்துக்கே கெடுதல். கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அதற்காகத்தான் ஒரு தனி விசாரணைக் குழு ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லுகிறேன். **Anti-Corruption Tribunal** இருப்பது எனக்குத் தெரியும். அதோடு இதை சேர்த்துவிடக்கூடாது. **Anti-Corruption Tribunal**க்கு எப்பொழுது ஒரு விஷயம் விசாரணைக்கு விடப்படுமென்றால், முதலிலே இலாகா விசாரணை முடிந்து, அதிலே குற்றம் இருப்பதாக சந்தேகம் ஏற்பட்ட பிறகுதான். அப்படி நான் சொல்லவில்லை. கூட்டுறவு சம்பந்தமாக புகார்கள் வந்தால், இலாகா அதிகாரிகள் அதன் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது. புகார்களை அப்படியே விசாரணைக் குழுவுக்கு அனுப்பிவிடவேண்டும். அதிகாரிகள் நிரபராதியாக இருந்தால் அவர்களை விட்டுவிடலாம். அல்லது அவர்களின் பேரில் குற்றம் ருசுவானால் குற்றம் இருக்கிறது, நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இலாகாவுக்கு விசாரணைக் குழு சிபார்சு செய்யும். அந்த அடிப்படையில் இலாகாவில் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிச் செய்தால் சுமுகமான நிலைமையில் இயக்கம் வளர்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். ஆகையால் கூட்டுறவு இலாகாவில் புகார்களை விசாரிப்பதற்காக ஒரு தனி விசாரணைக் குழு ஏற்படுத்தவேண்டுமென்பது என்னுடைய யோசனை. இந்தத் திருத்தத்தை இப்பொழுதே உடனடியாக மந்திரி அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், நான் சொல்லுகிற யோசனையை கண்டிப்பாக ஏற்றுத்தான் ஆக வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, about the amendment moved by Sri P. S. Krishnaswamy Ayyangar, I would like to submit that it is not necessary. The existing proviso to section 40 may generally cover the cases of societies with unlimited liability also. Even now, no registered society can become a member of a society based on unlimited liability. Therefore, I am unable to accept the amendment, Sir.

[Sri M. Bhaktavatsalam] [20th December 1956

Regarding the amendment moved by the Deputy Leader of the Opposition, I would like to submit that this Bill has a very limited scope and that the amendment proposed relates to a general question which may well be considered when we take up the comprehensive Bill to amend the Co-operative Societies Act. According to the amendment " all complaints against officials of the Co-operative Department and office-bearers of the Registered societies shall be enquired into by a Tribunal to be constituted. . ." It may be, Sir, that enquiries will have to be conducted in the same way against members of the societies also. I have just listened to certain complaints about the working of the Milk Co-operative Society from certain hon. Members. In that case, perhaps, if a Tribunal is there it may have to enquire into the working of the whole society and the amendment as drafted will not serve the purpose. Therefore, I would like to submit that we might consider that suggestion later on. I personally consider the suggestion of having a Special Tribunal to enquire into certain cases and bring to bear an independent mind. We can take up all these matters when we consider the comprehensive Bill amending the various provisions of the Co-operative Societies Act. Therefore, I have to oppose that amendment also.

The amendment moved by Sri P. S. Krishnaswamy Ayyangar was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : May I know whether the hon. Member Sri M. Kalyanasundaram is withdrawing his amendment.

SRI M. KALYANASUNDARAM : என்னுடைய யோசனையின் தாத்பரியத்தை மந்திரி அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதால், நான் என்னுடைய திருத்தத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறேன்.

The amendment moved by Sri M. Kalyanasundaram was, by leave, withdrawn.

Clause 3 was put and carried.

Clause 4 was put and carried.

Clause 5.

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR : நான் என்னுடைய திருத்தங்களைப் பிரேரேபிக்கிறேன்.

In the proposed sub-section (*c*) (1), *after* the words " in the manner prescribed " occurring in line 10 of page 3. *insert* the words " by the rules ".

In the proposed sub-section (*c*) (4) (i), *delete* the words " within a period of one month of the service of such notice " occurring at the end (lines 28–29 of page 3), and *insert* the same at the beginning of this sub-section.

In the proposed sub-section (*c*) (4) (i), *for* the words " intimate his intention not to . . . as the case may be " occurring in lines 25–28 of page 3, *substitute* the words " intimate his unwillingness to become a member of the new society and may also intimate his intention to withdraw from the society of which he is a member, his shares, deposits, or loans as the case may be and on giving such intimation he shall cease to be a member of that society ".

20th December 1956] [Sri P. S. Krishnaswamy Ayyangar]

In the proposed sub-section (*c*) (4) (ii), *delete* the words " within a period of one month from the service of such notice " occurring at the end (lines 33–34 of page 3), and *insert* the same at the beginning of this sub-section.

For the proposed sub-section (*c*) (5), *substitute* the following :—

" (5) Any member or creditor who has not complied with the provisions of clause (4) shall be deemed to have assented to the amalgamation."

For the proposed sub-section (*c*) (6), *substitute* the following :—

" (6) After a majority of the members of each of such societies have expressly or by implication assented to the amalgamation, the Registrar may register the new society. But the Registrar may postpone registration till the repayment of the share capital of the members and the satisfaction of the claims of the creditors, if any, under clause (4) by the societies directed to be amalgamated. On the registration of the new society, the registration of the old societies shall be deemed to have been cancelled. The registration of the new society shall be a sufficient conveyance to vest in it all the assets and fix on it all the liabilities of the original societies."

The amendments were duly seconded.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

For clause (7) of the proposed sub-section (*c*), *substitute* the following :—

" (7) Any member aggrieved by the direction of the Registrar under clause (2) or any other order passed by him shall have the right to appeal to a Tribunal consisting of the President of the State Co-operative Bank and one non-official member and presided over by a judicial officer not below the rank of a District Judge. The decisions of the Tribunal shall be final and shall not be called in question in any Civil Court."

SRI K. T. RAJU : I second the amendment.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : While I express my very great appreciation of the very keen interest taken by the hon. Member who moved so many amendments to this Bill, I am indeed very sorry to say that I am unable to accept any of the amendments.

The first amendment is not necessary, as no elaborate rules are required for this purpose. This is merely a consultation of the financing bank for which no specific provision in the rules will be necessary. The acceptance of the amendment may perhaps curtail the scope of this section.

Coming to the next amendment, I submit that the existing provision is quite in order. The amendment proposed by the hon. Member will not convey the intention of this sub-section properly.

I am unable to accept the next amendment also. A member cannot cease to be a member immediately after he intimates his unwillingness to become a member of the new society, for a new society may not have come into existence. He cannot also cease to be a member of the old society as soon as he intimates his intention to withdraw from it. His ceasing to be a member can come into effect only after the old society ceases to exist.

I am unable to accept the next amendment also for the very same reason that I gave just now.

Coming to the next amendment, I submit that there is no need for it. The provision in the Bill is quite in order.

As regards the last amendment, I am afraid that its acceptance will delay the process of amalgamation and the registration of the new society. Therefore I am unable to accept that amendment also.

As regards the amendment moved by the Deputy Leader of the Opposition, I would like to submit that it may very well be considered when we take up the comprehensive Bill. It has to be properly scrutinised and I am unable to accept it at this stage. Therefore I suggest to the Mover to withdraw the amendment, and we may consider it when we take up the comprehensive Bill.

Sri M. KALYANASUNDARAM : இந்த செக்ஷனில் ரிஜிஸ்டிராருக்கு ஏகபோக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சங்கங்கள் எல்லாம் ஒன்றுகச் சேரவேண்டுமென்று கட்டாயப்படுத்தும் அதிகாரம் அவரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஆட்சேபனையில்லை. ரிஜிஸ்டிராருக்கு அந்த அதிகாரம் இருக்க வேண்டியதுதான். அவர் அந்த அதிகாரத்தை பிரயோகிப்பதின் முறையிலே சில தவறுகள் ஏற்படலாம். தவறுகள் ஏற்படாமல் தடுப்பதற்குத்தான், அவர் செய்த தவறுகளை எடுத்துக் கூறி நியாயமான முறையில் அப்பீல் செய்துகொள்ள உரிமை வேண்டும். ஒரு சங்கம் குறிப்பிட்ட சங்கத்தோடு சேர மறுக்கலாம். ஆனால் அதே சங்கம் பக்கத்து கிராம சங்கத்தோடு சேர இஷ்டப்படலாம். அவர்கள் இஷ்டத்துக்கு விரோதமாக சங்கங்களை ஒன்று சேர்க்காமல் பாதுகாப்பதற்குத்தான் இம்மாதிரி அப்பீல் செய்வதற்கு உரிமை இருக்கவேண்டும். ரிஜிஸ்டிரார் உத்தரவின் பேரில் சர்க்காருக்குக்கூட அப்பீல் கிடையாது. சாதாரணமாக மற்ற விஷயங்களில் இருப்பது போல் சர்க்காருக்கு அப்பீல் செய்யும் உரிமை இருந்தால் கூட அவர்களுக்குள்ள குறைகளைத் தெரிவிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அதனால்தான் நான் ஒரு திருத்தத்தை கொண்டுவரவேண்டியிருந்தது. சாதாரணமாக அரசாங்கத்துக்கு அப்பீல் செய்யும் உரிமையாவது இருக்கவேண்டும். இதுபற்றி மந்திரி அவர்கள் உத்திரவாதம் கொடுத்தால், என்னுடைய திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரிஜிஸ்டிரார் முடிவுக்கு மேல் அப்பீலுக்கு ஒரு வழி இருக்கவேண்டுமென்று சொல்வதை நான் பாராட்டுகிறேன். சர்க்காரே இந்த அப்பீலை விசாரிக்கலாமா அல்லது இதற்கு ஒரு தனி விசாரணைக் குழு நியமிக்கவேண்டுமா என்பது பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம். இப்பொழுது கனம் அங்கத்தினர் திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டால், இதை மறுபடியும் மேற்கொண்டு பரிசீலனை செய்து பின்னால் மற்ற திருத்தங்களோடு இதையும் கவனிக்கலாம்.

DEPUTY SPEAKER : Is the hon. Member Sri P. S. Krishnaswamy Ayyangar withdrawing his amendments?

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR : Before withdrawing the amendments, I would like to say a few words by way of explanation. No doubt I moved the amendments. But before the reply of the Hon. Minister, I was not given an opportunity to explain my amendments. Now let me pray for an opportunity to explain the purport of at least a simple amendment.

My first amendment proposes the addition of the words " by the rules " after the words " in the manner prescribed ". In every Act, the word " prescribed " used to be defined as ' prescribed by the rules made under this Act '.

DEPUTY SPEAKER : The Hon. Minister has already replied to the amendments. He has explained very clearly why he is not able to accept any of them. Therefore what is the use of explaining the amendments now?

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR : On second thoughts, he may revise his view. Anyway I beg leave to withdraw all my amendments.

All the amendments moved by Sri P. S. Krishnaswamy Ayyangar were, by leave, withdrawn.

SRI M. KALYANASUNDARAM : நானும் என்னுடைய திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

The amendment moved by Sri M. Kalyanasundaram was, by leave, withdrawn.

Clause 5 was put and carried.

Clauses 6, 7, 8, 9 and 10 were put and carried.

Clause 1 was put and carried.

The Preamble was put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER : Motion moved—

" That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1956, be passed."

[20th December 1956

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டும், மந்திரி அவர்கள் நிர்வாக சங்கடங்கள் காரணமாக அவைகளை ஒப்புக்கொள்ளமுடியவில்லை என்பதை நான் உணர்கிறேன். அதே சமயத்தில் இந்த இலாகாவைப்பற்றி சில முக்கியமான விமர்சனங்கள் வெளிவந்திருக்கின்றன. இந்த விமர்சனங்களையெல்லாம் ரிஜிஸ்டிராருக்கு அனுப்பி வைத்து, சட்டமில்லாவிட்டாலும் அவைகளை வழிகாட்டியாக வைத்துக்கொண்டு விரிவான சட்டம் வரும் வரையில் அவர் அந்த விமர்சனங்களை மனதில் வைத்துக்கொண்டு இலாகா மூலமாய் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படிச் செய்யவேண்டும். ஆகையால் இப்பொழுது வெளியிடப்பட்ட யோசனைகளையும் விமர்சனங்களையும் கூட்டுறவு இலாகாவுக்கு அனுப்பிவைக்குமாறு நான் மந்திரி அவர்களை கேட்டுக்கொண்டு, இந்தப் பிரேரணையை ஆமோதிக்கிறேன்.

SRI K. VINAYAKAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த திருத்த மசோதாவை இப்பொழுது கொண்டுவருவதற்குக் காரணம் அத்தியாவசியமான, அவசரமான ஒரு சில திருத்தங்களை அவசரமாகக் கொண்டுவர விரும்பியதுதான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொஞ்ச நாள் கழித்து புது அமைச்சர் குழு ஏற்பட்ட பிறகு அவர்கள் ஒரு விரிவான மசோதாவை (Comprehensive Bill) கொண்டு வருவார்கள் என்றும் சொன்னார். அவசரமாக வேண்டிய சில திருத்தங்களை மட்டும் இப்பொழுது கொண்டு வந்திருப்பதாகவும் கூறினார். அமைச்சர் அவர்கள் எப்படி சில அவசரமான திருத்தங்களை உடனே கொண்டுவரவேண்டுமென்று நினைக்கிறார்களோ, அதே மாதிரி கூட்டுறவு சங்கங்கள் விஷயமாக நடைமுறையில் அவசரமாக செய்யவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. அவைகளையெல்லாம் அரசாங்கமே கொண்டுவந்திருந்தால் அதை நாங்கள் விரும்பி ஏற்றுக்கொண்டிருப்போம். மற்ற அங்கத்தினர்கள் திருத்தங்கள் கொண்டு வந்தாலும் அவைகள் நல்லது என்று அரசாங்கத்தின் மனதில் பட்டால் அவைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை அரசாங்கத்துக்கு இருக்கவேண்டும். எந்த காரணங்களைக்கொண்டு அரசாங்கத்தின் திருத்தங்களை அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மந்திரி அவர்கள் சொல்லுகிறார்களோ, அதே காரணம் அங்கத்தினர்கள் கொண்டு வரும் திருத்தங்களுக்கும் பொருந்தும். அதே அடிப்படையில் தான் அங்கத்தினர்களும் பல திருத்தங்களைக் கொண்டுவருகிறார்கள். இதையும் அரசாங்கம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இந்தப் பிரேரணையை ஆமோதிக்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சி உபதலைவர் கூறியது போல், இந்த திருத்த மசோதாபற்றிய விஷயங்களல்லாமல் பொதுவாக சில குறைபாடுகள், சில யோசனைகளெல்லாம் கூறப்பட்டன. அவைகளையெல்லாம் கூட்டுறவு இலாகா கவனிக்கும். சட்டம் வரும் வரையில் காத்திராமல் எந்த வகையிலே அந்தக் குறைகளை நிவர்த்திக்கலாமோ அந்த வகையில் கவனம் செலுத்தும்படி நான் இலாகாவினரிடம் சொல்லுகிறேன். இன்றும் குறிப்பிட்ட சில ஸ்தாபனங்களைப் பற்றியும் குறைகள் சொல்லப்பட்டன. குறிப்பாக சில அங்கத்தினர்கள் பால் சப்ளை சங்கத்தைப் பற்றி குறை கூறினார்கள். அதைப் பொறுத்தமட்டில், எனக்கு விவரங்கள் ஒன்றும் தெரியாது. இம்மாதிரி ஸ்தாபனங்களைப்பற்றிய குறைகளை நான் இன்றுதான் கேள்விப்பட்டதால், அவைகளில் கவனம் செலுத்தி எத்தகைய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளமுடியுமோ அத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறேன். குறைகளிருந்தால் அதை நிவர்த்திப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ விநாயகம் அவர்கள் சர்க்கார் அவசர அவசரமாகத் திருத்தங்கள் கொண்டுவருவதுபோல், அங்கத்தினர்களும் கொண்டு வந்தால், அவைகளை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும், வரவேற்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்படி வரவேற்பதில் ஒன்றும் ஆட்சேபணையில்லை. சர்க்கார் தான் கொண்டு வரவேண்டும், கனம் அங்கத்தினர்கள்

20th December 1956] [Sri M. Bhaktavatsalam]

உத்தியோகப்பற்றற்ற முறையில் சட்டங்களைக் கொண்டுவந்து பெயர் பெறக் கூடாது என்ற பொறாமை சர்க்காருக்கு இல்லை. கனம் அங்கத்தினர் அவசரமாக ஒரு மசோதா கொண்டுவரவேண்டுமென்று அக்கறை கொண்டிருப்பதை பாராட்டுகிறேன். கனம் எதிர்க்கட்சி உபதலைவர் அவர்களுக்கு எப்படி அவர் யோசிக்கக்கூடிய பாராட்டத்தக்க ஒரு திருத்தத்தை கொண்டு வந்தாலும் அதை நன்கு பரிசீலித்து விரிவான சட்டத்தில் அதையும் சேர்த்துக்கொண்டுவரவேண்டுமென்று சொன்னேனோ, அதையே தான் கனம் அங்கத்தினர் ஸ்ரீ விநாயகம் அவர்களுக்கும் சொல்லுகிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS REQUISITIONING AND ACQUISITION OF IMMOVABLE PROPERTY BILL, 1956.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Requisitioning and Acquisition of Immovable Property Bill*, 1956, and move—

"That the Bill be taken into consideration at once."

Sir, this Bill has to be enacted immediately in order to enable the Government to implement their comprehensive programme of development in the agricultural sector under the Second Five-Year Plan. In most of the Agricultural Research and Development schemes contemplated under this programme lands are required for establishing Research Stations, Seed Farms, etc. The outright purchase of lands which are required for a specified period will involve the Government in huge expenditure. On the other hand it will be advantageous and economic to take the required lands on lease. But a lease has to be negotiated and it is only by agreement that it will be possible for the Government to get lands on lease. It is, therefore, imperative to undertake legislation empowering the Government to take lands compulsorily on lease, the rent being fixed on a reasonable basis. The Bill, which is now before the House, empowers the State Government to requisition for the purpose of the State any immovable property and also to acquire later on such requisitioned property, if necessary.

The principles and methods according to which compensation will be determined and paid for such requisitioning and acquisition have been laid down in clauses 8 and 9. Provision has been made in clauses 10 and 11 for appeals against orders of requisitioning and awards determining compensation.

It is needless for me to say that the provisions of the Bill, after it is enacted, will be resorted to sparingly and only in those cases where it is absolutely necessary to do so.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Requisitioning and Acquisition of Immovable Property Bill, 1956, be taken into consideration at once."

* Published in the *Fort St. George Gazette* Extraordinary dated 14th December 1956.

[20th December 1956

12-68 p.m. **Sri K. T. RAJU :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே! இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். எனக்கு சில விஷயங்களை அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டியிருக்கிறது. பொதுவாக, இன்றையதினம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விவசாய அபிவிருத்திக்காக, சில மாதிரி பண்ணைகளையும், சில ஆராய்ச்சி நிலையங்களையும் ஏற்படுத்த இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதற்கு நிலங்கள் தேவைப்படுகிறது. சில இடங்களில் நமக்கு தேவைப்படும் நிலங்கள் தேவையான அளவு கிடைப்பது மிகவும் கஷ்டம். உதாரணமாக, கோயம்பத்தூர் ஜில்லாவில் விவசாய இலாகா அதிகாரிகள் மாதிரி பண்ணைகள் தேவை என்று சொல்லி ஜில்லா கலெக்டர் முன்னிலையில் அங்குள்ள அங்கத்தினர்களையும், பல மக்களையும் கண்டு, இம்மாதிரி விதைகளைப் போட்டு ஆராய்ச்சி நடத்த நிலங்கள் தேவை, உங்கள் மூலம் எங்கேயாவது நல்ல நிலம் கிடைக்க வசதி செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்திருந்த நிலங்கள் கிடைக்காததால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் அது தடைப்பட்டது. ஆகவே, இப்படிப்பட்ட மசோதாக்களை கொண்டுவந்து சட்டமாக்கி அதன் மூலம் இப்படிப்பட்ட காரியங்கள் செய்ய வேண்டியது அவசியம் என்பதை எனது அனுபவ ரீதியாக உணருகிறேன். இந்த மசோதாவைக் கொண்டு வந்து மேலும் அதிக நிலங்களில் மாதிரிப் பண்ணைகள், ஆராய்ச்சி நிலையங்கள், இவைகள் ஏற்படுத்த குறிப்பிட்ட நிலங்கள் யார் யாரிடமிருக்கிறது, அவைகளை எப்படிப் பெறுவது என்பன போன்ற சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக, ஒரு சில குறிப்பிட்ட இடங்களில் 15 ஏக்கர் உள்ள நிலத்தில் விதை போட்டு ஆராய்ச்சி செய்யலாம் என்று வரும்போது, ஒரு சிறிய விவசாயி இருப்பார்; அவருக்கு ஐந்து ஏக்கரா நிலம் இருக்கலாம். ஆனால் அதற்கு அருகாமையில் அதே அமைப்புள்ள அந்தத் தாக்கிலேயே ஒரு 10 ஏக்கர் நிலம் இருக்கலாம். அந்தப் பத்து ஏக்கர் நிலத்தின் சொந்தக்காரருக்கு ஐம்பது ஏக்கர் நிலம் இருக்கலாம். அவர் நல்ல செல்வாக்குள்ளவராயிருந்தால் தனது நிலத்தை சர்க்காருக்கு வாடகைக்கோ அல்லது விலைக்கோ கொடுக்காமல் தப்பிக்கொண்டு, அச்சிறிய விவசாயினிடமிருந்து அவர் நிலத்தை எடுக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். அப்படிப்பட்ட சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன. ஆகவே இந்த ஒரு நல்ல காரியத்தை உத்தேசித்து நிலத்தை நாம் எடுக்கும்போது, வாடகைக்கானாலும் சரி, அல்லது விலைக்கானாலும் சரி, நாம் சில காரியங்களை நம் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அப்படி வரும்போது யார் யாரிடம் குறிப்பிட்ட நிலங்கள் இருக்கின்றன. எவ்வளவு இருக்கிறது. அந்நிலத்தை எடுப்பதால் அவர்கள் பாதிக்கப்படுவார்களா என்பதை யெல்லாம் நாம் மனதில் வைத்துக் கொண்டு கூடிய வரையிலும் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே, நான் சொல்வதென்னவென்றால், இந்த மசோதாவை சட்டமாக்கி அதற்கான விதிகளைகொண்டு வரும்போது சிறிய விவசாயிகளைப் பாதிக்காத வகையில் விதிகள் அமைத்தால்தான் அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்குமென்று அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று வரும்போது, ஜில்லா வாரியாக நஷ்ட ஈடு கொடுக்கப்படாது ஊர், இடம், அங்குள்ள விலை முதலியவைகளை எல்லாம் கணக்கெடுத்துத்தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். சில இடங்கள் நல்ல விளைச்சல் பூமிகளா யிருக்கலாம். சில இடங்கள் தரிசுப் பூமியாயிருக்கலாம். சில இடங்கள் காடுகளா யிருக்கலாம். நல்ல நிலங்களுக்கு நல்ல விலை கொடுக்க வேண்டும். காடுகளை எடுத்து அதை பண்படுத்தி ஆராய்ச்சி நடத்துவது என்றால் அது முடியாது. சில சமயம் 15 ஏக்கர் உள்ள ஒரு நல்ல தோட்ட பூமியைப் பெற வேண்டியதாயிருக்கலாம். அல்லது நல்ல வயல்கள் தேவைப்படலாம். அந்த நிலையில் அந்நிலத்திற்கு கூடுதல் விலை கொடுக்க வேண்டிவரலாம். ஆகவே, விலையை நிர்ணயம் செய்யும்போது அந்த நிலத்தின் தன்மை, அதிருக்கும் இடம் போன்றவைகளை கணக்கிலெடுத்து விவசாயிகளுக்கு பாதகம் வராத நிலையில் நஷ்ட ஈடு நல்ல முறையில் கொடுக்கப்படவேண்டுமென்று நான் இங்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

20th December 1956] [Sri K. T. Raju]

ஒரு விவசாயினுடைய நிலத்தை சர்க்கார் வாடகைக்கு எடுக்கும்போது, அந்நிலத்தின் மூலம் அந்த விவசாயிக்கு என்ன வருமானம் கிடைக்குமோ அதற்குக் குறைவில்லாத விதத்தில் வாடகை கொடுக்கப்பட வேண்டும். இல்லை, அந்த இடத்தை விலைக்கு எடுத்துக் கொள்வதானால் அந்த நிலத்திற்கு சாதாரணமாக அங்கு என்ன விலையிருக்கிறதோ அதற்குக் குறைவில்லாமல் நஷ்டஈடு கொடுக்க வேண்டும். ஆகவே, நான் மேற்சொன்ன பிரகாரமுள்ள விதத்தில் விதிகள் அமைக்கப்பட வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். அதற்கான பாதுகாப்புகளை இந்த மசோதாவில் உட்படுத்தப்பட வேண்டும்.

இம்மாதிரியான ஆராய்ச்சி நிலையங்கள் சாதாரண விவசாயிகளுக்குப் பயன் படுகிற முறையில் இருக்க வேண்டுமென்றே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இதனால் விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் விதிகள் அமைக்க வேண்டுமென்று மறுபடியும் கூறிக்கொண்டு இதை வரவேற்கிறேன்.

***Sri P. G. KARUTHIRUMAN :** உதவி சபாநாயகர் அவர்களே! விவசாய அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். ஆனால் இது நடைமுறையில் இதுவரையிலும் அநேக இடங்களில் ஏற்படாததற்குக் காரணம், சர்க்காரிடமிருந்து, சர்க்கார் அதிகாரிகளிடமிருந்து சரியான, விவரமான, ஒரு தெளிவான பதில் கிடைக்காத காரணத்தினால்தான் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரே இடத்தில் 25 ஏக்கரா நிலங்கள் இருக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். சாதாரணமாக, ஒரேயிடத்தில் 25 ஏக்கர் பூராவும் கிடைக்காது. ஆகவே, அதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இச்சமயத்தில் நான் ஒரு காரியத்தை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு சாதாரண விவசாயியின் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது, ஒரு காரியத்தை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது, விவசாயத் தொழிலைத் தவிர வேறொன்றும் தெரியாத விவசாயிகளும் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்து, அவர்களின் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டால் நஷ்டஈடு கொடுப்பது ஒருபுறம் இருப்பதோடு, அவர்களுக்கு வேறு இடங்களில் பூமி கொடுக்க ஏற்பாடு செய்வது மிக மிக அவசியமாகும் என்பதை நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். சாதாரண ஒரு விவசாயிக்கு இரண்டல்லது மூன்று ஏக்கர் நிலமிருக்கலாம். அதைக் கொடுத்துவிட்டு பணத்தை மட்டும் வைத்துக்கொண்டு அவனால் ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே, நான் சொல்வதென்னவென்றால், நமக்குத் தேவையான பூமியை எடுக்கும்போது அவர்களுக்கு அதே தரத்திலுள்ள பூமியை கொடுப்பதை விட்டுவிட்டு வேறு ஏதாவது இடத்திலுள்ள பூமியையாவது கொடுத்தால்தான் அவர்களுக்குத் தொடர்ந்து வாழ்க்கையை நடத்த முடியும் என்ற எனது அபிப்பிராயத்தை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விதைப் பண்ணைகள் அமைப்பதற்குள்ள முக்கியமான அம்சம், பூமி நல்ல பூமியாக இருக்கவேண்டும். அது மிகவும் முக்கியமாகும். நமது உணவுப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவது மிக மிக அவசியமாகுமென்று சொல்லத் தேவையில்லை. பொட்டல் பூமியில் விதைப் பண்ணைகள் நிறுவுவதைக் காட்டிலும், 25 ஏக்கர் பூமி, நல்ல நஞ்சைப் பூமி, அல்லது தோட்டப் பிரதேசம் ஒரேயடியாகக் கிடைக்கா விட்டாலும் 15 ஏக்கர் நிலம், 10 ஏக்கர் நிலம் என்று பிரித்தாலும் சரி அங்கே நிறுவுவதுதான் நல்லது. நல்ல நிலம் ஒரேயிடத்தில் 25 ஏக்கர் கிடைப்பது சிரமம். ஆகவே. 15 ஏக்கர், 10 ஏக்கர் என்றோ அல்லது 12, 13 ஏக்கர் என்றோ எப்படியாவது நல்ல பூமியில் விதைப் பண்ணைகள், அமைக்கப்பட வேண்டும். சிற்சில கஷ்டங்கள் ஏற்படலாம். அவற்றை எல்லாம் சமாளித்தேயாக வேண்டும். நஞ்சை இருக்கும் இடத்தில் தோட்டக்கால் இருக்கமுடியாது. தோட்டக்கால் இருக்குமிடத்தில் நஞ்சை இருக்க முடியாது..

[20th December 1956

12-08 p.m. **SRI K. T. RAJU** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே ! இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். எனக்கு சில விஷயங்களை அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டியிருக்கிறது. பொதுவாக, இன்றையதினம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விவசாய அபிவிருத்திக்காக, சில மாதிரி பண்ணைகளையும், சில ஆராய்ச்சி நிலையங்களையும் ஏற்படுத்த இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதற்கு நிலங்கள் தேவைப்படுகிறது. சில இடங்களில் நமக்கு தேவைப்படும் நிலங்கள் தேவையான அளவு கிடைப்பது மிகவும் கஷ்டம். உதாரணமாக, கோயம்பத்தூர் ஜில்லாவில் விவசாய இலாகா அதிகாரிகள் மாதிரி பண்ணைகள் தேவை என்று சொல்லி ஜில்லா கலெக்டர் முன்னிலையில் அங்குள்ள அங்கத்தினர்களையும், பல மக்களையும் கண்டு, இம்மாதிரி விதைகளைப் போட்டு ஆராய்ச்சி நடத்த நிலங்கள் தேவை, உங்கள் மூலம் எங்கேயாவது நல்ல நிலம் கிடைக்க வசதி செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் தேர்ந்தெடுத்திருந்த நிலங்கள் கிடைக்காததால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் அது தடைப்பட்டது. ஆகவே, இப்படிப்பட்ட மசோதாக்களை கொண்டுவந்து சட்டமாக்கி அதன் மூலம் இப்படிப்பட்ட காரியங்கள் செய்ய வேண்டியது அவசியம் என்பதை எனது அனுபவ ரீதியாக உணருகிறேன். இந்த மசோதாவைக் கொண்டு வந்து மேலும் அதிக நிலங்களில் மாதிரிப் பண்ணைகள், ஆராய்ச்சி நிலையங்கள், இவைகள் ஏற்படுத்த குறிப்பிட்ட நிலங்கள் யார் யாரிடமிருக்கிறது, அவைகளை எப்படிப் பெறுவது என்பன போன்ற சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக, ஒரு சில குறிப்பிட்ட இடங்களில் 15 எக்கர் உள்ள நிலத்தில் விதை போட்டு ஆராய்ச்சி செய்யலாம் என்று வரும்போது, ஒரு சிறிய விவசாயி இருப்பார் ; அவருக்கு ஐந்து எக்கரா நிலம் இருக்கலாம். ஆனால் அதற்கு அருகாமையில் அதே அமைப்புள்ள அந்தத் தாத்திலேயே ஒரு 10 எக்கர் நிலம் இருக்கலாம். அந்தப் பத்து எக்கர் நிலத்தின் சொந்தக்காரருக்கு ஐம்பது எக்கர் நிலம் இருக்கலாம். அவர் நல்ல செல்வாக்குள்ளவராயிருந்தால் தனது நிலத்தை சர்க்காருக்கு வாடகைக்கோ அல்லது விலைக்கோ கொடுக்காமல் தப்பிக்கொண்டு, அச்சிறிய விவசாயினிடமிருந்து அவர் நிலத்தை எடுக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். அப்படிப்பட்ட சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன. ஆகவே இந்த ஒரு நல்ல காரியத்தை உத்தேசித்து நிலத்தை நாம் எடுக்கும்போது, வாடகைக்கானாலும் சரி, அல்லது விலைக்கானாலும் சரி, நாம் சில காரியங்களை நம் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அப்படி வரும்போது யார் யாரிடம் குறிப்பிட்ட நிலங்கள் இருக்கின்றன. எவ்வளவு இருக்கிறது. அந்நிலத்தை எடுப்பதால் அவர்கள் பாதிக்கப்படுவார்களா என்பதையெல்லாம் நாம் மனதில் வைத்துக் கொண்டு கூடிய வரையிலும் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே, நான் சொல்வதென்னவென்றால், இந்த மசோதாவை சட்டமாக்கி அதற்கான விதிகளைகொண்டு வரும்போது சிறிய விவசாயிகளைப் பாதிக்காத வகையில் விதிகள் அமைத்தால்தான் அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்குமென்று அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று வரும்போது, ஜில்லா வாரியாக நஷ்ட ஈடு கொடுக்கப்படாது ஊர், இடம், அங்குள்ள விலை முதலியவைகளை எல்லாம் கணக்கெடுத்துத்தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். சில இடங்கள் நல்ல விளைச்சல் பூமிகளாயிருக்கலாம். சில இடங்கள் தரிசுப் பூமியாயிருக்கலாம். சில இடங்கள் காடுகளாயிருக்கலாம். நல்ல நிலங்களுக்கு நல்ல விலை கொடுக்க வேண்டும். காடுகளை எடுத்து அதை பண்படுத்தி ஆராய்ச்சி நடத்துவது என்றால் அது முடியாது. சில சமயம் 15 எக்கர் உள்ள ஒரு நல்ல தோட்ட பூமியைப் பெற வேண்டியதாயிருக்கலாம். அல்லது நல்ல வயல்கள் தேவைப்படலாம். அந்த நிலையில் அந்நிலத்திற்கு கூடுதல் விலை கொடுக்க வேண்டிவரலாம். ஆகவே, விலையை நிர்ணயம் செய்யும்போது அந்த நிலத்தின் தன்மை, அதிருக்கும் இடம் போன்றவைகளை கணக்கிலெடுத்து விவசாயிகளுக்கு பாதகம் வராத நிலையில் நஷ்ட ஈடு நல்ல முறையில் கொடுக்கப்படவேண்டுமென்று நான் இங்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

20th December 1956] [Sri K. T. Raju]

ஒரு விவசாயினுடைய நிலத்தை சர்க்கார் வாடகைக்கு எடுக்கும்போது, அந்நிலத்தின் மூலம் அந்த விவசாயிக்கு என்ன வருமானம் கிடைக்குமோ அதற்குக் குறைவில்லாத விதத்தில் வாடகை கொடுக்கப்பட வேண்டும். இல்லை, அந்த இடத்தை விலைக்கு எடுத்துக் கொள்வதானால் அந்த நிலத்திற்கு சாதாரணமாக அங்கு என்ன விலையிருக்கிறதோ அதற்குக் குறைவில்லாமல் நஷ்டஈடு கொடுக்க வேண்டும். ஆகவே, நான் மேற்சொன்ன பிரகாரமுள்ள விதத்தில் விதிகள் அமைக்கப்பட வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். அதற்கான பாதுகாப்புகளை இந்த மசோதாவில் உட்படுத்தப்பட வேண்டும்.

இம்மாதிரியான ஆராய்ச்சி நிலையங்கள் சாதாரண விவசாயிகளுக்குப் பயன் படுகிற முறையில் இருக்க வேண்டுமென்றே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருகிறது. ஆகவே, இதனால் விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் விதிகள் அமைக்க வேண்டுமென்று மறுபடியும் கூறிக்கொண்டு இதை வரவேற்கிறேன்.

***SRI P. G. KARUTHIRUMAN** : உதவி சபாநாயகர் அவர்களே ! விவசாய அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். ஆனால் இது நடைமுறையில் இதுவரையிலும் அநேக இடங்களில் ஏற்படாததற்குக் காரணம், சர்க்காரிடமிருந்து, சர்க்கார் அதிகாரிகளிடமிருந்து சரியான, விவரமான, ஒரு தெளிவான பதில் கிடைக்காத காரணத்தினால்தான் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஓரே இடத்தில் 25 எக்கரா நிலங்கள் இருக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். சாதாரணமாக, ஒரேயிடத்தில் 25 எக்கர் பூராவும் கிடைக்காது. ஆகவே, அதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இச்சமயத்தில் நான் ஒரு காரியத்தை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு சாதாரண விவசாயியின் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது, ஒரு காரியத்தை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது, விவசாயத் தொழிலைத் தவிர வேறொன்றும் தெரியாத விவசாயிகளும் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்து, அவர்களின் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டால் நஷ்டஈடு கொடுப்பது ஒருபுறம் இருப்பதோடு, அவர்களுக்கு வேறு இடங்களில் பூமி கொடுக்க ஏற்பாடு செய்வது மிக மிக அவசியமாகும் என்பதை நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். சாதாரண ஒரு விவசாயிக்கு இரண்டல்லது மூன்று எக்கர் நிலமிருக்கலாம். அதைக் கொடுத்துவிட்டு பணத்தை மட்டும் வைத்துக்கொண்டு அவனால் ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே, நான் சொல்வதென்னவென்றால், நமக்குத் தேவையான பூமியை எடுக்கும்போது அவர்களுக்கு அதே தரத்திலுள்ள பூமியை கொடுப்பதை விட்டுவிட்டு வேறு ஏதாவது இடத்திலுள்ள பூமியையாவது கொடுத்தால்தான் அவர்களுக்குத் தொடர்ந்து வாழ்க்கையை நடத்த முடியும் என்ற எனது அபிப்பிராயத்தை இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விதைப் பண்ணைகள் அமைப்பதற்குள்ள முக்கியமான அம்சம், பூமி நல்ல பூமியாக இருக்கவேண்டும். அது மிகவும் முக்கியமாகும். நமது உணவுப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவது மிக மிக அவசியமாகுமென்று சொல்லத் தேவையில்லை. பொட்டல் பூமியில் விதைப் பண்ணைகள் நிறுவுவதைக் காட்டிலும், 25 எக்கர் பூமி, நல்ல நஞ்சைப் பூமி, அல்லது தோட்டப் பிரதேசம் ஒரேயடியாகக் கிடைக்கா விட்டாலும் 15 எக்கர் நிலம், 10 எக்கர் நிலம் என்று பிரித்தாலும் சரி அங்கே நிறுவுவதுதான் நல்லது. நல்ல நிலம் ஒரேயிடத்தில் 25 எக்கர் கிடைப்பது சிரமம். ஆகவே. 15 எக்கர், 10 எக்கர் என்றோ அல்லது 12, 13 எக்கர் என்றோ எப்படியாவது நல்ல பூமியில் விதைப் பண்ணைகள், அமைக்கப்பட வேண்டும். சிற்சில கஷ்டங்கள் ஏற்படலாம். அவற்றை எல்லாம் சமாளித்தேயாக வேண்டும். நஞ்சை இருக்கும் இடத்தில் தோட்டக்கால் இருக்கமுடியாது. தோட்டக்கால் இருக்குமிடத்தில் நஞ்சை இருக்க முடியாது..

[Sri P. G. Karuthiruman] [20th December 1956

ஆகவே இதற்கு காம்பன்ஸேஷன் அதாவது நஷ்டஈடு கொடுப்பதில் பல வகை தொந்தரவுகளும் இருக்கின்றன என்பதை இந்தச் சபை முன்பு சொல்ல ஆசைப்படுகிறேன். உதாரணமாக கீழ் பவானி திட்டம் வந்த போது சர்க்கார் நிலங்களை எடுத்தபோது, நஷ்டஈடு கொடுப்பதில் எவ்வளவு கஷ்டங்கள் சாதாரண விவசாயிகளுக்கு ஏற்பட்டன என்பதை சொல்ல விரும்புகிறேன். லோயர் பவானி அணைக்கட்டு திட்டத்திற்கு நிலங்களை சர்க்கார் ஆர்ஜிதப்படுத்தியபோது நஷ்ட ஈடாக நஞ்சை பூமிக்கு 2,000 ரூபாயும் புஞ்சை பூமிக்கு 500 ரூபாயும் ஏக்கர் ஒன்றுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் அப்படி கொடுக்கப்பட்டது போதாது என்று பெரிய பணவசதியுள்ள விவசாயிகள் கோர்ட்டில் தாவா போட்டதின் பயனாக இன்று அவர்களுக்கு சர்க்காரிலிருந்து ஏற்கெனவே கொடுக்கப்பட்டதிலிருந்து நான்கு பங்கு கூடுதலாக கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பாகியிருக்கிறது. ஆனால் ஏழை விவசாயிகளுக்கு அந்த மாதிரி கூடுதல் பணம் கிடைக்கவில்லை. இப்போது கோர்ட்டுக்கு போக வழியில்லாமல் இருக்கும் மற்ற ஏழை விவசாயிகளுக்கும் அவர்களுக்கு கொடுக்கப்படுவது போலவே கொடுக்க ஏற்பாடு செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுப்பதுதான் நியாயம் என்று நம்புகிறேன். சர்க்கார் இதுவரை இந்த மாதிரி ஏழை விவசாயிகளுக்கு பணம் கிடைப்பதற்கு வழி செய்யாமல் இருக்கும் போக்கை கண்டு, அங்குள்ள மக்கள் மிகவும் சர்க்கார் மீது அதிருப்தி கொண்டிருக்கிறார்கள் என்பதை சொல்லாமல் இருக்கமுடியாது. ஏற்கெனவே டணாய்கோட்டை போன்ற பகுதிகளில் சர்க்காரால் எடுக்கப்பட்ட நஞ்சை நிலங்களுக்கு நஷ்டஈடாக கூடுதலாக பத்து பதினைந்து லட்சம் ரூபாய்வரை கொடுக்கப்பட்டது. இப்போது அது போதாது என்று, மீண்டும் கூடுதலாக வேண்டும் என்று ஏதோ பழைய ரெஜிஸ்டர்டு டாக்குமெண்டுகளை கோர்ட்டில் காட்டி ஏக்கருக்கு 2,000 ரூபாய் வரை இன்னும் தரவேண்டும் என்று கேட்டதின் பேரில் இன்னும் ஆறு ஏழு லட்சம் ரூபாய் வரை சர்க்கார் கொடுக்கவேண்டும் என்று கோர்ட்டில் தீர்ப்பாகியிருக்கிறது. இதெல்லாம் பணவசதியுள்ள பெரும் விவசாயிகளுக்கு கிடைக்கிறது. பணமில்லாத ஏழை விவசாயிகளுக்கு கோர்ட்டுக்கு போவதற்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் இந்த முறைப்படியுள்ள பாக்கியங்கள் கிடைப்பதற்கு சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். சாதாரணமாக விவசாயிகளின் நிலங்களை சர்க்கார் ஆர்ஜிதப்படுத்தும் சமயத்தில் நஷ்டஈடு கொடுக்கும்போது அவர்களுக்கு தகுந்த விலையை அதாவது அந்தந்த பிராந்தியத்தில் இருக்கும் நிலங்களுக்கு அந்தந்த சமயத்தில் சப்-ரெஜிஸ்டரார் ஆபீஸில் என்ன உயர்ந்த விலைக்கு ரெஜிஸ்டர் செய்யப்பட்டுவருகிறதோ அந்த விலையை அனுசரித்து நஷ்டஈடு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் அவசியம் இருந்தால் இந்த சட்டத்தை உபயோகப்படுத்துவோம் என்றும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சாதாரணமாக விவசாயப்பண்ணை வைப்பதற்கு இடம் கிடைப்பது கஷ்டம் என்று கூறப்பட்டது. போன மாதத்தில் இரண்டொரு நண்பர்கள் கூறினார்கள். அதாவது விவசாயப்பண்ணைக்கு உபயோகப்படுத்துவதற்காக சர்க்கார் ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லி நில சொந்தக்காரர்களிடம் அக்ரிமெண்ட் அதாவது ஒப்பந்தம் செய்து கையெழுத்தெல்லாம் ஆன பிறகு இப்போது சர்க்காரிலிருந்து இவ்வளவு ரூபாய்க்கு குத்தகைக்கு எடுக்க முடியாது என்று தெரிவிப்பதாக சொன்னார்கள். ஆகவே இம்மாதிரியான இலாகாக்களின் தொந்தரவுகளினால்தான் விவசாய பண்ணைக்கு நிலம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே சரியான ஒப்பந்தம் செய்துகொண்டு அதன்படி நடந்தால் சர்க்காருக்கு விவசாயப்பண்ணைகளை ஏற்படுத்த எவ்வளவு நிலங்கள் வேண்டுமோ அவ்வளவும் நானே எடுத்துக் கொடுக்க முடியும் என்றும் இந்த சபையில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே விவசாயிகளுக்கு கிடைக்கும் நஷ்டஈடு தொகை விஷயமாக எல்லோருக்கும் அவர்களுடைய ஒரே ரக நிலங்களுக்கு ஒரே மாதிரியான முறையில் நஷ்டஈடு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு பேச சந்தர்ப்பம் தந்ததற்கு நன்றியும் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

20th December 1956]

Sri P. RANGASWAMI REDDIAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த திருத்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். நான் இரண்டு மூன்று தினங்களுக்குமுன் சொன்ன ஒரு விஷயம் என்னவென்றால் சேலம் ஜில்லாவில் ஆனையம்பட்டி என்ற கிராமத்தில் கொஞ்ச காலத்திற்குமுன் சர்க்காரிலிருந்து கொஞ்சம் நஞ்சை நிலங்களை எடுத்து அதில் மாடல் பார்ம் [Model farm] நடத்தினார்கள். ஆனால் அதில் சரியானபடி பயிரேறவில்லை என்று சொல்லி, அங்குள்ள அதிகாரிகளின் சிபார்சுபடியும் இன்ஸ்பெக்டரின் ரிப்போர்ட்டின் பேரிலும் அங்கு மாடல் பார்ம் [Model farm] நடத்துவதை நிறுத்திவிட்டார்கள். இப்போது மீண்டும் அதே நிலத்தை ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் குத்தகைக் கொடுத்து எடுத்து 25 ஏக்கர்களுக்கு 7,500 ரூபாய் குத்தகை என்று பேசி ஒப்பந்தம் செய்து அதில் இப்போது ஸீட் பார்ம் [Seed farm] நடத்தி வருகிறார்கள். மாடல் பார்ம் [Model farm] நடத்த முடியாத ஒரு இடத்தில் எப்படி ஸீட் பார்ம் [Seed farm] நடத்த முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இது தவிர சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். விவசாய பண்ணைகள் நடத்துவதற்கு 25 ஏக்கர் ஒரே மாதிரி நிலமாக கிடைக்காது, அம்மாதிரி இருக்காது என்றும் சொன்னார்கள். சாதாரணமாக [Irrigation tank] ஏரிகள் தண்ணீர் மூலம் பயிர் செய்யப்படுகிற இடங்களில் இம்மாதிரியான நன்செய் நிலங்கள் சுமார் 200 ஏக்கர்கள் வரை ஒரே மாதிரி பூமியாக இருப்பதுண்டு. ஆனால் சில இடங்களில் கொஞ்சம் மானாவாரியாகவும், இறவை [Baling wet or garden] நஞ்சையாகவும், புஞ்சை நிலங்களாகவும் இருக்கின்றன. சில விவசாயிகள் சர்க்காருக்கு நன்செய் நிலத்தை கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு சரியானபடி குத்தகை கிடைப்பதில்லை. இது மாத்திரமல்ல. பெரும்பாலும் அதிக நிலமுள்ளவர்கள் பயிர் செய்யாமல் ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் 400 ரூபாய் என்று குத்தகைக்கு விட்டுவிட்டு சும்மா இருந்து விடுகிறார்கள். ஆகவே சர்க்காருக்கு இம்மாதிரியான நிலங்கள் அவசியப்பட்டால் Land Acquisition ஆக்ட் பிரகாரம் எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக பல இடங்களில் லோக்கல் டெவலப்மெண்ட் வொர்க்ஸ் [Local Development Works] திட்டத்தின்கீழ் கிராமங்களில் பல ரோடுகள் போடப்பட்டு வருகிறது. பத்து மைல் தூரத்திற்கு ரோடு போடவேண்டுமென்றால் முதலாவது எட்டு மைல் தூரம் ரோடு போட்ட பிறகு பின்னால் இரண்டு மைல் தூரம் ரோடு போடுவதற்கு தனியார் நிலங்களில் போடவேண்டியிருக்கிறது. அப்போது ரோடு போடுவதற்கு அந்த நில சொந்தக்காரர்கள் நிலத்தைக் கொடுக்க மறுத்துவருவதாக தெரிகிறது. ஆகவே அப்படி மறுக்கப்படுகிற நிலங்களை Central Land Acquisition ஆக்ட் பிரகாரம் எடுத்து பூர்த்தி செய்யப்படாத ரோடுகளை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் உடனே எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதமாக பல கிராமங்களிலும் முக்கால் வாசி வேலை தீர்க்கப்பட்டிருக்கும் ரோடுகளை பூர்த்தி செய்ய வேண்டும். இது தவிர நிலங்களை சர்க்காருக்கு தற்காலிகமாக கொடுத்தால் திரும்பி குடியானவர்களுக்கு கொடுக்கும்போது அவர்களிடம் Increased efficiency-க்காக பணம் கேட்கப்பட்டு வருகிறது. ஆகவே இவ்விதமாக பணம் கேட்பதால் குடியானவர்கள் சர்க்காருக்கு நிலம் கொடுப்பதற்கு தயங்குகிறார்கள். இவ்விதமாக குடியானவர்களிடம் தண்டம் விதிப்பதைப் போல் பணம் வாங்குவதை நிறுத்தவேண்டும். சர்க்கார் குடியானவர்களின் நிலத்தை எடுத்து பின்னால் திருப்பி கொடுக்கும்பொழுது இவ்விதமாக பணம் கேட்பது நியாயமல்ல. ஆகவே இந்த முறை நிற்கவேண்டும். மற்றப்படி நஷ்டஈடு சரியாக விவசாயிகளுக்கு கோர்ட்டுக்கு போக வேண்டும் என்ற நிலைமை இருக்கக்கூடாது. அப்படி ஏற்பட்டால் கோர்ட்டிலிருந்து முடிவுகள் வருவதற்கு காலதாமதம் ஏற்படலாம். ஆகவே அது மாதிரி ஒன்றும் அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

உள்ளபடியே நியாயமாக சில நிலங்கள் வேண்டும் என்று சொன்னால் வருஷவாரியாக குடியானவர்களுக்கு 200 ரூபாய் தானமாக கொடுப்பதுபோல் கொடுத்தால் நன்மையாக இருக்கும். இந்த இரண்டொரு விஷயங்களை சர்க்கார் கவனிக்க வேண்டியது அவசியம் என்று சொல்லிக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

[20th December 1956

Sri P. VENKATESHA SHOLAGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மசோதாவின் பிரகாரம் சர்க்கார் சில நிலங்களை எடுத்துக் கொண்டு மாதிரிப் பண்ணைகளையும் விதைப் பண்ணைகளையும் ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். அங்கங்கே விவசாயப் பண்ணைகளை ஆரம்பித்து விவசாயிகளுக்கு சௌகர்யம் செய்யும் அளவில் ஆரம்பிக்கப் போவதாக சொல்லுகிறார்கள். இன்றைய தினம் நாட்டில் சர்க்கார் கொடுக்கும் விதைகள் சரியானபடி இல்லை என்றும் அதை வாங்கி விதைத்தால் அவைகள் முளைக்கவில்லை என்றும் ஒரு விதமான அபிப்பிராயம் இருந்து வருகிறது. ஆனால் தனிப்பட்டவர்கள் வைத்து நடத்தி அதன் மூலம் விநியோகம் செய்யும் விதைகள் முதல் தரமானதாக இருப்பதாகவும் அதனால் சர்க்கார் விதைகளை வாங்குவதில் நன்மை இல்லை என்றும் சொல்லிக்கொண்டுவருகிறார்கள். ஆகவே சர்க்கார் மாதிரி பண்ணைகளை ஆரம்பிக்கும்போதும் விவசாயப் பண்ணைகளை ஆரம்பிக்கும்போதும் நல்ல விதைகளாக பொறுக்கி எடுத்து அவைகளை விவசாயிகளுக்குக் கொடுக்கும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல முறையில் விதைகளை எடுத்து அவைகளை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு உதவியாக இந்த சட்டம் இருக்கும். அதன்மூலம் இந்த சட்டம் விவசாயிகளுக்கு பயன்தரக்கூடியதாக இருக்கும். மற்றும் அந்த அந்த இடங்களில் மாதிரிப் பண்ணைகளை அமைத்து நல்ல முறையில் விவசாயத்தை ஆரம்பித்து அதன் மூலம் விவசாயிகளுக்கு எப்படி நல்ல முறையில் விவசாயம் செய்யவேண்டும் என்பதையெல்லாம் சொல்லிக் கொடுத்தால் நன்மையாக இருக்கும். ஆனால் இப்பொழுது இருக்கும் சட்டத்தைப் பார்த்தால் எங்கே 25 எக்கர் நிலம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் இப்படிப்பட்ட பண்ணைகளை ஆரம்பிப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படி இருந்தால் விவசாயிகள் அந்த அந்த இடங்களுக்குச் சென்று நல்ல விவசாயம் எப்படிச் செய்வது என்று அறிந்து கொள்ள முடியாமல் பழைய முறையிலேயே விவசாயத்தைச் செய்ய முயற்சிப்பார்கள். உண்மையிலேயே விவசாயிகளுக்கு நல்ல முறையில் எப்படி விவசாயம் செய்வது என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதினால் இப்படிப்பட்ட மாதிரிப் பண்ணைகளை ஒவ்வொரு பிர்க்காவிலும் அமைக்கவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படி ஒவ்வொரு பிர்க்காவிலும் அமைத்தால் தான் அங்குள்ள விவசாயிகள் அங்கங்கேயே எப்படி நல்ல முறையில் சாகுபடி செய்வது என்பதைக் கற்றுக் கொண்டு அதன்படி விவசாயம் செய்ய முற்படுவார்கள்.

மாதிரிப் பண்ணைகளுக்கு வேண்டிய நிலங்களை அங்கங்குள்ள மிராசுதார்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப் போவதாகச் சொல்லுகிறார்கள். அதனால் அந்தந்த நிலங்களை வெள்ளாமை செய்து கொண்டு வரும் விவசாயிகளுடைய நிலைமை என்ன என்பதையும் சர்க்கார் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். விவசாயிகளுடைய கதி என்னவாகும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதை கனம் மந்திரி அவர்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். பதில் சொல்லும் போது கனம் மந்திரி அவர்கள் இதற்கும் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இப்படிப்பட்ட மாதிரிப் பண்ணைகளை அமைக்கும் போது அங்குள்ள நிலங்களை எடுத்துக் கொள்வதாக இருந்தால் சுமார் இரண்டு மா அல்லது மூன்று மா வைத்துக் கொண்டிருக்கக்கூடியவர்களுடைய கதி என்ன என்பதை ஆராய வேண்டும். அவர்கள் இந்த நிலத்தை வைத்துக் கொண்டு சாகுபடி செய்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த தேகப் பிரயாசையின்மூலம் பயிரிட்டு விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய கதி என்ன என்பதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் போலவே கனம் கருத்திருமன் அவர்கள் சொன்ன மாதிரி செய்தால் சர்க்காருக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெரிய மிராசுதார்கள் தங்களுடைய நிலங்களைக் குத்தகைக்குக் கொடுக்க முன் வருவார்கள். அவர்களுக்குக் குத்தகைத்

20th December 1956] [Sri P. Venkatesha Sholagar]

தொகையைக் கொடுத்தால் போதும், குத்தகைக் கிடைத்தால் போதும் என்று நினைத்து நிலங்களைக் கொடுக்க முன் வருவார்கள். இவைகளையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். சிறிய மிராசுதார்களுக்கு பாதகம் ஏற்படும் வகையில் நிலங்களை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லிக்கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri R. KRISHNASWAMI NAIDU : கனம் உதவி அக்ராசனாதிபதி அவர்களே, இந்த மசோதா சம்பந்தமாக கனம் அங்கத்தினர்கள் பேசிய பிறகு, பல விஷயங்களைக் கேட்டவுடன் எனக்குச் சில சந்தேகங்கள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட மாதிரிப் பண்ணைகளையும் விதைப் பண்ணைகளையும் அமைக்க வேண்டுமானால் பல மாதிரியான நிலங்கள் வேண்டியதாக இருக்கும். அதுவும் ஒரே இடத்தில் கிடைக்கும்படியாக இருக்க வேண்டும். நஞ்சை சாகுபடிக்கு என்றும், விதைக்க என்றும் பலவிதமான நிலங்கள் வேண்டியதாக இருக்கும் என்ற எண்ணம் விவசாய இலாகா அதிகாரிகளுக்கு இராது என்றே நான் கருதுகிறேன். சில தாலுக்காக்களில் குறைந்த பட்சம் வளம் இருக்கும். பருத்தி, எண்ணெவித்துக்கள் முதலியவைகள் மானாவாரி நிலங்களில் விவசாயம் செய்யக் கூடிய வித்துக்கள் இவைகளுக்கு மாதிரிப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கு வேறு விதமான நிலங்கள் வேண்டியதாக இருக்கும். நெல் வித்துக்கள் போன்றவைகளை சாகுபடி செய்வதாக இருந்தால் அதற்கு வேண்டிய மாதிரிப் பண்ணைகள் அமைப்பதற்கு தண்ணீர் வசதி வேண்டும். நஞ்சை நிலமாக இருக்க வேண்டும். ஓர் இடத்தில் செவல் நிலமாக இருக்கும். ஓர் இடத்தில் கரிசல் நிலமாக இருக்கும். ஒரே இடத்தில் பலவித சாகுபடிக்கும் தகுதியான நிலம் 25 எக்கர் கிடைப்பது என்பது சாத்தியமில்லை. ஓர் இடத்தில் நன்செய் நிலமாக இருக்கும், இன்னோர் இடத்தில் தோட்டக்கால் நிலமாகக் கிடைக்கலாம். இப்படி அந்தந்த நிலங்களுக்குத் தகுந்தாற் போல் நிலங்கள் கிடைக்கும். அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி மாதிரிப்பண்ணைகளையும் வித்துப் பண்ணையையும் அமைத்தால் அங்கங்குள்ள விவசாயிகள் அவைகளை நேரடி பார்வையிட்டு அவைகளை தெரிந்து கொண்டு விவசாயம் செய்வதற்கு சௌகர்யமாக இருக்கும். அதற்கு வேண்டிய திட்டமிட வேண்டும். நெல் சாகுபடிக்கு நஞ்சை நிலம் வேண்டும். மற்றவைகளுக்கு வேறு விதமான நிலம் வேண்டும். அதனால் தனித்தனியாக மாதிரிப் பண்ணைகளை அமைத்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படி அமைத்தால் தான் அங்கங்குள்ள விவசாயிகள் அவைகளைப் பார்த்து தெரிந்து கொள்வார்கள். விவசாயம் செய்வதற்கும் சாதகமாக இருக்கும்.

அடுத்தபடியாக நிலங்களைத் தேர்ந்தெடுக்கும் போது மற்றொரு முக்கியமான விஷயத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். பழைய முறை விவசாயம் செய்த வயது வந்தவர்கள் அதே முறையில் தான் விவசாயம் செய்ய முற்படுவார்கள். அந்த முறையிலே அவர்கள் விவசாயம் செய்வதற்குத் தான் பழகி இருப்பார்கள். அவர்களுக்குப் புதிய முறைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டுமானால் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் எல்லோரும் பழகிய முறையிலேயே விவசாயம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளவர்களாக இருப்பதால் அவர்கள் புதிய முறையைக் கற்றுக் கொள்ளப் பிரியப்பட மாட்டார்கள். ஆகவே, கூடுமான வரையில் புதிய சாகுபடி முறைகளை ஆரம்பிக்க வேண்டுமானால் அவைகளை எங்கெல்லாம் சீனியர் ஆதாரக் கல்வி பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவோ அந்த இடங்களில் அவைகளை ஆரம்பிக்கலாம் என்று தோன்றுகிறது. சீனியர் ஆதாரக் கல்விப் பாடசாலைகள் இருக்கும் இடங்களில் இதை அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அந்தப் பகுதிகளில் சேர்ந்தாற் போல் 25 எக்கர் நிலம் கிடைத்தால் அதைப் பயன்படுத்திக் கொண்டு அங்கேயே புது முறை விவசாயத்தை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு புது முறை விவசாயத்தை மாணவர்கள் சிறு பிராயம் முதலே தெரிந்து கொள்வதற்கும் வசதியாக இருக்கும். அப்படி ஆரம்பித்தால் மாணவர்கள் புதிய முறையைக் கற்றுக் கொள்வதற்கும் அமமுறையை

[Sri R. Krishnaswami Naidu] [20th December 1956

அவர்கள் வாழ்க்கையில் பின்பற்ற வாய்ப்பு ஏற்படும். அதனால் கூடுமான வரையில் ஆதாரக் கல்விப் பள்ளிக் கூடங்கள் இருக்கும் இடங்களில் இந்த மாதிரிப் பண்ணைகளை ஆரம்பித்தால் நலம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். அங்குதான் மாணவர்கள் இதை நன்கு தெரிந்து கொண்டு அதை மற்றவர்களுக்குத் தெரிவிக்க வசதியாக இருக்கும். அதன் மூலமாக விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கும். அதையும் சர்க்கார் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவின் முக்யமான நோக்கம் என்னவென்றால் சாதாரணமாக விவசாயப் பண்ணை மாதிரி வித்துப் பண்ணை முதலியவைகளை எங்கே அமைக்க வேண்டும் என்ற முறையில்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் விவசாய அபிவிருத்திக்கு எவ்வளவு விதைகள் வேண்டும் என்பதற்காகத் தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்படிப் பண்ணைகளை அமைக்கும்போது விவசாயிகளுக்கு நல்ல நெல் வித்துக்களை கொடுக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ சோமகர் சொன்னார். இப்பொழுது சுத்தமாகப் பொறுக்கி எடுத்த விதைகள் சர்க்கார் பண்ணைகளிலிருந்து கிடைப்பதில்லை என்றும் சொன்னார். இப்பொழுது நல்ல வித்துக்கள் கிடைக்கவில்லை என்ற புகார் வந்திருப்பது அரசாங்கத்திற்கு தெரிந்த பிறகு தான் சுத்தமான வித்துக்களை வழங்க வேண்டுமென்பதற்காகவே இப்படிப்பட்ட திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். 400 மாதிரிப் பண்ணைகளையும் பொறுக்கு விதைப் பண்ணைகளையும் அமைத்து வித்துக்களை உற்பத்தி செய்து அவைகளை எங்கே வழங்குவது என்பதாக திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதற்கென்று 25 ஏக்கர் உள்ள நிலத்தை எடுத்து அங்கு 400 பண்ணைகளை அமைக்க வேண்டும் என்பது தான் இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நம் ராஜ்யத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம். இந்த பண்ணைகளை அமைப்பதற்கு அவசியம் ஏற்பட்டால் அதற்கு வேண்டிய நிலம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த மசோதாவின் முக்கியமான நோக்கம். அதன் பிறகு எப்படி விதை உற்பத்தி செய்ய வேண்டும்? அதற்கு 25 ஏக்கர் இருக்க வேண்டும் என்பது மட்டும் அல்ல 50 ஏக்கர் சேர்ந்தாற் போல் கிடைத்தாலும் இன்னும் நலமாக இருக்கும். இதற்கு செலவும் அதிகமாக ஆகாது. எங்கேயாவது 50 ஏக்கர் நிலம் சேர்ந்தாற்போல் கிடைத்தாலும் அதை வைத்துக் கொள்ளலாம் என்பது தான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். 25 ஏக்கர் கிடைக்காத இடங்களில் இரண்டு பிரிவாக வைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

இருபத்து ஐந்து அல்லது 50 ஏக்கருக்கு மேல் உள்ளவர்களிடமிருந்து தான் நாம் நிலத்தை **acquire** செய்யப் போகிறோமாதலால், எதிரே உட்கார்ந்திருக்கும் அங்கத்தினர்கள் பயப்படுவது போல், சிறிய விவசாயிகளுக்கு கொஞ்சம் கூட பாதகம் ஏற்படாது. ஒரு ஏக்கர் அல்லது இரண்டு ஏக்கர்கள் வைத்திருக்கக் கூடியவர்களிடமிருந்து நிலம் **acquire** செய்ய வேண்டிய நிமித்தமில்லை. அவ்வாறு எடுத்துக் கொள்வதினாலும் பயன் கிடையாது. கூடியவரை அந்தந்தப் பிராந்தியங்களிலேயே ஒவ்வொரு ஜில்லாவுக்கும் 4 அல்லது 5 விதைப் பண்ணைகளிருக்கும். அந்தந்தப் பிராந்தியங்களுக்கு ஏற்றாற் போல், மாதிரி விதைப் பண்ணைகள் வைத்து நடத்தலாம். நிலம் கிடைப்பதிலே ஒன்றும் கஷ்டமில்லை. அதிகாரிகள் போதிய தகவல்கள் கொடுக்காததின் காரணத்தினால் தான் சில இடங்களில் நிலம் கிடைக்காமல் போய்விட்டது என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ கருத்திருமன் சொன்னார்கள். அதுவுமிருக்கலாம். எனக்கும் நேராகத் தெரியும். அதிகமான நிலம் உள்ள விவசாயிகளிடம் நானே நேரில் சொன்னேன். " நீங்கள் 25 ஏக்கர் நிலம் பொது நலத்தை உத்தேசித்து ஏன் கொடுக்கக் கூடாது? இது சர்க்கார் சொந்த வியாபாரம் செய்வதற்காக அல்ல. விவசாயத்தைப் பெருக்கினால்தான் நாட்டின் செல்வம் வளரும். நான் சும்மா கேட்கவில்லை. குத்தகைக்குத்தான் கேட்கிறேன்,"

20th December 1956] [Sri M. Bhaktavatsalam]

என்று எல்லாம் சொன்னேன். எவ்வளவு தூரம் நான் சொன்ன போதிலும், தாட்சண்யத்திற்காக சரி என்று சொல்லிவிட்டு, பிற்பாடு மறுத்து விட்டார்கள். ஆகவேதான், இம்மாதிரி ஒரு சட்டத்தின் மூலம், சர்க்கார் அதிகாரம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கருதினோம். தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக எப்பொழுது இதை உபயோகிக்க வேண்டிய அவசிய மேற்படுகிறதோ, அப்பொழுதுதான் உபயோகிப்போம்.

பல ஜில்லாக்களில் விவசாயிகளாகவே, ஒத்துழைப்பு மனப்பான்மையுடன், நிலம் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு, என்னுடைய பாராட்டுதலையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எங்கு அத்யாவசியமாகத் தேவை ஏற்படுகிறதோ, அங்கேதான் இந்தச் சட்டம் பிரயோகிக்கப்படும். நஷ்ட ஈட்டைப் பற்றி பல அங்கத்தினர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். நியாயமான நஷ்டஈடுதான் கொடுக்கப் படும். அதற்காக **Arbitrator**-கள் நியமிக்கப்படுவார்கள். சர்க்காருக்கும் அப்பீல் செய்வதற்கு வகை செய்யப்படும். சில இடங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஹைகோர்ட்டுக்குக் கூட அப்பீல் செய்து கொள்ளலாம். கீழ் பவானித் திட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் சர்க்கார் கொடுத்ததற்கு அதிகமாக ஹைகோர்ட்டு நஷ்ட ஈடு கொடுத்தது என்று சொல்லப்படுகிறது. ஹைகோர்ட்டு எவ்வளவு நஷ்டஈடு கொடுப்பார்கள் என்பதை எதிர் பார்த்து நாம் நஷ்ட ஈடு கொடுக்க முடியாது. நியாயமான அளவுக்குத்தான் நஷ்டஈடு கொடுக்கமுடியும். நஷ்டஈடு போதாது என்று ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். ரொம்பவும் தாராளமாக கொடுத்து விட்டால் அதற்கப்புறம் பேச்சே இல்லை. நஷ்டஈடு குறைவாய் இருந்தால் அதற்கு வேண்டிய பரிகாரம் இந்த மசோதாவிலேயே இருக்கிறது.

இந்த மசோதாவை கனம் அங்கத்தினர் யாவரும் மனப்பூர்வமாக வரவேற்பதை பாராட்டுகிறேன். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த மசோதாவின் மூலம் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு உகந்த முறையில் மாதிரி விதைப் பண்ணைகளை அமைத்து வெற்றிகரமாக நடத்துவதற்கு வழிஏற்படும் என்று நம்புகிறேன். இந்த நிலத்தைக் கொடுப்பதினால் ஒருவருக்கும் அசௌகர்யம் ஏற்படாது. நியாயமான விலைக்குத்தான் நிலத்தைக் கேட்கிறோம். குத்தகைக்குத் தான் கேட்கிறோம். " அரசாங்கம் கேட்கிறார்களே எதற்காக கொடுக்கவேண்டும். நாளைக்கு என்ன ஏற்படுமோ " என்று பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஒரு சிலருக்கு கொஞ்சம் அசௌகரியம் ஏற்பட்டாலும், நாட்டின் பொது நலத்தைக் கருதி அவர்களுடைய சொந்த நலத்திற்காகவே என்று உணர்ந்து எல்லோரும் இந்த மசோதாவை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Requisitioning and Acquisition of Immovable Property Bill, 1956, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3, 4, 5 and 6 were put and carried.

Clause 7.

Sri T. GANAPATHY : Mr. Deputy Speaker, Sir, I move the following amendment which stands in my name :—

" In sub-clause (1), *after* the words 'a public purpose' occuring in line 8, on page 5, *add* the words 'including the formation of new roads'."

[20th December 1956

SRI M. CHINNATHAMBI THEVAR: Sir, I second it.

DEPUTY SPEAKER: Amendment moved—

"In sub-clause (1), *after* the words 'a public purpose' occurring in line 8, on page 5, *add* the words 'including the formation of new roads'."

*SRI T. GANAPATHY: 7வது clause-ஐ படித்தால் பொதுவாக விவசாயத்திற்கு மட்டுமே நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் என்று தொனிப்பதாக தோன்றுகிறது. மற்ற எல்லா வகையான வேலைகளுக்கும், ரோடு போடுவதற்கும் என்று மசோதாவில் குறிப்பாக சொல்லப்படவில்லை. பஞ்ச நிவாரண வேலைகளுக்காக இனாம் நிலங்களையும், மற்றும் கோவில் நிலங்களையும் ஆர்ஜிதம் செய்து, ரோடுகள் போடலாம் என்று sanction செய்து ஒரு வருட காலமாகியும் இவ்வேலை ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக ரோடுகள் போடுவதற்கு வகை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் தான் நான் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, this amendment is beyond the scope of this Bill. For the purpose of forming new roads we do not take land on lease and there is the machinery for acquiring the necessary land for road purposes. If that is not adequate, we may consider the question separately. This Bill relates particularly to the acquisition of land and certain other property for the purpose of agricultural development. Therefore, I would request the hon. Member not to press his amendment.

The amendment was, by leave withdrawn.

Clause 7 was put and carried.

Clause 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23 and 24 were separately put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Madras Requisitioning and Acquisition of Immovable Property Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Requisitioning and Acquisition of Immovable Property Bill, 1956, be passed."

SRI P. RAMAMURTHI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சர்க்கார் ஏற்படுத்தும் ஆராய்ச்சி பண்ணைகளுக்கும், விதைப் பண்ணைகளுக்கும் கொடுக்கவேண்டும் என்பதைப் பற்றி யாருக்கும் நிலம் எந்தவிதமான அபிப்பிராய பேதம் கிடையாது. இம்மாதிரி ஒரு அதிகாரம் இருக்கவேண்டும் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் பொது விவாதத்திற்கு பதில் அளிக்கையில் கனம் மந்திரி சொன்ன சில வார்த்தைகள் பயத்தை உண்டாக்குகின்றன. உதாரணமாக சிலருக்கு கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டாலும் நாட்டின் நலத்தை உத்தேசித்து தியாகம் செய்யவேண்டியிருக்கும் என்று சொன்னார்கள். சொல்லும்பொழுது நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனால் மனிதருக்குள்ளேயே தாரதாம் இருக்கிறது. உதாரணமாக இரண்டு அல்லது மூன்று எக்கர் வைத்திருக்கக் கூடியவர்கள் தங்களிடம் இருக்கும் நிலத்தைக் கொடுத்துவிட்டு சாப்பாட்டுக்கு வேறு வழியில்லாமல் கொடுக்கப்படு

20th December 1956] [Sri P. Ramamurthi]

Compensation-ஐ பெற்றுக்கொண்டு கஷ்டப்பட முடியாது. ஆனால் 100 எக்கர் நிலம் வைத்திருப்பவர், ஒருவிதமான நஷ்ட ஈடும் பெற்றுக் கொள்ளாமலே கொஞ்சம் நிலத்தை சர்க்காருக்கு கொடுத்தால் அவர் பிரமாதமாக கஷ்டப்படப்போவதில்லை. நில ஆர்ஜித விஷயத்திலும், நஷ்ட ஈடு விஷயத்திலும் சர்க்கார் இதை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கை நடத்துவதற்கு வேறு வழியில்லாமல் இருக்கும் ஏழை மக்களிடமிருந்து நிலத்தை ஆர்ஜிதம் செய்ய சர்க்கார் முயற்சிக்க கூடாது. இது விஷயமாக நமது சர்க்கார், அதிகாரிகளுக்கும் ஒரு directive அனுப்ப வேண்டும். சர்க்கார் அதிகாரிகள் சட்டத்தில் உள்ள வாசகத்தைதான் பார்ப்பார்கள். சட்டத்தின் நோக்கம் என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள். ஆகவே சாத்தியமான வரையில் வேறு வழியில்லாமல் இருக்கக் கூடிய விவசாயிகளிடமிருந்து நிலத்தை ஆர்ஜிதம் செய்யக்கூடாது. விவசாயத்துறையில் ஆராய்ச்சிப் பண்ணைகள் ஏற்படுத்தி துரிதமான முன்னேற்றம் அடையச் செய்வதற்கு இந்த சட்டம் உபயோகப் படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே எதிர்க் கட்சி தலைவர் பத்து எக்கருக்குட்பட்டு நிலம் வைத்திருப்பவர்களை சிறிய விவசாயிகள் என்று கருதுகிறார்கள் என்று நம்புகிறேன். சர்க்காருக்கு மாதிரிப் பண்ணைகள் நிறுவத்தான் நிலம் வேண்டுமென்று முன்பே சொன்னேன். குறைந்தது 25 எக்கர் நிலம் வேண்டும். 2 அல்லது 3 எக்கர்கள் நிலம் எங்களுக்கு பயன்படாது. யாரையாவது கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எடுத்துக் கொண்டாலும்கூட அந்த நிலம் பிரயோசனப்படாது. 100 எக்கர் வரையிலும் நிலம் வைத்திருப்பவர்களே இதுவரையிலும் நிலத்தைக் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். 500 எக்கரா வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். 600 எக்கரா வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத்தான் இருபது எக்கரா கொடுங்கள் என்று கேட்கிறோம். அதைக் கொடுப்பதற்கு அழும்பு பிடிக்கிறார்கள். அதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறதே தவிர இரண்டு எக்கரா, மூன்று எக்கரா வைத்துக்கொண்டிருக்கிற ஏழைகளிடமிருந்து நிர்ப்பந்தமாக எடுத்துக் கொள்வதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் பயம் கொள்ள வேண்டாமென்று சொல்லிகொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Requisitioning and Acquisition of Immovable Property Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

II.—ANNOUNCEMENTS BY THE DEPUTY SPEAKER—*cont.*

(1) MESSAGE FROM THE GOVERNOR.

DEPUTY SPEAKER: I have to announce to the House the following message, dated 19th December 1956, received from the Governor of Madras:—

"In pursuance of clause (1) of Article 207, read with sub-clause (*a*) of clause (1) of Article 199 of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation for the introduction in the Madras Legislative Assembly of the Madras Inams (Assessment) Bill, 1956."

[20th December 1956

V.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS INAMS (ASSESSMENT) BILL, 1956.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg to introduce the Madras Inams (Assessment) Bill *, 1956, and move—

"That the Bill be taken into consideration at once."

Sir, I may bring to the notice of the House that there are special classes of lands called the 'inam lands' which enjoy certain privileges in the matter of payment of assessment. The holders of some of these inam lands pay practically a nominal land revenue; in other cases, the holders pay land revenue at concessional rate. The question of levying full assessment on these kinds of lands has been under the consideration of the Government for a considerable time. As there is no special reason why the holders of these inam lands should continue to enjoy the privelege of paying a lesser assessment, the Government decided to levy full assessment on all these inam lands.

As assessments are levied with reference to fasli year, it is proposed to give retrospective effect to this Bill. It will be deemed to have come into force with effect from 1st July 1956.

The Bill will apply only to the inams which become estates by virtue of the Madras Estates Land (Third Amendment) Act, 1936 and minor inams. In respect of the 1936 inams, assessment will be levied only in respect of private lands held by the inamdar.

For the purpose of this Bill the following classes of lands are excluded from its purview :—

(*a*) Inam estate to which the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, apply or may be applied;

(*b*) cultivable lands in an estate held by a person other than the landholder;

(*c*) land granted by landholder on service tenure either free of rent or on favourable rates of rent if granted before the passing of the Estates Land Act or free of rent if granted after that date, so long as the service tenure subsists;

(*d*) beds and bunds of tanks and of supply drainage surplus or irrigation channels;

(*e*) threshing floor, cattle stands, village sites and lands set apart for the common use of the villagers; and

(*f*) waste lands and forests.

Some of the other main features of the Bill are the following :

The following assessment on an inam land in a ryotwari village will be levied at the rate set out in the settlement notification for lands of similar description and with similar advantages in the same village, and if there is no such lands, in the nearest ryotwari village where similar lands exist :

* Published in the *Fort St. George Gazette*, dated 5th December 1956.

20th December 1956] [Sri M. A. Manickavelu]

On other inam lands the full assessment will be levied at the rates set out in the settlement notificaion for lands of a similiar description and with similar advantage in the nearest ryotwari village where conditions are generally similar to those obtaining in the village in which the inam lands is situated.

In the case of an inam which became an estate by virtue of the Madras Estates Land (Third Amendment) Act, 1936, the landholder will have to pay full assessment on the inam in addition to any quit rent, jodi, kattubadi or other amount of a like nature payable by him to the State Government, immediately before the provisions of this Bill come into force.

In the case of other inams of levy of full assessment will be in lieu of the quit rent, jodi, or kattubadi or other amount which the landholder has to pay to the State Government.

Provision has been made for an appeal to the District Collector against the rate of assessment ordered to be levied by the Revenue Divisional Officer or any other authorised officer. The order of the District Collector shall be final.

Provision has also been made for the survey of inam lands.

From these it will be seen that the main category of lands which will come under the purview of this taxation will be the private lands of the inam holder in the 1936 inams and other lands under the Minor Inams. That is the scope of the Bill, Sir.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Inam (Assessment) Bill, 1956, be taken into consideration at once."

SRI K. VINAYAKAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதாவின்படி நமது ராஜ்யத்தில் இருக்கும்படியான இனாம் நிலக்காரர்கள் குறைவாக வரி கொடுப்பதாகவும், மற்ற ரயத்வாரி நிலக்காரர்களைப் போல வரி அவர்களும் கட்டும்படியாகச் செய்ய அதிகாரத்தைக் கோரி இருப்பதாகவும் கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். ரயத்வாரி நிலக்காரர்களை விட இனாம் நிலக்காரர்கள் குறைவாக வரி கட்டுவதற்குக் காரணம் எதுவும் இல்லை என்றும் சொன்னார். இந்தச் சட்டப்படியே இனாம் நிலக்காரர்களுக்கும் ரயத்வாரி நிலங்களைப் போலவே வரி போடுவதனால் சர்க்காருக்கு உபரியாக எவ்வளவு பணம் கிடைக்கும் ? இந்த இனாம் நிலங்கள் எத்தனை விஸ்தீரணம் உள்ளன ? இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படுகின்ற இனாம்தாரர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மசோதா நிறைவேறினால் சுமார் நாற்பத்து மூன்று, நாற்பத்து ஐந்து (45) லட்சம் ரூபாய் வரலாம். இனாம் நிலங்களின் விஸ்தீர்ணம் எவ்வளவு என்று கனம் அங்கத்தினர் கேட்டார். நான் அவருக்கு இப்பொழுதே புள்ளிவிவரங்களுடன் பதில் சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை. இப்பொழுது இந்த சட்டப்படி வருகிற இனாம் நிலங்கள் எல்லாம் 1936 இனாம் என்று சொல்கிறோமே அது தான். அந்த இனாம் பொறுத்த வரையில் ரெண்ட் ரிடெக்ஷன் ஆக்ட் உரியதாகும். அபாலிஷன் ஆக்ட் உரியதாக இல்லை. பொதுவாக நாலில் ஒரு பங்கு இனாம் நிலம் இருக்கும் என்று சொல்லலாம். மைனர் இனாம்

[Sri M. A. Manickavelu] [20th December 1956

மிகக் குறைவாகத்தான் இருக்கும். இப்படித்தான் பொதுவாகச் சொல்ல முடியுமே தவிர புள்ளி விவரங்களோடு சொல்வதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Inams (Assessment) Bill, 1956, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

DEPUTY SPEAKER : The motion is—

"That clause 2 do stand part of the Bill."

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR : Sir, In one clause, the word 'prescribed' has been used. Whenever the word 'prescribed' is used in any Act, it is the usual practice to define that word in the section containing the definitions of the terms used in the Act. Therefore, I want that there should be a definition with regard to the word 'prescribed'. Hence I have suggested the following amendment :—

"*After* sub-clause (*d*), *add* the following as new sub-clause (*dd*) :—

'(*dd*) "prescribed" means prescribed by rules.' "

Sir, I move the above amendment.

DEPUTY SPEAKER : For want of a seconder, the amendment of Mr. Krishnaswamy Ayyangar fall through.

DEPUTY SPEAKER : The question is—

"That clause 2 do stand part of the Bill."

Clause 2 was put and carried.

Clauses 3, 4, 5, 6, 7, 8, 9, 10 and 11, clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That the Madras Inams (Assessment) Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Inams (Assessment) Bill, 1956, be passed."

SRI K. VINAYAKAM : இந்த மசோதாவைப் பிரேரிக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியபடி நிலங்கள் எல்லாவற்றுக்கும் ஒரே விதமான வரி இருக்க வேண்டுமென்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ரயத்துவாரி நிலத்திற்கு ஒரு வரி, இனும் நிலத்திற்கு ஒரு வரி என்ற வேறுபாடுகள் இல்லாமல் இருப்பது அவசியம். ஆனால் இந்தமாதிரியாக சின்னஞ்சிறு மசோதாக்களைக் கொண்டுவருவதற்குப் பதிலாக மாகாணத்திலுள்ள எல்லா நிலங்களையும் எடுத்துக் கொண்டு, அவற்றின் தரத்தை கவனத்தில் எடுத்துக் கொண்டு ஒரே ரேட்டாக நிலங்களுக்கு விதிக்க சர்க்கார் ஏன் ஒரு பூர்ணமான மசோதா கொண்டுவரக் கூடாது என்று

20th December 1956] [Sri K. Vinayakam]

கேட்கிறேன். அப்படி இல்லாமல் சின்னஞ்சிறு மசோதாக்களை அடிக்கடி கொண்டு வருவதனால்தான் பலவிதமான சந்தேகங்கள் வருகின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இங்கே ஒன்றும் சந்தேகத்திற்கு இடம் இல்லை. நமது தேசத்தில் நில விஷயமாக பலவிதமான டென்யூர்ஸ்கள் இருக்கின்றன. அதனால்தான் இம்மாதிரி பல மசோதாக்கள் கொண்டுவர நேரிடுகிறது. இந்த திருத்த மசோதாவில் குறிப்பிட்டுள்ள இனும் கூட 1936 இனும் என்று சொல்லப்படுகிறது. இதை நியாயமாக எஸ்டேட் அபாலிஷன் ஆக்ட் பிரகாரமே செல்லும் என்றுவிட்டால் இந்த மசோதாவிற்குத் தேவை இல்லை. ஆனால் அப்படிச் சொல்வதற்குச் கொஞ்ச காலம் ஆகும். அதற்காகத்தான் இந்த இனும்தாரர்கள் ரயத்துவாரி நிலக்காரர்களைப் போலவேயாவது வரி கட்டட்டும் என்பதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். இதை ஆதரிக்க வேண்டுமென்பதாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Inams (Assessment) Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow. (1-5 p.m.).

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

201. *Notification issued with G.O. Ps. No. 4015, Revenue, dated 3rd November 1956, amending rule 10 of the Madras Cultivating Tenants Protection Rules, 1955, regarding collection of process fees by the Revenue Divisional Officer. [Laid on the table under section 7 (2) of the Madras Cultivating Tenants Protection Act, 1955.]*

20th December 1956

APPENDIX.

[Vide item IV on pages 259–261 supra.]

REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES ON THE QUESTION OF THE DEFINITION OF THE TERM "PRECINCTS OF THE HOUSE".

To

THE HONOURABLE THE LEGISLATIVE ASSEMBLY, MADRAS.

I, the Chairman of the Committee of Privileges, present this report on the question of the construction that should be put on the expression "precincts of the House" as regards this Legislative Assembly.

2. This question was referred to the Committee of Privileges on the 14th March 1955 (Appendix I) by the Speaker under Rule 187 of the Madras Legislative Assembly Rules. While referring the question the Speaker stated, that, as certain instances had come to his notice where a magistrate had, in one case, issued a bailable warrant against a member of the Assembly when the House was actually in session and in another case a constable had tried to serve a summons on a member within the Assembly building when the House was actually sitting, there was a chance, therefore, of legal process being served within the precincts of the House when the House was actually sitting, which would certainly be a breach of the privilege of the House, and that it was necessary to define the extent of the precincts in view of the location of the Library, the Canteen and Committee room in different places.

3. The Committee met on 31st March, 4th April, 15th July, 26th August, and 21st September 1955.

4. The Committee at its first sitting on 31st March 1955 which was inaugurated by the Speaker, wanted a note to be prepared on the subject. On 4th April 1955, the Committee considered the note prepared by the Legislature Secretariat (Appendix II) on what exactly the term "precincts of the House" meant. Precincts in England meant "within the building at Westminster or within the Palace Yard" which was a compact area. But in Madras, the Assembly Chamber is in one place, the Library in another place and the Committee room is in some other place. These buildings are connected by public thoroughfares and hence there was some difficulty in defining the term. As it was felt that information on the practice obtaining in other countries and the principle adopted there would be helpful in arriving at a decision on the question, the Committee decided to obtain information from the Commonwealth countries of Australia and Canada. The Committee also desired to know the opinion of the Advocate-General, and if necessary, that of Sri R. V. Krishna Ayyar, ex-Secretary to the State Legislature on the subject.

5. From the replies received (Appendices III to VI), the Committee noted that the precincts include not only the Chamber where the meeting takes place, but also the rooms where the associated offices and facilities are located. Further it is seen that all the associated offices and facilities are all located in one and the same building. The associated offices that are located in the Westminster Palace in England or the Parliament House in Canberra or the Parliament House in Ottawa are the Committee Room, Speaker's Chamber, Office of the Clerk of the House and the Office of the Secretariats. The associate facilities located are the Canteen and the Library. In one of the Australian States, the precincts extended to the Members' residence also in the Parliamentary grounds known as the 'Lodge'. Here the Chamber, the Canteen, the Ministers' rooms, the Post Office, the Party Rooms the Library and the Legislators' Hostels, were suggested to be included in the term 'precincts' as far as this Assembly was concerned. As the matter was complicated on account of the fact that these separate buildings were connected by public roads, the Committee considered whether the precincts could not be extended only to such of the buildings away from the Chamber which were subject to the control of the Speaker wherein the associated offices and facilities were located. By applying this test the Post Office and the Hostels had to be excluded as they were not under the control of the Speaker. It was contended that both the Hostels and the Post Office should also be considered as associated facilities and therefore included within the precincts, but the Committee decided that as the public had unrestricted access to these, it would not be proper to bring them under 'precincts'. The inclusion of the roads from the Assembly Chamber to the other buildings within the precincts was also considered. The Committee felt that the Advocate-General and Sri R. V. Krishna Ayyar should be heard before proceeding further in the matter.

6. At its meeting on the 26th August 1955 after hearing the Advocate-General and the ex-Secretary Sri R. V. Krishna Ayyar, the Committee considered what other offices apart from the Chamber, the Canteen, the Library and Committee room should be included. It decided that the definition of the term 'precincts' should be very liberal so as to avoid any scope for misconstruing even normal acts as an infringement of the privileges of the House. The question of including the Hostel within 'precincts' was again considered. In this connection it was pointed out that one should not claim the privilege merely because the residence of a member happened to be within the Government Estate, where the Assembly buildings were also situated. The Committee also considered the necessity of inclusion of the roads from the Assembly Chamber to the other buildings. If the roads are not included in the precincts the Committee felt that the members would not be able to use the associated offices and facilities.

7. The Committee, in view of the special circumstances in this State, has differentiated between a member and a stranger as far as the extent of precincts is concerned. In respect of a member

the precincts should include the roads also as otherwise the member will not be enabled to discharge his duties. As regards strangers, they are permitted into the Gallery only for witnessing the proceedings. The Library being reserved for members and other attached offices and facilities not being meant for strangers, the Committee was of the view that 'precincts' as far as strangers were concerned should be taken to mean only the Assembly Chamber.

8. The Committee after due consideration arrived at the following decisions :—

(1) "Precincts of the House" shall mean and include the entire Assembly buildings, the Ministers' rooms, the Library, the Canteen and the Committee Room together with the verandas and steps to these buildings and the pathways leading from the Assembly Chamber to the other aforesaid buildings in respect of members and, as far as strangers are concerned, 'precincts' means the Assembly Chamber including its verandas and steps.

(2) In so far as the persons summoned by a Committee of the House for any purpose whatsoever, they shall be deemed to be within the precincts of the House so long as they are within the Committee Room, its verandas and its steps.

9. The Committee therefore recommends to the House that the above may be approved.

GOVERNMENT ESTATE,
MOUNT ROAD, MADRAS-2,
24th September 1955.

P. T. RAJAN,
Chairman.

DISSENTING MINUTE.

We are agreeable to the majority view of the Committee, but for the exclusion of the Hostels and Party Rooms from the definition of the "precincts of the House". Arguments raised not to include hostels in the definition of precincts are that the hostels are not under the control of the Speaker, and that in case they are included they may become an asylum for offenders who can enter those buildings at any time without leave from the Speaker. This is a flimsy agreement inasmuch as the canteen or the pathways that are included in the precincts offer no restriction for the entry of strangers and they also are not under the exclusive control of the Speaker. The Government can at any time vest the control of any building in the Speaker and this House is fully competent to put any construction on the term precincts of the House that may include any building by virtue of which the Speaker gets authority to exercise control over that building in so far as maintaining the dignity of the House.

As a matter of fact there is a quasi-control of the hostels by the House inasmuch as the House Committee that is constituted to look after the comforts of the Members is empowered to make recommendations with regard to facilities in the hostels also.

Hence the hostels are a part of the buildings that go to make the work of the Legislators easy and comfortable, just as the Library or the Canteen is, and hence it is only proper that they are included in the "precincts of the House".

It is to be noted that in Queensland, one of the Australian States, the 'precincts' is extended to the Members' residence also in the parliamentary grounds known as the 'Lodge'. In Canada precincts comprises all the territory over which the Speaker has jurisdiction whether it be the Chamber of the House of Commons itself, or the corridors or the Committee Rooms or Members' rooms surrounding it, and also the restaurants, the Library and the Parliamentary grounds. In England "Percincts of the House" means the building at Westminster that includes Members' residences also. The same is the case in the Australian Parliament, the House of Representatives, Canberra, where also it is a compact building inclusive of Members' residence. Nowhere the Members' residence are excluded from the "precincts of the House" whether they are situated in a compact building or they are intersected by pathways, etc., they being situated in the same parliamentary grounds.

The other argument that the Hostels may become an asylum for offenders inasmuch as entry to the Hostel buildings by strangers are not regulated by the permission of the Speaker, also does not hold water, as the definition of the "precincts of the House" is restricted, as far as strangers are concerned to the Assembly Chamber including its verandas and steps. So there is no question of Hostels providing privileges to strangers.

Next is the question of Party Rooms. As a matter of fact, Party Rooms had been agreed to be included in the definition of the "precincts of the House" during one of the sittings of the Committee, and we are afraid that it was inadvertently left out while discussion turned round whether or not precincts are to comprise Hostels also. The Speaker is the person who allots rooms to every party and so he exercise control over Party Rooms better than any other authority. Further, Party Rooms are necessary facilities associated and attached to the work inside the Legislature. Hence it is only proper that Party Rooms also are included in the definition of the term precincts of the House. We therefore suggest that the definition of the "precincts of the House" shall be amended so as to include the Hostels and Party Rooms also, over and above what has been included in the definition arrived at by the majority of the Committee.

GOVERNMENT ESTATE,
MOUNT ROAD, MADRAS-2,
22nd September 1955.

P. K. GOPALAKRISHNAN,
P. JEEVANANDAM.

[20th December 1956

APPENDIX I.

(Extract from the proceedings of the Legislative Assembly, dated 14th March 1955.)

SERVING OF ARREST WARRANT ON AN HON. MEMBER OF THE HOUSE.

MR. SPEAKER : It is my desire to bring a matter of breach of privileges before the House under rule 187. Rule 187 lays down that " notwithstanding anything contained in these rules, the Speaker may *suo motu* refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation or report ".

Under rule 187, I desire to refer an important matter to the Committee of Privileges to be decied by it. On 19th February 1955, while a Committee of the House was sitting to consider the Madras Indebted Agriculturists (Repayment of Debts) Bill, the Secretary to the Legislature received a letter by post from a Judicial Sub-Magistrate in the district of South Kanara requesting him to inform me of the fact that he had issued a bailable warrant against a Member of the Legislature. That Member was a Member of the Committee and was at that time sitting at a meeting of the Committee. I instructed the Secretary to contact the Hon. the Leader of the House and to inform him that the service of a legal process or the execution of a legal process, within the precincts of the Legislature during the sitting of a House or a Committee of the House would be a breach of privilege. I am glad to say that the Hon. the Leader of the House prevented the execution of the bailable warrant on the hon. Member at the time. Two weeks ago, another Member informed me that a constable wanted to serve a summons on him within the building of the Assembly. When I brought this to the notice of the Hon. the Leader of the House, he again prevented it. There is no use in blaming the police for acts like these as they are ignorant of the privileges of the House. Even in England where the orders to the police regarding matters of privilege are precise, the police officials now and then commit mistakes. In order to avoid similar occurrences in future, I desire to lay before the House certain facts regarding the question of privilege within the precincts of the House.

In England on the 12th January 1889, a police order was passed in the following terms :—

> 'Criminal process may not be served or executed on any Member of Parliament within the Palace of Westminster or within the palace yard without the leave of the House ; and no action whatever will be taken by police in such cases without the special instructions of the Commissioner.'

This order was made as the result of the report of the Select Committee of the Commons appointed to consider the attempt by

20th December 1956]

a police officer to serve a summons upon a Member of the Parliament in the outer Lobby of the House. The Select Committee had expressed the opinion that the action of the police officer was :

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏழைப்பட்ட குடும்பப் பெண்களுக்கு வேலை கொடுப்பதற்காக பிரத்தியேகமாக சர்க்கார் தீக்குச்சித்தொழிலை ஆரம்பித்து முயற்சி செய்கிறார்கள். இது பரீக்ஷார்த்தமாக செய்யப்படுகிறது. ஏதோ குறைந்த பட்சம் ஒருவருக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமென்பதற்காக இந்த முயற்சி அல்ல. முதலிலேயே இதை நஷ்டத்தோடு நடத்தினால் மேலும் இந்த முயற்சியை பரப்பமுடியாது. இது எங்கும் வரவேற்கப்படுகிறது. இதனால் பல ஏழைக்குடும்பங்களுக்கு பெரிய பலன் ஏற்பட்டு வருகிறது. ஆகையினால் தான் இதை இப்பொழுது சர்க்கார் நடத்திக்கொண்டு வருகிறது.

SRI A. RATNAM : இயந்திர தீக்குச்சித் தொழிற்சாலைக்கும், குடிசைத் தொழில் தீக்குச்சித் தொழிற்சாலைக்கும் எக்சைஸ் வரியில் ஏதாவது ரிபேட் இருக்கிறதா? மத்திய அரசாங்கம் போடும் எக்சைஸ் வரியோடு சென்னை சர்க்கார் உத்தேசிக்கும் ஒரு முனை விற்பனை வரியும் சேர்த்து வசூலிக்கலாமென்று நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தீக்குச்சி ஒரு குரோஸுக்கு 1½ ரூபாய் எக்சைஸ் வரி போடப்படுகிறது. தீக்குச்சிக்கும் ஒரு முனை விற்பனை வரியைக் கொண்டு வந்து இந்தத் தொழிலாளர்களுடைய கூலியை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வி எனக்குப் புரிய வில்லை. தனியாகப் போட்டால் அதைப் பார்த்து பதில் சொல்லுகிறேன்.

SRI K. T. RAJU : சர்க்காரால் ஆரம்பிக்கப்பட்ட குடிசைத் தொழில் பரீக்ஷார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஈரோடில் ஸதல அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட 2,000 ஜோடி செருப்புகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கிறது. அதை விற்பதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக அங்கு இருக்கும் அதிகாரிகளுக்கு போதிய அதிகாரம் கொடுத்து, கட்டாயம் அவைகளை விற்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஈரோடு சென்டரில் பாதரட்சைகள் விற்கப்படாமல் தேங்கியிருப்பதற்கு காரணம் தெரியவில்லை. ஏனென்றால் அவைகளின் தரமும் நன்றாகத்தான் இருக்கிறது. விலையும் குறைவாகத்தான் இருக்கிறது. வேறு ஏதாவது தடங்கலால் இது விற்கப்படாமல் இருந்தால், அதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

SRI T. S. ARDHANARI ; தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய தொழிற்சாலையில் அதிகமாக சம்பளம் கொடுத்தாலுங்கூட அவர்களுக்கு லாபம்

இருக்கும்போது, சர்க்காரால் நடத்தக்கூடிய தொழிற்சாலையில் அந்த அளவு கூலி கொடுத்தால் நஷ்டம் ஏற்படும் என்று மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நூற்பதற்கும் நெய்வதற்கும் ஆலைகள் இருக்கின்றன. ஆலையில் வேலை செய்யும்படியான தொழிலாளிகளுக்கு குறைந்த பட்ச கூலி, அதற்கு மேலே பஞ்சப்படி, அதற்கு மேலே போனஸ் என்றெல்லாம் கொடுக்கப்படுகின்றது. அதே மாதிரி நையினால் நூற்கிறவர்களுக்கும் நெய்கிறவர்களுக்கும் அதே வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது என்பதுதான நான் அளிக்கக் கூடிய விளக்கம்.

SRI V. BALAKRISHNAN : மக்களிடையே பாதரட்சை மனத்தை பரப்புவதற்கு பாதரட்சை தினம் கொண்டாட மந்திரி அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பாதரட்சை தினம் செய்தால் அந்த ஒரு நாளைக்கு எல்லோரும் இரவல் பாதரட்சை போட்டுக் கொண்டு வந்துவிடுவார்கள். எப்பொழுதும் பாதரட்சைதினம் கொண்டாட வேண்டும். அப்பொழுதுதான் எல்லோரும் பாதரட்சை உபயோகப்படுத்த முன்வருவார்கள். (சிரிப்பு).

SRI S. R. ARUMUGAM : சமீபத்தில், ரஷ்யா தேசத்துக்கு இங்கிருந்து பாதரட்சை அனுப்பினால் அது அங்கு தேவைப்படும் என்று பத்திரிகையில் படித்தேன். அது உண்மைதானா? அப்படியிருந்தால் இந்த வருஷம் ரஷ்யா தேசத்திற்கு பாதரட்சை அனுப்புவதற்கு சர்க்கார் ஆலோசிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதன் விவரம் என்னிடமில்லை. ரஷ்யாவில் போய் பார்த்துவந்தவர்கள் அங்கு பாதரட்சை ரொம்ப அதிக விலை விற்கிறது என்று சொல்லுகிறார்கள். நாம் அங்கு பாதரட்சை அனுப்பினால் நல்ல விற்பனையாகும் என்று நானும் நினைக்கிறேன்.

SRI A. M. RATHNASWAMY : There are a large number of skilled workers who are manufacturing these footwears and other leather goods in the City. I understand that representation has been made by them to the Government of Madras that by starting the Footwear Unit at Perambur, a lot of difficulties have been created for those who are already engaged in this industry. Instead of encouraging all those skilled workers who are already engaged in the industry and giving them some financial facilities, I do not understand why this Footwear Unit has been started there as it looks superfluous. If some financial aid is given to such of those as are already engaged in this industry, I think, it would go a long way in providing employment for such of those skilled workers who are now under-employed in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is always this conflict between vested interests, big or small. But I am surprised to see the hon. Member pleading for vested interests. The Footwear unit and the manufacture of leather goods is a very important industry and it must be developed. There must be proper training given and a better kind of footwear must be manufactured and it must be available to the people at cheap rates. Also it should provide more employment for those who are already engaged in the industry. So, for all these purposes, proper training should be given.

SRI V. BALAKRISHNAN : தென்னாட்டு பாதரட்சையில் அழகையும் தரத்தையும் பார்த்து வடநாட்டார் மோகம் கொண்டிருக்கிறார்கள் என்பது மந்திரி அவர்களுக்கு தெரியுமா ? வடநாட்டில் விற்பனை செய்வதற்கு போதிய பாதரட்சை கடைகளை மந்திரி அவர்கள் கூட்டுறவு முறையில் திறப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மோகம் விஷயம் எனக்குத் தெரியாது. ஏதாவது குறிப்பாக கனம் அங்கத்தினர் தகவல் தந்தால் அவ்வாறு கடைகள் ஏற்படுத்தி நம்முடைய பாதரட்சையை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

SRI A. RATNAM ; சாத்தூர் சிவகாசியில் தீக்குச்சித் தொழிற்சாலையை சர்க்கார் ஆரம்பிப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்து மனுச் செய்துகொள்ளப் பட்டிருக்கிறது. மேலும், குடிசைத் தீக்குச்சித் தொழில் ஆரம்பிப்பதற்கு கடன் கேட்டிருக்கிறார்கள். மான்யம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் போதிய மான்யமோ, கடனோ சர்க்கார் கொடுக்காமல் மறுத்திருக்கிறது. எனவே இது விஷயமாக பரிசீலனை செய்ய சர்க்கார் ஒரு கமிட்டியை அமைப்பார்களா ? என் அவசர அவசரமாக தீக்குச்சித் தொழிற்சாலையை சர்க்கார் ஆரம்பிக்க முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதெல்லாம் " **vested interest** " விஷயம். சிவகாசியில் தீக்குச்சித் தொழிற்சாலையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தங்கள் தொழிலுக்கு போட்டியிருக்கக்கூடாது. வேறு எங்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கக்கூடாது என்று நினைக்கிறார்கள் குடிசைத்ரதொழில் என்று சொல்லிக்கொண்டு. அதே மாதிரிதான் நான் ஸ்வீடனில் இருந்த பொழுது விம்கோ பாக்டரியில் அக்கரை கொண்டவர்கள் குடிசைக் கைத்தொழில் என் ஆரம்பிக்கிறர்கள் ? என்று என்னைக் கேட்டார்கள்: சிவகாசியில் தொழிற்சாலை இருந்தால் அங்குள்ளவர்களுக்கு வேலை கிடைக்கிறது. சென்னையிலுள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு வேலை கிடைக்கும்படி வழி செய்வதற்குத்தான் சென்னையில் குடிசைத் தொழில் ஆரம்பிக்கப்பட்டது. மற்றபடி வசதிகள் கொடுக்கும் விஷயமாக அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு எவ்வளவு தூரம் உதவி அளிக்கமுடியுமோ அவ்வளவு தூரம் உதவி அளிக்கப்படும்.

Relief to Harijans affected by seepage from the Lower Bhavani Project canal

* 390 Q.—SRI K. R. NALLASIVAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to clause (*b*) of question No. 2674 on 21st November 1955—

(*a*) the number of houses for which Government aid was given in each taluk; and

(*b*) the number of new houses completed so far?

THE HON. SRI M. A. MANICKAVELU : The particulars are as follows :—

	Gobi Block.	Kodumudi Block.	Erode Block.	Total.
(*a*)	299	180	180	659
(*b*)	278	157	52	487

SRI K. T. RAJU : உதவி சபாநாயகர் அவர்களே ! இந்த கீழ் பவானி ஆயக்கட்டு பிரதேசத்தில் இன்று இருக்கிற நிலைமையில் சமீபத்தில் பெய்த பெரு மழையினால் அங்குள்ள சேரிகள் வாழ்வதற்கு லாயக்கற்ற நிலைமையில் இருக்கின்றன. சமீபத்தில், ஜில்லா கலெக்டரும் டெவலப்மெண்ட்

9-20 a.m. கலெக்டரும் அங்கு சென்று பல இடங்களை பார்த்தபோது அங்கு குடியிருக்க லாயக்கில்லை என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அவர்களுக்கு வேறு வசதி செய்துதரவேண்டும். அங்குள்ள ஜனங்களுக்கு மேட்டுப்பாங்கான பிரதேசத்தில் மூன்று, நான்கு ஏக்கர்கள் கொடுத்து வசதி செய்ய சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த நடவடிக்கைகளைப் பற்றி இப்பொழுதுதான் சொன்னேன். அதாவது, ஒவ்வொரு வீட்டிற்கும் 5 செண்ட் பிரகாரமும் 100 ரூபாய் வீடு கட்டுவதற்கு இனாமாகவும் 250 ரூபாய் கடனாகவும் கொடுக்கப்பட்டு இப்பொழுது 2,20,000 ரூபாய் செலவாகியிருக்கிறது. தாக்கவி லோன் ரூபாய் 1,53,000 கொடுக்கப் பட்டிருக்கிறது.

SRI B. K. NALLASWAMI : நீர் கசிவால் பாதிக்கப்பட்ட இந்த சேரிகளில் நில ஆர்ஜிதம் செய்வதற்கு வருடக்கணக்கில் தாமதம் ஏற்படுவதால் உடனடியாக நிலங்களை சர்க்கார் எடுத்துக்கொள்ள கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த "ஸீப்பேஜ்" விஷயத்தில், அது நன்றாக புரிந்த பிறகுதான் முடிவாக ஆர்ஜிதம் செய்யமுடியும்.

SRI N. K. PALANISAMY : May I know what steps the Government are proposing to take with regard to construction of houses for Harijans?

THE HON. SRI M. A. MANICKAVELU : I thought the hon. Member was listening to what I said.

SRI V. BALAKRISHNAN : இந்த 100 ரூபாய் ரொக்கமாக கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது சாமான் முறையில் கொடுக்கப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் ரொம்பவும் நுணுக்கமான கேள்வி கேட்கிறார், அந்த விஷயம் எனக்குத் தெரியாது.

SRI M. P. SUBRAMANIAM : சர்க்கார் துணை கொண்டு கீழ் பவானி வட்டாரத்தில் கட்டப்பட்ட வீடுகளில் 80 வீடுகளுக்கு மேல் இடிந்து விழுந்திருக்கிறது என்று புகார் வந்திருக்கிறது. இதன் மேல் சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : எனக்குத் தெரிந்த வரையில் புகார் ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர் புகாரைத்தான் இப்பொழுது கேட்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : 659 வீடுகள் கட்டுவதற்காக சர்க்கார் உதவி அளித்திருப்பதாக மந்திரியவர்கள் கூறினார்கள். எவ்வளவு பேர்கள் உதவி வேண்டுமென்று மனுச் செய்திருந்தார்கள் ? அவர்களில் எவ்வளவு பேர்களுக்கு கொடுக்கப்பட்டது. யாருக்காவது கொடுக்கப்படாமல் இருந்தால் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. அதற்கு பிரத்தியேகமாக கேள்வி கேட்டால் நான் சொல்கிறேன்.

SRI P. G. MANICKAM : ஸார், சுமார் 1,460 வீடுகளுக்கு சர்க்கார் ஒவ்வொரு வீட்டிற்கும் 100 ரூபாய் மானியம் ஒதுக்கியிருந்தார்கள். இப்பொழுது சுமார் 700 வீடுகளே முடிவாயிருக்கின்றன. இன்னும் அநேகமாக சுமார் 800 வீடு கட்டப்படவேண்டியிருக்கின்றன. இந்த ஒவ்வொரு வீடும் கட்ட 100 ரூபாய் மானியம் தருவதோடு 250 ரூபாய் கடன் கொடுப்பதாயும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்பொழுது சமுதாய

நல வேலைகள் முடிந்தாய் விட்டது. இனிமேல் வீடுகள் விஷயத்தில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது. ஜில்லா கலெக்டர்கள் மூலம் வீடுகட்ட ஒழுங்கு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி இனிதான் யோசனை செய்யவேண்டும்.

Regional Transport Officers at Madras

* 391 *Q.*—SRI P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) the number of Regional Transport Officers at Madras after 1st November 1956; and

(*b*) the number of Tamil Non-Brahmin Officers (other than Scheduled Caste and Backward Class) if any among them?

THE HON. SRI B. PARAMESWARAN : (*a*) There were twelve Regional Transport Officers on 1st November 1956.

(*b*) One.

SRI P. RANGASWAMI REDDIAR : அவர்களில் மலையாளிகள் எத்தனை பேர்? கன்னடியர்கள் எத்தனை பேர்? "பாக்வேர்ட்" கிளாஸி லுள்ளவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI B. PARAMESWARAN : மலையாளிகள் நான்கு பேர்கள். ஷெடியூல் காஸ்ட்டிலுள்ளவர்கள் இரண்டு பேர்கள். பிராமணர்கள் இரண்டு பேர்கள். கிருஸ்துவர் ஒருவர். பாக்வேர்ட் கிளாஸிலுள்ளவர்கள் ஒருவர்.

SRI P. RANGASWAMI REDDIAR : 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதிக்கு முன்பு ஒரு வருஷ காலளவில் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீஸர்களாக கீழிலிருந்து பிரமோஷன் ஆனவர்கள் எத்தனை பேர் ? அதில் மலையாளிகள் எத்தனை பேர்கள் ? Direct-ஆக Recruit செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI B. PARAMESWARAN : ஜூலை 1953-ல் இருந்துதான் இந்த ஆபீஸர்களை நியமிக்க விதிகள் விதித்து அதன் பிரகாரமே அவர்களை அரசாங்கம் அமர்த்தியிருக்கிறது. 1953-க்கு முன் அமர்த்திய அதிகாரிகள் எல்லாம் தாற்காலிகமாகவே அமர்த்தப்பட்டு இருந்தார்கள். அன்றும்கூட பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனைக் கேட்டு, அதன் உத்தரவைப் பெற்றுதான் அவர்கள் உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டார்கள்.

SRI R. M. PALANIYAPPAN : அவர்களில் செட்டியார்கள் எவ்வளவு பேர்கள் என்று சொல்லமுடியுமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : செட்டியார்களே கிடையாது.

SRI P. MUNUSWAMI GOUNDER : May I know what is the main function of the Regional Transport Officers?

THE HON. SRI B. PARAMESWARAN : There are too many functions and I cannot define them now unless a separate question is put.

[21st December 1956

SRI K. VINAYAKAM : ஸார், ராஜ்ய சீரமைப்பிற்குப் பிறகு ஆபீஸர்களை அவர்கள் எந்தெந்த மொழியில் பேசுகிறார்களோ அந்தந்த ராஜ்யத்திற்கு அனுப்ப வேண்டுமென்று ஒரு அமைப்பிருந்தது. அதன்படி இந்த நான்கு மலையாளி ஆபிஸர்களை ஏன் கேரளத்திற்கு அனுப்பவில்லை? அதற்கு காரணமென்ன?

THE HON. SRI B. PARAMESWARAN : ஐந்து பேர்கள் இருந்தார்கள். அதில் ஒருவரை மலையாளத்திற்கு அனுப்பியிருக்கிறோம். மலையாளிகள், மற்ற இலாகாக்களில் அநேக அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு தேசங்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தப் பிரகாரமே அவர்கள் பிரிக்கப்பட்டார்கள்.

SRI S. DAIVASIGAMONEY : To put it in plain language, the current rumour is that this Department is being flooded in all sections by Malayalees. Now, at least after the partition of the State, may I request the Hon. Minister to see that such a thing does not happen and that more Tamils are taken in the Department?

THE HON. SRI B. PARAMESWARAN : I think such questions will estrange the feelings of both the States. As far as possible, we are trying to recruit such of those persons as are qualified and we cannot send away such of those persons as are already in the employ of the Government.

SRI A. GOVINDASAMI NAYAGAR : இந்த உத்தியோகங்கள் வழங்குவதில் கம்யூனல் ரெப்ரஸென்டேஷன் அனுசரிக்கப்பட்டதா? அப்படியானால் பிற்பட்டவர்கள் ஏன் இதில் இடம் பெறவில்லை என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN : இனிமேல் அப்பிரகாரம்தான் நடக்கும்.

SRI V. BALAKRISHNAN : இந்த நான்கு பேர்கள், அதாவது இந்த நான்கு மலையாளிகள் நிரந்தரமான ஸர்விஸை சேர்ந்தவரா? இல்லை தாற்காலிகமாக எடுக்கப்பட்டவர்களா? நிரந்தரமாயிருந்தால் எந்த வருஷத்தில் அவர்கள் எடுக்கப்பட்டார்கள்?

THE HON. SRI B. PARAMESWARAN : அவர்கள் இப்பொழுது நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். 1955-ம் வருடத்திலிருந்துதான் அவர்கள் காயப்படுத்தப்பட்டிருக்கின்றனர். அதற்கு முன் ஐந்தாறு வருடங்களாக உத்தியோகத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

SRI K. VINAYAKAM : மொத்தத்திலிருந்த மலையாளி ஆபீஸர்கள் ஐந்து பேர்கள். அவர்களில் ஒருவரைத்தான் கேரளத்திற்கு அனுப்ப முடிந்தது. நான்கு பேர்களை நாம் வைத்துக்கொண்டு இருக்கிறோம், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும். இனிமேல், தமிழர்களுக்கே, தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்து, படித்தவர்களுக்கு மாத்திரமே உத்தியோகங்கள் வழங்கப்படும் என்ற உத்திரவாதம் கொடுக்கவும், மலையாளிகளோ, கன்னடியரோ, தெலுங்கரோ தமிழ் நாட்டிலேயே பிறந்தவர்கள் என்று பொய் ரிக்கார்ட் உண்டாக்கி தப்பித்துக்கொள்ளாதபடியும், அவர்களுக்கு வேலை கொடுக்காமல் இருக்க வழி செய்வார்களா?

THE HON. SRI B. PARAMESWARAN : தமிழ் நாட்டு மக்களை எந்தெந்தவிதத்தில் பாதுகாக்க முடியுமோ அப்படிச் செய்ய சர்க்கார் இஞ்சித்தேனும் தயங்கமாட்டார்கள்.

21st December 1956]

Pest attack on standing crops in Tanjore district

* 392 Q.—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Agriculture be pleased to state— 9-40 a.m.

(a) whether there were any cases of pest attack on standing crops in Tanjore district during August and September 1956;

(b) if so, the acreage affected; and

(c) what action the Government have taken to prevent a recurrence of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir. There had been attack of pests on standing crops of Samba and Kuruvai paddy during the months of August and September 1956 in Tanjore district;

(b) In Pattukkottai Division where the attack was severe 10,000 acres were affected but in other divisions smaller areas were affected.

(c) On getting information about the attack of pests in Tanjore district, the Crop and Plant Portection Officer (Entomology) undertook an immediate survey of the pest affected areas in the district. The entire district had been declared as pest affected by the Collector of Tanjore from 3rd August 1956. Pesticides are being sold at half rates for application to different crops of paddy for arresting the pest menace and this concession will be in force till 31st December 1956, and it will be extended beyond that date, if found necessary. The Agricultural Department staff and the Plant Protection staff are rendering necessary assistance to the ryots in the Tanjore district for combating the pest attack.

SRI N. K. PALANISAMY : இந்த மாதிரி பூச்சி மருந்துகளை உபயோகித்தாலும் பூச்சிகள் சாவதில்லை. பூச்சிகளைப் பிடித்து மருந்தை வாயில் ஊற்றினால்தான் பூச்சிகள் சாகிறது. இம்மாதிரியில்லாமல் வேறு மருந்துகளை உபயோகித்து பூச்சிகளைக் கொல்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினருடைய அனுபவம் பிரத்யேகமாக இருக்கிறது. ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் விவசாயிகள் இதனால் நல்ல பயன் அடைந்துவருகிறார்கள் என்றுதான் நான் அறிகிறேன். பூச்சிகளை ஒழிப்பதற்கு எந்தெந்த வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்தந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

* SRI M. D. THIYAGARAJA PILLAI : தஞ்சை ஜில்லாவிலுள்ள குரங்கு சம்பா கட்டைச் சம்பா போன்ற பயிர்களில் பூச்சிகள் உபத்திரவம் அதிகமாக இருக்கிறது. அதனால் நல்ல விதைகளை அதாவது சி. ஒ. 25 போன்ற விதைகளை அதிகமாக கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுவும் கவனிக்கப் பட்டுவருகிறது.

SRI P. B. K. RAJA CHIDAMBARAM : இந்த பூச்சி மருந்துகளை தெளிப்பதற்கு வேண்டிய ஸ்ப்ரே கருவிகள் குறைவாக இருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? ஆதலால், கூடுதலாக ஸ்ப்ரே கருவிகள் வாங்கி விவசாய டிப்போக்களில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

[21st December 1956

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்ப்ரே கருவிகள் இப்பொழுது இருப்பது போதாதுதான். மேலும் கூடுதலாக வாங்கி வைக்க வேண்டுமென்று கூட்டுறவு ஸ்தாபனங்களைக் கேட்டிருக்கிறேன். அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : There is lot of delay in issuing pesticides at concessional rates. Will the Government consider the desirability of issuing general instructions to the effect that pesticides may be issued in time at concessional rates the moment a report is made to the Agricultural Department without observing the formality of the Collector's certificate and all that?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As it is, the concession of sale at half rate is extended only when the Collector certifies that a particular area is widely affected by pests and there is some delay in getting the Collector examine the position and issue the certificate. Government have also been considering a proposal with a view to have a special drive to step up production whether temporarily the Government could extend this concession without any certificate from the Collector.

SRI M. D. THIYAGARAJA PILLAI : இந்த பூச்சிகளை தகுந்த சமயத்தில் தடுப்பதற்கு ஸ்ப்ரே கருவிகள் கிடைப்பதில்லை. சரியான சமயத்தில் கிடைக்காததினால் பயிர்கள் நாசப்பட்டுப்போகிறது. அதனால் பாதித் தொகைக்கு இந்த கருவிகளை மிராசுதார்களுக்கு வாங்குவதற்கு கிராண்ட் கொடுப்பதற்காக ஒரு திட்டம் இருப்பதாக தெரிகிறது. அந்த ஏற்பாடு இப்போது எப்படியிருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒரு திட்டம் இருப்பதாக எனக்கு இப்போது தெரியவில்லை. இந்த ஸ்ப்ரே கருவிகளை கன்ஸெஷன் விலையில் மிராசுதார்களுக்கு வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். மிராசுதார்கள் வாங்கி வைத்துக்கொண்டு குத்தகைக்காரர்களுக்கும் சிறிய மிராசுதார்களுக்கும் இலவசமாக கொடுக்கலாம் என்பதுதான் எனது அபிப்பிராயம்.

SRI P. VENKATESHA SHOLAGAR : இந்தப் பூச்சி மருந்துகள் குறைந்த விலையில் வாங்குவதற்கு மனு செய்து ஸாங்ஷன் வருவதற்குள் பயிர்கள் நாசமடைந்துவிடுகிறது. ஆகவே அவசியப்படுகிறபொழுது விவசாயிகளுக்கு இந்த மருந்து குறைந்த விலையில் கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

SRI MAHAMED SALIH MARAIKAYAR : இந்தப் பூச்சிகளால் விவசாயிகளுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கிறது. ஆகவே விவசாயிகள் இந்தப் பயிரை இன்ஷூரன்ஸ் கம்பெனியில் இன்ஷூர் செய்துகொண்டு இந்த மாதிரி கஷ்டங்களைத் தவிர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பயிர் இன்ஷூரன்ஸ் என்பது வேறு விஷயம்.

SRI V. BALAKRISHNAN : பயிர்களை நாசப்படுத்தும் இந்தப் பூச்சிகள் எந்த ரகத்தை சேர்ந்தவை என்பதை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். இந்தப் பூச்சிகளைக் குறைப்பதற்கு பூச்சிகளிடம் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மந்திரி உபதேசம் செய்வாரா? (சிரிப்பு.)

21st December 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பூச்சிகளைத் தடுப்பதற்கு வேண்டி தொடர்ந்தாற்போல் பல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகிறது. இம்மாதிரி பூச்சிகளைக் குறைப்பதற்கு வேண்டிய கனம் அங்கத்தினரின் யோசனையும் கேட்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : இந்த பூச்சி கண்ட உடன் மருந்து தெளித்தால்தான் அதைப் போக்க முடியும். ஆனால் இந்த மருந்து அரை விலைக்கு விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு கலெக்டருடைய அறிக்கை வந்த பிறகுதான் மருந்தை வாங்க முடிகிறது. ஆகவே, இந்த முறையை மாற்றி ஜில்லா அதிகாரிகளுடைய உத்திரவின் பேரில் விவசாயிகளுக்கு அரை விலைக்குக் கிடைக்கவேண்டும். இதைப்பற்றி டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் (Director of Agriculture) சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய வேண்டுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் இதற்கு வேண்டிய முடிவு செய்யப்பட்டுவிட்டது என்றே சொல்லலாம். இனி அதிக தொல்லை இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

Admissions to Medical Colleges

* 898 Q.—SRI P. JEEVANANDAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have issued any order to the effect that candidates whose applications for admission into the Medical Colleges have been rejected twice, cannot apply for admission for the third time?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI A. GOVINDASAMI NAYAGAR : மெடிகல் காலேஜில் அட்மிஷன் வாங்குவதற்காக தென் ஆற்காடு ஜில்லாவை சேர்ந்தவர்கள் பலர் சென்னை நகரத்தில் இருந்து கொண்டு சென்னை மாகாண வாசிகள் என்று கள்ள சர்டிபிகேட் வாங்கி கொடுத்து அட்மிஷன் வாங்கி வருகிறார்கள். இதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த கேள்விக்கு பதில் சொல்லுவதற்கு முடியாது. இப்போதுள்ள கேள்வி இரண்டு வருஷம் இண்டர்வியூ கழிந்த பின் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் மூன்றாவது தடவை மனு செய்து கொள்ள தடை ஏன் என்பது பற்றிதான்.

SRI S. RAMALINGAM : ஸார், இரண்டு தடவை இண்டர்வியூ கழிந்தவர்கள் மூன்றாம் தடவையாக மனு செய்யக்கூடாது என்று இருந்தும் மீண்டும் மீண்டும் அவர்கள் மனு செய்வது அவர்களின் சக்தியை காட்டுகிறது. ஆகவே புதிதாக கொண்டுவந்திருக்கும் இந்த உத்தரவை ரத்து செய்வார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இரண்டு தடவையிலும் தேர்ந்தெடுக்கப்பட வில்லை யென்றால் அவர்கள் ரொம்ப மோசமாக மார்க் எடுத்திருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

SRI K. VINAYAKAM : இரண்டு முறையும் தேர்ந்தெடுக்காததின் காரணம் மார்க்குகளை மாத்திரம் பொறுத்தது அல்ல, பெர்ஸனாலிடி டெஸ்ட் (Personality test) வைவா வோஸி (Viva voce) முதலியவைகளிலும் சரிவர மார்க்கு பெறாததினால் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆனால் தேர்ந்தெடுக்கப்படாத மாணவர்கள் அடுத்த வருடத்திற்குள் உடற்பயிற்சி செய்துகொண்டு மீண்டும் நல்ல தகுதியான உடலை வளர்த்துக் கொண்டு வந்தால் அப்போது அவர்களுக்கு அட்மிஷன் அளிப்பதற்கு இந்த சட்டம் இடமளிக்க வில்லை. ஆதலால் இந்த சட்டத்தை மாற்றுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கிறேன்.

[21st December 1956

THE HON. SRI M. A. MANICKAVELU : மெடிக்கல் காலேஜ் அட்மிஷனுக்கு கடந்த வருடம் 296 ஸீட்டுக்கு 1,352 அப்ளிகேஷன் வந்தது. இந்த வருடம் 300 ஸீட்டுக்கு 1,465 அப்ளிகேஷன் வந்தது. இப்படியாக அநேக அப்ளிகேஷன் வந்துகொண்டிருக்கிறது. இதைக் குறைக்க வேண்டியிருக்கிறது. அதல்லாமல் பெர்ஸனலிடி எல்லாம் திடீர் என்று வரக்கூடியது அல்ல. மீசை வேண்டுமானால் திடீரென்று வளர்த்து விடலாம். உடலை அப்படி வளர்க்க முடியாது. (சிரிப்பு.)

SRI V. R. NAGARAJAN : இரண்டு தடவை மனுப்போட்டும் கிடைக்காத அபேட்சகர்கள் மூன்றாவது தடவை மனுப்போட்டால் அவர்கள் பின்னால் நல்ல பயிற்சியுள்ள டாக்டர்களாக வரலாம். அப்படி அவர்கள் மூன்றாவது தடவையாக மனுச் செய்துகொண்டால் அவர்களை அவசியம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பிக்கக் கூடாதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படியானால் கனம் அங்கத்தினருக்கும் எனக்கும் ஒரு சமுத்திர அளவு வித்தியாசம் இருக்கிறது.

SRI K. VINAYAKAM : கனம் மந்திரி சொல்லுகிற பதிலிலிருந்து ஒன்று நன்கு தெரிகிறது. மனுக்கள் அதிகமாக வருகிறது என்று. ஆதலால் இரண்டாவது தடவை மனுப் போட்டவர்கள் ஏன் மூன்றாவது தடவை மனுப் போடக்கூடாது ? அப்படிச் சொல்வது சரியல்ல. அதனால் அதிகப்படியான கல்லூரிகளை வைத்திருந்தால் அவைகளில் மாணவர்கள் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு வசதியாக இருக்கும் அல்லவா ? அப்படி அதிகப்படியான கல்லூரிகளை அமைக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றியும் அரசாங்கம் கவனித்து அதில் கவனம் செலுத்தி வருகிறது. இன்னும் அதிகப்படியான கல்லூரிகளை அமைப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

SRI M. PALANIYANDI : அதிகப்படியாக மனுக்கள் வருகின்றன என்று தோன்றுகிறது. ஏனென்றால் மூன்றாவது தடவையாககூட மனுக்கள் வருவதாகத் தெரிகிறது. அதனால் ஆயிரக்கணக்கான மனுக்கள் வருவதாகத் தெரிகிறது. பர்ஸனாலிடி இல்லாத காரணத்தாலோ அல்லது மார்க்குகள் இல்லாத காரணத்தாலோ அநேகம் மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான மனுக்கள் வருவதால் மூன்றாவது தடவையும் மனுச் செய்து கொண்டால் ஏன் அவர்களை எடுத்துக் கொள்ளக் கூடாது. அதே சமயத்தில் அவர்கள் திடமுள்ளவர்களாக இருக்கலாம். தற்போது கனம் மந்திரி அவர்கள் அரை மீசையிலிருந்து முறுக்கு மீசைக்கு வருவதுபோல மாணவர்களும் திட முள்ளவர்களாக வருவதற்கு இடம் இருக்கிறது. அதனால் அவர்கள் மூன்றாவது தடவை மனுச் செய்துகொண்டாலும் ஏன் அவர்களை எடுத்துக்கொள்ளக் கூடாது ?

Hotel workers

*394 Q.—SRI S. RAMALINGAM (on behalf of Sri A. K. Subbiah) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether a deputation of the Madras City Hotel Workers' Union waited on the Minister on 29th of September 1956 and presented a memorandum; and

(b) if so, the action taken on the memorandum?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) In the memorandum it has been urged that the proposed legislation for hotel workers should be expedited. Since the question of enacting a legislation for the purpose is already engaging the attention of the Government, no separate action has been considered necessary on the memorandum.

SRI V. R. NAGARAJAN : ஹோட்டல் தொழில் ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் பெரிய ஹோட்டல்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளையெல்லாம் தேசியமயமாக்கும் எண்ணம் நமது சர்க்காருக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹோட்டல் தொழிலாளர்களுடைய குறைகளைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதன் விவரங்களை இங்கே சட்டசபையில் சமர்ப்பிக்கலாம். பெரிய ஹோட்டல்களை தேசியமயமாக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்தினிடம் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : ஹோட்டல் தொழிலாளர்கள் சம்பந்தமான ஒரு மசோதா தயாரிக்கும்படியாக பிரச்னை சர்க்காருடைய ஆலோசனையில் இருந்தது. அது எவ்வளவு வருஷ காலமாக இருந்து வருகிறது. இன்னும் எத்தனை வருஷ காலத்தில் அதைப்பற்றி முடிவு எடுப்பார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்குத் தெரிந்த வரையில் முன்பின் எத்தனை வருஷங்கள் என்று சொல்ல முடியாது. இரண்டொரு மாதங்களாகத்தான் இருந்துவருகிறது. கொஞ்ச நாட்களாகத்தான் அது பரிசீலனையில் இருந்துவருகிறது. சில மாதங்களில் அது சட்டமாகலாம்.

SRI S. RAMALINGAM : ஹோட்டல் சம்பந்தமாக ஹைகோர்ட் ஆர்டர் வந்ததால் அதாவது பெரிய ஹோட்டல்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை பாக்டரி சட்டத்தின் கீழ் கொண்டுவர முடியாது என்று தீர்ப்பளித்ததால் அந்தச் சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் எல்லாம் அவர்களுக்கு கிடைக்காமல் போய்விட்டன. அவர்களுக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய சலுகைகள்கூட அதாவது லீவு சலுகை முதலிய சாதாரண சலுகைகள்கூட கிடைக்காமல் போய்விட்டன. பல ஹோட்டல் முதலாளிகள் அங்குள்ள தொழிலாளர்களை சுரண்டுவதற்கு ஈடுபட்டு விட்டார்கள். மற்றும் அவர்களை வேலையை விட்டும் நீக்குவதற்கு முற்பட்டு விட்டார்கள். இன்னும் பல விதமான தொந்தரவுகளையும் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் சட்டம் எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவர வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவரவேண்டும். அதற்காகவே சர்க்காரையும் சீக்கிரத்தில் சட்டத்தைக்கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட சட்டத்தை சட்டசபையின் முன்பாக எப்பொழுது கொண்டுவருவதற்கு சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது விஷயத்தில் தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் இல்லை என்பதை கனம் அங்கத்தினருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

SRI V. BALAKRISHNAN : கடை மசோதாவின் விதிகள் ஹோட்டல் தொழிலாளர்களுக்கும் அனுசரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுவும் இப்பொழுது யோசிக்கப்பட்டுதான் இருக்கிறது.

Cyclone relief loan applications

*395 Q.—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that the Ramanathapuram district has been given one month extension of time from 31st July 1956 for the disposal of the pending Cyclone Relief loan applications;

(b) whether additional grant has been made to meet all the sanctioned loan applications in that district; and

(c) if so, the amount of such additional grant?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes.

(b) Yes.

(c) An additional sum of Rs. 20 lakhs was provided.

SRI V. BALAKRISHNAN : புயல் ராமனாதபுரம் ஜில்லாவில் அடித்ததுபோல்தான் இதர ஜில்லாக்களாகிய தஞ்சை, திருச்சி ஜில்லாக்களிலும் அடித்தது. அதனால் இந்த சலுகையை ஏன் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களுக்கும் அளிக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த சலுகை அந்த ஜில்லாக்களுக்குத்தான் கொடுக்கப்பட்டது. ஆனால் ராமனாதபுரம் ஜில்லாவில் சேதம் அதிகமாக ஏற்பட்ட காரணத்தால்தான் அங்கு அதிகமாகச் செலவுக்கு கொடுக்கப்பட்டது.

SRI R. V. SWAMINATHAN : May I know, Sir, the number of applications that were received in this entire period and also the number of applications pending prior to 31st July 1956?

THE HON. SRI M. A. MANICKAVELU : For the fortnight ending 15th September 1956, 22,551 applications were pending disposal. The special staff has been retained till 30th November 1956. Till 22nd October 1956 loans to the tune of Rs. 2,06,93,000 were sanctioned to Ramanathapuram district alone. Thirty-four applications were pending, and 350 revision petitions also were pending in Sivaganga taluk.

SRI P. CHELLATHURAI : பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் வேண்டும் என்று விண்ணப்பங்கள் போட்டு அவைகள் பட்டுவாடா செய்யப்படாமல் இருந்தால், அப்படி பட்டுவாடா செய்யப்படாமல் எஞ்சி இருக்கும் மனுக்களை என்ன செய்யும்படி அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

THE HON. SRI M. A. MANICKAVELU : திருச்சி ஜில்லாவில் 59 மனுக்கள்தான் பாக்கி. தஞ்சையில் 20 மனுக்கள். ஆனால் ராமனாதபுரத்தில் அதிகமாக இருந்தது. அதற்காகத்தான் அங்கே பணம் அதிகமாகக் கொடுக்கப்பட்டது. அங்குள்ள மனுக்களை எவ்வளவு துரிதமாக பட்டுவாடா செய்யப்படுமோ அவ்வளவு துரிதமாக பட்டுவாடா செய்யப்பட்டுதான் வருகிறது என்றுதான் நான் கருதுகிறேன்.

SRI R. V. SWAMINATHAN : May I know, Sir, by giving the extension of time by one month, any tangible results have been achieved in disposing of the pending applications in this one month?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. I should think so.

SRI G. GOVINDAN : ராமனாதபுரம் ஜில்லாவிலிருந்து அதிகப்படியான மனுக்கள் வந்தது என்பதும் அதிகப்படியான பணம் வேண்டியதாக இருந்தது என்பதையும் கனம் மந்திரி அவர்களும் சர்க்கார் அவர்களும் அறிவார்கள். அப்படி இருந்தால் அவர்களுக்கு உதவி செய்ய சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி முன்வந்துதான் அதிகமாக பணம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

Selection of Gramasevaks

* 396 Q.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) how many applicants were interviewed in July 1956 at Kovilpatti for the selection of Gramasevaks;

(b) how many of them have been selected; and

(c) whether there is any proposal to send away any of them after they have undergone training for more than two months?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 310.

(b) 115.

(c) A suitability test was held a month after the commencement of the training and such of those who were found absolutely unsuitable were eliminated.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், இதைப்போல் 115 பேர்கள் எடுக்கப்பட்டு அவர்களிலிருந்து சிலரை வெளியேற்றியிருக்கிறார்கள். அதனால் அவர்கள் வேலை இல்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்கள் எல்லோரும் கடன் வாங்கி 60 அல்லது 70 ரூபாய் செலவு செய்து வாளி, பக்கெட், இன்னும் தட்டு முட்டு சாமான்கள் முதலியவைகள் பயிற்சி பெறும் காலத்தில் வாங்கக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் ரொம்பவும் வறுமையான நிலையில் இவ்வளவு செலவு செய்து வாங்கிய பின்தான் அவர்களுக்கு வேலையில்லை யென்று கூறினதால் அதிகப்படியாக வறுமை யடைந்தார்கள். அவர்களை வேலைக்கு எடுத்துக்கொண்ட பிறகு அவர்களுக்கு டெஸ்ட் வைத்து அவர்களை வேலையை விட்டு நீக்குவது என்பது சரியல்ல. வேலைக்கு எடுக்கு முன்னரே எல்லா டெஸ்டுகளையும் வைக்கவேண்டும். எடுத்தபின் டெஸ்ட் வைப்பது நியாயமல்ல. இதை இனி கடைபிடிப்பார்களா ? வீட்டுக்கு அனுப்பியவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பல டெஸ்டுகள் வைத்துத்தான் அவர்களைப் பொறுக்கி எடுக்கிறார்கள். இருந்தாலும் அவர்களை ஒரு மாதத்திற்குப் பிறகுதான் வேலையை விட்டு நீக்கி இருக்கிறார்கள். சிலர் அந்த வேலைக்கு தகுதியற்றவர்கள் என்று கருதியதால்தான் அப்படி வேலையை விட்டு நீக்கி இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு 18 மாதங்களுக்கு ஸ்டைபண்ட் கொடுப்பதில் பயன் இல்லை. ஆகவே, பயிற்சி பெறுவதற்கு தகுதியற்றவர்கள் என்று கருதியதன்பேரில் தான் அவர்களை நீக்கியிருக்கிறார்கள். அப்படி ஒரு சிலரைத்தான் நீக்கி யிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை குறைவுதான். தேவையைப் பொருத்த மட்டில் எடுக்க வேண்டியதாக இருப்பதால் அப்படிச் செய்ய வேண்டியதாக இருந்தது. அவ்வாறு அனுப்பப்பட்டவர்கள் 428 பேர்களில் 11 பேர்கள்தான்.

SRI K. ARANGANATHAN : இந்த கிராம சேவகர்கள் எந்த யோக்கியதாம்சத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? 18 மாதங்கள் கொடுக்கப்படும் பயிற்சிக்குப் பிறகு கிராமங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிற பல கிராம சேவகர்கள் அந்த வேலைக்குத் தகுதி இல்லாமல் இருக்கிறார்கள் என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 18 மாதம் பயிற்சி பெற்று வந்திருக்கக்கூடிய கிராம சேவகர்களே அந்த வேலைக்குத் தகுதி இல்லாமல் இருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார். அப்படி இருந்தால் அப்பொழுதே நடவடிக்கை எடுத்துக் கொள்வோம். இதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் அவர்களை எடுத்துவிடப்போகிறார்கள்.

Issue of certified copies of documents by the Revenue authorities in Pudukkottai division

* 397 Q.—Sri V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state why supply of certified copies of documents containing false allegations made by village officers against members of the public are refused by the Revenue authorities in Pudukkottai division, Tiruchirappalli district?

The Hon. Sri M. A. MANICKAVELU : An offical communication made by a village officer to his superiors is privileged from disclosure as one made in an official confidence, under Section 124, of the Evidence Act, 1872. Therefore request for certified copies of the documents are refused.

Sri V. BALAKRISHNAN : உத்தியோக முறையில் எழுதப்படுகிற தஸ்தாவேஜுகளில் பொய்யாக எழுதி இருந்தால் அதைப் பாதுகாக்க சலுகை கொடுப்பது நியாயமாகுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அதிலே நியாய அநியாய சமாசாரம் எழவில்லை. ரூல் பிரகாரம் ஒரு ஆபீஸரைப் பற்றி மேல் ஆபீஸர் ரகசியமாகத் தகவல் எழுதினாலும் அது பாதுகாக்கப்படத் தான் வேண்டும்.

Sri V. BALAKRISHNAN : தயவு செய்து நான் கேட்டிருப்பது தனிப் பட்ட நபரைப்பற்றி பொய் குற்றச்சாட்டுகளை எழுதினால் அதற்குப் பாதுகாப்பு அளிப்பது நியாயமா என்பது தான் என்பதைக் கவனிக்கவும். அந்தப் பொய்க் குற்றச்சாட்டுகளை அவர்களுக்கே காட்டி அதற்கு ஆவன செய்யாமல் அதைப் பாதுகாக்கக்கூடாது. உத்யோக விஷயங்களுக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது.

The Hon. Sri M. A. MANICKAVELU : பொய் விஷயம் மாத்திர மல்ல. அதிலே காதல் விஷயம்கூட எழுதி இருக்கலாம். (சிரிப்பு)

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—POINT OF INFORMATION *RE*.

(1) INTRODUCTION OF TAMIL AS STATE LANGUAGE.

Sri M. KALYANASUNDARAM : (பாயிண்ட் ஆப். இன்பர்மேஷன்). கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இன்று எதிர் பாராத வகையில் ஒரு நல்ல செய்தியை பத்திரிகையில் பார்த்தேன். அது எல்லோரும் வரவேற்கக் கூடிய செய்தி தான். கனம் நிதி அமைச்சர் அவர்கள் நேற்று வெளியே ஏதோர் இடத்தில் பேசும் போது இந்த சட்ட சபைக் கூட்டம் முடிவு அடை வதற்குள்ளாகவே தமிழை ஆட்சிமொழியாக்கும் மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றப்போவதாகப் பேசியிருக்கிறார். அதை அவர் முதலில் இந்தச் சட்ட சபையில் அறிவித்திருந்தால் இன்னும் விசேஷமாக இருக் கும். நல்ல விஷயத்தை வெளியிட்டிருப்பதற்காக அவரைப் பாராட்டு கிறேனே தவிர அதனால் நான் வருத்தப்படவில்லை. அவர் தெரிவித்திருக் கும் முறைப்படி இந்தக் கூட்டத்திலேயே தமிழை ஆட்சிமொழியாக்கும் மசோதா கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும் புகிறேன். உண்மையான விவரம் என்ன, எப்பொழுது அந்த மசோதா இந்தச் சபையின் விவாதத்திற்கு வர இருக்கிறது, என்பன போன்ற விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இது ஒன்றும் புதிய உரை அல்ல. கவர்னர் உரையில் அதைப்பற்றி

குறிப்பிட்டிருக்கிறது. அந்த மசோதா இன்றைக்கு கெஜெட்டில் பிரசுரிக் கப்படும். பிரசுரமானதற்குப் பிற்பாடு என்னுடைய அவா என்னவென் றால் இந்தச் சட்ட சபையானது கடைசியாகச் செய்யக் கூடிய ஒரு காரியமாக அதை எடுத்துக்கொண்டு அந்த மசோதாவை இந்தக் கூட்டத்திலேயே நிறை வேற்றிவிட வேண்டும் என்பது தான். அதை எல்லா அங்கத்தினர் களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். (பலத்த வர வேற்பு ஆரவாரம்.) ஆகையால் மற்ற எல்லாக் காரியங்களையும் முடித்து விட்டு இந்த மசோதாவை இந்தச் சபையில் எடுத்துக் கொண்டு விவாதித்து நிறைவேற்றி விட முடியும் என்று நினைக்கிறேன்.

(Some hon Members stood up in their places)

DEPUTY SPEAKER : I cannot allow a discussion on this matter. The Hon. Minister has already given the information.

(2) FRAMING OF RULES UNDER THE MADRAS CULTIVATING TENANTS (PAYMENT OF FAIR RENT) ACT 1956.

Sri M. KALYANASUNDARAM : இன்னொரு விஷயம், நமது ரெவினியூ அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். இந்தச் சபை ஆரம் பித்த காலத்திலிருந்து இன்றும், நேற்றும் தான் அவர் சபையில் இருக்கி றார். அவர் முதலில் இருந்து சபைக்கு வந்திருந்தால் இங்கே நடந்த பொது விவாதத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் தெரிந்து கொண் டிருக்கலாம். நாம் விவசாய விஷயத்தில் இரண்டு சட்டங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். குத்தகை விவசாயிகளின் வாரச் சட்டம் பாஸாகியிருக்கிறது. ஆனால் அந்தச் சட்டத்தைத் தொடர்ந்து வெளியிடப்படவேண்டிய விதிகளை எல்லாம் வெளியிடாமல் இருப்பதனால் கிராமங்களில் பெருத்த கிளர்ச்சி கள் இருந்து கொண்டிருக்கின்றன. நாம் என்ன பலனை குத்தகைதாரர்கள் அடையவேண்டுமென்று நினைத்தோமோ அதை அவர்கள் அடையவில்லை. எந்த பாரத்தில் எழுதவேண்டும் என்பன போன்ற விதிகளை எப்பொழுது ஏற்படுத்தப்போகிறார்கள் என்பதை அவர்கள் விளக்க வேண்டும். அது எல்லாம் புதிராக இருக்கிறது.

The Hon. Sri M.A. MANICKAVELU: நியாய வார மசோதா விஷயமாக தகராறு ஏதாவது வந்தால் அதை விசாரிப்பதற்கு ஜில்லா முன்சீப்புக்கு அதிகாரம் வழங்கி இருக்கிறது. இந்த விதிகளை கொண்டுவருவதற்கு முன் ஹைக்கோர்ட்டை கலக்கவேண்டியிருக்கிறது. ஹைகோர்ட்டை கேட்டு இருக் கிறோம். நேற்று கூட அதைப் பற்றி ஞாபகப்படுத்தியிருக்கிறோம். கூடிய சீக்கிரத்திலேயே எல்லாவற்றையும் தயாரித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்.

Sri M. KALYANASUNDARAM : (On a point of clarification, Sir) இந்த விதிகளை வெளியிட்டு அவைகளை சட்ட சபை முன்பு வைத்து, சபையின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கூட்டம் முடிவதற்குள் விதிகளைக்கொண்டு வராவிட்டால், அவைகளைப்பற்றி அபிப் பிராயம் சொல்லுவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். அதற்காகவே தான் சர்க்கார் தாமதம் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : அந்த மாதிரி மனப்பான்மை எனக்குக் கிடையவே கிடையாது. (சிரிப்பு.)

(3) NAMING OF THE STATE AS TAMIL NADU.

(Some hon. Members were seen standing in their seats.)

DEPUTY SPEAKER : This is no question time.

Sri K. VINAYAKAM : (On a point of information, Sir) கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமிழ் ஆட்சி மொழி ஆவதைப்பற்றி வெளியிட்ட கருத்து வரவேற்க கூடியதே. தமிழ் மொழியை ஆட்சி மொழி ஆக்கவேண்டுமென்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் வற்புறுத்தி

[21st December 1956

இருக்கிறார்கள். ஆனால் நடை முறையில் எதிர்க் கட்சி எதைச் செய்யுங்கள் என்று சொன்னாலும், சர்க்கார் அதைச் செய்யமாட்டார்கள். அவர்களாகவே விரும்பி அவர்களுக்கு தோன்றிய பொழுது தான் செய்வது என்பது வழக்கமாகிவிட்டது. இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தை ஞாபக மூட்ட விரும்புகிறேன். அது தேர்தலின் போது ஆட்சியாளருக்கும் சரி, எதிர்க் கட்சியிலருக்கும் சரி, பயன்படும். நாங்கள் தமிழ் நாடு என்று இந்த ராஜ்யத்துக்கு பெயரிடவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். எங்களுடைய வற்புறுத்தலை வேண்டுமானாலும் இப்பொழுது குறைத்துக் கொள்ளுகிறோம். சர்க்காராகவே, "தமிழ் நாடு" என்று பெயர் வைக்க ஒரு திருத்தம் கொண்டு வந்து, அதை மத்திய அரசாங்கத்துக்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(4) SWAYAMARIATHAI MARRIAGE BILL.

SRI P. RANGASWAMI REDDIAR: (On a point of information, Sir) சில மாதங்களுக்கு முன்பு கனம் நிதி அமைச்சர் அவர்கள் சுயமரியாதை திருமணங்களையும், மற்றும் சில திருமணங்களையும் செல்லுபடி ஆக்குவதற்காக ஒரு மசோதா கொண்டு வருவதாக உறுதி அளித்தார்கள். அந்த மாதிரி ஒரு மசோதா தயாரிக்கப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அது பரிசீலனையிலிருக்கிறது. இந்தக் கூட்டத்தில் அதை எடுத்துக்கொள்வதற்கு அவகாசமிருக்குமா வென்று சொல்ல முடியாது.

III.—GOVERNMENT MOTION.

MOTOIN UNDER RULE 21 (3) OF THE ASSEMBLY RULES *re* CHANGE IN THE ORDER OF VOTING ON DEMANDS FOR ADVANCE GRANTS FOR THE YEAR 1957-58.

THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Demands for Advance Grants for the year 1957-58 be taken up in the order set out below:—

1. XXIII—Labour including Factories.

2. VII—General Sales Tax and Other Taxes and Duties Administration.

3. IX—Heads of States, Ministers and Headquarters Staff.
XI—District Administration and Miscellaneous.

4. XXII—Harijan Uplift.

5. XII.—Administration of Justice.
XIII—Jails.
XIV—Police.

6. IV—Forest Department.
XVIII—Agriculture and Fisheries.
XIX—Veterinary.

7. XXIV—Civil Works—Works.
XXV—Civil Works—Establishment and Tools and Plant.

21st December 1956] [Sri C. Subramaniam]

XL—Capital Outlay on Civil Works.
XXVII—Electricity.
XLI—Capital Outlay on Road Transport Schemes.
VIII—Irrigation.
XXXVI—Capital Outlay on Irrigation.

8. VI—Motor Vehicles Acts Administration.
XXXIII—Road Transport Schemes—Working Expenses.
XLII—Capital Outlay on Road Transport Schemes.

and that the rest of the Demands for Advance Grants be taken up in the order in which they appear in the Notice, dated 17th December 1956."

DEPUTY SPEAKER: The question is—

"That the Demands for Advance Grants for the year 1957-58 be taken up in the order set out below:—

1. XXIII—Labour including Factories.

2. VII—General Sales Tax and Other Taxes and Duties Administration.

3. IX—Heads of States, Ministers and Headquarters Staff.
XI—District Administration and Miscellaneous.

4. XXII—Harijan Uplift.

5. XII—Administration of Justice.
XIII—Jails.
XIV—Police.

6. IV—Forest Department.
XVIII—Agriculture and Fisheries.
XIX—Veterinary.

7. XXIV—Civil Works—Works.
XXV—Civil Works—Establishment and Tools and Plant.
XL—Capital Outlay on Civil Works.
XXVII—Electricity.
XLI—Capital Outlay on Electricity Schemes.
VIII—Irrigation.
XXXVI—Capital Outlay on Irrigation.

8. VI—Motor Vehicles Acts Administration.
XXXII—Road Transport Schemes—Working Expenses.
XLII—Capital Outlay on Road Transport Schemes and that the rest of the demands for Advance Grants be taken us in the order in which they appear in the Notice, dated 17th December 1956."

The motion was put and carried.

IV.—VOTING ON DEMANDS FOR ADVANCE GRANTS FOR THE YEAR 1957-58.

(1) DEMAND XXIII—LABOUR INCLUDING FACTORIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, . . .

SRI S. JAYARAMA REDDIAR : On a point of information, Sir. Some of our Friends are anxious to know whether the present session will conclude on the 28th instant or it will be extended up to 31st instant.

THE HON. SRI C. SUBRAMANIAM : As it is we hope to finish the session by the 27th instant I do not think there will be any necessity to sit on the 28th instant also but if it becomes absolutely necessary, we shall sit on the 28th also.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,50,000 as advance grant under Demand XXIII—Labour including Factories."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,50,000 as advance grant under Demand XXIII—Labour including Factories."

SRI S. RAMALINGAM : Sir, I move—

"That the allotment of Rs. 6,50,000 under Demand XXIII—Labour including Factories be reduced by Rs. 100."

DEPUTY SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 6,50,000 under Demand XXIII—Labour including Factories be reduced by Rs. 100."

Now, both the Demand and the cut motion are before the House for discussion.

SRI S. RAMALINGAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, சுருட்டுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்ய ஒரு குறைந்த பட்ச கூலி நிர்ணய கமிட்டி ஏற்படுத்தவும், சுருட்டுத் தொழிலாளர்களுக்கு பாக்டரி சட்டப்படி கிடைக்க வேண்டிய லீவ் வசதிகள் கிடைப்பதற்கும் சர்க்காரை கேட்டுக்கொள்ளவே நான் எனது வெட்டுப் பிரேரணையை கொண்டுவந்துள்ளேன். தமிழ் நாட்டிலுள்ள பல சுருட்டுக் கிடங்குகளில் வேலை செய்யும் பல்லாயிரக்கணக்கான தொழிளாலர்கள் இன்றைக்கு அமுலில் இருக்கக்கூடிய சட்டங்களினால் கிடைக்கக்கூடிய சலுகைகளைப் பெற முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு பாக்டரி சட்டப்படி கிடைக்க வேண்டிய லீவ் வசதிகள் கொடுக்கப்படுவதில்லை. இருபது நாள் வேலை செய்த ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு நாள் லீவ் கொடுக்க வேண்டுமென்று சட்டத்திலிருக்கிறது. வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு Service card, Leave card முதலியவை வழங்கப்படவேண்டும். மற்றும்

எல்லா சுகாதார வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டும். சுருட்டுத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து பாக்டரி சட்டப்படி அவர்களுக்கு லீவ் கொடுக்கவேண்டுமென்று முதலாளிகளிடம் முறையிட்டதில் அந்த மாதிரி லீவ் கேட்பதற்கு அவர்களுக்கு உரிமையே கிடையாது என்று சொல்லி அவர்களது கோரிக்கையை மறுத்துவிட்டார்கள். சில சிறிய இடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் விஷயத்தில் ஷாப்பு சட்டம் அமுல் செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. ஷாப்பு சட்டத்தின்படி ஒரு வருஷத்திற்கு பன்னிரண்டு நாள் Casual Leave கொடுக்க வேண்டும்; பன்னிரண்டு நாள் Sick Leave கொடுக்க வேண்டும். ஆனால், சட்டப்படி ஒரு தொழிலாளிக்கும் சலுகை கிடைப்பது கிடையாது. சட்டத்தினால் கிடைக்கும் நன்மைகளை பாதுகாப்பதற்கு அதிகாரிகள் இருந்தாலும் கூட, அவர்களிடம் முறையிட்டால், "நாங்கள் முதலாளிகளை லீவ் கொடு என்று சொல்ல முடியாது; அவர்கள் லீவ் கொடுக்கா விட்டால் அவர்கள் மீது ஏதாவது அபராதம் விதிக்கலாம்" என்று சொல்லுகிறார்கள். தொழிலாளருக்கு நிர்வாகத்தில் பங்கு உண்டு, அவர்களுக்காக பாதுகாப்பு Insurance செய்கிறோம் என்று வாயளவில் பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. சட்டத்தினால் கிடைக்கக் கூடிய சலுகைகள் தொழிலாளிகள் பெறுவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதோடு அவர்களுக்கு ஒரு குறைந்த பட்ச கூலியும் நிர்ணயம் செய்ய வேண்டும். காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை வேலை செய்யும் சுருட்டு தொழிலாளிக்கு 1 ரூபாய் 2 அணா கூலி கூட கிடைக்க முடியாத நிலைமை இப்பொழுது இருக்கிறது. குறைந்தபட்ச கூலி அவர்களுக்கு கிடைக்கச் செய்வதோடு நிரந்தரமாக வேலை கிடைக்கவும் வழி வகை செய்ய வேண்டும். ஆயிரம் சுருட்டுக்கு 2 ரூபாய் 2 அணாவிலிருந்து 2 ரூபாய் 8 அணா வரையில் கொடுக்கிறார்கள். சில முதலாளிகள் 250 அல்லது 300 சுருட்டுக்கு மேல் கொடுக்கமாட்டார்கள். இன்னும் சில முதலாளிகள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு மட்டும் வேலை கொடுத்துவிட்டு பாக்கி நாட்களுக்கு வேலை இல்லை யென்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே குறைந்த பட்ச கூலி நிர்ணயிப்பதோடு, ஒரு மாதத்திற்கு குறைந்த பட்ச ஊதியம் எவ்வளவு என்று நிர்ணயம் செய்து அதைத் தொழிலாளர்கள் பெறுவதற்கு உத்திரவாதம் செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நேற்று சென்னையிலும் மற்றும் பல ஜில்லாக்களிலும் இருந்து சுமார் 350 தொழிலாளிகள் ஊர்வலமாக கனம் மந்திரி அவர்களிடம் தங்களது குறைகளை தெரிவிக்க வந்தார்கள். நேற்று எங்குப்பார்த்தாலும் பலத்த போலீஸ் பந்தோபஸ்து இருந்தது. சட்ட சபை முன்பு கிளர்ச்சி செய்வதாகவும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

சுருட்டு தொழில் சம்பந்தப்பட்டமட்டில், இன்று இருக்கக் கூடிய நிலைமை என்னவென்றால், முதலாளிக்கும் தொழிலாளிக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் சட்டப்படி இல்லை. தொழில் முறையில் தான் உறவு இருக்கிறது. முதலாளிகள் புகையிலை, இலை, நூல் மற்றும் இதரப் பொருள்களை தொழிலாளருக்குக் கொடுத்து, அவர்களை பீடியாக உற்பத்தி செய்யச்சொல்லி அதற்கு மேல் "lable" மட்டும் போட்டு, மார்க்கெட்டில் விற்றுக் கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். பீடி தொழிலாளர்களுக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. அவர்களுக்கும், முதலாளிகளுக்கும் நல்லுறவு ஏற்படுத்துவதற்காக உடனடியாக ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும், ஆதலால் பீடித் தொழிலாளர்கள் விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்கிறேன்.

அடுத்தபடியாக ஓட்டல் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால் பெரிய ஓட்டல்களில் நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் வேலையில் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். சாதாரணமாக factory சட்டத்தின் கீழ் 20 தொழிலாளர்களுக்கு மேல் வைத்து நடத்தும் ஓட்டல்கள் வருகின்றன. ஆனால் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் அம்மாதிரி ஓட்டல்களில் வேலை செய்யக்கூடிய

[Sri S. Ramalingam] [21st December 1956

எல்லாத் தொழிலாளர்களும் பண்ட உற்பத்தியில் ஈடுபடுவதில்லை. சமையல்காரன் ஒருவன்தான் தொழிலாளிகள் ஜாபிதாவில் வரவில்லை. ஆகையால் பாக்கி இருக்கக் கூடிய கிளீனர்களும், சர்வர்களும் உற்பத்தியில் ஈடுபடாததினால் பாக்டரி சட்டத்தில் அவர்கள் வரவில்லை என்று ஐகோர்ட்டில் தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. ஏழு எட்டு மாதங்களாக Factory Act மூலமாக அவர்களுக்கு கொடுத்தவந்த சலுகைகளெல்லாம் நின்றுவிட்டது. நான் சிறு ஓட்டல்களைப்பற்றி சொல்லவில்லை. நகரங்களில் உள்ள லட்ச லட்சமாக சம்பாதிக்கும் பெரிய ஓட்டல்காரர்கள் தாங்கள் தொழிலாளர்களுக்கு கொடுக்கவேண்டிய சலுகையைப்பற்றிதான் சொல்லுகிறேன். அவர்கள் தொழிலாளர்களுக்கு ஒன்றும் செய்யாமல் ஓட்டலை மூடிவிட்டு பிறகு ஒரு மாதம் கழித்து வேறொருவர் பெயரில் புது லைசென்ஸ் வாங்கி மறுபடியும் ஓட்டல் நடத்துகிறார்கள். இதனால் ஓட்டல் தொழிலாளிகள் வேலையில்லாமல் கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்த விஷயத்தை இதற்குமுன் நான் கனம் மந்திரி அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். அவர்களும் இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வருவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இதற்காக ஒரு சட்டமும் உடனடியாக கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தது ஷாப் அசிஸ்டெண்ட் ஆக்டை பற்றியது. அந்தச் சட்டத்தை சாதாரணமாக **Labour Inspector** மேற்பார்வையிடுகிறார்கள். அவர்களிடம் கடை தொழிலாளர்கள் விடுமுறை, சம்பளம் முதலியனவகளை முதலாளிகள் கொடுக்கவில்லை. அவர்கள் விசாரணை செய்ய வேண்டுமென்று சொன்னால் அந்த அதிகாரிகள் சம்பளத்தை வாங்கித் தருவதற்கு அதிகாரம் இல்லை யென்றும் சிவில் கோர்ட்டுக்கு போய் பிராது செய்து அப் பணத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

இவ்வாறு அதிகாரிகளுக்கு பாக்கி சம்பளத்தை வசூல் செய்வதற்கு அதிகாரம் இல்லாததினால் முதலாளிகள் ஏழைத் தொழிலாளிகளை டிமிக்கி கொடுக்கிறார்கள். இன்றைக்கு தொழிலாளர் இருக்கக்கூடிய நிலைமையில் லீவ் சம்பளத்தை வாங்குவதற்கு நடை முறையில் சாத்தியமா என்றால் சாத்தியம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். **Land revenue** பாக்கி மாதிரி இதையும் வசூல் செய்ய வேண்டும்.

சென்ற மாதத்தில் லேபர் அட்வைஸரி போர்ட் மீட்டிங்கிலே தொழிலாளர் சங்கத்தை அங்கீகரிக்க ஒரு மசோதாவை தயாரித்துவருவதாக சொல்லப்பட்டது. அந்த மீட்டிங்குக்கு வந்த பெரும்பாலான தொழிலாள பிரதிநிதிகளும் அதை வர வேற்கிறார்கள். இன்னும் அந்த மசோதா சட்டசபை முன் கொண்டுவரப்படவில்லை. ஒரு வேளை முதலாளிகளின் நிர்ப்பந்தத்தால் கொண்டு வரவில்லையோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அனைவரும் ஏகமனதாக வரவேற்கிறார்கள் என்பது எனக்கு தெரியும்.

Sri S. RAMALINGAM : அப்படி ஏகமனதாக தொழிலாளிகளும்,
10-23 a.m. முதலாளிகளும் வரவேற்றால் சர்க்கார் ஏன் உடனடியாக அதைக் கொண்டு வரவில்லை என்பது தான் புரியவில்லை.

Sri R. KUPPUSWAMI : சென்ற ஐந்து ஆண்டுகளில் தொழிலாள மந்திரி அவர்கள் தொழிலாளர்களுக்கு சட்ட பூர்வமாக உடனடியாக செய்யவேண்டிய உதவிகளையும், நன்மைகளையும் மனப்பூர்வமாக செய்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

சென்ற ஐந்து ஆண்டுகளில் சென்னை அரசாங்கம் தொழிலாளர்களுக்காக வகுத்த தொழில் கொள்கையை, தொழிலாளர்கள்பால் காட்டிவந்த நன்மதிப்பை நான் மிகவும் பாராட்டுகிறேன். இவைகளைத் தொழிலாளர்கள் வரவேற்கிறார்கள். மத்திய அரசாங்கமும் தொழிலாளர்கள் தொழிலில் லாபத்தில் ஒரு பங்கு பெற ஆலோசனை செய்து வருகிறார்கள். தொழிலாளர்களுக்குக் கொடுக்கக் கூடிய உரிமையை சட்டபூர்வமாகக் கொண்டு வர இருக்கிறார்கள். அதற்கு நாமும் ஆதரவு காட்டவேண்டுமென்று விரும்புகிறேன்.

21st December 1956] [Sri R. Kuppuswami]

அடுத்தபடியாக தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் ஏற்படக் கூடிய, நேரிடைப் பேச்சு வார்த்தைகள் மூலமாக சமாதானம் ஏற்பட்டு விட்டால் தொழில் கோர்ட்டுக்கு போகவேண்டிய நிலை ஏற்படாது. மேலும் தொழில் கோர்ட்டுகளில் வேலைகள் துரிதமாக செய்யப்படவில்லை. மிகவும் காலதாமதம் தான் ஏற்படுகிறது. அந்தந்த தொழில் கோர்ட்டு தீர்ப்பு கொடுப்பதில் காலதாமதம் ஏற்படாமல் செய்யப்படவேண்டும். ஏற்ற காலத்தில் சர்க்கார் அதைக் கொள்கையாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த ஐந்து ஆண்டுகளில் தொழில் முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே நல்லுறவு ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய சம்பளம் பூரணமான சம்பள உயர்வு இல்லாமல் இருந்தாலும் அவர்களுக்கு ஓரளவு உயர்வு ஏற்பட்டது மறுக்க முடியாது. சாதாரணமாக தொழிலாளர்கள் வாங்கும் சம்பளத்தில் ஒரு பணத்தை சேமித்து வைப்பதற்கு (தொழிலாளர்) நல் வாழ்வுக்கான வழி வகை செய்யவேண்டும்.

செலவாகாமல் எவ்விதமாக சேமித்து வைப்பது என்று தெரியாமல் தவிக்கிறார்கள். ஆதலால் அவர்கள் சிக்கனம் செய்வதற்கும், அப்படி, சிக்கனம் செய்த பணத்தை அவர்கள் பயன்படுத்துவதற்கும் சேமிப்பு பணத்தை ஒதுக்கவேண்டுமென்பது எதிர் காலத்தில் அவர்கள் நல்லபடி வாழ்வதற்குதான்.

தோட்டத் தொழிலாளிகள் விஷயத்திலும் சர்க்கார் தலையிட்டு, தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் ஒரு சமாதானத்திற்கு முயற்சி எடுத்து கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்கு தெரியும். தொழிலாளர்களுடைய குறைகளை விசாரித்துகொண்டு வருகிறது. அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள். இந் தொழிலாளர்கள் விஷயம் இப்போது சுப்ரீம் கோர்ட்டுக்கு சென்றிருக்கிறது. அதன்மூலம் இடைக்கால நிவாரணம் செய்திருக்கிறார்கள். அந்த நிவாரணத்தை முதலாளிகள் ஆட்சேபித்து அப்பீல் செய்திருக்கிறார்கள். இதற்குள் அரசாங்கம் தலையிட்டு தொழிலாளருக்கும், முதலாளிகளுக்கும் ஒரு சமாதானம் ஏற்படுத்துவது நல்லது என்று நான் விரும்புகிறேன்.

பொதுவாக தொழிலாளர்களுக்கு தங்களுடைய தொழிற்சாலைகளில் ஒழுங்குநிலை ஏற்படவில்லை. கோயம்புத்தூர் மில்லுக்கு வெளியே தொழிலாளர்களிடையே கட்டுப்பாடு இல்லாததால் பல கலவரங்கள் ஏற்பட்டு பல கொலைகள் நடைபெறக்கூடிய அளவுக்கு பல தீங்கான செய்கைகள் நடந்துகொண்டு வருகின்றன. தொழிற்சங்கங்களிடையே போட்டா போட்டி ஏற்படுவதால் பல கலவரங்கள் ஏற்படுகின்றன. இதைத் தடுத்து பொது மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும், இப்பொழுது பாதுகாப்பே கிடையாது. கலவரங்கள் நடந்த பிற்பாடுதான் போலீஸ் பந்தோபஸ்து வருகிறதே தவிர, முன்கூட்டியே தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் கலவரத்தை தடுத்து பாதுகாப்பு அளிப்பதற்கு தகுந்த போலீஸ் பந்தோபஸ்து வருவதில்லை. முன்பே தகுந்த போலீஸ் பந்தோபஸ்து போடுவதற்கு இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்கள் மத்தியிலே பயம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில் கூட பத்து தினங்களுக்கு முன்பு ஒரு கொலை நடந்தது. சரியான பாதுகாப்பு இருந்தால்தான் பொதுமக்களும் தொழிலாளர்களும் நிம்மதியாக வேலை செய்யமுடியும். வெளியிலும் பயமில்லாமல் நடமாடமுடியும். தொழிலாளர்களும் ஒழுங்காக நடந்துகொள்வதற்கு அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு மில்லிலும் தொழிலாளர் நல அதிகாரிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் முதலாளிகளின் சார்பாகத்தான் அந்தத் தொழிலாளர் நல அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்களே தவிர, தொழிலாளர்கள் சார்பாக அவர் நியமிக்கப்படுவதில்லை. தொழிலாளிகளின் மனோபாவத்தை தெரிந்துகொண்டு தொழிலாளர் நல அதிகாரியே பாக்டரிகளில் இடையராக...

[Sri R. Kuppuswami] [21st December 1956

முதலாளிகள்தான் தங்களுக்கு சம்பளம் கொடுக்கிறார்கள், ஆதலால் அவர்களுக்குத்தான் நன்மை செய்யவேண்டுமென்ற அளவுக்கு தொழிலாளர் நல அதிகாரி நடந்துகொள்கிறாரே தவிர, தொழிலாளர்களின் நலனை கவனிப்பதில்லை. இருதரப்பும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு நபரை தொழிலாளர் நல அதிகாரியாக நியமித்தால், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே ஏற்படும் சிறு தகராறுகளை நிவர்த்திக்க வழி ஏற்படும். ஆகவே, இந்த வகையில் தொழிலாளிகளும் முதலாளியும் சேர்ந்து ஒருதொழிலாளர் நல அதிகாரியை நியமிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால் பல தகராறுகள் தீருவதற்கு ஒரு வழி ஏற்படுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே ஐந்தாண்டில் தொழிலாளர்களுக்கு சர்க்கார் அநேக நன்மைகள் செய்திருப்பதை பாராட்டுகிறேன். மேற்கொண்டு அடுத்து வரும் காரியங்களிலும் சர்க்கார் இந்தத் தொழில் கொள்கையையே பின்பற்றுவார்கள் என்ற நம்பிக்கை தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த முறையிலே நான் தொழில் அமைச்சர் அவர்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

10-30 a.m. **SRI P. RANGASWAMI REDDIAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே காட்பாடி சுதர்சன் ஆயில் மில்லை அதன் போர்டார் ரூபாய் 5¼ லட்சத்துக்கு ஏலம் போட்டுவிட்டதாகத் தெரிகிறது. **State Aid to Industries** சட்டப்படி சர்க்கார் அந்த மில்லுக்கு ரூபாய் 10 லட்சம் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால், அந்த ஏலத்தை ரத்து செய்துவிட்டு சர்க்காரே அந்த மில்லை எடுத்து நடத்தினால், சர்க்கார் பணமும் தண்டமாகாமல் இருக்கும், ஏதோ சிலருக்கு வேலையும் கிடைக்கும். விழுப்புரத்தில் **Madras Vanaspathi, Limited.** . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது தொழிலைப் பற்றிய டிமாண்டு அல்ல, தொழிலாளர்களைப் பற்றிய டிமாண்டு.

SRI P. RANGASWAMI REDDIAR : திருச்சி ஜில்லாவிலும், சேலம் ஜில்லா ஆத்தூரிலும் புகையிலை வியாபாரம் பெரும் அளவில் நடந்து வருகிறது. புகையிலை பெரும் அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கே பீடி சுருட்டும் தொழிலாளர்களும் சுருட்டுத் தொழிலாளர்களும் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது நிர்ணயம் செய்திருக்கும் கூலியானது நடைமுறையில் இருக்கும் குறைந்த பட்ச கூலிக்கும் குறைவானது. அது பெரிய தவறு. ஆகவே, இப்பொழுது அவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிற கூலியை அமுலுக்குக் கொண்டுவரக்கூடாது. இந்தத் தொழிலையே நம்பி வாழ்கின்ற மக்களுக்கு அவர்கள் வாழ்க்கைத்தரத்தை பாதிக்கக்கூடாத அளவுக்கு ஒரு நியாயமான கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமே ஒழிய, இப்பொழுது நிர்ணயம் செய்திருக்கக்கூடிய கூலியை அமுல் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. PALANIYANDI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழிற்சங்கம் சம்பந்தமான சட்டங்களெல்லாம் ஒருவிதமாக நல்ல முறையில் இயங்கிக்கொண்டு வருகின்றன. இருந்தாலும்கூட, மத்திய சட்டத்தின்படி குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட்ட தொழில்கள் ஜாபிதாவில் 12 தொழில்கள் தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல தொழில்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. அந்தத் தொழில்களுக்கும் சீக்கிரத்திலேயே குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயம் செய்து சிபார்சு செய்ய மந்திரி அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்கக்கூடிய காலத்திலே லாபத்தின் அடிப்படையில் அதை நிர்ணயிக்கவேண்டுமென்ற தத்துவத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும். இந்தியா பூராவும் ரூபாய் 1-2-0 நிர்ணயித்திருக்கிறார்கள். அதே அடிப்படையில்தான் கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்திய தேசிய தொழில் சங்க காங்கிரஸ், மற்றும்

21st December 1956] [Sri M. Palaniyandi]

தொழிற்சங்கங்களும் "Fair wage" வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்தவேண்டும். இப்பொழுது living wage-தான் கொடுக்கப்படுகிறது. ரூபாய் 26 சம்பளம், அதற்குமேல் பஞ்சப்படி கிடைக்கிறதே ஒழிய, லாப வரம்பைப் பொறுத்து தொழிலாளிகளுக்கு சம்பளம் கிடைப்பதில்லை. இந்த ஐந்தாண்டுகளிலே பாக்டரிகளுக்கு நல்ல லாபம் கிடைத்திருக்கிறது. உதாரணமாக, சிமெண்டு, ஜவுளி மில் தொழில்கள் நல்ல லாபகாமாகத்தான் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் தொழிலாளர்கள் நிலைமை மட்டும் அப்படியேதான் இருக்கிறது. அவர்கள் நிலைமை முற்போக்கடைந்திருக்கிறது என்று சொல்லமுடியாது. அவர்களுக்கு நிச்சயமாக Fair wage கிடைக்கும்படி செய்யவேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று நாம் கருதுகிறோம். தொழிலாளிகளும் உற்பத்தியை பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் அவர்கள் வாழ்க்கைத் தரமும் உயர்த்தப்படவேண்டும். ஆகவே தொழில் அமைச்சர், அவர்களுக்கு Fair wage கிடைப்பதற்கு மத்திய அரசாங்கத்தைக் கலந்து கொண்டு வேண்டிய நடவடிக்கையை துரிதமாக எடுக்கவேண்டும். அது ராஜ்ய அரசாங்கத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதுதான் என்று நினைக்கிறேன். அதற்குத் தகுந்தபடி தொழிற் சட்டம் கொண்டுவந்து தொழிலாளிகளுக்கு நியாயமான கூலி கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். உற்பத்தியையும் பெருக்க முடியும். கூடிய சீக்கிரம் இதற்கு அவசியமான சட்டத்தைக்கொண்டுவர அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் தொழிலாளர்கள் அமைதியாக உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆகவே அவர்களுக்கு வேண்டிய ஊதியம் கிடைக்க வழிவகை செய்யவேண்டும். விவசாயிகளுக்கு நியாயவாரம் கிடைக்கவேண்டுமென்று 60—40 என்ற விகிதத்தில் வாரம் நிர்ணயித்து நியாய வார மசோதாவை நிறைவேற்றினோம். விவசாயிகளை வெளியேற்றக் கூடாது என்றும் சட்டம் நிறைவேற்றினோம். அது குத்தகைகாரர்களுக்கு பயன்படுகிறது ஆனால் விவசாயத் தொழிலாளர்களுக்கு (**agricultural labour**) நியாயமான கூலி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படாத காரணத்தினால், 1942-லிருந்து இதுவரையில் அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட வில்லை. சீக்கிரமாக புள்ளி விவரங்களை சேகரித்து விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலியை நிர்ணயம் செய்வதற்கு வழிவகை செய்யவேண்டும். இது கஷ்டமான காரியம்தான். நம் ராஜ்யம் இதை முதலிலே செய்து வழி காட்டவேண்டும். நமது தொழில் அமைச்சரும் தொழில் இலாகாவும் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவுக்கு நல்ல முறையில் காரியம் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். தொழில் அமைதி பெருகிக் கொண்டுவருவதற்கு மேலும் தொழிலாளர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்துகொடுக்க வேண்டும். அடுத்த ஐந்தாண்டில் மக்களின் வாழ்கைத்தரம் 25 சதவிகிதம் உயரவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனால் தொழிலாளர்கள் இப்பொழுதே மோசமான சம்பளம் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைக்க வேண்டுமென்று அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசும் மற்ற தொழிற்சங்கங்களும் வற்புறுத்தி வருகின்றன.

அதுமட்டுமல்ல. முனிசிபாலிட்டிகளில் வேலை செய்கிறவர்களுக்கு சம்பளம் மிகவும் குறைவு. அவர்கள் தொழில் கோர்ட்டு ஏற்படுத்த வேண்டுமென்று கதறிக்கொண்டு வருகிறார்கள். மற்ற சில மாகாணங்களில் தொழில் கோர்ட்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம் மாகாணத்திலும் தொழில் கோர்ட்டு ஏற்படுத்தி அவர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் ரூ. 18—20 தான் சம்பளம் வாங்குகிறார்கள். அந்த நிலைமை அவசியமாக மாறவேண்டும்.

[Sri M. Palaniyandi] [21st December 1956

அதைப்போலவே, அரசாங்க போக்குவரத்து இலாகாவில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் தனிப்பட்டவர் நடத்தும் போக்குவரத்து ஸ்தாபனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் எந்தவிதமான பாகுபாடும் இருக்கக்கூடாது. அரசாங்க இலாகாவில் வேலை செய்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு தனிச் சலுகைகள் கொடுக்கக்கூடாது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் முதல் ஆண்டு முடிந்து, இரண்டாவது ஆண்டில் கால் வைத்திருக்கிறோம். ஆகவே, அரசாங்கத்தின் கீழ் வேலை செய்கிற தொழிலாளிகளுக்கும், முனிசிபாலிடியில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கும், தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கும் நியாயமான சம்பளம் கிடைக்க அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது தொழில்களில் நல்ல லாபம் கிடைக்கிறது. அப்படியிருக்கும்பொது தொழிலாளர்களுக்கு ஏன் அதிகச் சம்பளம் கொடுக்கக்கூடாது ?. தொழிலாளர்களுக்கு நியாகமான ஊதியம் கிடைக்கவேண்டுமாறு காரியம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member Sri Ratnam may now speak but he should finish his speech within five minutes.

10-38 a.m. SRI A. RATNAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழிலாளர் பிரச்னை இன்று முக்கியமான பிரச்சனையாய் இருந்துகொண்டு வருகிறது. எங்கு பார்த்தாலும் சிறு கைத்தொழில்கள் எல்லாம் க்ஷீண தசையை அடைந்துகொண்டு வருகிறதே தவிர நல்ல தொழில் அபிவிருத்தி அடையக் காணோம். காரணம், சர்க்கார், சிறு கைத்தொழில்கள் செய்துகொண்டு வருகிறவர்களுக்கும், சிறு factory-கள் நடத்திக்கொண்டு வருகிறவர்களுக்கும் வசதிகள் செய்வதைக்காணோம். சர்க்கார், ஏதோ கடன் கொடுக்கிறோம், வசதிகள் செய்து கொடுக்கிறோம் என்றெல்லாம் கூறுகிறார்களே தவிர பத்தும் இருபதும் தொழிலாளர்களை வைத்துக்கொண்டு மின்சார வசதிகொண்டு செய்யக்கூடிய சிறிய கைத்தொழில்கள் செய்கிறவர்களுக்கு நமது சர்க்கார் வேண்டிய வசதிகள் செய்து தருகிறதா? அவர்களது முதலீடுகளைப் பலப்படுத்துகிறதா என்றால் இல்லையென்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. அந்தச் சிறு முதலாளிகளின் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நல்ல அளவிற்கு ஊதியம் கொடுக்கத் தகுதியான முறையில் வசதி செய்து கொடுத்தால் தான் சிறு தொழில்கள் இந்த நாட்டில் நடக்க முடியும். நமது சர்க்கார் சமீபத்தில் ஒரு திட்டம் கொண்டு வந்திருக்கிறது. ஒரு தொழிலாளி வேலை செய்தாலோ, அல்லது இரண்டு தொழிலாளிகள் வேலை செய்தாலோ மின்சாரத்தினால் இயங்கக் கூடிய எல்லாத் தொழில்களையும் Factory Act-ன் கீழ் கொண்டு வரப்படுகிறது. இன்றைக்கு, சிறிய முதலாளிகள் மின்சார சக்தியால் இயக்க கூடிய சிறிய தொழில்களை நடத்திக்கொண்டு இருக்கிறவர்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். அநேகர் இச்சிறு கைத்தொழிலேயே நிறுத்திவிடுகிறார்கள். இத்தொழில்கள் Factory Act-க்குக் கீழே வருவதற்கு முன்னமேயே லேபர் இன்ஸ்பெக்டர் ஆங்காங்கே சென்று வரி அதிகமாவதுபற்றி, சொல்வதும், கார்ப்பொரேஷன் வரி ஒரு ரூபாய்க்கு நூறு ரூபாயாக உயர்வதுமாய் இருந்தால், அதனால் சர்க்காருக்கு கூடுதல் வரி கொடுக்க வேண்டியிருப்பதால் அத்தொழில்கள் சீர்கெட்டுவிடும் என்றும், அச்சிறு முதலாளிகள் மிகவும் பயப்பட்டுக்கொண்டிருப்பதாலும் மந்திரியவர்கள் இதுபற்றி கவனித்து ஒரு நல்ல உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். அந்த உத்தரவு சிறிய கைத்தொழில்களுக்கு அபிவிருத்தி அளிக்கும் வகையில் இருக்கவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். மில்கள் அதிகமிருக்கின்றனவென்றால் அதனால் சர்க்காருக்கு அதிக லாபம் வருகிறதே தவிர தொழிலாளிக்கு அதிக போனஸ் கொடுப்பதோ அல்லது தொழிலாளிகளின் கூலியை அதிகரிக்கச் செய்வதோ கிடையாது. நம் நாட்டிலுள்ள மேனாட்டு முதலாளிகள் அதிகாரிகளின் ஊதியத்தை ஆயிரக் கணக்கில் அதிகப்படுத்திக்கொண்டு தோட்டந் துறவுகளின்மேல் லட்சக் கணக்கான ரூபாயை செலவழித்துக்கொண்டிருக்க,

21st December 1956] [Sri A. Ratnam]

ஏழை பாட்டாளி மக்கள் உண்ண உணவில்லாமல் வதைந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில், அன்னிய ஏகாதிபத்தியம் இந்த நாட்டில் இருந்தபோது, அன்னியர்கள் இந்த நாட்டில் முதலாளிகளாய் இருந்தபொழுது அவர்களது ஆலைகளில் வேலை பார்த்துவந்த தொழிலாளர்களுக்கு கல்வி வசதி, வைத்திய வசதி போன்றவைகளை இனமாகச் செய்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள், B and C Mill போன்ற ஆங்கிலேய ஆலைகளில். ஆனால் நம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த பிற்பாடு அவர்களும் அவ்வசதிகள் செய்துகொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். ஆனால் நம் இந்திய முதலாளிகள், நூற்றுக் கணக்கானவர்கள், நம் நாட்டு பாட்டாளி மக்களைச் சுரண்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு சட்டதிட்டங்களைத் தளர்த்திக்கொண்டு அப் பாட்டாளி மக்களைச் சுரண்டுவதால் அப் பாட்டாளி மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அப் பாவப்பட்ட தொழிலாளிகள், அவர்களது நியாயமான காரியங்களைக்கூட தொழில் கோர்ட்டுக்கு அனுப்பமுடியாத நிலையில் அவஸ்தைப் படுகிறார்கள். இந்நிலை மாறினால்தான் நம் நாட்டுத் தொழிலாளிகள் முன்னுக்கு வரமுடியும். இல்லாவிடில் அது முதலாளிகளுக்கு பெரிய அபாயத்தை விளைவிக்கும் என்று முதலாளிகளை நான் எச்சரிக்க விரும்புகிறேன். பெரிய பெரிய முதலாளிகளுக்கு சர்க்காரிலிருந்து கடன் கிடைக்கிறது. ஆனால் சிறு முதலாளிகளுக்கு கடன் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. கடன் கிடைக்கவேண்டுமானால் அவர்களுக்கு அசையா சொத்துக்கள் நிறையவேண்டும். அது அடமானத்திலோ இல்லை, அதன்மேல் வேறு கடனோ வாங்கியிருக்கவும் கூடாது. ஆகவே சிறிய முதலாளிகளுக்கு கடன் கிடைப்பது மிகவும் கஷ்டமாய் இருக்கிறது. பெரிய, பெரிய முதலாளிகளுக்கு சர்க்காரிலிருந்து கடன் உதவி அளிக்காவிட்டாலும், அந்த லட்சாதிபதிகள் மார்வாடிகளிடமோ அல்லது கைப்பற்றுகவாவது கடன் பெற முடியும். அப்படிப்பட்ட பெரிய முதலாளிகளுக்கு கடன் கொடுத்துவிட்டு இங்கு வந்து நாங்கள் இவ்வளவு ரூபாய் மக்களுக்கு கடன் கொடுத்திருக்கிறோம் என்று சொல்வதில் யாதொரு அர்த்தமுமில்லை. அப்படிச் செய்வது ஒருவிதத்திலும் சிறிய முதலாளிகளைப் பயன் படுத்தியதாகாது. சிறிய முதலாளிகள், கடன் வாங்கியோ அல்லது சொத்துக்களை அடமானம் வைத்தோ சிறு தொழில்கள் ஆரம்பித்து அதிலிருந்து வரக்கூடிய வருவாயை வைத்துக்கொண்டு எப்படியோ பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். நமது சர்க்காரின் திட்டங்கள் எல்லாம் காகிதத்தில்தான் எட்டுச்சுரக்காய்போல் இருக்கின்றன. நான் கேட்கிறேன் நீங்கள் சிறிய முதலாளிகளுக்காகவோ அல்லது தொழிலாளர்களுக்காகவோ என்ன செய்திருக்கிறீர்கள். அதில் அமைச்சரவர்களுக்கு ஒரு அக்கறையும் கிடையாது. அமைச்சர் அவர்கள் சொல்லலாம், நாங்கள் கோடிக்கணக்கில் செலவிடுகிறோமென்று, தொழிலாளி வர்க்கத்திற்கு நீங்கள் எவ்வளவு கொடுத்திருக்கிறீர்களென்று சொல்லுங்கள். மேடைகளில் பேசுவதாலோ அல்லது சட்ட சபையில் பேசுவதாலோ அல்லது அறிக்கைகள் விடுவதாலோ தொழிலாளி வர்க்கம் ஏமாந்துவிடாது, பயந்துவிடாது, மிரண்டு விடாது என்று சொல்லிக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையினுடைய காலவரை முடிவதற்குள், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு உருப்படியான மசோதா வருமென்ற ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம். அந்தமாதிரி ஒரு சந்தர்ப்பமும் இதுவரையில் ஏற்படவில்லை. பல பிரச்சனைகளின் மீது மசோதாக்கள் கொண்டுவர வேண்டிய அவசியம் இருந்தபோதிலும்கூட, ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி மத்திய அரசாங்கம் விரிவான மசோதா கொண்டுவரும் என்று சொல்லி இந்த சட்டச் சபையில் உருப்படியான ஒரு திட்டமும் எடுத்துக் கொள்ளமுடியாது போய்விட்டது துர்பாக்கியமே யாகும். கடைச் சிப்பந்திகள் சம்பந்தப்பட்டவரையில் அவர்களுக்கு சில சலுகைகள் அளிக்கப்பட்டன. அது சம்பந்தமாக ஒரு ஆபீஸரை நியமித்து அவரது ரிப்போர்ட்டையும் சர்க்கார் வெளியிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்து ஒரு சட்டமாகக் கொண்டுவரவேண்டிய அவசியம் இருக்கிறது. அதையும் இதுவரையிலும் செய்யவில்லை. அதற்கு 10-45 a.m.

[Sri M. Kalyanasundaram] [21st December 1956

மேலும், இன்னும் மற்ற தொழில்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவை களுக்காக சட்டம் கொண்டுவரவேண்டிய அவசியம் இருந்தாலும் சில முக்கியமானவைகளாவது எடுத்துக்கொண்டாக வேண்டும். கைத்தறி நெசவுத்தொழில் சம்பந்தப்பட்ட வரையில் சில ஜில்லாக்களில் **Factory Act** முறை அமுலில் இருக்கிறது. கைத்தொழில்கள் சம்பந்தப்பட்டமட்டில் **Factory Act**-ல் உள்ள திட்டங்களை அமல் நடத்த வேண்டு மென்ற கோரிக்கைகள் இரண்டு வருட காலமாய் இருந்து வருகிறது. அதையும் அமல் நடத்தியதாகத் தெரியவில்லை. பீடித் தொழிலாளர் சம்பந்தப்பட்டவரையில் ஒரு மசோதாவை விரிவாகக்கொண்டு வருவார்க ளென்று நாங்கள் எதிர்பார்த்தோம். அமைச்சரவர்கள் நேற்றுகூட வாக் குறுதி கொடுத்திருக்கிறார்கள், 22-ம் தேதி அதை வெளியிட்டு விடு கிறோமென்று. கூடுமானல் அதை 26-ம் தேதியே நிறைவேற்றி விடு வோமென்றும் மந்திரியவர்கள் நேற்று வாக்குறுதி கொடுத்தார்கள். அதன் முடிவு என்னவாகப்போகிறது என்று நாங்கள் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டசபை செய்ய வேண்டியது, குறைந்தபட்சம் இந்தச் சட்டமாவது இந்த சட்ட சபையில் நிறைவேற்றப்பட வேண்டும். அந்த கௌரவம் தொழில் மந்திரியவர்களுக்கே சேரட்டும். அடுத்தபடியாக, இன்னொன்று. பல மாதங்கள் அது ஆலோசனையி லிருந்து ஒரு மசோதா தயாரிக்க **Labour Advisory Committee**-ல் வைக்கப்பட்டது. அதை சர்க்காரும் ஒத்துக்கொண்டார்கள். முதலாளி களும் ஒத்துக்கொண்டார்கள். தொழிலாளிகளின் சார்பில் எதிர்கட்சித் தலைவர் ராமமூர்த்தியவர்களும், நானும், இன்னும் மற்றவர்களும் ஒத்துக் கொண்டோம். இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸைச் சேர்ந்தவர் கள் அதை முழுமனதுடன் வரவேற்கவில்லை. ஆனால், அவர்கள் அதை பகிரங்கமாக ஆட்சேபித்தார்களென்று சொல்லமுடியாது. அந்த மசோ தாவையும் கொண்டுவரவில்லை. தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையில் ஏதாவது ஒரு மசோதாவை இந்த சட்டசபையின் முன் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம் என்று தொழில் மந்திரியவர்களால் சொல்ல முடியுமா ? அதற்கு அவகாசம் இல்லாததுதான் காரணமா ? அப்படி யானல் அவ் விலாகாவில் உள்ளவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். அவகாசமில்லாததோ அல்லது மந்திரியவர்களுக்கு அதற்குள்ள திறமையில்லாததோ அல்ல அதற்குக் காரணம். தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையில் உள்ள ஒரு மசோதாவை கொண்டு வரவேண்டு மானல் சர்க்காருக்குத் தயக்கம் ஏற்படுகிறது.

உதாரணமாக இன்று பீடித்தொழிலாளர்கள் சம்பந்தமாக அவர்கள் இரண்டு வருட காலமாக அனுபவித்து வரும் கஷ்டங்களிலிருந்து விடுதலை அடையவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைப்பற்றி விசாரித்து குறைகளை நீக்குவதற்காக ஒரு ஸ்பெஷல் ஆபீஸரையும் நியமித்து அவருடைய ரிப்போர்ட்டும் சர்க்காருக்கு கொடுத்து விட்டதாக தெரிகிறது. அந்த ரிப்போர்ட்டு இதுவரை வெளிவந்ததாக தெரியவில்லை. ஆகவே அவர்களுக்கான மசோதா ஏன் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன ? இந்தப் போக்கு சரியல்ல, ஆகவே பீடித் தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய மசோதாவை இந்த சபை யிலேயே கொண்டுவந்தால் நன்றாக இருக்கும். அவர்களது குறைந்தபட்ச கோரிக்கைகளை நிறைவேற்றப்பட்டதற்கு அறிகுறியாக இந்தச் சபையிலே அவர்களது மசோதாவை கொண்டுவரவேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

10-50 a.m. THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தொழில் பிரச்னையை பொறுத்தமட்டில் இந்த விவாதத் தில் கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் தொழில் சம்பந்தமான சில சட்டங் கள் கொண்டுவரவில்லை என்று முக்கியமாக குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டங் களை இயற்றுவதில் சில கஷ்டங்கள் இருக்கிறது என்பதை கனம் அங்கத் தினர்கள் எல்லோரும் உணருவார்கள். அதாவது சில சட்டங்களை மத்திய அரசாங்கம் நிறைவேற்றுகின்றன. அப்படி மத்திய அரசாங்கம் இயற்றும் சட்டத்தால் அது எல்லோருக்கும் பயன்படும். ஆகவே மத்திய அரசாங்கம் கொண்டுவரும் சட்டங்களை ராஜ்ய அரசாங்கமும் அநேகமாக தொழில் தலை

21st December 1956] [Sri M. Bhaktavatsalam]

வர்களும் வரவேற்பார்கள். ஆனால் சில சட்டங்களை ராஜ்ய அரசாங்கமே நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ராஜ்ய அரசாங்கம் நிறைவேற்ற எண்ணி இருக்கும் சட்டத்தை மத்திய அரசாங்கம் நிறைவேற்றப் போவதாக அறிவித்திருந்தால் ராஜ்ய அரசாங்கம் அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் சில தடங்கல்கள் இருக்கின்றன. அதல்லாமல் சட்டங்களை ராஜ்ய அரசாங்கமே நிறைவேற்றுவதற்கு தயக்கம் ஒன்றுமில்லை. இதில் யாதொருவிதமான அரசியல் பயமும் இல்லை. மேலும் கொள்கை நிர்ணயம் இல்லாமலும் இல்லை. எவ்வளவோ சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அதில் சில சட்டங்கள் நிறைவேற்றுவதற்கு முன்னால் மத்திய அரசாங்கத்தின் நிலை என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரே விஷயத்தை மத்திய அரசாங்கமும் நிறைவேற்றி அதை ராஜ்ய அரசாங்கமும் நிறைவேற்றினால் அது மக்களுக்கு யாதொரு பயனையும் அளிக்காது. ஷாப் ஆக்ட் விஷயத்திலும் அந்தச் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல ஸ்பெஷல் ஆபீஸருடைய ரிப்போர்ட் வந்திருக்கிறது. அதை மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதிக்காக அனுப்பி இருக்கிறது. இதனால் தான் தாமதம் ஆகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதே மாதிரிதான் குறைந்தபட்ச கூலி நிர்ணய சட்டத்திலும் சில மாற்றி அமைக்க வேண்டியிருக்கிறது. குறைந்தபட்ச ஊதியத்தை சரிவர நிர்ண யிக்க வேண்டியது அவசியம் தான். ஆனால் இந்த மாற்றம் கொண்டு வருவதில் மத்திய அரசாங்கத்தின் ஆலோசனை என்ன என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இதிலும் அதேமாதிரிதான் தாமதம் ஏற்படுகிறது. ஆனால் சில சட்டங்களை இயற்றுவதில் ராஜ்ய அரசாங்கமும் நன்கு பரிசோதனை செய்ய வேண்டியிருக்கிறது. தொழிலாளர் களுடைய சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று எவ்வளவு அவசரம் எதிர்க்கட்சி தலைவர்களுக்கு இருக்கிறதோ அதே அவசரம் எனக்கும் இருக்கிறது. ஆனால் வெறும் அவசரம் இருந்தால் மட்டும் போதாது. அதை நிறைவேற்றுவதில நன்கு பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே தொழிலாளர் சம்பந்தமான சட்டங்களை கூடியசீக்கிரம் கொண்டு வரவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையும். இம்மாதிரி சட்டங்களை கொண்டு வருவதில் சட்ட இலாகாவின் ஆலோசனைகளையும் பெற வேண்டியிருக்கிறது. அப்படி இல்லாமலிருந்தால் சில சட்டங்களை கோர்ட் டார் 'இந்த சட்டம் சரியில்லை' என்று சொல்லிவிடுகிறார்கள். இதனால் பாதகம் அதிகமாகத்தான் ஏற்படுகிறது. அதை தடுக்கவேண்டுமென்றுதான் சற்று தீவிரமாக நிதானமாக ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. இதனால் தான் சற்று தாமதம் ஏற்படுகிறது. அடுத்ததாக பீடித்தொழிலாளர்கள் பற்றி அவர்களுக்கு ஒரு சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்று முதலிலே சொல்லியிருக்கின்றேன். அதன் நிலைமையை விளக்க விரும்புகிறேன். அந்தச் சட்டத்தை உடனே கொண்டுவரவேண்டுமென்பதுதான் என் ஆவல். அதைப் பற்றி நன்றாக பரிசோதனை செய்து இப்போது மசோதா தயாரிக்கப்பட்டுவிட்டது. இரண்டு மசோதாக்கள் இருக்கின்றன. அதில் ஒன்று லைஸென்ஸ் இன்றி வேறு யாரும் பீடித்தொழிலை நடத்தக் கூடாது என்பதைப் பற்றியது. இன்னொன்று பீடித்தொழிலாளர்களுடைய சர்வீஸ் கண்டிஷனை பற்றியது. அதாவது அவர்கள் வேலை செய்யும் சமயத்தை நிர்ணயிக்கும் இயந்திரம், அதற்கு வேண்டிய விதிகள் இவை களைபற்றி நிர்ணயிக்கக்கூடிய மசோதா. இந்த இரண்டு மசோதாக்களும் தயாரிக்கப்பட்டுவிட்டன. இதை சட்டபூர்வமாக தயாரிப்பதில் தான் தாமதம் ஆயிற்று. தாமதத்தை குறைப்பதற்காக சட்ட நிபுணர்களை நாம் அவசரப் படுத்த முடியாது. இந்த மசோதாவை இந்தச் சட்டசபையிலே கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் என் ஆசை. ஆனால் சட்ட இலாகாவிலிருந்து சொல்லப்படுவது என்னவென்றால் இதை இங்கு கொண்டுவருவதற்கு முன்னால் மத்திய சர்க்காரின் அங்கீகாரம் அவசியம் என்று. அதனால் இந்த மசோதாவை அங்கீகாரத்திற்கு வேண்டி மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து சீக்கிரமே வந்துவிடும் என்று எதிர்ப்பார்க்கிறேன். இந்தச் சட்டசபை முடிவதற்கு முன்னால் அது பிரசிடென்டின் அங்கீகாரம் பெற்று வந்துவிட்டால் இந்த மாதம் 27-ம் தேதிக்குள்ளாகவே இந்த சபையில் கொண்டு வந்து

விடலாம். ஆனால் அது அவ்வளவு சீக்கிரமாக வந்து சேரும் என்று தோன்றவில்லை, ஆதலால்தான் அதைக் கொண்டுவரமுடியவில்லை. அதற்கான துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். சில அங்கத்தினர்கள் வெட்டுப்பிரேரணை கொண்டு வந்து அதில் சுருட்டுத்தொழிலாளர்களைப்பற்றி குறிப்பிட்டார்கள். சிலர் ஹோட்டல் தொழிலாளர்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அதிலும் சர்க்கார் ஒரு சட்டம் கொண்டுவருவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக் கொள்ளும். அதேமாதிரிதான் தொழிற்சங்கங்களுக்காக ஒரு சட்டம் கொண்டு வரப்படவேண்டும். அதற்கு அட்வைசரி கமிட்டி ஆலோசித்து வருகிறது. மேற்கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படும். இதெல்லாம் ஏதோ தேர்தல் வருகிறது. அதற்காகத்தான் இந்த சட்டங்கள் எல்லாம் கொண்டு வரப்படுகிறது என்று சொல்வது சரியல்ல. இது தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். அதற்கிடையில் தேர்தல் வருகிறது என்றால் கொஞ்சம் தாமதம் ஆகுமே தவிர வேறு ஒன்றுமில்லை. வருகிற அரசாங்கத்தில் யாராய் இருந்தாலும் சரி, இதை ஏற்றுக்கொள்ளு வதற்கான முறையில் யாரும் ஆட்சேபிக்கமுடியாத வகையில்தான் இது செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே தொழிலாளர்களுக்கான எல்லா சட்டங்களும் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கனம் அங்கத்தினர் குப்புசுவாமி அவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனைதான். ஏதோ தொழிலாளர்களுக்கு போனஸ் தொகையை நல்ல விதத்தில் பயன்படுத்தவேண்டும். அதற்குத் தகுந்த முறையில் "சேமிப்புத் திட்டம்" என்று ஒரு முறை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள்.

என்னுடைய நீண்ட நாளைய அவா என்னவென்றால் தொழிலாளர்களுடைய குறைகளை நீக்கவேண்டும் என்பதும், அவர்களுடைய தேவைகளை நிவர்த்திக்க வேண்டும் என்பதும், அவர்களுடைய ஊதியம் நல்ல முறையில் கிடைக்க வேண்டும் என்பதும், அவர்கள் நல்ல வாழ்க்கையாக வாழவேண்டும் என்பதும் அதற்கு ஏற்ற வகையில் ஆக்க முறையில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும் என்பதும் அவர்களுக்கு க்ஷேம நல திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதும்தான். இவைகளில் அரசாங்கம் மட்டும் அல்ல, தொழில் அதிபர்களும் கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் சர்க்காருடையவும் என்னுடையவும் அவா. தொழிலாளர் களுக்கு உறுப்படியான திட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்பதும் தான். அப்படிக் கொண்டுவந்து அவைகளை நிறைவேற்ற வேண்டு மென்றும் நினைத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய ஒத்து ழைப்பு வேண்டும். கூடுமானவரையில் அவர்களுக்கு க்ஷேமநல திட்டம் வகுத்து அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் என்னுடைய அவா.

கனம் குப்புசாமி அவர்கள் மற்றொன்றையும் குறிப்பிட்டார். சிற்சில சமயங்களில் பலாத்காரங்கள் ஏற்படுகின்றன, அவைகளைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அப்படி அடிக்கடி பலாத்காரங்கள் ஏற்படுவதால் ஹிம்சைகள் ஏற்படுகின்றன என்றும், அதனால் எல்லோருக்கும் பல தொல்லைகள் ஏற்படுகின்றன என்றும் குறிப்பிட்டார். ஆனால் கனம் ரத்னம் அவர்களைத் தவிர மற்றவர்கள் ஒப்புக்கொள்வார்கள். இப்பொழுது சூழ்நிலை ஒரு நல்ல நிலைமையில் இருக்கிறது என்பதை இப்பொழுது அமைதியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பல பெரிய தகராறுகள் எல்லாம் சுமுகமான முறையிலும் சமரச முறையிலும் மத்யஸ்த முறையிலும் தீர்க்கப்பட்டு வருகின்றன. அவைகளைப்பெரிதும் பாராட்டிக்கொண்டு வருகிறார்கள். இப்படி அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருப்பது தொழிலாளர்கள் எல்லோரும் வரவேற்கத்தக்கது. அம்மாதிரி இருந்தும் சிற்சில சமயங்களில் பலாத்கார செயல்கள் ஏற்படுகின்றன. ஆனால் என்னைப் பொறுத்த மட்டிலும், அரசாங்கத்தை பொறுத்தமட்டிலும் அவைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுதான் வரப்படுகிறது. இதைத்

தவிர்ப்பதற்கு என்னைப் பொறுத்த மட்டிலும் அங்குள்ள போட்டியை அகற்ற வேண்டும். தொழில் சங்கத்திற்கு என்று ஒரு சட்டம் இயற்ற வேண்டும். அப்படிச் சட்டம் இயற்றினால்தான் அநேகம் தகராறுகளை அகற்றக்கூடிய தாக இருக்கும். இது என்னுடைய சொந்த அபிப்பிராயம். அப்படிப் பட்ட ஒரு சட்டத்தை இந்த சட்டசபையிலேயே கொண்டுவருவதற்கு அவகாசம் இல்லாமல் போய்விட்டது. என்றாலும் வரப்போகிற தேர் தலுக்கு பின் அமைக்கப்படப்போகும் சட்டசபையும், ஏற்படப் போகும் புது அரசாங்கமும் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றும் என்று நம்புகிறேன்.

இன்னும் விவசாய தொழிலாளர்கள் சம்மந்தப்பட்ட மட்டில் கனம் பழநியாண்டி அவர்கள் குறிப்பிட்டார். விவசாய தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி, ஊதியம் முதலியவைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். இப்படிப்பட்ட ஒரு பிரச்னையும் அரசாங்கத்தின் முன் இருக்கிறது. ஆனால் விவசாயிகளுடைய பிரச்னை மிகவும் சிக்கலானது. நாம் அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதாக இருந்தால் அது சிலருக்கு பாதகமாக இருக்கும். அப்படி ஒரு விவசாயிக்கு சாதகம் செய்யும்போது அதனால் மற்றொரு விவசாயி பாதகமடையக் கூடாது. சில இடங்களில் அதிகப்படியான சில விவசாயிகள் வாங்கிக்கொண்டுவருகிறார்கள். அதனால் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதில் பல சிக்கல்கள் ஏற்படு கின்றன. புள்ளி விவரங்களை சேகரிக்காமலும் அவைகளைத்தெரிந்து கொள்ளா மலும் குறைந்தபட்ச கூலியை நிர்ணயம் செய்யக்கூடாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் சட்டம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. கூடியசீக்கிரத்தில் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றவேண்டும் என்றுதான் அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி மத்திய அரசாங்கத்தையும் கலந்து ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கமும் சில விவரங்களை சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை சீக்கிரத்தில் தயாரிக்கவும் நாங்கள் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்திக்கொண்டிருக் கிறோம். ஆகவே மத்திய அரசாங்கமும் இந்த அரசாங்கமும் இது விஷயத் தில் கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதைச் சொல் லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறுகிய காலம் இருப்பதன் காரணத்தால் இன்னும் அதிகமாக இந்த சமயத்தில் பேசுவதற்கு இல்லை. வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்த கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். அரசாங் கத்தைப் பொறுத்தமட்டில் தொழிலாளர்களுடைய நலனுக்காக அவர் களுடைய குறைகளை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வேண்டிய கவனமும் செலுத்திக்கொண்டுதான் வருகிறது என்று நான் சொல்லுகிறேன். அதை ஏற்றுக் கொள்ள முடிந்தால் இந்த வெட்டுப் பிரேரணையை அவர் வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பீடித்தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் சட்டம் வரும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தோம். அதுவும் ரொம்வும் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அது இல்லாமல் பல ஜில்லாக்களில் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை பல சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல் லிருக்கிறோம். நேற்றுகூட பீடித் தொழிலாளர்களுடைய கூட்டம் ஒன்று வந்து கனம் மந்திரி அவர்களைக் கண்டார்கள். சுமார் 500 அல்லது 600 பீடித் தொழிலாளர்கள் பல இடங்களிலிருந்து வந்து கனம் மந்திரி அவர்களையும் சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் மந்திரி அவர்களுடன் பேசக் கூடிய சமயத்தில் நானும் இருந்தேன். அந்தச் சமயத்தில் கனம் மந்திரி அவர்கள் அந்த இலாகா காரியதரிசி அவர்களை டெலிபோன் மூலமாக கூப்பிட்டு 22-ம் தேதி மசோதாவை தயாரித்து அதையும் சட்டசபைக்கு நோட்டீஸ் கொடுத்து விட வேண்டும் என்று தெளிவாகக் கூறினார்கள். ஆனால் இப்பொழுது கூறக் கூடிய சமயத்தில் அந்தச்

[Sri M. Kalyanasundaram] [21st December 1956

சட்டம் இந்தச் சபையின் முன்பாக வருமோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. வராதோ என்று கூடத் தோன்றுகிறது. இது நேற்று தெரியவில்லையா என்று கேட்கிறேன். இப்பொழுது மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி பெற வேண்டியிருக்கிறது என்று கூறுகிறார். அப்படி மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும் என்பது நேற்றைய தினமே லேபர் டிபார்ட்மெண்டுக்கும் சட்ட டிபார்ட்டுமெண்டுக்கும் தெரியாதா? அப்படித் தெரிந்திருந்தும் என்னை ஏமாற்றுவதற்காகத்தான் அப்படி சொல்லப்பட்டதா? அந்த அந்த இலாகா அதிகாரிகளும் கனம் மந்திரி அவர்களும் நேற்றைய நிலைமையை சமாளிப்பதற்காக அப்படிச் சொல்லி என்னை ஏமாற்றினார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதில் ஏமாற்றுதல் ஒன்றும் இல்லை. அப்படி கனம் அங்கத்தினர் கொஞ்சம் கூட நினைக்கக் கூடாது. அந்த மசோதா நேற்று தினம் தான் அவசரமாக தயாரிக்கப்பட்டது. அப்பொழுது அது தொழில் இலாகாவில் இருந்தது. அப்பொழுதுதான் தொழில் இலாகா காரியதரிசி நமக்கு டெலிபோன் மூலம் தெரிவித்தார். அப்பொழுது எதிர்க் கட்சி உப தலைவர்கூட பக்கத்தில் இருந்தார். அந்த மசோதா தயாரிக்கப்பட்டு பிற்பட்டு அது சட்ட இலாகாவிற்கு அனுப்பப்பட்டது. அங்கு அதை பரிசீலனை செய்து இன்னும் நாலைந்து நாட்களில் அதைக் கொண்டு வந்து நிறைவேற்றி விடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தோம். அவர்களும் சரி என்று சொன்னார்கள். இப்பொழுது அது சட்ட இலாகாவில் இருக்கிறது. இதைப்பற்றி சட்ட காரிய தரிசியிடம் பேசுகிறேன் என்று தெரிவித்தார்கள். இன்று காலையில் தொழில் இலாகா காரியதரிசி என்னிடம் வந்து சொன்னார் "சட்ட இலாகா காரியதரிசியிடம் பேசிக் கொண்டிருந்தேன். இது கன்கர்ரண்ட் லிஸ்ட்டில் (concurrent list)-ல் இருக்கிறது, அதனால் மத்திய அரசாங்கத்தின் அனுமதியும் பெற வேண்டும் என்று சொன்னதாகச் சொன்னார். இதைப்பற்றி நேற்றைக்கு முன்பு தான் தெரியவந்தது. அதன் பிறகு இது வெளிப்பட்டது. அதன் பிறகுதான் இது மத்திய சர்க்காருக்கு அனுப்ப வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. அப்படி அங்கு அதை அனுப்பி மத்திய அரசாங்கத்தினுடைய அங்கீகாரம் பெற்று அதன் பிறகு பிரசிடெண்டின் அங்கீகாரமும் பெற வேண்டியதாக இருக்கிறது என்று தெரிய வந்தது. அதுவும் இன்று காலையில் தான் தெரிய வந்தது. இதை நாங்கள் தவிர்ப்பதற்கு இல்லை. அதனால் கனம் எதிர்க் கட்சி உப தலைவரை ஏமாற்றியதாக எண்ணக்கூடாது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துக் கொண்டு தான் வருகிறோம். இன்று காலையில்தான் அந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது. அதைத்தான் இந்தச் சட்டசபையில் இன்று சொன்னேன்.

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நமக்கு தற்காலத்தில் தந்தி வசதி, கம்பி இல்லாத தந்தி வசதி முதலிய எவ்வளவோ வசதிகள் இருக்கின்றன. இதை அவசரம் என்று அரசாங்கம் உணர்ந்திருந்தால் இதற்குள்ளாகவே மத்திய அரசாங்கத்துடைய அனுமதியைப் பெற்றிருக்கலாம். அப்படிப் பெறுவதும் ஒரு கஷ்டமான காரியமல்ல. சட்டம் நிறைவேறிய பிறகுதான் ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்குச் செல்ல வேண்டும். இவைகள் எல்லாம் ஏற்கெனவே இலாகா அதிகாரிகளுக்குத் தெரியவில்லையா? அவைகளைத் தெரிந்து கொள்ளாமலா நேற்று டெலிபோனில் அப்படி பதில் சொன்னார். அதனால் இதில் ஏதோ சூது இருக்கிறது என்றுதான் நான் கருத வேண்டியதாக இருக்கிறது. இப்படி சூது செய்து நேற்றுள்ள நிலைமையை சமாளித்து என்னை ஏமாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் சொல்லி இருக்கிறார்கள். கனம் மந்திரி அவர்களும் இலாகா அதிகாரிகளும் சூழ்ச்சி செய்து இப்படி நடந்து கொள்வது சரியல்ல, அதை ஒப்புக் கொள்ள முடியாது. ஆகையினால் இந்த டிமாண்டை பாஸ் செய்யும் போது நான் இந்த சபையில் இருக்க விரும்பவில்லை. ஆகவே நான் இந்த சபையை விட்டு வெளியேறுகிறேன்.

(பிறகு ஸ்ரீ. எம். கலியாணசுந்தரம் அவர்களும் அவர் கட்சியைச் சேர்ந்த மற்றும் சில அங்கத்தினர்களும் சபையை விட்டு வெளியேறினார்கள்.)

21st December 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, மந்திரி அவர்கள் சூழ்ச்சி செய்கிறார் என்று சொன்னாலும் பரவாயில்லை. ஆனால் இலாகா அதிகாரிகளைப் பற்றி சொல்வது சரியல்ல. டிபார்ட்மெண்ட்டை குறை கூறுவதில் பிரயோசனம் இல்லை. வெளியேறுவதால் அதை வைத்துக்கொண்டு இதை தேர்தலுக்காக பயன்படுத்திக் கொள்ளலாம். அதிகாரிகளை ஒன்றும் சொல்ல முடியாது. அப்படிச் சொல்வதும் தவறு. எதிர்க் கட்சி உப தலைவர் ரொம்பவும் பொறுப்புள்ளவர். அபாண்டமாக இலாகா அதிகாரிகளின் பேரில் புகார் சொல்லுகிறார்.

DEPUTY SPEAKER: As hon. Member Sri S. Ramalingam who moved the cut motion is not in his seat, the cut motion moved by him is deemed to be withdrawn.

SRI A. RATNAM: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இன்றைக்கு நாட்டில் இருக்கும் பிரச்னை சாதாரண பிரச்னை அல்ல. . . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் பேசுகின்ற பேச்சு எந்த வகையைச் சேர்ந்தது என்று நான் உதவி சபா நாயகரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI A. RATNAM: On a point of order. . . . . இன்று நாட்டிலே தொழிலாளி வர்கம் அடைந்து வருகிற தொந்தரவுகள் கொஞ்சநஞ்சமல்ல.

DEPUTY SPEAKER: That is not a point of order. I am not going to allow the hon. Member to speak further. The hon. Member is only trying to explain something and that is no point of order at all. I will now put the Demand to the vote of the House. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,50,000 under Demand XXIII—Labour including Factories."

The Demand was put and carried and the Grant was made

SRI P. RANGASWAMY REDDIAR: On a point of order. கனம் உதவி சபா நாயகர் அவர்களே 1957-ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து ஆகவேண்டிய செலவினங்களுக்கு நாம் இப்பொழுது கட் மோஷன் மூவ் பண்ணி டிமாண்டு பாஸ் செய்கிறோம். கட் மோஷன் பாஸானால், இந்த சர்க்காரைப் பாதிக்குமா, அல்லது வரப்போகும் சர்க்காரையா என விளக்கும் படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: வரப்போகிற சர்க்கார் செலவிட வேண்டிய தொகையானாலும் கட் மோஷன் பாஸானால் இந்த சர்க்காரைத்தான் பாதிக்கும்.

SRI A. RATNAM: On a point of information, Sir. கனம் உதவி சபாநாயகர் அவர்களே எதிர்க் கட்சி அங்கத்தினர்களில் பெரும்பாலோர் சபையிலிருந்து வெளியேறிவிட்டார்கள். குறிப்பாக சர்க்கார் அதிகாரிகள் பொறுப்பாக நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சுமத்திவிட்டு வெளியேறி இருக்கிறார்கள். அதனால் அமைச்சர் அவர்கள் தப்பித்துக் கொண்டாலும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஒரு கமிஷன் அமைக்க ஏற்பாடு செய்வார்களா என்று கேட்கிறேன்.

SRI K. RAJARAM NAIDU: அவர்கள் திரும்பி வந்து உட்கார்ந்து விட்டார்கள்.

(2) DEMAND VII—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES ADMINISTRATION.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 43,00,000 as advance grant under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 43,00,000 as advance grant under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration."

SRI K. T. RAJU : கனம் சபாநாயகர் அவர்களே, பொது விற்பனை வரி சம்பந்தமான நிர்வாகத்தின் மேல் கோரியிருக்கின்ற மானியத்திற்கு பல கட்ட விற்பனை வரியை ஒரு முனை விற்பனை வரியாக மாற்றி இதுவரை சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுக்காததைப் பற்றியும், சாக்கு, பருத்திக் கொட்டை, புண்ணாக்கு போன்ற பொருள்களுக்கு உடனடியாக ஒரு முனை வரியை அமுலுக்குக் கொண்டு வராததைப் பற்றியும் விவாதிக்க நான் என்னுடைய பெயரால் கொடுத்திருக்கும் மானியத்தை ரூ. 100 குறைக்கக் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையைப் பிரேரிக்கிறேன்.

DEPUTY SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 43,00,000 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration be reduced by Rs. 100."

The Demand and the cut motion are before the House for discussion.

SRI K. T. RAJU : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, என்னுடைய வெட்டுப் பிரேரணையின் மேல் பேசும் போது சில விஷயங்களை சபையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். பொதுவாக கடந்த ஐந்து வருஷங்களாக இந்தச் சபையில் பலமுனை விற்பனை வரியை மாற்றி ஒரு முனை விற்பனை வரி போட வேண்டுமென்பதாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது. பல ஆயிரக்கணக்கான வியாபாரிகள் இதைப் பலகாலமாக வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். சென்னை சர்க்காரிடத்தில் பல முறை நேரிடையாகச் சொன்னதோடு அல்ல. அதனால் எப்படி சர்க்காருக்கு இப்போது வந்து கொண்டிருக்கிற வருமானம் குறையாது என்பதையும் திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இன்று வரைக்கும் சர்க்கார் அவர்களுடைய குறையைக் கவனித்து அதை நீக்குவதற்கு முன் வர வில்லை. நீக்க வில்லை என்பது மட்டுமல்ல. "நாங்கள் இந்தக் காலத்திற்குள்ளாக நீக்கி விடுகிறோம்" என்பதான உத்திரவாதமும் அளிக்கப்பட வில்லை. எனவே தான் இன்றைக்கு வியாபாரி வர்க்கத்தினர் சர்க்காரை பல முறையாகவும் கண்டித்துப் பேசி வருகின்றார்கள். ஒரு முனை விற்பனை வரி போடுவதன் மூலம் சர்க்காருக்கு இன்றைக்கு வருகின்ற வருமானம் குறையாது என்பதற்குப் போதுமான புள்ளி விவரங்களை வியாபாரிகள் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் யோசனையை ஏற்றுக் கொள்ளாததற்குப் போதுமான சமாதானம் நம் சர்க்கார் கொடுக்கவில்லை. அதனால் இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பது நமக்குத் தெரிய வேண்டும். இப்பொழுது மத்திய அரசாங்கம் விதிக்க இருக்கும் எக்ஸைஸ் ட்யூடிபடி

சீக்கிரத்தில் ஒரு முனை விற்பனை வரி வந்துவிடும் என்று சொல்வதை ஒப்புக் கொள்ள முடியாது. சர்க்கரை, ஆலைத் துணி முதலியவைகளுக்குப் போடுவதன் மூலம் அது பரவலாக வந்து விட முடியாது. ஏதோ ஒரு சில பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரியைக் கொண்டு வருகிறோம் என்கிற சமாதானத்தையும் ஒத்துக் கொள்ள முடியாது. உதாரணமாக சாக்குக்கு ஒரு முனை விற்பனை வரி போடலாம். உற்பத்தியாகும் கட்டத்தில் விற்பனை வரி போடுவதும் சுலபமாகும். பருத்திக் கொட்டையும் அப்படித் தான். இவற்றுக்கு எல்லாம் ஏன் உடனடியாக ஒரு முனை விற்பனை வரி போடக் கூடாது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சர்க்காருடைய கொள்கை என்ன என்பதைப் பற்றியும், விளக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஜில்லா நிர்வாக விஷயமாகவும் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தாலுக்காவில் இப்பொழுது தான் அதிகமான நிலத்தீர்வை, தண்ணீர் தீர்வை முதலியவைகள் வசூலிக்கப்படுகின்ற காலம். தாலுக்கா ஆபீஸ்களில் வேலை நெருக்கடி மிகவும் அதிகமாக இருக்கின்றது. இருக்கக்கூடிய குமாஸ்தாக்களை வைத்துக் கொண்டு அங்கே இருக்கக் கூடிய ஆர். டி. ஒ-க்கள் எப்படி விவசாயிகளுக்கு இருக்கக் கூடிய இதர குறைகளை எல்லாம் தீர்க்க முடியும்? இன்றைய தினம் எங்கள் தாலுக்காவில் மட்டும் 75 ஏக்ராவுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக வருகின்ற விண்ணப்பங்கள் அந்தத் தாலுக்காவில் கவனிக்கப்படுவதே இல்லை. அந்தத் தாலுக்கா தாசில்தாருக்கும் வேலை அதிகம். டெபுடி தாசில்தாருக்கும் வேலை அதிகம். அதேபோல இருக்கக் கூடிய குமாஸ்தாக்களுக்கும் வேலை அதிகமாக இருப்பதனால் விவசாயிகளிடமிருந்து வருகின்ற விண்ணப்பங்களைக் கூடப் படித்துப் பார்த்து பதில் எழுதாமல் அப்படியே போட்டு வைத்திருக்கிறார்கள். தாசில்தாருக்கும் விவசாயிகளைத் தெரிந்து கொள்வதற்கு வசதியே இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே அங்கே அதிகரித்து இருக்கும் வேலையை உத்தேசித்து, இன்றைக்கு இருக்கும் பிரத்யேகச் சூழ்நிலையின் காரணமாக அந்தத் தாலுக்காவில் அதிகமான குமாஸ்தாக்களை போட வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு தாசில்தார் நூற்றுக்கணக்கான கிராமங்களைச் சென்று பார்த்து வரவேண்டியிருப்பதால் அவருக்கு ஜீப் வசதியும் செய்து கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களை நாம் 'ஏன் அந்த வேலையைச் செய்யவில்லை, இந்த வேலையைச் செய்யவில்லை' என்பதாகக் கேடக உரிமை உண்டு. வசதியும் உண்டு. இவ்விஷயங்களில் எல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி பதில் அளிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

SRI V. BALAKRISHNAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 11-18 a.m.
வெட்டுப்பிரேரணையை ஆதரித்து சில குறைகளை மாத்திரம் சொல்லவிரும்புகிறேன். ஒரு முனை வரியைக் கொண்டுவரவேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல. சீனி மீது வசூலிக்கப்படும் விற்பனை வரி வசூலிப்பதில் ஓட்டை இருப்பதாகத் தெரிவித்தார்கள். இரண்டாவதாக இலங்கையிலிருந்து வந்திருக்கும் அகதிகளுக்குக் கொடுக்கப்படும் சலுகையை பற்றி தெரிவிப்பதுதான் என்னுடைய நோக்கம். நமது ராஜ்யத்தில் 10 லட்சம் சீனி மூட்டைகள் தேவையாக இருக்கின்றன. 4 லட்சம் சீனி மூட்டைகள் நமது ராஜ்யத்தில் விற்பனையாகின்றன. பாக்கி 6 லட்சம் சீனிமூட்டைகள் வேறு ராஜ்யத்திலிருந்து வரவேண்டும். ஆகையால் அவைகள் கப்பல் மூலமாகவும், படகு மூலமாகவும், ரயில் மூலமாகவும் வந்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் இவைகளுக்கு சரியான கணக்கு சர்க்காரிடம் இல்லை. அதனால் விற்பனை வரியைக் கொடுக்காமல் ஏமாற்றிவிடுகிறார்கள்.

உதாரணமாக உத்திர பிரதேச ராஜ்யத்திலிருந்து நம் ராஜ்யத்திற்கு வரும்போது இங்குள்ள வியாபாரிகள் அதற்கு விற்பனை வரி கொடுக்காமலேயே வேறு வியாபாரிகளின் பெயரை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்து

[Sri V. Balakrishnan] [21st December 1956

[illegible]க்கு விற்பனைவரி செலுத்தாமல் ஏமாற்றுகிறார்கள். அங்கு [illegible]யக்கு 3 பைசா வீதம் கொடுக்கப்படுவதில்லை. இந்த ராஜ்யத்தில் [illegible]பாய்க்கு 1 அணாவும் கொடுப்பதில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால் இப்பொழுது இருக்கும் சட்டம் அதைத் தடுப்பதற்கு இடம் கொடுக்காமல் இருக்கிறது. ஆதலால் எத்தனை வியாபாரிகள் இம்மாதிரியாக வெளி இடங்களிலிருந்து சீனியை வரவழைக்கிறார்கள். அவர்களில் எவ்வளவு பேர்களின் பெயர்கள் பதிவு செய்யப்படாமல் இருக்கிறது என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இலங்கையிலிருந்து வரும் அகதிகள் சில வியாபாரங்களில் ஈடுபடுவதால், அவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அந்தச் சலுகைகள் இலங்கையிலிருந்து வரும் உண்மையான அகதிகளுக்குத்தான் கொடுக்கப்படுகின்றனவா அல்லது போலி அகதிகளுக்கும் கொடுக்கப்படுகின்றனவா என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டும். இலங்கையிலிருக்கும் இந்தியரை இலங்கை அரசாங்கம் மூன்று மாத நோட்டீஸ் கொடுக்கப்பட்டு பிறகு போலீஸ் டிபார்ட்மெண்டுக்கு தெரிவிக்கப்பட்டு நம் நாட்டுக்கு கடத்தப்பட்ட அகதிகள்தான் இங்கு வருகிறார்கள். அவர்களைத்தான் அகதிகள் என்று சொல்லவேண்டும். ஆனால் இந்த விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு கேட்பதற்காக தங்களை அகதிகள் என்று சொல்லிக்கொண்டு பெரும்பாலானவர்கள் அகதிகள் பெயர் கொடுத்து வியாபாரம் செய்கிறார்கள். இதனால் நமக்கு நியாயமாக கிடைக்கக்கூடிய வருமானம் மிகவும் குறைந்துபோகிறது. சாதாரணமாக நமக்கு இந்த விற்பனை வரியிலிருந்து 40 லட்சம் ரூபாய் வரக்கூடும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இம்மாதிரியாக போலி வியாபாரிகளுக்கெல்லாம் சலுகைகள் கொடுத்தால், கிட்டத்தட்ட 8, 9 லட்சம் குறைந்து போகும். சென்ற 8 மாதங்களில் நமது அரசாங்கம் இந்த விற்பனை வரிமூலம் 20 லட்ச ரூபாய்தான் வசூல் செய்திருக்கிறார்கள். இன்னும் பாக்கி இருக்கும். மூன்று மாதங்களில் எவ்வளவு வசூல் செய்யப்போகிறார்கள் என்று தெரியவில்லை. இலங்கையிலிருந்து வரும் அகதிகள் என்று பெயரை வைத்துக்கொண்டு மற்ற வியாபாரிகள் வியாபாரம் செய்கிறார்கள். அரசாங்கம் இதையெல்லாம் நன்றாக கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் நிதி மந்திரி அவர்கள் பேசும்போது சர்க்கரை எல்லோரும் சாப்பிடக்கூடிய உணவு அல்ல, ஏழைகள், பாட்டாளி மக்கள் உணவு அல்ல, கிராம மக்கள் உபயோகப்படுத்துவதில்லை. சாதாரணமாக சர்க்கரை 40 சத விகிதம் உபயோகப்படுத்தப்படுகிறது என்று சொன்னார்கள். இப்பொழுது சட்டத்தில் இருக்கும் ஓட்டை இல்லாமல் இருந்தால் இப்பொழுது ரூ. 40 லட்சம் எதிர்ப்பார்ப்பதை விட மேற்கொண்டு 10 லட்ச ரூபாய் எதிர்பார்க்கலாம். ஆதலால் இந்த இலங்கையிலிருந்து வியாபாரம் செய்கிறவர்களால் பலவிதமான கஷ்ட நஷ்டமெல்லாம் ஏற்படுகிறது. இதை கனம் மந்திரி அவர்கள் கவனித்து ஆவன செய்வார்கள் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

11-25 a.m. **Sri S. PANCHAKSHARAM CHETTIAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ க. டி. ராஜு அவர்கள் பேசும்போது வியாபாரிகள் சங்கம் பலமுனை விற்பனை வரியை எதிர்ப்பதாகவும் அதனால் பலவிதமான குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று அவர்கள் தீர்மானம் போட்டு அனுப்பி இருப்பதாகவும் சொன்னார். ஒரு முனை வரி வரவேண்டும் என்றும், பலமுனை வரியைக் கண்டித்தும் பேசி இருக்கிறார்கள். இது உண்மையோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் வியாபாரிகள் இந்தச் சட்டத்தில் உள்ள குறைகளை அப்படி சொல்லவில்லை. இதற்குக் காரணம் நமது சர்க்கார் என்று சொல்லமுடியாது. இதற்கு பல காரணங்கள் உண்டு. சட்டத்தில் வரி விதிப்புக்கு மாத்திரம் செக்ஷன் 6, 7, குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற 11, 12 செக்ஷன்கள் வியாபாரிகள் வரியை கொடுக்காவிட்டால் எந்தெந்த கஷ்டத்திற்குள்ளாக தண்டிக்கப்படுவார்கள் என்பதுதான் அவர்கள் கஷ்டங்கள்.

21st December 1956] [Sri S. Panchaksharam Chettiar]

இரண்டாவதாக அவர்கள் படும் கஷ்டமானது வரி வசூலிக்கும் அதிகாரிகள் மூலமாக ஏற்படும் கஷ்டம். அவர்கள் வரி வசூலிக்கும்போது இந்தச் சட்டத்தில் இருக்கும்படியான நுணுக்கங்களை அனுசரித்து பணத்தை வசூல் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சில சமயங்களில் விற்பனை வரியை அவசியமாகக் கட்டவேண்டும் என்று இல்லாவிட்டாலும் அதிகாரிகள் வற்புறுத்தி வசூல் செய்கிறார்கள். பயமுறுத்தியும் வசூல் செய்கிறார்கள்.

அடுத்தப்படியாக சட்டத்தின் மூலமாகவே சில குறைகள் இருக்கின்றன. அரசியல் நிர்ணய திட்டத்திலும் 286வது பிரிவின்படி இந்தச் சட்டத்திலிருந்து சில விலக்குகள் அளிக்கப்படுகின்றன. அதாவது ஒரு ராஜ்யத்திலிருந்து இன்னொரு ராஜ்யத்திற்குப் பண்டங்களை விற்றால் அல்லது வாங்கினால் அதற்கு வரி கிடையாது என்றும், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய பண்டங்களை வாங்கினால் அதற்கு வரி கிடையாது என்றும் 286 பிரிவின்படி சொல்லபபட்டிருக்கின்றது.

அந்தச் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவரும் காலத்திலே பல சிக்கலான பிரச்னைகள் ஏற்படுகின்றன. சிக்கலான பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளவதற்காக ஹைகோர்ட்டிலும் சுப்ரீம் கோர்ட்டிலும் பல விதமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அதனால் ஏற்பட்ட குழப்பங்கள் பல உண்டு. இந்தப் பிரச்னைகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரிகள் பலர், சலுகை பெற்ற வியாபாரிகள் பலர். அதாவது நான சொல்ல விரும்புவது என்னவென்றால், ஒரு சட்டத்திற்கும் மற்றொரு சட்டத்திற்கும் இருக்கும்படியான முரண்பாடுகள், நமது சட்டங்களின் விதிகளிலுள்ள முரண்பாடுகள் இவைகளின் காரணமாக வியாபாரிகளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஆகையினால் இப்பேர்பட்ட குழப்பங்கள் இல்லாமல் வியாபாரிகளை வரிகளை சுலபமாக வசூலித்து அரசாங்கத்துக்கு செலுத்துவதற்கு வேண்டிய சட்டங்களை தெளிவாக இயற்றிக் கொடுக்கவேண்டிய கடமை நமமுடைய சர்க்காருடையது. 11-28 a.m.

இந்தச் சட்டம் இயற்றிய பிறகு பிரதி வருஷமும் அதற்கு பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த வருஷத்திலே நான்கு திருத்த மசோதாக்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சென்ற வருஷமும் அப்படித்தான். இம்மாதிரி அடிக்கடி சட்டத்தை திருத்தவேண்டியதன் அவசியம் என்ன என்பதை யோசிக்க வேண்டும். வியாபாரிகள் ஜனங்களிடமிருந்து வசூலிக்கும் வரியை சர்க்காருக்கு சரியாக செலுத்துவதில்லை என்று நினைக்கிறோம். ஆனால் வியாபாரிகள் சில சாமான்களுக்கு விற்பனை வரி வசூல் செய்கிறார்கள். சில சாமான்களுக்கு விற்பனை வரி கிடையாது என்று நம்பி வசூலிக்காமல் விட்டுவிடுகிறார்கள் அப்படியிருக்கும்பொழுது அவர்களைக் கட்டாயமாக சர்க்காருக்கு வரி செலுத்தியாக வேண்டுமென்று அதிகாரிகள் வற்புறுத்தும்பொழுது வாஸ்தவமாகவே அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. இதன் காரணம், சில சிக்கலான பிரச்னைகளுக்கு சட்டம் இடமளிக்கிறது. அதனால் வியாபாரிகள் வாஸ்தவமாகவே கஷ்டப்படும் நிலைமை ஏற்படுகிறது. ஒரு முனை வரி வேண்டுமென்று சொல்லுவதைவிட, நான் என்ன சொல்லுகின்றேன் என்றால் நல்ல முறையில் வரியை வசூலிப்பதற்கு தெளிவான ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டுமென்பதுதான் வியாபாரிகள் "எங்களுக்கு அதிகாரிகளால் ஏற்படும் தொந்தரவை நீக்கி கஷ்டமில்லாமல் வரியை வசூலிக்கும் ஒரு தெளிவான சட்டத்தை இயற்றிக் கொடுங்கள், நாங்கள் வரியை வசூலித்து சர்க்காருக்கு செலுத்துகிறோம்" என்று சொல்லுகிறார்கள். இந்த நாலரை வருஷ காலமாக இந்த விற்பனை வரி சட்டத்திலே எத்தனையோ குறைகளை எடுத்துக் கூறியிருக்கிறோம். முக்கியமான குறைகள் இன்னும் சில கவனிக்கப்படாமலே இருக்கின்றன. இது விஷயமாகவே நல்ல தெளிவான முறையிலே ஒரு சட்டத்தை இயற்றவேண்டிய கடமை நம் சர்க்காரைச் சார்ந்தது. எந்த வழியிலே விற்பனை வரியை வசூலித்தால் கஷ்டமில்லாமல் இருக்கும் எனபதை மததிய அரசாங்கமும் தீர்மானித்துக்

[Sri S. Panchaksharam Chettiar] [21st December 1956

கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வருமானம் குறையாமல் கஷ்டமில்லாமல் எப்படி இந்த வரியை சுலபமாக வசூலிக்கலாம் என்று அவசரமாக இரண்டு மூன்று மாதங்களில் பரிசீலனை செய்து தகுந்த முறையை சிபார்சு செய்ய ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும். நம்முடைய சர்க்காருக்கு வரவேண்டிய வருமானம் குறையாமலும், இருக்கும். வியாபாரிகளுக்கு கஷ்டமில்லாமலும், வரியை வசூலிக்கும் அதிகாரிகளால் வியாபாரிகளுக்கு தொந்தரவு ஏற்படாமலும் ஒரு நல்ல வரிவிதிப்பு முறையை கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய சொற்பொழிவை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI N. K. PALANISAMY : கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
11-33 a.m. நேற்றையதினம் பட்ஜெட் விவாதத்திற்கு பதில் அளிக்கையில், ராஜ்ய சர்க்கார் புகையிலை போன்ற பொருள்களின்மீது விதிக்கும் விற்பனை வரியையும் சேர்த்து மத்திய சர்க்காரே எக்ஸைஸ் வரியோடு ஒரே முனையில் வசூலிப்பார்கள் என்று சொன்னார். இதனால் வரி ஏமாற்றுதலை ஒருவாறு தடுக்கலாம் என்று கூறினார். கில்டர் ரிபோர்ட் மூலமாக வருஷம் ஒன்றுக்கு 300 கோடி ரூபாய் வரி ஏமாற்றப்படுகிறது என்று சொல்லப்பட்டது. ஸ்ரீ தேஷ்முக் வருஷம் ஒன்றுக்கு 30 கோடி ரூபாய் வரி ஏமாற்றப்படுகிறது என்று சொன்னார். 1952-ம் வருஷத்தில் இந்த வரி ஏமாற்றுதலை கண்டு பிடிப்பதற்கு ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. கிட்டதட்ட மூன்று, நான்கு வருஷங்கள் ஆகியும் 120 கோடி ரூபாய் வரி ஏமாற்றத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய கமிஷன் 20 கோடி ரூபாய்க்குமேல் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்காக இதுவரையில் 2 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அப்படி இருக்கும்பொழுது அவர்கள் எப்படி நாம் விதிக்கும் வரியையும் சேர்த்து வசூலிக்கப் போகிறார்கள்? இங்கு இருக்கக்கூடிய விற்பனை வரி உத்தியோகஸ்தர்களே வரியை வசூலித்து மத்திய அரசாங்கத்திடம் கொடுக்கப் போகிறார்களா? அல்லது மத்திய சர்க்கார் இதற்காக தனியாக ஒரு நிர்வாக இயந்திரம் ஏற்படுத்தப் போகிறார்களா? அப்படிச் செய்தால் அதற்கு வேறு தனியாகச் செலவு ஆகும். இங்கு இருக்கும் விற்பனை வரி அதிகாரிகளே வசூலித்து மத்திய அரசாங்கத்துக்குக் கொடுப்பதென்றால், ஏன் அப்படிச் செய்யவேண்டும்? ஆகவே, இதனால் என்ன பிரயோசனம் என்று நான் சர்க்காரைக் கேட்கிறேன். ஆகையால் நமக்கு இருக்கும் இந்த அதிகாரத்தை மத்திய சர்க்காருக்குக் கொடுப்பதில் எந்த விதத்திலும் பிரயோசனமில்லை. ஒரு சமயம் 10 கோடி ரூபாய் குறைவாக வசூலானால், மத்திய அரசாங்கம் அதற்காக ஏதாவது கொடுப்பார்களா? இல்லை. இம்மாதிரி அவசியமே இல்லை. நாமே இந்த வரியை வசூல் செய்து கொள்ளலாம்.

பல வருஷங்களாக சட்டசபை அங்கத்தினர்களும் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய வியாபாரிகளும் ஒருமுனை விற்பனை வரியை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். சர்க்காரே ஏதோ ஓரிரண்டு பொருளுக்கு ஒருமுனை வரி போட்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, இது விஷயமாக நிரந்தரமான முடிவு எதுவும் இதுவரை ஏற்படவில்லை. ஒருமுனை விற்பனை வரி போடவேண்டுமென்று சிறு வியாபாரிகள் பல வருஷங்களாக கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஒருமுனை வரி போடாததால் சின்னஞ்சிறு தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. ஒருமுனை வரி போட்டால் அதிகப்படியான வருமானம் கிடைக்கும். பெரிய வியாபாரிகள் தான் பாதிக்கப்படுவார்கள். சிறிய தொழில்கள் பாதிக்கப்படமாட்டாது. சிறு வியாபாரிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். இது விஷயமாக ஒரு கேள்விக்கு பதில் சொன்னபொழுது 10,000 ரூபாய் விற்று முதல்பேரில் விற்பனைவரி போடுவதற்குப் பதிலாக, வரி விசாரணைக் கமிஷன் சிபார்சின் அடிப்படையில் ரூபாய் 5,000 விற்று முதல்பேரிலேயே விற்பனைவரி போடலாமென்று அமைச்சர் அவர்கள் கூறினார். இதன் அர்த்தம் என்ன? ஏன் இப்படி மந்திரி அவர்கள் நினைக்கிறார்கள்? அப்படிச் செய்தால் சிறு தொழில்கள் நாசமடையும். சிறு வெற்றிலை பாக்கு கடைகள், காப்பி கடைகள் பாதிக்கப்படும். ஒருமுனை

21st December 1956] [Sri N. K. Palanisamy]

வரி எப்படி விதிக்கவேண்டுமென்று நிதி மந்திரி அவர்கள் பேசும் பொழுது, இறக்குமதிப் பொருள்களுக்கு விற்பனை வரி விதிக்க வேண்டுமென்றால் அரசியல் அமைப்பு சட்டத்தையே மாற்றவேண்டுமென்று சொன்னார். ஒரு நல்ல காரியத்திற்காக ஏன் அரசியல் அமைப்பு சட்டத்தை மாற்றக்கூடாது? 31 (ஏ), 31 (பி) பிரிவுகளை மாற்றவில்லையா? அதேபோல் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு விற்பனை வரி விதிப்பதற்கு ஏன் அரசியல் அமைப்பு சட்டத்தை மாற்றக்கூடாது? இது பற்றி சர்க்கார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. வியாபாரிகளின் கஷ்டத்தை விசாரிப்பதற்கு உடனடியாக ஒரு கமிட்டியை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கேஸ்களை ரெவின்யூ கோர்ட்டு, முன்சீப் கோர்ட்டுகள் விசாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமே ஒழிய, tribunal-களை அனாவசியமாக ஏற்படுத்தி அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன்.

SRI V. MADANAGOPAL : கனம் உதவி சபாநாயகர் அவர்களே! 11-38 a.m.
விற்பனை வரி சம்பந்தமாக கடந்த வருட காலமாக சர்க்கார் கவனத்திற்கு வியாபாரிகள் படும் கஷ்டத்தைப் பற்றிக் கூறியபோதிலும் அது சம்பந்தமாக இதுவரையிலும் ஒரு உருவான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. குறிப்பாக, இந்த விற்பனை வரியினால் சின்ன வியாபாரிகள் தான் அதிக தொல்லைகளுக்கும், கஷ்டங்களுக்கும் உள்ளாகிறார்கள். கோர்ட்டிலிருந்து அபராதம் விதிக்கப்பட்டவர்களுடையவும் சிறைக்கு அனுப்பப்பட்டவர்களுடையவும் எண்ணிக்கையைப் பார்த்தால் சின்ன வியாபாரிகளாகத்தான் இருப்பார்கள். இந்த விற்பனை வரி வந்தது முதல் 7,500 ரூபாய்க்குக் குறைவாக வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு இவ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அப்பொழுது இருந்ததைவிட சாமான்களின் விலை இன்று மிகவும் கூடியிருக்கிறது. அன்று 7,500 ரூபாய்க்கு இருந்த பொருள்கள் இன்று 25,000, 30,000 ரூபாயாகிறது. ஆகவே, இந்தச் சிறு வியாபாரிகளுக்கு, வருடத்திற்கு 25,000 ரூபாய் வியாபாரம் நடக்கும் வியாபாரிகளுக்கு, சர்க்கார் இந்த விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கக்கூடிய முறையில் ஒரு உத்தரவு பிறப்பிப்பார்களேயானால், இந்த சர்க்காரைப் பொறுத்தளவில் சிறு வியாபாரிகள் மத்தியில் தங்கள் கோரிக்கையை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறது என்ற ஒரு சிறு திருப்தியும் உதவிகரமுமாய் இருக்கும். இச் சட்டப் பிரகாரம் சிறு வியாபாரிகள் கணக்கு வைத்துக்கொள்ள, ஒரு கணக்குப் பிள்ளையை கணக்கெழுத வைத்துக்கொள்ள அவர்களுக்கு முடியாது. சரியானபடி கணக்கை ஆஜராக்காவிட்டால், உங்கள் கணக்கு சரியாயில்லையென்று சொல்லி கோர்ட் மூலம் அபராதமோ அல்லது சிறைத் தண்டனையோ விதிக்கப்படுகிறார்கள். ஆக, நூற்றுக் கணக்கான சிறு வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை இழந்து தெருவில் நிற்க வேண்டியதாயிருக்கிறது. இரண்டாவதாக, சமீப காலத்தில் உணவுப் பொருள்கள் விலையைப் பொறுத்தளவில் விலை மிகவும் கூடியிருக்கிறது. கணிசமாகக் கூடியிருக்கிறது. இதனால் கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய ஜனங்கள், கூலி வேலை செய்யக்கூடிய விவசாயிகள், நடுத்தர வகுப்பினர் எல்லோரும் மிகவும் அல்லலுற்றுக் கொண்டிருக்கின்றனர். இந்த உணவுப் பொருள் சம்பந்தப்பட்ட மட்டில் அவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறோம். இன்றைக்கு உணவுப் பொருள்களின் விலை கூடியிருக்கும்போது ஒரு ரூபாய் அரிசிக்கு ஒரு அணா sales-tax கொடுக்க வேண்டியிருக்கிறது. இது பற்றிய இறுதியான கொள்கைகளை வகுப்பதற்கு முன்னால் உணவுப் பொருள்கள்மீதிருக்கக் கூடிய விற்பனை வரியை தாற்காலிகமாகவாவது இந்தத் தேதியிலிருந்து நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று உத்தரவிட்டு, சிறிய வியாபாரிகளுக்கு இதிலிருந்து விலக்களிக்கக் கூடியமுறையில் சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு அது மிகவும் உதவிகரமாயிருக்கும். இதுபற்றி மந்திரியவர்கள் அவர்களது கருத்தைத் தெரிவிப்பார்களென்று நினைக்கிறேன்.

[Sri S. Panchaksharam Chettiar] [21st December 1956

கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வருமானம் குறையாமல் கஷ்டமில்லாமல் எப்படி இந்த வரியை சுலபமாக வசூலிக்கலாம் என்று அவசரமாக இரண்டு மூன்று மாதங்களில் பரிசீலனை செய்து தகுந்த முறையை சிபார்சு செய்ய ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும். நம்முடைய சர்க்காருக்கு வரவேண்டிய வருமானம் குறையாமலும், இருக்கும். வியாபாரிகளுக்கு கஷ்டமில்லாமலும், வரியை வசூலிக்கும் அதிகாரிகளால் வியாபாரிகளுக்கு தொந்தரவு ஏற்படாமலும் ஒரு நல்ல வரிவிதிப்பு முறையை கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய சொற்பொழிவை முடித்துக் கொள்ளுகிறேன்.

11-33 a.m. **Sri N. K. PALANISAMY** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நேற்றையதினம் பட்ஜெட் விவாதத்திற்கு பதில் அளிக்கையில், ராஜ்ய சர்க்கார் புகையிலை போன்ற பொருள்களின்மீது விதிக்கும் விற்பனை வரியையும் சேர்த்து மத்திய சர்க்காரே எக்ஸைஸ் வரியோடு ஒரே முனையில் வசூலிப்பார்கள் என்று சொன்னார். இதனால் வரி ஏமாற்றுதலை ஒருவாறு தடுக்கலாம் என்று கூறினார். கல்டர் ரிபோர்ட் மூலமாக வருஷம் ஒன்றுக்கு 300 கோடி ரூபாய் வரி ஏமாற்றப்படுகிறது என்று சொல்லப்பட்டது. ஸ்ரீ தேஷ்முக் வருஷம் ஒன்றுக்கு 30 கோடி ரூபாய் வரி ஏமாற்றப்படுகிறது என்று சொன்னார். 1952-ம் வருஷத்தில் இந்த வரி ஏமாற்றுதலை கண்டு பிடிப்பதற்கு ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. கிட்டதட்ட மூன்று, நான்கு வருஷங்கள் ஆகியும் 120 கோடி ரூபாய் வரி ஏமாற்றத்தைக் கண்டுபிடிக்க வேண்டிய கமிஷன் 20 கோடி ரூபாய்க்குமேல் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்காக இதுவரையில் 2 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அப்படி இருக்கும்பொழுது அவர்கள் எப்படி நாம் விதிக்கும் வரியையும் சேர்த்து வசூலிக்கப் போகிறார்கள்? இங்கு இருக்கக்கூடிய விற்பனை வரி உத்தியோகஸ்தர்களே வரியை வசூலித்து மத்திய அரசாங்கத்திடம் கொடுக்கப் போகிறார்களா? அல்லது மத்திய சர்க்கார் இதற்காக தனியாக ஒரு நிர்வாக இயந்திரம் ஏற்படுத்தப் போகிறார்களா? அப்படிச் செய்தால் அதற்கு வேறு தனியாகச் செலவு ஆகும். இங்கு இருக்கும் விற்பனை வரி அதிகாரிகளே வசூலித்து மத்திய அரசாங்கத்துக்குக் கொடுப்பதென்றால், ஏன் அப்படிச் செய்யவேண்டும்? ஆகவே, இதனால் என்ன பிரயோசனம் என்று நான் சர்க்காரைக் கேட்கிறேன். ஆகையால் நமக்கு இருக்கும் இந்த அதிகாரத்தை மத்திய சர்க்காருக்குக் கொடுப்பதில் எந்த விதத்திலும் பிரயோசனமில்லை. ஒரு சமயம் 10 கோடி ரூபாய் குறைவாக வசூலானால், மத்திய அரசாங்கம் அதற்காக ஏதாவது கொடுப்பார்களா? இல்லை. இம்மாதிரி அவசியமே இல்லை. நாமே இந்த வரியை வசூல் செய்து கொள்ளலாம்.

பல வருஷங்களாக சட்டசபை அங்கத்தினர்களும் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய வியாபாரிகளும் ஒருமுனை விற்பனை வரியை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். சர்க்காரே ஏதோ ஓரிரண்டு பொருளுக்கு ஒருமுனை வரி போட்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, இது விஷயமாக நிரந்தரமான முடிவு எதுவும் இதுவரை ஏற்படவில்லை. ஒருமுனை விற்பனை வரி போடவேண்டுமென்று சிறு வியாபாரிகள் பல வருஷங்களாக கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஒருமுனை வரி போடாததால் சின்னஞ்சிறு தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. ஒருமுனை வரி போட்டால் அதிகப்படியான வருமானம் கிடைக்கும். பெரிய வியாபாரிகள் தான் பாதிக்கப்படுவார்கள். சிறிய தொழில்கள் பாதிக்கப்படமாட்டாது. சிறு வியாபாரிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். இது விஷயமாக ஒரு கேள்விக்கு பதில் சொன்னபொழுது 10,000 ரூபாய் விற்று முதல்பேரில் விற்பனைவரி போடுவதற்குப் பதிலாக, வரி விசாரணைக் கமிஷன் சிபார்சின் அடிப்படையில் ரூபாய் 5,000 விற்று முதல்பேரிலேயே விற்பனைவரி போடலாமென்று அமைச்சர் அவர்கள் கூறினார். இதன் அர்த்தம் என்ன? ஏன் இப்படி மந்திரி அவர்கள் நினைக்கிறார்கள்? அப்படிச் செய்தால் சிறு தொழில்கள் நாசமடையும். சிறு வெற்றிலை பாக்கு கடைகள், காப்பி கடைகள் பாதிக்கப்படும். ஒருமுனை

21st December 1956] [Sri N. K. Palanisamy]

வரி எப்படி விதிக்கவேண்டுமென்று நிதி மந்திரி அவர்கள் பேசும்பொழுது, இறக்குமதிப் பொருள்களுக்கு விற்பனை வரி விதிக்க வேண்டுமென்றால் அரசியல் அமைப்பு சட்டத்தையே மாற்றவேண்டுமென்று சொன்னார். ஒரு நல்ல காரியத்திற்காக ஏன் அரசியல் அமைப்பு சட்டத்தை மாற்றக்கூடாது? 31 (ஏ), 31 (பி) பிரிவுகளை மாற்றவில்லையா? அதேபோல் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு விற்பனை வரி விதிப்பதற்கு ஏன் அரசியல் அமைப்பு சட்டத்தை மாற்றக்கூடாது? இது பற்றி சர்க்கார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. வியாபாரிகளின் கஷ்டத்தை விசாரிப்பதற்கு உடனடியாக ஒரு கமிட்டியை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கேஸ்களை ரெவின்யூ கோர்ட்டு, முன்சீப் கோர்ட்டுகள் விசாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமே ஒழிய, tribunal-களை அனாவசியமாக ஏற்படுத்தி அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன்.

Sri V. MADANAGOPAL : கனம் உதவி சபாநாயகர் அவர்களே! 11-38 a.m.
விற்பனை வரி சம்பந்தமாக கடந்த வருட காலமாக சர்க்கார் கவனத்திற்கு வியாபாரிகள் படும் கஷ்டத்தைப் பற்றிக் கூறியபோதிலும் அது சம்பந்தமாக இதுவரையிலும் ஒரு உருவான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. குறிப்பாக, இந்த விற்பனை வரியினால் சின்ன வியாபாரிகள் தான் அதிக தொல்லைகளுக்கும், கஷ்டங்களுக்கும் உள்ளாகிறார்கள். கோர்ட்டிலிருந்து அபராதம் விதிக்கப்பட்டவர்களுடையவும் சிறைக்கு அனுப்பப்பட்டவர்களுடையவும் எண்ணிக்கையைப் பார்த்தால் சின்ன வியாபாரிகளாகத்தான் இருப்பார்கள். இந்த விற்பனை வரி வந்தது முதல் 7,500 ரூபாய்க்குக் குறைவாக வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு இவ் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அப்பொழுது இருந்ததைவிட சாமான்களின் விலை இன்று மிகவும் கூடியிருக்கிறது. அன்று 7,500 ரூபாய்க்கு இருந்த பொருள்கள் இன்று 25,000, 30,000 ரூபாயாகிறது. ஆகவே, இந்தச் சிறு வியாபாரிகளுக்கு, வருடத்திற்கு 25,000 ரூபாய் வியாபாரம் நடக்கும் வியாபாரிகளுக்கு, சர்க்கார் இந்த விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கக்கூடிய முறையில் ஒரு உத்தரவு பிறப்பிப்பார்களேயானால், இந்த சர்க்காரைப் பொறுத்தளவில் சிறு வியாபாரிகள் மத்தியில் தங்கள் கோரிக்கையை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறது என்ற ஒரு சிறு திருப்தியும் உதவிகரமுமாய் இருக்கும். இச் சட்டப் பிரகாரம் சிறு வியாபாரிகள் கணக்கு வைத்துக்கொள்ள, ஒரு கணக்குப் பிள்ளையை கணக்கெழுத வைத்துக்கொள்ள அவர்களுக்கு முடியாது. சரியானபடி கணக்கை ஆஜராக்காவிட்டால், உங்கள் கணக்கு சரியாயில்லையென்று சொல்லி கோர்ட் மூலம் அபராதமோ அல்லது சிறைத் தண்டனையோ விதிக்கப்படுகிறார்கள். ஆக, நூற்றுக் கணக்கான சிறு வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை இழந்து தெருவில் நிற்க வேண்டியதாயிருக்கிறது. இரண்டாவதாக, சமீப காலத்தில் உணவுப் பொருள்கள் விலையைப் பொறுத்தளவில் விலை மிகவும் கூடியிருக்கிறது. கணிசமாகக் கூடியிருக்கிறது. இதனால் கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய ஜனங்கள், கூலி வேலை செய்யக்கூடிய விவசாயிகள், நடுத்தர வகுப்பினர் எல்லோரும் மிகவும் அல்லலுற்றுக் கொண்டிருக்கின்றனர். இந்த உணவுப் பொருள் சம்பந்தப்பட்ட மட்டில் அவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறோம். இன்றைக்கு உணவுப் பொருள்களின் விலை கூடியிருக்கும்போது ஒரு ரூபாய் அரிசிக்கு ஒரு அணா sales-tax கொடுக்க வேண்டியிருக்கிறது. இது பற்றிய இறுதியான கொள்கைகளை வகுப்பதற்கு முன்னால் உணவுப் பொருள்களிலிருக்கக் கூடிய விற்பனை வரியை தாற்காலிகமாகவாவது இந்தத் தேதியிலிருந்து நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று உத்தரவிட்டு, சிறிய வியாபாரிகளுக்கு இதிலிருந்து விலக்களிக்கக் கூடியமுறையில் சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு அது மிகவும் உதவிகரமாயிருக்கும். இதுபற்றி மந்திரியவர்கள் அவர்களது கருத்தைத் தெரிவிப்பார்களென்று நினைக்கிறேன்.

[21st December 1956

11-40 a.m. THE HON. SRI M. A. MANICKAVELU : சார், இந்தப் பிரச்னைவந்து, ஒருமுனை வரியா ? அல்லது பலமுனை விற்பனை வரியா என்பதே ஒரு பெரிய பிரச்னையாய் விட்டது. அரசாங்கமும் இதைக் கவனித்து இப்பொழுது அநேக பொருள்களின்பேரிலே ஒருமுனை வரி விதிக்க நிச்சயித்திருக்கிறார்கள். அதாவது coffee, tea, வெல்லம், மோட்டார்கார், r.frigeratorகள். இவைகளின்மேல் ஒருமுனை வரி விதிப்பது என்று நிச்சயிக்கப்பட்டு வருகிற வருடம் முதல் அது அமலில் வரப்போகிறது. அதோடல்லாமல், இந்த Inter-state, ஒரு ராஜ்யத்திற்கும், இன்னொரு ராஜ்யத்திற்குமிடையே வியாபாரம் நடக்கும்போது அந்த வரியைப்பற்றி இப்பொழுது அதை மத்திய அரசாங்கமே எடுத்துக்கொண்டு பல பொருள்களுக்கும் அதை ஒருமுனை வரியாக வசூல் செய்யவும், நிலக்கரி, இரும்பு, தோல், பருத்தி, விதைகள், jute இவைகளுக்கெல்லாம் Inter State-tax கூறப்பட்டிருக்கிறது. அந்தத் தகராறும் இனிமேல் இருக்காது. மூன்றாவதாக, சில பொருள்களுக்கு excise duty என்று தீர்மானமாய் டெல்லியில் அது பற்றி நிச்சயித்திருக்கிறார்கள். அதாவது துணி, சர்க்கரை இவைகளுக்கெல்லாம் ஒருமுனை வரி ஏற்படுத்தப்பட்டுவிடும். இன்னும் அநேகப் பொருள்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் இப்பொழுது பலமுனை வரி அமலில் இருந்து கொண்டிருக்கிறது. நான் இப்பொழுது சொன்ன பொருள்கள்கூட இன்னும் சில பொருள்களையும் அந்த ஜாபிதாவில் சேர்க்க இப்பொழுது தீவிரமாக ஆலோசனை இருந்து கொண்டிருக்கிறது. சில பொருள்கள் உடனே அதில் சேர்க்கப்படும். இன்னும் அதிகப்படியான பொருள்களைச் சேர்ப்பதற்கு இன்னும் கொஞ்சகாலமாகும். இப்பொழுது சர்க்கரைமீது, அகதிகளுக்கு சலுகை கொடுத்தபோது அதை அவர்கள் சரியான முறையில் கையாளவில்லை. அதை அநேகர் துர்விநியோகப் படுத்துகிற முறையில் அதை கையாண்டார்கள் என்ற விஷயம் தெரிந்தது. அதனால் சென்ற மாதம் முதல் நவம்பர் மாதம் 21-ம் தேதியிலிருந்து அந்த ஒரு அணா அதிகப்படியான விற்பனை வரிக்குக் கொடுத்த சலுகை ரத்து செய்யப்பட்டது. இந்த காலணா சலுகையே இருக்கிறது. அதையும் ரத்து செய்வதா, வேண்டாமா என்று பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. புதுக்கோட்டை அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள், இந்த விஷயத்தில் ஒரு ceil ng போடவேண்டுமென்று. இவ்வளவு தொகைக்கு வியாபாரம் செய்பவர்களுக்கு இவ்வளவு சலுகை, மற்றவர்களுக்கு இப்படி என்று நிர்ணயிக்கவேண்டுமென்று அவர் சொன்னார். இது சம்பந்தப்பட்ட பிரச்னைகளை இப்பொழுது ரெவின்யு போர்டார் ஆராய்ந்து பார்த்துக்கொண்டு வருகிறார்கள். அதற்குப் பிற்பாடு அது விஷயமாக ஒரு முடிவு ஏற்படும். வியாபாரிகளுக்கு இம்மாதிரியாக, இந்த விற்பனை வரி முறையிலே பலவித கஷ்டங்கள் ஏற்படுகின்றன. சில பேர்கள் துன்பப்படுத்தப்படுகிறார்கள் என்றெல்லாம் இங்கு எடுத்துக் கூறப்பட்டது. இதை நடைமுறையிலே Administration செய்வதற்காக C... க்கத்தான் ஒரு Advisory Committee ஏற்பாடாகி இருக்கிறது. Central dvisory Committee சென்னையில் இருக்கிறது, மாகாணம் பூராவிற்கும் ஆகும் அது. அது மாத்திரமல்ல. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு Advisory Committee ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த Advisory Committee-ல் சேர்ந்த அங்கத்தினர்கள்கூட இதைப்பற்றி எல்லாம் ஆலோசனை செய்து தனிப்பட்டோர் அவர்கள் எடுத்துச் சொன்னவிஷயங்களை கவனித்து அதற்குத்தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டுவந்தால் இந்த மாதிரியான குறைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவிடும். கனம் அங்கத்தினர் ஒருவர் சொன்னார், வியாபாரிகளை சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள், prosecution மூலம் என்று. சிறையிலடைப்பது என்பது இப்பொழுது எடுக்கப்பட்டு விட்டது. இப்பொழுது அபராதம் தான் இருக்கிறது. சிறைதண்டனை எப்பொழுது வருகிறதென்றால், அபராதம்போட்டு அதை கட்டாவிட்டால்தான் உண்டு. ஆனால் சிறைத் தண்டனை என்பது இப்பொழுது நீக்கப்பட்டு விட்டது. இந்த வரி போடுவதில் இப்பொழுது 10,000 ரூபாய் வருமானம் வருகிறவர்களுக்குத்தான் வரி என்று இருக்கிறது. அதை 15,000, 20,000 என்று ஆக்க வேண்டுமென்று கோரிக்கை இருக்கிறது. ஆனால் இது விஷயமாக பரிசீலனை செய்த Taxation Enquiry

21st December 1956] [Sri M. A. Manickavelu]

Commission 10,000 ரூபாய் என்பதை 5,000 ரூபாய் என்று ஆக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த கவர்ன்மெண்டார் 10,000 ரூபாயே இருக்கலாம்; 5,000 ரூபாயென்று ஆக்க வேண்டியதில்லை என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். அந்த விஷயத்தில் கொஞ்சம் பரவாயில்லையென்று நினைக்கிறேன். கனம் அங்கத்தினர் பழனிஸ்வாமி பேசியபோது ஏதோ கணக்கு போட்டார்கள். நான்கு வருடத்திற்கு ஒவ்வொரு வருடத்திற்கும் 30 கோடிப் பிரகாரம் 120 கோடி போய்விட்டது. இரண்டு கோடி அந்தக் கமிஷனுக்கு செலவாகிவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். In ome-tax-யையும் சேர்த்துத்தான் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடி, இப்பொழுது விதிவிலக்குக் கொடுப்பதில் இந்த அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் ஏதாவது விதிவிலக்கு கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். முதலிலே அதை perishable articles-க்கு, காய்கறி, மீன், முட்டை முதல் ஆரம்பித்து உருளைக் கிழங்கு, பூ, வெங்காயம், வாழையிலை வந்தாய்விட்டது. இப்பொழுது தேங்காய்க்கும், பாலுக்கும்தான் இருக்கிறது. அது போனால் மற்ற உணவு தானியங்கள் விஷயமாகவும் இருக்கிறது. ஆனால் ஒன்று, அதாவது உற்பத்தி செய்கிறவர்கள் விற்றால், agriculturist-டோ, எந்த விதத்திலாவது இந்த விஷயத்தில் பந்தப்பட்டவர்களோ விற்றால் அப்பொழுது விற்பனை வரியில்லை. அது கைமாறி இன்னொரு கைக்குப் போனால்தான் அதற்கு விற்பனை வரி உண்டு.

மற்றபடியாக உத்தியோகஸ்தர்கள் விஷயமாகும். சில உத்தியோகஸ்தர்கள் கடுமையாக இருக்கிறார்கள், சரியாக நிர்வாகம் செய்யவில்லை என்ற புகார் இருந்து வருவதாகச் சொன்னார்கள். இதுவிஷயமாக அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க மேற்பார்வையாளர்களை நியமித்திருக்கிறது. ஏதாவது உத்தியோகஸ்தர்கள்பேரில் புகார் இருந்தால் அதை "எக்ஸ் பிராஞ்சு" என்று ஒன்று வைத்திருக்கிறது. அந்த இலாகாவுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதே வேகத்தில் போய்கொண்டிருந்தால் சீக்கிரமாக இந்த குறைகள் போகும் என்று நினைக்கிறேன். இதல்லாமல் பல பொருள்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி கொண்டு வருவதற்கும் சில பொருள்களுக்கு ஒரே விதமான வரிகள் விதிப்பதற்கும் வேண்டிய ஆலோசனைகள் நடந்து வருகிறது. இப்போது வந்திருப்பது எல்லாம் இடைக்காலப் பிரேரணைகள்தான். 11.48 a.m.

ஆகவே வெட்டுப் பிரேரணை கொண்டுவந்திருக்கும் அங்கத்தினரை கேட்டுக்கொள்வது. என்னவென்றால் இதை யெல்லாம் அரசாங்கம் உணர்ந்து வேண்டிய நடவடிக்கை எடுத்து வருவதால் இந்த வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI V. BALAKRISHNAN : ஸார், நான் சினி விஷயமாக சொன்ன குறைகள் பற்றி மந்திரி அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் பற்றியும் சொன்னார்கள்.

SRI K. T. RAJU : ஒவ்வொரு வருடமும் வெட்டுப் பிரேரணைகள் கொண்டுவருவதும் அதை வாபஸ் வாங்குவதும் வழக்கமாக நடந்து கொண்டிருக்கிறதே தவிர, அரசாங்கம் இதற்கு ஒரு உறுதியும் கொடுக்க முன் வரவில்லை. ஆதலால் இதை நான் வாபஸ் வாங்கவில்லை. வோட்டுக்கு விட்டுவிடலாம்.

DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 43,00,000 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : I now put the Demand to the vote of the House. The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 43,00,000 as advance grant under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration."

The Demand was put and carried and the Grant was made.

(3) DEMAND XI—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I beg to move—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,05,00,000 as advance grant under Demand XI—District Administration and Miscellaneous."

(4) DEMAND IX—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I beg to move—

" That the Government be granted a sum not exceeding Rs. 35,00,000 as advance grant under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff."

Sir, both the Demands may be taken up together.

DEPUTY SPEAKER : Motion moved—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,05,00,000 as advance grant under Demand XI—District Administration and Miscellaneous."

" That the Government be granted a sum not exceeding Rs. 35,00,000 as advance grant under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff."

SRI M. KALYANASUNDARAM : Sir, I move my cut motion to Demand IX—Head of State, Ministers and Headquarters Staff. I move—

" That the allotment of Rs. 35,00,000 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100."

SRI A. RATNAM : Sir, I move my cut motion to Demand XI—District Administration and Miscellaneous. I move—

" That the allotment of Rs. 1,05,00,000 under Demand XI—District Administration and Miscellaneous be reduced by Rupees 100."

DEPUTY SPEAKER : Cut motions moved—

" That the allotment of Rs. 35,00,000 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100."

" That the allotment of Rs. 1,05,00,000 under Demand XI—District Administration and Miscellaneous be reduced by Rs. 100."

Both the Demands and the cut motions are now before the House for discussion.

SRI V. BALAKRISHNAN : இந்த மான்யத்தின் கீழ் நான் இரண்டு வெட்டுப் பிரேரணைக்கான குறிப்புகளை அனுப்பியிருந்தேன். அதில் ஒன்றை மாத்திரம் எடுத்துவிட்டு மற்றொன்றை நிராகரித்து இருக்கிறார்கள் சபா நாயகரின் காரியாலயத்தார். இரண்டாவது குறிப்பை நிராகரித்துவிட்டு அதோடு அனுப்பியிருந்த கடிதத்தில் இது நிராகரித்திருந்தாலும் இதைப் பற்றிபேசலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்பேரில் பேசுகிறேன். சென்னை நகரில் ராஜபவன் என்று ஒரு மாளிகை இருக்கிறது. சில சமயங்களில் அங்கிருந்து சில விருந்துகளுக்கு எம்.எல்.ஏக்களுக்கும் அழைப்பு வந்துகொண்டிருக்கிறது. சாதாரணமாக அங்கே எம். எல். ஏக்கள் போகிறார்கள் என்றால் மக்களின் பிரதிநிதிகளாகத்தான் போகிறார்கள். அப்படி அவர்கள் மக்களின் பிரதிநிதிகளாக போகும்போது அங்கு அவர்களுக்கு மரியாதை கிடையாது. அதாவது சாதாரண மனிதர்களுக்கு கொடுக்கப்படும் மரியாதை கூட எம் எல்.ஏக்களுக்கு கொடுக்கப்படுவது கிடையாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். நீண்ட நாட்களாக இதை கவனித்துக்கொண்டு இருந்தேன். இதைப்பற்றி கவனிப்பதற்கு ஆள் கிடையாது. ஒரு சமயம் கவர்னரின் அழைப்பின் பேரிலேயே நான் மற்றும்கூட ஐந்து அங்கத்தினர்களும் ஒரு விசேஷ வைபவத்திற்கு போனபோது அங்கிருந்த எ.டி.ஸி. என்கிற உத்யோகஸ்தர் அங்கு இடமில்லை என்று சொல்லி எங்களை கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினார். நான் சொன்னேன், " எங்களுக்கு அழைப்பு வந்திருக்கிறது அதன்பேரில்தான் வந்திருக்கிறோம் " என்று, அதற்கு அவர் அங்கு இடமில்லை என்று சொன்னார். எங்களை தடுத்து நிறுத்துவதற்கு நீ யார் என்று நான் கேட்டேன். அதற்கு அவர் நீர் கேட்கவேண்டிய அவசியமில்லை என்று சொன்னார். என்ன, என்னை பயமுறுத்துகிறீரா என்றும் கேட்டார். நான் சொன்னேன், பயமாக இருந்தால் அப்படி எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னவுடன், நீங்கள் என்னை என்ன செய்துவிடமுடியும் என்று கேட்டார். நான் உடனே ஷட் அப் (shut up) என்று சொல்லிவிட்டு அங்கிட்டு போ என்று சொல்லிவிட்டு நாங்கள் உள்ளே போனோம். அங்கே தாராளமாக இடம் இருந்தது. பின்னால் நான் இந்த விஷயத்தை பிஸினஸ் அட்வைசரி (Business Advisory Committee)-யில் கொண்டுவந்து குறிப்பிட்டபோது அந்த உத்தியோகஸ்தர் யார், அவருடைய பெயரை கொடுக்கும்படியாகவும் கேட்கப்பட்டது. அதன்படி நான் பெயர் அறிவதற்காகக் கேட்டு எழுதி அனுப்பியதற்கு அங்கிருந்து வந்த பதிலில் அந்த பெயரை கொடுக்க முடியாது, அங்கு நடக்கிற விருந்து உபசாரத்தில் அங்குள்ள அனைவருக்கும் பொறுப்பு உண்டு என்று, எழுதி இந்த கடிதத்தை அங்குள்ள கண்ட்ரோலர் என்கிற உத்யோகஸ்தர் அனுப்பியிருக்கிறார்கள். அதில் அந்த வைபவத்திற்கு இட வசதிகள் குறைவாகத்தான் செய்யப்பட்டிருந்ததால்தான் இந்த அசௌகர்யம் தங்களுக்கு ஏற்பட்டது என்று குறிப்பிட்டிருந்தார்களே ஒழிய எங்களுக்கு அங்கே ஏற்பட்ட மரியாதை குறைவுக்காக வருத்தம் தெரிவிக்கும் வகையில் ஒரு வார்த்தைகூட அந்த கடிதத்தில் குறிப்பிடவில்லை. அங்கே போயிருப்பவர்கள் எல்லாம் வெறும் எம்.எல்.ஏக்கள் அல்ல. அவர்கள் மக்களின் பிரதிநிதிகள். இங்கே இந்த சபையிலுள்ள எம்.எல்.ஏக்கள் என்றால் பல லட்சக் கணக்கான மக்களின் பிரதிநிதிகளாகத்தான் இங்கே அவர்கள் வந்திருக்கிறார்கள். இது நாளைக்கு ஜனநாயக காலம். இன்றைக்கு இந்த பக்கத்தில் இருப்பவர்கள்

நாளைக்கு அந்தப்பக்கம் வரலாம். இன்றைக்கு மந்திரியாய் இருப்பவர்கள் நாளைக்கு பதவி இழந்து இந்த பக்கம் வரலாம். ஆனால் பொதுமக்களின் பிரதிநிதி என்கிற முறையில் எம்.எல்.ஏக்களுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டியது அவசியம். அதற்கான உரிமையை செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI A. RATNAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என். ஜி. ஓ.க்கள் விஷயமாகவும், அவர்களுடைய குறைகளை பற்றியும் பல முறை இந்த சபையில் விவாதங்கள் மூலம் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் விஷயமாக சில காரியங்கள் அவர்களுக்கு தற்காலிகமாக ஓரளவு செய்து கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் பிற்காலத்தில் அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விதத்தில் அவர்கள் கோருகிற கோரிக்கைகளை நிறைவேற்றி கொடுப்பதற்கு சர்க்கார் என்ன அக்கறை செலுத்தியிருக்கிறது? என்னென்ன சிபாரிசுகளை மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறது, அவர்களுக்கு மத்திய சர்க்காரிலுள்ள ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் பஞ்சப்படியாவது கொடுக்கவேண்டும் என்று கேட்டிருப்பதற்கு இந்த சர்க்கார் என்ன முடிவு செய்திருக்கிறது என்பதைப்பற்றி இந்த சபையில் ஒரு தகவலும் கொடுக்கப்படாத காரணத்தினால்தான், சர்க்கார் ஊழியர்கள், அதாவது கெஜட் பதிவில்லாத ஊழியர்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களை போக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவும்தான் இந்த வெட்டுப் பிரேரணையை கொண்டுவந்திருக்கிறேன். சர்க்கார் ஊழியர்கள் நல்ல நிலைமையில் இருந்தால்தான் நாடு நல்ல நிலைமையில் இருக்க முடியும். அவர்கள் நன்றாக இருந்து வேலை செய்தால்தான் அதிகாரிகளும் அமைச்சர்களும் உத்தரவு போட முடியும்.

எனவே ஜில்லாக்களில் இருக்கும் மக்கள் எல்லோரும் நன்மை அடைய வேண்டும் என்றால் ஜில்லாக்களில் வேலை செய்யும் கெஜட் பதிவில்லாத ஊழியர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். இப்பொழுது ஆயிரக் கணக்கான சர்க்கார் கெஜட் பதிவில்லாத ஊழியர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தக்க ஊதியம் கொடுக்கப்படவில்லை. மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கக் கூடிய அடிப்படையில் அவர்களுக்கும் சம்பளமும் பஞ்சப்படியும் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் ஜில்லா நிர்வாகம் சரியானபடி நடக்கும். திறமையாக நடக்கும். அப்படி இல்லாவிட்டால் அங்குள்ள ஜில்லா மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். மத்திய சர்க்காரில் வேலை செய்யும் ப்யூனைக் காட்டிலும் சென்னை அரசாங்க சர்க்கார் கெஜட் பதிவில்லாத ஊழியர்கள் குறைவாக சம்பளம் வாங்கி வருகிறார்கள். நமது ராஜ்யத்தின் கெஜட் பதிவில்லாத ஊழியர்களுக்கு தகுந்த ஊதியம் கொடுக்கவில்லையென்றால் ஜில்லா நிர்வாகம் சரியானபடி நடக்கவில்லை என்றுதான் அர்த்தம். அவ்வளவு மோசமான நிலைமையில் அரசாங்கம் இருக்கிறது என்றுதான் வைத்துக் கொள்ள வேண்டும். சமீபத்தில் கேரள ராஜ்யமும் ஆந்திர ராஜ்யமும் பிரிந்து சென்றன. அங்குள்ள நிலைமையை கவனித்தால் அங்குள்ள கெஜட் பதிவில்லா உத்தியோகஸ்தர்களுக்கு நாம் இங்கு கொடுப்பதைக் காட்டிலும் அதிகமாகத்தான் கொடுக்கிறார்கள். இங்கு சம்பளம் 50 அல்லது 60 என்றால் அங்குள்ளவர்களுக்கு 120 கொடுக்கிறார்கள். அங்குள்ளவர்களுக்கு 120 முதல் 500 ரூபாய் வரையில் சம்பளம் இருக்கிறது. இன்னும் அதிகப்படியான பஞ்சப்படியும் கொடுக்கிறார்கள். பல வசதிகளையும் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். சமீபத்தில் பிரிந்து சென்ற ஆந்திர, கேரள, மைசூர் ராஜ்யங்கள் சிறியதாக இருந்தவைகள் பெரியதாகி விட்டன. ஆனால் பெரியதாக இருந்த சென்னை ராஜ்யம் சிறியதாகப் போய்விட்டது. அங்கு போனவர்கள் சுபிட்சமான நிலைமையில் இருக்கிறார்கள் ஆனால் இங்குள்ள தமிழர்கள் மோசமான நிலைமையில்தான் இருக்கிறார்கள். ராஜ்யம் சிறுத்து கொண்டே போனதுபோல் இங்குள்ள ஊழியர்களும் சிறுத்துப்போய் மெலிந்து போய்க்கொண்டிருக்கிறார்கள் இதுதான் தமிழ் நாட்டின் மக்களுடைய நிலைமை. இப்பொழுது தமிழ் நாட்டில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று சொல்லிக்

கொண்டு வரும் காலத்தில் தமிழர்களுடைய நிலைமை இப்படி இருக்க வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன். ஆட்சி மொழி தமிழாக வரப்போகிறது என்று சொல்லக் கூடிய காலத்தில் சென்னை ராஜ்யத்தின் பெயரை தமிழ் நாடு என்று மாற்றக்கூடிய நிலைமை இன்னும் வரவில்லை. அந்த நிலைமையில் தமிழ் நாட்டு ஊழியர்களுடைய நிலைமையை எப்படி கவனிக்கப் போகிறார்கள். அந்த அளவுக்கு இப்பொழுதுள்ள நிர்வாகம் வந்திருக்கிறது. ஜில்லாக்களில் நிர்வாகம் நல்லமுறையில் நடக்க வேண்டுமானால் அங்கு அதற்கு வேண்டிய குமாஸ்தாக்கள் வேண்டும். ஆனால் இப்பொழுது அவ்வளவு குமாஸ்தாக்கள் அங்கு கிடையாது. ஜில்லாக்களிலுள்ள கலெக்டர்களுக்கு அதிகப்படியான குமாஸ்தாக்கள் கொடுக்க வேண்டும். லைசென்ஸ் வேண்டும் என்று கேட்டால் அவை கிடைக்க வேண்டிய சமயத்தில் கிடைப்பது இல்லை. ஜில்லா நிர்வாகத்தில் ஊழல்கள் இருக்கின்றன என்று சொன்னால் அதற்குக் காரணம் அங்கு இருக்கக்கூடிய குமாஸ்தாக்களின் குறைவுதான். அதனால்தான் அங்கு ஊழல்கள் மலிந்து கிடக்கிறது. நியாய விலைக் கடைகளை அமைக்க வேண்டும் என்று அமைத்தால் அதற்குத் தகுந்த குமாஸ்தாக்களை நியமிப்பது கிடையாது. உணவு நிலைமை ரொம்பவும் மோசமாகப் போயிருப்பதற்குக் காரணம் போதிய ஊழியர்களை நியமிக்காமல் இருப்பதுதான். அரிசி வேண்டும் என்று கேட்டால் அதை காலா காலத்தில் கொடுப்பதற்கு வேண்டிய நிர்வாகம் கிடையாது. அதிகப்படியான குமாஸ்தாக்கள் வேண்டும் என்று நிலைமை ஏற்பட்டால் அதற்கு கலெக்டர்தான் எழுத வேண்டும். அப்படி அவர் எழுதி அவர்களைப் பெறுவதற்கு மாதக் கணக்காக ஆகும். சில சமயங்களில் வருஷக் கணக்காக கூட ஆகும். அதற்குள் மக்கள் படும் அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. பல ஜில்லா அதிகாரிகளுக்கு பொறுப்பே இல்லை. தங்களுடைய தேவைக்குத் தக்க ஊழியர்களை வைத்துக் கொள்ளாமல் வேலை செய்து வருகிறார்கள். மற்றும் மந்திரிகள் கூட ஜில்லா நிர்வாகத்தில் தலையிடுவதாகத் தெரிய வருகிறது. அவர்களுடைய உற்றார் உறவினர்களுக்கு சலுகைகள் காட்டிக்கொண்டு வருகிறார்கள். மந்திரிகளுடைய உற்றார் உறவினர்கள் வேலைக்கு தகுதியற்றவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு உத்தியோகங்கள் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: எந்த எந்த மந்திரி எந்த எந்தக் காரியங்களையும் சிபாரிசுகளையும் செய்தார்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும். பொதுவாகச் சொல்வது அழகாக இல்லை. முறைப்படி பேசினால் அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

SRI A. RATNAM: தென் ஆற்காட்டில் நடந்த ஒரு சம்பவம் பற்றி சொல்லுகிறேன். என்னுடைய ஜில்லாவில் பப்ளிக் பிராசிக்யூட்டர் வேலை காலியாய் இருந்தது. அந்த இடத்திற்கு பயிற்சி அடைந்தவர்கள்தான் வரவேண்டும். ஆனால் அதற்கு எப்படிப்பட்டவர்கள் வருகிறார்கள் என்றால் பயிற்சி அடையாதவர்கள் வருவதாகத் தெரிய வருகிறது. தகுதியற்றவர்கள் வருவதாகத் தெரிய வருகிறது. பழைய காலத்தில் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் ரிட்டையரானவரை கொண்டு வருவதாகத் தெரிய வருகிறது. பலர் ஒன்று கூடி ஒருவரைக் கொண்டு வரப்போவதாகத் தெரிய வருகிறது. அங்குள்ள டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட், கலெக்டர் முதலியவர்களிடத்தில் உழைத்தவரையும் மந்திரிகளை அணுகியவரையும் நியமிக்கப் போகிறார்கள். அப்படி நியமிக்கும்போது அவரை தாற்காலிகமாகக்கூட நியமிக்கப் போவதில்லை. நிரந்தரமாக நியமிக்கப் போகிறார்கள் என்பதாகத் தெரிய வருகிறது. இம்மாதிரி காரியங்கள் பல நடைபெற்று வருகின்றன. இப்படி பல விஷயங்களைப்பற்றி சொல்லலாம். அப்படிச் சொல்லுவதற்கு இப்பொழுது அவகாசம் இல்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் பொறுப்பற்ற முறையில் பேசுகிறார்கள் என்பதற்கு இதுவே ஒரு அத்தாட்சி. இதுயே அதற்கு ஆதாரமாக வைத்துக் கொள்ளலாம். அவர் சொல்லக்கூடிய காலி இடத்திற்கு இன்னும் யாரையுமே போட்டு நியமிக்கவில்லை. ஏதோ ஏற்படப் போகிறது என்று நினைத்துக்கொண்டு புகார் சொல்வதில் அர்த்தம்

இல்லை. அவர் யார், அவர் எந்த மந்திரிக்குச் சொந்தக்காரர் என்று சொன்னால் அதன் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். பொதுப் படையாக இம்மாதிரி சொல்லுவது சரியல்ல. கனம் அங்கத்தினர் எப்பொழுதும் எந்த முறையில் பேசுவாரோ அதே முறையில்தான் இப்பொழுதும் பேசுகிறார் என்பதற்கு இதுவே ஒரு அத்தாட்சி.

Sri A. RATNAM: இப்படி பல காரியங்களை எடுத்துச் சொன்னால் கனம் மந்திரி அவர்களுக்கு கோபம் வரும்.

(இந்த சமயத்தில் கனம் அங்கத்தினருக்குக் கொடுக்கப்பட்ட பேசும் நேரம் முடிந்து விட்டதால் மணி அடிக்கப்பட்டது.)

Sri P. G. KARUTHIRUMAN: கனம் உதவித் தலைவர் அவர்களே, இப்பொழுது சர்க்காரால் கொண்டு வரப்பட்ட இந்த மானியத்தை நான் வரவேற்கிறேன். ஜில்லா நிர்வாகம் சரியானபடி இருந்தால்தான் உள்ளபடியே சர்க்காரால் போடப்படும் திட்டமும் நல்ல முறையில் வகுக்கப்படும். கொள்கையும் நல்ல முறையில் நிறைவேற்றப்படுவதற்கு வசதியாக இருக்கும். ஜில்லா நிர்வாகத்தில் பொறுப்பு அதிகமாக இருக்கிறது.

(Sri V. K. Ramaswami Mudaliar in the Chair.)

அதை இந்த சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் நன்கு உணருவார்கள். ஜில்லா நிர்வாகத்திலுள்ள ஜில்லா கலெக்டர்களாக இருப்பவர்களுடைய மனப்பான்மை பழைய முறையில் இருந்தது போல் இல்லாமல் மக்களுடைய நன்மையைக் கருதி அதற்குத் தக்கபடி இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. எந்த முறையில் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை அவர்களுக்கு ஏற்படவேண்டும். அப்படிப்பட்ட பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் தேசத்திற்கு நல்ல முறையில் சேவை செய்ய வேண்டுமென்ற பொறுப்புடன் நடந்துகொண்டால் மிகவும் நன்றாக இருக்கும். ஆனால் பல இடங்களில் பழைய முறையிலேயே நடந்துகொண்டு வருவதால் சில தவறுகள் நடந்துகொண்டு வருகின்றன. அதை அவர்கள் இனிமேலாவது திருத்திக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

உதாரணமாக இப்பொழுது சர்க்கார் கிராம மக்களுக்கு ஏதாகிலும் நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று பல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அவைகளில் முக்கியமானவைகள் ஸ்தல அபிவிருத்தி திட்டம், தேசிய அபிவிருத்தி திட்டம், சமுதாய அபிவிருத்தி திட்டம். இப்படி பல விதமான திட்டங்கள் இருப்பதால் பல கலெக்டர்களுக்கு அவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. இப்பொழுது 20 ஆயிரம் ரூபாயிற்கு மேற்பட்ட திட்டங்களுக்கு அவர்களே அனுமதி கொடுக்கலாம் என்று சொல்லியிருப்பதால் அவர்களுக்கு அதிகப்படியான பொறுப்பு இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு அவர்கள் மக்கள் பூரண பிரயோசனம் அடையும்படியாக திட்டங்களை நிறைவேற்றி வைக்கவேண்டும். அப்படியே இப்பொழுது மக்களும் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்லாமல் சில ஜில்லா கலெக்டர்கள் பொறுப்பில்லாத முறையில் நடந்துகொண்டு வருகிறார்கள். தாலூகா ஆபீஸ் இருக்கிறது, தாசில்தார் ஆபீஸ் இருக்கிறது, கலெக்டர் ஆபீஸ் இருக்கிறது. அங்கெல்லாம் குடியானவர்கள் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். குடியானவர்கள் அந்த ஆபீஸ்களில் விண்ணப்பங்கள் போட்டால் அதை ஆபீசர்கள் கவனிப்பதாகவே தெரியவில்லை. அந்த விண்ணப்பங்களை விசாரிக்கிறார்களோ இல்லையோ, அதுவே தெரியவில்லை. போட்ட விண்ணப்பங்களுக்கு பதில் கிடைப்பதே இல்லை. சில சமயங்களில் மனுக்களையே திருப்பி அனுப்பப்படுகின்றன. சில சமயங்களில் மனுக்களை பதிவு செய்து கொள்ளுகிறார்களோ இல்லையோ அதுவும் தெரியவில்லை. கொடுக்கப்பட்ட மனுக்களை தள்ளுபடி செய்தால் அவைகளுக்கு காரணங்கள் காட்டுவதும் இல்லை. அப்படி காரணங்கள் கொடுத்

தால் நன்மையாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் எந்த காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்று தெரிந்து கொள்ளவேண்டும் என்று பிரயத்தனப்பட்டாலும் தெரிவிப்பது கிடையாது. சில சமயங்களில் ரிப்போர்ட்டுகள் அனுகூலமாக வந்தாலும் அந்த மனுக்கள் கூட தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. தள்ளுபடி செய்யப்பட்டவைகளுக்கு காரணங்கள் கொடுத்திருந்தால் இவைகள் வெளியாவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே மக்களுக்கு நன்மைகள் செய்யவேண்டும் என்று நினைத்தால் ஜில்லா நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறவேண்டும். ஜில்லா நிர்வாகம் நேர்மையாக இருந்தால்தான் சர்க்கார் போடும் திட்டங்கள் நல்ல முறையில் நடைபெறும். போடும் திட்டங்கள் மக்களுக்கு பூரண பயனளிக்க வேண்டுமானால் மக்கள் பலனடைய சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமானால் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற வேண்டும். உதாரணமாக கீழ் பவானி திட்டம் சம்பந்தமாக கோபிக்கு விவசாய டைரெக்டர், எக்சிகூட்டிவ் இஞ்சினியர் முதலியவர்கள் வந்து மகாநாடு கூட்டி அங்கு எவ்வளவு கிணறுகள் இருக்கின்றன, எவ்வளவு நிலங்களுக்கு பாசன வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன முதலிய கேள்விகளையெல்லாம் கேட்டார்கள். அப்பொழுது அங்கு 2,000 கிணறுகள் அந்த தாலூகாவில் இருக்கின்றன, பாசன வசதி அடைந்துள்ள நிலம் பத்தாயிரம் ஏக்கர் இருக்கலாம் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் அங்குள்ள அடங்கலைப் பார்த்தால் அதாவது ஜில்லா நிர்வாகத்திலுள்ள தஸ்தாவேஜுகளைப் பார்த்தால் 65 கிணறுகள் தான் இருக்கின்றன, ஆயிரம் ஏக்கர் தான் வெள்ளாமையில் இருக்கின்றன என்று எழுதப்பட்டிருந்தது. இரண்டாயிரம் தோட்டக் கிணறுகள் மூலம் பத்தாயிரம் ஏக்கராக்கு பாசன வசதி ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்கையில் 135 ஏக்கரில்தான் புகையிலை சாகுபடி என்று புள்ளி விவரம் கூறுகிறது. சாதாரணமாக 20 தோட்டங்களிலேயே 135 ஏக்கரா புகையிலை சாகுபடி செய்யலாம். இந்த மாதிரி புள்ளி விவரங்கள் பொறுப்பற்ற முறையில் சேகரிக்கப்பட்டால், அது எங்கு கொண்டுபோய்விடும் என்று சொல்லுவதற்கில்லை. மேலதிகாரிகள் கவனம் செலுத்தி சரியான புள்ளி விவரங்கள் தயாரிப்பதற்கு சரியான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். கீழ் பவானி பிரதேசத்தில் விவசாயிகள் அல்லலுருவதற்கும், கஷ்டப்படுவதற்கும் காரணம் நிர்வாகத்தில் உள்ள குறைகளே. அங்கிருக்கும் அதிகாரிகளுக்கு இப்பொழுது வேலை அதிகரித்திருக்கிறது. ஆகவே அதிகமான அதிகாரிகளையும், சிப்பந்திகளையும் நியமித்து அவர்களும் தேசத்திற்கு உகந்த முறையில் சேவை செய்தால்தான் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக **Headquarters Staff demand**-ஐப் பற்றி ஒரே ஒரு வேண்டுகோள். இதை நான் சொல்லிக்கொள்ளாமலிருக்க முடியவில்லை. சட்டசபைக்கு வந்தாலும், வராவிட்டாலும் இதை சொல்ல ஆசைப்படுகிறேன். சட்டசபை அங்கத்தினர்களுக்கு வென்னீர் **supply** செய்வதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். இப்பொழுது கொடுக்கப்படும் தண்ணீர் மஞ்சள் நிறமாக கஷாயத்தைப் போலிருக்கிறது. அடுத்த ஐந்தாண்டு திட்டத்திலாவது இதைச் சரிவரச் செய்துகொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். கனம் அமைச்சர் அவர்களிடத்திலும் இதைப்பற்றி சொல்லிவிட்டோம். அவர்களும் குறிப்பு எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். சில சமயங்களில் அங்கத்தினர்களுக்கு உடல் நிலை சரியாக இல்லாமலிருக்கலாம். அப்படிப்பட்ட நிலையில் அவர்களுக்கு வென்னீர் கூட கொடுக்கப்படாமலிருந்தால் அது மிகவும் வருந்தத் தக்க விஷயம். அடுத்த சட்டசபைக்கு வரும் அங்கத்தினர்களுக்காவது இந்த வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***Sri K. VINAYAKAM:** கனம் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லி அவைகளை கனம் **Revenue** அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணை என்னவென்றால் **"To reiterate the suggestion of appointing a Reception Officer in Chingleput district to wait upon the visitors instea l of the District Collector,"**

செங்கல்பட்டு ஜில்லாவை பொறுத்தவரையில் ஒரு **Reception Officer** வேண்டுமென்று நான் சொல்லுவதற்கு போதிய காரணங்கள் இருக்கின்றன. முதலாக மீனம்பாக்கம் விமான நிலையம் இந்த ஜில்லாவிலே இருக்கிறது. சென்னைக்கு வரும் அயல் நாட்டு பிரமுகர்களும், மற்றும் பெரிய உத்தியோகஸ்தர்களும் இந்த விமான நிலையத்திற்கு வந்துதான் சென்னைக்கு வரவேண்டும். இந்த விமான நிலையம் அங்கு இருப்பதாலேயே செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த அதிகாரிகள் விமான நிலையத்துக்கு போகவேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. ஒவ்வொரு நாளும் யாராவது விருந்தாளிகள் வந்துக்கொண்டே இருக்கிறார்கள். தன்னுடைய அதிகார பூர்வமான வேலைகளை விட்டுவிட்டு, ஜில்லா கலெக்டர் இவர்களை வரவேற்பதற்காக விமான நிலையத்திற்கு போகவேண்டியிருக்கிறது. அதே மாதிரி இந்த விருந்தாளிகள் திரும்பிச் செல்லும் பொழுதும் போகவேண்டியிருக்கிறது. தவிர அதிருஷ்டவசமாக மகாபலிபுரம் போன்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்கள் எங்கள் ஜில்லாவில் இருக்கின்றன. நமது நாட்டிற்கு வரும் அயல்நாட்டு விருந்தினர்கள் மகாபலிபுரம், திருக்கழுகுன்றம் போன்ற இடங்களுக்கு போகவேண்டுமென்று ஆசை கொள்கின்றனர். திருக்கழுகுன்றத்தில் தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பறவைகள் வந்து உணவு எடுத்துக்கொண்டு போவதை பார்ப்பதற்காக அநேகம் பேர் வருகிறார்கள். அதை **Hill of holy Birds** என்று சொல்லுவார்கள். ஜில்லா கலெக்டர் எவ்வளவு கெட்டிக்காரராய் இருந்தாலும் தனது தினசரி ஆபீஸ் அலுவல்களைப் பார்த்துவிட்டு இந்த விருந்தாளிகளையும் கவனித்துக்கொள்வது முடியாத காரியம். இதைத் தவிர காஞ்சிவரமும் எங்கள் ஜில்லாவில் இருக்கிறது. புராதன காலத்தில் பல்லவர்கள் ஆண்ட இடம் இது. சிற்பக் கலைக்கு பெயர் போனது. இங்கே 365 கோயில்கள் இருக்கின்றன. தினந்தோறும் ஒரு கோயில் வீதம் பார்த்தாலும் ஒரு ஆண்டு முழுவதும் பார்க்கலாம். இப்பேர்ப்பட்ட முக்கியமான இடங்களெல்லாம் செங்கல்பட்டு ஜில்லாவில் இருப்பதினால் அங்குள்ள ஜில்லா கலெக்டரின் பொறுப்பு அதிகமாகிறது. சென்னையிலிருந்து டெலிபோன் மூலம் "அவர்கள் வருகிறார்கள்", "இவர்கள் வருகிறார்கள்" என்று மேலதிகாரிகள் சொல்லி விடுகிறார்கள். பந்தோபஸ்து ஏற்பாடுகளும் செய்யவேண்டியிருக்கிறது. மாதத்திற்கு ஒரு முறை **Prohibition Advisory Committee meeting, Local Development Advisory Committee meeting** முதலியவைகளுக்குத் தேதி நிர்ணயம் செய்து கலெக்டர் எங்களுக்கு தகவல் கொடுக்கிறார். ஆனால் பிற்பாடு ஜனாதிபதி அவர்கள் வந்துவிட்டார்கள், அல்லது சீனப் பிரதமர் வந்துவிட்டார், அல்லது ரஷ்யப் பிரதமர் வந்துவிட்டார் என்ற காரணத்திற்காக **Meeting** நடத்த முடியாது என்று அன்று காலை எங்களுக்கு தகவல் அனுப்புகிறார். இதனால் எங்களுடைய வேலையும் பாதிக்கப்படுகிறது. கலெக்டர் வேலைக்கும் குந்தகம் ஏற்படுகிறது. இந்தத் தொல்லைகளை யெல்லாம் நீக்குவதற்காகத்தான் எங்கள் ஜில்லாவுக்கு ஒரு **Reception Officer** நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மற்ற ஜில்லாக்களுக்கும் வேண்டுமானால் நியமிக்கலாம். சீக்கிரத்திலே இது விஷயமாக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri P. VENKATESHA SHOLAGAR : கனம் தலைவர் அவர்களே, ஜில்லாவில் நடக்கக்கூடிய நிர்வாகத்தின் மூலமாகத்தான் எந்தத் திட்டத்தையும் துரிதமாக நிறைவேற்ற முடியுமென்பதை பல நண்பர்கள் எடுத்துக் காட்டினார்கள். குறிப்பாக தாலூக்காவில் இருக்கும் ஆபீஸ்களுக்கு விவசாயிகள் கடனுக்காக மனுச் செய்துகொள்ளுகிறார்கள். ஒரு வருஷம் ஆனாலும் கூட கடன் கொடுக்கப்படுமா, அல்லது கொடுக்கப்படமாட்டாதா என்று தெரிவிக்கப்படுவதில்லை. தினந்தோறும் ஆபீஸுக்கு அலைந்து போய் கேட்டால், மனுவே வரவில்லையே என்ற பதில்தான் வருகிறது. விஷயம் தெரிந்தவர்கள் அத்தாட்சி வாங்கி அனுப்புகிறார்கள். கடன் ஏன் கொடுக்க முடியாது என்பதற்கான காரணத்தை சொல்லிவிட்டால் விவசாயிகள் பேசாமல் இருந்து விடுவார்கள். கடன் வாங்குவதற்காக மனு எழுதிப் போட்டு அலைவதைவிட, சும்மா இருப்பதே மேல் என்ற நிலைமை

நிலவுகிறது. சிலருக்கு "கூட்டுப்பட்டா" என்று காரணம் சொல்லி கடன் கொடுக்க மறுக்கிறார்கள். கூட்டுப் பட்டாவாக இருந்தாலும் கூட சிலருக்கு கடன் கொடுக்கிறார்கள். இது ஒருவருக்கு ஒருவர் பாரபட்சம் காட்டக் கூடிய நிலைமையில் இருக்கிறது என்பதாக மேலதிகாரிகளிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டாலும் அதற்கு அவர்கள் பதிலளிப்பது கிடையாது. புயல் கடன் வழங்குவதில் ஊரில் வீடுவாசல் எதுவும் இல்லாதவர்களுக்கு எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக யாருக்குக் கொடுக்கவேண்டுமோ அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதாக ஐநூறு பேர்களுக்கு மேல் மகஜர் மூலமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இருந்தும் இதுவரையில் எந்தவிதமான பதிலும் கொடுக்கப்படவில்லை.

புறம்போக்கு நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுப்பது சம்பந்தமாகப் பலபேர் மனுக்கள் போட்டிருக்கிறார்கள். 1951-ம் வருஷத்தில் போடப்பட்ட மனுக்கள் எத்தனை, அவை எந்த எந்த ஊர்களிலிருந்து யார் யாரிடமிருந்து வந்திருக்கின்றன என்பதாகக் கூட 1956-ம் வருஷம் முடியப் போகிற நிலைமையிலும் இன்னமும் கணக்கு எடுக்கவில்லை. அவை எல்லாவற்றையும் அப்படியே கட்டி வைத்துவிட்டு உட்கார்ந்திருக்கிறார்கள். காரணம் கேட்டால் அவற்றை எல்லாம் பார்ப்பதானால் போதுமான குமாஸ்தாக்கள் இல்லை என்கிறார்கள். இரண்டு தாலூக்காவுக்கு ஒரு ஆபீசராக இருப்பதனால்தான் இந்த மாதிரியாக காலதாமதம் ஏற்படுகிறது. அந்த ஒரு அதிகாரியால் எல்லாக் கிராமங்களுக்கும் போய்ப் பார்க்க முடியாமல் இருக்கிறது. ஆகவே தாலூக்காவுக்கு ஒரு அதிகாரியையாவது போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கார் நியாயவார மசோதா, பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் முதலியவற்றை எல்லாம் நிறைவேற்றியபோது நாங்கள் அதை வரவேற்று சந்தோஷப்பட்டோம். நியாய வாரம் சம்பந்தமான மனுக்கள் ஏராளமாக வருகின்றன. அவை காலாகாலங்களில் பைசல் செய்யப்படுவதில்லை. ஒரு நாளைக்கு இரண்டு மனு, மூன்று மனு என முடிவு செய்தால் ஆயிரக் கணக்கான மனுக்களை முடிவு செய்ய பல காலமாகும். ஆகவே அறுவடை காலங்களில் இதற்காக தனியாகவே ஒரு தாசில்தாரை நியமித்து மனுக்களை துரிதமாகப் பைசல் செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அறுபது நாற்பது சட்டம் சம்பந்தமாக பலவிதமான மாச்சரியங்கள் ஏற்பட்டிருக்கிறன. அதற்கு வேண்டிய விதிகளையும் ஏற்படுத்தி கிளர்ச்சிகள் ஏற்படாமல் இருக்க தக்க நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதாக சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

Sri S. PANCHAKSHARAM CHETTIAR : கனம் தலைவர் அவர்களே, ஸ்ரீ ரத்தினம் அவர்கள் பேசும்போது சர்க்காரின் மேல் பலவிதமான குற்றச்சாட்டுக்களை சுமத்தினார். அதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்களும் நன்றாக மறுப்புத் தெரிவித்தார்கள். நானும் ஸ்ரீ ரத்தினம் கூறியவற்றை மறுக்க விரும்புகிறேன். "அமைச்சர்கள் ஜில்லா நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள். ஜில்லா அதிகாரிகளுக்கு இங்கிருந்து கட்டளை அனுப்புகிறார்கள்" என்பது அவரது குற்றச்சாட்டு. அது உண்மையாகவே இருந்தபோதிலும் கூட அதில் குற்றம் ஒன்றும் இல்லை என்று நான் சொல்கிறேன். இருந்தாலும் ஜில்லா நிர்வாகத்தில் அமைச்சர் அவர்கள் தலையிடுவதற்கோ, இங்கே இருந்து பலவிதமான கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கோ அவசியம் இல்லை. சந்தர்ப்பமும் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். இறுதியான அதிகாரத்தைப் பெற்ற அமைச்சர் அவர்கள் . . . 12-23 p.m.

Sri A. RATNAM : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், கனம் அங்கத்தினர் அவர்கள் நான் பேசிய பேச்சை ஆதரித்து, சர்க்காரின் செய்கைக்கு வருந்தும் முறையில் பேசுகின்றாரா என அறிய விரும்புகிறேன்.

Sri K. VINAYAKAM : A member has got the right to speak on the motion or the cut motion. Has he the right also to reply to criticisms made by another hon. Member?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, he has got.

SRI S. PANCHAKSHARAM CHETTIAR: இறுதியான அதிகாரம் பெற்ற அமைச்சர் அவர்கள் ஜில்லா நிர்வாகத்தில் தலையிடவேண்டிய அவசியம் இல்லை. அல்லது ஜில்லா அதிகாரிகளுக்கு இங்கிருந்து உத்திரவு பிறப்பிக்க வேண்டிய சந்தர்ப்பமும் இல்லை. அப்படி ஏதாவது அரசாங்கத்தின் கருத்துக்கு முரணான வகையில் ஜில்லா அதிகாரிகளிடமிருந்து பேப்பர்கள் வருமானால் அதை மாற்றி, திருத்தி உத்திரவு செய்கின்ற அதிகாரத்தை தங்களிடம் வைத்துக் கொண்டு அவர்கள் எதற்காக அவர்களுடைய நிர்வாகத்தில் தலையிட வேண்டுமென்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஆகவே ஸ்ரீ ரத்தினம் சொல்லிய குற்றச்சாட்டுகளுக்கு எவ்விதமான ஆதாரமும் இல்லை, அவை உண்மையும் அல்ல என்று நினைக்கிறேன். அவர் தென்னுற்காடு ஜில்லா பப்ளிக் பிராஸிக்யூடர் விஷயத்தைப் பற்றிச் சொன்னார். அதில் யாரோ ஒரு அமைச்சர் தலையிட்டதாகவும் சொன்னார். அப்படி ஒரு பப்ளிக் ப்ராஸிக்யூடரை நியமிக்கும்போது சட்ட இலாக்காவை வைத்துக் கொண்டிருக்கிற அமைச்சரும், முதல் அமைச்சரும் அவ்விஷயமாக யோசித்திருக்கக் கூடும். ஒரு வேளை ஜில்லா அதிகாரிகள் இவர்களுக்குத் தெரியாத ஒரு நபரை நியமிக்கக் கோரியிருந்தால் அந்த ஜில்லா பற்றிய விவரம் தெரிந்த வேறு எந்த மந்திரியையாவது இவர்கள் கலந்து கொண்டிருந்தார்களானால் அதில் தவறு என்ன? அது ஜில்லா நிர்வாகத்தில் ஒரு அமைச்சர் தலையிட்டதாக ஆகாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஓரளவுக்கு ஜில்லா நிர்வாகம் ஆசப்பட்டது சரியான முறையில் நடைபெறவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதற்குக் காரணம் பல உண்டு. ஜில்லா அதிகாரிகளுடைய திறமை இப்பொழுது வெகுவாகக் குறைந்துவிட்டது, ஒரு காரணம். இரண்டாவதாக சில அதிகாரிகள் வேண்டுமென்றே சட்டங்கள் ஒருபுறம் இருக்க அதைப் புறக்கணித்து தங்கள் இஷ்டம் போல் நடக்கிறார்கள். கூடிய வரையில் இப்படிப்பட்டவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகாமல் இருக்கிறது என்றே நினைக்கிறேன். ஆனால் நல்ல அதிகாரிகளுக்கும் சில தொந்தரவுகள் தவிர்க்க முடியாதனவாக இருக்கின்றன. ஜில்லா நிர்வாகத்தில் சட்டசபை அங்கத்தினர்களுடைய தொடர்பினால் ஏற்படும் குழப்பங்கள் பல உண்டு. அந்தமாதிரியான தொடர்பு சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஜில்லா அதிகாரிகளோடு இருக்கவே கூடாதென்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஏதாவது குறை இருந்தால், பொதுவான விஷயங்கள் ஏதாவது நடைபெற வேண்டுமென்று நினைத்தால் அதைக்குறித்து அவர்கள் ஜில்லா அதிகாரிகளோடு கடிதத் தொடர்பு கொள்ளலாம். அதைத்தவிர அவர்களுடைய காரியாலயங்களுக்குச் சென்று அவர்களோடு அளவளாவுதல் சரியல்ல. இதைத் தவிர்க்க வேண்டும். அதனால் பல இன்னல்கள் உண்டு. சர்க்காரும் அங்கத்தினர்களுக்கு ஏதாவது குறை இருந்தால் அதைத் தீர்க்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அங்கத்தினர்கள் அவற்றை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரும்படியான சந்தர்ப்பத்தை அதிகப்படுத்த வேண்டும். அதற்கு வேண்டிய சூழ்நிலையை கனம் அமைச்சர்கள் செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

12-27 p.m. **SRI M. PALANIYANDI**: கனம் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகத்தைப் பற்றியும், மந்திரிகளுடைய நிர்வாகத்தைப்பற்றியும் பேசுகின்ற சந்தர்ப்பத்தில் சென்ற காலத்தைப்பற்றி பேசுவதைக் காட்டிலும் இனி வருங்காலத்தில் எப்படி இருக்க வேண்டுமென்பதைப்பற்றி சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது சில அமைச்சர்களுடைய வேலை மிக அதிகமாக இருக்கிறது என்று கருதுகிறேன். குறிப்பாக நீதி அமைச்சரை எடுத்துக்கொண்டால் அவரிடம் நீதி இலாகா, கல்வி இலாகா, ஜெயில், சட்டம் ஒழுங்கு போன்ற இலாகா எல்லாம் இருக்கிறது. அதனால் அவருக்கு வேலை அதிகம். மேலும் ஒரே மந்திரி இத்தனை இலாகா சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கும் போதும் வேலை தாமதப்பட வசதி ஏற்படுகிறது. ஆகவே கூடுமான வரையில் மந்திரிகளிடையே வேலை சரியான அளவில் பிரிந்து அளிக்கப்பட

வேண்டும். வேண்டுமானால் மந்திரிகள் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொள்வதிலும் தவறு இல்லை. காரியங்கள் துரிதமாக நடைபெற வேண்டும் என்பது முக்கிய கொள்கையாக இருக்கவேண்டும்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் இன்று ஜில்லா கலெக்டருக்குக் கீழே பல தாசில்தார்கள் இருக்கிறார்கள். டெபுடி கலெக்டர் வேறு இருக்கிறார்கள். அவருக்கும் வேண்டுமானால் தாசில்தார்கள் கொடுக்கலாம். இன்று மக்களுடைய அபிலாஷைகள் எல்லாம் வளர்ந்து கொண்டே போகின்றன. அதற்கு ஏற்ற வகையில் நிர்வாகம் துரிதமாக இயங்கக் காணோம் என்பது முதல் குறை. பல கிராமங்களை அதிகாரிகள் நேரிலேயே சென்று சுற்றிப் பார்க்க வேண்டிய நிலைமையிலும் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு போக்குவரத்து சௌகரியம் செய்து கொடுக்கப்படவில்லை என்றால் மிகவும் கஷ்டமாக இருக்கும். நிர்வாக இயந்திரத்தை வேகமாகச் செயல்படச் செய்ய சர்க்கார் எல்லா ஏற்பாடுகளையும் செய்தாக வேண்டும். தாசில்தார்களுக்கு ஜீப் வசதி செய்து தரும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி செய்தால்தான் அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் காலதாமதம் இல்லாமல் தக்காவி கடன் கொடுக்கும் விஷயமாக பரிசீலனை செய்வதற்கு மிகவும் உபயோகமாக இருக்கும். அவர்களுக்கு இவ்விதமாக வாகன வசதி அளிக்கவில்லை என்றால் அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டே வேறு இடத்திற்கு போனதாக புஸ்தகத்தில் எழுதி விடுகிறார்கள்.

அடுத்தபடியாக வேலைக்கு ஆட்கள் எடுப்பதில் யாருடைய சிபார்சும் இல்லாமல் ஒருவரை வேலையில் அமர்த்துவதற்கு எம்ப்லாய்மெண்ட் எக்சேஞ்சு எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இருந்தால்தான் நியாயமான முறையில் எல்லோருக்கும் வேலை கிடைக்கும். அதற்கு யாருடைய சிபார்சுகளும் தேவையில்லை. ஒரு சிபார்சு இல்லாதவன் நேரடியாக சென்று வேலை பெற முடியும். ஆதலால் அரசாங்கம் இதை பரிசீலனை செய்து எல்லோருக்கும் எம்ப்லாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக வேலை கிடைக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. DORAISAMI GOUNDER: கனம் தலைவர் அவர்களே, தற்சமயம் நாட்டில் பல அபிவிருத்தி வேலைகள் சர்க்காரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவைகளில் ஸ்தல அபிவிருத்தி திட்டம் (**Local Development Works**) ஒன்றாகும். ஆரம்பகாலத்தில் ஸ்தல அபிவிருத்தி திட்டம் வெற்றிகரமாக நடந்துவந்தது. கடந்த 1955–56லிருந்து மேற்படி திட்டம் பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கொண்டிருக்கவில்லை. காரணம் அதிகாரிகளின் அசிரத்தையும், அலட்சியமும் தான். பல பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் கிராமங்களில் பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டனர். பஞ்சாயத்து நிதி நிலைமை திருப்தியில்லாததால், பொதுஜனங்களின் ஒத்துழைப்பைக் கொண்டு தங்களுடைய சொந்த பணத்தை முதல் வைத்து வேலைகளை நடத்தினர். அதனுடைய பலன் இன்று பல பஞ்சாயத்துத் தலைவர்கள் மனைவிகளின் நகைகளை அடகு வைத்து செய்த வேலைகளுக்கு கூலி கொடுக்கவேண்டியதாகிவிட்டது. மேற்படி வேலைகளை கவனிக்கும் பொறுப்பு இன்ஜினியரிங் டிபார்ட்மெண்ட், ரெவின்யூ டிபார்ட்மெண்ட் ஆகியவைகளுக்கு விடப்பட்டிருக்கிறது. இவைகள் ஒன்றுக்கொன்று வடதுருவம், தென்துருவமாக ஏற்பட்டு பல சொல்லொண்ணாத கஷ்டங்களை படிப்பில்லாத பாமர பஞ்சாயத்து தலைவர்களுக்கு கொடுத்துவிட்டது. செய்த வேலைகளுக்கு சரியான முறையில் காலாகாலத்தில் பணம் கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்து தலைவர்களை மிரட்டி அதிகப்படி வேலைகளை வாங்கிக்கொண்டு, அவைகளை சரியான அளவு எடுக்காமல், பணத்தை குறைத்தும் இன்னும் கொடுக்கப்படாமலும் இருக்கிறது. காரணம், கீழே இருக்கும் அதிகாரிகள் ஒழுங்கீனமாக நடந்துகொள்ளுகிறார்கள்.

எங்கள் சேலம் ஜில்லாவில் வட பகுதி தாலுக்காக்களில் பல லட்சக்கணக்கான ரூபாய் பட்டுவாடா செய்யப்படாமலிருக்கிறது. பல பஞ்சாயத்து தலைவர்களும் ஜனப்பிரமுகர்களும், தாலுக்கா ஆபீசுக்கும் ஹோசூரிலிருக்கும்

அசிஸ்டெண்டு கலெக்டர் ஆபீசுக்கும் நடந்தவண்ணமாகவும் இருக்கிறார்கள். மேற்படியார்கள் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் சென்ற மார்ச் மாதமே முடித்தும், கடந்த ஒன்பது மாதங்களாக அவர்களுக்கு சேரவேண்டிய பணத்தை காலாகாலத்தில் கொடுக்கப்படவில்லை. சில்லரை அதிகாரிகளின் பேரில் பெரிய அதிகாரியின் கண்காணிப்பு போதுமானதாக இல்லை போலிருக்கிறது. சர்க்கார் இந்த அதிகாரிகளின் பேரில் தகுந்த நடவடிக்கை எடுத்து ஸ்தல அபிவிருத்தி திட்டம் வெற்றிகரமாக நடைபெற முயற்சி செய்யக் கோறுகிறேன்.

அடுத்தபடியாக தாசில்தாரிடம் தக்காவி லோன்களுக்காக பல விண்ணப்பங்கள் அனுப்பி பல நாட்களாக சாங்ஷன் ஆகாமல் இருந்துவருகிறது. அதற்குக் காரணம் தாசில்தார் எல்லா இடங்களுக்கும் செல்ல முடியவில்லை. ஆதலால் தாசில்தாருக்கு ஒரு ஜீப் கார் வசதியைக் கொடுத்து இந்த வேலைகளை காலதாமதமின்றி துரிதமாக நடத்தும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

1-37 p.m. **SRI M. KALYANASUNDARAM** : தலைமை வகிக்கும் கனம் அங்கத்தினர் அவர்களே, இந்த மான்யத்தில் செலவைக் குறைக்கப்படவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் நான் இந்த வெட்டுப்பிரேரணை கொடுக்கவில்லை. நிர்வாகம் திறமையாக இருக்கவேண்டும். அதற்கு இன்னும் அதிக செலவு ஏற்பட்டாலும்கூட அந்த செலவை நாங்கள் பொருட்படுத்தமாட்டோம். நம்முடைய குறைகளை உணர்ந்து அதற்கு துரிதமாக நிவாரணம் அளிப்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கவேண்டும். அப்படி நிர்வாகம் திறமையாகவும் துரிதமாகவும் நடப்பதற்கு அதிகமான பணம் செலவழித்தாலும் நாங்கள் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கமாட்டோம். மந்திரிகள் அதிகமாக சுற்றுப்பிரயாணம் செய்வதால் அவர்கள் பார்க்கக்கூடிய "பைல்கள்" உடனடியாக பார்க்க முடியவில்லை. அதனால் தாமதம் ஏற்படுகிறது. சாதாரணமாக மந்திரி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினால் அதற்கு பதில் 7, 8 மாதங்கள் கழித்து கிடைக்கிறது. சாதாரணமாக ஜில்லாக்களில் வேலைகள் இப்பொழுது அதிகமாக ஆகிவிட்டன என்று ஒப்புக்கொள்ளுகிறேன். இருந்தாலும் அதிகாரிகள் முக்கியமான விஷயங்களை காலதாமதம் செய்யாமல் அவ்வப்போது ஒரு முடிவு கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழிலாளர் மான்யத்தைப் பற்றி நேற்று பேசும்போது பீடித்தொழிலாளர்களுக்கான மசோதாவைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் இருந்து இன்னும் அனுமதி வராததினால் அவர்களைப் பற்றி எதையும் செய்வதற்கில்லை என்று சொன்னார்கள். இந்த சட்டசபை கூட்டத்தில் ஆரம்பத்தில் அம்மாதிரி மசோதாவைக் கொண்டு வருவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு இப்பொழுது கொண்டுவர முடியாது என்று சொல்வது நியாயம் அல்ல என்று சொல்ல விரும்புகிறேன். ஒரு வேலை இதுமாதிரி இலாகா அதிகாரிகள் முதலில் இவ்வாறு மத்திய அரசாங்கத்திடம் இருந்து அனுமதி பெறவேண்டுமென்று சொல்லாமல் இப்பொழுது அந்த அனுமதி அவசியம் என்று சொல்லும்போது இது ஒரு சூதாகத்தான் இருக்கிறது என்று தோன்றுகிறது. இம்மாதிரியான ஒரு நிகழ்ச்சி நிர்வாகத்திறைமையைக் காட்டுவதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். தேர்தல் சுமுகமாகவும், நல்லமுறையில் நடப்பதற்கு எல்லோருக்கும் சரியான வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்க்கும்போது தேர்தல் பிப்ரவரி 25-ல் ஆரம்பித்து மார்ச் 15ம் தேதி முடிவடையும் என்று தெரிகிறது. தேர்தல் சம்பந்தமாக வாக்காளர் ஜாபிதா சர்க்கார் காரியாலயங்களில் கேட்டால் சுலபமாகக் கிடைக்கவேண்டும். திருத்தல், அடித்தல், நீக்குதல் என்று சொல்லி 200 பக்கம் துண்டு துண்டாகக் கொடுத்து சுலபமாக வாக்காளர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் எங்கள் பிராணனை வாங்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். வாக்காளர் ஜாபிதா முறையாக மலிவான விலைக்குக் கிடைக்கவேண்டும். தேர்தல் சுமுகமாக நடப்பதற்கு சாதாரண மனிதர்கள்கூட அபேக்ஷகர்களாக நிற்க

வசதி அளிக்கக்கூடிய வகையில் வாக்காளர் ஜாபிதா விநியோகிக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேர்தல் நியாயமாக நடப்பதற்கு தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடக்க வேண்டும். சர்க்கார் கட்சிக்கு வசதிகள் இருக்கின்றன. எதிர்க் கட்சிகளுக்கும் வசதி இருக்கிறது. ஆனால், நடைமுறையில் நடப்பது என்னவென்றால் சாதாரணமாக மைக்கோடு ஒரு கூட்டம் நடத்துவதற்கு லைசென்ஸ் பெற 3 ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. 2 ரூபாய் மைக்குக்கும், 1 ரூபாய் ஸ்டாம்புக்கும் செலவாகிறது. அதோடுகூட கிராமங்களிலிருந்து கூட்டத்திற்கு அனுமதி வாங்குவதற்கு 30, 40 மைல் பஸ்ஸில் பிரயாணம் செய்து தலைமைக் காரியாலத்துக்குப் போய் 2, 3 நாட்கள் காக்கவேண்டியிருக்கிறது. அப்படிக்காத்தும் சில சமயங்களில் அனுமதி இல்லாமல் திரும்பிவர வேண்டியிருக்கிறது. கூட்டங்களை துரிதமாக கிராமங்களில் நடத்த வசதியில்லாமல் இருக்கிறது. தேர்தலுக்காக விதியை தளர்த்தவேண்டும். லைசென்ஸ் வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஒருவர் பெயரால் 2 ரூபாயோ 3 ரூபாயோ கொடுத்து லைசென்ஸ் வாங்கிவிட்டால் அவர் மூன்று மாதத்திற்கு எங்கு வேண்டுமானாலும் மைக் வைத்து கூட்டம் நடத்தலாம் என்று அனுமதி கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் இந்த சங்கடத்தை சமாளித்து விடலாம். நான் லைசென்ஸ் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் கூட்டங்களை துரிதமாக நடத்துவதற்கு எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டுமென்றுதான் நான் சொல்லுகிறேன். மற்றொரு சந்தர்ப்பத்தில் எழுத்து மூலமாகவும் என்னுடைய யோசனைகளை மந்திரி அவர்களிடம் சமர்ப்பிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். தொகுதிகளில் பரவலாக கூட்டங்கள் நடக்க தாமதமில்லாமல் அனுமதி கிடைக்கவேண்டிய வசதி செய்துதரவேண்டும், இப்பொழுது இருக்கும் வசதி போதாது என்பதைத்தான் நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

சர்க்கார் தேர்தலை சுமுகமாக நடத்தமாட்டார்கள் என்ற அவநம்பிக்கை எதிர்க்கட்சிக்கு கிடையாது. தேர்தல் பாரபட்சமில்லாமல் நேர்மையோடு நடக்கும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு. ஆனால் சர்க்கார் கவனமில்லாமலே சில அசம்பாவிதங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள சர்க்கார் உஷாராக இருக்கவேண்டும். மந்திரி அவர்களும் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் மற்ற எம்.எல். ஏக்களும் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். ஆனால் சர்க்கார் அதிகாரிகள் கொஞ்சமும் பாரபட்சமில்லாமல் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கக்கூடியவகையில் நடந்துகொள்ளவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். குறைகளை சுட்டிக்காட்ட வேண்டுமென்பதற்காக நான் இதை சொல்லவில்லை. மந்திரிகள் அதிகமாக சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். தேர்தல் நெருங்குகிறது. மூன்று மந்திரிகள் ஒரேசமயத்தில் ஒரு ஜில்லாவுக்குப் போகவேண்டிய நிர்வாக வேலை என்ன இருக்கிறது? ஏக காலத்தில் ஒரே ஜில்லாவில் மூன்று மந்திரிகள் ஏன் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்ளவேண்டும்? நிர்வாக வேலை சம்பந்தமாக மந்திரிகள் அதிகமாக சுற்றுப்பிரயாணம் செய்து ஜனங்களோடு தொடர்பு வைத்துக்கொள்வதை நான் வரவேற்கிறேன். ஜனங்களுக்கு இருக்கக்கூடிய குறைகளை நேரில் தெரிந்துகொள்ளுவதற்காக மாதம் 20 நாட்கள் வேண்டுமானாலும் மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்வதை நான் பாராட்டுவேன். ஆனால் தேர்தல் சமயத்தில் இப்படி அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்யக்கூடாது. கட்சி சார்பில் தேர்தலுக்காக சொந்த முறையில்தான் போகவேண்டும். அதற்கு நிர்வாக இயந்திரத்தை பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. இதற்கு முன்னால் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்தது போகட்டும். இனிமேலாவது இம்மாதிரி தேர்தல் சமயத்தில் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதிகாரிகள் மந்திரிகளிடத்திலும் எதிர் கட்சிகாரர்களிடத்திலும், தாக்ஷண்யமில்லாமல் நடந்துகொள்ளவேண்டும். எதிர்க்கட்சிக்கு விசேஷ சலுகை ஒன்றும் வேண்டியதில்லை. சர்க்கார்

தரப்புக்கு அளிக்கும் சலுகைகளெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் வஞ்சனையில்லாமல் அளிப்பதற்கு அதிகாரிகள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஜில்லா நிர்வாகத்தைப்பற்றி ஒரு வார்த்தை. தாசில்தாருக்கு ஜீப் கொடுப்பது, என்.ஜி.ஓக்களுக்கு சம்பள வசதி செய்துகொடுப்பது முதலியவை பற்றி பல யோசனைகள் சொல்லப்பட்டன. சரியாக வேலை செய்வதற்கு வேண்டிய வசதிகளை முதலில் செய்துகொடுக்க வேண்டும். நான் ஆர்.டி.ஓ. ஆபீஸ்களிலும் தாலுகா ஆபீஸ்களிலும், பார்த்திருக்கிறேன். இரவு வெகு நேரம் வரையில் மண்ணெண்ணெ விளக்கில் குமாஸ்தாக்கள் வேலை பார்க்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகூட வேலை செய்கிறார்கள். மின்சார வசதி எங்கெல்லாமோ அபிவிருத்தி செய்யப்படுகிறது. ஆனால் தாசில்தார் ஆபீசுக்குமட்டும் அது நுழையமாட்டேன் என்கிறது போலும். சர்க்காருக்கு மண்ணெண்ணெ விளக்கினால் செலவு கூட அதிகம். மின்சார
12-45 p.m. வசதி செய்துகொடுப்பதால், முதலில் மூலதானச் செலவு அதிகமாகுமே தவிர பிறகு மாதா மாதம் செலவு குறையத்தான் செய்யும். இதோடு கூட இன்னும் சில இடங்களில் சரியான ஸ்டேஷனரி கிடையாது, மேஜை நாற்காலி வசதிகூட சரியானபடி கிடையாது. வசதி செய்துகொடுத்து வேலையை சரியாக செய்யவேண்டுமென்று சொல்லுவதுதான் நியாயம், அப்பொழுதுதான் நிர்வாக இயந்திரம் சரியாக இயங்கும்.

கிராம சிப்பந்திகளை எடுத்துக்கொண்டால், கணக்குப்பிள்ளை, மணியக்காரர் சரியாக வேலை செய்தால்தான் ஜனங்கள் எல்லா வசதிகளையும் பெறமுடியும். தக்காவிக்கடன் முதலியவை விஷயமாக லஞ்ச ஊழல்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. எவ்வளவோ திட்டங்கள் போட்டாலும், கடைசியாக அவைகளின் சௌகரியங்களை ஜனங்களுக்கு சேர்ப்பது கிராம அதிகாரிகள்தான். கிராம அதிகாரிகள் திருப்தியுடன் நேர்மையாக வேலை செய்தால்தான் நிர்வாகம் சுமுகமாகவும் நேர்மையாகவும் நடக்கும். அவர்கள் சர்க்கார் சிப்பந்திகளும் அல்ல. கௌரவ சிப்பந்திகளும் அல்ல. சர்க்கார் சிப்பந்திகளுக்குள்ள பாதுகாப்பும் அவர்களுக்கு கிடையாது. கவுரவ சிப்பந்திகளுக்குள்ள உரிமையும் கிடையாது. அவர்களுக்கு சீக்கிரத்திலே சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளமாவது கொடுத்து வேண்டிய வசதி செய்துதரவேண்டும். கிராம அதிகாரிகளிடம் ஒரு ரிகார்டு கிடையாது. அவர்களுக்கு ஒரு உத்தரவு வந்ததா, வரவில்லையா, தெரியுமா, தெரியாதா என்று நிரூபிப்பதற்கு அவர்களிடம் ரிகார்டே கிடையாது. ஆகையால், கிராமப்புறங்களில் ரெவின்யூ இலாகா நிர்வாகத்தை திறமையான முறையில் நடத்தும்படிச் செய்வது சர்க்காரின் ஒரு கடமையாக இருக்கிறது. எந்த அளவுக்கு அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள் என்று இந்தச் சபையிலே சொல்லிவிட்டாலும் ஒவ்வொரு மந்திரியும் இதை யோசனை செய்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

12-46 p.m. **The Hon. Sri C. SUBRAMANIAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்து அந்த அடிப்படையில் பேசியபேச்சுக்களில் பலவற்றை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு நாம் மக்களுடைய க்ஷேமத்திற்காக பல திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று விரும்புகிறோம். அந்தத் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டுமேயானால், நிர்வாகம் எந்த முறையில் அமைந்திருக்கிறது, நிர்வாக இயந்திரம் எப்படி இயங்குகிறது என்பதை பொறுத்துத்தான் இந்தத் திட்டங்களெல்லாம் நல்ல முறையில் நிறைவேறுமா, நிறைவேறாதா என்கின்ற பிரச்னை அடங்கியிருக்கிறது. ஆகவே அங்கத்தினர்களிடம் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், நம் எல்லோருக்கும் இது ஒரு பொதுப்படையான அபிப்பிராயம் என்பதுதான். நிர்வாகம் திறம்பட நடைபெறவேண்டும், நல்ல முறையிலே நடைபெறவேண்டுமென்பதில் அபிப்பிராயபேதமே இருப்பதற்கில்லை. இப்பொழுது இருக்கக்கூடிய நிர்வாகம் குற்றம் குறைகள் இல்லாத ஒரு நிர்வாகம் என்று நான் சொல்லுவதற்கு தயாராகயில்லை. குற்றங்குறைகள் இருக்கின்றன.

முக்கியமாக இன்றைக்கு நம் முன்னால் இருக்கக்கூடிய பிரச்னை, வேலை மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆனால் முன்பு இருந்த குற்றங்குறைகளை ஓரளவு நீக்குவதற்கு முற்படும்போது, இன்னும் பல வேலைகள் அதிகமாவதன் காரணமாக இன்று இருந்த குறைகளெல்லாம் தீர்ந்தாலும், புதிய குறைகள் குற்றங்கள் புகுந்துகொள்கின்றன என்று மட்டும் சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

திரு கலியணசுந்தரம் பேசும்போது இருக்கக்கூடிய வசதிக் குறைகளைப் பற்றி கூறினார்கள். வசதிக் குறைவுகள் இருக்கத்தான் இருக்கின்றன. நமக்கு தனிப்பட்ட குறைகளும் இருக்கத்தான் இருக்கின்றன. ஆனால் அவைகளையெல்லாம் ஒரு சாக்காக வைத்துக்கொண்டு வேலை நன்றாக நடக்கவில்லை என்கின்ற முறை வருமேயானால், எந்தக் காலத்திலும் வேலை நடைபெறப்போவதில்லை. எல்லோருக்கும் எல்லாவிதமான சௌகரியங்களும் ஏற்பட்டுத்தான் வேலை திறமையாக நடக்கவேண்டும் என்ற மனப்பான்மை வளர்ந்துவிட்டால் ஒரு காரியமும் நடைபெறாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையிலே நிர்வாகத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்குமட்டுமல்ல அசௌகரியங்கள், கஷ்டங்கள், ஜனங்களுக்கும் நிறைய அசௌகரியங்கள் இருக்கின்றன என்பதை நான் அங்கத்தினர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். அசௌகரியங்களை நீக்க நாம் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று நினைக்கிறோம். இருக்கக்கூடிய அசௌகரியங்களைப் பொருட்படுத்தாது, தடைகளை மீறி நாம் வேலைகளைத் திறமையாகச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் நமக்கு இருக்கவேண்டும். அந்த லட்சியம் ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும். அதுதான் இருக்கக்கூடிய அசௌகரியங்களையும் ஒருவாறு போக்கிக்கொள்ள மார்க்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த இடத்தில் என்ன அசௌகரியம் இருக்கிறது, எதை எடுத்துக்கொண்டாலும் காரியம் திறமையாக நடக்காமல் இருப்பதற்கு என்ன சாக்கு சொல்லலாம் என்ற மனப்பான்மை அதிகமாக வளர்ந்துகொண்டு போகுமேயானால் காரியம் சாதிக்கக்கூடிய திறமையையே நாம் இழந்து விடுவோம் என்பதை அங்கத்தினர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அது சரியல்ல, இது சரியல்ல, அதனால் காரியம் நடைபெறவில்லை என்று சாக்குச் சொல்லாமல் குறைகளை நீக்கி அசௌகரியங்களையும் தாண்டி நாம் காரியங்களைச் செய்திருக்கிறோம், செய்கின்றோம் என்கின்ற ஒரு உணர்ச்சி, ஒரு ஆர்வம், ஒரு வேகம் ஒவ்வொருவரிடத்திலும் ஏற்பட வேண்டியது இன்றைக்கு மிகவும் அவசியம். அந்த உணர்ச்சியை, சூழ்நிலையை உண்டாக்குவதற்கு நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பாடுபடவேண்டும்.

நேர்மையாக நமது அரசாங்க நிர்வாகம் நடக்கவேண்டுமென்பதைப் 12-50 p.m.
பற்றி யாரிடத்திலும் அபிப்பிராய பேதமிருக்க முடியாது. நேர்மையாக அரசாங்கத்தை நடத்துவதற்கு நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து முயற்சி செய்யவேண்டும். குறை செய்யக்கூடியவர்கள் யாராயிருந்தாலும் தைரியமாக இது குறையென்று எடுத்துச் சொல்லக்கூடிய தைரியம் வந்தாக வேண்டும். நமக்கு வேண்டியவர் என்றமுறையில் குறையை மறைத்து வைத்துக்கொள்ளக்கூடிய பழக்கமில்லாமல், குறையை எடுத்துச் சொல்லும் பழக்கமிருந்தால்தான் நாம் நேர்மைக்கு அடிகோலியவர்களாவோம். ஆகவே அதை நாம் மனதில் வைத்துக்கொண்டுதான் காரியங்கள் செய்ய வேண்டும். இன்னொன்று இதைவிட மிக ஆபத்தானது, கொஞ்சம்கூட பொறுப்பில்லாமல் குறைகள் இருக்கிறது என்று சொல்வதில். அப்படி வரும்போது உண்மையான குறைகளைப்பற்றிச் சொல்லும்போதும் இது முன்னமே சொன்னதைப்போல்தான் இருக்கும் என்ற சந்தேகம் வரும். ஆதலால் நிர்வாகத்தை வகிப்பவர்களின் மேல் குறை சொல்லும்போது, நம் மனசாட்சிக்கு விரோதமில்லாமல், நம் அபிப்பிராயத்தில் உண்மையான குற்றம் நடந்திருக்கிறது என்று தெரிந்த பிற்பாடு அதை தைரியமாக சொல்ல முன்வர வேண்டும். ஆனால் ஒன்றுமே தெரியாதபோது வீணாக குற்றம் நடக்கிறது; சொந்தக்காரர்களுக்கு வேலைபோட்டுக் கொடுத்திருக்கிறார்கள். சிபார்சின் மேல் வேலை கொடுக்கப்படுகிறது என்றெல்லாம்

சொல்லும்போது அந்த குற்றச்சாட்டுகளுக்கு எத்தகைய மதிப்பும் இல்லாமல் போகிறது. இன்றைக்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நியாயமான காரியத்திற்கும் கூட சிபார்சு இருந்தால்தான் நடக்கும் என்றதொரு உணர்ச்சி, நினைப்பு மக்களிடையே பரவி வருகிறது. அதை நீக்கியாக வேண்டும். சிபார்சு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நியாயமான காரியங்கள் நடக்கும் என்றதொரு நினைப்பை மக்களிடையே உண்டு பண்ணி அவர்களிடம் நம்பிக்கையை ஊட்டவேண்டும். அதற்கான முயற்சி சர்க்காரின் முயற்சியும் எதிர்கட்சிகளின் முயற்சியும் ஒன்று சேர்ந்து இருக்கவேண்டுமென்று நான் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: ஒரு விஷயம் மந்திரியவர்கள் சொன்னார்கள். சிபார்சின் பேரில் யாருக்காவது உத்தியோகம் கொடுக்கப்பட்டிருந்தால் அதைக் குறிப்பிட்டுக் காட்டவேண்டுமென்று. இந்த **Public Prosecutor appointment** விஷயத்தில் எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. கைலாசக் கௌண்டர் மந்திரியின் உறவினர் என்ற காரணத்தினாலா அல்லது திறமையானவர்கள் அதற்கு மனு செய்யாததினாலா, அவரை நியமனம் செய்தார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்தக் கேள்வியைக் கேட்டதில் நான் சந்தோஷப்படுகிறேன். துரதிர்ஷ்டவசமாக அவரும் கௌண்டர். நானும் கௌண்டர். எனக்கு தூர உறவினருமாயிருக்கலாம். சில பத்திரிகைகள் இதைப்பற்றி எழுதியிருக்கின்றன என்பதிலும் சந்தேகமில்லை. அவர் ஒரு கௌண்டர் என்பதினாலோ அல்லது அவர் எனது உறவினர் என்பதினாலோதான் அவர் நியமிக்கப்பட்டார் என்று யாராவது சொல்வார்களேயானால் அதைப்போல் தப்பு ஒன்றுமிருக்க முடியாது. இந்த விஷயத்தில் எனது சொந்த அபிப்பிராயத்தைக்கொண்டு நியமனம் செய்துவிட முடியாது. முதலில் ஹைக்கோர்ட்டில் இருக்கக்கூடிய நீதிபதிகளிடம் ஆலோசிக்க வேண்டும். அவர்களிடம் கலந்தாலோசித்து அவர்கள் கொடுக்கக் கூடிய பேர்களிலிருந்துதான் இந்த நியமனத்தை நாங்கள் செய்ய வேண்டும். நமது ஹைக்கோர்ட்டில் இருக்கக்கூடிய நீதிபதிகள் சிபார்சு செய்து அதன் அடிப்படையில்தான் இந்த நியமனம் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய வேறொன்றும் கிடையாது. இதைப்பற்றி ஏதாவது தப்பபிப்பிராயம் இருந்தால், அதுகுறித்து ஏதாவது சந்தேகமிருந்து ஒரு விசாரணைசெய்யவேண்டுமென்றுள்ள ஏதாவது கோரிக்கையிருந்தால் அதை ஒப்புக்கொள்ள நான் தயார். ஒரு நீதிபதியைக் கொண்டுவந்து, வெளியிலிருந்து ஒரு நீதிபதியைக் கொண்டுவந்து விசாரணை செய்து, அவர் ஏதாவது பாரபட்சம் இருக்கிறதென்று சந்தேகமிருக்கிறது என்று சொன்னாலும்கூட நான் இம்மந்திரி பதவியிலிருந்து விலகுவதோடுமட்டுமல்லாமல் பொதுவாழ்விலிருந்தே விலகிக்கொள்கிறேன் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்குத் தெரிந்தவர்களைப்பற்றிய விஷயம் வரும்போது தீர ஆலோசித்து, பின்னால் ஏதாவது குறைகள் வந்துவிடுமோ என்பதைப்பற்றி ஒரு தடவையல்ல நூறு தடவை ஆலோசித்து தவிர்க்க முடியாத இடத்தில்தான் ஏதாவது செய்கிறேன். அதுவும் மிகவும் யோசித்துத்தான் செய்கிறேன். இம்மாதிரிக் காரியங்கள் மற்ற மந்திரிகளுக்கும் போய்விட்டுத்தான் முடிவு செய்யப்படுகின்றன. குற்றம் குறைகள் இருக்கின்றன என்று மனதில் வைத்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் இப்படி நேரடியாகக் கேட்டதில் நான் கல்யாணசுந்தரம் அவர்களை பாராட்டுகிறேன், அதையும் வரவேற்கிறேன். இந்த விஷயத்தில் மட்டுமல்ல, வேறு எந்த விஷயமானாலும் சரி, சந்தேகமிருந்தால் அதை மனதில் வைத்துக்கொண்டிராமல் உடனே கேட்டு சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும். வீணில் சந்தேகப்பட்டுக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. யார் நிர்வாகப் பொறுப்பிலிருந்தாலும் சரி, அவருடைய ஜாதியாரும் வரவேண்டியிருக்கும். அவருடைய ஜாதியார் இல்லாதவரும் வர வேண்டியிருக்கும். ஒரு பகுதியினருக்குத்தான் தகுதியிருக்கிறது என்று நினைக்கும் மனப்பான்மை சரியல்ல. அம்மனப்பான்மை யாருக்கும்

இருக்கக்கூடாது. சிலர் ஒரு பகுதியினருக்குத்தான் தகுதியிருக்கிறது. மற்றவர்களுக்கு இல்லை என்ற அபிப்பிராயமும் அவர்களுக்கு தகுதியிருக்க முடியாது வேறொருவருக்குத்தான் தகுதியிருக்கிறது என்று நினைக்கிறார்கள். அது தவறு. இன்றைக்கு எல்லா பகுதியினரும் முன்னுக்கு வர தகுதிபெற்றிருக்கிறார்கள். நான் ஒரு கௌண்டராதலால் எந்தக் கௌண்டரும் உத்தியோகத்தில் வரக்கூடாதென்று சொன்னால் நான் உத்தியோகத்திலிருந்தே, பதவியிலிருந்தே விலகிவிடவேண்டும். மாணிக்கவேலு அவர்களின் ஜாதியார்கள் உத்தியோகத்தில் வரக்கூடாதென்றால் அவர் பதவியிலிருந்தே விலகிவிடவேண்டும். ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் அதை யார் சொன்னாலும் சரி, கோவிந்தஸ்வாமி சொல்வதாய் இருந்தாலும் சரி அதை ஏற்றுக்கொள்ள நான் தயார். ரத்தினத்தைப்பற்றி அதிகமாக ஒன்றும் சொல்லமுடியாது. அவர் சொல்வதின் பேரில் விசாரணை நடத்தவேண்டுமென்றால் நான் அடிக்கடி விசாரணை நடத்திக்கொண்டே இருக்கவேண்டும். சந்தேகம் ஏதுவும் இருந்தால் நேரில் வந்து என்னிடம் கேட்கலாம். நான் பதில் சொல்லத் தயார். நான் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் பொது மக்களுக்கும் பொதுவாக இருக்கக்கூடிய ஒருவன். யாருக்கும் என்னிடம் கேள்வி கேட்க உரிமையிருக்கிறது. சந்தேகம் ஏதாவது இருந்தால் யாருக்கும் என்னிடம் நேரில் வந்து கேட்க உரிமையிருக்கிறது. அதன் மூலமாகத்தான் ஜனநாயக தத்துவம் நல்ல முறையில் வளரமுடியும், நேர்மையான அரசாங்கமும் ஏற்பட முடியும், என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். இந்த சந்தேகங்கள் ஏற்படும்போது இவைகள் உண்மையான சந்தேகங்களாய் இருந்தால் அதை மனதில் வைத்துக்கொண்டு ஒருசமயம் இப்படியும் இருக்குமோ என்று நினைக்காமல் நேரடியாகக் கேட்பதே நல்லது. கல்யாணசுந்தரம் அவர்கள் கேள்வி கேட்டபோது கைலாசக்கௌண்டர் என்றார்கள். கௌண்டர் என்று சொன்னது எந்த முறையிலோ, வேண்டுமென்றே கௌண்டர் பட்டம் போட்டார்களோ என்று தெரியாது. நான் இங்கு இன்னொரு விஷயத்தைப்பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன். சிபார்சு இல்லாமல் காரியங்கள் நடக்கிறதில்லையென்ற தப்பபிப்பிராயம் நீங்கவேண்டும். அதில் ஏதாவது காரியங்கள் இருந்தால் அதுவும் நீங்க வேண்டும். மக்களிடையே சர்க்காரிடம் நம்பிக்கை ஏற்படவேண்டும். சிபார்சு இல்லாமல் ஒரு காரியமும் நடக்காது என்றிருக்கும் தப்பபிப்பிராயமும் மக்கள் மனதிலிருந்து அகலவேண்டும். அந்த நிலை ஏற்பட எங்களாலான முயற்சிகளைச் செய்கிறோம். நாங்கள் எடுக்கிற முயற்சிகளெல்லாம் வெற்றி பெறுவது இல்லை. எங்களுக்கு திறமையிருக்கிறது; ஆகவே நாங்கள் எதையும் செய்து விடுகிறோம் என்று சொல்லத் தயாராயில்லை. ஆனால் ஒன்று, நல்லெண்ணத்துடன்தான் நிர்வாகத்தை நடத்திவர முயற்சி செய்திருக்கிறோம். என்னைப் பொறுத்தளவில் வெளியில் போனாலும் இருக்கிற காலத்தில் நியாயமாக நடப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார் என்று சொல்லுமளவிற்கு நான் நேர்மையாக நடந்து கொண்டுவந்திருக்கிறேன் என்பதை எனது மனசாட்சிக்கு அப்பழுக்கில்லாத வகையில் என்னால் சொல்லிக்கொள்ள முடியுமென்பதை நான் இச்சட்டசபை அங்கத்தினர்கள் முன்னிலையிலும், பொதுமக்கள் முன்னிலையிலும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கல்யாணசுந்தரம் அவர்கள் சில விஷயங்களைப்பற்றிச் சொன்னார்கள். பீடித் தொழிலாளர்கள் பற்றிய மசோதாவைப்பற்றி மனதில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டதாகச் சொன்னார்கள். அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதிலுள்ள முக்கியமான விஷயமென்னவென்றால் இந்த பில்லைக் கொண்டுவரலாமென்று முடிவு செய்வதற்கு முன்பு சம்பந்தப்பட்ட இலாகாவிலிருந்து இதைப் போடலாமா வேண்டாமா என்று ஆலோசனைக் கேட்டு அங்குள்ள அதிகாரிகள் ஆலோசனை செய்து அதற்குப் பிற்பாடு மந்திரிகள் முன்னால் வருகிறது. மந்திரிகள் முன்னால் வரும்போது ஒன்று முதல் நான்கு மந்திரிகள் யோசனை பண்ண வேண்டியிருக்கிறது. அதற்கு பிறகு **Business Rules** பிரகாரம் மந்திரிசபை கூடி முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. அவசரமாயிருந்தால் **Circulation** மூலம் உத்தரவு பெற்றுக்கொள்ளலாம்.

இந்த பில்லைப் பொறுத்தவரையில் அதற்கு முடிவு ஏற்படும் வரை ஒன்றும் சொல்லமுடியாது.

1 p.m. அதற்கப்புறம், இதிலே மத்திய அரசாங்கத்தின் அனுமதிபெற வேண்டும். ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற வேண்டும். ஒரு சட்டம் நிறைவேற்றுவதென்றால் அதை எந்தெந்த முறையில் அமைக்கவேண்டும் என்று சட்ட இலாகா பரிசீலனை செய்யவேண்டும். இப்படியெல்லாம் இருக்கிறது. இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் மசோதா கொண்டுவரப்படும் என்று இன்று தொழில் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அதல்லாமல் இது கொண்டுவருவதற்கு இஷ்டமில்லை. இதை அழித்துவிட முயற்சிக்கிறார்கள் என்று சொல்லுவதில் அர்த்தமில்லை. இதில் இஷ்டமில்லை என்றால் அப்போதே சொல்லி இருக்கலாம். உடனே ஏன் நிறைவேற்றவில்லை என்றால் அரசியல் சட்டத்தில் சில நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய முறையில் நாம் ஒன்றும் செய்யமுடியாது. அதனால்தான் தாமதம் ஆகிறதே தவிர ஏதோ பொதுமக்களை ஏமாற்ற வேண்டுமென்றோ ஏதோ தொழிலாளர்களுக்கு பயந்து சொல்லக்கூடியதோ அல்ல என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இதுதான் உண்மை நிலை, இதை அங்கத்தினர்கள் நம்ப வேண்டுமென்றும், முக்கியமாக கனம் எதிர்கட்சி உபதலைவர் கல்யாண சுந்தரம் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எலெக்டோரல், அதாவது வாக்களர் ஜாபிதா விஷயமாக பலர் குறிப்பிட்டார்கள். வாக்காளர் ஜாபிதாவை முன்பு இருந்ததை விட மூன்றில் ஒரு பகுதி விலையில் இப்போது எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதிலும் நாமினேஷன் போட்டிருப்பவர்களுக்கு இரண்டு ஜாபிதாக்கள் விலை இல்லாமலேயே கொடுக்கவேண்டும் என்றும் உத்தரவு போட்டிருக்கிறேன். ஜாபிதாவில் சில விஷயங்கள் புரிந்துகொள்ள முடியவில்லை என்று சொல்லப்பட்டது. அதுவும் உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் உத்தரவு போட்டிருக்கிறேன். ஜாபிதாவின் விலையைப் பொறுத்தமட்டில் பொதுமக்களுக்கு, எவ்வளவு சல்லிசாக கொடுப்பதற்கு முடியுமோ அந்தவகையில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறேன். என்ன இருந்தாலும் இவ்வளவுக்குப் பிறகும் அதிலும் சில குற்றங்கள் இருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. காரணம் இது ஐந்து வருடத்திற்கு ஒருமுறை திருத்தப்பட்டு வெளியிடப்படுகிறது. இதையும் நல்ல முறையில் இருக்கவேண்டும் என்று வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு விஷயம். தேர்தல் நடப்பதில் நாட்டிலுள்ள மற்றக்கட்சிகளுக்கும் போதுமான சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்று கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். நியாயமான முறையில் தேர்தல் நடப்பதற்கும் வோட்டு சாவடியில் நியாயமான முறையில் எல்லா கட்சியினருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதில் என்னென்ன முறையில் காரியங்கள் கைக்கொள்ள வேண்டும் என்பதை வகுக்க வேண்டியது மிக அவசியம். நான் இன்றைக்கு எல்லா எதிர்கட்சி தலைவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். இதில் நியாயமான ஒரு திட்டம் வகுப்பதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடி உட்கார்ந்து ஆலோசித்து இதற்கு ஒரு முடிவு எடுத்துக்கொண்டால் அந்த வசதிகளை செய்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்கும் என்று செல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ பிரசாரம் செய்வதற்குள்ள வசதிகளை மறுத்து விட்டு, உண்மையான காரியங்களை மறைத்துவிட்டு அதிகாரத்திற்கு வருவதற்கு நாங்கள் வர முயற்சிப்பதாக சொல்லப்பட்டது. அப்படி அதிகாரத்திற்கு வரவேண்டுமென்று எந்த உத்தேசமும் இல்லை. அப்படி வரவேண்டிய அவசியமும் இல்லை. தேர்தலில் எல்லாக் கட்சியினருக்கும் நியாயமான உரிமைகளை கொடுப்பதுதான் ஜனநாயக முறை. அதேமுறையில் கூட்டங்கள் போடுவதற்கு மாத்திரம்

என்றல்ல, மற்ற எல்லாக் காரியங்களையும் கவனிக்க ஒரு ஸ்டான்டிங் கமிட்டி (Standing Committee) ஏற்படுத்தி அதன் மூலமாக சர்க்காருக்கு சொன்னால் சர்க்கார் அந்தந்த நடவடிக்கை எடுப்பதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி செய்தால்தான் வீண் குற்றச் சாட்டுகளை நீக்க முடியும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

Sri A. GOVINDASAMI NAYAGAR : வருகின்ற பொது தேர்தலிலே எல்லா எதிர்க் கட்சிகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் வருகின்ற பொது தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகமும் கலந்துகொள்ள விருக்கிறது. ஆகவே திராவிட முன்னேற்ற கழகத்திற்கு என்று தனியாக ஒரு சின்னம் ஒதுக்குவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கி கொடுத்தால்தான் மந்திரி அவர்கள் சொன்னதற்கு அர்த்தம் இருக்கும். அதற்கு சர்க்கார் வழிவகை செய்வார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இது கனம் அங்கத்தினர் கோவிந்தசாமிக்குள்ள ஒரு தனியான காரியம். ஒரு காரியத்தைச் சொல்லும்போது ஒரு முடியாத காரியத்தைச் சொல்லி அதை செய்து கொடுத்தால்தான் அதில் அர்த்தம் இருக்கிறது என்று சொன்னால் அது கஷ்டமான காரியம். தேர்தலில் கட்சிகள் நிற்பதற்கும் சின்னங்கள் ஒதுக்குவதற்கும் ஒரு சட்டம் இருக்கிறது. இதில் மத்திய சர்க்காரோ, ராஜ்ய சர்க்காரோ செய்வதற்கு ஒன்றுமில்லை. இதற்கென்று தேர்தல் கமிஷன் இருக்கிறது. அந்தக் கமிஷன்தான் சின்னங்கள் ஒதுக்குவதைப் பற்றிக் கவனிக்கும். அதை மீறி எந்த மந்திரியும் உத்தரவு போட முடியாது, மத்திய சர்க்கார் மந்திரிகளாலும் போடமுடியாது, ஏன் ஜவஹர்லால் நேரு கூட உத்தரவு போடமுடியாது. இன்றைக்கு தேர்தல் கமிஷனின் விதிகளை பல கட்சிகளும் ஒத்துக் கொண்டிருக்கின்றன. அதிலும் சின்னங்கள் கொடுப்பதற்கும் பல விதிகள் இருக்கின்றன. அதிலும் திராவிட முன்னேற்ற கட்சி புதிதாகத் தோன்றிய கட்சி. அதற்கு சின்னம் ஒதுக்குவதற்கு முடியுமா, முடியாதா என்பதையெல்லாம் தீர்மானிக்க வேண்டியது தேர்தல் கமிஷனின் பொறுப்பு. இந்த மாதிரி சின்னம் ஒதுக்குவதற்கு எனக்கு அதிகாரம் இருந்தால் நாளைக்கே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு சின்னத்தை ஒதுக்கியிருப்பேன். ஏனென்று கேட்டால் நாளைக்கு தேர்தலில் சின்னம் இல்லாததினால்தான் தோற்றுவிட்டோம் என்று சாக்கு போக்கு சொல்லக் கூடாது. அப்படி ஒதுக்குவதற்கு என்னிடம் அதிகாரம் இல்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

Sri A. GOVINDASAMI NAYAGAR : கனம் அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் புதிதாக தோன்றிய கட்சி என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே தேர்தல் விதிகளின்படி ஒரு கட்சிக்கு சின்னம் ஒதுக்குவதற்கு 3 சதவிகிதம் வோட்டு பெற்றிருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த தேர்தலில் உழைப்பாளிக் கட்சிக்கும் காமன்வீல் கட்சிக்கும் இவ்விதம் ஏற்பட்டது. ஆதலால் தேர்தலில் நிற்பதற்கு முன்னாலேயே 3 சதவிகிதம் வோட்டு பெற்றிருக்க வேண்டும் என்று இருந்தால் எப்படி முடியும்? அது மாத்திரமல்ல, தேர்தலில் யார் யார் ஜெயிக்க முடியும் யார் யார் தோற்பார்கள் என்பதெல்லாம் இப்பொழுது சொல்ல முடியாது. முதல் மந்திரியாய் இருக்கிறவர்கள் தேர்தலில் தோற்கிறார்கள், வெளியில் இருப்பவர்கள் ஜெயித்து முதல் மந்திரியாக வருகிறார்கள், இதெல்லாம் நடந்து கொண்டிருக்கும். நான் மந்திரி சுப்பிரமணியத்தை தேர்தலில் கவிழ்க்க வேண்டும் என்று சொல்லலாம், இது போல் எல்லாம் சொல்லுவதில் பிரயோசனம் ஒன்றுமில்லை.

DEPUTY SPEAKER : The hon. Member should be brief.

SRI A. GOVINDASAMI NAYAGAR : ஆகவே புதிதாக வருகின்ற கட்சிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று உண்மையாக நோக்கமிருந்தால் புதிதாகத் தேர்தலுக்கு நிற்கும் கட்சிக்கு தகுந்த சின்னத்தை ஒதுக்க வேண்டும், இதற்கு 3 சதவிகிதம் வோட்டு பெற வேண்டும் என்று இருந்தால் அதை மாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நேரடியாக இறங்கியிருக்கிறது. அதற்கு சின்னம் ஒதுக்குவதற்கு மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் நினைத்தால் நடக்கும். ஆதலால் தான் இதை சொல்லுகிறேன். அவர்கள் இதைப் பற்றி சிபார்சு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இதில் ஒரு சின்ன விஷயம் இருக்கிறது. தேர்தல் சின்னம் புதியதாக ஒரு கட்சிக்குக் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் பத்து கட்சிகளுக்கு கொடுக்கும்படியான நிலைமை ஏற்படும். அப்பொழுது ஒருவருக்கும் கொடுக்க முடியாமல் போய் விடும். யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று ஒரு விதியை வைத்திருக்கிறார்கள். அதன்படித்தான் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்தப் பிரச்னைக்கு இப்பொழுது நாம் போக வேண்டியதில்லை. அது நம்முடைய அதிகாரத்திற்குள்பட்டது இல்லை.

அடுத்தபடியாக கனம் கலியாணசுந்தரம் அவர்கள் மூன்று மந்திரிகள் தேர்தலுக்குப் போவதைப் பற்றிக் குறிப்பிட்டார். அப்படிப் போகும் போது அவர்களுடைய பிரயாணப் படியைப் பற்றியும் குறிப்பிட்டார். ஆனால் அவருக்கு நான் ஒன்று சொல்லுகிறேன். மந்திரிகள் பிரயாணப்படி வாங்கும் போது அவர்கள் வெகு ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறார்கள். எதிர் கட்சி இப்படி கேட்பார்கள் என்று நினைத்துக் கொண்டு இன்னும் அதிக ஜாக்கிரதையாகத்தான் நாங்கள் இருக்கிறோம். இன்னும் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதையும் நாங்கள் உணருகிறோம். நாங்கள் மூன்று பேர்களும் போகிறோம் என்றால் அதற்குக் காரணமும் இருக்கிறது. நாங்கள் எல்லோரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். தேர்தல் வந்தால் அந்தக் கட்சியை ஆதரிக்க வேண்டியது எங்களுடைய பொறுப்பு, கடமையும் கூட. அப்படி ஆதரிக்க நாங்கள் கடமைபட்டிருக்கிறோம். மந்திரிகளாக இருக்கிறோம் என்பதற்காக அந்தக் கட்சியை ஆதரிக்காமல் எங்களால் இருக்க முடியாது. மந்திரிகளாக இருக்கிறோம் என்பதற்காக எங்களால் சும்மா உட்கார்ந்து இருக்க முடியாது. மூன்று பேர்களும் சில இடங்களுக்குச் சேர்ந்து போகவேண்டியதாக இருக்கிறது. அப்படித் தேர்தல் விஷயமாகப் போகும் போது சர்க்கார் செலவில் போகாமல் அதாவது சர்க்காருடைய ஆபீஸ் அலுவலாகப் போகாமல் தனிப்பட்ட முறையில்தான் போகிறோம் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். இதை உங்களுடன் உறுதியுடன் கூட சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதில் எந்த விதமான தவறுகளும் ஏற்பட்டுவிடாது என்பதை இந்த சபைக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே எந்த சமயத்திலாவது மூன்று மந்திரிகளும் சேர்ந்து போனால் நிர்வாகத்தில் கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டு வேலைகளில் துவக்கமும் ஏற்படலாம். தேர்தல் வருவதால் அப்படிப்பட்ட கஷ்டமும் துவக்கமும் ஏற்படாமல் இருக்க முடியாது. மற்றும் அங்கங்கே போகும் மந்திரிகளுக்கு சலுகைகள் கொடுக்கப்படுகின்றன என்றும் சொன்னார்கள். போகும் இடங்களில் சில சலுகைகளை நாங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம் என்றும் சொன்னார்கள். அப்படி நாங்கள் உபயோகப்படுத்திக்கொள்வதில்லை என்பதையும் நான் உறுதியாகச் சொல்லுகிறேன். எந்த இடத்திற்குப் போனாலும் சென்னை மந்திரியாக இருந்தாலும் சரி, வெளிநாட்டு மந்திரியாக இருந்தாலும் சரி, வெளி தேசத்திலிருந்து எந்த பெரிய மனிதர்கள் வந்தாலும் சரி அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்ற விதி சில அதிகாரிகளுக்கும் இலாகாக்களுக்கும் இருக்கிறது. அதன்படியே தான் கொடுத்து வருகிறார்களே தவிர நாங்கள் வேண்டும் என்பதற்காகக் கொடுக்கவில்லை. என்னைப்பொறுத்தமட்டில் அந்தச் சலுகைகள் எனக்கு

வேண்டாம் என்றுதான் நான் சொல்லுகிறேன். ஆனால் அதிகாரிகளுக்கு இருக்கக் கூடிய விதிகளின் கடமையினால் அவர்கள் தாங்களாகவே முன் வந்து பாதுகாப்புக் கொடுக்கிறார்கள். என்னை பொருத்த வரையில் எந்தவிதமான பந்தோபஸ்தையும் எடுத்து விடவேண்டும் என்றுதான் நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். இதை மாற்றுவதற்கு மந்திரிகளுக்குக் கூட அதிகாரம் கிடையாது. பாதுகாப்பு கொடுக்க வேண்டியதற்கு தனிப்பட்ட சட்டங்கள் இருக்கின்றன. அதை அனுசரித்துத்தான் கொடுக்கிறார்கள். என் சம்பந்தப்பட்ட வரையில் பந்தோபஸ்தை எந்த அளவிற்குக் குறைத்துக் கொள்ள முடியுமோ அந்த அளவிற்குக் குறைத்துக் கொண்டுதான் வருகிறேன்.

இன்னும் பல விஷயங்கள் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டன. தேர்தல் சம்பந்தமாகவும் எடுத்துச் சொன்னார்கள். நிர்வாக விஷயத்தில் பல குறைகளையும் எடுத்துச் சொன்னார்கள். தாலுகா ஆபீஸ்களில் மின்சார விளக்குகள் போட வேண்டும் என்றும் சொன்னார்கள். அது இல்லாமல் அங்கு கஷ்டப்படுகிறார்கள் என்றும் சொன்னார்கள். இன்றைக்கு எடுத்துக் கொண்டால் பல தாலுகா ஆபீஸ்களுக்கு போட்டுக் கொண்டுதான் வருகிறார்கள். எல்லா ஆபீஸ்களுக்கும் ஒரே சமயத்தில் போட வேண்டும் என்றால் அதற்கு வேண்டிய சாமான்கள் வேண்டும். அது கிடைப்பது அரிதாக இருக்கிறது. அதைப்போலவே மற்றவைகளுக்கும் முதலிடம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் எந்த அளவிற்கு எங்கங்கே வசதி செய்து கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் வசதி செய்துகொடுக்கப்பட்டுதான் வருகிறது. எல்லா இடங்களுக்கும் போட வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய பொருள்கள் கிடைக்காமல் ஓரளவு குறைந்துதான் கிடைக்கின்றன. கிடைப்பதை வைத்துக்கொண்டு எந்த அளவுக்கு வசதி செய்து கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குத்தான் இப்பொழுது செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. சர்க்கார் கட்டடங்களுக்கு முதலிடம் கொடுத்து விட்டால் மற்றவர்கள் என்ன செய்வார்கள். அதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு வருஷத்திலும் எவ்வளவு மின்சாரவசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று திட்டம் போட்டு கிடைக்கும் சாமான்களை வைத்துக்கொண்டு அதன்படி செய்துக் கொண்டு வரப்படுகிறது. இந்த முறையில் நிர்வாக யந்திரத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு எப்படிவைத்துக்கொள்ள வேண்டுமோ அந்த முறையில் வைத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய முயற்சியையும் செய்து கொண்டு வருகிறோம். அதற்கு கனம் அங்கத்தினர்கள் சொல்ல வேண்டியதில்லை. பொது மக்கள் அதற்குத் தீர்ப்புக் கூறுவார்கள். எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு இந்த மானியத்தை . . . (செங்கற்பட்டைப் பற்றி சொல்ல வேண்டும் என்று சிலர் குறுக்கிட்டார்கள்).

செங்கற்பட்டு சம்பந்தமாக சொன்ன புகாரை என்னுடைய சகாவிடம் சொல்லியிருக்கிறேன். அவர் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார். ஒவ்வொரு இனத்திலும் கலெக்டருக்குப் போக வேண்டியதை அனுப்பி வைத்துக்கொண்டு அவர்களிடமிருந்து வந்தவுடன் அதற்கு வேண்டிய உத்தரவுகளையும் போட்டுக்கொண்டிருக்கிறோம். நியாயமாக கோரிக்கைகள் வந்தால் அவைகளை கவனிக்க நாங்கள் எப்பொழுதும் தயாராகத்தான் இருக்கிறோம். உண்மையான கோரிக்கைகளாக இருந்தால் அவைகளின்பேரில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதில் ஆட்சேபனையே கிடையாது. உண்மையாக இருந்தால் அதை நிவர்த்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். நிர்வாகத்தில் குறைகள் இருந்து அவைகளை எடுத்துக் காட்டினால் அதன் பேரில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவும் தயாராக இருக்கிறோம். அதற்கு சந்தேகமே இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை உறுதியாகச் சொல்லிக்கொண்டு நான் சொல்லியவைகள் சரி என்று நினைத்தால் வெட்டுப் பிரேரபணையைக் கொடுத்தவர்கள் அதை வாபஸ் வாங்குவது அவசியம் என்று கருதினால் அதை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI N. RATHINA GOUNDER : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் சொன்னதை யெல்லாம் கேட்டேன். ஆனால் ஒரே ஒரு குறைதான் நாட்டில் பரவி வருகிறது. அதுவும் மக்களிடத்தில் நீண்ட நாட்களாக பரவி வருகிறது. இந்த சட்டசபை ஆரம்பித்த முதற்கொண்டே அது இருந்து வருகிறது. அது ஒரு முக்கியமான குறை. அதுவும் சர்க்காருக்கு தெரிவித்துக்கொள்ளவேண்டிய குறை. எங்களுக்கு அடிக்கடி மந்திரிகளுடைய சுற்றுப் பிரயாண நிகழ்ச்சிகள் வருகின்றன. அவைகளைப் பார்த்தால் பல இடங்களில் திறப்பு விழாக்கள் நடை பெறுவதாகத்தான் தெரியவருகிறது. அதனால் திறப்பு விழாவுக்கு என்று ஒரு தனி போர்ட் போலியோவை (Portfolio) அமைத்து அதற்கென்று ஒரு தனி மந்திரியை அமைத்தால் நலம் என்று தோன்றுகிறது. அப்படி ஒரு போர்ட் போலியோவை அமைத்து அதற்கு "மினிஸ்டர் பார் ஓபனிங் செரிமொனி" (Minister for Opening Ceremony) என்று அமைத்து அவருக்கு குறைந்த சம்பளத்தையாவது கொடுத்து அமைக்கலாம் என்று தோன்றுகிறது. ஆகையால் அதற்கு என்று ஒரு தனி மந்திரியை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (ஸ்ரீ கே. ராஜாராம் : நீங்கள் மந்திரிகளை திறப்பு விழாவுக்கு அழைக்காமல் இருந்தால் போதும்.)

THE HON. SRI C. SUBRAMANIAM : நாங்கள் சுற்றுப் பிரயாணம் போகும்போதுதான் திறப்புவிழாக்களில் கலந்துகொள்ளுகிறோம். அதற்கு என்று தனியாகப்போவது இல்லை. அப்படி நாங்கள் போகவில்லையானால் "லட்சம் மக்களுக்கு பிரதிநிதிகளாக நாங்கள் இருக்கிறோம். நாங்கள் அழைத்து மந்திரி வரமாட்டேன் என்கிறார்" என்று நாளைக்கு புகார் சொல்லலாம். நாங்கள் வேறு காரியங்களுக்காக செல்லும்போது அந்தக் காரியத்தையும் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவதை தட்ட முடியாமல் அவைகளில் கலந்துகொள்ளுகிறோமே தவிர நாங்கள் அதற்காக என்று போவது இல்லை. திறப்பு விழாவுக்குப் போவதால் எங்களுக்கு எந்தவிதமான பெருமையும் வந்து விடுவது இல்லை. சந்தோஷமும் வந்து விடுவது இல்லை. அங்கத்தினர்களாகவே வந்து எங்களை கூப்பிடுகிறார்கள். அவர்களை திருப்திசெய்ய வேண்டியதாக இருக்கிறது. சுற்றுப் பிரயாணத்தில் திட்டம் போட்டுக்கொண்டு நாங்கள் போவதில்லை என்பதை மட்டும் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : என்னுடைய முக்கியமான நோக்கம் தேர்தல் சம்பந்தமாகச் சொல்லவேண்டும் என்பதுதான். அதற்கு மந்திரி அவர்கள் திருப்திகரமாக பதில் சொல்லிவிட்டபடியால், திருப்திகரமாக அது சம்பந்தமாக வாக்குறுதி அளித்துவிட்டபடியால் அதற்கு ஒரு ஸ்டாண்டிங் கமிட்டியை ஏற்படுத்திவிடுகிறோம் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டபடியால் என்னுடைய வெட்டுப் பிரேரபணையை நான் வற்புறுத்தவில்லை.

DEPUTY SPEAKER : May I know whether the hon. Member Sri M. Kalyanasundaram is withdrawing the cut motion moved by him?

The cut motion moved by the hon. Member Sri M. Kalyanasundaram was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 35,00,000 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : May I know whether the hon. Member Sri A. Ratnam is withdrawing the cut motion moved by him under Demand XI—District Administration and Miscellaneous?

SRI A. RATNAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய வெட்டுப் பிரேரபணை என்.ஜி.ஓ.-க்கள் சம்பந்தமானது. அந்த விஷயத்தைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை. அதனால் என்னுடைய வெட்டுப் பிரேரபணையை வோட்டுக்கு விடும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர் என்.ஜி.ஓ.-க்கள் விஷயமாக சொல்லாமல் இருப்பது எப்படி இருக்கிறது என்றால் முழுப் பூசணைக்காயை சோற்றில் அமுக்குவதுபோல் இருக்கிறது. ஆகவே என்னுடைய வெட்டுப் பிரேரபணையை வோட்டுக்குவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 1,05,00,000 under Demand XI—District. Administration and Miscellaneous be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,05,00,000 under Demand XI—District Administration and Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

(5) DEMAND XXII—HARIJAN UPLIFT.

THE HON. SRI B. PARAMESWARAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 40,00,000 as advance grant under Demand XXII—Harijan Uplift."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 40,00,000 as advance grant under Demand XXII—Harijan Uplift."

SRI S. VADIVELU : Sir, I move—

"That the allotment of Rs. 40,00,000 under Demand XXII—Harijan Uplift be reduced by Rs. 100."

DEPUTY SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 40,00,000 under Demand XXII—Harijan Uplift be reduced by Rs. 100."

Both the Demand and the cut motion are now before the House for discussion.

[21st December 1956

SRI S. VADIVELU: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஹரிஜன சேரிகளுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கவும், தஞ்சாவூர் ஜில்லாவில் ஹரிஜனங்களை குடியிருப்பு மனைகளிலிருந்து வெளியேற்றக் கூடாது என்பதற்காகவும், ஆரம்பப் பள்ளிகளில் படித்துக்கொண்டிருக்கும் ஹரிஜன, பிற்பட்ட வகுப்பு மாணவ மாணவிகளுக்கு சர்க்கார் செலவில் பலகை, புத்தகங்கள் கொடுத்து உதவி செய்யவேண்டும் என்பதை விவாதிப்பதற்காக, நான் வெட்டுப் பிரேரணையை கொண்டுவந்திருக்கிறேன்.

நாம் சுதந்திரமடைந்து 8 ஆண்டுகள் ஆகிவிட்டன. தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய தாழ்த்தபட்ட மக்கள் பெரும்பாலும் வயல்களிலும், பண்ணைத்தாக்குகளிலும் தான் வசிக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. காடுகளில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் மழைக் காலங்களில் நடந்து போவதற்கு கூட வழியில்லாத நிலையில் இருக்கிறார்கள். இரவு நேரங்களில் அவர்களுக்கு மின்சார விளக்கு வசதிகள் இல்லாமலிருக்கின்றன. சுதந்திரம் கிட்டியும் அவர்களுடைய நிலை இப்படி இருந்தால் அது நம் நாட்டின் துரதிஷ்டம்தான்.

சென்ற நாலரை வருட காலமாக இந்த சட்ட சபையில், ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு மனைகளை சொந்தமாக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறோம். குடியிருப்பு மனைக்கட்டு பிரச்னை ஒரு பெரிய பிரச்னை. ஒரு சுதந்திர நாட்டில், பகல் பூராவும் வேலை செய்யும் ஒரு மனிதனுக்கு குந்தியிருப்பதற்கு ஒரு குடிசையில்லை என்றால், அது அந்த நாட்டின் தரித்திர நிலையையே எடுத்துக்காட்டுகிறது. மனைகளை அவர்களுக்கு சொந்தமாக்குவதில் தாமதம் ஏற்பட்டாலும், அவர்களை குடியிருப்பு மனைகளிலிருந்து வெளியேற்றப்படாமலிருப்பதற்கு சர்க்கார் உத்திரவாதமளிக்க வேண்டும்.

சர்க்கார் ஹரிஜனங்களுக்கு கல்விச் சலுகை அளித்திருந்தும் அவர்களுடைய குழந்தைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப முடியாத நிலையில் இருக்கிறார்கள். அன்றாடம் கூலி வேலைசெய்துதான் அவர்கள் குடும்பத்தை நடத்த வேண்டியிருக்கிறது. புத்தகம், பலகை, மற்றும் துணி மணிகள் வாங்கி, கொடுக்கும் நிலையில் ஹரிஜனங்கள் இன்று இல்லை. சர்க்கார் அளிக்கும் கல்விச் சலுகையை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால் அவர்களுடைய குழந்தைகளுக்கு சர்க்கார் செலவில் புத்தகங்கள், பலகை முதலியவைகள் வாங்கிக்கொடுக்கவேண்டும்.

ஹரிஜனங்களுக்கு அளித்திருக்கும் சலுகைகளை பெறவொட்டாமல் தடுப்பதற்கு நிலப்பிரபுக்களும் பலவிதமான முறைகளை கையாளுகிறார்கள். திருத்துறைப்பூண்டி தாலூகாவில் வடுகூர்-மணக்குடி பஞ்சாயத்தில் சாமியப்பன் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் குமஸ்தா வேலை பார்த்து வந்தார். பஞ்சாயத்து தலைவர் வந்தபொழுது, எழுந்து மரியாதை செய்யவில்லை என்ற காரணத்திற்காக அவரை வெளியே பிடித்து தள்ளி, அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஹோட்டலிலும் அவருக்கு சாப்பாடு போடக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அரை மாதம் சாப்பிட்டதற்கு அவர் ஹோட்டலுக்கு பணம் கொடுக்கவேண்டி இருந்தது. அதற்காக அவர் சைக்கிளை பிடுங்கி வைத்துவிட்டார்கள். 1956ஞ டிசம்பர் மாதம் 15உ அன்று என் வீட்டிற்கு அங்குள்ள ஹரிஜனங்கள் வந்து முறையிட்டார்கள். டைரக்டர் அவர்களுக்கும் கனம் மந்திரி அவர்களுக்கும் தந்தி கொடுக்கச் சொன்னேன். தந்தி கொடுத்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இம்மாதிரி சம்பவங்கள் பல இடங்களில் நடைபெறுகின்றன.

கனம் நிதியமைச்சரவர்கள் பேசும்பொழுது ஜன நாயகத்தில் தமக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைப்பற்றி சொன்னார். ஆனால் சென்ற பொதுத்தேர்தலின்போது வலிவலம் தேசிகர் அவர்கள் தனக்கு

21st December 1956] [Sri S. Vadivelu]

சொந்தமாயுள்ள எழு கிராமங்களிலுள்ள ஹரிஜனங்கள், வோட்டு போடக் கூடாது என்று சொல்லி அவர்களை தடுத்துவிட்டார்கள். வேறு ஜாதியினராக இருந்தால் இந்தத் தடையை மீறி நடந்திருப்பார்கள். ஜில்லா போர்டு தேர்தல் நடந்தபொழுதும் அவ்வாறே செய்தார். இன்றைக்கு ஸ்ரீ தேசிகர் ஒரு காங்கிரஸ் எம். எல். சி. ஆக இருக்கிறார். அவருடைய கிராமத்தில் ஜனநாயகம் எவ்வாறு தழைத்து ஓங்குகிறது என்பதற்கு இதுவே சான்று. அவர் கிராமத்தில் இருக்கும் ஹரிஜனங்கள் அல்லல் படுகிறார்கள். அங்கு ஹரிஜனங்கள் கட்டிவைத்து அடிக்கப்படுகிறார்கள். தேசப் பிதா காந்தியின் பெயரால், செக்கு இழுத்த சிதம்பரம் பிள்ளையின் பெயரால் இவ்வித அட்டூழியங்கள் நடக்கின்றன. நிலைமை இப்படியிருந்தால் காந்திஜியின் லட்சியம் எவ்வாறு ஈடேற முடியும்? ஆகவே ஹரிஜனங்கள் அவர்களுடைய குடியிருப்பு மனைக்கட்டுகளிலிருந்து வெளியேற்றப்படாமலிருப்பதற்கு ஒரு பாதுகாப்பு சட்டம் கொண்டுவரவேண்டும். அவர்கள் வசிக்கும் சேரிகளுக்கு மின்சார வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். ஹரிஜன மாணவ மாணவிகளுக்கு சர்க்கார் செலவில் புத்தகம், பலகை முதலியன வழங்கப்படவேண்டும். இவைகளைச் செய்தால் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரும், ஹரிஜனங்களும் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The discussion on the Demand will be continued to-morrow. The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned. (1-30 p.m.)

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Saturday, 22nd December 1956.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at nine of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTHAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Arbitration re *Madras-Andhra Border dispute*

* 10(S.N.) *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state when the arbitration by a Minister of the Union Government is expected to be held for settling the border dispute between the Governments of Andhra and Madras in respect of certain areas in Chittoor district?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sri H. V. Pataskar, Union Minister for Legal Affairs and Civil Aviation, who has been deputed by the Central Government to mediate in the Andhra-Madras border dispute is expected to arrive in Madras for this purpose during the last week of this month.

SRI M. KALYANASUNDARAM: அவர்கள் எந்த முறையில் விசாரணை நடத்தப் போகிறார்கள்? எந்த முறையில் நடைபெறுவதற்கு வழி முறை வகுக்கப்பட்டிருக்கிறது? இந்த ராஜ்யத்தில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளும் பொதுஜன ஸ்தாபனங்களும் இந்த விசாரணையில் கலந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: எந்த முறையை வகுப்பார்கள் என்று ஸ்ரீ பட்டாஸ்கார் வந்த பிறகுதான் நிர்ணயிக்க முடியும்.

SRI V. BALAKRISHNAN: ஹோசூர் விஷயத்தையும் இந்தத் திருத்தணி எல்லை பிரச்னையோடு மத்தியஸ்தம் நடத்துவார்களா? சர்க்கார் இதை ஒத்துக்கொண்டிருக்கிறார்களா? அப்படியிருந்தால் சர்க்கார் ஏன் இதை ஒத்துக்கொண்டார்கள்

THE HON. SRI C. SUBRAMANIAM: ஹோசூர் பிரச்னையில் ஆந்திரர்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என்பதுதான் நமது சர்க்காருடைய வாதம். ஆனால் மத்தியஸ்தர் ஹோசூர் பிரச்னையை ஆராய வேண்டுமென்று கருதினால் ஹோசூர் பிரச்னையை ஆராயலாம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

SRI K. VINAYAKAM: ஏற்கெனவே இந்த எல்லைப் பிரச்னையை சுமுகமாக தீர்த்துவைப்பதற்கு ஆந்திர சர்க்காரும் சென்னை சர்க்காரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கொள்கையின் பிரகாரம் மத்தியஸ்தம் செய்யப்படுமா அல்லது அதிலிருந்து விலகவேண்டுமென்றால், விலகிக்கொள்ள உரிமை இருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: சென்னைக்கு மத்தியஸ்தர் வந்த பிறகுதான் அவற்றைப்பற்றி யோசிக்கப்படும். அதிலிருந்து விலகவேண்டும் வேண்டாம் என்பதைப்பற்றி மத்தியஸ்தர் ஆலோசனை செய்வார்கள்.

[22nd December 1956

Sri K. T. RAJU : ஆந்திர ராஜ்யத்திற்கும் சென்னை ராஜ்யத்திற்கும் உள்ள எல்லைப் பிரச்னை சுமுகமாக தீர்ந்துவிடுமா ? தேர்தலுக்கு முன்னால் தீர்ந்துவிடும் என்று அமைச்சர் அவர்கள் நினைக்கிறார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அது சுமுகமாக தீர்ந்துவிடலாம் என்று நம்புகிறேன். ஆனால் சில பகுதிகள் நம் நாட்டுடன் சேர்ந்துவிடும் என்று சொல்வதற்கு இல்லை.

Sri V. BALAKRISHNAN : ஆந்திரா ராஜ்யம் சென்னை ராஜ்யத்திலிருந்து பிரிந்துபோன காலத்தில் ஹோசூர் பிரச்னை ஒரு உயிர் பிரச்னையாக இருந்ததா ? இல்லையென்றால் அதற்கப்புறம் ஏன் பல வருஷமாக ஹோசூரை சேர்த்துக்கொள்ளாமல் இருந்தார்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது ஆந்திராவுக்கும், நமக்கும் உள்ள பிரச்னைதான் நம்முடைய பிரச்னை. ஆனால் ஆந்திரா அரசாங்கம், ஹோசூர் விஷயத்தையும் சேர்த்திருக்கிறது. நாம் இது சரியில்லை. இது தனிப்பட்ட விஷயம் என்று சொல்லியிருக்கிறோம். ஸ்ரீ பட்டாஸ்கர் இந்த பிரச்னையை ஆராய்வார்.

Sri M. KALYANASUNDARAM : மத்திய சர்க்கார் எந்த கொள்கை அடிப்படையில் இந்தத் தாக்கீது கொடுத்திருக்கிறார்கள் ? அதோடு இந்த மத்தியஸ்தர் கொடுக்கும் தீர்ப்பு இரண்டு ராஜ்யத்தையும் கட்டுப்படுத்துமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அவர்கள் ஒரு தாக்கீது கொடுத்திருப்பதாக தெரியவில்லை. ஆனால் இந்த விஷயத்தில் ஆலோசனை செய்யவேண்டியிருப்பது மத்தியஸ்தர்தான். ஆனால் இந்த மத்தியஸ்தர் கொடுக்கும் தீர்ப்பு ஒரு ஆர்பிட்ரேஷனாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

Sri K VINAYAKAM : ஸ்ரீ பட்டாஸ்கர் அளிக்கும் தீர்ப்பை ஒப்புக் கொள்ளவேண்டும் என்ற நிர்பந்தம் இல்லையென்றும், இதிலிருந்து விலகுவதற்கு உரிமை இருக்கிறதென்றும் பிரஸ் கான்பரன்ஸில் ஆந்திரா முதல் மந்திரி ஸ்ரீ சஞ்சீவி ரெட்டி சொல்லியிருக்கிறார். அதைப்பார்த்து அந்த எல்லைப்பகுதியில் உள்ள மக்கள் சஞ்சலப்படுகிறார்கள் என்பதை கனம் மந்திரி அறிவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அவ்வாறு சொல்லும்போது அவர் மனதில் என்ன நினைத்துக்கொண்டு சொன்னாரோ தெரியாது. இந்தப் பிரச்னையை எந்த அடிப்படையில் தீர்க்க முடியும் என்பதை முன்னாலேயே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. யாரவேண்டுமானாலும், எந்த சமயத்தில் வேண்டுமானாலும் இஷ்டம் இல்லை என்று விலகிக்கொள்ளலாம் அவர் அவ்வாறு சொல்லியிருக்கலாம்.

Sri V. MUNUSWAMY GOUNDER : ஹோசூரில் உள்ள மக்கள் நம்முடைய ராஜ்யத்தில் இருப்பதற்காக சந்தோஷப்படுகிறார்கள். அப்படியிருக்கும்போது ஆந்திரா சர்க்கார் எந்த அடிப்படையில் ஹோசூர், வேப்பனப்பல்லி பிர்க்காவை ஆந்திரா ராஜ்யத்தில் சேர்ப்பதற்கு உரிமை கொண்டாடுகிறார்கள் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது மக்கள் எப்படி நினைக்கிறார்கள். ஓட்டு எடுப்பு மூலம் இந்தப் பிரச்சனை அணுகவில்லை. நமக்கு இருக்கக்கூடிய புள்ளி விவரங்களைக்கொண்டு எந்தெந்த பகுதிகள் நமது ராஜ்யத்தில் சேரவேண்டும் என்பதைப் ஆலோசனை செய்வார்கள். முக்கியமாக 1951-ம் வருஷத்திய சென்ஸஸ் புள்ளி விவரங்களைக் கொண்டு நாம் இந்த அடிப்படை பிரச்சனைகளை ஆராயப்போகிறோம்.

Sri M. KALYANASUNDARAM : நமது நிதி மந்திரி அவர்கள் ஆந்திர சர்க்கார் மந்திரியுடன் நன்றாகப்பழகி இருந்ததினால் அவருடைய

22nd December 1956]

மனது எவ்வாறு செல்லுகிறது என்பது நமது நிதி மந்திரி அவர்களுக்கே தெரிந்திருக்கும். அவ்வாறு தெரிந்திருந்தால் கனம் மந்திரி அவர்கள் தெரிவிப்பாரா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஆந்திரா முதல் மந்திரி என்ன நினைத்துள்ளார் என்பது எனக்குத் தெரியாது. இது விஷயமாக நமது ராஜ்யத்தில் எப்படி கிளர்ச்சி நடத்தப்படுகிறதோ, அவ்வாறே அங்கேயும் கிளர்ச்சிகள் நடைபெறும் என்று அதற்குத் தகுந்தபடி அவர் நடந்து கொள்வார் என்று நம்புகிறேன்.

Sri M. KALYANASUNDARAM : மத்தியஸ்தரால் இரண்டு சர்க்கார்களுக்குமிடையே உள்ள எல்லைத் தகராறுகளை தீர்க்கப்படாவிட்டால் இதை எவ்வாறு தீர்க்கப்போகிறார்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : தீர்க்கப்படாவிட்டால் என்ற பிரச்னை இப்பொழுது எழவில்லை. இரு ராஜ்யங்களுக்கும் உடன்பாடு ஏற்படாவிட்டால் இந்த பிரச்னை எப்படி தீர்க்கப்படும் என்று பிறகு யோசிக்கப்படும்.

Sri P. JEEVANANDAM : இந்தப் பிரச்னை தீருவதற்காக ஏற்கனவே இரண்டு சர்க்கார்களும் சில கொள்கைகளை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் ஒன்று தொடர்ச்சியாக (contiguity) இருப்பதைப் பொறுத்தது. குறிப்பிட்ட இடத்தில் தமிழ் பேசுகிறவர்கள் நிறை இருந்து, அதைத் தொடர்ந்தாற்போல் இருக்கக்கூடிய சில கிராமங்களில் தமிழர்களும் மெஜாரிடி இல்லை. தெலுங்கர்களும் மெஜாரிடி இல்லை. தமிழர்கள் குறிப்பாக ஜாஸ்தியாக இருக்கிறார்களா, தெலுங்கர்கள் ஜாஸ்தியாக இருக்கிறார்களா, leading majority யார் என்று சொல்லுவதற்கில்லை. உதாரணமாக, கங்குந்திக்குப்பம் தாலுக்காவில் சில கிராமங்களிலே தமிழர்கள் மெஜாரிடியாக இருக்கிறார்கள். சில கிராமங்களிலே தெலுங்கர்கள் மெஜாரிடி இருக்கிறது. தமிழர்களை ஒட்டியிருக்கக்கூடிய கிராமங்களிலே ஒரு பக்கத்தில் காடுகள் இருக்கிறது. நமக்கு காடுகளும் வேண்டும். அதை அடுத்ததாற்போல் இருக்கக்கூடிய சில கிராமங்களில் தெலுங்கர் மெஜாரிடி இல்லை. 1951-ம் வருஷத்திய சென்ஸஸ்படி அவர்களுக்கும் சில இடங்களில் absolute மெஜாரிடி இல்லை. தமிழர்களுக்கும் சில இடங்களில் absolute மெஜாரிடி இல்லை. ஆகையால் சேர்ந்தாற்போல் இருக்கக்கூடிய contiguous கிராமங்களையும் அதை அடுத்துள்ள காடுகளையும் ஒன்று சேர்ப்பதற்கு நமது சர்க்காருக்கு கொள்கை இருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது சென்னை சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிற அடிப்படையில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு மாறுவது என்றால், அதாவது ஆந்திரப் பகுதியிலிருந்து சென்னைக்கு மாற்றுவதாக இருந்தால் தமிழர் அதிகமாக இருந்தால்தான் அந்தப் பகுதியை கேட்க உரிமை உண்டு. அதேமாதிரி ஆந்திரர்கள் சென்னையிலிருந்து ஒரு பகுதியை கேட்கவேண்டுமென்றால் அந்தப் பகுதியில் தெலுங்கர்கள் absolute மெஜாரிடியாக இருக்கவேண்டும். இந்த அடிப்படையில்தான் இந்தப் பிரச்சனையை தீர்க்க வேண்டுமென்பது சென்னை சர்க்காரின் அபிப்பிராயம்.

Sri G. GOVINDAN : எல்லைப்பிரச்சனை சம்பந்தமாக, தெற்கு எல்லையைப் பற்றி கொஞ்சம் சந்தேகம் உண்டாயிருக்கிறது. தேவிகுளம்-பீர்மேட்டில் தமிழர்கள் அதிகமாக இருப்பதை சர்க்கார் அறிவார்களா ? அதற்கு ஆவனசெய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : எப்பொழுதும் இருமுனைப் போரைத் தவிர்க்கவேண்டுமென்று, சொல்லுவார்கள். வடக்கு எல்லைப் பிரச்சனை தீர்ந்தபிற்பாடு தெற்குப் பகுதியைப் பற்றி யோசிக்கலாம். (சிரிப்பு).

Sri K. VINAYAKAM : மக்கள் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்துத்தான் பிரச்னையை தீர்க்கவேண்டுமென்று ஏற்கனவே ஒத்துக் கொண்டிருந்தாலும் கூட, 1951-வது வருஷத்திய சென்ஸஸ்படி

[22nd December 1956

ஆந்திரர்களுக்கு ஒரு சில இடங்களிலே அசௌகரியமாக இருப்பதினாலே, அவர்கள் அதை விட்டு விட்டு, 1931-வது வருஷத்திய சென்ஸஸ்படி எடுத்துககொள்ளவேண்டுமென்று அந்தப்பகுதியில் வற்புறுத்திக்கொண்டுவருவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதை மந்திரி படாஸ்கர் அவர்கள் ஒத்துக்கொள்வதற்கு நம்முடைய சர்க்கார் விட்டுக்கொடுக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஸ்ரீ விநாயகம் புது யோசனைகளை மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுக்காமல் இருப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன். 1951-வது வருஷத்திய சென்ஸஸ்படிதான் பிரச்சனையை தீர்க்கவேண்டுமென்பது இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமை. மற்ற விவரங்களைப் பற்றி நான் இதுவரையிலும் கேள்விப்படவில்லை.

Sri V. BALAKRISHNAN : மத்திய மந்திரி அவர்களின் தலையீடோ அல்லது மத்தியஸ்தமோ தன்னை கட்டுப்படுத்தாது என்று ஆந்திர மந்திரி அவர்கள் தம்பட்டம் அடித்து வருவதால் அந்த மனோபாவமானது அந்தப் பிரச்சனையை தீர்ப்பதில் அவர் அக்கறை கொள்ளவில்லை என்பதை காண்பிக்கிறது என்பதை நம்முடைய சர்க்கார் உணர்ந்து அதற்குத் தகுந்தபடி அவர்களுடைய போர் முனையையும் நடவடிக்கையையும் திருத்தி அமைத்துக்கொள்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது ஒரு **hypothetical question** ஆக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் அவர்களும் இந்தப் பிரச்னை தீரவேண்டுமென்றுதான் நினைக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். இந்த பிரச்னையை தீர்ப்பதற்கு எல்லோரும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். வீணாக சந்தேகப்படவேண்டிய அவசியமில்லை.

Sri P. RANGASWAMY REDDIAR : வட எல்லைத் தகராரைப்பற்றி இம்மாதம் 10-ம் தேதி சென்னையில் டெல்லி மந்திரி ஸ்ரீ படாஸ்கர் அவர்கள் விவாதிக்கப்போவதாக முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவருக்கு அப்பொழுது சௌகரியமில்லை என்று சொல்லி, 15-ம் தேதிக்கு அந்த விஷயம் தள்ளிப்போடப்பட்டது. பிறகு மறுபடியும் 15-ம் தேதி ஆந்திர மந்திரிக்கு சௌகரியமில்லை என்று சொல்லி 25-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஆந்திரா மந்திரி அதைப்பற்றி தனக்குத் தெரியாது என்று சொல்லுகிறார். ஆகையினால் வட எல்லைப் பிரச்னையை தீர்ப்பதற்கு சென்னையில்தான் கூடவேண்டுமென்று எண்ணாமல், நமது அமைச்சர் எப்பொழுதுமே **ever ready**-ஆக ஆந்திராவுக்கு வேண்டுமானாலும்போய் பேசுவதற்குத் தயாராக இருப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது நான் நினைப்பது ஒன்றுதான். முதலில் பூர்வாங்கமாக கூடும்போது இருதரப்பினரும் சேர்ந்து கூடவேண்டுமென்பது அவசியமில்லை. இப்பொழுது ஸ்ரீ படாஸ்கர் வந்து சென்னை சர்க்காரிடம் இருக்கக்கூடிய விவரங்களைத் தெரிந்துகொண்டபிற்பாடு ஹைதராபாத்துக்குப்போய் அவர்களுடைய வாதங்களையும் தெரிந்துகொள்ளலாம். பிறகு இரண்டு பேரும் கூடி பேசுவதில் ஒன்றும் சிரமமில்லை. ஆகையினால், முதலில் ஸ்ரீ படாஸ்கர் வரும்பொழுது ஆந்திரப் பிரதமர் இங்கு இருக்கவேண்டியது அவசியமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒவ்வொரு சமயமும் இந்த விஷயத்தை தள்ளிப்போட்டுக் கொண்டே போனால், பிரச்னையை நீடித்துக்கொண்டே போகவேண்டியிருக்கும். ஆகையினால் ஸ்ரீ சஞ்சீவி ரெட்டிக்கு இந்தத் தடவை சௌகரியமில்லாமல் போனாலும் ஸ்ரீ படாஸ்கர் சென்னைக்கு வரும்போது நாம் சொல்லவேண்டிய விவரங்களை முதலில் தெரிந்துகொண்டு, பிறகு அவர்களிடமும் விவரங்களைத் தெரிந்துகொண்டு, கடைசியில் இரண்டுபேரும் கூடிப்பேச ஒரு தேதியை நிர்ணயித்துக்கொள்ளலாம்.

Sri P. CHELLATHURAI : கனம் படாஸ்கர் தலையிட்டு மத்தியஸ்தம் செய்யும் முடிவை ஆந்திரா அல்லது சென்னை அமைச்சர் ஒத்துக்கொள்ள மறுப்பாரேயானால். அப்பொழுது நிலை என்ன ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்,

22nd December 1956]

The Hon. Sri C. SUBRAMANIAM : அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள் என்று சொல்லிவிட்டுப்போகிறார்.

Sri V. R. NAGARAJAN: பண்டைக்காலம் முதற்கொண்டே தமிழ் நாட்டு வட எல்லை திருப்பதி, திருத்தணி வரை இருந்திருக்கிறது. அங்கே தமிழ் ஜனங்களின் சதவிகிதம் அதிகம். ஆகையினால், அதைப்பற்றி ஏதாவது விசாரிப்பதற்கு இடம் உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : எவ்வளவு தூரம் வட எல்லை தள்ளிப்போகும் என்று புள்ளி விவரங்களைக்கொண்டு முடிவு சொல்ல வேண்டியது ஸ்ரீ படாஸ்கர்தான். ஆகையினாலே நாம் ஒன்றும் இப்பொழுது முடிவு சொல்ல முடியாது. நமது வட எல்லை தெற்கே முன்னேறுமா, வடக்கே முன்னேறுமா, திருப்பதியும் சேருமா என்பதெல்லாம் புள்ளி விவரங்களை கணக்கில் வைத்துக்கொண்டு முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

DEPUTY SPEAKER : Short Notice Question No. 11. Sri M. Kalyanasundaram will put his question.

(Sri K. Vinayakam rose to put supplementary questions arising out of the main short notice question No. 10.)

DEPUTY SPEAKER : I have allowed sufficient number of supplementary questions.

Sri K. VINAYAKAM : I am raising a different issue, Sir. In view of the importance of this question that is pending solution for a long time, I request you to allow a half-hour debate at the end of to-day's sitting.

The Hon. Sri C. SUBRAMANIAM : If a half-hour debate will solve the problem, certainly I will be the first person to agree to it. On the other hand, it is likely to create complications.

Sri K. VINAYAKAM : I want your ruling in the matter, Sir.

DEPUTY SPEAKER : We have discussed this question during the budget discussion. Again I have allowed to-day twenty minutes for this simple question. Not only now, but also for the last two years this question has been discussed on the floor of this House on several occasions. Therefore, there is no need for a half-hour debate. This is my ruling.

Sri M. Kalyanasundaram will now put his short notice question No. 11.

Plantation workers

* 11(S.N.) *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the action taken by the Government to implement the award of the Special Tribunal in respect of plantation workers?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The implementation of the award of the Special Industrial Tribunal for Plantations has been stayed by the Supreme Court of India. No action could, therefore, be taken by the Government to implement the award.

[22nd December 1956

SRI V. BALAKRISHNAN : பெரிய நியாய கோர்டிலே ரூபாய்க்கு ஒரு அணு வீதம் கூட்டிக்கொடுக்கவேண்டுமென்று இடைக்கால உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவு அமுலுக்கு கொண்டுவரப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆம். சுப்ரீம் கோர்டு அவ்வாறு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அது நிச்சயமாக அமுலுக்குக் கொண்டுவரப்படும். அதற்கு மந்திரியின் உதவி வேண்டியதில்லை.

SRI P. RAMAMURTHI : சென்னை ராஜ்யத்தில் ஏற்பட்ட ஒரு தொழில் கோர்ட்டு செய்த தீர்ப்புக்கு எதிராக முதலாளிகள் அப்பீல் செய்திருக்கிறார்கள். அப்பீலில் ஸ்டே ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை சர்க்கார் அந்த அப்பீலில் தங்கள் சார்பாக ஒரு வக்கீலை ஆஜராகச் செய்து அதற்கு எதிராக வழக்காட உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு உத்தேசம் ஒன்றுமில்லை.

9-20 a.m. SRI P. RAMAMURTHI : வழக்கு கீழ் கோர்ட்டில் கிட்டதட்ட 4, 5 நாட்கள் நடந்தபிறகு அப்பீலுக்குப்போயிருக்கிறது. சாதாரண தொழிலாளிக்கு தினசரி 10 அணுவாவது சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சுப்ரீம் கோர்டில் வழக்காடி அவர்களுக்கு வசதிக் குறைவு என்பதைத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கு சர்க்கார் ஏதாவது உதவி செய்வதற்கு முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு யோசனை ஒன்றும் சர்க்காரிடம் இல்லை. அதற்கு அவசியம் இருக்கிறதாக சர்க்கார் கருதவில்லை.

SRI N. K. PALANISAMY : தீர்ப்பு வெளியானபிறகு சர்க்கார் ஒரு முக்கூட்டு மகாநாடு நடத்த ஏதாவது யோசனை செய்திருந்ததா ? அப்படியானால் அது என்னவாயிற்று ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : " அவார்ட் " பிரசுரிக்கப்பட்ட பிறகு சர்க்கார் முக்கூட்டு மகாநாடு நடத்துவதற்காக ஒன்றும் முற்படவில்லை.

Recognition of Trade Unions

* 12 (S.N.) *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state where the matter now stands in respect of the proposed legislation for recognition of Trade Unions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A tentative draft Bill on the subject was prepared and circulated to the members of the State Labour Advisory Board for their views. The draft of the Bill is being finalized in the light of the suggestions made by the members of the Board at the meeting held on 10th October 1956.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இந்த மசோதா எப்பொழுது சட்டசபைக்கு கொண்டுவரப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மசோதா தயாராக்கப்பட்டுவிட்டது என்றே சொல்லலாம். இதற்கு மேல் நடவடிக்கைகள் தான் எடுத்துக்கொள்ளவேண்டும். இதற்கும் மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் வேண்டியிருக்கும். இதெல்லாம் பெற்றபிறகுதான் சட்டசபைக்கு கொண்டுவரப்படும்.

22nd December 1956]

SRI M. KALYANASUNDARAM : மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்காக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டதா ? மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் வருவதற்கு முன்னால் அதைப் பிரசுரிக்க எந்தவித தடைகளும் இருக்கமுடியாது. அதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மசோதா இப்பொழுதுதான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இனி மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற வேண்டும். அந்த அங்கீகாரம் பெற்ற பிறகுதான் பிரசுரிப்பது நலமென்று நான் கருதுகிறேன்.

SRI V. BALAKRISHNAN : இதன் அவசியத்தை மந்திரியவர்கள் சற்று சுருக்கமாக கனிசூர்ந்து விளக்குவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போட்டி சங்கங்கள் இருந்தால் அதனால் தொழிலாளர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அம்மாதிரி சங்கங்களுக்கு இடம் கொடுக்காமல் இருப்பதற்காக அங்கீகரிக்கக் கூடிய சங்கம் ஒன்றுதான் இருக்கவேண்டும் என்பதே இந்த மசோதாவின் கருத்து.

Training schools

* 398 *Q*.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a State Selection Committee was constituted by the Government for selecting candidates for admission into Basic training schools;

(*b*) what is the method adopted for selecting candidates for admission into non-Basic training schools in the State;

(*c*) whether the method of selection is different in Government training schools when compared to private training schools; and

(*d*) whether there is any difference in the method of selection between the city training schools and the mufassal training schools in the various districts?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir. A selection committee is constituted for each Government Basic Training School.

(*b*) A Gazette notification calling for applications for admission into Government non-Basic Training Schools is published by the District Educational Officers and Inspectresses. In making selections they follow the instructions issued from time to time from Director of Public Instruction's Office for admission into training school.

(*c*) Yes, Sir.

(*d*) No, Sir.

SRI K. VINAYAKAM : Is it a fact in the constitution of these committees for selection of candidates for admission to basic schools only people belonging to particular political parties have been chosen, namely, from the Congress Party?

[22nd December 1956

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think that is correct.

SRI V. R. NAGARAJAN : May I know why for the Villupuram Basic Training School Selection Committee the local M.L.A. was not selected but on the other hand a member belonging to the opposition was selected?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am glad the hon. Member is bringing to the notice of the hon. Member Sri Vinayakam that as a matter of fact non-Congressmen also have been selected.

SRI K. VINAYAKAM : As far as Chingleput district is concerned, the Committee consists of only the Congress people for selection of candidates for these basic training schools, whereas people, who believe in basic education though belonging to the opposition parties when they volunteer to serve on the committee, are rejected summarily. Is the Hon. Minister aware of these facts?

THE HON. SRI C. SUBRAMANIAM : Certainly I am not aware of the constitution of each committee. But if the hon. Member brings to my notice that legitimate claims have been overlooked, I am prepared to look into them.

SRI V. GOPALA GOUNDER : Sir, may I know the authority which makes the recommendation for the selection of these members?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Director of Public Instruction.

SRI V. BALAKRISHNAN : புதுக்கோட்டை, தஞ்சாவூர் போன்ற இடங்களில் இந்த குழு ஒரு கட்சி சார்பாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி கல்வி மந்திரியவர்களுக்கு புதுக்கோட்டைத் தொகுதி பிரதிநிதி லெட்டர் மூலம் எழுதித் தெரிவித்திருந்தால் அதற்கு மந்திரியவர்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அதுபற்றி எனக்கு கடிதமெழுதியிருந்தார்கள். ஆனால் அவர் கடிதம் எழுதிய போது அந்தக் கமிட்டியைப் போட்டாகி விட்டது. ஆதலால் அதை அடுத்த வருடம் கவனிப்பதாக உத்தேசம்.

SRI S. SWAYAMPRAKASAM : இந்தக் கமிட்டியில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் இருந்தாலும் சரி எனக்கு அக்கறையில்லை. காங்கிரஸ்காரர்களாயிருந்தாலும் சரி, செலக்ஷன் செய்வதில் எதற்கு எவ்வளவு மார்க் போடவேண்டுமென்று தெரிந்து மார்க் போட லாயக்குள்ளவர்களா என்பது சந்தேகமாய் இருக்கிறது. உதாரணமாக, மண்வெட்டும் வேலையிருக்கிறது. மண்வெட்டியை எப்படிப் பிடிப்பது என்று தெரியாது இருக்கும் பெரிய மனிதர்களைப் போட்டால் அந்த செலக்ஷன் செலக்ஷனாய் இருக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது ஒரு hypothetical question. சாதாரண மனிதனுக்கு மண் வெட்டத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் பணக்காரர்களுக்கு மண்வெட்டி பழக்கமிருக்கலாம். ஆகவே, இக்கேள்விக்கு என்னால் பதில் சொல்லமுடியாது.

22nd December 1956]

SRI S. SWAYAMPRAKASAM : சாதாரணமாக மிராசுதாரர்கள் என்பவர்கள் மண்வெட்டியை எந்தக் காலத்திலும் பிடித்திருக்கமாட்டார்கள். ஆகவே, நடுத்தர வகுப்பினரை, அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி, போட்டால் செலக்ஷன் ஒருவாறு நன்றாக இருக்க ஏதுவாகும் என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது தஞ்சாவூர் யோசனையாய் இருக்கிறது. ஆகவே, அதை அலசிப் பார்த்துத்தான் பதில் சொல்லவேண்டும்.

SRI R. S. KRISHNASWAMY NAYUDU : இந்தத் தேர்வுக்குழுவில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர் ஒருவர்தானா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அநேகமாக ஒருவரைத்தான் நியமிக்கப்படுகிறது. ஒரு சில இடங்களில் ஒன்றுக்குமேல் சில சமயம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

SRI A. AYYANAR : பிரத்தியேகமாக நடத்தப்பட்டுவரும் போதனா முறை பள்ளிகளில் சர்க்கார் நியமன மெம்பர் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பள்ளிகளில் அவர்களே இந்தத் தேர்தலை நடத்துகிறார்கள். தவறு ஏதாவது நடந்தாலொழிய குறுக்கிடாமல் இருப்பதே நல்லது.

The Salem Sri Murugan Colour Works, Voraiyur

* 399 Q.—SRI P. RANGASAMY REDDIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Salem Sri Murugan Colour Works, Voraiyur, is in the list of approved dyers for the Co-operative Weaving Societies in Tiruchirappalli;

(b) whether a complaint bearing No. R. 583, dated 14th September 1956, was received by the Registrar of Co-operative Societies, and by the Government, from the Turaiyur Weavers' Co-operative Production and Sales Society, Limited, against the said Colour Works;

(c) the nature of the complaint and the action taken thereon; and

(d) whether a resolution was passed by the Turaiyur Weavers' Co-operative Production and Sales Society, Limited, on 16th April 1956 and the Business Manager of Madras State Weavers' Co-operative Society, Limited, was addressed with the resolution, to remove the said Colour Works from the approved list, and if so, the result thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir. The Salem Sri Murugan Colour Works, Voraiyur, is in the panel of dyers approved by the Madras State Handloom Weavers' Co-operative Society, Limited.

(b) A copy of the complaint of the Turaiyur Weavers' Co-operative Society addressed to the Business Manager of the Madras State Handloom Weavers' Co-operative Society was received by the Government in September 1956 and it was transferred to the

[22nd December 1956

Registrar of Co-operative Societies for necessary action. The reference does not bear No. R. 583, but the Society's registration No. is Rs. 583.

(c) The petition contained the following allegation and request :—

(1) the dyers have not returned the 30 bundles of yarn entrusted to them for dyeing;

(2) the State Society should indicate why it approved the dyers and included them in the panel.

The Society was informed by the Madras State Handloom Weavers' Society that in its letter, dated 9th July 1956 addressed to the Dyers the receipt of 30 bundles in grey state in settlement of the dues had been acknowledged. The Society was also informed that the Dyers were approved at the instance of the Deputy Registrar, Tiruchirappalli (North) and that it was open to Society to choose some other Dyers in the panel.

In view of the action taken by the Business Manager of the Madras State Handloom Weavers' Society, the Registrar did not consider any further action necessary.

(d) Yes, Sir. The State Society has not considered it necessary to remove the dyers concerned from the approved panel.

SRI P. RANGASWAMY REDDIAR : இந்த சேலம் ஸ்ரீ முருகன் கலர் வொர்க்ஸ் என்பது தனிப்பட்ட நபரால் நடத்தக்கூடிய ஸ்தாபனமா அல்லது ரெஜிஸ்டர் கம்பெனியா அல்லது பார்ட்னர்ஸ் பிஸினஸ்ஸா ? அவர்களிடம் கொடுக்கப்பட்ட நூல் கட்டுகளை திருப்பி கொடுக்கப்படவில்லையென்றால் அவர்களிடம் அதன் பேரில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தரவு இட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது தனிப்பட்ட நபர் நடத்தக்கூடிய ஸ்தாபனமா இல்லையா என்பதைப்பற்றி எனக்கு இப்போது தகவல் இல்லை. தனிப்பட்ட நபர் நடத்தும் ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். இது ஸ்டேட் லெவல் ஸ்டாம் கமிட்டியில் பரிசிலனையில் இருக்கிறது. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நூல் திருப்பிக்கொடுக்கப்படவில்லையானால் அவர்களின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும். இது ஏதோ அவர்களுக்கு பாக்கி இருந்ததற்காக வகை வைத்ததாக தெரிகிறது.

SRI M. KALYANASUNDARAM : தனிப்பட்ட சாயப்பட்டறைகளுக்கு ஏதாவது சட்டங்கள் உண்டா ? இல்லையென்றால் ஏதாவது ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு பிரத்யேகமான சட்டங்கள் இருக்கின்றன.

SRI P. RANGASWAMY REDDIAR : கனம் அங்கத்தினரின் கேள்வி எனக்கு புரியவில்லை. நான் கேட்க விரும்புவது சேலம் ஸ்ரீ முருகன் கலர் வொர்க்ஸ் கம்பெனியில் கொடுக்கப்படும் வேலைகள் ரொம்பவும் தாமதப்பட்டு வருவதாகவும், அங்கு சாயம் தொளிப்பதற்கு சரியானபடி தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்கப்படுவதில்லை என்று தகராறு இருந்து வருவதாகவும், இந்த கம்பெனியை டெப்யூட்டி ரெஜிஸ்ட்ரார் அதிகமாக ஆதரித்து வருவதாகவும் சொல்லப்படுகிறது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

22nd December 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதை அதிகமாக ஆதரிப்பதற்கு ஒரு காரணமும் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : இந்த கம்பெனிகளில் செய்யும் வேலைகளுக்கு கொடுக்கப்படும் பில் தொகையைவிட குறைவான தொகை வாங்கி வருவதும் இதனால் சில தகராறுகள் இருந்து வருவதும் அரசாங்கத்திற்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது எனக்கு நேரடியாக தெரியாது. இப்பொழுது கனம் எதிர்கட்சி உப தலைவர் சொல்லுவதிலிருந்துதான் இது புலப்படுகிறது.

Recreation facilities for nurses in the nurses quarters

* 400 Q.—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state— 9-30 a.m.

(a) the facilities provided for nurses for recreation in the nurses quarters—

(i) in the Madras City; and

(ii) in the district headquarters;

(b) the cost of amenities provided for the above purpose; and

(c) whether the Government propose to provide rest-houses for nurses, health visitors and midwives?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) A statement * is placed on the table of the House.

(c) No, Sir.

SRI V. BALAKRISHNAN : ஸார், ஐந்து மணிக்கு அப்புறம் ஈடுபடுகிற காரியங்களும் இந்த ரிக்ரியேஷனில் சேர்க்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினருடைய அனுபவம் எப்படியென்று எனக்கு தெரியாது. நான் அப்படிதான் என்று நினைக்கிறேன்.

Amendment of the Madras Cultivating Tenants' Protection Act, 1955

* 401 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to amend the Madras Cultivating Tenants' Protection Act, 1955, as amended, to rectify the defects, if any, noticed while implementing it?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI N. K. PALANISAMY : நடைமுறையில் இதில் பல கஷ்டங்களும் இருக்கிறது. ஏனென்றால் இதற்கு அதிகாரிகள் ஆர். டி. ஒ.க்களிடமிருந்து ரிட்டன் அபிடவிட் வேண்டுமென்று கேட்கிறார்கள். இதற்கு பலவிதமான

* Printed as Appendix page 469 infra.

[22nd December 1956

கஷ்டங்களும் இருந்து கொண்டிருக்கிறது. இது தவிர பெரிய மிராசுதார்கள் 20 வருஷம் 30 வருஷம் என்று இருக்கக்கூடியவர்களையும் பூமியிலிருந்து வெளியேற்றி விடுகிறார்கள். ஆகவே உடனடியாக இப்போது கிராப்ஸ் ரிப்போர்ட் எடுப்பது போன்று குத்தகைகாரர்களும் எவ்வளவு காலமாக இருக்கிறார்கள் என்பதைப்பற்றி ரிப்போர்ட் எடுக்க சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த குறைபாடுகள் போக போக நீங்கிவிடும். கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கென்று ஒரு தனி மசோதா கொண்டு வருவதற்கு நோட்டீஸ் கொடுத்திருப்பதாகவும் தெரிகிறது. ஆதலால் இந்த கஷ்டங்கள் எல்லாம் சீக்கிரமே தீர்ந்து விடும்.

Inclusion of English in the curriculum of studies in schools and Colleges

* 402 Q.—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Finance be pleased to state whether English is proposed to be included in the curriculum of studies in the secondary schools, higher elementary schools and Colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM: Presumably the hon. Member desires to have information regarding the position of English in the educational curriculum after the contemplated reforms. The whole question is under consideration.

SRI N. K. PALANISAMY: ரீஜனல் பாஷையாக ஹிந்தி வரப்போவதாக சொல்லப்படுகிறது. அப்படியிருக்கும் போது ஏன் ஆங்கிலத்தை கட்டாய பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதை லெஜிஸ்லேட்டிவ் கமிட்டியும் ஆராய்ந்து வருகிறது. அதைப்பற்றி ஒரு ரிப்போர்ட் வெளியாகும். எப்படியானாலும் ஒரு அன்னிய பாஷையை கட்டாயப் பாடமாக வைக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் ஆங்கிலத்தை வைக்கலாம் என்று அதை ஏற்படுத்தியிருக்கிறது.

Increase of wages of workmen

* 403 Q.—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether a memorandum was submitted to the Government by the Madras City Trade Union Council in the month of September 1956 regarding the increase of the workers' wages at least by 25 per cent merger of dearness allowance with basic pay and increase of wages to the electricity employees under the Government; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) The points raised in the memorandum were examined by the Government and it was decided that no action was called for on the requests of the City Trade Union Council.

22nd December 1956]

SRI N. K. PALANISAMY: ஸர், இப்போது விலைவாசிகள் எல்லாம் அதிகமாக மேல் போய் கொண்டிருக்கிறது. வாழ்க்கைப்புள்ளியும் அதிகமாக ஏறிக்கொண்டு போகிறது. ஆனால் இந்த தொழிலாளர்களுக்கு பழைய மாதிரியே சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே அதை மாற்றி கூடுதலாக சம்பளம் கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறேன். அது மாத்திரமல்ல இன்றைக்கு இதிலுள்ள முதலாளிகள் அதிகமாக லாபமும் பெற்று வரும்போது ஏன் கொடுக்கக்கூடாது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்தப் பிரச்னைகள் எல்லாம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

Appointment of the retrenched temporary field staff of the Survey department

* 404 Q.—SRI V. BALAKRISHNAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that qualified persons who were retrenched from the clerical service of the Survey department have been ordered to be absorbed in the regular clerical service of the Revenue department from the date of their appointment in the Survey and Settlement department;

(b) if so, the number so absorbed; and

(c) why the same concession has been denied to retrenched qualified persons in the field service of the Survey and Settlement department?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) It is a fact that clerks allotted by the Madras Public Service Commission to the temporary establishment of the Survey department have been ordered to be allotted to the Revenue department. The clerks will be allowed seniority in the Revenue department from the date of the appointments in the Survey department. These clerks are relieved from the Survey department as and when retrenchment is effected.

(b) Nine clerks have so far been absorbed in the North Arcot district. The Board of Revenue is taking action to absorb the remaining clerks.

(c) The concession granted to clerks cannot be allowed to the persons in the field service for the following reasons: Most of the retrenched men in the field service are unqualified both departmentally and educationally, and they are not candidates selected by the Madras Public Service Commission on the results of competitive examination like the clerks in the Survey department. The Surveyors are required in the Revenue Department only to the limited extent required for maintenance and mobile staff items of work in the districts which are now being attended to by the regular staff of the Survey and Land Records Range concerned.

SRI V. BALAKRISHNAN: ஸர், ஃபீல்ட் பிரிவில் இருக்கும் சிலரை தகுதி பெற்றவர்களாக கருதி அட்மினிஸ்ட்ரேட்டிவ் பிரிவில் தகுதி பெற்ற

[22nd December 1956

வர்களாக கருதி நியமிக்கப்படுகிறது. அது மாதிரி அந்த பிரிவில் இருக்கக் கூடியவர்கள் இந்த பிரிவில் வருவதற்கு எந்த எந்த தகுதி பெற்றிருக்க வேண்டுமென்ற ஏதாவது ஏற்பாடு உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பீல்ட் பிரிவில் உள்ளவர்களை மாற்றுவதற்கும் இங்கிருந்து அங்கு மாற்றுவதற்கும் சில தகுதிகள் வைக்கப்பட்டிருக்கிறது. சிலருக்கு தகுதியிருப்பதாக இருந்தால் அவர்களை மாற்றுவதற்கு ஆலோசிக்கப்படும்.

SRI K. V. RAMASWAMI : ஸர், பீல்ட சர்வீஸில் இருப்பவர்கள் கிளார்க் போஸ்டுக்கு தகுதி பெற்றிருந்தாலும், அவர்களை கிளார்க்குகளாக நியமிக்காமல், பிரித்து விடுவதற்காக நடக்கும் முயற்சியை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, in the matter of providing employment, the Government generally try to give preference to those who have been ousted.

Minimum wages to workers in local bodies

1-40 p.m. * 405 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any Advisory Committee was constituted in the first half of October 1956 to go into the question of minimum wages to workers employed in local bodies; and

(b) if so, whether a copy of the terms of reference to this Committee will be placed on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The terms of reference are as contained in section 6 of the Minimum Wages Act (Central Act XI of 1948), viz., " to inquire in to the conditions prevailing in the concerned employment and to advise the Government in revising the minimum wages fixed for that employment ". Hence there is no need to place a separate paper on the table of the House.

SRI S. C. C. ANTHONY PILLAI : Is the Hon. Minister aware that the Corporation of Madras passed a resolution agreeing to increase the wages of its servants and, if so, will the Government consider the feasibility of sanctioning that proposal to increase the wages as an interim measure until the final recommendations of the Advisory Committee are available?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would suggest that a separate question might be put.

Revival of L.I.M. Course in the Indigenous Medical College, Madras

* 406 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Chamber of District Boards, Madras, has made any representation to the Government during 1956 for the opening of L.I.M. Course in the Indigenous Medical College, Madras; and

(b) if so, the steps taken by the Government thereon?

22nd December 1956]

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) The suggestion of the Chamber of District Boards to revive the L.I.M. Course was not accepted.

SRI A. M. RATHNASWAMY : I understand that the Central Government have been insisting upon the local Government to institute a short term of medical course inasmuch as the medical facilities available not only in the urban parts but particularly in the rural areas are too meagre. May I know what is the difficulty the Government find in reviving the L.I.M. and L.M.P. courses?

THE HON. SRI M. A. MANICKAVELU : I am not aware of what the Central Government have been insisting on the local Government; but I may inform the hon. Member that as regards reviving the L.I.M. Course, it is considered to be a " sub-standard " course and that is why it has been recommended to have the G.C.I.M. course.

SRI N. K. PALANISAMY : இப்பொழுது லோகல் போர்ட் டிஸ்பென்சரிகளில் போதுமான டாக்டர்கள் கிடைப்பது இல்லை. ஜி.சி.எம், எல்.ஐ.எம். ஓரளவுக்கு எல்.எம்.பி. மாதிரி இருக்கிறபடியால் அவைகளை மறுபடியும் திறக்கவேண்டும் என்று கேட்டதற்கு ஏன் அதை திறக்க மாட்டேன் என்று சொன்னார்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் நினைப்பது போல நிபுணர்கள் அம்மாதிரி நினைக்கவில்லையே என்பதுதான் அதற்குக் காரணம்.

SRI K. VINAYAKAM : The idea behind the question is that poorer sections of the people are not able to take up the G.C.I.M. and M.B.B.S. courses which are very costly, and that therefore a shorter term of course of three years may be started and that rudimentary principles as regards medicine and surgery may be taught to students in that course. Will the Government, therefore, consider the advisability of instituting a shorter course of that type so as to facilitate poorer sections of the people to take to that course?

THE HON. SRI M. A. MANICKAVELU : I think the hon. Member will be aware of the Darvey Committee's report on indigenous system of medicine. That matter came up at the Health Ministers' Conference at Ranchi. The report will be studied and the opinion of the State Governments will be communicated to the Central Government. Then they will take proper steps in the matter.

SRI S. SWAYAMPRAKASAM : நிபுணர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்ற காரணத்தால் அந்தக் கோர்ஸ் வேண்டாம் என்று சொல்லி விட்டதாக கனம் மந்திரி சொன்னார். நிபுணர்கள் தங்கள் தொழில் பெருமையடைய வேண்டும் என்ற தன்மையிலும், தங்களுடைய தொழில் உச்சஸ்தானத்தை அடையவேண்டும் என்ற மனப்பான்மையிலும் அப்படிச் சொல்லியிருக்கலாம். அங்குள்ள நிலைமையைப் பார்த்தால் கிராமங்களில் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லாத காரணத்தால் அங்கே சாதாரண

டாக்டர்களையாவது போடலாம் என்ற மனப்பான்மை அங்கு இருக்கிற காரணத்தால் இந்த விஷயத்தில் நிபுணர்கள் சொல்வதை கேட்காமல் நமது நாட்டின் நன்மையை உத்தேசித்து அந்தத் தன்மையில் அந்த கோர்ஸை ஆரம்பிக்க முற்படுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நிபுணர்கள் அம்மாதிரியாகச் சொன்னார்கள் என்று தான் சொன்னேன். தவிர அவர்கள் சொல்வதை அப்பட்டமாக அப்படியே எடுத்துக்கொள்வது இல்லை. இதைப்பற்றி கமிட்டியின் ரிபோர்ட் இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அதன் பிறகு உருப்படியான வேலை செய்யலாம் என்று தான் நினைக்கிறேன்.

SRI V. BALAKRISHNAN : இந்தக் குறிப்பு உயிரைப் பொருத்த விஷயமானதால் குறுகிய கால படிப்பு ஏற்படுத்தி அரைகுறையாக படித்தவர்களுக்கு பட்டத்தைக் கொடுத்து மக்களை ஆபத்துக்குள்ளாக்காமல் கனம் மந்திரி அவர்கள் பார்த்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பரவாயில்லை. கனம் அங்கத்தினர் தமாஷாவான விஷயங்களைப்பற்றி மட்டும் பேசுவார் என்று பார்த்தால் ரொம்பவும் முக்கியமான விஷயங்களிலும் அவர் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறாரே !

SRI S. C. C. ANTHONY PILLAI : The reports of Delegations that have visited China are being circulated to the Members of this House. We come to understand from such reports that in China the Government have introduced a short-term course to meet this problem of the dearth of adequate number of medical practitioners. Will the Government take a leaf out of the practice obtaining in China and introduce a short-term course in Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : The practice obtaining in China also will be studied.

SRI A. M. RATHNASWAMY : Sir, our practical experience shows that in the rural parts quacks attend to even complicated cases. Do the Government, therefore, not imagine that qualified medical men who may have undergone a short-term medical course like the L.I.M., L.M.P., are preferable to quacks?

SRI S. VADIVELU : Sir, on a point of order . . .

DEPUTY SPEAKER : Let the Hon. Minister finish his reply and then the hon. Member can raise his point of order.

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, persons with some knowledge to deal with such cases, I admit, are better than quacks.

SRI S. VADIVELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்கள் அனைவரும் தமிழிலேயே பேசுகிறார்கள். மந்திரிகளும் தமிழிலேயே பேசுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் கனம் அங்கத்தினர் (ஏ. எம். ரத்னசாமி) அவர்கள ஆங்கிலத்தில் பேசுகிறாரே அவருக்குத் தமிழ் தெரியாதா அல்லது அவருக்கு தமிழ் பேசக்கூடாது என்ற எண்ணமா?

DEPUTY SPEAKER : இது ஒழுங்குப் பிரச்னை அல்ல. அது அவருடைய அபிப்பிராயம்.

Rural banks

* 407 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government have received a copy of the resolution passed at the Tiruchirappalli District Vivasayigal Sangam Conference in the month of May 1956 requesting the Government to open rural banks in every firka; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

SRI V. BALAKRISHNAN : கிராமப்புறங்களில் பாங்குகள் ஏற்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆர்வம் இருந்தும் அங்கே இருக்கக்கூடிய மக்களுடைய உதவி இல்லாததால் அந்த விருப்பம் நிறைவேறவில்லை என்பது கனம் மந்திரிக்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் மக்களுக்கு ஆர்வம் இல்லை என்பதை தெரிந்துகொள்ள ஆராய்ச்சி செய்ய முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை. திருச்சி ஜில்லாவில் இப்பொழுது இரண்டு கூட்டுறவு பாங்குகள் இருக்கின்றன. அவைகள் நங்கவரம், துறையூர் முதலிய இடங்களில் இருக்கின்றன. மேற்கொண்டு வரும் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 300 கிராம விவசாய பாங்குகள் அமைப்பது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. 1956–57-ல் திருச்சி ஜில்லாவில் ஏழு விவசாய கிராம பாங்குகள் அமைப்பது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் அதை நிறைவேற்றப்படும். அவைகள் பஞ்சன்தேவி, கோவிந்தபுரம், பெரம்பலூர், எல். என். சமுத்திரம், குணமங்கலம், சூரக்காடு, ஆலங்குடி முதலிய இடங்களில் அந்த பாங்குகளை அமைக்கப்படும்.

SRI N. K. PALANISAMY : மாகாணத்தில் இருக்கக்கூடிய எல்லா பிர்க்காக்களிலும் கூட்டுறவு ஸ்டோர்கள், மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் இருக்கின்றன. அவைகளில் ஏராளமான மூலதனம் இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு இம்மாதிரியான பாங்குகளை ஏன் அமைக்கக் கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூட்டுறவு பாங்குகளை எப்படி பாங்குகளாக மாற்றுவது என்பது புரியவில்லை. கனம் அங்கத்தினர் அதற்கு திட்டம் தயாரித்துக் கொடுத்தால் அதை பரிசீலனை செய்யலாம்.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT BY THE DEPUTY SPEAKER *RE*

(1) GUILLOTINE OF DEMANDS.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the guillotine will be applied at 1-30 p.m. to-day to such of those Demands for Advance Grants which might not have been considered by the House till then.

[22nd December 1956

III.—VOTING ON DEMANDS FOR ADVANCE GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

(1) DEMAND XXII—HARIJAN UPLIFT—*cont.*

* **SRI A. GOVINDASWAMI NAYAGAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பிரேரித்திருக்கக் கூடிய ஹரிஜன மானியத்தின் மேல் பேசும்போது ஒரு சில விஷயங்களை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த மானியத்திற்கே " ஹரிஜன் டிமாண்டு " என்று போடப்பட்டு இருக்கிறது. இந்த ஹரிஜன் என்ற பதமே நல்ல எண்ணத்தோடு தாழ்த்தப்பட்ட மக்களுகாக, ஆதித்திராவிட மக்களுக்காக மகாத்மா காந்தியடிகளினால் கொடுக்கப்பட்டது. ஆனால் உத்தியோகங்களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளும்போது " ஹரிஜன் " என்று போட்டிருந்தாலும் கூட " ஆதித்திராவிடர் " என்பதற்கு சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு வரவேண்டும் என்பதாகச் சொல்கிறார்கள். எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜில் பதிவு செய்து கொள்வதற்கே அவர்கள் ஆதித்திராவிடர் என்பதற்கு " ஹரிஜன் " என பள்ளி சர்ட்டிபிகேட்டில் போட்டிருந்தாலும், தனியாக ஒரு சர்டிபிகேட் வாங்கி வரச்சொல்கிறார்கள். ஆகவே " ஹரிஜன் " என்ற பதத்தையே அடியோடு நீக்கிவிட்டு ஆதித்திராவிடர் என்ற பதத்தையே உபயோகிக்கும்படியாகச் செய்யலாம். அல்லது ஹரிஜன் என்று போட்டிருந்தால் போதும். ஆதித்திராவிடர் என்பதற்கான சர்டிபிகேட் வாங்கிவரவேண்டிய அவசியம் இல்லை என்பதாகவாவது உடனே உத்திரவு போட வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மதம் மாறிய ஆதித்திராவிடர்களுக்கும் சலுகை கொடுக்கப்படும் என்பதாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமது பிரசங்கத்தில் அறிவித்தார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் எந்தக் காலத்திலிருந்து கொடுக்கப்படும் என்ற வரையறையைச்சொல்லவில்லை. அவர் தான் அறிவித்திருப்பதை திட்டவட்டமாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதம் மாறிய எல்லா ஆதித்திராவிடர்களுக்கும் இந்தச் சலுகை கொடுக்கப்படவேண்டும். ஆதித்திராவிடர்கள் கிருஸ்துவ மதத்திற்கு மட்டும் மாறவில்லை. இந்த சமூகத்தின் அநீதி பொறுக்க மாட்டாமல் புத்த மதத்திற்கும் மாறியுள்ள ஆதித்திராவிடர்களுக்கும் இந்தச்சலுகை வழங்கப்பட வேண்டுமென்பதற்காக இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். காலஞ்சென்ற அம்பேத்கார் முதற்கொண்டு பல பேர் புத்த மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே தான் புத்த மதத்தில் சேர்ந்துள்ள ஆதித்திராவிடர்களுக்கும், இம்மாதிரியாக மதம் மாறியுள்ள பிற்பட்ட இனத்தவர்களுக்கும் இந்தச் சலுகை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் பல பேர் கிருஸ்துவர்களாகவும், பிற்பட்ட இனத்தவர்களாகவும் மாறியிருக்கிறார்கள். அவர்களும் இந்தச் சலுகையை அநுபவிக்க வேண்டியது அத்தியாவசியமானது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் விக்கிரவாண்டி, காலியம்பாளையம், தொந்திரண்டிபாளையம் சொர்ணூர் வளவனூர் முதலிய ஊர்களிலுள்ள சேரிகளுக்கு மனைக்கட்டு ஒதுக்கவேண்டுமென்று இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாக விண்ணப்பம் செய்துகொண்டும் இதுவரையில் மனைக்கட்டுகள் ஒதுக்கப்படவில்லை. ஒரு குடிசைக்குள் சுமார் பத்து பேர்களுக்கு மேல் வாழ வேண்டிய நிலைமை நீடிக்கிறது. மிகவும் நெருக்கடியான இடத்தில் அதிகமான பேர்கள் இருப்பதனால் சுகாதாரக் குறைவு ஏற்படுகிறது. அதனால் பல விதமான வியாதிகளுக்கு உள்ளாகிறார்கள். குறிப்பாக மழை காலத்தில் அவர்கள் அடைகின்ற தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல. ஆகவே நான் முன்பு குறிப்பிட்ட கிராமங்களில் வசிக்கும் சேரிவாசிகளுக்கு எல்லாம் மனைக்கட்டுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை எல்லாம் துரிதமாகச் செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஆண்டுக்கு முன்பு மந்திரி ஸ்ரீ பரமேஸ்வரன் அவர்கள் ஒரு கடிதம் எழுதி இருந்தார். எந்தச்

22nd December 1956] [Sri A. Govindaswami Nayagar]

சேரிக்கு குடி தண்ணீர் வசதி இல்லை என்பதாகத் தகவல் கொடுத்தாலும் அதைப்பற்றி விசாரித்து உடனடியாக குடிதண்ணீர் வசதிக்கான ஏற்பாட்டைச் செய்வதாகச் சொல்லியிருந்தார்கள். அதைப் பின்பற்றி 500 பேர்களுக்கு மேல் ஜனத்தொகை கொண்ட முப்பது சேரிகளில் எந்த எந்தச் சேரிகளுக்கு உடனடியாகக் கிணறு வெட்ட வேண்டுமென்பதாக எழுதி அனுப்பினேம். அந்த கிராமங்களில் எல்லாம் இன்று வரையில் இன்னமும் கிணறுகள் வெட்டாததோடு மட்டுமல்ல. முன்பே வெட்டப்பட்டு பழுதடைந்து கிடக்கும் கிணறுகளைக்கூட பழுது பார்க்க அவர்கள் இன்னமும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே, கனம் மந்திரி அவர்கள் ஜில்லா கலெக்டருக்கும், வெல்பேர் அதிகாரிகளுக்கும் உத்திரவு போட்டு அந்தச் சேரி வாசிகளுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக விக்கிரவாண்டித் தொகுதியில் கப்பியாம்புலியூர் என்ற கிராமத்தில் இரண்டு சேரிகள் இருக்கின்றன. அந்த இரண்டு சேரிகளிலும் கிணறுகள் கிடையாது. 500-க்கு மேல் ஜனத்தொகை உள்ள சேரிகள் அவை. அவற்றுக்கும் உடனே குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கல்பட்டு என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அக் கிராமத்திலுள்ள பிரச்னைகள் பற்றி அடிக்கடி சட்ட சபையிலும் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அங்கே ஆதித்திராவிடர்கள் அதிகம். அவர்கள் புறம்போக்கு நிலங்களை பயிரிட்டு உணவு உற்பத்தியில் ஈடுபட்டு வந்தார்கள். அவர்களை அங்கே இருக்கக் கூடிய முற்போக்கு சமூகத்தினர் நிலங்களிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். அவர்களுக்கு வேறிடத்தில் அறுபது ஏக்கரா நிலம் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இதுவரையில் ஏழு எட்டு ஏக்கரா தான் வழங்கப்பட்டு இருக்கின்றன. பல பேர்களுக்கு நிலம் கிடைக்கவில்லை. அவர்களுக்கும் நிலம் வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆதித்திராவிடர்களுக்கும், பிற்பட்ட இனத்தவர்களுக்கும் பல சலுகைகள் வழங்கப்படுவதாக சொல்லப்படுகிறதே தவிர குறிப்பிட்ட அளவுக்குக்கூட அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. முற்போக்கு இனத்தவர்கள் அவர்களுக்கு எந்த எந்த வகைகளில் எல்லாம் இடையூறுகளை விளைவிக்க முடியுமோ அந்த அந்த வகைகளில் எல்லாம் விளைவிக்கிறார்கள். உத்தியோக விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அப்படித்தான். கல்லூரி சம்பந்தமான விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அப்படித்தான். மெடிகல் கல்லூரியை எடுத்துக் கொண்டாலும், என்ஜினியரிங் கல்லூரியை எடுத்துக்கொண்டாலும் ஆதித்திராவிடர்கள், பிற்பட்ட இனத்தவர்கள் ஆகியோருக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய சலுகை கூடக் கொடுப்பது கிடையாது. சென்னையில் இருக்கிறவர்கள் ஏதோ எப்படியோ உள்ளே புகுந்துவிட முடிகிறது. மற்றப்படி கிராமப்புறங்களில் உள்ளவர்கள் இன்னமும் அப்படியேதான் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மெடிகல் காலேஜ் மாணவர்களைப் பொறுக்கி எடுப்பதில் டாக்டர்கள் இருப்பதனால் டாக்டர்களுடைய குழந்தைகளே பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதைப் பரிசீலனை செய்து பார்த்தால் நன்றாகத் தெரியும். இவற்றை எல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு ஆதித்திராவிடர், பிற்பட்ட இனத்தவர் ஆகியோர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளை நியாயமாகக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் பேச ஆரம்பித்த போது கனம் பரமேஸ்வரன் அவர்கள் சபையில் இல்லை. ஆகவே நான் முன்பு சொன்ன விஷயங்களை மாத்திரம் சுருக்கமாக மறுபடியும் எடுத்துச் சொல்லிவிட்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

" ஹரிஜன் " என்ற பதத்தை சர்ட்டிபிகேட்டில் எழுதியிருந்தால் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜில் ரிஜிஸ்டர் செய்வதற்கு முன் " ஆதித்திராவிடர் "

[Sri A. Govindaswami Nayagar] [22nd December 1956

என்பதற்காக சர்டிபிகேட் வாங்கி வரும்படியாகச் சொல்கிறார்கள். ஆகவே இனிமேல் ஹரிஜன் என்ற பதமே உபயோகிக்கப்படக் கூடாது, ஆதித்திராவிடர் என்பதாகத்தான் பள்ளிகளிலும் கூட எழுதப்பட வேண்டும் என்பதாகச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் ஹரிஜன் எனப் போட்டிருந்தால் போதும், ஆதித்திராவிடர் என்பதற்கு சர்டிபிகேட் வாங்கி வரவேண்டிய அவசியம் இல்லை என்பதாகவாவது உத்திரவு போடவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் உத்தியோகத்திற்கு விளம்பரம் செய்யும் போதும்கூட அவர்கள் "ஷெட்யூல் காஸ்ட், ஷெட்யூல் டிரைப்ஸ்" என்பதாகத்தான் போடுகிறார்கள். ஆகவே ஹரிஜன் என்ற பதத்தை நீக்கிவிட்டு ஆதித்திராவிடர்கள் என்று போட்டால் போதுமானது என்று சொன்னால் போதும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

9-5 a.m. **Sri K. T. RAJU** : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பிரேரித்திருக்கும் ஹரிஜன மானியத்திற்கு நான் முக்கியமாக வெட்டுப் பிரேரணை பிரேரித்திருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அதை நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது,

"(1) ஈரோடு தாலுக்காவில் பிராமண பெரிய அக்கிரகாரத்தில் இருக்கும் 400-க்கு மேற்பட்ட ஹரிஜன தோல் பதனிடும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு சென்ற நான்கு வருடமாக குடியிருப்புக்கு இடம் வாங்க நடவடிக்கை எடுக்காததைப்பற்றி விவாதிக்க ;

(2) கீழ்பவானி ஆயக்கட்டு பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான கிராமங்களில் ஹரிஜன சேரிகளில் நீர்கசிவால் பாதிக்கப்பட்டு குடியிருக்க லாயக்கற்று இருக்கும் சேரிகளுக்கு வேறு இடங்களில் உடனடியாக குடியிருப்பு வசதி செய்து கொடுக்காததைப்பற்றி விவாதிக்க ;"

என்பதற்காகத்தான் நான் வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறேன்.

இன்றையதினம் குறிப்பாக கீழ்பவானி ஆயக்கட்டு பிரதேசத்திலுள்ள சேரிகளில் வாழும் ஹரிஜனங்கள் படுகின்ற தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல. அந்தச் சேரிகளில் உள்ள பல வீடுகளில் அரை அடித் தண்ணீர் தேங்கி இருக்கின்றது. அவர்கள் தங்கள் குழந்தை குட்டிகளை எல்லாம் மேலே விறகு அடுக்கி வைக்கும் தட்டில் தூக்கி உட்கார வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு சர்க்கார் உடனடியாக வீடுகள் கட்டித்தராவிட்டாலும் கூட அவர்களாகவே தங்கள் சொந்தச் செலவில் குடிசைகளைக் கட்டிக் கொண்டு வாழ்வதற்கு உதவியாக மேட்டுப்பாங்கான இடங்களில் அடிமனையாவது வாங்கித் தரவேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்கு வேண்டிய நடவடிக்கையை கனம் அமைச்சர் அவர்கள் துரிதமாக எடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் ஹரிஜன மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டங்களைப் போக்க முடியாது. உதாரணமாக ஈரோடு தாலுக்காவில் உள்ள பிராமண பெரிய அக்கிரகாரத்தில் தோல் பதனிடும் தொழிலாளர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். நானூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன. அந்த ஏழை ஹரிஜன மக்களும் இன்றைக்குக் குடியிருப்பதற்கு வசதி இல்லாமல் திண்டாடுகிறார்கள். சென்ற நான்கு வருஷங்களாகவே அவர்களது குடியிருப்புக்கு வேண்டிய வசதிகளை சர்க்கார் செய்து கொடுக்காமல் இருந்து வருகிறது. இது சம்பந்தமாக கலெக்டர் அவர்களிடத்திலும், ஆர்.டி.ஓ. விடத்திலும் பல முறை விண்ணப்பங்கள் செய்து கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே அவர்களுக்கும் உடனடியாக மனைக்கட்டுக்கள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதாகக் கேட்டுக்
10-0 a.m. கொள்கிறேன். இல்லாவிட்டால் அந்தப் பிரதேசங்களில் அவர்கள் வாழ முடியாது. அவர்கள் தோண்டியிருக்கும் கிணறுகளில் நீர்க் கசிவினால் பெரிய அளவு கெட்டுப் போய், குடித் தண்ணீருக்கு உபயோகப்படாமல் இருக்கிறது. மற்ற இடங்களில் பொதுவாக அனுஷ்டிக்கும் கொள்கை

22nd December 1956] [Sri K. T. Raju]

ஒருபுறம் இருக்க, இம்மாதிரி இடங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு பிரத்யேகமான சூழ்நிலையை நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவசரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அமைச்சரவர்களையும், ஜில்லா கலெக்டர் அவர்களையும் நான் நேரில் பார்த்துப் பேசும்போது, அவர்கள் நல்ல முறையில் செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு போகிறார்கள். அதற்கான கடிதங்களும் எழுதுகிறார்கள். ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது, காரியம் கைகூடுவதாக இல்லை. வருஷக்கணக்கிலே அம்மாதிரியான நிலையிலேயே இருக்கிறது என்று அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். ஒவ்வொரு வருஷமும் இதைக் கவனிப்பதாக அமைச்சரவர்கள் வாக்குறுதி அளிக்கிறார். ஆனால் அந்த வாக்குறுதியை நடைமுறையில் நிறைவேற்ற வேண்டாமா ? ஆகவே, நான் முடிவாக அமைச்சரவர்களைக் கேட்பது என்னவென்றால், வீட்டுக்கு ரூ. 100 கொடுக்காவிட்டால் போகட்டும், வேறு இடங்களில் குடிசை போட்டுக்கொள்வதற்கு இடம் வாங்கிக் கொடுத்தால் அங்கே அவர்கள் குடிசை போட்டுக் கொள்வார்கள். அவர்கள் இடம் வாங்கிக்கொள்வதற்கு நடவடிக்கை உடனே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri A. VELU** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யம் சம்பந்தமாக தோழர் வடிவேலு அவர்கள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஹரிஜன நல உரிமையை பாதுகாப்பதற்காக **Director of Harijan Welfare** என்ற அதிகாரி இருக்கிறார். ஹரிஜன நல இலாகா டைரக்டர் ஹரிஜனங்களுக்கு வேண்டிய நிலம், மனைக்கட்டுகள் முதலியவைகளை ஆர்ஜிதம் செய்துக் கொடுக்க முயற்சி எடுத்துக் கொள்கிறார். இதற்காக அவர் பல ஊர்களுக்குச் சென்று பார்வையிட்டு நிலமோ, மனையோ கொடுக்கவேண்டுமென்று அவருக்கு மேலே இருக்கும் சர்க்கார் இலாக்கா காரியதரிசிக்கு எழுதவேண்டி ஏற்படுவதாலும், அங்கிருந்து உத்தரவு வர காலம் தாமதம் ஏற்படுவதாலும் ஹரிஜன நல இலாகா டைரக்டர் நினைக்கிறபடி மனைகளையோ, நிலங்களையோ, ஹரிஜனங்களுக்கு சரியான காலத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே ஹரிஜன நில ஆர்ஜித விஷயமாக ஹரிஜன நல இலாகா டைரக்டரே பைனல் அதாரடி ஆக இருந்து அவருக்கே சர்க்காருடைய காரியதரிசியின் அதிகாரமும் இருக்கவும் (முடிவாக உத்தரவு போடும்) அதிகாரியாக இருக்கவும் செய்தால் ஹரிஜனங்களுக்கு வேண்டிய நிலம்-மனைக்கட்டுகளை ஆர்ஜிதம் செய்துகொள்வதற்கு நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஜில்லா போர்டு, முனிஸிபாலிட்டி, பஞ்சாயத்து போர்டு ஆகிய ஸ்தாபனங்களில் ஹரிஜனங்களுக்கு இடம் '**Reserve**' செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ரிசர்வேஷன்களின் தொகை விகிதாசாரப்படி இல்லை என்பது வருந்தத்தக்கதாயிருக்கிறது. அந்தக் குறைபாடுகளைக் கவனித்து, ஹரிஜன விகிதாசாரப்படி அவர்களுக்கும் நியமனங்கள் கிடைக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன். ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்வதற்குப் பணம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பணம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அந்தப் பணம் சரியான முறையில் காலாகாலத்தில் அவர்களுக்கு கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகையால் மான்யமாகவும், கடனாகவும் தனிப்பட்ட நபர்களுக்கு வீடு கட்டவும் குடிசைத்தொழில் செய்யவும் சர்க்கார் ஏற்பாடு செய்வது நலமாக இருக்கும். ஹரிஜனங்களுக்கு உத்யோக விஷயங்களில் மத்திய சர்க்காரிலே ரிசர்வ் செய்து வைத்திருக்கிறார்கள். அதை அந்த உத்யோகங்களை ரிசர்வ் செய்திருக்கிற அளவு அவர்கள் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், ராஜ்ய சர்க்காரிலே அந்தவிதமாக உத்யோகங்கள் கொடுக்கவேண்டிய காரியத்தில் நிறைவேற்றப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது. இந்த விஷயத்தைச் சர்க்கார் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹரிஜன நல பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் பல ஆண்டுகள் வேலை செய்திருந்தாலுங்கூட அவர்களுடைய சர்விஸ் ரெகுலரைஸ்

செய்யப்படாமல் இருந்து வருகிறது. இதை உடனடியாக கவனித்து அவர்களுடைய சர்விசை ரெகுலரைஸ் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI M. MARIMUTHU : கனம் தலைவர் அவர்களே, ஹரிஜன மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தஞ்சாவூர் ஜில்லாவில் 12 தாலூக்காவில், ஜமீன், இனும், கோவில் சம்பந்தப்பட்ட நிலங்களினால், ஏற்பட்டுள்ள பிரச்சனை இன்னமும் தீரவில்லை. இது ஹரிஜனங்களின் குடியிருப்பிற்கு தடையாகயிருக்கிறது. ஆகையால் சர்க்கார் உடனடியாக ஹரிஜனங்களுக்கு, மனைக்கட்டுகள், குடிதண்ணீர் கிணறுகள், வீடுகள், ரோடுகள், மயானம் முதலிய வசதிகளைச் செய்து கொடுக்கும்படியாக சர்க்காரை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தை சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஒரே தாலூகாவில் அமைந்துள்ள லேபர் பாடசாலை உபாத்தியார்களை அடுத்த தாலூகா ஷை பாடசாலைகளுக்கு அடிக்கடி மாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சர்க்கார் லேபர் பாடசாலைகளுக்கு கட்டிடம் கட்டிக் கொடுத்திருக்கிற, ஏழை வாடகைதாரர்களுக்கு குறிப்பிட்ட வாடகைத்தொகை 10, 15, 20 ரூபாய் வரை லேபர் ஆபிஸிலிருந்து மணியார்டர் கமிஷனில்லாமல் அனுப்பியிருந்தது. இப்போது ஷை தொகைகளிலிருந்து கழித்து அனுப்பியிருக்கிறார்கள். இவ்வாறு செய்யாமல், அவர்களுக்கு அனுப்பிக்க வேண்டிய முழு தொகையையும் கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மூன்றும் பாரம் முதற் கொண்டு எஸ்.எஸ்.எல்.சி வரையிலும் படித்த ஏழை ஹரிஜனங்களுக்கு, ஜில்லா போர்டிலும், முனிசீப் ஆபீஸ்களிலும், அவர்களுக்கு குமாஸ்தா வேலையாகிலும், உபாத்தியார் வேலையாகிலும், பியூன் வேலையாகிலும் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரை நான் அன்புடன் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

0-07 a.m. *SRI K. VINAYAKAM : கனம் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன மான்யத்தைப் பற்றி விவாதிக்கப்படும்போது, ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜனங்களுக்கும் பிற்போக்கு இனத்தவர்களுக்கும் படித்து முன்னேறவேண்டுமென்று ஒரு சிறு தொகையை அரசாங்கம் ஒதுக்கி வைக்கிறது. அப்படி ஒதுக்கி வைப்பதற்கு முக்கிய காரணம் அவர்கள் இயற்கையிலேயே ஏழைகளாகப் பிறக்கிறார்கள், அவர்கள் படிக்க பண வசதி இல்லை. ஆகையால் அரசாங்கமே முன்வந்து அவர்கள் விருத்தியடைய பணத்தை ஒதுக்குகிறார்கள். அந்த நிலையிலே ஒதுக்கி வைக்கும் பணம் அவர்களுக்குத் தகுந்த முறையிலே உதவ வேண்டும். யார் அதற்குத் தகுதியோ, ஏழை இனத்திலே பிறந்தவர்களுக்கு அதிலும் முக்கியமாக, பரம ஏழைகளாக இருப்பவர்களுக்குத் தான் தரப்படுகிறது. பணம் நல்ல முறையில் விநியோகம் செய்தாலும் கூட அதிலும் ஒரு சில முறைபாடுகளையும் அந்த மக்கள் காண்கிறார்கள். ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் தவறுதல் செய்கிறார்கள் என்பது அல்ல. ஏழை மாணவர்கள் படிப்பதற்கு அவர்களுக்கு போதிய வசதி தருவதற்கும் அரசாங்கம் பணத்தை ஒதுக்கிச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் காரியத்தை செய்கிறார்கள். விநியோகிக்கும் முறையிலும் தவறு இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. போதிய அளவு பணம் இருந்தால் அவர்கள் விநியோகம் செய்யும்போது எல்லோருக்கும் கிடைக்கும், ஏழை ஆதித்திராவிட பிற்பட்ட மக்களுக்கு இந்த உதவி அளிக்கப்படட்டும். அதோடு படிப்பு வசதி இல்லாத பிற்பட்டவர்களுக்கும் படிப்பு வசதியாவது வேண்டும். உத்யோகம்கூட பின்னால் பார்த்துக்கொள்ளலாம். அந்த அளவு முயற்சி செய்து மற்றவர்களோடு போட்டி போட்டு வாங்கிக்கொள்வதற்கு முயற்சி செய்கிறோம். "To start with" எங்களுக்கு வாழ்க்கையிலே

வளருவதற்கே வேண்டிய வசதி இல்லாமற்போனால் வளர முடியாது. படித்து வேலையில்லா திண்டாட்டத்தில் ஈடுபட்டால், அது வேறு பிரச்சனை. அதைத் தீர்ப்பதற்கு வகை செய்துகொள்ளலாம். படித்து வளர்ந்து, மற்றவர்களைப்போல் வாழவேண்டுமென்று பிற்போக்கு இனத்தவர்கள் விரும்பினால் அவர்களுக்கு இலவசமாகக் கல்லூரியிலே படிக்க வசதிவேண்டும். இவர்களுக்கென்று 10 லட்சம் ஒதுக்கி வைத்தால் வருகிற மக்கள் குறைந்தது 70 லட்சம் இருப்பதானால் எல்லோருக்கும் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகையால் அங்கு இருக்கும் அதிகாரிகள் ஒரு முறையைக் கையாளவேண்டும். யார் அதிலே அதிகமாக ஏழைகளாக இருக்கிறார்களோ அவர்களைப் பார்த்து, அவர்களுக்கு முதலில் சலுகையளிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஜாதிக்காரரிலே பல இனங்கள் இருக்கின்றன. எல்லா வசதிகளும் ஒரு இனத்திற்காக மாத்திரம் தந்துவிட்டு மற்ற இனத்தவர்களுக்குக் கொடுக்காமல் தள்ளிவிட்டால் அதுவும் அநியாயம். பங்கு போட்டுக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்த ஜாதிக்கு இவ்வளவு, அந்த ஜாதிக்கு இவ்வளவு என்று ஒதுக்கித் தரும் நேரத்திலே, உண்மையிலேயே சேர வேண்டும் என்ற தகுதி பெற்றவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. complete செய்வதற்குக்கூட முடியாமல் போவதற்குக் காரணம் போதிய அளவுக்கு பணம் இல்லை. இதுதான் பெரிய குறை. கிடைக்காதவர்கள் அதிர்ச்சி அடைவதற்குக் காரணம் ஒதுக்கி வைத்திருக்கும் பணம் போதாது. மேலும் வற்புறுத்தி, இந்த ஆண்டிலாவது அதிகமாக பணத்தை ஒதுக்க வேண்டுமென்பதுதான் வெட்டுப் பிரேரணையின் நோக்கமே தவிர விநியோகிக்கும் முறையிலே தவறு இருக்கிறது என்பது அல்ல என்பதை ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தைப் பற்றி கூற விரும்புகிறேன். இந்த வசதி 10-10 a.m. களையெல்லாம் கொடுப்பதற்காக பிற்பட்ட சமூகத்தினர் ஜாபிதா என்ற ஒரு ஜாபிதா இருக்கிறது. அந்த ஜாபிதாவிலே ஒரு சில முற்போக்கு இனத்தவர்கள்கூட சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் 20 ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த ஜாபிதா தயாரிக்கப்பட்டது. அப்பொழுது பிற்போக்காக கருதப்பட்டவர்களையெல்லாம் அந்த ஜாபிதாவில் சேர்ந்திருந்தார்கள். அதிலே ஒரு Stage இருக்கிறது. அதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். வடுகர் இனம் என்ற ஒரு இனம் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. யார் தெலுங்கு பேசினாலும் அவர் வடுகர் என்று சொல்லிக்கொண்டு ஒரு சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு பிற்போக்கு இனத்தவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகளைப் பெறுகிறார்கள். வடுகர் நாயுடுவைச் சேர்ந்த வடுகரா, ரெட்டியாரைச் சேர்ந்த வடுகரா, செட்டிமாரைச் சேர்ந்த வடுகரா என்று கண்டுபிடிக்கமுடியாத நிலைமை இருக்கிறது. தெலுங்கு பேசுகிறவர்களெல்லாம் வடுகர் என்று சொல்லிக்கொண்டு ஒரு சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். ஆனால், நடைமுறையிலே for social status they are considered to be better classes of people ஆனால் சலுகைவேண்டுமென்பதற்கு மட்டும் வடுகர் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அதே மாதிரி தான் துளுவ வெள்ளாளரும். வெளியிலே ரொம்ப உயர்ந்த வெள்ளாளன் என்று சொல்லிக்கொண்டு, சலுகைக்காக துளுவவெள்ளாளன் என்று சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு சலுகையைப் பெற்றுவிடுகிறான். இதனால் உண்மையாகவே பிற்பட்ட மக்களுக்குச் சேரவேண்டிய சலுகை சேராமல் போய்விடுகிறது. குறிப்பிட்ட இனத்தவர்களையும், பிற்போக்கு ஜாபிதாவில் சேர்த்துவிடலாம். அதில் ஒன்றும் ஆட்சேபணையில்லை. எல்லோருக்கும் சலுகை கிடைக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால், உண்மையிலேயே Backward Community ஆக இல்லாதவர்களும்கூட பிற்போக்கானவர்களென்று சொல்லிக்கொண்டு சலுகைகளை பெற்றுவிடுகிறார்கள். துரதிருஷ்ட வசமாக பிராமணர்களையும் வைசியர்களையும் தவிர மற்ற எல்லா ஜாதியார்களும் இந்த ஜாபிதாவில் குறிப்பிட்ட பிற்போக்கு இனத்தவர்களில் எப்படியாவது ஏதாவது ஒரு இனத்தில் சேர்ந்துக்கொண்டு இந்தச் சலுகைகளை வாங்கிக்கொள்கிறார்கள். இதனால் உண்மையாகவே பிற்பட்ட இனத்தவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கக்கூடாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத் திடீரென்று மாற்றிவிட முடியாது. அதுவும் எனக்குத் தெரியும். இந்த ஜாபிதா ஒரு

[Sri K. Vinayakam] [22nd December 1956

nebulous kind of list. அதில் 156 ஜாதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த ஜாதிகளில் ஏதாவது ஒன்றோடு கொஞ்சம் ஒட்டு இருந்தால் போதும், உடனே பிற்போக்கு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி விடுகிறார்கள். உண்மையாகவே பணத்தை செலவழிக்க முடிந்த முற்போக்கு இனத்தவர்களும் இந்தச் சலுகையைப் பெறும் நிலைமைக்கு வந்து விடுகிறார்கள். இதனால் அரசாங்கத்தின் நோக்கமே தோல்வி அடைந்து விடுகிறது. அரசாங்கத்தின் நோக்கம் **educationally backward**-ஆக இருப்பவர்களுக்கு இந்தச் சலுகைகள் போய்ச் சேரவேண்டுமென்பது தான். ஆனால், நடைமுறையில் முற்போக்காளர்களும் இந்தச் சலுகைகளைப் பெற்று விடுகிறார்கள். பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டால் எந்த விதமான ஆட்சேபணையுமில்லை. முற்போக்கு இனத்தவர்களும் கல்விச் சலுகை பெறுவதில் ஆட்சேபணையில்லை. மத்திய அரசாங்கத்தினால் இது விஷயமாக நியமிக்கப்பட்ட கமிஷன் அறிக்கையை பார்லிமெண்டில்கூட சமர்ப்பித்தாகிவிட்டது. ஆனால் நமக்கு ஒன்றும் இது விஷயமாக இதுவரையில் தகவல் கிடைக்கவில்லை. **Backward Classes Commission** அறிக்கை எங்களுக்கு இன்னும் வரவில்லை. அதிலே என்ன சிபார்சு செய்திருக்கிறார்களோ தெரியவில்லை. எந்த ஜாதியை முற்போக்கு ஜாதியுடன் சேர்த்திருக்கிறார்களோ, எந்த ஜாதியை பிற்போக்கு ஜாதியுடன் சேர்ந்திருக்கிறார்களோ தெரியவில்லை. நாங்கள் இப்பொழுது வேறு எந்த விதமான சலுகையும் கோரவில்லை. எங்களுக்கு கல்விச் சலுகை கொடுத்தால் போதும், மற்றப்படி உத்தியோகத்தைப் பற்றியோ அல்லது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றியோ பின்னால் பார்த்துக்கொள்ளலாம். நான் எதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன் என்றால், வெளியிலே **for outside purposes** ஒரு உயர்ந்த ஜாதி என்று சொல்லிக்கொண்டு சமூகத்திலே உயர் நிலையில் இருந்துகொண்டு, அதே நேரத்திலே சலுகை பெறுவதற்கு மட்டும் தாழ்த்தப்பட்ட ஜாதி, பிற்போக்கான ஜாதி என்று சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு வந்துவிடுவதால், உண்மையிலேயே எங்களுக்குச் சேர வேண்டிய சலுகைகளை மற்றவர்கள் அனுபவிக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு வேண்டிய ஒரு மெஷினரி ஏற்படுத்தவேண்டும். இதை எப்படி தடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களும் **Advisory Committee**-யும் ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை தடுத்துவிட்டால் உண்மையிலேயே அரசாங்கத்தின் நோக்கம் வெற்றி அடையும். இல்லையென்றால், அந்த நோக்கம் தோல்வி அடையும் என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். **Advisory Committee** தீர்மானத்துக்கு இணங்கி பிற்போக்கு இனத்தவர்களுக்கு 5 லட்ச ரூபாயும், ஹாஸ்டலுக்கு ஒரு லட்சம் ரூபாயும் ஒதுக்கிவைத்திருப்பதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு **Advisory Committee** மூலமாக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

10-17 a.m. * **Sri M. C. MUTHUKUMARASWAMI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபை முன்பு வைக்கப்பட்டிருக்கும் ஹரிஜன மான்யத்தை ஆதரித்து ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது நாட்டில் ஆட்சி நல்ல முறையிலே நடைபெறுவதற்காக முதல் ஐந்தாண்டு திட்டம் முடிந்துவிட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் நடைபெறுகிறது. கடந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே பல வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. ஸ்தல அபிவிருத்தித் திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் இவைகளுக்காக கோடிக்கணக்கான பணத்தை சர்க்கார் செலவிட்டதைப் பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனாலும், இந்தத் திட்டங்களினாலே ஹரிஜனங்களுக்கு ஏதாவது சலுகை கிடைத்திருக்கிறதா என்று கேட்டால், இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. காரணம், பல கிராமங்களிலே அமைக்கப்பட்டிருக்கும் நந்தவனம், ரேடியோக்கள் ஜாதி ஹிந்துக்களின் தெருவிலேதான் அமைந்திருக்கின்றன. சேரிகளிலே ஏதாவது நந்தவனங்கள், ரேடியோக்கள் அமைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், இல்லையென்றுதான் சொல்லவேண்டும். பொதுவாக ஜனங்களுக்கு நன்மை செய்வதாக சொல்லுகிறார்களே தவிர, ஹரிஜனங்களுக்கு போதிய நன்மை

22nd December 1956] [Sri M. C. Muthukumaraswami]

செய்யப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. தேசீய விஸ்தரிப்பு திட்டம், ஸ்தல அபிவிருத்தி திட்டங்களினால் அவர்களுக்கு எதுவும் நன்மை கிட்டவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையிலே ஹரிஜனங்களுக்கு அதிகமாக மனைகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. மனைகள் ஒதுக்கப்பட்டாலும்கூட, அவைகளெல்லாம் அப்படியே காலியாக இருந்து கொண்டு வருகிறது. இந்த நிலைமை சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். 1952-வது வருஷத்திலே அம்பல் கிராமத்திலே வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் சிபார்சு செய்யப்பட்டது. ஆனால், நாளதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு இதுபற்றி எழுதிப்போட்டாலும்கூட, பதில் அளிக்கப்படவில்லை என்று சொன்னால், மக்கள் எப்படி சர்க்காரை நம்புவார்கள் என்று எனக்குப் 10-20 p.m.
புரியவில்லை. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை, அதிகமான மனைகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட 10 கிராமங்களுக்கு ஒரு தெருவையாவது சர்க்கார் எடுத்துக்கொண்டு அதில் ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு வேண்டிய உதவி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த சர்க்காரிலிருந்து 10 வருஷம் ஹரிஜனங்களுக்காக ஒரு டிப்பார்ட்மெண்ட், **Harijan Welfare Department** ஒதுக்கப்பட்டிருக்கிறது. பேரளவில் **Harijan Welfare Department**-என்று இருந்தாலும்கூட அதில் பிற்பட்ட வகுப்பினரும் அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏன் அப்படிச் செய்கிறார்களென்று தெரியவில்லை. ஹரிஜனங்களுக்கென்று ஒதுக்கியிருக்கும் நிதியிலிருந்துதான் அங்கு வேலை செய்கிற அத்தனை ஆபீஸர்களுக்கும் உள்ள செலவு கொடுக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பினர்களுக்குள்ள தொகையைப் பிரத்தியேகமாக ஒதுக்கி அதை வேறாக வைத்துச் செய்தால் அதனால் மிச்சப்படும் பணத்தை ஹரிஜனங்களுக்குச் செலவு செய்தால் ஹரிஜனங்களுக்கு அது நன்மை அளிக்கக்கூடியதாய் இருக்குமென்று சொல்லிக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri C. KANDASAMY :** உதவி சபைத்தலைவர் அவர்களே! இந்த மிக முக்கியமான மான்யத்தின் மீது கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அநேகமாக, ஹரிஜன முன்னேற்றத்தைப்பற்றி கட்சி வித்தியாசமின்றி சகலரும் இன்றையதினம் இப்பிரச்னையை, மிகச் சிக்கலான இப்பிரச்னையை தீர்த்துவைக்க அக்கறையுள்ளவர்களாய் இருப்பதாகத் தெரிகிறது. இப்பிரச்னை நம் தேசத்திற்கே ஒரு சாபக்கேடாக அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமுதாய நிலையிலும் உள்ள வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இந்தப் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். சமீபகாலங்களில் நம் நாட்டில் நடந்துகொண்டிருக்கும் மத மாற்றங்கள், இந்தப் பிரச்னை எந்த அளவிற்குத் தீர்க்கப்படாமலிருக்கிறது என்பதைப் எடுத்துக்காட்டுகிறது. நம் ராஜ்யத்தில் கூட கிருஸ்துவ மதத்திலுள்ள ஹரிஜனங்களுக்கு சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லக்கூடிய விஷயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறோம். எந்த மதத்தில் சேர்ந்தவர்களாய் இருப்பினும், எவ்வளவு மதமாற்றம் ஏற்பட்டாலும்கூட, இன்றையதினம் ஹரிஜனங்கள் ஹரிஜனங்களாகவே இருக்கிறார்கள் என்பதை நாம் நம் அனுபவத்தில் பார்க்கிறோம். இதை வைத்துக்கொண்டு பார்க்கும்போது இப்பிரச்சினை உண்மையாகவே தீர்க்கப்பட வேண்டுமென்றால், ஹரிஜன மக்களுக்கு பிரதானமாக உண்ண உணவும், உடுக்க உடையும், குடியிருக்க வீடும் கொடுக்கப்படவேண்டும். இதற்கு உத்திரவாதம் கொடுக்கவேண்டும். நிலச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதி இது என்று நான் நினைக்கிறேன் இன்றைக்கு இருக்கக்கூடிய ஹரிஜனங்களில் உழவுத் தொழிலே ஜீவாதாரமாகக் கொண்டிருக்கக் கூடியவர்கள்தான் மற்றவர்களை விட குடியிருக்க நிலமில்லாதவர்களாக இருக்கிறார்கள். இவர்கள்தான் 99 பெர்சண்ட் இருப்பார்கள் என்ற வகையில்தான் இந்த

குடியிருப்பு பிரச்னையை ஒரு கேந்திரப் பிரச்னையாக நான் கருதுகிறேன். இந்த விஷயத்தில் நாம் மெதுவாகத்தான் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். இதை யாரும் எதிர்க்க முடியாது. மற்றப் பிரச்னைகளைப் போலில்லாமல் இப்பிரச்னையைக் குறித்து அரசாங்கம் ஆலோசித்து அவர்களின் குறைகளைப் போக்கவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். ஆகவே இதற்கு வேண்டிய தீவிர நடவடிக்கைகள் எடுத்து ஹரிஜனங்களுக்கு குடியிருக்க இடம் கொடுப்பது, மனிதத் தன்மைக்கான முதல் அஸ்திவாரம் ஏற்பட அடிகோலுகிறது, என்று இச்சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டசபை இல்லாவிட்டாலும் அடுத்த சட்டசபையாவது இதைத் தீர்த்துவைக்கும் பெருமையை சம்பாதித்துக்கொள்ளுமென்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இன்றையதினம் இவர்கள் வெகு சிரமப்பட்டு படித்து முன்னுக்கு வருகிறார்கள்; அப்படி வரக்கூடியவர்களுக்கு வேலை கொடுக்கப்படுவது சம்பந்தமாக அரசாங்கம் பலவிதமான முயற்சிகளும் எடுத்துக்கொள்கிறது. நான் பல ஹரிஜன மாணவர்களைக் கண்டு கேட்கும்போது நாங்கள் 10-வது வரை படித்திருக்கிறோம்; 4, 5 வருடங்களாக எங்களுக்கு வேலை கிடைக்கவில்லையென்று புகார் சொல்கிறார்கள். இதுபற்றிய சில விஷயங்களை நான் மந்திரி அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். இது எதைக் காட்டுகிறது? எதிர் நீச்சல் அடித்து பாஸ் பண்ணிவந்திருக்கக் கூடியவர்களை இன்றையதினம் வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து மீட்க முடியாமல் இருக்கிறது அரசாங்கம். ஆகவே அதில் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். ஆகவே ஹரிஜனங்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்க பிரத்தியேகமாக ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுப்பதற்கு ஏன் ஒரு ஸ்தாபனம் அமைக்கக்கூடாது. **Employment Bureau** இருக்கிறது. அதுபோக, படித்திருக்கக்கூடிய ஹரிஜனங்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்கவென்று ஒரு தனி ஸ்தாபனம் ஏற்படுத்தப்படவேண்டுமென்பதுதான் எனது யோசனை. பெரிய வேலைகள் கொடுப்பது ஒருபுறமிருக்க, ஏதாவது ஒரு வேலையாவது தற்காலிகமாக வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு எல்லோரும் ஹரிஜன முன்னேற்றத்தைப் பற்றி பேசுகிறோம். ஆனால் எந்த அளவில் நாம் பேசுவதில் நாணயம் இருக்கிறது என்பது கேள்விக் குறியாய் இருக்கிறது. ஹரிஜன முன்னேற்றம் குறித்து சமுதாய சீர்திருத்த வாதிகளும், மதவாதிகளும் ஒப்புக் கொள்கிறார்கள். அரசியல் சட்டத்தில் அவர்களுக்கு சகல உரிமைகளும் இருந்தும்கூட அவர்களால் அதை அனுபவிக்க முடியவில்லை. நேர்மாறாக அவர்கள் ரத்தக்கண்ணீர் வடிப்பதையே நாம் காண்கிறோம். அதிலிருந்து என்ன தெரிகிறது? ஹரிஜன முன்னேற்றம் என்பது இன்றையதினம் ஒரு பிரசார இயந்திரமாக பிரயோகப் படுத்தப்பட்டு வருகிறதேயொழிய அடிப்படையில் நாணயம் இல்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM: அதை ஒரு லாப இயந்திரமாக உபயோகப்படுத்தாமல் இருந்தால் பரவாயில்லை.

SRI C. KANDASAMY: பிரசார இயந்திரம் என்றால் லாப இயந்திரந்தான். நாணயம் வேண்டுமென்றால் நடைமுறையில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அவர்களது முன்னேற்றத்திற்கு கைகொடுத்து ஆவன செய்யவேண்டும். தவறுகள் இழைக்கக் கூடியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரசாரமும் கடுமையான தண்டனையும் சேர்ந்து வரக்கூடிய வகையில் இதைத் தீர்க்க முன்வரவேண்டும். இன்றைக்கு Special Branch Police இருக்கிறது. அனாவசியமான வேலைகளில் அவர்களை ஈடுபடுத்துவதற்குப் பதிலாக இந்திய

அரசியல் சட்டப்படி ஹரிஜனங்களுக்குள்ள உரிமைகள் அனுஷ்டானத்தில் வருகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு அவர்களை ஏன் பயன்படுத்தக் கூடாது. இந்தத் தொண்டைச் செய்ய அவர்களது திறமையை ஏன் பயன்படுத்தக் கூடாது. Special Branch Police காரர்கள் அரசியல் வாதிகளைப் பின்பற்றிச் செல்வதைப் பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. அது அரசாங்கத்தின் கடமையாகும். அதேசமயத்தில் இம்மாதிரியான விஷயங்களில் கோவில்களில், பொதுவிடங்களில் கடைகளில் எல்லோருக்கும் இருக்கக்கூடிய உரிமை, அவகாசம் ஹரிஜனங்களுக்கும் கிடைக்கிறதா இல்லையா என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்து ஏதாவது குறைகள் கண்டால் அதை எடுத்துக்காட்டி இந்தக் குற்றத்தை செய்யக் கூடாதென்று சொல்லும் வகையில் **Special Branch Police**-யை உபயோகித்துக்கொண்டு இந்தமாதிரியான ஒரு ஏற்பாட்டை ஏன் செய்யக் கூடாது. அத்தகைய ஏற்பாடுகளைப் பற்றி யோசனை செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மத்திய அரசாங்கத்திலிருந்து கொடுக்கக்கூடிய **Scholarships** சம்பந்தமாக சென்னை சம்பந்தப்பட்டவரையில் அதிகம் மார்க்ஸ் வாங்க வேண்டுமென்று ஒரு விதி இருப்பதால் ஒரு கிளர்ச்சி நடந்துவருகிறது. மற்ற மாகாணங்களில் உள்ளதைப் போன்று இங்கேயும் அதே மார்க்கின் அடிப்படையில் **Scholarships** கொடுக்க வேண்டுமென்ற கிளர்ச்சி சம்பந்தமாக இம்மாகாண சர்க்கார் எந்த அளவிற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; மத்திய சர்க்காரை எவ்வளவு தூரம் வற்புறுத்தியிருக்கிறார்கள். அதில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அதில் விசேஷ கவனம் செலுத்தி சீக்கிரத்தில் எல்லா மாகாணங்களையும் போல் நமது ராஜ்யத்திற்கும் போதுமான அளவு **Scholarships** கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, மந்திரியவர்கள் இதை கவனத்தில் எடுத்துக்கொள்வார்; ஹரிஜனங்களுக்கு ஆவன செய்வார் என்று நம்பிக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே! இந்தப் பிரச்னை நல்ல முறையிலே இங்கு விவாதிக்கப்பட்டதைப் 10-29 a.m. பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இதைப்பற்றி பேசிய அங்கத்தினர்கள்எல்லோரும் அரசாங்கத்தைக் குறைகூறாமல் அரசாங்கம் செய்திருக்கிற நன்மையை நன்கு உணர்ந்துகொண்டு அதைப்பற்றி புகழ்ந்து பேசியதோடு மட்டுமில்லாமல் அரசாங்கத்தாருக்கு நல்ல யோசனைகளும் கூறியிருக்கிறார்கள். அரசாங்கம் செய்யவேண்டிய சில காரியங்களையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஒவ்வொருவரும், ஹரிஜனமக்களுக்கு அவசியமான வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். கட்சிபேதமற்ற முறையில் இந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்று கந்தஸ்வாமி அவர்கள் சொன்னது உண்மையே.

கடந்த 10 வருடங்களாக ஹரிஜனங்களுக்கு என்னென்ன சட்டங்கள் போடவேண்டும் என்றும், தீண்டாமையைப் போக்குவதற்கு என்ன சட்டங்கள் போடவேண்டும் என்றும் ஆலோசித்து இன்று காங்கிரஸ் அரசாங்கம் சட்டங்களை போட்டு நிவர்த்தி செய்துவிட்டார்கள். தீண்டாமை கொடுமை இன்னும் இருந்துவருவதாகவும், இதற்கு முடிவு காணவேண்டுமென்றும், வாதித்து பலர் மத்திய சட்டசபையில் பேசியிருக்கிறார்கள். அடுத்தபடி இன்று தீண்டாமை அதிகமாக இன்னும் காணப்படுகிறதென்றால் அதற்கு ஜாதி ஹிந்துக்களின் போக்குத்தான் அல்லது அவர்களின் மனப்பான்மை இன்னும் மாறாமல் இருந்துவருவதுதான் காரணம்." ஆனால், இன்று எவ்வளவோ ஜாதி ஹிந்துக்கள் தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் ஒத்துழைத்து இன்று அதற்காக நல்ல வேலை செய்துவருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் சிலர் இன்னும் மூடத்தனமாக பிடிவாதம்

[Sri B. Parameswaran] [22nd December 1956

செய்வதாகக் கருதப்படும் அடுத்த ஆறு பேர்களுக்கு வெள்ளிப் பதக்கமும் கொடுப்பதாகவும் அவைகளின் ஒரு பக்கத்தில் அரசாங்கத்தின் முத்திரையும், மற்றொரு பக்கத்தில் யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அவருடைய பெயரையும் எழுதிக் கொடுப்பதாகவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் தொண்டு செய்கிறவர்களுக்கு உற்சாகம் கொடுக்கும் அளவில் இதைச் செய்துகொண்டு வருகிறோம். மற்றும் என்னென்ன சலுகைகள் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமோ அவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதே சலுகைகளை மருத்துவக்காரர்களுக்கும் சலவைக்காரர்களுக்கும் கொடுக்கும்படியாக உத்தரவு போட்டிருக்கிறோம்.

கனம் அங்கத்தினர்கள் சொன்ன பிரகாரம் இது ஒரு பெரிய பிரச்னையாகத்தான் இருக்கிறது. இதைப்பற்றி கனம் அங்கத்தினர் கந்தசாமி அவர்களே சொல்லியிருக்கிறார். அரசாங்கம் மட்டும் இப்படிப்பட்ட பெரிய பிரச்னையில் ஈடுபட்டு வேலை செய்தால் போதாது. எல்லா சமூகத்தவர்களும், எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களும் இதில் பங்கெடுத்துக்கொண்டு வேலை செய்யவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம். அப்பொழுதுதான் இப்படிப்பட்ட பெரிய பிரச்னை தீரும். இப்படியே கனம் அங்கத்தினர்களும் சொன்னார்கள். அது உண்மையான வார்த்தை. இப்பொழுது அரசாங்கம் செய்துவரும் வேலைகளில் எல்லோரும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. தற்காலத்தில் ஹரிஜன முன்னேற்றத்தில் யாராவது பாடுபடாமல் இருந்தால் அவர்கள் ஒரு அநாகரிக மனிதன் போலத்தான் கருதப்படுவார்கள். அதைப் போலவே ஹரிஜன முன்னேற்றத்திற்காகவும், தீண்டாமையை ஒழிப்பதற்கும் இந்தப் பெரிய பிரச்னையைத் தீர்ப்பதற்கும் வேலை செய்துவருவதை எதிர்த்து யாராகிலும் வேலை செய்தால் அவர்களை தேசத் துரோகிகள் என்றுதான் கருதவேண்டும். ஹரிஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யவும், எல்லோரும் முற்படவேண்டும் என்று இப்பொழுது திட்டமிட்டிருக்கிறோம்.

அப்படி அவர்களுடைய முன்னேற்றத்திற்காக பொதுஜனங்கள் பாடுபட்டால் அதுவே அவர்களுக்குக் கோடி ரூபாய் கொடுத்ததுபோலாகும். 1946-ம் வருஷத்தில் அவர்களுடைய முன்னேற்றத்திற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிச் செலவு செய்தார்கள். அடுத்த வருஷம் அதைவிட அதிகமாக ஒதுக்கி அவர்களுக்குச் செலவு செய்திருக்கிறார்கள். ஆந்திர ராஜ்யம் நம்முடன் இருந்தபோது ஒரு கோடி ஏழு லட்சத்தி இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதன் பிறகு இன்னும் அதிகமாகவே செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் பிரிந்து போன பிறகு ஒரு கோடி ஐம்பத்தி ஆறு லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக அதிகப்படியான பணம் செலவு செய்துகொண்டுவந்திருப்பதைப் பார்க்கலாம். ஒவ்வொரு வருஷமும் அவர்களுக்கு அதிகப்படியாக பணம் ஒதுக்கி செலவு செய்துகொண்டு போகப்படுகிறது.

மற்றும் நேஷனல் எக்ஸ்டென்ஷன் திட்டம் முதலியவைகளில் ஹரிஜனங்களுக்குச் சில வேலைகள் கொடுக்கப்படவில்லை என்று கனம் முத்துக்குமாரசாமி சொன்னார். அந்த விஷயமாகவும் அரசாங்கம் கவனித்துக்கொண்டுதான் வருகிறார்கள். அங்கேயும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் அதிகமாகத்தான் இருக்கின்றன. உடனடியாக எல்லோருக்கும் தெரியும்படியான வகையில் இல்லாமல் இருப்பதால் இப்படி அவர்கள் புகார் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் ஹரிஜனங்களுக்கு அதிகப்படியான சலுகைகள் செய்துகொண்டுவருவதைப் பார்க்கலாம். ஹரிஜனங்களுக்குக் கிணறுகள் வெட்டிக் கொடுப்பது முதலிய சலுகைகள் அநேகம் செய்துகொண்டுதான் வரப்படுகின்றன. லட்சக்கணக்கான கிணறுகள் வெட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

கனம் கே. டி. ராஜு அவர்கள் பேசும்போது ஹரிஜனங்களுக்கு சுமார் ஐம்பது கிராமங்களில் வீடுகள் கட்டுவதற்கு மனைக்கட்டுகள் வேண்டும் என்று கேட்டும் அவைகள் இன்னும் கொடுக்கப்படவில்லை என்றும் அது

22nd December 1956] [Sri B. Parameswaran]

விஷயமாக உடனடியாகக் கலெக்டருக்குத் தகவல் கொடுத்து அதை கவனிக்கும் படியான ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். வீடுகள் கட்டும் விஷயமாகவும் மனைக்கட்டுகள் வழங்கும் விஷயமாகவும் அரசாங்கம் விசேஷகவனம்தான் செலுத்திக்கொண்டுவருகிறார்கள். ஸ்ரீமான் வடிவேலு அவர்கள் சொல்லும்போது ஹரிஜனங்களுக்கு என்று ஒன்றுமே செய்யவில்லை என்று புகார் சொன்னார். அவர்களுக்கு என்னென்ன செய்யப்படுகிறது என்பதை இப்பொழுது தெரிவித்திருக்கிறேன். இதிலிருந்தே அவர்களுக்கு அரசாங்கம் என்னென்ன செய்துகொண்டுவருகின்றன என்பதை அவர் நாங்கள் சொல்லாமலே தெரிந்துகொள்வார் என்று நினைக்கிறேன். இப்பொழுது இது சம்பந்தமாக நன்றாகத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். (ஒரு குரல் : இப்பொழுது செய்துகொண்டிருப்பதில் புகார் இல்லை, இன்னும் அதிகமாகச் செய்யவேண்டுமென்பதுதான்.) இன்னும் அதிகமாகச் சலுகைகள் காட்டவேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். அதைக் கண்டு நானும் சந்தோஷப்படுகிறேன். இன்னும் செய்யவேண்டியது அதிகமாக இருக்கிறது என்பதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீமான் வேலு அவர்கள் உபாத்தியாயர்களில் சிலரை இன்னும் காயப்படுத்தவில்லை என்று புகார் கூறினார். உத்தியோகங்களில் அதிகப்படியான கிளார்க்குகள் இல்லாத காரணத்தால் அப்படி அவர்களை நிரந்தரமாக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். இந்த விஷயமாகவும் நான் கவனம் செலுத்துகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தப் பிரச்னையைப் பற்றி அதிக நேரம் பேசவேண்டிய அவசியம் இல்லை.

பல அங்கத்தினர்கள் பல யோசனைகளைக் கூறி இருக்கிறார்கள். ஹரிஜன சமூகம் தனியாக இருந்துகொண்டு இருக்கவேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய நோக்கமல்ல. அவர்களும் மற்ற சமூகத்துடனும் சேர்ந்து அவர்களுடன் ஹரிஜனங்களுக்குத் தொடர்பு இருக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணமும். அதற்கு மக்களுடைய மனம் மாறவேண்டும். எல்லா சமூகமும் ஒன்று என்றும், எல்லோரும் சகோதரர்களைப்போல வாழவேண்டும் என்றும் எண்ணம் ஏற்படவேண்டும். அப்பொழுதுதான நாடு முன்னேற்றமடையும். ஹரிஜனங்கள் நல்ல முறையில் வாழவேண்டும், அவர்கள் நல்ல முறையில் மற்றவர்களுடனும் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டும். தாழ்ந்த ஜாதி, கீழ் ஜாதி என்ற எண்ணம் நீங்க வேண்டும் என்றும், எல்லோரும் சகோதரர்களைப் போல் வாழவேண்டும் என்பதற்காகத்தான் அரசாங்கம் திட்டம் வகுத்து அதன்படி வேலை செய்துகொண்டுவருகிறது. போடப்பட்ட திட்டங்கள் எல்லாம் அதற்குத்தான். ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்ட் என்று தனியாக இருக்கவேண்டாம் என்றும் சொன்னார்கள். அவர்களுக்கு முன்னுக்கு வருவதற்கு இன்னும் இருக்கிறது, அதுவரையில் அந்த டிபார்ட்மெண்ட் இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. பிற்பட்ட வகுப்பினருக்கு என்று ஒரு தனி டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தவேண்டும் என்று சொன்னார்கள். அதையும் யோசித்துக்கொண்டுதான் வருகிறோம். அவர்களுக்குச் செலவுசெய்கிறோம் என்று உத்தியோகஸ்தர்களைத்தான் போடுகிறார்கள். திடீரென்று பிற்பட்ட வகுப்பினருக்கு என்று ஒரு தனியான டிபார்ட்மெண்டை ஏற்படுத்த முடியாது. அதற்குவேண்டிய சந்தர்ப்பமும் இல்லை. இப்பொழுது பிற்பட்ட இனத்தவர்களுடைய நிலைமையைப் பற்றி பரிசீலிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அதுவும் தன்னுடைய ரிபோர்டைச் சமர்ப்பித்திருக்கிறது. அந்த ரிபோர்ட் வந்த பிறகு அதற்கு என்று தனியாக வேலை இருந்தால் அப்பொழுது கட்டாயமாக தனி டிபார்ட்மெண்டை ஏற்படுத்துவார்கள் என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். அதற்காகப் போதிய அளவு வேலை இருந்தால் தனியான ஒரு டிபார்ட்மெண்டை அமைப்பதற்கு யோசனை செய்வார்கள்.

அது ஒரு பெரிய பிரச்னையாக இருப்பதால் அதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுப்பது என்பது முடியாமல் இருக்கிறது. சட்ட பூர்வமாக என்ன என்ன செய்யவேண்டுமோ அவைகள் எல்லாம் செய்தாகி விட்டன. ஜனங்களுடைய மனம் தான் மாற்றமடையவேண்டியதாக இருக்கிறது.

[Sri B. Parameswaran] [22nd December 1956

இப்பொழுது அப்படிப்பட்ட மனமாற்றம் அடைந்து வருவது எல்லோருக்கும் நன்ருகத் தெரிந்திருக்கும். இன்னும் சில இடங்களில்தான் அதிலும் கிராமங்களில்தான் அப்படிப்பட்ட மனமாற்றம் பூராவும் ஏற்படாததாகத் தெரியவில்லை. அதுவும் கூடியசீக்கிரத்தில் மாற்றமடைந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. இப்போது ஹரிஜனங்கள் விழிப்பு அடைந்திருக்கிருர்கள். அவர்களுக்கு நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் தாங்களாகவே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள சக்தி பெற்றுவிட்டார்கள், பலமுறையிலும் அவர்கள் நல்ல முறையில் வேலைசெய்துகொண்டு வருகிருர்கள். ஆகையினல் கூடியசீக்கிரத்தில் அவர்களுடைய சமூகம் நல்ல முறையில் முன்னேற்றமடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப்பற்றி சந்தேகமே இல்லை. இது ஒரு பெரிய பிரச்னையாக இருப்பதால் இது உடனடியாக தீர்ந்துவிடாது. இப்பொழுது முன்னேற்றம் அடைந்து வருவதைக் கண்டு கனம் அங்கத்தினர்களே சந்தோஷப்படுவார்கள். அவர்களுடைய சார்பில் கனம் அங்கத்தினர்கள் பேசுவதற்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். அவர்களுடைய முன்னேற்றத்திற்காக பலவகையில் எங்களுக்கு யோசனைகள் கூறியதற்காக அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இந்தத் தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில் அரசாங்கம் எந்த முறையைக் கையாளுவதற்கும் தயங்கமாட்டார்கள். மற்றும் இது விஷயத்தில் வேலை செய்கிறவர்களுக்கு வேண்டிய உதவி கொடுத்தால் அவர்கள் இன்னும் அதிகப்படியாக வேலை செய்வதற்குத் தயங்கமாட்டார்கள்.

கனம் கோவிந்தசாமி ஒன்று சொன்னர். அதாவது இஞ்சினியரிங் காலேஜ், மெடிகல் காலேஜ் முதலியனவைகளில் அவர்களுடைய மாணவர்களை வேண்டிய அளவில் சேர்க்கப் படவில்லை என்று புகார் கூறினர். எந்த எந்த மாணவர்கள் மனுக்கள் போட்டார்களோ அவர்கள் எல்லோருக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைப்போலவே பிற்பட்ட இனத்தவர்களுக்கும் வேண்டிய அளவு இடவசதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய அவர்களுக்கு 43 சத விகித ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். மற்றும் இங்கு கூறிய யோசனைகள் அவ்வளவுக்கும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய வாக்குறுதியும் நான் கொடுக்கிறேன். ஆகையினல் இந்த மானியத்திற்கு கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையைக் கொடுத்த அங்கத்தினர் வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri A. GOVINDASWAMI NAYAGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு **certificate** கொடுக்கப்படும்போது அவர்களுடைய ஜாதியை குறிப்பிடவேண்டும் என்று சொல்லுகிருர்கள். அதைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பிரச்னையைப் பற்றி கனம் மந்திரி அவர்கள் என்ன சொல்லுகிருர்.

The Hon. Sri B. PARAMESWARAN : அம்மா சமூகத்தைப்பற்றியும் தெரிவிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. கனம் விநாயகம் அவர்கள் சொன்னதுபோல் வேடுவர் என்பதற்கு வலையர் என்று எழுதிக் கொடுத்துவிட்டு சர்டிபிகேட்டுகளை வாங்கிப் போய் விடுகிருர்கள். அந்தமாதிரி தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு ஜாதிக் குறிப்பிடுவது அவசியம் என்று கருதப்பட்டிருக்கிறது. ஆதி திராவிடர் என்று போட்டாலும் ஒன்று தான். போடாவிட்டாலும் ஒன்று தான். புரிந்துகொள்வதற்கு அது அவசியமாக இருக்கிறது. எந்த இடத்தில் இது சம்பந்தமாக கெடுதல்கள் ஏற்படுகின்றனவோ அதைக் குறிப்பிட்டால் அதற்குத் தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். வேறு ஒன்றும் செய்யமுடியாது. இது சம்பந்தமாக என்ன நடந்திருக்கிறது என்று எழுதி அனுப்பித்தால் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறேன்.

22nd December 1956]

Sri S. VADIVELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மனைக்கட்டுகள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதைப்பற்றி கனம் மந்திரி ஒன்றுமே பதில்சொல்லவில்லை. மனைக்கட்டுகள் கொடுக்காவிட்டாலும் இப்பொழுது கொடுக்கப்பட்ட மனைக்கட்டுகளை விட்டு வெளியேற்றிக் கொண்டிருக்கிருர்கள். அதையாவது தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன். இதைப் பற்றி ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டுக்கு எழுதியும் அவர்களும் ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனைக்கட்டுகள் கொடுக்காவிட்டாலும் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்க உத்தரவாதம் கொடுத்தால் வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறேன்.

The Hon. Sri B. PARAMESWARAN : கனம் அங்கத்தினர் 10-50 a.m.
குறிப்பிட்ட விஷயத்தில், ஹரிஜனங்களை அப்புறப்படுத்துவதற்கு முன்னல், அவர்களுக்கு தனியாக இடம் கொடுப்பதற்கு ஒரு இடம் பார்த்துக் கொண்டிருப்பதாக கலெக்டர் எழுதியிருக்கிருர்கள். போதிய அளவுக்கு வேறு இடம் இருந்தால் அதை அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று ஒரு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கலெக்டர்களும் இந்த உத்தரவை அமுல் செய்து வருகிருர்கள். எங்கேயாவது தவறு ஏற்பட்டால் அதைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். கனம் அங்கத்தினர் சொன்ன இடத்திலிருக்கும் ஹரிஜனங்களுக்கு கட்டாயமாக வேறு இடம் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கிறேன்.

Sri S. VADIVELU : கனம் மந்திரி அவர்கள் வாக்குறுதியின் பேரில் என்னுடைய வெட்டுப் பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

The cut motion was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 40,00,000 as advance grant under Demand XXII—Harijan Uplift'.

The Demand was put and carried and the Grant was made.

(2) DEMAND XII—ADMINISTRATION OF JUSTICE.

(3) DEMAND XIII—JAILS.

(4) DEMAND XIV—POLICE.

The Hon. Sri C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

(1) 'That the Government be granted a sum not exceeding Rs. 32,50,000 as advance grant under Demand XII—Administration of Justice'.

(2) 'That the Government be granted a sum not exceeding Rs. 29,00,000 as advance grant under Demand XIII—Jails'.

(3) 'That the Government be granted a sum not exceeding Rs. 1,90,00,000 as advance grant under Demand XIV—Police'.

I request all these three Demands may be taken up together for discussion.

DEPUTY SPEAKER : Motion moved—

(1) 'That the Government be granted a sum not exceeding Rs. 32,50,000 as advance grant under Demand XII—Administration of Justice'.

(2) 'That the Government be granted a sum not exceeding Rs. 29,00,000 as advance grant under Demand XIII—Jails'.

(3) 'That the Government be granted a sum not exceeding Rs. 1,90,00,000 as advance grant under Demand XIV—Police'.

SRI P. RANGASWAMI REDDIAR : Mr. Deputy Speaker, I move—

'That the allotment of Rs. 32,50,000 under Demand XII—Administration of Justice be reduced by Rs. 100.'

DEPUTY SPEAKER : Cut motion moved—

'That the allotment of Rs. 32,50,000 under Demand XII—Administration of Justice be reduced by Rs. 100.'

SRI K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, I move—

'That the allotment of Rs. 29,00,000 under Demand XIII—Jails and Rs. 1,90,00,000 under Demand XIV—Police be reduced by Rs. 100 each.'

DEPUTY SPEAKER : Cut motion moved—

'That the allotment of Rs. 29,00,000 under Demand XIII—Jails and Rs. 1,90,00,000 under Demand XIV—Police be reduced by Rs. 100 each.'

Now the Demands and the cut motions are before the House for discussion.

***SRI P. RANGASWAMI REDDIAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீதி நிர்வாகத்தைப் பற்றிப் பேசும்பொழுது குறிப்பாக கோர்ட்டுகளில் ஏற்படும் காலதாமதத்தைப் பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. அதனால் கட்சிக்காரர்களுக்கு அதிகச் செலவும், இடைஞ்சலும் ஏற்படுகின்றன. அநேக கேஸ்களில் **Interlocutory Applications, Injunction Petitions, Receiver Petitions, etc.,** போடுகிறார்கள். புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்தால் அநேகமாக எல்லா ஒரிஜினல் ஸூட்களிலும் இந்த **Interlocutory Applications** இல்லாமல் இருக்காது. ஒவ்வொரு ஸூட்டிலும் குறைந்தது மூன்று மனுக்களாவது இருக்கும். இந்த மனுக்கள் எல்லாம் இரண்டு மூன்று மாதங்களில் தீர்க்கப்பட வேண்டும் என்று விதிகளில் இருந்தாலும், தாவா முடியும் வரையில் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு இவையும் நீடித்து வருகின்றன. ஒரு ஸூட்டில் ஒரு ரிசிவர் மனு 7 மாதங்களாக, தினம் தினம் அல்லது 2, 3 நாட்களுக்கொரு தடவை சாயங்காலம் 4 மணிக்கு எடுக்கப்பட்டு தள்ளிப்போடப்பட்டு வந்திருக்கிறது. இதனால் கட்சிகாரர்களுக்கு வீண் செலவும் தொல்லைகளும் ஏற்படுகின்றன. கீழ் கோர்ட்டுகளை மேல்கோர்ட் அதிகாரிகள் (inspect) தணிக்கை செய்யும்பொழுது

இந்த மாதிரி விஷயங்களை விசாரித்து, கீழ்கோர்ட்டுகளை எச்சரிக்கை செய்ய வேண்டும். விதிகளை சரியானபடி அமுல் நடத்தாத காரணத்தால் இம்மாதிரி காலதாமதம் ஏற்படுகிறது. கேஸ்களை மாற்றுவதிலும் கூட ஒரு குறிப்பிட்ட தேதியில் அவைகளை எடுத்துக் கொள்வார்கள் என்ற நிச்சயம் கூடக் கிடையாது. நீதிபதிகளும் தங்களது கடமையை உணர்ந்து குறிப்பிட்ட தேதிகளில் தாவாக்களை விசாரிப்பதில்லை. குறிப்பிட்ட தேதிகளில் விசாரித்துவிட்டால் வக்கீல்களுக்கு அல்லது கட்சிக்காரர்களுக்கு ஏதோ சலுகை காட்டுவது போல் நினைக்கிறார்கள். "**Justice delayed is justice denied**" என்ற மனப்பான்மை நீதிபதிகளிடமிருந்தால் உள்ளபடியே நீதி நிர்வாகம் நன்றாக இருக்கும். நம்முடைய மாகாணத்தில் **Subordinate Judiciary**-ன் தரம் எப்படியிருக்கிறது, ஹைகோர்ட்டின் தரம் எப்படியிருக்கிறது என்பதைப் பற்றி நான் விமர்சனம் செய்யப்போவதில்லை. 31-ந் தேதி அக்டோபர் 1956-ம் வருடம் ஹைகோர்ட்டார் கிரிமினல் அப்பீல் நெ. 20/56-ல் கொடுத்திருக்கும் தீர்ப்பிலிருந்து இரண்டு மூன்று வாக்கியங்களைப் படிக்கிறேன். ஒரு போலீஸ் அதிகாரிக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டதாக புகார் செய்ததன் பேரில் கீழ்க்கோர்ட்டில் அந்த **complaint** தள்ளுபடியாகி, சர்க்கார் ஹைகோர்ட்டிற்கு அப்பீல் செய்த வழக்கு இது. அதைப் படிக்கிறேன் :—

'The Special Judge has gone to the extent of making a stupid and almost insulting suggestion that the wife inside the kitchen and the aged father inside the house presumably of the P.W. 1 should have been examined to corroborate him. It is not usual as our own experience shows in the household of officers for wives and children and parents to be present in the office room and participate in what is going on there. Probably the Special Judge's experience in his own house-hold is different.'

இதிலிருந்து அங்கத்தினர்கள் நீதி நிர்வாகத்தைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளலாம். நானாகச் சொன்னால் ஏதோ சில ஜட்ஜுகளின் மீதோ அல்லது ஹைகோர்ட் நீதிபதிகளின் மீதோ தப்பு அபிப்பிராயம் ஏற்படுத்துவதற்காக சொல்லுகிறேன் என்று நினைக்கக் கூடும். இதைப் படித்துக் கனம் அங்கத்தினர்களே முடிவுகட்டவேண்டும்.

†நான் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையில் "**merit and efficiency**"-ஐப் பொறுத்தே நீதி நிர்வாகத்திற்கு ஆட்களை நியமிக்கவேண்டும் என்று சொல்லியிருப்பதை கனம் அங்கத்தினர்கள் தவறுதலாக நினைத்து "**Only merit and efficiency**-ஐப் பொறுத்து ஆட்களை நியமிக்கவேண்டுமென்று நினைத்து விடக்கூடாது. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் முறையில் ஆட்களை நியமிக்கலாம். உண்மையிலேயே சட்டத்தை நன்கு பயின்றவர்களும் அனுபவம் உள்ளவர்களும், வேலை தெரிந்தவர்களும் நியமிக்கப்பட்டால் நிர்வாகம் நன்றாக நடைபெறும். வார் சர்வீசைச் சேர்ந்த ஒருவர் ஜில்லா முனிசிப்பாக (**District Munsif**) நியமிக்கப்பட்டிருந்தார். அவர் துறையூரில் வக்கீல்களிடத்தில் சரியாக நடந்து கொள்ளுவதில்லை. 1950-ம் வருடத்தில் தாவா ஒன்று நடந்துகொண்டிருக்கும்போது கேசு நடத்திய வக்கீலிடம் அவர் சரியாக நடந்துகொள்ளவில்லை. அதற்காக அவர் பேரில் திருச்சி சப்-கோர்ட் **O.S. No. 213 of 1951**-ல் ரூ. 3,500-க்கு **damages**-க்காக தாவா செய்யப்பட்டது. கடைசியில் 1954-ம் வருடம் பிப்ரவரி 16உ அவர் கீழ்கண்டவாறு பிராதின் மேல் **endorse** செய்து மன்னிப்பு கேட்டுக்கொண்டார். "**I regret for my behaviour towards plaintiff on 9th August 1950 and tender my apologies to him**. வேலை தெரியாத ஆட்களை நியாயாதிபதிகளாக நியமிப்பதனால் இவ்விதமெல்லாம் ஏற்படுகிறது. தாவாக்களும் சரியாகப் பைசல் செய்யப்படவில்லை. ஆகவே நான் சொல்லியபடி வேலை தெரிந்தவர்களையும், சட்டத்தில் தேர்ச்சி பெற்றவர்களையும் நியமித்தால் நிர்வாகம் நன்கு இயங்கும்.

[Sri P. Rangaswami Reddiar] [22nd December 1956

போலீஸ் நிர்வாகத்தைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை. ராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த ஒரு போலீஸ் டெபுடி சூப்பிரடெண்ட்டைப்பற்றியது. ஹைகோர்ட், அவர்களுடைய தீர்ப்பில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை இப்பொழுது படிக்கிறேன்.

'It is obvious that in this case the accused finding himself harassed probably as he thought by the local police officers at the instance of his opponents has been misled by others into believing that he could obtain the support of higher police officers by means of douceur which is a belief unfortunately far too prevalent in the district of Ramanathapuram and sufficiently notorious to be taken judicial notice of'.

ஆகவே ஹைகோர்ட்டின் தீர்ப்பிலிருந்து ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள போலீஸ் அதிகாரிகளின் நேர்மையைப்பற்றி கவனிக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. இதே மாதிரி தான் மற்ற ஜில்லாக்களிலும் நடக்கிறது. போலீஸ் இலாக்காவிலும் நீதி இலாக்காவிலும் உண்மையிலேயே நேர்மையும் நாணயமுள்ள ஆபீஸர்கள் இருப்பார்களேயானால் மற்ற இலாக்காக்களும் சரியானபடி இயங்குவதற்கு அது உதவிகரமாய் இருக்கும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri K. VINAYAKAM: என்னுடைய வெட்டுப் பிரேரணையின் கருத்து மிகவும் தெளிவானது. ஏதோ குறைகூறவேண்டுமென்பதற்காக நான் எழுந்து பேசவில்லை. எனது அனுபவத்தைக் கொண்டே சொல்லுகிறேன். குறிப்பாக சில சப்-ஜெயில்களில் அரசியல் கைதிகளை நடத்தும் விதம் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது.

இரவு நேரங்களில் ஒரு அறையில் இவ்வளவு பேர்தான் இருக்கவேண்டும் என்ற கணக்கு கிடையாது. வந்தவர்களையெல்லாம் ஒரு ரூமில் போட்டு அடைக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் மல ஜலம் கழிப்பதற்கு ஒரே சட்டி தான் கொடுக்கப்படுகிறது. அதைத் தான் எல்லோரும் உபயோகிக்க
11-02 a.m. வேண்டும். அரசியல் கைதிகளின் விஷயமே இப்படி இருக்கிறது என்றால், சாதாரண கைதிகளைப் பற்றி அங்கத்தினர்களே யூகித்துக் கொள்ளலாம். காலையில் அவர்களை வெளியே விடுகிறார்கள். விட்ட உடனேயே அவர்கள் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு மல ஜலம் கழிக்க வேண்டிய இடத்திற்குப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சென்னையில் "பெனிடென்ஷேரி" **(penitentiary)** இருக்கிறது. சென்ட்ரல் ஜெயில் இருக்கிறது. இங்கே எல்லாம் போய்ப் பார்த்தால் தெரியும். இந்த உலகத்திலேயே நரகம் என்று ஒன்று இருக்குமானால் அது இந்தச் சிறைச்சாலை தான் என்று சொல்லிவிடலாம். சென்னை நகரில் எங்கே பார்த்தாலும் ப்ளஷ் அவுட் ஸிஸ்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தில் மட்டுமல்ல. சென்னை நகரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிற பிராந்தியங்களில் எல்லாம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆனால் பெனிடென்ஷேரில் அவ்வித வசதி ஒன்றும் கிடையாது. அப்படி என்றால் ஒரு வேளை அரசாங்கத்தினுடைய நோக்கம் குற்றம் செய்து விட்டு சிறைக்குப் போகின்ற கைதிகள் இனிமேல் சிறைக்கே போகக் கூடாது என மனம் நொந்து போகின்ற அளவுக்கு அவர்களுக்கு அங்கே துன்பமும், அசௌகர்யங்களும் இருக்கவேண்டுமென்பதோ என்னவோ தெரியவில்லை. அப்படிப்பட்ட மனப்பான்மை உடையவர்களாய் இருந்தால் நாங்கள் என்ன தான் யோசனைகளை எடுத்துச் சொன்னாலும் அதனால் எவ்வித பயனும் ஏற்படாது. அவர்களும் தங்களுடைய மனப்பான்மையினால் தாங்கள் நினைக்கின்ற பயனை அடையமாட்டார்கள். அவ்விதமின்றி சிறையிலிருந்து வெளியேறுகின்றவர்கள் திரும்பவும் முன்பு செய்த குற்றங்களைச் செய்யாமல் நல்ல வழியில் நடந்துகொள்ள வேண்டுமென்பது ஒன்று மாத்திரம் சர்க்காரின் நோக்கமாக இருக்குமானால் சிறையில் இருக்கும்போதே அந்தக் கைதிகளுடைய மனப்பான்மையில் மாறுதல் ஏற்படக் கூடிய சூழ்நிலையில் சிறைச்சாலையில் பல விதமான சௌகர்யங்கள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

22nd December 1956] [Sri K. Vinayakam]

இன்றைய தினம் சென்னை 'பெனிடென்ஷரிக்குள்ளே' போனால் என்ன தெரிகிறது. அங்கே சராசரியாக ஒவ்வொரு நாளும் **(average attendance)** இரண்டாயிரம் கைதிகள் இருக்கிறார்கள். அவர்கள் உபயோகப்படுத்துகின்ற கக்கூஸ் முதலியவற்றை சுத்தம் செய்ய நான்கே நான்கு தோட்டிகள் தான் இருக்கிறார்கள். **"Only four scavangers for the entire 2,000 convicts inside the penitentiary."** அது மாத்திரம் அல்ல. சிறையில் இருக்கக் கூடிய கைதிகளிலேயே யாராவது தோட்டி வேலை செய்ய முன் வந்தார்களானால் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற தண்டனையில் வாரத்திற்கு ஒரு நாள் குறைத்து விடுதலை அளிக்கிறார்கள். அப்படியென்றால் கைதியாகச் செல்லக் கூடியவர்கள் தோட்டி வேலையையும் செய்யவேண்டுமென்று இந்தச் சர்க்கார் சொல்வது ஒரு மனிதத் தன்மையுடைய அரசாங்கம் செய்கின்ற காரியமா என்று கேட்கிறேன். கோடம்பாக்கம் அடையார் போன்று சென்னை நகர எல்லைப் பிரதேசம் விஸ்தரிக்கக்கூடிய இடங்களுக்கு எல்லாம் ப்ளஷ் அவுட் ஸிஸ்டம் வைத்து கொடுத்திருக்கும்போது எதற்காக இந்த 'பெனிடென்ஷெரிக்குள்' வைத்துக் கொடுக்க யோசனை செய்யக் கூடாது என்று கேட்கிறேன். என்னுடன் 500 அரசியல் கைதிகள் அதில் அடைக்கப்பட்டிருந்தார்கள். எங்களுக்கு எல்லாம் அங்கே ஒரே ஒரு கக்கூஸ் தான். இந்த ஐநூறு பேரும் அங்கே போட்டா போட்டி போட்டுக் கொண்டு போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. வெள்ளைக்காரன் காலத்தில்தான் அப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் இருந்தன. அவனுக்கு இந்த நாட்டானிடம் வெறுப்பு. ஆனால் இன்னமும் அதே கொடுமைகள் நீடிப்பதில் அர்த்தம் இல்லை. ஒரு அறையில் இரண்டு பேர்கள் கூடச் சேர்ந்து இருக்கக்கூடாது. சேர்ந்து இருப்பதனால் பல விதமான தீமைகள் ஏற்படுகின்றன என்று ஒரு பக்கம் சொல்லலாம். அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நான் சொல்லவேண்டியது இல்லை. ஆனால் நான் இருந்த அறையில் ஏழு பேர்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள். அந்த அறையின் விஸ்தீர்ணம் 4'×6' ஆகும். அதனால் ஒருவர் மேல் ஒருவர் படுத்துக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அது மாத்திரமல்ல, கொடுக்கப்பட்ட கம்பளி, பாய் முதலியவற்றில் ஒரே சீலைப் பேன். கம்பளியைப் போர்த்திக்கொண்டதாக நினைக்கவில்லை. சீலைப்பேனையே போத்திக்கொண்டதாகத் தான் தோன்றியது. இவற்றை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் எதிர்க்கட்சிக்காரர்கள் மட்டும் தான் சிறைக்குப் போவார்கள் என்று சொல்ல முடியாது. காங்கிரஸ்காரர்களும் எதற்கேனும் போகவேண்டிய நிலைமை ஏற்படலாம். ஆகவே சிறையில் உள்ளவர்களை சர்க்கார் மனிதத் தன்மையோடு நடத்தவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். நான் சொல்கின்ற விஷயங்கள் எல்லாம் கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியவில்லை என்றால் உடனே இப்பொழுதே வேண்டுமானாலும் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம். அங்கே இரண்டு டாப்புகள் **(Taps)** தான் இருக்கின்றன. ஒன்று சமையற்கட்டில். மற்றொன்று இதர எல்லா காரியங்களுக்காகவும் வெளியே வைக்கப்பட்டிருக்கிறது. சமையலைப்பற்றி தனிப்பட எதுவும் குறை கூறவில்லை. சர்க்கார் கொடுக்கிற தானிய அளவுகளின் வகைப்படி தான் சமைக்கிறார்கள். அவர்கள் எடுத்து இரும்பு அண்டாவில் கொண்டு வரும் கூழைப் பார்த்தால் **"It almost resembles mud"**. ஆகவே உணவு என்ற வகையில் எங்களுக்கு ஏதோ கொடுக்கப்பட்டது. இப்படி இரும்பு அண்டாவில் கொண்டு வருகிறார்களே என்று சொன்னால் **"Hygienically it is very good"** என்கிறார். அது உண்மையானால் அதிகாரிகள் வீட்டிலும், நம்முடைய வீடுகளிலும் அப்படி இரும்பு அண்டாவிலேயே உணவு செய்யலாம். நாளுக்கு நாள் சாராயம் காய்ச்சுபவர்கள், பருத்திச் சூதாட்டத்தில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை சிறையில் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. சிறைச்சாலையில் கைதிகளை மனித உணர்ச்சியோடு நடத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அரசியல் கைதிகளையும் கூட மிகக் கேவலமான முறையில் நடத்துவது இந்தக்காலத்திற்கும் பொருந்தும்.

அடுத்தபடியாக போலீஸ் நிர்வாகத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்னைக்குப் புதிதாகக் கமிஷனர் போடப்பட்ட

பிறகு பலவிதமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. மிகவும் வரவேற்கத் தகுந்த மாறுதல்கள் தான் அவை. இன்றைக்குச் சாராயம் காய்ச்சுபவர்களின் எண்ணிக்கை மிக அதிக அளவில் குறைந்திருக்கிறது. அதற்கு ஆதாரம் முன்பு நான்கணு விற்ற சாராயப் புட்டி இன்று எட்டணுவாக இருந்து இருப்பதில் இருந்தே சாராயம் காய்ச்சும் தொழில் குறைந்திருக்கிறது. சாராயம் காய்ச்சுபவர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியும். இதைப்பற்றி போலீஸ் கமிஷனரே அறிக்கை விட்டிருக்கிறார். சென்னைக்கு முன்பெல்லாம் கோடம்பாக்கம் போன்ற பக்கத்து இடங்களில் இருந்து தான் வந்து கொண்டிருந்தன. போலீஸ்காரர்கள் மிகத் திறமையாகப் பணியாற்றியிருக்கிறார்கள்.

I in fact congratulate the Government on having appointed a young officer of that type. இப்படிப்பட்ட திறமைசாலிகள் அதிகம் வர வேண்டும். ஆனால் இது விஷயத்தில் கொஞ்சம் நியாயமாக நடக்க வேண்டும். ஒரு சின்ன சம்பவம் நாம் எல்லோரும் வருத்தப்படவேண்டியதாக நடந்திருக்கிறது. சாராயக்கேஸ் சம்பந்தமான ஒரு சில முஸ்லிம்கள் கைதி செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் முன்பு எப்பொழுதோ குற்றம் செய்தவர்களாய் இருக்கலாம். அவர்கள் மூலமாக உண்மை தெரிந்து கொள்ளலாம் என்பதற்காக, in the name of the suppression of these offence, இவர்களைக் கைதி செய்திருப்பதாக எனக்குத் தகவல் எட்டிற்று. அம்மாதிரி நடந்திருந்தால் அது வருந்தவேண்டிய விஷயம். பல விதமான குற்றங்கள் நடப்பதைத் தடுக்க sufficient amount of force should be used, justifiable force என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதற்காக இப்படிப்பட்ட காரியங்கள் இனிமேல் நடக்காமல் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். " First degree methods "கையாளுவது நல்லதல்ல.

THE. HON. SRI C. SUBRAMANIAM : " Third degree methods "— இது கோர்ட்டிலிருக்கும் விஷயம். இதைப் பற்றிப் பேசாமலிருப்பதே நல்லது".

SRI K. VINAYAKAM : இது கோர்ட்டிலே இருக்கிறபடியினால் இதை இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன். போலீசார்கள் மற்றவர்களிடத்தில் நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டுமென்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI V. BALAKRISHNAN : நண்பர் ஸ்ரீ விநயகம் அவர்கள் பெனிடென்ஷரி மாளிகையை . .

DEPUTY SPEAKER : May I know to whom the hon. Member is addressing.

SRI V. BALAKRISHNAN : I am facing the Chair.

DEPUTY SPEAKER : The hon. Member is not addressing the Chair.

* SRI V. BALAKRISHNAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நண்பர் விநயகம் அவர்கள் பெனிடென்ஷரி மாளிகையில் அவரது சொந்த அனுபவத்தைப் பற்றி சொல்லும் பொழுது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அவர் கைதியாகப் போனதால்தான் இவ்வளவு ஊழல்களும் வெளியாகின்றன. அவர் அடிக்கடி இம்மாதிரி ஜெயிலுக்கு போய்வாழ்ந்து வரும்படியாக ஆண்டவனை பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன். (சிரிப்பு).

போலீஸ் அதிகாரிகள் நடந்துக் கொள்ளும் விதத்தைப் பற்றியும் அவர்கள் சொன்னார்கள். அவர் சொல்லிய அவ்வளவையும் நான் ஒத்துக் கொள்ளுகிறேன். போலீஸ் கமிஷனர் ஸ்ரீ அருள் என்பவர் காட்டன் பெட்டிங் முதலியவைகள் இல்லாமல் செய்தார்கள் என்று கடை வீதிகளிலும், சந்

பொந்துகளிலும் அவர்கள் இப்பொழுது திறம்பட வேலை செய்கிறார்கள் என்று சிலாகித்துப் பாராட்டப்படுகிறார்கள். குறிப்பிட்ட சில போலீஸ் அதிகாரிகள் உயர்ந்த பதவிகளை வகிக்கிறார்கள். அவர்கள் கீழ் பதவியிலிருந்து திறமையாக வேலை செய்து மேலுக்கு வந்திருக்கிறார்கள். அது போல மற்றவர்களும் ஊக்கம் பெற்று திறமையாக உத்தியோகம் நடத்துவதற்கு உயர் பதவி அடைந்தவர்கள் என்னென்ன செய்திருக்கிறார்கள் என்று யோசித்து மற்ற போலீஸ் அதிகாரிகளும் நடந்து வந்தால் உயர்ந்த பதவியைப் பெறலாம். ஆனால் மேலே இருக்கக்கூடிய அதிகாரிகள், கீழே வேலை செய்யும் அதிகாரிகள் திறமையாக வேலை செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும். ஆனால் நடைமுறையில் பார்க்கப் போனால் கீழே இருக்கும் அதிகாரிகள் திறமையாக வேலை செய்தும், மேல் அதிகாரிகள் அவர்களுடைய திறமையை வெளிக்குக் கொண்டு வராமல் அடக்கி விடுகிறார்கள். அப்படி அவர்களுக்கு பெருமை தந்தால் தங்களுக்கு பிரமோஷன் வராது என்று நினைத்து சஞ்சலப் படுகிறார்கள். இம்மாதிரியான நிலைமை அகற்றப்பட வேண்டும். ஹைகோர்ட்டில் ஒரு ஜட்ஜ்மண்டில் இது மாதிரி ஒரு அதிகாரி சில குற்றங்களை கண்டுபிடித்து அதை நன்றாக தொடுத்து கோர்ட்டில் கேசை தாக்கல் செய்தவர்களுக்கு அரசாங்கம் போதுமான அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுமாதிரி செய்ய வேண்டும் என்று நான் மேல் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சாதாரணமாக போலீஸ்காரர்களைப் பற்றி பொது ஜனங்கள் என்ன பேசிக் கொள்ளுகிறார்கள், என்ன அபிப்பிராயப் படுகிறார்கள் என்பதைப் பற்றி சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். திருச்சியிலிருந்து துறையூருக்குப் பஸ்ஸில் போகும் போது இப்போது கிராமங்களில் குற்றங்கள் யாராவது செய்தால், குற்றங்கள் செய்திருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டவுடன், அவர்கள் வீட்டில் போலீஸ்காரர்கள் கிடுகிடு என்று நுழைந்து, குற்றம் செய்தவர்களை வாருங்கள் என்று விசாரிக்கிறார்கள். ஆனால் சுதந்திரம் வருவதற்கு முன் இம்மாதிரியாக இல்லை. குற்றம் செய்தவர்களைத் தனியே அழைத்துக் கொண்டு போய் பிறகு விசாரிப்பார்கள். இப்பொழுது அவர்களின் மனப்பான்மையே வேறு விதமாக இருக்கிறது. சாதாரணமாக திருட்டுக் குற்றங்கள் செய்கிறவர்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் பங்கு உண்டு, திருடர்களிடமிருந்து பங்கு கேட்கிறார்கள் என்று ஜனங்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். போலீஸ்காரர்கள் கேட்பது பிசகு என்று நான் சொல்லவில்லை. அவ்வாறு கேட்பது அவர்கள் பேரில் குற்றமில்லை. ஏனென்றால் அவர்களின் நிலைமை அப்படி இருக்கிறது. ஜனங்கள் இப்படியெல்லாம் பேசிக் கொள்ளுகிறார்கள் என்றால் ஒன்றும் இல்லாமல் எதையும் சொல்ல மாட்டார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது. போலீஸ்காரர்கள் பந்தோபஸ்துக்கா வெளியே சென்றால் அவர்களுக்கு பிரயாணப்படி ஒரு நாளைக்கு 12 அணு தான் கொடுக்கப்படுகிறது. சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் நூற்றுக் கணக்கான போலீஸ்காரர்கள் ஜில்லாக்களில் இருந்து தருவிக்கப் பட்டனர். அவர்களுக்கு சாப்பாடு மட்டும் கொடுக்கப்பட்டதே தவிர வேறு எந்த விதமான சௌகரியமும் செய்யப்படவில்லை. ஆனால் அவர்கள் மேல் அதிகாரிகளுக்கு மாத்திரம் எல்லா விதமான சௌகரியங்களும் செய்யப்பட்டன. கீழ் இருக்கும் சிப்பந்திகள் கண்காணிப்பு, பாதுகாப்பு முதலிய வேலைகளில் இருந்தார்கள். இவர்கள் விஷயத்திலும், கிராம அதிகாரிகளிடத்தில் காட்டியது போல் அரசாங்கம் சிறந்து அக்கரை காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

போலீஸ்காரர்களுக்கு நோட் புஸ்தகங்கள், பேனு, பென்சில், கார்ப்பன் முதலியவைகள் வாங்கிக் கொடுப்பதில்லை. போலீஸ் ஸ்டேஷனுக்கு ஜனங்கள் அவர்கள் குறைகளைச் சொன்னால், ரைட்டர் அவர்களை மரியாதையாக நடத்துவது கிடையாது, அவர்களையே பேனு கொண்டு வந்தீர்களா ? பேப்பர் இருக்கிறதா ? என்று கேட்கிறார்கள். இது அவர்களின் குற்றம் அல்ல. அவர்களுக்கு போதுமான அளவு பேப்பர், பென்சில், கார்பன் முதலியவைகள் கொடுப்பதில்லை. போலீஸ்காரர்கள்

[Sri V. Balakrishnan] [22nd December 1956

இம்மாதிரியாக பொது மக்களிடமிருந்து எதிர்ப்பார்ப்பது தப்பு. போலீஸ்காரர்களுக்கு சம்பளம் ரூ. 40 தான் கிடைக்கிறது. "எங்கள் குடும்பம் பெருசு" என்று அவர்களின் குடும்பம் பெரிதாக இருக்கிறபோது பிரயாணப் படியையாவது கூட்டக்கூடாதா?

மேலும் போலீஸ்காரர்கள் அணியும் தலைப்பாகை பார்ப்பதற்கு அவ்வளவு நன்றாக இல்லை. மிகவும் நீளமாகவும், சிகப்பாகவும் இருக்கிறது. பெரியோர்களுக்கு வெறுப்பாகவும், சின்ன குழந்தைகள் கண்ணுக்கு பயமாகவும் இருக்கிறது. அவர்கள் இந்தத் தலைப்பாகையை எடுத்து விட்டு நாலு பக்கங்களிலும் அகலமாகவுள்ள தொப்பியை அணிந்தால் மிகவும் அழகாக இருக்கும். அவர்களுக்கு மழைக்காலங்களிலும், வெய்யில் காலங்களிலும் உதவியாக இருக்கும். ஆங்கிலேயர்கள் போல் உடை அணிந்து கொள்ள வேண்டும். கனம் மந்திரி அவர்கள் அவர்களுக்கு இவைகளெல்லாம் செய்து கொடுத்து, போலீஸ்காரர்கள் பொது மக்களிடம் அன்பாகவும், நேசமாகப் பழக வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI V. GOPALA GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை கனம் நிதி மந்திரி அவர்களுக்கு குறிப்பிட்டு சொல்ல ஆசைப்படுகிறேன். ஜில்லாக்களில் பொதுவாக இந்த ராஜ்யத்திலே உள்ள நீதிஸ்தலங்களிலே உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். அதாவது ஜில்லா ஜட்ஜுகள் நியமிப்பதில் ஜுடிஷியல் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் என்ற காடரில் இருந்து நியமிப்பதாக எனக்கு தோன்றவில்லை. சப்-ஜட்ஜுகளில் இருந்து தான் இவ்வாறு நியமனம் செய்யப்படுகிறது. இந்த நியமனம் ஹைகோர்ட்டின் சிபார்சின் பேரில் தான் நடைபெறுகிறது. ஆனால் ஹைகோர்ட்டில் எந்த விதமான **Principles**-ஐக் கொண்டு இதைச் செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஏற்கனவே ஜில்லா மாஜிஸ்டிரேட் கேடரானது ஜில்லா ஜட்ஜு கேடருக்கு சமமாக வைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு அந்தக் கேடரை ஜில்லா ஜட்ஜுக்கும் சப்-ஜட்ஜுக்கும் மத்தியில் வைத்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக ரொம்பவும் ஸீனியர் சப்-ஜட்ஜுகளாக இருப்பவர்களை ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளாக நியமனம் செய்து, அவர்களுக்கு உடனே ஜில்லா ஜட்ஜு அதிகாரம் கொடுக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படியிருந்தும், இப்பொழுது ஹைகோர்ட்டின் சிபார்சின் பேரிலே ஜூனியர் சப்-ஜட்ஜாக இருந்தாலும் அவர்களுக்கு மேலே ஸீனியர்கள் இருந்த போதிலும் அந்த ஜூனியர் சப்-ஜட்ஜுகளை ஜில்லா மாஜிஸ்டிரேட்டாக நியமனம் செய்யப் படுவதாகத் தெரிகிறது. அதுமட்டுமல்ல, ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளுக்கு ஒரு தனிப்பட்ட அதிக ஊதியம் ரூ. 50 அல்லது 100 கொடுக்கப்படுவதாகவும் தெரிகிறது. அதனால் ஸீனியர் சப்-ஜட்ஜுகள் அந்தக் குறைபாடுகளை வெளியிடுவதற்கு முடியாமல் ஒரு விதமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக நீதிபதிகளுக்கு இந்த அதிருப்தி ஏற்பட்டால் அது நீதி நிர்வாகத்திற்கே பங்கம் விளைவிக்கும். ஆகையால் ஸீனியர் சப்-ஜட்ஜுகளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, நான் குறிப்பிட விரும்புவது மது விலக்கு சம்பந்தமாக. போன வருஷம்கூட நான் இதைப் பற்றி குறிப்பிட்டேன். அப்படியிருந்தும் சர்க்கார் அதைக் கவனிக்கவில்லை. பிறகு இந்த வருஷம் தான் அதற்கு விமோசனம் ஏற்பட்டிருக்கிறது. ஹைகோர்ட்டே இதைப்பற்றி ஒரு தீர்ப்பு கூறியிருக்கிறது. அந்தத் தீர்ப்பின் நகல் அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டு ஒரு மாதமாகியும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மது விலக்கு சட்டத்தை நாம் வெற்றிகரமாக அமுல் நடத்த வேண்டுமென்று எதிர் பார்க்கிறோம். சட்டத்தை எந்த முறையில் அமுல் நடத்த வேண்டுமென்ற **procedure** சரியாக இல்லை. ஏற்கனவே மது விலக்குச் சட்டத்திலே விசாரணை எந்த விதத்தில் நடத்த வேண்டுமென்பது பற்றி ஐந்தாவது அத்தியாயத்தில் (Chapter V) குறிப்பிடப்பட்டிருந்தது.

22nd December 1956] [Sri V. Gopala Goundar]

Criminal Procedure Code திருத்தப்பட்டவுடன் சில சங்கடங்கள் அதில் ஏற்பட்டன. மதுவிலக்கு இலாகாவும் போலீஸ் இலாகாவுடன் சேர்ந்த பிறகு, போலீஸ்காரர்கள் எந்த முறையிலே குற்றங்களை விசாரிக்க வேண்டும், எந்த முறையிலே கோர்ட்டுகளில் குற்றவாளிகளை ஆஜர்படுத்த வேண்டும், கோர்ட்டு எந்த **procedure**-ன் பேரில் நடவடிக்கை நடத்தி தண்டனை கொடுக்க வேண்டுமென்ற பிரச்னைகளெல்லாம் எழுந்தன. இந்தப் பிரச்னையைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தும் அது பற்றி சர்க்கார் கவனம் செலுத்தவில்லை. அநேகம் பேர்கள் தண்டிக்கப்பட்ட பிறகு **procedure** தப்பு என்று தண்டனை ரத்து செய்யப்பட்டது அல்லது சில கேஸ்களிலே **procedure** தெரியாமலேயே ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகள் அவர்கள் இஷ்டம் போல் அவர்கள் கீழுள்ள **subordinate** மாஜிஸ்டிரேட்டுகளுக்கு உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருந்தார்கள். இம்மாதிரி அநேக கோளாறுபடிகள் நடந்து கொஞ்ச நாளைக்கு முன்பு ஹைகோர்ட்டில் நீதிபதிகள் ராமசுவாமி கவுண்டரும், சோமசுந்தரமும் ஒரு கேஸில் இதைப் பற்றி தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். இதில் **procedure** தகராறு இருக்கிறது. அதனாலே இந்த சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் ஐந்தாவது பிரிவை எடுத்து விட வேண்டும். அதில் கூறப்பட்டிருக்கிற **procedure** சரியாக இல்லை என்று தீர்ப்பில் சிபார்சு செய்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் நகலை கனம் மந்திரி அவர்களுக்கு அனுப்ப தயார்செய்து கொண்டிருக்கிறேன். மதுவிலக்குச் சட்டம் நல்ல முறையில் அமுல் செய்யப்பட வேண்டுமென்றால் **procedure** சரியாக இருக்க வேண்டும். நீதிபதிகளும் போலீஸ்காரர்களும் இது விஷயமாக நிச்சயமாக எந்த **procedure**-ன்படி நடந்து கொள்ள வேண்டுமென்று சட்டத்தில் தெளிவாக இருந்தால்தான் சட்டம் நேர்மையாகவும் சுமுகமாகவும் அமுல் செய்யப்படும். தயவுசெய்து இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கனம் நிதி மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதைத் திருத்த சட்டம் கொண்டு வருவதற்கு நமது சர்க்காருக்கே **voice** இருக்கலாம். கூடுமானால் சர்க்காருக்குள்ள அதிகார வரம்பிற்குட்பட்டே **executive instructions** மூலம் எந்த **procedure**-ஐ **adopt** செய்யவேண்டுமென்று ஒரு அறிக்கை விடவேண்டும்.

மூன்றாவதாக, ஆந்திர நாடு பிரிந்து வருஷக்கணக்கில் ஆயிற்று. தங்கள் நாட்டினருக்கே உத்தியோகம் கொடுக்கும் மனப்பான்மை ஆந்திர சர்க்காருக்கு இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, நம் ஹைகோர்ட்டில் இன்னமும் 2, 3 ஆந்திர அதிகாரிகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இவர்களையும்கூட சீக்கிரத்திலேயே ஆந்திராவுக்கு அனுப்பிவிட்டு நம் நாட்டு ஆபீஸர்களையே நியமிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சப்ஜெயிலைப்பற்றி நமது பாலகிருஷ்ணன், விநாயகம் முதலியவர்கள் விரிவாகப் பேசினார்கள். ஆகையால் அதுபற்றி நான் அதிகமாகப் பேசவில்லை. பொதுவாக சப்ஜெயில்கள் ஏற்கெனவே இருந்த நிலைமையிலேதான் இருக்கின்றன. நான் வக்கீலாக இருப்பதால் சப்ஜெயிலைப்பற்றி எனக்குத் தெரிந்ததை சொல்லுகிறேன். ஏற்கெனவே சப்ஜெயில்கள் மாஜிஸ்டிரேட் பாதுகாப்பில் இருந்தன. இப்பொழுது அவைகள் டெப்யூடி தாசில்தார் பாதுகாப்பில் விடப்பட்டிருக்கின்றன. அதனால், சில சமயங்களில் கோர்ட்டுகளில் கைதிகள் சரியான சமயத்துக்கு ஆஜர் செய்யப்படுவதில்லை தாமதமாகிறது. ஜாமீன் ஆர்டர் வாங்கிக்கொண்டு தாசில்தாரை தேடிக்கொண்டு போகவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சப்ஜெயில்களையும் மாஜிஸ்டிரேட் **Control**-லிலே விட்டுவிடுவது நலம் என்று நான் சர்க்காருக்கு யோசனை கூறுகிறேன். அதோடு மட்டுமல்ல. சில கேஸ்களில் கைதிகளை **Confession** ரிகார்டு செய்வதற்காக **Lock-up**-ல் வைத்திருக்கிறார்கள். அப்பொழுது கைதிகள் **Judicial lock-up**-ல் வைக்கப்படவேண்டுமென்று விதி இருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது **Police lock-up**-ல் வைத்திருந்தால் டெப்யூடி தாசில்தாரையோ அல்லது மற்ற அதிகாரிகளையோ சரிக்கட்டிக்கொண்டு கைதியை யார் வேண்டுமானாலும் பார்ப்பதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அதனால்

பிற்பாடு சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே சப்ஜெயில்கள் மாஜிஸ்டிரேட் பாதுகாப்பில் இருந்தால் அது சட்டபூர்வமாகக்கூட அனுகூலமாக இருக்கும். மேலும் சப்ஜெயில் மாஜிஸ்டிரேட் பாதுகாப்பில் இருந்தால் கைதிகளைக்கொண்டு வருவதற்கு மாஜிஸ்டிரேட் தாசில்தாருடைய தயவைத் தேடவேண்டியதில்லை. ஆகவே சப்ஜெயில்களை மாஜிஸ்டிரேட் **Control**-க்கே திரும்பவும் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேர்ந்தாற்போல் இன்னொரு யோசனையும் சொல்லுகிறேன். சப்ஜெயில் கைதிகளுக்கு சாப்பாடு போடும் கண்டிராக்டர் வார்டர் முதலியவர்களெல்லாம் தாசில்தார் மேற்பார்வையில் இருக்கிறார்கள். சாப்பாடு சரியாக இல்லை என்று கைதி புகார் செய்தால் மாஜிஸ்டிரேட் தாசில்தாருக்கு எழுதி பிறகு அவர் டெப்யூடி கலெக்டருக்கு எழுதி நாமதாமாகிறது. ஆகையால் இந்தப் பொறுப்புகளையும் மாஜிஸ்டிரேட்களிடமே ஒப்புவித்துவிட்டால் நல்ல முறையிலே சப்ஜெயில்கள் நடக்கும், நல்ல பாதுகாப்பும் இருக்கும். இந்த யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொள்வார்கள் என்றே நினைக்கிறேன். மற்றபடி ஸ்ரீ பாலகிருஷ்ணன், ஸ்ரீ விநாயகம் அவர்கள் இதைப்பற்றி விரிவாகப் பேசினார்கள். எனக்கு அவ்வளவு அநுபவம் இடையாது. பல குறைகள் இருக்கலாம். அந்தக் குறைகளையும் நீக்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

Sri S. SWAYAMPRAKASAM: கனம் உதவி சபா நாயகர் அவர்களே! இன்றைய தினம் இந்த நீதி நிர்வாகத்தைப்பற்றிய வெட்டுப் பிரேரணைகள் சம்பந்தமாக சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். நீதி நிர்வாகம் இந்த நாட்டிலே நடந்துகொண்டிருந்த காலத்திலிருந்து தற்காலம் ஏற்படும் புதுச் சட்டங்கள் மக்களின் மனதை மாற்றும்போது இத்தனை கச்சேரிகள் அவசியமா என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சென்ற பல ஆண்டுகளாக சிவில் **Side**-ல் **Debt Conciliation Act, Agriculturists Relief Act** போன்றவைகள் வந்த காரணத்தால் **Civil Side**-ல் கச்சேரிகளில் வேலை மிகவும் குறைவாய் இருந்துவருகிறது. **Prohibition** வந்தபிறகு **Criminal Court**-லும் வேலை குறைந்திருக்கிறது. ஆகவே **Criminal side** பக்கமும் **Civil side** பக்கமும் பார்ப்போமேயானால் கச்சேரிகளில் கேஸ்கள் மிகவும் குறைந்திருக்கின்றன. ஆகவே பல கச்சேரிகளிலும் தகுந்தமுறையில் வேலையில்லையென்றே சொல்லவேண்டும். ஆகையினால் இந்த முறையிலே இவ்வளவு கச்சேரிகள் அவசியமா என்று பார்ப்பதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். சில ஊர்களில் சிவில் பாகத்தில் வேலை அதிகமாக இருக்கிறது; சில ஊர்களில் கிரிமினல் பாகத்தில் வேலை அதிகமாக இருக்கின்றன. ரங்கஸ்வாமி ரெட்டியார் அவர்கள் சில ஊர்களில் கேஸ்கள் சீக்கிரமாக கச்சேரிகளில் எடுபடாத காரணத்தினால் கட்சிக்காரர்களுக்கு தொந்தரவு அதிகப்பட்டு வருகின்றதென்று சொன்னார்கள். ஆங்கிலத்தில் ஒரு பழமொழியைச் சொல்லும்போது, தாமதப்பட்டு நியாயம் வழங்கப்படுமேயானால் அதில் நியாயம் இருக்கமுடியாது என்று சொன்னார்கள். இப்பொழுது **High Court**-ல் என்ன சொல்கிறார்கள் என்றால் தீவிரமாக கேஸ்களை எடுத்து அவர்கள் தீர்ப்பு சொல்ல வேண்டுமென்ற அடிப்படையில் ஒரு **Circular**-யை வைத்துக்கொண்டு எந்த ஊரில் கேஸ்கள் அதிகம் இல்லையோ அந்தயிடங்களில் வெகு சீக்கிரமாக அந்தக் கேஸ்களை எடுக்க வேண்டுமென்று அவர்கள் கேஸ்களை எடுத்து அந்தக் கட்சிக்காரர்களுக்கு விரோதமாக தீர்ப்புகள் பல கூறவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சில இடங்களில், கச்சேரியில் மனுச்செய்த பிறகுதான் கலெக்டருக்கு அஜ்மாஷ்-க்கு அனுப்பப்படுகிறது. கச்சேரியில் கேஸ் **file** பண்ணி மூன்று நான்கு நாட்களுக்குள் தீர்ப்புத் தரவேண்டுமென்றால், கலெக்டருக்கு அவசரமாயிருந்து அஜ்மாஷ் செய்யமுடியாமல் இருந்தால், வேண்டிய தஸ்தாவேஜ் இல்லாத காலத்தில் தீர்ப்பு சொல்லும்போது அது அவருக்கு விரோதமாக முடிகிறது. கச்சேரிகளில் வேலையில்லாத காரணத்தால் அவசரப்பட்டு கட்சிக்காரர்களுக்கு விரோதமாக அவர்களுக்கு நல்ல கேஸ்கள் இருந்தபோதிலும்கூட அவருக்கு விரோதமாக தீர்ப்பு கூறும்

நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் எங்கெங்கே கச்சேரிகளில் வேலையில்லையோ அந்தயிடத்திலுள்ள ஜில்லா ஜட்ஜையும் இன்னொரு ஜில்லா ஜட்ஜையும் சேர்த்து, அதாவது இரண்டு இடத்திற்கும் சேர்ந்து, இரண்டு ஜட்ஜ்களுக்குப் பதிலாக ஒரே ஜட்ஜ்போதும்; அப்படி செய்து அந்த ஜில்லா ஜட்ஜை அங்கு 15 நாள் இங்கு 15 நாள் என்று சொல்லி சுற்றுப் பிரயாணம் செய்து ஏன் கேஸ்களை தீர்க்கக்கூடாது?

உதாரணமாக, தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அங்குள்ள கேஸ்களைத் தீர்க்க நாகபட்டிணத்தில் ஒரு ஜட்ஜும், தஞ்சாவூரில் ஒரு ஜட்ஜும் இருக்கிறார்கள். அவ்விரண்டு பேர்களுக்கும் ஒரு நாளுக்கு அரை மணிநேர வேலைக்கூடக் கிடையாது. அங்கு 12 மணிக்குமேல்தான் கச்சேரிக் கதவையே திறக்கிறார்கள். நான் அங்கு வக்கீல் என்ற முறையில் 12 மணிக்கு ஒரு நாள் போனபோது கச்சேரியே திறக்கவில்லை. அப்பொழுது நான் நினைத்தேன், இன்று லீவ் நாளோ, அது தெரியாமல் வந்துவிட்டோமோ என்று நினைத்துக்கொண்டிருக்கும்போது அங்குள்ள **peon** வந்து வாசற்கதவைத் திறக்க வந்தான். நான் கேட்டேன், இன்று கச்சேரி இல்லையா, பின் ஏன் மணி 12 ஆகியும் திறக்கவில்லையென்று. அதற்கு அவன், "ஒரு நாளும் 12 மணிக்கு முன் கச்சேரி திறப்பதில்லைங்களே" என்று சொன்னான். பன்னிரண்டு மணிக்குப் பிறகு ஜட்ஜ் வந்தார். வந்த ஒரு அரை மணி நேரம்கூட ஜட்ஜ் இருக்கவில்லை. **ex parte**-ஆய் உள்ள கேஸ்களைக் கூட மாற்றி வைத்துவிட்டார். அவருக்கு **blood pressure**-ஆம். அதற்கு மேல் இருக்கமுடியாதாம். அந்தக் கோர்ட்டுகளை எடுத்துப் பார்த்தால் ஆதி காலத்தில் அங்கு ஒரு ஜட்ஜுக்கு இருந்த வேலையில் பாதிகூட இல்லை. ஏன் கால் பங்கு வேலைகூட இருக்கிறதா என்பது சந்தேகமே. ஆகவே இப்படியிருக்கிற சமயத்தில் **Subordinate Judge** என்ற பதவி எதற்காக இருக்க வேண்டும்? எதற்கு தனிப்பட்ட முறையில் சிவில் கேஸ்களை **file** பண்ணவேண்டும் இப்பொழுது அவர்களுக்கோ வேலை கிடையாது. ஆகவே இதுபற்றி அரசாங்கத்தார் தீவிரமாக ஆலோசித்து வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த **Subordinate Judge post** இருக்கவேண்டுமா? **Munsif**-க்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால் போதாதா. ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் இரண்டு இடங்களில் ஒவ்வொரு ஜில்லா ஜட்ஜ் இருப்பதற்குப் பதிலாக இரண்டு பேர்களுக்குப் பதிலாக இரண்டு இடங்களுக்கும் சேர்ந்து ஒரு ஜட்ஜ் என்று போட்டு ஒவ்வொருயிடத்திலும் 15 நாட்கள் வீதம் சென்று கேஸ்களைத் தீர்க்கலாம்; அதற்கான ஏற்பாடுகளை சர்க்கார் செய்தால் நன்றாய் இருக்கும். அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். சர்க்காரிலிருந்து சொல்லலாம், **Administration side**-ல் நமக்கு நஷ்டமில்லையென்று. ஆகவே அப்படியே இருக்கட்டும் என்று சொல்வார்கள். இதைப்பற்றி **High Court**-யிடம் கேட்டால், இருக்கிற ஆட்களுக்கு ஆபத்து வருமோ என்று பயந்து இப்பொழுது இருப்பதுபோல்தான் இருக்கவேண்டுமென்று சொல்வார்கள். ஆகவே ஹைக்கோர்ட்டின் ஆலோசனையைக் கேட்காமல் இன்றைய தினம் இதனால் மக்களுக்கு தீங்கிழைக்கப்படுகிறது, அவ்வுத்தியோகஸ்யர்களுக்கு சம்பளத்திற்குத் தகுந்த வேலை இல்லையென்ற முறையிலும் இதை பரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் **Munsifs**-க்கோ **Judge**-க்கோ சில ஊர்களில் தகுந்த முறையில் வேலையில்லை. சட்டப்படி பார்த்தாலும் சில விஷயங்களுக்கு, சில பிரச்னைகளுக்கு தீர்ப்புச் சொல்ல வேண்டிய பொறுப்பு ஜில்லா கலெக்டர்களுக்கும், **Endowment Act**-படி அவருக்கு அதிகாரமிருக்கிறது. ஜில்லா கலெக்டர்களுக்கு வேலை அதிகமாகிவிட்டது. இப்பொழுது **Encroachment Act**-கீழ் உள்ள கேஸ்களை கலெக்டர்தான் விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. **Appeal** கொடுக்க வேண்டுமானால் **Stay**-ம் கொடுக்கிறார்கள். ஆக கலெக்டர்களின் வேலை அதிகமாகியிருக்கிறது. இம்மாதிரி கேஸ்களை **Judicial** முறையில் தீர்ப்புச் செய்யவேண்டுமென்றால் இந்தச் சட்டத்தை எடுத்துவிட்டு வேறு ஒரு

[Sri S. Swayamprakasam] [22nd December 1956

மசோதா கொண்டுவந்து ஜில்லா ஜட்ஜுகளிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்தால் அது நலமாயிருக்குமென்று நான் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். **Encroachment Act 57**-ம் செக்ஷன்படி அக்கேஸ்களை கலெக்டரே கேட்டு தீர்ப்பளிக்க வேண்டும். ஆகவே, நான் சொல்வதென்னவென்றால், கலெக்டர்களிடமும், **Deputy Commissioner**-யிடமுள்ள அதிகாரங்களை, இப்பொறுப்பை **Munsif** அல்லது ஜில்லா ஜட்ஜுகளிடமோ கொடுத்தால் நலமாய் இருக்கும். கலெக்டர்களுக்கோ, **Deputy Commissioner**-க்கோ அவகாசமும் சரியான சூழ்நிலையும் இல்லாதிருப்பதினாலும், **Munsif**, ஜில்லா ஜட்ஜுகளுக்கும் கொடுத்தால் வேலை குறைவாக இருப்பதாலும் அவர்களுக்கு வேலையில்லாத காலத்தை சரியானபடி உபயோகித்துகொள்வதோடு மக்களுக்கு தகுந்த முறையில் நியாயம் வழங்கவும் முடியுமென்று கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI C. KANDASAMY: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு நீதி நிர்வாகம் பற்றி பல விஷயங்கள் இங்கு பேசப்பட்டது. முடிவாக இதன்மீது நான் மேலெழுந்தவாரியாக பேச விரும்பவில்லை. இந்த கோரிக்கையின்போது சில குறிப்பிட்ட விஷயங்களை மாத்திரம் மந்திரி அவர்களின் கவனத்திற்காகவும் இதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகவும் குறிப்பிட விரும்புகிறேன். சமீபத்தில் தஞ்சை ஜில்லாவில் சில விவசாயிகள் வேலை நிறுத்தம் செய்ததின் காரணமாக அவர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். அதற்கு பிறகு கோர்டில் அப்பீல் செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்கள். இது அங்கே நடக்கக்கூடிய சர்வ சாதாரணமான விஷயம். இன்று விவசாயிகளுக்கு அவர்களுடைய குறைகளை போக்கிக்கொள்ள வேண்டுமென்றால் வேலை நிறுத்தம் செய்தாக வேண்டியிருக்கிறது. ஆகவே இப்படி சிறைக்கு அனுப்பப்பட்ட விவசாயிகள் ஜெயிலிலிருந்து விடுதலையான பிறகு அங்குள்ள சில குறைகளைபற்றி சொன்னார்கள். அதாவது ஜெயில் அதிகாரிகள் இந்த விவசாயிகளை கம்யூனிஸ்டுகள் என்று காரணம் காட்டி அதிக கொடுமைப்படுத்தியதாகவும் அதிக வேலை செய்ய நிர்பந்தித்ததாகவும் சொன்னார்கள். ஆகவே இன்றைக்கு போலீஸ் அதிகாரிகளுடைய மனோபாவம் மாறவில்லை, ஏதோ சிலருக்கு மாத்திரம் அந்த மனோபாவங்கள் எல்லாம் மாறிக்கொண்டு வருகிறது. அதைப்பற்றி இப்போது விமர்சனம் செய்யவேண்டிய தேவையில்லை. இன்றைக்கு ஜனநாயகம் எந்த அளவுக்கு மாறிக்கொண்டு வருகிறதோ அந்த அளவுக்கு அவர்கள் போக்கும் மாறவேண்டும். இருந்தபோதிலும்கூட இன்றைக்கும் அன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் தயார் செய்யப்பட்ட அந்த வர்க்கத்தின் தன்மை இன்னும் கொஞ்சம் மிச்ச சொச்சங்கள் இருக்கத்தான் செய்கிறது. அம்மாதிரி சில உத்தியோகஸ்தர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். என்னை பொறுத்தவரையில் தஞ்சாவூர் ஜில்லாவில் நடந்த ஒன்றிரண்டு காரியங்களை ஊர் பெயர் குறிப்பிட்டு சொல்லவிரும்புகிறேன். அது சம்பந்தமாக ஐ.ஜி.ஆப் போலீஸ் **(I.G. of Police)** க்கும் எழுதியிருக்கிறேன். அவர்களும் ஏதோ விசாரணை செய்திருப்பதாக தெரிகிறது. சாதாரணமாக அதிகாரிகளை பற்றி விசாரணை செய்யும்போது ரொம்பவும் உஷாராக வேலைசெய்யவேண்டியிருக்கிறது. அதாவது இப்போது ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின்மேல் ஒரு சாதாரண மனிதர் ஒரு குற்றச்சாட்டை கொண்டுவர வேண்டுமென்றால் ரொம்பவும் நெஞ்சம் துணிந்த வகையில் தான் கொடுக்கவேண்டியிருக்கிறது. அவ்வளவு கஷ்டங்கள் இருக்கிறது. ஆனால் வேண்டுமென்றே குற்றசாட்டுகள் கொண்டுவருவதுமுண்டு. அந்த முறையில் விசாரணை நடத்தும்போது புகார் கொடுக்கப்பட்டது சரியானது அல்ல என்று நிரூபமானால் புகார் கொடுக்கப்பட்டவர்களுக்கும் தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். அப்போதுதான் வீண் புகார் கொடுப்பது குறையும் என்று குறிப்பிட விரும்புகிறேன். அடுத்ததாக சமீபத்தில் திருத்துறைப்பூண்டியில் நடந்த ஒரு சம்பவத்தை குறிப்பிட விரும்புகிறேன். அதாவது ஒரு அனாதைப் பெண்ணை அங்குள்ள போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் ஒரு போலீஸ்காரரும் சேர்ந்து அழைத்துக்கொண்டுபோய் துன்புறுத்தி கற்பழித்தார்கள்

22nd December 1956] [Sri C. Kandasamy]

என்று ஒரு புகார் என்னிடத்தில் வந்தது. அந்த சமயத்தில் அந்த ஊர் முழுவதும் பெரிய பரபரப்பு ஏற்பட்டிருந்தது. பின்னால் நான் இதை கேட்டு அந்த ஊர்காரரிடம் இது விஷயமாக எந்த விதமான குழப்பமோ கிளர்ச்சியோ ஏற்படக்கூடாது என்று அவர்களிடம் சொல்லிவிட்டு, ஐ.ஜி. ஆப் போலீஸுக்கு, இந்த புகாரைப்பற்றி விசாரிக்கவேண்டும் என்றும், உடனே அந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரை மாற்றவேண்டும் என்றும் எழுதியிருந்தேன். பின்னால் அவர் இடமாற்றப்பட்டார். அதற்கு பின்னால் அறிய வந்தது என்னவென்றால் இதைப் பற்றி விசாரித்ததில் குற்றம் சரிவர ருசுவாகவில்லை என்று கூறி ரெபர் (refer) செய்திருப்பதாக அறியமுடிந்தது. ஆனால் இந்த விஷயத்தில் அந்த பெண்ணை டாக்டர் பரிசோதனை நடத்தியிருக்கிறார்கள். இது தவிர இந்த சம்பவத்தை பற்றி சாட்சியம் சொல்லுவதற்கும் பலர் அங்கு தயாராய் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் இது ரெபர் (refer) செய்யப்பட்டதாக தெரிகிறது. இது என்ன என்று விசாரித்ததில் இந்த சம்பவத்தை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி இந்த சம்பவத்திற்குட்பட்ட சப் இன்ஸ்பெக்டரின் ரத்த பாத்தியம் உள்ள உறவினர் என்றும் அதனால்தான் இது ரெபர் (refer) செய்யப்பட்டது என்றும் தெரியவருகிறது. ஆனால் இதுவரை எனக்கு திட்டவட்டமாக பதில் வரவில்லை. ஆகவே இம்மாதிரியான சம்பவங்களில் விசாரணை சரியாக நடத்தப்படவேண்டும். இம்மாதிரியாக வளர்ந்து வரும் முறை மேலும் வராமல் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு சம்பவம், என்னவென்றால் ஒரு கிருஸ்தவ பெண் ஒரு ஹிந்து வாலிபனை மணந்து கொண்டார். அதாவது அவர்கள் ரெஜிஸ்டர் செய்துகொண்டார்கள். அதற்கு பின்னால் அந்த ஹிந்து வாலிபனின் தகப்பனார் இதை தடுப்பதற்கு வேண்டி பல முயற்சிகள் எடுத்ததாகவும் அதற்கு அங்குள்ள போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் உடந்தையாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இப்படி பல குற்றச்சாட்டுகளும் புகார்களும் வந்து கொண்டிருக்கிறது. அதையும் குறித்து வைத்துக்கொண்டிருக்கிறேன். இம்மாதிரியாக போலீஸ் அதிகாரிகளின் நடவடிக்கைகள் பழைய போக்கிலே போய்க் கொண்டிராமல் மாறவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை சுட்டிக்காட்டவிரும்புகிறேன்.

*அடுத்தபடியாக மாயவரத் தாலுகாவில் குத்தாலத்தில் நடந்துகொண்டிருந்த ஷோவில் **(Gambling)** சூதாட்டங்களை நிறுத்துவதற்காக அங்குள்ள நகர காங்கிரஸ் கமிட்டி மெம்பர் பஞ்சாயத்து போர்ட் உப தலைவர் இவர்கள் எல்லாம் எடுத்த முயற்சியின் காரணமாக நிறுத்தப்பட்டது. பின்னால் இந்த சூதாட்டங்களை நிறுத்துவதற்கு காரணமாயிருந்த இவர்கள் பேரில் பழி வாங்குவதற்காக பல வேலைகளையும் அங்குள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர் செய்து வருவதாக தெரிகிறது. இந்த முக்யஸ்தர்கள் ஏதோ சாக்குவைத்து கைதுசெய்து ஜாமீனில் விடப்பட்டுள்ளனர் இதைப்பற்றி முதல் மந்திரி அவர்களுக்கும் புகார் கொடுக்கப்பட்டு அவர்களிடம் நேரில் கண்டு சொன்னதற்கும் நமது முதல் மந்திரி அவர்கள் எப்போதும்போல் "பார்க்கலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இம்மாதிரி சட்டசபைகளில் சொல்லப்படும் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் அவர்களுடைய புகார்களை கவனிப்பதற்கும், இந்த புகார்களை யார் சொல்லுவதாய் இருந்தாலும் சரி காங்கிரஸ்காரர்கள் சொல்லுவதாய் இருந்தாலும் சரி, கம்யூனிஸ்டுகாரர்கள் சொல்லுவதாய் இருந்தாலும் சரி கட்சி பற்றற்ற நடுநிலைமையாளர்கள் சொல்லுவதாய் இருந்தாலும் சரி அவர்கள் சொல்லப்படும் விஷயங்களை உடனடியாக நிவர்த்திசெய்ய வேண்டிய நடவடிக்கை எடுத்தால்தான் சாதாரண மக்களுக்கு நன்மை செய்ததாக இருக்க முடியும். இதுதவிர சமீபத்தில் பல இடங்களிலும் சாதாரணமாக சாராயம் காய்ச்சுதல் நடைபெற்று வருகிறதாக புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஏற்கனவே தஞ்சாவூரை பொறுத்தமட்டில் அங்கு இது கூடுதலாக இல்லை என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். ஆனால் சமீபத்தில் நகரப்புறங்களில் இது அதிகரித்திருக்கிறது.

[22nd December 1956

DEPUTY SPEAKER : The time given for the hon. Member is over.

SRI C. KANDASAMY : I have been given only a few minutes, Sir.

DEPUTY SPEAKER : The time allotted for the Demands under discussion is only one hour and the Hon. Minister has still to reply. I will give two more minutes for the hon. Member to finish his speech.

SRI C. KANDASAMY : இன்னொரு விஷயம் சொல்லவிரும்புகிறேன். இந்த பிரோகிபிஷன் (Prohibition) கமிட்டியார் நடத்தும் கூட்டங்களில் சகல கட்சியிலுள்ளவர்களையும் அழைப்பது கிடையாது. உதாரணமாக சமீபத்தில் முத்துப் பேட்டை என்ற இடத்தில் பிரோகிபிஷன் கமிட்டியார் (Prohibition Committee) நடத்திய கூட்டத்தில் அங்குள்ள யூத் காங்கிரஸின் (Youth Congress) அடிப்படையிலே நடத்தினார்கள். அதற்கு கலெக்டரோ அல்லது கலெக்டர் அவர்களின் பெர்ஸனல் அஸிஸ்டன்டோ (Personal Assistant) தலைமை வகிக்கிறார்கள். மற்றும் பல காங்கிரஸ் தலைவர்களும் பங்கு கொள்ளுகிறார்கள். கம்யூனிஸ்டு தலைவர்களை அழைப்பது கிடையாது. ஆதலால் அவர்களும் போவதில்லை. இம்மாதிரியான முறை மாறவேண்டும், அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் அதிகமாக பேசி இவைகளைப்பற்றியெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். விவாதத்தில் கூறப்பட்ட பல விஷயங்களையும் அரசாங்கம் நன்றாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டிய காரியங்கள். நான் இப்போதே உடனடியாக உண்டு அல்லது இல்லை என்று பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். கனம் அங்கத்தினர் விநாயகம் அவர்கள் தான் சிறை சென்றதைப்பற்றியும் அப்போது அங்கு நடந்த விஷயங்களையும், அங்குதான் ரொம்பவும் துன்பங்களையும் அனுபவித்ததாகவும் சொன்னார்கள். அதிலிருந்து ஒரு காரியம் நிச்சயமாகிறது. அதாவது அவர் ஜெயிலுக்கு போயிருந்தபொழுது சுகமாக இருக்கவில்லை, கஷ்டமனுபவித்தார் என்பதை நாம் உணரும்படி சொல்லுவதாக இருந்தது. எதானாலும் இந்த சபையை பொறுத்த மட்டில் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக சப் ஜெயில்கள் எல்லாம் ரொம்ப மோசமாக இருப்பதாகவும் அதை நிவர்த்தி செய்யவேண்டுமென்று பட்ஜெட் விவாத சமயத்திலும் சொல்லப்பட்டது. இந்த விஷயத்தில் இதற்கென்று ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது, இதற்கான ஒரு நிதியையும் ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆகையினால் இந்த சீர்திருத்தத்தின் மூலம் சப் ஜெயில்களிலுள்ள குறைகள் எல்லாம் ஓரளவு நிவர்த்தி செய்யப்படும் என்று நம்புகிறேன். இப்போதே பூரா குறைகளும் சர்க்காரால் நிவர்த்தி செய்யப்பட்டு விடும் என்று என்னால் சொல்லமுடியாது. இந்த விஷயத்தைப்பற்றி சர்க்கார் கவனித்து வருகிறது. இந்த குறைகளை எல்லாம் மாற்றுவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்று என்னால் சொல்லமுடியும். அடுத்ததாக இங்கு, அதாவது சென்னையில் இருக்கும் பெரிய சிறையைப்பற்றி சொல்லப்பட்டது. அது கொஞ்சம் மோசமாகத்தான் இருக்கிறது. உண்மைதான். அது நகரத்தின் மத்தியில் இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய இடத்தை கட்ட முடியாத நிலையில் இருக்கிறது. அதாவது இப்போது அங்கிருக்கின்ற இடத்திற்குள்தான் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

இன்னும் சிலர் சென்னை நகரத்தின் மத்தியில் சிறை இருக்கிறது. அதை இந்த இடத்திலிருந்து எடுத்துவிட்டு வேறு இடத்திற்குக் கொண்டு போய் அந்த இடத்தை வேறு காரியங்களுக்கு எடுத்துக்கொள்ளலாம்

22nd December 1956] [Sri C. Subramaniam]

என்றும் யோசனை கூறினார்கள். இதைப்பற்றி சர்க்கார் பரிசிலனைசெய்து கொண்டுதான் வருகிறது. இது சரியாக இருந்தாலும் இதைப்பற்றிய தேவைகளை சிலவற்றை பூர்த்தி செய்ய வேண்டியதாக இருக்கிறது. சில அடிப்படையான தேவைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதில் சிரமங்கள் வேறு இருக்கின்றன. அவைகளைப்பற்றியும் யோசிக்கவேண்டியதாக இருக்கிறது. சிறைச்சாலைகளை சீர்திருத்தம் செய்யவேண்டி இருக்கின்றன. தண்டனை கொடுப்பதை அனுபவிப்பது தவிர அவர்கள் தண்டனையை அனுபவிக்கும்போது அவர்களுடைய மனம்மாற்றம் அடையவேண்டும். அப்படி ஏற்படுவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்குத் தக்கபடி ஜெயில்களை அமைக்கவேண்டியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக நீதி நிர்வாகத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதிலும் கனம் அங்கத்தினர்கள் ரெங்காசாமி ரெட்டியார், கோபால கௌண்டர், சுயம்பிரகாசம் முதலியவர்கள் குறிப்பிட்டார்கள். கேஸ்கள் பைசல் செய்வதில் அதிகப்படியான கால தாமதம் ஏற்படுகிறது என்பதைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். இந்த நிலைமையிலும் இப்பொழுது கொஞ்சம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். இன்னும் அபிவிருத்தி அடையவேண்டியதாகவும் இருக்கிறது. அதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்குவேண்டிய முயற்சியையும் நாங்கள் எடுத்துக்கொண்டுதான் வருகிறோம். முக்கியமாக கிரிமினல் கேஸ்களில் ஆஜராகக் கூடியவர்களைக் கேட்டால் அது நன்றாகத் தெரியும். அதில் முக்கியமான குறைகள் இருக்கின்றன என்பது நன்றாகத் தெரியும். அதில் அபிப்பிராய பேதம் இருக்காது. கேஸ்கள் சீக்கிரத்தில் முடிவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு எல்லோரும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். முக்கியமாக ஹைகோர்ட் இதில் முக்கியமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய வக்கீல் அங்கத்தினர்கள் பேசியிருக்கக்கூடிய பேச்சுகளை அவர்கள் பரிசீலனை செய்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதையும் ஹைகோர்ட் எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த நடவடிக்கைகளை அவர்களும் கவனித்துக்கொண்டுதான் இருப்பார்கள்.

கனம் கோபால கௌண்டர் ஜில்லா ஜட்ஜுகள் நியமனம் பற்றி புகார் இருப்பதாகக் குறிப்பிட்டார். அவர்களை நியமிக்கும்போது ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளுக்கு முதல் சலுகைகள் காட்டாமல் சப்-ஜட்ஜுகளுக்கு முதல் சலுகைகள் காட்டப்படுவதாக புகார் செய்தார். சீனியராக இருக்கக் கூடிய மாஜிஸ்திரேட்டுகளை நியமிக்காமல் சப்-ஜட்ஜுகளை ஜில்லா ஜட்ஜுகளாக நியமிப்பதால் அவர்களிடையே மன வருத்தம் இருப்பதாகக் குறிப்பிட்டார். அது வாஸ்தவம்தான். அப்படி இருப்பது எங்களுக்குத் தெரியும். இதற்கு முன்பு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்களைத்தான் அப்படி நியமித்து வந்தார்கள். அப்படி நியமிப்பதால் அடிக்கடி மாற்றுவதாக ஏற்படுகிறது. ஜில்லா ஜட்ஜுக்கும் சப்-ஜட்ஜுகளுக்கும் மத்திய தளத்தில் ஜில்லா மாஜிஸ்திரேட்டுகள் இருப்பதால் அவர்களுக்குத்தான் ஜில்லா ஜட்ஜு பதவி கொடுக்கவேண்டும் என்று இருந்தது. அப்படி இருந்தபொழுது சீனியர்களாக இருப்பவர்களை நியமித்துக்கொண்டிருந்தார்கள். அப்படி நியமிப்பதால் அவர்களை இரண்டு அல்லது மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றவேண்டியதாக இருக்கிறபடியால் அந்த முறையை மாற்றியமைத்துவிட்டு அங்குள்ள சப்-ஜட்ஜுகளையே ஜில்லா ஜட்ஜுகளாக மாற்றுவது என்று திட்டம் கொண்டு வந்து அதை அமுல் நடத்திவருகிறார்கள். அதனால் மனக்குறை இருப்பது வாஸ்தவம்தான். அடிக்கடி மாற்றுவதை தவிர்ப்பதற்குத்தான் அவ்விதம் செய்யப்பட்டுவருகிறது. கிரிமினல் கேஸ்களில் அதிகப்படியான தேர்ச்சி இருந்தால் அவர்களுக்கு கொடுப்பது என்று வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்த முறையை ஏற்படுத்தியதால் மனக் கசப்பு ஏற்பட்டிருப்பதால் அதை மாற்றியமைக்க யோசிக்கப்பட்டு வருகிறது. அதை அனுபவத்தில் பார்த்துச் செய்யவேண்டியதாக இருக்கிறது. இதைப்பற்றி ஹை கோர்ட்டையும் கலந்து யோசித்துக்கொண்டிருக்கிறோம். யாருக்கு கிரிமினல்

[Sri C. Subramaniam] [22nd December 1956

கேஸ் அனுபவம் இருக்கிறது என்பதை ஆலோசனை செய்து அவர்கள் யாரை சிபாரிசு செய்கிறார்களோ அந்த சிபார்சின் அடிப்படையில்தான் நியமனங்கள் எல்லாம் செய்யப்படுகிறது. அதில் குறைகள் இருந்தால் அதையும் ஹைகோர்ட்டுடன் பரிசீலனைசெய்து இருக்கும் குறைகளை நீக்க முயற்சி செய்கிறோம்.

இன்னும் கனம் சுயம்பிரகாசம் ஒன்றை முக்கியமாக குறிப்பிட்டார். அதாவது நாகப்பட்டணத்தில் ஒரு ஜில்லா கோர்ட்டும் தஞ்சையில் ஒரு ஜில்லா கோர்ட்டும் இருப்பதாகவும் இந்த இரண்டுக்கும் போதுமான வேலை இல்லை என்றும் குறிப்பிட்டார். தஞ்சை ஜில்லாவின் நிலைமை என்ன என்பதை யோசித்துப்பார்த்து செய்ய வேண்டியதாக இருக்கிறது. உடனடியாக அதைப்பற்றி பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்கிறோம். ஆனால் இப்பொழுது சில இடங்களில் அதிகப்படியான வேலை இருக்கிறது என்றும் அதனால் அதிகப்படியான சப்-ஜட்ஜுகளை நியமிக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். அப்படியே நியமித்துக்கொண்டும் வருகிறோம். ஆனால் தஞ்சையிலுள்ள நிலைமையை பரிசீலனை செய்து பார்த்து அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய் முயற்சியையும் உடனடியாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். இங்கே பதில் சொல்வதற்கு முன்னதாகவே அதைப்பற்றி எழுதி அனுப்பிவிட்டேன்.

அடுத்தபடியாக போலீஸ் நிர்வாகத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். போலீஸ் நிர்வாகம். . .

SRI V. GOPALA GOUNDER : Sir, the Hon. Minister has not referred to the remarks made about amending the Prohibition Act.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றியும் கவனித்துக் கொண்டு வருகிறோம். நான் படித்துப்பார்க்காமல் ஒன்றும் பதில் சொல்ல முடியாது. எதாகிலும் ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்கு பதில் சொல்லவில்லையென்றால் அதைப்பற்றி சொல்லக்கூடாது என்பது இல்லை; அதற்குவேண்டிய சரியான பதில் கிடைக்காமல் இருப்பதால் அதைப்பற்றி சொல்லாமல் இருக்கிறேன். ஆனால் சொல்லாமல் இருப்பதால் அதற்குவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது என்பது அர்த்தம் அல்ல. தகுந்த காலத்தில் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வோம் என்பதை மட்டும் அவருக்கு நான் எடுத்துச் சொல்கிறேன். எல்லாவற்றிற்கும் பதில் சொல்வது என்பது முடியாது. பரிசீலனை செய்து பார்த்துதான் பதில் சொல்ல முடியும்.

போலீஸ் நிர்வாகத்தைப்பற்றி பலர் பேசினார்கள். நிர்வாகத்திலேயே இது ஒரு முக்கியமான நிர்வாகம். போலீஸ் நிர்வாகம் நேர்மையாகவும் திறமையாகவும் நியாயமாகவும் நடந்தால்தான் ஜனங்கள் நல்ல முறையில் வாழமுடியும், சமாதானமாக வாழ முடியும், என்பதில் சந்தேகம் இல்லை. அதற்குவேண்டிய முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டுதான் வருகிறது. சென்னையில் நடக்கக்கூடிய இன்னொரு சின்ன விஷயத்தை எடுத்துச் சொன்னார்கள். அதில் போலீஸ் எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பது ஒன்றே போலீஸ் நிர்வாகம் எப்படி நடக்கிறது என்பதற்கு அத்தாட்சியாக இருக்கும். அதைப்பற்றி சந்தோஷப்படவேண்டியதாக இருக்கிறது. சென்னையில் நடக்கக்கூடிய பஞ்சு சூதாட்டம், மது ஒழிப்பு முதலியவைகளில் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை போலீஸ் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி பார்த்தாலே போலீஸ் நிர்வாகம் எந்த நல்ல முறையில் நடந்துவருகிறது என்பது தெரியும். அதையே பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளில் குற்றங்கள் எவ்வளவோ குறைந்திருக்கின்றன. இதை அங்கத்தினர்களே சொல்லிக் கேட்க சந்தோஷப்பட்டேன். கனம் விநாயகம் அவர்கள் பேசும்போது ஏதோ ஒரு கேஸில் போலீஸ்காரர்கள் அடித்துவிட்டதாகக் குறிப்பிட்டார். அதைப்பற்றிய கேஸ்

22nd December 1956] [Sri C. Subramaniam]

இப்பொழுது நடவடிக்கையில் இருக்கிறது. அதற்குள் அதைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாது. அது முடிந்தவுடன் யார் பேரில் குற்றம் இருக்கிறது என்பது தெரியவரும். அந்த சரித்திரம் வேறு. அது இப்பொழுது கோர்ட்டு நடவடிக்கையில் இருக்கிறது. அது வெளி வந்ததும் அதைப் பற்றி தெரியும். அதன்பிறகு கனம் விநாயகம் அவர்களே யார்பேரில் குற்றம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வார். அதற்கு வேண்டிய சந்தர்ப்பமும் அவருக்குக் கிடைக்கும். இந்த மாதிரி விஷயங்களில் தீர விசாரணை செய்து அதன் பிறகுதான் ஒரு முடிவுக்கு வரமுடியும். அது வரையில் காத்து இருப்பதுதான் நல்லது என்பதை மட்டும் சொல்லிக் கொள்ளுகிறேன். இது ஒரு முக்கியமான நிகழ்ச்சி.

இப்படி பல நிகழ்ச்சிகளைப்பற்றி குறிப்பிட்டார்கள். அவைகளைப்பற்றி தகவல்கள் கொடுத்தால் அவைகளை விசாரிக்க முடியும். பொதுப்படையாகப் பார்க்கும்போது பொதுவாக போலீஸ்காரர்களுடைய நிலைமையில் கொஞ்சம் மாறுதல் அடைந்திருக்கிறது. அவர்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து இப்பொழுது நல்ல முறையில் நடந்துகொண்டுவருகிறார்கள். இது என்னுடைய அபிப்பிராயம். என்னைப் பொறுத்த வரையில் அவர்கள் நல்ல முறையில்தான் நடந்துகொண்டுவருகிறார்கள் என்பதை நிச்சயமாகச் சொல்லமுடியும். அவர்களைப்பற்றியது ஒரு முக்கியமான பிரச்னை. எதைப்பற்றி குறிப்பிட்டாலும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்க தயாராக இருக்கிறார்கள். இதை கனம் அங்கத்தினர்களுக்கும் சபைக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே போலீஸ் நிர்வாகம் நேர்மையாகவும் திறமையாகவும் நியாயமாகவும் நடப்பதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த நிர்வாகம் சம்பந்தமாக எல்லா விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுதான் வருகிறது.

ஆகவே சில முக்கியமான விஷயங்களைப்பற்றி குறிப்பிட்டுவிட்டேன். கால அளவு வேண்டியது இல்லாமல் இருப்பதால் எல்லாவிஷயங்களைப்பற்றியும் பதில் சொல்ல முடியவில்லை. மற்ற விஷயங்களையும் பரிசீலனை செய்து பார்க்கவேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய முயற்சியையும் உடனடியாக எடுத்துக்கொள்ளுகிறேன். அதற்கு வெட்டு பிரேரேபணை வந்திருக்கிறது. அந்த வெட்டு இருக்கவேண்டியது அவசியம் இல்லை என்று சொல்வது அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். இந்த வெட்டுப் பிரேரேபணையை பிரேரேபித்த அங்கத்தினர் அவரே இதைப்பற்றி உணருவார். இது அவசியமில்லை என்று அவர் கருதினால் இதை வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டும் என்று அவரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : May I know whether the hon. Member Sri P. Rangaswami Reddiar is withdrawing the Cut Motion moved by him under Demand XII—Administration of Justice?

SRI P. RANGASWAMI REDDIAR : Sir, I am withdrawing the cut motion moved by me.

The cut motion was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 32,50,000 as advance grant for the year 1957-58 under Demand XII—Administration of Justice.'

The Demand was put and carried and the grant was made.

[22nd December 1956

SRI K. VINAYAKAM : Sir, I withdraw the cut motions moved by me under Demand XIII—Jails and Demand XIV—Police.

The cut motions were, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 29,00,000 as advance grant for the year 1957–58 under Demand XIII—Jails.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,90,00,000 as advance grant for the year 1957–58 under Demand XIV—Police.'

The Demand was put and carried and the Grant was made.

(5) DEMAND IV—FOREST DEPARTMENT.

(6) DEMAND XVIII—AGRICULTURE AND FISHERIES.

(7) DEMAND XIX—VETERINARY.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I beg to move—

'That the Government be granted a sum not exceeding Rs. 19,00,000 as advance grant for the year 1957–58 under Demand IV—Forest Department.'

'That the Government be granted a sum not exceeding Rs. 75,00,000 as advance grant for the year 1957–58 under Demand XVIII—Agriculture and Fisheries.'

'That the Government be granted a sum not exceeding Rs. 24,00,000 as advance grant for the year 1957–58 under Demand XIX—Veterinary.'

DEPUTY SPEAKER : Motions moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 19,00,000 as advance grant for the year 1957–58 under Demand IV—Forest Department.'

'That the Government be granted a sum not exceeding Rs. 75,00,000 as advance grant for the year 1957–58 under Demand XVIII—Agriculture and Fisheries.'

'That the Government be granted a sum not exceeding Rs. 24,00,000 as advance grant for the year 1957!58 under Demand XIX—Veterinary.'

22nd December 1956]

SRI V. BALAKRISHNAN : நான் என்னுடைய வெட்டுப் பிரேரணைகளை பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 19,00,000 as advance grant for the year 1957–58 under Demand IV—Forest Department—be reduced by Rs. 100.'

'That the allotment of Rs. 24,00,000 as advance grant for the year 1957–58 under Demand XIX—Veterinary—be reduced by Rs. 100.'

DEPUTY SPEAKER : Cut motions moved—

'That the allotment of Rs. 19,00,000 as advance grant for the year 1957–58 under Demand IV—Forest Department—be reduced by Rs. 100.'

'That the allotment of Rs. 24,00,000 as advance grant for the year 1957–58 under Demand XIX—Veterinary—be reduced by Rs. 100.'

All the three Demands will be taken up together. The Demands and the cut motions are before the House for discussion.

*SRI V. BALAKRISHNAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, காட்டு இலாகாவைப்பற்றி இரண்டு கோரிக்கைகள் : ஏற்கெனவே இருந்த புதுக்கோட்டை சமஸ்தானம் நமது ராஜ்யத்தோடு இணைக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் ஆகியும், மதராஸ் ராஜ்யத்தில் கொடுக்கப்படும் சம்பள விகிதமும் உத்தியோக அந்தஸ்துகளும் ஏற்கனவே சமஸ்தானத்தில் உத்தியோகஸ்தர்களாக இருந்தவர்களுக்கு இதுவரையில் அளிக்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் நான் என்னுடைய வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்தேன். மதராஸுடன் இணைக்கப்பட்ட புதுக்கோட்டை ஸமஸ்தான உத்தியோகஸ்தர்களுக்கும் இங்கு இருக்கும் **corresponding** உத்தியோகங்கள் அளித்து, 1-1-1949 முதல் இங்கு இருக்கும் அதே சம்பள விகிதத்தையும் அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்பதை நான் வற்புறுத்துகிறேன். நாளது தேதி வரையிலும் அங்கு இருக்கும் பெரும் பகுதி காட்டிலாகா உத்தியோகஸ்தர்களான **Forest guards, Forest Rangers** இவர்களுக்கு இந்தச் சலுகைகள் அளிப்பதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அந்த மாதிரி சமஅந்தஸ்தும் சம்பளமும் கொடுத்து திருப்திப் படுத்த வேண்டியது மிகவும் அவசியம். மார்ச் மாதம் சட்ட சபை பட்ஜெட்கூட்டத்திலேயே நான் இதுபற்றி சொன்னபோது மந்திரி அவர்கள் கவனித்து வேண்டியதை செய்வதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லியும் 6, 7 மாதங்கள் ஆகியும்கூட இன்னும் விமோசனம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதிலும் பரிதாபகரமான நிலைமை என்னவென்றால், ஏற்கனவே புதுக்கோட்டை சமஸ்தானத்தில் வேலை பார்த்து வந்தவர்களை புதுக்கோட்டையிலேயே வைத்திருந்தாலும் பாவாயில்லை. அவர்கள் வீட்டோடு வீடாக இருந்திருப்பார்கள். அவர்களுக்கு அதிகமாக செலவு ஏற்படாது. ஆனால் அவர்கள் அனைவரையும் சேலம், கோயம்புத்தூர் போன்ற தூரப் பிரதேசங்களுக்கு மாற்றிவிட்டு, அவர்களுக்கு முன்பு புதுக்கோட்டை சமஸ்தானத்தின்கீழ் வேலைபார்த்து வந்தபொழுது அவர்கள் வாங்கிவந்த சம்பளமே கொடுக்கப்படுகிறது. இந்த நிலைமையை சீக்கிரமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எட்டு ஆண்டுகள் கடந்தும் இந்த விஷயம் பரிசீலனை செய்யப்படவில்லை. மந்திரி அவர்களுக்கும் எனக்கும் காட்டிலாகா சம்பந்தமாக சில விஷயங்களில் அபிப்பிராய பேதமிருந்தாலும், 12-01 p.m.

[Sri V. Balakrishnan] [22nd December 1956

இந்த விஷயத்தில் அபிப்பிராய பேதத்துக்கே இடமில்லை. அவருக்கும் அவர் இலாகாவுக்கும் திறமையுடன் இயங்கும்தகுதி உண்டு. அப்படி யிருந்தும் இந்த விஷயமாக இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக் கப்படாதது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஆகவே, இந்தக் குறையை சீக்கிரமாக நிவர்த்திக்க எல்லா நடவடிக்கைகளையும் உடனே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புதுக்கோட்டை **Timber Transport Rules** பற்றி சில வார்த்தைகள் சொல்லுகிறேன். புதுக்கோட்டை ஸமஸ்தானமாக இருந்தபொழுது அங்கு மரம் வெட்டுவதற்கு யாதொரு ஆட்சேபனை யும் கிடையாது. அவரவர் சொந்த மரங்களை வெட்டி விற்றுவந்தார் கள். ஆனால், இப்பொழுது **Timber Transport Rules** அமுலுக்கு வந்தபிறகு யாரும தன் சொந்தமான மரங்களை வெட்டக்கூடாமல் தடை ஏற்பட்டிருக்கிறது. காடுகள் நாட்டுக்கு அத்யாவசியமான செல்வம், அதைப் பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு சர்க்கார் இந்த **Timber Transport Rules**-ஐ கொண்டு வந்திருக்கலாம். அதைப்பற்றி ஆட்சேபனையில்லை. ஆனால் இந்த விதிகள் அமுலாக்கப் படும் விதத்தைப்பற்றிதான் ஆட்சேபனை. இதை அமுல் நடத்துவதால் திருட்டுத்தனமாக மரங்களை வெட்டி விற்பது அதிகமாக இருக்கிறது. உள்ளபடியே சொந்த மரங்கள் வைத்திருப்பவர்களுக்கும் கஷ்டமாக இருக் கிறது. நகரத்தில் ஜனங்களுக்கு விறகு கிடைக்காத ஒரு கஷ்டம் ஏற்படு கிறது. காட்டிலாகாவில் நேர்மையற்ற உத்தியோகஸ்தர்கள் (**dishonest official**) வளர்வதற்கும் இது இடமளிக்கிறது. இதனால் லாரி லாரியாக இரவு 10, 11 மணிக்கு மரங்கள் வெட்டப்பட்டு அப்புறப்படுத்தப் படுகின்றன. அப்படிக்கொண்டு வருவது **Timber Transport Rules** மூலம் சரியான முறையில் தடுக்கப்பட்டு மரங்கள் பாதுகாக்கப்படவில்லை. அப்படி மரங்கள் கொண்டு வருவதை மக்கள் தடுத்து நிறுத்திய ஒரு சமயத்தில் காட்டிலாகா அதிகாரிகள் அதை மணியக்காரரிடம் ஒப்படைத்து விடச்சொல்லி விட்டார்கள். அந்த மணியக்காரனை திரும்பவும் மரங்களை விற்கக்கூடிய தருணத்தில் மறுபடியும் அனைவரும் போய் பிடித்துவிட்டார் கள். பிடித்து **Forest Ranger**-இடம் கொண்டுபோனால், அவர்கள் "எனக்கு ஒன்றும் சம்பந்தமில்லை, மணியக்காரரிடம் கொண்டுபோய் ஒப்படைத்துவிடுங்கள்" என்று சொல்லிவிட்டார்கள். ஒரு மணியக்காரன் தான் விறகைவிற்றுவிட்டான். மறுபடியும் இன்னொரு மணியக்காரனை அந்த இரவு நேரத்தில் எப்படி தேடிக்கொண்டு போகிறது? திருட்டுத் தனமாக விற்கப் படும் மரங்களை மக்கள் பிடித்தும்கூட "எனக்கு தெரியாது, உனக்குத் தெரியாது" என்று சொல்லிவிட்டு காட்டிலாகா அதிகாரிகள் ஒன்றும் நடவடிக்கை எடுப்பதில்லை. பிறகு மக்கள் என்னி டம் வந்து முறையிட்டார்கள். நான் அந்த இரவில் போய் **Forest Ranger**-இடம் மறுபடியும் மக்கள் கண்டுபிடித்த திருட்டு மரங் களை ஒப்படைக்கவேண்டியதாயிருந்தது. இந்த முறையில் புதுக்கோட்டை யில் **Timber Transport Rules** அமுலில் இருக்கிறது. இரவு நேரங்களில் எத்தனையோ லாரிகள் இதுமாதிரியாக டிம்பர் டிரான்ஸ் போர்ட் ரூலின்கீழ் பலவிதமான காரியங்கள் செய்கிறார்கள். நான் எத்தனை யோமுறை திருச்சியிலிருந்து புதுக்கோட்டை போகும்போது வழியில் லாரிகளை மறித்து நிறுத்தி அவர்களுக்கு மரம் வெட்டி எடுத்துப்போக லைசென்ஸ் இருக்கிறதா என்று விசாரித்திருக்கிறேன். அவர்கள் இல்லை என்பதாகவும் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகள் டிம்பர் டிரான் ஸ்போர்ட் ரூலின்கீழ் இந்த மாதிரியாக தங்கள் வருமானத்தை அதிகப் படுத்திக்கொள்கிறார்கள். அதைப் பார்க்கும்போது எனக்கும்கூட இந்த எம். எல். ஏ. பதவியை விட்டு காட்டிலாகாவிலே வேலைக்கு போய்விடலாமா எனத் தோன்றுகிறது. அதற்குக் காரணம் அது. அதனாலதான், சர்க்கார் இது விஷயத்தை நன்கு பரிசீலனைசெய்து தக்கநடவடிக்கை எடுக்கவேண்டும். காட்டிலாக்கா சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளும், மந்திரி அவர்களும் இவ்விஷயத்தில் போதியகவனம் செலுத்தவேண்டு மென்பதாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

22nd December 1956] [Sri V. Balakrishnan]

அடுத்தபடியாக ஜில்லாவாரியாக லைவ் ஸ்டாக் பாரம் ஏற்படுத்துவது பற்றி கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அதில் பசுமாடு, மாப் பிள்ளை காளை முதலியவற்றை தீனிபோட்டு நல்ல முறையில் வளர்ப்பது ஆகும்.

Sri K. V. RAMASWAMI: மாப்பிள்ளை காளை என்றார்களே! அப்படி என்றால் என்ன என்று விளக்க முடியுமா?

Sri V. BALAKRISHNAN: சில பக்கங்களில் பொலிக் காளை என்பார்கள். அதற்கு வருஷத்தில் சில காலம்தான் வேலை இருக்கும். ஆனால் இங்கே மாப்பிள்ளையைப்போல எல்லாக்காலமும் இது வேலை செய்யும். ஆதலால் மாப்பிள்ளைக் காளை என்றேன். (சிரிப்பு.) இது பற்றி நான் முன்பே சொல்லியிருக்கிறேன். புதுக்கோட்டையில் ஒரு பாரம் ஏற்படுத்த வேண்டுமென்ற யோசனை இருந்தது. ஆனால் எந்த இடத்தில் ஏற்படுத்துவது என்பதைப்பற்றி விவசாய இலாக்காவுக்கும், இந்த இலாக்காவுக்கும் நீண்ட நாளாகவே சர்ச்சை இருந்துவந்திருக்கிறது. உண்மையில் இரண்டு இலாக்காவும் அதைப்பற்றி பரிசீலனை செய்துவிட் டிருந்தால் எனக்கு அதைப்பற்றிகவலை இல்லை. ஆனால் சில குட்டி காங்கிரஸ் தலைவர்கள் இதில் ஈடுபட்டு இங்கே ஏற்படுத்தக் கூடாது, அங்கே ஏற்படுத்த வேண்டுமென்பதாகச் சொன்னதன் பேரிலேயே இந்தத் தகராறுகள் ஏற்பட்டுள்ளன. கனம் அமைச்சர் அவர்கள் தாமே புதுக்கோட் டைக்கு வந்து ஸ்தலத்தைப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். அப்படியே அவர்கள் சமீபத்தில் வந்தார்கள். அந்த இடத்தையும் பார்த்தார். விவசாய இலாக்கா சொல்லியிருக்கக்கூடிய இடம் புதுக்கோட்டை டவுனுக்கு அருகில் அரை மைலுக்குள் உள்ள இடம். இந்தப் பண்ணையை அங்கே விஸ்த ரிக்க ஆயிரம் ஏக்கருக்குமேல் நிலம் உள்ளது. அடுத்தபடியாக தண்ணீர் வசதியும் இருக்கிறது. மூன்றாவதாக பவர்வசதி செய்துகொடுக்கமுடியும். அடுத்து மிகமுக்கியமாக அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் திருப்தி யாக வேலைசெய்வது. டவுனுக்கு அருகில் அந்தப் பண்ணை இருப் பதால் அங்கே உள்ள அதிகாரிகளுக்கு டவுனுக்குப் போகவும், குழந்தை களைப் படிக்கவைக்கவும், வசதிஇருக்கும். அதனால் திருப்தி அடைவார் கள். அதோடு பண்ணையில் கிடைக்கும் பாலை நகரத்தில் விற்பதற்கும் அதிக செலவுஇன்றி வசதிஏற்படும். அப்படியில்லாமல் பத்துப் பதினாறு மைல்கள் தள்ளிக்கொண்டுபோய் வைத்துவிட்டால் அதிகாரிகளுக்கு சோஷயல் லைப் (சமூக வாழ்க்கை) கெட்டுப் போய்விடும். அதனால் அதிருப்தி அடைவார்கள். வேலையில் கவனம் குறையும். பண்ணையின் மூலமாக நல்லரக மாடுகள் எல்லாம் கிடைக்கும், பால் கிடைக்கும், என்பதாக எண்ணிக்கொண்டிருக்கும் மக்களின் அபிலாஷைகளும் பூர்த்தியாகாது. சர்க்கார் இத்துறையில் பணம் செலவிட்டது ஒன்றுதான் நஷ்டமாகும். ஆகவே விவசாய இலாக்கா குறிப்பிட்ட இடத்திலேயே லைவ் ஸ்டாக் பாரத்தை ஏற்படுத்த சர்க்காரும் ஒத்துக்கொள்ள வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

***Sri K. S. LAKSHIUPATHI NAICKER:** கனம் உதவி சபா 12 p
நாயகர் அவர்களே, இப்பொழுது இங்கு சர்ச்சையில் இருக்கக்கூடிய காட்டு இலாக்கா மானியத்தைப் பற்றியும், கால்நடை மானியத்தைப் பற்றி யும் சில வார்த்தைகள் நான் சொல்லவிரும்புகிறேன். முக்கியமாக காட்டு இலாக்காவை எடுத்துக்கொள்ளுவோம். பெரிய பெரிய காடுகளைச் சொந்தமாக உடைய நிலச்சுவாந்தார்கள் ஹைக்கோர்ட்டில் ரிட் வாங்கிய தன் காரணமாக அனேக எஸ்டேட்டுகளிலுள்ள காடுகளை அவர்கள் அழித் துக் கொண்டுவருகிறார்கள். கொஞ்சம்கூட யோசிக்காமல் மரங்களை எல் லாம் வெட்டி வெட்டி விற்றுவருகிறார்கள். ஜமீன்தாரி அப்பாலிஷன் சட்டப் பிரகாரம் சர்க்காரிடம் சேர்ந்துவிட்ட பல இடங்களில் உள்ள காடுகள் எல்லாம் சர்க்காருடைய நிர்வாகத்தில் இருந்துவருகின்றன. ஆனால் ஒரு சில தனிப்பட்ட நிலச்சுவாந்தார்களிடத்தில் இருக்கும் காடுகளை இவர்கள் எல்லாம் அழித்துவருகிறார்கள். ஆகவே பின்னால் இக்காடுகள் சர்க்கா ருடைய நிர்வாகத்தின்கீழ் வரும்போது பல்குத்தும் குச்சிகூட இவர்களுக்குக்

[Sri K. S. Lakshmipathi Naicker] [22nd December 1956

கிடைக்காமல்போகும் என்பதை இங்கு சொல்லவிரும்புகிறேன். ஆகவே சர்க்கார் உடனடியாக அவைகளை எடுத்துக்கொண்டு ஹைக்கோர்ட் சொல்லுகிற தீர்ப்புப்படி அவர்களுக்கு வருமானம் சேரவேண்டியிருந்தால் கொடுக்க ஒப்புக்கொள்ளலாம் எனச் சொல்லவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக கால்நடை இலாக்காவைப் பற்றி ஒரு சிலவார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கால்நடை வளர்ச்சியில் அதிகமான கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பது மத்திய சர்க்காரின் திட்டம். நமது சர்க்காரும் அடுத்த ஐந்தாண்டு திட்டத்தில் கால்நடை அபிவிருத்திக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள். முக்கியமாக கால்நடை வளர்ப்பதிலே நாம் முதன்முதலாகக் கவனிக்க வேண்டியது அவற்றுக்கான மேய்ச்சல் இடங்கள் (பாஸ்சர் லாண்டாக) இருக்கவேண்டும் என்பது. ஆனால் அம்மாதிரி நிலங்கள் மிக அதிகமாக அதிக உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் விவசாயத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. முக்கியமாக கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இருக்கவேண்டியது அவசியமாக இருப்பதால் அம்மாதிரி நிலங்களை இனி மேய்ச்சல் தரையாக ஒதுக்கவேண்டு மென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். மேய்ச்சல் தரை இல்லாததின் காரணமாக மாடுகளை வளர்க்கமுடியாமல் போகிறது. அடுத்தபடியாக ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டதை நானும் ஆதரிக்கிறேன். புதுக்கோட்டையில் 150 மாடுகள் வைத்திருக்கிறார்கள். ஆனால் 6 எக்கரா நிலத்தில் அவற்றை வளர்க்கிறார்கள். திடீரென்று ஒரு உத்தரவின் கீழ் அந்தப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. அவற்றுக்கு எந்தமாதிரியான நிலம் எவ்வளவு இருக்கவேண்டு மென்பதைப் பற்றிக்கூட அவர்கள் யோசிக்கவில்லை. குறைந்தது ஒரு மாட்டுக்கு இரண்டு எக்கரா புஞ்சை தரிசாவது இருக்கவேண்டு மென்பதாக இண்டியன் கவுன்சில் (Indian Council of Agricultural Research) யோசனை தெரிவித்திருக்கிறது. ஆனால் 150 மாடுகள் வைத்திருக்கிற பண்ணைக்கு 6 எக்கர் நிலம்தான் இருக்கிறது. சாதாரணமாக அவை அவிழ்த்துவிடப்பட்டால் உலாவுவதற்குக்கூட இடமில்லை. இதற்காக சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டு மென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு நாங்களும் லைவ் ஸ்டாக் மீட்டிங் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறோம்.

600 எக்கர் நிலம் காட்டு இலாக்காவில் இங்கே இருக்கிறது. இந்த இடத்திற்குக் "காடு" என்று சொல்லுகிறார்களே தவிர வெறும் புதர்தான் இருக்கிறது. மரங்கள் எதையும் காணமுடியாது. விறகு வெட்டி எடுப்பதற்குக் கூட மரங்கள் கிடையாது. அந்த 600 எக்கர் நிலமும் அம்மாதிரி இருக்கிறது. அந்த நிலங்களைக் கால்நடை பண்ணையாளர்களிடம் ஒப்படைத்தால் அவர்கள் கால்நடை வளர்ப்பதற்கும் உபயோகப்படுத்திக்கொண்டு "அவன்யூ டிரில்"-ம் நடமுடியும். இதை நமது சர்க்கார் கவனிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுது சர்க்கார் கால்நடைபெருக்குவதற்கு மான்யம் கொடுத்து வருகிறார்கள். அதன் பிரகாரம் பொலிக்காளைகளை வளர்ப்பதற்காக மாதம் ரூபாய் 10 வீதம் மூன்று வருஷத்திற்குக் கொடுக்கிறார்கள். அந்த மூன்று வருஷம்ஆன பிறகுகூட சர்க்கார் அந்தக் காளைகளை திரும்ப வாங்கிக்கொண்டு போவதுகிடையாது. கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் சர்க்காருக்கும் உள்ள அக்ரிமெண்டு பிரகாரம் மூன்று வருஷத்திற்குப் பிறகு அந்தக் காளைகளுக்கு செலவழிப்பதற்கு ஒருவித பணமும் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் கிடையாது. இம்மாதிரி மூன்று வருஷம் ஆகியும் உடனே அவைகளை எடுத்துக்கொண்டு போகாததினால், கால்நடை பண்ணை வளர்ப்பவர்களுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்படுகிறது. இதை அவர்கள் ஒரு தண்டனையாகக் கருதுகிறார்கள். ஆனால் மூன்று வருஷம் வளர்ப்பதற்கு மாத்திரம் மத்திய சர்க்கார் மான்யம் கொடுப்பது மிகவும் பாராட்டத்தக்க விஷயம். மூன்று வருஷம் ஆகியும்கூட வயதுவந்த காளைகளை கால்நடைப் பண்ணையாளரிடம்

22nd December 1956] [K. S. Lakshmipathi Naicker]

விட்டுவைத்து எவ்வித ஊதியமும் கொடுக்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். இந்த விஷயத்தை சர்க்கார் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுது கடலைப் பிண்ணாக்கை உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக உரம்போட உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள். விவசாய இலாக்காவும் விவசாயத்திற்கு அதைக் கொடுத்து உதவுகிறார்களே தவிர கால்நடை வளர்ப்பாளர்களைக் கேட்டால் அவர்களுக்குக் கொடுப்பது கிடையாது. இந்தக் கடலைப் பிண்ணாக்கு கால்நடை வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியம். ஆகையால் அதை கால்நடை உபயோகிப்பாளர்களுக்கு கொடுத்து உதவினால், அவைகள் போடும் சாணத்தை நல்ல உரமாக உபயோகித்துக் கொள்ள முடியும். நிலத்தில் கடலைப் பிண்ணாக்கு உரமாக உபயோகிக்கப்பட்டு அதில் விளைகின்ற உணவு தானியங்களைவிட இந்தக் கால்நடைகளின் சாணத்தை உரமாக உபயோகிப்பது இன்னும் அதிகமான விளைச்சலைக் கொடுக்கும் என்பதை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இப்பொழுது சென்னை ராஜ்யத்தில் கால்நடை ஆஸ்பத்திரிகள் எல்லாம் தாலுகா தலைநகரில்தான் இருக்கின்றன. தலைநகரில் ஆஸ்பத்திரிகள் இருப்பதால் கால்நடை வளர்ப்பவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால் கால்நடைகள் அனேகமாக (interior) உள்ளே தள்ளி இருக்கிற கிராமங்களில் வளர்க்கப்பட்டு வருகிறனறன. ஆகையால் அவைகளுக்கு ஏதாவது நோய்வந்தால் அங்கிருந்து தலைநகர் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவருவதென்றால் சாதாரணமான காரியம் அல்ல. இதனால் பல கஷ்டங்கள் கால்நடைகளுக்கு ஏற்படுகின்றன. ஆகையால் இந்த ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் சர்க்கார் இனிமேல் ஆஸ்பத்திரிகளை அமைக்கும்போது கால்நடைகளை எங்கு வளர்க்கிறார்களோ அங்கு ஏற்படுத்தவேண்டும். இந்தக் கால்நடை ஆஸ்பத்திரிகள் மிகவும் அழகாகவும் 10×8 விஸ்தீரணம் உள்ளதாகவும், காம்பவுண்ட் இருக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பதில்லை. சாதாரணமாக சாவடி மாதிரி இருந்தால் அதுவேபோதும். இது மாதிரியாகவே அந்த ஆஸ்பத்திரிகளைப் பராமரிக்கும் டாக்டர்களுக்கு வசிப்பதற்கு வீடு கொடுத்தால்போதும். அது மிகவும் அழகாக இருக்கவேண்டு மென்பதில்லை.

வெடர்னரி டாக்டர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ஒரு விஷயத்தைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இப்பொழுது வேண்டியஅளவு கால்நடை டாக்டர்கள் கிடைப்பதில்லை. போதுமான டாக்டர்கள் கிடைத்தால் தான் கால்நடை ஆஸ்பத்திரிகள் அதிகம் வைக்கமுடியும். ஆதலால் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே அந்த விஷயத்தை கவனித்து ஒரு திட்டம் வகுத்தால்தான் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முடிவதற்குள் அதிகமான டாக்டர்களும், Live Stock Inspector-களும் அதிக அளவில் கிடைக்கமுடியும். அவ்வாறு கிடைத்தால்தான் நாம் கால்நடை ஆஸ்பத்திரிகள் நிறைய திறக்கமுடியும். இல்லாவிட்டால் கால்நடை ஆஸ்பத்திரிகள் திறப்பதற்கு சர்க்கார் பணம் கொடுத்தாலும், வெடர்னரி டாக்டர்கள் கிடைக்காத தர்மசங்கடமான நிலைமைதான் ஏற்படும். ஆகையால் இந்த விஷயங்களை உடனடியாகக் கவனித்து கால்நடை வைத்தியர்களை அதிகப்படுத்த ஒரு திட்டத்தை தயாரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI V. BALAKRISHNAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்கு பிரச்னையை கொண்டுவர விம்புகிறேன்.

நம்முடைய எதிர்க் கட்சி உபதலைவர் போலிசாரால் கைது செய்யப்பட்டது அதிகார பூர்வமாக சபைத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டதா?

DEPUTY SPEAKER : I have not yet received information about it.

[22nd December 1956

12-36 p.m. **Sri K. ARANGANATHAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். விவசாய டிபார்ட்மெண்டு மிகவும் சிறந்தமுறையில் வேலைசெய்து வந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால் இப்போது அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினால் நெல் மகசூல் அதிகமாகக் கிடைத்திருக்கிறது. அதிகமான உணவு தானியங்களும் உற்பத்தியாகியிருக்கின்றன. இதைக் குறித்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். அதே சமயத்தில் நெல் விளைச்சல் அதிகமாக இருந்தபோதிலும், பயிர்கள் நெல் பூச்சிகளால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பத்துப் பதினைந்து வருஷத்திற்குமுன் இம்மாதிரி பூச்சிகள் தொல்லையே கிடையாது. ஆனால் இப்பொழுது எங்கு பார்த்தாலும் இந்த பூச்சிகளால் நெல் பயிர் அழிந்து போகிறது. தென்ஆர்காடு, செங்கல்பட்டு, வட ஆற்காடு போன்ற ஜில்லாக்களி இந்தப் பூச்சிகளின் தொல்லை அதிகமாக இருக்கிறது.

இம்மாதிரி பூச்சி வருவதற்கு என்ன காரணம் என்பதை விவசாய இலாக்கா பரிசோதனை செய்து அதை வரவொட்டாமல் தடுத்து நோயைக் குணப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாய இலாக்கா கொடுக்கும் மருந்துகளைப் போட்டாலும் அல்லது விதை விதைக்கும்போது அவர்கள் கொடுக்கும் மருந்துடன் கலந்து விதையைப் போட்டாலும் கூடப் பூச்சிவிழுகிறது. பிறகு நாற்றை மருந்தில் வைத்து நடவு நட்டாலும் பயனில்லை. ஆகவே இதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ச்சி செய்யவேண்டும். மண்ணில் ஏதோ கோளாறு இருக்கின்றது என்றுதான் என்னைப் போன்ற நிபுணத்வம் பெருதவர்கள் நினைக்க வேண்டியிருக்கிறது. உடனடியாக நமது தமிழ் நாட்டிலிருந்தே பூச்சிகளை ஒழித்துக்கட்டுவதற்கான ஏற்பாடுகளை சர்க்கார் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திண்டிவனம் தாலுகா எறையானூரில் ஒரு விவசாய ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. எண்ணெய் வித்துக்கள் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி அங்கு நடக்கிறது. நல்ல முறையில் குறைந்த காலத்தில் நிறைய மகசூலைக் கொடுக்கக்கூடிய வகையில் புதிய வித்துக்களைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு அரசாங்கம் ஆதரவு கொடுக்கவில்லையென்று வருத்தப்படுகிறேன். இந்த ஆராய்ச்சிப் பண்ணையில் **model farm**-ஐத் தவிர்த்து ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட வகைக்கு சர்க்கார் அதிக மான்யம் வழங்கவேண்டும். இப்பொழுது இலாப நஷ்டமில்லாத அடிப்படையில் ஆராய்ச்சிப் பண்ணையும் மாதிரிப் பண்ணையும் நடக்கவேண்டுமென்று சர்க்கார் சொல்லுவதினால் அங்குள்ள டிமான்ஸ்ரேட்டர்களும் மற்ற அதிகாரிகளும் எந்தவிதமான நூதன விதைகளையும் கண்டுபிடிக்க முடியாத நிலையிலிருக்கிறார்கள். கனம் விவசாய மந்திரி அவர்களிடத்தில் "லாபமுமில்லை—நஷ்டமுமில்லை" என்ற முறையை **research station** விஷயத்தில் கையாளக்கூடாதென்று சொல்லியிருக்கிறேன். நல்ல முறையில் புதிய புதிய வித்துக்களை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க வேண்டுமென்று சர்க்கார் தாக்கல் கொடுக்கவேண்டும்.

தவிர **M.Sc.** படிக்கும் மாணவர்கள், அவர்கள் "**thesis**" அனுப்புவதற்கு இந்த ஆராய்ச்சிப் பண்ணை மூலமாகச் செய்யலாம் என்று ஏற்பாடு செய்தால் உண்மையிலேயே நமது மாணவர்களுக்கு உதவி செய்தது போலாகும். இப்பொழுது கோயம்புத்தூரிலிருக்கும் கல்லூரிமூலம் தான் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நமது மாகாணத்திலேயே எண்ணெய் வித்துக்கள் சம்பந்தப்பட்டவரை எறையானூர் ஆராய்ச்சிப் பண்ணை ஒரு பிரசித்திபெற்ற ஆராய்ச்சிப்பண்ணை. ஆகவே அகில இந்தியாவிலும் **M.Sc.** படிக்கக் கூடிய மாணவர்கள், இந்தப் பண்ணை மூலமாக **thesis** செய்து அனுப்பலாமென்று நமது சர்க்கார், சம்பந்தப்பட்ட இலாக்காவுக்குச் சிபார்சுசெய்தால் நமது மாணவசமூகத்துக்கு நன்மை செய்ததோடு விவசாயத்திற்கும் ஊக்கம் அளிப்பதுபோலாகும்.

22nd December 1956] [Sri K. Aranganathan]

அடுத்தபடியாக விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர்கள் வேலை சம்பந்தப்பட்டவரை இரண்டு பிர்க்காக்களுக்கு ஒருவர் வீதம் போட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது புதிதாக நியமிக்கப்படும் டிமான்ஸ்ட்ரேட்டர்கள் எல்லா கிராமங்களுக்கும் போவதில்லை. மாதத்தில் 20 நாட்களுக்குப் பிரயாணம் செய்ய வேண்டுமென்றால் 5 அல்லது 10 நாட்களுக்குத்தான் கிராமங்களுக்குப் போகிறார்கள். ஏன் என்று கேட்டால், எங்கள் ஆபீஸ் வேலையையும் கவனிக்க வேண்டியிருக்கிறது ; இல்லாவிட்டால் மேல் அதிகாரிகள் எங்களிடம் **explanation** கேட்கிறார்கள் ; வெளி ஊர்களுக்குச் சென்று விவசாயிகளுக்கு யோசனை சொல்ல எங்களுக்குப் போதிய அவகாசமில்லை என்று சொல்லுகிறார்கள். ஆபீஸ் வேலை சம்பந்தப்பட்ட மட்டில் அவர்களுக்கு ஓரளவுக்கு நிவாரணமளிக்க வேண்டும். இதையும் சர்க்கார் கவனிக்க வேண்டும்.

நமது மாகாணத்திலேயே மணிலாக்கொட்டைக்குப் பெயர்போனது தென் ஆர்க்காடு ஜில்லாதான். இன்றைக்கு ஒரு ஏக்கரில் கிடைக்கும் மகசூலிலிருந்து ரூபாய் 130 கூட கிடைப்பதில்லை. அந்த அளவுக்கு பூமியின் தரம் கெட்டிருக்கிறது. இன்றைக்கு மணிலாவின் விலை அதிகமாயிருப்பதினால் ஏதோ நிலைமை திருப்திகரமாக இருக்கிறதே ஒழிய, வெளிநாட்டு மார்க்கெட்டில் கிடைக்கும் விலை சரிந்தால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள். பெரிய நஷ்டத்திற்குள்ளாவார்கள். ஆகவேதான் நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் குறைந்த காலத்தில் அதிக மகசூலைக் கொடுக்கக் கூடிய மணிலாக் கொட்டை விதைகளை உண்டாக்க வேண்டும். சர்க்கார் இதற்கு நல்ல ஆதரவு கொடுக்க வேண்டும்.

காட்டுச்செல்வம் சம்பந்தப்பட்ட வரை நமது மாகாணம் ஒரு துரதிருஷ்டம் பிடித்த மாகாணமென்றே சொல்லவேண்டும். நமது ராஜ்யத்தின் விஸ்திரணத்திற்குத் தகுந்த அளவுக்குக் காட்டுப் பிரதேசமில்லை. ஆகவே அதிகமாக காடுகளை உற்பத்தி செய்யவேண்டுமென்றும், "கும்ரி" சாகுபடி முறை செய்யவேண்டுமென்றும், சர்க்கார் திட்டமிட்டு ஏராளமாகப் பணத்தைச் செலவு செய்கிறார்கள். செஞ்சித் தாலூக்காவில் காரை "ரிசர்வ் காடு" இருக்கிறது. அங்கே யூகலிப்ட்ஸ், ஸிஸ் போன்ற செடிகளை வைத்திருக்கிறார்கள். அவைகளுடைய வளர்ச்சியைப் பார்த்தால் ஆச்சரியமாகயிருக்கிறது. நாலைந்து மாதங்களுக்குள் 5 அல்லது 6 அடி உயரத்திற்கு வளர்ந்திருக்கின்றன. சமவெளிப் பிரதேசங்களிலும் இந்த மரங்கள் நன்றாக வளரும் என்பதைத்தான் இது நிரூபிக்கிறது. 150 ஏக்கரா நிலத்தில் இவைகளைப் பயிரிட்டிருக்கிறார்கள். மழை பெய்ததன் காரணமாக இப்பொழுது நன்கு வளர்ந்திருக்கின்றது. ஆனால் ஜூன், ஜூலை போன்ற கோடைக்காலத்தில் இக்கன்றுகளுக்குத் தண்ணீர் இறைக்க வழிவகை செய்யவேண்டும். கோடைக்காலத்தில் போதிய அளவுக்குத் தண்ணீர் பாய்ச்சவில்லையென்றால், சுமார் மூவாயிரம் அல்லது நாலாயிரம் கன்றுகள் கெட்டுப்போய்விடும் என்று சொல்லுகிறார்கள். அரசாங்கம் இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும்.

செஞ்சித்தாலூக்காவில் அண்ணமங்கலம், சாத்தனந்தல் ஆகிய இரண்டு கிராமத்திலும் உள்ள மரங்களில் ஏழு அல்லது எட்டு அடிவரை வளர்ந்துள்ள மரங்கள் இருக்கின்றன. இவைகளை அழிக்காமல் பாதுகாக்கவேண்டியதற்காக, காட்டு இலாக்காவே அவைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று முறையிட்டும், இது சம்பந்தமாகக் காட்டு இலாக்கா நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை. இந்த இரண்டு இடங்களையும் பாதுகாக்க காட்டிலாக்காவினர் முன் வருவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

Madras Commercial Crops Market Act-ன் கீழ், தென் ஆற்காடு ஜில்லா சம்பந்தப்பட்டவரை, நெல்லை வியாபாரப் பொருளாக பிரகடனப்படுத்த வேண்டுமென்று தென் ஆற்காடு மார்க்கெட்டிங் கமிட்டியும், ஜில்லா கலெக்டரும் அழுத்தம் திருத்தமாக வற்புறுத்தியிருக்கிறார்கள். இதை அரசாங்கம் காலதாமதமின்றி பரிசீலனை செய்து, உடனடியாக நெல்லை "வியாபாரப் பொருள்" என்று பிரகடனப் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரிக்கிறேன்.

II.—ANNOUNCEMENTS BY THE DEPUTY SPEAKER—*cont.*

RE. (?) ARREST OF SRI M. KALYANASUNDARAM, M.L.A.

DEPUTY SPEAKER : I have to announce to the House that I have received the following telephonic message at 12-30 p.m. to-day from the Commissioner of Police :—

' Sri M. Kalyanasundaram, M.L.A., was arrested this day at 11-05 hours opposite to the main gate, Rajaji Hall, Mount Road, for defying the prohibitory order under Section 41 in force in the area.'

III.—VOTING ON DEMANDS FOR ADVANCE GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

(5) DEMAND IV—FOREST DEPARTMENT—*cont.*

(6) DEMAND XVIII—AGRICULTURE AND FISHERIES—*cont*

(7) DEMAND XIX—VETERINARY—(*cont.*)

12-41 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM : உதவி சபாநாயகர் அவர்களே இந்த மான்யம் மிகவும் முக்கியமான மான்யமாகும். விவசாயம், வனம், கால்நடை இவைகளைப்பற்றி இருக்கக்கூடியவைகள். நம் நாட்டின் பொருளாதாரத்திற்கு அடிப்படையாக இருக்கக்கூடியவைகளாகும். அது பற்றி பல அங்கத்தினர்கள் பல விஷயங்களைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்று நாம் திட்டமிட்டிருப்பது அதன் அடிப்படையின் கீழ்தான். நம் பொருளாதார பலத்தை அதிகரிக்கவேண்டுமென்று விரும்பினால், அது நாம் விவசாயத் துறையில் எவ்வளவு தூரம் வெற்றி பெறப் போகிறோமோ அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு தொழில் அபிவிருத்தி போன்ற மற்ற அபிவிருத்திகளெல்லாம் விவசாயத்தில் நாம் எவ்வளவு தூரம் கவனம் எடுத்துக்கொண்டிருக்கிறோம், அதில் நாம் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையினால் விவசாயத் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்துக் கொள்வது மிகவும் முக்கியம். அதற்காக பல நடவடிக்கைகளையும் இன்று சர்க்கார் எடுத்து வருகிறது.

முதலாவதாக, நல்ல விதைகளை தயாரித்து அவைகளையெல்லாம் விவசாயிகளுக்கு கொடுப்பது என்பது இன்றைக்கு ஏற்பாடு. அதைத் துரிதப்படுத்துவதற்காகத்தான் சர்க்கார் இந்தச் சட்டசபையில் நேற்று முந்தாநாள் ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள். ஆகவே, இந்த அடிப்படையில் நல்ல விதைப் பண்ணைகள் ஏற்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் நல்ல விதைகளை எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்வதுதான் சர்க்காரின் முதல் திட்டமாக அமைந்திருக்கிறது. அந்தப் பண்ணைகள் அமைப்பதில், அது நல்ல முறையில் நடைபெறுவதற்கு இங்குள்ள அங்கத்தினர்களின் ஒத்துழைப்புமட்டுமல்ல, பொது மக்களின் ஒத்துழைப்பும் போதிய அளவில் இருந்தால்தான் இப்படிப்பட்ட லட்சியங்களை நாம் அடைய முடியும். அதோடு நாம் எவ்வளவு கவனிக்கிறோமோ அந்த அளவிற்கு இந்த விதைப் பண்ணைகளையும் பெருக்க முடியும். ஆகவே, நல்ல நிலங்கள் கிடைப்பதோடு அதற்குப் பிற்பாடு அந்தப் பண்ணைகள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும், அதில் ஒரு பங்கும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக. எல்லோருக்கும் உரம் கொடுக்கும்படிச் செய்யவேண்டும். இதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்ற முறையில் விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் இதற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் எரு என்று சொல்லும்போது நாம் எல்லோரும் ரசாயன

எருவைப்பற்றித்தான் நினைக்கிறோம். அதாவது செயற்கை எருவைப்பற்றிதான் நினைக்கிறோம். அதை எவ்வளவு ஜாக்கிரதையாக உபயோகப்படுத்த வேண்டுமென்று விவசாயிகளுக்கு நன்கு தெரியும். அந்த செயற்கை எருவுடன் இயற்கையாகவுள்ள எருக்களையும், அதாவது பச்சைத் தழைகள், குப்பை கூளங்கள் இவைகளிலிருந்து கிடைக்கக்கூடிய எருக்கள், மலஜலங்களால் ஏற்படக்கூடிய எருக்கள் இவைகளைச் சேர்த்து உற்பத்தி செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அதன் மூலம் தான் செயற்கை எருவை நன்கு உபயோகிக்க முடியும். பூமியின் தரமும் குறையாமல் பாதுகாக்க முடியுமென்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, எரு என்று சொல்லும்போது லட்சக்கணக்கான "டன்" செயற்கை எருவைக்கொண்டுவந்து மக்களுக்கு வழங்குவது என்பதுமட்டுமல்ல. நம்மிடையே இருக்கக்கூடிய இயற்கை வசதிப் பொருள்களை உபயோகப்படுத்தி, கழிவுப் பொருள்களை உபயோகப்படுத்துவது நமது முதல் கடமையாக இருக்கவேண்டும். இதை ஒரு இயக்கமாகவே ஆரம்பிக்க வேண்டும். எந்தக் கிரமத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, கழிவுப் பொருள்கள் வீணாகப் போகாமல் அவைகள் எருவாக மாற்றப்படுகின்றன என்ற முறையை அடைவதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும். இதன் மூலம் கிராமத்தின் சுகாதாரமும் முன்னேற்றமடைகிறது. அப்படி சுகாதாரம் முன்னேற்றமடைவதுடன் அப்பொருள்கள்மூலம் நல்ல எருக்கள் கிடைத்து நமது உற்பத்தியைப் பெருக்கவும் சௌகரியங்கள் ஏற்படுகின்றன என்பதை மனதில் வைத்துக்கொண்டு இதை ஒரு இயக்கமாகவே ஆரம்பித்து அங்கத்தினர்களும் பொதுமக்களும் அதில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இதற்கு ஒருதிட்டமிட்டு வேண்டியதைச் செய்ய விவசாய இலாகாமூலம் வந்திருக்கிறது. தேசிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழும், சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, இந்தப் பூச்சி புழுக்கள் விழுந்து இந்தப் பயிர்கள் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும். அதற்கான மருந்துகளை வேண்டிய அளவில் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறது. அந்த மருந்துகளை பாதி விலைக்கு நிரந்தரமாகக் கொடுப்பதற்கு இன்று சர்க்கார் முடிவு செய்து அதற்கு வேண்டிய உத்தரவுகளைச் சீக்கிரம் பிறப்பிக்கும். இம்மருந்துகளை பாதி விலைக்கு கொடுக்க உத்தரவு போடுவதோடு மட்டுமல்லாமல் இந்தப் பூச்சி புழுக்கள் விழும்போது காலா காலத்தில் விவசாயிகளுக்கு மருந்து கிடைப்பதற்கும், அதற்கு வேண்டிய கருவிகள் கிடைக்க ஏற்பாடு செய்வதற்கும் சர்க்காரின் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

நான்காவதாக, விவசாயத் துறையில் முன்னேற்ற முறைகளை அனுசரிப்பதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். நமது ராஜ்யத்திலுள்ள விவசாயிகள், உழைப்பாளிகள், நல்ல முறையில் விவசாயம் செய்யக்கூடிய திறமை பெற்றவர்கள். அவர்களுக்கு இப்பொழுது நவீன முறையில் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நல்ல முறைகளை கையாளுவதற்கு அவர்களுக்கு சொல்லிக்கொடுப்பதும் அதையனுசரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொடுப்பதும் அவசியம். இந்த நான்கும் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு அடிப்படையாக இருக்கக் கூடியவைகள். அத்துடன், விவசாயிகளுக்கு கடன் வசதி போன்ற மற்ற வசதிகள் செய்து கொடுத்தால் தான் இந்தத் துறையில் முன்னேற்றம் காண முடியும் என்ற முறையில் இந்த விவசாய அபிவிருத்தித் திட்டம் ஒரு தனித் திட்டமாக அமைக்கப்பட்டு அதற்கான எல்லா வித நடவடிக்கைகளும் எடுக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தின் திட்டமும், பிளானிங் கமிஷனின் திட்டமும், ராஜ்ய சர்க்காரின் திட்டமும் அமைந்து இருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு எல்லா மக்களும், விவசாயத் துறையில் அனுபவமுள்ளவர்களும், விவசாயத் துறையில் அக்கறை

[Sri C. Subramaniam] [22nd December 1956

யுள்ளவர்களும் இதில் பங்கெடுத்துக்கொண்டால் தான் இதை நல்ல முறையில் நிறைவேற்றி வைக்க முடியும். ஆக விவசாயத் துறைக்கு இன்றைக்கு புதிய ஒரு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு நம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதின் மூலம் உணவுப் பிரச்னையை தீர்ப்பதோடு அவர்களுடைய வாழ்க்கை நிலையும் உயரமுடியும். உற்பத்தி அதிகமாகும்போது விவசாயிக்கு வருமானமும் அதிகம் கிடைக்கிறது. அதோடு அவர்களின் வாழ்க்கைத் தரமும் உயருகிறது. இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு தான் மற்றத் திட்டங்கள் முன்னேற வேண்டும். தொழிற் திட்டங்களானாலும் சரி, மற்ற எந்த திட்டங்களானாலும் சரி, அவைகளுக்கெல்லாம் அஸ்திவாரம் விவசாயம் என்பதை உணர்ந்து தான் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த விவசாயத்திற்கு அனுசரணையாக இருப்பது கால் நடைகள். கால் நடைகள் இல்லாவிட்டால் விவசாயம் நல்ல முறையில செய்ய முடியாது. விவசாயம் நல்ல முறையில் நடத்தப் படுகிறதா அல்லது ஒரு விவசாயி ஊக்கம் காட்டுகிறானா என்று பரீட்சை செய்து பார்ப்பதற்கு, அவனுடைய கன்று காலிகள் எப்படியிருக்கிறது என்று பார்த்தாலே சொல்லி விடலாம். ஒரு விவசாயி விவசாயத்தில் ஊக்கம் செலுத்துகிறானா, விவசாயம் நன்றாய் நடக்கிறதா என்று அவனது கன்று காலிகளைப் பார்த்தே சொல்லி விடலாம். விவசாயத்துறையில் முன்னேற்ற மடையவேண்டுமானால் கால் நடைகளை நன்கு வளரச் செய்ய வேண்டும். ஆகவே, விவசாயத் துறையில் முன்னேற்றம் காணவேண்டுமென்று நினைக்கும்போது இந்தக் கால்நடைகளையும் நன்கு வளர்ப்பதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்; எடுத்துக் கொண்டும் வரப்படுகிறது. முக்கியமாக பாலகிருஷ்ணன் அவர்கள் மாப்பிள்ளைக் காளைகள் விஷயத்தில் எவ்வளவு அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அதைப்பற்றி பேசும்போது அவர் மனதில் ஏற்படும் உற்சாகத்தை நாம் பார்த்தோம். (சிரிப்பு)

Sri N. K. PALANISAMY: அவரை மாப்பிள்ளைக் காளை என்றா மந்திரியவர்கள் கூறுகிறார்கள்?

The Hon. Sri C. SUBRAMANIAM: பால கிருஷ்ணன் அவர்களை மாப்பிள்ளை காளை என்று சொல்வதற்கு நான் தயாராயில்லை. அந்தக் கட்டம் மாறிவிட்டதென்று நினைக்கிறேன்.

Sri N. K. PALANISAMY: பாலகிருஷ்ணன் அவர்கள் சமீபத்தில் தான் திருமணம்செய்து கொண்டார்கள். ஆகவே அவருக்கு அடிக்கடி பெண்கள் மேல் இரக்கம் உண்டாகிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM: கால்நடை வளர்ப்புப் பண்ணை ஒன்றை புதுக்கோட்டையில் ஏற்படச் செய்யவேண்டுமென்று அவர் தீவிர அக்கரை எடுத்துக்கொண்டிருப்பதைப் பார்த்து சந்தோஷப் படுகிறேன். அவர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய முறையில் இன்றைக்கு அதற்கு வேண்டிய அளவு நிலம் ஆர்ஜிதம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தியை கேட்டவுடனேயே அவர்கள் புளகாங்கிதம் அடைந்து விட்டார். அந்தப் பண்ணையை சீக்கிரம் ஏற்படுத்த, அங்கு மாப்பிள்ளைக் காளைகள், பெண் கால் நடைகள், கிடாக்கள் இவைகளை நன்றாக வளர்ப்பதில் பாலகிருஷ்ணன் அவர்கள் முக்கிய பங்கு எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அதே மாதிரி மற்ற இடங்களிலும் கால் நடைகளை வளர்ப்பதில் அதற்கு வேண்டிய பலவிதமான ஊக்கங்களை கொடுப்பதற்கான முயற்சிகளை சர்க்கார் செய்து வருகிறது. கால் நடை ஆஸ்பத்திரியில் இது முக்கிய இடம் பெற்றுள்ளது. நம்முடைய இடங்களில் முக்கியமாக கால் நடைகளுக்கு வாத நோய் வந்து ஆயிரக்கணக்கான மாடுகள் மாண்டு

22nd December 1956] [Sri C. Subramaniam]

விடுகின்றன. இம்மாதிரிப்பட்ட நோய்கள் வந்தால் முக்கியமாக மாடுகள் பலவீனம் அடைந்து விடுகிறது. ஆதலால் அதற்கான வைத்திய வசதிகளை செய்து கொடுக்க சர்க்கார் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதற்காக பல ஆஸ்பத்திரிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. இவைகளிலிருந்து கொடுக்கப்படும் வசதிகள் போதாது என்று மோபைல் வான்கள் (**Mobile vans**) மூலமாக கால் நடைகளுக்கு வைத்திய வசதிகள் கொடுக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இவைகளை வைத்துக்கொண்டு நம்முடைய கால்நடைகளின் தரத்தை உயர்த்த வேண்டியது மிகவும் அவசியம். நமது நாட்டில் அதிகமாக கால் நடைகள் இருக்கின்றன. அப்படியிருந்தும் நமது நாட்டில் தான் மாடுகளின் தரம் கீழாக இருந்துகொண்டிருக்கிறது. காரணம் அவைகளை சரியான முறையில் பராமரிப்பதில் கஷ்டங்கள் இருக்கின்றன. இந்த கஷ்டங்களைப் போக்குவதற்கும், நல்ல மாதிரியான பசு மாடுகளை உற்பத்தி செய்வதற்கும், வேண்டிய திட்டங்களை கொண்டு வருவதற்கும் சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதற்கு வேண்டி அதாவது பல நல்ல மாடுகளை உற்பத்தி பண்ணுவதற்கு வேண்டி பல தனிப்பட்ட நபர்களும் பண்ணைகள் நடத்தி வருகிறார்கள். இடைக்கோட்டை ஜமீன்தார்கள் போன்றவர்கள் நடத்தி வரும் பண்ணைகள் இதற்கு உதவிகரமாக இருக்கும். இவர்களைப் போன்ற தனிப்பட்ட நபர்களும் தனிப்பண்ணை வைத்து நடத்தி நல்ல வேலை செய்து பொது மக்களுக்கும் அதன் மூலம் உதவி செய்வதற்கு வசதி செய்து கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். நமது ஜமீன்தார் போன்றவர்கள் இவ்விதம் செய்தால் அது கால் நடைகளை விருத்தி செய்வதற்கு உதவி கரமாக இருக்கும். அவர்களும் அவ்விதம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக உணவுப் பொருள்களைப்பற்றிப் பேசும்போது மீன் வளர்ப்பு, மீன் பிடிப்பு, இவைகளைப் பற்றிப் பேசப்பட்டது. இன்றைக்கு உணவு உற்பத்திக்காக நமது நாட்டில் இருக்கும் நிலங்களை விட கூடுதல் விஸ்தரிக்க முடியாது. எவ்வளவு விவசாயம் செய்வதென்றாலும் ஓரளவுக்கு ஒரு வரம்புக்குட்பட்டுத் தான் இருக்கவேண்டியிருக்கிறது. ஆனால் நம்முடைய தேசத்தில் சமுத்திரம் கணக்கில்லாத அளவில் இருக்கிறது. அதில் மீன்களும் இருக்கின்றன. நம்முடைய உணவுக்கு மீனைப் பயன்படுத்துவதற்கு வேண்டி இன்று எவ்வளவோ முறைகளில் அதிகமாக மீன் பிடிக்கப்பட்டு வருகிறது. "போட்" (**boat**) மூலமாகவும் பெரிய கப்பல்கள் மூலமாகவும் தூரத்திலுள்ள மீன்கள் பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நம்முடைய உணவுத் திண்டாட்டத்தை ஓரளவு போக்கிக்கொள்ள முடியும். ஏதோ இன்று ஒரு பக்கத்தில் மீன், இறைச்சி முதலானவைகளைச் சாப்பிடுவதில்லை என்று பலர் இருந்து வருகிறார்கள். ஒரு பக்கத்தில் மீன், இறைச்சி இவைகளையெல்லாம் சத்துள்ள ஆகாரங்களாக உபயோகித்து வருகிறார்கள். ஆகவே இன்றைக்கு மீன் பிடிப்பு தொழிலுக்கும் மீன் பிடிப்பு வளர்ப்பு இலாக்காக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த இலாக்காக்கள் மூலம் நாம் மத்திய சர்க்காரிலிருந்தும் அந்நிய நாடுகளிலிருந்தும் பெற்று வரும் உதவியை மீன் பிடித் தொழிலுக்கு வேண்டி பெரிதும் உபயோகித்து வருகிறோம். இதை இன்னும் கூடுதலாகப் பெருக்குவதற்கு வேண்டி பல நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகிறது என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் வனங்கள் அதாவது காடுகளைப்பற்றி சொல்லப்பட்டது. நம்முடைய நாட்டில் இருக்கும் வனங்களில் நல்ல மரங்களை அதிகமாக வளர்க்கவேண்டியது மிக அவசியம். சமீபத்தில் ஏற்பட்ட மொழி வழி மாகாண பிரிவினைக்குப் பிறகு நமக்கிருந்த காடுகள் எல்லாம் அதிகமாக மேற்குப் பக்கத்திற்கும் வடக்குப் பக்கத்திற்கும் போய் விட்டன. இப்போது நமக்குக் குறைவான காடுகளே இருக்கின்றன. ஆகவே நமக்குக் கிடைத்திருக்கிற காடுகளை எவ்வளவுக்கெவ்வளவு அபிவிருத்தி செய்ய முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று தான் அரசாங்கம் நினைத்திருக்கிறது. நமக்கு ஜமீன்தார்களிடமிருந்து கிடைத்த காடுகள் எல்லாம் சிறிய காடுகள் தான். அவைகளையும் வளமாக்கவேண்டியது நம்

முடைய கடமையாக இருக்கிறது. இதற்கு வேண்டி திட்டமிட்டு வேலை செய்வதற்கு வேண்டி திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாக நாம் வேலை செய்து கொண்டு வந்தால் குறுகிய கால அளவில் இதையெல்லாம் நல்ல காடுகளாக ஏற்படுத்தி விடமுடியும் என்று நம்புகிறேன். ஆகவே இந்த மான்யங்கள் எல்லாம் தேசிய நன்மைக்கு வேண்டிய தேசத்திலுள்ள பல காரியங்களை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டித் தான் கேட்கப்பட்டிருக்கிறது. இந்த விதமான காரியங்கள் நடந்தேறினால் தான் நாடு முன்னேற்றம் அடைய முடியும். நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு வேண்டி தான் இந்த மான்யம் பூராவும் கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த மான்யம் பூராவும் நிறைவேற்றித் தரவேண்டும் என்றும், இதிலிருந்து 100 ரூபாய் குறைப்பதற்கு பதிலாக 100 ரூபாய் அதிகமாக கொடுக்க வேண்டும் என்று பிரேரணைகள் கொண்டு வரவேண்டும் என்றும், ஆனால் அதற்கு அங்கத்தினர்களுக்கு அதிகாரம் கிடையாது, ஆகவே இங்கே கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு " அதிகமாக அவர்களுக்கு கொடுங்கள் " என்று பிரேரணை கொண்டுவந்து " தொடர்ந்து வேலை செய்யுங்கள் " என்று ஆசிர்வதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்த வெட்டுப் பிரேரணைகளை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri K. VINAYAKAM: ஸார், ஒவ்வொரு டிமாண்டிலும் கூட்ட வேண்டும் என்று அக்கறை இருந்தால்கூட அந்த தொகையை அதிகப்படுத்துவதற்கு பார்லிமெண்ட் நடவடிக்கை பிரகாரம் ஏதாவது மோஷன் கொண்டு வருவதற்கு அதிகாரம் இருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: அந்த அதிகாரம் இல்லையென்றாலும் கூட இருக்கின்ற தொகையை வெட்டிக் குறையுங்கள் என்று சொல்லாமல் இருந்தாலே போதும்.

Sri V. BALAKRISHNAN: கல்வி, காடு, மீன் இந்த விஷயங்களில் தொடர்பு கொண்டு இதன் அபிவிருத்திக்காக ஊக்கம் காட்டி வருவதாக கனம் மந்திரி அவர்களுடைய பதிலிலிருந்து தெரிய வருகிறது. ஆதலால் இந்த நிதி மான்யங்களின் மீது கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்.

The cut motions were, by leave, withdrawn.

DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rupees 19,00,000 as advance grant for the year 1957-58 under Demand IV—Forest Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 75,00,000 as advance grant for the year 1957-58 under Demand XVIII—Agriculture and Fisheries.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 24,00,000 as advance grant for the year 1957-58 under Demand XIX—Veterinary.'

The Demand was put and carried and the Grant was made.

(8) DEMAND XXIV—CIVIL WORKS—WORKS.

(9) DEMAND XXV—CIVIL WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

(10) DEMAND XL—CAPITAL OUTLAY ON CIVIL WORKS.

(11) DEMAND XXVII—ELECTRICITY.

(12) DEMAND XLI—CAPITAL OUTLAY ON ELECTRICITY SCHEMES.

(13) DEMAND VIII—IRRIGATION.

(14) DEMAND XXXVI—CAPITAL OUTLAY ON IRRIGATION.

The Hon. Sri R. SHANMUGA RAJESWARA SETHUPATHI: Mr. Deputy Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

(1) 'That the Government be granted a sum not exceeding Rs. 2,07,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXIV—Civil Works—Works'.

(2) 'That the Government be granted a sum not exceeding Rs. 41,50,000 as advance grant for the year 1957-58 under Demand XXV—Civil Works—Establishment and Tools and Plant'.

(3) 'That the Government be granted a sum not exceeding Rs. 1,07,00,000 as advance grant for the year 1957-58 under Demand XL—Capital Outlay on Civil Works'.

(4) 'That the Government be granted a sum not exceeding Rs. 6,00,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXVII—Electricity'.

(5) 'That the Government be granted a sum not exceeding Rs. 15,00,00,000 as advance grant for the year 1957-58 under Demand XLI—Capital Outlay on Electricity Schemes'.

(6) 'That the Government be granted a sum not exceeding Rs. 52,00,000 as advance grant for the year 1957-58 under Demand VIII—Irrigation'.

(7) 'That the Government be granted a sum not exceeding Rs. 2,05,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXXVI—Capital Outlay on Irrigation'.

All these demands may be taken up together for discussion.

DEPUTY SPEAKER: Motion moved—

(1) 'That the Government be granted a sum not exceeding Rs. 2,07,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXIV—Civil Works—Works'.

(2) 'That the Government be granted a sum not exceeding Rs. 41,50,000 as advance grant for the year 1957-58 under Demand XXV—Civil Works—Establishment and Tools and Plant'.

(3) 'That the Government be granted a sum not exceeding Rs. 1,07,00,000 as advance grant for the year 1957-58 under Demand XL—Capital Outlay on Civil Works'.

(4) 'That the Government be granted a sum not exceeding Rs. 6,00,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXVII—Electricity'.

(5) ' That the Government be granted a sum not exceeding Rs. 15,00,00,000 as advance grant for the year 1957-58 under Demand XLI—Capital Outlay on Electricity Schemes '.

(6) ' That the Government be granted a sum not exceeding Rs. 52,00,000 as advance grant for the year 1957-58 under Demand VIII—Irrigation '.

& (7) ' That the Government be granted a sum not oxceeding Rs. 2,05,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXXVI—Capital Outlay on Irrigation '.

Sri P. VENKATESHA SHOLAGR : என் வெட்டுப் பிரேரணையை move பண்ணுகிறேன். I move.

' That the allotment of Rs. 52,00,000 as advance grant for the year 1957-58 under Demand VIII—Irrigation, be reduced by Rs. 100 '.

Sri V. BALAKRISHNAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார மான்யத்தின் கீழ் (Demand XXVII) என்னுடைய வெட்டுப் பிரேரணையையும், அதாவது மின்சாரத்திற்கு என்று ரூ. 6,00,00,000 ஒதுக்கியிருப்பதிலிருந்து ரூ. 100 குறைக்க வேண்டும் என்றும், நீர்ப்பாசன மான்யத்திற்கு (Demand VIII) என்று ஒதுக்கப்பட்ட ரூபாய் 52,00,000 யிலிருந்து. ரூ. 100 குறைக்க வேண்டும் என்று என்னால் கொடுக்கப்பட்ட வெட்டு பிரேரபணையை நான் பிரேரேபிக்கிறேன்.

DEPUTY SPEAKER : You need not have moved your cut motion on the Irrigation Demand. A cut motion has already been moved on that Demand and you can speak on that. Cut motions moved—

' That the allotment of Rs. 52,00,000 as advance grant for the year 1957-58 under Demand VIII—Irrigation be reduced by Rs. 100.'

' That the allotment of Rs. 6,00,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXVII—Electricity be reduced by Rs. 100.'

The Demands as well as the cut motions are before the House for discussion.

Sri A. RATNAM : ஸார், On a point of order. ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்புகிறேன். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார மான்யத்திற்கு என்னால் கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரபணையை பிரேரேபிக்க விடாமல் இருட்டடைப்பு செய்வது ஒழுங்கல்ல என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : Order, order. Hon. Member should have risen and moved his cut motions. I have no objection to hon. Members moving the cut motions given notice of by them. Because nobody stood up to move the cut motions, I allowed discussion on the

Demands and the Cut Motions so far moved. It is the duty of the hon. Members to rise in their places and move the Cut Motions if they wanted.

I allot five minutes' time for each hon. Member.

Sri P. VENKATESHA SHOLAGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சென்ற வருஷம் நான் இதே வடவாறு சம்பந்தமாக பேசும்போது அங்குள்ள நெருக்கடியை உத்தேசித்து அந்த ஆற்றை விரிவு படுத்த வேண்டும் என்று சொன்னேன். அதற்கு கனம் மந்திரி அவர்களும் ஒத்துக் கொண்டார். அங்குள்ள கஷ்டங்களை போக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்காகவும் ஒப்புக் கொண்டார். அந்த மாதிரி இப்பொழுது ஏதோ வேலைகள் நடத்த திட்டமிட்டு வேலைகள் நடந்து வருவதாகத் தெரிய வருகிறது. இந்த வேலை இந்த வருஷத்திலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகவே நான் இந்த வெட்டுப் பிரேரேபணையை கொடுத்திருக்கிறேன். சுமார் 16 ஆயிரம் ஏக்கருக்கு பாயக் கூடிய வாய்க்காலை 46 ஆயிரம் ஏக்கருக்குப் பாய்வதற்கு திட்டமிட்டிருக்கிறார்கள். அதனால் பெரும் அளவு வருஷா வருஷம் தண்ணீர் தட்டு ஏற்படுகிறது. அதனால் விவசாயிகள் சாகுபடி செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதே சமயத்தில் போன வருஷம் ஒரு மாநாடு கூட்டி அந்த மாநாடு மூலமாக இந்த கஷ்டத்தை தீர்த்து வைக்க வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களுக்கு தெரிவித்தோம். பிறகு கனம் மந்திரி அவர்களும் இஞ்சினியர் அவர்களும் வந்து பார்வையிட்டார்கள். ஒரு நாள் தண்ணீர் விட்டால் சுமார் 900 கன கடி தண்ணீர் வந்து கொண்டிருந்ததை அதற்கு மேல் 1,400 கன அடி தண்ணீர் விடுவதற்குத் தயாராக இருப்பதாகவும் சொன்னார்கள். ஆனால் 1946 அடிக்கு மேல் தண்ணீர் விட்டதால் தாங்கவில்லை. ஆழமில்லாமல் இருப்பதால் அதிகப்படியாக தண்ணீர் விட்டால் ஆறு கரை புரள்கிறது. மற்றும் ஆற்றில் உடைப்பு எடுத்துக்கொள்ளும்போதும் இருக்கிறது. அதனால் அங்குள்ள கரைகளை பலப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. அத்துடன் ஆற்றின் ஆழத்தையும் அதிகப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுதுதான் அதிகப்படியான தண்ணீர் ஆற்றில் விடலாம். இதை உடனடியாக கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த வருஷத்திலேயே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **Sri V. BALAKRISHNAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார மான்யத்தின் கீழ் நான் வற்புறுத்த வேண்டியது ஒன்று இருக்கிறது. புதுக்கோட்டை மின்சார ஸ்தாபனத்தை சர்க்கார் எடுத்துக் கொண்டு விட்டார்கள். அதைப்பற்றி சந்தோஷம்தான். அங்குள்ள ஜனங்களும் சந்தோஷப்படுகிறார்கள். அவர்களுக்கு அதே சமயத்தில் பாதகமும் ஏற்பட்டிருக்கிறது. புதுக்கோட்டையில் பெரும்பகுதியில நடுத்தர வர்க்கத்தினரும், கீழ்த்தர வர்க்கத்தினரும் தான் இருக்கிறார்கள். அவர்களிடம் வேலைக்காரர்கள் கிடையாது. ஏற்கெனவே மின்சாரம் ஸ்தாபனம் வேலை செய்து வந்தபோது மின்சாரப் பணத்தைக் கட்ட வேண்டுமானால் மாதாமாதம் அதை வாங்கிக்கொள்வதற்கு பில் கலெக்டர் வந்து வாங்கிக்கொண்டு போவார். அவர் வரும்போது பணத்தைக் கொடுத்தாலும் கொடுப்பார்கள் "அல்லது பிறகு வா" என்று சொல்லி பிறகு வந்தவுடன் பணத்தைக் கொடுத்தாலும் கொடுப்பார்கள். இந்த வசதி அப்பொழுது இருந்தது. ஆனால் அந்த ஸ்தாபனத்தை சர்க்கார் எடுத்துக் கொண்ட பிறகு அப்படி பணம் கட்ட வேண்டுமானால் அந்த பணத்தை ஆபீசில் கொண்டுபோய் கட்ட வேண்டியதாக இருக்கிறது.

மின்சாரம் எவ்வளவு செலவு செய்து இருக்கிறார்கள் என்று கணக்கு எடுக்க வரும்போது கூட சிலர் பணத்தைக் கட்டி விட்டு ரசீது வாங்கிக் கொள்ளுவது வழக்கமாக இருந்தது.

அல்லது ஐந்தாறு நாட்கள் கழிந்து வந்து வாங்கிக் கொள்ளுவதும் வழக்கமாக இருந்தது. ஆனால் இப்போது அந்த வழக்கம் மாறிப்போய் விட்டது. இப்போது மின்சார நிலையத்திற்குப் போய் பணம் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அப்படி சாதாரண மக்களால் போய் கட்ட முடியவில்லை. சிலர்தான் வேலைக்காரர்கள் வைத்திருக்கிறார்கள். அப்படி, வேலைக்காரர்களை அனுப்பினாலும் அந்த வேலைக்காரர் அங்கு போய் பணத்தைக் கட்டுவதாக இருந்தாலும் அங்கு ஏகப்பட்ட கியூவாக இருக்கிறது. உடனே பணத்தை கட்டி விட்டுவர முடியவில்லை. வேலைக்காரர்கள் அப்படி க்யூ வரிசை இருக்கிறது என்பதைப் பயன்படுத்திக்கொண்டு அன்று பூராவும் வேலைக்கு வராமல் இந்தக் காரணத்தைக் காட்டி விடுகிறார்கள். இப்படி அதிகப்படியான புகார்கள் இருக்கின்றன. பணம் வாங்குவதற்கு என்று நியமித்திருந்த பில் கலெக்டரை ஏன் நிறுத்தி விட்டார்கள் என்பது புரியவில்லை. அவைகளை மறுபடியும் அமுலுக்கு கொண்டு வந்து பில் கலெக்டர்களை நியமித்து அவர்கள் வீடு வீடாகச் சென்று பணத்தை வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் அந்த ஸ்தாபனத்தில் சுமார் பத்து அல்லது பதினைந்து வருஷமாக வேலை செய்து வந்த ஊழியர்களை வேலையை விட்டு நிறுத்தி விட்டதாகத் தெரியவருகிறது. அவர்களுக்கு எந்த விதமான நஷ்ட ஈடும் கொடுத்ததாக தெரியவில்லை. அவர்கள் எவ்வளவு வருஷம் வேலை பார்த்தார்கள், அவர்களுடைய சம்பளம் என்ன முதலியவைகளை கணக்கெடுத்து அவர்களுக்கு நஷ்ட ஈடுகொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏற்கனவே இருந்த சர்விஸையும் இப்பொழுது அவர்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். இப்பொழுது வேலையில் இருப்பவர்களையும் சர்க்கார் ஸர்விஸில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

நீர்ப்பாசனம் சம்பந்தமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நீண்ட நாட்களாக இந்த கோரிக்கை சர்க்கார் முன் இருந்து வருகிறது. அக்னி ஆறு சாகுபடியில் மூவாயிரம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஹொசூர், கிருஷ்ணகிரி பக்கத்தில் ஏழாயிரம் ஏக்கருக்கு பாசன வசதி செய்து கொடுப்பதற்கு இரண்டு கோடி ஏழு லட்சம் ரூபாய் செலவு செய்யப் பட்டிருக்கிறது. அப்படி செலவு செய்ய தயாராகவும் இருக்கிறார்கள். புதுக்கோட்டை பஞ்சப் பிரதேசம். அத்துடன் இது இணைக்கப்பட்ட பிரதேசம் வேறு. அதற்கு எல்லா சௌகரியமும் செய்து கொடுக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. அந்த ராஜ்யம் இணைக்கப்பட்டபோது அங்குள்ள கஜானாவிலிருந்து 60 லட்சம் ரூபாய் இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டது. இப்படி அறுபது லட்சம் ரூபாய் எடுத்துக் கொண்ட பிறகும் கூட அங்கே பல மடங்கு மக்களுக்கு வரி போட்டு அதையும் வசூலித்துக் கொண்டு வருகிறார்கள். எந்த வரியைப் போட்டாலும் அங்குள்ள மக்கள் அதைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் அங்கு அதாவது ஆண்டுதோறும் சுமார் நூறு ரூபாய் வருமானம் வரக்கூடிய இடத்தில் 15 லட்சம் ரூபாய் செலவு செய்து நீப்பாசன வசதி செய்து கொடுக்கவில்லை. கால தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதின் காரணம் என்னவென்பது தெரியவில்லை. ஐந்து வருஷ காலமாக சொல்லிக் கொண்டு வந்தும் இன்னும் அந்த வேலையைச் செய்ய அரசாங்கம் முன் வர

வில்லை. புதுக்கோட்டைக்கு செலவு செய்வதைவிட பன்மடங்கு வரி மூலம் வசூல் செய்து கொண்டு வருகிறார்கள். புதுக்கோட்டை கஜானாவிலிருந்து 60 லட்சம் ரூபாயைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த இடத்தில் கூட ஒரு நல்ல தமிழன் என்ற கொள்கையை புதுக்கோட்டை அரசர் நிர்வாகம் நடத்தியவர்கள் காட்டி இருக்கிறார்கள். ஆனால் வட இந்தியாவில் ராஜ்யங்கள் இணைக்கப்பட்ட போது அங்கிருந்த ஒரு அம்மன் காசுகூட கஜானாவிலிருந்து கொண்டுவர முடியவில்லை. கஜானாக்களை அப்படி வரட்சையாக வைத்துவிட்டார்கள். இந்த நிலைமையில் அங்கு 15 லட்சம் ரூபாய் செலவழித்து ஏன் நீர்ப்பாசான வசதி செய்து கொடுக்கவில்லை என்று கேட்கிறேன்.

அடுத்தபடியாக சுந்தரப்பட்டியில் ஒரு அணை கட்டவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். அதற்கு கனம் மந்திரி என்ன சொல்லுகிறார் என்றால் அங்கு அணை கட்ட வேண்டியது இல்லை, வருஷா வருஷம் மண் அணை போட்டுக் கொண்டால் போதும் அதுவே லாபமாக இருக்கும் என்று சொல்லுகிறார். 300 அல்லது 400 ரூபாயில் மண் அணை போட்டுக் கொள்ளலாம் என்றும் சொல்லுகிறார். இப்படி கலெக்டர் எழுதியிருக்கிறாராம். நல்ல அணை கட்டினால் வெள்ள காலத்தில் வரும் அதிகப்படியான தண்ணீரை தேக்கி பக்கங்களிலுள்ள குளங்களில் நிரப்பிக் கொள்ளலாம் அல்லவா? மண் அணை போட்டு விட்டால் வெள்ளம் ஏற்படும் போது அது உடைந்து போய் விடும், தண்ணீர் தேங்காது. அடுத்த வருஷத்திற்கு தண்ணீர் இல்லாமல் மழையை எதிர் பார்த்திருக்கவேண்டியதாக இருக்கும். ஆனால் அணைக்கட்டு கட்டி விட்டால் வெள்ள காலத்தில் தண்ணீரை நிரப்பி பக்கங்களிலுள்ள குளங்களிலும் நிரப்பி வைத்துக் கொள்ளலாம். ஆகவே நிரந்தரமான அணைக் கட்டை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு செலவு 75 ஆயிரம் ரூபாய் தான் ஆகும்.

நான் சொன்ன இரண்டாவது திட்டத்திற்கு ரூ. 75,000 வரையில் தான் செலவாகும். மக்கள் ஒரு பங்கைக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். தவிர, இந்தத் தொகையை "**Betterment levy**" மூலமாகவும் சர்க்கார் வசூலித்துக் கொள்ளலாம். புதுக்கோட்டை மக்கள் சென்னை அரசாங்கத்தைக் கேட்பதெல்லாம் இந்த இரண்டு திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுங்கள் என்றுதான். இதில் ஒரு திட்டத்திற்கு ரூ. 15 லட்சம் வரை செலவாகும். மற்றொன்றுக்கு ரூ. 75,000 வரை செலவாகும். இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றினால், இந்த மந்திரி சபையையும், கனம் ராஜா சேதுபதி அவர்களையும் நாங்கள் என்றென்றும் நினைவில் வைத்துக்கொண்டிருக்க முடியுமென்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri V. C. PALANISWAMI GOUNDER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஐந்து நிமிட அவகாசத்தில் சுருக்கமாக இந்த மான்யத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது நாட்டின் அபிவிருத்திக்கு நீர்ப்பாசனத்திட்டங்கள் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு தூரம் மின்சார வசதியும் முக்கியம் என்று கருதித்தான், சர்க்கார் பல மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். அடுத்த ஐந்தாண்டு திட்டத்திலும் மின்சார சக்தியை உற்பத்தி செய்ய திட்டங்கள் போடப் பட்டிருக்கின்றன. மின்சார சக்தியைப் பெரிய ஆலைகளையும், சிறிய குடிசைத் தொழில்களையும் நடத்துபவர்களும் உபயோகிக்கிறார்கள். முக்கியமாக விவசாய முன்னேற்றத்திற்கு மின்சாரம் பயன்படுகிறது. ஒவ்வொரு வருடமும் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கவேண்டுமென்

பது சர்க்காரின் திட்டம். கிராம விவசாயிகளுக்குப் பரவலாக மின்சார சக்தியை மட்டும் கொடுத்தால் போதாது. அந்த சக்தியை உபயோகிப்பதற்கான கருவிகளையும் விவசாயிகளுக்கு வழங்க சர்க்கார் ஒரு திட்டம் வகுக்க வேண்டும். மோட்டார்செட், ஸ்டார்ட்டர் முதலிய கருவிகள் விவசாயிகளுக்குப் பெரும்பாலும் தேவைப்படுகின்றன. இக்கருவிகளில்லாமல் மின்சாரத்தை உபயோகிக்க முடியாது. இன்றைய தினம், பல வியாபாரிகள் "பிளாக் மார்க்கெட்டில்" இக்கருவிகளை விற்று, கொள்ளை லாபம் சம்பாதித்து விவசாயிகளைச் சுரண்டுகிறார்கள். இதைத் தடுக்க உடனடியாக எதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். 5 h.p. மோட்டார்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு தடை ஏற்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். வெளி நாடுகளிலிருந்து கருவிகள் வந்தாலொழிய இங்குள்ள தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. அப்பொழுது தான் விலையும் குறையும். இன்றைய தினம் தக்காவிக் கடனோ அல்லது கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கடன் வாங்கியோ மோட்டார் செட் வாங்குவது பெரிய பிரச்னையாக இருக்கிறது. அதில் எவ்வளவோ கஷ்டம் ஏற்படுகிறது. சர்க்கார் என்கிற "சாமி" வரம் கொடுத்தாலும், சர்க்கார் உத்தியோகஸ்தர் என்கிற "பூசாரி" வரம் கொடுப்பதில்லை. (சிரிப்பு.) இது அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இது சர்க்காருக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை. அவர்களுடைய "கொறடா"வை நன்றாக வீசும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரம் மிகவும் ஜாக்கிரதையாக உபயோகிக்க வேண்டிய ஒரு சக்தி. அதில் **High tension, Low tension** என்று இரண்டுவிதமிருக்கிறது. **Superintending** என்ஜினியர் அவர்களே தற்காலத்தில் நிறைய "**fatal accidents**" ஏற்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றிய புள்ளி விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். விஷயங்களைப் புரிந்துகொள்ளாமல், தவறான முறையில் கருவிகளை உபயோகிப்பதினால் எவ்வளவு உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை பகிரங்கப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் இக்கருவிகளை ஆபத்தில்லாமல் உபயோகிக்க வழிவகை செய்யவேண்டும். மோட்டார் செட் உபயோகிப்பவர்களுக்கு எதாவது ஒரு இன்ஷ்யூரன்ஸ் திட்டம் கொண்டு வந்தால், அதைக்கூட நான் வரவேற்பேன். அது மட்டும் போதாது. குறுகிய காலத்தில் விவசாயிகள் தேர்ச்சி பெறும்படி, **technical officers** மூலம் வகுப்புகள் நடத்திப் போதித்தால் நல்லது. விவசாயம் சம்பந்தப்பட்ட மட்டில், "**Short course in Agriculture**" என்ற பெயரில், ஒரு குறுகிய காலப் பயிற்சித்திட்டம், கோயம்புத்தூர் கல்லூரியில் இருக்கிறது. அதே மாதிரி "**Short course in Electricity**" என்று ஏற்படுத்தி, ஒரு மாதத்திற்கோ அல்லது 15 நாட்களுக்கோ விவசாயிகளுக்கும், அவர்களுடைய பிள்ளைகளுக்கும் எவ்வாறு மின்சார சக்தியை உபயோகித்து மோட்டார் ஓட்டுவது, எவ்வாறு மோட்டாரை நிறுத்துவது போன்ற விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தால் நல்லது. இப்பொழுது அடிக்கடி ஆபத்து ஏற்படுகிறது. சில சமயங்களில் "**coil**" எரிந்து விடுகிறது. **(Deputy Speaker sounded the gong.)**

I am speaking about a matter which involves danger to human life. ஆகவே இரண்டு நிமிடங்கள் கூடக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உண்மையில் கனம் மந்திரி அவர்கள் மோட்டார் வைத்திருக்கும் ஒரு விவசாயியாக இருந்தால், இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் ஆபத்துக்களைப்பற்றி அனுதாபப்படுவாரென்று நம்புகிறேன்.

விலையைக் கண்ட்ரோல் செய்து, விவசாயிகளுக்கு மோட்டார் செட், ஸ்விச், ஸ்டார்ட்டர் போன்ற கருவிகளை வழங்கவேண்டும். தவிர, விவ

சாயிகளுக்கு ஒரு குறுகிய காலப் பயிற்சியையும் நடத்தவேண்டும். இந்த மான்யத்தைப்பற்றிப் பேச எனக்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***SRI K. R. VISWANATHAN:** உதவி அவைத்தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உடையார்பாளையம் தாலுக்கா மிகவும் வறண்ட பிரதேசம் என்று நான் பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன். புள்ளம்பாடித் திட்டத்தினால் அந்தத் தாலுக்கா பூராவுக்கும் பயன் ஏற்படுமென்று மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அந்தத் தாலுக்காவில் ஒரு சிறிய பகுதிக்கே இந்தத் திட்டத்தினால் பயன் ஏற்படுகிறது. வேறு நீர்ப்பாசனத் திட்டமில்லாத காரணத்தினால், ஏரிகள் மூலமாகத்தான் பாசன வசதி செய்துகொடுக்க வேண்டியிருக்கிறது. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் என்ற முறையில், ஏரிப்பாசனங்கள் பலவற்றைப் பரிசீலித்து, அவைகளை நடைமுறையில் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், அவைகளை லாபகரமாகயில்லை என்ற காரணத்திற்காக சர்க்கார் அத்திட்டங்களைக் கைவிடுகிறார்கள். இக்காரணத்தால், புதுக்குடி ஏரித்திட்டத்தை எடுத்துக் கொள்ளவில்லை. இப்பொழுது, செங்கால் ஓடைத்திட்டம், செந்துறைத்திட்டம், இரண்டும் அங்குள்ள ஜில்லா அதிகாரிகளால் சிபாரிசு செய்யப்பட்டு சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. லாபகரமாயிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இந்தத் திட்டங்களை சர்க்கார் அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்தப்பிரதேசத்திலிருக்கிற வடவாற்றிலிருந்து உடையார்பாளையம் தாலுக்காக் கீழ் பகுதிக்குப் பாசன வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று, கல்லடிக்குட்டை என்ற ஒரு வாய்க்காலை வெட்டினார்கள். அந்த வாய்க்கால் வெட்டப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேலாகியும் இன்னும் பாசனத்திற்கு வரவில்லை. கால்வாய் வெட்டிய பிறகுதான், அங்குள்ள நிலம் உயர்மட்டத்திலிருப்பதையும், வாய்க்கால் கீழ் மட்டத்திலிருப்பதையும் அதிகாரிகள் உணர்ந்தார்கள். ஏற்றம் மூலமாகத்தான் அங்கே பாசன வசதி செய்ய முடியும். அந்த வாய்க்காலினால் அதிக ஏக்கரா நிலத்திற்குப் பாசன வசதி அளிக்க முடியாது என்பதை இப்பொழுதுதான் என்ஜினியர்கள் உணருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே ஆயிரக்கணக்கான பணம் இந்த வாய்க்கால் வெட்டிலே செலவிடப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு ஏற்றம் மூலமாக அந்த வாய்க்கால் தண்ணீரைப் பாய்ச்ச வேண்டி ஏற்படுகிறது. ஆனால் நீர் எதிர்த்தும் ஏராளமாக வெள்ளம் வரும்போது அந்த வாய்க்கால் உடைந்து இரு பக்கத்திலுமுள்ள நிலங்கள் எல்லாம் வெள்ளக்காடாகப் போய்விடுகிறது. அந்த வாய்க்கால்களின் வேலை இன்னும் முற்றும் நடைபெறவில்லை. அவற்றை விரைவில் முடித்து உண்மையில் அந்த வாய்க்காலால் பாசனத்திற்கு அநுகூலம் ஏற்படும்படி செய்து விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின்சார வசதியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உடையார்பாளையம் தாலுக்காவுக்கு திருச்சி மாவட்டத்தைச்சேர்ந்த பெரம்பலூர் தாலுக்காவுக்கு மின்சார வசதி செய்தபிறகு பெரும்பாலும் தாலுக்கா வழியாக மின்சாரத்தை விஸ்தரிக்கப் போவதாகத் தெரிகிறது. தென்னாற்காடு ஜில்லாவில் மின்சார வசதி இப்பொழுது சிதம்பரம், ஸ்ரீமுஷ்ணம் முதலிய இடங்களுக்கு விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே திருச்சி மாவட்டத்து வழியாக இந்தப்பக்கம் மின்சாரத்தை விஸ்தரிப்பதைக் காட்டிலும் தென்னாற்காடு ஜில்லாப் பக்கத்திலிருந்து

உடையார்பாளையம் தாலுக்காவுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பது மிக எளிதாக இருக்கும். ஆகவே இதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*SRI K. V. RAMASWAMI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பேசுவதற்கு முன்பாக ஒரு சின்ன விஷயத்தை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எங்கள் தொகுதியில் மின்சார விஸ்தரிப்பு மூலம் பம்பு செட்டுகள் வைக்கப்படுகின்றன. ஆனால் அதற்கு விவசாயிகளிடமிருந்து மினிமம் சார்ஜாக வசூலிக்கப்படுகிறது. அதுவும் பத்து வருஷத்திற்குக் கட்டியாக வேண்டும் என்று இருக்கிறது. இதனால் இப்பொழுது பல பேர்கள் கிணறுகளுக்கு பம்பு செட்டுகள் வைக்க அஞ்சுகிறார்கள். குறிப்பாக சேலம் ஜில்லா நாமக்கல் தாலுக்காவில் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. சிலர் பத்து வருஷத்திற்கு மினிமம் சார்ஜ் கட்டி மின்சாரம் உபயோகிக்கிறார்கள். கிணறுகளில் தண்ணீர் இருக்கும்போது அவர்களுக்கு கஷ்டம் ஒன்றுமில்லை. நடுவில் கிணற்றில் தண்ணீர் வறண்டு போனால் அக்காலங்களில் அவர்கள் மிகவும் நஷ்டத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. ஒரு உதாரணம் சொல்கிறேன். எங்கள் ஊரில் வையாபுரி கவுண்டர் என்பவர் இருக்கிறார். அவர் ஒரு பழைய காங்கிரஸ் வாதிதான். நாமக்கல் நகர காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவரும் கூட. அவர் 2,500 ரூபாய் மினிமம் சார்ஜ் கட்டி மின்சார பம்பு செட்டுகளை வைத்திருக்கிறார். அவருடைய கிணற்றில் தண்ணீர் வறண்டு அது உபயோகம் இல்லாமலேயே கிடக்கிறது. இதை தாசில்தார் நேரிலேயே வந்து பார்வையிட்டு இருக்கிறார். அதன் பிறகு அவர் மேட்டூரில் இருக்கும் என்ஜினியருக்கும் எழுதினார். ஆனால் அவர்களிடத்திலிருந்து கிணற்றில் அடியோடு தண்ணீர் இல்லை அல்லவா, அதனால் தள்ளுபடி எதுவும் பண்ண முடியாது என்று சொல்லிவிட்டார். கிணற்றில் காக்காய் குருவி குடிக்கிற அளவுக்குத் தண்ணீர் இருக்கிறது என்பது உண்மைதான். அதனால் எப்படி பாசனத்திற்கு அனுகூலம் ஏற்படும். இது விஷயங்களில் விவசாயிகளுக்கு இருக்கும் கஷ்ட நஷ்டங்களை உத்தேசித்து சர்க்கார் மினிமம் பணம் விவசாயிகள் கட்ட வேண்டியது அவசியம் தான் என்று சொன்னாலும் கூட பத்து வருஷத்திற்குக் கட்ட வேண்டும் என்பதை மாற்றி ஐந்து வருஷத்திற்குக் கட்டினால் போதும் என்று செய்தால் நலமாக இருக்குமென்று நான் கேட்டுக்கொள்ளகிறேன். மழை இல்லாத காலங்களில் ஏற்படும் நஷ்டத்தைக் குறித்தே விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பொருட்டு சர்க்கார் இவ்வாறு செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு விவசாயிகளுடைய நன்மைக்காகப் பலவித நன்மைகளைச் செய்யும்போது சர்க்கார் இப்படிச் செய்வதனால் எவ்வித நஷ்டமும் வந்து விடாது. இது ஒரு பெரிய வருவாய் தரும் இனமும் அல்ல. ஆகவே அவசியம் 10 வருஷம் என்று இருப்பதை மாற்றி ஐந்து வருஷத்திற்கு மினிமம் பணம் கட்டினால் போதும் என்றாவது உடனடியாகச் செய்ய வேண்டுமென்பதாகச் சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

SRI G. GOVINDAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே. . . .

DEPUTY SPEAKER: உங்களைப் பேச அழைக்கவில்லை. உட்காருங்கள். I have not called the hon. Member. He will resume his seat.

*SRI N. RATHINA GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சென்ற ஐந்து வருஷங்களாகவே கரூர் தாலுக்காவுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டோம். இன்று

நாம் எல்லோரும் சட்டசபையில் இருந்து வெளியேபோக வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். கரூர் தாலுக்காவானது பஞ்சப் பிரதேசம். அதில் ஐந்து ஆறுகள் ஓடுகின்றன. இதைப்பற்றி அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். பல சங்கங்களின் மூலமாகவும் எடுத்து விளக்கியிருக்கிறோம். அங்கே இருக்கக் கூடிய குடகநாற்றுக்கு அணை கட்டியாகவேண்டும். இது போல நொய்யல் நங்காஞ்சிக்கும் அணைகள் அவசியம். லோயர் பவானி எக்ஸ்டென்ஷன், அமராவதி பாசனம் தாலுகா பூராவும் தேவைகூட. குறைந்தது கிராமத்திற்கு ஒரு குளமாவது தேவை. கட்டித்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு நேரம் இன்மையால் முடித்துக்கொள்கிறேன்.

*THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHU PATHI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே. இன்று இந்த மசோதாவிற்குக் குறுகிய காலம்தான் அளிக்கப்பட்டது. அதற்குள்ளே கனம் அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களை மிகத் தெளிவாகவும், பயன் உள்ள வகையிலும் எடுத்துக் கூறியதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எல்லோரும் முக்கியமான விஷயங்களை மட்டும் தெளிவாக எடுத்துச் சொல்லி தங்கள் பேச்சை முடித்துக் கொண்டு விட்டார்கள். ஸ்ரீ வெங்கடேச சோளகர் பேசியபோது அவர்கள் குறிப்பிட்டுள்ள விஷயங்களில் நான் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் சொன்னார். அது உண்மை. சமீபத்தில் நான் சிதம்பரம் பக்கம் போனபோது வடவாற்றின் கரைகள் அடிக்கடி உடைத்துக்கொண்டு விடுகின்றன என விவசாயிகள் எழுப்பிய கூக்குரலையும் கேட்டேன். அதற்கு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதாகவும் உத்திரவு போட்டுவிட்டேன்.

அடுத்தபடியாக புதுக்கோட்டை அங்கத்தினர் பேசும்போது அங்கே இருந்த மின்சார ஸ்தாபனத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டவுடன் பொது மக்களே மாதாமாதம் பணம் கட்டுவதற்கு மின்சார காரியாலயத்திற்குப் போகவேண்டுமென்பதாகச் சொன்னார். எனக்கு இது விஷயம் சரியாகத் தெரியவில்லை. முன்பு பில் கலெக்டர் இருந்தாரா? சர்க்கார் எடுத்துக் கொண்ட பின்தான் பில் கலெக்டர் போவது இல்லையா என்பதையும் பற்றியும் விசாரித்து ஆவன செய்கிறேன். இது அல்ப விஷயம். அதைப் பார்த்து வேண்டிய ஏற்பாட்டைச் செய்யமுடியும்.

DEPUTY SPEAKER: Are the hon. Members pressing their cut motions?

SRI P. VEKATESHA SHOLAGAR: கனம் அமைச்சர் அவர்கள் நான் கூறிய விஷயங்களைக் கவனித்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதன் பேரில் நான் என் வெட்டுப் பிரேரணையை வாபஸ் பெறுகிறேன்.

SRI V. BALAKRISHNAN: நான் எனது வெட்டுப் பிரேரணையை வாபஸ் பெறுகிறேன்.

The Cut Motion of Sri V. Balakrishnan was, by leave, withdrawn.

The Cut Motion of Sri Venkatesha Sholagar was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,07,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXIV—Civil Works—Works.'

The Demand was put and carried and the grant was made.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 41,50,000 as advance grant for the year 1957-58 under Demand XXV—Civil Works—Establishment and Tools and Plant.'

The Demand was put and carried and the grant was made.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,07,00,000 as advance grant for the year 1957-58 under Demand XL—Capital Outlay on Civil Works.'

The Demand was put and carried and the grant was made.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 6,00,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXVII—Electricity.'

The Demand was put and carried and the grant was made.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 15,00,00,000 as advance grant for the year 1957-58 under Demand XLI—Capital Outlay on Electricity Schemes.'

The Demand was put and carried and the grant was made.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 52,00,000 as advance grant for the year 1957-58 under Demand VIII—Irrigation.'

The Demand was put and carried and the grant was made.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,05,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXXVI—Capital Outlay on Irrigation.'

The Demand was put and carried and the grant was made.

Other demands.

It being half-past one of the clock, the Deputy Speaker proceeded, pursuant to the rules, successively to put forthwith the question on the other Demands notice of which had been given by Government.

DEMAND I—LAND REVENUE DEPARTMENT.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 31,00,000 as advance grant for the year 1957-58 under Demand I—Land Revenue Department.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND II—EXCISE DEPARTMENT.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 2,50,000 as advance grant for the year 1957-58 under Demand II—Excise Department.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND III—STAMPS ADMINISTRATION.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 5,50,000 as advance grant for the year 1957-58 under Demand III—Stamps Administration.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND V—REGISTRATION DEPARTMENT.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 12,50,000 as advance grant for the year 1957-58 under Demand V—Registration Department.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND VI—MOTOR VEHICLES ACTS ADMINISTRATION.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 4,00,000 as advance grant for the year 1957-58 under Demand VI—Motor Vehicles Acts Administration.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND X—STATE LEGISLATURE.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 12,00,000 as advance grant for the year 1957-58 under Demand X—State Legislature.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XV—EDUCATION.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 3,60,00,000 as advance grant for the year 1957-58 under Demand XV—Education.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XVI—MEDICAL.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 1,21,00,000 as advance grant for the year 1957-58 under Demand XVI—Medical.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XVII—PUBLIC HEALTH.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 31,50,000 as advance grant for the year 1957-58 under Demand XVII—Public Health.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XX—CO-OPERATION.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 27,00,000 as advance grant for the year 1957-58 under Demand XX—Co-operation.'

The Demand was put and carried, and the grant was made.

DEMAND XXI—INDUSTRIES AND CINCHONA.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 1,85,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXI—Industries and Cinchona.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXVI—CIVIL WORKS—GRANTS-IN-AID.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 10,00,000 as advanse grant for the year 1957-58 under Demand XXVI—Civil Works—Grants-in-aid.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXVIII—FAMINE.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 1,50,000 as advance grant for the year 1957-58 under Demand XVIII—Famine.

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXIX—PENSIONS.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 50,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXIX—Pensions.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXX—STATIONERY AND PRINTING.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 30,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXX—Stationery and Printing.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXXI—MISCELLANEOUS.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 36,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXXI—Miscellaneous.'

The Demand was put and carried and the grant was made.

DEMTND XXXII—COMMUNITY DEVELOPMENT PROJECTS.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 92,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXXII—Community Development Projects.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXXIII—ROAD TRANSPORT SCHEMES—WORKING EXPENSES

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 57,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXXIII—Road Transport Schemes—Working Expenses.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXXIV—COMPENSATION TO ZAMINDARS.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 20,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXXIV.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXXV—CAPITAL OUTLAY ON FORESTS.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs 5,50,000 as advance grant for the year 1957-58 under Demand XXXV—Capital Outlay on Forests.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXXVI—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 46,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXXVII—Capital Cutlay on Public Health.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXXVIII—CAPITAL OUTLAY ON AGRICULTURE.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 2,50,000 as advance grant for the year 1957-58 under Demand XXXVIII—Capital Outlay on Agriculture.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XXXIX—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 64,00,000 as advance grant for the year 1957-58 under Demand XXXIX—Capital Outlay on Industrial Development.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XLII—CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 37,50,000 as advance grant for the year 1957-58 under Demand XLII—Capital Outlay on Road Transport Schemes.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XLIII—COMMUTED VALUE OF PENSIONS.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 3,50,000 as advance grant for the year 1957-58 under Demand XLIII—Commuted value of Pensions.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XLIV—CAPITAL OUTLAY ON SCHEMES OF STATE TRADING.

DEPUTY SPEAKER : The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 1,90,000 as advance grant for the year 1957-58 under Demand XLIV—Capital Outlay on Schemes of State Trading.'

The Demand was put and carried and the grant was made.

DEMAND XLV—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

DEPUTY SPEAKER: The question is—

'That on the recommendation of the Governor, the Government be granted a sum not exceeding Rs. 2,70,000 as advance grant for the year 1957-58 under Demand XLV—Loans and Advances by the State Government.'

The Demand was put and carried and the grant was made.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. on Monday, the 24th December 1956.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*208. *Resume of work done by the Madras Legislative Assembly from 8th August 1956 to 25th October 1956.*

209. *Notification issued with G.O. Ms. No. 4874, Industries, Labour and Co-operation Department, dated 16th November 1956, amending Rules X-A and XXV-A (2) of the Madras Co-operative Societies Act, 1932, regarding elections to the Societies or its committees and the procedure therefor.* [*Laid on the table of the House under section 65 (5) of the Madras Co-operative Societies Act, 1932 (Madras Act VI of 1932).*]

APPENDIX.

[Vide answer to starred question No. 400 asked by Sri A. Ratnam at the meeting of the Legislative Assembly held on 22nd December 1956, page 401 supra.]

Name of the institution.	*Facilities provided for recreation in the nurses quarters.*	*Approximate cost of amenities provided for the purpose and how met (during 1955).*
	(i) *In Madras City.*	
1 Government General Hospital, Madras.	Badminton, Throw Ball, Ring Tennis and other indoor games just as Carrom, Table Tennis and Chess.	Non-recurring Rs. 925. Recurring Rs. 1,692 (met by Government).
2 Government Stanley Hospital, Madras.	Radio, Ring Tennis, Badminton, Throw Ball, indoor games such as Carrom, Chinese Checkers and cards, etc.	Rs. 1,202-0-3 (met by Nurses Recreation Club).
3 Kasturba Gandhi Hospital for Women and Children, Madras.	Radio, Papers, Magazines, indoor and outdoor games.	Rs. 1,017-12-0 (met by Nurses Recreation Club).
4 Government Hospital for Women and Children, Madras.	Radio, Piano, Gramophone, indoor games, sports once in a year, entertainments twice in a year and supply of leading *Daily Mail*.	Rs. 950 (met by Nurses Recreation Club).
5 Government Ophthalmic Hospital, Madras.	Library and a Badminton Club.	No accounts maintained. (met by Nurses Recreation Club).
6 Government Hospital of Integrated Medicine, Madras-10.	Draughts set, Snake and Ladder, Ludo, Speed card-game, Carrom Magazines and newspapers.	Rs. 50 per mensem (met by Nurses Recreation Club).
	(ii) *In District Headquarters Hospitals.*	
7 Government Head-quarters Hospital, Coimbatore.	Daily papers, weekly magazines, indoor and outdoor games, Picnics, Socials and Sports.	Rs. 231 (met by Nurses Club).
8 The Erskine Hospital, Madurai.	Indoors games such as Ping-Pong, Carrom, etc., Magazines, dailies and weekly.	Rs. 50 per mensem approximately (met by Nurses Club).
9 Government Head-quarters Hospital, Ootacamund.	Carrom, Table Tennis, etc.	Rs. 311 (met by Nurses Club).
10 Government Head-quarters Hospital, Tanjore.	Indoor games, Volley Ball and Tennicoit, Badminton, etc. Radio, Magazines and daily newspapers.	Rs. 1,300 (met by Nurses Club).

NOTE.—No recreation facilities have been provided for the nurses in the other hospitals for want of proper Government quarters.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Monday, 24th December 1956.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at nine of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTHAVATSALU NAIDU) in the Chair.

SRI K. VINAYAKAM : Sir, on a point of order. May I know whether we have got quorum and whether it is in order to proceed with the agenda?

DEPUTY SPEAKER : The strength of the Assembly is 190 and the presence of 19 Members inclusive of the Presiding Officer would be enough to constitute a quorum. There is quorum, at present. We shall now proceed with Questions and Answers.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Procurement of Agricultural commodities

* 408 *Q.*—SRI V. BALAKRISHNAN (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received a copy of the resolution passed by the Periakulam Taluk Vivasayigal Sangam Conference (Madurai district) on 7th September 1956, requesting them to procure agricultural commodities directly to assure a fair price to agriculturists; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.

SRI V. BALAKRISHNAN : விவசாயப் பொருள்கள் தகுந்த விலைக்குக் கிடைக்கும்படியான முறை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் யோசனையில் இருந்து வருகிறதா ? சில ஆண்டுகளுக்கு முன்பாக **parity of prices** அதாவது எல்லா விவசாயப் பொருள்களுக்கும் சரசமான விலை ஏற்படுத்த வேண்டுமென்று சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். அதன்படி செய்ய மந்திரி அவர்கள் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுவாக விவசாயிகளுக்கு அவர்கள் பொருள்களுக்கு போதிய விலைகள் கிடைக்கும் விஷயம் அரசாங்கத்தின் யோசனையில் இருந்து வருவதோடு கூட, நடை முறையிலும் அதை ஓரளவுக்கு அமுல் செய்து கொண்டுதான் இருக்கிறோம். அதன் விளைவாகத்தான் **Madras Commercial Crops Act** பழைய சட்டமாக இருந்தாலும் அது இப்பொழுது கோயமுத்தூர், வட ஆற்காடு தென் ஆற்காடு, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் பருத்தி புகையிலை, கடலை முதலிய பொருள்களுக்கு அமுலில் கொண்டுவரப்

[24th December 1956

பட்டிருக்கிறது. மற்ற ஜில்லாக்களிலும் இதை அமுலுக்கு கொண்டு வருவதற்கு இப்பொழுது அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டு வருகிறது. இன்னும் வேறு வகையிலும் விவசாயப் பொருள்களுக்கு சரசமான விலை சௌகரியமாகக் கிடைப்பதற்கு வேண்டிய ஆலோசனையும் அரசாங்கம் செய்து கொண்டுதான் இருக்கிறது.

Sri S. RAMALINGAM : சமீப காலமாக உணவுப் பொருள்கள் குறிப்பாக அரிசி போன்ற தானியங்கள் மிகவும் உயர்ந்த விலைக்கு விற்றுக் கொண்டு வருகிறது. இப்பொழுது ஓரிரண்டு மாதங்களாக விலை கீழே இறங்குவதைப் பார்த்து விவசாயிகளிடையே ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது. திடீரென்று விலை அபரிமிதமாகவும் ஏறி, பிறகு பழையதானத்தில் இறங்கினால் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது. அந்த சமயத்தில் உற்பத்தியாளர்களுக்கும் சரியான விலை கிடைக்காமல் நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நிலைமையைப் பாதுகாப்பதற்கு விலை திடீரென்று ஏறுவதையும் இறங்குவதையும் தடுப்பதற்கு நாட்டின் தேவையான அளவுக்கு சர்க்கார் கொஞ்சம் உணவு தானியங்களை கொள் முதல் செய்து சேகரித்து வைத்துக்கொள்ளும் யோசனை இருக்கிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வாங்கிச் சாப்பிடு பவர்களுக்கும் உற்பத்தி செய்பவர்களுக்கும் நியாயமான விலை கிடைப் பதற்கான ஒரு நிரந்தரமான அமைப்பு அவசியம் வேண்டியதுதான். ஆனால் அதை அமைப்பதுதான் ரெம்பவும் கஷ்டம். அதில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. திடீரென்று விலை ஏறினா லும் சரி, அல்லது குறைந்தாலும் சரி, உடனே அரசாங்கம் தலையிட்டு **price support** கொள்கையை அனுசரித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வரும். இப்பொழுது கனம் அங்கத்தினர் இதைப் பற்றி சொல்லுவதற்கு முன்னமே அரசாங்கம் அதில் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. தானியம் கொள்முதல் செய்ய வேண்டியிருந்தால் கொள்முதல் செய்யலாம். அதற்கு வேண்டிய உதவி யும் மத்திய சர்க்காரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

Sri K. VINAYAKAM : In view of the fact that the prices of agricultural commodities have soared high, e.g., rice, the Government have been kind enough to open fair price shops. Do the Government feel that the price of rice has come down in the market simply because they have opened a few fair price shops?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : If the hon. Member wants to take credit for the coming down of prices, he is welcome to do so.

Sri S. RAMALINGAM : ஒரு குறிப்பிட்ட சமயத்தில் விலை ஏறிவிட்டது என்று சொன்னால் அதற்குப் பிறகு சர்க்கார் இயந்திரம் நடவடிக்கை எடுப்பதற்குள் விலை ரொம்பவும் உயர்ந்துவிடுகிறது. அதே மாதிரி விலை இறங்கினாலும் சர்க்கார் இயந்திரம் வேலை செய்ய ஆரம் பிப்பதற்குள் விலை தலைதூக்கமுடியாத நிலைமைக்கு வீழ்ந்துவிடுகிறது. இப்படி திடீர் விலை ஏற்றத்தையோ இறக்கத்தையோ நிரந்தரமாக தடுப்பதற்கு சர்க்கார் முன்கூட்டியே போதிய அளவு தானியத்தை ஒரு நிர்ணய விலைக்கு கொள்முதல் செய்து stock கையில் வைத்துக் கொண்டால் இந்த நிலைமையை சமாளிக்க உபயோகமாக இருக்கும். ஆகவே இது விஷயமாக சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்துவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த விஷயம் எப்பொழுதும் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்துகொண்டுதான் வரு கிறது. ஆனால் எப்பொழுது அரசாங்கம் தானியங்களை கொள்முதல் செய்வது என்பது நிலைமையை ஆலோசித்து முடிவு செய்யவேண்டிய

24th December 1956]

விஷயம். எப்பொழுது வேண்டுமானாலும் வாங்கி வைத்திருப்பது சரி யல்ல. விலை அதிகமாக இருக்கும்பொழுது அரசாங்கம் வாங்கினால் உற்பத்தி செய்கிறவர்களுக்கு வசதியாக இருக்குமே தவிர அரசாங்கத் திற்கு இதில் நஷ்டம் ஏற்படும். அதனால் எந்த சமயத்தில் அரசாங்கம் வாங்கவேண்டுமோ அந்த சமயத்தில் வாங்க நடவடிக்கை எடுத்துக்கொள் வார்கள்.

Sri T. S. ARDHANARI : சர்க்கார் விலை நிர்ணயத்திற்கும் கீழ் விலை இறங்கிவிட்டால், அதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : விலை அதிகமாக இருந்த பொழுது விவசாயிகள் லாபம் சம்பாதிக்கிறார்கள் என்பதற் காக அதிகமாக வரி போடவில்லை. இதற்கெல்லாம் நஷ்டம் கணக்குப் பார்ப்பது சிரமம். ஆகையால், இதற்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்பது ஏற்றுக் கொள்ள முடியாது.

Minor Irrigation maistries

* 409 *Q*.—**Sri V. BALAKRISHNAN :** Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the salary of Minor Irrigation maistries in the Revenue Department has been reduced from Rs. 35 per mensem to Rs. 26 per mensem recently;

(*b*) whether it is a fact that the maistries, who have been drawing Rs. 35 as salary for several years, prior to the issue of the recent Government Order fixing IV Form as the qualification necessary for being eligible for recruitment, have also been affected by this reduction;

(*c*) whether any representations have been made to the Government in March-April 1956 about this reduction by the hon. Member from the Pudukkottai General Constituency in the Legislative Assembly; and

(*d*) if so, the action taken thereon?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) In Government Order Press No. 3175, Revenue, dated 13th October 1955, the pay of Minor Irrigation maistries was reduced to Rs. 24 in the time-scale of Rs. 24—1—30.

(*b*) No, Sir. The revised scales of pay will be applicable only to persons appointed after 2nd November 1955. The Minor Irrigation maistries who have been drawing Rs. 35 per mensem prior to that date will not therefore be affected.

(*c*) & (*d*) Yes, Sir. The Board of Revenue has been asked to issue instructions to all Collectors as in clause (*b*) above.

[24th December 1956

Pottery industry

*410 Q.—SRI S. RAMALINGAM (on behalf of Sri N. K. Palanisamy): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any amount has been allotted under the Second Five-Year Plan for the development of pottery in the State; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) A sum of Rs. 9·45 lakhs has been provided in the Plan for the development of village potteries in 15 National Extension Service/Community Development Blocks of this State and also a sum of Rs. 2·05 lakhs for the establishment of five training centres for developing glazed ceramic ware on cottage industry basis.

SRI V. BALAKRISHNAN: பானை உற்பத்தியை பெருக்குவதற்கும் அதை பிரபலப்படுத்துவதற்கும், அதை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு தகுந்த கூலி கிடைப்பதற்கும் கூட்டுறவு முறையில் ஏதாவது சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பானை உற்பத்தி மட்டுமல்ல. மண்பாண்டங்கள் எத்தனையோ செய்யலாம். அதையெல்லாம் செய்வதற்கு கூட்டுறவு முயற்சியும் கையாளப்பட்டுத்தான் வருகிறது.

SRI V. R. NAGARAJAN: தென் ஆற்காடு ஜில்லாவில் பண்ருட்டியில் மண்ணால் செய்யப்படும் பண்டங்களும் பொம்மைகளும் மிகச் சிறந்த முறையில் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. அவைகளை அபிவிருத்தி செய்வதற்காக மற்ற ராஜ்ஜியங்களுக்கு அவைகளை ஏற்றுமதி செய்வதற்கும் இன்னும் வெளி தேசங்களுக்கு கூட ஏற்றுமதி செய்யும் அளவுக்கு சர்க்கார் ஏதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பண்ருட்டியில் நல்ல மண் பொம்மைகள் செய்யப்படுவதை நான் பார்த்திருக்கிறேன். அது வேறு விஷயம். எதந் விதத்திலே உதவி அளித்து அதை விருத்தி செய்ய முடியும் என்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதாவது யோசனை கூறினால், அதை கவனித்து வேண்டியதைச் செய்யலாம். கனம் அங்கத்தினர்களுடைய ஜில்லாவிலே விருத்தாசலத்தில் glaze pottery house production-Cum-training centre வைப்பது என்று அதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, வருஷம் ஒன்றுக்கு ரூ. 32,842 recurring செலவுக்கும், ரூ. 91,781 non-recurring செலவுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டப்படி 15 தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 30 stipend கொடுக்கப்படும். இது விஷயமாக மத்திய அரசாங்கத்தினிடமும் உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM: மண்பாண்டங்கள் உற்பத்தி செய்வதற்கு
9.10 a.m. இந்த ஐந்தாண்டு திட்டத்தின்படி பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கிவைத்து அதை விருத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்ட இந்த சர்க்காருக்கு சென்னை நகரத்திலே மாத்திரம் மண்பாண்டங்களை உற்பத்தி செய்யக்கூடாது. சூளைபோட்டுக் கொளுத்தக்கூடாது என்று உத்தரவு இட்டு சென்னை நகரத்திற்கு வெளியேதான் செய்யவேண்டும் சென்னை நகர லிமிட்டிற்குள் செய்யக் கூடாதென்று கார்பொரேஷன் அதிகாரிகள் உத்தரவு போட்டது தெரியுமா ? உத்தரவு போட்டது கார்ப்

24th December 1956]

பரேஷன் அதிகாரிகள் தான். அப்படியிருந்தால் இந்த மண்பாண்டங்களை உற்பத்தி செய்து, அதை விருத்தி செய்வது என்று சொல்லும் கருத்திற்கு இது விரோதமாய் இருக்காதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவ்வாறு உத்தரவு போட்டிருந்தால் அது சென்னை நகர மக்களின் சுகாதார பாதுகாப்பை உத்தேசித்தே போடப்பட்டிருக்கும். மக்களின் சுகாதாரத்தைக் கெடுத்துக் கொண்டு மண்பாண்டத் தொழிலிற்கு ஆதரவு கொடுக்கவேண்டுமென்று சொல்வதில் அர்த்தம் இல்லை.

SRI P. G. MANICKAM: சைனா, ஜப்பான் போன்ற தேசங்களில் பற்பல வர்ணங்கள் கொடுத்து மண்ணால் செய்யப்பட்ட சாதனங்கள் வெளி தேசங்களுக்குக் கூட விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ஆகவே சென்னை மாகாணத்திலிருந்து சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து மேற்சொன்ன தொழிலில் பயிற்சி கொடுக்க இத்தேசங்களுக்கு அனுப்பி, அவர்கள் மூலம் இத்தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்த சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சைனா ஜப்பான் போன்ற நாடுகளில் நல்ல வகையில் இப்பொருள்கள் செய்யப்படுவது போல் அல்லது மற்ற பண்டங்கள் செய்யப்படுவது போல் நம் நாட்டிலும் செய்வதற்கு இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. நம் நாட்டில் செய்யப்படுகிற சில பொருள்களை சைனா, ஜப்பான் போன்ற தேசங்களிலிருந்து வருகிறவர்கள் மிகவும் பாராட்டுகிறார்கள். இதிலும் பயிற்சி பெற்ற ஒருவரை வைத்து இன்னும் விருத்தி செய்ய அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

SRI K. T. RAJU: இந்த மண்பாண்டங்கள் செய்வதில் குறிப்பாக செங்கல் சூளையும் ஓட்டு சூளையும் தேவையாகும். இன்று கிராமங்களில் கட்டுகிற நூற்றுக்கணக்கான வீடுகள் இந்த செங்கல் சூளையிலிருந்தே குடிசைக் கைத்தொழில் மூலம் கட்டப்பட்டுகின்றன. அப்படிப்பட்ட ஒரு செங்கல் சூளை ஏற்படுத்தவேண்டுமென்று அதில் சம்பந்தப்பட்ட தொழிலாளிகளிடம் பணம் வாங்கி ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் ஏற்படுத்த ஒரு வருஷமாக ஆயிரம் ரூபாயை பாங்கில் கட்டியும் இதுவரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நிறைய வீடுகள் கட்டவேண்டியிருக்கிறது. இந்தத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். மண் வசதியும் இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தில் தீவிர நடவடிக்கைகள் எடுத்து இந்தத் தொழிலுக்கு ஆதரவு காட்ட அமைச்சரவர்கள் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தும். இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

SRI V. BALAKRISHNAN: அரசியல் தலைவர்களையும், மந்திரிகளையும் மண்பொம்மையாக்குவதை மந்திரியவர்கள் தடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இந்த பொம்மை பற்றி இவ்வளவு குறுகிய அபிப்பிராயம் இருப்பது எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது.

SRI K. VINAYAKAM: சென்னை நகரில் சூளை போடுவது சுகாதாரத்திற்கு விரோதமானதென்று சொல்லப்பட்டது. சுகாதாரத்தைக் கெடுக்காமலே. நகரின் வெளிப்புறத்தில் இத்தொழிலை விருத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்கு தாக்கீது கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கூடியவரையில் சென்னை நகருக்கு சில மைல்கள் அப்புறம் இருந்தால் பாதகமில்லை.

[24th December 1956

Sri S. RAMALINGAM: இந்த நிலை சென்னையில் மாத்திரமல்ல இருப்பது. எங்கு மண்ணும் தண்ணீரும் கூடுதல் இருக்கிறதோ அங்கு சூளைகள் ஏற்படுத்தவேண்டும். ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு சென்று பாண்டங்கள் செய்துவிட்டு வந்தால் நாய்களோ அல்லது வேறு ஏதாவது வந்து அவைகளை நொறுக்கி அவைகள் தூளாய் விடும், இவர்கள் அடுத்த நாள் அங்கு போகும்போது. ஆகவே, இத்தொழிலாளர்கள் இருக்கும் இடத்தில் சூளை ஏற்படுத்தவேண்டும். இல்லை. அவைகள் இருக்குமிடத்தில் இவர்களை குடியேற்ற வசதி செய்யவேண்டும். அதற்கு, சர்க்கார் வசதி செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: பானையை விட மக்களின் சுகாதாரமே முக்கியமானது. கூடியவரையில் இவர்களுக்கு வேண்டியதைச் செய்யப் பார்க்கலாம்.

Sri A. RATNAM: நெய்வேலி பிராந்தியத்தில் நூதனமான மண் பாண்டங்கள் செய்வதற்குள்ள மண் கிடைக்கிறது என்பது உண்மையா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: நெய்வேலியில் நல்ல மண் கிடைக்கிறது. அதைக் கொண்டு பல பாண்டங்கள் செய்யலாம். அதை குடிசைக் கைத்தொழில் வகையில் செய்வதற்குத்தான் அரசாங்கம் கவனம் செலுத்தி கொண்டு வருகிறது. ஆனால் இந்த மண் ஏராளமாகக் கிடைப்பதற்கு திட்டம் தொடங்கப்படவேண்டும். அதைத் தொடங்கும்போது இதெல்லாம் சேர்த்து கவனிக்கப்படும்.

Sri P. CHELLATHURAI: மண்பாண்டங்கள் செய்யும் பொருமைமிக்க தொழில் குயவர் பெருமக்களைத் தவிர மற்ற வகுப்பாருக்கு பயிற்சி கொடுத்தாலும் அது உருப்படுவதில்லை, என்று தெரிவதால் குயவர் பெருமக்களின் மத்தியில் குடும்பக் கட்டுப்பாடு பற்றி பிரசாரம் செய்ய வேண்டாமென்று அரசாங்கம் உத்தரவு போடுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: எந்தத் தொழிலும் குறிப்பிட்ட ஒரு வகுப்பினருக்கோ அல்லது பாரம்பரையாக நடத்திக்கொண்டு வருகிறவர்களுக்கோதான் உரியது, அவர்கள் வேறு எந்தத் தொழிலிலும் ஈடுபடக்கூடாது என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்ள முடியாது.

Sri G. GOVINDAN: மானாமதுரையில் சூளை ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டது. அப்படி எல்லா சூளைகளையும் கட்டிக்கொடுத்தால் இத்தொழிலை விருத்தி செய்யலாம். அதற்கு உதவிசெய்வீர்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இது விஷயமாக ஒரு நிலைமையை ஒட்டித்தான் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்.

Sri A. AYYANAR: மண் பாண்டங்கள் உற்பத்தி செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தாலூக்காக்களில் பெரியகுளம் தாலூகா சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

Sri K. VINAYAKAM: அன்றையில் சென்னையில் மண் பாண்ட உற்பத்தியாளர்கள் மாநாடு ஒன்று கூடி. அந்த மாநாட்டில் நமது அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு அங்கு அவர்கள் சென்னையில் மண் பாண்டங்கள் உற்பத்தி செய்ய சூளை போட்டு கொள்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் இன்று அது சுகாதாரத்திற்கு விரோதமாக இருக்கிறது, ஆகையால் முடியாது என்று சொல்லுவது அன்று சொன்ன வார்த்தைக்கு முரண்பாடாக இல்லையா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அதில் நான் கலந்து கொண்டது உண்மையே. ஆனால் அதில் நான் எத்தகைய வாக்குறுதியும் கொடுக்கவில்லை.

24th December 1956]

Sri T. S. ARDHANARI: மண் பாண்டங்கள் செய்யக்கூடிய தொழில் நம் மாகாணத்தில் முக்கியமாக ஒரு தொழிலாகும். பித்தளை, அலுமினிய பாத்திரங்கள் வந்த பிறகு அந்த தொழிலாளர்கள் இன்று வருமானம் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் கூட்டுறவு சங்கத்தின் அடிப்படையில் கொண்டு வந்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு சர்க்காரிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: எங்கெங்கெல்லாம் சாத்தியப்படுகிறதோ அங்கு அங்கெல்லாம் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து இத்தொழில் விருத்தி செய்யப்படும். சில இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் ஏற்கனவே இருக்கின்றன.

Sri V. BALAKRISHNAN: பித்தளை போன்ற பாத்திரங்களில் 9-20 a.m.
சமைப்பது கெடுதிகளை விளைவிக்கும், ஆகவே மந்திரி அவர்கள் ஸ்திரிகள் இடத்தில் புகுந்து மண் பாண்டங்களை சமைப்பதற்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று பிரசாரம் செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: புகுகின்ற விஷயம் எனக்கு தெரியாது. அதை அங்கத்தினருக்கே விட்டுவிடுகிறேன். இதில் நிர்பந்தம் கூடாது.

Land Reforms

* 411 Q.—**Sri S. RAMALINGAM** (on behalf of Sri N. K. Palanisamy): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Planning Commission invited this Government during August 1956 for a discussion regarding the steps proposed to be taken by this Government in respect of Land Reforms in the State; and

(*b*) if so, the result of the discussions conducted with the Planning Commission?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) The Government are examining the suggestions of the Central Committee on Land Reforms.

Sri K. T. RAJU: ஸார், அரசாங்கம் இந்த நிலச் சீர்திருத்தம் விஷயமாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் பிளானிங் கமிஷனோடு ஆலோசித்து நூற்றுக்கு எழுபத்திஐந்து கொடுக்கவேண்டும் என்று திட்டங்கள் இருப்பதாக தெரிகிறது. இதை அமுலுக்கு கொண்டு வர உறுதி கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள். ஆகவே இந்த முடிவை அனுசரித்து இதை வருகிற பொதுத் தேர்தலுக்கு முன்னால் நடைமுறையில் கொண்டுவருவதற்கு சர்க்கார் தயாராக இருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: 60–40 திட்டத்தை நாம் இங்கு நிறைவேற்றினோம். ஆனால் அதற்குள்ள (ரூல்ஸ்) விதிகள் ஒன்றும் இதுவரை தயாராகவில்லை. அது தயாரான உடன் நடப்பில் கொண்டு வரப்படும்

Sri S. RAMALINGAM: 60–40 என்றுள்ள நியாயவார மசோதா நடைமுறையில் கொண்டுவருவதற்கு இன்னும் சட்டங்கள் தயாரிக்கப்படாக வில்லை என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். இந்த சட்டங்களை எல்லாம் தயாரித்து, வருகிற பொதுத் தேர்தலுக்கு முன்னால் கொண்டு வருவார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

[24th December 1956

THE HON. SRI M. A. MANICKAVELU : பொதுத் தேர்தலுக்கும் இதற்கும் என்ன இணைப்பு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ரூல்ஸ் எல்லாம் தயாரான உடன் நடைமுறையில் கொண்டு வரப்படும்.

SRI K. VINAYAKAM : நிலச் சீர்திருத்தம் ஒரு பெரிய விஷயம். அதிலுள்ள ஒரு பகுதியில் அதாவது ஒவ்வொரு விவசாயியும், நிலச் சுவான்தார்களும் எவ்வளவு நஞ்சை நிலம் வைத்திருக்கலாம் என்று (ஸீலிங் லிமிட்) திட்டப்படுத்த ஒரு யோசனை இருந்து வருகிறதாக தெரிகிறது. அதை உடனே நிறைவேற்ற அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆமாம், முன் வரும். எப்பொழுது என்றுதான் தெரியவில்லை.

SRI V. R. NAGARAJAN : May I know whether in the discussions with the Planning Commission, there was unanimity of opinion betwen the States regarding fixing of ceiling for landholding and, if so, whether that principle has been accepted by the Government of India and when it will be coming into force?

THE HON. SRI M. A. MANICKAVELU : இவையெல்லாம் மூன்றுவது கட்டத்தில் கவனிக்கப்படும்.

SRI V. BALAKRISHNAN : 60—40 என்ற பங்கு முறையை பெரிய நிலச்சுவான்தார்கள் எல்லாம் நன்றாக உணரும்படி செய்வதற்கு எல்லாத் துறைகளிலும் இதை பரப்ப அரசாங்கம் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எப்போதெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் அவர்களிடம் சொல்லப்பட்டு வருகிறது.

SRI T. S. ARDHANARI : ஸார், 60—40 என்ற விகிதாச்சாரம் அமுலாக்குவதற்கு ரூல்கள் தயாரிக்கப்படவில்லை என்று எல்லாம் சொல்லி நடைமுறையில் கொண்டுவராமல் இருப்பதற்குவேண்டித் தட்டி கழிக்க வேண்டும் என்றுள்ள நோக்கமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி யொன்றும் இல்லை. இந்த சட்டம் வந்த பிறகு எதாவது தகராறு ஏற்படக்கூடாது என்பதற்காக இந்தத் தாமதம் ஏற்படுகிறது. இவ்விஷயத்தில் அதிகாரம் ஜில்லா முன்சிப் முதலியவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுயெல்லாம் ஆலோசிக்க வேண்டித்தான் ஹைக்கோர்ட்டில் ரூல்கள் தயாரித்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில தினங்களில் இது பற்றி தகவல் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

SRI S. RAMALINGAM : ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த நியாயவார மசோதா பற்றியுள்ள அதிகாரம் ரெண்ட் ட்ரிபூனல் (Rent Tribunal) கிழே விட்டுக்கொடுத்திருப்பதாக இருக்கிறது. ஆனால் இந்த சபையில் அதை சொல்லாமல் முனிசிப்புக்குத்தான் அதிகாரம் இருப்பதாக எல்லாம் மந்திரி அவர்கள் தவறுதலாக சொல்லுகிறார்கள். அதற்கு

. . . .

DEPUTY SPEAKER : This is not a point of order. It is only some information that the hon. Member wants. The point of order should be answered by the Chair and not by the Hon. Minister.

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி ஒன்றும் தவறுதலாக சொல்லவில்லை. தாசில்தாருக்கும், முனிசிப்புக்கும் அதிகாரம் இருக்கவேண்டும் என்றெல்லாம்தான் ரூல்ஸ் செய்யப்பட்டு வருகிறது.

24th December 1956]

SRI P. SELVARAJ : இந்த நிலச்சீர்த்திருத்தம் மூலமாக எடுக்கப்பட்ட நிலங்களை தனிப்பட்ட நபர்களுக்கு கொடுக்குமா அல்லது கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு கொடுக்குமா ? இதில் சர்க்காரின் நோக்கமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இன்னும் அதைப்பற்றி ஒன்றும் முடிவு செய்யப்படவில்லை. ஆனால் இப்போது இருக்கிற நோக்கத்தின்படி நிலங்களை கூட்டுறவு முறையில் விநியோகிக்கப்படும்.

SRI S. SWAYAMPRAKASAM : ஸார், இந்த விதிகளை அமைப்பதற்கு ஹைக்கோர்ட்டுக்கும் அரசாங்கத்திற்கும் கரஸ்பாண்டன்ஸ் நடந்துகொண்டிருப்பதாக சொன்னார்கள். இந்த மசோதா செலக்ட் கமிட்டியில் விடும்போதே அதிலுள்ள விதிகளை அரசாங்கம் ஒப்புக் கொண்டது. ஆகவே, இது அசெம்பிளிக்கு வருவதற்கு முன்னால் ஏன் ஹைக்கோர்ட்டுக்கு அனுப்பபட்டு அதன் பின்னால் கொண்டுவரக்கூடாது ? இப்போது ஹைக்கோர்ட்டின் ஆலோசனையின்பேரில் ரூல்கள் தயாரிப்பதின் நோக்கமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது விஷயம் எப்போது மனதில் உதித்தது என்று தெரியவில்லை. எப்படியானாலும் ஹைக்கோர்ட்டு இதில் ரூல்கள் தயாரிக்கப்பட்டவுடன் கூடியசீக்கிரத்தில் அமுலுக்கு வரும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI S. VADIVELU : ஸார், அகில இந்திய நிலச்சீர்திருத்த குழுவால் மிராசுதார்களுக்கு ஆறில் ஒரு பங்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் இதிலும் செய்வதற்கு எதாவது யோசனை இருக்கிறதா ? இப்பொழுதாவது சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஐந்தில் ஒரு பங்கு என்று இருக்கிறது என்றுதான் ஞாபகம் இருக்கிறது. இது எல்லாம் மூன்றுவது கட்டத்தில் வரும்.

SRI P. JEEVANANDAM : அவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்களுடைய பதிலில் ஒரு விதமான பிடியும் கொடுக்காமல் பதில் சொல்லுவதாக இருக்கிறது. விதிகள் இன்னும் தயாரிக்கப்படவில்லை, உத்தியோகஸ்தர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அறுவடை நெருங்குகிறது. விவசாயிகளுக்கு இந்த அறுவடை காலத்தில்தான் இது பயனுள்ளதாக இருக்கும். ஆகவே வருகிற அறுவடை காலத்திற்கு முன்னடியாக இந்த சட்டத்தை கொண்டு வருவது ரொம்பவும் அவசர அவசிய காரியமாக உணர்ந்து அதற்கு ஆவன செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினருக்கு எவ்வளவு அக்கறை இதில் இருக்கிறதோ அவ்வளவு அக்கறை எனக்கும் உண்டு. அறுவடை காலத்திற்கு முன் இதை கொண்டுவந்துவிடலாம் என்று நம்புகிறேன்.

SRI K. T. RAJU : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் இந்த நிலச்சீர்திருத்தம் விஷயமாக சொல்லக் கூடிய பதில்களில் ஒரு பிடியும் இல்லாமல் சொல்லுவதின் காரணம், சமீபத்தில் தமிழ் நாட்டில் பெரிய மிராசுதார்கள் எல்லாம் சேர்ந்து சங்கம் அமைத்து அரசாங்கத்தை மிரட்டிக் கொண்டிருக்கிறார்களே, அந்த பயத்தினால்தானா இவ்விதமெல்லாம் சொல்லுகிறார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : யாருடைய மிரட்டுலுக்கும் பயப்படுவது என்னுடைய பிறவிக்குணத்திலே கிடையாது.

SRI K. VINAYAKAM : 60—40 பங்கு போட்டிருக்கிற சட்டத்திற்கு இன்னும் விதிகள் நிறைவேற்றவில்லை, ஹைக்கோர்ட்டின் ஆலோசனையில்

இருக்கிறது என்றெல்லாம் சொல்லி தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்கள் என்று பொதுமக்கள் அபிப்பிராயப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? மேலும் இன்று வோட்டு பெறுவதற்குகாகத்தான் இவ்விதமெல்லாம் தட்டிக் கழிக்கிறார்கள் என்று பொதுமக்கள் நினைப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? அதனால் இந்த எண்ணத்தை மாற்றுவதற்கு வேண்டிய அரசாங்கம் இந்த சட்டத்தை கொண்டுவருவதற்கு உடனடியாக வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU: அப்படி பொதுமக்கள் நினைத்தால் அது தவறு. அதை நிவர்த்தி செய்வதற்கு என்னுடைய நண்பரும் வேண்டிய முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri P. VENKATESHA SHOLAGAR: நிலச் சீர்திருத்த சட்டம் வந்தவுடன் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக நிலச் சொந்தக்காரர்கள் கரும்பு பயிரிடுவதற்கு ஆரம்பித்து விட்டார்கள். மிராசுதார்கள் இப்பொழுது மாநாடுகள் கூட்டி அமைத்த ஆக்ஷன் கமிட்டி தலைவர் ஸ்ரீ பி. டி. ராஜன்கூட சில மிராசுதாரர்கள் கரும்பு போட்டு தப்பித்து கொள்கிறார்கள் என்று கூறியுள்ளார். நேற்றையதினம்கூட மிராசுதார்கள் மாநாடுகூட்டி ஒரு கமிட்டி அமைத்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டிக்கு கனம் பி. டி. ராஜன் அவர்கள் தலைவராக இருக்கிறார். அம்மாதிரி மிராசுதார்கள் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு இடம் தராமல் இருப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU: எவ்வளவு தூரம் அவர்கள் கரும்பு போட்டுத் தப்பித்துக்கொள்வார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. சட்டத்தில் இப்பொழுது அதற்குள்ள வாய்ப்பு இருக்கிறது என்று நினைக்கிறேன்.

Sri A. VELOO: நியாய வாரச் சட்டத்திற்கு இன்னும் விதிகள் அமைக்காத காரணத்தாலும், அந்தச் சட்டத்தின்படி விசாரணைக் கோர்ட்டு அமைக்காமலிருப்பதாலும் விவசாயிகளை வெளியேற்றுவதை தடுக்க மனுச் செய்து கொள்வதற்கு முடியாமல் இருக்கிறது. அவ்விதம் நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதால் வெளியேற்றப்பட்ட விவசாயிகள் மனுச் செய்து கொள்ளும் காலத்தை நீடிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU: விவசாயிகளை வெளியேற்றும் விஷயமாக ஏற்பட்ட சட்டத்திற்கு விதிகள் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். நியாயவார மசோதாவிற்குத்தான் இன்னும் விதிகள் ஏற்படவில்லை.

Sri A. K. SUBBIAH: சட்டம் வந்த தேதியிலிருந்து இன்று வரை அறுவடையாகும் மகசூல் சம்பந்தமாக தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல தகராறுகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அதனால் இது முக்கியமான விஷயமாக இருப்பதால் இதைப்பற்றி விவாதிக்க அரை மணி நேரம் ஒதுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: இதைப்பற்றி விவாதிக்க அரை மணி நேரம் ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தக் கேள்விக்கு இப்பொழுதே பத்து நிமிஷங்கள் கொடுத்து விட்டேன். மேற்கொண்டு அவகாசம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அதைப்பற்றி அரை மணி நேர விவாதம் தேவை இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

Sri V. BALAKRISHNAN: கனம் விவசாய மந்திரி அவர்கள் போன வருஷம் நஞ்சை நிலங்களில் கரும்பு சாகுபடி செய்வது பற்றி சொன்னபோது அதைப்பற்றி கண்காணிக்கப்படும், அவர்களால் தப்பித்துக்கொள்ள முடியாது. அப்படி இருந்தால் அதற்கு வேண்டிய

நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று அழுத்தம் திருத்தமாக சொன்னார். அது இந்த அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகிறதா?

The Hon. Sri M. A. MANICKAVELU: இப்பொழுதும் அரசாங்கத்தினுடைய கொள்கை அழுத்தம் திருத்தமாகத்தான் இருக்கிறது.

Sri T. S. ARDHANARI: இந்த குத்தகை வார பிரச்னை ஒரு முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. மாகாணத்தில் இருக்கக் கூடிய பிரச்னைகளிலேயே இது ஒரு முக்கியமான பிரச்னை. இந்தச் சட்டம் வந்து இரண்டு மாதங்களாகியும் அதற்கு எந்த விதமான விதிகளும் தயாரிக்கப்படவில்லை என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லுகிறார். விவசாயிகள் நவம்பர் மாதம் 27-ம் தேதி விண்ணப்பம் போடவேண்டுமென்று சட்டமிருக்கிறது. நவம்பர் மாதம் போய்விட்டது. இன்னும் சட்டத்தை நிறைவேற்ற ரூல்ஸ் தயாராக இல்லை என்கிறார். இது முக்கியமாக இருப்பதால் அரை மணி நேரம் விவாதிக்க அனுமதி அவசியம்.

DEPUTY SPEAKER: கனம் அங்கத்தினர் கேள்வி போடவேண்டும். சர்ச்சை செய்யக் கூடாது. நான் ஏற்கெனவே இதைப்பற்றி அரை மணி நேர விவாதம் தேவையில்லை என்று சொல்லி விட்டேன். அதனால் மறுபடியும் சர்ச்சை பண்ணவேண்டும் என்பதற்கு அவசியம் இல்லை.

Artificial rain-making

* 412 Q.—**Sri K. T. RAJU** (on behalf of Sri N. K. Palanisamy): Will the Hon. the Minister for Agriculture be pleased to state with reference to the answer given on 29th September 1956 to question No. 284-A— 9-30 p.m.

(a) whether any experiments in artificial rain-making have since been made by the Chairman of the Artificial Rain-making Committee in consultation with any foreign experts; and

(b) if so, the results thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) The answer is in the negative.

(b) Does not arise.

Sri S. RAMALINGAM: சமீப காலத்தில் நீலகிரியில் செயற்கை மழை பெய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. அப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டபோது உண்மையிலேயே மழை பெய்ததா? நினைத்த இடத்தில் மழை பெய்ததா, அதாவது எந்த இடத்தில் மழை பெய்ய வேண்டும் என்று நினைத்தார்களோ அந்த இடத்தில் மழை பெய்ததா? அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் பெய்ததா? அல்லது தானாகவே பெய்ததா அல்லது நடவடிக்கை எடுத்துக் கொண்டதனால்தான் பெய்ததா? இவர்களுடைய முயற்சி பலித்ததா அல்லது அதுவாகவே இயற்கையிலேயே பெய்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அப்பொழுது பரீட்சை செய்தார்கள். அது தானாகவே பெய்ததோ அல்லது பெய்ததாக பெருமைப் பட்டுக் கொண்டார்களோ என்னமோ, பெருமைக்காக அப்படிச் செய்தார்களோ அதைப்பற்றி ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினருக்கு நான் ஒன்று மட்டும் சொல்லுகிறேன், பரீட்சை நடந்தது, அது வெற்றிகரமாக நடந்தது என்று தெரிந்துகொண்டார்கள். நீலகிரியில் நடந்த பரீட்சை வெற்றிகரமாக நடந்தது. அதையே இன்னும் மற்ற இடங்களிலும் நடத்த

[24th December 1956

ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். பரீட்சை பல நாட்கள் நடத்தினார்கள். அதில் ஏற்பட்ட முடிவினால் அவைகளை மறுபடியும் நடத்த தைரியம் ஏற்பட்டது. மேற்கொண்டு நடத்தலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி பரிசீலனை செய்ய பைக்காரா டாம், ஊட்டி, க்ளென்மார்கன், பவானி சாகர், சிங்காரா, கூனூர், மெட்ராஸ் சிட்டி, இந்த இடங்களில் ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டி அதைப்பற்றி பரிசீலனை செய்துவருகிறது. ஒவ்வொரு இடத்திலும் நடப்பதைப் பார்த்துவிட்டு மற்ற இடங்களிலும் நடத்த ஏற்பாடு செய்வார்கள். இதற்கு பரிசீலனை செய்துகொண்டு வருகிறார்கள். பிறகு தொடர்ந்து செய்யப்படும். இதற்கு மத்திய அரசாங்கமும் உதவ வேண்டும் என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமும் இதற்கு திட்டம் தயாரித்து அனுப்பி இருக்கிறார்கள். அந்த திட்டத்தையும் பரிசீலனை செய்துகொண்டு வருகிறார்கள்.

Sri P. G. KARUTHIRUMAN: இந்த செயற்கை மழை உற்பத்தியைப்பற்றி அமெரிக்காவில் செய்ததாகவும் ஆனால் பின்னால் மழை பெய்ததற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று கண்டு பிடிக்கப்பட்டதாகவும் சர்க்காருக்கு தெரியவந்ததாம். அது பற்றி இந்த சர்க்காருக்குத் தெரியுமா? மற்றும் 'காக்காய் உட்கார பனம் பழம் விழ' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. அதைப்போல சாதாரணமாக இயற்கை மழை பெய்ததும் இவர்கள் பரீட்சை செய்ததும் சேர்ந்ததால் மழை பெய்ததா என்பதை சர்க்கார் அறியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: தனியாக சில செயற்கை காரியங்களை கனம் அங்கத்தினர் ஆதரிக்கும்போது இதை மட்டும் அவர் கண்டு இவ்வளவு ஆத்திரப்பட வேண்டிய அவசியம் என்ன? மழை பெய்வதற்கு செய்யப்படும் செலவை வெகு சிக்கனமாகவே தான் செய்யப்பட்டு வருகிறது. ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாகத்தான் செலவு செய்யப்படுகிறது. அமெரிக்காவில் மட்டும் அப்படி பரீட்சை பார்த்தார்கள் என்பதில்லை, பாகிஸ்தானிலும் கூடத்தான் பரீட்சை பார்த்தார்கள். அதற்குப் பிறகு விஞ்ஞானிகள் தொடர்ந்து பரீட்சை செய்து பார்த்துக்கொண்டு தான் வருகிறார்கள். அவர்கள் செய்த பிறகுதான் இதைப் பற்றி ஒரு முடிவு செய்யலாம். அப்படி செய்வது நல்லது என்று எல்லோரும் கருதினால் அதை எல்லோரும் வரவேற்க வேண்டியது தான்.

Sri V. BALAKRISHNAN: பரீட்சை செய்து பார்த்த இடத்தில் எவ்வளவு அங்குல மழை எவ்வளவு எடுத்த முயற்சிக்குப் பெய்தது என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா?

The Hon. M. BHAKTAVATSALAM: இதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. அவ்வப்போது இதைப்பற்றியும் கமிட்டி கவனித்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

Sri A. RATNAM: செயற்கை மழை பெய்வதற்கு பரீட்சை எந்த எந்த முறையில் கையாளப்படுகிறது? செயற்கை மழை பெய்வதற்கு எந்த மருந்தைக்கொண்டு செய்கிறார்கள். அதற்கு எவ்வளவு ரூபாய் செலவாகிறது, எவ்வளவு பேர்கள் அதை திறமையாகச் செய்கிறார்கள். பெய்யச் கூடிய மழை எவ்வளவு, பொருள் செலவு என்ன? வருமானம் என்ன, மிச்சம் என்ன, மிச்சம் கிடைக்கக் கூடிய வகையில் மழைபெய்யச் செய்யமுடியுமா என்பனவற்றையெல்லாம் கனம் மந்திரி அவர்கள் சொல்லுவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இந்த அரசாங்கம் இந்த பரீட்சைக்கு செலவு செய்வது 650 ரூபாய்க்கு மேற்படக்கூடாது என்பதுதான். என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன என்பதை தமிழில் சொல்வது என்பது முடியாது. ஆகவே அதை இங்கிலீஷில் படிக்கிறேன்.

24th December 1956]

'The method experimented in these areas was by blowing into the atmosphere sodium chloride or mixture of sodium and calcium chloride vapour. Rainfall data were collected and Isohyetal maps prepared. The Reviewing Committee considered that no conclusive deductions could be drawn from Isohyetal maps and drawings and suggested another method of study. This type of study has been completed and has indicated encouraging results.

இன்னொரு பரீட்சையில் எப்படி செய்யப்பட்டிருக்கிறது என்றால்,

'Finely ground sodium chloride is to be dispersed into the atmosphere from ground level by means of a hand-driven generator on all favourable occasions.'

முன்பு செய்த பரீட்சையில்

'A mixture of calcium chloride and sodium chloride was vapourized by an electric arc for about 6 hours using carbon rods as electrods. The fumes of vapourized mixture were let out into the air through a galvanized iron chimney of 35 to 40 feet high. The fumes got mixed with the air and subsequently rose up into the atmosphere, the distance travelled and velocity of the movement of the fumes depending upon the nature of the upward draft of the wind. In 18 out of the 48 days when the experiments were conducted, it was noticed that there was appreciable faster precipitation on the leeward side of the seeding centre than on the windward side. On the remaining days no significant results were obtained. Further particulars are being collected for review by the Committee at its next meeting.'

Sri K. PARTHASARATHY: பழைய காலத்தில் மழை இல்லாத 9-40 a.m.
போது நம்முடைய நாட்டிலே வருண ஜெபம் செய்து மழையைக் கொண்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, செயற்கை முறையில் மழையைக் கொண்டுவருவதைப்பற்றி ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கும் போது, வருண ஜெபம் செய்து மழை கொண்டுவருவதைப்பற்றியும் ஆராய்ச்சி செய்து பார்க்க முடியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: வெறும் ஜெபத்தில் அரசாங்கத்திற்கு நம்பிக்கை இல்லை. கனம் அங்கத்தினரைப் போன்றவர்களுக்கு நம்பிக்கை இருந்தால், அவர்களெல்லாம் சேர்ந்து ஜெபம் செய்யலாம். அதற்குத்தடை இல்லை.

Sri N. RATHNA GOUNDER: மழை பெய்ய வேண்டுமானால் கிராமத்திலுள்ள பெண்களெல்லாம் கூடி "மழைக்கண்ணி" என்னும் பாட்டை மனம் உருகிப் பாடினால் மழை பெய்யும் என்று சொல்வது உண்டு. ஆகவே, அதற்காக கவர்ன்மெண்டார் சிறிது பணம் ஒதுக்குவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இதற்குப் பணம் ஒன்றும் வேண்டாம். கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் இதிலே அக்கறை எடுத்துக்கொண்டு முயற்சி செய்தால் செலவு இல்லாமலேயே செய்யலாம்.

Sri S. DAIVASIGAMONEY: In recent times, we have had too much of rain, as a result of which there had been floods and a lot of damage was caused. May I know whether the Government would institute an enquiry for 'stopping rains as and when they like?

[24th December 1956

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I am surprised at the hon. Member ' so soon getting disgusted with the heavy rains '. These rains have occurred after a period of ten years and in some other places, it is said, after a period of 50 years. I would, therefore, tell the hon. Member not to feel so disgusted about the rains this year.

SRI P. CHELLATHURAI : குறித்த காலத்திலே அளவோடு மழையைப் பெய்விப்பதும், பெய்யாமல் தடுப்பதும் இறைவன் திருவருள் என்று சொல்லுவதிலே கனம் அமைச்சர் அவர்களுக்கு நம்பிக்கை உண்டா ? நம்பிக்கை இருக்குமானால், செயற்கை மழைக்காகச் செய்யும் யத்தனத்திலே செலவாகும் பணத்தை தெய்வ நம்பிக்கையை மக்கள் மத்தியிலே உண்டாக்குவதற்கு அரசாங்கம் செலவு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இறைவன் அருளிலே நம்பிக்கை உள்ளவர்கள் அவ்வாறே நடந்துகொள்ளலாம். கனம் அங்கத்தினர் அவர்கள்கூட தேர்தலுக்கு நிற்கும்போது, இறைவனுக்கே விட்டுவிட்டு, வீட்டிலே சும்மா உட்கார்ந்துகொண்டிருந்து, அதனுடைய பலனை அனுபவித்துச் சொன்னால் அதற்குப்பிறகு செயற்கை மழை சம்பந்தமாகவும் கனம் அங்கத்தினருடைய யோசனைப்படி நாம் செய்யலாம்.

SRI K. VINAYAKAM : மழை இல்லாத இடங்களில் 'செயற்கை முறையில் மழையைப் பெய்விக்கவேண்டும் என்பதுதான் நோக்கம். பருவ காலத்தில் மழை வராமற் போவதினால், எந்த இடத்தில் மழை இல்லையோ அந்த இடத்தில் மழை பொழியும்படியாக ' செயற்கை மழை எக்ஸ்பெரிமெண்ட் ' செய்யப்படுகிறதா ? அப்படியில்லாமல், இந்தியாவிலே மழை பெய்யவேண்டுமென்பதற்காக பல கோடி ரூபாய் செலவழித்து முயற்சிசெய்து, இயற்கையோடு போராடியதன் பயனாக இந்தியாவில் பெய்யாமல் சைனா தேசத்தில் பெய்தால் என்ன செய்வது ? தேவையான இடத்தில் மழை பெய்யும்படியாக இந்த அரசாங்கம் செயற்கை மழை ஆராய்ச்சி உத்தரவாதம் கொடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது பரீட்சைதான் நடந்து கொண்டிருக்கிறது. எங்கே வேண்டுமோ, எந்த சமயத்திலே வேண்டுமோ, அங்கே மழையைப் பெய்ய வைக்கவேண்டுமென்பதுதான் பரீட்சையில் நோக்கம். பரீட்சை பூர்த்தியானால்தான் மழை எங்கு வேண்டுமோ அங்கு பெய்யச் செய்யலாம். இன்னும் பரீட்சை பூர்த்தியாகவில்லை. இதற்குச் செலவாகும் பணம் கோடிக் கணக்கில் அல்ல ; சில ஆயிரம் ரூபாய் தான் செலவு செய்யப்படுகிறது.

SRI T. S. ARDHANARI : நம்முடைய நாட்டிலே அடிக்கடி மழை இல்லாமல் போய்விடுவதனால், நம்முடைய நாட்டுக்கு மிகப் பெரிய கஷ்டம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்காகத் தான் செயற்கை மழை பெய்விக்க வேண்டுமென்று சர்க்கார் கருதுகிறது என்று நான் நினைக்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட முக்கியமான பரீட்சைக்காக குறைந்தது ரூ. 6,500 செலவு செய்யவேண்டுமென்று முடிவு செய்திருப்பதாக சொல்கிறார்கள். இவ்வளவு முக்கியமான பரீட்சைக்கு இவ்வளவு குறைவான தொகை ஒதுக்கியிருப்பதனால், சர்க்காருக்கே இந்தப் பரீட்சையிலே நம்பிக்கை இல்லையோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, அதிகமாகப் பணத்தை ஒதுக்கி, இன்னும் நல்ல முறையில் பரீட்சை செய்து நாட்டுக்கு உதவுமாறு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறைந்த செலவிலும் சிக்கனமாகவும் ஆராய்ச்சி செய்வதனால், அரசாங்கத்திற்கு ' செயற்கை மழை ஆராய்ச்சியில் ' நம்பிக்கை இல்லை என்று அர்த்தம் அல்ல. குறைந்த செலவிலே ஆராய்ச்சி நடத்தப்படுகிறதென்றால், அது நமக்குக் கிடைத்துள்ள விஞ்ஞானிகளின் ஆற்றலைத்தான் எடுத்துக் காட்டுகிறது. அதிக

24th December 1956]

செலவு செய்துதான் முடிவு ஏற்படவேண்டுமென்பது இல்லை. விஞ்ஞானிகள் சிறந்த முறையிலே பல ஆராய்ச்சிகளைச் செய்துவருவதால், குறைந்த செலவிலும் நாம் வேண்டிய பயனைப் பெறலாம்.

SRI S. SWAYAMPRAKASAM : மேகம் தவழ்ந்து போய்க் கொண்டிருக்கும் நேரத்தில் அது மழையாகப் பெய்வதற்குவேண்டிய குளிர்ந்த காற்று அதன்மீது படாததால் மழை பெய்யாமல் இருக்கிறது. ஆகையால், இப்படிப்பட்ட பரிசோதனை செய்கிற காலத்திலே, மேகங்கள் தவழ்ந்து போகும்போது அவை மீது திடீரென்று குளிர்ந்த காற்று வீசும்படி செய்து மழையைப் பெய்விக்க முடியும் என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட தகவல் அரசாங்கத்திற்கு உண்டா ? அப்படியானால், பல இடங்களில் மேகம் தவழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் வெகு சீக்கிரம் மழையைத் தருவிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதையெல்லாம் பரீட்சை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்றுதான் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

SRI P. JEEVANANDAM : அவைத் தலைவர் அவர்களே, செயற்கை மழை பெய்விக்கும் முயற்சி பரீட்சார்த்த நிலையில் இருக்கிறதென்றும், சில இடங்களில் பரீட்சை நடந்திருக்கிறதென்றும் அமைச்சரவர்கள் கூறினார்கள். பரீட்சார்த்த நிலை வெற்றிபெறும் திசையில் எந்த அளவுக்கு சாதனைகள் ஏற்பட்டிருக்கின்றன ? குறைந்தபட்சமேனும் சாதனை ஏற்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தப் பரீட்சைகளினால், எப்பொழுது எவ்வளவு வெற்றி கிடைக்குமென்று பரீட்சை நடந்துகொண்டிருக்கும் இப்பொழுது சொல்வதற்கு இல்லை. பரீட்சையிலே வெற்றிபெறக்கூடும் என்ற நம்பிக்கை மட்டும் இப்பொழுது நடக்கும் பரீட்சையிலிருந்து ஏற்பட்டிருக்கிறது.

Agricultural debts

* 413 *Q.*—SRI K. T. RAJU (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received a copy of the resolution passed at the Tiruchirappalli District Vivasayigal Sangam Conference in the month of May 1956 requesting the Government to form Judicial Enquiry Committees to go into the question of agricultural debts; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) No action was considered necessary in the matter.

SRI K. T. RAJU : ரிசர்வ் பாங்கால் ஏற்படுத்தப்பட்ட அகில இந்திய ரூரல் க்ரெடிட் சர்வே கமிட்டி, தங்களுடைய ரிபோர்ட்டில் இந்திய நாட்டில் விவசாயிகளுக்குக் கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய்க்கு மேல் கடன் இருப்பதாகக் கூறுகிறது. நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 140 கோடி ரூபாயாவது குறைந்தபட்சம் விவசாயிகளுக்கு கடன் இருக்கிறதென்று கூறப்படுகிறது. அப்படி இருக்கும்போது இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் தொகை அத்தனையும் இதுவரை விவசாயிகள் பட்ட 140 கோடி ரூபாய் கடனுக்கு வட்டி கொடுப்பதிலேயே போய்விடும்.

ஆகையால், விவசாயிகள் பட்டிருக்கும் கடனை தேசியப் பிரச்னையாகக் கருதி, இதுவரையில் அவர்கள் பட்டிருக்கும் கடனைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஏதாவது துரிதமான நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : விவசாயிகளுக்கு கடன் பளு அதிகமாக இருக்கிறதென்பது வாஸ்தவம். அவர்களுக்குக் கூடுமான வரை எப்படி உதவி செய்து, அவர்களுடைய கடன் பளுவைக் குறைக்கக் கூடும் என்பதற்குப் பல முறைகளைக் கையாண்டுவருகிறோம். அதற்காக, இப்பொழுது விவசாய பாங்குகளை ஆங்காங்கு ஸ்தாபித்து அவர்களுக்கு கடன் வசதி ஏற்படுத்துவதற்கு வேலை நடந்துகொண்டு வருகிறது.

Sri V. BALAKRISHNAN : விவசாயிகளின் கடனில் **Danduput** கொள்கையை சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவருவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : விவசாயிகள் அதிக வட்டி கொடுக்காமலேயே கடன் பெறுவதற்கு அனுகூலமாக இருக்க வேண்டுமென்பது லேவாதேவிக்காரர்கள் மசோதா கொண்டுவந்ததன் நோக்கமாகும். இதை ரொம்ப அதிகமாக நெருக்கினால், கடனே கிடைக்காமல் போய்விடும். கடன் ஓரளவுக்காவது விவசாயிகளுக்கு கிடைத்தால் சரி. ஆகையால், இதை அதிகமாக முடுக்கிவிட்டால், இயந்திரமே ஓடாமல் போய்விடும். இயந்திரம் ஓட வசதி இருக்கவேண்டும். அதுதான் விவசாயிகளுக்கும் நன்மை ; மற்றவர்களுக்கும் நன்மை.

Sri M. P. SUBRAMANIAM : சர்க்காரிலிருந்து தக்காவி கடன் வாங்கவேண்டுமென்றால், கூட்டுறவு நில அடமான பாங்குகளிலிருந்து கடன் வாங்க வேண்டுமென்றால், 1939-ம் ஆண்டுக்கு முன்பாக நிலத்தின் மதிப்பு என்னவோ, அதைக் கணக்கிட்டு, அதிலே பாதித் தொகையை மட்டும்தான் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். 1939-லேயே ஒரு குறிப்பிட்ட தொகைக்கு விற்ற நிலம், இன்று நான்கு ஐந்து மடங்குக்கு மேல் விலை உயர்ந்திருக்கிறது. தற்பொழுது நிலத்தின் மதிப்பு என்ன இருக்கிறதோ அந்த அடிப்படையில் கடன் கொடுக்காவிட்டால் விவசாயிகளுக்கு உண்மையிலேயே பயன் ஏற்படாது. ஆகவே, அந்த அடிப்படையை மாற்றி, தற்காலத்தில் நிலம் என்ன விலைக்கு விற்குமோ, அந்த மதிப்பில் பாதியை கூட்டுறவு நில அடமான பாங்குகள் கடனுக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

DEPUTY SPEAKER : The hon. Member can put a separate question.

Sri K. T. RAJU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு விவசாய பாங்குகள் மூலம் கடன் வசதி செய்து கொடுத்திருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். சென்ற பட்ஜெட் கூட்டத்திலே, இந்த ராஜ்யத்திலுள்ள விவசாயிகளுக்காக தேவைப்படும் கடன் தொகை 70 கோடி ரூபாய் என்றும், கிராமக் கடன்களுக்காக ஐந்து கோடி ரூபாய் என்றும், வருகிற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், அதாவது 1961 மார்ச் 31-ந் தேதி முடிய கொடுக்கப்போவதாக சொல்கிற கடன் 15 கோடி ரூபாய் என்றும் சொல்லப்பட்டது. இப்படி முழுத்தொகை கொடுத்தாலுங்கூட, 55 கோடி ரூபாய் வரையில் வெளியிலே விவசாயிகள் அதிக வட்டிக்கு கடன் வாங்கவேண்டியிருக்கும் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஐம்பத்தைந்து கோடி ரூபாயையும் வெளியிலிருந்து அதிக வட்டிக்கு விவசாயிகள் கடன் வாங்குவதற்குப் பதிலாக, 30 கோடி ரூபாய் வரைக்கும் சர்க்கார் மூலமாக குறைந்த வட்டிக்கு விவசாயிகளுக்கு கடன் கிடைக்க சர்க்கார் தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

Sri R. V. SWAMINATHAN : கனம் அங்கத்தினர் பிரசங்கம் செய்கிறார்.

Sri K. T. RAJU : இல்லை. நீளமான கேள்வி. (சிரிப்பு.)

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தக் கடனாளிகளுக்கு வசதியாக கடன் கொடுப்பதற்கு என்னென்ன செய்யக்கூடுமோ அதைத் தான் செய்துகொண்டு வருகிறோம். ஆனால், அது போதுமான அளவிலே இல்லை என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார். இன்னும் கூடுமான அளவு எவ்வளவுக் கெவ்வளவு செய்ய முடியுமோ அதைப் பிரயத்தனம் செய்யலாம் என்றுதான் நான் சொல்ல முடியும்.

Sri S. C. C. ANTHONY PILLAI : Is the Hon. Minister aware that many of the pawn-brokers and money-lenders have gone on strike recently and, if so, are Government taking adequate steps to provide alternative credit facilities? 9-50 a.m.

The Hon. Sri M. A. MANICKAVELU : I am not very familiar with the subject of strikes as the hon. Member. I want notice about it.

Sri K. V. RAMASWAMY : தற்சமயம் அமுலிலுள்ள சட்டப்பிரகாரம் விவசாயிகள் தங்களுடைய கடன்களை நான்கு தவணையாக கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அவர்கள் நான்கு தவணைகளில் கொடுக்கமுடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, தவணையை அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ? அதே சமயத்தில் புதிதாக வாங்கக்கூடிய கடன்களுக்கு இந்த சட்டம் பொருந்துவதாக இல்லை. இனிமேல் வாங்கக்கூடிய கடன்களையும் தவணைகளில் கொடுக்கக்கூடிய வசதி செய்ய சர்க்கார் சட்டம் கொண்டுவர முன்வருவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்பொழுது கேள்வி பொதுப்படையாகக் கேட்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒரு விஷயத்தைப்பற்றி அங்கத்தினர்கள் கேட்க விரும்பினால், அதற்கு முன் எச்சரிக்கை வேண்டும்.

Sri K. VINAYAKAM : விவசாயிகளுக்கு விவசாயம் நடத்துவதற்காக கடன் வேண்டியிருக்கிறது. அரசாங்கம் இது விஷயமாக ஒரு சட்டம் கொண்டுவரப்போகிறார்கள் என்று தெரிந்தபிறகு **Regular money-lenders and pawn-brokers** அதாவது ஈடு வைத்துக்கொண்டு பணம் கொடுக்கிறவர்கள் கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு கடன் கொடுக்க மறுத்துவிட்டதாகத் தெரிகிறது. இதைத்தான் ஸ்ரீ அந்தோனிப் பிள்ளை அவர்கள் '**Money-lenders and pawn-brokers have gone on strike**' என்று சொன்னார்கள். அதேசமயத்தில் கூட்டுறவு பாங்குகளின் மூலம் சாதாரண விவசாயிகளுக்கு கடன் கிடைப்பதில்லை. பிரபல அரசியல் வாதிகளுக்கும், தனவந்தர்களுக்கும், **party bosses. quislings** ஆகியோர்களுக்கு கிடைக்கிறதே தவிர, சாதாரண ஏழை விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. ஆகையால், ஏழை விவசாயிகளுக்கு வேண்டிய கடன் கிடைப்பதற்கு வசதி செய்ய அரசாங்கம் வேறு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : லேவாதேவி விஷயத்திலே கடுமையான நிபந்தனைகள் ஏற்படுத்தினால், குறிப்பாக விவசாயிகளுக்கு கடன் சுலபமாகக் கிடைப்பதில்லை ஏனென்றால், விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது என்றால் அவர்களுக்கு சில சலுகைகள் இருக்கின்றன. இந்த விஷயம் அரசாங்கத்திற்கும் தெரியும். ஆகையினாலேதான் அவர்கள் இந்த விஷயத்திலே ஜாக்கிரதையாக சட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறார்கள். கூடுமானவரையில் விவசாயிகள் தனிப்பட்ட நபர்களிடத்தில் கடன் வாங்கவேண்டிய நிலைமை ஏற்படாமல் இருப்பதற்குத்தான் இம்மாதிரி கூட்டுறவு பாங்குகள் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால், அது போதுமான அளவுக்கு இல்லை. கூடியவரையில் சர்க்கார் விவசாயிகளுக்கு கஷ்டம் ஏற்படாமல் கடன் கிடைப்பதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்து கொண்டுதான் வருகிறார்கள்.

[24th December 1956

Oil deposits

* 414 Q.—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government have carried out any survey of oil deposits in this State; and

(b) if so, the results thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Do not arise.

SRI S. DAIVASIGAMONEY: Some time ago it was stated that the Cauvery bed and the delta of some of the rivers in our State have deposits. I would like to know whether the Hon. Minister is aware of this information?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir. The question of further investigation is being examined.

SRI R. V. SWAMINATHAN: We read in the newspapers now and then that oil deposit is available here and there in Tamilnad. May I know whether the Government have got any clear idea about the availability of oil deposits in Tamilnad for exploitation and whether there is any possibility of conducting a survey in this matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is likely to be oil deposit in certain areas and therefore the Government are taking up this matter, and they are going into the investigation of this question.

SRI S. DAIVASIGAMONEY: If the Hon. Minister is aware of the oil deposits in our State, what steps have been taken to exploit those oil resources?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have already answered that I am getting this investigated by the Geological Survey of India.

Exemption of 'Porikadalai' from sales tax

* 415 Q.—SRI K. T. RAJU (on behalf of Sri N. K. Palanisamy): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have received during the month of September 1956 a memorandum from the Maduraimagar Porikadalai Viaparigal Sangam, Madurai, to include the 'Porikadalai' industry as a cottage industry and to exempt it from sales tax; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) The representation from the Madurai Nagar Porikadalai Viaparigal Sangam was received in October 1956.

24th December 1956]

(b) The Government examined the requests of the Sangam and informed the Sangam that they cannot comply with its requests.

SRI K. T. RAJU: மற்ற விஷயங்களில் சலுகை காட்டுவதற்கு கொஞ்சம் காலதாமதமானாலுங்கூட, பொரிக்கடலை விஷயத்தில் சலுகை காண்பித்து கடைசி நேரத்திலாவது சாதாரண வியாபாரிகளுக்கு இந்த உதவியை அளிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஏற்கனவே சாதாரண வியாபாரிகளுக்கு சலுகை காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், குறிப்பிட்ட விற்ற முதலுக்குமேல்தான் வரி போடப்படுகிறது. சாதாரண சிறு வியாபாரிகளுக்கு விற்று முதல் அந்த லிமிட்டுக்கு மேல் போகாது. ஆகையால் ஏற்கனவே அவர்களுக்கு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM: பொரிகடலை ஒரு **cheap form of food** யாருக்கு பணம் அதிகமாக இல்லையோ, ஹோட்டலில் போய் சாப்பிட முடியாத நிலைமையில் இருக்கிறார்களோ, அவர்கள் இந்தப் பொரிகடலையை வாங்கி சாப்பிட்டு காலம் தள்ளுகிறார்கள். ஆகவே, இது ஒரு **cheap form of food** ஆக இருப்பதால் இதை விற்பனைவரியிலிருந்து விலக்களிப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அழுகிப்போகக் கூடிய சாமான்களின் **category**-ல் இது வரவில்லை. ஏற்கனவே சிறிய வியாபாரிகளுக்கு வரி கிடையாது. பெரிய மூட்டைக்கணக்கில் வியாபாரம் செய்பவர்கள்தான் வரி கொடுக்க நேரிடும்.

Manufacture of Ornamental Handles

* 416 Q.—SRI K. T. RAJU (on behalf of Sri N. K. Palanisamy): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to establish a training centre at Madurai for the manufacture of ornamental handles for furniture and for doors in houses;

(b) whether any amount has been allotted by the Centre for this; and

(c) the amount to be spent during this year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir. The Government have sanctioned a scheme for the establishment of a Training Centre at Madurai for the manufacture of ornamental handles for almyrahs, doors, tables, cars, etc.

(b) The Government of India have sanctioned to this Government a grant of Rs. 40,250 and a loan of Rs. 12,000 for implementing the scheme.

(c) The probable expenditure on the scheme during the current year 1956–57 is Rs. 47,350.

Displaced persons from Ceylon

* 417 Q.—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any representations in May-September 1956 from the registered sugar dealers in Madras City complaining of abuse of the facilities and sales tax concessions, etc., granted by the Government to displaced persons from Ceylon; and

(*b*) if so, the steps taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Representations were received in October 1956 from certain sugar dealers in Madras stating that the exemption from sales tax granted in respect of business undertaken by displaced persons from Ceylon had placed the latter in an advantageous position over other sugar dealers.

(*b*) The Government have issued orders restricting the exemption granted to the displaced persons from Ceylon to the ordinary rate of tax payable under section 3 (1) (*b*) of the Madras General Sales Tax Act, 1939.

SRI V. BALAKRISHNAN : இந்த விலக்கு அளித்ததினால் சர்க்காருக்கு எவ்வளவு ஆதாயம், எவ்வளவு நஷ்டமாகுமென்று எதிர்பார்க்கிறார்கள் என்பதை மந்திரி அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU ; சர்க்காருக்கு இதனால் கொஞ்சம் நஷ்டம் ஏற்படும்தான். ஆனால், இவ்வளவு என்று சொல்லுவதற்கு புள்ளி விவரங்கள் இல்லை.

SRI V. BALAKRISHNAN : இந்தச் சலுகை எத்தனை வியாபாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ? இவர்களுக்கு இந்தச் சலுகை கொடுப்பதற்கு முன்னால் இவர்கள் உண்மையாகவே இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்களா, வாஸ்தவமாகவே இங்கே தொழில் குறிப்பிட்ட இடத்தில் செய்கிறார்களா என்கின்ற அம்சங்களெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தத் தகவல் என்னிடமில்லை. அங்கத்தினர் கொடுத்த தகவல்களிலிருந்து சுமார் 50, 60 பேர்கள்தான் இருக்கலாம். உண்மையாகவே இந்தச் சலுகையை பெறக் கூடாதவர்கள்கூட சில பேர் இதில் புகுந்துகொண்டு இந்தச் சலுகையை அடைந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து யாருக்கும் கெடுதி இல்லாமல், அரசாங்கத்திற்கும் நஷ்டமில்லாமல் வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன். நல்ல எண்ணத்தோடு அளித்த இந்தச் சலுகையை சிலபேர் துஷ்பிரயோகப்படுத்தியது மிகவும் வருந்தத்தக்கது.

SRI S. CHELLATHURAI : இலங்கையிலிருந்து அகதிகளாக வந்து இங்கு குடியேறியிருப்பவர்களுக்கு சர்க்கரை வியாபாரம் செய்தால் மாத்திரம் இந்த விற்பனை வரி விலக்கு அளிக்கும் சலுகை தரப்படுகிறதா அல்லது அவர்கள் எந்த வியாபாரம் செய்தாலும் விற்பனை வரியிலிருந்து விலக்கு உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எல்லா வியாபாரத்திற்கும்தான் என்று நான் நினைக்கிறேன்.

SRI V. BALAKRISHNAN : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின் போது இதைப்பற்றி நான் சொல்ல வேண்டிய விஷயங்களையெல்லாம் மந்திரி அவர்களுக்கு சொல்லுவதற்கு அவகாசமில்லை. இதனால் சர்க்காருக்கு ரூபாய் இரண்டு அல்லது மூன்று லட்சம் நஷ்டம் ஏற்படுமாதலால், இது சம்பந்தமாக நுணுக்கமாக சர்ச்சை செய்வதற்கு ஒரு அரை மணி நேர விவாதத்திற்கு மந்திரி அவர்கள் கனிகூர்ந்து ஒத்துக்கொள்வார்களா ?

DEPUTY SPEAKER : What has the Hon. Revenue Minister to say regarding this?

SRI K. VINAYAKAM : இப்பொழுது ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால் சிலோனிலிருந்துவரும் அகதிகளுக்கு எவ்வித சலுகையும் அளிக்கக்கூடாது, அவர்களையும் இங்கிருக்கும் மக்கள் போலவே நடத்தவேண்டுமென்ற அடிப்படையிலே அவர் எண்ணுகிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன், சர்ச்சைக்கு அரை மணி நேரம் ஒதுக்குவதற்கு முன்பே.

THE HON. SRI M. A. MANICKAVELU : இது பற்றி நான் நுணுக்கமாக ஆராயப்போவதால், அதைப் பற்றி இப்பொழுது அரை மணி நேரம் விவாதம் அவசியமில்லை. அது வீண் காலம் கழிப்பதுதான்.

DEPUTY SPEAKER : We have got the Appropriation Bill which is coming up for discussion day after to-morrow and the hon. Member can raise this question then. There is no need for a half-hour debate. Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENTS BY THE DEPUTY SPEAKER.

(1) MESSAGE FROM THE GOVERNOR.

DEPUTY SPEAKER : I have to announce to the House the following message, dated the 16th December and 20th December 1956, received from the Governor of Madras :—

1. "In spursuance of Article 207, Clause (1) read with Article 199, clause (1), sub-clause (*a*) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendafion to the introduction in the Madras Legislative Assembly of the Madras Tobacco (Taxation of Sales and Registration) (Amendment) Bill, 1956.'

2. In pursuance of Article 207, clause (3) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Assembly the consideration of the Madras Official Language Bill, 1956.'

(2) MESSAGE FROM THE COUNCIL.

DEPUTY SPEAKER : I have also to announce to the House that I have received the following messages, dated 22nd December 1956, from the Hon. Chairman, Madras Legislative Council :—

1. " In accordance with Rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Co-operative Societies (Amendment) Bill, 1956 (L.A. Bill No. 34 of 1956), as passed and agreed to by the Council on the 22nd December 1956 without any amendment and signed by me.

[Deputy Speaker] [24th December 1956

2. In accordance with Rule 130 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Requisitioning and Acquisition of Immovable Property Bill, 1956 (L.A. Bill No. 35 of 1956), as passed and agreed to by the Council on the 22nd December 1956 without any amendment and signed by me."

III.—GENERAL DISCUSSION ON THE FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1956-57.

DEPUTY SPEAKER: Now we will take up the general discussion on the Final Supplementary Statement of Expenditure for 1956–57.

10 a.m. **SRI K. T. RAJU:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உப மானிய கோரிக்கையின் விவாதத்திலே சில விஷயங்களைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய கோவை ஜில்லாவிலுள்ள பாம்பாறு திட்ட சம்பந்தமாக ஏற்கெனவே கேரள ராஜ்யத்தோடு நாம் நடத்திய பேச்சு வார்த்தை எந்த அளவில் இருக்கிறது? அவர்கள் நம்முடைய சென்னை ராஜ்யத்தோடு ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியாதுபோனால், நம்முடைய ராஜ்யத்திலேயே வேறு முறையில் திட்டம் வகுத்து கிட்டத்தட்ட இரண்டு லட்சம் ஏகராவுக்கு பாசன வசதி செய்வதற்கு வேண்டிய முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகப் பத்திரிகைச் செய்தியில் படித்தேன். ஆகவே நம் என்ஜினியர்கள் கொடுத்திருக்கும் இந்தத் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கு இன்னும் எத்தனை காலம் பிடிக்கும் என்ற விவரத்தையும் சபையில் அங்கத்தினர்கள் தெரிந்துக்கொள்ளுவது நல்லது. கனம் அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது இது விஷயமாகவும் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தப்படியாக, சிறு தொழிலாளர்களுக்கு குடிசைத்தொழில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய வசதி செய்துகொடுப்பதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருப்பதாகவும், கிராமம் தோறும் ஆயிரம் தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு தேடிக்கொடுப்பதற்கு இது உதவிகரமாக இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இந்தத் திட்டம் எதிர்ப்பார்த்த அளவுக்கு நடைமுறையில் துரிதமாக நடை பெறவில்லை. இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பல இடங்களில் குடிசைத் தொழில் ஆரம்பிப்பதற்கு ஸ்தல அதிகாரிகள் தூண்டுதலின் பேரிலும் நாங்கள் செய்த முயற்சியினாலும் கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதற்கு தொழிலாளர்கள் அவர்கள் கொடுக்க வேண்டிய பங்கை பாங்குகளில் 'டெபாசிட்' செய்திருக்கிறார்கள். ஒன்றரை வருஷங்கள் ஆகியும் இன்னமும் தொழில் ஆரம்பிக்கப்படவில்லை. சாதாரண தொழிலாளர்கள் அவர்கள் கொடுக்க வேண்டிய பணத்தை அதிக வட்டிக்கு கடன் வாங்கி தொழிலை எப்படியாவது ஆரம்பிக்கவேண்டுமென்ற ஆர்வத்தில் கட்டியிருக்கிறார்கள். அதிகாரிகளும் நாங்களும் செய்த சிபார்சுகளினால் இவர்கள் தொழிலை ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்கள். பணம் கட்டியும் தொழில் ஆரம்பிப்பதில் இப்படிக் காலதாமதமானதால் தொழிலில் ஈடுபட்டவர்கள் உற்சாகத்தை இழக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு தொழிலில் ஒரு ஆர்வமும் ஆசையும் ஏற்பட வேண்டுமானால், குடிசைத் தொழில்களை துரிதமாக ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்கு தொழிலின்மேல் இருக்கும்படியான பற்று அற்றுப்போய் அவர்கள் சோர்வு அடையக்கூடிய நிலைமைதான் ஏற்படும். இந்த விஷயத்தில் சர்க்கார் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடிசைத் தொழில்கள் அபிவிருத்தி அடைய வேண்டுமென்று நினைத்தால் மட்டும் போதாது. தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவி அளிப்பதற்கு பணம் ஒதுக்கியிருந்தால் மட்டும் போதாது. அதை நடைமுறையில் அமுலுக்குக்

24th December 1956] [Sri K. T. Raju]

கொண்டுவரவேண்டியது நம் சர்க்காரின் கடமையாகும். ஆகையால், இந்த விஷயத்தையும் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் நான் கொண்டுவர ஆசைப்படுகிறேன்,

அதுபோலவே தான், கனரக இயந்திரத் தொழில் வளர்ச்சியின் விஷயமும். கட்சிப் பாகுபாடு இல்லாமல் சபையில் அங்கத்தினர்கள் எல்லோரும் பல முறை நமது ராஜ்யத்திலே கன ரகத் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்திவந்திருக்கிறார்கள். சேலத்திலே அலுமினியம் உருக்குத் தொழிற் சாலை ஏற்படுத்துவதுபற்றி இந்தச் சபையில் அடிக்கடி பேசப்பட்டிருக்கிறது. சேலத்தில் அதற்குப் போதுமான வசதிகள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற விவரங்களை இந்தச் சபையில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் தெரிந்து கொண்டால் நல்லது. அதையும் கனம் அமைச்சர் அவர்கள் தமது பதிலில் எடுத்துச் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய கடன் வசதிகளைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கேள்வி நேரத்தின்போது கூட நமது ரெவினியூ மந்திரி அவர்கள் விவசாயிகளுக்கு எவ்வளவு தூரம் கடன் வசதி செய்துதரமுடியுமோ அவ்வளவு தூரம் செய்துதருவதாகச் சொன்னார்கள். நமது திட்டங்கள் வெற்றி பெறவேண்டுமானால் விவசாயிகளுக்குப் போதிய கடன் வசதி கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும். அவர்களுக்குக் கிடைக்கும் வருமானம் அவர்கள் கையில் தங்கியிருக்கக் கூடிய நிலைமை இருக்கிறதா என்பதை கவனித்து அவர்களுக்கு போதிய கடன் வசதி அளிக்க வேண்டும். சர்க்கார் புள்ளி விவரங்கள்படி விவசாயிகளுக்கு வருஷம் ஒன்றுக்கு எழுபது கோடி ரூபாய் கடன் வசதி தேவையாக இருக்கிறது. குறைந்த பட்சமாக அந்த அளவுக்குகாவது அவர்களுக்குக் கடன் கிடைக்கும்படி செய்தால்தான் அவர்கள் மேற்கொண்டு தங்கள் விவசாயத் தொழிலை நடத்த முடியும். சில சமயங்களில் இவர்களுக்கு தேவைப்படும் சமயத்தில் கடன் கிடைக்காததால் இவர்கள் அதிக வட்டிக்கு வெளியில் கடன் வாங்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. நாட்டின் அபிவிருத்தியிலும் ஏழை விவசாயிகள் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டு நாம் திட்டங்களை தீட்டுகிறோம். திட்டங்களெல்லாம் வெற்றிகரமாக நிறைவேறுமென்றால், உற்பத்தி பெருக வேண்டுமென்றால், விவசாயிகளின் வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டும். அவர்களுக்குக் கிடைக்கும் வருமானம் அவர்கள் கையில் தங்கவேண்டும். இப்பொழுது அவர்கள் வருமானத்தில் பெரும் பகுதி பழைய கடனை திருப்பிக் கொடுப்பதிலேயே செலவழிந்து விடுகிறது. அவர்கள் அதனால் தங்களுடைய தேவைக்கு வெளியில் அதிக வட்டிக்கு பணம் வாங்கிச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்குத் தேவைப்படும் பணத்தில் பாதியாவது அவர்களுக்கு வேண்டுபோது துரிதமாக நியாயமான முறையில் கிடைக்க வசதி செய்து தர வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு உத்திரவாதமாகும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆனால் இவ்விஷயத்தையும் அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலில் எடுத்துச்சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI V. R. NAGARAJAN: நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பிக்கும் 10-10 a.m.
இந்த ஆண்டு உபரி செலவிற்குள்ள கோரிக்கைகளை நான் ஆதரிக்கிறேன். ஆதரிக்குமளவில் ஒரு சில விஷயங்களைப் பற்றி சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த ஆண்டு முடிவடைவதற்கு இன்னும் மூன்று மாதங்களே இருப்பதினாலும், ஒரு சில விஷயங்கள் ஏற்கனவே கருதப்பட்டு அவைகள் இன்னும் நடைமுறையில் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதினாலும் அவற்றை உடனடி ஆரம்பிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு நான் விளக்கமாகப் பேசநினைக்கிறேன், முக்கியமாக தென்னாற்காடு ஜில்லாவில் திண்டிவனம் தாலுகா சம்பந்தப்பட்டவரையில் சென்ற வருட பட்ஜெட்டிலேயே வீடூர் project-யைப் பற்றி விளக்கம் செய்யப்பட்டு அதற்கு

வேண்டிய ஒரு தொகையும் நிர்ணயிக்கப்பட்டு இந்த வருட ஆரம்ப கட்டத்திலேயே அந்த வீடூர் project என்ற திட்டம் ஆரம்பிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் சமீபத்திலே அதைப்பற்றி அறியப்படுகிறது என்னவென்றால் அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை என்றுதான் தெரிய வருகிறது. ஆகையினாலே, அந்தத் திட்டமானது உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும், அது நிறைவேற்றப்பட்டால் அது திண்டிவனம் தாலுகாவில் சுமார் நாற்பது கிராமங்களிலுள்ள நிலங்களுக்கு நீர்பாசனத்திற்கு உதவும் என்றும் சுமார் இரண்டாயிரம் ஏக்கரா நிலங்களுக்கு அது உடனடியாக உதவும் என்றும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர நான் ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, தாலுகா ஆபீஸ்களில் நம் ராஜ்யத்தின் பல பாகங்களிலும், மின்சாரம் வழங்கப்படவில்லையென்று அறிகிறேன். குறிப்பாக என ஜில்லாவில், தென் ஆற்காடு ஜில்லாவில் அது இல்லை. தாலுகா ஆபீஸ் என்றால் ராஜ்ய நிர்வாகத்தின் ஒரு அடிப்படையான ஆபீஸ் என்பதை நாம் உணர வேண்டும். அங்கு பலதரப்பட்ட வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. அரசாங்கம் இன்று நல்ல முறையில் நடந்து பலதரப்பட்ட ஆக்க வேலைகள் நாட்டின் அபிவிருத்திக்கும், ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏற்டடுத்தப்பட்டிருக்கும் முன்னேற்றத்திற்கான பல இலாக்காக்களும் அங்கிருந்துதான் ஆரம்பிக்கப்பட்டு வேலை செய்யப்பட்டு வருகிற தாலுகா ஆபீஸ்களில் உல்ள ஒரு முக்கியமான குறை மின்சாரம் இல்லையென்பதே. ஆகவே, அவைகளுக்கு கூடிய சீக்கிரம் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். நாம் இந்த வருஷத்திலேயே இந்த மாகாணத்தின் ஆட்சிமொழியைத் தமிழாகக் கொண்டு வருவதற்கு முயற்சித்து இப்பொழுது சட்டமும் இன்னும் ஒரு சில தினங்களில் நிறைவேற்றப்போகிறோம். தமிழ் ஆட்சி மொழியாக நம்முடைய தாலுகா ஆபீஸ்களில் இருந்துதான் ஆரம்பிக்கப்போவதால் அதை விளக்கமாக காட்ட தாலுகா ஆபீஸ்களுக்கு மின்சாரம் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மின்சாரத்தை அங்கு 1-4-57 முதற்கொண்டு வந்து விட வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இதைத் தவிர ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். பல ஜில்லாக்களிலும் ஸ்தல அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட பல லட்சக்கணக்கான ரூபாய்கள் இன்னும் செலவுசெய்யப்படாமல் அப்படியே தேங்கிக் கிடக்கின்றது என்று தெரியவருகிறது. குறிப்பாக என்னுடைய ஜில்லாவில் தென்னாற்காடு ஜில்லாவில் சுமார் பதினைந்து, பதினாறு லட்சம் ரூபாய் இந்த Local Development Works காக ஒதுக்கப்பட்டு அது இதுவரையிலும் செலவு செய்யப்படவில்லை. அதற்குக் காரணம், சர்க்கார் அல்ல. ஆனால் ஜனங்கள் அதற்கு ஜனங்களே பொறுப்பாளி என்று அறிகிறேன். சமீபத்தில் என்னுடைய ஜில்லா கலெக்டரை சந்தித்தபோதும் அவரும் இதை வற்புறுத்திச் சொன்னார். மக்கள் முன்வரவில்லையென்றும் ' கால் பங்கு தொகையை மக்கள் கொடுத்தாலொழிய இந்தப் பணத்தை செலவழிக்க முடியாது. அப்படி இந்த ரூபாயில், கால் பங்கு தொகையை மக்கள் கொடுக்கவில்லையென்றால் இந்த பதினாறு லட்ச ரூபாயும் lapse ஆகிவிடுமென்றும் ' சொன்னார். ஜனநாயக திட்டத்திலும், மக்களின் அபிவிருத்திக்காக செய்யவேண்டிய ஆக்க வேலைகளில் மக்களின் ஊக்கத்தையும், உணர்ச்சியையும் கண்டு பிடித்து அவர்களின் ஆதரவையும் பெற்றுத் தான் செய்ய வேண்டுமென்று சர்க்கார் கருதி அவர்களிடமிருந்து கால் பங்கு தொகையை வாங்கவேண்டுமென்ற கொள்கையை வகுத்திருக்கிறார்கள். அதை நான் ஆட்சேபணை செய்யவில்லை. ஆனால் இந்த ஆண்டு செலவு செய்ய வேண்டிய அத்தனை லட்ச ரூபாயும் அந்தக் கொள்கை காரணத்தால் செலவழிக்கப்படாமல் அது வீணாய் போய் ஜனங்களுக்கு வேண்டிய வசதிகள் இல்லை. ரோடுகள் ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் போன்றவைகள் கட்டப்படாமல் இந்த ஜனங்கள் இந்த வருஷம் ஏமாற்றம் அடைவார்கள். ஆகவே, அந்தக் கொள்கையை கைவிட்டுவிட்டு அந்தப்பதினாறு லட்ச ரூபாயையும் தென் ஆற்காடு ஜில்லா சம்பந்தப்பட்ட வரையில் எந்தெந்தப் பகுதிகளில் ஆஸ்பத்திரிகளோ,

பள்ளிக்கூடங்களோ அவசியமாய் வேண்டுமோ அந்த இடங்களில் அவைகளை ஏற்படுத்த ஜனங்களிடமிருந்து கால் பங்கு தொகையை எதிர்பார்க்காமலே அரசாங்கம் இந்தப் பணத்தை செலவுசெய்யும்படி ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதே மாதிரி பிரச்னை மற்ற ஜில்லாக்களிலும் இருக்கிறது. அப்படியானால் அரசாங்கம் பொதுவாக ஒரு உத்தரவை மாகாணம் பூராவிற்குமாக பிறப்பித்தால் அது ஜனங்களுக்கு மிகவும் உதவிகரமாயிருக்கும், ஜனங்களும் திருப்தியுறுவார்கள். தவிரவும், சமீபத்தில் சில தினங்களுக்கு முன்பாக ஜில்லா முனிசிப்பாலிட்டிகள் ஆக்ட் schedule 4-யை திருத்துவதற்காக நிதியமைச்சரவர்கள் கொண்டுவந்த ஒரு திருத்தத்தை இந்தச் சபை ஆமோதித்து அது நிறைவேற்றப்பட்டுமிருக்கிறது. அப்பொழுது இந்த சபையிலுள்ள சில அங்கத்தினர்கள், நானும் உட்பட எடுத்துச்சொன்னோம். அதாவது, வருஷாந்திர வருவாய் ஆயிரத்து இருநூறு ரூபாய்க்கு மேற்பட்ட பெற்றோர்களின் குழந்தைகளுக்கு பள்ளிக்கூடச் சலுகை கிடைக்காது ; ஆயிரத்து இருநூறு ரூபாயோ அதற்குக் குறைவாகவோ வருவாயுள்ள பெற்றோர்களின் குழந்தைகளுக்குத்தான் கல்விச் சலுகை தரப்படுகிறது ; அதை ஆட்சேபித்து பல வருஷங்களுக்கு முன்பாக இருந்த பொருளாதார நிலைமையில் பெற்றோர்களின் வருவாயின் வரம்பை வைத்ததை மாற்றி இப்பொழுது அதிகமான ஒரு வரம்பை வைத்தால் அது பிரகாரம் அதிக பெற்றோர்களுக்கு அரசாங்கச் சலுகை கிடைக்கும் ; அப்படிக் கிடைக்கச் செய்யவேண்டுமென்று கூறினோம். அதற்கு நிதியமைச்சரவர்கள், ஆயிரத்து இருநூறு ரூபாய் என்பதை 1,500 ரூபாய் என்றாக்குவதா ஆயிரத்து எண்ணூறு ரூபாயாக்குவதா, 2,000 ரூபாய் என்று ஆக்குவதா என்பதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும் ; இது ஒரு சிக்கலான விஷயம் ; ஆகவே இதை கவனித்துத்தான் செய்யவேண்டுமென்று பதில் சொன்னார்கள். அவர்கள் இதில் ஏதோ ஒரு இடைஞ்சல் இருக்கிறதென்று உணர்வதை நான் ஆட்சேபிக்கவில்லை, ஆனால் இது ஒரு முக்கியமான விஷயம் என்பதை மீண்டும் அரசாங்கத்தினிடம் வற்புறுத்த ஆசைப்படுகிறேன். பல பெற்றோர்கள் மாதம் ரூபாய் நூறுக்கு மேல் ஒரு பத்தோ பதினைந்தோ ரூபாய் கூட வருமானம் உள்ளவர்கள் இந்நாட்டில் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம், அவர்களின் குழந்தைகளுக்கு தற்போது இந்தக்கல்வி சலுகை கிடையாது. இதை ஒரு border line ஆகக் கருதக்கூடாது. ஆகவே நான் சொல்வதென்னவென்றால் ஒரு கவர்ன்மெண்ட் ஆர்டர் மூலம் இந்த ஆயிரத்து இருநூறு ரூபாய் என்பதை ஆயிரத்து எண்ணூறு ரூபாய் என்று வைத்தால் மாதமொன்றுக்கு நூற்றைம்பது ரூபாயோ அதற்கு உள்ளாகவோ சம்பாதிக்கும் எல்லோருக்கும் இது சௌகரியமாய் இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எனக்குச் சொல்லவேண்டியது, தென் ஆற்காடு ஜில்லாவில் ஒரு University இருக்கிறது. அது, Annamalai University ஆகும், அங்கு போதுமான கல்வி வசதி, பலதரப்பட்ட கல்வி வசதி அளிக்கப்பட்டபோதிலும் இப்பொழுது சென்னை சர்வகலாசாலைக்கு மாணவர்கள் குவியலாக வந்து அதிகமாக போட்டிபோட்டுக்கொண்டு வந்து பல கல்லூரிகளிலும் இடம்பெறாமல் போகிறார்கள். சமீப காலத்தில் அம்மாதிரியானதொரு நிலை அண்ணாமலை University யிலும் வந்திருக்கிறது. பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் இன்று எங்கள் ஜில்லாவிலுள்ள சர்வகலாசாலையில் இடம் கிடைக்காமல் ஏமாற்றமடைந்து போகிறார்கள். எங்கள் ஜில்லாவில் ஒரு சர்வகலாசாலை இருந்தும்கூட வருடாவருடம் பல மாணவர்கள், பிற்போக்கு சமுதாயத்தைச்சேர்ந்த மாணவர்களும், ஹரிஜன மாணவர்களும், மற்ற மாணவர்களும் அங்கு முயற்சி செய்து இடம் கிடைக்காமல் சென்னை சர்வகலாசாலையிலுள்ள கல்லூரிகளுக்குச் சென்று அங்கும் இடம் கிடைக்காமல் காலத்தை வீணாகக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எங்கள் ஜில்லாவில், தென் ஆற்காடு ஜில்லாவில் உள்ள வடபாகத்தில் அங்குள்ள கிராமவாசிகள் அங்கிருந்து புறப்பட்டுவந்து கல்வி பயின்று வரும்மாணவர்களுக்கும், கல்லூரிக் கல்வியை விரும்பும் வேறு பல மாணவர்களுக்கும் உதவிக்காமாக இருக்க வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு கல்லூரியைத் திறக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்

[Sri V. R. Nagarajan] [24th December 1956

கிறேன். அதற்குள்ள சாதனங்கள் எங்கள் கையிலிருக்கிறது. ஒரு கல்லூரி ஏற்படுவதற்கு இரண்டு லட்சம் ரூபாய் தற்போது தயாராயிருக்கிறது. அத்தொகையை, தென் ஆற்காடு மணிலா மார்க்கெட்டிங் கமிட்டியிலிருந்து அவர்கள் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள். அந்த இரண்டு லட்சம் ரூபாயை ஏன் அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டு அங்கு ஒரு கல்லூரியை நிறுவக்கூடாது. நல்ல வசதியான இடமாயிருக்கும். தென் ஆற்காடு வட பகுதியில் உள்ள கஸ்பா விழுப்புரம் நகரில் ஒரு கல்லூரி அமைக்க நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன; இது விஷயமாக தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள பெரிய மனிதர்கள், ஸ்தல ஸ்தாபன மந்திரி ஸ்ரீ படையாச்சி அவர்கள் தலைமையில் ஒரு Ad hoc Committee அமைக்கப்பட்டது. அதன் மூலமாக இந்தக் கல்லூரியை விழுப்புரத்தில் நிறுவவேண்டுமென்று ஒரு ஏற்பாடுமாகியிருக்கிறது. இந்த ஏற்பாட்டை அரசாங்கம் சற்று கவனித்து அதற்கு ஆவன செய்து இந்தக் கல்லூரியை உடனடியாக அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

10-20 a.m. *SRI S. KANDASWAMY GOUNDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது என்னுடைய தொகுதியில் மாரண்ட கள்ளி என்னுமிடத்தில் ஜனகுமார நதி ஓடுகின்றது. அதில் பல குறைகள் இருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் எனக்கு வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் சொல்லியிருக்கிறேன். பல விண்ணப்பங்கள் எழுதிக்கொடுத்திருக்கிறேன். அதையெல்லாம் இதுவரையில் தட்டிக்கழித்துக்கொண்டு வந்திருப்பதாகத் தான் தெரிகிறது. சட்டசபை முடிகின்ற இந்த சமயத்திலாவது இந்த குறைகளை நிவர்த்தி செய்து தருவார்களா ? ஜனகுமார நதி அபிவிருத்தி காரியத்தை வருகிற இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். நான் சொல்லுகிறபடி சேர்த்துக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக மானியங்கள் வேண்டும் என்று அடிக்கடி இந்த சட்ட சபையில் சொல்லியும் தனியாக விண்ணப்பங்கள் எழுதியும் வந்திருக்கிறேன். இதைப்பற்றி கவனம் எடுத்திருப்பதாக எனக்கு மெமோ வந்திருக்கிறது. அதை உடனே விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு கொடுக்க அரசாங்கம் பல கடன்களை ஒதுக்கி வைத்திருக்கிறது. அந்தக் கடன்களை விவசாயிகள் அடைவதற்கு வழியில்லை. காரணம் அங்குள்ள அதிகாரிகள் இதை தட்டிக்கழித்து வருகிறார்கள். அதாவது கனம் மந்திரி மாணிக்கவேலு அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தார். அப்பொழுது அங்கு மழையில்லாத காரணத்தினால் பயிர்கள் எல்லாம் அழிந்து கரிந்து போயிருப்பதையும், குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதையும் அவர் நேரில் பார்த்தார். இந்த மாதிரியான கஷ்டங்களினால் கால் நடைகள் செத்துப்போய்விட்டது என்றும் அதற்கு கடன் உதவி செய்து தரவேண்டும் என்றும் அங்குள்ள மக்கள் மகஜர்கள் கொடுத்தார்கள். மாடுகளுக்கு தீனி கொடுக்கவேண்டும், அதற்காக கடன் உதவி செய்து தரவேண்டும் என்று அங்குள்ள மக்கள் கொடுத்த மகஜரின் பேரில் மந்திரி அவர்கள் கடன் உதவி கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டிருந்தார்கள். ஆனால் அந்த உத்தரவின் பிரகாரம் விவசாயிகளுக்கு கடன் கிடைக்கவில்லை. ஏனென்று கேட்டால் ஒரு ஊரில் நானூறு விண்ணப்பங்கள் வந்தால் இருபது பேர்களுக்குத்தான் கொடுக்கமுடியும் என்று அதிகாரிகள் கொடுத்து வருகிறார்கள். அதற்கு காரணம் என்னவென்றால் மந்திரி அவர்கள் வந்த மறுதினமே அங்கு மழை பெய்துவிட்டது. மழை பெய்து விட்டதால் உடனே க்ஷேமம் வந்துவிடாது. மழை பெய்ததால் அங்கு ஏதோ அங்கங்கேயுள்ள பயிர்கள், புல்கள் லேசாக பச்சை நிறத் தோடு தோன்றியிருந்தது. அதை கண்டுவிட்டு அதிகாரிகள் விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதற்கு மறுத்து வருகிறார்கள். ஆனால் என்னுடைய பக்கத்திலுள்ள தொகுதியில் கடன் வழங்குவதற்காக 4 லட்சம் ரூபா

24th December 1956] [Sri S. Kandaswamy Gounder]

ஒதுக்கியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதிக்கு ஒரு லட்சம் கூட கொடுக்கவில்லை. டிப்யூட்டி கலெக்டரிடம் போய் கேட்டாலும் விவசாயிகளுக்கு கடன் கிடைப்பதில்லை. விவசாயிகள் இந்தக் கடன் கிடைக்கும் என்று நம்பி அவர்களுடைய கால்நடைகளுக்கு தீனி போடுவதற்காக பிரத்தியேகமாக வேறு ஆள்களிடமிருந்து அதிக வட்டிக்கு கடன் வாங்கி தீனி கொடுத்து கொண்டு வருகிறார்கள். அந்த கடனைக்கூட தீர்ப்பதற்கு இன்று வழியில்லாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு கடன் உடனே கொடுக்கவேண்டும் என்று கேட்டால், வேறு பிரத்தியேகமாக கடனுக்கு விண்ணப்பங்கள் கொடுங்கள் என்று சொல்லுகிறார்கள். புதிதாக கடன் வாங்குவதற்கு விண்ணப்பம் கொடுத்தால் அது கிடைப்பதற்கு ஆறு, ஏழு மாதங்கள் தாமதம் ஆகிறது. இவ்விதம் நீட்டிக்கொண்டே போகிறார்கள். அரசாங்கம் சொல்வதை எல்லாம் அதிகாரிகள் உடனே செய்து கொடுத்துவிட்டால் பரவாயில்லை. ஆனால் அவர்கள் அப்படிச் செய்வதில்லை. அதற்கு பல காரணங்கள் இருக்கிறது. அந்த காரணங்களை சொன்னால் வீண் விவாதங்களைத்தான் சம்பாதித்துகொள்ளவேண்டியதாக இருக்கிறது. இதையெல்லாம் இந்த சட்ட சபையிலே பல முறை சொல்லி மாத்துபோய் விட்டது. ஆகவே அரசாங்கம் கொடுப்பதை நியாயமாக விவசாயிகளுக்கு கொடுக்கத் தவறினால், 'விவசாயிகளே இந்த நாட்டின் செல்வம், விவசாயிகளுக்கு வேண்டியே இதையெல்லாம் செய்கிறோம். அதற்காகத்தான் எல்லாச் சட்டங்களையும் கொண்டுவருகிறோம்' என்று சொல்லுவதெல்லாம் வெறும் பேச்சாகத்தான் முடியும். அரசாங்கத்தில் பல திட்டங்கள் இருக்கிறது. முதல் திட்டம் விவசாயம். அதைத்தான் முக்கியமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று அதிகாரிகளும் மந்திரிகளும் சொல்லுகிறார்கள். இதையெல்லாம் சொன்னாலும் விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்து அவர்களுக்கு ஆதரவு கொடுக்காவிட்டால் விவசாயம் இந்த நாட்டில் முன்னேறும், இந்த நாடு முன்னேறும், நாம் எல்லோரும் க்ஷேமமாக இருப்போம் என்று சொல்வதற்கில்லை. இரண்டாவது இந்த டெவலப்மெண்ட் ஸ்கீம் விஷயத்தில் பல குறைகள் எங்களுக்குத் தீர்க்கப்படவேண்டும் என்று ஒரு விண்ணப்பம் கனம் பக்தவத்சலம் அவர்களிடத்தில் கொடுத்தோம். ஒரு பகுதியில் மாத்திரம் இந்தத் திட்டத்தை ஏற்படுத்தினார்கள். அதாவது பாலக்கோடு என்ற இடத்தில் ஏற்படுத்தினார்கள். இப்போது அதை மேட்டூர் என்கிற இடத்திற்கு மாற்றிக்கொண்டு போய்விட்டார்கள். இப்போது ஏதோ நீர்பாசன திட்டம் போட்டிருக்கிறார்கள். இதையும் வேறு இடத்திற்கு மாற்றிவிடுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. போனாலும் போய்விடும். மாட்டுத்தீனி கடன்களுக்கு விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு எனது தொகுதியின் பக்கத்து தொகுதிக்கு நான்கு லட்சம் ரூபாய் அனுமதித்து இருக்கும் சமயத்தில் என்னுடைய தொகுதிக்கு அறுபது ஆயிரம் ரூபாயோ எழுபது ஆயிரம் ரூபாயோ தான் கொடுத்திருக்கிறார்கள். இப்படியாக தட்டிக்கழித்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாட்டு தீனி விஷயத்திற்கு கடன் கொடுக்க உடனடியாக உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு இவ்விதமான கடன்களை கொடுத்து உதவுவதின் மூலமாகத்தான் அரசாங்கம் நல்ல பெயர் வாங்கமுடியும். அது மாத்திரமல்ல, காங்கிரஸ் சர்க்காருக்கும் நல்ல பெயர் கிடைக்கும். அதன் மூலம் என் போன்றவர்கள் வோட்டு கேட்க முடியும். இன்னும் மக்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து கொடுக்கவேண்டுமே தவிர தட்டிகழிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கெல்லாம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மிக முக்கியமாக விவசாயிகளுடைய நீர்பாசன திட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். பல நீர்பாசன திட்டங்களையும் செய்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ளது தான் பாக்கி என்று நினைக்கிறேன். ஆதலால் கடைசியாக இதையும் செய்து தருவதற்கு நிதி மந்திரி கவனம் செலுத்துவாரா ? இதை கவனிப்பதற்கு வேண்டி கனம் மந்திரி அவர்கள் இதையும் குறித்துக்கொள்ள வேண்டுமென்று மன்றாடி வேண்டிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

10-30 a.m. SRI V. BALAKRISHNAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சபையின் ஐந்து ஆண்டு காலம் முடிவடையப் போகிறது. யார் யாருக்கெல்லாமோ வேண்டியதை செய்து கொடுத்தோம். ஆனால் இந்த சபையில் வேலே செய்யும் சாதாரண ஊழியர்களுக்கு வேண்டியதை செய்து கொடுக்க நாம் முன் வரவில்லே. பெரிய உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் இந்த காம்பௌண்டிற்குள்ளேயே வீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் காரியாலயத்தில் வேலே செய்யும் சாதாரண ஊழியர்களுக்கு இதற்குள்ளேயே இருக்கும் வீடுகளில் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் ஒன்றும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லே.

சாதாரணமாக பகலில் வேலே செய்தால் கூட அவர்களுக்குக் கஷ்டம் இல்லே. இரவு நேரங்களில் சில சமயங்களில் 9 அல்லது 10, 12 மணி வரையிலும் வேலே செய்துவிட்டு வீட்டிற்கு போய்விட்டு மறுபடியும் மறுநாள் காலே 8 அல்லது 8½ மணிக்கெல்லாம் ஆபீசுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட இந்த காரியாலய சிப்பந்திகளுக்கு இந்த எஸ்டேட்டிலேயே வீடுகள் கொடுப்பதற்கு முன் வரவேண்டும். அவர்களுக்கு ப்ரையாரிட்டி கொடுக்கவேண்டும். அப்படி அவர்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்கிறேன்.

மந்திரி சபையிலும் சரி, மந்திரி அவர்களும் சரி சட்ட சபை அங்கத்தினர்கள் தங்கும் விடுதி சட்டசபை அங்கத்தினர்களுக்காகவே அமைத்துக் கொடுத்து அவர்களே அதை பிரத்தியேகமாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கவர்னர் அவர்களும் சட்டசபை அங்கத்தினர்களே இங்குள்ள கட்டடங்களே உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கிண்டிக்குப் போய்விட்டார். அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கும்போதுகூட சபை அங்கத்தினர்களுக்கு பல அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு இடவசதி செய்து கொடுக்கும்போது ஒரு அறையில் நாலேந்து பேர்களே போட்டிருக்கிறார்கள். புளி அடைக்கிறுப்போல் அவர்களே அடைத்திருக்கிறார்கள். காரியாலய சிப்பந்திகளுக்கு எந்த விதமான சௌகர்யங்களும் செய்து கொடுக்காமல் இருப்பதுபோல் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் வசதிகள் செய்து கொடுக்கவில்லே. அங்கத்தினர்கள் சட்டசபைக்கு வருவதோடு அவர்கள் தங்களுடைய அறைகளில் சட்டங்களே படிக்கவேண்டிய வேலேகள் பல இருக்கின்றன. அப்படி அறைகளில் ஐந்தாறு பேர்களே போட்டிருப்பதால் பலருக்கு கஷ்டமாக இருக்கிறது. ஒருவர் வெளியில் போய் விட்டு இரவு 10 அல்லது 11 மணிக்கு வருவார். அந்த சமயத்தில் மற்றொருவர் தூங்கிக்கொண்டிருப்பார். வெளியே போனவர் வந்து கதவை "டக்கு டக்கு" என்று தட்டுவார். தூங்கிக்கொண்டிருக்கக்கூடியவர் எழுந்து அவருக்கு கதவு திறக்கவேண்டும். அப்படி திறக்கும்போது அவர் வெளியிலிருந்து வருகிற வரை வைதுகொண்டே தான் திறப்பார். ஒரு பக்கம் ஒருவர் படித்துக் கொண்டிருப்பார். இன்னொரு பக்கம் இன்னொருவர் தூங்கிக்கொண்டிருப்பார். படித்துக்கொண்டிருப்பவர் தூங்குகிறவருக்கு இடைஞ்சலாக இருக்கும். இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்கின்றன ஒரு அறையில் பலரைப் போடுவதால். இப்படிப்பட்ட கஷ்டம் எங்களுக்கு இருந்தாலும் பாதகமில்லே. ஆனால் சட்டசபை சிப்பந்திகளுக்கு சௌகர்யங்கள் செய்து கொடுப்பது அவசியமாக இருக்கிறது. ஆகவே காரியாலய சிப்பந்திகளுக்கும் அதிகப்படியான சலுகைகள் கொடுத்து இனிமேலாவது காலியாகிற வீடுகளே அவர்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்கார் சிப்பந்திகளுக்கு முதல் ஸ்தானம் கொடுத்து அவர்களுக்கு வீடுகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய நண்பர் ஒருவர் தனக்கு சுடு தண்ணீர் சரியாகக் கிடைக்கவில்லே என்றும், ஹீட்டர் சரியாக வேலே செய்யவில்லே என்றும் சொன்னார். ஆனால் நான் சொல்லுகிறது என்னவென்றால், புதிய ஹாஸ்டலில் இருக்கிறவருக்கு எப்பொழுதாவது சுடு தண்ணீர் கிடைப்பதாகத் தெரிய

வருகிறது; ஆனால் பழைய ஹாஸ்டலில் இருக்கிறவர்களுக்கு சுடு தண்ணீரே கிடையாது. நாங்களோ காலேயில் சீக்கிரமாக எழுந்து சட்ட சபைக்கு 9 மணிக்கு வந்துவிட வேண்டியதாக இருக்கிறது. எழுந்திருக்கும்போது குளிர் ஜாஸ்தியாக இருக்கிறது. போர்வையை எடுத்துவிட்டு வெளியே வரவே முடியவில்லே. பிறகு சுடு தண்ணீர் வேண்டும் என்று கேட்டால் அதை மேலே கொண்டுவருவதற்குள் அது குளிர்ந்து போய் பச்சைத் தண்ணியைப் போலாகிவிடுகிறது. அப்பொழுது பச்சைத் தண்ணீரும் சுடு தண்ணீரும் ஒன்றுகத்தான் இருக்கிறது. அங்கிருக்கிறவருக்கு சுடு தண்ணீர் வேண்டுமென்றால் காசு இல்லாமல் கிடைக்கிறது. ஆனால் நாங்கள் ஒரு வாளிக்கு மூன்று அணு கொடுத்து சுடு தண்ணீர் வாங்கிக் கொள்ளவேண்டியதாக இருக்கிறது. இதையும் கனம் மந்திரி அவர்கள் கவனித்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இனிமேல் நாங்கள் வருவோமோ இல்லேயோ அதைப்பற்றி சந்தேகமாக இருக்கிறது. அதனால் வருகிறவர்களுக்காவது சௌகர்யங்கள் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். எங்களேப்பற்றி ஒன்றும் இல்லாவிட்டால் கூட சர்க்கார் சிப்பந்திகள் எப்பொழுதும் இங்கேயே தான் இருப்பார்கள். அதனால் அவர்களுக்காக நன்மை செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு வீடுகள் காலியானவுடன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த சட்டசபை கோட்டைக்குப் போகும் சம்பந்தமாக சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இங்கு சட்டசபை கூடினால் பக்கத்திலுள்ள ஜனங்கள் வந்து பார்ப்பதற்கு சௌகர்யமாக இருக்கிறது. இது அலங்காரமாகவும் இருக்கிறது. இதை விட்டு பொது தேர்தலுக்குப் பிறகு சட்டசபை கோட்டைக்குப் கொண்டு போகப்போவதாகத் தெரியவருகிறது. ஏற்கனவே இதைப்பற்றி சொன்னபோது அங்கத்தினர்களேப் கேட்காமல் செய்ய மாட்டோம் என்று சொன்னார்கள். தேர்தலுக்குப் பிறகு சட்டசபை அங்கத்தினர்களுடைய எண்ணிக்கை குறையலாம். அப்பொழுது இதைப்பற்றி யோசிக்கலாம் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது அங்கத்தினர்கள் சொல்வதை கேட்காமல் அங்கத்தினர்கள் போனபின் மந்திரி சபை இருக்கும்போது இதைச் செய்து விடக்கூடாது. இதை எதிர்த்துச் சொல்வதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள். இங்கு சட்டசபையை வைத்துக் கொண்டால் அநேகம் ஜனங்கள் வந்து பார்க்கிறார்கள். இட வசதியும் அதிகமாக இருக்கிறது. நம்முடைய யஜமானர்களாகிய ஜனங்கள் அங்கு வருவதற்கு வசதி கிடையாது, இடமும் கிடையாது. அங்கு வருவதாக இருந்தால் அதற்கு என்று தனியாக பஸ் வேறு விட வேண்டியதாக இருக்கிறது. இங்கு வருவதாக இருந்தால் பஸ் நாலா பக்கங்களிலிருந்தும் வருகிறது, அவர்கள் வருவதற்கு வசதியாக இருக்கிறது. அங்குள்ள காலரியில் நூறு அல்லது இருநூறு பேர்கள் தான் உட்காரலாம். இங்கு அதிகப்படியாக உட்காருவதற்கு இடம் இருக்கிறது. எல்லாவற்றையும் உத்தேசித்து சட்டசபையை கோட்டைக்குக் கொண்டுபோகக்கூடாது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இப்பொழுது திட்டம் செய்யாவிட்டாலும் அதைப்பற்றி பொதுத் தேர்தல் நடந்தபின் வரப்போகும் அங்கத்தினர்களேம் கொண்டு முடிவு செய்யலாம் என்று தோன்றுகிறது. வரப்போகும் சட்டசபை மக்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டுக்கொண்டு முடிவு செய்வதற்கு விட்டுவிடலாம்.

நில வருமான மந்திரி அவர்கள் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதைப்பற்றிச் சொன்னார். விவசாயிகளுக்கு கடன் கொடுப்பது சம்பந்தமாக சொல்லும்போது டாம்டுபுட் கொள்கையை அனுசரிக்கும்போது விவசாயிகளுக்கு எந்த விதமான இடஞ்சலும் ஏற்படக்கூடாது. முதலில் டாம்டுபுட் என்ன என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். ஒருவன் நூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தால் அவன் வட்டியே நூறு ரூபாய் கொடுத்துவிட்டால் அப்படி கடன் வாங்கியவன் அதற்கு மேற்கொண்டு வட்டி செலுத்த வேண்டிய அவசியம் இல்லே என்ற கொள்கைதான் டாம்டுபுட் என்று

சொல்வது. இந்தப் பழக்கம் புதுக்கோட்டையில் இருந்தது. அப்படிப்பட்ட முறையில் இப்பொழுதும் நடைபெறவேண்டும். சென்னை சம்பந்தப்பட்டவரையில் அப்படிப்பட்ட சட்டம் கிடையாது. நான் இதைப்பற்றி கனம் மந்திரி அவர்களுக்குச் சொல்லும்போது கனம் என். ரத்ன கௌண்டர் அவர்கள் இதை கனம் மந்திரி அவர்கள் கேட்கவிடாமல் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். டாம்டுபட் சட்டம் ஓரளவு விவசாயச் சட்டத்தில் இருக்கிறதேயொழிய அதிலுள்ள சௌகர்யங்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதாக இல்லை. நூறு ரூபாய் கடன் வாங்கினால் கடன் வாங்கியவன் எழுபது ரூபாய் வட்டி கொடுத்த பிறகு மறுபடியும் டாம்டுபட் கொள்கைப்படி அவன் மறுபடியும் வட்டி நூறு ரூபாய் வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்வதால் கடன் கொடுத்தவன் நூறும், நூறும் எழுபதுமாக இருநூற்றெழுபது ரூபாய் வாங்கிக் கொள்வதாக ஏற்படுகிறது. இப்படி இருக்கக்கூடாது. புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்தபோது அங்கே இருந்தபடி இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நூறு ரூபாய் கடனுக்கு வட்டி நூறு ரூபாய்க்கு மேல் போகக்கூடாது. இப்பொழுது சோஷலிச சமுதாய அமைப்பில் எல்லாம் நடைபெறவேண்டும் என்று சொல்லும்பொழுது டாம்டுபட் கொள்கையை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தக் கொள்கை பரிபூரணமாக விவசாயிகள் அனுபவிக்கும்படியாக இருக்கவேண்டும். அதற்குத் தக்கபடி துரிதமாக ஒரு மசோதாவைக் கொண்டுவரவேண்டும் என்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற கூட்டத்தில் கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றி குறிப்பிட்டேன். கிராம உத்தியோகஸ்தர்கள் சர்க்கார் வேலைகளைப் பார்க்கும்போது அவர்களுக்கு வேண்டிய பேபர்கள், மை, பேனா முதலியவைகள் சப்ளை செய்வது இல்லை என்று புகார் இருப்பதாகவும் அதை கவனித்து அவர்களுக்கு எல்லாம் சப்ளை செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். அதற்கு கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது அப்படி சப்ளை பண்ணாமல் இல்லை. சப்ளை செய்து கொண்டு தான் இருக்கிறோம் என்று பதில் சொன்னார். ஆனால் பின்னடி விசாரித்தபோது அப்படி சப்ளை செய்யப்படவில்லை என்றுதான் கிராம உத்தியோகஸ்தர்கள் சொன்னார்கள். இதைப்பற்றி பக்கத்திலுள்ள தாலூகா ஆபிஸ்களில் போய் விசாரித்தால் தெரியவரும். ஆனால் கனம் மந்திரி அவர்கள் சொன்னால் அதை நம்ப வேண்டியது தான். ஏனென்றால் அவர் சொல்வது எல்லாம் உண்மையாகத்தான் இருக்கும். நல்ல மனப்பான்மையுள்ளவர் இருந்தாலும் கிராம உத்தியோகஸ்தர்கள் சொன்னதின்பேரில் தான் மறுபடியும் அதைப்பற்றி சொல்லுகிறேன். அவர்கள் தான் இப்படியும் சொன்னார்கள். அதாவது பக்கத்திலுள்ள திருவள்ளூர், சைதாப்பேட்டை முதலிய இடங்களில் அப்படி சப்ளை செய்கிறார்களா என்று விசாரிக்கச் சொல்லவும். அப்படி விசாரித்தால் நிலைமை நன்றாகத் தெரியவரும். ரிஜிஸ்தர்களைப் பார்த்தால் தெரியும் என்று அவர்கள் தான் இப்படி விசாரிக்கச் சொன்னார்கள். அதையே தான் நானும் சொல்லுகிறேன். அங்குள்ள ரிஜிஸ்தர்களை வாங்கிப் பார்த்தால் அவர்களுக்கு சப்ளை செய்வதும் செய்யாமல் இருப்பதும் நன்றாகத் தெரியும். வெள்ளைக்கார ராஜ்யத்தில் அவர்களுக்கு இப்படி சப்ளை செய்து வந்தார்கள் என்றும் காங்கிரஸ் சர்க்கார் வந்த பிறகு அப்படி சப்ளை செய்வது கிடையாது என்றும் தாங்களாகவே தங்களுடைய சொந்தச் செலவில் எல்லாச் சாமான்களையும் வாங்கிக் கொள்வதாக அவர்கள் புகார் செய்கிறார்கள். இதைப்பற்றி சமீபத்தில் அவர்கள் மாநாடு நடத்தியபோதும் சொல்லியிருப்பதாகத் தெரியவருகிறது. ஆகவே பக்கத்திலுள்ள தாலூகா ஆபீஸ்களிலுள்ள ரிஜிஸ்தர்களை வாங்கிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அச்சு ரசீதுகள் கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னேன். கிராமங்களில் விவசாயிகள் பணம் செலுத்தினால் இப்பொழுது அச்சு ரசீதுகள் கொடுப்பது இல்லை. சமீபத்தில்கூட திருநெல்வேலியில் ஒரு கேஸ் நடந்திருக்கிறது. இது சம்பந்தமான கேஸ் அது. அச்சு ரசீது கொடுக்காமல் இருப்பதால் எவ்வளவு ஆபத்து வருகிறது என்பது அந்தக் கேசிலிருந்து

நன்றாகத் தெரியவரும். திருநெல்வேலியில் ஒரு கிராம முன்சீப் விவசாயிகளிடமிருந்து கடன் பணம் வாங்கி அதைச் சர்க்காருக்குச் செலுத்தாமல் இருந்ததால் அவர் பேரில் கேஸ் தொடரப்பட்டிருக்கிறது. அவர் அந்தப் பணத்தைக் கையாடல் செய்திருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அவர்பேரில் குற்றம் சாட்டப்பட்டு அவரை தண்டித்து ஜெயிலுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அங்கு அச்சு ரசீது கொடுக்காமல் இருந்ததுதான். இதை அனுபவத்தில் எடுத்துக்கொண்டு இப்பொழுது சர்க்கார் ஒரு புதிய உத்திரவைப் போட்டிருக்கிறார்கள். அதாவது 1956-ம் ஆண்டு செப்டெம்பர் 28-ந் தேதியில் இந்த ஆர்டர் போடப்பட்டது.

இந்த உத்தரவின் நம்பர் 121056. இது 1956-ம் வருஷம் ஆகஸ்டு 10-41 a.m.
மாதம் 28-ந்தேதி பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம், இனிமேல் கிராமமுன்சீப் விவசாயக் கடனை வசூல் செய்தால், அவ்வாறு வசூல் செய்த கணக்கை அன்றாடம் எழுதி அந்தக் குறிப்பை கர்ணத்திடம் ஒப்படைக்க வேண்டும். மணியக்காரர் அந்தப் பணத்தை செலுத்தத் தவறி அதை கையாடினார் என்று நிரூபிக்கப்பட்டால் அந்தக் குற்றத்திற்காக மணியக்காரரும், கர்ணமும் ஜெயிலுக்குப் போகவேண்டும் என்று அந்த உத்திரவில் கண்டிருக்கிறது. இது எவ்வளவு தூரம் நியாயம் என்று கேட்கிறேன். யாரிடத்தில் அந்தப் பணம் செலுத்தப்படுகிறதோ அதைப் பெற்றுக் கொண்டவர்களைத்தான் அந்தப் பணத்திற்கு ஜவாப்தாரி ஆக்கவேண்டும். அநேக கிராமங்களில் மணியக்காரருக்கும், கர்ணத்திற்கும் ஒற்றுமை இல்லாததால் மணியக்காரர் கர்ணத்தையும், கர்ணம் மணியக்காரரையும் ஜெயிலுக்கு அனுப்புவதற்கு முயற்சி செய்வார்கள். கடைசியில் இது ஒரு ஆபத்தான நிலைக்குக் கொண்டு போய்விடும் என்பதை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சமீபத்தில் N.G.O.-க்களுக்கு அவர்களுடைய பஞ்சப்படியில் ஐந்து ரூபாய் உயர்வு கொடுக்கப்பட்டது. ஆனால் மானிட வர்க்கத்திற்கே அன்புடன் அரும்பணி செய்யும் நர்சுகளுக்கு இந்தப் பணம் கொடுக்கப்படவில்லை. ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் U.D., L.D. கிளார்க்குகள் N.G.O.வினர் என்று கருதப்படுகின்றனர். நர்சுகளை மட்டும் ஏன் ஒதுக்கவேண்டுமென்று கனம் மந்திரி அவர்களைக் கேட்கிறேன். இதற்கு முன்பு இருந்த மந்திரி நர்சுகளின்பேரில் பற்றுதல் வைத்திருந்தார். (சிரிப்பு.) இப்பொழுது அவருக்கு வாரிசாக வந்திருக்கும் புதிய சுகாதார மந்திரி இன்னும் அதிகமாகப் பற்றுதல் காண்பிக்கவேண்டுமென்று நர்சுகளின் சார்பாக நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

புதுக்கோட்டையில் ராஜா கல்லூரியும், ராணி கல்லூரியும் இருக்கின்றன. நீண்ட காலமாக அங்கு தலைமை ஆசிரியர் ஒருவரையும் நியமிக்காமல் இருக்கிறார்கள். இதனால் பையன்களிடத்தில் கட்டுப்பாடு இல்லாததோடு ஆசிரியர்களுக்குள்ளேயும் சண்டை சச்சரவுகள் இருந்துகொண்டிருக்கின்றன. புதுக்கோட்டையில் எவ்வளவு அழகாக, கட்டுப்பாடுடனும், திறமையுடனும், நிர்வாகம் நடந்துவந்திருக்கிறது என்பது அந்த நிர்வாகத்தை நடத்தியவனான எனக்கு நன்றாகத் தெரியும். நிர்வாகத்திலுள்ள குறைகளை நாங்கள் அப்பொழுதைக்கப்போது கவனித்து வந்தோம். சுமார் இரண்டரை ஆண்டு காலமாக அந்தக் கல்லூரியில் தலைமை ஆசிரியர் இல்லை என்றால் எப்படி நிர்வாகம் நடைபெறுமென்று கேட்க ஆசைப்படுகிறேன்.

சென்ற ஐந்தாண்டு காலமாக தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஏராளமான பணம் விரயமாக்கப்படுகிறது. இப்பொழுது நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கெல்லாம் செலவிடப்படும் பணம் ஒழுங்காக செலவழிக்கப்படுகிறதா என்பதை பரிசீலிக்க ஒரு High Level கமிட்டி ஏற்படுத்தினால் அதன் உண்மை விளங்கும். காங்கிரஸ்காரர்களைக் கேட்டால் பணம் ஒழுங்காகத்தான் செலவழிக்கப்படுகிறது என்று சொல்லுவார்கள். எதிர்க்கட்சிக்காரர்களை கேட்டால் பணம் சரியாய் செலவிடப்படவில்லை என்று சொல்லுவார்கள். ஆகவே ஒரு ஹைகோர்ட்டு நீதிபதி retire-ஆன ஒரு I.C.S. அதிகாரி, பிரதம காரியதரிசி, அல்லது டெவலப்மெண்ட் கமிஷனர் ஆக

[Sri V. Balakrishnan] [24th December 1956

மூவர் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் பணம் ஒழுங்காக செலவு செய்யப்படுகிறதா என்பதை விசாரித்து ஒரு அறிக்கை விட வேண்டும். இப்பொழுது "சுண்டக்காய் கால் பணம் சுமைகூலி முக்கால் பணம்" என்ற ரீதியில் நாம் பணம் செலவாகிறது. இந்தத் திட்டங்களின் பெயரால், ஆளும் கட்சியை சேர்ந்தவர்களுக்கு எவ்வளவு சலுகைகள் கொடுக்க வேண்டுமோ, அவ்வளவு சலுகைகளும் கொடுக்கப்பட்டுவருகின்றன. கனம் நிதி அமைச்சரவர்கள் சில அரிய கருத்துகளை சொன்னார்கள். அவைகள் பொன் எழுத்தில் பொறிக்கப்பட வேண்டியவை. அரசாங்கம் பாரபட்சம் இல்லாமல் நடந்தால்தான் ஜனநாயகம் தழைத்தோங்கி மக்கள் சுபிட்சமாக வாழ முடியும். ஆகவே "Community Projects" நிறைவேற்றப்படும் இடங்களில் அந்தத் திட்டங்களுக்காக செலவாகும் பணம் சரியாக செலவிடப்படுகிறதா என்று பரிசிலனை செய்ய கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: Only one hour has been allotted for this business but the hon. Member has already taken more than fifteen minutes.

* **SRI P. CHELLATHURAI**: கனம் துணைத் தலைவர் அவர்களே, சபை முன்பு விவாதத்திலிருக்கும் மானியங்களை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். நாடு விடுதலை அடைந்தபிறகு சுதந்திர பூமியில் மடியப் போகிறோம் என்ற ஆனந்தம் ஒரு புறம் இருக்க, அண்மையிலே நிதி மந்திரி அவர்கள் அறிவித்தபடி விரைவிலேயே தமிழ்த் தாய் அரியணையில் அமரப் போகிறாள் என்ற செய்தி உலகில் உள்ள தமிழ்ப் பெரு மக்களுக்குப் பேரானந்தத்தை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. நமது அமைச்சர் குழுவினர் நல்ல எண்ணத்துடன் நமது மக்களுக்கு அதிக நன்மைகளை செய்துவருகிறார்கள் என்பதைப்பற்றி யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால், 'கூடிய சீக்கிரம் பொதுத் தேர்தல் வரப்போகிறது என்ற காரணத்தினால், அரசாங்கம் மக்களுக்கு அறவே ஒன்றும் செய்யவில்லை என்று சிலர் எடுத்துச் சொல்லுவதை மிகவும் நன்றிகெட்ட செயல் என்றுதான் சொல்ல வேண்டும். அரசாங்க இயந்திரத்தை எவ்வளவு தாம் முடுக்கிவிட்டபோதிலும், ஒரு சில அதிகாரிகள் ஒத்துழைக்க மறுப்பதினால் குறித்த காலத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நன்மையை செய்ய முடியாமல் போகிறது என்பதை மிகவும் வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது.

"பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்பதற்கொப்ப, ராமநாதபுரம் ஜில்லா மிகவும் பிற்பட்ட பகுதியாகவே இருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளத்திற்கு முன்பு தொடர்ச்சியாக காலா காலத்தில் அளவோடு மழை பெய்யாததினால் பலமுறை பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் குழுவினர் நன்கு அறிவார்கள். பஞ்சம் ஏற்படும் காலங்களில் எல்லாம் அடுத்து இருக்கிற தஞ்சை போன்ற இடங்களுக்குச் சென்று தஞ்சம் புகுவதைத் தவிர, வேறு எந்த விதமான நீர்ப்பாசன உதவியும் இந்த ஜில்லா மக்களுக்கு இடைக்கவில்லை. உணவு உற்பத்தியை பெருக்குவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம். ராமநாதபுரம் ஜில்லாவில் நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்கு எந்த ஜீவ நதியும் அங்கு ஓடவில்லை. மலை நாடுகளில் ஓடுகின்ற நதிகளின் தண்ணீர், அந்த நாட்டு மக்களுக்கும் பிரயோசனம் இல்லாத வகையில் வீணாகக் கடலில் போய் விழுகிறது. ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காக அப்படி வீணாகப் போகும் தண்ணீரை நாம் உபயோகிக்க கூடாது என்று வேண்டுமென்றே பிடிவாதமாக கேரள அரசாங்கம் மறுப்பது நமது அரசாங்கத்திற்கு தெரியாத விஷயமல்ல. அரசியல் நிர்ணய சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து, அம்மாதிரி வீணாகப் போகும் தண்ணீரை ராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற பற்றாக்குறை ஜில்லாக்களுக்கு பிரயோசனமாகும் வகையில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்போவதாக அமைச்சர் குழுவிலேயே ஒரு சிலர் அறிவித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி உடனடியாக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

24th December 1956] [Sri P. Chellathurai]

இராமநாதபுரம் ஜில்லாவில் திருவாடானை தாலூகாவில் நீர் ஊற்றுக்கள் அதிகமாக உள்ள பிராந்தியங்களும்கூட குறைவு. போதிய அளவு தண்ணீர் கிடைப்பதில்லை. விவசாயத்திற்கு வேண்டிய நல்ல தண்ணீரும் கிடைப்பதில்லை. இந்த வகையிலே அரசாங்கத்தின் எந்த விதமான முயற்சியும் அங்கு பலன் கொடுப்பது இல்லை. ஆகவே, மின்சார வசதியை மிக்க விரைவிலே அந்தத் தாலூகா மக்களுக்குக் கிடைக்கச் செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன். 10-51 a.m.

அரசாங்கம் மிக நல்ல காரியங்களெல்லாம், குறிப்பாக திருவாடானை தாலூகாவிலும் செய்திருக்கிறது என்பதை நான் மறுக்க இல்லை. தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தை இரண்டு வட்டங்களாகப் பிரித்து அங்கு அமுல் நடத்தப்படுகிறது, அரசாங்கத்தின் உத்தரவுபடி, தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத் திட்டம், ஸ்தல அபிவிருத்தித் திட்டம் அமுலில் இருக்கிற பகுதிகளில் மின்சார வசதி கொடுப்பதிலே முதல் சலுகை காட்டவேண்டுமென்று குறித்திருக்கிறார்கள் என்ற போதிலுங்கூட, திருவாடானைத் தாலூகாவிலும் அதை அடுத்துள்ள தேசிய விஸ்தரிப்புத் திட்டம் அமுல் நடந்துகொண்டிருக்கிற தாலூகாக்களுக்கும் இன்னும் மின்சார வசதி கொடுக்கப்படவில்லை. அதன் காரணத்தை அரசாங்கம் கண்டுபிடித்து, விரைந்து, நீர்ப்பாசன வசதிக்காக முதல் சலுகை கொடுத்து உடனடியாக மின்சார வசதி கொடுக்கும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய விஸ்தரிப்புத் திட்டம் அமுலில் இருக்கும் இடங்களிலே கையாள வேண்டிய எனது அபிப்பிராயம் ஒன்று. அன்பினாலே, மக்களை வசப்படுத்தி ஒத்துழைக்கும்படிச் செய்யவேண்டும் என்பது எளிதல்ல என்பதே. தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களுக்கு ஆகும் செலவில் அரசாங்கம் கொடுக்கும் பாதித் தொகையுடன் மக்கள் மற்றொரு பாதிப் பகுதியைக் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இராமநாதபுரம் ஜில்லாவின் கீழ் பகுதியானது பொருளாதார வகையிலே . . .

* **SRI S. JAYARAMA REDDIAR**: உதவி சபாநாயகர் அவர்களே, நண்பர் திரு செல்லதுரை அவர்கள், ஒரு சமயத்தில் திருவாடானை தாலூகாவில் நீர் ஊற்றுக்கள் சரியாக இல்லை என்று சொல்கிறார்கள். அதே சமயத்தில் தண்ணீர் இறைப்பதற்கு மின்சாரம் வேண்டுமென்கிறார். கெட்ட நீரை நல்ல நீர் ஆக்குவதற்கு மின்சாரம் பயன்படாது. ஆகையால், பிற்போக்கு தாலூகாவை அபிவிருத்தி செய்ய வேறு மாற்று யோசனைகள் சொல்ல வேண்டுகிறேன்.

SRI P. CHELLATHURAI: மின்சாரம் அங்கு விரைவில் கிடைக்கும்படி துரிதப்படுத்துவது சர்க்காரின் நோக்கமாக இருத்தல் வேண்டும். அங்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்கு தக்க ஊற்றுக்கள் இல்லாவிட்டாலும்கூட, அரசாங்கத்தின் திட்டப்படி தேசிய விஸ்தரிப்புத் திட்டம் அமுல் நடக்கும் காரணத்தால் குடிசைத் தொழிலுக்கு மிக்க அத்தியாவசியம் மின்சாரம். ஆகையால், விரைந்து கொடுக்கப்படுமானால், வறுமையிலே வாடிக் கிடக்கும் மக்களுக்கு தக்க சமயத்தில் பக்குவமான உதவி செய்ததாக ஆகும் என்பதுதான் எனது தாழ்மையான கருத்து.

தேசிய விஸ்தரிப்புத் திட்டத்திலே மக்களின் பங்கைக் கொடுக்க இயலாத அவ்வளவு மோசமான நிலையில் எங்கள் தாலூகா மக்கள் வறுமைப்பட்டுக் கிடக்கிறார்கள். பணமாக இல்லாவிட்டாலுங்கூட உழைப்பாகவாவது கொடுத்தல் வேண்டுமென்ற வகையிலே திட்டம் இருக்கிறது. உழைப்பாகவும் அவர்கள் கொடுக்க வசதியற்ற நிலைமையில் இருக்கிறார்கள். அடுத்தடுத்து பஞ்சம் ஏற்படுவதால் அவர்களுக்கு நிரந்தர சொத்தாக இருக்கும் உழைப்பை மற்றவர்களுடைய நலத்துக்காக கொடுத்து, அதன்மூலம் கிடைக்கும் வருவாயைக்கொண்டு பிழைப்பு நடத்த வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கும் காரணத்தால் உழைப்பையாவது கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் போட்டிருக்கும் உத்தரவு சரியல்ல. ஆகையால், இந்த தாலூகாவிற்கும் இதுபோன்ற பிற்போக்கு தாலூகாவி

[Sri P. Chellathurai] [24th December 1956]

ளுள்ள மக்களுக்கு விதி விலக்கு கொடுத்து அரசாங்கத்தின் முழுச் செல விலே பல்வேறு திட்டங்களையும் அங்கு ஏற்படுத்த வேண்டுமென்பது என் னுடைய கோரிக்கை.

அடுத்தபடியாக, அரசாங்கம் போகின்ற வேகத்திற்கு அதிகாரிகளில் சிலரும், மக்களில் சிலரும் ஒத்துழைக்க மறுக்கிறார்கள், என்று நான் சொன்னேன். அரசாங்கத்தின் நல்ல எண்ணங்களுக்கேற்ப திட்டங்களெல் லாம் சிறந்த முறையில் நடைபெற வேண்டுமானால், இன்னும் முழு மூச் சோடு வேலை செய்ய போதிய ஊதியம் கொடுத்து அரசாங்க இயந்திரம் முடுக்கிவிடப்படவேண்டும் என்பது என்னுடைய எண்ணம். உதாரணமாகக் கூறவேண்டுமானால், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக திருவா டானை தாலுகா கச்சேரி நிலையத்திலே பந்தோபஸ்தான இடத்திலே வைக் கப்பட்டிருந்த ஒரு சுழல் துப்பாக்கி (ரிவால்வர்) மறைந்து போயிற்று. அதைக் கண்டு பிடிப்பதற்கு திறமையுள்ள அதிகாரி நியமனம் செய்யப் பட்டார். நியமிக்கப்பட்டவர் திறமை குறைவானவர் அல்ல. மிக்க திறமை சாலிதான். இருந்தாலும், தாலுகாவில் பெரிய மனிதர் ஒருவர் ஈடுபட் டிருக்கிறார் என்ற காரணத்தாலே இன்று வரைக்கும் எந்தவிதமான துப்பும் துலக்கப்படவில்லை, என்பதைக் காண்கிறோம். இது சம்பந்தமாக சென்ற ஆண்டில் கனம் நிதி அமைச்சரவர்களிடத்தில் இதுபற்றி பேசிக் கொண்டிருந்தேன். "விளக்கம் எழுதிக் கொடுங்கள் வேண்டுவன செய் கிறேன்" என்று சொன்னார்கள். அன்றே எழுதிக் கொடுத்தேன். ஒரு ஆண்டு கழிந்த பிறகும்கூட சுழல் துப்பாக்கி கண்டுபிடிக்கப்படவில்லை என்ப தைக் கவனிக்கும்போது பெரிதும் வருந்தப்படாமல் இருக்க முடியவில்லை. ஆகவே, இதுபோன்ற காரியங்களெல்லாம் இவ்விதம் நடக்குமானால், பிற கட்சிகள் எளனமாகப் பேசுவதற்கு இடம் உண்டாய்விடும் என்று தெரிவித் துக் கொள்கின்றேன்.

ஒரு திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னும், திட்டத்திற்கு சர்க்காரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமென்று விதி இருக்கிறது. சர்க்காருக்கு அனுப்பி இரண்டு ஆண்டுக்குப் பிறகும் கூட அந்த அங்கீகாரம் கிடைக்காத நிலைமையில் திட்டம் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறது. அரசாங்க நிதி வருஷம் முடிவதற்கு ஓர் இரு மாதங்களுக்கு முன்பு அங்கீகாரம் வருவதால், திட்டத்தை எடுத்துக் கொள்ள இயலாமல பணம் செலவு செய்யப்பட முடியாமல் போய் விடுகிறது. அங்கீகாரம் வந்த பிறகு மழை பெய்து, வேலை செய்வதற்கு ஆள் கிடைக்காத காரணத்தினால் திட்டம் நிறைவேற்றப்படுவதில்லை. குறிப்பிட்ட திட்டத்திற்கு ஒதுக்கிய பணத் தைச் செலவழிக்க முடியாமல் இப்படி கடைசி நேரத்தில் அங்கீகாரம் வருவதால், எஞ்சி இருக்கும் பணத்தை வேறு ஜில்லாக்களில் நடை பெறும் திட்டத்திற்கு மாற்றிவிடுகிறார்கள். ஆகையால், அந்தத் திட்டத் திற்கு அங்கீகாரம் கொடுக்காமல் காலம் கடந்து போனது அரசாங்கத்தின் குற்றமே யொழிய, அங்கு இருக்கும் மக்களுடையவோ, அதிகாரிகளு டையவோ குற்றம் அல்ல. இதுபோன்ற காரியத்தில் அரசாங்கம் நிர் வாக இயந்திரத்தை முடுக்கிவிட முயற்சி எடுக்கவேண்டுமென்று தாழ்ந்த விண்ணப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : உதவி சபாநாயகர் அவர்

10-58 a.m. களே, இந்த விவாதத்திலே பதில் சொல்லக்கூடிய விஷயங்கள் அதிகமாக இல்லை என்பதை அங்கத்தினர்கள் உணருவார்கள். ஏனென்றால், இன் றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய விஷயங்கள், இந்த சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே கண்டிருக்கக்கூடிய விஷயங்கள் என்னவோ அவைகளைப்பற்றித்தான் இந்த விவாதத்திலே குறிப்பிட முடியும். இருந்தாலும், அதிலே சொல்லக்கூடிய விஷயங்கள் அதிகமாக இல்லாததால், பல்வேறு முக்கியமான விஷயங்களைப் பற்றியும் கனம் அங்கத்தினர்கள் இங்கு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ கே. டி. ராஜு அவர்கள் பேசும்போது, அலு மினியம் தொழிற்சாலையை நிறுவுவதைப்பற்றி முக்கியமாக குறிப்பிட்டார் கள். சேலத்திலே அலுமினியம் தொழிற் சாலையை ஏற்படுத்துவதற்கு

24th December 1956] [Sri C. Subramaniam]

என்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன, இப்பொழுது அந்த நிலையில் இருக்கிறது என்று கனம் அங்கத்தினர்கள் அறிய ஆவலாக இருப்பதாகச் சொன்னார்கள். நேற்றையதினம் மத்திய அரசாங்க அமைச்சர் ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்கள் பத்திரிகை நிருபர்களிடத்திலே பேசும்போது இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அலுமினியத்தைப் பொறுத்த மட்டில், சேலத்தில் உடனடியாக இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆனால், இரும்பு உருக்குத் தொழிற்சாலையை நிறுவுவது என்பது பின்னால் யோசித்துச் செய்யவேண்டிய விஷயம். ஏனென்றால், அதற்குவேண்டிய மூலப் பொருளில் முக்கியமான நிலக்கரி எந்த முறையிலே அமைகிறது என்பதைத் தெரிந்துகொண்டு, அதுபற்றி முடிவு செய்யவேண்டுமென்று அவர் அறிவித்திருக்கிறார்.

அலுமினியத் தொழிற்சாலை மட்டுமல்ல, இரும்பு உருக்குத் தொழிற் சாலை மட்டுமல்ல, நம்முடைய தமிழ் நாட்டில் இன்னும் என்ன என்ன தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியுமோ, அந்தத் தொழிற்சாலைகளை எல் லாம் அதிகமாக ஏற்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளும் சென்னை சர்க் கார் எடுத்து வருகிறது ; மத்திய சர்க்காரும் எடுத்து வருகிறது என்பதை எல்லா அங்கத்தினர்களுக்கும் நான் வற்புறுத்திச் சொல்ல விரும்பு கிறேன். ஆகையால், தமிழ்நாடு ஏதோ புறக்கணிக்கப்படுகிறது என்கிற வாதம், தேர்தல் வாதமாக வேண்டுமானால் இருக்கலாமே யொழிய வேறு ஒன்றுமல்ல. இன்றைக்கு உண்மையிலேயே நமக்கு இருக்கும் வசதிகளை வைத்துக்கொண்டு, எந்த எந்த தொழிற்சாலைகளை இங்கு ஏற்படுத்த முடியுமோ அந்தத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு எல்லா முயற்சி களும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்று என்னவென்றால், பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு அடிப்படை யாக இருக்கக்கூடியது நிலக்கரி. அதை இப்பொழுது பூமியிலிருந்து வெட்டி எடுப்பதற்குத் திட்டம் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டம் எவ் வளவு தூரம் வெற்றி பெறும், கிடைக்கும் நிலக்கரியின் தன்மைக்கேற்ப எந்த தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முடியும் என்பதைப்பற்றிய பரீட்சை முடிவடைய வேண்டும். அந்தப் பரீட்சையின் முடிவு என்னவோ அதை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் மற்ற தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும். நாம் ஏதோ பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவேண்டு மென்று சொன்னாலுங்கூட, இந்த அடிப்படையான காரியங்கள் முடியும் போதுதான் அந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் நாம் ஏற்படுத்த முடி யும். அப்படிச் செய்வதைவிட்டு, நிலக்கரி இல்லாமலேயே தொழிற் சாலையை வைத்துவிட வேண்டுமென்று சொன்னால், இயந்திரங்களை வேண்டு மானால் வாங்கி அடுக்கி வைத்துவிடலாம் ; அதற்காக கட்டடங்கள்கூட கட்டி விடலாம் ; ஆனால், உபயோகப்படுத்த வேண்டிய மூலப் பொருள்கள் கிடைக்கும்போதுதான் தொழிற்சாலையை நல்ல முறையில் அமைக்கமுடியும் என்பதை கனம் அங்கத்தினர்களும் உணர்வர். ஏதோ தேர்தல் வாதத் திற்காக அவர்கள் இப்பொழுது சொன்னாலுங்கூட, இந்த அடிப்படையான உண்மைகளை அவர்கள் உணர்ந்தே இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். பரம்பிகுளத் திட்டத்தைப்பற்றி சொன்னார்கள். மாற்றி அமைக்கப்பட்ட ஒரு திட்டத்தின்படி கேரள ராஜ்யத்திற்குள் இந்த அணையை கட்டாமல், நமது ராஜ்ய எல்லைக்குள்ளேயே கட்டமுடியும் என்பது பற்றியும் குறிப்பிட்டார்கள். இவைகளெல்லாம் இப்பொழுது பரிசீலனையில் இருக்கக்கூடிய விஷயங்கள். பரிசீலனை முடிந்த பிற்பாடுதான் எந்த இடத்தில் இந்த அணையை கட்ட முடியும், எந்த விதத்தில் இந்தத் திட்டம் ஏற்படுமென்று இறுதி முடிவு செய்ய முடியும். அவைகளுக்கெல்லாம் மேலாக, இப்பொழுது Zonal கவுன்சில்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். Zonal கவுன்சிலில் ராஜ்யங் களுக்குள்ளேயே இதுபற்றி விவாதித்து இருக்கக்கூடிய இயற்கை வசதியை, தண்ணீர் வசதியை எப்படி நல்ல முறையில் உபயோகப்படுத்த முடியும் என்ற ஒரு முடிவுக்கு வரலாம். பரம்பிகுளத் திட்டம் எங்கே அமைப்பது,

[Sri C. Subramaniam] [24th December 1956

எந்த அளவுக்கு அமைப்பது, தண்ணீரை எப்படி பிரயோஜனகரமான முறையில் உபயோகப்படுத்துவது என்பது பற்றி அப்பொழுது ஒரு முடிவு ஏற்படும் என்பது என்னுடைய அபிப்பிராயம். பரம்பிகுளத் திட்டத்தில் இரண்டு ராஜ்யங்களையும் சேர்ந்த ஆறுகள் சம்பந்தப்பட்டிருப்பதால், அதற்குத் தகுந்தபடி இப்பொழுது மத்திய அரசாங்கம் ஒரு சட்டம் இயற்றி இருக்கிறார்கள். இரண்டு ராஜ்யங்களிலும் இருக்கக்கூடிய வசதிகளை அனுசரித்து எந்த முறையிலே தண்ணீரை உபயோகப்படுத்தவேண்டுமென்று முடிவு சொல்லக்கூடிய ஒரு அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு நம்மிடையே ஏதாவது தகராறுகள் இருந்தால் அதை முடிவு செய்து கொள்ளலாம். இரு ராஜ்யங்களும் ஒன்றுபட்டு, மன ஒற்றுமையுடன் இயற்கை வசதிகளை நல்ல முறையிலே உபயோகப்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால் நம்முடைய சென்னை ராஜ்யமும் முன்னேற முடியும், கேரள ராஜ்யமும் முன்னேற முடியும் என்பதில் சந்தேகமில்லை. நல்ல ஒத்துழைப்பு மனப்பான்மையுடன் ஒற்றுமை மனோபாவத்துடன் இரண்டு ராஜ்யங்களும் முன்னேற வேண்டுமென்ற அடிப்படையிலே பிரச்னைகளை நோக்குவோமானால், இதிலே ஒரு சுமுகமான முடிவு காண்பது கஷ்டமாக இருக்காது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இவைகளையெல்லாம் அலசிப் பார்த்து கடைசியிலே ஒரு நல்ல முடிவு செய்வதுதான் சரியே தவிர, ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையுடன் நோக்கிக் கொண்டிருப்பது சரியல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீ நாகராஜன் அவர்கள் ஸ்தல அபிவிருத்தி திட்டத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். அவர் ஜில்லாவுக்கு ரூபாய் 14 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தும் அது எந்த விதத்திலும் உபயோகப்படுத்தப்படவில்லை என்று சொன்னார். இதைக் கேட்பதற்கே மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. பல ஜில்லாக்களில் கொடுத்த பணம் போதாமல் மேலும் அதிகப்பணம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் தென் ஆற்காடு ஜில்லாவில் மட்டும் கொடுத்த பணம் உபயோகப்படுத்தாமலே தேங்கிக் கிடப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதில் இருக்கக்கூடிய நடங்கல்கள் என்ன என்பதைப்பற்றி பரிசீலனை செய்து அது விஷயமாக முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இலவச சம்பளம் கொடுப்பதிலே பெற்றோர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிற வருமான வரம்பை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இன்னும் அதிகப்படுத்துவது அவசியமாக இருக்கலாம். இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கிற வருமான வரம்பில் இருக்கக்கூடிய எல்லா வகுப்பினர்களுக்கும் நாம் இந்தச் சலுகை கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டால், அதற்கு மேல் எவ்வளவு அதிகரிக்க முடியும் என்பதுபற்றி யோசிக்கவேண்டும். இதைவிட முக்கியமானது நம்முடைய நாட்டில் ஏழைகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகை முதலில் கிடைப்பது மிகவும் அவசியம் என்ற முறையிலே இந்த வருவாய் வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நமக்கு இருக்கக்கூடிய நிதி வசதி, மக்களுக்கு இருக்கக்கூடிய கல்வி வசதி இவைகளைப் பின்னர் பரிசீலித்து ஆலோசனை செய்து இந்த வருமான வரம்பை எந்த அளவுக்கு உயர்த்தலாம் என்று முடிவு செய்வதுபற்றி எந்த விதமான கஷ்டமும் இருக்காது. ஆனால் உடனடியாக இதை இப்பொழுது உயர்த்துவது அவ்வளவு சரியல்ல என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். பின்னால் இதை புனராலோசித்து செய்யலாம் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் பல விஷயங்களைப்பற்றி பேசினார்கள். இந்த உபரிமான்யக் கோரிக்கையில் எழாத விஷயங்களைப்பற்றிக்கூட அவர்கள் மிகவும் ருசிகரமாகப் பேசினார்கள். சட்ட சபையில் எல்லோரும் எப்பொழுதும் முக்கியமான விஷயங்களைப் பற்றியே சர்ச்சை செய்துகொண்டிருந்தால் அது ஒரு சமயம் அலுத்துவிடும். அதற்கிடையே நம் பாலகிருஷ்ணன் அவர்கள் ருசிகரமான பிரச்சனைகளைப்பற்றிப் பேசி நம்மை மகிழ்விக்கிறார்கள். இந்த வகையிலே நான் அவர்களை மிகவும் பாராட்டு

24th December 1956] [Sri C. Subramaniam]

கிறேன். நாடகம், சர்க்கஸ் இவைகளில்கூட இதுமாதிரி மகிழ்விக்கக்கூடிய நபர்கள் பிரத்தியேகமாக இருக்கிறார்கள். அதேமாதிரி நமது சட்டசபையிலும் பாலகிருஷ்ணன் அவர்கள் அமைந்திருக்கிறார்கள். நாம் எல்லோரும் அதுபற்றி சந்தோஷப்படுகிறோம், மகிழ்ச்சி அடைகிறோம். அவர்கள் தொடர்ந்து இந்தச் சேவையை செய்வார்கள் என்றே நம்புகிறேன். (சிரிப்பு).

SRI P. CHELLATHURAI: ஒரு செய்தி அறியும் பிரச்னை; கனம் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, கனம் பாலகிருஷ்ணன் போன்று விகடம் செய்பவர்கள் சர்கஸ், நாடகம், சினிமா இவைகளிலும் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால், அவர் ஒரு கோமாளிப் பெரியார் என்பது அமைச்சர் அவர்களின் கருத்தா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அந்தப் பெயரெல்லாம் நாடகம், சினிமா சர்கஸ் இவைகளில் பொருந்துமே ஒழிய, நம்முடைய சட்ட சபை மெம்பர்களுக்கு பொருந்தாது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீ பாலகிருஷ்ணன் செய்துவரும் சேவையை எல்லோரும் ருசிக்கிறார்கள் என்பதை மட்டும் அவர்களே உணர்ந்திருக்கிறார்கள் என்பதை மறுபடியும் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றபடி ஸ்ரீ செல்லதுரை அவர்களும் பல விஷயங்களைப்பற்றி பேசினார்கள். நீர்ப்பாசன வசதி செய்துக் கொடுக்க வேண்டிய அவசியம் பற்றியும் அதற்காக கேரள ராஜ்யத்திலிருந்து தண்ணீரை கொண்டுவரவேண்டுமென்பது பற்றியும் எடுத்துக் கூறினார்கள். இவைகளெல்லாம் சர்க்கார் ஆலோசனையில் இருந்து வருகின்றன. இவைகளை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவந்ததற்காக நான் அவர்களுக்கு என் நன்றியை செலுத்திக்கொள்ள விரும்புகிறேன். நான் கூட கொஞ்சம் விவாத வரம்புக்கு அப்பால் பேசிவிட்டேன். இருந்தாலும், உப மான்ய கோரிக்கைக்கு அப்பால் பல பிரச்னைகள் சபை முன்பு கொண்டுவரப்படும்பொழுது அவை பற்றி கொஞ்சம்கூட பதில் சொல்லாவிட்டால் சரியாக இருக்காது என்ற காரணத்தினாலே சுருக்கமாக இவைகளுக்கெல்லாம் பதில் அளித்தேன். ஆனால் இதற்கு மேல் இந்த விவாதத்திற்கு பதில் சொல்லக்கூடிய அவசியம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI V. R. NAGARAJAN: On a point of information, Sir. The Hon. Minister has not mentioned anything in his reply about the Vidur Project to which I referred. Even though funds have been provided for that project in the current year's Budget, it has not yet been taken up.

THE HON. SRI C. SUBRAMANIAM: I am sorry I am not an Encyclopædia carrying all the information in my head. I do remember about that project. But I am sorry I am not in a position to give details about it. If the hon. Member is interested, he may come to my room and I shall try to find out the stage at which it stands and to give all the information he wants.

IV.—GOVERNMENT RESOLUTION.

INCREASE IN THE STRENGTH OF THE MADRAS LEGISLATIVE COUNCIL.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

"This House recommends to the Government of India that the strength of the Madras Legislative Council be raised to 63 and that the numbers to be filled by persons elected by the electorate referred to in sub-clauses (*a*), (*b*), (*c*), (*d*) and (*e*) of clause (3) of Article 171 of the Constitution shall be 21, 6, 6, 21 and 9 respectively."

[Sri C. Subramaniam] [24th December 1956

இப்பொழுது அரசியல் சட்டம் கவுன்சிலைப் பொறுத்தவரையில் திருத்தப்பட்டிருக்கிறது என்பதை அங்கத்தினர்கள் உணர்வார்கள். 171–ஆவது Article-ன்படி ஒரு ராஜ்யத்தில் இருக்கக்கூடிய மேல் சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழ் சபையில் இருக்கக்கூடிய அங்கத்தினர்களின் எண்ணிக்கைக்கு நான்கில் ஒரு பங்குக்கு மேலாக இருக்கக்கூடாது என்பது தான் முன்பு இருந்த விதி. இப்பொழுது அதை மூன்றில் ஒரு பங்குக்கு மேல் இருக்கக்கூடாது என்று திருத்தி இருக்கிறார்கள். 50 அல்லது 48 என்று நிர்ணயம் செய்தபொழுது நான்கில் ஒரு பங்குக்கு மேல் இருக்கக்கூடாது என்பதை மனதில் வைத்துக்கொண்டு அந்த எண்ணிக்கையை நிர்ணயம் செய்தோம். இப்பொழுது மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கை இருக்கலாம் என்று சொல்லும்பொழுது, தற்சமயம் ஆலோசனை செய்து பார்க்க வேண்டிய விஷயம் என்னவென்றால், இந்த எண்ணிக்கையை அதிகரிப்பது அவசியமா என்பது பற்றி தான். மூன்றில் ஒரு பங்குக்கு மேல் இருக்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அதற்குக் குறைந்து இருக்கக்கூடாது என்று சொல்லவில்லை. நாற்பதுக்குக் கீழே இருக்கக் கூடாது என்ற விதி இருக்கிறது. ஆனால் நமக்கு இப்பொழுது மேல் சபையில் 50 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அந்த எண்ணிக்கையை 50–லிருந்து 63–க்கு உயர்த்துவது அவசியமா, இல்லையா என்பதுபற்றி அங்கத்தினர்கள் தங்களுடைய யோசனையைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயமும் இதிலே கொண்டுவரப்படலாம். கவுன்சில் அவசியமா, இல்லையா என்பது பற்றி பல பேர்களுக்கிடையே அபிப்பிராய பேதமிருக்கிறது. அது வேறு விஷயம். வேண்டாமென்றால், வேண்டாமென்று தீர்மானம் செய்துவிடலாம். ஆனால் கவுன்சில் இருக்கும்பொழுது அதில் போதிய அளவு அங்கத்தினர்கள் இருந்தால்தான், அங்கே நடக்கக் கூடிய விவாதங்கள் நல்ல முறையிலே பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்கமுடியும். கவுன்சில் வேண்டாமென்றால் ஒரு தீர்மானத்தைப் போட்டு எல்லா அங்கத்தினர்களையும் எடுத்துவிடலாம். கவுன்சில் வேண்டுமென்று இருக்கும்பொழுது அதில் போதிய எண்ணிக்கை அங்கத்தினர்கள் இருந்தால்தான், அதன் மூலம் கிடைக்கக்கூடிய எல்லா நன்மைகளையும் பலன்களையும் பெறமுடியும். இதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். கவுன்சில் இருப்பதால் என்ன பிரயோசனம், அதனால் வீண் செலவுதான் என்று ஒரு சிலர் நினைக்கலாம்.

11-11 a.m. இன்றல்ல இந்த அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த இரு சபைகளும் ஏற்பட்டகாலத்திலிருந்தே இந்த அபிப்பிராயபேதம் நிலவி வருகிறது. ஒரு அரசியல் சட்ட நிபுணர் இந்த இரண்டாவது சபையைப் பற்றி வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார். இந்த மேல் சபை கீழ் சபையுடன் ஒத்துப் போவதாய் இருக்குமானால் மேல் சபையின் அவசியம் இல்லாமல் போகிறது. கீழ் சபையுடன் ஒத்துக்கொள்ளாவிட்டால் சங்கடமான ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். வேறு சில நிபுணர்களின் அபிப்பிராயம் இந்த மேல் சபையினால் பல நன்மைகள் உள்ளன என்பது. நமது ராஜ்யத்திலோ அல்லது நமது தேசத்திலோ மட்டுமல்ல இந்த இரண்டு சபைகள் உள்ளது. வேறு பல தேசங்களிலும், பல அரசியல் சட்ட அமைப்பின் கீழ் இந்த இரண்டு சபைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் முக்கியமாக வயது வந்தோர் எல்லோருக்கும் வோட்டு உரிமை கொடுத்ததிற்குப் பிறபாடு அதில் போட்டிபோடக்கூடியவர்கள், அர்த்தநாரி போன்றவர்களும் என்னைப் போன்றவர்களும் ஒரு கை பார்த்து விடுவோமென்று தேர்தலில் நின்று ஜயிக்கவோ தோற்கவோ ஏற்படுகிறது. அதனால் பாவாயில்லையென்று, நம்மைப் போன்றவர்கள் தயாராயிருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலர், பெரிய தொகுதிகளில்போய் தேர்தலுக்கு நின்று வருவதற்குள்ள மனப்பான்மை இல்லாதவர்களாக இருக்கிறார்கள். சட்டங்கள் இயற்றுவதிலும், நிர்வாகம் நடப்பதிலும் அவர்களின் யோசனை அவசியமில்லையென்று சொல்லிவிடமுடியாது. இன்று மேல்சபையை எடுத்துக்கொள்வோமேயானால் இங்குமட்டுமல்ல; மத்திய அரசாங்கத்தில் இருக்கக்கூடிய மேல் சபையை எடுத்துக்

24th December 1956] [Sri C. Subramaniam]

கொண்டால், ரொம்பவும் அநுபவம் முதிர்ந்தவர்கள், அரசியலில் வெகு நாட்களாக உழைத்து அரசியல் வாழ்க்கையையே தங்கள் வாழ்க்கையாகக் கொண்டவர்கள், நிர்வாகத்துறையில் அனுபவம் பெற்றவர்கள் இவர்களெல்லோரும் அங்கு ஓரளவிற்கு வருவதற்கு இடமளிக்கிறது என்பதில் சந்தேகமே கிடையாது. ஆகையால், இங்கு நடக்கக்கூடிய விஷயங்களையெல்லாம் மறுபடியும் அவர்களிடம் சென்று புனர் விவாதம் செய்து அதிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துக்கூறக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. பல சட்டங்களை நாம் அவசரம் அவசரமாக செய்ய முற்படுகிறோம். இது அவசர காலமாகும். பிரச்னைகளும் அவசரமாக எழுகின்றன. ஆதலால், அவசர அவசரமாக சட்டங்களைப் பிரேரேபித்து அவைகளை உடனடியாக சட்டமாக்க வேண்டுமென்று நினைக்கிறோம். அப்படி நாம் சட்டங்கள் நிறைவேற்றமுற்படும்போது இன்னொரு சபை, அனுபவம் வாய்ந்தவர்கள் இருக்கக்கூடிய சபை மூலம் பரிசீலனை செய்து இதில் மாற்றம் ஏதாவது அவசியமா ? அப்படியிருந்தால் அவைகள் எப்படி இருக்கவேண்டுமென்று நமக்கு ஆலோசனை சொல்லும்போது அது நமது அதிகாரங்களைக் குறைப்பதாகாது. அதனால் நமது அதிகாரங்கள் குறைக்கப் படுவதில்லை. அவர்களின் யோசனைகள் நல்லவைகளாக இருந்தால் அதைப் பற்றி ஆலோசித்து நல்ல யோசனைகளை நாம் ஏற்றுக்கொள்ள நமக்கு அதிகாரமிருக்கிறது. எல்லாவற்றையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லை. ஏற்றுக்கொள்ளவும், நிராகரிப்பதற்குமுள்ள அதிகாரம் நம்மிடமேயிருக்கிறது. ஆகையால் இந்த Council இருக்கின்ற காரணத்தால் நமக்கு பிரதிகூலமோ, கஷ்டநஷ்டமோ ஒன்றுமில்லை. நன்மைகளே அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினாலே பலஇடங்களிலும் இரு சபைகள் இருக்கின்றன. அந்தச் சபை நல்ல முறையில் இயங்கவேண்டுமென்ற எண்ணத்தினால்தான் இந்த எண்ணிக்கையை உயர்த்தவேண்டுமென்ற பிரச்னை இந்தச் சபையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி அங்கத்தினர்கள் விருப்போ வெறுப்போ இல்லாமல் ஆலோசனை சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தளவில், அறுபத்துமூன்றுபேர் இருப்பது சரி என்பதே என் அபிப்பிராயம். அதைத்தான் இந்த சபையின் முன் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : **Resolution moved—**

"This House recommends to the Government of India that the strength of the Madras Legislative Council be raised to 63 and that the numbers to be filled by persons elected by the electorates referred to in sub-clauses (a), (b), (c) (d) and (e) of clause (3) of Article 171 of the Constitution shall 2 be 1, 6, 6, 21 and 9 respectively."

SRI V. BALAKRISHNAN : உபதலைவர் அவர்களே ; நிதி மந்திரி அவர்கள் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கிறபோது ஒப்புக்கொள்ளக் 11-17 a.m.
கூடிய சில வாதங்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் சரித்திரத்திலே ஜனநாயக முறையிலே இரண்டாவது சபை ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையென்ன ? இரண்டாவது சபை ஏற்படவேண்டியதின் அவசியம் என்ன என்று இத்தருணத்தில் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். இரண்டாவது சபை ஜனநாயக முறையிலுள்ள எந்தெந்த நாடுகளில் இருக்கின்றன என்றால் "**Unitary Form of Government**" இருக்கிற நாடுகளில்தான் இருந்து வருகிறது. நம் நாட்டில் இருப்பது **Unitary Form of Government** அல்ல. நம் தேசத்தில் இருக்கும் **Form of Government Federal System** ஆகும் பதினெட்டு, பத்தொன்பது ராஜ்யங்களாக பிரிக்கப்பட்டு வயது வந்தோர் வாக்கெடுப்பின் அடிப்படையில் தேர்தலும் நடந்து வருகிறது. இந்த ராஜ்ய சட்ட சபைகளுக்கு மேல் லோக் சபை இருக்கிறது. அங்கு இன்னொரு ராஜ்ய சபையொன்று ஒன்றும் இருக்கிறது. அங்கு, உயரத்தில் இன்னொரு சபையிருப்பதில் ஆட்சேபணையில்லை நான் சொல்வதென்னவென்றால் நம் ராஜ்யத்தில்

அதுவும் இந்த குறுகிய ராஜ்யத்தில் இந்த மேல் சபையிருப்பதினால் மக்களுக்கு ஏதாவது நன்மையுண்டா? இந்த சபைக்கு ஏதாவது நன்மையுண்டா என்று சீர்தூக்கி பார்க்கவேண்டும். நான், இந்த மேல் சபையினால் மக்களுக்கு ஒரு நன்மையும் இல்லை யென்றே சொல்வேன். அது ஒரு வெள்ளை யானையாய் இருந்து கொண்டு இந்த ராஜ்யத்திலுள்ள ஏழைகளின் வரிப்பணத்திலிருந்து ஒன்றரை, இரண்டு லட்சம் ரூபாய் உபரியாய் செலவு செய்து கொண்டிருக்கிறதே தவிர இங்கு இயற்றப்படும் சட்டங்களில் ஒரு பெரிய குற்றங்குறை கண்டு பிடித்து அதை நிவர்த்தி செய்து மக்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்தை தடுத்ததாகத் இல்லவே யில்லை.

அடுத்தபடி அந்த சபை இருப்பதால் ஜனநாயகம் இங்கு சரியாக நடப்பதற்கு வழியுண்டு என்று சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. தேர்தலில் மக்களிடம் போய் வோட்டுக் கேட்டு தோற்கடிக்கப்பட்டவர்கள்தான் அந்த சபைக்கு அனுப்பப்படுகிறார்கள். எடுத்ததற்கெல்லாம் பணமில்லை பணமில்லை யென்று இந்த அரசாங்கம் சொல்கிறது. அப்படியிருக்கும்போது, இந்த சபை நமக்கு அவசியமில்லை, அவசியமில்லாத இதை வைத்துக்கொண்டு ஏன் அதன் பேரில் இவ்வளவு பணம் செலவு செய்யப்படவேண்டும். நாம் இங்கு இயற்றும் சட்டங்களுக்கு எல்லாம் கவர்னரின் அனுமதி வேண்டும். ஜனாதிபதியின் அங்கீகாரமும் வேண்டும். நாம் பாஸாக்கும் சட்டங்கள் உடனடியாக அமலிற்கு வரப் போவதில்லை. ஆகவே இவர்களுக்கு மத்தியில் இடையில் இன்னொருவர் எதற்கு. ஆகவே இந்த மேல் சபைக்குவேண்டி இரண்டு மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டியதில்லை என்று நான் எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். அதோடு மேல் சபையில் காரியங்கள் எப்படி நடக்கிறது. இரண்டரை, மூன்று மணிக்கு கூடி ஐந்து மணிக்கு புறப்பட்டுவிடுகிறார்கள் அந்த மூத்தண்ணுக்கள் அதற்கு அவர்களுக்கு மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளம் தினம் பன்னிரெண்டரை ரூபாய் படி வேறு ஆக, இரண்டு மூன்று மணி நேரம் அங்கிருந்து விட்டு வெற்றிலை பெட்டியை எடுத்துக்கொண்டு கிளம்பி விடுகிறார்கள். ஆனால் நம் நிலையென்ன. தேர்தல் என்றால் ஒவ்வொரு வீடாகச் சென்று கைகட்டி நின்று அவர்களின் நல்லெண்ணத்தை சம்பாதித்து வோட்டு பெற்று இங்கு வரவேண்டியிருக்கிறது. சட்டசபை கழிந்து போனாலும் பொது மக்களுக்காக மந்திரிகளைப் பார்க்கவேண்டியிருக்கிறது, அதிகாரிகளைப் பார்க்கவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சிரமம் இல்லாமல் எந்த விதக் கஷ்டமும் இல்லாமல் பொது ஜனப்பிரதிநிதி என்று சொல்லிக் கொள்வதோடு லாபத்தையும் அடைகிறார்கள் மேல் சபை அங்கத்தினர்கள். இம் மேல்சபை மூலம் மக்களின் பணம் அனாவசியமாகச் செலவு செய்யப்படுகிறது என்பதே என் கருத்து. ஆகவே, 50 பேர் அடங்கிய சபையே வேண்டாமென்று சொல்லும்போது அதை 63-ஆக உயர்த்துவதற்கென்ன அவசியம். மத்திய சர்க்கார் சட்டத்தை திருத்திவிட்டது. அதன் பிரகாரம் இங்கும் உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் நமக்கு இதற்கு பணம் தருகிறார்களா? மற்ற ராஜ்யங்களிலெல்லாம் இன்று ஏழு ராஜ்யத் தொகுதிகளைக்கொண்டது ஒரு பார்லிமெண்ட் தொகுதியாகும். ஆனால் நமது ராஜ்யத்தில் மட்டும் 5 ராஜ்யத் தொகுதிகள்கொண்டது ஒரு பார்லிமெண்ட் தொகுதியாகிறது. ஆகவே, நம்நாட்டில் கீழ்சபை எண்ணிக்கையை அதிகப்படுத்தியாக வேண்டும். கீழ் சபையின் எண்ணிக்கை அதிகப்படுத்தாமல் மேல் சபையின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டிய அவசியம் என்ன? அதன் மர்மம் என்னவென்பதை மந்திரியவர்கள் விளக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். கீழ்த்தர சிப்பந்திகளுக்கு இன்னும் கூடுதலாக சம்பளம் கொடுக்கவேண்டியது அவசியம்தான் என்று மந்திரிகள் உட்பட எல்லோரும் ஒத்துகொள்கிறார்கள். ஆனால் அதை செய்து கொடுப்பதற்கு பணம் இல்லை என்று அரசாங்கத்தார் சொல்லுகிறார்கள். இப்போது ஐம்பது பேர்கள் என்றிருப்பதை கூடுதலாக அதாவது அறுபத்திமூன்று ஆக கூட்டவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்போது கூடுதலாக சேர்க்கப்படும் பதிமூன்று பேர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ஆயிரத்

தைநூறு ரூபாய் செலவு செய்து வருடம் ஒன்றிற்கு கிட்டத்தட்ட இருபத்தையாயிரம் ரூபாய் சம்பளமாக செலவு செய்யப்பட்ட வேண்டியிருக்கிறது. அதேசமயத்தில் சர்வ சதாரணமான கீழ்த்தர சிப்பந்திகளுக்கு பன்னிரண்டு அணா என்றிருப்பதை கூடுதலாக ஒரு ரூபாய் அல்லது ஒன்றரை ரூபாய் என்று உயர்த்தவேண்டும் என்று சொன்னால் எங்களிடம் பண நெருக்கடியாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் மேல்சபையில் மெம்பர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு மாத்திரம் எங்கிருந்து பணம் வருகிறது என்று கேட்கிறேன். இப்போது சர்க்கார் கட்சியிலுள்ளவர்கள் எல்லாம் சம்மதித்தால் மேல் சபையையே எடுத்து விடலாம். அப்படியிருக்கும்போது அதன் எண்ணிக்கையை உயர்த்துவது எதற்காக? அதற்குள்ள அவசியம் என்ன? ரொம்ப அவசியமாக **inevitable evil and necessity** என்ன வந்து விட்டது? அவசியம் உண்டானால் ஐம்பது பேர்களை வைத்துக்கொள்ளட்டும். ஆகவே பதிமூன்று பேர்கள் கூடுதலாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***SRI K. ARANGANATHAN :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் மேல்சபையில் கூடுதல் எண்ணிக்கையான அங்கத்தினர் வேண்டும் என்று கொண்டுவந்திருப்பதானது அவசியமானதா என்று நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. அதே சமயத்தில் நம்முடைய சபையில் நிறைவேறிய பின் மசோதாக்கள் மேல்சபைக்கு போய் அங்கு அனுபவம் வாய்ந்த அங்கத்தினர்களால் ஆராயப்பட்டு தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் மேல் சபையில் கொண்டு வரும் மசோதாவை இந்த சபையிலுள்ள அங்கத்தினர்களுக்கு விவாதிக்க இடமில்லாமல் போகிறது. ஆதலால் அங்குள்ள மசோதாக்கள் எல்லாம் இங்கு விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்து இங்கும் விவாதிப்பதற்கு வகை செய்ய வேண்டும். நாம் நிறைவேற்றக்கூடிய காரியங்களை மேலும் கூடுதலாக ஆராய்வதற்கு மேல்சபையில் அறிவு ஆற்றலும் திறமையும் உள்ளவர்கள் கூடுதலாக வேண்டியிருப்பதால் நான் இதை ஆதரிக்கிறேன்.

SRI N. RATHINA GOUNDER : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மசோதாவை நான் ஓரளவு வரவேற்கிறேன். காரணம் என்னவென்றால் மேல் சபையில் பல் வேறு துறையில் அனுபவமுள்ள நிபுணர்களும், அறிவாற்றல் மிகுந்த பலரும் இருந்து விவாதித்து பல சட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். ஆதலால் அறிவாற்றல் உள்ள இன்னும் பல அங்கத்தினர்கள் அங்கு அவசியம் தான். ஆனால் ஒன்று மாத்திரம் சொல்லிக்கொள்கிறேன். மேல் சபை அங்கத்தினர்களுக்கு காங்கிரஸ் கட்சியிலிருந்து ஆட்களை நிறுத்தக்கூடாது, என்பது தான் என்னுடைய கோரிக்கை. காங்கிரஸ் மெஜாரிட்டியாக இருந்து ஆட்சி செய்யும் இடத்தில் காங்கிரஸ் அங்கத்தினர்களே கூடுதலாக மேல்சபையில் இருந்தால் நியாயம் கிடைக்க முடியாது. மேல் சபையிலுள்ள அங்கத்தினர்களை அவர்களுக்குள்ள தகுதி, திறமை இவைகளைப் பார்த்து தேர்ந்தெடுக்கவேண்டும். இன்னொன்று, எம்.எல்.ஏ. பதவிக்கு நின்று தோற்று போனவர்களையும் மேல்சபைக்கு தேர்ந்தெடுக்கக்கூடாது. பெரிய மனுஷன் என்ற காரணத்திற்காக தோற்ற ஆள்களை புழக்கடை வழியாக அங்கே இடம் கொடுக்கக்கூடாது என்பது தான் என் கோரிக்கை. காங்கிரஸ் அங்கத்தினர்களை மேல் சபைக்கு தேர்ந்தெடுத்தால் அவர்களுடைய கருத்துகள் எல்லாம் ஒத்துதான் போகும். மேனாட்டு மகான் ஒருவர் கூறினது மாதிரி, எதிர்க்கட்சி பலமாக இருந்தால் தான் ஆட்சி நேர்மையாகவும் நீதியாகவும் நடக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். எதிர்கட்சி தேவை என்று மந்திரி அவர்களே சொன்னார்கள். அப்படியானாலும் இங்கே நிறைவேற்றின காரியங்கள் அங்கு நிறைவேற்றப்படாமல் போனாலும் இங்கே வந்து நிறைவேறத்தான் செய்யும். ஆதலால் எதிர்க்கட்சி கூடுதலாக இருக்கும் என்பதற்காக தயங்கவேண்டியதில்லை. ஆகவே மேல்சபையில் இப்போது இருக்கும் ஐம்பதை அறுபதாக ஆக்கவேண்டுமா என்பதுதான் கேள்வி. இப்போது ஏற்கெனவே சட்ட சபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளங்கள் அதிகம்,

[Sri N. Rathina Gounder] [24th December 1956]

இவ்வளவு அவசியமில்லை என்று நாட்டில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் கூடுதலாக பதிமூன்று பேர்கள் தேவையில்லை, இப்போது இருக்கும் ஐம்பது பேர்களே போதும் என்பதே என் கருத்து. இந்த ஐம்பது பேர்களை சரியான முறையில் தேர்ந்தெடுத்து மேல்சபையை அமைக்கவேண்டும்.

It must be an election, but it should not be selection என்ற முறையில் அமையவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

11-30 a.m. *SRI G. GOVINDAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது பேசும்போது இதற்கு முன் பேசிய அங்கத்தினர் காங்கிரஸ்காரர்கள் அங்கு அதிகமாக இருக்கக்கூடாது. அப்படி இருப்பது அவசியம் இல்லை என்று சொன்னார். காங்கிரஸ்காரர்கள் அவருக்கு விரோதிகள் என்று எண்ணிக் கொண்டு அப்படி சொன்னாரா என்பதைப்பற்றி அவர் குறிப்பிடவில்லை. காங்கிரஸ்காரர்களுக்கு அதிகப்படியான வோட்டுக்கள் வந்து விடுகின்றன, அதனால் அங்கு நியாயம் கிடைப்பதாக இல்லை என்றெல்லாம் சொன்னார். அவர் அப்படிச் சொல்லும்போது அவர்களை விரோதிகள் என்று கருதி அப்படிச் சொன்னாரா என்பது தெரியவில்லை. நாளைக்கு தி.மு.க. வரப்போகிறது. அவர் அந்தக்கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் எலக்ஷனில் அப்படிச் சொன்னாரா என்பதும் தெரியவில்லை. அவர் அந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பதால் எந்த விஷயத்திலும் அவர் காங்கிரஸ்காரர்களை குற்றம் சொல்வதில் தான் இருக்கிறார். அப்படி காங்கிரஸ்காரர்கள் விரோதிகள் என்று கருதினால் அவர் அந்த அரசாங்கம் நடக்கும்போது அங்கத்தினராக இருக்கக்கூடாது. அவருடைய கட்சி வந்த பிறகு அவர் அங்கத்தினராக வந்து உட்கார்ந்து கொண்டிருக்கலாம். அதையும் நாம் பார்க்கத்தான் போகிறோம். அந்தக் கட்சி தேர்தலில் வரப்போகிறதா இல்லையா என்பது வரப்போகும் தேர்தலில் தெரிந்துவிடும். அப்பொழுது யார் மெஜாரிட்டியாக வரப்போகிறார்கள் என்பதும் நன்றாகத் தெரியும். அப்படி அவர் காங்கிரஸ்காரர்கள் வேண்டாம் என்று சொன்னால் அவர்கள் சம்பளம் இல்லாமலும் படி இல்லாமலும் வந்து இங்கு பேசலாம். அதற்கு அவருக்கு தைர்யம் இன்னும் வரவில்லை. ஆனால் என்னை போலுள்ள ஊழியர்கள் அப்படி வருவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். நாங்கள் குறைவான சம்பளம் கொடுத்தாலும் படி இல்லாமல் வரவேண்டும் என்று சொன்னாலும் நாங்கள் வருவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் அவர்கள் அப்படி இல்லை. இத்துடன் அவர் பேசியதைப்பற்றி சொல்லிவிட்டு இப்பொழுது சபையின் முன்பாக இருக்கும் தீர்மானத்தைப்பற்றி பேச விரும்புகிறேன்.

இப்பொழுது மேல் சபைக்கு 50 பேர்கள் போதாது சட்ட பூர்வமாக அறுபத்திமூன்று பேர்கள் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். கனம் நிதி மந்திரி அவர்கள் சொல்லும்போது அங்கு அறிவாளிகள் இருக்கிறார்கள் அவர்களுடைய அறிவை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், அதற்காக அங்கு ஐம்பது என்று இருப்பதை அறுபத்திமூன்று என்று உயர்த்தவேண்டியது அவசியமாக இருக்கிறது என்று சொன்னார். இங்குள்ள அங்கத்தினர்களுக்கு அப்படிப்பட்ட அறிவு இல்லையா. இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அங்குள்ளவர்கள் அப்படியே தான் நிறைவேற்றுகிறார்கள். அதனால் அங்கு அதிகப்படியான அங்கத்தினர்கள் இருக்கவேண்டிய அவசியமே இல்லை. மேல் சபையில் அதிகப்படியாக அறுபத்திமூன்று பேராகக் கூட்டினால் அதனால் அதிகப்படியான செலவு தான் ஏற்படும். அதனால் அப்படி உயர்த்தவேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். எல்லோருக்கும் வோட்டுரிமை ஒன்றுதான். மேல் சபையில் மட்டும் ஏன் பல விதமான வோட்டுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. ஜில்லா போர்டு சம்பந்தமாக அங்கத்தினர்கள், பி.ஏ. பட்டம் பெற்றவர்களுக்கு என்று அங்கத்தினர்கள், மற்றும் நியமனங்கள். இப்படியெல்லாம் அங்கு பல விதமான

24th December 1956] [Sri G. Govindan]

வோட்டுரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்கு வருவதாக இருந்தால் ஒரே முறையில் தான் வரமுடியும். அப்படிப்பட்ட நிலைமையில் மேல் சபை இருக்கவேண்டிய அவசியம் இல்லை. இப்படிப்பட்ட வோட்டுரிமை அங்கு கொடுக்கப்பட்டிருப்பதால் பணக்காரர்களும் வேறு விதமானவர்களும் அங்கு வருவதற்கு வழி ஏற்படுகிறது. பணக்காரர்கள் பணத்தைச் செலவு செய்து விட்டு அங்கு வரக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆனால் இங்கு என்னைப்போல் இருக்கின்ற ஊழியர்கள் தான் வரமுடியும். அங்கு ஏழைகள் வரமுடியாது, வோட்டர்களுக்கு ஐம்பது அல்லது நூறு என்று பணம் கொடுத்து வோட்டுகளை வாங்கி அங்கு வருவதற்கு வசதி இருக்கிறது. அதனால் மேல் சபை இருக்கவேண்டிய அவசியமே இல்லை. அங்கு இப்பொழுது இருக்கும் ஐம்பது என்பதை அறுபத்திமூன்று ஆக உயர்த்தவேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றுகிறது. மேல் சபை இருப்பதால் எப்படி அறிவு வளர்ச்சி ஏற்படும் என்பது தெரியவில்லை.

அங்கு அறிவாளிகள் இருப்பதாகத் தெரியவில்லை. இங்குள்ளவர்கள் எல்லோரும் அறிவாளிகள் தான். நாம் இங்கு நிறைவேற்றும் தீர்மானங்கள் தான் அங்கு செல்கின்றன. அவைகள் அப்படியே தான் பாஸ் செய்யப்பட்டு வருகின்றன. அதனால் மேல் சபை இருக்கவேண்டிய அவசியமே இல்லை. சென்னைக்கு அப்படி இருக்க வேண்டியது அவசியம் இல்லை. ஆனால் வட இந்தியாவில் டில்லியில் இருக்கிறது. அங்கு இருக்க வேண்டியதுதான். அங்கு நூறு பேர்களில் தொண்ணூறு பேர்கள் தான் படிக்காதவர்களாக இருப்பார்கள். அவர்கள் அப்படியே உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டியதுதான். ஆனால் தமிழ் நாடு அப்படி இல்லை எல்லோரும் அறிவாளிகள் தான். இங்குதான் அறிவு ஜாஸ்தியாக இருக்கிறது. இங்கு அறிவாளிகள் ஜாஸ்தியாக இருப்பதால் இங்கு மேல் சபை இருக்கவேண்டிய அவசியமே இல்லை என்பதை சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI S. RAMALINGAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை நான் ஆட்சேபிக்கிறேன். ஏனென்றால் சர்க்கார் கட்சியைச் சேர்ந்த கனம் கோவிந்தன் அவர்களே இதைப்பற்றி எடுத்துச் சொல்லி இருக்கிறார். மேல்சபை இன்றைக்கு அவசியம் இல்லை. அது மட்டும் அல்ல. ஏற்கெனவே இந்தச் சபையில் நாம் ராஜ்ய புனரமைப்பு சம்பந்தமான சட்டத்தைப்பற்றி விவாதிக்கும்போது மேல்சபை தேவை இல்லை என்பதை இங்கு இருக்கக்கூடிய பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் சர்க்கார் மேல்சபை அவசியம் இருக்கவேண்டும் என்று பிடிவாதமாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது நாற்பத்தெட்டு அங்கத்தினர்கள் இருந்தால்போதும் என்று அந்தச் சட்டத்தில் நிர்ணயம் செய்தார்கள். அந்தச் சட்டம் இங்கே விவாதிக்கப்பட்டு மேல் சபையிலும் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றி அதன் பிறகு லோக் சபைக்குச் சென்று அங்கும் நிறைவேற்றப்பட்டு அதன் பிறகு ராஜ்ய சபைக்குச் சென்று அங்கேயும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன் பிறகு மேல் சபை அங்கத்தினர்கள் இரண்டு பேர்கள் அதை எதிர்த்து ஹைகோர்ட்டில் தாவா தொடர்ந்து அங்கும் நாற்பத்தெட்டு பேர்கள் இருந்தால் போதும் என்று தீர்ப்பளித்தார்கள். அதன் பிறகு நாற்பத்தெட்டு என்பது ஐம்பதாக உயர்த்தப்பட்டது. நான்கு சபைகள் விவாதித்து சட்டமாகிய பிறகு அதை மாற்றுவது என்பது சரியல்ல. அதன் பிறகு இப்பொழுது அறுபத்திமூன்று ஆக உயர்த்தவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே ஐம்பது பேர்கள் என்று இருந்து நாற்பத்தெட்டு ஆக குறைந்தவுடன் யாரை நீக்குவது என்ற பிரச்னை ஏற்பட்டு அதன் பிறகுதான் அதை ஐம்பது ஆக உயர்த்தினார்கள். கவர்னர் அவர்களே இதை நிர்ணயம் செய்திருக்கலாம். இரண்டு பேரை குறைவுபடுத்தி சட்டம் இயற்றி இருக்கிறார்கள். இப்பொழுது ஐம்பது பேர்கள் என்று உயர்த்தியதை அறுபத்திமூன்று ஆக உயர்த்தவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கு வேண்டிய சட்ட சம்பந்தமான திருத்தம் வந்திருக்கிறது. இந்த அறுபத்தி

மூன்று என்ற நம்பரை எப்படி எடுத்தார்கள் என்பது தெரியவில்லை. தமிழ் நாட்டில் நாயன்மார்கள் அறுபத்திமூன்று பேர்கள் உண்டு. அதைப் போலவே இவர்களும் அறுபத்திமூன்று பேர்கள் என்று உயர்த்தி அவர்களைப்போல் அலங்காரமாக உட்கார வைத்திருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் அப்படி உயர்த்துகிறார்களா என்பது தெரியவில்லை. அல்லது இப்போது "கோரம்" இல்லாமல் இருந்து இந்த பதிமூன்று பேர்களாவது வந்து உட்கார்ந்துகொண்டு "கோரம்" இருக்கும்படியாகச் செய்யலாம் என்பதற்காக இப்படி அறுபத்தி மூன்று ஆக உயர்த்து கிறார்களோ என்னமோ தெரியவில்லை.

கீழ் சபை அங்கத்தினர்கள் குறைவாக இருக்கிறது, மற்ற ராஜ்யங்களில் அதிகமாக இருக்கிறது. இங்கும் அப்படி அதிகமாக இருக்கவேண்டும் என்று நாங்கள் விவாதித்தபோது அதாவது கேரளத்தில் இதைவிட அதிகம், ஆந்திராவில் இதை விட அதிகம், அங்கெல்லாம் பார்லிமெண்ட் ஏழு அங்கத்தினர்களுக்கு ஒருவர் என்ற விகிதாச்சாரப்படி இங்கும் அங்கத்தினர்கள் இருக்க வேண்டும் என்று விவாதித்தபோது இருநூற்றைந்திலிருந்து இருநூற்றெம்பத்தேழுக்கு உயர்த்த வேண்டும் என்று விவாதித்தபோது அப்படி அதிகமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். இப்பொழுது இருக்கும் அங்கத்தினர்களுடைய தொகை போதும். அதிகமானால் அதிகப்படியான யோசனைகள் வரும். ஒவ்வொன்றையும் கேட்டுக்கொண்டிருக்க முடியாது என்று வாதித்தார். ஆனால் இப்பொழுது ஐம்பது என்றிருப்பதை அறுபத்திமூன்று என்று உயர்த்த வேண்டும் என்று சொல்லும்போது அதிகமானால் அவர்களுடைய யோசனைகளையும் நாம் கேட்பதற்கு சௌகர்யமாக இருக்கும் என்று சொல்லுகிறார். இது எந்த அளவில் சரி என்பது தெரியவில்லை. சென்ற ஐந்து வருஷ காலமாக இந்த சபையிலிருந்து எத்தனை மசோதாக்கள், தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பினாலும் அவைகள், ஒன்றைத் தவிர அப்படியே அங்கும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவைகளைத் திருப்பி அனுப்பி வைக்க எந்த விதமான முயற்சியும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இவைகளைக் கவனித்தால் மேல் சபை இருக்கவேண்டிய அவசியமே இல்லை என்று தான் தோன்றுகிறது. நாற்பத்தெட்டு என்பது ஐம்பது ஆயிற்று, இப்பொழுது அதையும் அறுபத்துமூன்றாக உயர்த்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதுவும் அவசியமில்லை.

சமீபத்தில் நாம் தேர்தலை நடத்தப்போகிறோம். அப்பொழுது காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, வோட்டு கேட்கப் போகும்போது என்னென்ன காரியங்களைச் செய்தோம் என்னென்ன காரியங்களைச் செய்யப்போகிறோம் என்பதையெல்லாம் நாம் சொல்லவேண்டியதாக இருக்கும். இதைப்பற்றி அப்பொழுது ஜனங்கள் கேள்வி கேட்க ஆரம்பித்து விடுவார்கள். ஏற்கெனவே நாம் பார்த்தோம், எந்த விதமான சட்டசபை அங்கத்தினரும் தேர்தலில் நின்று ஜெயித்துவர முடியாமல் மேல் சபைக்கு வந்திருப்பதைப் பார்த்திருக்கிறோம். வோட்டு வாங்காமல் கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மேல் சபைக்கு கவர்னர் அவர்களுடைய நியமனம் மூலமாக வந்து முதல் அமைச்சராக இருந்து அதிகாரம் செலுத்தியது நாம் எல்லோரும் அறிந்ததே. அதன் பிறகு அவரை காங்கிரஸ் கட்சியே வேண்டாம் என்று சொல்லி அனுப்பியதும் நமக்கு நன்றாகத் தெரியும். அவர் பிரதம மந்திரியாகக்கூட இருக்க வேண்டாம் என்று அனுப்பியதும் எல்லோருக்கும் தெரியும். அதைப் போலவே தேர்தலில் நின்று வெற்றி பெறாமல் புழக்கடை மூலமாக வந்து அதிகாரம் செலுத்துகிறவர்களையும் நாம் பார்த்துக்கொண்டிருக் கிறோம். ஜனங்கள் யார் தகுதியற்றவர்கள் என்று கருதுகிறார்களோ அவர்கள் எல்லோரும் மேல் சபைக்கு வருவதற்குத்தான் மேல் சபை சந்தர்ப்பம் அளிக்கிறது.

தற்சமயம் பணம் இல்லை, பல காரியங்களுக்கு பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். என்.ஜி.ஓ.-க்களுக்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டால் பண வசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். கிராம உத்தியோகஸ்தர் களுக்கு வசதி செய்ய வேண்டுமென்றால் அதற்கும் பணம் இல்லை என்று

சொல்லுகிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது மூன்று ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய்தான் பஞ்சப்படி கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இதைப் பார்த்தால் ரொம்பவும் கேவலமாக இருக்கிறது. இந்த அளவுக்கு பணம் இல்லை என்று சொல்லும்போது மேல்சபை அங்கத்தினர்களை அதிகமாக்கி அவர்களை உட்கார வைத்துக்கொண்டு அவர்களுக்கு என்று பணம் கொடுக்கவேண்டுமா என்று கேட்கிறேன். பல காரியங்களுக்குப் பணம் இல்லை என்று சொல்லும்போது இவர்களுக்கு மட்டும் பணம் கொடுப்பதற்கு இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இதற்குப் பணம் எங்கே இருக்கிறது? ஆகவே, அங்கு அங்கத்தினர்களுடைய எண்ணிக் கையை அதிகப்படுத்துவதற்கு அவசியம் இல்லை. இந்தத் தீர்மானத்தை சர்க்கார் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை வோட்டுக்கு விடாமல் வாபஸ் வாங்கிக்கொண்டு வரப்போகும் தேர்தலுக்குப் பிறகு வருகிற அரசாங்கம் இது வேண்டுமா, வேண்டாமா, என்பதைக் கவனித்துச் செய்வதற்கு விட்டு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். அதனால் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றாமல் அப்படியே கைவிட்டுவிடும்படியாக கனம் நிதி மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளு கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமலிங்கம் அவர்கள் வெகு திறமையாக தன்னுடைய வாதத்தை எடுத்துச் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்பொழுது, தேர்தல் சமயத்தில் சொல்லக்கூடிய விஷயங் களையும் சொன்னார்கள். என்.ஜி.ஓ.-க்கள், கிராம உத்தியோகஸ்தர்கள் ஆகியோருக்கு அதிகச் சம்பளம் கொடுக்க முடியாத நிலையிலிருக்கும் பொழுது, ஏன் இப்பொழுது அதிகமாக முப்பதாயிரம் ரூபாய் செலவழிக்க வேண்டுமென்று கேட்டார். அவருடைய வாதத்தை யெல்லாம் கேட்ட பிறகும் கூட, அவர் சொல்லுவது போல், இந்தத் தீர்மானம் கைவிடக் கூடியது அல்ல என்று சொல்ல விரும்புகிறேன். இதை நிறைவேற்றுவது அவசியமென்றுதான் தோன்றுகிறது. இந்தப் பிரச்னையை அடுத்த சபைக்கு விட்டு விடலாமென்றும் சொன்னாகள். சாதாரணமாக அப்படித் தான் செய்யவேண்டும். ஆனால், ஒவ்வொரு ராஜ்யத்திலும் இருக்கக்கூடிய மேல் சபையின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதற்கு 1957 மார்ச்சில் மத்திய சர்க்கார் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள். ஆகையால், அதற்குள்ளாக நமது யோசனையைச் சொல்லவேண்டியது அவசியமாகிறது. இதை ஒத்திப் போடுவதில் பிரயோஜனமில்லை. பிற்பாடு அதிகப்படுத்திக் கொள்ளலாம் என்ற யோசனை ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. இப்பொழுதே யோசனை பண்ணி ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. இந்தப் பிரச்னையைப் பற்றியுள்ள வாதப் பிரதிவாதங்களை எல்லாம் இதற்கு முன்பே சொல்லியாகிவிட்டது. இன்னும் பதின்மூன்று அங்கத்தினர்களைப் போடுவதனால் எவ்வளவு செலவாகும் என்று கணக்கும் எடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் எல்லா அங்கத்தினர்களும் வருவதாயிருந்தால் ஒரு வருஷத்திற்கு சுமார் முப்பத்தையாயிரம் ரூபாய் செலவாகும்.

Sri V. BALAKRISHNAN : அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளத்தையும் சேர்த்தா?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஆமாம், சம்பளத்தையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். பாதிப் பேர் வந்தால் சுமார் இருபதாயிரம் ரூபாய் செலவாகும். ஆகவே, அதிகமாகச் செலவாகும் என்று சொல்லி இதை எதிர்ப்பது சரியல்ல. மேல்சபை வேண்டுமா, வேண்டாமா, என்பதைப்பற்றி, அவசியமிருந்தால் பின்னால் வருகிற சபை பரிசீலனை செய்து முடிவு செய்யலாம். அதை வேண்டாம் என்று சொல்லுவதற்கும் கூட, எண்ணிக்கையை அதிகரித்தால், பின்னால் 'ஏன் இவ்வளவு பேர் வரவேண்டும், ஏன் இவ்வளவு செலவு செய்யவேண்டும்' என்று சொல்லலாமாகையால், அந்த நோக்கிலிருந்து பார்த்தாலும்கூட, எண்ணிக்கையை உயர்த்துவதுதான் நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே, இப்பொழுது எண்ணிக்கையை உயர்த்துவதினால் எந்த விதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. நமக்குள் இருக்கும் அபிப்பிராய பேதங்களை எல்லாம் சொல்லி ஆகிவிட்டது. இந்தத் தீர்மானம் மேல்சபையைப் பற்றியது. நம்முடைய சபையாக இருந்தாலும் சரி அல்லது மேல்சபையாக இருந்தாலும் சரி, ஒரு முடிவுக்கு வந்த பிறகு, அந்த முடிவு ஏகோபித்ததாக இருந்தால் நல்லது. ஆகவே இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டுமென்று எல்லா அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri V. BALAKRISHNAN : மற்ற ராஜ்யங்களில் ஆறு அல்லது ஏழு அசெம்பிளித் தொகுதிகளுக்கு ஒரு பார்லிமெண்டரித் தொகுதி வீதம் இருக்கிறது. நமது ராஜ்யத்தில் மட்டும் ஐந்து அசெம்பிளித் தொகுதிகள் ஒரு பார்லிமெண்டரி தொகுதியாக ஏன் வகுக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதைப்பற்றி முன்பே விவாதித்து, ஐந்து வீதமிருந்தால் போதுமென்று முடிவு செய்தோம். இதுபற்றி நடந்த விவாதங்களைப்பற்றி பார்த்தால் தெரியும். பழைய ரிக்கார்டைப் புரட்டிப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

" This House recommends to the Government of India that the strength of the Madras Legislative Council be raised to 63 and that the numbers to be filled by persons elected by the electorate referred to in sub-clauses (*a*), (*b*), (*c*), (*d*) and (*e*) of clause (3) of Article 171 of the Constitution shall be 21, 6, 6, 21 and 9 respectively."

The Resolution was put and carried.

Sri A. RATNAM : This is an important question. I press for division.

The division bell was rung.

DEPUTY SPEAKER : Please close all the doors.

(All the doors were closed.)

DEPUTY SPEAKER : I will put the resolution once again to the vote of the House. The question is—

" This House recommends to the Government of India that the strength of the Madras Legislative Council be raised . . ."

(Sri T. V. Sannasi entered the Chamber and several Members objected to his entry at that stage.)

DEPUTY SPEAKER : The hon. Member will leave the Chamber.

Sri K. RAJARAM : The hon. Member entered the Chamber in time to take part in the division. He must have entered before the doors were closed.

Sri R. V. SWAMINATHAN : How can he enter if the doors were closed? Since he has entered, the doors must have been open at the time of his entry.

DEPUTY SPEAKER : Before I put the resolution to the vote of the House, he should have been in his seat.

Sri S. N. SOMAYAJULU : On a point of Order, Sir, மறுபடியும் தீர்மானத்தை ஓட்டுக்கு விடத்தானே வேண்டும்? ஆகவே, அதுவரையிலும் அங்கத்தினர்கள் சபைக்குள்வர உரிமை இருக்கிறதா, இல்லையா என்று கேட்கிறேன்.

The resolution was again put and carried, the request for division not being pressed.

V.—GOVERNMENT BILLS.

(1) THE PUDUKKOTTAI (SETTLEMENT OF INAMS) SECOND AMENDMENT BILL, 1956.

The Hon. Sri M. A. MANICKAVELU : Sir, I beg to introduce the Pudukkottai (Settlement of Inams) Second Amendment Bill*, 1956, and move—

" That the Bill be taken into consideration at once."

This is a simple Bill which involves a slight change in the phraseology. The word used in the Act is ' lands '. It is reported that a certain inam grant in Pudukkottai covers only a quarry in a land, and that the use of the term ' lands ' will not include a quarry. That is why we want to substitute the words ' all such inams ' for the words ' all lands held on inam tenure '.

Another amendment provides for the publication of settlement particulars.

DEPUTY SPEAKER : Motion moved—

" That the Pudukkottai (Settlement of Inams) Second Amendment Bill, 1956, be taken into consideration at once."

Sri S. RAMALINGAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, புதுக்கோட்டையில் உள்ள இனாம்களை **settle** செய்து சென்னையில் இருக்கக்கூடிய சில சட்டங்கள் எல்லாம் அதற்கும் செல்லுபடியாகுமென்று சபை ஒத்துக்கொண்டிருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் இருக்கும் இனாம்-ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம், **Rent Reduction Act, Ryots Protection Act,** ஆகிய மூன்று சட்டங்களும், அவைகளுக்கும் செல்லுபடி ஆகும். இப்பொழுது சர்க்கார் ஒரு எஸ்டேட் மானேஜரை நியமித்திருக்கிறார்கள். மேலே குறிப்பிட்ட சட்டங்களை எல்லாம் அமுல் நடத்த, **Board of Revenue** விலிருந்து உத்தரவு வரவில்லை என்ற காரணத்தால், போலீஸ்காரர்களையும், அடியாட்களையும் வைத்து ரயத்துகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்துகிறார்கள் என்று எனக்கு செய்தி இடைத்திருக்கிறது. அங்குள்ள கிராமங்களில் சாகுபடி செய்கிற குடியானவர்களுக்கு **Rent Reduction Act** கீழ் கிடைக்கவேண்டிய சலுகைகளைக் கொடுக்காமல் பழைய பிரகாரமே குத்தகை வாரம் வாங்கிக்கொண்டு வருவதாகவும் எனக்கு செய்தி கிடைத்திருக்கிறது. ஆகவே ரயத்துகளை நிலத்தை விட்டு அப்புறப்படுத்தாமல் பாதுகாப்பதற்கும், **Rent Reduction Act** பிரகாரம் ரயத்துவாரி கிஸ்தி வசூல் செய்யப்பட வேண்டுமென்றும்,

* Published in the *Fort St. George Gazette*, dated 10th October 1956.

[Sri S. Ramalingam] [24th December 1956

எல்லா இனாம்களையும், இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் சர்க்காரே எடுத்துக்கொண்டு குடியானவர்களுக்கு பட்டாக்கள் வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

SRI V. BALAKRISHNAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, **Revenue** அமைச்சர் சொன்ன விஷயங்களை என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. இனாம் நிலங்களில் இருக்கிற நிலத்தை மட்டும் தான் ஏற்கெனவே இயற்றிய சட்டம் குறிப்பிடுகிறது. ஆனால், அந்த நிலத்திலுள்ள கல், பாறை முதலியவற்றை குறிப்பிடவில்லை என்று சொன்னார்கள். அப்படி என்றால் அங்கே இருக்கிற கல், பாறைகள் பொக்கிஷமாகக் கருதப்பட்டு வந்து அவைகளுக்கு என்று தனிக் கட்டணமும் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. எந்த இடத்தில் கல், பாறை இருந்தாலும் கூட அது ராஜ்ய சொத்தாகத்தான் கருதப்பட்டு வந்திருக்கிறது. தனிப்பட்டவர்களுக்கு உரிமை கிடையாது. கல், பாறையை உடைத்து விற்க வேண்டுமென்றால், அதற்காக விசேஷக் கட்டணம் செலுத்தி அரசாங்கம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டியிருந்தது. புதிய சட்டத்திற்குப் பிறகு எப்படி மாறியிருக்கிறது என்று தெரியாது. கல், பாறையை அரசாங்கச் சொத்தாகச் செய்யவேண்டுமென்று சொல்லுவதில் நியாயமிருக்கிறது. ஆகவே அதை ஆதரிக்கிறேன். நண்பர் ராமலிங்கம் அவர்கள் புதுக்கோட்டையிலுள்ள இனாம் நிலங்களையும், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள இனாம் நிலங்களையும் ஒண்ணடி மண்ணடியாகச் சேர்த்துச் சொன்னார். புதுக்கோட்டையிலுள்ள இனாம் நிலங்களில் குடியானவர்களுக்கு குடிக்காணி பாத்தியதை கிடையாது. இரு உரிமையும் நிலச்சுவான்தாருக்கு உரியது. குடிக்காணி பாத்தியமுள்ள நிலங்களை குடியானவர்களுக்குக் கொடுத்து, மேல்வார பாத்தியதை உள்ள நிலங்களை மேல் வாரதாரருக்குக் கொடுத்து, பட்டா வழங்கப்பட்டு, பக்கத்திலுள்ள அறந்தாங்கி தாலுகாவிலுள்ள கிராமங்களில் நடந்திருக்கிறது. புதுக்கோட்டையிலும் அவ்வாறுதான் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்களா? இருபது வருஷ காலமாக இருந்து வருகிறது. ரெவினியூ இலாகாவிடம் சட்ட பூர்வமாக வரிபோட ஆதாரம் இல்லை. அப்படி அவர்கள் கொண்டுவர வேண்டுமென்றால், உள்ளபடியே மற்றவர்களுக்குக் கொடுத்திருப்பதைப்போல் நஷ்டஈட்டைக் கொடுத்துவிடுவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை.

11-57 a.m. **THE HON. SRI M. A. MANICKAVELU** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இனாம் நிலங்களைப் பற்றி புதுக்கோட்டை தர்பார் செய்த விதிகளெல்லாம் இப்பொழுது இல்லை, எடுபட்டுப்போய்விட்டன. இப்பொழுது நம்முடைய ராஜ்யத்திலே இருக்கும் சட்டம்தான் அங்கும் அமுலில் இருக்கிறது. ஆகையால், விவசாயிகளை அப்புறப்படுத்துவதெல்லாம் இல்லை. இன்னும் பாதுகாப்பு இருக்கிறது. நிலங்கள் இன்னும் செட்டில்மெண்டு ஆகவில்லை. "செட்டில்மெண்ட்" ஆகிக்கொண்டிருக்கிறது. அதற்கிடையே என்ன ஒரு சங்கடம் ஏற்பட்டதென்றால், இந்தச் சட்டப் பிரகாரம் "இனாம் நிலம்" என்று இருக்கிறது. நிலம் என்று இருந்தால் க்வாரியைக் குறிக்கவில்லை. அதற்காக நிலத்தை விட்டு விட்டு, "இனாம்" என்றாலும், "க்வாரியை"க் குறிக்கும் என்று திருத்தம் செய்யப்படுகிறது. இனாம் சில க்வாரிக்கு மாத்திரம் கொடுத்திருக்கிறார்கள். அது ஒன்று தானே தவிர, மற்ற பிரச்னையெல்லாம் இதிலே எழவில்லை.

SRI S. RAMALINGAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இம்மாதிரி பாதிக்கக் கூடிய "க்வாரிகள்" எத்தனை? எத்தனை இனாம்தார்களைப் பாதிக்கிறது என்று மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதிகம் இல்லை. ஒன்று இரண்டு தான் இருக்கும்.

24th December 1956]

DEPUTY SPEAKER : The question is—

"That the Pudukkottai (Settlement of Inams) Second Amendment Bill, 1956, be taken into consideration at once."

The motion was put and carried, and the Bill was taken into consideration.

Clauses 2, 3 and 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : I move—

"That the Pudukkottai (Settlement of Inams) Second Amendment Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER : The question is—

"That the Pudukkottai (Settlement of Inams) Second Amendment Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS LAND REVENUE (SURCHARGE) SECOND AMENDMENT BILL, 1956.

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Land Revenue (Surcharge) Second Amendment Bill*, 1956, and move— 12 noon.

"That the Bill be taken into consideration at once."

The Madras Land Revenue Surcharge Act does not provide for appeals against the orders of the assessing authority. It has been brought to the notice of the Government that there should be provision for filing of appeal. The Government have examined it and consider that such a provision should be made. The Bill fulfils that object.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Land Revenue (Surcharge) Second Amendment Bill, 1956, be taken into consideration at once."

***SRI P. S. KRISHNASWAMY AYYANGAR** : எந்தக் கோர்ட்டில் அப்பீல் நடத்தப்படுகிறதோ, அந்தக் கோர்ட்டுக்கு கட்சிக்காரருக்கு கோர்ட் உத்தரவின் நகலைக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. "கொடுக்கலாம்" என்றால், ஜட்ஜ் தன்னுடைய இஷ்டப் பிரகாரம் கொடுக்கலாம், அல்லது கொடுக்காமலும் நிறுத்திக்கொள்ளலாம். ஆகவே, "கொடுக்கலாம்" என்பதற்குப் பதிலாக "கொடுக்கவேண்டும்" என்று இருக்க வேண்டும். அதாவது

"The Appellate Officer or authority may, at the conclusion of the appeal communicate the orders passed in the appeal to the assessee and to the officer who made the assessment."

என்பதிலுள்ள 'may' என்ற பதத்திற்குப் பதிலாக 'shall' என்று மாற்றிவிட்டால் அப்பீல் செய்துகொண்டவருக்கு சௌகர்யமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினருக்கு இப்பொழுது கொஞ்சம் மறதி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஏனென்றால், சட்டத்திலே 'may' என்னும் பதம் 'shall' என்னும் பதத்தின் அர்த்தத்தைக் குறிக்கும் என்று அவருக்கும் தெரியும். 'May' என்ற பதமே இருப்பதனால் ஒன்றும் பாதகமில்லை.

* Published in the *Fort St. George Gazette*, dated 12th December 1956.

* SRI P. S. KRISHNASWAMY AYYANGAR : ஒரு வார்த்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி 'may' என்னும் பதத்திற்கு 'செய்யலாம்' என்றும் செய்யவேண்டும் என்றும் அர்த்தம் உண்டு. ஆனால், 'செய்யவேண்டும்' என்ற அர்த்தம் இங்கே எப்படிப் பொருந்தும்? 'செய்யவேண்டும்' என்ற அர்த்தம் வராது. ஆகையால்தான் 'may' என்பதை 'shall' என்று மாற்ற வேண்டுமென்று நான் யோசனை தெரிவித்தேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Land Revenue (Surcharge) Second Amendment Bill, 1956, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 1 and Preamble were separately put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras Land Revenue (Surcharge) Second Amendment Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Land Revenue (Surcharge) Second Amendment Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS GENERAL SALES TAX (FOURTH AMENDMENT) BILL, 1956.

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras General Sales Tax (Fourth Amendment) Bill*, 1956, and move—

"That the Bill be taken into consideration at once."

At present, the sale of bullion and specie is liable to tax, at the single point only, at the rate of one-fourth of one per cent of the turnover. In Mysore there is already a single point tax of one-half of one per cent. In Andhra, the Government have recently amended their Act so as to increase the rate of single-point tax from one-fourth of one per cent to one-half of one per cent. In order to fall in line with the neighbouring States and also with a view to increase the revenues of the State it is proposed to amend the Act as indicated. Sir, I may mention here that the notice of this Bill was given even during the last session but we did not proceed further because at that time the Andhra Government was not having the enhanced rate. We thought we could wait and see how things shaped themselves there. Now since all the neighbouring States such as Mysore and Andhra are having the higher rate I think it is better that we also fall in line with the state of affairs existing in those States.

---

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 15th December 1956.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras General Sales Tax (Fourth Amendment) Bill, 1956, be taken into consideration at once."

12-05 p.m.

SRI S. RAMALINGAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே; இந்த வரியை உயர்த்த வேண்டுமென்ற யோசனை இப்பொழுது புதிதாகக் கொண்டுவரப்பட்டது அல்ல. ஏற்கெனவே சபைமுன்பாக வந்தது. பிறகு பொறுக்குக் கமிட்டிக்கும் விடப்பட்டது. இதைபற்றி மிகத் தீவிரமாக விவாதம் செய்து, தங்கம், வெள்ளி போன்றவைகளுக்கு ஏற்கெனவே இருந்த வரியை மேலும் உயர்த்தவேண்டாமென்று கைவிடப் பட்டது. ஏற்கெனவே அவர்கள் லைசென்சாகக் கட்டிவந்த தொகையினுல் உயர்ந்த வருமானம் வருகிறது. இப்பொழுது வரியை உயர்த்தினால் அவர்களை மிகவும் பாதிக்கும். மைசூர், ஆந்திர ராஜ்யங்களில் இம்மாதிரி செய்திருக்கிறார்கள், ஆகவே நாமும் செய்வோம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. உயர்த்தாத ராஜ்யமும் இருக்கிறது. கேரள ராஜ்யத்தில் உயர்த்தாமல் இருக்கிறார்கள். கனம் அமைச்சரவர்கள் கேரள ராஜ்யத்தை ஏன் இது சம்பந்தமாக உதாரணமாகக் கொள்ளக்கூடாது என்று கேட்கின்றேன். ஏற்கெனவே, இது சம்பந்தமாக அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டிய பிறகு, லைசென்ஸ் கட்டணத்தை உயர்த்தி, வரி உயர்த்தும் யோசனையைக் கைவிட்டார்கள். ஆனால் இப்பொழுது மீண்டும் அவர்களுடைய பழைய யோசனைப்படியே நடக்கவேண்டுமென்று இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுது இப்படிக் கொண்டு வருவது சரியல்ல. ஏனென்றால், கனம் நிதி அமைச்சரவர்கள் வரவு செலவுத் திட்டத்தை சபை முன்பு சமர்ப்பித்தபோது, இதை இடைக்கால பட்ஜெட்டாகவே சமர்ப்பிக்கிறோம், பின்னால் வேண்டிய வரிகளை உயர்த்துவதோ, மாறுபாடு செய்வதோ தேர்தலுக்குப் பிறகு வரும் புதிய சர்க்கார் அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும், ஆகவே, புதிதாக வரி போடப்போவது இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இப்பொழுது புதிதாக வரி எப்படியும் போட்டுவிட்டுத்தான் போவது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. போகிற போக்கில் எதையாவது போட்டு விட்டுப் போக வேண்டுமென்று செய்வது போல் தெரிகிறது. 'இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்' என்று சொல்லுவது உண்டு. அதைப் போல, இருக்கும்போதும் வரி, போகும்போதும் வரி என்பது ஏன்? இந்த வரி வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி சர்ச்சை செய்து, இன்னும் என்ன இனத்தில் வருமானத்தை உயர்த்தமுடியும் என்பதையெல்லாம் புதிய சர்க்காரும் புதிய சட்ட சபையும் யோசித்துக் கொள்ளட்டுமே. ஏன் கடைசி காலத்தில் இந்தப் புதிய வரி போட்டு விட்டுப் போகவேண்டும்? ஆகவே, இந்த மசோதாவை நிறைவேற்றாமல் இப்படியே விட்டு விட்டுப் போகுமாறு சர்க்காருக்கு யோசனை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் நிதி அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறபடி இந்த சர்க்கார் புதிதாக வரி ஒன்றும் போடப்போவதில்லை. இந்த வரியானது கனம் அங்கத்தினர் சொல்வதுபோல் புதிதாக ஏற்பட்டது அல்ல. ஏனென்றால், இப்படிப்பட்ட வரி போட வேண்டுமென்று சர்க்கார் ஏற்கெனவே தீர்மானம் செய்திருந்தது. மசோதாவை அப்பொழுதே கொண்டு வரலாமென்றுதான் எண்ணியிருந்தோம். ஆனால், அக்கம்பக்கத்து ராஜ்யங்களில் எப்படிச் செய்கிறார்கள் என்பதைப் பார்த்துக்கொண்டு செய்யலாமே என்பதில் தாமதமாயிற்று.

இந்த 'ரேட்டை' அதிகபபடுத்தும் யோசனை இருக்கும்போதே தங்கம், வெள்ளி நகைகளுக்கு அதிகப்படி வரி போடவேண்டுமென்ற உத்தேசம் இருந்தது. அதைக் கைவிட்டோம். அதைக் கைவிட்டதால், 'புலியின்' மேல் அதிகப்படுத்தலாமென்று ஒரு விதமாக வியாபாரிகள் ஒப்புக்கொண்டதன் பேரில், எல்லோருடைய அனுமதியின் பேரில் தான் இந்த மசோதா வருகிறது. ஆகவே, புதிது புதிதாக வரி போடும் வேலை இல்லை.

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras General Sales Tax (Fourth Amendment) Bill, 1956, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 1 and Preamble were each separately put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU: Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras General Sales Tax (Fourth Amendment) Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras General Sales Tax (Fourth Amendment) Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. on Wednesday, the 26th December 1956.

The House then adjourned (12-10 p.m.).

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, 26th December 1956.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at nine of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTHAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

DEPUTY SPEAKER: Questions and answers. Short notice question No. 13.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, Question No. 420 may also be taken up along with this Short Notice Question.

DEPUTY SPEAKER: Yes, they may be taken up together.

Second Co-operative Milk Supply Society at Arungal village

* 13 *S.N. Q.*—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a Second Co-operative Milk Supply Society was registered in Arungal village, Chingleput taluk; and

(*b*) whether the new society is working efficiently?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir. A second society has been registered and started on its work in October 1956.

(*b*) As the society started on its work only in October last, the efficiency of the working of the society can be judged only after some more time.

* 420 *Q.*—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a second milk supply co-operative society has been registered and opened at Arungal village in Chingleput district in July 1956; and

(*b*) if so, the reasons for registering a second society?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir. A second society has been registered and started on its work in October 1956.

(b) The Board of Directors of the old society refused admission into the society certain applicants whose names were forwarded by the Deputy Registrar to the President of the Society.

SRI K. VINAYAKAM : Sir, what is the policy adopted by the Department in giving permission to register a second Society when there is already one society which is struggling for its existence and which is not in a position to turn out good business and make the Co-operative Movement a success? Such being the case, why should another society be permitted to register and thus compete with the society already in existence?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Whether it is the milk supply co-operative society or any other society like the Weavers' Co-operative Society, the main basis which is taken into consideration by the Government while registering another society is if a particular society would unreasonably refuse to admit other members into the society. But departmental officers do make efforts to patch up the differences and make the society admit members unless there are certain valid objections to those particular members. Of course, under the bye-laws, a society is free to admit or refuse to admit new members but if it is found that it is unreasonably refusing to admit new Members, the Government permit the formation of another society.

SRI K. R. VISWANATHAN : Sir, I am told that a handful of self-interested and self-seeking persons of high caste tried to enter into the Arungal Co-operative Milk Supply Society as Members and get hold of the administration but when their efforts could not succeed, they managed to get a second society registered with the help of the Deputy Registrar and Registrar of Co-operative Societies who happened to belong to the same caste as that of the self-seeking persons. May I know whether it is not the fault of the officers concerned to have registered two societies in the same small village and as a result to have kindled the communal passion to a high pitch, and fanned the communal faction in the village and if so, will the Government take suitable action against the officers concerned?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have no information about the caste or sub-caste of the various people concerned, viz., shareholders, applicants and members. Perhaps I may have some information about the caste of particular persons but not all persons. In fact I do not know the community to which the Joint Registrar concerned belongs. The information that I have with me is that there were complaints that this particular society was not admitting new members. Then the Joint Registrar held an enquiry and tried to persuade the society to admit them. Then, it is reported, that the office-bearers of the society agreed to admit certain interested persons but objected to certain other persons. The Registrar agreed to that but afterwards complaints were received that out of the 32 applicants, only 11 were admitted as new Members. Thereupon the Joint Registrar again discussed the matter with the society and tried to persuade them to admit

other members but the society was adamant. Others insisted on their being admitted into the society and when the matter could not be settled, the Joint Registrar felt that they could permit the formation of another society.

SRI M. KALYANASUNDARAM : கோவாப்ரேடிவ் சொஸைட்டிகளின் கொள்கைகளை நான் புரிந்திருக்கக்கூடிய வகையில் ஒரே நோக்கத்தோடு இயங்கக் கூடிய இரண்டு சொஸைட்டிகள் ஒரே பிரதேசத்தில் பதிவு செய்வதில்லை யென்பது திட்டவட்டமான கொள்கை என்று இருந்தும் குறிப்பிட்ட இந்த ஊரில் மட்டும் பால் சொஸைட்டிகள் இரண்டு இருக்கின்றன. அதுவும் 20.30 அங்கத்தினர்கள்தான் சொஸைட்டியில் இருக்க முடியும். அந்த ஊரும் சிறிது. அதில் இவ்வளவு அக்கரை எடுத்து "ஜாயின்ட் ரெஜிஸ்ட்ரார்" இரண்டு சொஸைட்டிகளை பதிவு செய்ததின் காரணமென்ன? இந்த ராஜ்யத்தில் இப்படி ஏதாவது இரண்டு சொஸைட்டிகள் எங்கேயாவது பதிவு செய்யப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த இரண்டாவது சொஸைட்டி பதிவு செய்யப்பட்டதின் காரணத்தை இப்பொழுதுதான் விளக்கினேன். வேறு சில இடங்களிலும் இவ்வாறு இரண்டாவது சொஸைட்டிகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பது மட்டும் எனக்கு தெரியும். ஒன்று, தென்காசி தாலூகாவில் உள்ள நெசவாளர் சொஸைட்டி. அங்கும் அபிப்பிராயபேதங்கள் இருந்தன. அப்பொழுது இரண்டாவதொன்றை பதிவு செய்யவேண்டி வந்தது. அப்பொழுதிருந்த அமைச்சருக்கு தகவல் வந்து அதற்கு ஸ்டே ஆர்டர் கொடுத்திருந்தார். அதற்கப்புறம் அப்படி ஸ்டே ஆர்டர் கொடுத்தது தவறு, எதற்காக நிறுத்தி வைக்கிறீர்கள் என்று புகார் சொன்னார்கள். நான் திருநெல்வேலிக்குச்சென்றபோது அதைப்பற்றி விசாரித்ததில் ஸ்டே ஆர்டரை நீக்கி அதற்கு அனுமதி கொடுக்கவேண்டிய அவசியமிருக்கிறதென்று எனக்குப் புலப்பட்டது. இன்னும் அது முடிவு செய்யப்படவில்லை. அதுமாதிரி வேறொரு இடத்தில், அதுவும் நெசவாளர் சொஸைட்டிதான் அதற்கும் அவசியமிருக்கிறதென்று எனக்கு புலப்பட்டிருக்கிறது.

SRI A. M. RATHNASWAMY : I presume, Sir, that only after making a detailed enquiry into the charges levelled against the President and the Directors of this Co-operative Society that the Government came to the conclusion that there was no need for the formation of a fresh Co-operative Society for carrying on this milk business. Unfortunately, my information is that instead of running the society for the benefit of the people of that village as a whole, communal matters have crept into the affairs of the society. The President and members of the society have made the business of selling milk through the society as their own family business. That is why I understand an officer of the status of the Joint Registrar has been deputed by the Government to make a detailed enquiry into the . . .

DEPUTY SPEAKER : May I know whether the hon. Member is making a speech?

SRI A. M. RATHNASWAMY : My question is whether it is not a fact that only after a thorough and detailed enquiry into the various charges levelled against the management of the society they had come to the conclusion that there was a need for starting another society for the benefit of the people of that village?

[26th December 1956

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have already given the information that I have with me. I do not have with me further information about it. Perhaps the hon. Member who has put the long supplementary question has some further information. I have no other idea about the matter. There was nothing wrong in the Co-operative Department permitting the formation of a new society. I myself do not know where this village Arungal is. In view of the fact that so many questions have been raised relating to that society, I shall further look into the matter, and I shall discuss the matter with the Registrar. Now, I see that there were factions, that there were communal factions and all sorts of things. I do propose to look into that question personally and see whether the Government can do anything else.

SRI K. VINAYAKAM: May I know whether it is not a fact that the inspecting officer, namely, the Joint Registrar of Co-operative Societies, after going through the entire affair has recommended that no second society should be registered and if it is registered it will be criminal and will be against the principles of co-operation and that on the top of that report it is the Registrar of Co-operative Societies who gave permission to go ahead with the registration of another society?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The information that I have with me is that it is on the report and on the recommendation of the Joint Registrar of Co-operative Societies the formation of the second society was agreed to.

SRI S. DAIVASIGAMONEY: I would like to know, Sir, whether the starting of a new milk supply co-operative society would not adversely affect the proposal of the Government to start a new milk supply colony themselves in Chingleput district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not think that the Government have any proposal to start any milk supply society themselves in Chingleput district.

SRI V. BALAKRISHNAN: இன்னொரு ஸ்தாபனம் வேண்டுமென்று ஜாயின்ட் ரெஜிஸ்ட்ராருடைய சிபாரிசு என்ன அடிப்படையில் செய்யப்பட்டது? முன் நிர்வாகம் சரியாக நிர்வகிக்கப்படவில்லை என்ற காரணத்திற்காகவா அல்லது பால் விற்பனையை அபிவிருத்தி செய்வதற்காக மற்றொரு ஸ்தாபனம் அவசியம் என்ற காரணத்தினலா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் முன்பே விளக்கினேன் ஜாயின்ட் ரெஜிஸ்ட்ரார் சிபாரிசு செய்ததின் முக்கியமான காரணம் என்னவென்றால் இன்னும் பல பேர்கள் அதில் சேர வேண்டும் என்று கேட்டபோது முதல் ஸ்தாபனம் மறுக்கின்றது. அதனால் இன்னொரு ஸ்தாபனம் வேண்டுமென்று சொன்னதின் பேரில் இன்னொரு ஸ்தாபனம் அமைக்கப்பட்டது.

SRI S. RAMALINGAM: ஸார், கனம் மந்திரி அவர்கள் முன்னிருந்த முதலாவது ஸொஸைட்டி புதிய அங்கத்தினர்களை சேர்க்க மறுப்பதின் காரணமாக புதிய ஸொஸைட்டி ஏற்படுத்தப்பட்டது என்று கூறுகிறார்கள் உண்மையிலேயே புதிய அங்கத்தினர்களை அந்த ஸொஸைட்டி சேர்க்க மறுத்தால் அந்த ஸொஸைட்டியின் அல்லது "போர்ட் ஆப் டாரக்டர்ஸ்" பேரில் விசாரணை நடத்த ஒரு ஸ்பெஷல் ஆபீஸரை நியமித்து விசாரணை செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?

26th December 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதைப்பற்றி முன்பே விளக்கியிருக்கிறேன். இந்த ஸொஸைட்டியின் பைலாவின்படி எந்த அங்கத்தினரை வேண்டுமானாலும் அவர்கள் சேர்ப்பதற்கு மறுக்கலாம். அதனால் அந்த ஸொஸைட்டியை நாம் நிர்ப்பந்திக்க முடியாது.

Pest attack in Tanjore district

*14 *S.N. Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri P. Venkatesha Sholagar): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that there was a pest attack called 'kulai noi' on the standing crops of paddy in Tanjore district recently;

(*b*) if so, the extent of the damage and the acreage affected; and

(*c*) what preventive measures were taken or are proposed to be taken by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) Although there was no report of attack of 'kulai noi' (Blast) in Tanjore district, there were reports about attack by 'Thrips' and 'Jassids' in the district and consequently the whole of the Tanjore district has been declared as pest affected and pesticides and fungicides are sold at half price to ryots for use against the pest attack.

SRI S. RAMALINGAM: ஸார், இன்று தஞ்சை ஜில்லாவில் நோய் பெருவாரியாக இருப்பதாலும் பெருவாரியான பூச்சிகள் விழுவதாலும் விவசாயிகள் பூராவும் பாதிக்கப்படுகிறார்கள். கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள், விவசாயிகளுக்கு அரை விலைக்கு மருந்து கொடுத்து வருகிறது என்று. ஆனால் அங்கு மருந்து தெளிப்பதற்கு போதிய கருவிகள் இல்லை. அதனால் பல விவசாயிகள் கருவிகளை இரவலாக வாங்கி உபயோகித்து வருகிறார்கள். இதனால் ஒரு பக்கம் தெளித்து வருவதற்குள் அடுத்தாற்போலுள்ள வயலில் பூச்சிப் போய்விடுகிறது. இப்படி பல கஷ்டங்கள் இருக்கிறது. ஆதலால் ஒரே சமயத்தில் சேர்ந்தால் போல் பூராவும் மருந்து தெளிப்பதற்கு ஏரோப்பிளேனை உபயோகிக்க சர்க்காருக்கு ஏதாவது ஆலோசனை இருக்கிறதா? இப்படி உபயோகிப்பதால் இந்த விதமான கஷ்டங்களை போக்கமுடியும் என்று சர்க்கார் கருதுகிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஏரோப்ளேனை எல்லாம் உபயோகிக்க நமக்கு ஆற்றல் இருக்கின்றது என்று எனக்கு தோன்றவில்லை. மற்ற வெளி நாடுகளில் இதை உபயோகித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் ஸ்ப்ரே கருவிகள் விஷயத்தில் இன்னும் அதிகமாக கருவிகள் கொண்டு வருவதற்கு சர்க்கார் கவனம் செலுத்தி வருகிறது. கூட்டுறவு சங்கங்களிலும் இதை வாங்கி வைத்து விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி வருகிறேன்.

SRI S. SWAYAMPRAKASAM: இந்த நோயை தடுப்பதற்காக அரசாங்கம் எவ்வளவுதூரம் மருந்து வாங்கியிருக்கிறார்கள்? எவ்வளவு தூரம் அதை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்?

[26th December 1956

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்காக 30 ஆயிரம் ரூபாய் சர்க்கார் ஸாங்ஷன் செய்தது. இதை கன்ஸெஷன் வகையில் 30 ஆயிரம் ரூபாயும் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI K. T. RAJU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விமானத்தின் மூலம் மருந்து தெளிப்பது வெளி நாடுகளில்தான் நடந்து வருவதாக சொன்னார்கள். வட நாட்டில் ஐக்கிய மாகாணத்தில் இந்த மாதிரி விமானத்தில் மருந்து தெளித்திருக்கிற விபரம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா? அதை ஏன் நமது மாகாணத்திலும் பரீட்சை செய்து பார்க்கக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI S. DAIVASIGAMONEY : It is not sufficient, Sir, if only insecticides are supplied to farmers; but proper sprayers also must be supplied. It is reported that sprayers are not available when they are required. May I know whether there are sufficient sprayers which can be distributed to the farmers in Tanjore district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have answered the position in Tamil already.

SRI S. VADIVELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மருந்து கொடுக்கும் விஷயத்தில் அதிகமாகவும் பெரிய மிராசுதார்களுக்கும் பெரிய நிலச்சுவான்தார்களுக்கும்தான் கிடைத்து வருகிறது. ஆதலால் இதர சாதாரண சாகுபடியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் அதிகமாகக் கொடுப்பதற்கு சர்க்கார் வழி செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மருந்து கொடுக்கும் விஷயத்தில் மிராசுதார்கள் என்றும் சாகுபடியாளர்கள் என்றும் உள்ள வித்தியாசம் சர்க்காரைப் பொறுத்தமட்டில் இல்லை.

Total cost on account of Non-gazetted Government Officers

-20 m. * 418 Q.—SRI P. JEEVANANDAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the total amount of salary, dearness allowance and house-rent allowance paid to different categories of Non-gazetted Government Officers each separately?

THE HON. SRI C. SUBRAMANIAM : The cost on account of the pay and allowances of the Non-gazetted Government servants is as shown below :—

	(RS. IN LAKHS.)
Pay	970
Dearness allowance	350
House-rent allowance	56

The figures are approximate.

The compilation of separate figures for the different categories of Non-gazetted Government servants as required in the question will involve much labour and time. The figures for last grade employees alone are given in answer to a separate question by the same hon. Member. The figures now given relate to the State of

26th December 1956]

Madras prior to its reorganization from 1st November 1956 and do not take into account the enhancement in dearness allowance sanctioned from 1st November 1956 at a cost of about Rs. 80 lakhs per annum for Non-gazetted Government servants alone.

Sir, with your permission, I shall answer the next question also.

DEPUTY SPEAKER : Yes.

Total cost on account of last grade employees

* 419 Q.—SRI P. JEEVANANDAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the total amount of salary, dearness allowance and house-rent allowance paid during 1955–56 to the last grade employees in the State, each separately?

THE HON. SRI C. SUBRAMANIAM : The total amount of pay and allowances paid during 1955–56 to the last grade employees in the State is as follows :—

	(RS. IN LAKHS.)
Pay	66
Dearness allowance	56
House-rent allowance	13

The figures are only approximate.

SRI V. BALAKRISHNAN : பஞ்சப்படி, வீட்டு அலவன்ஸ் முதலியவைகள் கெஜட் பதிவு பெறாத உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கும்போது ஒவ்வொரு ரகமாகப் பிரித்து அப்படி கொடுக்கப்படுகிறதா? ஏனென்றால் திருச்சியில் கிரிமினல் கோர்ட், சிவில் கோர்ட்டுகளில் வேலை பார்க்கும் காப்பிஸ்டுகளுக்கு வீட்டு அலவன்ஸ் கொடுப்பதாகத் தெரியவில்லை. ஆனால் மற்ற இடங்களில் வேலைபார்ப்பவர்களுக்குக் கொடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது. அதனால் கெஜட் பதிவு பெறாத உத்தியோகஸ்தர்களில் ஒரு இடத்தில் ஒரு விதமாகவும் மற்றொரு இடத்தில் மற்றொரு விதமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : வீட்டு அலவன்ஸ் சில நகரங்களில் மட்டும்தான் கொடுக்கப்படுகிறது. எல்லா நகரங்களுக்கும் கொடுக்கப்படுவது இல்லை. ஒரு நகரத்தில் இருக்கக் கூடிய எல்லா பகுதவர்களுக்கும் இருக்கிறமாதிரி அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம்.

SRI M. KALYANASUNDARAM : கனம் மந்திரி அவர்களுக்கு விவரம் ஞாபகத்தில் இல்லை என்று நினைக்கிறேன். வீட்டு வாடகை அலவன்ஸ் எல்லா நகரத்திலும் காபிஸ்ட்டுகளுக்கு கிடையாது என்பது கனம் மந்திரி அவர்களுக்கு ஞாபகத்தில் இல்லை என்று நினைக்கிறேன். ஆனால் கனம் மந்திரி அவர்கள் தங்களுடைய பட்ஜெட் பிரசங்கத்தில் இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதாவது—

Copyists and Examiners in Criminal Courts will be put on regular scales of pay instead of being paid on the basis of piece-work.

இதைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் தன்னுடைய பட்ஜெட் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார். அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[26th December 1956

THE HON. SRI C. SUBRAMANIAM: எந்த நடவடிக்கை எடுக்கப்படுமோ அதைப்பற்றிதான் பட்ஜெட் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறேன். அதுவே அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

SRI N. K. PALANISAMY: மலபார் பிரிவதற்கு முன்னதாக மலபாருக்கு அதிகமாக செலவு செய்து கொண்டிருந்தோம். அவர்கள் பிரிந்து போன பிறகு அந்தப் பணத்தை எடுத்து என்.ஜி.ஓ.-களுக்கு செலவு செய்யலாம் என்று சொன்னார். ஆகவே அந்தப் பணம் பூராவையும் எடுத்து என்.ஜி.ஓ.-களுக்குச் செலவு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் தமிழில் நிகழ்த்திய பிரசங்கத்தை அவர் கேட்டிருப்பார் என்று நினைக்கிறேன். மற்றும் அவருக்கு இங்கிலீஷ் நன்றாகப் புரியும். அதையும் அவர் படித்திருப்பார் என்றே நினைக்கிறேன். மலபார் போன பிறகு நமக்கு கன்யாகுமரி ராஜ்யம் வந்திருக்கிறது. அதற்கு என்று நாம் அதிகமாக செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. மலையாள பிரதேசத்திற்கு நாம் செய்து வந்த பணம் இப்பொழுது அந்த ராஜ்யத்திற்கு செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனால் ஒன்றுக்கு ஒன்று சரியாகப் போய்விடுகிறது. நமக்கு மிச்சம் ஏற்படவில்லை என்று சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு ஒரு கோடி 93 லட்சம் ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கிறோம், அத்துடன் அதிகப்படியாக பஞ்சப்படி வேறு கொடுக்கப்படுகிறது.

SRI M. KALYANASUNDARAM: இப்பொழுது நமது ராஜ்யத்தில் விஜயம் செய்து பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் மத்திய அரசாங்க நிதி மந்திரி அவர்கள் பொதுவாக என்.ஜி.ஓ.-களுக்கும், கடை நிலை சிப்பந்திகளுக்கும் பஞ்சப்படி அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வருகிறார். அதற்காக ராஜ்ய சர்க்காருடன் அவர் யோசனை செய்து கொண்டிருப்பதாகவும் சொல்லுகிறார். அத்துடன் அவர் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் நூறு ரூபாய்க்கு குறைவாக சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களுக்கு பஞ்சப்படி அதிகமாக பன்னிரெண்டு ரூபாய் கொடுப்பதற்குத்தான் யோசனை செய்து கொண்டிருப்பதாகவும் சொல்லி இருக்கிறார். உண்மையிலேயே அதை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு நம்முடைய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: பிரசங்கங்களின் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளமுடியாது. அதற்கு என்று அதிகார பூர்வமாக மத்திய அரசாங்கத்தினிடமிருந்து நமக்கு கடிதம் வர வேண்டும். அதையும் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

SRI M. KALYANASUNDARAM: இப்படியெல்லாம் மத்திய சர்க்கார் மந்திரி நம் ராஜ்ஜியத்தில் வந்து பிரசங்கம் செய்வதற்கு அதுவும் நம்முடைய சிப்பந்திகளை கூட்டி வைத்துக்கொண்டு இப்படியெல்லாம் சொல்வதற்கும் நமது ராஜ்ய சர்க்கார் அவருக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்களா ? ஒரு சந்தர்ப்பத்தில் ரயில்வே ஊழியர்கள் பொன்மலையில் ஒரு மகாநாடு கூட்டினார்கள். அப்பொழுது நமது முதல் மந்திரி காமராஜும், தொழில் மந்திரி அவர்களும் அந்த மகாநாட்டிற்கு விஜயம் செய்வதாக இருந்தது. அப்பொழுது மத்திய அரசாங்க மந்திரி அதில் குறுக்கிட்டு அந்த மகாநாட்டிற்கு இவர்கள் போகக்கூடாது என்று தடுத்திருக்கிறார்கள். இப்பொழுது நமது சிப்பந்திகளை மத்திய அரசாங்க மந்திரி அவர்கள் கூட்டி வைத்துக்கொண்டு பேசுகிறார். அவர்கள் செய்தது போலவே இந்த ராஜ்ய சர்க்காரும் அவரைத் தடுத்து அந்த மாதிரி பேசக்கூடாது என்று குறுக்கிட்டு சொன்னார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

26th December 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்த மகாநாட்டிற்குச் செல்லவும் இல்லை. அப்படி மத்திய அரசாங்க மந்திரி எங்களைத் தடுக்கவும் இல்லை, மந்திரி குறுக்கிடவும் இல்லை. இதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் கலியாணசுந்தரம் அவர்கள் சொல்லுவது சரியல்ல வேறு எதையோ அவர் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இதைப்பற்றி சொல்லுகிறார் என்று நினைக்கிறேன். இன்னொரு விஷயத்தைப்பற்றி சொல்லுகிறேன். இதற்கு முன்னதாக நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் இதைப்பற்றி பேசப்பட்டது. அப்பொழுது இதைப்பற்றி சர்ச்சை செய்யப்பட்டது. அதற்குப் பிறகு மத்திய அரசாங்கத்திற்கு ரிபோர்ட் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த ரிபோர்ட்டைப்பற்றி ஒருகால் அவர் குறிப்பிட்டிருக்கலாம். அங்கு நான் யோசனை சொன்னேன். இங்குள்ள நிதியைப்பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. அதைப்பற்றிதான் யூனியன் மந்திரி தகவல் வெளியிட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். ஆகவே ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வது என்பது இல்லை. ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ள வேண்டும் என்று கனம் அங்கத்தினர் மூட்ட விட வேண்டியதும் இல்லை. இன்றைக்கு உள்ள நிலைமையில் எல்லோரும் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டியதுதான. ஆகவே ஒருவருக்கொருவர் மூட்டிக்கொள்வதற்கு அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று மட்டும் கேட்டுக்கொள்ளுகிறேன். (கரகோஷம்.)

***420 Q.—Taken up along wi h S.N. Q. 13.)**

The Madras Milk Supply Union

***421 Q.—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for A riculture be pleased to state—**

(a) whether the Government have received any complaint from certain members of the Madras Milk Supply Union about the misappropriation of Union funds and use of faulty measures ;

(b) if so, the action taken thereon ;

(c) the persons responsible therefor ; and

(d) whether any officer ha, been deputed to enquire into the allegation ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No specific cases of misappropriation of Union funds and use of faulty measures have been brought to the notice of Government by the members of the Madras Milk Supply Union. Some general complaints about the misuse of the funds of the Union have been received by the Registrar of Co-operative Societies.

(b) The Registrar of Co-operative Societies is examining the complaints received by him.

(c) Does not arise in view of answer to clause (b).

(d) No. The Deputy Registrar. Madras, has been asked to make enquiries and report.

SRI V. BALAKRISHNAN: அந்த ஸ்தாபனத்தில் ஏதாவது குற்றம் குறைகள் ஏற்பட்டு அவைகளை விசாரிக்க அந்த ஸ்தாபனத்தில் ஏற்கனவே உத்தியோகஸ்தராக இருந்தவரையே அந்தக் குற்றங்களைப்பற்றி விசாரிக்கச் சொல்லாமல் வேறு ஒரு டிபுடி ரிஜிஸ்தராரை நியமித்து அவைகளைப்பற்றி விசாரணை செய்யும்படி கனம் மந்திரி அவர்கள் செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது டிபுடி ரிஜிஸ்தராராக இருக்கிறவர் எற்கனவே அந்த ஸ்தாபனத்தில் காரிய தரிசியாக இருந்தவர். இப்பொழுது அரசாங்க அதிகாரி என்ற ஹோதாவில் அவர் விசாரிப்பார். காரியதரிசியாக இருந்தாலும்கூட அவர் விசாரிக்கக் கூடாது என்று அரசாங்கம் கருதவில்லை. அவர் விசாரணை செய்து ரிபோர்ட் வந்த பிறகு அதைப் பரிசிலனை செய்து அது சரியா இல்லையா என்று பார்க்கப்படும். அது சரியில்லை யென்றும் அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

SRI K. R. VISWANATHAN : May I know whether any complaints were received by the Government from the societies affiliated to the Madras Milk Supply Union to the effect that the Deputy Registrar had a hand in the mismanagement of the funds of the Union ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

SRI M. KALYANASUNDARAM : அந்தப் புகார்களைப்பற்றி நகல் கையெழுத்திட்டக் காபிகள் என்னிடம் இருக்கின்றன. அதில் கையெழுத்துப் போட்டிருக்கக் கூடியவர்கள் எல்லோரும் பெரிய சங்கங்கள் சம்பந்தப்பட்ட தலைவர்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்து புகார்கள் வந்திருப்பதால் நிர்வாக அதிகாரிகளை நியமித்து அவைகளைப்பற்றி விசாரணை நடத்தாமல் வேறு ஜுடிஷியல் ஆபீசர்கள் யாரையாவது நியமித்து அந்த விசாரணையை நடத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் எதிர்க் கட்சி உபதலைவர் அவரிடமுள்ள கையெழுத்திட்ட கடிதங்களை என்னிடம் கொடுத்தால் அவைகளை கவனித்து எந்த மாதிரி விசாரிப்பது, என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்யும்.

SRI M. KALYANASUNDARAM : இந்த சபையின் மூலமாக நான் அந்தக் கடிதங்களை கனம் மந்திரி அவர்களிடம் கொடுக்கிறேன்.

(கடிதங்கள் கனம் விவசாய மந்திரி அவர்களிடம் சபையின் முன்னால் கொடுக்கப்பட்டன.)

SRI M. PALANIYANDI : பால் பெருகவேண்டும், மக்கள் அதிகமாக பால் அருந்த வேண்டும் என்றெல்லாம் பிரசாரம் செய்து கொண்டு வருகிறார்கள். இந்த நிலைமையில் திருச்சியில் உள்ள நிர்வாகத்தில் பல தவறுகள் நடைபெறுகின்றன. அவைகளைப் பற்றி மத்திய நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தினாலும்கூட அதைப்பற்றி சீக்கிரமாக நடவடிக்கை எடுப்ப தில்லை. தலைவர்கள் பொறுப்புள்ளவர்களாக இருக்கவேண்டும். அதனால் அங்கு புகார்களைப்பற்றி சீக்கிரம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதற் கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட பால் சங்கத்தைப்பற்றி எனக்கு தகவல் கொடுத்தால் அதைப் பற்றி மேலும் கவனம் செலுத்துகிறேன்.

SRI K. VINAYAKAM : In view of the importance of this issue I request you to allow an half-hour debate so that we may explain further to the Minister concerned the faulty methods that are being adopted by the Union. Though the Union is manned by some responsible people, they are afraid of an officer because he has got a big pull with the Minister and the Cabinet. That is why the entire thing fizzles out even after enquiry. I gave a petition of this type to the former Minister for Co-operation Sri A. B. Shetty, but nothing came out. That is the reason why this question comes up before the House often.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I must submit, Sir, that this is the usually flippant and irresponsible way in which motives are attributed to Ministers. I must protest against the hon. Member's remark that any one has got any particular pull with the Minister concerned. (Interruptions.) I do not know what purpose would be served by a half-hour debate. I do not have any further information with me in order to help in contributing to the debate. But I have stated when the Co-operative Societies Amendment Bill, 1956, was under discussion that I shall look into the complaints against this union and see what steps the Government can take in the matter. 9-30 a.m.

DEPUTY SPEAKER : The Appropriation Bill is coming up to-morrow. The hon. Member can then discuss this subject. There is no need for a half-hour debate to-day on this subject.

SRI S. DAIVASIGAMONEY : On a point of order, Sir. May I know whether in an answer given by the Hon. Minister, the words ' flippant, irresponsible ' could be used in this House, and whether those words are not unparliamentary when they relate to a question put by an hon. Member of the House?

DEPUTY SPEAKER : ' Irresponsible ' is not unparliamentary. It is parliamentary.

SRI K. VINAYAKAM : On a point of personal explanation, Sir.

DEPUTY SPEAKER : There is no need for a personal explanation.

[The hon. Member Sri M. Kalyanasundaram rose to put his question (Question No. 422).]

SRI K. VINAYAKAM : Sir, you can rule my point out of order. But it is left to me to explain my point. The Hon. Minister said that my question was flippant and irresponsible. On the other hand, I find it is the Minister who is irresponsible in not taking proper steps to investigate the allegations.

DEPUTY SPEAKER : No, no. Sri M. Kalyanasundaram will put his question. Question No. 422.

Trained nurses

* 422 Q.—**SRI M. KALYANASUNDARAM** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of trained nurses awaiting appointments on 1st November 1956; and

(b) whether all the Government hospitals in the State maintain the sanctioned strength of nurses?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) One hundred and seventy, Sir.

(*b*) All the Government hospitals in the State maintain the sanctioned strength of nurses except in certain hospitals, where a few posts are kept vacant pending completion of buildings.

SRI V. BALAKRISHNAN : மானிட வர்க்கத்தை தெய்வத் தன்மை முறையில் கவனித்து வரும் தெய்வத் தன்மை நிறைந்த இந்த பெண் நர்சுகளுக்கும் சமீபத்தில் கொடுக்கப்பட்ட ஐந்து ரூபாய் பஞ்சப்படி உயர்வு உண்டா ? இல்லையென்றால் ஏன் ? அவர்களை எந்த ரக உத்தியோகஸ்தர்களாக கனம் அமைச்சரவர்கள் கருதுகிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தெய்வீகத் தன்மை பொருந்திய இந்த மானிடர்களுக்கும் ஐந்து ரூபாய் உயர்வு இருக்கிறதா இல்லையா என்பது எனக்கு சரியாகத் தெரியவில்லை.

SRI M. KALYANASUNDARAM : சுகாதார அமைச்சரவர்களுக்கு எஸ்டிமேட் கமிட்டி ரிபோர்ட்டைப்படிக்க நேரம் இருந்திருக்குமோ இருந்திருக்காதோ தெரியவில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள் இதைப் படித்து நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டவர்கள். நான்கு வருடகாலமாக 250 பேர்களுக்குமேல் பயிற்சி கொடுக்கப்பட்டிருப்பதாயும் அவர்கள் இன்னும் வேலையில்லாமல் இருப்பதாகவும் கமிட்டி ரிபோர்ட்டில் கண்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் எண்ணிக்கையைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகரித்தால்தான் நம்முடைய வேலையைச் சமாளிக்க முடியும் என்று எஸ்டிமேட் கமிட்டியின் முன்பாக இலாகா அதிகாரிகள் தெரிவித்ததாகக் கமிட்டி ரிபோர்ட்டில் கூறியிருக்கிறார்கள்.

" The Committee gathered that the present staff was overworked. Actually, the strength of the doctors required to be doubled and that of the nursing staff increased to five times the present strength."

நர்ஸிங் தொழிலாளிகளை ஐந்து மடங்கு அதிகரிக்கவேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டியார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? ஆஸ்பத்திரிகளில் போதுமான நர்சுகள் இருக்கிறார்களா என்பது பரிசீலனை செய்யப்பட்டு, நர்சுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : 1954-ம் ஆண்டில் 182 நர்சுகள் வேலை இல்லாமல் இருந்தார்கள். அதனால்தான் வருஷத்திலே 80 நர்சுகளுக்கு பயிற்சி கொடுத்தால் போதும் என்ற விதி இருந்தது. இப்பொழுது அந்த விதி எடுக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது எத்தனை நர்சுகளை வேண்டுமானாலும் பயிற்சிக்கு அனுமதித்துக்கொள்ளலாம். இப்பொழுது அதிகமாக நர்சுகள் வேண்டியதாக இருப்பதால் அந்த விதி எடுத்துவிடப்பட்டது. இப்பொழுது கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியிலே 15 " பெட் "களுக்கு ஒரு நர்சும், 2·5 " ப்யூபில் " நர்சும் தேவை என்ற விகிதாசாரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டு அல்லாத இதர ஆஸ்பத்திரிகளில் எட்டு " பெட் " களுக்கு ஒரு நர்சு என்ற விகிதாசாரம் இருக்கிறது. இன்னும் போதுமான நர்சுகள் வேண்டுமானால் அவர்களுக்கும் இடம் கிடைக்கும்.

SRI M. KALYANASUNDARAM : நர்சுகளின் வேலை நேரம் இரவானால் 12 மணி நேரம் என்றும், பகலானால் 14 மணி நேரம் என்றும் இருக்கிறது. வேலை நேரத்தை எட்டு மணியாகக் குறைக்கவேண்டாமா ? அதற்காக அதிகப்படி நர்சுகளை நியமிப்பார்களா?"

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த விஷயத்தை கனம் அங்கத்தினர் நர்சுகளைக் கலந்து சொல்கிறாரா, அல்லது அவரே சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு.)

SRI M. KALYANASUNDARAM : நான் ஆஸ்பத்திரியிலே நோயாளியாக இருந்த அனுபவத்தைக்கொண்டு சொல்கிறேன்.

SRI K. VINAYAKAM : " நர்சுகளைக் கலந்து " என்பதற்கு உண்மையான பொருள் என்ன ? (சிரிப்பு.)

SRI S. DAIVASIGAMONEY : நண்பர் ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் கேள்வி கேட்டபொழுது, " தெய்வத் தன்மை வாய்ந்த பெண் நர்சுகளுக்கு அலவன்சு அதிகமாக கொடுக்கப்படுமா ? " என்று கேட்டார்கள். பெண் நர்சுகள் என்று சொல்கிறபோது ஆண் நர்சுகள் பாதிக்கப்படுகிறார்கள். தெய்வத் தன்மை வாய்ந்த பெண் நர்சுகள் என்றால், ஆண் நர்சுகள் தெய்வத் தன்மை அல்லாத பிசாசுகளா என்று நான் கேட்கிறேன். (மீண்டும் சிரிப்பு.)

DEPUTY SPEAKER : Sri N. K. Palanisamy will put his question (No. 423).

SRI S. RAMALINGAM : The previous question is an important question, Sir. We want to put more supplementary questions.

DEPUTY SPEAKER : No, I have passed on to the next question.

SRI K. T. RAJU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, " இது என்ன முக்கியம் ? " என்ற முறையில் தாங்கள் கூறிவிட்டீர்கள். ஆனால், கனம் அங்கத்தினருக்கு ரொம்ப முக்கியமாக இருக்கிறதானையால், அந்த முக்கியமான விஷயத்தைப்பற்றிய கேள்வியை தயவு செய்து அனுமதிக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

Crop control in the Mettur canal area

* 423 *Q*.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have imposed any crop control in the ayacut of the Mettur canal during 1956; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMY : மேட்டூர் கால்வாய் பிரதேசத்தில் பயிர்க் கட்டுப்பாடு இல்லை. ஆனால், அதேசமயத்தில், கீழ் பவானி பாசனப்பிரதேசத்தில் பயிர்க் கட்டுப்பாடு இருக்கிறது. ஒரு பகுதியில் பயிர்க் கட்டுப்பாடு வைத்துக்கொண்டு, இன்னொரு பகுதியில் வைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : புதுத் திட்டமாக வந்திருக்கிறபடியினாலே தண்ணீருடைய நிலைமை எப்படியிருக்குமோ என்பதற்காக முதலிலே பயிர்க்கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள். அதை நீக்குவதற்கும் நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது.

SRI K. T. RAJU : லோயர் பவானி ப்ராஜெக்ட் பிரதேசத்தில் இருக்கக் கூடிய பயிர்க் கட்டுப்பாட்டை ரத்து செய்யக் கூடிய யோசனை சர்க்காருடைய கவனத்தில் இருக்கிறதா ? பயிர்க் கட்டுப்பாட்டை ரத்து செய்யவேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI: ஏற்கனவே conference போட்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

SRI G. GOVINDAN: கனம் அங்கத்தினர் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் சபைக்குள் குடையைக் கொண்டுவருகிறார். அப்படிக் கொண்டு வரலாமா என்று அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member should leave his umbrella outside.

Second-class Language Test

* 424 *Q.*—SRI P. RANGASWAMI REDDIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there are any munshis, pandits, tutors, appointed by the Government to teach Government servants, any one of the languages prescribed for passing the second-class language test other than Tamil; and

9-40 a.m. (*b*) if not, what facilities are afforded by the Government to enable Government servants to learn and pass a Language Test?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The answer is in the negative.

(*b*) No facilities are afforded by Government; the need for such facilities has not so far arisen.

SRI P. RANGASWAMI REDDIAR: சர்க்கார் உத்தரவு நெம்பர் எம். எஸ். 3298, ஹோம், 10-ந் தேதி நவம்பர் 1954 பிரகாரம் நம்முடைய நாட்டில் டெப்யூடி கலெக்டர், ஜில்லா முன்சீப், சப் மாஜிஸ்டிரேட் முதலான உத்தியோகஸ்தர்கள் கன்னடம், மலையாளம், தெலுங்கு, உருது, ஹிந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் தமிழை கட்டாயமாகவும், மற்ற மொழிகளில் ஒன்றை அவசியம் படித்து second class language test பாஸ் செய்ய வேண்டுமென்ற நியதி இருக்கிறது. 1956ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ந் தேதிக்குப் பிறகும் இது அமலில் இருக்கவேண்டிய அவசியமென்ன? அவர்கள் உண்மையாகவே அந்த மொழிகளில் பயிற்சி பெற்று பாஸ் செய்வதற்கு சர்க்கார் வசதி செய்து கொடுக்காமல் அவர்கள் எப்படி பாஸ் செய்வார்கள்? இல்லாவிட்டால் அவர்கள் போலியாகத்தான் பாஸ் செய்த தாகத் தெரியும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இது பல ஆண்டுகளாக அமுலில் இருந்துகொண்டு வருகிறது. இது வரையில் இதுபற்றி யாருக்கும் கஷ்டம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ந் தேதிக்குப் பிற்பாடு இரண்டாவது மொழி ஒன்றில் தேரவேண்டுமென்கின்ற விதி அவசியமா, இல்லையா, அவசியமென்றால் எந்த மொழி பற்றி அவசியமாக இருக்க வேண்டுமென்பதைப்பற்றி யெல்லாம் இப்போழுது அரசாங்கம் பரிசிலனை செய்துகொண்டு வருகிறது,

Seed farms

* 425 *Q.*—SRI P. RANGASWAMI REDDIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of seed farms started by the Government in 1956;

(*b*) whether a seed farm was started in Anaiyampatty village, Attur taluk, Salem district, in or about August 1956;

(*c*) the extent and nature of the lands taken on lease by the Government for running the seed farm;

(*d*) the annual rent agreed to be paid by the Government for the lands;

(*e*) whether the District Advisory Committee has been consulted before the lands have been taken on lease;

(*f*) if not, the reasons therefor;

(*g*) whether any complaints were received by the District Collector, Salem, and the Government from the public and members of the District Advisory Committee regarding the bad choice of the lands at exorbitant rent; and

(*h*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Thirty-four seed farms have been started so far in the various districts during 1956;

(*b*) a seed farm was opened in August 1956 at Anaiyampatty village, Attur taluk, Salem district, on land taken on lease;

(*c*) this farm consists of 21·39 acres of garden lands and dry lands;

(*d*) The annual rent has been provisionally fixed at Rs. 300 per acre for irrigated garden lands and Rs. 150 per acre for dry lands;

(*e*) The District Advisory Committee was not consulted before taking the lands on lease;

(*f*) The lands were initially selected by the District Agricultural Officer of the district and thereupon inspected by the Deputy Director of Agriculture of the region as to their suitability and then only they were taken up by the Department. The concurrence of the Collector was also obtained for the location of the farm. It was not considered necessary or feasible to consult the District Advisory Committee, as it would involve delay and the season would be lost;

(*g*) Two petitions were received from Sri R. Narayanaswamy Reddiar of Sandarapetty and one from the President, Anaiyampatty Panchayat Board complaining about the unsuitability of the lands and high rent;

(*h*) these complaints were thoroughly enquired into by the Deputy Director of Agriculture, Vellore. He has reported that the lands are quite fertile and good. As regards the rent, he has stated that it was fixed at the minimum after a good deal of bargaining, and that it is quite reasonable.

SRI P. RANGASWAMI REDDIAR: 10-9-56-ம் தேதியில் இந்த நிலம் சர்க்கார் மாதிரிப் பண்ணை நடத்துவதற்கு லாயக்கில்லை என்று கைவிடப்பட்ட நிலமென்றும், அதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற குத்தகையும் அதிகம் என்றும், அது விதைப்பண்ணை நடத்துவதற்கு லாயக்கில்லை என்றும் ஆத்தூர் பிளாக் ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில்

தலைவர் ஆர். டி. ஓ.வுக்கும் மற்றவர்களுக்கும் அபீஷியல் மெம்பர் ஸ்ரீ பெரியசுவாமி மூப்பனார் தெரியப்படுத்தியிருக்கிறார். கனம் விவசாய மந்திரி அவர்களுக்கும் 18-9-56-ல் பிளாக் ஆலோசனைக் கமிட்டியை கேட்காமல் இந்த நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாதிரிப் பண்ணை நடத்துவதற்கு லாயக்கில்லையென்று சொல்லப்பட்ட நிலம் மீண்டும் விதைப் பண்ணைக்கு எடுத்துக்கொண்டிருப்பது ஏதோ சூதாகத் தெரிகிறது. பொது ஜனத் தலைவர்கள் பொறுப்புணர்ந்து பணத்தை விரயமாக்கக்கூடாது என்று மனு அனுப்பப்பட்டிருக்கிறது. மறுபடியும் இதுபற்றி விசாரணை செய்தது பிளாக் ஆலோசனைக் கமிட்டிக்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விசாரணையிலே பிளாக் ஆலோசனைக் கமிட்டி அங்கத்தினர்களை கேட்கவேண்டியது அவசியமில்லை. இதில் ஒன்றும் சூது இருப்பதாக அரசாங்கத்திற்குத் தெரியவில்லை. மாதிரிப் பண்ணை நடத்துவது ஒரு விஷயம். விதைப்பண்ணை நடத்துவது வேறு விஷயம். விதைப்பண்ணை நடத்துவதற்கு இந்த நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுபற்றி உதவி டைரக்டர் அவர்கள் நன்றாக பரிசீலனை செய்து இந்த நிலம் விதைப்பண்ணைக்கு தகுதியாக இருக்கும் என்று சொல்லிய பிற்பாடுதான், இந்த நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

SRI R. KRISHNASWAMY NAYUYU : கனம் அமைச்சர் பதில் சொல்லும்பொழுது ஜில்லா கமிட்டியை ஆலோசனை கேட்கவில்லை என்று சொன்னார்கள். இது பிளாக் ஆலோசனை கமிட்டியா அல்லது ஜில்லா ஆலோசனைக் கமிட்டியா என்று விளக்கம் தேவை. அதோடு கூட, ஆலோசனை கமிட்டியை கலந்து ஆலோசித்துத்தான் நிலத்தை தேர்ந்தெடுக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்தக் கமிட்டியையும் ஆலோசனை கேட்கவேண்டாமென்று இருக்கும்பொழுது, அது ஜில்லா கமிட்டியாக இருந்தாலும் சரி அல்லது பிளாக் கமிட்டியாக இருந்தாலும் சரி, எந்தக் கமிட்டியைப்பற்றி கேட்டாலும் அதைக் கலந்து ஆலோசிக்க வேண்டிய நிமித்தம் இல்லை, அதனால் கேட்கவில்லை என்று நான் சொல்லுகிறேன். விதைப் பண்ணைக்கு நிலம் எடுத்துக்கொள்ளும் விஷயத்திலே எந்த ஆலோசனைக் கமிட்டியாக இருந்தாலும் அதைக் கேட்கவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு போடவில்லை.

SRI M. KALYANASUNDARAM : மாதிரிப்பண்ணைக்கும் விதைப் பண்ணைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். மாதிரிப்பண்ணையில் எவ்வளவு பணத்தை வேண்டுமானாலும் விரயம் செய்யலாம். ஆனால் விதைப் பண்ணையில் நல்ல விதைகளை விதைத்து அதற்கான விளைச்சல் இருந்தால்தான் அந்த விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய முடியும். விவசாயிகள் அதனால் நன்மை அடைய முடியும். விதைப் பண்ணைக்கு நிலம் யாரிடத்திலிருந்து பெறப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன். நியாயவாரச் சட்டம் அமுலுக்கு வந்துகொண்டிருக்கிறது. சர்க்காரே குத்தகைதாரராக இருப்பதால் நியாய வாரச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறபடி குத்தகை வழங்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மாதிரிப் பண்ணைக்கு பணம் விரயம் செய்யலாம் என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. மாதிரிப்பண்ணையை லாபகரமாக நடத்தவேண்டுமென்றுதான் அரசாங்கம் முயற்சி செய்கிறது. ஏனென்றால் அதைப் பார்த்து மற்ற விவசாயிகளும் அதே மாதிரி நடத்தவேண்டும். இந்த நிலம் யாரிடத்திலிருந்து வாங்கப்பட்டது என்பதுபற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை. நியாய வாரச்சட்டப்படி எவ்வளவு குத்தகை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை வைத்துக்கொண்டுதான், குத்தகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

SRI P. S. NALLA GOUNDER : மாதிரிப் பண்ணை ஏற்பாடு செய்வதற்கு சர்க்கார் நிலங்களை விலைக்கு வாங்கப் போவதாக சொல்லப்படுகிறது. அப்படியானால் நிலங்களுக்கு தகுந்த விலை கிடைக்காது என்று குடியானவர்கள் சந்தேகம் கொண்டு நிலங்களை விலைக்குக் கொடுக்க முன் வரவில்லை எனத்தெரிகிறது. இதை சர்க்கார் கவனிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவசரமாக குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றால் விலைக்கும் வாங்கலாம். விலைக்கு வாங்குவதை விட குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்துக்கொள்வது லாபகரமாக இருந்தால் அது கவனிக்கப்படும். இது விஷயமாக சட்டம் செய்யப்பட்டிருப்பது கனம் அங்கத்தினர்களுக்கு தெரியும்.

Power looms

* 426 *Q.*—**SRI N. K. PALANISAMY :** Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government have given any licences for power looms to the Co-operative Weavers' Society of Peelamedu, Coimbatore district, during 1956 ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI N. K. PALANISAMY : கனம் அமைச்சர் அவர்கள் பவர் லூம் introduce செய்கிறேன் என்று சொல்வதற்கு முன்பு 14 தறிகள்தான் இருந்தன. பவர் லூம் இந்த ராஜ்யத்தில் புகுத்தப்போவதில்லை என்று சொன்ன பிறகு பீளமேடு கூட்டுறவு சொஸைட்டிக்கு 50 பவர் லூம்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கு கனம் மந்திரி அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 50 தறிகளுக்கு லைசென்ஸ் 1956-ல் கொடுக்கப்படவில்லை. அதற்கு முன்பு கொடுக்கப்பட்டது.

Slums

* 427 *Q.*—**SRI K. VINAYAKAM** (on behalf of Sri A. Ratnam) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have enforced the provisions of the Madras Slum Improvement (Acquisition of Land) Act of 1954;

(*b*) if so, the number of slums acquired and assigned so far during the past three years; and

(*c*) the total amount spent and the number of slums cleared so far?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes, Sir. Under section 3 (1) of the Act, the Government have declared the following areas as slum areas and further proceedings to acquire these lands are under way.

(1) Teads Garden—Sembiam village.
(2) Appavu Nagar—Zamin Mambalam.
(3) Kamaraj Nagar—George town.
(4) Ellispuram—Mount Road.

(5) Vashappucheri—Perambur.

(6) Kattukoilcheri—Mylapore.

No slum has so far actually been acquired under Section 3 (2) of the Act and assigned to the slum dwellers.

(c) Nil.

SRI K. VINAYAKAM : Are these not all Government lands and if there could be so much delay in acquiring these, what would be the position of slums on private lands and Corporation lands?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Whether it is private land, or Government land or Corporation land, all expeditious steps are being taken for acquisition.

SRI A. M. RATHNASWAMY : There are a number of private slums where not even elementary civic amenities have been provided by the Corporation because of the difficulty that those slums owned by private people have not been handed over to the Corporation for effecting such improvements. According to law such owners as have not handed over the lands to the Corporation must be prosecuted. I want to know whether the Government have launched any prosecution against these private owners of slums where the civic amenities have not yet been provided?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A separate question may be put.

SRI S. PAKKIRISWAMY PILLAI : சமீபத்தில் இந்திய சட்டசபையிலே இந்த குடிசைப் பிரதேச அபிவிருத்திக்கென்று உண்டான சட்டத்தை இயற்றும்போது அந்த குடிசைப் பிரதேச நிலங்களை வாங்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு 96 மாதக் குடக்கூலியைக் கொடுத்து வாங்கிவிடலாமென்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அதே சமயத்தில் சென்னையில் இருக்கும்படியான இந்த குடிசைப் பிரதேச அபிவிருத்தி சட்டத்தின் கீழ் 144 மடங்கு மாத குடக்கூலியைக் கணக்கிட்டு அப்பிரதேசங்களை வாங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த வித்தியாசத்தை நீக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா? சில குடிசைப் பிரதேசத்திலே அநேகர் அந்த இடங்களை வாங்குவதற்கு கூட்டுறவு ஸ்தாபன இயக்கத்தின்கீழ் ஒன்றுகூடி, தங்கள் பணத்தைச் செலவிட்டு வாங்கி அதை அபிவிருத்தி செய்யத் தயாராயிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட இடங்களை இந்த மதராஸ் ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் ஆக்ட்டின் கீழ் அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்ய, அவர்களுக்கு ஒத்தாசை செய்ய அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி தனியாக ஒரு கேள்வி கேட்கவேண்டும்.

SRI A. RATNAM : இந்த சேரிகளை எல்லாம் ஆர்ஜிதம் செய்ய ஒவ்வொரு வருடமும் எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது? சமீபத்தில் சர்க்காருக்குச் சொந்தமான எத்தனை சேரிகளை கார்ப்பரேஷன் வசிட்டி இம்ப்ருவ்மெண்ட் ட்ரஸ்ட்-டினிடம் ஒப்படைக்க உத்தரவு இடப்பட்டிருக்கிறது? அங்கு வாழ்கிற மக்கள் இதுவரையிலும் இலவசமாக வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். இனிமேல் அவர்கள் வரிசெலுத்தவேண்டுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றியும் தனி கேள்வி கேட்கவேண்டும்.

SRI K. VINAYAKAM : இந்த மசோதா 1954-ம் ஆண்டு பாசாயியும்கூட இப்பொழுது மூன்று வருடங்களாக எவ்வித நடவடிக்கையும் எடுத்து இந்த அடிப்படையில் எந்த "ஸ்லம்" மும் வாங்கவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி வாங்காமல் இருப்பதினால் இந்த ஒரு மசோதா நம்மிடம் இருப்பதில் என்ன லாபம்? இது, பொதுஜனங்களை ஏமாற்றக்கூடிய ஒரு மசோதாவே தவிர இதனால் ஒரு வித லாபமும் இல்லை என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Acquisition இன்னும் பூர்த்தியாகவில்லையென்று சொன்னேன். நான் குறிப்பிட்ட "ஸ்லம்" களை acquire செய்ய தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பொதுமக்களை ஏமாற்றும் விஷயத்தையெல்லாம் கனம் அங்கத்தினர் அவர்கள் சட்டசபைத் தேர்தல் பிரசாரத்தில் வைத்துக் கொள்ளலாம்.

SRI A. IYANAR : கனம் மந்திரியவர்கள் கொடுத்த பதிலில் சென்னை நகரத்தைப்பற்றி மாத்திரம்தான் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டது. இதர கிருமந்திரங்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் கொடுக்கப்படவில்லை. அதற்கு காரணமென்ன?

DEPUTY SPEAKER : This question relates to Madras City and not other places.

Stepping up of food production

* 427-A *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government have received any communication from the Prime Minister of India during 1956 for the stepping up of food production in this State without further allotment from the Centre;

(b) if so, whether any special programme has been drawn up for this in this State; and

(c) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The targets already fixed under the various food production schemes have been reviewed and revised targets have been worked out after taking into account the various intensification measures proposed.

(c) The important measures proposed are to popularize the cultivation of green manures and to extend the area under green manuring and to step up the consumption of chemical fertilizers particularly ammonium sulphate, during the Plan period.

The original programme envisaged an additional production of 7·12 lakhs tons for Madras State. This target is revised to 13·70 lakhs tons. This target is for Madras State as it was before 1st November 1956. The target for the present Madras State is 12·65 lakhs tons.

SRI V. BALAKRISHNAN : இந்தத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் புதிதாக, உபரியாக "ட்ராக்டர்கள்" வாங்கவேண்டுமென்று சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரை கேட்டிருக்கிறதா? அப்படியானால் எத்தனை "ட்ராக்டர்கள்" கேட்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் விலை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுதொன்றும், புதிதாக " ட்ராக்டர்கள் " வேண்டுமென்று இதுவரையிலும் கேட்கவில்லை.

SRI N. K. PALANISAMY : விளைவைப் பெருக்குவதற்கு இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பொழுது ஒதுக்கப்பட்ட பணத்தைத் தவிர அதிகம் கேட்கப்போவதில்லை. இருந்தாலும் இந்த 60, 40 வாரச் சட்டம் வந்ததற்குப் பிறகு குத்தகைக்காரர்கள் விளைவை பெருக்க ஆசை கொள்கிறார்கள். அவர்களுக்கு, கடன் வசதி செய்து கொடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்க சர்க்கார் திட்டம் ஏற்படுத்தியிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கடன் வசதிகளைப் பெருக்குவதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு தான் வருகிறது. கூட்டுறவு சங்கச் சட்டத்தை திருத்தியமைக்கும் மசோதா இந்தசபையில் விவாதத்திற்கு வந்தபோதுகூட அது விளக்கப்பட்டது.

Vanakkankadu-Karukkakurichi road in Alangudi taluk

* 427-B *Q.*—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Vanakkankadu-Karukkakurichi road in Alangudi taluk, Pudukkottai Division, Tiruchirappalli district, has been constructed under the Local Development Works programme;

(*b*) if so, when; and

(*c*) the distance of the road, its cost and the people's share?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The work was taken up during 1953–54 and completed on 31st March 1956.

(*c*) The length of the road is two miles, cost of the work is Rs. 4,152–3–0; and people's contribution by way of labour is Rs. 2,598–14–0.

Boat-building yard at Tuticorin

* 427-C *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to build a boat-building yard at Tuticorin, for the construction of mechanized boats for use by fishermen; and

(*b*) if not, the place proposed to be selected for the above purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government have sanctioned a scheme for the construction of a boat-building yard at a suitable place in this State, for building fishing boats required by the Fisheries Department. The Government have not yet decided about the place where the boat-building yard is to be constructed.

PRIVATE NOTICE QUESTION

DEPUTY SPEAKER : Now, Sri Venkatesha Sholagar will put the Private Notice Question.

SRI P. VENKATESHA SHOLAGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த அபோனியம் . . .

DEPUTY SPEAKER : Let the hon. Member read out the question.

SRI P. VENKATESHA SHOLAGAR : இங்கிலீஷில் இருக்கிறது. அதை நான் எப்படிப் படிக்கிறது ?

DEPUTY SPEAKER : I will read out the question—

* 5 *P.N.Q.*—Will the Hon. the Minister for Agriculture be pleased to make a statement regarding the inadequate and irregular supply of ammonium sulphate to the agriculturists which is causing hardship and affecting cultivation in Tanjore district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the attention of the Government has been invited to the inadequate and irregular supply of ammonium sulphate to the agriculturists which is causing hardship and affecting cultivation in the Tanjore district. There was sufficient stock of ammonium sulphate in the Tanjore district at the beginning of this year and the arrivals of stocks of ammonium sulphate were commensurate with the demand till August 1956 and since then till November the arrivals were only in limited quantities and the stock by the end of November became low owing to the increased demand for the fertilizer during the manuring season. The monsoon was favourable this year and the demand for the fertilizer was great and the need for increased supply of the fertilizer was felt in Tanjore and other districts. The fertilizer required for consumption in the State is supplied largely from the stocks imported from abroad. Out of 103,000 tons of ammonium sulphate allocated to this State by the Government of India for the calendar year 1956, a quantity of 70,000 tons is to be supplied from import, 28,000 tons from Sindri and 5,000 tons from F.A.C.T., Limited, Alwaye. The supply position of the fertilizer, therefore, depends to a great extent on the regular arrival of steamers from abroad. But owing to the Middle East crisis and the blockage of the Suez Canal, the arrival of the steamers at the Madras Harbour carrying about 22,000 tons has been delayed. In view of the non-arrival of steamers, a quantity of about 2,000 tons for Tanjore district against outstanding despatch instructions could not be supplied. The paucity of stocks was felt in that district as well as in other districts. The stock and supply position was taken note of by this Government. The Government of India were apprised of it telephonically and a special allotment of 5,000 tons of ammonium sulphate from Sindri was obtained. Out of this, a quantity of 750 tons has been allotted to Tanjore district. But there have been difficulties in arranging

movement and the Sindri Factory have informed this Government that they are awaiting wagon supply and the stocks will be despatched as soon as wagons become available.

In the meantime, a steamer carrying 4,000 tons has been received at Cochin Harbour on 19th December 1956. A quantity of 2,000 tons out of this shipment has been allotted to Tanjore district and it may be expected that this quantity will be available at the various centres in Tanjore district shortly. The quantity of 750 tons from Sindri will also start arriving at the destinations by the end of December 1956 and it is hoped that the situation will improve in the district soon. Every effort has been made and is being made to expedite supplies to Tanjore district as well as to other districts which urgently need stocks. The Government are already aware of the need for ensuring a steady supply of ammonium sulphate to the agriculturists of this State in the manuring season and they are watching the stock and supply position in Tanjore and other districts and are taking prompt action to replenish stocks to the extent possible.

10 a.m. **SRI S. RAMALINGAM :** சமீபத்தில் இந்த உரம் வினியோகிப்புத் திட்டத்தை ரெவன்யூ இலாகாவிற்கு மாற்றியதால் ஏற்கனவே கூட்டுப் பட்டாக்களாக இருந்து சென்ற ஆண்டில் உரம் வாங்கிக்கொண்டிருந்த பல விவசாயிகள், கூட்டுப் பட்டா என்ற ஒரே காரணத்திற்காக ரெவன்யூ இலாகாவால் மறுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, சென்ற வருஷத்தில் ஒழுங்காக வாங்கியதை திருப்பிக் கொடுத்த இவர்களுக்கும் உரம் விநியோகிக்க உத்தரவு இடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உரம் விநியோகிப்ப தொன்றும் ரெவன்யூ இலாகாவிற்கு கொடுக்கவில்லை. கடன் கொடுப்பதுதான் ரெவன்யூ இலாகாவிற்கு இருக்கிறது. இதையெல்லாம் கவனித்து தாமதத்திற்கு கொஞ்சம்கூட இடமில்லாமல் செய்யவேண்டு மென்றுதான் ரெவன்யூ இலாகாவிடம் சொல்லப்பட்டிருக்கிறது.

DEPUTY SPEAKER : Questions are over . . .

SRI S. RAMALINGAM : Sir, my point has not been answered.

DEPUTY SPEAKER : I have already allowed this question as a short notice question. Questions are therefore over and I shall take up the next item on the agenda.

Hon. Member Sri G. Govindan will under rule 40 call attention of the Minister for Public Works to a matter of urgent public importance.

SRI M. KALYANASUNDARAM : Sir, I had given notice of a privilege motion. The rule is that we should take up privilege motions immediately before the business of the House is taken up, i.e., immediately after question time is over. May I know when the privilege motion will be taken up?

DEPUTY SPEAKER : I have just now received it and I have not gone through that. I will take it up to-morrow after question time is over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—MOTION UNDER RULE 40 (1) OF THE ASSEMBLY RULES RE BAD CONDITION OF THE MADURA-RAMNAD TRUNK ROAD.

* SRI G. GOVINDAN : Sir, I wish to call the attention of the Minister for Public Works to a matter of urgent public importance, viz., the bad condition of the Madura-Ramnad Trunk Road which is very highly erroded by the recent floods in the Vaigai.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதுரை-இராமனுதபுரம் ட்ரங்க் ரோடு மிக முக்கியமான ரோடு ஆகும். மதுரைக்குக் கிழக்கே உள்ள ரோடுகளிலேயே மிக முக்கியமானது. அங்கிருந்துதான் எல்லா போக்கு வரத்தும் ஆரம்பமாகிறது. இராமேஸ்வரம், தனுஷ்கோடி போன்ற ஊர்களுக்கு மோட்டார் கார், மற்றும் இதர வாகனங்களெல்லாம் செல்லவேண்டும். அப்பேர்ப்பட்ட ரோடு எங்கள் பரமக்குடி தாலூகா வழியாகச் செல்கிறது. பெரு வெள்ளம் வரும்போது, வைகை ரோடை அரித்துக்கொண்டு போவதோடு, கிராமங்களுக்குள்ளும் தண்ணீர் புகுந்து விடுகிறது. அதற்குக் காரணம் தென் கரையின் உயரம் ஜாஸ்தி இல்லாமல் இருப்பதுதான். தென் கரை உயரமாக இல்லாமலிருப்பதால், ரயில்வே பாதையையும் பாதிக்கிறது. பல கட்டடங்களும் இதனுல் பாதிக்கப்படுகின்றன. உதாரணமாக, சமீபத்தில் தண்ணீர்வந்தபோது . . . .

DEPUTY SPEAKER : கனம் அங்கத்தினர் தயவு செய்து சுருக்கமாகச் சொல்லி முடிக்கவேண்டும்.

* **SRI G. GOVINDAN :** ரொம்ப முக்கியமான சமாசாரமாக இருப்பதாலும் 45 மைல் தூரமுள்ள ரோட்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சர்க்கார் பணம் செலவு செய்தும் பயனில்லாமல் வீணுகப் போகிறதே என்பதற்காகவும், இன்னும் ஒரு லட்சம், இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்தால் கரையை நல்ல முறையிலே உயர்த்திவிடலாம் என்பதற்காகவும் தான் நான் விவரமாக சொல்லவேண்டியிருக்கிறது. உதவி சபாநாயகர் அவர்கள் சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்று சொல்வதால், இந்த முக்கியமான சமாசாரத்தைப்பற்றி சுருக்கமாகவே சொல்லி முடித்து விடுகிறேன். ஒரு நிமிஷம் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள் கிறேன்.

ரோட்டின் மேலே தண்ணீர் போய்க்கொண்டிருந்ததால் கரை இடித்து விழுந்ததனுல், மூன்று குழந்தைகளின் தாய் வள்ளியென்ற பெண் தண்ணீர் எடுக்கும்போது கரை அறுப்பால் கரை இடிந்து தண்ணியில் விழுந்த தாய் இறந்துவிட்டாள். அதுசம்பந்தமாக மராமத்து இலாகா அமைச்சரவர்களிடம் மகஜர் ஒன்றும் கொடுத்திருக்கிறேன். அத்துடன் 5 போட்டோக்களும் கொடுத்திருக்கிறேன். இதை ஏன் சொல்லுகிறேன் என்றுல், தண்ணீர் வரும்போது கரை இடிந்துபோய் விடுகிறது. பக்கத்தி லிருக்கும் ரயில்வே பாதையையும் கிராமத்தையும்கூட அழித்திருக்கிறது. ஆகவே, 45-வது மைலில் 7-வது பர்லாங்கில் பாலம் கட்டினுல் நன்ருக இருக்குமென்று கனம் மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கின்றேன். கனம் மந்திரி அவர்கள் வேண்டுவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : The portion of the Madurai-Ramanathapuram Road (National Highway No. 49) betwen the sixth and the eighth furlong in mile 45 was badly erroded and scoured by unprecedented floods of last year followed by the floods during this year. At the time of floods the Highways Department made protective arrangements

[Sri R. Shanmuga Rajeswara Sethupathi] [26th December 1956

with brushwood filling to prevent further damage along the embankment. Necessary caution boards were also put up for the safety of traffic. The old Nannal plantations close to the embankment of the river side near Paramakudi had been destroyed by the local people due to the fear of wild beasts taking shelter in the Nannal bush and as a result of this the soil had been erroded by the floods in the previous years and the river course had changed.

The road embankment in mile 45/6-8 of the road is partly damaged in certain places in the blacktop portion but the traffic has not at all been dislocated at this place. An estimate for Rs. 18,000 has been sanctioned by the Divisional Engineer (Highways), Ramanathapuram, for providing deflection groynes and strengthening the bund. Materials required for the work are being collected.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE IN THE YEAR 1956-57.

DEPUTY SPEAKER: As the Voting on Demands for Grants for Further Expenditure in the year 1956-57 is to be taken up now (10-5 a.m.) and as the time allotted for the voting is only one hour such of those Demands which might not have been moved at the end of one hour will be guillotined at 11-5 a.m.

SRI M. KALYANASUNDARAM : I suggest, Sir, that Demands Nos. X—State Legislature, XXXIII—Road Transport Schemes—Working Expenses and XLI. Capital Outlay on Electricity Schemes be taken up first.

IV.—GOVERNMENT MOTION UNDER RULE 21 (3) OF THE ASSEMBLY RULES *RE* CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That under rule 21 (3) of the Assembly Rules Demands Nos. X—State Legislature, XXXIII—Road Transport Schemes—Working Expenses and XLI. Capital Outlay on Electricity Schemes be taken up for discussion."

DEPUTY SPEAKER : The question is—

" That under rule 21 (3) of the Assembly Rules Demands Nos. X—State Legislature, XXXIII—Road Transport Schemes—Working Expenses and XLI. Capital Outlay on Electricity Schemes be taken up for discussion."

The motion was put and carried and Demand No. X—State Legislature was taken up for discussion.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE IN THE YEAR 1956-57—*cont.*

DEMAND X—STATE LEGISLATURE.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand X—State Legislature."

26th December 1956]

DEPUTY SPEAKER : Motion moved—

" That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand X—State Legislature."

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

" That the allotment of Rs. 100 under Demand X—State Legislature be reduced by Re. 1."

DEPUTY SPEAKER : Cut motion moved—

" That the allotment of Rs. 100 under Demand X—State Legislature be reduced by Re. 1."

Both the Demand and the cut motion are now before the House for discussion.

*SRI V. BALAKRISHNAN : கனம் தலைவர் அவர்களே, பட்ஜெட் பொது விவாதத்தின்போது சட்டசபை அலுவலக குமாஸ்தாக்களைப் பற்றி சில விஷயங்களை எடுத்துச் சொன்னேன். அப்பொழுது அந்தக் குறைகளை நிவர்த்திக்கக்கூடிய மந்திரி அவர்கள் இடத்தில் இல்லை. இப்பொழுது அவர் பிரசன்னமாய் இருப்பதால் இதை மீண்டும் சொல்லுகிறேன். இங்கு வேலை செய்துவரும் குமாஸ்தாக்களுக்கும் கீழ்தர சிப்பந்திகளுக்கும் சட்டசபைக்கு சமீபத்திலேயே வசிப்பதற்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீண்ட காலமாக அவர்கள் மனு கொடுத்தும் அவர்களுக்கு Priority இல்லை. முன்பு கேட்டவர்களுக்கு Priority கொடுக்கப்படுகிறது.

DEPUTY SPEAKER : I wish to inform hon. Members that during a discussion on Supplementary Demand they should confine their remarks to the details of which the Demand is composed. In the Explanatory Note under Grant X—State Legislature, it has been stated as follows :—

" For the ensuing General Elections in 1957, 1,20,000 additional steel ballot boxes may be required. The cost of these 1,20,000 boxes works out to Rs. 8,25,000. A lump sum provision of Rs. 53,08,000 was made in the budget estimates for 1956-57 for construction of polling booths, purchase of indelible ink, etc., for the ensuing General Elections. The expenditure on the purchase of steel ballot boxes will be met from this lump sum provision . . ."

The hon. Member can only speak on these points.

SRI A. RATNAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 10-1
மான்யத்தின் மீது பேசுவதற்கு பல தோழர்கள் அவா உள்ளவர்களாக a.m
இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு போதிய அவகாசம் கொடுக்க வேண்டுமென்று தலைவர் அவர்களுக்கு முதலில் ஒரு வேண்டுகோள் விடுகிறேன்.

DEPUTY SPEAKER : Only one hour has been allotted for all the Demands. The Deputy Leader of the Opposition suggested that three Demands might be taken up for discussion and specified those Demands. We have taken up the first among those three Demands. After all only about fifteen minutes can be allotted for each Demand.

[26th December 1956

SRI A. RATNAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சட்டசபை உறுப்பினர்களாகிய நாம் ஐந்தாண்டு காலத்தை ஒருவாறு கடத்தி விட்டோம். எதிர் காலத்தில் தேர்தல் முறையை அனுசரித்து பொது மக்களால் வாக்குகள் கொடுக்கப்பட்டு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் இந்த சட்டசபை உறுப்பினர்களாக ஆவார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த ஐந்தாண்டுகளில் நாம் பல சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

DEPUTY SPEAKER : Is what the hon. Member is speaking about in any way connected with this Demand ?

SRI A. RATNAM : எலக்ஷன் விஷயத்தைப் பற்றித்தான் பேசுகின்றேனே தவிர வேறு அல்ல.

DEPUTY SPEAKER : The hon. Member is not speaking about election.

SRI A. RATNAM : தேர்தல் முடிந்தபிறகுதான் வேறு அமைச்சர் குழு ஆட்சி நடத்தத் தொடங்கும். தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஒரு சில மாதங்களில் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும்பொழுது, காங்கிரஸ் கட்சி அமைச்சர் குழுவை வைத்துக்கொண்டு தேர்தல் நடத்தப்பட்டால் அந்தத் தேர்தல் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு ஒரு பெரிய நஷ்டமாகத்தான் முடியும். கனம் மந்திரிகள் செல்லும் இடங்களிலெல்லாம் பந்தோபஸ்துக்கு அவர்களுக்கு ஆதரவாக அதிகாரிகள் . . . .

DEPUTY SPEAKER : Order, order. I have to draw the attention of the hon. Member to the subject under the Demand and request him to confine himself to that subject. I do not want that he should discuss the tour of Ministers.

SRI A. RATNAM : தேர்தலைப்பற்றி பேசுகின்றேனே ஒழிய வேறு அல்ல. தேர்தல் நடைமுறையில் . . . .

DEPUTY SPEAKER : The Explanatory Note under the Demand says that the amount is for expenditure on the purchase of steel ballot boxes for the ensuing General Elections in 1957.

SRI A. RATNAM : I am on that point only, Sir.

தேர்தல் நடைபெறும்பொழுது மக்களின் வரிப்பணம் வீணாக செலவழிக்கப்படாமல் நியாயமான முறையில் செலவழிக்கப்படவேண்டும். தேர்தல் சரியான முறையில் நடத்தப்படவேண்டுமென்பதைப்பற்றி பேசுகிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஏதோ என்னுடைய உரத்த குரலைக் கேட்டு சபாநாயகர் வேறு அர்த்தம் செய்துகொள்ளவேண்டாம் என்று ரொம்பவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் காலத்தில் கூட்டங்கள் நடத்துவதற்கு எதிர்கட்சிக்காரர்களுக்கு அனுமதி கிடைப்பதில்லை, லைசென்ஸ் தாராளமாக கிடைப்பதில்லை என்பதை சென்ற தேர்தலில் பார்த்திருக்கிறோம். இதனால் பல தொல்லைகள், தொந்தரவுகள் ஏற்படுகின்றன. செல்வாக்கு வாய்ந்த ஒரு சிலருக்குத் தான் அடிக்கடி கூட்டம் நடத்துவதற்கு அனுமதி கிடைக்கிறதே தவிர, லைசென்ஸ் கொடுக்கப்படுகிறதே தவிர, சாதாரண ஏழைகளாக இருக்கிறவர்களுக்கு போதிய வசதி கிடைப்பதில்லை. ஒலி பரப்பிக்காகவும் ஒழுங்காக லைசென்ஸ் கிடைப்பதில்லை. ஆகையால், அதிகாரிகள் கூட்டத்திற்கு லைசென்ஸ் கொடுப்பதிலும், ஒலி பரப்பிக்கு அனுமதி கொடுப்பதிலும் எல்லோரிடத்திலும் நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டுமென்று அந்த அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன் இந்த சபையின் மூலமாக.

26th December 1956] [Sri A. Ratnam]

மேலும், தேர்தலில் நிற்கும் அபேட்சகர்களுக்கு தந்தி, தபால், டெலிபோன் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருப்பது போல், அவர்கள் கிராமம் தோறும் கார்களில் ஒலி பரப்பி வைத்துக்கொண்டு பிரசாரம் செய்வதற்கு தாராளமாக அனுமதி அளிக்கப்படவேண்டும். இதைப் போன்று தேர்தல் பிரசாரம் செய்வதற்கு சாதாரணமாக எல்லா வசதிகளையும் செய்துகொடுக்கவேண்டும். நகரங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு தடை இல்லாமல் தாராளமாக லைசென்ஸ்கள் வழங்கவேண்டும். சென்ற தேர்தலிலே லைசென்ஸ் வழங்குவதற்கு பணம் வசூலிப்பது கிடையாது. ஆனால் இப்பொழுது எந்த இடத்தில் கூட்டம் போட்டாலும் ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு நாளைக்கும் ரூ. 2 வீதம் லைசென்ஸ் கட்டணம் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அதற்குமேல் மனுவின் பேரில் ஸ்டாம்பு வேறு ஒட்டவேண்டும். மேலும் இதில் பல தகராறுகள், சிக்கல்கள் இருக்கின்றன. கூட்டம் நடத்துவதற்கு லைசென்ஸ் பெறுவதற்கு மனு கொடுக்கவேண்டும். பிறகு லைசென்ஸ் வாங்கவேண்டும், அதற்கு காத்திருக்கவேண்டும். இம்மாதிரி பல தொல்லைகள் இருக்கின்றன. இந்தக் கட்டணம் கட்டி லைசென்ஸ் வாங்குவதிலிருந்து தேர்தலில் நிற்கும் அபேட்சகர்களுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டும். அம்மாதிரி செய்தால்தான் தேர்தல் நல்ல முறையில் நடக்கும். இம்மாதிரி வசதிகளை செய்துகொடுத்தால் தான் காரியங்களை எளிதில் செய்துகொள்ள முடியும் என்பதைத்தான் சொல்லுகிறேனே தவிர, வேறு அல்ல.

அதுமட்டுமல்ல. வோட்டுச் சாவடிகளில் வோட்டுப்போடுகின்ற முறையில் பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அதிகாரிகள் எல்லா கட்சிகளிடத்திலும் நியாயமாகவும், நேர்மையாகவும், நீதியோடும் நடந்துகொள்வதற்கு எல்லா வசதிகளும் செய்து தரப்படவேண்டும். சென்ற தேர்தலில் வோட்டுச்சாவடிகளிலிருந்து கலெக்டர் ஆபீஸ், தாசில்தார் ஆபீஸ் இவைகளுக்கு வோட்டுப் பெட்டிகள் வந்து சேருவதற்கு சில சமயம் 2, 3 தினங்கள் ஆகிவிடுகின்றன. ஒரு அபேட்சகர் தோற்றுப் போயிருப்பார் என்று நினைத்தால் வோட்டுப்பெட்டிகளை உடைத்து . . ,

DEPUTY SPEAKER : I want the hon. Member to be brief.

SRI A. RATNAM : அநேக தில்லுமுல்லுகள் நடக்கின்றன. இம்மாதிரி தில்லுமுல்லுகள் நடக்காமல் உடனுக்குடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தேர்தல் முறையில் சில தில்லுமுல்லுகள் நடைபெறுகின்றன. சர்க்காருக்கு அறியாமல் காரியங்கள் நடந்துவிட்டாலுங்கூட 24 மணி நேரத்திற்குள் அதனை பொது மக்களுக்கு அறிவித்து நியாயம் வழங்க வேண்டுமென்று வைத்துவிட்டால் இம்மாதிரி தவறு செய்து விட்டு மறு தேர்தலை நடத்துகின்ற தர்மம் எதிர் கால தேர்தலில் நடக்காது. அம்மாதிரி அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

ஜில்லா அதிகாரிகள் தேர்தலை நடத்தும்பொழுது அமைச்சர்களாக இருந்தாலும் சரி, அதிகாரிகளாக இருந்தாலும் சரி, செல்வாக்கு வாய்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் பொறுப்பில் எந்தக் காரியத்தையும் விட்டுக்கொடுக்கக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவு பிறப்பிக்கவேண்டும். அம்மாதிரி தேர்தல் அதிகாரிகளுக்கு வசதி செய்துகொடுத்தால்தான் தேர்தல் முறை நன்றாக நியாயமாக அமையும். நான் இதை ஒரு கட்சி சார்பிலும் சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, மற்ற எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, பொதுவாக . . . . .

DEPUTY SPEAKER : I want the hon. Member to be brief. I do not want that he should go on giving unnecessary explanation.

SRI A. RATNAM : தலைவர் சொல்வதைக் கேட்டு முடித்துக்கொள்கிறேன். மற்ற தோழர்களுக்கும் அவர் சந்தர்ப்பம் அளிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

[26th December 1956

10-17 a.m. **SRI K. V. RAMASWAMI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே! வரக்கூடிய தேர்தலில் கலந்துகொண்டு சிப்பந்திகளும், அதிகாரிகளும் உற்சாகமாக நடந்துகொள்ளவேண்டுமானால் அவர்களுக்கு சில வசதிகளை செய்து தரவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

போன தேர்தலில் பங்கெடுத்துக்கொண்ட ஆசிரியர்களுக்கு T.A. இன்னும் வழங்கப்படவில்லை. பன்முறை District Boardsகளிடமும் சர்க்காரிடமும் விண்ணப்பித்தும் கூட அவர்களுக்கு இன்னும் T.A. வழங்கப்படவில்லையென்று சென்ற கூட்டத்தில் நிதியமைச்சரிடம் எதிர் கட்சித் தலைவர் சொன்னார். இருபது பேருக்கு மேல் கொடுக்கப்படாமல் இருந்தது. அமைச்சர் எடுத்த நடவடிக்கை காரணமாக 14 பேருக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்னும் ஆறு பேருக்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. இந்த விஷயத்தை A.G. அவர்களிடம் தெரியப்படுத்தியும் வேறு நடவடிக்கைகள் எடுத்தும் கூட அவர்களுக்கு இன்னும் T.A. கிடைக்கப்படவில்லை. கழிந்த தேர்தல் கழிந்து அடுத்த தேர்தலும் வருகிறது. இன்னும் இரண்டு மாதங்களில் ஐந்து வருடங்களுக்கு முன் தரப்படவேண்டிய T.A. இன்னும் அவர்களுக்குத் தரப்படாமலிருந்தால் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்தக்கூடிய ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு வரும் தேர்தலில் பங்கெடுத்துக்கொள்ள உற்சாகம் இருக்குமா? இந்த சந்தர்ப்பத்தில் அந்த ஆறு பேர்களுக்கும் T.A. உடனடியாக, தாமதமின்றி கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இது சம்பந்தப்பட்ட ஒரு விண்ணப்பத்தை அவர்களுக்குத் தருகிறேன். இது ஒரு விஷயம்.

இரண்டாவது விஷயம், இந்த வோட்டுச் சாவடி சம்பந்தமாக இரண்டொரு விஷயங்களை நான் சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன். சில கிராமங்களில் வோட்டுச்சாவடிகள் அமைக்கப்படும்போது இருட்டறை போன்ற இடங்களில்தான் இருக்கிறது. வெளிச்சமேயில்லாத அறைகள். அதில் அதிகாரிகளுக்கு உட்காருவதற்கு இடமும், வோட்டுச் சாவடியில் வோட்டுப்பெட்டிகள் வைப்பதற்கு ஒரு பிரத்தியேக அறை வேண்டும். அங்கு வோட்டு போட வாக்காளர்கள் போகும்போது இருட்டின் காரணமாக பெட்டிகளின் அடையாளமே தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, நான் சொல்வதென்னவென்றால், electricity இல்லாத கிராமங்களில் இந்த வோட்டுச்சாவடிகளில் வெளிச்சம் கிடைப்பதற்காக petromax விளக்குகளாவது போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிடில், வோட்டர்களுக்கு மிகவும் தொந்தரவாயிருக்கும். ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI S. T. ADITYAN : உதவி சபாநாயகர் அவர்களே! சென்ற தேர்தலின்போது உபயோகிக்கப்பட்ட வோட்டுப்பெட்டிகளை, இரும்புப் பெட்டிகளைப் பற்றி குறைகள் சொல்லப்பட்டு வந்தன. அதாவது, முக்கியமாக இந்த இரும்பு பெட்டிகளின் அடித்தகடுகள் பலம் பொருந்தியவைகளாக இல்லை என்பது ஒன்று. இன்னொன்று, அந்த அடித்தகடு சரியாக soldering பண்ணி ஒட்டப்படவில்லை என்பது. இந்த இரண்டுகுறைபாடுகளும், அன்று உபயோகித்த இரும்புப்பெட்டியைப் பற்றி சொல்லப்பட்டது. கூடுமானவரையில் அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லாமல் இனிமேல் செய்யக்கூடிய இரும்புப் பெட்டிகள் செய்யப்படவேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடும்படிகேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, அநேக ஊர்களில் வோட்டுச் சாவடிகள் வைக்க வேண்டுமென்று, அதற்கு தேவையிருந்தபோதிலும் கூட அவர்கள் அங்கு வோட்டுச் சாவடி வேண்டுமென்று சொல்லத் தவறிவிட்டபடியினால் முக்கியமான சில ஊர்களிலும் வோட்டுச் சாவடிகள் இல்லாமலிருக்கின்றன. அவர்களுக்கு, அப்படிக் கேட்க, இன்னொரு சந்தர்ப்பம் கொடுக்க சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். ஆக, முதல் விஷயம் இரும்புப்பெட்டிகள் பலமாக இருக்கவேண்டும். அவைகளின் அடித்தகடுகளை பலப்படுத்தி, அதை

26th December 1956] [Sri S. T. Adityan]

solder பண்ணி ஒட்டுவிக்க வேண்டும். இரண்டாவது, வோட்டுச்சாவடிகள் சம்பந்தப்பட்டவரையில் எந்த ஊர்களில் வோட்டுச்சாவடிகள் அவசியம் தேவையாய் இருக்கிறதோ, வேறொன்றையும் கவனிக்காமல் அங்கு வோட்டுச் சாவடிகள் அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

***SRI V. BALAKRISHNAN :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 10-21 a.m. நிதி யமைச்சரவர்கள் சென்ற இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு, வரப் போகும் தேர்தலை, Free and Fair Election-யாக நடத்துவோமென்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதி எதிர்க்கட்சிகளை, ஓரளவு திருப்தியும், ஊக்கமும், தைரியப்படுத்தியுமிருக்கிறது. அந்த வாக்குறுதியை நடைமுறையில் காண்பிக்க வேண்டுமென்று முதலாவதாக கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இங்கு நம் நாட்டில் தேர்தலைப் பொறுத்துத்தான், இந்தியர்கள் பாரபட்சமில்லாமல், நடு நிலைமை தவறாமல் நடப்பார்கள் என்ற காரணத்தால்தான் Indo-China, கொரியா போன்ற இடங்களில் இந்தியர்களைக் கொண்டு தேர்தல் நடத்த விரும்புகிறார்கள். அந்த அம்சத்தின் அடிப்படையில் நாம் நம் மக்களின் உணர்ச்சியை உண்டுபண்ண மந்திரியவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இச்சந்தர்ப்பத்தில் நான் கூற விரும்புவது என்னவென்றால், மந்திரியவர்கள் போலீஸ் அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவிடவேண்டும், எந்தக் கட்சி சார்பிலும் அவர்கள் நடக்கக்கூடாதென்று. எனது அனுபவம், சென்ற election-இல் போலீஸ் constables நேர்மையான நிலையில் நடந்துகொண்டபோதிலும், Sub-Inspectors, Inspectors, D.S.Ps. போன்றவர்கள் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொண்டார்கள். என்னுடைய தொகுதியில், மோடார் வாகனம் ஒன்றை சாவடிக்கு மிக தூரத்தில் போயும் Police station-க்கு கொண்டுபோய் 24 மணி நேரம் கழித்து அங்கு வைக்கப்பட்டது. அவர்கள் மேல் suit போட அதிகார மிருந்தும் நான் போடவில்லை. காங்கிரஸ்காரர்களுக்கானால் எங்கு எப்பொழுது வேண்டுமென்றாலும் போகலாம். Sub-Inspector-ரிடம் நேரில் சென்று இதோ கார் போகிறது என்று சொல்லும்போது அதைப் பொருட்படுத்தாமல் முதுகை திருப்பிக்கொண்டு எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதேபோல் அக்கிரமும் அநீதியும் நடக்க நிதியமைச்சரவர்கள் இடம் கொடுக்கக்கூடாது. இவைகளையெல்லாம் செய்வது அரசாங்கமல்ல. ஆனால் போலீஸ் அதிகாரிகள் விருப்பு, வெறுப்பு வைத்துச் செய்வதால் அரசாங்கத்தைக் குறை கூறும் நிலைமை ஏற்படுகிறது. அரசாங்கத்திற்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது.

அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது என்னவெனில், தேர்தல் சாவடிகளில் ஒவ்வொரு அதிகாரிகளும், அவர்கள் யார் யாரென்று தெரிய Arm Band, அதாவது கையில் அடையாளச் சீட்டெழுதிக் கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். Presiding officer, Polling officer, Polling clerk, peon என்று அடையாளச் சீட்டுகள் எழுதி கையில் கட்டிக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படியானால் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சென்று குறைகளை எடுத்துச்சொல்லி அவைகளை நிவர்த்தி செய்வதற்குள்ள வாய்ப்பளிக்கும். அப்படி அடையாளமில்லாவிட்டால் ஒருவரிடம் சென்று ஒன்று கேட்டால் "நான் இல்லை அவரிடம் சொல்லு" என்றும் அவரிடம் கேட்டால் "நான் இல்லை, அவரிடம் சொல்லு" என்றும் இன்னொருவரிடம் கேட்டால் "எனக்கு ஒன்றுமே தெரியாது" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆகவே ஒவ்வொரு அதிகாரியும் தங்கள் உத்தியோகப் பெயர்களை கையில் எழுதி ஒட்டிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அபேட்சகர்கள் வோட்டுச்சாவடிக்குப் போகும்போது ½ மைல் அப்புறம் தான் காரை நிறுத்திவிட்டுப் போகவேண்டியிருக்கிறது. ஆனால் போலீஸ் அதிகாரிகள் போன்ற அதிகாரிகளுக்கு வோட்டுச்சாவடி பக்கத்திலே காரைக்கொண்டு நிறுத்த முடிகிறது. Single Member Constituency என்றால் 200, 250 சாவடிகளுக்கும் Double Member Constituency என்றால் 400, 500 சாவடிகளுக்கும் போகவேண்டியிருக்கிறது அபேட்சகர்களுக்கு. ஆகவே, எல்லா சாவடிகளுக்கும் சென்று

[Sri V. Balakrishnan] [26th December 1956

பார்ப்பதற்கு அவர்களுக்கும் வோட்டுச்சாவடிகள் பக்கத்திலேயே காரைக் கொண்டுபோவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும். அவர்களுக்கும், யார் அபேட்சகர் யார் அபேட்சகரில்லை யென்று தெரிவதற்கு அவர்களும் ஒரு **Arm Band** கட்டிகொள்ள . . . .

DEPUTY SPEAKER: The hon. Member is repeating and no repetition is necessary.

10-25 a.m. **SRI V. BALAKRISHNAN**: I am saying this so that the candidates may be identified by the persons in charge of the polling booth.

SRI C. KANDASAMY: உதவி சபாநாயகர் அவர்களே, தேர்தல் மான்யம் சம்பந்தமாக எனக்கு முன் பேசியவர்கள் பல விஷயங்களைபற்றிச் சொன்னார்கள். தேர்தலில் ஜனநாயக ரீதியில் எல்லா கட்சிகளுக்கும் சம உரிமையும் வசதியும் செய்து கொடுக்கப்படும் என்றும் பாரபட்சம் எதுவும் இராது' என்றும் ஒரு உத்திரவாதம் அளிக்கப்படவேண்டும்.

தஞ்சாவூர் ஜில்லாவில் அங்கிருக்கக்கூடியதொரு சூழ்நிலையில் அங்குள்ள சமுதாய அமைப்பில் நிலபிரபுக்கள் தங்கள் பண்ணையாட்களை வோட்டு செய்வதற்கு விடாமல் தடுப்பது என்ற பழக்கம் இருக்கிறது. ஆயிரக் கணக்கான வோட்டுகளை மறைத்து வைத்துக்கொண்டு, அவர்களை சுயேச்சை யாக வோட்டு போடவிடாமல் தடை செய்ய நடவடிக்கைகள் எடுத்திருக் கிறார்கள். சமீபத்தில் அங்கு நடந்த ஜில்லா போர்டு தேர்தலில் வலிவலம் என்ற ஊரில் இப்படித்தான் நடந்தது. ஆகவே இனி ஒவ்வொரு வோட் டரும் தங்களுக்குள்ள வாக்குரிமையை பிரயோகிக்கவும், சுயேச்சையாக தங்கள் வாக்குரிமையை பிரயோகிக்கவும் செய்வதோடு அதைத் தடுக்கின்ற வர்கள் யாராய் இருந்தாலும் சரி அவர்கள் மேல் கடுமையான நடவடிக்கை கள் எடுக்கவேண்டுமென்றும் அதற்கு உத்திரவாதம் தேவை என்றும் கூறிக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே! இதில் ஒரு ரூபாய்தான் குறைக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அவர்கள் 100 ரூபாய் கேட்டிருக்கிறார்கள். இதில் மொத்தமாக 53,08,000 ரூபாய் கேட்டிருக்கிறார்கள். இந்த செலவில் ஒரு பகுதியை மத்திய சர்க்கார் ஏற்கவேண்டும் என்றுதான் சொல்ல விரும்புகிறேன். இந்த பாலட் பாக்ஸ் தயார் பண்ணுவதற்குள்ள செலவையானது மத்திய சர்க்கா ரிடம் நாம் கேட்கவேண்டும். மற்றபடியுள்ள செலவுகளை ராஜ்ய சர்க்கார் ஏற்றுக்கொள்ளலாம். ஆகவே இதில் ஒரு பகுதியை மத்திய சர்க்காரிடம் இருந்து கேட்க வேண்டியது மிக அவசியம். நான் மத்திய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்காருக்கும் முடிச்சு போடவில்லை. அதற்குள்ள சாமர்த்தியமும் எனக்கு கிடையாது.

THE HON. SRI C. SUBRAMANIAM: சாமார்த்தியம் இல்லா விட்டாலும் முயற்சி செய்து பார்க்கலாமே.

SRI M. KALYANASUNDARAM: இதில் முக்கியமாக வோட்டுச் சாவடிகளில் பெண்களுக்கு என்று தனியாக ஒதுக்கவேண்டியது மிக அவசியம். பத்திரிகைகளில் செய்தி வந்தது. ஏதோ கோஷா பெண் களுக்கு மாத்திரம் பிரத்யேகமான வோட்டுச்சாவடிகள் வைக்கப்போவதாக செய்தி இருந்தது. எப்படியிருந்தாலும் இதை நன்றாக பரிசீலித்து எல்லா வோட்டுச்சாவடிகளிலும் பெண்களுக்கு என்று தனியாக ஒதுக்கவேண்டியது மிக அவசியம். அப்படியிருந்தால் ஒவ்வொரு வோட்டுச்சாவடியில் இருக்கும் அத்தனை வோட்டர்களும் குறிப்பிட்ட எட்டு மணி நேரத்தில் வோட்டு போட முடியும். அதிகப்படியாக வோட்டுச்சாவடிகளை ஏற்படுத்தா விட்டாலும்கூட குறிப்பிட்ட நேரத்திற்குள் அதிகபட்சம் வோட்டுகளை போடு வதற்குள்ள வசதிகளையாவது அரசாங்கம் செய்துகொடுக்க நடவடிக்கை

26th December 1956] [Sri M. Kalyanasundaram]

எடுக்கவேண்டும். இதற்காக பணம் செலவு செய்தாலும் பரவாயில்லை என்பது என் அபிப்பிராயம். அடுத்தபடியாக வோட்டுச்சாவடிகளில் போடப்படும் இன்டெலிபிள் இங்க் (**Indelible ink**) போட்ட உடனே அழித்துவிடலாம். இதை நான் நேராக பார்த்திருக்கிறேன். ஏதோ கொடுக்கப்படும் இங்கியை (**ink**) மாற்றி வேறுவிதமான இங்கியை உபயோகிக்கிறார்களா என்று தெரியவில்லை. எப்படியும் போலித்தனமான வோட்டுகள் போடுவதை தடை செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களை கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்ததாக கனம் அங்கத்தினர் பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னது மாதிரி அங்கு இருக்கும் அதிகாரிகள் யார் யார் என்று தெரியவில்லை. அவர்கள் சொன்னது மாதிரி அங்கு இருக்கக்கூடிய ஆட்களுக்கு ஏதாவது அடையாளம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த தாக ஒவ்வொரு வோட்டுச்சாவடியிலும் அதிகாரிகளிடம் எவ்வளவு வோட்டு காகிதங்கள் கொடுக்கப்படுகிறது, எந்த எண்ணிக்கை முதல் எந்த எண் ணிக்கைவரையுள்ள சீட்டுகள் கொடுக்கப்பட்டன என்று அபேட்சகர்களுக்கோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கோ சொல்லப்படுவதில்லை. இதில் ரகசியம் ஒன்றும் இல்லை. ஆகையால் அந்த வோட்டுச்சீட்டுகள் எந்த எண்ணிக்கை முதல் ஆரம்பமானது, எந்த எண்ணிக்கையில் முடிவு அடைந்திருக்கிறது, என்று அபேட்சகர்களுக்கோ அல்லது அவர்களின் பிரதி நிதிகளுக்கோ அறிவிக்கப்படவேண்டும். இதில் நான் மேற்கொண்டு ஒன்றும் கூற விரும்பவில்லை. சில தினங்களுக்கு முன்னால் பொது தேர்தல் பற்றி ஆலோசனை செய்வதற்கு ஒரு ஆலோசனை குழு ஏற்படுத் தலாம் என்றும் அதில் எல்லா கட்சிகளுடைய ஆலோசனை பிரகாரம் முடிவு எடுக்கலாம் என்றும் கனம் மந்திரி அவர்கள் வாக்களித்திருப் பதினால் அந்த ஆலோசனை குழு சீக்கிரமே அமைக்கப்படும் என்று நம்புகிறேன். அதில் தேர்தல் சம்பந்தமான கூடுதல் விவரங்களை சொல்ல லாம் என்று நினைக்கிறேன். ஆகவே இந்த ஆலோசனைக் குழு அமைப் பதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: உதவி சபாநாயகர் அவர் களே, கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் ஆலோசனைக்குழுபற்றி சொன் னார்கள். இது சர்க்கார் ஆலோசனைக்குழு ஒன்றுமில்லை. எல்லா அரசியல் கட்சி பிரதிநிதிகளும் சேர்ந்து ஒரு ஆலோசனை குழு அமைத்து அதில் தேர்தல் சம்பந்தமான ஆலோசனைகளை அந்தந்த கட்சி பிரதிநிதிகள் சொல்லி அதற்கு தகுந்தாற்போல் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது என் அபிப்பிராயம். எல்லோரும் இதை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இதை கூட்டுவதற்கு ஜனவரி 10-ம் தேதி என்று குறிப்பிட்டிருக்கிறேன். மற்ற கட்சிக்காரர்களுக்கும் சௌகரியமாக இருக்கு மானால் ஜனவரி 10-ம் தேதியையே முதல் கூட்டத்திற்கு நாளாக வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். மற்ற கட்சிக்காரர்களுடைய சௌகரி யங்கள் எப்படியிருக்கிறது என்று தெரியவில்லை.

அடுத்தபடியாக தேர்தல் நல்ல முறையில் நியாயமாகவும் நேர்மை யாகவும் நடக்கவேண்டும் என்று எல்லா அங்கத்தினர்களும் அதிக அக்கறையோடு கருத்து தெரிவித்தார்கள். இது விஷயத்தில் சர்க்காருக்கும் இதே அக்கறை தான் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நடை முறையில் வரும்போது பல கஷ்டங்களும் வந்து சேரும். நல்ல முறை யாகவும் நேர்மையாகவும் நடக்க எல்லோரும் ஒரே மனதாக மனபூர்வமாக ஒத்துழைத்தால்தான் இது சரிவர நடக்க முடியும். நியாயமாக நடக்க வேண்டும் என்ற உணர்ச்சி எல்லோருக்கும் இருந்தால்தான் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமுலாக்க முடியும். நாம் வெறும் விவாத அளவில் மாத்திரம் ஒப்புக்கொண்டுவிட்டு ஒவ்வொரு கட்சியும் தாங்கள் செய்கின்ற வேலைகளில் இந்த விவாதங்களுக்கு விரோதமாக நடந்தால் நேர்மையாகவும் நியாயமாகவும் நடக்க முடியாது. ஆகையினால் இது ஒவ்வொருவரையும் பொறுத்த விஷயமாக இருக்கிறது. தனிப்பட்ட

[Sri C. Subramaniam] [26th December 1956

நபர்களேயும், பிரதிநிதிகளேயும், அவர்களுடைய சகாக்களேயும், அவர்களுக்கு உதவி செய்பவர்களேயுமே பொறுத்திருக்கிறது. ஆகவே இதிலே எல்லோரும் நியாயமான முறையிலும் நேர்மையான முறையிலும் தேர்தல் நடக்கவேண்டும் என்ற அடிப்படையில் நாம் உறுதி செய்துகொண்டு நடப்பதுதான் இதற்கு நாம் நல்ல முறையில் வழி செய்ததாக இருக்கும். அதைப்பற்றி எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். சர்க்கார் தேர்தல் நேர்மையாகவும் நியாயமாகவும், நடக்க, வேண்டிய நடவடிக்கைகளே எடுக்கும் என்ற உறுதியை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இதற்குமேலும் சில தவறுகள் ஏற்படலாம், தவறே ஏற்படாது என்று நான் சொல்ல முடியாது. ஏதாவது தவறுகள் ஏற்படுமானல், அந்த தவறுகளே சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் அதை பரிசீலித்து தவறு இருந்தால் அதை நீக்கிக்கொள்வதற்கு சர்க்கார் முயற்சி எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். தவறுகள் ஒன்றுமே நடக்காது என்று சொல்வோமானல், அது இம்மாதிரியான காரியங்களில் நடவடிக்கைகள் எப்படியெல்லாம் இருக்கும் என்று நாம் அறியாமல் சொல்வதாகும் என்றுதான் நான் நினைக்கிறேன். இம்மாதிரியான காரியங்களில் தவறுகள் நடக்கக்கூடாது, தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டியது எங்களுடைய கடமை என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறேம் என்பதை சொல்லிக்கொள்கிறேன். மற்ற விஷயங்களேப்பற்றியெல்லாம் அதிகமாக பேச வேண்டியதில்லே. கூடுதலான விஷயங்களே எல்லா கட்சி பிரதிநிதிகளும் கூடி விவாதித்து பரிசீலித்து அதற்கு வேண்டிய காரியங்களே செய்யலாம் என்று கூறிக்கொண்டு, இப்போது 100 ரூபாய் தான் கேட்டிருக்கிறர்கள், அதை கொடுக்கவேண்டாம் என்று கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரேபணையை வாபஸ் வாங்கி, இதை ஏகமனதாக நாம் பாஸாக்கி கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, தேர்தல் நல்ல முறையில் நடை பெறுவதற்கு எல்லா கட்சி அங்கத்தினர்களும் ஒரே மனதாக ஒத்துழைக்க வேண்டும் என்று எல்லா கட்சி அங்கத்தினர்களேயும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri M. KALYANASUNDARAM: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, டீலிமிடேஷன் கமிட்டியினுடைய (**Delimitation Committee**) ரிப்போர்ட், அதாவது எப்படி எப்படி தொகுதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றியுள்ள விவரங்கள் சபைக்கு முன் இதுவரை கிடைக்கவில்லே. அந்த விவரங்கள் எப்பொழுது அங்கத்தினர்களுக்கு கிடைக்கும் என்பதை மந்திரி அவர்கள் தெரிவிக்கவேண்டுகிறேன். அது அச்சடிக்கப்பட்டு வேலே பூர்த்தியாய்விட்டதா என்றும் அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: இன்னும் அது அச்சடிக்கப்படவில்லே. அது துரிதமாக அச்சடித்து நாளே காலேக்குள்ளாக அங்கத்தினர்கள் எல்லோருக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறர்கள். தகுந்த சமயத்தில் கிடைக்கவில்லே யென்றல் தபால் மூலமாவது ஒவ்வொரு அங்கத்தினருக்கும் அனுப்பி வைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Sri M. KALYANASUNDARAM: I beg leave to withdraw my cut motion.

The cut motion was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand X—State Legislature."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXIII—ROAD TRANSPORT SCHEMES—WORKING EXPENSES.

The Hon. Sri C. SUBRAMANIAM: Sir, on the recommendation of the Governor, I beg to move—

"That the Government be granted a further sum not exceeding Rs. 21,95,500 under Demand XXXIII—Road Transport Schemes—Working Expenses."

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Government be granted a further sum not exceeding Rs. 21,95,500 under Demand XXXIII—Road Transport Schemes—Working Expenses."

Sri M. KALYANASUNDARAM: Sir, I move—

"That the allotment of Rs. 21,95,500 under Demand XXXIII—Road Transport Schemes—Working Expenses—be reduced by Re. 1."

DEPUTY SPEAKER: Motion moved—

"That the allotment of Rs. 21,95,500 under Demand XXXIII—Road Transport Schemes—Working Expenses—be reduced by Re. 1."

The Demand and the cut motion are before the House for discussion.

***Sri S. SWAYAMPRAKASAM:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இதைப்பற்றி நான் நீண்ட நேரம் விவாதிக்க இஷ்டப்படவில்லே. இருந்த போதிலும் ஒரே விஷயத்தைப்பற்றி மட்டும் சர்ச்சைசெய்ய ஆசைப்படுகிறேன். பஸ்கள் சம்பந்தப்பட்ட வரையில் மத்திய அரசாங்கத்தில் அந்தத் தொழிலே தேசிய மயமாக்க வேண்டும் என்று மத்திய அரசாங்க மந்திரி ஒருவர் அறிவித்திருப்பதாகவும் தெரிகிறது. அதைப்பொறுத்து அதற்கு என்று தொகை ஒதுக்கி இருக்கிறர்களா? அப்படிப்பட்ட கொள்கை இந்த அரசாங்கத்தினிடம் இருந்தால் அதன் நிலைமை என்ன ? இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன ? என்பதைதெளிவாக கனம் மந்திரி அவர்கள் விளக்க வேண்டும். அத்துடன் இது சம்பந்தமாக பேசும்போது பல இடங்களில் பல ரோடுகள் நல்ல முறையில் அவர்கள் வைத்துக் கொள்வது இல்லே. அதையும் அந்த அரசாங்கம் பரிசீலனே செய்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். 10-37 a.m.

(Sri A. Ratnam rose.)

DEPUTY SPEAKER: I want the hon. Member Sri Ratnam to be brief. He should finish his speech in two minutes.

Sri A. RATNAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தேசிய மயமாக்கும் பிரச்னே ஒருபுறம் இருக்க பஸ்களே கட்டுகிற கோச் பாக்டரியில் வேலே செய்கிற தொழிலாளர்களுடைய நிலைமை ரொம்பவும் மோசமாக இருக்கிறது. அவர்களே நிரந்தரமாக்காவிட்டாலும் அவர்களே நிரந்தரமாக்க சர்க்கார் இப்பொழுது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறர்கள். மேலும் அங்கு ஊழியம் செய்கின்ற தொழிலாளர்கள் நல்ல முறையில் வேலே செய்துகொண்டு வருகிருர்கள். வேலேயின் நுணுக்கம் தெரிந்து வேலே செய்து வருகிறர்கள். அவர்களுக்குக் குறைவான சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குக் குறைவான சம்பளமும் அவர்களே மேற்பார்வை செய்கிறவர்களுக்கு. அவர்கள் வேலேயில் அவ்வளவு

[Sri A. Ratnam] [26th December 1956

திறமைசாலிகளாக இல்லாமல் இருந்தாலும், அதிகப்படியான சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்த நிலைமையை நான் சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மேலும் வேலை செய்கிறவர்களுடைய ஊதியம் அவர்களுடைய உழைப்புக்குத் தகுந்த அளவில் சம்பளம் கொடுப்பதில்லை. இதை சர்க்கார் பரிசீலனை செய்து அவரவர்களுடைய உழைப்புக்குத் தக்கபடி ஊதியம் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது சென்னையில் ஓடிக்கொண்டிருக்கிற பஸ்கள் எல்லாம் காலை ஐந்து மணி முதற்கொண்டு இரவு பதினொரு மணி வரையில் ஓடுகின்றன. அப்படி ஓடிக்கொண்டிருக்கும்போது சில இடங்களில் பஸ்களில் என்ஜின்களுக்கு கோளாறுகள் ஏற்பட்டு அந்த இடத்திலேயே நின்று விடுகின்றன. அதனால் பல ஜனங்கள் கஷ்டப்படுகின்றார்கள். அடிக்கடி என்ஜின்களுக்கு கோளாறுகள் ஏற்பட்டுவிடுவதால் அதை தவிர்ப்பதற்கு பஸ்கள் நிற்கும் இடங்களிலெல்லாம் என்ஜின்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. அதனால் ஒரு சில தினங்களில் பஸ்கள் ஓடாமலேயே நின்று விடுகின்றன. இது சென்னை நகரத்தில் இடையூறாக இருக்கிறது. நகரத்தில் அதிகப்படியான பஸ்கள் ஓடாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட கோளாறுகள் ஏற்படுகின்றன. மற்றும் பஸ்களில் வேலை செய்யும் டிரைவர்கள் கண்டக்டர்கள் பஸ்களை நிறுத்திவிட்டு வேலை செய்யாமல் இருந்தால் அவர்களை வேறு வேலைக்கு அனுப்பி விடுகிறார்கள். அனாவசியமான காரியங்களுக்கு எடுத்துக்கொண்டு விடுகிறார்கள் என்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. பஸ்களை சர்க்கார் எடுத்துக்கொண்டது எதற்கு என்றால் மக்களுக்கு நல்ல முறையில் பஸ்களை ஓட்ட வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் அதில் பல மோசமான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் நிவர்த்திப்பதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் சில ரூட்டுகளில் பஸ்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. இன்னும் சில ரூட்டுகளில் அதிகப்படியான பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதிகப்படியான பஸ்கள் ஓடாத இடங்களில் ஜனங்கள் அரை மணி அல்லது ஒரு மணி நேரம் காத்துக்கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது. வேண்டிய அளவிற்கு மேல் இல்லாத இடங்களில் ஜனங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையில் இன்றைய தினம் நம்முடைய சென்னை பஸ் சர்வீஸ் நடந்து கொண்டிருக்கிறது. பஸ்கள் ஓடக்கூடிய பல ரோடுகள் நல்ல முறையில் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. பல ரோடுகள் மோசமான நிலைமையில் இருக்கின்றன. அவைகளை நல்ல முறையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கார்பொரேஷனுக்கு இந்த அரசாங்கம் உத்தரவு போட வேண்டும். அப்படி வைத்துக் கொண்டால்தான் சர்க்காருடைய பஸ்கள் நல்ல முறையில் இருக்கும், அதிகப்படியான கோளாறுகள் ஏற்படாது. இதை சீக்கிரத்தில் செய்தால் சர்க்காருக்கு சாதகமாக இருக்கும். அவைகளில் வேலை செய்கிறவர்களுக்கும் சௌகர்யமாக இருக்கும். இதை நமது சர்க்கார் மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களுடைய உதவியையும் கேட்கலாம். அப்படி அவர்களும் உதவி அளித்தால் நாம் பஸ்களை நல்ல முறையில் வைத்துக் கொள்ளலாம். இந்த யோசனையை சர்க்காருக்குக் கூறிக்கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சென்னை நகரத்தில் புதிய பஸ்கள் போட வேண்டுமென்ற அளவில் போக்குவரத்து முன்னேற்றமடைந்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதற்கு என்று 21 லட்சத்து 95 ஆயிரத்து 500 ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். இதில் ஒரு பகுதி அதாவது இரண்டு லட்சத்தி நாற்பத்தி ஐயாயிரத்து நானூறு ரூபாய் மராமத்து செய்வதற்கும் சில்லரை சாமான்கள் வாங்குவதற்கும் கேட்டிருக்கிறார்கள். இதற்கு அவ்வளவு தேவைப்படாது என்பது என்னுடைய அபிப்பிராயம். முதல் வருஷத்திலேயே அவைகளின் மராமத்துக்கு இவ்வளவு தொகை அவசியம்

26th December 1956] [Sri M. Kalyanasundaram]

ஏற்படாது என்பதும் என்னுடைய அபிப்பிராயம். இதைப்பற்றி இதற்கு முன் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறேன். மோட்டார் பாகங்கள் அவைகளுக்குத் தேவையான மற்ற பாகங்கள் இவைகளை வாங்குவதில் கவனம் செலுத்துவது குறைவாக இருக்கிறது என்றும் அந்தப் பணத்தையும், அந்தப் பொருள்களையும் துர்விநியோகப்படுகிறது என்பதையும் இதற்கு முன்பே எடுத்துக் காட்டியிருக்கிறேன். அதற்கு என்று அதிகப்படியாக செலவு செய்யப்படுகிறது என்றும் சொல்லி யிருக்கிறேன். அதைப்பற்றி கவனிப்பதாகவும் கனம் மந்திரி அவர்கள் வாக்குறுதி கொடுத்தார். அதன் பிறகு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டி விசாரித்து தன்னுடைய ரிப்போர்ட்டை சமர்பிக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் அந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டதேயொழிய அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள், என்ன யோசனை சொன்னார்கள் என்பவைகள் எல்லாம் ஒன்றும் இது வரையிலும் தெரியவில்லை. அதைப்பற்றிய விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை. எனக்குத் தெரிந்த வரையில் ஒன்றும் நடந்ததாகவே தெரியவில்லை.

அவர்கள் நல்ல முறையில் விசாரணை நடத்த வேண்டுமானால் அவர்கள் விசாரணை நடத்தும்போது தொழிலாளர்களை அழைத்து அவர்களுடைய ஒத்துழைப்புடன் விசாரிக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த இனத்திற்கு என்று அதிகப்படியான செலவு செய்ய வேண்டிய அவசியமே இல்லை. அதை அனுமதிக்க முடியாது. இந்தத் தொகை தேவைக்கு மேல் அதிகமாக இருக்கிறது. துர்விநியோகத்தை தவிர்க்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இதற்கு அதிகமாக செலவு செய்வதில் பிரயோசனம் இல்லை.

தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கையாகிய அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பதில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்களை நிரந்தரமாக்கப்படும் என்று பல தடவைகளில் வாக்குறுதியும் கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதி எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். கமிட்டியை நியமித்தால்மட்டும் போதாது. கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த விஷயத்தை ஆராய்ந்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த விஷயத்தை அறிவுறுத்துவதற்காகத்தான் இந்த வெட்டுப் பிரேரபணையைக் கொடுத்திருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதன் முதலில் கனம் சுயம்பிரகாசம் அவர்கள் இந்த பஸ்களை தேசீயமாக்குவது பற்றி நம்முடைய சர்க்காருடைய கொள்கை என்ன என்பதைபற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னார். அதில் நிறைய தப்பபிப்பிராயம் இருந்து வருகிறது, அதுதான் அதற்குக் காரணம் என்று நான் நினைக்கிறேன். பார்லிமெண்டில் இதைப் பற்றிய ஒரு சட்டம் ஆலோசனைக்கு வந்தபோது அங்கே இருக்கக் கூடிய மந்திரி பேசியிருக்கக் கூடிய பேச்சை வைத்துக் கொண்டு இந்தக் குழப்பம் ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன். இதைப்பற்றி அந்த மந்திரியையே நான் விசாரித்தேன். அவர் அதற்கு என்ன பதில் சொன்னார் என்றால் தான் பேசிய பேச்சை தவறாக பத்திரிகையில் பிரசுரித்து விட்டதாக அவர் தெரிவித்தார். மத்திய சர்க்கார் இதைப்பற்றி எந்த அடிப்படையில் கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குப் பூரணமாக தெரியாது. ஆனால் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்த போக்குவரத்து சாதனங்கள் சம்பந்தமாக என்ன பண்ணுவது என்பதைப்பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. அந்த அளவுக்கு இந்தக் கொள்கையைப்பற்றி எனக்கு ஓரளவு தெரியும். நம்முடைய சர்க்காரைப் பொறுத்த வரைக்கும் ஒன்று சொல்லிக் கொள்ளுகிறேன். எப்பொழுதே சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய

ஆரம்பிக்கப்பட்டது. அதுதான் ஒரத்தநாடு தாலூகா. அந்தத் தாலூகாவின் தலை நகருக்கே மின்சாரம் விநியோகிக்கப்படவில்லை. தஞ்சை ஜில்லாவில் இந்தத் தாலூகா ஒரு பிற்பட்ட பகுதி. அங்கே நீர்ப்பாசன வசதியில்லாத பிரதேசங்கள்தான் அதிகம். ஆகவே, அந்த தாலூகாவின் தலைநகரத்திற்கும், சுற்றுப்புறமுள்ள கிராமங்களுக்கும், மின்சாரத்தை விஸ்தரித்தால் அங்குள்ள மக்கள் பம்பு செட்டுகளை உபயோகித்து புன்செய் தானியங்கள் பயிர் செய்வதற்கு பிரயோசனமாக இருக்கும்.

சமீபத்திலே சர்க்கார், வீடுகளிலும் மற்ற இடங்களிலும் **Electricity Connection** செய்ய வேண்டுமென்றால் அதற்காக சர்க்காரிடமிருந்து லைசென்ஸ் வாங்கிய ஊழியர்கள்தான் அந்த வேலையைச் செய்யலாம் என்று ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் பிரகாரம் ஏற்கெனவே லைசென்ஸ் இல்லாமல் பல வருடங்களாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள் இப்பொழுது லைசென்ஸ் வாங்கியிருக்கிறார்கள். ஆனால், அம்மாதிரி லைசென்ஸ் வாங்கியவர்களும்கூட சில குறிப்பிட்ட கருவிகளை வைத்திருந்தால்தான் இந்தத் தொழிலை செய்யலாம் என்று சர்க்கார் தடை விதித்திருக்கிறார்கள். இதனால் பல ஏழைத்தொழிலாளிகள் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய் முதல் போட்டு தேவையில்லாத பல கருவிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதினால், பலர் இத்தொழிலில் ஈடுபடமுடியாத நிலைமையில் இருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER : May I know how this is relevant ?

SRI S. RAMALINGAM : It relates to the purchase of equipment.

DEPUTY SPEAKER : Purchase of equipment does not come within the purview of the Demand.

SRI S. RAMALINGAM : சர்க்காரிடம் இருக்கக்கூடிய வேண்டாத சாமான்களை மறைமுகமாக விற்பதற்கான சூழ்ச்சியோ என்றுகூட சிலர் இதைக் கருதுகின்றார்கள். அதனால்தான் இந்தப் பிரச்னையைப்பற்றி பேசினேன். இந்தத் தொழில் செய்வதில் சில ஆபத்துக்கள் ஏற்படுகின்றன என்பது உண்மையே. ஆதலால் இத்தொழிலில் பயிற்சி பெற்றவர்கள் லைசென்ஸ் வாங்கவேண்டும் என்ற முறை இருப்பதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் வேண்டாத சாமான்களை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுவது சரியல்ல. இதனால் சிலருக்கு பிழைப்புக்கே வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே இந்த உத்திரவை ரத்து செய்யுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI K. PARTHASARATHY : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார உற்பத்தியை பெருக்குவதிலும், கிராமங்களுக்கு அதிக மின்சார வசதியைச் செய்து கொடுப்பதிலும், நமது சர்க்கார் விசேஷ அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி சர்க்காரைப் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியான கள்ளக்குறிச்சியில் 300-க்கு மேற்பட்ட கிராமங்களிருக்கின்றன. ஆனால் மூன்று ஊர்களுக்குத்தான் மின்சார வசதி இருக்கிறது. இந்த மான்யத்தில் எனது தொகுதியில் சுமார் 20 கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கான திட்டம் இருப்பது கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக சர்க்காரை பாராட்டுகிறேன். ஆனால் உடனடியாக இந்த வேலை எடுத்துக் கொள்ளாததைப் பற்றி வருந்துகிறேன். இப்பொழுது கள்ளக்குறிச்சியில் ஒரு உதவி இன்ஜினியர் ஆபீஸ் இருந்து வருகிறது. ஆனால் இந்தத் திட்டங்களை உடனடியாக எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் வேண்டியசாமான்கள் இல்லையென்று சொல்லப்படுகிறது. ஆகவே இந்தச் சாமான்களை உடனடியாக கள்ளக்குறிச்சிக்கு அனுப்பினால் சீக்கிரத்திலேயே
10-57 இந்த 20 கிராமங்களுக்கும் மின்சார வசதி ஏற்படும். அந்தத்
a.m. திட்டங்களை "சாங்ஷன்" செய்வது மாத்திரம் போதாது. அவைகளை

உடனடியாக எடுத்துக்கொண்டு, 20 கிராமங்களுக்கும் "அக்ரிமெண்ட்" எழுதுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்கான உத்தரவுகளை உடனடியாக பிறப்பித்தால் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு, அடுத்த கோடைகாலத்தில் இந்த மின்சாரத்தைப் பயன்படுத்தி விவசாயத்தைத் தீவிரமாகச் செய்து, உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வழி ஏற்படுமென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஆகையால், அந்த இருபது கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்க உத்தரவு பிறப்பித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதை அமுலாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அந்தப் பகுதி பிற்போக்கு பகுதியானதாலும், நீர்ப்பாசன வசதி அதிகமாக இல்லாத பிரதேசமாக இருப்பதாலும், அதை அமுலாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

SRI M. KALYANASUNDARAM : இந்த இனத்தின்கீழ் கோரப்படும் தொகை மிக அதிகமாக இருக்கிறது. போதுமான அவகாசம் இல்லாததால், விரிவாக இதைப் பரிசீலனை செய்ய முடியாவிட்டாலுங்கூட கனம் மந்திரி அவர்கள் இந்த இலாகாவில் சிக்கனத்தை ஏற்படுத்துவதற்குள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது என்னுடைய யோசனை. இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில "ஐடம்"களைப் பார்ப்போம்." **"The Supplementary grant is required to meet the increase in contract payments"** என்று இம்மாதிரி பல விளக்கங்கள் இருக்கின்றன. பல ஐடெம்களுக்கு இம்மாதிரி பெரும் தொகை தேவைப்படுகிறது. ஒரு ஐடெத்திற்கு ரூபாய் 7,06,100 கோரப்படுகிறது. இன்னொரு ஐடெத்திற்கு ரூபாய் 4,13,700 கோரப்படுகிறது. இம்மாதிரி அதிக தொகை கோரக்கூடிய ஐடெம்களுக்கு விளக்கம் தெளிவாக இருக்கவேண்டும். **"To meet the increase" in contract payments** என்றால் ஏன் காண்டிராக்ட் பிரகாரம் கொடுக்கப்படவில்லை? காண்டிராக்ட் தொகைக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டிய தேவை என்ன என்பதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

மின்சாரத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்கும் முறையிலும் சில கோளாறுகள் இருப்பதாக நான் அறிகிறேன். மின்சார இலாகா மூலமாக பெரும் தொகை வெளிநாட்டிலிருந்து மின்சார சாமான்களைத் தருவிப்பதற்கு செலவு செய்யப்படுகிறது. இப்படி தருவிக்கும்போது "டெண்டர் முறை" அனுஷ்டிக்கப்படுகிறதா? டெண்டர் முறை இருக்கிறதென்றால் அவைகளைப் பரிசீலனை செய்வது ஒரு தனிப்பட்ட அதிகாரியா? ஒரே அதிகாரியிடத்தில் இம்மாதிரி பரிசீலனை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது கமிட்டி ஏதாவது நியமிக்கப்பட்டிருக்கிறதா? இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து, சாமான்களை வாங்கக்கூடிய முறையிலே எவ்வளவு சிக்கனம் ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு சிக்கனம் செய்யவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்காகத்தான் வெட்டுப் பிரேரேபணையைப் பிரேரேபித்திருக்கிறேன். விவரங்களை மந்திரி அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

*** THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI** : 11
கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் a.m.
ஸ்ரீராமலிங்கம் அவர்கள் பேசும்போது, பொதுவாக தஞ்சை ஜில்லாவிலே மின்சாரம் பரப்பப்படவில்லை என்று சொன்னார்கள். எல்லா இடங்களுக்கும் மின்சாரம் மிகவும் துரிதமாக பரப்பவேண்டும் என்பதற்காகத்தான் ஏற்பாடு செய்து திட்டமிட்டிருக்கிறோம். வருஷத்தில் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படவேண்டுமென்று திட்டமிட்டு பெரும்பாலும் அந்தப்படி செய்யப்படுகிறது. ஆயிரம் கிராமங்களுக்கு விஸ்தரிக்கும்போது ஒரு சில கிராமங்களுக்கு வந்திருக்கலாம்; மற்றும் சில கிராமங்களுக்கு வராமலிருக்கலாம். உதாரணமாக, கனம் அங்கத்தினர், ஒரத்தநாடு தாலூகாவைப்பற்றி குறிப்பிட்டார். அது புதிதாக ஏற்பட்ட தாலூகா. அங்கு இருக்கும் **load** விவரம் எல்லாம் தெரிந்துதான் ஒரு ஏற்பாட்டைச் செய்ய முடியுமே தவிர, உடனடியாக எப்படிச் செய்ய

[Sri R. Shanmuga Rajeswara Sethupathi] [26th December 1956

முடியும்? ஒரு வருஷத்திற்குள் ஆயிரம் கிராமங்களுக்கு புதிதாக மின் சாரம் விஸ்தரிக்கப்படும்போது ஒரு சில கிராமங்கள் விட்டுப் போகத்தான் செய்யும். ஆயிரம் கிராமங்களுக்கு வருஷ முடிவில் செய்து முடிந்திருக் கிறதா? இல்லையா என்பதுதான் கேள்வி. இந்த ஜில்லாவில் இந்த கிராமத் திற்கு வரவில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. இந்த வருஷம் வரவில்லையென்றால் அடுத்த வருஷம் வந்து விடும். ஆக, வருஷத்திற்கு ஆயிரம் கிராமங்கள் வரையில் மின்சாரம் விஸ்தரிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதே அங்கத்தினர், இதற்கு சம்பந்தமில்லாத விஷயத்தைப்பற்றி இரண்டாவதாகக் குறிப்பிட்டார். "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக் கும் முடிச்சு போட்டுப்" பேசினார். இதற்கு நேரிடையாக சம்பந்தமுள்ள விஷயமாக இல்லாவிட்டாலுங்கூட, அவர் சொன்ன இந்த விஷயத்தைப் பற்றியும் நான் உடனடியாகக் கவனிக்கிறேன். தொழிலாளர் சம்பந்தப் பட்ட பிரச்னையாக இருப்பதாலும், அவர்களுக்கு பிழைப்பு கொடுப்பதாக இருக்கும் என்ற காரணத்தாலும், இதைக் கவனிக்க வேண்டியது அவ சியம் என்று நான் உணருகிறேன். அதற்கு வேண்டியதை ஆலோசனை செய்து செய்வோம் என்று சொல்லிக்கொள்கின்றேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ பார்த்தசாரதி அவர்கள் பேசும்போது, கள்ளக்குறிச்சி தாலூகா பிற்போக்குப் பகுதியாக இருக்கிறதென்றும், அங் கெல்லாம் மின்சாரத்தைப் பரப்புவதற்காக திட்டமிடப்பட்டதை உடனடியாகச் செய்து நிறைவேற்றவேண்டுமென்றும் சொன்னார்கள். உடனடியாகவும், வெகு சீக்கிரமாகவும் செய்வதுதான் மின்சார இலாகாவின் நோக்கம். அப்படியே செய்யப்படும் என்றும் சொல்லிக்கொள்கின்றேன்.

எதிர்க் கட்சி உப தலைவர் ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுகையில், பெருவாரியான தொகை இதில் செலவழிக்கப்படுகிறதென்றும், 'டெண்டர் ஸிஸ்டம்' உண்டா? என்றும் கேட்டார். 'டெண்டர்' மூலமா கத்தான் இவை செய்யப்படுகிறது என்று நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனால், பிரதம இன்ஜினீர் ஒருவர்தான் டெண்டர்களைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். அப்படி இருக்கக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்காக அரசாங்கம் ஒரு 'பிரபோஸல்'ஐ ஆலோசித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறது. அதற்காக மராமத்து இலாகா காரியதரிசி, டெவலப்மெண்ட் இலாகா காரியதரிசி, மற்றும் பிரதம இன்ஜினீர்கள் (மின்சாரம், மராமத்து, ஹைவேஸ்) இவர்களெல் லோரையும் சேர்த்து அவர்களைக் கொண்டு பரிசீலனை செய்து முடிவு செய்வது என்ற முறையிலே கமிட்டியொன்றை அமைப்பதற்கு "பிரபோஸல்" இருந்துகொண்டிருக்கிறது. இது விஷயமாகவும் சீக்கிரம் ஆலோசனை செய்து முடிவு செய்யக்கூடும் என்று நினைக்கிறேன்.

டெண்டர்களைப் பரிசீலனை செய்வதற்கும் சில விதிகள் இருக்கின்றன. அவைகளை 'ஆடிட்' செய்வதற்கும் சில விதிகள் இருக்கின்றன. 'ஆடிட்' விதிகளுக்கு அன்னிதாவாகச் செய்தால் **audit objection** வரும். ஐம்பது ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்டிருந்தால், 'டெண்டர்' பிறப் பிப்பவரே தன்னுடைய தனிப்பட்ட ஹோதாவில் முடிவு செய்யலாமென்று கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கு வேறு காண் டிராக்டுகளுக்கு அரசாங்கத்திடம் வந்து அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும். இன்னும் அதிகமாக சிக்கனம் வேண்டுமென்ற காரணத்தா லும், நல்ல முறையிலே நடக்கவேண்டுமென்ற காரணத்தாலும், இத்யாதி முறையிலே கமிட்டி நியமிக்கப்பட ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறது. இந்த மான்யத்திற்கான தொகையில் ஒரு ரூபாய் குறைக்கவேண்டுமென்று வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர்கள் சொல்கிற முறையிலே பார்த்தால் எங்கும் மின்சாரம் வேண்டுவது அவசியம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். இப்பொழுது கோரப்பட்டிருக்கும் 13 கோடி சொச்ச ரூபாயே குறைவானது. நிதி இலாகாவை நாங்கள் 18 கோடி ரூபாய் வரையில் கேட்போம். "இப்பொழுது 13 கோடி சொச்சம் ரூபாய் வைத்துக்கொள்ளுங்கள்; இந்த ஒரு வருஷத்தில் இந்தத் தொகையையே செலவு செய்யமுடியாமல் போகும்; பெரிய தொகைக்கு 'சாங்க்ஷன்' வாங்கி வைத்துவிட்டு, அதை செலவு செய்ய முடியாமல்

26th December 1956]-[Sri R. Shanmuga Rajeswara Sethupathi]

போவதில் என்ன பிரயோஜனம்? இதற்குமேலும் தேவைப்பட்டால் அப் பொழுது பார்த்துக் கொள்ளலாம்" என்று சொன்னதன்பேரில்தான் இந்தத் தொகை கோரப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்ட பணம் துர்விநி யோகம் ஆகாமல் எல்லோரும் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதை உடனடியாக நான் ஒப்புக்கொள்கிறேன். இதுவே பெரிய தொகை என்று நினைக்கவேண்டாம். இதற்குமேலும் தொகை வேண்டியிருக்கிறது என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொண்டு, அவருடைய வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தில் கோரும் தொகைக்கு சபை அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

Sri G. GOVINDAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே ஒரு தகவல் அறியும்பிரச்னை . . . . .

DEPUTY SPEAKER: The hon. Member will please resume his seat.

(The hon. Member Sri G. Govindan was seen still standing in his seat.)

DEPUTY SPEAKER: When the Deputy Speaker is on his legs, the hon. Member should resume his seat.

I want to know from the hon. Member Sri M. Kalyanasundaram whether he is withdrawing his cut motion.

Sri M. KALYANASUNDARAM: இல்லை; வெட்டுப்பிரேரணையை வற்புறுத்துகிறேன். அத்துடன் ஒரு விஷயம்.

DEPUTY SPEAKER: It is now 11-05. I am going to put the motion to vote.

Sri M. KALYANASUNDARAM: I am withdrawing my cut motion, Sir.

The cut motion was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 13,83,10,400 under Demand XLI—Capital Outlay on Electricity Schemes."

The Demand was put and carried and the Grant was made.

It being 11-05 of the clock, the Deputy Speaker proceeded pursuant to the rules successively to put forth the question on the other Demands for Grants for further Expenditure in 1956-57, notice of which had been given by Government.

(3) Other Demands

DEMANDS II, VI, VII, VIII, IX, XI, XIV, XV, XVI, XVIII, XIX, XX, XXI, XXII, XXIII, XXV, XXVI, XXVII, XXIX, XXXII, XXXVI, XXXVII, XL, XLII, XLIV AND XLV.

DEMAND II—EXCISE DEPARTMENT.

DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 27,400 under Demand II—Excise Department."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND VI—MOTOR VEHICLES ACTS ADMINISTRATION.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 22,700 under Demand VI—Motor Vehicles Acts Administration."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND VII—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES—ADMINISTRATION.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 13,29,000 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties—Administration."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND VIII—IRRIGATION.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 52,00,000 under Demand VIII—Irrigation."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND IX—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 5,21,400 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XI—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 4,74,500 under Demand XI—District Administration and Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XIV—POLICE.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 10,58,000 under Demand XIV—Police."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND—XV—EDUCATION.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 3,000 under Demand XV—Education."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XVI—MEDICAL.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 300 under Demand XVI—Medical."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XVIII—AGRICULTURE AND FISHERIES.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceding Rs. 3,81,900 under Demand XVIII—Agriculture and Fisheries."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XIX—VETERINARY.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 300 under Demand XIX—Veterinary."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XX—CO-OPERATION.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 82,93,200 under Demand XX—Co-operation."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXI—INDUSTRIES AND CINCHONA.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 1,200 under Demand XXI—Industries and Cinchona."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXII—HARIJAN UPLIFT.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 36,38,900 under Demand XXII—Harijan Uplift."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXIII—LABOUR INCLUDING FACTORIES.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand XXIII—Labour including Factories."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXV—CIVIL WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,69,200 under Demand XXV—Civil Works—Establishment and Tools and Plant."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXVI—CIVIL WORKS—GRANTS-IN-AID.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 5,02,000 under Demand XXVI—Civil Works—Grands-in-aid."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXVII—ELECTRICITY.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,70,06,800 under Demand XXVII—Electricity."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXIX—PENSION.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 6,67,300 under Demand XXIX—Pensions."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXII—COMMUNITY DEVELOPMENT PROJECTS.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,61,02,100 under Demand XXXII—Community Development Projects."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXVI—CAPITAL OUTLAY ON IRRIGATION.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 2,11,80,800 under Demand XXXVI—Capital Outlay on Irrigation."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXVII—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 30,70,900 under Demand XXVII—Capital Outlay on Public Health."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XL—CAPITAL OUTLAY ON CIVIL WORKS.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 700 under Demand XL—Capital Outlay on Civil Works."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLII—CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 31,39,700 under Demand XLII—Capital Outlay on Road Transport Schemes."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLIV—CAPITAL OUTLAY ON SCHEMES OF STATE TRADING.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 4,25,04,200 under Demand XLIV—Capital Outlay on Schemes of State Trading."

The Demand was put and carried and the Grant was made.

[26th December 1956

DEMAND XLV—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 17,15,000 under Demand XLV—Loans and Advances by the State Government."

The Demand was put and carried and the Grant was made.

IV.—GOVERNMENT MOTION—*cont.*

MOTION UNDER RULE 21 (3) OF THE ASSEMBLY RULES TO CHANGE IN THE ORDER OF BUSINESS—*cont.*

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

"That under rule 21 (3) of the Assembly Rules, the order of business be changed and Madras District Collectors' Powers (Delegation) Bill, 1956, be taken up first and the Madras Electricity Supply Control (Temporary Powers) Bill, 1956, be postponed."

The Government are not moving the first Bill. We may take up the next and the other Bills.

DEPUTY SPEAKER: The question is—

"That under rule 21 (3) of the Assembly Rules, the order of business be changed and the Madras District Collectors' Powers (Delegation) Bill, 1956, be taken up first and the Madras Electricity Supply Control (Temporary Powers) Bill, 1956, be postponed."

The motion was put and carried.

V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS DISTRICT COLLECTORS' POWERS (DELEGATION) BILL, 1956.

THE HON. SRI M. A. MANICKAVELU: Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras District Collectors' Powers (Delegation) Bill*, 1956, and move—

"That the Bill be taken into consideration."

The District Revenue Administration Enquiry Committee appointed by the Government observed that some of the duties cast on the District Collectors under several State enactments are of routine nature but on account of their volume they took up a good deal of the time of the Collectors and that these duties could be competently attended to by the Personal Assistants. The Committee accordinly recommended that with a view to give some relief to the District Collectors, an enabling Act may be passed to the effect that the District Collector with the prior approval of the Board of Revenue or the Government may delegate either wholly

* Published in the *Fort St. George Gazette*, dated 31st October 1956.

26th December 1956] [Sri M. A. Manickavelu]

or in part any of the functions cast on him by any State law to his Personal Assistants. The Government considered that the proper course would be to provide for such delegation of powers by Government themselves and for this purpose we take power under an enabling Act to issue a notification relating to each enactment making such delegation. Clause 3 of the Bill provides for this. The Government have also decided that proper provision should be made for appeals and revision in respect of orders passed by the Personal Assistants, under the proposed delegation. Clause 4 of the Bill provides for this.

These are the main features of the Bill.

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras District Collectors' Powers (Delegation) Bill, 1956, be taken into consideration." 11-15 a.m.

SRI V. BALAKRISHNAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கின்றேன். நம்நாட்டுக்கு சுயராஜ்யம் வருவதற்கு முன்பே ஜில்லா கலெக்டர் ஒவ்வொருவரும் மாதமொன்றுக்கு ஐந்நூறு மனுக்கள் முதல் ஆயிரம் மனுக்கள் வரை பரிசீலனை செய்து கொண்டிருக்கக்கூடிய காலம் இருந்தது. இப்பொழுது அவர்களுடைய வேலை அதிகமாக்கப்பட்டிருக்கிறது. எல்லோருடைய மனதிலும் "வெல் பேர் ஸ்டேட்" அதாவது க்ஷேமநல ராஜ்யத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் குடிகொண்டிருப்பதாலும், ஒவ்வொருவருக்கும் ஜில்லா கலெக்டரையே நேரில் பார்த்து விஷயங்களைத் தெரிவிக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்துவருவதாலும், அவருக்கே நேரிடையாக மனுக்கள் போட்டு உடனடியான பரிகாரம் தேடிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இருப்பதாலும், ஜில்லா கலெக்டர்களுக்கு வேலை அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அதிகமாக வேலை இருப்பது மட்டுமல்ல. மாதமொன்றுக்கு ஐந்து ஆயிரம், ஆறு ஆயிரம் மனுக்கள் வரையிலும் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளை கலெக்டர் பார்த்து பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. அவைகளையெல்லாம் கலெக்டரே பைசல் பண்ணவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக்கிறபடியினால், அவருக்குக் கீழே இருப்பவர்கள் பார்த்து பரிசீலித்து, கலெக்டருக்கு அனுப்பினாலும், "கலெக்டர் பார்த்தார்" என்ற அவசியத்தைப் பூர்த்தி செய்வதற்காக, பேப்பரைப் பார்த்ததாக கையெழுத்து போடுவதற்கு அவகாசம் கிடைக்கிறதே தவிர, ஒவ்வொரு file-ஐயும் நுணுக்கமாக படித்துப் பார்த்து செய்வதற்கு அவகாசம் கிடைப்பதில்லை. அப்படி அவகாசம் இல்லாததால் நெறி தவறிவிட ஏதுவாகிறது. ஜில்லா ரெவினியூ நிர்வாக சீர்திருத்தக் கமிட்டி இது சம்பந்தமாக செய்திருக்கக்கூடிய சிபார்சுகளை வரவேற்க வேண்டியதுதான். அதையனுசரித்து, உடனடியாக தகுந்த மசோதா கொண்டுவந்திருப்பதற்காக அமைச்சரவர்களையும் பாராட்ட வேண்டியிருக்கிறது. இதோடு நின்றுவிடாமல், ஜில்லா நிர்வாகம் நன்கு நடைபெற்று மக்கள் எல்லோரும் நல்ல பலன்களை அனுபவிக்கத்தக்க முறையிலும், மக்களுக்கு நியாயம் கிடைக்க தக்க முறையிலும் தகுந்த மசோதாக்களை வெகு சீக்கிரத்தில் மேலும் மேலும் சர்க்கார் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

SRI E. L. RAGHAVA MUDALIAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்தத் திருத்த மசோதாவிலே கலெக்டர்களுடைய சில அதிகாரங்கள் அவர்களுடைய உதவியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இதை நிரந்தரமாக வைத்துக்கொள்ள முடியாது. கலெக்டர்களுக்கு அதிகமாக வேலை இருப்பதின் காரணம் ஜில்லாக்கள் அதிக பரப்புள்ளதாக இருக்கின்றன. இந்தத் திருத்தத்தை தற்காலிகமாகத்தான் வைத்துக்கொள்ள

வேண்டும். **Revenue Reforms Committee Report**-ஐ அனுசரித்து ஒரு கலெக்டரே நேரில் எல்லாவிதமான அலுவல்களையும் பார்க்கக்கூடிய அளவுக்கு ஜில்லாக்களை பிரித்து சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று நான் ரெவின்யூ மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI V. GOPALA GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் நோக்கத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், இந்தத் திருத்த மசோதாவிலே, 'கலெக்டர்' என்ற பதத்திற்கு கலெக்டர் என்ற அர்த்தத்தைக் கொண்டே திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே உள்ள சட்டங்களிலே கலெக்டர் என்று சொன்னால் பொதுவாக அது கலெக்டர், ஜில்லா மாஜிஸ்டிரேட் இரண்டு பேர்களுக்கும் பொருந்தும். கலெக்டர் இரண்டு பேர்களின் அலுவல்களையும் கவனித்து வந்ததினாலே சட்டங்களிலே அவருக்கு விரிவான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நீதி நிர்வாகப் பிரிவினை ஏற்பட்ட பிறகு ஜில்லா மாஜிஸ்டிரேட் வேறு ஆகிவிட்டார், கலெக்டர் வேறு ஆகிவிட்டார். இருந்தாலும்கூட, ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் சில வேலைகளை கலெக்டரே செய்து வருகிறார்கள். ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளே இந்த வேலைகளையும் கவனித்து வந்தால் அது சுலபமாக இருக்கும். கலெக்டருக்கு அடிஷனல் ஜில்லா மாஜிஸ்டிரேட் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. **Personal Assistants** களுக்கும் அடிஷனல் ஜில்லா மாஜிஸ்டிரேட் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஜில்லா மாஜிஸ்டிரேட் செய்து வரும் வேலைகளை **Executive Department**-ல் செய்துவருகிறார்கள். அவர்களுக்கு இது கஷ்டமான **function** ஆக இருக்கிறது. இவைகளெல்லாம் **Executive function** என்று சொல்லுவதற்கில்லை. **Judicial** நோக்கத்துடன் பார்க்கவேண்டிய சில அதிகாரங்களும் கலெக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கலெக்டர்களுக்கு உள்ள அதிகாரங்களை **Executive officer**-களான **Personal Assistant**-களுக்கு கொடுப்பதைவிட **judicial** மாஜிஸ்டிரேட்டுகளுக்குக் கொடுக்கலாம். அவர்களுக்கு இந்த **function** எளிதாக இருக்கும். **Executive officer**-களுக்கு இருக்கும் நெருக்கடி **judicial** மாஜிஸ்டிரேட்டுகளுக்கு இருக்காது. **Judicial** மாஜிஸ்டிரேட்டுகள் இந்த அதிகாரத்தை பிரயோகப்படுத்தினால் ஒருவித நெருக்கடியும் தொந்தரவும் இல்லாமல் இருக்கும். அவர்கள் நல்ல முறையில் இந்த அதிகாரங்களை பிரயோகிக்க முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். குறிப்பாக கலெக்டர்களுக்கு வேலை அதிகமாக இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அவர்களுக்கு அதிகமாக அதிகாரத்தை கொடுத்து வேலை செய்யசொன்னால் அவர்கள் தங்களுடைய வேலைகளை சரிவர கவனிக்கமுடியாதபடி பல தொந்தரவுகள் ஏற்படும். கனம் பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னதுபோல், கலெக்டர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அநேக மனுக்களைபைசலாகாமலே வைத்துக் கொண்டிருக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஏற்கனவே கலெக்டர் என்று சொன்னால், it includes judicial Magistrate. **Judicial** நபர்களே இந்த அதிகாரங்களை பிரயோகித்தால் நிர்வாகம் நல்ல முறையிலே நடக்கும். இவைகளெல்லாம் **judicial** நோக்குடன் செய்ய வேண்டிய அலுவல்கள். **Executive officer**-களுக்கு அநேக விதமான **pressure** இருக்கும். **Judicial** மாஜிஸ்ரேட்டுகளுக்கு அம்மாதிரி **pressure** இருக்காது. சர்க்கார் இந்தப் பிரகாரம் மீண்டும் திருத்தம் செய்வார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI A. DURAISWAMY GOUNDER: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்பாக கலெக்டரின் கீழ் ஒரு **Sheristadar** வைத்துக் கொண்டு நிர்வாகம் நடந்து வந்தது. அதன் பிறகு இப்பொழுது கலெக்டரின் கீழ் மூன்று **Personal Assistants**களை நியமித்து நிர்வாகம் நடக்கின்றது. அதற்குக் காரணம் வேலை அதிகமாக இருப்பதுதான். ஒவ்வொரு ஜில்லாவும் அதிக விஸ்தீரணமுள்ளதாக இருப்பதால், இந்தத் தொந்தரவு ஏற்படுகிறது. அப்படி மூன்று **Personal Assistant**-கள் நியமிக்கப்பட்டும் வேலை துரிதமாக நடப்பதில்லை. காரணம் வேலை பளுவை அவர்களால் சமாளிக்க முடிய

வில்லை. ஆகவே ஒவ்வொரு ஜில்லாவையும் இரண்டாகவோ மூன்றாகவோ பிரித்து, பழைய மாதிரியாக **Personal Assistant**-கள் இல்லாமலே ஒரு **Sheristadar**-ஐ வைத்துக் கொண்டு, நிர்வாகத்தை நடத்த ஏற்பாடு செய்தால் எல்லா பேப்பர்களும் சீக்கிரமாக பைசலாகும். அப்படிச் செய்து எல்லா விஷயங்களையும் சீக்கிரமாக பைசல் செய்யும்படி நிர்வாகம் நடத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இந்தத் திருத்தத்தை வரவேற்கிறேன். இந்தத் திருத்தத்தினால் சர்க்கார் எதிர்பார்க்கக்கூடிய அளவிலே நன்மை இல்லை. இப்பொழுது கலெக்டருக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை சிலருக்கு பங்கு போட்டுக் கொடுப்பதினால் துரிதமாக நிர்வாகம் நடைபெற முடியும் என்று நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. இப்பொழுது கலெக்டருக்கு அதிகரித்து வரும் வேலைப் பளுவை குறைத்து மற்றவர்களுக்கு அந்த வேலையை கொடுக்க வேண்டு மென்பதோடு மட்டு மல்லாமல், நிர்வாகம் துரிதமாக நடப்பதற்கு என்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதையும் சர்க்கார் உணர்ந்து அதற்குத் தகுந்தாற்போல் நடவடிக்கை எடுக்க வேண்டும். சர்க்கார் போடக்கூடிய உத்தரவுகள் ஜில்லாவுக்குச் சென்று அதன் மீது ஜில்லா அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கு நடுவே ரெவின்யூ போர்டு மலை போல் நின்று கொண்டிருக்கிறது. ரெவின்யூ போர்டு அவசியமா, இல்லையா என்பது சர்க்கார் கவனத்தில் வெகு காலமாக இருந்து வருகிறது. ரெவின்யூ போர்டு அவசியமென்றாலும் கூட அது அப்பீல்களை பரிசீலனை செய்யும் ஒரு மேல்பார்வை **Tribunal**-ஆக இயங்க வேண்டுமே ஒழிய, கொள்கை சம்பந்தப்பட்ட மட்டில் ரெவின்யூ போர்டுக்கு எந்த விதமான அதிகாரமும் இருக்கக்கூடாது. சர்க்கார் உத்தரவு நேராக கலெக்டருக்குச் சென்று கலெக்டர் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு கலெக்டருக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். ரெவின்யூ போர்டு சர்க்காருக்கும் ஜில்லா நிர்வாகத்திற்கும் அப்பால் பட்ட ஒரு ஸ்தாபனமாக இருக்க வேண்டும். சர்க்காருக்கும் ஜில்லா நிர்வாகத்திற்கும் இடையே முட்டுக்கட்டையாக இயங்கும் ஒரு ஸ்தாபனமாக இருக்கக்கூடாது. இந்த முக்கியமான பிரச்னையிலும் சர்க்கார் கவனம் செலுத்தி ரெவின்யூ போர்டின் அதிகாரத்தை வரையறுக்க வேண்டும். இந்த யோசனையை சர்க்காருக்கு இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடுகூட **Personal Assistant**-கள் மூன்று பேர்கள் இருக்கிறார்கள். மூன்று பேர்களும் ரெவின்யூ இலாகாவிலிருந்து வந்த அதிகாரிகளாக இருக்கிறார்கள். இப்பொழுது கலெக்டர்கள் முடிவு செய்யவேண்டிய பல **Technical** பிரச்னைகள் ஏற்படுகின்றன. **Engineering** விஷயத்திலே நல்ல ஞானம் இருக்க வேண்டும். கலெக்டர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவராக இருந்த போதிலும், எல்லா விஷயங்களும் அவருக்குத் தெரிந்திருக்கும் என்று நாம் எதிர் பார்க்க முடியாது. **Engineering qualification** உள்ள டிவிஷனல் இன்ஜினியர் அந்தஸ்து இருக்கக்கூடிய ஒருவரை கலெக்டருக்கு **Personal Assistant**-ஆக நியமித்து சமுதாய நல திட்டம், ஐந்தாண்டு திட்டம் முதலிய திட்டங்கள் சம்பந்தமாக எழக்கூடிய பிரச்னைகளை அவர் கவனிக்கும்படி செய்ய வேண்டும். **Planning Department**-ஐ தனியாக பிரித்து அதற்கு ஒரு **Engineering qualification** உள்ள **Personal Assistant**-ஐ நியமித்தால் அது இன்னும் உபயோகமாக இருக்கும் என்று யோசனையை தெரிவித்துக் கொண்டு இந்தத் திருத்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த மசோதாவை எல்லா அங்கத்தினர்களும் வரவேற்றார்கள். அது பற்றி சந்தோஷம். **Judicial** மாஜிஸ்டிரேட் வேலை, **executive officer**-கள் வேலை என்பது பற்றி ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார். இப்பொழுது **Judicial** விஷயங்களெல்லாம் ஜில்லா மாஜிஸ்டிரேட் கவனிக்கிறார். **Law and Order** விஷயத்தில் மட்டும் தான் கலெக்டர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

[Sri M. A. Manickavelu] [26th December 1956

ஜில்லா நிர்வாகத்திலே இந்த விஷயங்களெல்லாம் கலெக்டருடைய பொறுப்பில்தான் இருக்க வேண்டும். Judical மாஜிஸ்டிரேட்களிடம் இவைகள் ஒப்படைக்கப்பட்டால் கலெக்டர் Law and Order-ஐ நிர்வகிப்பது கஷ்டமாக இருக்கும். அதனால் Law and Order-ஐ பொறுத்த மட்டில் ஜில்லா கலெக்டருக்கு ஓரளவுக்கு judicial power இருக்கும் என்றுதான் நினைக்கிறேன்.

மற்றொரு அங்கத்தினர் இந்தத் திருத்தத்தை தாற்காலிகமாக வைத்துக் கொள்ளலாம், எப்போழுதுமே இம்மாதிரி இருக்கவேண்டியது அவசியமில்லை என்று சொன்னார். ஜில்லா விஸ்தீரணத்தை குறைத்துக்கொண்டால் Personal Assistant-களுக்கு அப்பொழுது இடமில்லை, எல்லா வேலைகளையும் கலெக்டரே பார்த்துக் கொள்ளலாம் என்பது வாஸ்தவம்தான். ஒவ்வொரு ஜில்லாவையும் 2 அல்லது 3 ஆகப் பிரித்து விட்டால் அந்தந்த ஜில்லாவை கலெக்டரே Assistant-கள் இல்லாமல் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் அந்தப் பிரச்னை எழும்பொழுது அதைக் கவனித்துக் கொள்ளலாம். இப்பொழுது ஜில்லா கலெக்டருக்கு வேலை அதிகமாக இருப்பதினாலே Personal Assistant-களுக்கு இம் மாதிரி power delegation செய்வது அவசியமென்று எனக்குத் தோன்றுகிறது.

எதிர் கட்சி உப தலைவர் அவர்கள் சொன்னார்கள், ரெவின்யூ போர்ட் மலைபோல மத்தியில் நிற்கிற தென்று. வாஸ்தவம். 1927ல் ரெவின்யூ போர்ட் கூடாதென்று சொன்ன கோஷ்டியில் சேர்ந்தவன்தான் நானும். ஆனால் அந்தப் பிரச்னையை அலசிப் பார்த்ததில், ஒவ்வொரு ஆண்டும் இந்த பட்ஜெட் டைமில் இது வருகிறது ; ஆனால் இப்பொழுது முக்கியமான வேலைகளை ரெவின்யூ போர்டு செய்து கொண்டுதான் வருகிறது. ஆனால் ரெவுன்யூ போர்டில் தாமதமாகிறது என்று ஒத்துக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். அதுவும் இருக்கிறது. ஆகையால் இந்த ரெவின்யூ போர்ட் என்ன செய்கிறது, எப்படிச் செய்கிறது என்று இந்தக் குறுகிய காலத்தில் இந்த discussion-ஐவைத்துக் கொள்ளுவது உசிதமல்ல. தனியாகத்தான் இதை ஆராய வேண்டியிருக்குமென்று நினைக்கிறேன். அப்பொழுது ரெவின்யூ போர்ட் இருக்கிறதோ இல்லையோ அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். இந்தப் பிரச்னைக்கு அது தேவையில்லை.

ஆகவே, இந்த மசோதாவை இப்படியே கனம் அங்கத்தினர்கள் பாஸாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI S. RAMALINGAM: On a point of information. ரெவின்யூ போர்ட் வேண்டுமா வேண்டாமா என்ற யோசனையை இறுதியாக முடிவு செய்வதற்கு முன்பு ரெவின்யூ போர்டை கலந்து கொண்டுதான் செய்யப்படுமா அல்லது சர்க்கார் சுயேச்சையாக செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ரெவின்யூ போர்டை கலந்து கொண்டால் வேண்டாமென்று (**abolish** பண்ணவேண்டாமென்று) தான் சொல்லுவார்கள். அதை எடுக்க வேண்டுமென்றால் எப்படி செய்ய வேண்டும்; எடுக்க வேண்டாமென்றால் எப்படி செய்ய வேண்டும் என்று சமயோசிதம் போல் செய்ய வேண்டும்.

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras District Collectors' Powers (Delegation) Bill, 1956, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3, 4 and 5 were put and carried.

Clause 1 was put and carried.

26th December 1956]

11-30 a.m.

The Preamble was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras District Collectors' Powers (Delegation) Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras District Collectors' Powers (Delegation) Bill, 1956, be passed."

SRI S. RAMALINGAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பல சட்டங்களிலும் ரெவின்யூ **Divisional** அதிகாரிகள் அல்லது **Deputy Collectors** போட்ட உத்தரவை ஜில்லா கலெக்டருக்கு அப்பீல் செய்வதற்குள்ள விதிகள் சட்டத்தில் இருக்கின்றன ; அதற்கான சௌகரியங்களும் இருக்கிறது. நாம் இப்பொழுது குறிப்பிட்டிருக்கும் மசோதா பிரகாரம் ஒரு **Deputy Collector** யைத்தான் **Personal Assistant** ஆகப் போட்டு ஜில்லா **Collector** க்குள்ள அதிகாரங்களை மாற்றிக் கொடுக்கப்போகிறோம். அதே **rank**-ல் இருக்கக்கூடிய அதிகாரிகள் வழங்கக்கூடியதின் மேல் அப்பீல் செய்ய சந்தர்ப்பம் இருக்குமானால் கூடுமானவரையில் **Senior Deputy Collector** யைத்தான் **Personal Assistant** ஆகப் போட வேண்டும். இல்லாவிட்டால் ஒரு அதிகாரி போட்ட உத்தரவை அதே **rank**-ல் உள்ள அதிகாரி மாற்றும் நிலை ஏற்பட்டால் அவர்களுக்கும் மனக் கஷ்டம் இருக்கும். **Senior hand** போட்ட உத்தரவை எப்படி மாற்றுவது என்ற யோசனையும் வரும். அவர்களிடையே அதனால் மனக் கசப்பு வளர இடமுண்டு. ஆகவே, ஸீனியர் அதிகாரிகளைதான் **Personal Assistants** ஆகப் போடவேண்டும்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த புது யோசனைக்கு அவசியமேயில்லை. ஏனெனில், ஏற்கனவே **Senior Deputy Collectors** யைத்தான் **Personal Assistant** ஆக போட்டுக்கொண்டு வருகிறோம்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras District Collectors' Powers (Delegation) Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) AMENDMENT BILL[*], 1956.

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1956, and move—

"That the Bill be taken into consideration."

SRI M. KALYANASUNDARAM : Mr. Deputy Speaker, Sir, in the Business Advisory Committee meeting this morning the Hon. the Leader of the House told me that this Bill also can be dropped.

[*] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 6th August 1956.

[Sri M. Kalyanasundaram] [26th December 1956

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : Not this one but the other one which has already been postponed.

SRI M. KALYANASUNDARAM : I was told that this also would be postponed.

DEPUTY SPEAKER : I think it relates to the first Bill which we have already postponed and not to this Bill. Anyhow it is left to the House whether to take up this Bill or postpone it.

SRI M. KALYANASUNDARAM : There is no urgency for this Bill. So this can be postponed.

DEPUTY SPEAKER : I have no objection if it is the desire of the Government to postpone this Bill also.

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : Mr. Deputy Speaker, Sir, I will read the Statement of Objects and Reasons which will explain the need for it.

In the course of the discussions on the floor of this House in August 1955 on the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1955 [which was subsequently passed as the Madras Buildings (Lease and Rent Control) Amendment Act, 1955], some members wanted that certain provisions of the principal Act should be amended so as to remove the difficulties experienced in the working of the Act. On that occasion, I gave an assurance that a comprehensive Bill would soon be introduced in the Legislature to remove those difficulties. The present Bill fulfils that assurance. With a view to give an incentive to private enterprise to build more houses and to rebuild old ones with larger accommodation, opportunity has been taken, after careful consideration, to introduce, among other things, two new provisions, namely, one exempting buildings constructed or completed after the 1st January 1955 from the provisions of section 3 of the Act and, the other, providing for the eviction of tenants so as to enable the landlords to repair, renovate or reconstruct old buildings. As the several clauses of the Bill will show, the Bill is designed to mitigate certain hardships now experienced by both the landlords and the tenants and I trust that it will receive the support of the House

DEPUTY SPEAKER : Motion moved—

" That the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1956, be taken into consideration."

(Sri M. Kalyanasundaram stood up in his place.)

26th December 1956]

DEPUTY SPEAKER : There is an amendment to this motion. Let it be moved. Then I will place the motion as well as the amendment before the House. The hon. Member can then say what he wants to say on the Bill.

SRI S. RAMALINGAM : Mr. Deputy Speaker, Sir, I move the amendment standing in my name, namely :—

" That the Bill be referred to a Select Committee."

SRI K. V. RAMASWAMI : I second the amendment, Sir.

DEPUTY SPEAKER : The motion as well as the amendment are before the House for discussion.

SRI M. KALYANASUNDARAM : Mr. Deputy Speaker, Sir, unfortunately the Hon. the Leader of the House is not present here now. He definitely told me that he had no objection to dropping this Bill. There is also no mention of this Bill in the proceedings of the Business Advisory Committee meeting. I was under the impression that this Bill will not be taken up for consideration today at all. I am not objecting to the Bill on any technical basis. My view is that the Bill covers a wide range of subjects and therefore the House should be given sufficient opportunity to discuss the various provisions and implications of the Bill. Therefore I would request the Hon. Minister to accept the amendment to refer it to a Select Committee. Let the Select Committee go into the provisions of the Bill and then let the new Assembly take up consideration of the Bill as amended by the Select Committee, if the Government feel that the Bill should be taken up now. But if the Government are not very keen, I suggest that it can be dropped for the present.

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : Sir, there is no point in referring it to the Select Committee. It would practically amount to shelving the thing. If hon. Members are not keen on having this Bill and feel that this need not be taken up now, I have no objection to postpone the consideration of the Bill and leave it to the new Assembly to take it up.

DEPUTY SPEAKER : I hope the House gives permission to postpone the consideration of the Bill.

The consideration of the Bill was by leave postponed.

(3) THE MADRAS PLANTATIONS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1956.

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill*, 1956, and move—

" That the Bill be taken into consideration."

* Published in *Fort St. George Gazette*, dated 31st October 1956.

[Sri M. A. Manickavelu] [26th December 1956

Sir, the Indian Coinage Act was amended introducing the decimal system of coinage. As an Act of Parliament introducing the decimal system of coinage would not automatically have the effect of making consequential changes in the State enactments, special amendments will have to be made to State enactments. This Bill seeks to amend the relevant provisions of the Madras Plantations Agricultural Income-tax Act, 1955, in which there is a reference to annas and pies, so as to bring them into conformity with the Indian Coinage Act notwithstanding consequential increase or decrease. When expressing the rates of tax in terms of new units, 'Naya Pysa' fractions have been avoided. The Bill is a very simple one and it may be passed.

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1956, be taken into consideration."

The motion is now before the House for discussion.

Sri S. RAMALINGAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே! இந்த நயா பைசா நாணயத்தை நான் பார்த்ததே கிடையாது. சினிமாவில் காண்பித்திருக்கிறார்கள். இந்த மசோதாவிற்கு சபை அனுமதி !கொடுக்கவேண்டும் என்று சொன்னால், மந்திரியவர்கள் முதலாவதாக, அதொன்றைக் கொண்டுவந்து காண்பித்தால் ஒத்துக் கொள்ளலாம். அதனால் இதையெப்படி ஆதரிக்கிறது. ஆதலால் மந்திரி அவர்கள் இந்த நயா பைசா எப்படி இருக்கும் என்று காண்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: நான் கூட இன்னும் பார்க்கவில்லை. நயா பைசா இன்னும் வரவில்லை. ஒரு ரூபாய்க்கு 100 நயா பைசா. ஏறக்குறைய இப்போதிருக்கிற இரண்டு தம்படி ஒரு நயா பைசாவாகிறது. இதைத் தெரிந்து கொண்டால் புது நாணயம் வரும்போது அங்கத்தினர் ஏமாந்து போகமாட்டார். இரு தம்படி ஒரு நயா பைசா.

Sri N. RATHINA GOUNDER: On a point of information இந்த நயா பைசா சமாசாரம் நமக்கு வேண்டாம். இதற்கும் ஒரு கிளர்ச்சி வரலாமென்று நினைக்கிறேன். ஆகவே இந்த நயா பைசா சமாசாரம் நமக்கு வேண்டாம்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இது பெரிய வீட்டு சமாசாரம், அதாவது **Central Government** காரியம்.

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1956, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

26th December 1956]

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(4) THE MADRAS TOBACCO (TAXATION OF SALES AND REGISTRATION) AMENDMENT BILL, 1956.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I beg to introduce the Madras Tobacco (Taxation of Sales and Registration) Amendment Bill*, 1956, and move—

"That the Bill be taken into consideration."

Sir, this Bill is a similar one. The Indian Coinage (Amendment) Act, 1955, provides for the replacement of the existing system of coinage by coins based on the decimal system. The values expressed in "pies" and "annas" in Section 4 (3) of the Madras Tobacco (Taxation of Sales and Registration) Act, 1953, have to be referred to by their nearest equivalents in naya paise so as to bring them into conformity with the Indian Coinage (Amendment) Act, 1955.

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Tobacco (Taxation of Sales and Registration) Amendment Bill, 1956, be taken into consideration."

The motion is now before the House for discussion.

Sri A. RATNAM: உதவி சபாநாயகர் அவர்களே, நயா பைசா நாணயம் எப்பொழுது செலவாணிக்கு வருகிறது. இந்த மசோதா சட்டமாகிற நேரத்திலாவது அது செலவாணிக்கு வருமா என்று அறிய ஆவல்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இது வந்து 1957 எப்ரல் மாதத்திலிருந்து அமுலுக்கு வருமென்று நினைக்கிறேன். அது அமுலுக்கு வந்தாலும் பழைய நாணயங்களும் அமுலில் தான் இருக்கும். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மாறும். பழைய நாணயங்களும் புதிய நாணயமும், இரண்டும் அமுலில் இருக்கும்.

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Tobacco (Taxation of Sales and Registration) Amendment Bill, 1956, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

* Published in *Fort St. George Gazette* Extraordinary, dated 20th December 1956.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

" That the Madras Tobacco (Taxation of Sales and Registration) Amendment Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Tobacco (Taxation of Sales and Registration) Amendment Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(5) THE MADRAS OFFICIAL LANGUAGE BILL, 1956.

DEPUTY SPEAKER : Now the Madras Official Language Bill, 1956, will be taken up for discussion.

SOME HON. MEMBERS : We shall take it up to-morrow.

DEPUTY SPEAKER : That means we have to adjourn now. The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned. (12-10 p.m.)

VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

210. *Notification issued with G.O. Ms. No. 2754, Agriculture, dated 22nd November 1956, providing for relaxation of the Madras Commercial Crops Market Committee Provident Fund Rules, 1948, in particular cases, if circumstances so require. [Laid on the table of the House under section 18 (4) (c) of the Madras Commercial Crops Market Act, 1933].*

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Thursday, 27th December 1956.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at nine of the clock, the Deputy Speaker (Sri B. BHAKTHAVATSALU NAIDU) in the CHAIR.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

DEPUTY SPEAKER : Let us take up Short Notice Question No. 15 first . . .

SRI M. KALYANASUNDARAM : Sir, there are two questions on the subject. One is a Short Notice question addressed to the Hon .Minister for Local Administration and the other is a Private Notice question addressed to the Hon. Minister for Finance. I suggest that both the questions may be taken up together and the Hon. the Minister for Finance may answer.

Enhanced dearness allowance to employees of local bodies

* 6 *P.N. Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance and Education be pleased to make a statement regarding the non-implementation by the Municipalities and Local Bodies of the recent increase in dearness allowance sanctioned to non-Gazetted Government employees to their staff?

THE HON. SRI C. SUBRAMANIAM : In G.O. No. 1734, Finance, dated the 3rd November 1956, the Government directed that the rates of dearness allowance payable to the employees of the State Government should be revised with effect from 1st November 1956, in the manner indicated in the Government Order. The orders in the said Government Order do not automatically apply to the employees of local bodies (District Boards, Municipal Councils and Panchayats). An order containing a statutory direction under the relevant provisions of the Acts governing the local bodies has had to be issued. Such an order was issued in G.O. No. 1746, Local Administration, dated the 26th November 1956. As the Government Order applies to all local bodies and as copies were to be communicated to a very large number of authorities, it had got to be printed and despatched. The Government Order was actually despatched on 15th December 1956.

Enhanced dearness allowance to Local Boards' employees

* 15 *S.N. Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the action taken by the Government to give effect to the enhancement of emoluments as announced by the Government recently to the employees of the Local Boards in the State?

[27th December 1956

THE HON. SRI S. S. RAMASWAMI PADAYATCHI: The Government have issued orders directing municipal councils, district boards and panchayats to pay dearness allowance at the enhanced rates admissible to State Government servants of corresponding grades with effect from 1st November 1956.

SRI M. KALYANASUNDARAM : கால தாமதமானாலும் மற்ற ஜில்லாபோர்ட், முனிசிபாலிட்டி, பஞ்சாயத்து போர்ட் முதல் பிரிவு இரண்டாவது பிரிவு போன்ற எல்லா ஸ்தலஸ்தாபனங்களிலும் வேலை செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்கும் இந்த சலுகை அளிக்கப்படுமா? நவம்பர் 1-ம் தேதியிலிருந்து அல்லது நிதி நிலைமை அனுமதித்தால்தான் இவை அனுமதிக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Dearness Allowance பொறுத்த வரையில் அது சர்க்காருடைய பொறுப்பு. ஆகையால் அந்த அவர்களுடைய நிதி நிலைமைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. என்னுடைய பட்ஜெட் உரையிலேயே குறிப்பிட்டிருக்கும், எல்லா ஊழியர்களுக்கும் இது கிடைக்கும்.

SRI K. VINAYAKAM : இந்த விஷயத்தில் சென்னை கார்ப்பரேஷன், இன்னும் [illegible] வரவில்லை. வந்தவுடன் இதை [illegible] கேட்ட பொழுது கமிஷனர் அவர்கள் வாக்குத் [illegible]. அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், 15-ம் தேதியே இதை print செய்து despatch செய்து விட்டோம் என்று பதில் சொல்கிறார்கள். அந்த பதிலிற்கும் இந்த பதிலிற்கும் வித்தியாசம் இருப்பதால் அந்த ஆர்டர் அவர்களுக்குப் போய் சேர்ந்ததா, அப்படியானால் ஏன் அவர்கள் இன்னும் அதை அமுலுக்கு கொண்டு வரவில்லை என்று பரிசீலித்து அதற்கு பரிகாரம் தேடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னை சென்னை கார்ப்பரேஷனிற்கு சென்று இந்த [illegible] அங்கு வந்து சேர்ந்ததா, வரவில்லையா என்று பார்க்கச் சொன்னால் வேண்டுமானால் பார்த்து வருகிறேன். ஆனால் அங்கத்தினர் அவர்களே அங்கேயே ஒரு அங்கத்தினராய் இருப்பதால் அவரே அதை சுலபமாக கண்டு பிடித்து விடலாம். சர்க்காரைப் பொறுத்தவரையில் 15-ம் தேதியே அனுப்பியாகி விட்டது.

SRI G. GOVINDAN : பஞ்சாயத்து போர்ட் நிதி நிலைமை சரியாக இல்லாததினால் பஞ்சப்படி கொடுக்க முடியாது, சர்க்காரிலிருந்து கண்டிப்பான உத்தரவு வந்தாலும் நிதி நிலைமையைப் பொறுத்துதான் கொடுப்போமென்று சொல்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு தாக்கீது அனுப்பி நவம்பர் மாதத்திலிருந்தே கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பஞ்சாயத்து விஷயம் தனியாக இருக்கக்கூடிய விஷயம். இந்த இலாகாவை பரிபாலிக்கும் மந்திரியவர்களுக்கு இதுபற்றி கேள்வி போட்டால் பதில் சொல்வார்கள்.

SRI S. RAMALINGAM : நிதி நிலைமை நன்றாக இருக்கும் ஸ்தாபனங்களிடம் இதன் பாதிப் பொறுப்பையாவது விட்டு விட, அதை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்ய நிதியமைச்சரவர்கள் முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நிதி நிலைமை சரியாக இருக்கக் கூடிய ஸ்தாபனங்களாய் இருந்தால் இதைப்பற்றி ஆலோசிக்கலாம். ஆனால் அப்பேர்ப்பட்ட ஸ்தாபனம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், இப்பொழுது செலவு அதிகமாகிக் கொண்டே வருகிறது. வருவாய் போதவில்லை. ஆகையால்தான் பஞ்சப்படி பொறுத்த வரையில் சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

27th December 1956]

SRI M. PALANIYANDI : 150 ரூபாய்க்கு குறைவாக சம்பளம் வாங்கக்கூடிய ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளுக்கு அடிப்படை சம்பளத்தை உயர்த்துவதற்கு மத்திய சர்க்கார் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து உடனடியாக இதை வாங்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கும் இந்த கேள்விக்கும் சம்பந்தமேயில்லை. இதைப்பற்றி கேட்டபொழுது பதிலும் சொல்லியிருக்கிறேன்.

SRI S. PANCHAKSHARAM : இவர்களுக்கு பஞ்சப்படி சர்க்காரிலிருந்து கொடுக்கப்படுகிறது. இதுவரையில் வேண்டிய மான்யத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த மான்யத்தை இப்பொழுது ஒதுக்கி வைக்காததால் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, தாமதம் ஏற்படாமல் இருக்க தேவையான மான்யத்தை மாதாமாதம் சர்க்கார் ஒதுக்கி வைக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுபற்றிய விவரங்கள் இன்னும் அதிகமாக தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் எனது சகாவிற்கு கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்வார்கள்.

SRI S. PANCHAKSHARAM : நேற்று என். ஜீ. ஓ. சங்கத்தினர் மத்திய அரசாங்க நிதியமைச்சரை அணுகிக் கேட்டபொழுது 200 ரூபாய்க்குக் கீழ் உள்ளவர்களுக்கு பஞ்சப்படி உயர்த்தப்படும் என்று சொன்னது மந்திரியவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் அவர்களுக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் எனக்கும் தெரியும்.

SRI V. BALAKRISHNAN : மந்திரியவர்கள் பதில் சொல்லும் போது கார்ப்பரேஷனிற்கு நேராகப் போய் பார்க்க வேண்டுமா என்று கேட்டார். போனாலும் சரி போகாவிட்டாலும் சரி, அந்த ஸ்தாபனங்களுக்கு இன்னும் உத்தரவு போய் சேரவில்லை என்பதோடு அவர்களுக்கு இன்னும் பணம் கிடைக்கவில்லை என்று நிச்சயமாகத் தெரிவதால் சர்க்கார் உடனடியாக ஒரு " ரிமைண்டர் " அனுப்பி உடனடியாக அதைக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு இடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 15-ம் தேதியே உத்தரவு அனுப்பியாகிவிட்டது. அவர்கள் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்று தெரிகிறதேயொழிய மறுபடியும் " ரிமைண்டர் " அனுப்புவதால் ஒரு பிரயோஜனமுமில்லை. 15-ம் தேதியே ஆர்டர் அனுப்பியாகி விட்டதே, ஏன் அதன் மேல் நடவடிக்கைகள் எடுக்கவில்லை யென்று ஆங்காங்குள்ள ஸ்தாபனங்களில் இருப்பவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : சென்னை கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்ட மட்டில் உத்தரவு வரவில்லையென்பது அல்ல முக்கியமான பிரச்னை. அவர்களுக்கு 14 லட்சம் ரூபாய்க்கு மேல் ஆகும். இந்த அதிகத் தொகை கூடுதலில், இதில் சர்க்கார் பொறுப்பு எவ்வளவு என்பதில் குழப்பம் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் சர்க்கார் நிலையோ நன்றாக இருக்கிறது. ஆனால் சில இடங்களில் இந்த குழப்பம் ஏற்பட்டிருப்பதால் அதைத் தெளிவு படுத்த சர்க்கார் நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தெளிவாக இருக்கிற விஷயத்தை குழப்பப் படுத்தினால் அதற்கு எப்படி பரிகாரம் தேடுவதென்று தெரியவில்லை. ஆங்காங்குள்ள சபைகள் உத்தரவுகளை சரியாக கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முன்வருவார்களேயானால் இந்தப் பிரச்னை எழுவதற்கு எந்தவித காரணமும் இருக்கமுடியாது.

[27th December 1956

Poor Homes in the City

9-10 a.m. *426 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of poor homes in the City of Madras during the year 1956 ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The number is twelve.

SRI N. K. PALANISAMY : இம்மாதிரி பிச்சைக்கார விடுதிகளை வைத்து நடத்தியதில் எந்த அளவுக்கு அவர்களுக்கு பரிகாரம் ஏற்பட்டிருக்கிறது ? அப்படி ஏதாகிலும் பரிகாரம் ஏற்பட்டிருந்தால் இன்னும் அதிகப்படியான விடுதிகளை திறப்பதற்கு சர்க்கார் யோசனை செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்குள்ள பிச்சைக்காரர்களுக்கு பரிகாரம் கிடைத்திருக்கிறது. அங்கு அவர்களைப் பராமரிக்கப்படுகிறது. அவர்களுக்கு உணவு எல்லாம் கொடுக்கப்படுகிறது. பிச்சைக்கார விடுதிகளை இன்னும் அதிகப் படுத்த வேண்டும் என்ற யோசனை சரியல்ல. அதை அதிகமாக ஏற்படுத்தாமல் இருப்பதற்கு அவர்களுக்கு வேறு திட்டம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

SRI V. BALAKRISHNAN : அந்த விடுதியில் கனம் அங்கத்தினர்கள் எத்தனை பேர்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் போனபோது அங்கத்தினர்கள் ஒருவரையும் நான் பார்க்கவில்லை.

SRI K. VINAYAKAM : இந்தப் பிச்சைக்கார விடுதியை நடத்துவதில் ஒரு சின்ன கஷ்டம் இருக்கிறது. பிச்சைக்காரர்களைப் பிடித்து அவர்களை அந்த விடுதிக்குக் கொண்டுபோய் அடைத்து வைத்தால் அவர்கள் அங்கே இருப்பதற்கு விருப்பம் இல்லாமல் எப்படியாகிலும் வெளியே வருவதற்கு முயற்சிக்கிறார்கள், அப்படி அநேகர் வெளியே போய் விட்டார்கள். ஆதலால் அவர்கள் அப்படிப்போகாமல் இருப்பதற்கு அந்த விடுதிகளை சென்னையில் அமைக்காமல் பக்கத்திலுள்ள ஆவடி போன்ற இடங்களில் அமைப்பதற்கு கார்போரேஷனுக்கு யோசனை கூறுவார்களா ? அப்படி அங்கு கார்போரேஷன் அமைத்தால் அதற்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது நடந்து கொண்டு வரும் ஸ்தாபனம் நல்ல முறையில் நடந்து கொண்டுதான் வருகிறது. பிச்சைக்காரர்கள் அப்படி ஒன்றிரண்டு பேர்கள் தான் வெளியே சென்றிருப்பார்கள். வேறு விதத்தில் எந்த விதமான கஷ்டமும் இல்லை. அவர்கள் எங்கே போனாலும் கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருப்பார்கள். அவர்களை மறுபடியும் பிடித்துக்கொண்டு வந்து அங்கே விட்டு விடுவார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படும். கார்போரேஷன் அதிகப்படியான விடுதிகளை அமைத்தால் அதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்பது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம்.

SRI K. R. SAMBANDAM : இப்படிப்பட்ட பிச்சைக்கார விடுதி சென்னை நகரத்தில் இருப்பதுபோல் மற்ற இதர நகரங்களிலும் விஸ்தரிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் சில இடங்களில் அப்படி ஏற்பாடு செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

Government buses in Kanyakumari district

* 429 Q.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(a) whether the students of Kanyakumari district were allowed any concession in fares in Government buses by the former Travancore-Cochin State before its merger into Madras State: and

27th December 1956]

(b) if so, whether the Government propose to extend the same facilities to them?

THE HON. SRI B. PARAMESWARAN : (a) The answer is in the affirmative.

(b) The concession is being continued tentatively pending further examination.

SRI K. VINAYAKAM : May I know what the financial commitment involved is in the grant of the concession to the students of Kanyakumari district?

THE HON. SRI B. PARAMESWARAN : It is not even two months since we took over the management of the transport system there. The Director has been asked to go into this question and submit a report. Only after getting the report, we will be able to find out the exact commitment.

SRI S. RAMALINGAM : சென்னையில் படிக்கும் மாணவர்களும் அம்மாதிரியான சலுகை தங்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு அதைகவனிப்பதாக ஒரு தடவை கனம் மந்திரி அவர்கள் வாக்குறுதி அளித்தார். அதைப்பற்றி ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN : மூன்று வருஷங்களுக்கு முன்னதாக அப்படிப்பட்ட பிரச்னை வந்தபோது சாத்தியம் இல்லை என்று அரசாங்கம் முடிவு கொடுத்து விட்டார்கள்.

SRI K. VINAYAKAM : If the financial commitment is tantalisingly negligible, will the Government come forward to give them the concession permanently ?

THE HON. SRI B. PARAMESWARAN . This is a hypothetical question and I do not think there is any need for me to answer. When the figures are before the Government, that will be considered.

SRI V. BALAKRISHNAN : அந்த சலுகை தம்படிசலுகையா அல்லது ரூபாய் சலுகையா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அது எந்த சலுகை என்று தெரியாது. ஆனால் சலுகை மட்டும் கொடுக்கிறோம்.

Copyists' Establishment, Tiruchirappalli district

* 430 Q.—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state why the copyists' establishment in the Criminal Judicial Department, Tiruchirappalli district, formed after the separation of the Judiciary from the Executive from 1st January 1955, has not been made permanent?

THE HON. SRI C. SUBRAMANIAM : The posts of copyists in the Criminal Judicial Department do not form part of the regular establishment of courts and hence the ' one year ' rule for the permanent retention of staff absorbed at the time of ' Separation '

does not apply to these posts. The posts of copyists in the Criminal Judicial Department in the Tiruchirappalli district are normally liable to be made permanent only after they had been in existence continuously for a period of five years and their retention as a permanent measure is found necessary thereafter. However, the question of making these posts permanent is now under consideration.

DEPUTY SPEAKER: Question No. 436, which is on the same subject may also be answered, and both questions may be taken up together for putting supplementary questions.

Copyists in Civil Courts

* 436 *Q.*—SRI V. BALAKRISHNAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of copyists in the District Court and the other Civil Courts subordinate to it in Tiruchirappalli district: and

(*b*) why no house-rent allowance is paid to these copyists?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The particulars as on 1st October 1956 are as follows:—

District Court, Tiruchirappalli	13
Sub-Court, Pudukkottai	5
District Munsif's Court, Ariyalur	2
District Munsif's Court, Kulithalai	2
District Munsif's Court, Karur	2
District Munsif's Court, Turaiyur	3
Total ...	27

(*b*) The grant of house-rent allowance to the copyists in the Judicial Department has to be considered along with the claims of similar persons in other departments and the present financial position of the Government does not warrant the above grant.

SRI M. KALYANASUNDARAM: அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டுமானால் எவ்வளவு செலவாகும்? அந்தக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அவர்களுக்கு மட்டும் தனியாகக் கொடுக்க முடியாது. அவர்களுக்குக் கொடுக்கும்போது அவர்களைப் போலுள்ள மற்ற சிப்பந்திகளுக்கும் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும். அப்படி எல்லோருக்கும் கொடுப்பதாக இருந்தால் அது அதிகப் படியாக செலவாகும் என்று நினைப்பதால் அதை எடுத்துக்கொள்வதற்கு இல்லை.

SRI N. K. PALANISAMY: காபிஸ்ட்டுகள் என்று சொல்லும்போது அதே செக்ஷனில் உள்ள அட்டெண்டர்கள், ரீடர்கள், எக்ஸாமினர்கள், முதலியவர்களுக்குக் கொடுக்கப்படும் போது காபிஸ்டுகளுக்கு மட்டும் ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. காபிஸ்ட்டுகளை நிரந்தரமாக்கப்படவில்லை. அப்படி அவர்கள் நிரந்தரமாக்கப்பட்டால்தான்

அவர்களுக்குக் கொடுப்பதைப்பற்றி யோசிக்கலாம். 'ஒவ்வொரு கோர்ட்டுக்கும் எவ்வளவு காபிஸ்டுகள் தேவை, அவைகளில் எவ்வளவுபேர்களை நிரந்தரமாக்கலாம் என்றெல்லாம் கவனிப்பதற் ஐந்து வருஷகாலம் அதற்கு என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிற்பாடுதான் எவ்வளவுகாபிஸ்ட்டுகளை நிரந்தரமாக்கலாம், அவர்களுடைய ஸ்கேல் என்னவாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நிர்ணயம் செய்யப்படும். அதற்குப் பிறகு தான் அவர்களை நிரந்தரமாக்கப்படுவதைப்பற்றி யோசிக்கப்படும். ஐந்து வருஷம் ஆன பிறகுதான் அவர்களைப்பற்றி யோசிக்க முடியும்.

SRI M. PALANIYANDI: சாதாரணமாக தொழிற் சங்கங்களில் வேலைசெய்கின்ற தொழிலாளர்கள் சாதாரணமாக ஆறு மாதங்கள் வேலை செய்தாலே அவர்களை நிரந்தரமாக்கி விடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் காபிஸ்ட்டுகளை நிரந்தரமாக்குவதற்கு ஐந்து வருஷங்கள் எதற்காக என்பது தெரியவில்லை. அவர்களை நிரந்தரமாக்குதவற்கு இவ்வளவு கால தாமதமாக்குவானேன். . ஒரு வருஷத்தில் அவர்களை நிரந்தரமாக்கக் கூடாதா? சிலரை நிரந்தரமாக்கினாலும் சிலரை தாற்காலிகமாக வைத்துக்கொள்வார்களே அவர்களுக்குக் கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் ஒரு சிலரை நிரந்தரமாக்கவும் சிலரை தற்காலிகமாகவும் எடுத்துக் கொள்வதில் சில சிரமங்கள் இருக்கின்றன. அதனால் தான் ஐந்து வருஷங்கள் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குள் எல்லாம் ஒரு முடிவுக்கு வந்துவிடலாம் என்று அப்படி வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதே எவ்வளவு பேர்களை நிரந்தரமாக்கலாம் என்று சர்க்கார் யோசித்து கொண்டு வருகிறார்கள்.

SRI M. KALYANASUNDARAM: கனம் மந்திரி அவர்கள் சொல்லக்கூடிய யோசனையானது புதியதாக ஏற்படுத்தப்போகும் கோர்ட்டுகளுக்கு இருக்கலாம். இப்பொழுது இருக்கக் கூடிய கோர்ட்டுகளில் இருக்கக் கூடிய காபிஸ்ட்டுகளுக்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்? இப்பொழுது நிரந்தரமாக இருக்கக்கூடிய காபிஸ்ட்டுகளுக்கும் எக்ஸாமினர்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய யோசனை. கனம் மந்திரி அவர்கள் போன பட்ஜெட் பிரசங்கத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால் "**Copyists and Examiners in Criminal Courts will be put on regular scales of pay instead of being paid on the basis of piecework.**" என்று தெளிவாக சொல்லியிருக்கிறார். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பற்றிதான் நான் என்னுடைய இரண்டாவது பகுதி பதிலில் சொல்லியிருக்கிறேன். பட்ஜெட் பிரசங்கத்தில் சொல்லிய பிரகாரம் எவ்வளவு பேர்களை ஸ்திரப்படுத்த முடியும் என்பதை சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

SRI V. BALAKRISHNAN: சுமார் 25 வருஷ காலமாக காபிஸ்ட்டுகளாக வேலை பார்த்து வரும் காபிஸ்ட்டுகளுடைய கதி என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: காபிஸ்ட்டுகளாக இருப்பதுதான்.

SRI S. RAMALINGAM: காபிஸ்ட்டுகளை ஸ்திரப்படுத்துவதற்கு ஐந்து வருஷ காலம் தேவை என்று சொன்னார். அந்த ஐந்து வருஷத்திற்குள் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுப்பதைப்பற்றி ஒரு உத்தரவு அரசாங்கம் போடுவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பற்றி நான் ஏற்கெனவே பதில் சொல்லி விட்டேன்.

9-20 a.m. SRI M. KALYANASUNDARAM : காபிஸ்டுகளைக் காயப்படுத்துவது ஒருபுறம் இருக்கட்டும். ஏற்கெனவே அவர்கள் வயிறு காய்ந்திருக்கிறது. ஆனால், ஒவ்வொரு கோர்ட்டிலும் இப்பொழுது இருக்கிற அத்தனை பேரையும் நிரந்தரமாக்கும் பிரச்னையில் குறைந்தபட்சம் எவ்வளவு காபிஸ்டுகள் தேவைப்படும் என்பதை நிர்ணயித்து அவர்களையாவது ஐந்து வருஷ காலவரை முடிய காத்திராமல் உடனடியாக நிரந்தரமாக்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have already stated, " However, the question of making these posts permanent is now under consideration ". Therefore, I may assure hon. Members that the question is under the active consideration of the Government.

Police firing at Thammampatti village

* 431 Q.—SRI P. RANGASAMY REDDIAR (on behalf of Sri M. P. Subramaniam) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government received any representations from Sri M. P. Subramanyam, M.L.A., on 30th April 1956 and 22nd August 1956 about the Police firing at Thammampatti village, Attur taluk, on 20th February 1956; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) Orders have been issued directing that suitable action should be taken against the concerned Police officials.

SRI P. RANGASAMY REDDIAR : Sir, is any case pending before any criminal court regarding this? If not, may I know whether the nature of the direction given by the Government to the Police will be disclosed?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think, Sir, any case is pending just now. The head of the department has been directed to take such action as he deems necessary against the officials.

SRI M. KALYANASUNDARAM : கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். பி. சுப்ரமண்யம் அவர்களிடமிருந்து வந்திருக்கக்கூடிய புகாரின் விவரம் என்ன என்பதையாவது கனம் மந்திரி அவர்களிடமிருந்து அறிய முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The police resorted to firing without justification.

SRI P. RANGASAMY REDDIAR : தம்மம்பட்டியில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர் இருக்கிறார். ஆத்தூரில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். எந்த போலீஸ் அதிகாரி பேரில் விசாரணை நடத்தும்படி சர்க்கார் ' டைரெக்ட் ' செய்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த நிகழ்ச்சியைப் பரிசீலனைசெய்து பார்த்து, எந்தெந்த உத்தியோகஸ்தர்கள் தவறு செய்திருப்பதாக ஏற்படுகிறதோ அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கும்படியாக உத்திரவு இடப்பட்டிருக்கிறது.

SRI V. BALAKRISHNAN : எங்கே, எப்பொழுது, எந்த போலீஸ் நிலையத்தாரால் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது என்பதை மந்திரி அவர்கள் தெளிவாகச் சொல்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது பழைய கதை. இதையும்கூட கவனிக்காமல் இருக்கிறார்களே என்று அவருக்குப் பின்னாலே இருக்கின்ற கனம் அங்கத்தினர்கள் ஆச்சரியப்படுவார்களே என்று நினைக்கிறேன்.

Hunger strike in the Madras Penitentiary

* 432 Q.—SRI S. PAKKIRISWAMI PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the convicts in the Madras Penitentiary went on hunger strike on 3rd November 1956, demanding that they should be released on the same terms and conditions as have been allowed to prisoners of other States in connection with the Reorganization of States; and

(b) if so, the action taken by the Government in the matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The Government were not in favour of any general amnesty to prisoners in connection with the Reorganization of States.

SRI M. KALYANASUNDARAM : ராஜ்யப் புனரமைப்பு சம்பந்தமாக அவர்களுக்கு விடுதலை கொடுக்காவிட்டாலும், ஜெயிலிலே அதிகப்படியாக இடம் இல்லாத காரணத்தை உத்தேசத்தாவது ஓரளவு அவர்களை விடுதலைசெய்ய சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்பொழுது குற்றம் செய்தவர்களையெல்லாம் அவிழ்த்துவிடவேண்டுமென்ற நிலைதான் ஏற்படும். அவ்வளவு இட நெருக்கடி நம்முடைய ராஜ்யத்தில் இன்னும் ஏற்படவில்லை.

SRI K. VINAYAKAM : ராஜ்யப புனரமைப்பை மற்ற ராஜ்யங்களிலே விழாவாகக் கருதி, அந்த நேரத்தில் கைதிகளுக்கு ஒரு சந்தோஷச் செய்தியாகப் போகவேண்டுமென்பதற்காக அவர்களை விடுதலை செய்யவில்லையென்றாலும்கூட ஒரு மாத தண்டனையைக் குறைத்திருக்கிறார்கள். ஆந்திரப் பிரதேசத்தில் எல்லைத் தகராறு சம்பந்தமாக கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளுக்கும் ஒரு மாத சிறைத் தண்டனை குறைக்கப்பட்டு அவர்களை விடுதலை செய்தார்கள் ஆந்திர அரசாங்கத்தார். அம்மாதிரி அரசியல் கைதிகள் விஷயத்திலாவது அரசாங்கம் கவனித்து அவர்களுடைய தண்டனை காலத்தில் ஒரு மாதத்தைக் குறைப்பதற்கு முயற்சிக்குமா ? வேறு குற்றம் செய்தவர்களுக்கு எந்த விதமான பரிகாரமும் தேடவில்லையென்றாலுங்கூட அரசியல் கைதிகளுக்காவது இந்தப் பரிகாரம் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஏன் இங்கே ஒரு விழாவாகக் கொண்டாடவில்லை என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். எங்களுடைய அபிப்பிராயத்தில் இன்னும் பல தமிழ்ப்

பகுதிகள் வந்துசேரவேண்டுமென்றிருப்பதால் இப்பொழுது விழா கொண்டாடக்கூடிய நிலையில் இல்லாததால் அந்த விழாவைக் கொண்டாடாமல் விட்டுவிட்டோம். கைதிகளின் ஒரு மாத தண்டனையை குறைப்பது சம்பந்தமாக யாருக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

SRI S. DAIVASIGAMONEY: Sir, going on hunger-strike in any place is not conducive to the discipline of any institution. May I know what action the Government have taken against those persons who have gone on hunger-strike?

THE HON. SRI C. SUBRAMANIAM: Appropriate action has been taken by the authorities concerned.

Certified schools

* 433 *Q.*—SRI S. RAMALINGAM (on behalf of Sri A. Ratnam): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Certified Schools run (1) by the Government and (2) by private bodies in the States;

(*b*) the amount spent on Government schools and the amount granted as subsidy to private schools during the year 1955–56;

(*c*) the number of persons, men and women benefited during 1955–56; and

(*d*) the number of schools to be opened during the Second Five-Year Plan period?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The number of Certified Schools run by the Government is four and by private bodies is nine.

(*b*) The amount spent during the year 1955–56 on Government Certified Schools is Rs. 8,64,000; and the amount granted as subsidy to private Certified Schools is Rs. 3,48,000.

(*c*) 2,600 boys and 600 girls.

(*d*) One Senior Certified School for boys.

SRI S. RAMALINGAM: தனியாாகள் நடத்தும் 'ஸர்டிபைட் ஸ்கூல்களின்' நிர்வாகம் சரியாக நடைபெறுகிறதா என்பதை விசாரிக்க சர்க்கார் ஏதாவது பிரத்தியேகமான கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்களா? அந்தக் கமிட்டி ஏதாவது சிபார்சு செய்திருக்கிறதா? பல இடங்களில் தனியார்கள் நடத்தும் 'ஸர்டிபைட்' பள்ளிகள் சரியாக நடத்தப்படுவது இல்லை என்ற புகார்கள் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, சர்க்காரே எல்லாவற்றையும் நேரடியாக நடத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இவைகளை சர்க்காரே ஏற்று நடத்துவதினால் செலவு இன்னும் அதிகமாகும். ஆகையால் தனியார் நடத்துவதிலேயே சர்க்காரும் அக்கறை கொண்டு அவர்களுக்கு உதவி செய்துவருகிறது. இந்த ஸ்தாபனங்களை தனிப்பட்டவர்கள் சரியாக நடத்தி வருகிறார்களா என்பதைப் பார்வையிடுவதற்கு தனி உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள்.

SRI K. R. VISWANATHAN: May I know, Sir, what is the criterion for declaring a school run by private management as a Certified School?

THE HON. SRI C. SUBRAMANIAM: The suitability of the institution, Sir.

Higher education in rural areas

* 434 *Q.*—SRI N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Finance be pleased to state whether syllabuses for imparting higher education in rural areas have been prepared?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir. There is at present no separate pattern of "Higher Education in Rural areas" so far as the State Education Department is concerned. Hence, no separate syllabuses for Higher Education in the rural areas have been prepared. But if the Member is referring to the Rural Institutes established under the auspices of the Government of India, I may add that the National Council for Rural Higher Education has approved of the syllabuses for courses in Civil Engineering and Agricultural and Rural Services.

Travelling allowance granted to peons of the former Pudukkottai State Service

* 435 *Q.*—SRI V. BALAKRISHNAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the reasons for not giving the peons and other menials of the Revenue Department of the former Pudukkottai State the Madras State rate of travelling allowance after merger;

(*b*) the number of peons still receiving the former Pudukkottai State rate of travelling allowance; and

(*c*) the Madras State rates and the former Pudukkottai State rates?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) *to* (*c*) The peons of the former Pudukkottai State were getting only a fixed travelling allowance of Rs. 6 per mensem. On the merger of Pudukkottai with the Madras State, their fixed travelling allowance was raised to Rs. 7–14–0 per mensem from 1st July 1949 and it was again raised subsequently to Rs. 9–14–0 per mensem which is the rate applicable to peons in the other areas in the Madras State. All the peons of the former Pudukkottai State are now getting the Madras State rates of fixed travelling allowance and there is no peon who is receiving the old Pudukkottai State rates.

(* 436 *Q.*—Answered along with starred question No. 430.)

Issue of printed receipts by village officers

* 437 Q.—SRI V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to question No. 3221 on 2nd March 1956 when the system of issuing printed receipts with counterfoils to the public for payments made to village maniyams will be introduced?

THE HON. SRI M. A. MANICKAVELU : Orders have already been issued in G.O. No. 2784, Revenue, dated 13th July 1956, prescribing the form of receipt and also directing that the receipts should be in a book form, that they should be written in triplicate, one original and two carbon copies and that double-sided carbon papers should be used for taking the copies. The Board is taking action to print and supply the necessary forms to the village headmen in the districts. This new system will begin in the districts shortly.

SRI M. KALYANASUNDARAM : கிராம மணியக்காரர்களால் வசூலிக்கப்படும் நில வரி உட்பட சகல தொகைக்கும் அச்சடிக்கப்பட்ட ரசீதுகள் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கிஸ்து செலுத்துவதற்கும் இம்மாதிரி ரசீது உண்டு. மற்ற இனங்களுக்கும் இதே ரசீது தான். ஆரம்பத்திலே கிஸ்து செலுத்துவதற்கு ரசீது கொடுப்பதை ஆரம்பிக்கிறோம். மற்ற இனத்திற்கும் இதே முறைதான் வரும்என்று நினைக்கிறேன்.

SRI S RAMALINGAM : ரசீது புத்தகங்களெல்லாம் எந்த அச்சகத்திலே அச்சடிக்க சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள் ? ஏன் இப்படிக் கேட்கிறேன் என்றால், பல ஸ்தாபனங்களுக்குத் தேவையான "பாரங்கள்" வெகு நாட்களாகக் கிடைப்பதில்லை என்ற புகார் சொல்லப்படுகிறது. ஹோ அண்டு கம்பெனிக்கு உத்தரவிட்டிருந்தால் ரசீது புத்தகங்கள் வந்து சேருவதற்கு இன்னும் ஒரு வருஷத்திற்குமேல் ஆனாலும் ஆகலாம். அடுத்த வருஷ கிஸ்தி வசூல் காலத்திலேயே அச்சடித்த ரசீது கொடுக்கக் கூடிய முறையிலேயே பல அச்சகங்களிலே இந்த ரசீது புத்தகங்களை அச்சடிக்க "ஆர்டர்" கொடுத்து, எல்லா கிராமாதிகாரிகளுக்கும் வினியோகிக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : உடனடியாக அமலுக்குக் கொண்டுவருவதற்காக என்னென்ன பிரயத்தனங்கள் எடுத்துக்கொள்ள முடியுமோ அந்த பிரயத்தனங்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

SRI K. ARANGANATHAN : நமது அமைச்சாவர்கள் பதில் சொல்லும்போது, "உடனடியாக" என்று குறிப்பிட்டது திட்டமாக இல்லாததால், வரப்போகிற ஜனவரி மாத வரி வசூலின்போதே இப்படிப்பட்ட அச்சடிக்கப்பட்ட ரசீதுகள் கொடுப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : உடனடியாக வரலா என்றுதான் நானும் நம்புகிறேன்.

Shifting of the Legislative Assembly to Fort St. George

* 438 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to the answer given to question No. 3422 (starred) on 15th March 1956, whether the Government have taken any decision in regard to the shifting of the Legislative Assembly to Fort St. George and if so, what it is?

THE HON. SRI C. SUBRAMANIAM : No Sir. No final decision has been taken yet.

SRI M. KALYANASUNDARAM : இந்த இடத்திலேயே சட்ட சபையை தொடர்ந்து நடத்துவதில் என்ன கஷ்டம் இருக்கிறது ? எதற்காக இடத்தை மாற்றவேண்டுமென்ற விஷயம் ஆலோசனையில் இருந்து வருகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முதலாவதாக இந்த இடம் சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கைக்கு பெரிதாக இருக்கிறது. மற்றொரு விஷயம் மந்திரிகளுக்கும், இலாகாவில் இருப்பவர்களுக்கும் வேலை செய்வதற்கு இங்கும் அங்குமாக போகவேண்டியிருந்தால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. இதையும் மற்ற விஷயங்களையும் ஆலோசனை செய்து சீர்தூக்கிப் பார்த்து எது சரி என்று முடிவு செய்யவேண்டும். இது யோசனை செய்து முடிவு செய்யவேண்டிய விஷயமாக இருப்பதால், இன்னும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இது இருப்பதாக நான் சொன்னேன்.

SRI V. R. NAGARAJAN : இதுவே என்னுடைய கடைசி கேள்வியாகும். (சிரிப்பு.) அசெம்பளியின் கட்டிடத்தை எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த இடத்தைவிட்டு கவுன்சில் இருக்கும் இடத்துக்கோ அல்லது கோட்டைக்கோ மாற்றவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இடம் பொது ஜனங்களுக்கும், அசெம்பளி அங்கத்தினர்களுக்கும் மிகவும் உரித்தாக இருக்கின்றது. வேண்டுமானல் கவுன்சிலை இங்கே வைத்துக்கொள்ளலாம். நடுவில் ஒரு screen proof partition போட்டுவிட்டு ஒரு பக்கம் அசெம்பளியும், மறு பக்கம் கவுன்சிலையும் நடத்தலாம். கடைசியாக நான் கேட்கும் இந்தக் கோரிக்கையை அரசாங்கம கவனித்து ஆவன செய்யுமென்று நினைக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது அங்கத்தினரின் யோசனையே தவிர கேள்வி அல்ல.

SRI S. JAYARAMA REDDIAR : இந்த சட்ட சபையை இங்கே இருந்து அங்கே மாற்றுவது என்ற விஷயம் கவனத்திற்கு வந்து முடிவு செய்யும் முன்பு ஒரு விஷயத்தை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

DEPUTY SPEAKER : This is question hour.

SRI S. JAYARAMA REDDIAR : ஏற்கனவே கோட்டைக்கு முன்பாக ஹார்பரை விஸ்தரிப்பதற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நம் சர்க்காருக்கு 30 லட்சம் ரூபாய் compensation கொடுக்கப்பட்டிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். ஹார்பர் அந்த இடத்தில் விஸ்தரிக்கப்பட்டுவிட்டால் இதைவிட அது அவ்வளவு சௌகர்யமான இடமாக இருக்காது. அந்த 30 லட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு இங்கே ஒரு women hostel கட்டப்போவதாகவும் சொல்லப்படுகிறது. அப்படியிருந்தால் அது ஒரு அசம்பாவிதமான காரியமாக இருக்கும். நம்முடைய சபையை இங்கேயே வைத்துவிட்டு women hostel-ஐயும் வேறு இடத்தில் கட்டும்படியான ஏற்பாடுகளை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : This is not a question. It is only an opinion.

[27th December 1956

SRI M. KALYANASUNDARAM: On a point of information Sir, இந்தப் பிரச்சினை மிக முக்கியமானதாக இருப்பதினாலே, இதுபற்றி முடிவு எடுப்பதற்கு முன்பாக அடுத்த சட்ட சபை முன்பு இந்தப் பிரச்சினையை கொண்டுவந்து சட்ட சபையின் அபிப்பிராயத்தையும் அறிந்து கொண்டு பிறகு சர்க்கார் அதுபற்றி ஒரு முடிவு எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: சர்க்கார் சொன்ன ஆலோசனையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

Additional sales-tax on sugar

* 439 *Q.*—SRI V. BALAKRISHNAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount of revenue realized by the imposition of additional sales-tax on sugar at one anna per rupee at the first point of sale from the date of levy to the end of October 1956; and

(*b*) the amount of revenue realized by the levy of General Sales Tax on sugar at three pies per rupee for the period from May to the end of October 1956?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Rs. 22,34,018 approximately.

(*b*) Rs. 6,31,107 approximately.

SRI V. BALAKRISHNAN: நமக்கு இந்தத் திட்டத்தின்கீழ் பூராவாக வரவேண்டிய தொகை வரவில்லை என்பது மந்திரி அவர்களுக்கு தெரியவருமா ? அது விஷயமாக சென்னை வியாபாரிகள் புகார் செய்திருக்கிறார்கள். அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU: பூராவாக வரவேண்டிய தொகை எவ்வளவு என்பது எனக்குத் தெரியாது. அதனாலே அதிலிருந்து கழித்து நான் சொல்வதற்கில்லை. ஏதோ இந்த அகதிகள் சலுகையை நல்ல வகையிலே உபயோகப்படுத்தாமல் அதில் தில்லுமல்லுகள் செய்கிறார்கள் என்ற விஷயம் மாத்திரம் எனக்குத் தெரியவந்திருக்கிறது. இந்த விஷயங்களெல்லாம் ஆராய்ச்சியில் இருக்கின்றன.

SRI N. K. PALANISAMY: வெளி மாகாணங்களிலிருந்து திருட்டுத்தனமாக லாரிகளில் ஏராளமான சர்க்கரை கொண்டு வருகிறார்கள். சர்க்கார் அதன்மீது சரிவர வரியை வசூல் செய்ய முடியவில்லை. ஆகவே இம்மாதிரி திருட்டுத்தனமாக ஆங்காங்கு சவுக்கிகளை வைத்து தடை செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இம்மாதிரி திருட்டுத்தனமாக கொண்டுவரப்படும் சர்க்கரையை தடை செய்வதற்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

SRI V. BALAKRISHNAN: சர்க்கரை விற்கும் இடங்கள் சர்க்காரிடம் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா ? அந்த இடங்களில் தினந்தோறும், வாரம்தோறும், மாதம்தோறும் எவ்வளவு மூட்டைகள் கொண்டு வந்து குவிக்கப்படுகின்றன என்பதை கணக்கெடுப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: வாலாயமாக வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்கள்தான் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். புதிதாக அங்கேயிருந்து ஓடிவந்த அகதிகளுக்கு ஸ்திரமான ஒரு இடமில்லை என்று எனக்குத் தெரியவருகிறது. இந்த விஷயத்தையும் இன்னும்

27th December 1956]

மற்ற விஷயங்களையும் ஆலோசித்துப் பார்த்து, என்ன செய்தால் இவைகளையெல்லாம் தீர்க்கலாம் என்ற விஷயம் இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது.

SRI S. RAMALINGAM: சர்க்கரைக்கு புதிதாக ஒரு முனையில் போட்டிருக்கக்கூடிய ஒரு அணா வரியை கொடுக்கமுடியாமல் வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் சர்க்கரை ரொம்ப கசந்துவிட்டது என்பது சர்க்காருக்கு தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: சர்க்கரை எப்பொழுதுமே கசக்காதே. (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM: சில சமயங்களில் கசக்கும் அதுபற்றி நம் புலவர்கள்கூட பாடியிருக்கிறார்கள். (சிரிப்பு.)

Illegal manufacture of crackers

* 440 *Q.*—SRI P. RANGASAMY REDDIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any Police raid was made at Tiruchirappalli on 29th October 1956 to detect cases of illegal manufacture of crackers and explosives just before Deepavali;

(*b*) whether any Policemen were seriously injured during the raid; and

(*c*) the number of cases of illegal manufacture detected during that week and the action, if any, taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir. Five Police officers were injured. A Sub-Inspector and a Police constable received serious injuries and an Inspector, a Head constable and a Police constable received simple injuries.

(*c*) Three cases were detected and investigation is proceeding.

SRI P. RANGASAMY REDDIAR: இதிலே சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு ஒரு கண் பாதிக்கப்பட்டு அதை அவர் உபயோகப்படுத்த முடியவில்லை. நம் நாட்டில் பல இடங்களில் இம்மாதிரி illegal-ஆக பட்டாசு தயாரிக்கப்படுவதை முன் எச்சரிக்கையாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது பெரிய அளவில் திருச்சியில் manufacture செய்யப்பட்டது.

THE HON. SRI C. SUBRAMANIAM: இதுபற்றி இன்னும் புலன் விசாரணை நடந்து வருகிறது. பூரா தகவலும் எனக்கு கிடைக்கவில்லை. சச்சிதானந்தம் என்ற ஒரு சப்-இன்ஸ்பெக்டரின் கண் கெட்டுப்போய் விட்டது.

SRI K. VINAYAKAM: ஒவ்வொரு தீபாவளி விழா முடிந்த பிறகு பட்டாசு வெடித்து இங்கே குழந்தை இறந்தது. அங்கே ஒருவன் மடிந்தான் இங்கே ஒருவன் மடிந்தான் என்றெல்லாம் பத்திரிகையில் படிக்கிறோம். ஆண்டுதோறும் இம்மாதிரி செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. பட்டாசு வெடி இல்லாமலே நம் மக்கள் வாழமுடியாது என்று சொல்லமுடியாது. ஆகவே, manufacture of crackers பூராவையும் ban செய்துவிட்டு இதனால் வருகிற தொல்லைகளையெல்லாம் தடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

[27th December 1956

(*b*) whether the number has increased or decreased after the Reorganization of States?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Five (three Range Deputy Inspectors-General of Police, the Deputy Inspector-General of Police, Railways and C.I.D., and the Commissioner of Police, Madras).

(*b*) No change.

SRI M. KALYANASUNDARAM : Re-organization-க்குப் பிறகு ஏதாவது குறைக்கப்பட்டதா? இல்லாவிடில் ஏன் குறைக்கப்படவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதை எப்படி திருத்தியமைக்கவேண்டுமென்று ஆலோசனை செய்யவேண்டியிருக்கிறது.

Personnel for attending to the break-down of buses

* 444 *Q*.—SRI V. K. RAMASWAMI MUDALIAR : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state whether the personnel that attend to the break-down of the buses of the Government Transport on road are technically qualified to do the work and, if so, what their technical qualifications are?

THE HON. SRI B. PARAMESWARAN : Each squad that attends to the break-down of the buses of the Madras State Transport on road consists of a mechanic, a fitter and a cleaner. They possess sound practical experience in carrying out running repairs. No question of qualifications arises, as service rules are just being framed. Practical ability is the real test for the work.

SRI V. K. RAMASWAMI MUDALIAR : Sir, in view of the fact that there are many break-downs on the roads, will the Government consider the desirability of appointing only technically qualified people so that break-downs may be minimized as far as possible and the inconvenience to the public may be prevented?

THE HON. SRI B. PARAMESWARAN : The latest figure shows that there has been a considerable improvement in the matter of break-downs. The number of break-downs has come down. The people who are employed are really people who possess sound practical experience and we are also trying to get qualified persons but there is dearth of candidates. However, rules are being framed and when suitable candidates are available, the Government will not hesitate to employ them. The difficulty is that there is dearth of suitable candidates but with all this, the present staff are working in a very satisfactory manner and the number of break-downs has come down.

SRI K. VINAYAKAM : இந்த பஸ்கள் ஆங்காங்கு பாதைகளில் கெட்டுப்போவதும், இதை ரிப்பேர் செய்யவேண்டுமென்றால் தலைமை ஆபீஸிற்கு "போன்" செய்து அங்கிருந்து உத்தியோகஸ்தர்கள் வந்து அதைச் சரிப்படுத்தவேண்டுமென்று ஒரு விதி இருப்பதினாலே நேரம்

27th December 1956]

அதிகமாகிவிடுகிறது, ஒரு நாள் பூராவும் கெட்டுப்போய் அங்கேயே இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. driver-களே இதில் திறமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். சிறிய ரிப்பேராயிருந்தால் அவர்களே அதை ரிப்பேர் செய்து எடுத்துக்கொண்டு போகலாம் என்று விதியைத் தளர்ச்சி செய்ய அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI B. PARAMESWARAN : மூன்று இடங்களில் squads இருக்கின்றன. பாரீஸ் கார்னர், மிண்ட்டு, மைலாப்பூர் இதற்கிடையில் எங்கேயாவது பஸ் நின்றுபோய்விட்டால் உடனடியாக இந்த squad போய் வேலை செய்கிறது. சிறிய ரிப்பேராய் இருந்தால் டிரைவர்களே செய்து விடுகிறார்கள். உத்தரவு ஒன்றும் வேண்டியதில்லை. அவர்களால் செய்ய முடியாததாயிருந்தால் இந்த mechanics உதவி வேண்டியிருக்கிறது.

SRI S. DAIVASIGAMONEY : Is the Hon. Minister aware that the breakdowns are very common only in the case of old and rickety buses which are still being run by the Government of Madras and if so, will the Hon. Minister see that those buses are not put on the road at least in the future?

THE HON. SRI B. PARAMESWARAN : There are only a few such buses, not more than ten. They are being replaced and we have got some reserve buses. At the same time I do not think that they are so bad as to render impossible any service. They are doing good service and once we find that they are not useful, we condemn them.

SRI V. BALAKRISHNAN : Why should the pretty little 'Red Ladies' breakdown frequently?

THE HON. SRI B. PARAMESWARAN : Because the black gentlemen are very angry.

SRI R. A. NATARAJA MUDALIAR : இந்த தேர்ச்சி பெற்ற **mechanics**-யை யார் உத்தியோகத்தில் அமர்த்தினார்கள்? இதற்கு ஏதாவது கமிட்டி உண்டா?

THE HON. SRI B. PARAMESWARAN : டயரக்டர் அவர்களே அமர்த்துகிறார்கள். இதற்கு கமிட்டி கிடையாது.

Eviction of people in seven villages due to lignite operations

DEPUTY SPEAKER : Now Mr. Govindaswamy can put his private notice question.

(Sri A. Govindaswamy Nayagar rose to read out the question.)

DEPUTY SPEAKER : I will read out the question.

* 7 *P.N. Q.*—Will the Hon. the Minister for Revenue be pleased to make a statement regarding the wholesale eviction of people in seven villages in Cuddalore and Vriddhachalam taluks in connection with lignite operations?

SRI V. BALAKRISHNAN : On a point of order, Sir. What is this private business between the Member and the Minister?

THE HON. SRI C. SUBRAMANIAM: Please look into the rules.

DEPUTY SPEAKER: It is a private notice question and I allowed it as it is not possible to answer it to-day under Rule 40.

SRI A. GOVINDASWAMY NAYAGAR: Sir, I want to say a few words.

DEPUTY SPEAKER: The hon. Member need not say anything now. He can put supplementary questions after the Hon. Minister has made the statement.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, on behalf of the Hon. Minister for Agriculture, I am making a statement.

Hon. Members are aware that the preliminary large-scale pumping tests carried out at Neyveli have demonstrated the feasibility of controlling, by suitably regulating the pumpage, the pressure of the ground water below the lignite bed and of mining the lignite without risk of the water bursting and flooding the mine. It has therefore been decided to go ahead and implement the Integrated Lignite Project which provides for the mining and processing of lignite, a large thermal power station and a fertiliser plant. Arrangements are accordingly being made to begin full-scale mining operations with utmost expedition and orders have been placed for the supply of various items of plant and machinery required for the

9-50 a.m.

Project. The lands in the seven villages mentioned in the notice lie adjacent to the lignite field on the north and north-west. They have been notified for acquisition for the purpose of construction of the township, factories, etc. It is not correct to say that the lands in these villages are not required for a public purpose or that they are not immediately needed. They are quite indispensable to the project and are quickly needed, because the planning of the Project, the development of the mine, and the construction of production units such as the lignite processing plant, power generating station and the fertiliser factory and the workshops, railway sidings and residential quarters for staff cannot be begun without the lands being taken over. Unless these items of work are begun and completed expeditiously the tax-payers would be put to considerable loss on overheads, interest charges, etc., on the scheme. It need hardly be stressed that unless the production units are located in the area immediately adjoining the lignite bearing lands, the cost of production would be uneconomic and the country as a whole will not be benefited. For obvious reasons the railway sidings and the township must also be close to the various production units and the mining area; otherwise a good deal of time and money will be wasted in transporting workmen to and fro.

It is not correct to say that people are not being paid adequate compensation for the lands taken over. Out of the seven villages mentioned in the notice only Elavarasampatty comes within the scope of the Madras Lignite (Acquisition of Land) Act, 1953.

Compensation in respect of lands acquired in this village will be determined according to section 2 (2) (i) of the Act. The other six villages are not covered by the Act and the lands in these villages will be paid compensation at the current market values as determined under the provisions of the Land Acquisition Act, 1894.

The Government have received a number of petitions from the villages affected by the Project and have decided after careful consideration that the acquisition of these lands is inevitable. The areas proposed for acquisition have been most carefully selected with reference to the needs of the Project, not merely from the point of view of convenience but from the point of view of economy and efficiency of operation, production and public safety; only the barest minimum extent absolutely essential for the execution of the Lignite Project is being acquired. It is true it is difficult for people who had been living in the villages for generations to be dispossessed of their lands. But the public purpose, which is of a national character is far more important and the convenience of individuals must necessarily be subordinated to it. In any event the people dispossessed will not be left adrift. It is proposed to resettle them in about 12,000 acres of Government forest land, within a radius of 20 miles of the Project area, which has been placed at the disposal of the Project authority. These lands have been found suitable for the location of village sites and for cultivation. The intention is that each person from whom land is acquired will be given an equivalent extent of cleared land in the rehabilitation area, subject to suitable maxima. The lands will be given free of cost. In addition, the village sites, with all amenities like roads and drinking water wells, will be provided gratis. In fact they will be model villages from every point of view.

SRI A. GOVINDASWAMY NAYAGAR: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நெய்வேலி வட்டாரத்தில் மந்திரி அவர்கள் குறிப்பிட்ட விளாங்குளம், பெருமத்தூர், சின்னகாப்பான்குளம், கொல்லிருப்பு போன்ற இடங்களில் இருந்த மக்களை வெளியேற்றி அந்த இடங்களில் தொழிற்சாலை கட்டப்போகிறோம், அதிகாரிகளுக்கு வீடு கட்டப்போகிறோம் என்று சொல்லி அந்த நிலங்களை சர்க்கார் ஆர்ஜிதம் செய்து வருகிறார்கள். வீடுகள் கட்டுவதற்கு பக்கத்தில் சேப்ளாநத்தம் கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலத்தில் அதிகாரிகளுக்கு வீடு கட்டிக்கொள்ளலாம். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏன் தயக்கம் இருக்கிறது என்று கேட்கிறேன். அது தவிர இப்பொழுது சர்க்கார் ஆர்ஜிதம் செய்து வரும் இடத்திற்கு எக்கர் ஒன்றுக்கு 250 ரூபாய் நஷ்டஈடாக கொடுத்து வருகிறார்கள். சாதாரணமாக அந்த இடங்களில் எக்கர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் விலையாக இருந்து வருகிறது. ஆகவே அவர்களுக்கு எக்கர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். வீடுகளுக்கு கொடுக்கப்படும் நஷ்டஈடும் மிக குறைவாக கொடுக்கப்பட்டு வருகிறது. அதாவது ஒரு வீட்டுக்கு 1,000 ரூபாய் என்று மதித்து 20 வருடங்கள் ஆன கட்டிடத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 100-க்கு 4 வீதம் கழித்து மொத்தத்தில் 800 ரூபாயை கழித்துவிட்டு மீதி 200 ரூபாயைத்தான் நஷ்டஈடாக கொடுக்கிறார்கள். நிலங்கள் விட்டு கொடுத்தவர்களுக்கு நிலங்கள் கொடுப்பதற்கு பக்கத்திலுள்ள நிலங்களை கொடுப்பதற்கும் மறுத்து வருகிறார்கள். இந்த மக்களுக்கு பக்கத்திலேயே நிலங்கள் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை சர்க்கார் எடுக்கவில்லை. ஆகவே அவர்களுக்கு நியாயமான நஷ்டஈடு அளிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

[27th December 1956

பெரும்பத்தூர் என்னும் இடத்தில் கனம் மந்திரி ராமசாமி படையாச்சி அவர்கள் திறந்து வைத்த பள்ளிக்கூடம் மூடுகிற அளவுக்கு இருக்கிறது. அதை மூடிவிடாதபடி பார்த்துக்கொள்ளுமாறு நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன் வருவார்களா என்று கேட்கிறேன். பள்ளிக்கூடத்தை மூடித்தான் ஆகவேண்டுமென்றால், மந்திரி திறந்து வைக்க ஏற்பட்ட செலவு வீண்தானே ?

DEPUTY SPEAKER : The hon. Member, instead of putting a short supplementary question, is making a long statement. Therefore, there is no need for the Hon. Minister to make a reply. Mr. Aranganathan will now put a question.

SRI A. GOVINDASWAMY NAYAGAR : Sir, it is an important question.

DEPUTY SPEAKER : I am not going to allow such sort of questions. I have called Mr. Aranganathan to put a supplementary question.

SRI K. ARANGANATHAN : நெய்வேலியில் நில ஆர்ஜித சட்டப்படி அங்குள்ள மக்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் நஷ்ட ஈடு மிக குறைவாக இருக்கிறது. 1935-40-ம் ஆண்டு இருந்த விலையை வைத்தே இந்த நிலங்களுக்கு விலை நிச்சயிக்கப்படுகிறது. இங்குள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கு இப்போது ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் வரை மகசூலில் இருந்து கிடைத்து வருகிறது. அந்த நிலங்களுக்கே சர்க்கார் ஏக்கர் ஒன்றுக்கு 250 ரூபாய் நஷ்ட ஈடாக அளித்து வருகிறார்கள். ஆகவே இதை மாற்றி நியாயமான முறையில் நஷ்ட ஈடு கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த இடத்தை நான் நேரில் பார்வையிட்டதில் அந்த இடத்தில் பலா, மா போன்ற மரங்கள் நிற்கின்றன. இந்த நிலங்கள் சாதாரணமாக நீர் தேக்கத்திற்காகவோ மற்று வேறு விதமான காரியங்களுக்காக எடுக்கப்படவில்லை. சுரங்க வேலைக்கென்று எடுத்திருக்கும் இடத்தில் அதற்கு அவசியமான வீடுகள் பக்கத்தில்தான் கட்டப்படவேண்டியிருக்கிறது. ரயில்வே நிலையங்களில் பக்கத்தில் ரயில்வே குவார்ட்டர்ஸ் இருப்பதைப்போல இருக்கவேண்டியிருக்கிறது. ஆகவே இதற்காக அத்தியாவசியமாக எடுக்கவேண்டிய இடத்தைதான் இப்போது எடுப்பார்கள். அதற்கு தகுந்தாற்போல் நஷ்டஈடும் அளிக்கப்படுகிறது. அது திருப்தி இல்லையென்றால் அதைப் பற்றி முறையிடுவதற்கு வசதியிருக்கிறது. அதல்லாமல் கண்மூடித்தனமாக ஒன்றும் செய்யவில்லை.

DEPUTY SPEAKER : **Questions are over.**

SRI A. GOVINDASWAMY NAYAGAR : This is a very important question. நான் கேட்பது வீடுகளுக்கு கொடுக்கும் நஷ்டஈடு மிகவும் குறைவாக இருக்கிறது. ஆயிரம் ரூபாய் பெறுமான வீட்டிற்கு இருபது வருஷ பழக்கம் இருக்கும் என்று கணக்கு வைத்து எண்ணூறு ரூபாய் கழித்துவிட்டு இருநூறு ரூபாய் கொடுத்து வருகிறார்கள். இதை மாற்றி அவர்களுக்கு நியாயமான நஷ்டஈடு அளிக்க வேண்டும். இதற்கு மந்திரி அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . .

DEPUTY SPEAKER : I have already stated that questions are over. The hon. Member must resume his seat. If the hon. Member wants to say anything on the subject, he can speak on the Appropriation Bill and the Hon. Minister will then reply to the points raised by him.

27th December 1956]

SRI A. GOVINDASWAMY NAYAGAR : On a point of order, Sir, ஆளும் கட்சியை சேர்ந்த அரங்கநாதன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லிவிட்டு, என்னுடைய கேள்விக்கு பதில் சொல்லாமல இருப்பதின் காரணம் என்ன ?

DEPUTY SPEAKER : It is not a point of order.

SRI K. ARANGANATHAN : Sir, on a point of order . . .

DEPUTY SPEAKER : When the Deputy Speaker is on his legs, no point of order can be raised.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS BY THE DEPUTY SPEAKER.

(1) MESSAGES FROM THE GOVERNOR.

DEPUTY SPEAKER : I have to announce to the House the following messages, dated 26th December 1956, received from the Governor of Madras :—

1. " In pursuance of Article 207, clause (1), read with Article 199 (1) (*d*) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Appropriation (No. 6) Bill, 1956, and in pursuance of clause (3) of Article 207, I also recommend to that Assembly the consideration of the said Bill.

2. In pursuance of Article 207, clause (1) read with Article 199 (1) (*d*) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Appropriation (Vote on Account) Bill, 1956, and in pursuance of clause (3) of Article 207, I also recommend to that Assembly the consideration of the said Bill."

(2) MESSAGE FROM THE COUNCIL.

DEPUTY SPEAKER : I have also to announce to the House the following message, dated 24th December 1956, received from the Hon. Chairman, Madras Legislative Council :—

" In accordance with rule 130 of the Madras Council Rules, I return the Madras Inams (Assessment) Bill, 1956 (L.A. Bill No. 36 of 1956), as passed by the Council on the 24th December 1956 without any recommendation and signed by me."

III.—STATEMENT UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE*

(1) ADVERSE EFFECT ON IRRIGATION IN RAMANATHAPURAM DISTRICT CONSEQUENT ON DRINKING WATER BEING MADE AVAILABLE TO MADURAI TOWN FROM THE VAIGAI RESERVOIR PROJECT.

DEPUTY SPEAKER : I will first take up the notice under rule 40. Then I will take up the Privilege Motion.

Statement under rule 40, regarding adverse effect on irrigation in Ramanathapuram district by the proposed supply of water from the Vaigai Reservoir to the Madurai town.

* SRI G. GOVINDAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வைகை திட்டத்தில் கிழக்கு ராமநாதபுரம் ஜில்லாவுக்கு வரவேண்டிய தண்ணீரை திருமங்கலம் பக்கமும் மற்ற இடங்களுக்கும் சப்ளை செய்யப் போவதாகத் தெரிகிறது, மேலும் மதுரை முனிஸிபல் இன்ஜினியர் சம்மதித்து சர்க்காருக்கு எழுதி இருப்பதாகவும் தெரிகிறது. இதனால் கிழக்கு ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள விவசாயிகளுக்கு அதிக கஷ்டம் ஏற்படும். அதை நிவர்த்தி செய்ய வேண்டும். அப்படி குடி தண்ணீர் வசதி ஏற்படுத்துவதாக இருந்தால் முதலாவதாக கிழக்கு ராமனாதபுரம் ஜில்லாவுக்கு தண்ணீர் கொடுத்துவிட்டுத்தான் மற்ற இடங்களுக்கு கொண்டுபோகவேண்டும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

* THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI : The hon. Member presumably refers to the Vaigai Reservoir Project now under execution. On completion, the reservoir will supply water—

(1) to stabilize existing irrigation under the old Vaigai channels in Ramanathapuram district and the tanks served by them; and

(2) to bring under cultivation a *new area* of 20,000 acres as detailed below :—

(*a*) 3,000 acres of percolation affected dry land interspersed in the ayacut of the existing Periyar Delta;

(*b*) 7,000 acres in Sivaganga taluk of Ramanathapuram district and

(*c*) 10,000 acres in Tirumangalam taluk of Madurai district.

In 1951 and again in 1954, the Madurai Municipal Council requested that arrangement might be made to supply water from the Reservoir to the Madurai town. The request was negatived both the times. The Municipal Council has once again come up to the Government with the same request. The matter is under examination and no decision has yet been taken in the matter. It is therefore premature to say whether supply of water to Madurai town will have any adverse effect on the irrigation in the eastern part of Ramanathapuram district. Before taking a final decision in the matter, any adverse effect such supply may have on irrigation facilities under the Reservoir will also be considered.

SRI R. V. SWAMINATHAN : May I put a question on this?

DEPUTY SPEAKER : No questions are permissible on a statement under rule 40.

(2) PRIVILEGE MOTION *re* DELAY IN OBTAINING UNION GOVERNMENT'S SANCTION FOR LEGISLATION IN REGULATING THE BEEDI INDUSTRY.

DEPUTY SPEAKER : I have received notice of a privilege motion from Sri M. Kalyanasundaram. The hon. Member will explain the motion.

* SRI M. KALYANASUNDARAM : The Hon. Minister for Labour in his statement on my motion under rule 40 made on 25th of October 1956 had stated as follows :—

I may tell the hon. Member at the outset that the draft Bill relating to the beedi workers is ready and it will be published shortly in the Gazette. It will be taken up in the Legislature as early as possible, subject to availability of time and the time-table of the Legislature before the general elections.

From the above statement it is clear that the Bill was ready on 25th of October 1956, and that the Minister had intended to move the Bill in the subsequent session.

On 17th December 1956, i.e., on the first day of the commencement of this session, the Minister for Labour promised to bring in the Bill if the Leader of the House had agreed, when I raised this question in the Business Advisory Committee meeting. On 18th December 1956 the Hon. Minister for Labour had stated on the floor of the Assembly in Tamil as follows :—

"கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மசோதா தயாரிக்கப்பட்டு விட்டது. அதற்கு மேல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரத்தில் இந்த சட்ட சபைக் கூட்டத்திலே அந்த மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறேன் என்பதை மட்டும் இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்கிறேன். முடியுமானால் அதை உடனே பிரசுரித்து சீக்கிரத்தில் சபை முன்பு கொண்டு வருகிறேன். கனம் அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பும் இருந்தால்"

In this statement again the Minister made it clear that the Bill was ready and that it would be brought in this session.

On my further representation on 20th December 1956 the Hon. Minister instructed the Secretary of the Department of Industries, Labour and Co-operation to publish the Bill on 22nd December 1956 and to give simultaneously notice to the Legislature for moving the Bill on 26th December 1956. It was the duty of the Secretary of the Department concerned to have taken steps to obtain the concurrence of the Union Government, if it was considered necessary. And for this, there has been more than enough time since 25th of October 1956 when the first assurance was given. Having failed to do so, they did not point out to the Minister till 21st December 1956 morning that no step was taken for obtaining the concurrence of the Union Government. This is something more serious than just administrative failure. It is a deliberate attempt to violate the assurance given by the Hon. Minister on the floor of the House. Such an attempt, if allowed unresisted, is sure to undermine the the faith of the people in this august house and therefore amounts

[Sri M. Kalyanasundaram] [27th December 1956

to an act of contempt of this house. This is a serious case of breach of privilege and I beg to move that the matter be referred to the Committee of Privileges for suitable action.

Further, I wish to point out that it is not necessary to obtain the previous concurrence of the Union Government under the Constitution.

DEPUTY SPEAKER: May I know how this is relevant to the subject under discussion?

* SRI M. KALYANASUNDARAM: I will explain the facts and then say how this point is relevant. Kindly allow me to have my say. Let us know what the facts are.

Article 255 of the Constitution, which relates to this subject, reads as follows:—

No Act of Parliament or of the Legislature of a State specified in Part A or Part B of the First Schedule, and no provision in any such Act, shall be invalid by reason only that some recommendation or previous sanction required by this Constitution was not given, if assent to that Act was given—

(a) where the recommendation required was that of the Governor, either by the Governor or by the President:

(b) where the recommendation required was that of the Rajapramukh either by the Rajapramukh or by the President; and

(c) where the recommendation or previous sanction required was that of the President, by the President.

இந்த உரிமைப் பிரேரணை சம்பந்தப்பட்டவரையில் என்னுடைய அபிப்பிராயம் சர்க்கார் இலாகா காரியதரிசிகள் வேண்டுமென்ற சபையில் கொடுத்த வாக்குறுதியை சபையில் நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கவில்லை என்பதுதான். அப்படி நடவடிக்கைகளை எடுக்காதது மட்டுமில்லை, எல்லா விதமான ஆட்சேபணைகளை கிளப்பி இந்த சபைக்கு கொண்டு வர முடியாதபடி செய்துவிட்டார்கள். அரசியல் சட்டத்தின் 255-வது சட்டத்தின்படி இந்த மசோதாவை கொண்டுவருவதற்கு முன் அனுமதி கட்டாயமாக வாங்கவேண்டும் என்பதில்லை. மசோதாவை நிறைவேற்றிவிட்டு பின்னால் ஜனாதிபதியின் சம்மதத்திற்காக அனுப்பினால் போதுமானது. எப்படியும் இந்த சபைத் தொடரில் வரக்கூடாது என்ற எண்ணத்துடன் இந்த மசோதாவுக்கு பலவிதமான ஆட்சேபணைகளை கிளப்பிவிட அவர்களுக்கு சந்தர்ப்பம் இருக்கின்றது. ஆகையினால் இந்த மசோதாவில் வேண்டிய நடவடிக்கை எடுக்காதது முதல் குற்றம். தவறிவிட்ட பிறகும் இந்த சபைக்கு தவறான கருத்தை தெரிவிப்பதற்கு தவறான முறையில் மந்திரி அவர்களுக்கு யோசனை கூறியது இரண்டாவது குற்றம். இந்த இரண்டு குற்றத்தையும் செய்த நீதி இலாகா, தொழில் இலாகா காரியதரிசிகள், மந்திரி அவர்கள் இந்த சபையில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் அகௌரவப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே இந்த இலாகா காரியதரிசிகள்மேல் விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு உரிமை கமிட்டிக்கு இந்த தீர்மானத்தை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதன்மீது சபை விவாதிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

27th December 1956]

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I am sure the mover of the motion himself is quite aware of the weakness of his case. In spite of the elaborate statement he made and the explanation that he gave in Tamil, I fail to understand how this subject can ever come under a privilege motion. It may be that certain officials have misbehaved; I am not quite sure about it because I have not looked into the matter to see what exactly had happened. But if any officials have misbehaved, it is a matter for action being taken against them and I do not think this could come under a privilege motion. Therefore I would request the Deputy Speaker to hold that no *prima facie* case has been made out as far as the privilege motion is concerned.

With regard to the allegation made by the hon. Member that certain officials purposely misled the Minister and wanted to see that this Bill did not come up before this House during this sitting, I shall look into it. But I am not quite sure whether the hon. Member is correct in his presumptions. I do not think we can question the bona fides and even the efficiency of our officers. If there had been any mistake, it should have been somewhere else. Anyway I am prepared to look into it.

DEPUTY SPEAKER: Sri M. Kalyanasundaram stated in the statement that he just made that the Hon. the Minister for Agriculture gave an assurance that he would bring in a Bill to regulate the service conditions of the beedi workers and that, as this assurance had not been implemented so far, it amounted to contempt of the House.

According to May, any act or omission which obstructs or impedes either House of Parliament in the performance of its functions, or which obstructs or impedes any member or officer of such House in the discharge of his duty, or which has a tendency, directly or indirectly, to produce such results, may be treated as contempt, even though there is no precedent for the offence. Acts of contempt have been classified under several heads and of these, contempt of the House itself is one. The following acts are generally considered to be contempt of the House, viz., wilful obstruction of the proceedings of the House, disobedience of the orders or rules which regulate the proceedings of the House, offering of bribe to a member, assaulting, challenging, threatening or otherwise molesting members on account of their conduct. May has also listed the following as 'constructive contempts', viz., speeches or writings reflecting on either House, publication of false or perverted reports of debates, etc., premature publication of a committee's proceedings or evidence, service of process or arrest within the House, etc.

The act referred to by the Member does not come within the scope of any of the above items. Also, there are certain matters which by their very nature cannot be raised as questions of privilege, e.g., the refusal of a Minister to answer a question. The Hon. the Minister for Agriculture had no doubt made a statement

that the draft Bill relating to the beedi workers was ready, that it would be published shortly in the gazette, and that it would be taken up in the Legislature as early as possible subject to availability of time and the time-table of the Legislature before the General Elections. In regard to such an assurance in respect of a policy decision, no fixed programme could be laid down, as the process of implementation is conditional upon a number of factors, and such subjects by their very nature do take some time.

If a Minister has given an assurance on the floor of the House, it has been provided by the Assembly Rules that such assurances shall be dealt with by the Committee on Government Assurances. It is the main purpose of this Committee to examine and report to the House whether there is any inordinate delay in the implementation of assurances. In an interim reply received on the 10th December 1956 with reference to the assurance given in October 1956, the Government stated that the question of bringing in the legislation in question was under consideration. Further, the Minister has reiterated that the matter is being pursued. It does not therefore appear that the matter has been dropped.

The letter to me in which the Member gave notice of the motion may be placed before the Committee on Assurances or, if the Member is not pleased with the policy of the Ministry in a particular respect, he can bring in a motion under rule 54 (1) of the Assembly Rules disapproving such policy.

Therefore, delay in implementing an assurance cannot be raised as a matter of privilege.

So, I rule the motion out of order.

SRI M. KALYANASUNDARAM: ஸார், காரியதரிசிகள் பேரில் இருக்கக்கூடிய புகாரை விசாரிப்பதற்கு மந்திரி அவர்கள் என்ன உறுதி சொல்லுகிறார்கள்? எனக்கு வேண்டியது இந்த பீடித்தொழிலாளர்களுக்கு அவசரமாக இயற்ற வேண்டிய இந்த சட்டத்தை கொண்டு வந்து அமுலாக்கப்படவேண்டும் என்பதுதான். சட்டப்படி வேறு எந்த முறைகளிலாவது இதை சட்டமாக நிறைவேற்றவேண்டும் என்பதுதான் என் கோரிக்கை.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் சொன்ன யோசனையை என் சக அங்கத்தினருக்கு சொல்லுகிறேன்.

IV.—GOVERNMENT MOTION.

(1) MOTION UNDER RULE 21 (3) OF THE ASSEMBLY RULES *re* CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

"That under Rule 21 (3) of the Assembly Rules, the House do proceed to consider the Madras Appropriation (Vote on Account) Bill, 1956, before the Madras Appropriation (No. 6) Bill, 1956."

The motion was put and carried.

V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS APPROPRIATION (VOTE ON ACCOUNT) BILL, 1956.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I beg to introduce the Madras Appropriation (Vote on Account) Bill*, 1956, and move—

"That the Bill be taken into consideration."

Sir, I do not propose to make any speech now.

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Appropriation (Vote on Account) Bill, 1956, be taken into consideration."

The motion is before the House for discussion.

* **SRI A. GOVINDASWAMY NAYAGAR:** கனம் உதவி சபா 10-14 a.m.
நாயகர் அவர்களே, இன்றைய தினம் க்ஷேம நல அரசாங்கம் நடைபெறுகிறது என்று சொல்லப்படுகிறது. சோஷலிஸ பாணியில் தீர்மானங்கள் அமைத்து அதன்படி அரசாங்கம் நடக்கும் என்று சொல்லிக்கொண்டு க்ஷேமமாக வாழ்ந்து வந்த விளாங்குளம், பெருமத்தூர், சின்னகாப்பான்குளம், கொல்லியிருப்பு கிராமவாசிகளை அவர்கள் வசித்து வந்த இடத்தைவிட்டு அப்புறப்படுத்தக் கூடிய நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அதுவும் என்னுடைய தாலூகா கடலூர், விருத்தாசலம் தாலூகாகளில் பார்க்கிறோம். நெய்வேலி சுரங்க திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வேண்டும், அதனால் ஜனங்கள் நன்மை அடைய வேண்டும் என்றும், அதன் மூலம் நமக்கு நல்ல பலன் கிடைக்கும், அதனால் அந்த திட்டத்தை எடுத்து நடத்த வேண்டும் என்று தீர்மானித்து அங்குள்ள கிராமங்களை ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று சொல்லி நமது சட்டசபையில் அதைப்பற்றி தீர்மானம் நிறைவேற்றினோம். அதற்கு மாறாக அங்கு ஆறு கிராமவாசிகளை அப்புறப்படுத்துகிறார்கள். அப்படி அவர்களை அப்புறப்படுத்துவதுதான் வேறுவழியில்லை என்று நினைத்தால் அப்படி அப்புறப்படுத்த வேண்டியதுதான். அப்படி அப்புறப்படுத்தி அந்தந்த திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்றால் அப்படிச் செய்வதும் அரசாங்கத்தினுடைய கடமைதான். ஆனால் அப்படி அப்புறப்படுத்தும்போது அங்குள்ள கிராமவாசிகளுக்கு தகுந்த நஷ்ட ஈடு கொடுத்துவிட்டுதான் அப்புறப்படுத்த வேண்டும். இதைத்தான் நான் வலியுறுத்துகிறேன். ஆனால் இப்பொழுது என்ன நடக்கிறது என்றால் அந்த ஆறு கிராமங்களிலுள்ள கிராமவாசிகளை சுமார் இருடது மைல்களுக்கு அப்பால் உள்ள காடுகளுக்கு போக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அவர்களை பக்கத்திலுள்ள காட்டிற்கு வெளியேற்றவேண்டும். அரசாங்கத்தினுடைய கொள்கை இப்பொழுது என்னவென்றால் வன மகோத்சவம் நடத்தி வனங்களை விருத்தி செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது இருக்கப்பட்ட காடுகளை அழித்து அங்கு இந்த கிராமவாசிகளை குடியேற்றியிருக்கிறார்கள். அப்படி அழிக்கப்பட்ட காடுகள் ஏழு. ஆனால் அங்கு கிராமவாசிகள் குடியேறி விவசாயம் செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை. அப்படி அவர்களுக்கு வசதி செய்து கொடுக்காவிட்டால் அவர்களால் அங்கு எப்படி வாழ முடியும். ஆகவே அவர்கள் விவசாயம் செய்வதற்கு வேண்டிய சூழ் நிலையைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு வேண்டிய சௌகரியமான சூழ் நிலையை உண்டாக்காமல் இருந்தால் அதன் பலனை வரப்போகும் தேர்தலில் காங்கிரஸ் அனுபவிக்க வேண்டியதாக ஏற்படும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காங்கிரஸ் கோட்டையாக இருந்த பெரம்பத்தூர் கிராமத்தில் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கனம் முதல் மந்திரி காமராஜ் அவர்கள், கனம் நிதி மந்திரி அவர்கள இரண்டு பேர்களும்

---

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 28th December 1956.

[Sri A. Govindaswamy Nayagar] [27th December 1956

கடலூருக்கு 4-11-56-ம் தேதி வந்தார்கள். அப்பொழுது ஜில்லா போர்டு தலைவர் கனம் சாமிக்கண்ணு படையாச்சி, எம்.எல்.ஏ., அவர்கள் மந்திரிகளிடத்தில் இரு கிராமத்தார்கள் சார்பாக ஒரு மகஜர் கொடுத்தார்கள். அதில் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொன்னார்கள் . அப்பொழுது நமது கனம் முதல் மந்திரி அவர்கள் எப்பொழுதும் சொல்வது போல் "கவனிக்கிறேன்" என்று சொன்னார். நடைமுறையில் நிச்சயமாகக் கவனிப்பார்கள் என்றுதான் அன்று தோன்றிற்று. அவைகளை நிறைவேற்றுவது அரசாங்கத்தினுடைய பொறுப்பு. அங்கு சுற்று வட்டாரங்களில் முந்திரி, பலா, புளி முதலிய மரங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளின் ருசியை கனம் மந்திரிகள் நன்றாக அனுபவித்திருப்பார்கள். அந்த ருசியை அனுபவிக்காத மந்திரிகள் இருக்கமாட்டார்கள். அப்படி ருசி பார்த்திருக்கக் கூடிய மந்திரிகள் அங்குள்ளவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அங்குள்ள கிராமவாசிகளை அந்த இடத்தை விட்டு இப்பொழுது அப்புறப்படுத்துகிறார்கள். அவர்களுக்குள்ள நஷ்ட ஈடு எந்த அளவில் கொடுக்கப்போகிறார்களோ தெரியவில்லை. அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நிச்சயமாக அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள கட்டிடங்களை எடுத்துக் கொண்டால் வருஷத்திற்கு கழிவு நான்கு ரூபாய் அளவில் இருபது வருஷங்களுக்கு எண்ணூறு ரூபாய் கழிவுக்குக் குறைத்துக் கொண்டு வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு இன்றைய மதிப்பு ரூபாய் 1,000 இருந்தும் இருநூறு ரூபாய்தான் கொடுக்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். அது சரி அல்ல.

மற்றும் அங்குள்ள கிராமவாசிகளுக்கு புதிய இடத்தில் தங்களுடைய குடும்பத்தை நடத்துவதற்காக ஐந்து செண்ட் நிலம் கொடுக்கிறார்கள். அதாவது வீடுகள் கட்டிக் கொள்வதற்காக ஐந்து செண்ட் நிலம் கொடுக்கிறார்கள். அந்த ஐந்து செண்ட் நிலம் அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு போதுமா ? அவர்களுக்கு குறைந்த பட்சம் பத்து செண்ட் நிலமாவது கொடுத்தால்தான் அவர்கள் வீடுகள் கட்டிக் கொண்டு சுகமாக வாழமுடியும். ஒரு குடும்பத்தில் சுமார் ஐந்தாறு பேர்கள் இருந்து விட்டால் அவர்களுக்கு ஐந்து செண்ட்டில் வீடு போதுமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனால் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்கு என்று பத்து அல்லது பதினைந்து செண்ட்களாவது கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்ட கிராமவாசிகளுக்கு இலவசமாக இரண்டு ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறார்கள். அந்த வட்டாரத்தில் அவர்களுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அங்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வரும் அதிகாரிகள் அந்த நிலங்களில் புளி, முந்திரி, பலா முதலிய மரங்களுக்கு குறைவாக நஷ்ட ஈடு கொடுக்கப்படும் என்று குறிப்பிடுகிறார்கள். அந்த மரங்களின் பலனை அவர்கள் இன்னும் 20 அல்லது 30 ஆண்டுகளுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொள்ளும்போது அந்த மரங்களினால் அனுபவித்துக்கொண்டு வந்த பலனின் தொகைக்கு 20 ஆண்டுகளுக்கு கணக்கிட்டு அவர்களுக்கு நஷ்ட ஈடும், போனசும் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு அந்த மரங்களுக்குச் சமமான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறேன்.

இப்பொழுது சர்க்காரால் தயாரிக்கப்படும் பட்ஜெட்டுகளில் துண்டு விழுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் சர்க்கார் செய்யும் காரியங்களைப் பார்த்தால் ஏன் துண்டு விழாது என்று கேட்கிறேன். 19ம் தேதி நவம்பர் 1956-ல் நெய்வேலியை அடுத்த பெருகத்தூரில் ஒரு பள்ளிக்கூடத்தைத் திறந்தார்கள். அந்தப் பள்ளிக் கூடத்தை திறப்பதற்கு கனம் ஸ்தலஸ்தாபன மந்திரி ராமசாமி படையாச்சி அவர்கள் வந்தார். ஆனால் அந்தப் பள்ளிக்கூடம் இப்பொழுது மூடப்பட்டுவிட்டது. இப்படி அரசாங்கம் பள்ளிக்கூடங்களை திறந்துவிட்டு உடனே அதை மூடிவிடுவது என்றால் ஏன் பட்ஜெட்டில் துண்டு விழாது என்று கேட்கிறேன். நவம்பர் மாதத்தில்

27th December 1956] [Sri A. Govindaswamy Nayagar]

ஆரம்பித்த பள்ளிக்கூடம் டிசம்பர் மாதத்தில் இந்த கதியில் இருக்கிறது. இதற்கு என்று திறப்புவிழாவுக்கு செலவழிக்கப்பட்ட பணம், அங்குள்ள கட்டிடம் கட்டுவதற்கு பணம் முதலியவைகள் அனாவசியமான செலவுதானே. இதற்கு என்று அரசாங்கம் நாலைந்தாயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் செலவு செய்தால் ஏன் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழாது என்று கேட்கிறேன்.

நெய் வேலி வட்டாரத்தில் சாதாரணமாக எல்லோருக்கும் வேலை கொடுப்பதாகச் சொன்னார்கள். அங்கு சாதாரணமாக மூன்றாவது பாரம், எஸ். எஸ். எல். சி படித்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்று தண்டோரா போட்டார்கள். ஆனால் அங்கு பி.ஏ. படித்தவர்கள் இருந்தாலும் அவர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கவில்லை. ஆனால். நெய்வேலித் திட்டத்தில் ஸ்ரீனிவாச அய்யங்கார் தன் இனத்தாருக்குத்தான் வேலை கொடுக்கிறார். இதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மற்றும் அங்கு வேலைகளை காண்ட்ராக்ட்டுக்கு விட்டு விடுவதாக இருந்தால் அவைகளெல்லாம் கோயம்பத்தூரிலிருந்து வரக்கூடியவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகின்றன. பவானி சாகரிலிருந்து வரக்கூடியவர்களுக்குத்தான் அப்படி காண்ட்ராக்ட்டுகள் கொடுக்கப்படுகின்றன. ஒரு டீ கடை வைக்க வேண்டுமென்றாலும் அல்லது ஒரு வெற்றிலைக் கடை வைக்க வேண்டுமென்றாலும் அவைகள் எல்லாம் பவானி சாகரத்திலிருந்து வரக்கூடியவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. இதன் ரகசியம் புரியவில்லை. பெரிய காண்ட்ராக்ட்டுகள் எல்லாம் அங்கிருந்தும் கோயம்பத்தூரிலிருந்தும் வரக்கூடியவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். செங்கல் முதலியவைகளைக் காண்ட்ராக்ட்டுக்கு விடும்போது அவைகளை கடலூரிலிருக்கிறவர்களுக்குக் கொடுத்தால் நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன். அதற்குப் பதிலாக கோயம்பத்தூரிலிருந்து வரக்கூடியவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

நெய்வேலித்திட்டம் மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்தாலும் நமது அரசாங்கத்திற்கும் அதில் பங்கெடுத்துக் கொள்வதற்கு உரிமை இருக்கிறது. அங்குள்ள உரிமைகளை எடுத்துச் சொல்வதற்கும் அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லி சிபாரிசு செய்யவும் இந்த அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. அந்தத் திட்டத்தில் தவறுகள் நடை பெறாமல் இருக்கவேண்டும் என்று நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் அங்குள்ள நிலங்களை எடுத்துக் கொள்ளும்போது அங்கு வளர்ந்து பலன் கொடுத்துக் கொண்டிருந்த மரங்களின் மதிப்பீட்டுக்குத் தக்கபடி அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் சிபாரிசு செய்ய வேண்டும். அங்குள்ள கிராமவாசிகளுக்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று காலையில் பேசும்போது தி.க., தி.மு.க. கட்சிக்காரர்கள் கோயிலை இடிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்றும் அப்படி பிரசாரம் செய்கிறார்கள் என்றும் மந்திரிகள் அவர்கள் பிரசாரம் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் அங்குள்ள கோயில்களை இடிக்கிறார்கள். இந்த திட்டத்திற்காக அந்தப் பிள்ளையார் கோவிலை அரசாங்கம் இடித்துவிட்டார்கள். அப்படி சாமி கோவிலை இடித்தால் அந்த சாமிதான் அவர்களுக்கு தண்டனை கொடுக்கவேண்டும் என்று கிராமத்தார்கள் சர்க்காரைத் திட்டுகிறார்கள். வடலூர் கிராமம் அதில் போகும்படியாக இருந்தது. மேல் சபையில் கனம் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரும் இங்கு நானும் இன்னும் சில மெம்பரும் அந்த வடலூர் கிராமம் போகக்கூடாது என்று சொன்னதின் பேரில் அதை விட்டு விட்டார்கள். அந்த வடலூர் கிராமம் நீங்கலாக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கு ஆறு கிராமவாசிகளை அப்புறப்படுத்தி

[Sri A. Govindaswamy Nayagar] [27th December 1956

அவர்களை இருபது மைலுக்கப்பால் காட்டில் குடியேற்றியிருக்கிறார்கள். அவர்களை சமீபத்திலேயே ஐந்தாறு மைலுக்குள்ளாகவே குடியேற்றியிருந்தாலும் நன்மையாக இருந்திருக்கும். பெரம்பத்தூர் கிராமவாசிகள் அனுபவித்துக் கொண்டுவந்திருந்து இப்பொழுது ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடங்களுக்கு அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதோடு அவர்களை சமீபத்திலேயே நான்கு மைல் தூரத்திலுள்ள காங்கிருப்பு ரிசர்வ் காட்டில் இடம் மூவாயிரம் எக்கர் இருக்கிறது. அதில் இடம் வசதி செய்து கொடுக்கவேண்டும். எதிர் கட்சியில் சொல்லுகிறார்கள் என்பதை மனதில் கொள்ளாமல் அங்குள்ள கிராம வாசிகளுக்கு நன்மை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு வேண்டிய பரிகாரமும் செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அதைப் பார்த்தவர்களுக்கு தான் அவர்கள் படும் கஷ்டம் தெரியும். காங்கிரஸ் கோட்டையாகிய பெரம்பத்தூரில் இனிமேல் காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு கேட்க வர முடியாது. அப்படிப்பட்ட நிலைமை அங்கு ஏற்பட்டுவிட்டது. அங்கு இருக்கூடியவர்கள் எல்லாம் காங்கிரஸ் பதவிக்கு வரக்கூடாது என்றுதான் சொல்லுகிறார்கள். எவ்வளவு தூரம் அவர்கள் மனம் கெட்டு போயிருக்கிறார்கள். என்பது இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அங்குள்ளவர்கள் எவ்வளவு தூரம் கண்ணீர் வடிக்கிறார்கள் என்பது அங்கு போய்ப்பார்த்தால்தான் தெரியும். அங்கிருந்து கனம் முதல் மந்திரி அவர்கள் வந்தபொழுது ஒன்று சொல்லிவிட்டு வந்தார். அதாவது கவனிக்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தார். ஆனால், இது வரையிலும் ஒரு நன்மையும் அவர்களுக்குச் செய்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பு.

அங்குள்ளவர்களுக்கு வேலைகள் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். எதிர் கட்சி சொல்லுகிறார் என்று பார்க்காமல் தென் ஆற்காடு ஜில்லாவில் உள்ளவர்களுக்கெல்லாம் அந்த திட்டத்திலே வேலை கொடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் நஷ்ட ஈடு கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இதை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்குள்ள கிராம வாசிகள் கண்ணீர் வடிக்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அந்த நிலைமைக்கு அவர்களை விடக் கூடாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மற்றும் தென்னாற்காடு ஜில்லாவில் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அதைப் பற்றி அரசாங்கம் மந்தமாகத் தான் இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கனம் நிதி மந்திரி சுப்ரமணியம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோனூரில் பள்ளிக்கூடம் திறக்க வந்த மந்திரி சுப்ரமணியம் அவர்களிடம் தான் அரிஜனுக்கு மின்சாரம் வழங்கவேண்டும் என்றும் மஜர் கொடுக்கப்பட்டது. அவைகளையெல்லாம் கவனிக்கிறோம் என்று சொல்லிவிட்டு வந்தார்கள். வருஷம் மூன்றாகியும் சட்டசபை கலையக் கூடிய நேரத்தில் கூட அதைப் பற்றி கவனிப்பதாகத் தெரியவில்லை. அவைகளைத் கவனிக்காமலேயே விட்டு விட்டார்கள்.

0-24 a.m. உடனடியாக, கண்டமங்கலம், காணைகஞ்சனூர், வளவனூர், விக்கிரவாண்டி முதலிய பிர்காக்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரிக்கவேண்டும். அப்பொழுதுதான் உண்மையிலேயே ஜனங்களுக்கு நன்மை செய்ததாகும். தமிழ் நாட்டில் சுமார் மூவாயிரம் கிராமங்களுக்கு மேல் மின்சார வசதி செய்து கொடுத்திருக்கிறோம் என்று சர்க்கார் பெருமையாகப் பேசுகிறார்கள். வட நாட்டிலேயே பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கெல்லாம் மின்சார வசதி வழங்கி உற்பத்தி பெருகி, வளமாக வாழ முடிகிறது. தமிழ் நாட்டிலே பார்த்தால் தெரு விளக்குத்தான் மின்சாரம் வழங்கி இருக்கிறார்கள். ஒரு கிராமத்தில் 20 பம்பு செட்டுகளுக்கு மேல் கொடுப்பதில்லை. அருமையில் கோயம்பத்தூரை எடுத்துக் கொண்டால் அங்கு அதிகமாக மின்சாரம் வழங்கியிருக்கிறார்கள். அதே மாதிரி செங்கல்

27th December 1956] [Sri A. Govindaswamy Nayagar]

பட்டு, கோயம்பத்தூர், மதுரை ஜில்லாக்களுக்கும் அதிகமாக மின்சாரம் வழங்கியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே தென் ஆற்காடு ஜில்லாவில் தான் மிகவும் குறைவாக மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக ஐந்நூற்றுக்கு மேல் ஜனத்தொகை உள்ள கிராமங்களிலெல்லாம் ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள பனைமலை, வெட்டுக்காடு, ஓரத்தூர் நகர், வெள்ளேரிப்பட்டு ஆகிய ஐந்து கிராமங்களில் பள்ளிக்கூடமே கிடையாது. அந்த ஊர்களில் பஞ்சாயத்து போர்டு இருந்தும் கூட பள்ளிக்கூடம் இல்லாததினால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஒரு மைலுக்கு அப்பாற்பட்டுத்தான் ஒவ்வொரு பள்ளிக்கூடமும் இருக்கவேண்டும் என்ற விதிக்கு விலக்கு அளித்து, எல்லா கிராமங்களிலும் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும். தென் ஆற்காடு ஜில்லாவில் பல தொழிற்சாலைகளையும், கைத் தொழில்களையும் ஏற்படுத்தி அங்கு வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRI K. R. VISWANATHAN : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, சபை முன்பு விவாதத்திலிருக்கும் நிதி ஒதுக்கல் மசோதாவின் மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாம் இச்சபைக்கு வந்து ஐந்தாண்டு காலம் முடியப்போகிறது. இந்த ஐந்தாண்டு காலத்தில் நடந்திருக்கும் நிகழ்ச்சிகளை இச்சமயம் நம் கண்முன் கொண்டு வருவது நியாயமே. ஆரம்பக் காலத்தில் காங்கிரஸ் கட்சியானது மக்களின் அருவருப்பைப் பெற்று ஒருவிதமான நிலையற்ற தன்மையில் இருந்தது நமக்குத் தெரியும். ஆனால் இந்த ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு மக்கள் காங்கிரஸ் கட்சியையும் காங்கிரஸ் ஆட்சியையும் வரவேற்கிறார்கள். காரணம் என்னவென்றால் காங்கிரஸ் கட்சியானது இந்த ஐந்தாண்டு காலத்தில் பலதிட்டங்கள் வகுத்து, மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறது. உதாரணமாக சமுதாய நலத் திட்டம், தேசியவிஸ்தரிப்புத் திட்டம் இடவளர்ச்சித் திட்டம் முதலியத் திட்டங்களை பல கிராமங்களுக்கு விஸ்தரித்ததோடு ஆயிரக்கணக்கான ஒற்றை ஆசிரியர் பள்ளிகளையும் ஆங்காங்கே நிறுவி இருக்கிறார்கள். ஏழை மாணவர்களுக்கு இலவச கல்விச்சலுகையும், சம்பளக்கட்டண சலுகையும், வழங்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களிலே உள்ள மக்கள், காங்கிரஸ் ஆட்சியின் இத்தகைய சாதனைகளால் தட்டி எழுப்பப்பட்டுவிட்டனர். ஆகவே இப்பொழுது மக்கள் காங்கிரஸ் ஆட்சியை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. காங்கிரஸ் ஆட்சியை நடத்திய அமைச்சர்கள் எந்தெந்த காலத்தில் என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டுமோ, அவைகளைச் செயல்புரிந்து வந்திருக்கிறார்கள். இந்த சமயத்திலே திருவள்ளுவர் கூறிய ஒரு பொன்மொழியை நான் நினைவிற்குக் கொண்டுவருகிறேன்.

" ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
 கருதி இடத்தாற் செயின்
காலம் கருதி இருப்பர் கலங்காது
 ஞாலம் கருதுபவர் "

என்ற திருவாக்கு இன்றைக்குச் செயலுக்கு வந்திருக்கிறது.

இத்தகைய நிலையிலே நமது காங்கிரஸ் ஆட்சியினர் சாதித்த சில விஷயங்களைப் பற்றி கூற ஆசைப்படுகிறேன். பிற்பட்ட மக்களுக்கு செய்துள்ள சாதனைகள் அதிகமாக இல்லாவிட்டாலும் கூட அவர்களுக்கு பலவிதத்திலும் நன்மைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. கனம் அமைச்சரவர்கள் தெரிவித்தபடி 1946-ம் வருஷத்தில் மூவாயிரம் படிப்புதவி விண்ணப்பங்கள் பிற்பட்ட வகுப்பினரிடமிருந்து வந்திருந்தன. ஆனால் இன்றைக்கு பத்தாயிரம் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அவர்களுக்கு சர்க்காரிலிருந்து உதவி செய்யப்பட்டு இருக்கிறது என்று கூறினார்கள். பிற்பட்ட மாணவர்களுக்கு உணவு விடுதிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. 1951-ல் இருந்ததை விட இப்பொழுது இரு மடங்கு

[Sri K. R. Viswanathan] [27th December 1956

உணவு விடுதிகள் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனாலும் பிற்பட்ட மக்களுக்கு இன்னும் பல சலுகைகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று நினைவூட்டுகிறேன். உதாரணமாக சென்ற வாரத்திலே ஒரு நண்பர் பேசியபொழுது, பிற்பட்ட மக்களுக்கு அளித்திருக்கும் கல்விச் சலுகையானது நிறுத்தப்படப் போகிறது என்று சொன்னார். அம்மாதிரி செய்யப்பட்டால் அது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். இந்தச் சலுகை இன்னும் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்காவது இருந்தால்தான் பிற்பட்ட மக்கள் முன்னேற முடியும்.

பிற்பட்ட வகுப்பினர் நலம் கருதி மத்திய அரசாங்கத்தார் ஒரு கமிஷனை நியமித்தார்கள். அந்தக் கமிஷனானது நாடு பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்து ஒரு அறிக்கையைத் தயாரித்தது. அந்த அறிக்கையின்பேரில் மத்திய அரசாங்கத்தார் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை வெளியிடாமல் அதை அமுக்கி வைத்திருக்கிறார்கள். பிற்பட்ட வகுப்பினரின் நலத்திலே மிகவும் அக்கறை கொண்ட சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி அந்தக் கமிஷன் செய்திருக்கும் சிபார்சுகளை நடைமுறையில் கொண்டுவருவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக பிற்பட்ட வகுப்பினருக்கு முக்கியமாக வழங்கவேண்டியது உத்தியோகச் சலுகைகள். சென்னை அரசாங்கத்தில் அவர்களுக்கு 25 சத விகிதம் உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டும் என்று இருந்தாலும் கூட நடைமுறையில் இது அனுசரிக்கப்படவில்லை. தற்காலிகமாக நியமிக்கப்படுகிற உத்தியோகங்களில் அவர்களுக்கு 25 சத விகிதம் கொடுப்பது கிடையாது. உதாரணமாக நமது சட்டசபை அலுவலகத்திலிருக்கிற உத்தியோகங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் 25 சத விகிதம் பிற்பட்ட
10-34 a.m. வகுப்பினருக்குக் கொடுக்கப்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.

பிற்பட்ட வகுப்பார்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் கல்விச் சலுகையினால் அவர்கள் படித்து முன்னேறி வந்தாலும், படித்தவர்களிடையே வேலையின்மை அதிகமாக இருந்துவருகிறது. ஆகையால் அவர்களுக்கு ஜனத்தொகை விகிதாசாரத்தில் உத்தியோகங்கள் வழங்கப்படவேண்டுமென்ற முறையிலே நிரந்தரமான இலாகாவாக இருந்தாலும் சரி, தற்காலிக இலாகாவாக இருந்தாலும் சரி, அங்கெல்லாம் பிற்பட்ட வகுப்பார்களுக்கு 25 சத விகிதத்திற்குக் குறையாமல் உத்தியோகங்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்திய அரசாங்க இலாக்காக்களிலும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட விகிதாசாரப்படி உத்தியோகங்கள் வழங்கப்படவில்லை. மத்திய அரசாங்கத்தில் எந்த அளவுக்கு உத்தியோகங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பது பிற்பட்ட வகுப்பார் கமிஷன் அறிக்கை வரும்போதுதான் தெரியுமென்று நினைக்கிறேன். அந்த அறிக்கை நடவடிக்கையும் மிக விரைவிலே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய அரசாங்க இலாக்காக்களிலே பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 25 சத விகித அடிப்படையிலே உத்தியோக உயர்வுகள் (பிரமோஷன்கள்) இன்னும் அளிக்கப்படவில்லை. உத்தியோக உயர்வுகள் அளிப்பதில் பாரபட்சம் அதிகமாக காட்டப்படுகிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். துரதிருஷ்டவசமாக இந்த நாட்டிலே ஜாதி உணர்ச்சி இருந்துகொண்டுதான் இருக்கிறது. அப்படிப்பட்ட உணர்ச்சி இல்லை என்று எவ்வளவுதான் சொல்லிக்கொண்டிருந்தாலுங்கூட, அதை மறைக்க முடியாது. நடைமுறையிலே பார்க்கும்போது ஜாதி வேற்றுமை உணர்ச்சிகள் காட்டப்பட்டுதான் வருகின்றன என்பதை சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. உத்தியோக உயர்வு விஷயத்திலே ஓரளவுக்கு நாம் பிற்பட்ட வகுப்பாருக்கு 25 சத விகித அடிப்படையிலே கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்ற கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று அரசாங்கத்தாரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

27th December 1956] [Sri K. R. Viswanathan]

இறுதியாக, ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கத்திலே, தேசிய நீர் வழங்கும் திட்டம் (National Water supply scheme) என்ற திட்டம் இருக்கிறது. அதாவது, நீர் ஓடிக்கொண்டிருக்கின்ற டெல்டாப் பிரதேசத்தில் நீரிலே ஆங்காங்கு பரப்பப்படும் நோய்களைத் தடுப்பதற்கு தேசிய நீர் வழங்கும் திட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் முழுப் பொறுப்பையும் எடுத்துக்கொண்டு ஆங்காங்கு அதற்குவேண்டிய பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கும் திட்டத்தைச் செய்துகொடுத்து, ஜனங்கள் நோயினால் பாதிக்கபடாமலிருக்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் காலரா, மலேரியா போன்ற நோய்கள் வருகின்றன என்று நினைக்கிறேன். அதே திட்டத்தின்கீழ் நரம்பு சிலந்தி என்னும் நோயையும் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலரா, மலேரியா போன்ற நோய்கள் ஓரளவு மனிதர்களுக்குக் கண்டவுடனே அவர்களைக் கொல்லுகின்றன. அவர்களுடைய உயிரை ஒழித்துக்கட்டிவிடுகின்றன. நரம்பு சிலந்தி என்னும் நோயும் நீரிலுள்ள கிருமிகளினால்தான் ஆங்காங்கு பரவுகின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். அதோடுகூட, அதனால் பாதிக்கப்படுபவர்கள் ஓரளவு கை போனவர்கள், கால் போனவர்கள் உண்டு. இந்த வியாதி கண்டவர்கள் நீண்ட நாள் அவஸ்தைப்படுகிறார்கள். ஒரு ஆண்டு, இரு ஆண்டுகள் கூட வேலைக்குப் போகமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இதனால் அவர்கள் வாழ்க்கையே பாதிக்கப்படுகிறது. வியாதியினால் அவஸ்தைப்படுவது ஒருபுறமிருக்க வியாதியினால் நீண்ட நாள் கஷ்டப்படுவதால், குடும்பத்தைக்காப்பாற்ற முடியாமல், குடும்பத்திற்குத் தொல்லையாகவும் இருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. சித்திர வதை ஏற்படக்கூடிய நிலையில் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தேசிய நீர் வழங்கும் திட்டத்தின் கீழ் நரம்பு சிலந்தி நோயையும் கொண்டுவரவேண்டும், ஏனென்றால், அந்த நோயும் நீரிலுள்ள கிருமிகளினால்தான் உண்டாகிறது. எங்கெங்கே நீரினால் நோய் பரவக்கூடிய சூழ்நிலை இருக்கின்றதோ அந்த இடங்களிலுள்ள மக்களுடைய சுகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டு பாதுகாப்பு நீர் வழங்கும் திட்டத்தை அமுல் நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, நரம்பு சிலந்தி நோயையும் அந்தத் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளும்படி நிதி அமைச்சரவர்கள் அங்குள்ள தேசிய முன்னேற்றக் குழுவினரிடம் இந்த யோசனையைச் சொல்லவேண்டும். காலரா, மலேரியா போன்ற நோய்களைப்போன்ற நோயாக நரம்பு சிலந்தி நோயையும் பாவித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : உதவி சபாநாயகர் அவர்களே, 10-35 a.m.
இந்த மசோதாவைப் பொறுத்தவரை அதிகமான விவாதத்திற்கு இடமில்லை என்றே நான் கருதுகிறேன். ஏனென்றால், நாம் பேசவேண்டிய முக்கியமான பிரச்னைகளைப்பற்றியெல்லாம் வரவு செலவு திட்டத்தைப்பற்றி பேசும்போதே விவாதம் செய்தாய்விட்டது. ஒரு முக்கியமான பிரச்சனையைப்பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் கேள்வி கேட்கும் நேரத்திலே குறிப்பிட்டார். கனம் அங்கத்தினர் ஸ்ரீ அரங்கநாதன் அவர்களும் மற்றவர்களும் இதைப்பற்றி ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். அதிலும் முக்கியமாக ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் இப்பொழுது இந்த விவாதத்திலே ரொம்பவும் ருசிகரமான சில விஷயங்களைப்பற்றி சொன்னார்கள். அவர்களுடையகட்சி, தென்னாட்டிலே தொழில்வளம் இல்லை என்பது. தொழில்வளத்தை அவசரமாக ஏற்படுத்தவேண்டுமென்று பிரசாரம் செய்வதிலே, அதுவும் தேர்தல் நெருங்கும் சமயத்திலே அவர்களுடைய கட்சியினர் முன்னணியிலே நிற்கிறார்கள். இதைப்பற்றி நான் பல இடங்களிலே சொல்லியிருக்கிறேன். அவர்களுக்குத் தெரியாவிட்டாலும் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காக மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதாவது, எல்லா பெரிய தொழில்களுக்கும் அடிப்படையாக இருப்பது நிலக்கரி. அந்த நிலக்கரி நமக்கு இல்லாவிட்டால், நாம் எவ்வளவு தீர்மானங்கள் போட்டாலும், எவ்வளவு பேச்சுக்கள் பேசினாலும்,

[Sri C. Subramaniam] [27th December 1956

எவ்வளவு திட்டுகள் திட்டினாலும், தொழில்வளம் ஏற்படமுடியாது. ஆகையினால், இன்றைக்கு நாம் முக்கியமாக உடனடியாக கவனிக்க வேண்டியது இதுதான். இந்த நிலக்கரியை நல்ல முறையிலே வெட்டி எடுப்பதற்கு, அதிலும் துரிதமாக வெட்டி எடுப்பதற்கு எல்லாவிதமான முயற்சியும் எடுத்தாகவேண்டுமென்று பல இடங்களிலே பேசிவந்திருக்கிறோம். இப்பொழுது கனம் அங்கத்தினரவர்களுக்கும் இந்த யோசனையை சமர்ப்பிக்க விரும்பிகிறேன்.

இது ஏதோ கிணறு வெட்டும் சமாசாரம் அல்ல. ஒரு வருஷத்திலோ, இரண்டு வருஷத்திலோ, அல்லது பத்து வருஷத்திலோ போய்விடுகிற சமாசாரமும் அல்ல. தலைமுறை தலைமுறையாக அங்கு ஏற்படுகிற ஒரு தொழில் அது. ஆகையால், அந்த அளவுக்கு இப்போதே திட்டமிட்டு, எங்கெங்கே தொழிற்சாலைகளை நியமிக்கவேண்டும், எங்கெங்கே தொழிலாளிகளை அமர்த்துவதற்கு இடங்களை அமைக்கவேண்டுமென்று பெருவாரியாக திட்டமிட்டு செய்யவேண்டியிருக்கிறது. அப்படிச் செய்யாமல், "ஏதோ பரவாயில்லை, இங்கே கட்டுங்கள், இல்லாவிட்டால் பலாப்பழம் கிடைக்காது, அங்கே கட்டவேண்டாம், கோயில் இருக்கிறது" என்றெல்லாம் கோயிலிலே நம்பிக்கை இல்லாதவர்கள் கோயிலைப்பற்றிபிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள், ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள். அதைக் கொஞ்சம் வரவேற்கிறேன். ஆனால் கடவுளும் கூட தொழிலுக்கு இடங்கொடுத்து வேறு இடம் பார்த்துக்கொள்வார் என்பதில் சந்தேகம் இல்லை. கடவுள் மீது நம்பிக்கை இல்லாத அவருக்கு அதைப்பற்றிபேச அருகதை கிடையாது. கடவுள் சமாசாரத்தை நாங்களே பார்த்துக்கொள்வோம். அதற்கு அவர்கள் வக்காலத்து வாங்கவேண்டிய அவசியம் இல்லை. தொழில்வளம் அதிகமாகவேண்டுமென்று ஒருபுறம் அவர்கள் சொல்லிவருகிறார்கள். ஆனால், இன்னொரு புறம் தங்களுக்கு ஏதோ சில கிராமத்தார்களின் வோட்டுக்கள் வாராதா என்ற அளவுக்கு பிரசாரம் செய்ய ஆரம்பித்திருப்பதைப் பார்க்கும்போது, இந்தக் கட்சி எவ்வளவு தூரம் பொது நன்மைக்காக பாடுபடுகிறது, எவ்வளவுதூரம் தமிழ் நாட்டில் தொழில்வளம் ஏற்படவேண்டுமென்பதில் அக்கறை கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி இந்தச் சபை அங்கத்தினர்களும் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மக்களும்தான் முடிவு சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். "படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்" என்ற பழமொழியைப் போல, இவர்கள் இன்றைக்கு வெளியிலே பேசுவது தொழில்வளம் ஏற்படவேண்டுமென்பதைப்பற்றி. ஆனால், இங்கு வந்து அதைப்பற்றி பேசுவது பலாப் பழத்தைப் பற்றியும், கோயிலைப்பற்றியும். தொழில் வளராவிட்டால் போகிறது, பலாப்பழம் கிடைத்தால் போதும், இரண்டு கிராமத்தாருடைய வோட்டு கிடைத்தால், அதுவே போதுமானது என்ற நிலைமை இருக்குமானால், தமிழ்நாடு உருப்படப்போவது இல்லை. அவருடைய வாதத்தினால் ரொம்பவும் ஒரு மோசமான பிரச்னை ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் தொழில்வளம் உண்டாகவேண்டுமென்பதற்காக நாம் கொஞ்சம் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்று மக்களிடத்தில் சொல்லி, மக்களிடத்திலே புதிய உற்சாகத்தை ஊட்டவேண்டியிருக்க, நாட்டின் தொழில்வளத்திலே மக்களையும் உற்சாகம் கொள்ளச்செய்வதை விடுத்து, தொழில்வளம் ஏற்படுவதைப்பற்றி மக்களிடையே வருத்தம் ஏற்படக்கூடிய நிலைமையில் அவர்கள் பிரசாரம் செய்ய முன்வந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஆனால், தமிழ்நாட்டு மக்கள் ரொம்ப புத்திசாலிகள். எவ்வளவு குதர்க்கவாதம் இருந்தாலும் எவ்வளவு பிற்போக்கு வாதங்கள் இருந்தாலும், நமக்கு எது நல்லது என்பதை உணர்ந்து இதை வரவேற்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அவர்களுக்கு வேண்டிய வசதி செய்து கொடுக்கப்படும். அவர்களுக்கு வேண்டிய நஷ்ட ஈடு கொடுப்பதிலே சர்க்கார் என்றைக்குமே எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளும். அதற்கும் அவர்கள் வக்காலத்து வாங்க வேண்டியதில்லை என்று சொல்லிக்கொண்டு இதிலும் சர்க்கார் முக்கியமாக கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவு சீக்கிரம் நிலக்கரியை வெட்டி எடுக்க முடியும் என்பதற்குத்

27th December 1956] [Sri C. Subramaniam]

திட்டமிட்டு சர்க்கார் ஆவன செய்யும். ஆனால் குறுகிய நோக்கத்தோடு இதில் ஒன்றும் செய்யக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். பிற்காலத்திலே நமது தமிழ்நாட்டுக்கு நிலக்கரி கிடைக்கும் மகத்தான ஸ்தானமாக விளங்கக்கூடிய திட்டத்தை எந்த அளவுக்கு திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டுமோ அப்படிச் செய்யவேண்டுமென்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ விஸ்வநாதம் அவர்கள் சொன்னார்கள். அதையும் ஆலோசித்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்வதென்பது குறுகிய காலத்தில் முடியாத சமாசாரம்.

(Sri Govindaswamy Nayagar was seen standing.)

DEPUTY SPEAKER: The Hon. Member has no right of reply.

The Hon. Sri C. SUBRAMANIAM: இவைகளையெல்லாம் சர்க்கார் பரிசீலனை செய்துவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை ஏகமனதாக சபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Sri A. GOVINDASWAMY NAYAGAR: நெய்வேலியில் தொழில் வளரவேண்டாமென்று நான் சொல்லவில்லை. மந்திரி அவர்கள் உண்மையை மறைத்துப் பேசுகிறார்கள். தொழில் வளரவேண்டுமென்று நாங்கள் பிரசாரம் செய்கின்றோம். இப்பொழுதும் சொல்கிறோம். ஆனால், கிராமத்தவர்களை வெளியேற்றும்போது அவர்களுக்கு நஷ்ட ஈட்டைத்தான் கேட்டோமே தவிர, நிலக்கரி தொழிற்சாலை வளரக்கூடாதென்று என்றைக்குமே நாங்கள் பேசுவதில்லை. நிதி அமைச்சரவர்கள் பொதுக்கூட்டத்தில் பேசுவது போல், இந்த இடத்திலும் பெருத்த பொய்யைப் பேசினார்கள் என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri V. BALAKRISHNAN: ஐயா, "பொய்" என்று சொல்வது பொருத்தமா?

DEPUTY SPEAKER: The hon. Member Sri Govindaswamy must withdraw the word 'பொய்.' It is unparliamentary.

Sri A. GOVINDASWAMY NAYAGAR: உண்மைக்கு மாறான விஷயத்தை "பொய்" என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

DEPUTY SPEAKER: As it is an unparliamentary word, he should withdraw it.

Sri A. GOVINDASWAMY NAYAGAR: "உண்மைக்கு மாறாகப் பேசினார்" என்றுதான் நான் சொன்னேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: The hon. Member should obey the Chair and withdraw that word.

DEPUTY SPEAKER: கனம் அங்கத்தினர் "பொய்" என்ற வார்த்தையை வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டும்.

Sri A. GOVINDASWAMY NAYAGAR: "பொய்" என்ற வார்த்தை **unparliamentary** வார்த்தையாக இருந்தால், அதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். ஆனால், உண்மையை மறைத்துப் பேசினாரே நிதி அமைச்சரவர்கள், அதைப்பற்றி அவர் என்ன சொல்கிறார் என்று கேட்கிறேன்.

***Sri M. KALYANASUNDARAM:** பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார், இப்பொழுது அங்கத்தினர்களும், அரசியல் கட்சிகளும் எது பேசினாலும் சொல்லிக்கொள்ளட்டும். அதைப்பற்றி சிறிது நேரம் ஒதுக்கிவைத்துவிட்டு, பாதிக்கப்படக்கூடிய ஜனங்களுக்கு பரிகாரம் தேடுவதற்கு சில யோசனைகளை மந்திரி அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தார்கள். அவைகள்

[Sri M. Kalyanasundaram] [27th December 1956

வரவேற்கத்தகுந்த யோசனைகள்தான். மாதிரி கிராமங்களை அமைத்து விட்டு, ஜனங்களை வெளியேற்றுவதைவிட்டு, மாதிரி கிராமங்களை அமைப்பதற்கு முன்னதாகவே ஜனங்கள் வெளியேற்றப்பட்டால் சிறிது சிரமம் ஏற்பட்டு விடுகிறது. அந்த வேலை துரிதமாக நடக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : திட்டம் எவ்வளவு துரிதமாக நடக்கவேண்டும் என்பதைப்பொறுத்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதற்கு வேண்டிய ஏற்பாடு நடக்குமென்றே நான் நினைக்கின்றேன்.

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Appropriation (Vote on Account) Bill, 1956, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3 and Schedule were put and carried.

Clause 1 and preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I move—

" `hat the Madras Appropriation (Vote on Account) Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Appropriation (Vote on Account) Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS APPROPRIATION (NO. 6) BILL, 1956.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Appropriation (No. 6) Bill*, 1956, and move—

" That the Bill be taken into consideration."

DEPUTY SPEAKER : Motion moved—

" That the Madras Appropriation (No. 6) Bill, 1956, be taken into consideration."

10-45 a.m. **SRI P. VENKATESHA SHOLAGAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே; ஒவ்வொரு பட்ஜெட் விவாதத்தின்போதும் நாங்கள் பல யோசனைகள் கூறிவந்திருக்கிறோம். அதில் பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. பல காரியங்கள் செய்யப்படவில்லை. தரிசு புறம்போக்கு நில சம்பந்தமாக சில வார்த்தைகள் கூறுகிறேன். உணவு உற்பத்தி பெருகவேண்டுமென்று நாம் கூறி வருகிறோம். நிலம் இல்லாத ஏழை மக்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டால்தான் உணவு உற்பத்தியை பெருக்கமுடியும். குறிப்பாக ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களைக்கூட பலம் படைத்த ஜாதி ஹிந்துக்கள் ஹரிஜனங்களுக்கு கிடைக்காதபடி ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயம் பல முறை எடுத்துக் கூறப்பட்டும் கவனிக்கப்

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 26th December 1956.

27th December 1956] [Sri P. Venkatesha Sholagar]

படவில்லை. புறம்போக்கு நிலங்களை ஒதுக்குவதற்கு ஒரு நிரந்தர திட்டத்தை வகுக்கா விட்டாலும்கூட நடைமுறையில் இருக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சர்க்கார் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சோழிகர் அவர்கள் சொன்ன விஷயங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

SRI S. RAMALINGAM ; On a point of Order Sir, அவர் பெயர் சோழகர். சோழிகர் அல்ல. (சிரிப்பு).

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Appropriation (No. 6) Bill, 1956, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and Schedule were put and carried.

Clause 1 and Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I move—

" That the Madras Appropriation (No. 6) Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Appropriation (No. 6) Bill, 1956, be passed."

The motion was put and declared carried.

(A division was demanded and the division Bill was rung.)

DEPUTY SPEAKER : I am going to put the motion once again to the vote of the House. The question is— 10-50 a.m.

" That the Madras Appropriation (No. 6) Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

IV.—GOVERNMENT MOTIONS—*cont.*

(2) ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE PUBLIC ACCOUNTS COMMITTEE OF THE ASSEMBLY.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I beg to move—

" That this House recommends to the Legislative Council that they do nominate five members from the Council to associate with the Public Accounts Committee of this House for every financial year and communicate to this House the names of the members so nominated."

(Interruption from the hon. the Leader of the Opposition.)

வேண்டும், நம்முடைய அரசாங்கம் வேண்டுமென்று சொன்னால் நம்மவர்கள் ஆளும்படியான, ஆட்சிபீடத்தில் இருக்கும்படியானது மட்டுமல்ல. ஆனால் நம் தாய்மொழியை அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் உபயோகப்படுத்தும்படியானதொரு ஆட்சி வேண்டுமென்று நீண்டநாட்களாக ஒரு அபிலாஷை அவர்களுக்குண்டு. அந்த அபிலாஷை பூர்த்தியாவதற்குள்ள நாள் வந்திருக்கிறது. அது இந்த மசோதாவின் மூலமாக நிறைவேற்றப்படபோகிறது என்பதையொட்டி நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைவது திண்ணம். ஆனால் இந்த மசோதா என்ன கூறுகிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பல்வேறு துறைகளிலும், அரசாங்கம் அவ்வப்போது நினைக்கும்படியான அந்தச் சந்தர்ப்பத்திலே அரசாங்கம் அந்தந்த துறைகளில் தமிழை அரசாங்க மொழியாக்குவதற்குள்ள அதிகாரம் அளிக்கிறது. நிதி மந்திரியவர்கள் சொன்னமாதிரி அதை எவ்வளவு தூரம் துரிதப்படுத்தவோ, தாமதப்படுத்தவோ அரசாங்கத்தின் கையில் அதிகாரம் இருக்கிறது என்பதை நாங்கள் மறந்து விடமாட்டோம். இதை சீக்கிரத்தில் கொண்டுவர வேண்டும். ஏனென்றால், இந்த Objects and Reasons—ல் சொல்லப்பட்டிருக்கிறது, அந்தப் பகுதியை இடரும் திருத்திக்கொள்ள முடியாது. அதைப் பார்க்கும்போது, இது கொஞ்சம் வேறு வகையில் அமைந்திருக்கிறது என்றுதான் தோன்றுகிறது.

ஏற்கெனவே திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலே பரிட்சார்த்தமாக இருந்து வருகிறது; அந்தப் பரிட்சை இன்னும் பல இடங்களுக்கு விஸ்தரிக்கப் படுமென்று கூறுகிறது. இதிலே பரிட்சை செய்து பார்ப்பதற்கு இன்றைக்கு இடமில்லை. ஆகவே அந்த வார்த்தையை எடுத்திருந்தால் நன்றாய் இருக்கும்.

'The District Revenue Administration Enquiry Committee has also recommended that Tamil may be introduced in all Taluk offices as a preliminary step and that necessary legislation may await reorganization of the States. On the reorganization of the States, it is now proposed to extend the experiment of conducting official transactions in Tamil to Taluk offices first . . . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : That is not a clause.

SRI P. RAMAMURTHI : இப்பொழுது அதன்மேல் amendment கொண்டு வரமுடியாது என்பது எனக்குத்தெரியும். திருச்சியில் அன்று தமிழை பரிட்சார்த்தமாக ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் இன்று இந்த அரசாங்கம் இந்த நாட்டில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கி கூடிய சீக்கிரத்தில் பல்வேறு துறைகளிலும் அமலாக்க முயற்சி செய்யப்போகிறது. அதை ஊர்ஜிதம் செய்ய, அதை அமலாக்குவதற்கு வேண்டி இந்த மசோதா தேவைப்படுகிறது. இதையும் Objects and Reasons-ல் எழுதியிருப்பார்களேயானால் நன்றாயிருக்கும். ஆகவே அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட, தமிழ் ஆட்சி மொழியாக அரசாங்கத் துறைகளில் ஏற்படுவதைத் தவிர கல்வித்துறையில் தமிழில் போதிப்பது என்பதும் முக்கியமானதொரு பிரச்னையாகும். நமது அரசாங்கம் தமிழ் மொழியில் ஆட்சி நடத்த வேண்டுமென்று ஏற்படும்போது போதனா முறையும் தமிழில் இருக்கவேண்டும். அதிகாரம் வகிக்கக்கூடியவர்களுக்கு, எல்லோருக்கும் பயிற்சி கிடைக்கும்படியான காலம் பால்ய காலமேயாகும். பள்ளிகளில் ஆங்கிலத்தில் பயின்றுவிட்டு நிர்வாகத்தில் வரும்போது அது தமிழில் இருந்தால் வேலை செய்ய முடியாமல் திணறல் மிகப் பெரிய அளவிற்கு ஏற்படும். ஆகவே, தமிழ் ஆட்சி மொழியாகி, அது அமலில் சீக்கிரம் நடக்கவேண்டுமென்றால் அதற்குத் தகுந்தாற்போல் இன்றைக்கிருக்கும் கல்வி போதனாமுறையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முதலில் தாலூக்காக்களில் இதை ஏற்படுத்துவது என்று போட்டிருக்கிறது, என்று Objects and Reasons-ல் சொல்லப்பட்

டிருக்கிறது. அதற்கு அவசியமில்லை யென்பதுதான் எனது கருத்து. ஏனென்று கேட்டால் ஜில்லா நிர்வாகத்தை தமிழில் நடத்துவது அவ்வளவு கஷ்டமானது அல்ல. உதாரணமாக, உத்தர பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் கடந்த ஐந்து வருட காலமாக அங்கு ஜில்லா நிர்வாகம் பூராவும் ஹிந்துஸ்தானியில்தான் நடைபெற்று வருகிறது. பம்பாய் மும்மொழி ராஜ்யமாக இருந்த காலத்திலும்கூட அந்தந்த பகுதிகளில் இருக்கும்படியான மொழியில் கன்னடம் மஹாராஷ்டிரம் அல்லது குஜராத்தி என்று அந்தந்த பிரதேச மொழிதான் நிர்வாக மொழியாக இருந்து வந்திருக்கிறது. ஆகவே, பொன்மொழி ராஜ்யங்களில்கூட இந்த முறை நாலைந்து வருடங்களாக அமலில் இருக்கக்கூடிய காலத்தில் நாம் காலங்கடந்துதான் இப்பொழுது நம் வேலையை துவக்குகிறோம். இதை அமலாக்கும் காலத்தில் தாலூகா என்றில்லாமல் ஜில்லா பூராவும் உடனடியாக தமிழ் மொழியிலே இன்றைக்கு ஆட்சி நடக்குமென்று ஏற்படுத்திவிட்டால் நன்றாயிருக்கும்.

ஆக, தமிழ் ஆட்சி மொழியானதைப் பற்றி இந்தச் சபையில் மட்டுமல்லாமல் வெளியில் ஜனங்களிடத்திலும் தமிழ்மொழி ஆட்சி மொழியானதைப்பற்றி சந்தோஷம் தெரிவிக்கக் கூடிய முறையில் ஆரவாரம் நடத்தவேண்டிய ஏற்பாடுகளை சகல கட்சிகளும் செய்யும் என்ற நம்பிக்கையுடன் முடித்துக்கொள்கிறேன்.

SRI P. T. RAJAN : அவைத்தலைவர் அவர்களே ! இன்று தமிழிலே பேசும் ஒரு பாக்கியம் எனக்கு கிடைத்தது பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். சபைத் தலைவர் அவர்களே, "வேண்டிய வார்த்தைகளைத் தேடி எடுத்துப்போட்டு புரியும் தமிழிலே காரியங்கள் நிறைவேற்றப்படும்" என்று சொன்னார்கள். சரியான சங்கதி அது. அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் நான் ஆமோதிக்கிறேன். இந்தச் சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் இதை வரவேற்றார்கள். ஆகவே, நான் சொல்லக்கூடியது என்னவென்றால் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, ஏகமனதாக இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI P. RANGASAMY REDDIAR : உதவி சபாநாயகர் அவர்களே ! 11-7 a.m.
தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவர்களின் சார்பாகவும், உலகமெங்கும் இருக்கிற தமிழ் மக்கள் சார்பாகவும் நமது அரசாங்கத்தை இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்காக மனமார வாழ்த்துகிறேன். மக்களுக்கு, நாடும் மொழியும் இரண்டு கண்கள் போன்றவைகளாகும். நமது நாட்டை தமிழ் நாடு என்று அழைக்க ஒரு சில காலமானாலும் தமிழை ஆட்சி மொழியாக்கும் மசோதாவைக் கொண்டுவந்ததை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த District Revenue Administration Fnquiry Committee Report-ல் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் தமிழை பரிட்சார்த்தமாக ஆட்சி மொழியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கும்போது என்னென்ன கஷ்டங்கள் ஏற்பட்டதென்று கூறப்பட்டிருக்கிறது. ஒன்று Tamil Typewriters வேண்டும். இரண்டாவது தமிழ் சுருக்கெழுத்தாளர்கள் தேவை. அங்கிருக்கிற அதிகாரிகள் தமிழ் மொழி தெரியாதவர்களென்ற குறை மக்களிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

Typewriters-யைப் பொறுத்த மட்டில், ஆங்கில typewriters-க்கும் தமிழ் typewriters-க்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. ஆங்கில Typewriters-யைப் பொறுத்தவரையில் எந்த கம்பெனி manufacture செய்தாலும் ஒரேமாதிரியான key-board தான் இருக்கிறது. ஆங்கில tvpewriter key-board-க்கு patent right வைத்துக்கொள்வது கிடையாது. ஆனால் தமிழைப் பொறுத்தவரையில் இரண்டொரு கம்பெனிகள் தங்கள் தங்கள் key-boa'd-களுக்கு patent right கொண்டாடுவதாகச் சொல்லப்படுகிறது. Tamil typewriters-யைப் பொறுத்தவரையில் ஒரு கம்பெனி செய்வதற்கும் இன்னொரு கம்பெனி செய்வதற்கும்

வேண்டும், நம்முடைய அரசாங்கம் வேண்டுமென்று சொன்னல் நம்மவர்கள் ஆளும்படியான, ஆட்சிபீடத்தில் இருக்கும்படியானது மட்டுமல்ல. ஆனல் நம் தாய்மொழியை அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் உபயோகப்படுத்தும்படியானதொரு ஆட்சி வேண்டுமென்று நீண்டநாட்களாக ஒரு அபிலாஷை அவர்களுக்குண்டு. அந்த அபிலாஷை பூர்த்தியாவதற்குள்ள நாள் வந்திருக்கிறது. அது இந்த மசோதாவின் மூலமாக நிறைவேற்றப்படபோகிறது என்பதை யொட்டி நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைவது திண்ணம். ஆனல் இந்த மசோதா என்ன கூறுகிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பல்வேறு துறைகளிலும், அரசாங்கம் அவ்வப்போது நினைக்கும்படியான அந்தச் சந்தர்ப்பத்திலே அரசாங்கம் அந்தந்த துறைகளில் தமிழை அரசாங்க மொழியாக்குவதற்குள்ள அதிகாரம் அளிக்கிறது. நிதி மந்திரியவர்கள் சொன்னமாதிரி அதை எவ்வளவு தூரம் துரிதப்படுத்தவோ, தாமதப்படுத்தவோ அரசாங்கத்தின் கையில் அதிகாரம் இருக்கிறது என்பதை நாங்கள் மறந்து விடமாட்டோம். இதை சீக்கிரத்தில் கொண்டுவர வேண்டும். ஏனென்றல், இந்த **Objects and Reasons**—ல் சொல்லப்பட்டிருக்கிறது, அந்தப் பகுதியை இடரும் திருத்திக்கொள்ள முடியாது. அதைப் பார்க்கும்போது, இது கொஞ்சம் வேறு வகையில் அமைந்திருக்கிறது என்றுதான் தோன்றுகிறது.

ஏற்கெனவே திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலே பரிட்சார்த்தமாக இருந்து வருகிறது ; அந்தப் பரீட்சை இன்னும் பல இடங்களுக்கு விஸ்தரிக்கப் படுமென்று கூறுகிறது. இதிலே பரீட்சை செய்து பார்ப்பதற்கு இன்றைக்கு இடமில்லை. ஆகவே அந்த வார்த்தையை எடுத்திருந்தால் நன்றுய் இருக்கும்.

'**The District Revenue Administration Enquiry Committee has also recommended that Tamil may be introduced in all Taluk offices as a preliminary step and that necessary legislation may await reorganization of the States. On the reorganization of the States, it is now proposed to extend the experiment of conducting official transactions in Tamil to Taluk offices first . . . . . .**

THE HON. SRI C. SUBRAMANIAM : **That is not a clause.**

SRI P. RAMAMURTHI : இப்பொழுது அதன்மேல் **amendment** கொண்டு வரமுடியாது என்பது எனக்குத்தெரியும். திருச்சியில் அன்று தமிழை பரிட்சார்த்தமாக ஏற்படுத்தியிருக்கலாம். ஆனல் இன்று இந்த அரசாங்கம் இந்த நாட்டில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கி கூடிய சீக்கிரத்தில் பல்வெறு துறைகளிலும் அமலாக்க முயற்சி செய்யப்போகிறது. அதை ஊர்ஜிதம் செய்ய, அதை அமலாக்குவதற்கு வேண்டி இந்த மசோதா தேவைப்படுகிறது. இதையும் **Objects and Reasons**-ல் எழுதியிருப்பார்களேயானல் நன்றுயிருக்கும். ஆகவே அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட, தமிழ் ஆட்சி மொழியாக அரசாங்கத் துறைகளில் ஏற்படுவதைத் தவிர கல்வித்துறையில் தமிழில் போதிப்பது என்பதும் முக்கியமானதொரு பிரச்னையாகும். நமது அரசாங்கம் தமிழ் மொழியில் ஆட்சி நடத்த வேண்டுமென்று ஏற்படும்போது போதன முறையும் தமிழில் இருக்கவேண்டும். அதிகாரம் வகிக்கக்கூடியவர்களுக்கு, எல்லோருக்கும் பயிற்சி கிடைக்கும்படியான காலம் பால்ய காலமேயாகும். பள்ளிகளில் ஆங்கிலத்தில் பயின்றுவிட்டு நிர்வாகத்தில் வரும்போது அது தமிழில் இருந்தால் வேலை செய்ய முடியாமல் திணறல் மிகப் பெரிய அளவிற்கு ஏற்படும். ஆகவே, தமிழ் ஆட்சி மொழியாகி, அது அமலில் சீக்கிரம் நடக்கவேண்டுமென்றல் அதற்குத் தகுந்தாற்போல் இன்றைக்கிருக்கும் கல்வி போதனமுறையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முதலில் தாலூக்காக்களில் இதை ஏற்படுத்துவது என்று போட்டிருக்கிறது, என்று **Objects and Reasons**-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு அவசியமில்லை யென்பதுதான் எனது கருத்து. ஏனென்று கேட்டால் ஜில்லா நிர்வாகத்தை தமிழில் நடத்துவது அவ்வளவு கஷ்டமானது அல்ல. உதாரணமாக, உத்தர பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் கடந்த ஐந்து வருட காலமாக அங்கு ஜில்லா நிர்வாகம் பூராவும் ஹிந்துஸ்தானியில்தான் நடைபெற்று வருகிறது. பம்பாய் மும்மொழி ராஜ்யமாக இருந்த காலத்திலும்கூட அந்தந்த பகுதிகளில் இருக்கும்படியான மொழியில் கன்னடம் மஹாராஷ்டிரம் அல்லது குஜராத்தி என்று அந்தந்த பிரதேச மொழிதான் நிர்வாக மொழியாக இருந்து வந்திருக்கிறது. ஆகவே, பொன்மொழி ராஜ்யங்களில்கூட இந்த முறை நாலைந்து வருடங்களாக அமலில் இருக்கக்கூடிய காலத்தில் நாம் காலங்கடந்துதான் இப்பொழுது நம் வேலையை துவக்குகிறோம். இதை அமலாக்கும் காலத்தில் தாலுகா என்றில்லாமல் ஜில்லா பூராவும் உடனடியாக தமிழ் மொழியிலே இன்றைக்கு ஆட்சி நடக்குமென்று ஏற்படுத்திவிட்டால் நன்றுயிருக்கும்.

ஆக, தமிழ் ஆட்சி மொழியானதைப் பற்றி இந்தச் சபையில் மட்டுமல்லாமல் வெளியில் ஜனங்களிடத்திலும் தமிழ்மொழி ஆட்சி மொழியானதைப்பற்றி சந்தோஷம் தெரிவிக்கக் கூடிய முறையில் ஆரவாரம் நடத்தவேண்டிய ஏற்பாடுகளை சகல கட்சிகளும் செய்யும் என்ற நம்பிக்கையுடன் முடித்துக்கொள்கிறேன்.

SRI P. T. RAJAN : அவைத்தலைவர் அவர்களே ! இன்று தமிழிலே பேசும் ஒரு பாக்கியம் எனக்கு கிடைத்தது பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். சபைத் தலைவர் அவர்களே, " வேண்டிய வார்த்தைகளைத் தேடி எடுத்துப்போட்டு புரியும் தமிழிலே காரியங்கள் நிறைவேற்றப்படும் " என்று சொன்னர்கள். சரியான சங்கதி அது. அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் நான் ஆமோதிக்கிறேன். இந்தச் சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் இதை வரவேற்றர்கள். ஆகவே, நான் சொல்லக்கூடியது என்னவென்றல் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, ஏகமனதாக இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI P. RANGASAMY REDDIAR : உதவி சபாநாயகர் அவர்களே ! 11-7 a.m.
தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவர்களின் சார்பாகவும், உலகமெங்கும் இருக்கிற தமிழ் மக்கள் சார்பாகவும் நமது அரசாங்கத்தை இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்காக மனமாற வாழ்த்துகிறேன். மக்களுக்கு, நாடும் மொழியும் இரண்டு கண்கள் போன்றவைகளாகும். நமது நாட்டை தமிழ் நாடு என்று அழைக்க ஒரு சில காலமானலும் தமிழை ஆட்சி மொழியாக்கும் மசோதாவைக் கொண்டுவந்ததை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த **District Revenue Administration Fnquiry Committee Report**-ல் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் தமிழை பரிட்சார்த்தமாக ஆட்சி மொழியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கும்போது என்னென்ன கஷ்டங்கள் ஏற்பட்டதென்று கூறப்பட்டிருக்கிறது. ஒன்று **Tamil Typewriters** வேண்டும். இரண்டாவது தமிழ் சுருக்கெழுத்தாளர்கள் தேவை. அங்கிருக்கிற அதிகாரிகள் தமிழ் மொழி தெரியாதவர்களென்ற குறை மக்களிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

Typewriters-யைப் பொறுத்த மட்டில், ஆங்கில **typewriters**-க்கும் தமிழ் **typewriters**-க்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. ஆங்கில **Typewriters**-யைப் பொறுத்தவரையில் எந்த கம்பெனி **manufacture** செய்தாலும் ஒரேமாதிரியான **key-board** தான் இருக்கிறது. ஆங்கில **tvpewriter key-board**-க்கு **patent right** வைத்துக்கொள்வது கிடையாது. ஆனல் தமிழைப் பொறுத்தவரையில் இரண்டொரு கம்பெனிகள் தங்கள் தங்கள் **key-board**-களுக்கு **patent right** கொண்டாடுவதாகச் சொல்லப்படுகிறது. **Tamil typewriters**-யைப் பொறுத்தவரையில் ஒரு கம்பெனி செய்வதற்கும் இன்னொரு கம்பெனி செய்வதற்கும்

அடித்துக்கொண்டிருக்கிறது. அக்காலத்தில் விந்தியா, சாத்பூரா மலைகள் இந்தியாவின் வட எல்லையாக இருந்தது. இமயமலை சமுத்திரத்திற்குள் இருந்தது. இதற்குப் பிந்தியது இராமயணகாலம். அக்காலத்தில் இற்றைய இலங்கை இதை விட மிகப் பெரிதாய் குமரிக் கண்டம் என்ற பெயருடையதாய், ஹிமாலய மலையை சமுத்திரத்திற்கு மேலே கொண்டு இயங்கியது. அப்போது பஃறுளியாறு, கபாடபுரம் என்பனவற்றிலிருந்து இயங்கியது இரண்டாவது தமிழ்ச் சங்கம் காலம் ஆகும். அதன் பிறகு ஏற்பட்ட 'கடல் கோளால்' நிலைகள் மாறி மூன்றாவது தமிழ்ச் சங்கம் தென் பாண்டிய நாடான மதுரையை வந்தடைகிறது என்பது சரித்திரம். நாகரீகம் தென்னிந்தியாவிலிருந்து உற்பத்தியாகி வட இந்தியா சென்று, பாரசீகம், பாபிலோனியா நாகரீகமாக எகிப்தை அடைந்து கிரீஸைத்தொட்டு, ரோமாபுரியை அடைந்து ஜெர்மனிக்குச்சென்று பிரான்ஸுக்கு வந்து, இங்கிலாந்துக்குச் சென்று அமெரிக்காவின் கிழக்குப் பாகத்தை அடைந்து, அதன் பின் மேற்குப் பாகத்திற்கு அதாவது ஸான்பிரான்ஸிஸ்கோ முதலிய இடங்களைத் தொட்டு, ஜப்பானை அடைந்து, அதன் மேல் சைனாவுக்கு வந்து ஒரு சுற்றை முடித்து நிறுத்தியிருக்கிறது. இப்படியாக உலகத்திற்கே ஆதியாக நிற்பது தமிழ் தாயகம்.

அடுத்தபடியாக இப்பொழுது தமிழ் எழுத்துக்களில் மாறுதல் வேண்டுமென்று பலர் சொல்லுகின்றனர். நான் சொல்வது என்னவென்றால் ஆங்கிலத்திற்குச் சரியாக அதிகமான தமிழ் சொற்கள் இருக்கின்றன. மதுரை தமிழ் சங்கத்தில் அதிகமான புதிய வார்த்தைகளை பாண்டித்துரை தேவர் அவர்கள் "செந்தமிழ் செல்வி" என்னும் புஸ்தகத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் சொற்களை எழுதி வைத்திருக்கிறார்கள். திரு. உமாமகேசுவரன் பிள்ளை அவர்களும் கரந்தை தமிழ் சங்கத்தில் சில ஆயிரக்கணக்கான சொற்களை ஆங்கிலத்திற்குச்சரியாக மொழி பெயர்த்து வைத்திருக்கிறார்கள். இவைகளை அரசாங்கம் உபயோகித்தால் யாதொருவிதமான கஷ்டங்களும் இருக்காது என்று நினைக்கிறேன். புதிய சொற்களைக்கொண்டு கண்டு பிடிப்பதற்காக புது நபர்களைப்புகுத்தி அதில் பழமையானதும் தெய்வீகத்துக்குப் புறம்பானதுமான முறைகளில் இருந்தும் மாற்றி வேறுவிதமாக திருத்தங்களைக்கொண்டு வந்து பழுது படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். எதை எடுத்தாலும் செய்யப்போகிற காரியத்தில் நிதானம் தேவை. நிதானம் கெட்டு எந்தகாரியத்தையும் செய்யக்கூடாது. தீப்பிடித்த வீட்டை அணைப்பதற்காகத் தண்ணீர் கொண்டு வருவதற்கு வேண்டி எடுத்த குடத்தை நிதானமாக கொண்டு போகாமல் அதிவேகமாகக் கொண்டு போவது இடறிவிழுந்து குடத்தை உடைப்பதற்குரிய செயலில் புகுத்தும். ஆகவே தண்ணீர் தீ பிடித்த வீட்டை சென்று அடையாது. ஆகவே செய்யும் காரியங்களைக் கொஞ்சம் நிதானமாகவும், திடமான நிலையிலும், ஒழுங்கான நிலையிலும் செய்யவேண்டும். ஆங்கிலச்சொற்களுக்குத் தமிழ் சொற்கள் உபயோகிக்கும் காரியத்தைப் பொறுத்தவரையில் ஆங்கிலச்சொற்களுக்குச் சரியான தமிழ் சொற்களை அச்சடித்து வெளியிட வேண்டுவது அவசியம். இதைச் சர்க்கார் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். இதைக்கொண்டு வந்ததற்கு சர்க்காருக்கு நன்றி செலுத்திக் கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு என்னுடைய வணக்கத்தை சபைக்கு தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.

௧௧-௩௦ கா. **Sri S. N. SOMAYAJULU**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மகிழ்ச்சிக்குறிய விஷயம் பேசுகிற காலத்தில் வார்த்தைகள் கொஞ்சம் தட்டுத் தடுமாறும். ஆனால் சூழ்நிலைகளை நன்றாக ஆராயும்போது அவைக் கொஞ்சம் நிதானமாகப்பார்க்கவேண்டும் என்று சொன்னால் இன்றைக்கு தமிழ் அரியணையில் வீற்றி விட்டாள். அப்படி வீற்று விட்டாள் என்று நிச்சயமாக இன்று சொல்ல முடியும். இதைப் பற்றி பேசும்போது யார் யார் எல்லாமோ என்ன என்னமோ சொன்னார்கள். காலம் வந்தால் தான் செய்ய முடியும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சட்டசபை தன்னுடைய முடிவு காலத்தில்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய சந்தர்ப்பம் இப்பொழுதுதான் கிடைத்திருக்கிறது. பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள்

பல்வேறு மொழியை பேசக்கூடியவர்கள் இருந்த காலத்தில் இதைக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியாமல் இருந்தது. இதுவரையில் அதன் காரணத்தால் தமிழ் ஆட்சி மொழியாக வர முடியாமல் இருந்தது. அவர்கள் பிரிந்து போன பிறகு, நம் ராஜ்யம் தமிழ் நாடாக வந்த பிறகு, நம் ராஜ்ய ஆட்சி மொழி தமிழாக இருக்க வேண்டும் என்று சொன்னதற்கு இப்பொழுது இந்தச்சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு கனம் நிதி மந்திரி அவர்களையும் இந்த மந்திரி சபையையும் நான் வாயார வாழ்த்துகிறேன். மனதாரப்பாராட்டுகிறேன். இங்கு சொல்வது மாத்திரம் அல்ல, லட்சோப லட்ச ஜனங்கள், சென்னையிலிருந்து கன்யாகுமரி வரையில் உள்ள மக்கள் இப்பொழுது சர்க்கார் செய்திருக்கக் கூடிய காரியம் நியாயமான காரியம். சந்தர்ப்பம் வந்த காலத்தில் இதைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள், கன்னித் தமிழ் ஆட்சி பீடத்தில் ஏறுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்கள் என்றெல்லாம் புகழ்கிறார்கள்.

இதற்கு முன் கனம் ரெங்கசாமி ரெட்டியார் பேசியபோது, இது நிதானமாகப் போக வேண்டும் என்றும் வார்த்தைகள் ஒன்றோடொன்று பின்னப்பட்டிருக்கிறது என்றும் சில வார்த்தைகளைத்தமிழில் எடுத்துக் கொண்டு குறிப்பிட்டார். தமிழ் பரந்த மொழியாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி கனம் முத்துராமலிங்கம் தேவர் கூறினார். தமிழ் ஏடு அவசியம் இல்லை. சீவகசிந்தாமணி கொஞ்சகாலத்திற்கு முன்னதாகவே வந்திருக்கிறது. மற்றும் தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு வேண்டிய வார்த்தைகள் கிடையாது என்றும் குறிப்பிட்டார்கள். அப்படி நினைக்க வேண்டியதில்லை, தமிழில் வேண்டிய சொற்கள் இருக்கின்றன. சீவகசிந்தாமணியை எடுத்துப் பார்த்தால் தெரியவரும். சிலப்பதிகாரம் முதலியவைகள் இருக்கின்றன. இதைப் பற்றிச் சொல்லும்போது முன் காலத்தில் இந்த நூல்களிலிருந்து கம்பன் ஒரு ஆப்பையை முழுக்கி எடுத்துக் கொண்டான் என்று கூட சொல்லப்படுவது உண்டு. தமிழ் அவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பது ஆப்பையை போட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது என்று சொல்லும்போதே தெரிய வரும். தமிழ் வளர்ச்சி அடைவதற்கு பல்வேறு சொற்களை எடுத்துக் கொண்டு கூடுமான வரையில் எளிதாக ரஞ்சனமாக, பாமர மக்களுக்குப் புரியும் தமிழ் பாஷையை உருவாக்க முயற்சிப்பதே முக்கியம். அவைகளுக்கு விளக்கம் கொண்டு வந்து தமிழ் அகராதி ஏற்படுத்தி தமிழ் பாஷையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த முயற்சியில் நாம் வெற்றி காண்பது நிச்சயம்.

தமிழ் மொழியைப்பற்றி சில வருஷங்களுக்கு முன்னதாக நாட்டில் இருந்த அபிப்பிராயத்தைப்பற்றி நமது பாரதியார் எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட அபிப்பிராயத்தைச் சொன்னவனைப் பேதை என்றும் இடிக்கிறார். அப்பேதை என்ன சொன்னான் ?

" மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மை கலைகள் தமிழினில் இல்லை "

என்கிறான். அது மாத்திரம் தான் அவன் சொன்னான் ? இன்னும் என்ன என்ன சொன்னான் ? அவன் சொன்னவற்றை எல்லாம் அழகாக எல்லோராலும் புரிந்து கொள்ளும்படியான எளிய தமிழ் நடையிலேயே பாரதி பாடியிருக்கிறார்.

" புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் :

மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

" சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ் மொழிக் கில்லை

போட்டாலும் அந்தப் பெயரைச் சூட்டவேண்டும். அந்த நாளை பொது மக்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிக்கொண்டு வந்தால் இந்த ஆட்சியாளர்கள் நன்றாக வாழவேண்டும் என்று பொதுமக்கள் சொல்லுவார்கள்.

11-30 a.m. காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருக்கிற நேரத்திலே, தேர்தலுக்கு முன்னுலேயே இதைச் செய்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வெறும் திருத்தத்தைக் கொடுக்கவேண்டுமென்பதற்காக நான் இதைக்கொண்டு வரவில்லை. இந்த மசோதா " வழவழா " என்று இருக்கிறது. ஆகையால்தான் ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயிக்கவேண்டுமென்று சொல்லுகிறேன். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால், உண்மையிலேயே தமிழ்மொழி முன்னேற்றம் அடைவதற்கு உதவி செய்ததுபோலாகும்.

*SRI P. G. KARUTHIRUMAN: கனம் துணைத்தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக்கொண்டு வந்த " நீதி-நிதி-மதி " அமைச்சரவர்களை நான் பாராட்டுகிறேன் (சிரிப்பு). " நீதி அமைச்சர் என்றால் " சட்ட மந்திரி " என்று அர்த்தம். " நிதி அமைச்சர் " என்றால் " பொருள் அமைச்சர் " என்று அர்த்தம். " மதி அமைச்சர் " என்றால் " கல்வி அமைச்சர் " என்று அர்த்தம். இதுவரை வெவ்வேறு பாஷையிலே சட்டசபை நடவடிக்கைகள் நடந்துவந்தன. இப்பொழுது நமது தாய்மொழி அரசாங்க பீடத்தில் அமருகிறது. ஒரு குழந்தைக்கு புட்டிப்பாலைவிட தாய்ப்பால்தான் மிகவும் அவசியம். புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகள் நன்றாக இருந்தாலும்கூட தாய்ப்பாலில் இருக்கும் சத்து உயர்ந்ததன்மை வாய்ந்தது. தாய்ப்பாலைக்குடிக்கும் குழந்தையின் மனோநிலைகூட நன்றாக இருக்கும். ஆகவே இந்த மசோதாவை கொண்டு வந்ததற்காக எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழனின் நாகரீகம் மிகவும் உயர்ந்தது. அவனது பண்பாடும் மிகச் சிறந்தது. நமது தேசப் பிதா மகாத்மா காந்தி அடிகள் நமக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார் என்றால் அதற்குக் காரணம் அவர் பூரணமாகக் கடைப்பிடித்து வந்த தமிழரின் பண்பாடும், கொள்கையுமே ஆகும். வள்ளுவர், இளங்கோ, கம்பன் ஆகியோர்கள் நமக்கு வகுத்துக்கொடுத்த வழிப்படி அரசியலிலே மட்டும் அல்லாமல், சொந்த வாழ்க்கையிலும் பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை கடைப்பிடித்ததினால் தான் நமது தேசப் பிதா நமக்கு சுதந்திரத்தை வாங்கிக்கொடுக்க அருகதை உள்ளவராயிருந்தார். நம்முடைய தாய்மொழி பிரதேச பாஷையாக இருப்பதோடு மட்டுமல்லாமல், இப்பொழுது அரசாங்க மொழியாகவும் ஆகிறது. படிப்படியாகத்தான் இதைக் கொண்டுவரவேண்டுமென்று கனம் அமைச்சர் குறிப்பிட்டதை நான் பாராட்டுகிறேன். இதற்கு உதாரணம் என்னுடைய வாழ்க்கையிலேயே ஏற்பட்ட ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபொழுது, நானும் எனது நண்பர்கள் சிலரும் தூய தமிழிலேயே பேசவேண்டுமென்று ஒரு பிரதிக்ஞை எடுத்துக்கொண்டோம். ஆங்கிலத்தில் யாராவது பேசினால் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஓரணு அபராதம் செலுத்தவேண்டும் என்று ஒப்புக்கொண்டோம். ஒரு சமயம் பட்டிணத்திலுள்ள ராமகிருஷ்ணு லஞ்ச் ஹோமில் நாங்கள் சந்திக்கும்படி நேர்ந்தது. எங்கள் குழுவிலுள்ள ஒரு நண்பர் " இப்பொழுது தான் பட்டிணத்திற்கு வந்திருக்கிறீர்களோ " என்று என்னைப்பார்த்துக் கேட்டார். அச்சமயம் நாட்டுப்புறத்திலிருந்து வந்திருக்கும் ஒருவர், தன்னைத்தான் கேலியாக சொல்லுகிறோம் என்று நினைத்து " ஏனய்யா, இப்பொழுது தான் புதிதாகப் பட்டணத்திற்கு வந்திருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா ? " என்று சண்டைக்கு வந்துவிட்டார். கடைசியாக அவரிடம் நான் சென்று " உங்களைப்பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. தூய தமிழிலே பேச வேண்டுமென்று நாங்கள் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டோம். அதனால்தான் எனது நண்பர் என்னைப் பார்த்து அவ்வாறு கேட்டார் " என்று சொல்ல வேண்டிய நிலைமை

[illegible] தூய தமிழ், கொடும் தமிழ், செந்தமிழ் உபயோகித்தால் [illegible]களில் அர்த்தமே ஆகாது. " துவிச்சக்கர வண்டி " என்று [illegible]னால் சிலருக்கு புரிவதில்லை. " ஸைக்கிள் " என்று தமிழ்பாஷையிலும் உபயோகித்துக்கொள்ளலாம். பிறமொழிகளெல்லாம் வளர்ச்சியடைந்திருப்பதற்குக் காரணம் என்னவென்றால் வேறு மொழிகளில் இருக்கக்கூடிய சொற்களையும் உபயோகிப்பதனால்தான். ஈரோடு முனிசிபாலிடியில் தண்ணீர் லாரிக்கு " குடிதண்ணீர் உந்து " என்று சொல்லுகிறார்கள். "லாரி " என்று ஏன் சொல்லக்கூடாது. பழக்கத்திலே இருக்கும் சொற்களை உபயோகிப்பது தான் மிகவும் சிறந்த முறை. நமது தேசப் பிதா அவர்கள் அரசியலில் தவறு ஏற்படக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். சிலப்பதிகாரத்தின் குறிக்கோள், " அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதும் உரைச்சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்தி வந்து ஊட்டுமென்பதும், சூழ்வினைச் சிலம்பு காரணமாக சிலப்பதிகாரம் என்னும் பெயரால் நாட்டுதும் வாமோர் பாட்டுடைச் செய்யுள் " என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அரசியலில் தவறு நடக்கக்கூடாது. பழைய காலத்திலே ஆட்சியை நடத்திக்கொண்டிருந்தவர்கள் பெரிய இலக்கிய புலவர்கள். புறநானூற்றில் அரசாங்கம் எவ்விதமிருக்க வேண்டுமென்பதை நமது கவிஞர்கள் எவ்வாறு வர்ணித்திருக்கிறார்கள் என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

" காய் நெல்லறுத்துக் கவளங்கொளினே
மாநிறை வில்லதும் பன்னுட்காகும்
நூறு செறுவாயினும் தமித்துக்புக்குளினே
வாய்புகுவதினும் கால் பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடியாத்து நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவனுகி வைகலும் வரிசையறியா
கல்லென் சுற்றமொரு பரிவுதவ எடுக்கும்பிண்ட நச்சினன்
யானை புக்கபுலம்போல நானும் உண்ணுன் உலகமும் கெடுமே "

SRI S. SWAYAMPRAKASAM: கனம் துணைத் தலைவரவர்களே, சென்ற ஐந்தாண்டுகாலமாக நாம் சட்டசபையில் பல வேலைகளை முடித்துவிட்டு, இப்பொழுது தேர்தலுக்கு மக்களிடத்திலே போகிற சமயத்தில், நீண்ட நாளாக மக்கள் விரும்புகிற தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்கி வைக்கிறோம் என்பதற்காக மக்களின் சார்பாக அரசாங்கத்திற்கு நன்றி செலுத்துகிறேன். அத்துடன் நமது சபை முடிகிற காலத்திலே, தேர்தல் பிரசாரத்திற்காகப் போகிற நேரத்திலே ஒரு விதமான விவாதத்திற்கும் இடமில்லாத இந்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்ததுபற்றி பாராட்டுகிறேன்.

மசோதாவை கவனிக்குங்கால் அதில் அதிகமாக ஒன்றுமில்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. தமிழை ஆட்சி மொழியாகச் செய்வது தான் அரசாங்கத்தின் எண்ணம் என்பது முக்கியமாக தெரிகிறது. இதை நிறைவேற்றுவதில் பலவிதமான சிரமங்கள் இருக்குமென்பதை யாரும் மறுக்கமுடியாது. " நாங்கள் தமிழை ஆட்சி மொழியாக்கிவிட்டோம் " என்று சொல்லுவதற்காகவே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம்கூட சிலருக்கு இருக்கிறது. சிரமங்களை எல்லாம் நீக்கி ஆட்சிமொழியை நடைமுறையில் கொண்டுவருவதற்கு தக்க நடவடிக்கைகளை கையாளவேண்டும். கனம் நிதி அமைச்சரும் மற்றும் பல அங்கத்தினர்களும் இதிலுள்ள சிரமங்களை எடுத்துச் சொன்னார்கள். ஒன்று தமிழ் " டைப்ரைட்டரைப் " பற்றியது. இது விஷயத்தில் அரசாங்கம் சீக்கிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதில் சந்தேகமேயில்லை. அதற்கு இடையிலே ஜில்லாவாரியாக இதனை உபயோகப்படுத்துகிற நேரத்தில 11-40 a.m.
சில சிரமங்கள் ஏற்படக்கூடும். இதுவரையிலும் ஆங்கிலத்தில் பழகிவந்த

[Sri R. Shanmuga Rajeswara Sethupathi] [27th December 1956

மிடலேயும் படிப்பார்கள் என்று கேட்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமை வரவேண்டும். சங்க நூல்களில் ஆர்வம் வந்துவிடும், தமிழ் தானாக வளர்ச்சி அடையும்.

இப்படி ஒரு மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்துவிட்டிருக்கிறார்களே ஒரு வேளை இது தேர்தலுக்கோ என்னவோ என்று ஒரு சிலர் நினைத்தால் அது தப்பான அபிப்பிராயம் ஆகும். தேர்தலுக்காக என்று ஒரு காரியம் செய்தால் அது நாளைக்கே தெரிந்துவிடும். தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்து விட்ட பிறகு அரசாங்கம் இதைக் கைவிட முடியாது. தமிழ் நாட்டு மண்ணிலே இந்த வித்தை விதைத்துவிட்ட பிறகு, அது மேலும் மேலும் வளர்ச்சி அடையுமே தவிர, அந்த வித்தின் வளர்ச்சியை யாராலும் தடுத்துவிடமுடியாது. அரசாங்கத்திற்கு இதில் ஒரு விதமான ஆர்வக் குறைவோ ஊக்கக் குறைவோ இருக்க முடியாது. அந்த வித்து தானாக வேர் ஊன்றி வளரும். அப்படி வளரும் வளர்ச்சியை நாம் எதிர்பார்ப்போம். இன்றைக்கு மட்டும் செய்கிற காரியம் அல்ல என்று சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன். அது தானாக வளர்ந்து விடும், இருந்தாலும் எல்லோரும் பங்கு கொண்டு செய்ய வேண்டியதுதான். இந்த மசோதாவைக் கொண்டுவந்துவிட்டு, அரசாங்கம் அயர்வு கொள்ளுமோ, நடைமுறையில் கஷ்டம்வந்து, உடனடியாக வராதோ என்று சிலர் நினைக்கலாம். தமிழ் பாஷை ஆட்சிமொழியாகவந்து, சகல துறைகளிலும் உபயோகப்படவேண்டுமென்பதில் யாருக்கும் அபிப்பிராயம் இல்லை. ஆதலால்தான் நான் சொல்லுவது போல் பிற பாஷைச் சொற்களானாலும், அவற்றைத் தள்ளிவிடாமல், தமிழில் இப்போது இருக்கிற வார்த்தைகளை வைத்துக்கொண்டு. இன்னும் இதர மொழி வார்த்தைகள் தமிழில் பழக்கத்தில் இருந்து வந்தால் அவைகளையும் சேர்த்துக்கொள்ளலாம், அப்படிக் கடன் வாங்கிக் கொள்வதில் தப்பு அல்ல. அப்படியிருந்தால்தான் சீக்கிரமாக தமிழ் பாஷை வளரும்; எல்லாத் துறைகளிலும் உபயோகப்படுத்துவதற்கு முடியும்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ விநாயகம் அவர்கள் சொன்னபடி, நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில், ஒருகுறிப்பிட்ட வருஷங்களுக்குள் ஆங்கிலம் போகவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதுபோல், இங்கும் ஒரு கட்டுப்பாடு இருந்தால் ரொம்ப நல்லது என்றுதான் நானும் கருதுகிறேன். ஒரு குறிப்பிட்ட வருஷங்களுக்குப் பிறகு ஆங்கிலம் புறக்கணிக்கப்படவேண்டுமென்ற நியதி இருந்தால் ரொம்ப நல்லது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். கல்லூரியிலே தமிழில் பட்டம் பெற்று அவர்கள் வரும்போது தமிழ் தானாக வளர்ச்சி அடையும், தனித் தமிழ் இல்லை என்று இன்று சிலர் தப்பாகக் கருதலாம். சரியில்லையென்றாலும் திருத்தி அமைத்துக்கொண்டே போகலாம். முதல் முதலிலே சட்டசபையிலே நாம் செய்யும் தப்புகளைத் திருத்தி திருத்தி அமைத்து வருகிறோம். அனுபவத்திலே திருத்தமாக நாம் செய்கின்றோம். திருத்தத்திற்கு இடம் கொடுத்துக்கொண்டே உடனடியாக இந்தப் பாதையிலே முன்னேறிச் செல்லவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையானஅபிப்பிராயம்.

காலதாமதமன்னியில் இந்த மசோதாவை ஊர்ஜிதத்திற்குக் கொண்டு வந்து தாலுகா, ஜில்லா, எங்கும் பரப்பும்படியாகச் செய்துவிட்டால் ஒரு சில காலத்திற்கு, அந்த ஆங்கிலத்திலே பழகிவந்த காரணத்தால் குமாஸ்த்தாக்களுக்கு சில சிரமங்கள் இருக்கும். இயந்திரங்களைப்பற்றியும் சில கஷ்டங்கள் இருக்கும், மனிதர்களால் ஏற்படும் கஷ்டங்கள் தான். அவைகளை மனிதர்களே வெல்லக்கூடிய முறையிலே அமைத்துக் கொள்ளலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இது மிகச் சிறந்த நன்னாள், மிகப் பெரிய நோக்கத்துடன் இன்று இது ஆரம்பித்திருக்கிறது. இதை அரசாங்கம் சகல உரிமையுடனும் பொறுப்புடனும் கையாண்டு அதி சீக்கிரம் நாம் நினைக்கும் ஒரு நாளை எய்துவதற்கு இறைவன் அருள் புரிய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கின்றேன்.

27th December 1956]

Sri K. S. LAKSHMIPATHI NAYAKAR: சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, இங்கு நம் சபை முன்பு இருக்கக்கூடிய தமிழ் மொழி மசோதாவை மனப்பூர்வமாக எல்லோரும் ஆதரிக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். பழனியில் தமிழ் தெய்வமாக இருக்கக்கூடிய சுப்பிரமணியம் என்ற பெயர் கொண்டவர் இன்று நமது நிதி அமைச்சராக இருக்கிறார். சுப்பிரமணியத்திற்கு மற்றொரு பெயரும் உண்டு. அவரை ஞான பண்டிதன் என்றும் செல்லுவார்கள். சுப்பிரமண்யத்தை தகப்பன் சுவாமி என்று சொல்லுவதும் உண்டு. இன்றைய தினம் ஸ்ரீ காமராஜ நாடார் அவர்கள் தலைவராக இருக்கின்ற நேரத்திலே சுப்பிரமணியம் அவர்களுடைய வாயால் தமிழ் மொழியை நமது நாட்டின் அரசியல் மொழியாகக் கொண்டுவரவேண்டுமென்று பிரகடனம் செய்திருப்பதானது மிகவும் பாராட்டத்தக்கது. அதிலும் முக்கியமாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால். நமது தமிழ் மொழி அரசியல் மொழியாக இதுவரை வாராததன் காரணமாக பல இடங்களில் வெவ்வேறு முறைகளிலே தமிழ் உச்சரிக்கப்பட்டு வருவதை நாம் எல்லோரும் பார்த்து வருகிறோம். சென்னையிலே ஒரு மாதிரியாக உச்சரிக்கப்படுகிறது. மதுரையிலே ஒரு மாதிரியாக உச்சரிக்கப்படுகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் கொஞ்சம் மாறுதலாக உச்சரிக்கப்படுகிறது. தமிழ் அரசியல் மொழியாக வந்ததின் காரணமாக நாம் எல்லோரும் சுத்தமான தமிழ் பேசுவதற்கு கற்றுக் கொள்ள முடியும். அதிலும் கொச்சையாக நமது சென்னை நகரத்தில் பேசப்படும் தமிழ் ஒருவாறு திருத்தி நல்ல முறையிலே காதுக்கு இனிமையாக அமைய வேண்டும். செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன்வந்து பாயுது காதினிலே என்று பாரதியார் பாடியிருக்கிறார். செந்தமிழ் மொழியை நினைத்த மாத்திரத்திலே காதிலே இன்பம் ஒலிக்கிறது. அந்த செந்தமிழை கூடிய சீக்கிரத்தில் நாம் எல்லோரும் கற்கவேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.

தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருப்பது மட்டும் போதாது, தமிழ் அன்னைக்கு இன்று முடிசூட்டு விழா நடத்துவோம் என்று நமது அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். முடிசூட்டு விழா நடத்துவதோடு மட்டும் அல்லாது, இந்த நாட்டிற்கு செந்தமிழ் நாடு அல்லது தமிழ் நாடு என்ற பெயரிட வேண்டும் என்பது தான் இங்குள்ள நம் போன்ற தமிழ் ஜில்லாக்களிலுள்ள மக்களுடைய ஆர்வம். அதுவே அவர்களுடைய விருப்பமும் கூட, ஆகவே தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்குவது மட்டும் போதாதென்று சொல்லிக்கொண்டு, நமது நாட்டிற்கு தமிழ் நாடு என்று பெயர் வழங்குவதற்க்கு வேண்டிய முயற்சிகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழ் மொழியை நாம் நடைமுறையில் கொண்டு வருவதில் சில சிரமங்கள் இருக்கின்றன. எனக்கு முன்பு பேசிய ரெங்கசுவாமி ரெட்டியார் அவர்கள் சைகிள், பஸ், ஜட்ஜ், கோர்ட்டு போன்ற வார்த்தைக்கெல்லாம் தமிழ் மொழியிலேயே அப்படியே மாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். தமிழிலே மற்ற மொழியிலிருந்து சொற்களை கடன்வாங்கிக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். நாம் சுத்தமான தமிழிலே பேசவேண்டுமென்றால், சைக்கிள் வண்டி என்பதை எடுத்துக் கொள்ளுவோம். அதை ஒரு இடத்திலே துவிச்சக்கர வண்டி என்று சொல்லுகிறார்கள். வேறு சிலர் துவிச்சக்கர வண்டி என்று சொல்லும்போது அது வடமொழியாகும், அதற்கு வேறு பெயர் கொடுக்க வேண்டுமென்று சர்ச்சை செய்கிறார்கள். இரு உருளை வண்டி என்று தமிழிலேயே சொல்லலாம் என்று சிலர் கூறுகிறார்கள். இம்மாதிரி சர்ச்சைகள் செய்து கொண்டிருந்தால், அது தமிழ் வளர்ச்சியை மிகவும் பாதிக்கும். நடைமுறையிலே மற்ற மொழியில் உள்ள சொற்களை நமது தமிழில் கடன்வாங்கிக்கொண்டு நம் தமிழை வளர்ப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. இந்த நன்னாளில் நமது நிதி அமைச்சர் அவர்கள் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்கவேண்டுமென்று கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரித்து இந்த சந்தர்ப்பத்தில் என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sri A. SAMBASIVAM: சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே! இன்றைக்கு அரசாங்கத்தின் சார்பில் மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கும் இந்த மசோதாவை வரவேற்று பாராட்டுகிறேன். இந்த மசோதா தக்க தருணத்தில் எந்த நேரத்தில் கொண்டுவர வேண்டுமோ அந்த நேரத்தில் குறிப்பாக கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு பேசிய நமது பொது மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் காரணமும் குறிப்பிட்டார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னமேயே நம்முடைய அமைச்சர் பகுதியிலிருந்து தமிழிலே பேசத்தொடங்கினார்கள். அப்பொழுது சபையில் இருந்த கன்னட மலையாளத் தோழர்களுக்கு அது புரியாத காரணத்தினாலே மீண்டும் இந்த சபை ஆங்கிலத்திலேயே செயல்பட வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டது. இன்றைக்கு அந்த நிலைமை மாறி முற்றிலும், தமிழர்களாக கூடிய இந்த முதல் கூட்டத்திலேயே காங்கிரஸ் கட்சி அரசாங்கமானது இந்த மசோதாவை சமர்ப்பித்திருக்கிறது. இந்த மசோதாவை இப்பொழுது சமர்ப்பித்தது பற்றி எதிர்க்கட்சியில் உள்ள சில நண்பர்கள், ஏதோ தேர்தலுக்காக கொண்டு வந்ததாக இருக்குமோ என்று சந்தேகப் படுவது, தாய்ப்பாலில் நஞ்சு இருக்கிறதா என்று ஆராய்கின்ற புத்திசாலித்தனத்தைப் போல இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள மிகவும் வருத்தப்படுகிறேன். தக்க தருணத்திலே தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் நீண்ட நெடுங்காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக நமது கல்வி அமைச்சர் தன்னுடைய சக்திக்கு ஏற்ற அளவில் தாய்மொழிக்கு எந்தெந்த உயர்வெல்லாம் செய்யமுடியுமோ அதைச் செய்ய வேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறார்கள். அவர் பல இடங்களிலும் கல்லூரிகளிலும்கூட தமிழை போதனா மொழியாக ஆக்கவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். ஆகவே இதைத் துரிதப்படுத்துவதில் அவர் எந்தவிதமான தயக்கமும் காட்டமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடுகூட அவர்களை மீண்டும் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்திலே அரசியல் அலுவலகங்களிலுள்ள அலுவலாளர்களுக்கும், ஆணையாளர்களுக்கும்கூட ஒரு வேண்டுகோள் விட ஆசைப்படுகிறேன். இங்குள்ள நண்பர்களிடமும் சரி, வெளியில் நண்பர்களிடமும் சரி, ஒரு சிலருக்கு ஒரு ஐயப்பாடு இருக்கிறது. தமிழிலே விரைவில் ஆட்சி நடத்த முடியுமா என்று ஐயப்படுகிறார்கள். முக்கியமாக பழைய காலத்திலே 'ஒன்று வைத்து உலகாண்ட தொன்றுபடு தீந்தமிழ்க்கிளவி' என்று சொல்லப் பட்டிருக்கிறது. இடைக்காலத்து புலவர் ஒருவர் கூறியிருக்கிறார்: 'சேணிற் பறக்கின்ற செந்தமிழ்க் குதிரைமுன் திட்டது தட்டேது காண்' வானளந்த தனைத்து மளந்திடு வண்மொழி வாழியவே என்று கவியரச பாரதியார் பாடியிருக்கிறார். வானத்தில் ஓடுகின்ற அத்தனை பொருள்களையும் சொல்வளத்தால் அளந்து பார்க்கவல்லது தமிழ்மொழி. அந்த மொழியில் ஆட்சி விரைவில் நடத்த முடியுமா என்ற ஐயம் யாருக்கும் எப்பொழுதும் இருக்கத் தேவையில்லை. அரசாங்க அலுவலகத்திலுள்ள நண்பர்கள் வளம் பொருந்திய மொழி ஆட்சி மொழி என்ற உணர்வுடன் இது விஷயமாக விரைந்து செயல்பட்டால், இந்த நாட்டிலுள்ள அத்தனை மக்களும் மகிழ்வார்கள். அவர்களைப் பாராட்டுவார்கள். உண்மையில் இந்த நாள் மகிழ்ச்சி ஊட்டக் கூடிய நாள் மாத்திரமல்ல. தமிழ் நாட்டு அரசியலிலும் பொதுமக்கள் வாழ்விலும் சிறந்த பொன்னாள். நாடு விடுதலை அடைந்த பிறகு மக்கள் வீட்டில் பேசுகின்ற தமிழ் மொழியைத் தான் நாட்டை ஆளுகின்ற மொழியாகச் செய்யவேண்டுமென்று விரும்பினார்கள். அந்த மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு காங்கிரஸ் சர்க்கார் நீண்ட நாட்களாக தக்க தருணத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிறிதும் காலம் தாழ்த்தாமல் அமைச்சர் அவர்கள் செயல்பட்டு இதனை உரிய காலத்திலே கொண்டு வந்தது மிகவும் வரவேற்கத் தக்கது. இது விஷயமாக ஒரு ஆய்வுக் குழு அமைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியது மிகவும் வரவேற்கக்கூடியது. ஆங்கிலத்தில் இருப்பது போல தமிழிலும் பி.ஓ.எல்., எம்.ஓ.எல்., பட்டம்பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் ஒரு அரசாங்கப்

பிரிவில் ஒரு உத்தியோகஸ்தராக அமர்த்தி அல்லது அவர்களை ஆய்வுக் குழுவில் அமர்த்தி கூடியவரையிலும் முற்றிலும் தமிழிலேயே செயல்படும் வாய்ப்பைச் செய்து தர வேண்டும்.

தாலுகா அலுவலகத்தில் மட்டுமல்ல. சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் போன்ற எல்லா இடங்களிலும் தமிழிலேயே அலுவல்கள் நடத்தப்பட வேண்டும். பொது மக்களுக்கு, நமது நாட்டில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக விளங்குகிறது என்ற நம்பிக்கை ஏற்படும் வகையில் விரைந்து செயல்பட வேண்டுமென்று அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதாவை தக்க தருணத்திலே கொண்டு வந்த அமைச்சர் அவர்களுக்கும் சர்க்காருக்கும் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

Sri C. KANDASAMY: கனம் உதவி தலைவர் அவர்களே! 12 noon.
இந்த சபையின் கடைசி நடவடிக்கையாக நமது தமிழ் மொழி பிரதேச மொழியாக அங்கீகரிக்கப் பட்டிருக்கும் இந்த செய்தியை கேட்டு தமிழகம் பூராவும் பூரிப்பு அடையும் என்பதில் ஐயமில்லை. இன்றைக்கு இத்தகைய ஒரு மசோதாவை நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருந்தாலும் கூட இத்தகைய ஒரு நிலைமைக்கு வருவதற்கு 50 வருஷ காலமாக நடந்த ஒரு போராட்டத்தின் பலன்தான் இது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. அன்று ஏற்பட்ட போராட்டத்தின் வளர்ச்சிதான் இன்றைய தினம் தமிழ் மொழி ஆட்சி மொழியாக வந்திருக்கிறது. தமிழ் மொழி அரசோச்ச வேண்டுமென்று கழிந்த 50, 60 வருடங்களாக போராடி வந்திருக்கிறார்கள், பலர் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். என் போன்றவர்கள் இந்த மசோதாவினால் கூடுதலாக மகிழ்ச்சி அடைகிறோம். காரணம் என்னவென்றால் சாதாரண விவசாய மக்களும் சாதாரண மக்களும் இன்று அரசாங்கத்தின் எல்லா நடவடிக்கைகளையும் புரிந்து கொள்ளும்படியான வகையில் இது அமையும் என்ற காரணத்தினால் இந்த நிலைமையில் இனிவரப் போகிற காலத்தில் கலெக்டர் ஆபீஸ்களிலும் சரி, மற்ற எந்த சர்க்கார் ஆபீஸ்களிலும் சரி, சட்ட சபையிலும் சரி அங்கெல்லாம் நடைபெறக் கூடிய காரியங்களை சாதாரண மக்கள் புரிந்து கொள்ளுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இது ஜன நாயகத்தின் ஒரு படி என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன். அத்தகைய ஒரு நிலைக்கு, முயற்சி எடுத்ததற்காக மந்திரி அவர்களைப் பாராட்டுகிறேன், இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவந்ததற்காக தமிழ் நாட்டு மக்களின் சார்பாகவும், தமிழ் நாட்டு விவசாயிகள் சார்பாகவும், தமிழ் நாட்டு பாட்டாளிகள் சார்பாகவும், இன்று சமூகத்தில் மிதியுண்டு கிடக்கிற கோடிக்கணக்கான மக்களின் சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாம் இது வரை பிற மொழிகளையும் சேர்த்துத்தான் வளர்த்து வந்தோம். இன்று நம்மோடு இருக்கக்கூடிய தமிழ் அன்பானது பிற மொழிகளின் மீது வெறுப்பை வளர்க்கக்கூடியதாக இருக்கக்கூடாது. பிற மொழிகளிலுள்ள மொழி வளர்ச்சிதான் இன்று நம்மை இந்த நிலைமைக்கு அதாவது தமிழ் மொழியைவளர்த்து வரக்கூடிய நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு நாம் தமிழை வளர்க்க வேண்டும் என்பது தான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். இன்று தமிழ் மொழி ஆட்சி மொழியாக வந்தால் மாத்திரம் போதாது. தமிழ் மொழி கல்லூரிகளில் வளர வேண்டும். அப்போது தான் தமிழ் மொழியை வளர்ப்பதற்கு தூண்டுகோலாக இருக்கும்என்று கூறிக்கொண்டு, பாரதி பாடின தமிழ் பாடல்களை சிலர் சொன்னார்கள்; நானும் பாரதி சொன்ன ஒரு கவியை சொல்ல ஆசைப்படுகிறேன்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்.

பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொல்ல பான்மைகெட்டு நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்! தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்."

என்று பாரதி பாடியிருப்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நாம் தமிழை வளர்க்க வேண்டும். தமிழை வளர்க்கின்ற ஆவேசம் பிற மொழிகளின் மீது வெறுத்தலைத் தூண்டி விடாமல் பார்த்துக் கொள்வது அவசியம். திரிகரண சுத்தியோடு மனப்பூர்வமாக தமிழை வளர்த்து, இப்போது தமிழ் மொழி ஆட்சி மொழியாக வந்திருப்பது ஜனநாயகத்தின் ஒரு படி என்று நினைத்து, மேலும் ஜனநாயகத்தை வளர்க்க இது ஒரு கருவியாக இயங்க வேண்டும் என்று நினைத்து, எல்லோரும் இதில் ஒன்று பட்டு வளர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த நன்மையை இங்கே கொண்டு வந்ததற்காக மந்திரி அவர்களை வாழ்த்திக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI G. NARAYANASWAMI NAIDU: மதிப்புமிக்க தலைவர் அவர்களே, பெரியோர்களே, முதல் முதலாக தமிழ் மொழி நமது ஆட்சி மொழியாக வருவதைக்குறித்து எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு இந்த சபையில் இரண்டு தரப்பினர்களும் தமிழ் மொழியை வளர்க்க ஆரம்பித்துவிட்டார்கள். தங்களுடைய சந்தோஷத்தை கொண்டாடியிருக்கின்றனர். இன்றைக்கு தமிழ் ஆட்சி மொழியாக வந்திருக்கிறது என்றால் அந்த ஓர் உன்னத வளர்ச்சியை அடைவதற்கு நமது முன்னோர்கள் எப்படி வேலை செய்து வந்தார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தை நடத்தியவர்கள் எல்லோரும் அன்று அன்னிய மொழியாக இருந்த ஆங்கிலத்தை வெறுத்து வந்தார்கள். அப்போது மக்களுக்கு தமிழின் மீது ஆர்வம் ஏற்பட்டது. அவர்களை முன்னோடியாகக் கொண்டுதான் தமிழை வளர்ப்பதற்காக பாரதியார் அவர்கள் தமிழ் மொழியில் கவிதைகளை செய்தார்கள். இன்று ஏதோ புதிய சொற்களை நாம் உபயோகித்தால் கஷ்டங்கள் இருக்கும் என்று நாம் நினைக்கின்றோம். ஆனால் அந்தக் காலத்தில் தமிழ் தனித்து இருந்திருக்கிறது. இன்னும் சில விஞ்ஞான சொற்களுக்கு தனித்த தமிழ் மொழியில் சொற்கள் இருக்கிறது. அதை நாம் உபயோகப்படுத்துவது இல்லை. அதனால் தான் இவைகள் எல்லாம் நமக்கு கஷ்டமாக இருந்து வருகிறது. நம்முடைய அரசியல் வளர்ச்சியிலும் நாம் அவ்விதமாக இருந்து வருவதால்தான் நாம் தனி தமிழ் மொழியில் பேசுவதற்கு முடியாத நிலையில் இருக்கிறோம். தமிழில் பேசுவது, தமிழில் எழுதுவது, தமிழில் சிந்திப்பது, இவையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வேறு மொழியில் நாம் போய்க்கொண்டிருக்கிறோம்; வேறு மொழியில் பேசினால் தான் மதிப்பு இருப்பதாக எண்ணுகிறோம். என்ன 'சகோதரரே' என்று கேட்பதற்குப் பதில் என்ன "பிரதர்" என்று கேட்டால்தான் மதிப்பு இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம். "கொஞ்சம் தண்ணீர் குடியுங்கள்" என்று சொல்வதற்கு "கொஞ்சம் வாட்டர் சாப்பிடுங்கள்" என்று சொல்லுகிறோம். இவ்வாறு பேசுவதில் மாறினோம், ஆடைகள் அணிவதிலே மாறினோம், தலையை வெட்டிக் கொள்வதிலே மாறினோம், தலையை என்றால் முடியைத்தான் குறிப்பிடுகிறேன். இவ்வாறாக நாம் இன்று தமிழ் மொழியையே மறந்திருக்கக் கூடிய காலம் இது. இந்த நிலையில் இன்று தமிழ் மொழி ஆட்சி மொழியாக வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஆகவே இன்று ஆங்கிலச்சொற்களுக்கு சரியான தமிழ் சொற்களை ஒவ்வொருத் துறையிலும் அனுபவமுள்ள நிபுணர்களைக் கொண்டு தயாரித்து வெளியிட்டால் சாதாரண மக்களுக்கு உபயோகமாக இருக்கும். இன்று நாம் ஒருவருக்கொருவர் பேசி பல புதிய சொற்களை உபயோகித்தால் அது லாவகமாக வந்துவிடும். எல்லோருக்குமே இம்மாதிரிப்பட்ட புதிய சொற்களை உபயோகிக்கக்கூடிய சக்தி வந்துவிடும். இன்று நம்முடைய மராமத்து இலாகா மந்திரி அவர்கள் புதிய புதிய பதங்களை எல்லாம் ரொம்ப அழகாக அமைத்து பேசுவதற்கு முயற்சித்தார்கள். நமக்கு தெரிந்த பல பதங்கள் கூட இன்று நமது உபயோகத்தில் இல்லாமல் இருந்து வருகிறது. இதை எல்லாம் நாம் உபயோகித்து வந்தால் இது லாவகமாக வந்து அமைந்துவிடும். ஆகவே இதில் பெரிய கஷ்டங்கள் ஒன்றும் இருக்காது. நாம் பல தமிழ் சொற்களை உபயோகிக்காமல் பலஹீனப்பட்டு இருக்கிறோம். உதாரணமாக "டெமாக்ரஸி" என்று சொன்னால்தான் பொருள் உண்டு

"ஜனநாயகம்" என்று சொன்னால் பொருள் இல்லை என்று ஒரு தோற்றம் அல்லது ஒரு மயக்கம் நம்மிடையே இருந்து வருகிறது. இப்படியாக அரசியலில் வரக்கூடிய டெமாக்ரஸி, ஆட்டோக்ரஸி போன்ற ஆங்கில வார்த்தைகளுக்கு தமிழ் சொற்களை உபயோகிக்க வேண்டிய சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. இவைகள் எல்லாம் பழக்கத்தில் வந்துவிடும் என்று நினைக்கிறேன். **Green leaves, Dry leaves** போன்ற வார்த்தைகளுக்கு கொழுந்து, சருகு என்றெல்லாம் தமிழ் சொற்கள் நம்மிடம் இருக்கிறது. ஆகவே தமிழை வளர்ப்பதில் நாம் கட்சி கருத்துகளை கொண்டு புகுத்தாமல் ஆத்மார்த்தமாக நாம் ஒன்று பட்டு வேலை செய்யவேண்டும். ஏதோ இது தேர்தல் வேலைக்காக கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லி "அதை துரிதமாக கொண்டுவர வேண்டும்" என்று திருத்தங்களைக் கொண்டுவந்து அதை தேர்தலுக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று எதிர்கட்சிக்காரர்களைப் பார்த்து எங்களுக்கும் சொல்ல முடியும். ஆகவே நாம் இவ்விதமான வீண் விவாதங்களை விட்டு விட்டு தமிழ் மொழி வளருவதற்காக பாடுபடவேண்டும். புதிய சொற்கள் இல்லையென்ற கருத்தும் நமக்கு வேண்டியதில்லை. இன்னும் ஐந்து வருடத்திற்குள்ளாக நாம் ஒருவருக்கொருவர் பேசிப்பேசி எல்லா புதிய சொற்களும் லாவகத்தில் வந்துவிடும். இன்று ஒவ்வொரு ஜில்லாக்களிலும் வெவ்வேறு விதமான சொற்கள் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இவைகள் எல்லாம் மாறி ஆட்சி மொழி தமிழ் மொழியாக வந்துவிட்டால் இதில் ஒரு கஷ்டமும் இருக்காது என்று கூறிவிட்டு, இந்த மசோதா கொண்டு வந்ததற்காக இந்த சர்க்காரையும், குறிப்பாக கனம் மந்திரி சுப்பிரமணியம் இதில் எடுத்துக் கொண்ட முயற்சிக்காக கனம் மந்திரி அவர்களையும் பாராட்டிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI V. BALAKRISHNAN: சபைத்தலைவர் அவர்களே, நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் மசோதாவைக்கண்டு யார்தான் ஆனந்தம் அடைய மாட்டார்கள். நான் நீண்ட நாளாக தமிழில் நிர்வாகம் நடக்க வேண்டும் என்று எண்ணியிருந்தவன். புதுக்கோட்டையில் தமிழில் நிர்வாகம் நடந்து வந்தது. பின்னால் சென்னையுடன் இணைக்கப்பட்ட பிறகு ஆங்கிலத்தில் நடந்து வருகிறது. ஆங்கிலத்தில் நிர்வாகம் நடப்பதை எல்லோரும் இன்று வெறுத்து வருகிறார்கள். புதுக்கோட்டையில் முன்னால் எல்லாம் அதாவது 150 ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழில் நிர்வாகம் நடத்தப்பட்டு வந்தது. நீதி மன்றத்தில் தீர்ப்புகள் எல்லாம், மந்திரிமார்களுடைய உத்தரவுகள் எல்லாம் வசன நடையிலும் கவியாகவும், போட்டு வந்தார்கள். இதை இன்று சென்னை அரசாங்கம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அங்குள்ள ரிக்கார்டுகளை எல்லாம் பார்த்தால் இவையெல்லாம் தெரியும். இப்போது தமிழ் மொழியை ஆட்சி மொழியாக உபயோகப்படுத்துவதற்காக திருச்சி ஜில்லாவில் பரீட்சை செய்து வந்த காலத்தில் சில அசம்பாவிதங்கள் நடந்து இருக்கின்றன. அவர்கள் செய்து இருப்பது, கன்னித்தமிழை கற்பழித்தது போலாகும். சாதாரணமாக "இறிகேஷன்" என்பதற்கு "நீர்கழிப்பு" என்றும் "மைனர் இறிகேஷன்" என்பதற்கு "சிறுநீர் கழிப்பு" என்று மொழி பெயர்த்து இருக்கிறார்கள். நான் சொல்லுவது என்னவென்றால் இந்த மாதிரியுள்ள சொற்களுக்கு சரியான பதம் கிடைப்பது வரை இறிகேஷன் போன்ற ஆங்கில சொற்களை வைத்துக்கொள்ளலாம் என்பதுதான் என் அபிப்பிராயம். பாரதியார் பாடிய பாட்டுகளை சிலர் சொன்னார்கள். நான் தமிழின் பெருமையைப்பற்றி சொல்வதற்காக, இலங்கையில் வைத்து நான் படித்த ஒரு புஸ்தகத்தில் தமிழின் பெருமையைப்பற்றி, தமிழின் இன்பத்தைப்பற்றி எழுதப்பட்ட ஒரு கதையை சொல்லலாம் என்று நினைக்கிறேன். இளங் காதலர்கள் இருவர். இவர்கள் இருவரும் ஒரு நாள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பதாக முடிவு செய்திருந்தார்கள். குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னாலேயே அந்த இளங் காதலி குறிப்பிட்ட இடத்திற்கு போய்விட்டாள். குறிப்பிட்ட நேரம் மாலை ஐந்து மணி என்று வைத்துக் கொள்ளலாம். அந்த இளங் காதலி மூன்று மணிக்கே வந்து விட்டாள். அவளால் பொறுத்திருக்க முடியாமல் முன்னாலேயே வந்து விட்டு அவள் தன்னுடைய காதலனை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறாள்.

காதலன் குறிப்பிட்ட காலத்திற்கு அங்கு வரவில்லை. காதலி இமை கொட்டாமல் காதலனுடைய வரவை எதிர் நோக்கி நின்று, காதலன் வராததினால் அவள் திரும்பி, வீட்டுக்குப் போவதற்காக திரும்பும் சமயத்தில் பின்னால் காலடி ஓசையைக் கேட்டு திரும்பி பார்த்தாள். காதலன் வந்து கொண்டிருக்கிறான். காதலன் தன் பக்கத்தில் வந்ததும் காதலி அவனிடம் கேட்டாள், "ஏ காதலா! (சபையில் சிரிப்பு) சரியான குறிப்பிட்ட சமயத்தில் வருவேன் என்று சொல்லிவிட்டு இப்போது இவ்வளவு நேரம் கழித்து வந்திருக்கின்றாய், ஏன் இவ்வளவு காலதாமதம்" என்று கேட்டாள். அதற்கு காதலன், நான் உன்னை நினைத்துக்கொண்டுதான் வந்துகொண்டிருந்தேன். நான் வந்துகொண்டிருக்கிற பொழுது வழியில் ஒருவர் இன்பத் தமிழில் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்; நான் அதைக் கேட்டுக்கொண்டு அங்கேயே மெய்மறந்து நின்றுவிட்டேன்; அதனால்தான் காலதாமதம் ஆகிவிட்டது என்று சொல்லுகிறான் . . . இவ்விதமாக காதலியை விடவும் காதல் மிகுதி இன்பத்தமிழிடம், எனப் பெருமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் மொழியிலே எல்லாம் நடை பெறவேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். தமிழ் மொழியில் ஆட்சி நடந்தால்தான் குடியரசு ஆட்சியின் லட்சியம் பூர்த்தியானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே இந்த மசோதா கொண்டு வந்ததற்கு என் பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

* **Sri R. KRISHNASWAMI NAIDU:** அவைத்தலைவர் அவர்களே, தமிழ் மொழி ஆட்சி மொழியாக வரக்கூடிய இந்த மசோதாவை நிறைவேற்றி வைக்கும் ஒரு பாக்கியம் நம் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது. இதைக்கண்டு நாம் எல்லோரும் பூரிப்பு அடையும் நன்னாள் இது என்று நினைக்கிறேன். ஏதோ, இதைக்கொண்டு வருவதற்கு கால தாமதம் ஆகிவிட்டது என்றெல்லாம் சொல்லப்பட்டது. முன் நடந்த விஷயங்களை எல்லாம் மறந்துவிட்டு இனிமேல் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக வேலை செய்யவேண்டியதுதான் அவசியம். "போனதற்கு வருந்துதல் வேண்டாம், புன்மை தீர்க்க முயலவும் வாரீர்" என்று பாரதியார் சொல்லியிருக்கிறபடி எல்லோரும் ஒற்றுமையாக இதற்காக பாடுபட முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதாவைக்கொண்டு வந்ததைப்பற்றி வாழ்த்துவதற்காக எனக்கு இங்கு ஒரு பாட்டு தோன்றியது. அதைப் புனைந்து எழுதி வைத்திருக்கிறேன். அந்தப் பாட்டை இந்தச் சபை ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன். இந்த மசோதாவை குறுகிய காலத்திற்குள் தயாரித்து கொண்டு வந்ததற்காக நிதி மந்திரி அவர்களுக்கும் மந்திரிசபைக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு இந்தப் பாட்டை வாசிக்கிறேன்.

"ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தாறும் ஆண்டு டிசம்பர்
மாதம்
ஐயைந்தும் இரண்டும்சேர் தேதிதனில் அழகுமிகு சென்னை
ராஜ்யத்]
தாயின் மொழி தமிழ் தனிலே ஆட்சி செயத் தனிச்சட்ட மியற்றும்
பாக்கியம்
தன்னையடைந்து தனிசிறப்பு பெற்றிருந்த சட்டசபை இறுதிகூட்டம்
போயின நம் குறைகள் எல்லாம் புண்ணியத்தால் தமிழ் அன்னை
அரசுவீற்றுப்
புனித சிம்மாசனத்தமர்ந்தாள். பொங்கு முகத்துடன் மக்கள்
ஆர்ப்பரிக்க
சேமிழையார் மகிழச் சிறுவர் சிறுமியர் களிக்கச் செம்மையார்ந்த
சோதரரே: வாழ்த்துங்கள்! சுதந்திரத்தின் பயன்பெற்றோம்,
வாழ்க வென்றே!

Sri E. L. RAGHAVA MUDALIAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சட்டசபை ஆரம்பித்த முதன்முதலாக இங்கு பல மொழி அங்கத்தினர்கள் இருந்தார்கள். ஆந்திர, கேரள, கர்நாடக சகோதரர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போன பிறகு கொஞ்ச காலம் தாமதமானாலும் இந்த மசோதாவை கனம் நிதி மந்திரி அவர்கள் இப்பொழுது கொண்டு வந்து சமர்ப்பித்ததற்கு அவருக்கு இந்த தமிழ் அகத்தின் சார்பாகவும் தமிழ் நாட்டின் சார்பாகவும், தமிழ் உலகத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்து கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மசோதாவில் பல பல குற்றங்களைக் கண்டு பிடிக்கலாம். பல குற்றங்கள் இருக்கத்தான் இருக்கிறது. பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல் இதை கொஞ்சம் நிதானமாகத்தான் கொண்டு போக வேண்டும். அப்பொழுது தான் நாம் பரிபூரணமான லட்சியத்தை அடைய முடியும். அதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதுதான் மிக மிக நல்லது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மொழி பற்றுதலை மட்டும் கருத்தில் கொண்டு இதைக் கொண்டு வந்து விடக் கூடாது. ஜனநாயக லட்சியத்தை அடைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். பாமர மக்கள் அறிந்து கொள்ளக் கூடிய பாஷையாக இருக்க வேண்டும். அதைக் குறிக்கோளாக மனதில் வைத்துக் கொண்டு இதை பாராட்டுகிறேன். இந்த சட்டசபையில் 12-2 p.m.
முதன் முதலில் தமிழில் பேச ஆரம்பித்தோம். அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகப் பேசி வந்து இப்பொழுது கடைசியில் ஆட்சி மொழியாகக் கொண்டு வரக்கூடிய நிலைக்கு வந்திருக்கிறோம். ஆட்சியை தமிழில் நடத்த வேண்டும் என்று நிர்ணயம் செய்து அதைப் பூரணமாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்துடன் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். நாம் இப்பொழுது ஐந்து வருஷத் திட்டம், பத்து வருஷத் திட்டம் என்றெல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படியெல்லாம் இதற்கு போடாமல் நாம் ஒவ்வொரு வருஷத்திலும் இவ்வளவு தூரம் முன்னேற்றமடைய வேண்டும் என்று ஒரு கொள்கையை நிர்ணயித்துக் கொண்டு அதன்படி முன்னேற்றமடைந்து வரவேண்டும். அதற்கு என்று ஒரு நிரந்தரமான கமிட்டியைப் போட்டு ஒவ்வொரு வருஷத்திலும் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறோம் என்றெல்லாம் பார்த்து அதை பொது மக்கள் எவ்வளவு தூரம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டால் நாம் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பது நன்றாகத் தெரியும். இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாப்படி முதன் முதலாக தாலூகா ஆபீஸ்களில் இதைப் புகுத்தப்போவதாகத் தெரிய வருகிறது. அத்துடன் நிறுத்தாமல் இந்த சட்டசபையிலேயே இனிமேல் யாரும் ஆங்கிலத்திலேயே பேசக் கூடாது என்றும், நடவடிக்கைகள் பூராவும் தமிழிலேயே நடைபெற வேண்டும் என்றும் கொஞ்சம் கூட ஆங்கிலம் இருக்கக் கூடாது என்றும் இங்கே ஆங்கில சுருக்கெழுத்தாளர்கள் இருக்கக் கூடாது என்றும், இவைகளை மனதில் வைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அத்துடன் இந்த ஐந்து வருஷத்திற்குள் இந்த அரசாங்கம் இதைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri AR. A. RM. CHOCKALINGAM CHETTIAR:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்களால் கொண்டு வரப்பட்ட தமிழ் தாய் அரியாசனம் ஏறும் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நான் தமிழ் சொற்பம் படித்தவன், நன்கு படித்தவன் என்று சொல்ல முடியாது. 45 ஆண்டுகளுக்கு முன்பாக திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நமது முதாதையர்கள் வகுத்திருந்த சிறந்த முறையில் சொல்லிக் கொடுக்கப்பட்ட பள்ளிக்கூடத்தில் படித்தவன். அரிச்சுவடி, எண்சுவடி, முந்திரிக் கணக்கு, எண் கணக்கு, இலக்கிய நூல், நன்நூல் போன்ற சிறந்த நீதி நூல்களை ஐந்தாறு ஆண்டுகளில் படித்தேன். நமது பழங்காலத்தில் ஏட்டுச்சுவடிகளைப் படித்து வந்த மாணவர்களில் நான் ஒருவன். அதன் பிறகு ஆங்கில

அந்நிய ஆதிக்கத்தின் கீழ் ஏற்பட்ட சட்ட திட்டங்களின்படி நாம் ஆங்கிலத்தைப் படித்து அவைகளிலேயே நடவடிக்கைகளை நடத்திக் கொண்டு வந்து இன்றைய தினம் அவர்களைக் காட்டிலும் அந்தப் படிப்பில் உயர்ந்து நிற்கிறோம். இனிமேல் தான் நாம் கொஞ்சம் கொஞ்சமாக தாய் பாஷை படிக்க வேண்டும். இன்றைய தினம் தான் நமது தமிழ்த் தாய் அரியாசனம் ஏறி ஆட்சி பீடத்தில் உட்காரப் போகிறாள். இனிமேல் தான் நாம் படிப்படியாக முன்னேற்றமடைய முடியும். நமது நாட்டில் பழம் பெரும் தேச பக்தர்கள்—வ. வே. சி. கல்யாணசுந்தர முதலியார், ராமசாமி பெரியார் போன்றவர்கள் அப்பொழுதிருந்தே தமிழில் மிகவும் திறமையாகவும் அழகாகவும் பேசி தமிழ் மக்களை தேச உணர்ச்சியில் ஈடுபடுத்தி முன்னேற்றமடையச் செய்தார்கள். இதை நாம் பலர் அறிவோம். இன்றைய தினம் நம் தமிழ் தாயை நாம் பீடத்தில் ஏறச் செய்வதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதை நாம் மறக்க முடியாது. பல எதிர் கட்சி அங்கத்தினர்கள் சொன்னார்கள், பல வருஷங்களுக்கு முன்னதாகவே தமிழ் தாய் நமது அரியாசனத்தில் ஏறியிருக்க வேண்டும் என்றும் அந்தக் காலம் கடந்து வருகிறது என்றும் சொன்னார்கள். சமீபத்தில் தான் நம்மை விட்டு கேரள அங்கத்தினர்களும் கர்னாடக அங்கத்தினர்களும் பிரிந்து சென்றார்கள். அதற்கு முன்பு ஆந்தர அங்கத்தினர்கள் பிரிந்து சென்றார்கள். அவர்களை நாம் போகச் சொல்லவில்லை. அவர்களே நம்மை விட்டு பிரிந்து சென்றார்கள். ஆனால் இன்றைய தினம் தான் சரியான காலத்தில், குறைந்த நேரத்தில் இந்தத் தமிழ் தாய் அரியாசனம் ஏறும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தது. இந்த சட்டசபையில் நாம் இருந்து கடைசி கூட்டத்தில் இது வரக் கூடிய ஒரு பாக்கியம் நாம் பெற்றது மகிழ்ச்சிக் குறியதாகும். தமிழ்த் தாயினிடம் சிறந்த பக்தி கொண்ட நமது கனம் நிதி மந்திரி அவர்கள் கடைசியாக இந்தக் கூட்டத்தில் தமிழ் தாய் அரியாசனம் ஏறும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது மிகவும் பாராட்டக் கூடிய ஒன்று. இது வரப்போகிற தேர்தலுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று ஒரு சிலர் சொன்னார்கள். அப்படிச் சொல்வது மக்களை ஏமாற்றுவதான காரியம் என்பது என்னுடைய எண்ணம். முன் சொன்னது போல் இப்பொழுது தான் அதற்குத் தகுந்த நேரம் வந்தது. உண்மையில் சில ஆண்டுகளுக்கு முன்பாகவே திருச்சியில் தமிழில் நிர்வாகம் நடத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்து நடவடிக்கைகளையும் நடத்த ஒரு வாய்ப்பு அரசாங்கம் கொடுத்தது. சென்ற சில கூட்டங்களுக்கு முன்பாக நான் இந்த சட்டசபையில் சொன்னேன், திருச்சியில் தமிழில் நிர்வாகம் சிறந்த முறையில் விளங்க வேண்டுமானால் அங்கே நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டு நடத்தும் அதிகாரிகள் நல்ல தமிழ் தெரிந்த அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்று அன்றைய தினமே சொன்னேன். அதைப் போலத்தான் தமிழ் வார்த்தைகளையும் நல்ல முறையில் அமைத்து நடவடிக்கைகளை நல்ல தமிழ் தெரிந்த ஆர்வமுள்ள, அதிகாரிகளிடத்திலும் நேர்மையான அதிகாரிகளிடத்திலும், அதைக் கொடுத்து எவ்வளவு சீக்கிரமாக எல்லா நடவடிக்கைகளும் தமிழில் வருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்கிறார்களோ அதற்குத் தகுந்தவாறு தான் தமிழ் தாய் நல்ல முறையில் அரியாசனம் ஏற முடியும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது மாணவர்கள் எல்லோரும் பள்ளிகளில் தமிழை அதிக ஆர்வத்தோடு படிக்கிறார்கள். பேசுகிறார்கள். ஆனால் வெளியில் அவர்கள் செல்லும் இடங்களில் அவர்கள் ஆங்கிலத்தில் மோகம் கொண்டு அதில் பேசுகிறார்கள். ஏனென்றால் அவர்களை ஆங்கில மோகம் இன்னும் விடவில்லை. வெளியில் அவர்கள் செல்லும்போதும் அவர்கள் லேசாக ஆங்கிலத்தில் தான் பேசுகிறார்கள். அப்படி இல்லாமல் மாணவர்கள் பிடிவாதமாக தமிழில் தான் பேச வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் தமிழ் முன்னேற்றமடைவதற்கு ஏதுவாக இருக்கும். நாம் இந்த சட்டசபையிலேயே பார்த்திருக்கிறோம். ஆந்தரர்கள் இருக்கும்போது அவர்கள் பிடிவாதமாக தெலுங்கிலேயேதான் பேசினார்கள். அவர்கள் பிரிந்து சென்ற பிறகு மலையாள அங்கத்தினர்கள் கூட பிடிவாதமாக மலையாளத்திலேயேதான் பேசி வந்தார்கள்.

அதைப்போலவே தமிழ் அங்கத்தினர்களும் அப்படி பிடிவாதமாக பேசவில்லை என்பது தான் என்னுடைய வருத்தம். எனக்குத் தமிழ் தான் தெரியும் என்ற முறையில் நான் சந்தோஷப்பட்ட போதிலும் வருங்காலத்தில் தமிழுக்குள்ள சீறும் சிறப்பையும் வருங்கால சந்ததியார்கள் அனுபவிக்கப் போகிறார்கள். இன்றைய தினம் தமிழ் நாட்டில் தமிழ் மட்டும் தெரிந்த ஒரு சமூகம் இருக்கிறது என்று சொன்னால் அது நாட்டுக்கோட்டை செட்டியார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இன்றைக்கு ஒரு சிலர் ஆங்கிலம் படிக்கிறார்கள். வெளி நாட்டில் எல்லோரும் தமிழ் தான் படிப்பார்கள், எழுதுவார்கள், கணக்கு எல்லாவற்றையும் கூட தமிழ் எண்ணில்தான் எழுதி வருவார்கள். அதைக் கண்டு பல நிபுணர்கள் கூட மயங்கி இருக்கிறார்கள். நமது நேத்தாஜி அவர்கள் கூட இப்படி எழுதுவதைப் பார்த்து சந்தோஷப்பட்டு அவர் போராடிய காலத்தில் செட்டியார்களை பாங்கில் அமர்த்தினார். அதைப் போலவே நமது அரசாங்கம் அவர்களை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்று தமிழ் தாய் அரியாசனம் ஏறும் காலம் வந்து விட்டது. அது ரொம்பவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த சட்டசபையில் தமிழ் தாய் அரியாசனம் ஏறும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறதைக் கண்டு தலைவர் அவர்களுக்கு என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI M. PALANIYANDI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று கொண்டு வந்திருக்கும் மசோதாவின் மூலம் தமிழ்தாய் ஆட்சி பீடத்தில் அமருகிறாள் என்பதைக் கேட்டதுமே நமது நாட்டு மக்களெல்லோரும் பூரிப்படைவார்கள். கடந்த அறுபது ஆண்டு கால போராட்டத்திற்குப் பிறகு இன்றைக்கு தமிழ் ஆட்சி மொழியாகிறது என்று நமது நிதியமைச்சரவர்கள் சொன்னார்கள். நமது விடுதலைப் போராட்ட காலங்களிலே ஆங்கிலத்திலேயே பேசி, அதை தமிழில் மொழி பயர்த்து வந்தார்கள். காலம் சென்ற கல்கி அவர்கள், "திரு. வி. க." அவர்கள் தான் முதன் முதலாக தமிழிலே அழகாகப் பேச முடியும் என்பதை நிருபித்ததாகச் சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகு நம் நாட்டிலே எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மேடைகளிலே பிரசங்கம் செய்யும்பொழுது அழகாக தமிழ் பேச முற்பட்டார்கள். அன்று ஆரம்பித்தது இன்று ஆட்சி மொழியாகி விட்டது. மேலும் கனம் நிதி அமைச்சரவர்கள் இந்தப் போராட்டம் முடியவில்லை என்றும், இப்பொழுது பூ மலர்ந்திருக்கிறது என்றும் அது காயாகவும், கனியாகவும் வளர வேண்டுமென்றும், கல்லூரிகளிலும் தமிழ் மொழி போதனை மொழி ஆக வேண்டுமென்றும் சொன்னார்கள். இந்த ஐந்தாண்டு கால முடிவிற்குள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக தமிழ் நாட்டு மக்கள் குதூகலமடைவார்கள். ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால் மக்களுடைய தாய் மொழியிலேயே எல்லா நடவடிக்கைகளும் நடக்க வேண்டும். தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருந்து மேலும் மேலும் வளர்ந்து உலகத்திலேயே ஒரு சிறந்த மொழியாக இயங்க வேண்டுமென்று வாழ்த்துக் கூறுகின்றோம். இதைக் கொண்டு வந்த நமது நிதியமைச்சரவர்களுக்கும் நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். செந்தமிழ் என்பது "முருகன்" என்று சொல்லுகிறார்கள். அப்பேர்பட்ட தமிழிலே பேசி, பாடி, பண்பாடி தமிழை வளர்த்த நாடு இது. தமிழ் தாய் ஆட்சி பீடத்தில் இருந்து கொண்டு மேலும் மேலும் தமிழ் மொழியை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். 12-30 p.m.

SRI M. P. PERIYASWAMY: கனம் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழி மசோதாவைக் கொண்டு வந்ததற்காக கனம் நிதியமைச்சரவர்களைப் பாராட்டுகிறேன். 1938-ம் வருடத்தில் Senate House-ல் சட்டசபை கூடிற்று. அப்பொழுது ஆந்திர, மலையாள, கன்னட, தமிழ் மெம்பர்கள் எல்லோரும் சேர்ந்திருந்தார்கள். அதற்குப் பிறகு கோட்டையில் சபை நடந்தது. அப்பொழுது அங்கத்தினர்கள் ஆங்கிலத்தில் பேசினார்கள். பிறகு 1952-ல் சபைக் கூட்டங்கள் இந்தக் கட்டிடத்தில்

நடைபெற்றன. இங்கு வந்த பிறகுதான் எல்லா பாஷைகளிலும் பேசக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்தக் கட்டிடம் மிகவும் அதிருஷ்டம் வாய்ந்தது என்பதுதான் என் அபிப்பிராயம். 1953-ல் ஆந்திரர்கள் நம்மை விட்டுப் பிரிந்தார்கள். சென்ற நவம்பர் மாதம் மலையாளிகளும், கன்னடியர்களும் இச்சபையை விட்டுச் சென்றார்கள். ஒன்றாக இருந்தவர்கள் பிரிந்த போதிலும் கூட இந்தக் கட்டிடம் மேன்மை வாய்ந்தது என்பதில் சந்தேகமேயில்லை. தமிழ் ஆட்சி மொழியாகும் மசோதா இந்தக் கட்டிடத்தில்தான் நிறைவேற்றப் படுகிறது. ஆகவே எக்காரணத்தை முன்னிட்டும், சட்டசபையை எந்த கட்டிடத்திற்கும் மாற்றாமல் இங்கேயே தொடர்ச்சியாக இருக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

*Sri S. RAMASWAMY NAIDU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தமிழன் தமிழ் நாட்டிலே ஆட்சி புரிய புகுந்தவுடன் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்குவதற்கு இன்றைக்கு முன் வந்திருக்கிறான். இந்த மசோதா காலம் தாழ்ந்து வரவில்லை. சரியான காலத்தில்தான் வந்திருக்கிறது. தமிழன் ஆட்சி செய்யும் நேரத்திலே தமிழ் மொழியிலேயே ஆட்சி புரிய வேண்டுமென்று சொல்லுகிறோம். எடுத்த எடுப்பிலேயே எல்லா இடங்களிலும் தமிழ் புகுத்தப்படவில்லை என்பதைப் பற்றி நாம் சிறிது கவலைப் படுகிறோம். தமிழன் வீட்டிலே பிறந்த ஒரு குழந்தைக்குக்கூட நன்றாக தமிழ் பேசுவதற்கு ஐந்து வருஷ காலமாகிறது. ஆகவே இயற்கையை அனுசரித்து நாமும் கொஞ்சம் கொஞ்சமாக எல்லோருக்கும் பயிற்சி அளித்து, கிராம தாலூகா கட்டத்திலிருந்து, மேலே சட்டசபை நடவடிக்கைகள் வரை, எல்லாவற்றையும் தமிழிலேயே நடத்தி ஆட்சி புரிய வேண்டும்.

காங்கிரஸ் சர்க்கார் பல நல்ல காரியங்களை மக்களுக்கு வகுத்த தருணத்தில் செய்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தாற் போல், இன்றைக்கு தமிழிலேயே ஆட்சி புரிய வேண்டும் என்ற சட்டத்தை இயற்றுகிறோம். இது எல்லோராலும் வரவேற்கக் கூடிய சட்டம். வரவேற்பைத் தவிர வேறு ஒன்றையும் எதிர் பார்க்க முடியாத ஒரு சட்டம். தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற ஆர்வம் எல்லோருக்கும் இருக்கிறது, எல்லோரும் ஒத்துழைத்து தமிழை ஆட்சி மொழியாக்கி ஆங்கிலத்தை அறவே மறக்க வேண்டும். ஊர் பெயர், தகப்பனார் பெயர், முதலியவற்றைக் குறிக்கும் எழுத்துக்கள் கூட ஆங்கிலத்தில் இருக்கக்கூடாது. உதாரணமாக ஆங்கிலத்தில் "S" என்று இருந்தால் தமிழில் "எஸ்" என்று எழுதுகிறார்கள். நாம் சொல்வதும், செய்வதும் தமிழிலேயே இருக்க வேண்டும். சட்டசபைக்கு வருகிறவர்களும் தமிழ் மொழியிலேயே பேசி எல்லா நடவடிக்கைகளையும் தமிழிலே நடத்த முற்படவேண்டும்.

எல்லோரும் விரும்பக்கூடிய இந்த மசோதாவை கொண்டு வந்ததற்காக நமது சர்க்காரைப் பாராட்டுகிறேன். குறிப்பாக, நமது சட்டசபைக் கட்சித் தலைவர் ஸ்ரீ சுப்பிரமணியத்திற்கு நமது பாராட்டுதல் உரித்தானது. தமிழ் வளர்ந்து வந்தது. வளர்ந்த தமிழ் ஓரளவிலே நின்று போய் விட்டது. தமிழ் வளர வேண்டுமென்று பாரதியார் ஆசைப்பட்டார். மேலும் மேலும் தமிழை வளர்க்க வேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் இருக்க வேண்டும். தமிழை தமிழ்த் துறையிலேயே வளர்க்க வேண்டும். இது தவறு என்று சிலர் சொல்லுவார்கள். இன்று கல்லூரிகளில் போதிக்கப்படும் உயர்தரக் கல்வியானது தமிழை வளர்க்கக் கூடிய முறையில் அமையவில்லை என்று நமது கல்வி மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். இப்பொழுது ஆங்கிலத்தில் "B.A." "M.A." என்ற பட்டம் வழங்குவது போல் தமிழிலேயே பட்டத்தைக் கொடுத்து தமிழிலேயே தான் எல்லாப் பாடங்களையும் போதிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்ற மொழிகள் எல்லாம் ஆசைப்பட்டு படிக்கிற மொழிகளாகவே இருக்க வேண்டும். தமிழ் தான் எல்லாக் கட்டங்களிலும் போதனா மொழியாக இருக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும். அப்பொழுதுதான் உண்மையிலேயே தமிழ் வளர முடியும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

*Sri S. KRISHNASWAMY PADAYACHI : உதவி சபாநாயகர் அவர்களே; இன்று நமது கல்வி மந்திரியானவர் நீதி அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் இருந்து, தமிழை ஆட்சி மொழியாக்கும் மசோதாவைக் கொண்டு வந்தது தமிழ் நாட்டுக்கே மகிழ்ச்சியளிக்கக் கூடிய காரியமாகும். இதுமட்டுமல்ல, ஐந்தாண்டுகளிலே சட்ட சபையில் நாம் இதுவரை செய்து வந்த காரியங்களெல்லாவற்றையும் விட இப்பொழுது இந்த அரும் பணியைச் செய்ய முன் வந்திருப்பதற்காக இந்த சட்டசபையில் மட்டுமல்ல, வெளியிலே கூட மக்கள் போற்றுவார்கள். மற்றெல்லாக் காரியங்களையும் விட இது தான் சிறந்த காரியமென்று எல்லோரும் கருதுவார்கள். 12-40 p.m.

தமிழை இது வரையில் ஆட்சி மொழியாக்க முடியாமல் இருந்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. ஆனால், இனி இந்த நாடு தமிழ் நாடு என்று அழைக்கப்படுவதற்கு அறிகுறியாக இப்பொழுது தமிழ் ஆட்சி மொழியாக வந்திருப்பதற்காக நாம் அவரை மிகவும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். இதைப் பரீட்சார்த்தமாக செய்வதாக சொல்கிறார்கள். அப்படியில்லாமல், தீவிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இதுவரை இந்தக் காரியத்தைச் செய்ய முடியாமலிருந்ததற்கு இன்னொரு காரணம் ஆட்சி மொழியாவதற்குத் தகுந்த கலைச் சொற்கள் தமிழிலே ஏராளமாக தொகுக்கப்படாததுதான் என்று அவர் பல இடங்களிலே சொல்லி வந்திருக்கிறார். ஆனால், இப்பொழுது அப்படிப்பட்ட தமிழ் சொற்களையெல்லாம் தொகுக்கப்பட்டிருப்பதால், ஆட்சியைச் சிறந்த முறையில் தமிழிலே நடத்துவதற்கு பயன்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறுகிய நேரத்தில் பேசி முடிக்க வேண்டுமென்று உதவி சபாநாயகர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாலும், அநேக அங்கத்தினர்கள் பேசவேண்டிய காரணத்தாலும், இந்த அவகாசம் கொடுத்ததற்காக உதவி சபாநாயகருக்கு வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டும், நமது நிதி மந்திரி அவர்கள் நல்ல முறையிலே துணிந்து இந்த மசோதாவைக் கொண்டு வந்ததற்காக அவருக்கு பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, நம்மை சட்டசபைக்கு அனுப்பியுள்ள லட்சக்கணக்கான மக்கள் நம்மை இன்று வெளியிலே பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொண்டு இத்துடன் நிறுத்திக்கொள்கின்றேன்.

*Sri P. CHELLATHURAI : மதிப்பிலே மிகச் சிறந்த மன்றத்தின் துணைத்தலைவர் அவர்களே ! மதிப்பும், மதியும் ஒருங்கே நிறையப் பெற்ற நிதி அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் நம் அரும் தாய் மொழியினை ஆட்சி மொழியாக்கும் தீர்மானத்தை இச்சபையிலே கொண்டுவந்தமைக்காக இச்சபையிலிருக்கும் உறுப்பினர்கள் மாத்திரமல்ல ; உலகத்திலே எங்கெல்லாம் தமிழ் பெருமக்கள் இருக்கிறார்களோ அவர்களெல்லோரும் நமது நிதி அமைச்சரவர்கள் ஆண்டவன் அருளால் நீண்ட நாள் இந்த உலகத்திலே வாழ்ந்து, தமிழ் பெரும் அன்னைக்கு அரும் பணி பல புரிந்து புகழ் பெறவேண்டும் என்று வாயார வாழ்த்துவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஐந்து நிமிடத்திற்குள்ளே நான் எனது பேச்சினை முடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலே இருப்பதினால், குறுகிய அளவிலே என்னுடைய உரையை முடித்துக் கொள்ள வேண்டியவனாய் இருக்கிறேன்.

DEPUTY SPEAKER : இரண்டு நிமிஷங்களுக்குள் உங்கள் உரையை முடித்துவிட வேண்டும்.

*Sri P. CHELLATHURAI : பல உறுப்பினர்கள் பேச்சிலிருந்து வேறுபட்ட முக்கியமான கருத்தைச் சொல்கிறேன். அது அவசியம் என்று அமைச்சர் குழுவினர் நினைத்தால், ஆராய்ந்து பார்த்து அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான விண்ணப்பம். நாட்டின் வரலாற்றிலேயே ஒரு புரட்சிகரமான திட்டம் இது.

ஆகவே, இந்தப் புனித நன்னாளினை அரசாங்கத்தின் விடுமுறை நாளாக ஆக்குதல் வேண்டுமென்பது எனது கருத்து; இன்று இப்பொழுதே உத்திரவு பிறப்பித்தல் இயலாது, நாளைய தினம் விடுமுறைக்கு ஏற்பாடு செய்தல் நலமாகும். அது மட்டுமல்ல, ஒவ்வொரு ஆண்டிலும் டிசம்பர் மாதம் 27-ந் தேதி தமிழன்னைக்கு முடிசூட்டிய விழாவாக விடுமுறை கொண்டாட ஆணையினை அரசாங்கத்தினர் சுற்றறிக்கை மூலமாக பிறப்பிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

கல்வித் துறையிலே போதனா மொழி பற்றி பெரும் கஷ்டம் இருப்பதாக அமைச்சரவர்கள் பிறிதொரு இடத்தில் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். எனக்கு அதைச் சரியான விதத்திலே புரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லையோ என்னவோ, அரசாங்கத்தின் ஆணைக்கு அடிபணிந்து போகும் நிலையில் இல்லையா கல்வி நிலைய அதிபர்கள்? அப்படித்தானா அரசியல் சட்டம் இருக்கிறது? எவ்வாறு இருந்தாலும் அரசாங்கம் சொல்வதை அப்படியே ஒப்புக்கொள்ளும் நிலையில் இந்தக் கல்வி நிலைய ஆணையாளர் இருக்கிறார்களா என்பதை இனிமேல்தான் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கும் வற்புறுத்தலுக்கும் இவர்கள் இணைந்துபோகக் கூடிய நிலை இல்லாமற் போகுமானால், கண்டிப்பாக பெரும் கிளர்ச்சி, அன்பு முறையில் ஏற்பட்டு, கல்வி நிலைய ஆணையாளரை அடிபணிய வைக்கும், இந்த நாடு என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

எதிர்க் கட்சித் தலைவர் பேசும்போது, எந்த குறிப்பிட்ட காலத்திற்குள் தமிழ் மாநில மட்டத்தில் ஆட்சி மொழியாக வேண்டுமென்பதற்கு தேதி குறிப்பிட்டுவிட வேண்டுமென்று சொன்னார்கள். தவணை குறிப்பிடாத வகையிலே தமிழை ஆட்சி மொழி ஆக்குவது என்ற தீர்மானம் இருப்பது ஏதோ மக்களை ஏமாற்றும் வித்தை என்று அவர்கள் நினைக்கிறார்கள். நாட்டு மக்களுக்கு அமைச்சர் குழுவின் நல்லெண்ணத்திலே ஒரு எள்ளத்தனை ஐயப்பாடும் இல்லை என்பதை நான் உறுதியாகச் சொல்லி, இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய உரையை இத்துடன் முடிக்கின்றேன்.

Sri G. GOVINDAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சரவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகின்றேன். இரண்டு நிமிஷங்களில் பேச வேண்டுமென்றிருக்கிறீர்கள். நான் ஒரு நிமிஷத்திலேயே சொல்லி முடிக்கத் தயாராய் இருக்கிறேன். உதாரணமாக, இன்றைய தினம் தமிழ் மொழி ஆட்சி மொழியாக வந்ததற்கு இங்கே சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரையும் விட நான் அதிகமாக சந்தோஷப்பட வேண்டும். காரணம் என்னவென்றால், நான் பள்ளிக்கூடத்திலே படிக்காதவன். பள்ளிக்கூடத்தில் படிக்காதவனாகிய என் போன்றவரும் சட்டசபை அங்கத்தினராக வந்து பெருமைப்படுவதற்காக காங்கிரஸ் கட்சிக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். சேதுபதி மன்னரவர்கள் தமிழ்நாட்டிலே தமிழை உற்பத்தி பண்ணின பரம்பரையில் வந்தவர்கள். பாண்டித்துரை மன்னர் காலத்திலிருந்தே முத்தமிழ்ச் சங்கத்தின் மூலமாக தமிழை வளர்த்த பரம்பரையைச் சேர்ந்த இராமநாதபுரம் இராஜா அவர்கள் இன்று இந்தச் சபையில் அமைச்சராக இருக்கும்போதே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு நிதி அமைச்சர் கனம் திரு. சுப்பிரமண்யம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழிலே வீரத் தமிழ் என்று சொல்கிறார்கள். தமிழ் பாஷையைத் தவிர வேறு எந்த பாஷையிலும் 'வீரத் தமிழ்' என்ற வார்த்தை இல்லை. நான் வீட்டிலே பேசுவது தெலுங்கு. தமிழ் பேசுபவர்களைக் காட்டிலும் வேறு பாஷையாகிய தெலுங்கு பேசுபவர்களாகிய நாங்கள் தமிழை நன்றாக உணர்ந்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்காக தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இத்துடன் என்னுடைய உரையை நிறுத்திக் கொள்ளுகிறேன்.

Sri K. PARTHASARATHY: உதவித் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய ராஜ்யத்திலே தமிழை ஆட்சி மொழியாக்க வகை செய்யும் இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்காக நம்முடைய சர்க்காரையும் நம்முடைய நிதி அமைச்சரவர்களையும் மனமாற வாழ்த்திப் பாராட்டுகின்றேன். இந்தச் சட்டமானது வந்த போதிலும் அதை அமுலாக்குவதிலே சீராகப் பார்த்து நல்ல முறையிலே மக்களுக்குப் பயன்படும் வகையிலே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு தமிழ் மொழி ஆட்சி மொழியாக்கப்படவேண்டும். அதற்காகக் கீழேயிருந்து அதாவது தாலுக்கா காரியாலயத்திலிருந்து மட்டும் அதைத் துவக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. என்னுடைய எண்ணத்திலே என்ன தோன்றுகிறதென்றால், தாலுக்கா காரியாலயத்தோடு மட்டும் நிற்காமல், ஜில்லா காரியாலயத்திலிருந்து செய்தால் ஒன்றும் கெட்டு விடாது என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்று கேட்டால், ஜில்லா அளவிலே கூட ஒரு சில வருஷங்களுக்கு முன்பு வெள்ளைக்காரர்கள் ஜில்லா கலெக்டர்களாகவும், சப் கலெக்டர்களாகவும் இருந்தபோது கூட தமிழிலேயே நிர்வாகம் நடந்து வந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1940-ம் ஆண்டுக்கு முன்பு வரை ஜில்லா கலெக்டர் காரியாலயத்திலிருந்து வந்த கடிதங்களில் தமிழிலேயே உத்தரவுகள் இருந்திருக்கின்றன என்பதை இன்று நமது சட்டசபையில் இப்பொழுது தமிழைப் பற்றிப் பேசும் நமது அங்கத்தினர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். ஜில்லா காரியாலயத்திலிருந்தே தமிழின் மூலமாக உத்தரவுகள் இருக்கின்றன என்பதினால், இப்பொழுதும் ஜில்லாவிலிருந்து நன்றாகத் துவக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஆகவே, ஜில்லாவிலிருந்து தமிழைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழின் சிறப்பைப் பற்றியும், பெருமையைப் பற்றியும் பாரதியார் பாடியிருக்கிறார். தமிழ் எப்படி ஆட்சி மொழியாக இருந்து விலகிவிட்டது என்பதைச் சிந்தித்துப் பார்ப்போமேயானால் உண்மையிலேயே வருத்தத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. நாட்டினுடைய வளர்ச்சிக்கும், நாகரீகத்தினுடைய வளர்ச்சிக்கும், விஞ்ஞானத் துறையிலே வளர்ச்சிக்கும் தமிழ் மொழி திறமையாகச் செயல்படக் கூடிய முறையிலே மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய முறையிலே நம்முடைய தமிழிலே இயங்கக் கூடிய செயல்களை மாற்றி அமைத்துக் கொள்ளாததுதான் இன்றைய நிலைக்குக் காரணம். தமிழ் டைப்ரைடிங், தமிழ் சுருக்கெழுத்து, இவைகளெல்லாம் விரைவாக முன்னேறாததால் அநேக இடங்களிலே தமிழ் உபயோகப்பட்டு வந்த இடங்களிலிருந்து தமிழ் வெளியேற்றப்பட்டுவிட்டது என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆகையால் இன்று அங்கத்தினர்கள் பேசும்போது அந்தத் துறையிலே விரிவாக முன்னேற வேண்டுமென்று குறிப்பிட்டது, அவர்களுடைய பொறுப்பை உணர்ந்திருப்பதைக் காட்டுகிறது. அதற்காக நிச்சயமாக சர்க்கார் உடனடியாக ஆவன செய்யுமென்று நம்புகிறேன்.

Sri K. ARANGANATHAN: பெருந்தகை உதவி சபாநாயகர் அவர்களே, இன்று சரித்திரத்திலேயே மிகவும் முக்கியமான நாள். சட்டசபைக்கு மாத்திரமல்ல தமிழர்களுக்கே மிக முக்கியமான நாள். இப்பொழுது நவம்பர் முதல் தேதியன்றுதான் தமிழ் அங்கத்தினர்கள் அத்தனைபேரும் சேர்ந்து ஆட்சி நடத்தும் ஒரு நல்ல நிலைமை ஏற்பட்டது. ஏற்பட்டவுடனே சட்டசபையின் முதல் கூட்டத்திலேயே நமது கல்வி அமைச்சரவர்கள் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கும் இந்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதானது நமது கல்வி அமைச்சருக்கு தமிழ் மீது இருக்கும் பற்றைக் காட்டுகிறது. எல்லாக் கட்சியினரும் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க தமிழை ஆட்சி மொழியாக்கும் மசோதாவைக் கொண்டுவருவதன் மூலம் தமிழுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் ஏற்படுகிறது என்பதைக் கேட்கும்போது அதற்காக நிதி அமைச்சரவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

தமிழ் மொழி சிறந்த மொழி என்று பேசிவிட்டார்கள். இடையிலே கனம் சகோதர அங்கத்தினர் ஒருவர் பேசும்போது, 'சைக்கிள்' 'மோட்

டார்' போன்ற ஆங்கில வார்த்தைகளை அப்படியே தமிழில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி அவசியம் இல்லை. தமிழ் மொழியைப் புகுந்து ஆராய்ந்து பார்த்தால் அதில் நல்ல வார்த்தைகள் இருக்கின்றன. அவைகளை எடுத்துக் கொள்ளலாம். ஆரம்பத்தில் சிரமமாக இருந்தாலும், ஐந்தாறு மாதங்களில் பழக்கமாகி எல்லோரும் சந்தோஷமாகப் புரிந்துகொள்ளக்கூடிய அளவு தமிழ் வளர்ந்துவிடும். ஆகையால், சிறந்த தமிழ், நல்ல தமிழ், நமது சகோதர அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்ற கன்னித் தமிழ் ஆட்சி மொழியாக வர வேண்டுமென்ற முயற்சியிலே அதற்கு வேண்டிய முறையிலே அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு பெருமைப்படுகிறேன்; பூரிப்பு அடைகிறேன்.

நமது சகோதர அங்கத்தினர் திரு. பார்த்தசாரதி அவர்கள் பேசும்போது தாலூகா காரியாலயத்திலிருந்து மாத்திரமல்லாமல் ஜில்லாக் காரியாலயங்களிலிருந்து கூட தமிழ் மொழியை ஆட்சி மொழியாக நடத்தலாமென்று குறிப்பிட்டார்கள். அந்த யோசனை மிகவும் வரவேற்கத் தகுந்தது. கூடிய சீக்கிரத்தில் அந்த நிலை ஏற்படும் அளவுக்கு நமது கல்வி அமைச்சரவர்கள் சிறந்த தொண்டு செய்து, நமது தமிழ் மொழிக்கு சிறந்த முக்கியத்துவத்தை உடனே கொடுத்து, இன்றைக்கு முடிசூட்டு விழா நடத்துவதை இன்றைக்கு எல்லா இடங்களிலும் ஏற்றுக்கொண்டு சிறந்த மரியாதை கொடுக்கும் அளவுக்கு நாடு முழுவதும் தமிழில் நடைபெறவேண்டுமென்ற நிலைமையை உண்டாக்கும்படி நமது கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்வதோடு கூட அவர் கொண்டுவந்த மசோதாவை ஆதரித்து, அவரையும் பாராட்டி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

12-50 p.m. **Sri S. KANDASWAMY KANDAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று சபை முன்பு கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை நான் ஆதரித்து, அதனால் நாட்டிற்கு என்ன பயன் இருக்கிறது என்பதைப் பற்றிப் பேச முன்வந்திருக்கிறேன். இந்த சட்டசபை தோன்றிய பிறகு இரண்டாவதாக பேச எனக்கு உரிமை கிடைத்தபோது, ராஜாஜி அவர்கள் இந்த சட்டசபையில் இருக்கும் காலத்தில் " தமிழை யார் ஆட்சி மொழியாக கொண்டுவருகிறார்களோ, அவர்கள் நீடூழி, அதாவது உலகம், சமுத்திரம், கதிரவன், சந்திரன் இவைகளெல்லாம் உள்ள வரையில் வாழவேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்" என்று சொன்னேன். ஆனால், இப்பொழுது இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கும் நிதி அமைச்சர் அவர்களும், மற்ற மந்திரிகளும், இங்கேயுள்ள நண்பர்களான மெம்பர்களும் அந்தப் பலனை அடைந்துவிட்டார்கள். தமிழினால் என்ன பலன் என்பதைப் பற்றியும், தமிழின் பெருமையைப் பற்றியும், பலர் பேசினார்கள். தமிழை நம் நாடு இழந்துவிட்டதினால் என்ன நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றி பேச எனக்கு விருப்பம். அதாவது, அன்னிய பாஷை . . .

(உதவி சபாநாயகர் இந்த சமயத்தில் மணியை அடித்தார்.)

Sri N. RATHINA GOUNDER : அறிவும், ஆற்றலும், அனுபவமும் நிறைந்த அவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தலைமையிலே இன்று தமிழ் நாட்டிலே தமிழ் மொழியானது ஆட்சி மொழியாவது பற்றி முதலில் தங்களைப் பாராட்டுகிறேன். முதன்முதலாக தங்களுக்கு நன்றி செலுத்துவதன் காரணம் என்னவென்றால், இதற்கு முன்னால் அவைத் தலைவர்களாகப் பலர் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சீரும் சிறப்பும் நிறைந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. தங்கள் தலைமையின்கீழ் இந்தத் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்த தமிழ் மொழியை ஆட்சி மொழியாகச் செய்யும் மசோதா கொண்டுவரப்படுவதால், முதலில் தங்களை மெச்சுகிறேன். இரண்டாவதாக, ஆற்றல் நிறைந்த நமது நிதி அமைச்சர் அவர்களை மெச்சுகின்றேன். தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கியதற்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். திருவள்ளுவர் தமிழில் குறள் இயற்றியிருக்கிறார். கம்பர் தமி

ழில் கவி பாடியிருக்கிறார். அறிஞர் அண்ணா தமிழுக்குப் புத்துயிர் அளித்திருக்கிறார். ஆங்கிலத்தில் பேசினால் அவமானமாக இருக்கும் என்பதை அறிஞர் அண்ணா உணர்த்தியிருக்கிறார். "அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் அடுத்த சபையில் அங்கத்தினர்களாக வரக் கூடும். நீங்களும் வாரீர். நாம் எல்லோருமாகச் சேர்ந்து தமிழ்நாடு என்று பெயரிடுவோம்" என்ற வாய்ப்பினை அளித்த அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, தமிழ் மொழி ஆட்சி மொழி ஆவதை வரவேற்று உங்களைப் பாராட்டுகிறேன். வணக்கம்.

***Sri A. GOVINDASWAMY NAYAGAR**: அன்புள்ள உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ் அன்னையை அரியணையில் ஏற்றும் இந்த நன்னாளைப் போற்றி மகிழ்கின்ற இந்த நேரத்திலே இந்த மசோதாவைக் கொண்டுவந்த நிதி அமைச்சரவர்களைப் பாராட்டாமல் இருப்பதற்கில்லை. தமிழ் மொழி சீர்குலைந்ததற்குக் காரணம் அன்னிய மொழியான ஆங்கிலமும் வட மொழியான ஹிந்தியும்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. நமது தமிழ் மொழி அழிந்திருக்க அன்னிய மொழி ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்துப் பல தலைவர்கள் உயிர் நீத்தார்கள். மறைமலை அடிகள், அருணகிரிநாதர், திரு. வி. க. போன்றவர்களை அதற்காக நான் பாராட்டுகிறேன். இது விஷயமாக உயிர் நீத்தவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கலெக்டருக்குப் பதிலாக 'தண்டல் நாயகம்' என்ற வார்த்தை தேவையில்லை என்று ஒரு கூட்டத்தில் நமது அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கூறினார்கள். தண்டல் நாயகம் என்பது தவறான வார்த்தை அல்ல. தமிழ் மொழியில் அப்பேர்ப்பட்ட வார்த்தைகளை விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். திருச்சியில் தமிழ் ஆட்சி முறை சரியாக நடைபெறாததின் காரணம் தமிழில் ஆர்வம் இல்லாதவர்களையும் நல்ல தமிழ் தெரியாதவர்களையும் திருச்சியில் அதிகாரிகளாக நியமித்திருப்பதுதான். தாலூகா ஆபீசில் மட்டுமல்ல, கலெக்டர் ஆபீஸ், நீதி மன்றம், சட்ட மன்றங்கள்முதலிய எல்லா இடங்களிலும் தமிழ்தான் இடம் பெறவேண்டும். அதற்கான வழிவகை செய்ய வேண்டும்.

தமிழ் ஆட்சி மொழியாகப் போகும் இந்த நேரத்தில் நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கவில்லை என்ற குறை மட்டுமல்ல, திருத்தணியிலுள்ள தமிழ் மக்களும் நாஞ்சில் நாட்டிலுள்ள தமிழ்ப் பகுதிகள், கேரளத்தில் இப்பொழுது சேர்ந்துள்ள தேவிகுளம் பீர்மேடு இவைகளிலுள்ள மக்களும் தமிழ் நாட்டுடன் சேரமுடியவில்லையே என்று கண்ணீர்விடுகிறார்கள். அவர்களையும் தமிழ் மொழி ஆட்சி மொழியாக செயல்படும் இந்தப் பகுதியோடு சேர்ப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். தமிழ்நாடு என்று எப்பொழுது வேண்டுமென்றாலும் பெயர் வைத்துக் கொள்ளலாம் என்று நிதி அமைச்சர் திரு. சுப்ரமண்யம் அவர்கள் சொன்னார்கள். சட்டசபை கூட்டம் முடிவடைந்துவிட்டாலும்கூட, தங்கள் ஆட்சி முடிவதற்குள்ளாவது தமிழ்நாடு என்று பெயர் வைப்பதாக அவர் பிரகடனம் செய்துவிட்டுப் போனால் தமிழ்நாடு என்றென்றும் அவருக்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri A. RATNAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ் மொழி ஆட்சி மொழியாவதை நான் வரவேற்கிறேன். தோழர் விநாயகம் அவர்கள் கொண்டுவந்த காலவரையறைத் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். காரணம், ஒரு வரையறை இருந்தால்தான், தமிழ் ஆட்சி மொழிக்கு ஆக்கம் அளிப்பதாகும். ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்று அதிக மார்க்கு வாங்குகிறவர்களுக்கு உத்தியோகம் வழங்காமல், தமிழில் பயிற்சி பெற்றவர்களுக்கு உத்தியோகம் வழங்க முன்வரவேண்டும். மேலும் சுதேசமித்திரன் அச்சகத்திலே மோனோ டைப் போன்ற முன்னேற்ற மெஷின்களுக்கு உபயோககரமான முறையில் எழுத்துக்களை நூதன முறையில் சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள். அம்மாதிரி எழுத்துக்களுக்கும் டைப்ரைட்

டர் முதலியவைகள் வாங்குவதற்கும் அரசாங்கம் ஆக்கம் அளிக்க வேண்டும். ஆங்கிலத்தைப் போல் தமிழிலும் சுருக்கெழுத்தாளர்கள் எழுத்துக்களின் ஓசைகளை துரிதமாக குறிப்புகள் மூலம் எழுதுவதற்கும் வழிவகை செய்யவேண்டும். இவைகளெல்லாம் சீக்கிரமாகச் செய்து அலுவலகங்களிலே காரியங்கள் துரிதமாக நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒரு குழு ஏற்படுத்தி அதற்கு அரசாங்கம் ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவரும் நேரத்திலே இந்த நாட்டிற்கு தமிழ் நாடு என்று பெயர் சூட்டவேண்டுமென்று எல்லா அரசியல் கட்சிகளும் விரும்புகின்றன. பொதுமக்களும் அவ்வாறே ஆசைப்படுகிறார்கள். காங்கிரஸ் கட்சி கூட தமிழ்நாடு காங்கிரஸ் என்றுதான் பெயர் வைத்துக்கொண்டிருக்கிறது. இதை உடனடியாக சபை முன்பு இப்பொழுது கொண்டுவராவிட்டாலும் கூட, சபை கூடாமல் போனாலும், அவசரச் சட்டம் மூலமாக தமிழ் நாட்டிற்கு "தமிழ் நாடு" என்ற பெயரை அமைச்சர் அவர்கள் சூட்டுவார் என்று எதிர்பார்க்கிறேன். இது தேர்தலுக்காகச் சொல்லுவது அல்ல. வாதத்துக்காகச் சொல்லுவது அல்ல, எதிர்க்கட்சியாளர் என்பதற்காகச் சொல்லுவதல்ல, மக்கள் விரும்புவதை ஆட்சி பீடம் செய்தாக வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்திலே தான் இதை நான் சொல்லுகிறேன். மேலும் தமிழுக்கு ஆக்கம் அளிப்பதற்கு செய்யவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. பல மேல்நாட்டு சொற்கள் வழங்கப்படுவதுபோல அதற்கு சமமாகத் தேவைப்படும் தமிழ் பதங்களும் சீக்கிரமாகவே கிடைத்துவிடும். எனவே காலவரையறை இருக்க வேண்டுமென்று தோழர் விநாயகம் கொண்டுவந்த திருத்தத்தை ஏற்றுக் கொண்டால், அது பெருமளவுக்கு தமிழுக்கு ஆக்கத்தை அளிப்பதாகும். ஆகையால் அந்தத் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri P. JEEVANANDAM: உதவி அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை ஆதரிப்பதில் அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறேன். இதைக் கொண்டுவந்த நிதி அமைச்சர் அவர்களுடைய தனி முயற்சியையும், பொதுவாக சர்க்கார் தரப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நன்முயற்சியையும் நான் திட்டவட்டமாகப் பாராட்டுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் தமிழைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 'கழகத்தோடு அமர்ந்து பண்ணுறத் திரிந்தாய்ந்த இப்பசுந் தமிழ்' என்று ஒரு புலவர் பாடியிருக்கிறார். 'கடல் வருப்பின் இதன் பெருமை யாவரே களித்தறிவார்' என்று மற்றொரு புலவர் பாடியிருக்கிறார். கவிச் சக்கரவர்த்தி கம்பன், 'என்றுமுளதென் தமிழ் இயம்பி இசை கொண்டான்' என்று பாடியிருக்கிறார். இன்னும் அவர் கூறியிருக்கிறார். 'தென் தமிழ் நாட்டகன் பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேற்கிற்றீரேல் என்றுமவன் உரைவிடமாம்.' இவ்வாறெல்லாம் தமிழைப்பற்றி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல தமிழைப் பற்றி கல்லாடம் கூறுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. 'கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன்தோன்றி மூத்த குடி.' இவைகளெல்லாம் நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்திருக்கக்கூடிய உணர்ச்சி. அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். பழங்காலத்திலேயே செங்குட்டுவன் தமிழ் மொழியை அரியணையில் ஏற்றி வைத்தான். கரிகால் பெருவளவன் அரியணையில் ஏற்றி வைத்தான். நெடுஞ்செழியன் அரியணையில் ஏற்றி வைத்தான். மத்திய காலத்தில் ராஜராஜ சோழன் தமிழ் மொழியை அரியணையில் ஏற்றி வைத்தான்.

1 p.m. இன்றைக்கு, புதிதாக குழந்தை மாதிரி தமிழ் பிறக்கவில்லை. குழந்தை வளர்ந்து அரியணையில் வீற்றிருப்பதற்கு நடுவில் ஏதோ ஒரு சாபக் கேட்டால் அது முடியாமல் இப்பொழுது அரியணையில் வீற்றிருக்கப் போகும் சமயந்தான் இது. தேசிய இயக்கத்தில் இது எங்களது நாடு, எங்களது நாட்டை விடுதலை செய்வோம் அன்னிய ஆதிக்கத்திலிருந்து என்று

"நாம் இருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்; அது நமக்கே உரியதாமென்பதறிந்தோம்" என்று சொன்னதை நாம் இப்பொழுது ஞாபகத்திற்கு கொண்டு வர வேண்டும், ஞாபகத்திற்கு கொண்டும் வருகிறோம். நமது மொழிதான் நமது அரசாங்க மொழியாக இருக்கவேண்டும். மஹாத்மா காந்தி அடிகள் இன்று இங்கிருந்தால், இப்படி தமிழன் தமிழ் மொழியை அரியணையில் ஏற்றிவிட்டான் என்பதை அறிந்து ஆனந்த பாஷ்பமடைவார்கள் என்பதில் எனக்கு சிறிதும் ஐயம் இடையாது. அன்று பாரதி சொன்னதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

"வான மளந்த தனைத்து
மளந்திடும் வண்மொழி வாழியவே"

என்று சொல்லியிருக்கிறார் பாரதி. அன்னிய மொழியின் ஆதிக்கத்தில், நம்முடைய இனிய தமிழில் எதையும் சொல்லலாம், எதைப்பற்றியும் கூறலாம் என்பதை நாம் மறந்து விட்டோம். அன்னிய ஆட்சியின் மோகத்தில், அடிமைத்தனத்தில் நாம் நம் மொழியையே மறந்து விட்டோம். நமது நாவால் நம் மொழியில் எந்த வார்த்தையையும் சொல்லலாம், எந்த சொற்களையும் கூறலாம் என்பதை நாம் மறந்து விட்டோம். பரிதாபம். "உன் மொழி எதையும் சொல்ல வல்லது" என்று உரைத்திருக்கிறார் ஒரு பெரியார். அவர் மட்டுமா சொல்லியிருக்கிறார் எதையும் சொல்ல வல்லது, எதையும் குறிப்பிட வல்லது தமிழ், என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள், வ. வெ. சு. ஐயர், டி.கே.சி., ராஜாஜி, கல்கி போன்றவர்கள். அவர்களைப் போன்ற பெரியார்கள், அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள் தமிழ் மொழி தனியாக, சக்தியாக நிற்கமுடியுமென்று. என? எடுத்துக் காட்டியுமிருக்கிறார்கள். இன்றைய நிலைமையை நாம் எடுத்துக்கொள்வோம். இன்று நாம் காண்பதென்ன. டெல்லி அரசாங்கமாயிருந்தாலும் சரி, சென்னை அரசாங்கமாயிருந்தாலும் சரி, **Key Position** என்று சொல்வார்களே, அந்தாவது முக்கியமான இடங்களில் தமிழர்களே இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ஏன் அரசாங்கத்தை தமிழில் நடத்த முடியாது. கல்லூரிகளில் எந்த மொழியில் பயிற்சி அளிக்க வேண்டுமென்று சர்வகலாசாலையில் நடந்த கூட்டத்தில் தமிழை கல்லூரிகளில் போதனாமொழியாக்க வேண்டுமென்ற கருத்தை நானும் நிதியமைச்சரவர்களும் வெளியிட்டோம். கம்பனின் கற்பனைத் திறம் வெளிவந்த கன்னித் தமிழில் எந்த பொருளாயிருந்தாலும் சரி, அது விஞ்ஞானப் பேர்களாய் இருக்கட்டும், அல்லது தொழில் துறை பேர்களாயிருக்கட்டும், அவைகளை கன்னித் தமிழிலேயே சொல்ல முடியும், தமிழில் சில பேர்களைச் சொல்ல முடியாதென்று சொல்வது நமது பலஹீனத்திலிருந்தே வருகிறது. நமது அந்த பலஹீனம் அழிவதற்கு, சராசரி மூன்று கோடி தமிழனுக்கு இன்றைக்கு ஒரு பெரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதில் ஜனநாயகம் வெற்றி பெற்றிருக்கிறது. நம் நாட்டின் சட்டசபை சரித்திரத்திலேயே, தமிழனது வரலாற்றிலேயே இன்றைக்கு நிகழ்கிற நிகழ்ச்சிக்கு எதுவும் ஈடில்லை எடுப்பில்லையென்று நினைக்கும் போது நாம் பெருமிதப் படத்தான் வேண்டியிருக்கிறது. இது சாதாரண மக்களின் காரியம்.

அடுத்தபடியாக, நான் கூற விரும்புவது என்னவெனில், தமிழ் ஆட்சிமொழியாகி விட்டால் அதற்கு அந்தஸ்து வந்தாகி விட்டது. இந்த அந்தஸ்தில் ஒன்றிரண்டு குறைகளைச் சொல்லலாம். ஒன்று, தமிழ்நாடு நமக்குக் கிடைக்கவில்லையென்பது. இரண்டாவது, கல்லூரிகளில் தமிழ் மொழி போதனாமொழியாக்கப்படவில்லை யென்பது. இன்று, தமிழ் மொழி ஆட்சிமொழியாகியிருப்பது உந்தித் தள்ளும், நம் நாட்டிற்கு தமிழ்நாடு என்ற திருப்பெயர் பெறுவதற்கு. நமது இந்த சர்க்காரே நம் நாட்டின் பெயரை தமிழ் நாடு என்று ஆக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதே எனது அவா. இதையும் சட்டமாகக் கொண்டு வர வேண்டும், இப்பொழுதே. எதிர் கட்சியிலிருந்து கேட்டதற்கிணங்கவல்ல இந்த மசோதாவை இங்கு கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் அறிவேன். ஏற்கனவே, காங்கிரஸ் தரப்

பினும், நிதியமைச்சர் அவர்களுக்கும், எதிர் கட்சியினருக்கும், நம் நாட்டு மக்களுக்கும் இருக்கிற உணர்ச்சியே இந்த மசோதா, தமிழை ஆட்சி மொழியாக்கும் இந்த மசோதா இங்கு வருவதற்குக் காரணம். ஆக, தமிழ் மொழி இன்று நமது ஆட்சிமொழியாக விடிந்திருக்கிறது என்பதைப் பார்த்து குதூகல மெய்துகிறோம். சில காரியங்களைக் குறித்து எதிர் கட்சித் தலைவர் ஸ்ரீ ராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அவைகளை சர்க்கார் கவனித்து ஆவன செய்வார்களென்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்று தமிழ் மொழி ஆட்சிமொழியாவது கல்லூரிகளில் தமிழ் போதனாமொழியாவதற்குள்ள ஒரு படியாகும். இந்த அபிப்பிராயத்தை நிதியமைச்சரவர்கள் கலைச் சொற்கள் அகராதி ஒப்படைப்பு விழாவில் வெளியிட்டார்கள். தமிழ் அறிஞர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து கலைச் சொற்களும், பல்வேறு துறைகளில் உள்ள சொற்களையும் சேர்த்து ஒரு அகராதி வெளியிடவேண்டும். அங்ஙனம் செய்வார்களேயானால் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய தமிழை, அதிகார பூர்வமான தமிழ் சொற்களைக் கொண்டுவந்து தமிழ் ஆட்சி மொழியாவதை நன்கு வளரச் செய்யலாம். ஆக, இன்று தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவந்ததில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். இது நம் எல்லோருக்கும் பெருமைதரும்.

அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது என்னவெனில், வரப்போகும் சட்டசபையில், யார் என்ன நினைத்தாலும் சரி, நிச்சயமாக நம் நாட்டிற்கு தமிழ் நாடு என்ற பெயர் நிச்சயமாக வரும். அதோடு அடுத்த சட்டசபையில், அதன் காலவரை தீருவதற்கு முன்பு, ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழ், கல்லூரிகளில் பயிற்சி மொழியாகி ஆனந்தத் தாண்டவமாடும் என்பதில் எனக்கு சந்தேகமே இடையாது என்று இங்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். கல்லூரிகளில் தமிழ் போதனா மொழியாக, இப்பொழுது தமிழ் ஆட்சிமொழியாகியிருப்பது முதல் படியாகும். வெகு விரைவில் ஜில்லா மட்டத்திற்கும், மாகாண மட்டத்திற்கும் இந்த முயற்சி பரவும் என்பதில் எனக்கு சந்தேகமே இடையாது. இதை யாரும் தடுக்க முடியாது. நான் அறிவேன், நமது நிதியமைச்சரவர்கள் தமிழை கல்லூரிகளில் போதனாமொழியாக்க வேண்டுமென்று விரும்புவதை. தமிழ், கல்லூரிகளில் போதனா மொழியாவதற்கு இப்பொழுது தமிழ் ஆட்சி மொழியாவது அடிகோலும். தமிழ் ஆட்சிமொழியானது மந்திரி அவர்களின் வெற்றியல்ல. இது, தமிழனின் ஜனநாயக கால வெற்றி.

அடுத்தது, மொழியைப்பற்றி இரண்டு வார்த்தைகள். "அல்லி நாப்பண" என்றால் என்ன. "அல்" என்றால் இரவு; நாப்பண என்றால் நள். ஆகவே, அல்லி நாப்பண என்றால் நள்ளிரவு என்று அர்த்தம். அதேபோல் Cycle-க்கு மிதி வண்டியென்று சொல்வார்கள். கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையவர்கள் அதை "சமிட்டு வண்டி" என்பார்கள். அங்கு சமிட்டு என்றால் மிதி; சமிட்டு வண்டி என்றால் Cycle. மாணிக்க நாயகர் அவர்கள் "ஃ" என்ற எழுத்தை எப்படி பிரயோகிப்பது என்பதைப்பற்றி அழகாகச் சொல்லியிருக்கிறார். தமிழில் ரேடியம் என்பதற்கு கதிர், அவிர், சுடர், ஒளி என்றிருக்கிறது. ரேடியம் என்று சொன்னால் புரிகிறது, கதிர் என்றால் அது என்ன என்று அதை புரிய வைக்க வேண்டியிருக்கிறது. நாம் இத்தகைய சொற்களை உபயோகப் படுத்திக்கொண்டே வந்தால் நமக்கு சீக்கிரம் புரிந்துவிடும். எப்படி மலை உச்சியிலிருந்து விழும் கரடுமுரடான கற்பாறைகள் உருண்டு உருண்டு, அடிபட்டு அடிபட்டு கூழாங்கற்கள் ஆகிறதோ அதேபோல் நம் மொழிச் சொற்களும் மக்களிடையே அடிபட்டு, அடிபட்டு பழக்கப்பட்டு எளிதில் யாதொரு கஷ்டமுமின்றி புரிந்துகொள்ள முடியும் என்பதில் எனக்கு ஐயமே இடையாது. உலக மொழிகள் எல்லாவற்றிலும் கூட தமிழ் உறவாடி யிருக்கிறது. அவைகளிலிருந்து சொற்கள் வாங்கியும் இருக்கிறது, கொடுத்துமிருக்கிறது. (Bell.)

முடித்துக்கொள்கிறேன். தமிழ் மொழி ஆட்சிமொழியாவதின் மூலம், நாம் எந்த அதிகாரிகளிடமும் நாம் நினைப்பதைச் சொல்லமுடியும், எந்தக் காரியத்தையும் சொல்லலாம்.

ஆக, இந்த மசோதாவை இங்கு கொண்டுவந்ததற்கு நிதியமைச்சரவர்களுக்கு எங்கள் தரப்பிலிருந்து எங்கள் மனப்பூர்வமான பாராட்டுதலையும், இங்கு கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவிற்கு எங்களது முழு ஆதரவையும் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் எல்லா கட்சித் தரப்பினர்களும் பேசினார்கள். எல்லா கட்சியிலுமுள்ள வீரத்தமிழர்கள் பேசினார்கள் இதிலே; பல புலவர்கள் பேசினார்கள் இதிலே; தமிழ் அன்பர்கள் பேசினார்கள் இதிலே, தமிழை வளர்த்த மன்னர்களின் பரம்பரையிலே உதித்தவர்கள் பேசினார்கள் இதிலே. இதையெல்லாம் கேட்டு உணர்ச்சி மேலிட்டு இருக்கின்றேன். ஆகையினால் இந்தச் சபையிலுள்ள அனைவரும் ஒன்றுபட்டு ஏகோபித்து இதற்கு கொடுத்த ஆதரவு ஏதோ இந்த மசோதாவுக்கு கொடுத்த ஆதரவு அல்ல, தமிழ் அன்னைக்கு கொடுத்த ஆதரவு, தமிழ் அன்னைக்கு செய்யக்கூடிய சேவையாக எடுத்துக்கொள்கிறேன்.

இந்தச் சமயத்தில் சில வாதங்கள் இங்கு சொல்லப்பட்டது. அதற்கு 1-10 p.m. ஓரளவு பதில் சொல்லுவது அவசியம் என்று கருதுகிறேன். தமிழ் சொற்களை எப்படி அமைக்கவேண்டும் என்பதில் ஒரு சில அபிப்பிராய பேதங்கள் காணப்பட்டன. இந்த அபிப்பிராய பேதங்களை நாம் கவனித்துக்கொண்டிருந்தால் நாம் முன்னேற்றம் அடைய முடியாது. ஸ்ரீ ஜீவானந்தம் அவர்கள் சொன்னது மாதிரி கரடு முரடான கல்லை உருட்டிவிட்டால் அது எப்படி கடைசியில் நல்ல உருளைக்கல்லாக மாறிவிடுமோ அதுபோல் பழக்கவழக்கத்தில் இது சரியாக வந்துவிடும் என்றுதான் நான் நினைக்கிறேன். சில புதிய சொற்கள் பழக்கத்தில் இல்லாமல் இருந்தாலும் சரி, மற்ற மொழிகளிலிருந்து எடுக்கப்பட்டிருந்தாலும் சரி, அதை எல்லாம் ஜீரணித்து தனதாக்கக்கூடிய சக்தி தமிழுக்கு இருக்கிறது. தமிழ் மொழியை நான் ஒரு நோயாளியாகக் கருதவில்லை. உணவை உட்கொள்ளாதபடி அஜீர்ணமுள்ள நோயாளியை போன்றதல்ல தமிழ் மொழி. தமிழ் மொழி சக்தி உடையது. பிறமொழி சொற்கள் கலப்பதினால் தமிழ் மொழி சிதைந்து போகும், தமிழ் வளர்ச்சி குறைந்துவிடும், தமிழ் மொழியினுடைய தரம் பாதிக்கப்பட்டு விடும், என்றெல்லாம் யாராவது சொல்லுவதானால் அது தமிழ் மொழியினுடைய சக்தியின் மேல் நம்பிக்கை இல்லாமல் சொல்லுவது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தப்படியாக தமிழ் மொழி ஆட்சி மொழியாக வருவதற்கு பாடுபட்ட எல்லா பெரியார்களுக்கும் நம்முடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ் மொழி ஆட்சி மொழியாக வரவேண்டும் என்பது இன்று ஏற்பட்டது அல்ல. சுதந்திரப் போராட்ட காலத்திலிருந்தே இது ஏற்பட்டிருக்கிறது. இதை ஸ்ரீ ஜீவானந்தம் அவர்கள் வெகு அழகாக எடுத்துக் கூறினார்கள். இதுவரை அது நடக்காமல் இருந்தது. மத்தியிலே ஏற்பட்ட சாபக்கேடுதான் இது. இன்று அந்த சாபக்கேடு நீங்கி விமோசனம் கிடைத்திருக்கிறது. இதற்காக வேலை செய்த அத்தனை பெரியார்களுக்கும் நாம் இந்தச் சபையின் மூலம் நன்றியைச் செலுத்துகிறோம்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ ரத்தின கவுண்டர் அவர்கள் பேசும்போது ஆங்கிலத்தை விட்டுவிட்டு தமிழிலே பேசவேண்டும் என்ற உணர்ச்சியை அண்ணா அவர்கள்தான் ஊட்டினார்கள் என்று சொன்னார்கள். அதை யார் ஊட்டினாலும் சரி, அதைப்பற்றி இப்போது விவாதிக்கவேண்டாம். ஆனால் ஆங்கிலமே பொதுமொழியாக இருக்கவேண்டும் என்று சம்மதித்து இதே அண்ணாதான் ஒரு அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதை ஸ்ரீ ரத்தின கவுண்டர் அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். நாம் எல்லோரும் ஒன்றுபட்ட மனதுடன் ஒற்றுமை உணர்ச்சியுடன் நின்று தமிழை மேலும் வளர்ப்பதற்கும் தமிழ் எல்லாத் துறைகளிலும் வழங்கி வருவதற்கும் பெரு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்

கொள்கிறேன். இதிலே பல திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு திருத்தத்திலும் சொல்லப்படுகிற காரியங்கள் எல்லாம் ஒப்புக் கொள்ளக்கூடிய காரியங்கள்தான். ஆனால், இவையெல்லாம் திருத்தங்களாக கொண்டு வந்து அமைக்கவேண்டிய அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன். முக்கியமாக கனம் அங்கத்தினர் ஸ்ரீ விநாயகம் அவர்கள் கொஞ்சம் ஆவேசம் உள்ளவர். அவர்கள் சொல்லுவது, இதை நடைமுறையில் கொண்டுவருவதற்கு ஒரு காலவரம்பு கட்டவேண்டும் என்பது. இந்த கால வரம்பை நிர்ணயிக்கும் விஷயத்தில் ஒவ்வொரு படிக்கும் எந்தெந்த காலவரம்பு இருக்கவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் இனியும் ஆலோசனை செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஒரு உறுதிமொழி மாத்திரம் கொடுக்கிறேன். என்னவென்றால், இந்த மந்திரிசபை கலைவதற்கு முன்பாகவே இதற்கு ஒரு திட்டமான ஒரு கால வரம்பு முடிவை கொண்டு வருவதற்கு என்னால் இயன்ற அளவு முயற்சி செய்கிறேன். ஆகையினால் இந்தத் திருத்தங்களை எல்லாம் வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகையினால் இதிலுள்ள எல்லா விதிகளையும் எந்தவிதமான திருத்தங்களும் இல்லாமல் இதை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் முன்பு சொன்னது போல் நாம் எவ்வளவு ஆர்வம் கொண்டு ஒத்துழைக்கிறோமோ அந்த அளவுக்கு முன்னேற முடியும். வெறும் சட்டத்தைக் கொண்டு மாத்திரம் முன்னேற முடியாது. இந்த முயற்சியில் எல்லோரும் ஆர்வத்தோடு உழைக்க வேண்டும். இந்த முயற்சி குறைவு அடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அது நம்முடைய கடமை. ஆகவே இந்த விஷயத்தில் என்னைப் பொருத்தவரையில் எந்தவிதமான ஆர்வக்குறைவோ முயற்சியின்மையோ இருக்காது என்ற உறுதியை இந்தச் சபை முன்பும் தமிழ் நாட்டு மக்களின் முன்பும் சொல்லமுடியும். இந்த உறுதியுடன் இந்தச் சபை முன் இருக்கக்கூடிய தீர்மானத்தை அங்கத்தினர்கள் எல்லோரும் ஒரே மனதாக ஏற்றுக்கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : இந்த சபை முன் இருக்கும் பிரச்னை (கனம் உதவி சபாநாயகர் தமிழில் பேச ஆரம்பித்ததும் சபையில் பலத்த மகிழ்ச்சி ஆரவாரம்) என்னவென்றால், 1956-ம் வருஷத்திய சென்னை ராஜ்ய அரசாங்க மொழி மசோதாவை உடனே ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது. இதற்கு சாதகமாக இருப்பவர்கள் "ஆம்" என்றும், பாதகமாக இருப்பவர்கள் "கூடாது" என்றும் சொல்லும் படியாகவும் கோருகிறேன்.

பிரச்னை தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

மசோதா ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

DEPUTY SPEAKER : அடுத்தபடியாக இந்த மசோதாவின் ஷரத்துக்களை வரிசையாக எடுத்துக்கொள்கிறேன். இதிலுள்ள இரண்டாவது பிரிவு மசோதாவின் அங்கமாக இருக்கவேண்டுமென்ற பிரச்னை.

இதற்கு திருத்தங்கள் இல்லை. ஆகையினால் இதற்கு சாதகமாக இருப்பவர்கள் 'ஆம்' என்றும் பாதகமாக இருப்பவர்கள் 'கூடாது' என்றும் சொல்லவேண்டுகிறேன்.

இரண்டாவது பிரிவு வோட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

பிரிவு 3.

DEPUTY SPEAKER : அடுத்தபடியாக மூன்றாவது பிரிவு. இதற்கு திருத்தங்கள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர்கள் தங்கள் திருத்தங்களை பிரேரேபிக்காமல் வாபஸ் பெறுவார்கள் என்று நினைக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : மந்திரி அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் காரணமாக என்னுடைய திருத்தத்தை நான் பிரேரேபிக்கவில்லை.

***SRI K. VINAYAKAM** : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிற காரியத்திற்கு விரோதமாக நான் சொல்லவில்லை : நான் ஏதோ ஆவேசமுள்ளவன் என்று சொன்னார்கள். அது எப்படியும் இருக்கட்டும். என்னுடைய கோரிக்கை, 'திட்டவட்டமான கால வரம்பு செய்தால் தான்', அதிகாரிகள் இதை நடைமுறையில் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். ஆதலால் தமிழ் மொழி அரியாசனத்தில் அமருவதற்கு ஒரு காலவரம்பை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும் என்பதுதான் எனது திருத்தத்தின் குறிக்கோள். ஆகவே நான் என்னுடைய திருத்தத்தை பிரேரேபிக்கிறேன் :—

"*For* the words 'the State Government, by notification . . . specified in such notification' occurring in lines 7–9 of page 2, *substitute* the words and figures, '31st December 1959."

திருத்தம் முறையே ஆமோதிக்கப்பட்டது.

***SRI S. DAIVASIGAMONEY** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலாவதாக இப்பொழுதுதான் தமிழில் பேசுகிறேன். கனம் விநாயகம் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை நான் ஆதரித்து பேசும்போது சில வார்த்தைகளைச் பேச ஆசைப்படுகிறேன். அத்துடன் கனம் நிதி மந்திரி அவர்கள் கொண்டுவந்த மசோதாவை நான் மிக சந்தோஷத்துடனும், ஆர்வத்துடனும் வரவேற்கிறேன். ஆனாலும் அதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. அதையும் கனம் மந்திரி அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார். அவரே அவைகளை சரியாக கூர்ந்து கவனித்து அதற்கு வேண்டிய வழி வகைகளையும் செய்வார் என்றே நினைக்கிறேன். இப்பொழுது நாம் அரசியலை ஜனநாயக முறையில் நடத்துகிறோம். அனுபவத்தில் பார்க்கும்போது அரசியல் விஷயங்களில் அதிகமாகக் கவனம் செலுத்தி நடத்துகிறவர்கள் உத்யோகஸ்தர்கள்தான் என்பதை நீங்கள் நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும். 1-30 p.m.
முக்கியமான உத்யோகங்களுக்கு வருகிறவர்களில் பலர் தமிழர்களாக இருப்பதில்லை. இதைப்பற்றி நான் மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியதாக இருக்கிறது. மற்றும் மேல் உத்தியோகங்களுக்கு வருகிறவர்கள் எல்லாம் மலையாளிகளாகவும் கன்னடியர்களாகவும்தான் இருக்கிறார்கள். அதனால் தமிழ் பாஷையே அவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. பல உத்யோகஸ்தர்கள் தமிழர்களாக இருந்த போதிலும் அவர்கள் தமிழில் அதிகம் அனுபவம் இல்லாமல் இருக்கிறார்கள் அதனால் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதற்கு ஒரு கால வரம்பை நாம் வகுக்காவிட்டால் நம்முடைய நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக வருவது கஷ்டமாக இருக்கும். இப்பொழுதே தமிழ் ஆட்சி மொழியாகப் போகும் பெருமையையும் சந்தோஷத்தையும் நாம் பார்க்கவேண்டும். வருகிற சட்டசபைக்கு இந்தச் சிறப்பை நாம் கொடுக்காமல் இதை நாமே எடுத்துக் கொண்டிருக்கிறோம். கால வரம்பு வைப்பதில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுப்பார்களோ என்பது நமக்குத் தெரியவில்லை. ஆகையினால் குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த சட்டசபையின் காலம் முடிவதற்குள்ளாகவே ஒரு குறிப்பிட்ட நாளை வரையறுத்து கொடுப்பதுதான் மிகவும் உசிதமான விஷயம் என்பதை மட்டும் எடுத்துச் சொல்லி இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : கனம் விநாயகம் அவர்கள் தன்னுடைய திருத்தத்தை வாபஸ் பெறுவார் என்றே நினைக்கிறேன்.

***SRI K. VINAYAKAM** : கனம் மந்திரி அவர்கள் இதைப்பற்றி தன்னுடைய கருத்தை தெரிவிக்கவில்லையே, அப்படித் தெரிந்தால் நலமாக இருக்கும்.

[27th December 1956

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னுடைய கருத்தை நான் தெளிவாக தெரிவித்துவிட்டேன். எந்த விதமான திருத்தம் இல்லாமலும் எந்தவிதமான வாதப் பிரதிவாதம் இல்லாமலும் இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும் என்று நான் ஏற்கெனவே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதனால் திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

* **SRI K. VINAYAKAM** : அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க நான் என்னுடைய திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : சபையின் அனுமதியின் பேரில் ஸ்ரீ கே. விநாயகம் தன்னுடைய திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்கிறார்.

திருத்தம், சபையின் அனுமதியின் பேரில் வாபஸ் வாங்கிக் கொள்ளப் பட்டது.

மசோதாவின் மூன்றாவது பிரிவு வோட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

பிரிவு 4.

DEPUTY SPEAKER : மசோதாவின் 4-வது பிரிவு வோட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

பிரிவு 5.

DEPUTY SPEAKER : மசோதாவின் ஐந்தாவது பிரிவுக்கு திருத்தம் இருக்கிறது. அந்தத்திருத்தம் கொடுத்த கனம் அங்கத்தினர் அதை வாபஸ் வாங்கிக்கொள்வார் என்று நினைக்கிறேன்.

SRI K. VINAYAKAM : முன்பு கனம் மந்திரி அவர்கள் சொன்ன காரணத்திற்காகவே இதையும் நான் வாபஸ் பெறுகிறேன்

DEPUTY SPEAKER : ஸ்ரீ விநாயகம் தன்னுடைய திருத்தத்தை பிரேரேபிக்காமல் வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறார்.

மசோதாவின் ஐந்தாவது பிரிவு சபையின் வோட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

பிரிவு 6.

DEPUTY SPEAKER : மசோதாவின் 6-வது பிரிவு சபையின் வோட்டுக்கு விடப்பட்டு அதுவும் ஏகமனதாக நிறைவேறியது.

மசோதாவின் முன் விளக்கமும் முதல் பிரிவும்.

அடுத்தபடியாக மசோதாவின் முன் விளக்கத்தையும் முதலாவது பிரிவையும் வோட்டுக்கு எடுத்துக்கொள்ளுகிறேன். இதற்கு ஸ்ரீ கலியாண சுந்தரம் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்.

SRI K. VINAYAKAM : இதற்கு திருத்தம் கொடுக்கக்கூடாது என்று ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதனால் இப்பொழுது திருத்தம் சபையின்முன் இருக்கமுடியாது.

SRI M. KALYANASUNDARAM : இந்த மசோதா திருத்தங்கள் இல்லாமல் நிறைவேறவேண்டுமென்றிருப்பதால் நான் என்னுடைய திருத்தத்தை பிரேரேபிக்கவில்லை.

DEPUTY SPEAKER : ஸ்ரீ கலியாணசுந்தரத்தின் திருத்தம் சபையின்முன் இல்லாததால் மசோதாவின் முன் விளக்கத்தையும் முதல் பிரிவையும் சபையின் வோட்டுக்கு விடுகிறேன்.

27th December 1956]

மசோதாவின் முன் விளக்கமும் முதல் பிரிவும் சபையின் வோட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது.

DEPUTY SPEAKER : அடுத்தபடியாக கனம் நிதி மந்திரி அவர்கள் இந்த மசோதா சட்டமாக்கப்படவேண்டும் என்ற பிரேரேபணையை பிரேரேபிப்பார்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த மசோதா நிறைவேற்றப் படவேண்டும் என்று நான் பிரேரேபிக்கிறேன்.

DEPUTY SPEAKER : சென்னை ராஜ்ய ஆட்சி மொழி மசோதா சட்டமாக்கப்படவேண்டுமென்ற பிரச்னை இப்பொழுது சபையின்முன் இருக்கிறது. அதைப்பற்றி பேச விரும்புகிறவர்கள் பேசலாம்.

SRI K. VINAYAKAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கடைசியில் ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொள்கிறேன். அதாவது மசோதாவின் ஏதுக்களையும் நோக்கங்களையும் பற்றிய விவரணம் கூறும் போது இப்பொழுது இந்த மசோதாவை ராஜ்யம் பூராவிற்கும் அமுலுக்குக் கொண்டுவராமல் முதல்படியில் தாலூகாவாரியாக முதலில் நடைமுறைக் குக் கொண்டுவரப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி விட்டு விட்டால் சிறிய அளவிற்கு ஆரம்பிக்கும்படியாக வருகிறது. ஜில்லா அடிப் படையில் முதலிலேயே ஆரம்பிக்க வேண்டும் என்ற விதியை கனம் மந்திரி அவர்கள் சீக்கிரத்திலேயே கொண்டுவந்து அதை நிறைவேற்று வார் என்ற நம்பிக்கையில் நான் இருக்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

